ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

பூர்வாசாரியர்கள் அருளிச்செய்த

ஆறாயிரப்படி பன்னீராயிரப்படி

குருபரம்பரா ப்ரபாவம்.

இது

ஸ்ரீமத் - உ - வே.

திருமலை நல்லான் சக்ரவர்த்தி

க்ருஷ்ணமாசார்யஸ்வாமிகளவர்களாலும்

வித்வான் - ஸ்ரீமான்

ம. இராஜகோபாலபிள்ளையவர்களாலும்

செஞ்சி - இல்விடு

அரங்கசாமிமுதலியாரவர்களாலும்

பரிசோதிக்கப்பட்டதை,

உபய வேதாந்தப் பிரவர்த்தகராகவிருந்த

ஸ்ரீமான் - காரப்பங்காடு. கோபாலாசாரியர் மாணவராயும்

கிறிஸ்தவ கலாசாலை தமிழ்ப்பண்டிதராயுமிருக்கும்

டி. ஸி. பார்த்தஸாரதி அய்யங்காரால்

பிழையறப் பரிசோதிக்கப்பட்டு,

அ. இரங்கசாமிமுதலியார் குமாரர்

முத்துவடிவேல்முதலியாரால்

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1928.

Registered Copy Right.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானபேர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில்: இந்த ஆறாயிரப்படி பன்னீராயிரப்படி குருபரம்பரா ப்ரபாவம் என்னும் இப்புஸ்தகத்தின் காபிரைட்டை அடியில் கையொப்பமிட்டுள்ள யான் ம-௱-௱-ஸ்ரீ, செஞ்சி இல்வீடு-அரங்கசாமிமுதலியார் குமாரர் திருவேங்கடமுதலியார் 1. பே. து. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமிகள் 2. T. C. பார்த்தசாரதி அய்யங்கார் 3. ஆக இம்மூவர்களிடத்திலும் கிரையத்திற்குப்பெற்று என்னால் அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கிறேன். ஆகையால் இப்புஸ்தகத்தை என்னுடைய அனுமதியின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதைத் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

இங்ஙனம்:

அ. முத்துவடிவேல்முதலியார்,

பூமகள்விலாச அச்சுக்கூடம்,

நெ-24, தாண்டவராயப்பிள்ளைவீதி சென்னை.

ஸ்ரீ



ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ.

குருபரம்பராப்ரபாவத்தனியன்கள்.

ஸ்ரீஶைலேஶ தயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம்முநிம்.

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்
அஸ்மதாசார்யபர்யந்தாம் வந்தேகுருபரம்பராம்.

யோநித்யமச்யுத பதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததி தராணித்ருணாயமேநே
அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ
ராமாநுஜஸ்யசரணௌ ஶரணம்ப்ரபத்யே.

மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவநியமேநமதந்வயாநாம்
ஆத்யஸ்யநஃகுலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா.

பூதம்ஸரஸ்யமஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸாரகுலஶேகர யோகிவாஹாந்
பக்தாங்க்ரிரேணு பரகாலயதீந்த்ரமிஶ்ராந்
ஸ்ரீமத்பராங்குஶமுநிம் ப்ரணதோஸ்மிநித்யம்.

நாதம்பங்கஜநேத்ர ராமயமுநாவாஸ்தவ்யமாலாதராந்
யோகீந்த்ரம்குருகேஶசந்த்ரஜலதிம்கோவிந்தகூராதிகௌ
பட்டார்யம்நிகமாந்தயோகிஜகதாசார்யௌஸக்ருஷ்ணத்வயௌ
வந்தேமாதவபத்மநாபஸுமநஃகோலேஶதேவாதிபாந்.

நமோவேதாந்தவேத்யாய ஜகந்மங்களஹேதவே
யஸ்யவாகம்ருதாஸார பூரிதம்புவநத்ரயம்.

வேதாந்தவேத்யாம்ருதவாரிராஶே:
வேதார்த்தஸாராம்ருதபூரமக்ர்யம்
ஆதாயவர்ஷந்தமஹம்ப்ரபத்யே
காருண்யபூர்ணம்கலிவைரிதாஸம்.

ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாஹ்வாய நமோயாமுநஸூநவே
யத்கடாக்ஷைகலக்ஷ்யாணாம் ஸுலபஸ்ஸ்ரீதரஸ்ஸதா.

ஸ்ரீக்ருஷ்ணபாத பாதாப்ஜேநமாமிஶிரஸாஸதா
யத்ப்ரஸாதப்ரபாவேந ஸர்வஸித்திரபூந்மம.

லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்யஸூநவே
ஸம்ஸாரபோகிஸந்தஷ்ட ஜீவஜீவாதவேநம:.

நமஸ்ஸ்ரீஶைலநாதாய குந்தீநகரஜந்மநே
ப்ரஸாதலப்தபரம ப்ராப்யகைங்கர்யஶாலிநே.

ஸ்ரீஶைலேஶதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம்முநிம்.

ஸ்வாசார்யபரம்பரைத் தனியன்களை அநுஸந்தித்துப்
பின்பு அநுஸந்திக்கவேண்டிய

பின்பழகியபெருமாள்ஜீயர் தனியன்கள்:—

வாத்ஸல்யஸௌஶீல்யகுணாம்புராஶிம்
வக்தாரமர்த்தந்த்ரவிடஶ்ருதீநாம்
ஸ்ரீதேவராட்புத்ரபதைகநிஷ்டம்
யஜ்ஞேஶஸூநும்முநிமாஶ்ரயாம:.

கலித்வம்ஶிதயாபாத்ரம் பஶ்சாத்ஸுந்தரஸம்ஜ்ஞகம்
அஜ்ஞாதஜ்ஞாபகம்பும்ஸாம் அஸ்மத்தேஶிகமாஶ்ரயே.

ஶடாரிமுகநிஸ்ஸ்ருதத்ரவிடவேதநிர்வாஹகம்
ஸ்வபக்தஜநரக்ஷணக்ஷமக்ருபாத்தஸத்வீக்ஷணம்
ஸ்வஸூக்திரசநோஜ்ஜ்வலத்குருபரம்பராவைபவம்
யதீந்த்ரபதஶேகரந்தமபராங்கரம்யம்பஜே.

பாயிரம்.

"அருணிரம்பும் புட்குழிவாழ் பின்பழக ரென்பார்
குருபரம்ப ராவிபவங் கூறத்—திருவார்
திருச்சங் குடையவன்றாள் சேவிப்போ நெஞ்சே
திருமால் பதஞ்சேர் திறத்து".

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

குருபரம்பரா ப்ரபாவம்.

ப்ரவேசம்.

* ஸ்ரீய:பதியாய், † அவாப்த ஸமஸ்தகாமனாய், ஸ்ரீவைகுண்ட ‡ நிகேதநனாய், ஸ்ரீமதநந்தமுகநித்ய ஸூரிபரிஷந் நிஷேவ்யமாணனாய், அகிலமங்களகுண ஸ்வரூபனான ஸர்வேச்வரன் "க்ஷயந்த மஸ்யரஜஸ: பராகே" என்கிறபடி தமோகுண ரஜோகுண § ரஹிதராயிருப்பவர்கள் வாழுமேல்வீடு என்றும், "த்ரிபாதஸ்யாம்ருதம்திவி"என்கிறபடி ஸமஸ்த வண்டங்களுமொரு பங்காக விருக்க, மூன்றுபங்கா லதிக்கப்பட்ட பரப்பையுடையதாய், நாச ரஹிதமான மோக்ஷலோகமென்றும், "ததக்ஷரே பரமேவ்யோமந்" என்கிறபடி அழிவில்லாதிருக்கிற பரமாகாசத்தை ஸ்தாநமாகவுடைய மோக்ஷலோகமென்றும், "யோஅஸ்யாத்யக்ஷ: பரமேவ்யோமந்" என்கிறபடி எவன் யாவையுமுடையானோ அவன் ப்ரபுவாக வீற்றிருக்குமிடமே பரமாகாசமென்றும்,"தத்விஷ்ணோ: பரமம்பதம் ஸதாபச்யந்தி ஸூரய:" என்கிறபடி பதங்களுக்கெல்லாம் ச்ரேஷ்டமான அந்த விஷ்ணுவின்பதம் எக்காலமும் நித்ய ஸூரிகளால் சலிப்பின்றி ஸேவிக்கப்படுவதா யிருக்குமென்றும், "உபாப்யாம் பூமிநீளாப்யாம் ஸேவித: பரமேச்வர:" என்கிறபடி பூதேவி நீளாதேவியென்னு

---

* ஸ்ரீய:பதி-லக்ஷ்மீபதி ("லக்ஷ்மீச்சபத்னீயௌ" என்றும், "அஸ்யேசாநா ஜகதோவிஷ்ணுபத்நீ" என்றும் சுருதி).

† அவாப்த ஸமஸ்தகாமன்-ஒன்றிலும் குறைவில்லாதவன்; ஸமஸ்தமும் உள்ளவன்.

‡ நிகேதநம்-இடம்.

§ ரஹிதர்-இல்லாதவர்.

மிருவராலும் விரும்பித் தொழப்படுமவனை பரமேச்வரனுடைய ஸ்தாநம் என்றும், "அத்யர்க்கா நலதீப்தம் தத்ஸ்தாநம் விஷ்ணோர்மஹாத்மந꞉ ஸ்வயைவ ப்ரபயாராஜந் துஷ்ப்ரேக்ஷந் தேவதாநவை꞉" என்கிறபடி அந்த ஸ்தானமானது அனேக ஸூர்யர்களொன்றாகச்சேர்ந்து நிறைந்து ப்ரகாசித்தாலும் நிகரற்ற வொளியையுடையதாய், யாதொரு மஹாத்மாவான விஷ்ணுவினுடைய ஸ்வயம் ப்ரகாசத்தையே நிறையப்பெற்றிருக்கும் என்றும், "ஆக்ரீடாவிவிதாராஜந் பத்மிந்ய ஸ்சாமலோதகா꞉ ஏதேவை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந꞉" என்கிறபடி அந்தப் பரமாத்மாவான ஸ்வாமி யெழுந்தருளியிருக்கிற ஸ்தானமானது * க்ரீடா லக்ஷணத்திற்கநுகூலமான குளிர்ந்த தீர்த்தங்களாலும் † ஸுகதர்சநீயமான பத்மங்களாலும் ப்ரகாசிக்கப் படுகிற புஷ்கரிணிகளையுடையதாய் மனோஹரமாயிருக்கும் என்றும், "காலம் ஸபசதேயத்ர நகாலஸ்தத்ரவை ப்ரபு꞉" என்கிறபடி அந்த ப்ரபு வீற்றிருக்கும் ஸ்தாநத்தில் காலை மாலை இன்று நாளையென்கிற கால ‡ பரிச்சேதமேயில்லை என்றும், "கலாமுஹூர்த்தாதி மயஸ்சகாலோநயத் விபூதே꞉ பரிணாமஹேது꞉" என்கிறபடி கலை, முஹூர்த்தம், காலை, மாலை, இரவு, பகல், இன்று, நாளை என்கிற காலா § வதிகளில்லாத ஸ்தானம் என்றும், "அண்டகோசாத் ஸாவரணாத் அமுஷ்மாத்பரத꞉ ப்ரபோஸ்திதோஹம் பரமேவ்யோ மந்ய ப்ராக்ருத ஶரீரவாந்" என்கிறபடி அண்ட வடுக்குகளைச்சூழ்ந்து ரக்ஷிக்கப் படுகின்றனவோ, அந்த ஸ்தாநத்தில் ப்ரபுவாயிருந்துகொண்டு நாசரஹிதமான திருமேனிக் காந்தியோடு ப்ரகாசிக்குமவன் என்றும், "யத்தத்புராணமாகாஶம் ஸர்வஸ்மாத்பரமந் த்ருவம்-யத்பதம் ப்ராப்யதத்வஜ்ஞா꞉ முச்யந்தே ஸர்வகில்பிஷை꞉" என்கிறபடி எது அநாதியாகவும், எல்லா ஸ்தாநங்களுக்கு மேற்பட்டதாகவும், அழிவற்றதாகவு மிருக்கின்றதோ அதையே தத்வஜ்ஞானிகளாகிற $ ப்ரபந்நர்களடைந்து ஸர்வ பாபங்களினின்றும் விடு

* க்ரீடை-திருவிளையாடல்.

† ஸுகதர்சநீயம்-சுகமாயும் பார்க்கத்தகுந்ததாயுமிருத்தல்.

‡ பரிச்சேதம்-அளவு, வரையறை.

§ அவதி-எல்லை.

$ ப்ரபந்நர்-ப்ரபத்தியால் சிரேஷ்டரானவர்கள்.

விக்கப்பட்டு ஸூகித்திருக்கிறார்களென்றும், "அண்டேப்யஃ பரதோ நித்யம் த்ரிபாதே நவிராஜதே - இதரேணது பாதேந ப்ராக்ருதேண்டே விராஜதே" என்கிறபடி ப்ரம்ஹாண்டங்களெல்லாம் ஸ்திர மற்றவைகளாய் காற்பங்கா யிருப்பதுபோலாகாமல் முக்காற்பங்கு விஸ்தீர்ணமுள்ளதாய் ஸ்திரமாயிருப்பதான * அப்ராக்ருத லோகமென்றுஞ் சொல்லுகிற இத்யாதியாலே யோக, யாஜ்ஞவல்க்ய, பஞ்சமவேத புராணரத்நம் முதலான ப்ரமாணங்களை யடங்கப்பெற்றிருக்கும் பாஞ்சராத்ர வசநங்களிலும் "நலமந்த மில்லதோர் நாடு" என்றும், "சுடரொளியாய்நின்ற தன்னுடைச்சோதி" என்றும் "தெளிவிசும்பு திருநாடு" என்றும், "மாகவைகுந்தம்" என்றும், "தெளிதாகிய சேண்விசும்பு" என்றும் இத்யாதி த்ரவிட சுருதிகளிலும் மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களாலே யறுதியிடப்பட்டுள்ள ஏற்றத்தையுடைத்தாய் "குணைஃ ப்ரதாநம் புருஷஃ பரம் பதம் பராத்பரம் ப்ரஹ்மசதேவிபூதயஃ" என்கிறபடி குணச்ரேஷ்டனாயிருக்கிற பரப்ரம்ஹத்தினுடைய ஒப்புயர்வற்ற பதம் என்றும், அது அவனுடைய அநந்த கல்யாணகுணாதிசய ஸம்பத்தைப் பெற்றிருக்கும் என்றும்,"பரமயோகி வாங்மநஸா பரிச்சேத்யஸ்வ ரூபஸ்வபாவ" என்கிறபடி பரமயோகிகளுடைய வாக்கு மனஸூக்களாலும் துதித்தும் நினைத்தும் விவரிக்கப்படாத ஸ்வரூபத்தை யுடையவனென்றும், "காலாதிகாதவ பராமஹதீவிபூதிஃ" என்கிறபடி காலஸ்வாபாவத்தை † அதிக்ரமித்தவனாய், நிரந்தரைச்வரியத்தை யுடையவனாயிருப்பானென்றும், "நிரதிசய வைகுண்டநாத" என்கிறபடி அத்யாச்சர்யாதீத ஸ்வபாவத்தையுடைய வைகுண்ட நாதனென்றும், "யத்தூரேமநஸோ யதேவதமஸஃபாரே யதத்யத்புதம்" என்கிறபடி எது அதிக தூரத்திலிருக்கின்றதென்றும் அறிவதற் கஸாத்யமென்றும் அத்யற்புதமென்றும் விவேகிகளாற் சொல்லப்பட்டிருக்கின்றதோ அதுவே பரமமான ஸ்தாநம் என்றும்,இப்படி ஸர்வ பூர்வதேசிக குழாங்களாலே ஏககண்டமாயறுதியிடப்பட்

---

* அப்ராக்ருதம்-பிரகிருதி சம்பந்தமில்லாதது.

† அதிக்ரமித்தல்-கடத்தல்.

டிருக்கிற ப்ரபாவாதிசயங்களையுடைய கண்ணன்விண்ணூரான பரமபதத்தில் "ப்ராகாரைஶ்சவிமானைஶ்ச ஸௌவணைரத்ந மயைர்வ்ருதா" என்கிறபடி இரத்நமயமான ப்ராகார மண்டப விமாநமாடவீதிகளையும் "கோடி வைஶ்வாநர ப்ரக்ய க்ருஹபங்க்திபிராவ்ருதா" என்கிறபடி வைச்வானராக்நி கோடி கொழுந்துவிட்டுக் கிளர்ந்தாற்போற் காணுந் தேஜோரூபமான திருமாளிகைகளையும், "மணிதோரண சித்ராட்யா விசித்ரத்வஜ ஶாலிநீ" என்கிறபடி நவரத்ந கசிதமான தோரணங்களாலும் விசித்ரமான கொடிகளாலு மலங்க்ருதமான "கொடியணி நெடுமதிட்கோபுர"ங்களையுமுடைய ராஜஸ்தானத்திலே, "ஸஹஸ்ரஸ்தூணே விசித்ரேத்ருட உக்ரேயத்ர தேவாநாமதிதேவ ஆஸ்தே" என்கிறபடி விசித்ரமா யிருப்பதொரு ஆயிரங்கால் மண்டபமான செம்பொன்செய் கோயிலிலே தேவாதிதேவ னெழுந்தருளியிருக்கிற'னென்றும், "மத்யே து மண்டபேதிவ்யே ராஜாஸ்தாநம் மஹோச்ச்ரயம் - மாணிக்யஸ்தம் பஸாஹஸ் ரஜ[illegible]ஷ்டம் ரத்நமயம் ஶ[illegible]பம் - நித்ய முக்தைஸ்ஸமா கீர்ணம் ஸாமகாநோப ஶோபிதம் - அதீவதத்ஸதாபூர்ணம்" என்கிறபடி அதிக விசித்ராகாரத்தையுடைய மாணிக்கமயமான ஆயிரம் ஸ்தம்பங்களாற் சுமக்கப்பட்டுச், சுபகரமானதாய் ஸதாநித்ய முக்தர்களாற் சூழப்பட்டுச் சாமவேதகாநஞ் செய்துகொண்டிருக்கும் வைபவத்தை யுடையதாய் "மாமணிமண்டபத் தந்தமில் பேரின்பம்" என்கிறபடியே நிகரற்ற சந்தோஷப் பெருங்கடலாய்ச், ஸ்ரேஷ்டமான பீட பர்யங்களோடு விளங்குகிற திருமாமணி மண்டபத்திலே உபயவிபூதியுந் தொழிலாக வகுப்புண்டு "கோப்புடைய சீரிய சிங்காதனத்"தின்மேல் "ஹிரண்மயே பரேகோஶே விரஜம் ப்ரம்ஹ நிஷ்களம் தச்சுப்ரஞ் ஜ்யோதிஷாம் ஜ்யோதிஸ் தத்யதாத்மவி தோவிதுঃ" என்கிறபடி ஸ்வர்ணமயமாய், மாசற்றதாய்ப், பரமகாந்தியை யுடையதாய், நிஷ்களங்கமாய், ஆத்ம க்ஞானிகளால் மாத்திர மறியப்படுவதாயிருக்குமொரு மேல்வீடு என்றும், "திவிஸூர்ய ஸஹஸ்ரஸ்ய பவேத்யுக பதுத்திதா யதிபாஸ்ஸத்ருஶீ ஸாஸ்யாத்பாஸஸ்தஸ்யமஹாத்மநঃ" என்கிறபடி அம்மோக்ஷலோகத்திலே யிருக்கிற யாதொரு பரமாத்மாவின் திருமேனிக்காந்திக்கு ஆயிரம் ஸூரியர்க ளொன்றுசேர்ந்து ப்ரகாசித்தாலும் நிகராகாது

என்றும், "ஸ்ரக் வஸ்த்ராபரணைர்யுக்தம் ஸ்வாநுரூபைரநூபமை:-சிந்மயைஸ் ஸ்வப்ரகாசைஶ்ச அந்யோந்யருசிரஞ்ஜிதை:" என்கிறபடி அந்த சின்மய ஸ்வரூபியின் றிருமேனியில் தரிக்கப் பட்டிருக்கிற பீதாம்பர ஹார பூஷணாதிகள் ஒன்றுக்கொன் றழகாலு மொளியாலு மிஞ்சிக் கிடக்கையால் "சுழிபட்டோடுஞ் சுடர்ச்சோதிவெள்ளம்" "சோதி வெள்ளத்தினுள்ளே யெழுவதோருரு" என்கிறபடியே * நிரவதிக தேஜோமயமாய்ப் பெருகி யொழுகு மழகு வெள்ளத்திடையில் அமைந்ததோர் சுழியிலெழுந்ததோ ருருவமென்னலாம்படி நித்ய ஸித்த பரமேஷ்டியாதி பஞ்சோப நிஷண்மயமாய் விளங்குகிற கிரீடாதி நூபுராந்தமான திவ்யவஸ்த்ர திவ்யாபரண பூஷிதமாய் ஆபரணகோடியிலும் ஆயுதகோடியிலு மெய்காட்டுகிற சங்கு சக்ர கதாகட்க கோதண்டாதிகளாலே ப்ரகாசிதனாய் நிரதிசய சௌந்தர்ய சௌகுமார்ய லாவண்ய யௌவநாதி யபரிமித உதார குணகண நிதியான திவ்யமங்கள விக்ரஹ விசிஷ்டமாய், "ப்ருஹச்சரீரோபிவிமாநதேஹோ யுவாகுமாரத்வ முபேயிவாந்ஹரி:ரேமே ஶ்ரியா ஸௌஜகதாஞ்ஜநந்யாஸஞ்யோத்ஸ்நயாசந்த்ரஇவாம்ருதாம்ஶ:" என்கிறபடி † புஷ்கலாகாரனாய் நித்ய யௌவந கௌமார தசையையு முடையனாய் மார்பைவிட் டகலாத பெரிய பிராட்டி சமேதனாய்க், கோடிபானுதேஜனாய்த், தன்றாள்தொழுவாருக்குச் சந்த்ரபிம்பத்தையொத்து ஸுகஸேவையைத்தருந் திருமுகமண்டலத்தை யுடையனாய், "ராஜாதி ராஜஸ் ஸர்வேஷாம் விஷ்ணுர் ப்ரஹ்மமயோ மஹாந்-ஈஶ்வரந் தம்விஜாநீமஸ் ஸஶம்புஸ் ஸப்ரஜாபதி:" என்கிறபடி ஒரானொருகாலத்தில் ப்ரம்ஹருத்ராதிகளைத் தன்னிடத்திலிருந் துண்டாகச்செய்கிறவனை அந்த விஷ்ணுவாகிய பரப்ரம்ஹம் ஸமஸ்த தேவர்களுக்கும் ராஜாதிராஜனாய் ப்ரகாசித்துக் கொண்டிருப்பா னென்கிறபடியே "ஏழுலகுந் தனிக்கோல்செல்ல வீற்றிருந்து" "போங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே யாள்கின்ற செங்கோலுடைய திருவரங்கச்செல்வனார்" "கண்ட

* நிரவதிக-எல்லையற்ற.

† புஷ்கலாகாரனாய்-பூரண சொரூபனாய்.

வாற்றுற்றனதே யுலகெனநின்றான்” என்கிறபடியே தான் * உபய விபூதிக்கும் நிர்வாஹகனானமை, காட்சியிலே தோற்ற வெழுந்தருளியிருந்து “ஸ்வேதரஸமஸ்த வஸ்து விலக்ஷணாநந்த ஜ்ஞாநாநந்தைகஸ்வரூப” என்கிறபடி நிரதிசயாநந்த யுக்தனாய், வரம்பில்லாத ஞானமூர்த்திகளாகிய நித்யஸூரிகளையும் “இயக் கெலாமறுத்து” என்கிறபடியே அந்யோந்ய ஸம்பந்தங்களாகிற அவித்யா கர்மவாசநாருசி ப்ரக்ருதி ஸம்பந்தங்களையெல்லாம் போக்கிக்கொண்டவர்களாய், நிவ்ருத்தஸம்ஸாரராய், அந்த நித் யரைப்போலவே † லப்தகைங்கர்ய பரராயிருக்கிற முக்தர்களை யும் ஆநந்திப்பித்துக்கொண்டு வராநிற்க ஸம்சாரிகளும் தன்னை இவ்வண்ணமாகவே அநுபவித்து, ‡ அநுபவ ஜநித ப்ரீதி காரி தாவஸ்தோசிதாசேஷ சேஷைதைக ரதிரூப நித்ய நிரதிசயாநந்த ரூப மத்கைங்கர்யமாகிற மஹாஸம்பத்தைப்பெற்று வாழுகை க்கு ப்ராப்தி யுண்டாயிருக்க இவர்களந்த வாழ்வைப் பெறுதற் குத் தேடிக்கொள்ளவேண்டிய த்ரவியங்களாகிற ஜ்ஞாந பக்தி வைராக்யாதிகளை எள்ளளவேனு முடைத்தாயிராமல், கரண களேபர சூன்யர்களாய் “லூநபக்ஷ இவாண்டஜః” என்கிறபடி இறகொடிந்த பக்ஷிகள்போலே வ்யவகாரமற்று நோவுபட் டுழல்வதைக்கண்டு ஸஹியாதவனாய்த், தனியரைப்போலே நொந்து “கரணகளேபரைர் கடயிதுந் தயமாநமநாః” என் கிறபடி “பல்லுயிர்க்கு மாக்கை கொடுத்தளித்தகோனே” என்றுஞ் சொல்லுகிறபடியே அகிலாத்மாக்களுக்கும் கர சரணாதி யவயவ ப்ரதானம் பண்ணியருள, இவர்களவற் றைப் பெற்றும் “விசித்ரா தேஹஸம் பத்திரீஶ்வராய நிவேதிதும் - பூர்வமேவக்ருதா ப்ரஹ்மந்ஹஸ்த பாதாதி ஸம்யுதா” என்கிறபடி பூர்வமே இவர்கள் கரண

---

* உபயவிபூதி-நித்யவிபூதி, லீலாவிபூதி.

† லப்த-அடைந்த.

‡ அநுபவ - அநுபோகத்தினாலே, ஜனிதா - பிறந்த, பிரீதி - பிரீதியின், காரிதா - காரியமாகவும், (மற்றும்) அவஸ்தோசிதாசேஷ-ஸமஸ்த இடங்களிலும் செய்யத்தக்கதாயும், அசேஷ - விசேஷப்பட்ட தாயுமுள்ள, சேஷதா - காரியமாகவும், ஏக்தா - ஒப்பற்ற, ரதிரூப-பிரீதிசொரூபமாயுமுள்ள, மத்கைங்கர்யம் - தனது (ஈச்வரனுடைய) கைங்கர்யத்தை.

களேபரங்களைப் பெற்றிருக்கினும், அவற்றாலவனை வணங்குதற் குறுப்பான சில விசேஷங்களைக் கடாக்ஷித்திருக்கிறானென் றெண்ணுமலும், "நாடாத மலர்நாடி நாடோறும் நார ணன்றன் வாடாத மலரடிக்கீழ்வைக்க" முயலாமலும், "மாய வன்றன்னை வணங்கவைத்த கரணமிவை" என்று நினையளவே னும் நினையாமலும், அவனது தேனேமலரும் திருப்பாதங்களில் தொண்டுசெய்தற் குறுப்பாகப்பெற்ற அந்த அவயவ ஸமூஹங் களைச் சமிதை தறிக்கக்கொடுத்த கத்தியைக்கொண்டு பசுவின் வாலைத் துணிப்பாரைப்போலும், களையெடுக்கக்கொடுத்த கோ லைக்கொண்டு கண்களைக் கிளறிக் கொள்வாரைப்போலும், ஆற் றைக் கடக்கக் கொடுத்த தெப்பத்தைக்கொண்டு நீர்போக்கிலே விட்டுக் கடலுக்குள் புகுவாரைப்போலும், ஆக்கையின் வழி யுழன்று சப்தாதி விஷய ப்ராவண்யத்துக் குறுப்பாக்கிக், கர்ம ப்ரவாஹத்தாலே பிறவியென்னும் பெருங்கடலிலே புக்கு அநர்த் தப்படுகிற படியைக்கண்டு, அதன்மேலும் "ஹார்த்துந் தமஸ் ஸதஸ்தீச விவேக்து மீஶோ மாநம் ப்ரதீப மிவகாருணி கோத தாதி" என்கிறபடி தாமஸத்தையொழித்து ஸத்வகுண ப்ரசுரரா யிருந்து தேஹாத்மேஶ்வர தத்வங்களை விவேகிக்கைக்குறுப்பா கக் "கலைகளும் வேதமும் நீதிநூலும் கற்பமுஞ் சொற்பொருள் தானு மற்றை, நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையி னலருள் செய்த" என்றும், "தொண்டே செய் தென்றுந் தொ ழுது வழியொழுகப் பண்டே பரமன் பணித்தவகை" என்கிற படியே சாஸ்த்ர ப்ரதாநமும் பண்ணியருளி "ஈஶ்வரோஹ மஹம்போகீ ஸித்தோஹம்பலவாந் ஸுகீ-ஆட்யோபிஜ நவா நஸ்மி கோந்யோஸ்தி ஸத்ருஶோமயா" என்றும், "யோந்யதா ஸந்தமாத்மா நமந்யதா ப்ரதிபத்யதே-கிந்தேநநக்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா" என்றுஞ் சொல்லுகிறபடி ஸர்வரூப ருசிபேத பல ஐஶ்வர்யாதிகளுக்குந் தானே காரணனென்றும், அப்படியிருக்கிற தனக்கே ஸகலாத்மாக்களும் சொத்தாகிறார்க ளென்றும், அப்படித் தன்னுடையதான ஆத்மவஸ்துவை என் னுடையதென்னுமதிப்பாலே * பகவத் விமுகராவாரைப்பார்க் கிலும் பாபிகள் வேறில்லையென்றும், அவர்களே ஈஶ்வர த்ரோ ஹிகளான ஆத்மாபஹார சோரர்களென்றும் சாஸநஞ் செய்து வைத்துத் திருத்தப்பார்க்கையில், இவர்களதன் பிறகும் அகில

* பகவத் விமுகர் - பகவத் விரோதிகள்.

பாபஹேதுவான ஆத்மாபஹாரத்தைப் பண்ணி * அநாதிகர்ம வாஸநாதோஷ தூஷிதாந்தஃகரணராயிருக்கக்கண்டு அவன் கைவிடத் துணியாதவனாய் ஒலைப்புறத்துச் செல்லாத நாட்டை யெடுத்துவிட்டுக் குறும்பறுக்கும் அரசர்கள்போலே தானேயிவண்வந்து இவர்களை வாரிப் பிடியாகப் பிடித்துக்கொண்டு போகவேண்டு மென்றெண்ணி, இராம கிருஷ்ணுதியவதாரங்களைச்செய்து, "ஆஸுரீம்யோ நிமாபந்நா மூடா ஜந்ம நிஜந்மநி-மாமப்ராப்யது கௌந்தேய ததோயாந்த்யதமாங்கதிம், அவஜாநந்திமாம்மூடா மாநுஷீந் தநுமாஸ்ரிதம், பரம்ஹாவமஜாநந்தோமமபூதமஹேஸ்வரம்"என்கிறபடி என்னுடைய அவதாரங்களில் மனுஷ்ய புத்திபண்ணி, என்னைக்கிட்டாமல், † ஆஸுர க்ருத்யங்களைப் புரிவோரை ஜந்ம ஜந்மாந்தரங்களிலும் நரகிலிட்டழுத்துவேனென்றும், இத்தேசத்தார் என்னைப் பரனென்றும் மஹேஸ்வரனென்றும் அறிந்து கிட்டாமல் மனுஷ்ய ப்ரதிபத்திபண்ணி யொழிகிறார்களே யென்றும், குந்திபுத்ரனான அர்ஜுனனைப் பார்த்துத் தன் திருவாயாலே ‡ சாமாதி யுபாயங்களாற் சொல்லித் திருத்தப் பார்க்கையிலும் இவர்கள் § ஸஜாதீய ப்ரதிபத்தியாலே தன்னை யவமானம்பண்ணி எதிரம்புகோத்துக் "கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும்" என்றும் "வல்லவா பழித்து" என்றுஞ் சொல்லுகிறபடியே ஆஸுர ப்ரக்ருதிகளால் வாக் துருக்தங்கள்பண்ணித் தன்னை யடையாமல் நானென்னும் அகப்பற்றையும் எனதென்னும் புறப்பற்றையு முடையராய் அதமமான கதிகளுக் காளாகவிருக்க அப்போதும் இவர்களுக்கு நேரிடுந் துன்பங்களைக்குறித்து வ்யாகுலனாய்த், தான் "மனிசரும் மற்றும் முற்றுமாய் மாயப்பிறவி பிறந்த தனிய" னானபடியால் விசேஷக் கிருபையாலே ஐயோ!! வென்றிரங்கி இனியிவர்களைத் திருத்தவேண்டுமாகில் ஸர்வ ப்ரகாரத்திலு மிவர்களுடன் கலந்திருந்து மீட்பதுதானுபாயமாகுமென்றுநினைத்து, (மானைக்

---

* அநாதிகர்ம வாஸநாதோஷ தூஷிதாந்தஃ கரணர் - அநாதியான கர்மவாசனையாலே தோஷத்தையும் பழிப்பையும் விளைக்கக்கூடிய அந்தக்கரணத்தை யுடையவர்கள்.

† ஆசுரக்ருத்யம் - தீச்செயல்.

‡ சாமாதி - சாம, தான, தண்ட பேதங்கள்.

§ சஜாதீயம் - ஒத்தஇனம்.

காட்டி மானை மடக்குவாரைப்போலும், வலையையிட்டுப் பற வைகளைப் பிடிப்பாரைப்போலும்) தன்னுடைய ஸ்ரீவத்ஸ கௌஸ்துப வைஜயந்திவநமாலை ஸ்ரீபூ நீளாதேவிகள் அநந்த கருட விஷ்வக்ஸேந ஸ்ரீஸுதர்சந பாஞ்சஜந்ய கதா நந்தக சார்ங்காழ் வார் தொடக்கமானவர்களைப்பார்த்து நீங்கள் பூமியிற்போய் நான்கு வர்ணங்களிலு மவதரித்து அகிலாத்மோத்தாரணங்க களைப் பண்ணக்கடவீர்களென்று நியமித்தருள; அவர்களும் கிணற்றில் விழுந்த குழந்தையை மூச்சுப் பிறழா முன்னமே விரைந்து குதித்தெடுக்கு மன்னையைப்போல் பரிவுடையவர்க ளாய் அஜ்ஞாநார்ணவத்தில் மூழ்கித் தவிக்கின்ற இச் சம்ஸாரி சேதநர்களைக் கறையேற்றத் திருவுள்ளம்பற்றிக் "கலௌகலு பவிஷ்யந்தி நாராயணபராயணா:-க்வசித் க்வசிந்மஹாபாகாத்ரமி டேஷுசபூரிஶ:" என்றும் "தாம்ரபர்ணீ நதீயத்ரக்ருதமாலா பயஸ்விநீ, காவேரீசமஹா பாகாப்ரதிசீச ஸரஸ்வதீ" என்றுஞ் சொல்லுகிறபடி உத்தவரைப் பார்த்துக் கண்ணன் கலியுகத்தில் நாராயண பாராயணுளான சில மஹாநுபாவர்கள் தாம்ரபர்ணி க்ருதமாலை காவேரி ஸரஸ்வதி க்ஷீரநதி தீரங்களில் த்ரமிட பூபா கத்தி லவதரிக்கப் போகிறார்களென்று திருவாய் மலர்ந்தருளி யிருந்தபடியே அங்கங்கு மவதரித்தருள ஸர்வேஶ்வரன் அவர் களுக்கு மயர்வற மதிநலமருளி, அவர்கள் முகமாய் ஸர்வாதி காரமான த்ராவிடரூப திவ்ய ப்ரபந்தங்களை ப்ரகாசிப்பித் தருளினான்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

ப்ரவேசம் முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

குருபரம்பராப்ரபாவம்

முதலாழ்வார்கள்

மூவரிலொருவராகிய

பொய்கையாழ்வார் வைபவம்

தனியன்.

ஸ்ரீமுதலியாண்டானருளிச்செய்தது.

நேரிசை வெண்பா.

கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு—வையத்
தடியவர்கள் வாழ வருந்தமிழந் தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து.

இவ் வாழ்வாருடைய அவதாரக்கிரமம் எங்ஙனேயென்னில் "காஞ்ச்யாம் ஸரஸிஹேமாப்ஜே ஜாதங் காஸாரயோகிநம் - கலயே யஶ்ஶ்ரிய: பத்யே ரவிந்தீப மகல்பயத்" என்கிறபடி காஞ்சீபுரியில் மநோஹரமாயிருப்பதொரு பொய்கையில் பொற்றாமரைப்பூவில் ஸ்ரீய:பதியினுடைய கலாம்ச ஸம்பூதரான காஸாரயோகியென்கிற பொய்கையாழ்வார் ஸூர்யனைப்போன்ற தேஜஸை யுடையரா யவதரித்தருளினார் என்றும், "முகுந்தஸ்ய முகோல்லாஸ மூலவாக்ஜாலமூர்ச்சிதம் - முநிமுக்யம் ஸரோஜாதம் முக்திமூல முபாஸ்மஹே" என்கிறபடி மோக்ஷப்ரதாயகனை எம்பெருமானுக்கு முகோல்லாஸத்தைத் தருமவராய் ஸமஸ்த வாக்குகளுக்கும் மூலமானவராய் முனிசிரேஷ்டராய்ப் பொற்றாமரைப் பொய்கையில் அவதரித்து முக்திமார்க்கத்தைக் காட்டி யருளினவரான மூலபுருஷனை நமஸ்கரிக்கிறேனென்றும், "ஹேமாப் ஜிநீஹேமஸரோஜ கர்பாத் ஸ்ரீபாஞ்ச ஜந்யோஜநி திவ்யயோகீ - தாரேஹரேராஶ்வ யுஜாக்யமாஸே ஸமஸ்த ஜீவாவநகர்மஹேதோ:" என்கிறபடி ஸ்வர்ணபொய்கையில் பொற்று

மரைப் பூவினிடமாக ஐப்பசிமாசம் திருவோண நக்ஷத்திரத்தில் யோகிகளில் சிரேஷ்டராய் ஸர்வருக்கும் ரக்ஷகராய் எம்பெருமானுடைய பாஞ்சஜந்யாம்ச ஸம்பூதரான முனிவரர் அவதரித்தருளினர் என்றும், "ஆஜ்ஞாதி ஸ்ரீசந்தநே த்வாபராக்யே ஸித்தார்த்யாக்யே வத்ஸரேமாஸி சேஷே ஶுக்லாஷ்டம்யாம் பௌமவாரேஶுபர்க்ஷே விஷ்ணோர் ஜந்ம ப்ராபகாஸாரயோகீ" என்கிறபடி எம்பெருமானுடைய ஆஜ்ஞையினாலே துவாபரயுக அந்தியத்தில் சித்தார்த்திவருஷம் ஐப்பசிமாசம் சுக்லாஷ்டமி செவ்வாய்க்கிழமை கூடிய சுபதினமாகிய விஷ்ணு நக்ஷத்திரமென்று சொல்லப்படுகிற திருவோண நக்ஷத்திரத்தில் ஸ்ரீகந்த பரிமளத்தைப்போலே காஸாரயோகி யென்பவர் அவதரித்தருளினர் என்றுஞ் சொல்லுகிறபடியே "கஇதி ப்ரஹ்மணோ நாம தே நதத்ராஞ்சிதோஹரி:-தத: காஞ்சீ திவிக்யாதாபுரீ புண்ய விவர்த்தநீ" என்கிறபடி ககாரவாச்யனான பிரமன் அசுவமேத யாகஞ்செய்து ஸர்வேஶ்வரனை ஸ்ரீயஃபதியை ஆராதித்த ஸ்தலமாகையாலே காஞ்சீபுரமென்று சொல்லப்பட்ட "கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சி" யிலே, "விண்ணோர் தொழுங்கண்ண" னுடைய திருவெஃகாவிலே, பொற்றாமரைப் பொய்கையில் த்வாபரயுகத்தில் எட்டுலக்ஷத் தறுபத்திராயிரத்துத் தொளாயிரத் தோராவதாண்டில் நிகழ்ந்த சித்தார்த்திவருஷம், ஐப்பசி மாஸம், சுக்லாஷ்டமி, செவ்வாய்க்கிழமை கூடிய திருவோண நக்ஷத்திரமாகிய சுபதினத்தில், ஸ்ரீ பாஞ்ச ஜன்யாம்சரா யவதரித்தருளினர்.

திருநக்ஷத்ரத் தனியன்.

"துலாயா ஶ்ரவணம் ஜாதம் காஞ்சயாம் காஞ்சனவாரிஜாத் த்வாபரே பாஞ்ச ஜந்யாம்சம் ஸரோயோகி நமாஶ்ரயே."

ஸ்ரீ பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

இரண்டாவது

பூதத்தாழ்வார் வைபவம்.

தனியன்.

திருக்குருகைப்பிரான் பிள்ளானருளிச்செய்தது.

நேரிசை வெண்பா.

என்பிறவி தீர விறைஞ்சினே னின்னமுதா
அன்பே தகளி யளித்தானை—நன்புகழ்சேர்
சீதத்தார் முத்துக்கள் சேருங் கடன்மல்லைப்
பூதத்தார் பொன்னங் கழல்.

இவ்வாழ்வாருடைய அவதாரக்கிரமமெங்ஙனே யென்னில் "மல்லாபுரவராதீஶம் மாதவீகுஸுமோத்பவம் - பூதந்நமாமி யோ விஷ்ணோர்ஜ்ஞாநதீப மகல்பயத்" என்கிறபடி மல்லைமா நகரத்தில் குருக்கத்திப் பூவினிடமாகவவதரித்து, ஞானமென்கிற தீபத்தை யேற்றிவைத்து எம்பெருமானை ப்ரத்யக்ஷமாக "வந்தே பூதாக்ய யோகீந்த்ரம் வரேண்யகுண ஸம்பதம் - லக்ஷ்மீ ஸஹாய கருணா ப்ராப்த ப்ரமிதிவைபவம்" என்கிறபடி. லக்ஷ்மீ ஸமேதனை எம்பெருமானுடைய கருணைக்குப்பாத்திரராய், அநந்தஸுகுண ஸம்பத்தைப்பெற்று யோகீந்த்ரராய் விளங்குகிற பூதயோகியை நமஸ்கரிக்கிறேன் என்றும், "மாஸேததஸ்மிந் வஸுபேஜநிஷ்ட பாரேஸமுத்ரம் புரிமல்லநாம்ந்யாம், லதாக்ருஹாந் தாத்புவிபூதநாமா கௌமோதகீ ஶக்தி மயோமுநீந்த்ர:" என்கிறபடி திவ்ய ஸூரிசரிதையிலே சொல்லப்பட்டிருக்கிறபடியே "மாதவன் பூதம்" என்று சொல்லலாம்படியான பூதத்தாழ்வார் "கச்சிக்கிடந்தவனூர் கடன்மல்லைத் தலசயனம்" என்று அநுசந்தேயமான திருக்கடன்மல்லையிலே, பரிமளப்ரசுரமாய் நன்றாயிருப்பதொரு குருக்கத்திப் புஷ்பத்தினிடம் (பொய்கையாழ்வாருடைய தோற்றத்திற்கு) அடுத்த நாளான அவிட்ட நக்ஷத்திரத்தில் ஸ்ரீ கதாம்சரா யவதரித்தருளினார்.

திருநக்ஷத்ரத் தனியன்.

"துலாதநிஷ்ட ஸம்பூதம் பூதம்கல்லோல மாலிநம், தீரே புல்லோத்பலாமல்லாபுரய மீடே கதாம்சகம்."

ஸ்ரீ பூதத்தாழ்வார் திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளே சரணம்.

மூன்றாவது
பேயாழ்வார் வைபவம்

தனியன்.

குருகாவலப்ப னருளிச்செய்தது.

நேரிசை வெண்பா.

சீராரு மாடத் திருக்கோவ லூரதனுட்
காரார் கருமுகிலைக் காண்புக்கு—ஓரா
திருக்கண்டே னென்றுரைத்த சீரான் கழலே
உரைக்கண்டாய் நெஞ்சே யுகந்து.

இவ்வாழ்வாருடைய அவதாரக்கிரம மெங்ஙனே யென்னில் "தந்மாஸிஜாதம் ஸுததாரகாயாம் மயூரபுர்யாம் மணிகைரவாந் தாத், பக்த்யாமஹாந்தம் மஹதாஹ்வயந்தம் ஸ்ரீநந்தகாம்ஸம் ஸ்ரீதபக்திரூபம்" என்கிறபடி அவ்விரண் டாழ்வார்களுடைய தோற்றத்திற்கடுத்த நாளான சதய நக்ஷத்ரத்தில் திருமயிலை யென்கிற திவ்யதேசத்திலே சந்நிதித் திருக்கிணற்றி லுள்ள தொரு அழகியதான செவ்வல்லிப் புஷ்பத்தினிடமாக பரமபக்தியை யுடையவராய், மஹதாஹ்வயரென் றழைக்கப்படுகிற முனிவரர் ஸ்ரீநந்தகாம்ஸரா யவதரித்தருளினார் என்றும், "த்ருஷ்ட்வாஹ்ருஷ்டம் ததாவிஷ்ணும் ரமயாமயிலாதிபம்-கூபேரக்தோத்பலேஜாதம் மஹதாஹ்வய மாஸ்ரயே" என்கிறபடி எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்ரஹ ஸேவையிலும் குணாநுபவத்திலு மீடுபட்டுக்கொண்டிருக்கும் மனதையுடையவரும், திருமயிலைக்கு நிர்வாஹகரும், மாதவப்பெருமாள் சந்நிதித்திருக்கிணற்றில் செவ்வல்லிப்பூவினிடமாக வவதரித்தருளினவருமான மஹதாஹ்வயரென்கிற முனிவரை நமஸ்கரிக்கிறேன் என்றும், "பத்மாரமண பாதாப்ஜப்ரேமப்ராந்த்யா மநோஜ்ஞயா, ப்ராந்த யோகீதிவிக்யாதம் முநிம்வந்தே குணாம்புதிம்" என்கிறபடி தாமரைப்புஷ்பத்தை ஜந்மஸ்தாநமாகவுடைய லக்ஷ்மிக்கு நாயகனான எம்பெருமான்பக்கல் ப்ராந்திகொண்ட மனதையுடையவராகையால் ப்ராந்த யோகியென் றழைக்கப்படுகிற ஸத்குணஸாகரரை நமஸ்கரிக்கிறேன் என்றுஞ் சொல்லுகிறபடியே "தேனமர்சோலை மாடமாமயிலை" என்கிற திருமயிலையில் மாதவப்பெருமாள் சந்நிதித் திருக்கிணற்றிலே யுண்டானதொரு அழகிய

செவ்வல்லிப் புஷ்பத்திணிடம் (பூதத்தாழ்வாருடைய தோற்றத்திற்கு) அடுத்தநாளான சதயநக்ஷத்திரத்தில் ஸ்ரீநந்தகாம்ஸராயவதரித்தருளி "நியத புலகிதாங்கா நிர்ப்பராநந்தபாஷ்பா, களிதநிகில ஸங்காகத்கத ஸ்தோத்ரகீதி:-அம்ருதலஹரிவர்ணஹர்ஷந்ருத்தோப பந்நாவிகத நரகபீதிர் விஷ்ணுபக்திர்விபாதி" என்கிறபடி விஷ்ணுபக்தியையுடையவராய்ப் "பேயனேயொழிந்தே னெம்பிரானுக்கே" என்கிறபடியே நிரந்தரம் பகவதநுபவானந்தத்தால் திருமேனியில் மயிர்க்கூச்செறிந்து, ஆனந்தக்கண்ணீர்சோர, நெகிழ்ந்த திருவுள்ளத்தை யுடையராய்ப், பரவசத்தொனியோடு அமிர்தப்ரவாஹத்தை யொத்து வெளிப்படுஞ் சொற்களடங்கிய திருவாக்கையுடையராய், ஸர்வஸங்கபரித்யாகியாய்க் கிஞ்சித்தேனும் நரகபீதியில்லாதவராய், நர்த்தனஞ் செய்துகொண்டு "அழுவன்றொழுவன் ஆடிக்காண்பன் பாடியலற்றுவன்" "காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்கிறபடியே பகவதநுபவ பாரவஶ்யமென்கிற பித்தேறினவரா யிருக்கையிலே "பேயாழ்வார்" என்கிற திருநாமமே நிரூபமாக வுடையவராயிருப்பர்.

திருநக்ஷத்திரத் தனியன்.

"துலாசதபிஷக்ஜாதம் மயூரலரி கைரவாத் மஹாந்தம் மஹாதாயாதம் வந்தே ஸ்ரீநந்தகாம்சகம்".

ஸ்ரீபேயாழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

முதலாழ்வார்கள்

மூவருடைய வைபவம்

இப்படி * யோனிகதரன்றிக்கே புஷ்பத்திலிடமாக வவதரித்தருளின இம்மூவரும் எம்பெருமானுடைய நிர்ஹேதுககடாக்ஷத்தாலே "முக்குணத் திரண்டவையகற்றி" என்கிறபடியே ராஜஸ தாமஸகுணங்க ளொழியப்பெற்று "ப்ரவ்ருத் திஞ்ச நிவ்ருத்திஞ்ச கார்யாகார்யே பயாபயே-பந்தம்மோக்ஷஞ் சயாவேத்தி புத்திஸ்ஸா பார்த்தஸாத்விகீ" என்கிறபடி ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி, நல்லவை தீயவை, ஸத்கார்யம் துஷ்கார்யம், பயம் அபயம், பந்தமோக்ஷங்களின் ஸ்வபாவங்களை உள்ளபடியறிகிற சுத்த சாத்விகமாகிற "ஒன்றினிலொன்றிநின்று" என்கிறபடியே மேற்பட்ட ஒருகுணத்தையே யுடையவர்களாய்த் "தாஸாவயமிதிப்ரஹ்மங்மாநி நோலோக வர்ஜிதாঃ" என்கிறபடி நாம் உலகத்தாருடைய சஹவாஸத்தை † ஸவாஸனமாகவிட்டு எம்பெருமானுக்கே தாஸபூதர்களாகக்கடவோம் என்றும்; "தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வேஹயாத்மாநঃ பரமாத்மநঃ" என்கிறபடி ஆத்மாக்கள் பரமாத்மாவாகிற ஸ்வாமி யொருவனுக்கே(சேஷிக்கே)அடிமைப்பட்டிருக்கவேண்டுமென்றும், "ஸ்வத்வமாத்ம நிஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்ரஹ்மணிஸ்திதம்-ஆத்மதாஸ்யம் ஹரேஸ் ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்சஸதாஸ்மர" என்கிறபடி சுத்த ஸத்வகுணத்தை யுடையவனும், சுவாமித்வ முடையவனுமான எம்பெருமானிடத்திலன்றோ ஆத்மாக்கள் ஸதா அடிமைத்திறத்தை வஹித்தலான ஸ்வபாவத்தை யுடையவர்க ளாகவேண்டியது என்றும், "ஜ்ஞாநாநந்த மயஸ்த்வாத்மா ஸேஷோஹி பரமாத்மநঃ" என்கிறபடி ஞாநாநந்த ஸ்வரூபியாய் ஸர்வசேஷியாயிருக்கிற சுவாமிக்கன்றோ ஆத்மாக்கள் தாஸபூதர்க ளாகவேண்டுமென்றுஞ் சொல்லுகிறபடியே ஸ்வதஸ்ஸித்த பகவத் தாஸ்யத்தை வஹித்து, அதனாலே நிரதிசய ஜ்ஞாநபக்தி வைராக்யாதிகளை யுடையவர்களாய்ப் "புலன்களைந்து பொறிகளாலேதமொன்றுமிலாத" என்கிறபடியே அன்னபாநாதி ‡ வர்ஜிதர்களாய்

---

* யோனிகதரன்றிக்கே-யோனிசம்பந்தமில்லாதவராய்.

† ஸவாஸனமாக-வேரற (அடியோடு) ‡வர்ஜிதர்-ஒழித்தவர்.

'உனதுபாலேபோல் சீரில் பழுத்தொழிந்தேன்" என்கிறபடியே சிசுக்களுக்குத் தாய்ப்பால் தாரகமானாற்போல, பகவத் குணாநுபவமே இவர்களுக்குத் தேஹாத்ம போஷகமாக விருக்கையாலே "உண்டியே யுடையேயுகந்து" வயிற்றைத்தூர்க்கச்சோறும் குளிருக்குப்போர்க்க வஸ்திரமுமான இவற்றி னளவில்தானே சுகமிருப்பதாய் ப்ரமித்துப்போந்து "தீதில் நன்னெறி நிற்கவல்லாத செய்து" பகவந் முகோல்லாஸமாக வநுஷ்டிக்கவேண்டிய ஸத்கார்யங்களையெல்லாம் ஒருபுறம் நிற்கவிட்டு, அபாயத்தைத் தருமவையான தாபத்ரயாதிகளையே உபாயமாகத் தழுவிக்கொண்டு, பகவத் விமுகராயிருக்கிற ஸம்ஸாரிகளுடைய கொள்கையைப் பார்த்து ஸகியாமல் "நாட்டுமானிடத்தோ டெனக்கரிது" என்கிறபடியே அவர்களுடைய ஸஹவாசங் கொடியதென்று வெறுத்து, ஒருநாளிருந்தவிடத்தில் மறுநாளிராமல் கிராமத்துக் கோரிரவாகத்தங்கி இவர்களொருவரை யொருவரறியாதே யாத்திரை செய்துகொண்டிருக்கிறகாலத்திலே ஸர்வேஶ்வரன் "மமாத்மா ஜ்ஞாநிநாம்வர:" என்கிறபடி ஞானிகளில் சிரேஷ்டனாயிருப்பவன் என்னுடைய ஆத்மாவாகிறானென்றும் "ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" ஜ்ஞாநிகள் எனக்கு ஆத்மாக்களென்பது என்னுடைய மதமென்றுந் தானே சொல்லி யிருக்கிறபடியே, தனக்கு ஆத்மபூதரான இவர்களைக்கொண்டு "அநாதிமாயயா ஸுப்த:" என்கிறபடி அநாதியாயிருக்கிற மாயையா லுறங்கிக் கிடக்கிற ஸம்ஸாரி சேதநர்களுக்குத் தன் விஷயமான ஜ்ஞாந பக்தி வைராக்கியங்களை யுண்டாக்குகைக்காக ஒருநாளிரவில் இம்மூவரையும் "சீரேறு மறையாளர் நிறைந்த செல்வத் திருக்கோவலூரி"லே ப்ரவேசிக்கச்செய்து அத்யாச்சர்யமானதொரு பெருமழையை யுண்டாக்க, இவர்கள் தனித்தனியே ஒரு ஸ்ரீவைஷ்ணவருடைய திருமாளிகையின் * இடைகழியில் வந்து சேர்ந்து "வைஷ்ணவோ வைஷ்ணவந் த்ருஷ்ட்வா தண்டவத் ப்ரணமேத்புவி" என்கிறபடி வைஷ்ணவனை வைஷ்ணவன் கண்டால் ஸாஷ்டாங்கமாகத் தண்டன் ஸமர்ப்பிக்கவேண்டிய முறைப்படி அந்யோந்ய வந்தன பரராய்க்கொண்டு நீரார்? நீரார்? என்று ஒருவரையொருவர் கேட்டுப் "பகவச்சேஷபூதோஹமநந்யார் ஹோசித: பர:" என்கிறபடி நான் பகவானுக்குச் சேஷ

* இடைகழி-தலைக்கடை.

பூதனே தவிர அந்யருக்கு உரியவ னல்லனென்று ஒருவரும், "தாஸோஹம் வாஸுதேவஸ்ய" என்கிறபடி நான் வாஸுதேவ னுடைய தாஸனென்று ஒருவரும், "ஜ்ஞாநாநந்த மயஸ்த்வாத் மாஸேஷோஹிபரமாத்மந:" என்கிறபடி ஞாநாநந்தஸ்வரூபியா யிருக்கும் யாதொருபரமாத்மாவான ஸ்வாமிக்கே நான் தாஸ பூதனென்று மற்றொருவருஞ் சொல்லித் தங்களை யொருவர்க் கொருவர் தெரிவித்துக்கொண்டு அந்த திருமாளிகையை யுடைய ஸ்ரீவைஷ்ணவரை யழைத்துத் தங்களுக்குத் தங்க இடந் தரவேண்டுமென்று கேட்க; அவரும் ஸ்வாமிகாள்! இங்கிரு க்கிற திண்ணை யொன்றுதான் ஒழிந்திருக்கிறது; இதுவோ ஒரு வர்க்காகில் படுக்கப்போதும், இருவர்க்கு இருக்கப்போதும், மூவர்க்கெனில் நிற்கவே போதுமென்று காட்டினர். அதையே இவர்கள் திருவுள்ளம்பற்றி அதன்மீது நின்றுகொண்டு "போத யந்த: பரஸ்பரம்" என்கிறபடி பரஸ்பர குணாநுபவம் பண் ணிக்கொண்டிருக்கையில் "துளஸீகாநநம் யத்ரயத்ரபத்மவநா நிச - வஸந்தி வைஷ்ணவாயத்ர தத்ரஸந்நிஹிதோஹரி:" என் கிறபடி துளசீவநத்திலும் பத்மவநத்திலும் வைஷ்ணவர்கள் மத் தியிலும் வாசஞ்செய்யும் இஷ்டமூர்த்தியான எம்பெருமான் இறையுமகலகில்லாத பிராட்டி ஸஹிதனாய்க் கூராழிவெண்சங் கேந்தி செந்தமிழ்பாடுவாராகிற இவர்கள் மத்தியில் உருக்காட் டாமல் தழுவி முழுகிப்புகுந்து நெருங்கிநிற்கவே இவர்கள் நம் மை யொழியவு மிங்காருண்டு? இப்படி நெருக்குகைக்கென்று ஞானச்சுடர் விளக்கேற்றியும், வெய்யகதிரோனை விளக்காகவே ற்றியும், தங்களுடைய நெஞ்சென்னு முட்கண்ணாலே காணப்புக "தார்க்ஷ்யாதி ரூடம் தடிதம்புதாபம் லக்ஷ்மீ தரம் வக்ஷஸிபங்க ஜாக்ஷம் ஹஸ்தத்வயே ஸோபிதசங்கசக்ரம், விஷ்ணும் ததர்ஸ: பகவந்தமாத்யம் ஆஜாநபாஹும் கமநீய காத்ரம், பார்ஸ்வத் வயே ஸோபித பூமிநீளம், பீதாம்பரம் பூஷண பூஷிதாங்கம், சதுர்ப்புஜம் சந்தனரூஷிதாங்கம், பிம்பாதரம் குந்தஸமாந தந் தம், சரந்நிசாநாத ஸமாநவக்த்ரம், நீலாலகம் திவ்யகிரீட ஜுஷ் டம் கர்ணத்வயே ஸோபித குண்டலாட்யம், ரத்நாங்கதம், மௌ த்திகதிவ்யஹாரம், கடிதடேலம்பிதஹேம ஸூத்ரம், ரத்நாங்கு ளீயம், மணிகங்கணாட்யம், மாணிக்கமஞ்ஜீரஸுநிஷ்டபாதம், மந்தாரமாலாஞ்சித கேசபந்தம், ஸ்ரீ கௌஸ்துபோத் பாஸித கண்டதேசம், ஸ்ரீவத்ஸவக்ஷம் கமநீயவேஷம், வேதாந்த

வேத்யம் மநஸாப்யகம்யம், அப்ராக்ருதம் தேவமநந்தரூபம், யத்யோககம்யம் குணஸம்வியோகே, அத்யற்புதம் கோடிரவிப்ர காசம், மநோதயம் யத்ஸநகாதிகம்யம்" என்கிறபடி ஸர்வேஶ்வரன் பெரியதிருவடியின்மே லேறி நவரத்நகசிதமான திருவபிஷேகத்தைத்தரித்து, மலிநமில்லாத சந்த்ரனைப்போன்ற திருமுகமும் தாமரைப் புஷ்பத்தைப்போன்ற திருக்கண்களும் கொவ்வைக் கனியையொத்த திருவதரமும் முல்லையரும்பை யொத்த திருமுறுவலும் மகரகுண்டலங்களும் தாழ்ந்திலங்குந் திருக்காதுகளும் பாரிஜாத புஷ்பஞ்சூடிய திருக்குழலும் ஸ்ரீ கௌஸ்துப மணி பிரகாசிக்கிற திருக்கண்டமும் திருவாழி திருச்சங்கினால் அலங்க்ருதமான திருத்தோள்களும் புஜகீர்த்திகளும் ஸ்ரீ வத்ஸமும் மின்னற் கொடியைப்போன்ற பிராட்டியு மமர்ந்திருக்குஞ் செல்வத் திருமார்பும் முத்தாரங்களும் மின்னுநூலும் வனமாலையும் படிந்திருக்கிற திருவுதரமும் சோதிவெள்ளத்தினடுவில் சுழலுண்டாற்போற்காணுந் திருவுந்தியும் ஆஜாநு பாஹுவும் அழகாழிபணிந்த திருவிரல்களும் கொடிமின்னற்போன்ற அரைஞாண் படிந்திருக்கிற திருமருங்கும் அழகிய பீதாம்பரமும் நக்ஷத்ரங்களே யொருகோவை யானாற்போலப் பிரகாசிக்கும் நூபுரங்கள் படிந்திருக்கிற போதுநின்ற பொன்னடிகளும் இருபுறமும் பூ நீளாதேவிகளுமாக அத்யற்புதமாய்க் கோடிஸூர்ய ப்ரகாசமும் நேரொவ்வாததாயிருக்கும் தன்னுடைய திவ்யமங்கள விக்ரஹத்தைக் காட்டியருளினான். அந்த ஸேவையில் இவர்கள் ஈடுபட்டுப் பொய்கையாழ்வார் "வையந் தகளியாய் வார்கடலேநெய்யாக, வெய்ய கதிரோன் விளக்காகச்-செய்ய, சுடராழி யானடிக்கே சூட்டினன்சொன் மாலை, யிடராழி நீங்குகவே யென்று" என்றுதொடங்கி முதல் திருவந்தாதியையும், பூதத்தாழ்வார் "அன்பே தகளியா யார்வமே நெய்யாக, இன்புருகு சிந்தையிடு திரியா-நன்புருகி, ஞானச் சுடர்விளக் கேற்றினே னாரணற்கு, ஞானத் தமிழ்புரிந்த நான்" என்று தொடங்கி இரண்டாந் திருவந்தாதியையும், பேயாழ்வார் "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்றிகழும், அருக்க னணிநிறமுங் கண்டேன் - செருக்கிளரும், பொன்னாழிகண்டேன் புரிச்சங்கங்கைக்

அடியிற் கூறியவை வேறுசில குருபரம்பரைப் பிரதிகளில் கண்டவை.

திருமயிலையில் ஓர் பொய்கையினிடஞ் செவ்வல்லிமலரின்கண் அவதரித்த பேயாழ்வார் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திவ்ய திருப்பதிகளாயுள்ளவைகளை யெல்லாம் மிக்க பக்தியோடு ஒவ்வொரு தின

கண்டேன், என்னுழி வண்ணன்பா லின்று" என்று தொடங்கி

மாகச் சேவித்துச்சென்று திருக்கடன்மல்லையில் பூதத்தாழ்வாரைச் சந்தித்து இருவருமாய்த் திருக்கச்சிக்குவந்து அங்குப் பொய்கையாழ்வாரைச் சந்தித்தார்கள். ஒருநாள் மூவருங்கூடி அங்கே எழுந்தருளியிருக்கும் பேரருளாளப் பெருமானைப்பணிந்து அங்குநின்றும் புறப்பட்டுத் திருக்கோவலூரையடைந்தனர். அப்போது அஸ்தமனமாய் விட்டபடியால் அவ்விடத்துத் தங்க ஓர் இடைகழியை நாடிச்சென்றனர். அவ்விடைகழியிடத்தே இம்மூவரும் பகவத் கல்யாணகுண வைபவத்தைப் புகழ்ந்துகொண்டிருக்கும்போது அத்திருப்பதியில் எழுந்தருளியபெருமான் மழையை யுண்டுபண்ணி மூவருடைய செம்மையான தமிழ்ப் பாசுரங்களைவிரும்பி ஒருவிருத்தவேதியனாய் அவ்விடைகழியைக்கிட்டி இங்கிருப்பவர்களே நீங்கள் யாவர்? எமக்கிங்கிருக்க இடமுண்டோ? என்றனன். இவ்வாறுசொல்லும் பெருமானை அழைத்து இடங்கொடுத்து இருத்தி ஆழ்வார்கள் மூவரும் நின்றுகொண்டு இடம்போதாமல் நெருக்கமடையவே எம்பெருமான் அம்மூவரையும்நோக்கி நீங்களிருக்கும் இடைகழி நன்று நன்று! நாம் நால்வருமிருக்க இது இடங்கொடுப்பதன்று; மழையும் ஒழிவதன்று; தீபமுண்டாயின் இருளொழியும் வரையில் பகவானது திருவடியைச் சுலபமாகச்சேவித்து வணங்க நூல்செய்யலாமென்றனன். இம்மொழி தங்கள்செவியில் புகுதலும் உள்ளமுருகிப் புளகாங்கிதராய் ஆநந்தமேலிட்டு இவர் திருப்பாற்கடலில் அறிதுயிலமரும் பெருமானேவென்றுசந்தேகித்து அவ்வுண்மையையறியத் தாங்கொண்ட ஞானதீபத்தாலேகாண நினைத்து "வையந்தகளி", "அன்பேதகளி", "திருக்கண்டேன்" என்னும் அந்தாதிநூல்கள் மூன்றினையும் மேற்சொல்லியபடி செய்தருளினர் என்பதாம்.

மற்றுஞ் சிலபிரதிகளில்:—இவர்கள் ஒருநாளிருந்த இடத்தில் மறுநாள் இராதே, தம்மோடொத்த பரமசாத்விகர்களைத்தேடித் தரிசிக்கத் திருவுள்ளங்கொண்டு, திவ்யக்ஷேத்திரங்கள்தோறும் சஞ்சரித்துவந்தனர்கள். ஒருவரையொருவர் அறியாமல் தனித்தனியே சஞ்சரித்துவந்த ஆழ்வார்கள் மூவரையுங்கொண்டு உலகத்தை உய்விக்க, ஸர்வேச்வரன் இம்மூவரும் ஒருவரை யொருவர் அறியாமல் பெண்ணையாற்றின் தென்கரையில் வாமனக்ஷேத்திரமாகிய திருக்கோவலூரில்வந்து தன்னைச் சேவிக்கும்படி, இவர்களுக்குப் புத்தி ப்ரதானம் பண்ணினான். இவர்களுமவ்வாறே அத்திருப்பதியையடைந்தனர்கள்; பகற்பொழுதும்போயிற்று.

சூரியன் அஸ்தமனமானபொழுது, முதல்முதல் பொய்கையாழ்வார் ஒரு ஸ்ரீவைஷ்ணவருடைய திருமாளிகையிற் சென்று, அம்மாளிகையின் இடைகழியின் மீது சயனித்திருந்தனர். பின்னர் பூதத்தாழ்வார் கண்வளர்தற்கு இடந்தேடிக்கொண்டு சென்று, பொய்கையாழ்வார் பள்ளிகொண்டிருக்கும் இடத்தையடைந்து 'அடியேன் சயனித்தற்கு இத்திருமாளிகையிற் சிறிது இடங்கிடைக்குமோ?' என்று வினவினார். பொய்கையாழ்வார் அதுகேட்டுச் சுவாமி! இங்கே இவ்விடைகழியில் ஒருவர்

மூன்றாந் திருவந்தாதியையும் ஆகமூவரும் திருவந்தாதிமூன்றினை யுந் திருவாய்மலர்ந்தருளி ஜகத்தை வாழ்வித்தருளினார்கள்.

படுக்கலாம், இருவர் இருக்கலாம், தேவரீர் எழுந்தருளினால் இருவரும் இருக்கலாகும் என விண்ணப்பஞ்செய்தனர். அங்ஙனமே அவ்விருவரும் அங்கு இருந்து ஒருவரையொருவர் உசாவிக்கொண்டிருக்கும்போது, பேயாழ்வாரும் அவ்வாறே இடந்தேடிக்கொண்டு அந்தத் திருமாளிகைக்கு வந்து 'சயனித்துக்கொள்ள இங்கே இடங்கிடைக்குமா?' என்று கேட்க, முன்னைய ஆழ்வார்களிருவரும், 'சுவாமி! இவ்விடம் ஒருவர்படுக்கலாம் இருவர் இருக்கலாம் மூவர் நிற்கலாம்' எனக்கூறினார்கள். கூறவே, இவரும் உள்ளுறச்சென்று மூவருமாக நின்றுகொண்டு அளவளாவி யிருந்தனர்.

அவ்வளவிலே திருக்கோவலூர் எம்பெருமானும் பேரிருளும் பெருமழையும் உண்டாக்கித், தானும் அவ்விடைகழியிற் சென்று, அவர்களுக்கு அதிகநெருக்கம் உண்டாகும்படிச் செய்தருளினன். ஆழ்வார்கள் மூவரும், 'முன்னில்லாதநெருக்கம் இப்பொழுது உண்டான காரணமென்னை?, நம்மை யொழியவும் இவ் விடைகழியைப்பற்றி நிற்பார்கள் உண்டோ!' என்று "ஞானச்சுடர் விளக்கேற்றியும்", "உணர்வெனும் ஒளிகொள் விளக்கேற்றியும்",வெய்யகதிரோன் விளக்கேற்றியும்" பார்த்தனர். ஸ்ரீமந்நாராயணனுடைய மைப்படி மேனியையும் செந்தாமரைக் கண்ணையும் நெஞ்சென்னும் உட்கண்ணாலே கண்டநுபவித்து,அநுபவத்தாலுண்டாகியஅன்பின்மிகுதியாலே பொய்கையாழ்வார்பிறப்பென்னும் பெரும்பிணிக்குப்பரமௌஷதமும்சமுசாரசாகரத்தைக்கடக்கலாவதான தெப்பமுமாய் எம்பெருமானுடைய திவ்யகுணாநுபவ ரூபமாய் "வையந்தகளியா" என்று தொடங்கி ருக்வேதசாரமான முதற் றிருவந்தாதியும், பூதத்தாழ்வார் பரமபத சோபானமே என்னலாவதாய் "அன்பேதகளியா" என்று ஆரம்பித்து எஜுர்வேதசாராமிசமான இரண்டாந் திருவந்தாதியும், பேயாழ்வார் பக்திரசம் ஒழுகுவதாய் எம்பெருமானுடைய ரூபகுணசக்திகளைப் பிரதிபாதிப்பதாய்த் "திருக்கண்டேன்" என்றெடுத்துச் சாமவேதசாரமான மூன்றாந் திருவந்தாதியும் ஆகிற திவ்யப்பிரபந்தங்களைச் சேதனர் உய்ந்து போமாறு ஞானத்தமிழாக அருளிச்செய்து உலகத்தை வாழ்வித்தருளினார்கள்.

திருக்கோவலூரில் எம்பெருமானைக்கண்டு களித்து அதன் பின்னர் இவ்வாழ்வார்கள் மூவரும் திருவயோத்திக் கெழுந்தருளி, அங்குச் சீதா லக்ஷ்மண பரத சத்ருக்ந ஆஞ்சநேயசமேதராயெழுந்தருளியிருக்கும் சக்ரவர்த்தித் திருமகனாரைத் துதித்து வணங்கி, அவ்விடத்தே வறுமையால் வாட்டமடையும் வேதியரொருவருக்கு இவ்வுலகவின்பத்தையும் மோக்ஷவின்பத்தையுங் கொடுத்தனர். அதன்பின்னர் அங்கிருந்து வதரியாசிரமத்தை யடைந்து நரநாராயண முனிவர்களைச் சேவித்து ஒரு மலைக் குகையில் யோகத்திலிருந்தனர். பிரமதேவன் அங்கு வந்து நரநாராய

முதலாழ்வார்கள் திருவவதாரவருஷம் ௲௭௬-க்குச்சரியான பஹுதானிய வருஷம் தை மாதம்.

முதலாழ்வார்கள் திருவடிகளே சரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

ணர்களால் இம்மூவர் வைபவமுமுணர்ந்து அதனை ஆராய்ந்தறியவேண்டி ஓர் சோலையும் அதில் மங்கையரையும் உண்டாக்கி அவர்களால் ஆழ்வார்களை மயக்கமுயன்று பயனடையாமலே காட்டிலுள்ள கொடிய மிருகங்களை யேவினன். சரபங்கள் ஆழ்வார்களைக் கடியுண்டிறந்தன. அக்காலத்தும் ஆழ்வார்கள் யோக நீங்கிற்றிலர். பின்னரும் பிரமதேவன் இடியும் மழையும் மின்னலுமுண்டாக்கினன்; அதற்கு மாழ்வார்கள் சலியாதிருக்கவே, பிரமதேவன் ஆழ்வார்களை வணங்கித் துதித்துச் சென்றனன். மூவரும் அங்கு நின்றும் திருவேங்கடமலைக்கெழுந்தருளி அம்மலை ஆதிசேஷாம்சமாதலால் அதன்மீதேறுது அடிவாரத்திருந்தே ஸ்ரீநிவாசப்பெருமானை யேத்த அப்பெருமான் ஆழ்வார்க ளிருந்தவிடத்தேவந்து சேவைசாதித்துச் சென்றனன். அங்கு அரிதாசரென்னு மொருவர் ஆழ்வார்கள் திருவடியை யாசிரயித்தனர்; அவர்க்கு அக்ஷய பாத்திரமொன்றும் அதனைக் காக்கத் திருவாழியுங்கொடுத்துத் தினமும் அப்பாத்திரமளிக்கும் பொன்னைக்கொண்டு சந்நிதி ஜீர்ணோத்தாரண கைங்கர்யமும் பாகவதாராதநமும் செய்துவரும்படி நியமநமிட்டனர். இவர்களெழுந்தருளியிருந்தவிடத் திருந்த தீர்த்தம் இப்போதும் ஆழ்வார் தீர்த்தமென வழங்கிவருகிறது. ஆழ்வார்கள் அவணின்றும் திருக்கச்சிநகரை யடைந்து பேரருளாளப் பெருமானை சேவித்திருக்கையில் விஷ்ணுவர்த்தனனென்னுமரசன், ஆழ்வார்களிடத்து அன்பூண்டானாயினன். அந்தக் காலத்தே அவ்வரசர்க்குப்பகைவர்கள் படையெடுத்துவந்து மாயப்போர் விளைத்து அவனைத் தோற்பித்தனர். அரசன் ஆழ்வார்களைச் சரணடைந்து ஆழ்வார்களளித்த சக்கரப்படையைக் கொடுசென்று சத்துருக்களை வென்று மீண்டு சிலநாள் கழித்து, மோக்ஷவின்பந் துய்த்தனன். பின்னர் ஆழ்வார்கள் திருவரங்கத்தையடைந்து அரங்கத்தெம்பெருமானைச் சேவித்து யோகத்திருந்து பகவத்தியானபரராயிருக்கையில் குட்டநோய் கொண்ட அரசனொருவன் ஆழ்வார்களிருந்த விடத்தேவந்து அவர்கள் திருவடப்பொடியைப் பூசிக்கொள்ளவே வியாதிநீங்கிச் சுந்தரவடிவம் பெற்று யோகிதாசனென்னும் பெயரெய்தினன். அக்காலை சோழபூபதியொருவன் நூறுகுமாரத்திகளுடனும் மனைவியுடனும்வந்து ஆழ்வார்களைச் சேவித்து நியாசவித்தை யுபதேசம்பெற்றனன். அவ்வரசன் தன் குமாரிகள் நூற்றுவரும் யோகிதாசனென்னுமரசனை விரும்பியதை யுணர்ந்து அவ்வரசற்கு அவர்களைத் தந்து திருமணமுடித்துச் சோழநாட்டையும் தன் செல்வமுழுதையு மளித்துச் சிலநாளில் மோக்ஷமெய்தினன். யோகிதாசனும் பல்லாண்டுகளுலகைப்புரந்து அர்த்தபஞ்

திருமழிசையாழ்வார் வைபவம்.

தனியன்கள்.

திருக்கச்சிநம்பிக ளருளிச்செய்தவை.

கலிவிருத்தம்.

தருச்சந்தப்பொழில்தழுவு தாரணியின்றுயர்தீரத்
திருச்சந்தவிருத்தஞ்செய் திருமழிசைப்பரன்வருமூர்
கருச்சந்துங்காரகிலுங்கமழ் கோங்குமணநாறும்
திருச்சந்தத்துடன்மருவு திருமழிசைவளம்பதியே.

இருவிகற்ப நேரிசைவெண்பா.

உலகு மழிசையு முள்ளுணர்ந்து தம்மில்
புலவர் புகழ்க்கோலாற் றூக்க—உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது.

சீராமபிள்ளை யருளிச்செய்தது.

நேரிசை வெண்பா.

நாரா யணன்படைத்தான் நான்முகனை நான்முகனுக்
கேரார் சிவன்பிறந்தா னென்னுஞ்சொல்—சீரார்
மொழிசெப்பி வாழலாம் நெஞ்சமே மொய்பூ
மழிசைப் பரனடியே வாழ்த்து.

"ஸக்திபஞ்சமய விக்ரஹாத்மநே ஶுக்திகாரஜதசித்தஹாரிணே முக்திதாயகமுராரி பாதயோர்பக்திஸாரமுநயே நமோ நம:" என்கிறபடி பஞ்சசக்திமயமான திவ்விய திருமேனியையுடையவரும் ஶுக்தி காரனென்கிற சித்தபுருஷனை ஜயித்தவரும் முத்தியைத்தருமவனை யெம்பெருமான் றிருவடிகளில்

சக ஞானமடைந்து முத்தியுலகெய்தினன். அதன் பின்னர் ஆழ்வார்கள் மூவரும் சுவேதத்வீபத்தை யடைந்து அங்குள்ளார் வழிபடும் திருமாலை வணங்கித் திருப்பாற்கடலையடைந்து க்ஷீராப்திநாதனைத்தொழுது சூரிய மண்டலத்தையடைந்து சூரியமண்டலாந்தர்வர்த்தியான பெருமானை வழிபட்டுப் பிரமலோகமெய்தி அங்குப் பிரமனாலாராதிக்கப்படும் பெருமானைப் பராவி, ஆமோத பிரமோத சம்மோத லோகங்களுக்குச்சென்று சங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தர்களான வியூகமூர்த்திகளைச்சேவித்து, நெடுநாள் யோகத்திலிருந்து அர்ச்சிராதி மார்க்கமாகப் பரமபதமெய்தினர் என்பதாம்.

திருத்தின பக்தியென்னுங் கயிற்றால் மனதைக்கட்டின ஜிதேந்த்ரியரானபடியாலே பக்திசாரரென்னுந் திருநாமத்தை யுடையவருமான திருமழிசைப்பிரானை நமஸ்கரிக்கிறேன். "ததோகில ஜகத்பத்மபோதாயாச்யுத பாநுநா-தேவகீபூர்வ ஸந்த்யாயாமாவிர்ப்பூதம் மஹாத்மநா" என்கிறபடி அச்சுதனென்கிற சூர்யன் ஜகமென்கிற பத்மத்தை விகசிப்பிக்கத் தேவகி கர்ப்பமென்கிற கிழக்குத் திசையிலுதித்து "அநார்த்ரமர்த்ரம் விரஸம்ரஸாட்யமபல்லவம் பல்லவிதந்ததாஸீத்-மாவோபஹூக்ஷீரதுகாபபூவுர் நாராயணே நந்தகுலம் ப்ரவிஷ்டே" என்கிறபடி திருவாய்ப்பாடியில் ப்ரவேசித்துக் காய்ந்தமரங்களில் துளிருண்டாவதும், இரசமற்றவைகளி லிரசமுண்டாவதும், பாலற்ற பசுமுலைகளிற் பால்சோர்வதுமான அற்புதங்களை யுண்டாக்கி நந்தன் குலமதலையெனப்பெயர் வஹித்து, யசோதைப்பிராட்டியின் மடியாகிற மேற்றிசையில் படிந்து வளர்ந்தருளின பென்னநின்ற கண்ணனைப்போலே, இவ்வாழ்வாரும் ஒரு பிறவியிலே இருபிறவியை யுடையராயிருப்பர். அஃதெங்ஙனே யென்னில்:- அத்திரி, பிருகு, வசிஷ்டர், ஆங்கீரசர்முதலான மஹருஷிகளெல்லோரும் ப்ரஹ்மாவின் பக்கல்சென்று நாங்கள் நித்யவாசஞ் செய்கைக்காகப் பூலோகத்தில் † உத்க்ருஷ்டமான ஒருக்ஷேத்திரத்தை எங்களுக்கு நிச்சயித்துத் தரவேண்டுமென்று பிரார்த்திக்க "உலகு மழிசையு முள்ளுணர்ந்து தம்மில், புலவர் புகழ்கோலாற்றூக்க" என்கிறபடியே ப்ரஹ்மா வானவர் தன்னுடைய ஜ்ஞானமென்னுந் துலையிலே பஞ்சாசத்கோடி விஸ்தீர்ணமான பூமியை யொருதட்டிலும், திருமழிசையொன்றையு மொருதட்டிலுமாக வைத்துச் சீர்தூக்கிப்பார்க்க; "உலகுதனை வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே, வைத்தெடுத்த பக்கம் வலிது" என்கிறபடியே பூமியைவைத்த பக்கம் நொய்தாய்த் திருமழிசையை வைத்த பக்கம் கனமாயிருக்கக்கண்டு அதற்கு மஹீசார க்ஷேத்ரமென்று பெயரிட்டுக்கொடுக்க; அந்த ருஷிகளெல்லாம் அந்தவிடத்தைவிடாதே நித்தியவாசஞ் செய்துகொண் டிராநிற்க அவர்களில் பார்க்கவ மஹாருஷியென்பவர் "பஶ்சிமே யோஜநார்த்தேச விதேஹாதிஷ்டிதம் வநம் - பார்க்கவோதீர்க்க ஸத்ரேண வாஸுதேவம் ஸநாதநம்-அபிபூஜ்யயதாந்யாய மிதிநித்ய

† உத்க்ருஷ்டம்-மேன்மை.

மகல்பயத்” என்கிறபடி அந்த க்ஷேத்திரத்திற் கடுத்து மேற்றிசையில் கொஞ்சதூரத்திலிருக்கிற விதேஹவனத்தில் தீர்க்க சத்ர யாகஞ்செய்து ஸ்ரீமந்நாராயணனைப் பஜித்துக்கொண் டிருக்கையில் இந்திரன் அந்த யாகத்தைப் பின்னப்படுத்துவதாய்க் கனகாங்கி யென்னுமொரு ஸ்த்ரீயையனுப்ப; அவளுடைய சௌந்தர்யத்தில் மயங்கி அவளுடனிணங்கிக் கர்ப்பதானஞ்செய்கையால் “ஸாகர்ப்பமாதத்தமு நேமஸபத்நீ ஸுதர்மநாம்மோ நததாநவிஷ்டம்,பபாதகர்ப்போபுவிதைஷ்யமாஸேமகாபிதாநே· மஹநீயதாரே” என்கிறபடி அந்தப்பெண் கர்ப்பவதியாய்ப் பன்னிருதிங்கள் கழிந்தபிறகு தைமாதம் மகநட்சத்திரங்கூடிய சுபதினத்தில் ப்ரசவிக்கப், பிண்டாக்ருதியாய் ருஷிபுத்ரர் சுதர்சநாம்சராயவதரித்தார் என்றும், “ஸித்தார்த்திநயுஷ்ணரம்மௌ மகரமதிகதே த்வாபரேஜ்ஞாந தாராக்ஷோதேஸம்வத்ஸரௌகே கதவதிசதிநேஸப்தவிம்மே மகாக்யே - நக்ஷத்ரே பாநுவாரே முநிவரதநயோ பக்திஸாரோ முநீந்த்ரஃ ஸ்ரீமான் ப்ராபாவதாரம் ஜக துபக்ருதயே பர்வேணுந் பேத்யுரத்ர” என்கிறபடி துவாபரயுக அந்தியத்தில் சித்தார்த்திவருஷம் தைமாதம் பானுவாரங்கூடிய மகநட்சத்திரத்தில் பக்திசாரர் என்கிற முனிஸ்ரேஷ்டர் லோகோபகாரஞ் செய்தற்பொருட்டா யவதரித்தருளினாரென்றுந் திவ்யசூரி சரிதையிலே சொல்லப்பட் டிருக்கிறபடியே துவாபரயுகம் எட்டுலட்சத் தறுபத்திராயிரத்துத் தொளாயிரத்தோராவதாண்டில் நிகழ்ந்த சித்தார்த்திவருஷம் தைமாதம் கிருஷ்ணபட்சம் ப்ரதமை ஞாயிற்றுக்கிழமை கூடின மகநட்சத்திரமாகிய சுபதினத்தில் சுதர்சனும்சராய் ஒன்றும் ரூபிகரியாமல் அவதரித் தருளுகையாலே பார்க்கவருஷியும் பத்நியும் அனுதரித்து ஒருபிரப்பின் * தூற்றின்கீழே போட்டுப் போய்விட; ஜகன்மாதாவான பெரியபிராட்டியாருடைய அநுக்கிரகத்தாலே ரக்ஷிக்கப்பட்டிருந்து “சிக்கென்று சென்னிக்கால் சிரிடைப்பின் கண்ணுயிரா யொக்கவுருப் பாய்ந்தறிவா னுண்ணிறைந்தான்” என்கிறபடியே சர்வாவயவங்களும் பரிபூர்ணமாய் அதிலே † புரித்துத் தோன்றிப் “பேதைக்குழவி” என்கிறபடியே அத்தியந்தம் சிசுவாய்ப் பசுங்குழந்தையான ஆழ்வார் பசிதாஹங்களாலே ஈடுபட்டு ஸ்தன்யபானம்வேண்டி ஜனசஞ்சார

* தூற்றில்—புதரில். † புரித்து நுழைந்து.

மில்லாத அவ்வனத்திலே யழுதுக்கொண்டிருக்க; அவ்வளவிலே மஹீசார க்ஷேத்ரபதியான பெருமாள் அங்கெழுந்தருளித் தன்னுடைய கடாட்சமாகிற கருணாம்ருத வருஷத்தால் அவர் பசி தாகங்களைத்தீர்த்து, ஆராவமுதான தன்னுடைய திவ்யமங்களவிக்ரஹ சேவையையுங் காட்டித் தரிசிக்கச்செய்து மறைய; இவர் பகவத் $ விஸ்லேஷத்தைச் சஹியாதவராய் மீளவும் அழத்தொடங்கினார். அப்போது திருவாளனென்னும் பெயரையுடைய வொருவன் அங்கே பிரம்பறுக்கப் போனபடியால் அழுகுரலைக்கேட்டுத் தானும் தன்னுடன் வந்தாருமாகச் சோதித்து இவரைக்கண்டு அளவற்ற சந்தோஷத்துட னெடுத்துக்கொண்டு வந்து தன்னுடைய பத்நியான பங்கயச்செல்வியார் கையிற் கொடுக்க; அந்தப் பாக்கியவதியும் † வந்த்யை யாகையாலே மிகவும் ப்ரீதியுடையவளாய் "உத்தானஞ்செய்து" என்கிறபடியே எடுத்துக்கொண்டு புத்ரஸ்வீகாரம் பண்ணினவளவிலே "வனமுலைகள் சோர்ந்துபாய" என்கிறபடியே முலைப்பால் சோர்ந்துகொடுக்கத் "தத்துக் கொண்டாள்கொலோ தானே பெற்றாள் கொலோ" என்று ‡ விகல்பிக்கலாம்படி. ஸ்நேக பூர்வகமாக வளர்ந்தருளுகிற இவர் "நந்தகோப னணிசிறுவா நான் சுரந்த முலையுணாயே" என்கிறபடியே பங்கயச்செல்வியாரால் ப்ரார்த்திக்கப்பட்டும் ஸ்தன்யாதி ¶ போஜ்யங்களிலே யாசையற்றவராய்ப், பகவத்குணாநுபவமாகிற அம்ருதத்தையே தாரகமாகக் கொண்டவராய், அழுகை முதலியவை யொன்றுமின்றி மலமூத்ராதி ரஹிதராய்ச், சர்வாவயவங்களும் பரிபூர்ணமாய் விருத்தியடையப் பெற்றவராயிருக்கத் "ததோமஹீஸார புராதிவாஸீப்ராஜ்ஞோமகாந் கஶ்சநஶூத்ரவ்ருத்த:-ஶ்ருத்வாத்புதம் தத்ரஶிஶோப்ரபாவம் த்ருஷ்டுந்தமாயாம் தநயேநரிக்த:" என்கிறபடி இந்த ஆச்சர்யத்தைத் திருமழிசையில் வாசஞ்செய்பவனும் நான்காம் வர்ணத்திற் பிறந்தவனும் புத்ரனில்லாதவனுமான ஒரு வ்ருத்தன் கேட்டுப் பக்குவமாகப் பாலமுது காய்ச்சிக்கொண்டு தன் பத்னிசஹிதனாய் இவரிருக்குமிடத்தில் விடிவுகாலத்தேறவந்து, பஞ்ச சத்திமயமான சிசுவாயிருக்கிற இவருடைய அப்ராக்ருத திவ்யதேஜஸைக்கண்டு, அத்யாச்சர்யப்பட்டுத் தான் கொண்டுவந்த பாலமுதைச் சமர்ப்பித்து அமுது

$ விஸ்லேஷத்தை - பிரிவை. † வந்த்யை-மலடி. ‡ விகல்பம்-சந்தேகம். ¶ போஜ்யம் - புசித்தற்குரியவஸ்து.

செய்தருள வேணுமென்று ப்ரார்த்திக்க; அதை ஸ்வீகரித்தருளினார். அந்தத் தம்பதிகளும் சந்தோஷமுடையவர்களாய்ப் பலநாளும் ப்ரீதியுடனே பாலமுது செய்வியாநிற்க; ஒருநாள் அந்த வ்ருத்த தம்பதிகளுடைய * பாவத்தையறிந்து அன்றைய தினத்தில் ஸ்வீகரித்த பாலமுதில் கொஞ்சம் † சேஷிக்கவிட்டு, இதை நீங்களுட்கொண்டா லுங்களுக்கு நல்ல புத்ரனொருவனுண்டாவானென்று திருவாய்மலர்ந்தருளினார்.

அந்தச் சூத்திரதம்பதிகள் ஆழ்வார் ப்ரசாதித்தப் பாலமுது சேஷத்தை அதிக பக்தியுடனுட்கொண்டு, உடனே யௌவன லட்சணத்தை யடைந்து தத்பத்னி கர்ப்பவதியாய்ப் பத்து மாசம் நிறைந்தவாறே, கேசவன் ‡ தமராய்க்கொண்டு மானிடம்பாடாத மஹா ¶ ப்ராக்ஞரான ஒரு புத்திரனை ப்ரசவிக்க; ஸ்ரீவிதுரரைப்போல் ப்ரகாசிக்கிற அப்புத்ரனுக்குப் பனிரண்டாவதுநாளில் கணிகண்ணனென்று திருநாமஞ்சாற்றி அகில வித்தைகளையும் $ அதிகரிப்பித்தார்கள்.

பின்பு ஆழ்வார் தாம் ருஷிபுத்ரராகையாலே ஏழு சம்வத்சரத்தில் அகில வித்தைகளையு மதிகரித்து "இளைப்பினை யியக்கம் நீக்கியிருந்து மூன் னிமையைக் கூட்டி, யளப்பிலைம்புலனடக்கி" என்கிறபடி இயமநியமமாதி அஷ்டாங்க யோகத்திலே இச்சையுடையவராய், அதற்கு ஜகத்காரண வஸ்துவை த்யானத்திற்கு விஷயமாகச் சொல்லுகையாலே, அந்த வஸ்துவையறிய வேண்டுமென்றெண்ணுங்கால் "பிணங்குஞ்சமயம் பலபல" வாயிருக்கக் கண்டு சமயந்தோறும்புகுந்து, ஆராய்வோமென்று "ஸாக்யோலூகாக்ஷபாதஶ்ச கபிலஶ்ச பதஞ்சலி:,ஏதே ப்ராஹ்ம்ய மதாப்ரோக்தாஸ்தாந் ஸர்வாநஸவ்யஸோதயத், மாயாவாதஞ்ச சைவஞ்ச ந்யாயம்வைஸேஷிகம்ததா, ஏதே குத்ருஷ்டி ஸமயா: பாட்டப்ராபாகராதய:" என்கிறபடி சாக்ய உலூக்ய அக்ஷபாத க்ஷபண கபிலபதஞ்சலிகளாகிற பாஹ்ய சமயங்களிலும் சைவ மாயாவாத ந்யாய வைசேஷிபாட்ட ப்ரபாகராதிகளாகிற குத்ருஷ்டிசமயங்களிலும் புகுந்தும், உணர்ந்துமுரைத்தும் ஆராய்ந்தும் பார்த்துக் கடைசியில் சைவ மதத்திற் ப்ரவேசித்துச் சிவவாக்ய ரென்கிற ப்ரசித்தமான பெயரை யுடையவராய்,

* பாவம் - கருத்து. † சேஷிக்கவிட்டு - மிச்சப்படுத்தி ‡ தமர்-உறவினர் ¶ ப்ராக்ஞர் - அறிவுடையவர் $ அதிகரிப்பித்தல்-கற்பித்தல்

அந்த மதத்திற் காதாரமாக வனந்த நூல்களையுஞ் செய்து வைத்துச் சிவ தீட்சையினாலே பூ சஞ்சாரம்பண்ணி அன்ய மத † நிரசனஞ்செய்து, திருமயிலைமார்க்கமாய் வருகையில் பேயாழ்வார் பார்த்து, இப்படிப்பட்டவரைத்தான் விஷ்ணு பக்தராகச்செய்ய வேண்டுமென்று மனதில்நினைத்து " த்ருதோர்த்வ புண்ட்ரஸ்ஸமஹாஸாரோ புஜத்வயேலாஞ்சித ஸங்கசக்ர: பத்மாக்ஷமாலாதி விபோபிகண்டோஹ்யலக்ஷீ தாதித்ய ஸமாநகாந்தி: " என்கிறபடி திருநெற்றியில் ஊர்த்வபுண்டரமும் இரு புஜங்களில் சங்கசக்ர ‡ லாஞ்சனமும் மார்பில் துளசி நளினாட்சமாலைகளையு முடையராய்ச் சூரியனைப்போலே பிரகாசித்துக் கொண்டு அம்மார்க்கத்திலிருக்கிற தம்முடைய திருநந்தவனத்திலுள்ள சில திருத்துழாய்ச் செடிகளையும் பூஞ்செடிகளையும்பிடுங்கித் தலைகீழதாக நட்டுவைத்து, ஒரு மண் குடத்தில் நூறு துவாரங்களைச்செய்து அதைக்கொண்டு அவற்றிற்கு ஜலம்விடத் தலைப்பட்டார். அதைப்பார்த்த சிவவாக்யரான திருமழிசைப்பிரான் கலுக்கென்று நகைத்துக் குடத்திலெடுக்கப்பட்ட ஜலம் செடியினிடங் கொண்டு போகப்படுவதன்முன்னமே வழியிலொழுகிப் போவதை யறியாத கொள்கையுமுண்டோ? இந்தப் பேய்த்தனத்தையுடைய விஷ்ணு பக்தனுக்கென்று சொல்ல; அவரிதைக்கேட்டு " ஏகோஹவை நாராயணஆஸீத் நப்ரஹ்மாநஸங்கர: " என்கிறபடி பிரஹ்மருத்ராதிகளுக்கு மேற்பட்டவனாய், ஏகநாதனாய், அழிவற்றவனாயிருக்கும் ஸ்ரீமந்நாராயணனைவிட்டு அநித்யமான தேவர்களுக்குப் பரத்வங்கற்பிக்குங் குத்ருஷ்டி மதங்கள் தோறும் புகுந்துஒன்றிலும் பசையிருக்கக் காணாமல் நிலைகொள்ளா நெஞ்சினனாய் வாணாளை வீணாளாகக் கழித்துழலும் பேய்த்தனம் உமக்கேயிருப்பது கிடீர்; அதை நாம் வாய்திறந்து சொல்லவும் அசஹ்யமா யிருக்கையாலன்றோ உமக்கதைசூசிப்பதாகவிப்படிச்செய்தோம்; இதையறிந்து கொள்ளாத நீர் உம்மையும் உம்மைச் சேர்ந்தாரையும் ரட்சிக்க வல்லவரென்று விருதுகூறிக்கொண்டு திக்விஜயஞ் செய்யப்புறப் பட்டதை விவேகிகள் பார்த்தால் நகையாரோ? என்றார்.

அதன்மேல் திருமழிசைப் பிரான், சிவபிரானைப்பார்க்கிலும் பரத்வமுடைய தேவனேயில்லையென்று சிலசாமான்ய சுலோகங்களைச் சொல்லப் பேயாழ்வார் "ஸுத்தஸத்வமயோ

---

† நிரசனம்-நிக்கிரகம். ‡ லாஞ்சனம்-குறி.

விஷ்ணுஃப்ரஹ்மாசைவரஜோதிகஃ ருத்ரஸ்துதாமஸஃ ப்ரோக்தோ இதிஶாஸ்த்ரஸ்ச நிஶ்சயஃ ஊர்த்வம் ப்ரஸாரிதம் பாதம்யேகே நாங்யேநக்ஷாலிதந்தத்பாததீர்த்தமங்யேந சிரஸாவித்ருதம்முதா" என்கிறபடி சுத்த சாத்விகமூர்த்தியா யிருக்குமவன் ஸ்ரீமஹா விஷ்ணு வென்றும், இராஜஸ குணத்தையுடையவனா யிருக்குமவன் ப்ரஹ்மாவென்றும், தாமச குணத்தை யுடையவனா யிருக்குமவன் ருத்ரனென்றும், அந்த விஷ்ணுவினுடைய திருவிக்ரமாவதாரத்தில் மேலுலகங்களை யளந்த அவன்றிருவடியை இவ்விருவரிலொருவனான ப்ரஹ்மா தீர்த்தங்கொண்டு திருமஞ்சனஞ் செய்திருக்கிறானென்றும், பெருக்காறாய்வடிந்த அந்த ஸ்ரீபாத தீர்த்தத்தை மற்றொருவனான ருத்ரன் சிரசில் தரித்துக்கொண்டிருக்கிறானென்றும் சாஸ்த்ரங்களி † லறுதியிடப்பட் டிருப்பதைத் தெரிந்துகொள்ளாமல் வாய்கொண்டு பேசவந்த உமக்குப் பரத்வமில்லாமையி லிருப்பவனின்னானென் றுணர்த்துவோங் கேளுமென்று "சிவாக்ருதிர்பஸ்ம விகதகாத்ரே சர்மாம்பரம் ப்ரம்மகபாலமாலா த்ருதாக்ஷமாலா பித்ருகாநநஸ்தா ஜடாதராதிக்வஸநாகியேயம்" என்கிறபடி தேகமெல்லாம் பஸ்மத்தைப்பூசியும் புலித்தோல் யானைத்தோல்களை வஸ்த்ரமாகத் தரித்தும் ப்ரஹ்மஹத்தியினாலே தொத்திய மண்டையோட்டி லிரந்தும் சடைமுடியைத்தரித்து மசானத்திற் சென்று நிர்வாணியாகியு மிருக்குமொருவனான சிவனுடையஸ்வரூபத்தையும் "ப்ரம்மாக்ருதிஃ ஸ்ருக்ஸ்ரவ தர்ப்பஹஸ்தாஸு தீர்த்த ஸம்பூர்ண கமண்டலா சத்ருதாக்ஷமாலா க்ருதவேத பாடா ஸதாஸமாராதித ரங்கநாதா அஸ்தீதிகிஞ்சங்மஹநிய்யதத்வம்தத்யா யதீவேய மிதோவிபாதி அப்ராப்தகாமார்த்த பராதிகேஶ பஸ்யாக்ருதிந்தாம் கமலாஸநஸ்ய" என்கிறபடி யக்ஞத்தில் நெய்விடுகிற ஆஜ்யபாத்ரத்தைக் கைவிடாதவனாய்த் தர்ப்பபவித்ரத்தையும் ஜபமாலிகையையுந் தரித்து வேதபடனைசெய்துகொண்டு, எக்காலமும் ரங்கநாதனையே ஆராதித்துக் கொண்டு, யாதொரு மஹாதத்வமா யிருக்கும்படியான பகவான் ஸ்ரீமந்நாராயணனே தவிர வேறில்லையென்று சித்தாந்தஞ்செய்யு மொருவனான ப்ரஹ்மாவின் ஸ்வரூபத்தையும் "விஷ்ண்வாக்ருதிஃ ஶசந்தநபூஷிதாங்கா பார்ஶ்வத்வயே ஶோபித திவ்யநாரீபுஜாங்த ரஸ்தாரமணீய்ய லக்ஷ்மிஹ்ரீகிரீடமஞ்சிர முகாந்தபூஷாமந்தார மாலாஞ்சித கேஶபந்தாபீதாம்பரா

† அறுதி-முடிவு.

லங்க்ருத நீலகாத்ரா, அவாப்தகாமாச விபாதி ஸைஷாவிஷ்ண் வா க்ருதிந்தாம் விபுதார்யபஸ்ய'' என்கிறபடி சந்தனத்தினால் அலங்க்ருதமாய் இந்த்ர நீலவர்ணத்தையொத் ததிசயித் திருக் குந் திருமேனியும் உபயபார்ஸங்களில் பூ நீளா தேவிகளும் திரு மார்பில் ஸ்ரீதேவியும் கிரீட குண்டலாதி பாதாபரணங்களும் பாரிஜாத பசுந் துளவமலர்மாலைகளும் பீதாம்பராதிகளையு முடையவனாய் ஆத்மாக்களடையவேண்டிய சர்வபலப்ரசாதஸ் தானபூதனா யிருக்கின்ற பகவானான ஸ்ரீமந் நாராயணனுடைய ஸ்வரூபத்தையும் நீரேஉம்முடைய யோக த்ருஷ்டியினாலே பார் த்துப் பரனாயிருப்பவன் இன்னானென் றறிந்துகொள்ளுமென்ன; இவரும் அவ்வண்ணமே நிர்ப்பரத்வ நிர்பக்ஷபாதத்வாதிலக்ஷண த்தோடும் தம்முடையயோகதிருஷ்டியினாலே விஷ்ணுவாக்ருதி யே (ரூபமே) பரதத்வமா யிருக்கக்கண்டு த்ருப்தராய்ச், சடை முடியையும் சணப்பநார் அரைநாணையும் கழுத்திற் பூட்டியிருந்த லிங்கத்தையும் கையில்வைத்திருந்த ஜபமாலிகையையும் சிவுக் கெனக்கழித்துத் தீர்த்தமாடிச் சீருடை தரித்துவந்து பேயாழ் வார் திருவடிகளில் சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டுத்தன்னைத் திருப்தி பண்ணிக்கொள்ள வேண்டு மென்று ப்ரார்த்திக்க; அவரிவருக்குப் பஞ்ச சமஸ்காரபூர்வகமாகத் திருமந்த்ர த்வய சரமஸ்லோக யோக ரகஸ்யங்க ளனைத்தையுந் தெரியவருளிச் செய்ய; அவற்றைத் தன் னெஞ்சுட்கொண்டு "இனியறிந்தே னீசற்கும் நான்முகற்குந்தெய்வம்" என்றறுதியிட்டுத்தமதா சார்யரான பேயாழ்வார் சன்னிதியில் தானே ஜ்ஞானயோகத்தி லமர்ந்திருக்கையில் ஸ்ரீமந் நாராயணன் தன்னுடைய திவ்யாத் மஸ்வரூபத்தையும் அதை யாதாரமாகப் பற்றியிருக்கும் ஞான-சக்தி-பல-ஐசுவர்ய-வீர்ய-தேஜஸ் என்கிற ஷட்குணவர்க்கத்தை யும் ப்ரகாசிப்பிக்கிற திவ்யமங்கள விக்ரஹத்தையும் பொலி வடைந்திருக்கிற கிரீடாதி பாதாபரண மீறான திவ்யபூஷண வர்க்கத்தையு மவற்றினின்றும் பிரிந்துதோன்றுகிற ஸங்கசக் ராதி திவ்யாயுதங்களையும் பெரியபிராட்டி முதலாயுள்ள தேவி மார்களையும் "பவாம்ஸ்துஸஹவை தேஹ்யா" என்றும், "ஏவ மற்றமரராட் செய்வார்" என்றும், "சூழ்ந்திருந் தேற்றுவர்" என்றுஞ் சொல்லுகிறபடியே அச்சேர்த்தியிலே அடிமைசெய் கையே தங்களுக்குத்தாரகாதிகளாக வுடையரான திவ்யபரிஜன

வர்க்கத்தையும், அந்தப்போகத்துக்கு நிலமாயிருந்துள்ள (நல மந்தமில்லதோர்நாடு) என்னும்அளவற்ற ஐசுவர்யத்தையுடைய நாடான பரமபதத்தையும் ப்ரகாசிப்பித்து ப்ரக்ருதிபுருஷ காலாத்மகமான சிருஷ்டி ஸ்திதி சம்ஹார வ்யவஹாரங்கள் "இன்புறுமிவ்விளையாட்டுடையான்" என்கிறபடியே தன்னிலுந் தன்நியமனத்திலுமிருக்கிறபடியையும் "யந்நாபி பத்மாதபவந்மஹாத்மா ப்ரஜாபதிர் விஸ்வஸ்ருக்" என்கிறபடியே "நின்னுள்ளே நான்முகனைமூழ்த்த நீருலகெல்லாம் படையென்று முதல் படைத்தாய்" என்றும், "யோப்ரஹ்மாணம் விததாதிபூர்வம்" என்கிறபடியே தனக்கு ஜ்யேஷ்ட புத்ரனாக ப்ரஹ்மாவைத் தன் திருநாபிக்கமலத்தில் உத்பன்னனாக்கினபடியையும் "ப்ரஹ்மணஃ புத்ராய ஜ்யேஷ்டாய ஸ்ரேஷ்டாய" என்கிறபடியே அந்தப் ப்ரஹ்மாவுக்கு ஜ்யேஷ்டபுத்ரனாக ருத்திரனை உத்பன்னனாக்கினபடியையும் காட்டியருள; இவரும் "நான்முகனை நாராயணன் படைத்தா னான்முகனுந் தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்" என்றும் "சாக்கியங்கற் றோஞ்சமணங் கற்றோமச் சங்கரனார் - ஆக்கிய வாகமநூ லாராய்ந்தோம் - பாக்கியத்தால் செங்கட் கரியானைச் சேர்ந்தியாந்தீதிலோ - மெங்கட் கரியதொன்றில்" என்றும் தம் வாக்காலே சொல்லி, இதரசித்தாந்த நிவ்ருத்தபூர்வகமாகத் "திருநின்றபக்கம் திறவிதென்றோர்ந்து" அநுசந்தித்துப் பேயாழ்வா ரிடத்தில் நியமனம் பெற்றுக்கொண்டு தம்முடைய அவதார ஸ்தலமாகிய திருமழிசைக் கெழுந்தருளிக் கஜேந்திர ஸரஸின் கரையிலே "ஆலோட்யஸர்வஸாஸ்த்ராணி விசார்யசபுநஃ புநஃ, இதமேகம்ஸுநிஷ்பந்நம்த்யேயோ நாராயணஸ்ஸதா" என்றும், "யோமேஸ்வரம் ஜகந்நாதம் விஷ்ணும் ஜிஷ்ணும் ஸ்ரீயஃபதிம், பத்மநாபம் விஸாலாக்ஷம் சிந்தயாமிஜகத்பதிம், இத்யேவம் புண்டரீகாக்ஷம் ஜகதஃ காரணம்பரம், ஸ்ரீயப்பதிம் ஜகந்நாதம் ஸர்வாந்தர்பஹிராஸ்தி" என்றுஞ் சொல்லுகிறபடியே ஜகத்காரணபூதனாய், ஸர்வாந்தர்யாமியாய்ப், புண்டரீகாக்ஷனாய், இலக்ஷ்மீவல்லபனாய்ப் பராத்பரனாயிருக்கும் யாதொரு சர்வேஸ்வரனைத் தியானம்பண்ணிக்கொண்டு க்ருதார்த்தராய் எழுநூறுசம்வத்ஸரம் யோகத்திலெழுந்தருளி யிருக்கையில் ஒருநாள்அந்தத்திவ்யதேசத் தெம்பெருமானுடைய வாஹன வஸ்திரங்களில் கிழிந்திருக்கு மவற்றைத் தைத்துக்கொண் டிருக்கக் கைலாசபதியான ருத்ரமூர்த்தி பார்வதீ சமேதராய், ரிஷப வாகனமேறித், திரிசூலபாணியாய்,

ஆகாசமார்க்கத்திலே செல்லாநிற்க, இவர் கண்டு அவன் நிழல் தன்மேற்படாதபடி யொதுங்கியிருந்தார். இதைத் தம்பதிகளிரு வரும் பார்த்து நின்று, இவரிப்படிசெய்வதற்குக் காரணமேதெ ன்று யோசிக்கையில், பார்வதி ருத்ரனைநோக்கி இவனை யாரென் றறிந்து போவோமென்ன, ருத்ரன் இவன் மஹாநுபாவனுயி ற்றே நம்மை மதிப்பானோவென்ன; ஆகிலும் கண்டுபோவோ மென்று பார்வதி சொல்ல, ருத்ரன் சம்மதித்து இவர்சமீபத்தில் வந்து நிற்க, இவர் கண்ணெடுத்துப் பாராதிருந்தார்; ருத்ரன் நாம் வந்து நிற்க நீர் அலக்ஷியமாகக் காணலாமோ வென்ன; இவர் உன்னைக் காண்பதி லெனக்கென்ன ப்ரயோசன முண்டா மென்ன; ருத்திரன் நாம் உமக்கொன்று தரக்கடவோ மென்ன; இவர் நமக்கொன்றும் வேண்டாமென்ன; ருத்ரன் நம் வரவு விய ர்த்தமாகாதபடி உமக்கிஷ்டமிருப்பதைக் கேளுமென்ன; இவர் புன்முறுவல் செய்து மோக்ஷந்தரவல்லையாகில் தாவென்ன; ருத் ரன் அது என்னாற் றரக்கடவது அன்று, ஸ்ரீமந்நாராயணனு லாவது காணென்ன; ஆனால் இன்றுசாவாரை நாளைக்குச் சாகும் படிப் பண்ணவல்லையோவென்று இவர்கேட்க; அதுவும் கர்மாநு குணமாய் நடந்தேறுவதுகாணென்று ருத்ரன்சொல்ல; ஆகில் என் ஊசியின்பின்னே நூல்வரும்படி வரப்ரதானம் பண்ணீர்? என்றிவர்கேட்க, ருத்ரனுக்குக் கோபமுண்டாய் இவரையும் * அநங்கனான மன்மதனைப்போ லாக்கக்கடவேனென்று, தன்னு டைய பொறியும் புகையும் கிளம்புகிற நெற்றிக் கண்ணைத் திற க்க, அதினின்றும் சுட்டெரிக்கத் தக்கதோர் அற்புத ஜ்வாலையா னது திரைதிரையாய் † வடவானலம்போலே கிளர்ந்துவர, அப் போது ஸ்ரீயஃபதியான எம்பெருமான் இவருடைய யோகதிருஷ் டியில் சேவைசாதித்து, உம்முடைய வலத்திருவடியின் பெரு விரலை நிமிர்த்துவீராகில் அதிலிருந்தும் ஒரக்கினிகிளம்பி ருத்ரா க்னியை ஜயிக்குமென்று சாதித்தருள அப்படியே இவரும் தன் வலத்திருவடியின் பெருவிரலை நிமிர்த்த, அந்த நகக்கண்ணினின் றும் ப்ரளய காலாக்னியைப்போலும், வைஸ்வானராக்னியைப் போலும் பயங்கரமாயிருப்பதொரு தீ கிளம்பி ருத்ரனேத்ராக் னியை யெதிர்த்து ருத்ரன்பேரிலும் தாவிக்கொண்டுபோக, அதை ருத்ரன் சஹிக்காமல் புஷ்கலாவர்த்தகமென்கிற மேகங்

* அநங்கன்-சரீரமற்றவன். † வடவானலம்-ஊழித்தீ.

களை வர்ஷிக்கும்படியாக்ஞாபிக்க, அம்மேகங்கள் ஆகாசப்பரப்பில் நிறைந்து மின்னி முழங்கி வில்லிட்டு அகிலதாபங்களுமாறும்படியாய்வர்ஷித்து, எரிகிறதணலையும் ஆற்றி, பெருவெள்ளங்கோர்த்தன. அந்த சமயத்திலும் இவர் பர்வதராஜனைப்போல் வர்ஷதாரைக்கு நிலைகொலையாமல், பகவதநுபவ தத்பரரா யிருக்கையால், ருத்ரன் இவருடைய * த்ருட வ்ரதத்தைக் கண்டதிசயித்து, பக்திசாரர் என்கிற திருநாமத்தையுஞ்சாற்றி, இவர் வைபவத்தைக் கொண்டாடிச் சிரக்கம்பனம் பண்ணித் தன் பத்தினியைப்பார்த்துப் பாகவதர்களையெந்தவிதத்திலும் எவராலும்ஜயிக்க முடியாதென்று பூர்வம் அம்பரீஷரால் தூர்வாசன் அவமானப்பட்டிருக்கிற வ்ருத்தாந்தத்தாலு முணர்ந்திலையோ! வென்றுரைத்துக்கொண்டு யதாஸ்தானமேபோயினன். பின்னும் ஆழ்வார் பூர்வம்போலே யோகநிஷ்டரா யெழுந்தருளி யிருக்க, † யாத்ருச்சிகமாய்ச் சுக்திஹாரன் என்கிற ஒருகேசரன் ‡ வ்யாக்ராரூடனாய் ஆகாசமார்க்கத்திலே செல்லாநிற்க, அந்த வ்யாக்ரம் மேலேபோகாமல் திமிர்த்துநிற்க, அவனு மீதேதோவென்றுய்த்துப் பார்க்குமளவில், கீழேமௌனமாய் யோகத்திலெழுந்தருளி யிருக்கு மிவரைக்கண்டு அதிசயித்து, அப்போதே ஆகாசத்தினின்றும் பூமியிலிறங்கி இவர் சமீபத்தில்வந்து, ஓய் பார்க்கவ முனீந்திரரே! நீர் தைத்துக்கொண்டிருக்கிற கந்தையை எறிந்துவிட்டு நான்தருகிற இந்த திவ்யவஸ்த்ர நிர்மிதமான கவசத்தைத் தரித்துக்கொள்ளுமென்று கொடுக்கவர, இவரதை யனாதரித்துத் தன் சங்கற்பத்தாலே மணிஸ்வரூபமாய்ச் சூரியகாந்தியேபோல் மின்னுமோர்கவசத்தையவனுக்குக்காட்ட, அவன்வெட்கித் தன் கழுத்திலிருந்ததொருரத்நஹாரத்தைக்கழற்றி, இதைஜபமாலிகையாகத் தரித்துக்கொள்ளுமென்று கொடுக்கவர, இவரும் தன் கழுத்திலிருக்கிற துளசிபத்மாக்ஷமாலைகளையெடுத்து இவற்றைப் பாராயென்ன, அவை நவரத்நமயமாய் விளங்கக்கண்டு அத்யாச்சர்யமடைந்து, இவரை மஹாநுபாவரென்றும், பரிபூர்ணரென்றுந் துதித்துத் தண்டனிட்டுப் போயினன்.

அதன்பின்னும் இவரிடத்தில் கொங்கண சித்தனென்கிற ஒரு ரஸவாதிவந்து இவருடையவைபவத்தைக்கண்டு இவருக்குக்

---

* த்ருட-நிலையான. † யாத்ருச்சிகமாய்-சுயேச்சையாய்.

‡ வ்யாக்ராரூடனாய்-புலிவாகனத்தை யுடையனாய்.

காணிகோடியைப்பேதிக்கச் சத்தியுடையதொரு ரஸ * குளிகையைச்சமர்ப்பிக்க, இவரதையனாதரித்து அவனுக்குத்தம்முடைய பொன்னொத்த மேனியின் புழுதியோடே காதிற்குறும்பியையெடுத்துத்திரட்டி இதுகாணிகோடாகோடியைப்பேதிக்காதோ பாராயென்று கொடுத்தருள, அவனதை வாங்கிப் பரிட்சிக்கையில் அது இவர்சொன்னபடிக் கொத்திருக்கக்கண்டு தன்யோஹமென்று க்ருதார்த்தனாய்ப் போயினான்.

அநந்தரம் ஆழ்வார் ஒரு குஹைக்குள் ப்ரவேசித்து பத்மாசனமிட் டெழுந்தருளித் திருக்கண்களைத் திறவாமல் யோகத்திலிருக்க, பொய்கை, பூதன், பேயார் ஆகிற முதலாழ்வார்கள் மூவரும் "எங்குந்திரிந் தரங்கனம்மானுக்கே காதல்செய் தொண்டராய்" ஸ்ரீரங்காதி திவ்யதேச யாத்ரைசெய்துகொண்டு அந்த மார்க்கமாய் வருகையில், ஒரு † அப்ராக்ருத திவ்யதேஜஸைக்கண்டு ஆச்சர்யப்பட்டு, இதையாராயக் கடவோமென்று அவ்விடத்தைச் சுற்றிலுஞ் சோதித்துக்கொண்டு வருகையில், குகைக்குள்ளிருந்த விவரைக்கண்டு, இம்மஹாநுபாவர் ஆரோவென்று தங்களுடையநெஞ்சென்னும் உட்கண்ணாலேபார்த்துப் பார்க்கவ முனீந்திரரே! சுகமாயிருக்கின்றீரோ வென்று ‡ குசலப்ரஸ்னம்பண்ண, இவர் பத்ம மாதவீ குசும கைரவோத்பவ முனிகாள்! பாங்காயிருக்கின்றீர்களோவென்றுவினவியருளி "அக்ஷ்ணோ:பலம் த்வாத்ருஶ தர்ஶநம்ஹி ஜிக்வா:பலம் த்வாத்ருஶ நாமகீர்த்தநம்,ஶிர:பலம்த்வாத்ருஶவந்தநம்ஹி பாண்யோ:பலம் த்வாத்ருஶபூஜநஞ்ச"என்கிறபடி பகவானையுமவனடியார்களையுந் தர்சிக்கையேகண்பெற்றதற்குப்பலனாகவும், நாமசங்கீர்த்தனமே நாவுக்குப்பலனாகவும், வந்தனஞ்செய்கையே சிரசுக்குப் பலனாகவும், ஆராதிக்கையே கைகளுக்குப் பலனாகவுங்கொண்டு ஆநந்தக் கண்ணீர்ததும்ப § புளகீக்ருதராய் அந்யோந்ய வந்தனபரராய், ஒருவரையொருவர் ஆலிங்கனஞ் செய்துகொண்டு மிகவும் ப்ரீதியுடனே பாலுடன்பாலும் தேனுடன்தேனும் கூடினாற்போல இந்நால்வருங்கூடி "தேனாறியெப்பொழுதுந்தித்தித்து" என்கிற

* குளிகை-மாத்திரை (மணிபோன்றது.)

† அப்ராகிருததிவ்யதேஜஸு—மாறுதலில்லாதசுந்தரமானபிரகாசம்

‡ குசலப்ரசனம்-ஒருவரோடொருவர் க்ஷேமம்வினவல்.

§ புளகீக்ருதராய்-சந்தோஷத்தையுடையராய்.

படியே பகவத் சரணாரவிந்த மதுவையுண்டு, போதையேறப் பெற்று சிலகாலம் அந்த விடத்தில்தானே பகவதநுபவம் பண்ணிக்கொண்டிருந்து, அனந்தரம் உகந்த திருவுள்ளத்தையுடையராய், ப்ரீதியுடனே திருமயிலைக்கெழுந்தருளிப், பேயாழ்வாரவதரித்தருளினகைரவதீர்த்தத்தைப்ரீதியுடன் தரிசித்துக்கொண்டு, அங்கேயும் சிலகாலம் யோகத்திலெழுந்தருளியிருக்க "ஓடித்திரியும் யோகிகள்" என்கிறபடியே முதலாழ்வார்கள் மூவரும் இவரிடத்தில் அநுமதிபெற்றுக்கொண்டு, பூசஞ்சாரணார்த்தமாக வெழுந்தருளினார்கள்.

அதன்பிறகு, இவ்வாழ்வார் தம்முடைய திருவவதாரஸ்தலமான திருமழிசைக் கெழுந்தருளித், தரித்துக்கொள்ளத் * திருமண்வேண்டிப்பூமியைக்கல்லிச்சோதித்துத் திருமண் அகப்படாமல் கலங்கிக்கிடக்க, அப்போது திருவேங்கடத்தெந்தை இவர் ஸ்வப்பனத்திலெழுந்தருளித் திருமண் இருக்குமிடத்தை அடையாளத்தோடுங் காட்டியருள, இவர் அந்தசுவடறிந்து திருமண் கண்டெடுத்து அதைக்கொண்டுத்திருமேனியில் த்வாதசஊர்த்வ புண்டரங்களையேறியருளப்பண்ணிக்கொண்டு, அதிகப்ரீதியுடன் "சிந்தை மற்றொன்றின் திறத்தல்லால்" என்கிறபடியே சிந்தையை † க்ஷுத்ர புருஷார்த்தங்களில் வையாது, பகவதநுபவத்திலே நிறுத்திப் பொய்கை யாழ்வார் அவதரித்தருளின

---

* திருமண்காப்பு:—பிரம்மாவின் உள்ளத்தினின்றுஞ்சனித்த சனத்குமாரர் ஆதிபுருஷவராகரூபியாகிய பகவானைச் சாஷ்டாங்கமாகச்சேவித்து ஊர்த்வபுண்டர விஷயமாக வினவியபோது, பகவான் அடியில்வருமாறு விடைபகர்ந்தருளினன்.—திருப்பாற்கடல் மத்தியில் சுவேதத்தீபமொன்றுளது. வைநதேயனென்னுங்கருடாழ்வான் ஒருகால் அத்தீபத்தினின்றும் பாற்கட்டிகளைக்கொண்டுவந்து தன் பிடரிச்சட்டைகளினாலே பலநிலங்களிலுஞ் சிதற அவை சுவேதமிருத்திகையாயின. இம்மிருத்திகையே ஊர்த்வ புண்டரந்தரிப்பதற்குரித்தான திரவியம். பகவானது திருமேனியினம்சமான இம்மிருத்திகையை இரண்டு ரேகைகளாகவும் மத்தியில் பூதேவியினம்சமான அரித்ரா சூரணத்தை ஒருரேகையாகவும் சிரமுதற் பனிரண்டிடங்களில் தரிக்கவேண்டும். யாவனொருவன் இத்திருமண்காப்பைச் சுத்திபத்தியாய் வந்தனை பூர்வமாக வேதவிதிப்படி அணிவனோ அவன் சகலாபீஷ்டங்களையும் பெற்று இறுதியில் நிரதிசயாநந்தவீடாகிய பரமபதத்தையடைவானென்பதாம். இதைத்தரிக்கும் அதிகாரி முறைமை, இடம், ரேகை, மந்திரம் முதலியவற்றை உபநிஷதங்கள் கூறுமாறு ஆசாரியன் மூலமாக விரிவாய்த்தெரிந்து கொள்ளலாம்.

† க்ஷுத்ர புருஷார்த்தங்கள்-தேவதாந்தரங்களான அற்பபலன்கள்.

பொய்கை ப்ரதேசத்தில் சிலகாலமெழுந்தருளியிருக்கத் திருவுள்ளமுடையவராகி "யத்துஸத்ய வ்ரதந்நாம க்ஷேத்ரம் பாபவிநாஶநம், புண்யக்ஷேத்ரேஷு ஸர்வேஷு தஸ்மை வஶைரஷ்ட்ய மீரிதம்" என்கிறபடி புண்யக்ஷேத்ரங்களில் சிரேஷ்டமானதாய், சர்வ பாபவிமோசனஞ் செய்வதாய் சத்யவ்ரதக்ஷேத்ரமென்கிற பெயரையுடைய திருவெஃகாவுக்கெழுந்தருளி, "ஶயாநப்ஶேஷபர்யங்கேகுந்தேந்து தவளப்ரபே, பணாரத்ந ஸஹஸ்ராம்ஶுநவாஸ்தரண விஸ்த்ருதே, நீலஜீமூத ஸங்காஶ: பத்மபத்ர நிபேக்ஷண:, ஸேவ்யமாநோ விஶாலாக்ஷ்யா ஸ்ரியாகமல ஹஸ்தயா, தரண்யாசஸுதந்வங் க்யாதாதாவிஶ்வஸ்யவிஶ்வ புக்" என்கிறபடி † சரத்கால சந்திரனைப்போல் ப்ரகாசிக்கும் ஆயிரம் பணுமகுடங்களையுடைய திருவனந் தாழ்வானென்கிற ம்ருதுவான படுக்கையில் நீருண்டு பர்வதத்தினுச்சியில் சாய்ந்த மேகத்தைப்போல் சயனஞ்செய்து ஸ்ரீதேவி பூதேவிகளால் சேவிக்கப்படுமவனுய், சிருஷ்டி கர்த்தாவான ப்ரம்ஹாவைத் தன்னுடைய திருநாபிக்கமலத்தில் தோற்றுவித்துக்கொண்டிருக்கிற சொன்னவண்ணஞ்செய்த பெருமாளைச்சேவித்து க்ருதார்த்தராய்ப், பொற்றாமரைப் பொய்கையையுந் தர்சித்து, அந்த தீரத்தில் எ௱-சம்வத்சரகாலம் யெழுந்தருளி யிருந்தார். அப்போது கணிகண்ணன்வந்து இவரை யடிபணிந்து இவர் கடாக்ஷத்தைப்பெற்று சிசுருக்ஷை செய்துகொண்டு பகவத் ‡ ப்ரவணரா யிருக்கையில் அங்குள்ள ஓர் தாசிக்கிழவி வந்து ஆழ்வார் திருவடிகளிலே பக்தியுக்தையாய் "கடைத்தலை சீக்கப்பெற்றால் கடுவினைகளையலாமே" என்கிறபடியே ஆழ்வாரெழுந்தருளி யிருக்குமிடத்தில் சித்தல் மெழுகல் கோலமிடல் ஆகிய அலங்கார கைங்கர்யங்களைச் செய்துகொண்டிருக்க, யோகத்திலிருக்கிற இவ்வாழ்வார் ஒருநாள் திருக்கண் மலர்ந்தருளி, அவள்செய்கிற § கிங்கர வ்ருத்திக்கு மிகவுமுகந்த திருவுள்ளத்தராய், உன்னிஷ்டத்தி லிருப்பதைச் சொல்லாயென்று கேட்க அவள் இவரடியில்வீழ்ந்து சுவாமீ! அடியேனிடத்தில் க்ருபாதிசயமுண்டாகில் இந்த வார்த்திக்யம்போய் யௌவன,பருவம் வரும்படி கடாக்ஷித்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க அவ

† சரத்கால சந்திரன்-வசந்தகால சந்திரன்; ‡ ப்ரவணம்-பிரீதி.
§ கிங்கரவ்ருத்தி-கைங்கர்யவிருத்தி.

ளைக் குளிரக்கடாக்ஷித்து அப்படியே யாகக்கடவதென்று திருவாய் மலர்ந்தருளினர். அவ்வளவிலே, * ப்ராப்த யௌவனையாய் தேவஸ்த்ரீயைப்போலே அதிசுந்தரையாக, தத்ராஜ்யாதிபதியான பல்லவராயனென்பவன் அவளைக்கண்டு மன்மதபாணபாதிதனாய்த் தனக்குப் பத்னியாக வேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவளுமனுகூலித்து அவனுடனே † அதிமானுஷபோகங்களை யநுபவியாநிற்க, ஒருநாள் பல்லவராயன் தனக்கு நாளுக்கு நாள் சரீரம் ‡ ஜரித்து வருவதையும் அவளுக்கு அந்த யௌவனமாறுமலிருப்பதையுங் கவனித்து அவளைப்பார்த்து உனக்கிந்த அதிமாநுஷ வைபவமான யௌவனம் எங்ஙன முண்டாயிற்றென்றுகேட்க, எனக்கிது ஆழ்வார் க்ருபையா லுண்டாயிற்று; ஆகையால் நீயும் உன் அகத்திற்கு நித்யமு முபாதானம் பண்ண வருகிற கணிகண்ணனை யநுவர்த்தித்து அவருடைய புருஷகாரத்தால் அவரது தேசிகரான பக்திசாரரென்கிற ஆழ்வாரை யடிபணிந்து சிசுருஷைசெய்தாயாகில் இப்படிப்பட்ட யௌவனத்தைப் பெறுவாயென்று சொன்னாள். அரசன் கணிகண்ணரை யழைத்து ஐயா! உமதாசார்யரை நான் சேவிக்கக் காதல் கொண் டிருக்கிறேன்; நீர் க்ருபைசெய்து அவரை என்னிடம் அழைத்து வரவேண்டுமென்ன; கணிகண்ணர் நம்மாசாரியர் ஒருவரகத்துக்கு மெழுந்தருளாரே! அரசராயிருப்பினுங் § கணிசித்துப்பாராரே! என்றார்; பின்பு அரசன் கணிகண்ணரைப்பார்த்துத் தன்மேற் கவிபாட வேண்டுமென்றபேக்ஷிக்கக் கணிகண்ணர், "நாக்கொண்டு மானிடம் பாடேன்" என்றும், "வாய்க்கொண்டு மானிடம் பாடவந்த கவியேனல்லேன்" என்றும், தம்முடைய அத்யவசாய ஹேதுவான சிஷ்டாசார வசனங்களைச் சொல்லித் தான் பகவத் பாகவத விஷயமொழிய நரஸ்துதி பண்ணி ஒருவரையும் பாடுவதில்லை யென்றார். அதன்மேலும் அவன் தன்னைப் பாடவேண்டுமென்று கணிகண்ணரை நிர்ப்பந்திக்க, "ஆடவர்க ளெங்ஙனங் கல்லா ரருள்சுரந்து, பாடகமு மூரகமும் பாம்பணையும்-நீடியமால், நின்று மிருந்தான் கிடந்தா

* ப்ராப்தயௌவனை-சித்தித்த யௌவன பருவத்தினள்.
† ஜரித்து-வார்த்திகப் பருவத்தால் தளர்ந்து.
‡ அதிமாநுஷ-மனித சுபாவத்தைக் கடந்த.
§ கணிசித்து-மதித்து.

னிதுவன்றே, மன்றார் பொழிற்கச்சி மாண்பு" என்றுசொல்ல, அரசன் அதிக கோபங்கொண்டு, நம்மைப் பாடென்றால் நம்முடைய ஊரையுந்தெய்வத்தையும் பாடினீர்; ஆனபடியால் நீரிந்த க்ஷணமே நம்முடைய ராஜ்யத்தினின்றும் போய்விடவேண்டியதென்று சொல்ல, கணிகண்ணர் சடக்கெனத்திரும்பித் தம தாசார்யரான ஆழ்வாரிடத்தில் வந்து தண்டன் சமர்ப்பித்துத் தனக்கும் அரசனுக்கும் நடந்தசெய்தியை விண்ணப்பஞ்செய்து, தனக்கு விடைதந்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க; ஆழ்வார் தாமுமுறுவல்செய்து, நீர்போவீராகில் நாமிங்கிருக்கப் போகிறதில்லை; நாம் புறப்பட்ட பிறகு எம்பெருமானும் இங்கு கண் வளர்ந்தருளப் போகிறதில்லை; அவனில்லாதபோது * தத்பரிகரபூதரான ப்ரம்ஹாதிகளுமிருக்கப் போகிறதில்லையென்று திருவாய்மலர்ந்து "வெஃகாவிலுன்னிய யோகத்துறக்க மானவனையும்" எழுப்பிக்கொண்டு வருவதாய், திருவெஃகா நாயினார் முன்பெழுந்தருளி "கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி, மணிவண்ணா நீ கிடக்கவேண்டா-துணிவுடைய, செந்நாப் புலவனும் போகின்றேன் னீயுமுன்றன், பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்" என்று விண்ணப்பஞ்செய்ய, அந்த எம்பெருமானும் இவர்சொன்ன வண்ணமே பாம்பணையைச் சுருட்டிக்கொண்டு இவர் பின்னே தொடர, "சுடர்கொள்சோதியைத் தேவரு முனிவருந் தொடர" என்கிறபடியே மற்றுமுள்ள ஆலயங்களிலிருக்கிற தேவதைகளும் எம்பெருமான் பின்றொடர, கணிகண்ணருடன் கலந்துகொண்டு ஊரைவிட் டெழுந்தருளினார். பின்பு அபிவ்ருக்ஷாஃ பரிம்லாநாஸ்ஸ புஷ்பாங்குரகோரகாஃ, உபதப்தோதகாநத்யஃ பல்வலாநிஸராம்ஸிச" என்கிறபடி திருவயோத்தியிலிருந்து சக்ரவர்த்தித் திருமகன்புறப்பட்ட வனந்தரம் மரங்கள்வாடியும் புஷ்பங்களுலர்ந்தும் ஆறுவடிந்தும் அந்நகர் பொலிவை யிழந்தாற்போல காஞ்சீமகாநகரில் ஸ்தாவரந் தடாகங்க ளுடைய வாடி வடிவழகடங்கி வற்றித் தபிக்க, ஆலயங்கள் தோறும் தேவதைகளின்றியே அந்தகாரம்கவிந்து உதயாஸ்தமயந் தெரியாதபடி "நீளிரவாய் நீண்டதா" லென்கிறபடியே † கனதிமிர ‡ பூயிஷ்ட்டமாயிருக்கின்றதை அரசனும் மந்திரி

---

* தத்பரிகரபூதர்-ஈசுவரனுடைய பரிவாரதேவர்.

† கனதிமிரம்-மிக்க இருள்; ‡ பூயிஷ்டம்-நிறைவு.

களுங்கண்டு போரக்லேசித்து இவர்களைப் பின்றொடர்ந்து "ஓரிரவிருக்கை" என்கிற கிராமத்திலே கண்டுகப்படத்தைக் காட்டிக் கணிகண்ணர் திருவடியில்வீழ்ந்து நகர்க்கேற வெழுந்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க, கணிகண்ணரும் ஆழ்வாரை வேண்டிக்கொள்ள, ஆழ்வார் மீண்டெழுந்தருளும்படித் திருவுள்ளமாய், ஆஸ்ரிதபரதந்த்ரனான "சொன்னவண்ணஞ் செய்த பெருமாளை"ப் பார்த்துக் "கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி, மணிவண்ணா நீ கிடக்கவேண்டுந்துணிவுடைய, செந்நாப்புலவனும் போக்கொழிந்தே னீயுமுன்றன் பைந்நாகப் பாய்படுத்துக் கொள்" என்று விண்ணப்பஞ் செய்ய, பெருமாளும் சொன்னவண்ணஞ்செய்து திருவெஃகாவுக் கெழுந்தருளி ஆழ்வாருடைய ப்ரபாவத்தை யாவருமறிந்துஜ்ஜீவிக்க லாவதாய்த் தன்னை ப்ரத்யட்சமாகக்காட்டிப் பூர்வம்போலே திருவனந்தாழ்வான்மேல் கண்வளர்ந்தருளினார்.

ஆழ்வார் தாம் சொன்னவண்ணமெல்லாஞ் செய்த நாகத்தணையானுடைய சௌலப்யத்தை யநுஸந்தித்து "வெஃகணைக் கிடந்த தென்னநீர்மையே" என்று ப்ரீதராய்ப்பாடியருளி "நிறைந்தசீர் நீள்கச்சி" என்கிறபடியே பொலிவடையப்பெற்ற அந்நகரியில்தானே, "வெள்ளத்தரவிற் றுயிலமர்ந்தவித்தினை யுள்ளத்துக்கொண்டு" யோகத்தில் சிலகால மெழுந்தருளியிருந்து, "யோநர꞉ கும்பகோணேஸ்மிந் க்ஷணந்தர்மபிதிஷ்டதி, கரஸ்தம் தஸ்யவைகுண்டம் கிமுதாந்ய விபூதய꞉" என்கிறபடி வைகுந்தமாநகரைக்கரதலமாகப்பெறும்யோக்யதையைத் தருமத்தான ப்ரபாவாதிசயத்தையுடைய திருக்குடந்தையி லிருக்கிற ஆராவமுதாழ்வாருடைய ஏரார்கோலத்தைச் சேவித்து, அங்கே நித்யவாசம்பண்ணத் திருவுளமாய், "நலத்தால்மிக்கார்குடந்தைக் கிடந்தா யுன்னைக்காண்பா னலைப்பாய்" என்கிறபடியே அதித்வரையா யெழுந்தருளுகையில், மார்க்கத்திலுள்ள பெரும்புலியூர் என்கிற கிராமத்திலோர் திண்ணையின்மேல் அவஸரித்து வீற்றிருக்க, அத்திண்ணையிலிருந்து அத்யயநம் பண்ணிக்கொண்டிருந்த ப்ராம்ஹணர்கள் இவரைச்சூத்ரனென் றவமதித்து வேதவாக்யங்க ளிவர்காதில் விழப்போகாதென் றெண்ணி, அத்யயனத்தைத் தவிர்ந்திருந்து, இவரவ்விடத்தைவிட் டெழுந்து போகையில் தொடங்கத் தலைப்பட்டு விட்டதறுவாய்த் தோன்

ருமல் தவறித்தடுமாற, இவர் கொஞ்சதூரத்தி லிருந்தபடியே தரையிற் கிடந்ததோர் கருப்புநெல்லையெடுத்து நகத்தாற்கீறிச் சூசிப்பித்தருள "க்ருஷ்ணநாம்வ்ரீஹீணாம்நகநிர்பிந்நம்" என்கிற வாக்கியந்தோன்றி "நஶூத்ரா பகவத்பக்தாவிப்ரா பாகவதாஸ்ம்ருதா:" என்கிறபடி பகவானை ஸ்ரீமந்நாராயணனை நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நீங்கப்பெறாத மஹாநுபாவரைச் சூத்ரரென்று அவமதிக்காது விப்ரரென்றும் பாகவதரென்றும் நினைக்க வேண்டுமென்கிற ப்ரமாணத்தாற் கட்டுண்டவர்களாய்த் தெளிந்துவந்து தண்டன் சமர்ப்பித்தார்கள். பின்னையுமிவர் அந்தக் கிராமத்தில் உபாதாநார்த்தமாகச் சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் கிராமார்ச்சனையான எம்பெருமானுஞ் சந்நிதிக்குள்ளிருந்தபடியே இவர் எழுந்தருளுகிற திருவீதிகள்தோறும் * அபிமுகமாய்த் திரும்பியருள அந்த ஆச்சர்யத்தை நம்பியார்கண்டு அங்குள்ள சில ப்ராம்ஹணர்களுக்குக்காட்ட, அவர்கள் அங்கே யாகஞ் செய்துகொண்டிருந்த பெரும்புலியூரடிகளிடமோடிக் "கண்டோங் கண்டோங் கண்டோங் கண்ணுக்கினியனைக் கண்டோம்" என்கிறபடியே இவருடைய ப்ரபாவத்தை விஸ்தரித்துச்சொல்ல யாகதீட்சிதர் கேட்டு "மெய்யடியார்கள்தம் ஈட்டங் கண்டிடக் கூடுமேலது காணுங்கண்பயனாவதே" என்று அதிப்ரீதியுடன் யாகசாலையிலிருந்து வாசலேறச்சென்று இவருடைய பஞ்சசக்திமயமான விக்ரஹத்தைச் சேவித்துப் "போதுமினமதிடம்புகுதுக" என்கிறபடியே நம்முடைய யாகசாலைக்கெழுந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து, எழுந்தருள்வித்துக் கொண்டுபோய் இருக்கச்செய்து அக்ரபூஜைபண்ண, அதைக்கண்டு அங்குள்ள † அத்வர்யுதொடக்கமான சடங்கிகள் இவரைக்கொண்டு யாகத்தை ‡ உபஹதியாக்கினீரென்று, (தர்மபுத்திரனுடைய ராஜசூயயாகத்தில் க்ருஷ்ணனுக்கு § அக்ரபூஜை பண்ணினபோது சிசுபாலன் $ பகுமுகமாகப் ¶ பருஷோக்திகளைப்பண்ணினாற்போல) இவரைப் "பொறுப்பரியனகள்பேசி" ‖ க்ரோதிக்கத்தீட்சிதர் வ்யாகுலாந்த:கரணராய் இவரைப்பார்த்து "இவர்களேதேனும்பேச நான் கேட்கமாட்டேன்" என்று

* அபிமுகம்-எதிர்முகம். † அத்வர்யு-யாகத்திற்குத்தலைமைவாய்ந்தவர். ‡ உபஹதி-தடை. § அக்ரம்-தலைமை. $ பகுமுகமாக-பகிரங்கமாக. ¶ பருஷோக்திகள்-கடோரமான வார்த்தைகள். ‖ க்ரோதிக்க-பழிக்க.

விண்ணப்பஞ் செய்ய, இவர் இனித் தம்மை வெளியிடாதிருக்க வொண்ணாதென்றெண்ணி "அஷ்டாங்கயோக ஸித்தாநாம் ஹ்ருத்யோக நிரதாத்மநாம், யோகிநாமதிகாரஸ்யாதேகஸ்மின் ஹ்ருதயாம்புஜே, ஹ்ருத்புண்டரீக மத்யஸ்தம் ஸங்குசக்ரகதா தரம், பீதாம்பரதரம்தேவம் தர்ஸயாமாஸயோகிராட்" என்கிற படியே அஷ்டாங்க யோகஸித்திகைபுகுந்த யோகிகளுடைய ஹ்ருதயகமலங்களி லந்தர்யாமியாயிருக்கும் யாதொரு சர்வேசுவரனைப் பிறர்கண்படக்காட்டுவதான ஓர் சக்தியையுடைத்தாயிருப்பர்களென் றுரைக்குஞ் சாஸ்த்ரப்படியே தனக்குளந்தர்யாமியாய்ச் சங்கசக்ரபீதாம்பரதரனாயிருக்கும் "அற்புதனனந்த சயனனைப்" பார்த்து "அக்கரங்க ளக்கரங்க ளென்றுமாவ தென்கொலோ, இக்குறும்மை நீக்கியென்னை யீசனுக்கவல்லையேற், சக்கரங்கொள்கையனே சடங்கர்வாயடங்கிட உட்கிடந்த வண்ணமே புறம்பொசிந்துகாட்டிடே" என்று விண்ணப்பஞ் செய்யத், தம்மையே தொழுவார்க்குத் தம்மையேயொக்கவருள் செய்பவரான ஒண்சங்கதை வாளாழியான் "அரவத்தமளியினோடுமழகியபாற்கடலோடும் அரவிந்தப்பாவையுந்தானு"மாய்க் கண்வளர்ந் தருளுகிறபடியை அனைவருங் கண்டநுபவிக்கும்படி இவர் திருமேனியிலே ப்ரத்யக்ஷமாக்கிச், சாரூப்யப்ரதானஞ் செய்தருள, கர்வித்த சடங்கிகளனைவரும் இவர் திருமார்வத்தில் ப்ரகாசிக்கின்ற எம்பெருமானுடைய திவ்யமங்கள விக்கிரகத்தைக் கண்களாரச்சேவித்து, இவர் திருவடிகளிலே சாஷ்டாங்க ப்ரணாமத்தைப்பண்ணி, * க்ஷமைகொண்டு இவரைப்ரம்ஹரதமேறியருளப்பண்ணி, மனங்குளிரச்செய்து † நக்ஷமாமிகுலக்ஷயமாகாமல் "திருமாலடியார்களைப்பூசிக்கநோற்று" என்கிறபடியே க்ருதார்த்தரானார்கள். இவரவர்களுக்குபஹுப்ரகாரமாகஜ்ஞான ப்ரதானம்பண்ணி அவர்களை வாழ்வித்தருளித், ‡ ததனந்தரம் 'செழுமாமணிகள்சேருந்திருக்குடந்தையை' நோக்கி எழுந்தருளி அங்கே ஆராவமுதப்பெருமானுடைய ஏரார்கோலத்தைச் சேவித்து அவர்விஷயமாக நம்மாழ்வாரருளிச்செய்த திருவாய்மொழியையுந் திருச்செவிசாற்றியருளிப், பிறகு தம்மாற்செய்யப்பட்டிருந்த அகிலக்ரந்தங்களையுந் திருக்காவிரி ப்ரவாஹத்திலேவிட்டு

* க்ஷமை-மன்னிப்பு. † நக்ஷமாமி குலக்ஷயமாகாமல்-குலநாசத்தின் க்ஷமிப்பின்மை யுண்டாகாமல். ‡ ததனந்தரம்-அதன்பிறகு.

நிற்க அவற்றில் திருச்சந்தவிருத்தமும் நான்முகன் றிருவந்தாதியும் அந்தப்ரவாஹத்தில் எதிர்த்துவர அவற்றையெடுத்துக்கொண்டு மறுபடியும் ஆராவமுதனைச் சேவித்துக் "காவிரிக்கரைக் குடந்தையிற்கிடந்தவா றெழுந்திருந்துபேசு" என்று விண்ணப் பஞ்செய்ய ஆராவமுதன் தன்றிருமுடியைநிமிர்த்தி யெழுந்திருக் கப்போகையில் அந்த சௌலப்யத்தைக்கண்டு "வாழிகேசனே" என்று மங்களாசாசனஞ்செய்ய, ஆராவமுதன் * உத்தானசயனங் கொண்டு சேவைசாதிக்க, அந்த திவ்யமங்கள விக்ரஹத்தையே த்யானம் பண்ணிக்கொண்டு யோகத்தில் இரண்டாயிரத்து முன்னூறு சம்வத்சர மங்கெழுந்தருளியிருந்து, இப்படித் திருமேனியுடனே அன்னுகாரவர்ஜ்ஜிதராய்ப் பலஹூலங்களில் கிஞ்சித் † கதாசித்தமாக அமுதுசெய் தருளிக்கொண்டு, விஷ்ணுதர்சன ஸ்தாபனாசார்யராய் மூவாயிரத்தெழுநூறு சம்வத்சர மிந்தவிபூதியிலிருந்து ‡ நிமக்நரையும் உயர்த்தி வாழ்வித்தருளினார்.

திருநக்ஷத்ரதனியன்.

"மகாயாம் மகரேமாஸே சக்ராம்சம் பார்க்கவோத்பவம்
மஹீஸாரபுராதீஶம் பக்திஸாரமஹம் பஜே"

குறிப்பு:—இவர் துவாபரயுகத்தில் ௪000-சம்வத்சரம் அன்யமதங்களிற் பிரவேசித்திருந்து, நின்ற கூகூ-ம், கலியுகத்தில் ருகூ0௧-ம் சேர்ந்து ஆ ருஎ00-சம்வத்சரம் விஷ்ணுதர்சன ஸ்தாபனாசார்யராய் ப்ரகாசித்து ஆ சஎ00-சம்வத்சரம் இந்த விபூதியிலெழுந்தருளியிருந்தார்.

திருமழிசையாழ்வார் திருவடிகளே சரணம்.
ஜீயர்திருவடிகளேசரணம்.

குறிப்பு:—இங்கே அவதாரக்ரமத்தைப் பார்க்கில், நம்மாழ்வாருடைய வைபவத்தை யெடுக்க வேண்டுவதிருக்க, ஸ்ரீகுலசேகராழ்வாருடைய அவதாரத்தைச் சொல்லுவதற்குக் காரணமென்னவென்று நஞ்ஜீயர்ஸ்ரீபட்டரைக்கேட்க அவர் "நிரூப்யாவயவம் பூர்வம்பஸ்சாத்தஸ்ய நிரூபணம், யதோவயவினோ ஶாஸ்த்ரைகர்த்தவ்யம் ஶாஸ்த்ரநிர்ணயஃ"என்கிறபடி ஒருருவத்தை நிரூபிக்க வேண்டுமாகில் முகம், கண், வாய், கை, முதலிய அவயவங்களை யதற்கலங்காரமாக முன்னே நிரூபிக்கத்தக்கதென்று சாஸ்த்ரமிருக்கையால் அந்த சடகோபர் அவயவியாகவும் மற்றவர்களவருக் கவயவங்களாகவு மிருப்பதைநோக்கி நாமுமிங்ஙனஞ் சொல்லத் தொடங்கினோமென் றருளிச்செய்தார்.

---

* உத்தானசயனம்-நிமிர்ந்துகிடத்தல். † கதாசித்தம்-இடைவிட்ட காலம் (நேர்ந்தபோது.) ‡ நிமக்நர்-சமுசாரத்திலழுந்தினவர்.

ஸ்ரீகுலசேகராழ்வார் வைபவம்.

தனியன்கள்.

மணக்கால்நம்பிக ளருளிச்செய்தது.

இருவிகற்ப நேரிசைவெண்பா.

இன்னமுத மூட்டுகே னிங்கேவா பைங்கிளியே
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமான்—பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோ னெங்கள்
குலசே கரனென்றே கூறு.

கட்டளைக்கலித்துறை.

ஆரங் கெடப்பர னன்பர்கொள் ளாரென் றவர்களுக்கே
வாரங் கொடக்குடப் பாம்பிற்கை யிட்டவன் மாற்றலரை
வீரங் கெடுத்தசெங் கோற்கொல்லி காவலன் வில்லவர்கோன்
சேரன் குலசே கரன்முடி வேந்தர் சிகாமணியே.

மலைவளம் நிலவளம் நீர்வளங்களையுடைய கொல்லிநகரத்தை யாண்டுக்கொண்டிருந்த மஹாபக்திசீலனும், நன்னெறியாளனு மான திடவ்ரதபூராஜதேவனென்னும் * வஞ்சிவேந்தன் வெகு நாள்வரையிலுந் தனக்குப்புத்ரப்பேறு சித்தியாதிருந்தகாரணத் தால் வ்யாகுலாந்தஃகரணனாகி, ஒருநாள் தன்னுடைய சமஸ் தானத்திலிருக்கும் பண்டிதர்களைநோக்கி நாமிதற்கென்ன செய் தாற்றீருமென்று வினவ, அவர்கள் ஐயனே! பூர்வத்தில் இக்ஷ் வாகு வம்சஸ்தரான தசரதசக்ரவர்த்தி யென்பவரு மிப்படியே சிந்தை கலங்கி நல்ல கேள்வியையுடையவராகி வசிஷ்டாதி மஹருஷிகளை முன்னிட்டுக்கொண்டு சர்வலோக சரண்யனை ஸ்ரீயஃபதியின் முகோல்லாசமாக, புத்ர காமேஷ்டி யென்னு மோர் ப்ரபலமான யாகத்தைச் செய்து, அவனையே தனக்குப் புத்ரனாகவாய்க்கப்பெற்று மகிழ்ந்திருந்தாராகையாலே, நீருமப் படியே சர்வபலப்ரதனை அந்த ஸ்வாமியினுடைய கடாக்ஷத் துக்குப் பாத்ரராக முயன்றாலிக்குறை தீருமென்ன, அரசனதிக

---

* வஞ்சி-அனந்தபுரம் (திருவாங்கூர்).

சந்த்ருஷ்டனாய் அனேகசற்குண சம்பன்னரான ஸ்ரீவைஷ்ணவர்களை முன்னிட்டுக்கொண்டு * அப்ரமேயர்சந்நிதியில் புத்ரகாமேஷ்டியாகத்தைக் குறைவறச்செய்து முடிக்கத் தத்பத்நியாகிய நாதநாயகியம்மாள் கர்ப்பவதியாய்ப் பத்துமாதமும் பூர்த்தியானவளவில் "தஸ்மாதபூச்சே ரகுலப்ரதீப ஶ்ரீகௌஸ்துபாத்மா குலசேகராக்ய:, மஹீபதிர்மாகபுநர்வஸூத்யத்தினேஹ ரேஃ பூர்ணகடாக்ஷலக்ஷ்ய:" என்றும் "கல்யாப்தேஸஹக ஸங்க்யயாவ்ய பகதே மாஸேசமாகாபிதே, வர்ஷேசாபிபராபவேஸஹர குரோர்வாரேச பக்ஷேஶுசௌ, த்வாதஶ்யாக்யதிதௌபுநர் வஸூதினேப்ரீத்யாக்யா யோகான்விதே, த்ராதும்ந: குலஶேகர: க்ஷிதிபதி ஶ்ரீகௌஸ்துபாத்மாபவத்" என்றுஞ் சொல்லுகிறபடியே, சேரகுலத்துக்கோர் தீபத்தைப்போல்பவரான குலசேகராழ்வார் எம்பெருமானுடைய ஸ்ரீகௌஸ்துபமாணிக்கத்தினம்சபூதராய், கலியாப்தம் இருபத்தெட்டில், பராபவவருஷம், மாசிமாதம், குருவாரம், சுக்லபக்ஷம், த்வாதசி புநர்பூசம், ப்ரீதிநாமயோகங்கூடிய சுபதினத்தி லவதரித்தருளினர்; இவரவயவ சுந்தரசேவையில் தாயாராகிய நாதநாயகியம்மா ளீடுபட்டு அதிசயானந்த வாரியில்மூழ்கி இவரைப்பெற்றதனாலுண்டான வருத்தங் கிஞ்சிற்றேனுந் தோன்றாதிருந்துவிட்டாள். புத்ரோத்பத்தியைக் கேட்டவரசனும் பெருங்களிப்படைந்து, உத்சவங்கொண்டாடி ஜாதகங்கணித்துப் பனிரண்டாவதுநாளில் சுற்றத்தார் தொடக்கமான மற்றவர்களுஞ் சூழ்ந்திருக்கத் தொட்டிலில் கிடத்தி மட்டிலாவைபவத்துடன் மங்களம்பாடிக் குலசேகரனென்று திருநாமஞ்சாற்றி மகிழ்ந்திருந்து † சௌளம் அன்னப்ராசனமுதலிய கர்மங்களையெல்லாங் காலவளவுபடிக்கு நடத்தி வைத்து, ஏழாவது திருநட்சத்திரத்திலுபநயனஞ்செய்து, குருமுகமாக வித்யாரம்பஞ்செய்வித்தனர். இவர் மயர்வற மதிநலமருளப்பெற்றவ ராகையால் சிலநாளைக்குள்ளாகவே வேதவேதாந்த அங்கோபாங்க இதிஹாஸாதிகளிலுள்ள ‡ தேக்கங்களை (சமுத்ரஜலத்தை யாவிரூபமாக க்ரஹிக்கின்ற சூரியனைப்போல)க் ஞானரூபத்தாற் க்ரஹித்துப் பத்தியென்னும் வீட்டின்கண்வைத்து நெறிமுறைதவறாத வறிவுடை

---

* அப்பரமேயர்-அளவிடக்கூடாதவர், பகவான்.

† சௌளம் அன்னப்ராசனம்-மயிர்கழித்தலும் சோறூட்டலும்.

‡ தேக்கங்களை-முழுமையும்.

யவராயிருக்க, இதை அரசன்கண்டு களிப்படைந்து இவருக்கு யௌவனம் வந்தவளவில் திருக்கல்யாணமும் இராஜ்யாபிஷேகமும் செய்துவைத்து இவர் ப்ரஜாபரிபாலனஞ் செய்யுமுறையையுஞ் சிலநாளருகிலிருந்து பார்த்தானந்தித்துக் கலிதீர்ந்து, அனந்தரந் தான் றவஞ்செய்து சத்கதியையடைய விரும்பிப் பத்நிஸஹிதனாய் அரண்யவாசஞ் செய்யப்போயினான். பின்பு கல்விக்கிருப்பிடமும், செல்வத்திற்கு உதிப்பிடமும், சற்குணத்திற்குச் சுரப்பிடமுமான இவர் தந்தேசத்திலுள்ளாரை ஜாதியாசாரத்தினின்றும் நழுகாதொழுகும்படியாயும், சிறியதைப் பெரியது நலியாதபடியும், விவேகிகளை யவிவேகிகள் நிந்தியாதபடியும் நெறிப்படுத்தி யாண்டுகொண்டு வாழுகையில், ஒருநாள் உபய விபூதிநாயகனான திருவேங்கடத்தெந்தை, இவர் ஸ்வப்பனத்தில் தனது நிர்ஹேதுக பரமக்ருபையாலே சேவைசாதித்து இவரைப் பரமசாத்விகராம்படிக் கடாக்ஷித்துத் தன்னுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளையெல்லாங் காட்டியருளி மறைய, இவர் திடுக்கிட்டு நித்திரை குலைந்தெழுந்து படுக்கையில் வீற்றிருந்தபடியே, அநுபவ ஜனிதப்ரீதியதிசயத்தா லடங்காத வார்த்திகொண்டு, எம்பெருமானுடைய சுலபத்வத்தையுஞ், சேதனனவனை யடையப்பெறாத ஹ்ருதய கடினத்வத்தையுந், தமக்குத் தற்காலம் லபித்த வவனுடைய சேவையிலுண்டான வானந்தத்தையும், * தத்பூர்வம் இராஜ்யாதிபாரத்தாலடைய நேரிட்டிருந்த துக்கத்தையும், ஒன்றுக்கொன் றொப்பிட்டுப்பார்த்துத், தம்மா லெம்பெருமானுக்குச் செய்யப்பட்டதொன்று மில்லையாகவிருந்தும் அவனே யிப்படி நிர்ஹேதுகமாக வருள்செய்திருப்பதற்குக் கைம்மா றென்செய்யக்கடவோமென் றெண்ணித் தளர்ந்து, எழுந் துலவும்பொழுது ஒன்றுமே தோன்றாமல், அர்ச்சையைப்போ லசையாதிருந்துவிட்டார். இப்படியிருக்கையில், அருணோதயமாகவே இவரைத் திருப்பள்ளி யுணர்த்துகிறவர்கள் வழக்கப்படி இனிய விசைகளையுடைய வீணைமுதலிய கருவிகளை நெடுநேரமிழற்றியும் இவர் திருக்காப்பை நீக்க வாக்ஞாபிக்காதிருக்கக்கண்டு அச்சமுற்று அமைச்சர்களிடமோடியறிவிக்க, அவர்களு மப்பொழுதேவந்து சில சைகைகள்செய்து பார்த்து விடைபெறாமல் அந்தரங்கத்தொண்டாள்களை மெதுவாக வுள்ளேயனுப்பிப் பார்க்கச்சொல்ல, அவர்கள்போ யிவரிரு

* தத்பூர்வம்—அதற்குமுன்.

ந்த திருக்கோலத்தைச் சேவித்துத் திடுக்கிட்டு வெளியில்வந்து வாய்திறந்துசொல்ல வகையற்றுவிழிக்க, அமைச்சர்கள் கலங்கி இனி * யாக்ஞைக் கெதிர்பார்ப்பதிற் கார்யகரமாவதில்லை, உள்ளே புகுவதுதான் தருமமென் றொருவரோடொருவர் கலந்து பேசி அறைக்குட்சென்று ஆனந்த பாஷ்பத்தினு லலம்பப்பட்டிருக்கிற திருமேனியையும் அஞ்சலிஹஸ்தத்தையு முடையராய்ச் சேவை சாதித்துக்கொண்டிருக்கிற விவரைப்பார்த்து அற்புதமடைந்து இப்படியாவதற்குக் காரணமென்னவாமென் றொருவரையொருவர் வினவியுந் தங்கள் தங்களபிப்ராயத்தை வெளியிட்டுக்கொண்டும் பெருஞ்சப்தமுண்டாக்க, அதனுலிவர் தெளிந்தெழுந்து வெளியில் வந்து தன்னைச்சூழ்ந்திருக்கிற வமைச்சர்களை நோக்காமல், † பகவத்பக்திரூபாபன்ன க்ஞானத்தையுடைய முதன்மந்திரியை மாத்ரம்பார்த்து, அவரை யொருபுறமா யழைத்துக் கொண்டுபோய்த் தோழனே! வாழ்நாள்களையெல்லாம் வீணாள்களாகக் கழித்துழன்ற வென்னையும் ஸ்ரீயஃபதி யொருபதார்த்தமாக மதித்துத் தன்னுடைய சேவையைத் தந்தருளப்பெற்றேன். இவ்வாறுபெற்ற வெனக்கு இனிமேலும் "அக்ருத்ய கரணுதாலப்யத்யக்தோத்பட வ்ருத்திகஃ அர்த்த காமாபி பூதோயமுன்மத்த யிவவர்த்ததே" என்கிறபடி தேஹவசியராய்த் தேஹபோகத்தை யனுபவித்து தேஹாபிமானிகளாய்ப் பகவத்விமுகராய்ச் சப்தாதிவிஷய ப்ரவணராயிருக்குமித்தேசத்தாரான ஸம்ஸாரிகள் நடுவிலிருக்கு மிருப்பும் "கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பு" என்கிறபடியே யானைக்கழுத்தகத்தின்மேலிருந்து அரசுசெலுத்தி யதனுற் பெறுங்கீர்த்தியும் உயிர்க் ‡ கழுவேபோலும் அக்கியேபோலும் அல்லலுக்கிடமாமென்று தோன்றுதிருக்குமோ வென்றுரைத்து, அன்றுதொடங்கி எம்பெருமானுடைய நித்யமங்களகுணங்களை யநுபவம் பண்ணிக்கொண்டிருக்கும் பரமஸாத்வீகரான ஸ்ரீவைஷ்ணவர்களைத்தேடித் தர்சித்துத் தண்டன் சமர்ப்பித்து, அவர்களை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து சத்காலக்ஷேபஞ் செய்துகொண்டுந், திருமழிசைப்பிரானுந் திருக்குருகைப்பிரானு மருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களைச் சேவித்துக்கொண்டுஞ் சிங்காசனத்தில் வீற்றிருந்து (ஓட்டிலொட்டாத

* ஆக்ஞை—கட்டளை. † பகவத்பக்தி ரூபாபன்னக்ஞானம்—பகவத்பக்திரூபமாய்ப்பிறந்த ஞானம். ‡ கழு—கழுமரம்.

* திந்த்ருணீ பலத்தைப்போலுஞ், சேற்றிலொட்டாதபிள்ளைப் பூச்சியைப்போலுந், தாமரையிலையிலொட்டாத நீர்த்திவலையைப் போலும்) இராஜகார்யங்களிற்பற்றியும் பற்றுதவராயிருந்து “த்ரைலோக்ய விஶ்ருதா புண்யாஸ்வாமி புஷ்கரிணீதிவை, கங்காத்யைஸ்ஸகலை ஸ்தீர்த்தைஸ்ஸாஸமாவிமலோதகா, தத்ரதேவார்ஷிகந் தர்வாஸ்ஸித்தாஶ்ச பரமர்ஷய:, வஸந்தி னியதாஹாரா வேங்கடாஹ்வய பூதரே” என்கிறபடி கங்காதி சகலதீர்த்தாதிகமான சுவாமி புஷ்கரிணியை யுடையதாய்ப் பரமருஷிகள் தொடக்கமான மஹாத்மாக்களாலும் சித்தகந்தர்வர்களாலும் வாசம் பண்ணப்படாநின்ற திருமலையைச் சேவிக்கக் காதலித்தெழுந்தருளித் திருவேங்கடத் தெந்தையைக்கண்டு களித்தடிபணிந்தானந்தக் கூத்தாடி “ஊனேறுசெல்வத் துடற்பிறவியான்வேண்டேன்” “திருவேங்கடச்சுனையில் மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே” என்றும் “வானாளுஞ்செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்”, “கோனேரிவாழுங் குருகாய்ப்பிறப்பே” னென்றும், கொடியாடுமணிமாடக்கோனாகி வீற்றிருந்து கொண்டாடுஞ் செல்வறியேன் நின்கோயில்வாசல் “படியாய்க் கிடந்துன் பவளவாய்க்காண்பே” னென்றுங், “கம்பமதயானைக் கழுத்தகத்தின் மீதிருந்து இன்பமருஞ்செல்வமு மிவ்வரசும் யான் வேண்டேன்”, எம்பெருமான் பொன்மலைமே லேதேனுமாவேனே” என்றும் பலமுறைபாடிப் பரவசராகி யனந்தரந்தெளிந்து அப்பனுடைய ஸ்ரீ பாததீர்த்த ப்ரசாதங்களை லபித்துக்கொண்டு, மீண்டும் வடநாட்டுத்திவ்ய தேசங்களேற வெழுந்தருளி அங்கங்குமுள்ள வெம்பெருமான்களையுஞ் சேவித்து த்ருப்தராய்த் திரும்பி ராஜஸ்தானத்தைச்சேர்ந்து, இராஜகார்யங்க ளனைத்தும் பகவத் குணாநுபவத்துக்கு ப்ரதிகூலமானவைகளென்று நினைத்து அவற்றில் † நசையற்றுக் காலக்ஷேபத்தி லீடுபட்டு ஸ்ரீரங்கமஹாத்மியத்தைக் கேட்டருளித் திருவரங்கப் பெருநகருள் அரவணைமேற் கண்வளருங் “கடல் விளங்கு கருமேனியம்மான்றன்னைக் கண்ணாரக் கண்டுகக்குங் காதலுடையவராய் “அற்றபத்தர்” என்கிறபடியே பகவத்பாகவத வைபவ குணாநுபவமொழிய, அன்யதா லட்சணங்களற்ற “அணியரங்கன் றிருமுற்றத் தடியார்” களான ஸ்ரீ வைஷ்ணவ சாதுகோஷ்டியின்” “இன்பமிகு பெருங்குழுவு கண்டியானு மிசைந்துடனே

* திந்த்ருணீபலம்-புளியம்பழம்.

† நசை—ஆசை.

யென்றுகொலோ விருக்குநாளே" என்று பாசுரமிட்டுக் கொண்டிருக்கையில்,பெரியபெருமா ளிவர்திருவுள்ளக்கருத்தைத் தலைக்கட்டிவைப்பதாய் அனந்த கருட விஷ்வக்சேநாதி நித்யசூரிகளைக் கடாக்ஷித்து நீவிர் சிறுமாமனிசராகி ஆழ்வாருக்குச் சேவை கொடுத்துவாருங்களென்ன;அவர்களுமப்படியே * நிலத்தேவர்களாய் ஸ்ரீவைஷ்ணவ ரூபங்கொண்டு இவரிருக்குமிடத்தேறவந்து சேவைசாதித்தருளினர். இவர் அற்புத வாரியி லழுந்தி ஆராத காதலாலெழுந்த அனலைத்தணித்துச் சோராதபக்தியாற் றுணைக் கண்ணீர்சோர வெதிர்கொண்டு சென்று "என்னை யாண்டிடுந் தன்மையர்", "என்னை விற்கவும்பெறுவீர்கள்" எம்பிரான்களே யென்றனுசந்தித்தடிகளில்முடிசேரவீழ்ந்துத் தண்டன்சமர்ப்பித் தவர்களது மங்களாசாசனத்துக் காளாகி யெழுந்து அவர்களைக் கூடத்திற்கெழுந்தளப் பண்ணிக் கொண்டுபோய் ஆசனத்தின்மீ திருக்கச்செய்துஸ்வரூபாநுரூபமாகவாராதித்துசத்காலக்ஷேபங் களைக்கேட்டு ஹ்ருதயம்பூரித்து "இனிநான்போகலொட்டேன்" என்றுபரமபக்தியிலிழிந்துவிட; அவர்களுஞ் சிலநாள்வரையிலிவ ரைவிட்டகலாமற் சேவை சாதித்துக்கொண் டெழுந்தருளினர். ஒருநாள் ஸ்ரீரங்கமஹாத்மியத்தைப்பௌராணிகர்சொல்லிக்கொண்டிருக்கையில்,"ஸ்ரீரங்கயாத்ராஸ்ரீரங்கயியாஸாசைவநாரத,உத்தாரயதி ஸம்ஸாரம் நித்யவாஸஸ்துகிம்புந:" என்கிறபடியே ஸ்ரீரங்க யாத்ரைசெய்வதும், அதிலிச்சை வைப்பதுமே விடியா வெந் நரகத்தைப்போக்கி வைகுந்தமாநகரைத்தருமெனில், அந்த ஸ்தலத்தில்வாசஞ்செய்யு மவர்களுடைய ப்ராப்தியை யென்னென்று விவரிக்கலாகும் என்றிருக்கிற விதைக்கேட்டு, உடனே ஸ்ரீரங்க யாத்ரையில் மனதைத் திருப்பிக் கோஷ்டிக்குத் தண்டன்சமர்ப்பித்து விடைதர வேண்டுமென்று ப்ரார்த்தித்தார். அவர்கள் "ஷஷ்டிர்வர்ஷ ஸஹஸ்ராணி விஷ்ணோரா ராதநம்பலம், ஸக்ருத்வைஷ்ணவ பூஜாயா கலாநார்ஹத்து ஷோடஸீ" என்கிறபடி அறுபதினாயிர வருஷம் பெருமாளை யாராதித்துவந்த வொருவனடைகிற பலனைப்பார்க்கிலும் அவனடியார்களிலொருவரை யொருவேளையி லாராதித்தவ னடைகிறபலன் மிஞ்சிக் கிடக்குமென்பதை யறிந்திருந்தும் பாகவதாராதனையைக் கைவிடப்போமோ? என்ன; இவரிந்தகோஷ்டியோடு மறுநாளெழுந்த

* நிலத்தேவர்-பிராமணர்.

ருளலாமென்று திடப்படுத்திவைத்து அன்றையதினம் வழக்கப்படித் ததீயாராதனகைங்கர்யத்தி லீடுபட்டிருந்துத் தீர்த்தமாடியநுஷ்டானத்தைத்தீர்த்துக்கொண்டுப்ரயாணமாக,அச்சமயத்திலிவரென்றும் பாராததொரு ஸ்ரீவைஷ்ணவப்பெருந்திரளை எம்பெருமான் கொண்டுவந்து விட்டார். இவ ரவர்களை யாராதித்தவனந்தரம் போகவேண்டிய கடமையாகையாலே கைங்கர்யத்திலீடுபட்டிருந்து அடுத்தநாள்போகலாமென்றிருக்க, ப்ரதிதினமுமிப்படிப்புறப்படுஞ்சமயமறிந்தேஎம்பெருமானுடையநியமனத்தால் நித்தியசூரிகள் ஸ்ரீவைஷ்ணவர்களைப்போலுருவங்கொண்டு கூட்டங்கூட்டமாக வந்து சேவை சாதித்துக்கொண் டிருந்தமையால், யாத்ரையில்வைத்திருந்த விவரிஷ்டம் அந்த சமயத்தில் நிறைவேறு திருந்தது; ஆயினும் அரசன் ஸ்ரீரங்க யாத்ரைசெய்யப் போகிருரென்கிற கோஷமாத்திரம் நகரிக்குளெங்கும் நித்யமும் பரவியிருக்கும்.

இப்படி யிவர் ததீயாராதனையி லீடுபட்டுக்கொண்டு ஸ்ரீரங்க யாத்திரையி லிச்சை வைத்திருக்கையிலும் "வேதவேத்யே பரே பும்ஸிஜாதே தஶரதாத்மஜே, வேத:ப்ராசே தஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா" என்கிறபடி யாதொரு வேதவேத்யனை பரமபுருஷன் தசரதனுக்குத் திருக்குமாரனுகவந் தவதரித்தருளினுற்போல அந்த வேதங்கள்தாமும் ஸ்ரீவால்மீகிபகவான் றிருவாயினிடமாக இதிஹாசசிரேஷ்டமானஸ்ரீமத்ராமாயணரூபமாய்ச்"செவிக்கினியசொற்"களையுடையதாய்வந்தவதரித்ததென்கிறபடியே"இன்னமுத"த்தைப்புமதிக்கவொட்டாதவவ்விதிஹாசகாலக்ஷேபங் கேட்டருளி, அவ்வம்ருதத்தைச் செவியென்னும் வாயாற்பருகிக்களித்து ப்ரேமபரவசராயிருந்துகொண்டு "சதுர்தஶஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீமகர்மணும், ஏகஸ்சராகோ தர்மாத்மாகதம் யுத்தம்பவிஷ்யதி" என்கிற சுலோகத்தால் இளைய பெருமாளைப் பிராட்டிக்குத் திருமேனிகாவலாக வைத்துவிட்டுத் தர்மாத்மாவானபெருமாள்தாமொருவரேகரதூஷணத்திரிசிராதி பதினாலாயிரந் துஷ்ட ராக்ஷசர்களெதிரில் யுத்தோன்முகரானரே! இனித்தாலென்செய்வதென்று ஸ்ரீவால்மீகிபகவான் கலங்கினதைக் கேட்குந்தறுவாயில், ப்ரீதியானுற் கியானந்தடுமாறிப் பெருமாளுக்கவர்களா * லவத்தங்கள் விளைந்துவிடி லென்செய்வ

* அவத்தம்-ஆபத்து.

தென்றுருகி "வாளும் வில்லுங்கொண்டு பின்செல்வார்மற்றில்லை" யேயென்றுதளர்ந்து "உருவார் சக்கரஞ் சங்கு சுமந்திங்கும்மோ, டொருபாடுழல்வானோரடியானுமுளன்" என் * றவசரித்துச்சது ரங்கபதசேனைகளையுங்கூட்டிக்கொண்டு பெருமாளுக்குப்படைத் துணையாகவெழுந்தருளாநிற்க, மந்த்ரிகளிவருடைய அதித்வரித மான யாத்திரையைப் பார்த்து ஆச்சர்யமடைந்து இதையெவ் விதத்திற் றவிர்ப்பிக்கலாமென் றாகித்து உபாயத்தாற் சிலரை யேவியெதிரில்வரவிட்டுப்பெருமாள்தாமொருவராய்நின்றேயந்த ராக்ஷஸர்களை நிரஸித்துமீண்டு பிராட்டியி னுலிங்கனத்திஞற் றிரு மேனியிலிருந்த இரணங்களெல்லாமாறிக் குளிர்ந்துசேவைசாதி க்கிறுரென்று சொல்விக்க, அதைக்கேட்டுச் சோகந்தீர்ந்து "தந் திருஷ்ட்வாசத்ருஹந்தாரம்மஹர்ஷீணும், ஸுகாவஹம், பூவஹ் ருஷ்டா வைதேஹிப்ரர்தாரம் பரிஷஸ்வஜே" என்று அவ்வர்த் தத்தைக் கொண்டிருக்கிற சுலோகத்துக்குஞ் செவிசாய்த்தருளி த்ருப்தராய்மீண்டு ராஜஸ்தானத்துக் கெழுந்தருளினுர்.

பின்னுமொருநாள் இவர்க்குக்காலக்ஷேபஞ் சாதித்துக்கொ ண்டிருந்த பௌராணிகரேதோ வசந்தர்ப்பத்திஞல் தம்முடைய திருக்குமாரரை யிவரிட மனுப்பிவைக்க, அவர் காலக்ஷேபஞ் சொல்லுகையில் இவருடைய திருவுள்ளநெகிழ்ச்சி யிருக்கும்ப டியையறியாதவராகையாலே,கிஞ்சிற்றுப்படபடப்பாய்"ஜஹார ராவணஸ்ஸீதாம்புதா:கே ரோஹிணீமிவா" என்கிறபடி புதனெ ன்னுங் க்ரஹம் ரோஹிணிநக்ஷத்திரத்தின் சமீபத்திற்சேருமோ ருற்பாதம்போல, மஹாகண்டகனுனவிராவணன்பெருமாள்பிரிந் திருக்குஞ் சமயம்பார்த்துத் திடுக்கெனவந்துச் சீதாபிராட்டியை யெடுத்துக்கொண்டு போயினுனே! யென்று நுஷிவயிறு பிடிக்கி றதைவற்புறுத்திச்சொல்ல, இவர் முன்போலவே, வ்யாகுலாந்தா: கரணராய்வீற்றிருந்தஸ்தானத்தைவிட்டுச்சடுதியிலெழுந்துமுகம் வியர்க்க முன்கோபமுண்டாய் அகம்பதைத்து, அங்கந்துடித்து, நானிந்தக்ஷணமே போய் அவன்றலைகளைத்துணித்துப் பிராட்டி யைக்கொண்டுவந்து, அந்தஸ்தானத்துக்குப் பெருமாள் திரும்பி வருவதற் குள்ளாக வெழுந்தருளப் பண்ணக்கடவேனென் றவ சரித்து வாளையுருவிக்கொண்டு புரவியின்மேலேறிச் சேனைகளை யோடோடியுந்தன்னைப் பின்றொடரச்செய்துகொண்டு,இலங்கை

---

* அவசரித்து-விரைந்து.

யைநோக்கி யதிகவேகமாய்ச்சென்று சமுத்திரத்திலுமிறங்கிவிட,
எம்பெருமானிவருடைய அத்யவசாயத்தைக்கண்டதிசயித்துச்,
சமுத்திரஜலத்தை இவர்க்கு மிவர்சேனைக்கும் முழந்தாளளவு
படுத்தித் தான் சீதாலக்ஷ்மண சமேதராய் ஸ்ரீவிபீஷணாழ்வான்
மஹாராஜர்தொடக்கமான சைனியங்களுடன் புஷ்பகவிமானத்தி
லேறியருளியெதிரேவந்து சேவைசாதித்து ஆழ்வீர்! நாமந்தவிரா
வணனைப்பின்றொடர்ந்து அவனையு மவனூரையுமழித்து வெற்றி
கொண்டுவந்திருக்கிறோம் நீரினி பயந்தீர்ந் திருமென்று திருவாய்
மலர்ந்தருள, இவர் திருவுள்ளங்குளிர்ந்து பிராட்டி திருவடிகளிலும்
பெருமாள் திருவடிகளிலுந் தன் றிருமுடியை யொருமுஹூர்த்த
காலந்தாழ்த்தியிருந்துக் கவலைதீர்ந்தெழுந்து அஞ்சலிஹஸ்தராய்
நின்று, பெருமாளை அந்ததிருவோலக்கத்தோடு தம்முடையதிரு
மாளிகைக் கெழுந்தருளி யமுது செய்து விட்டுத் திருவயோத்
திக்குப்போகவேண்டுமென்று ப்ரார்த்தித்து, எழுந்தருள்வித்து
மூன்றுநாள் வரையி லாராதித்துக் கொண்டிருந்தார். அனந்தரம்
பெருமாளிவரைப்பார்த்துக், குலசேகரப்பெருமாளே! இனிநான்
அயோத்திக்குத்வரிதமாய்ப்போகாவிடில் பரதாழ்வான்கதியெப்
படியாமோவென்று சங்கிக்கிறோம் ஆதலால் விடைதர வேண்டு
மென்று கேட்டருளி, இவரால் கொஞ்சதூரம்வரையில் வழித்து
ணைபெற்றுநகரைக்கடந்து நாட்டார்கண்படாதவிடத்திற்போய்
நீர்நம்முடையதிருவரங்கப்பெருநகருக்குவாருமென்று திருவாய்
மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினர். அப்போதிவர் பகவத்
விஶ்லேஷத்தைச் சகியாதவராய் மெய்சோர்ந்து தன்னுடைய
பொன்னொத்த திருமேனியைப் புழுதியிற்கிடத்தி மூக்கினிலாவி
சோதிக்கும்படியாய்விட, அருகிலிருந்த ஞானசீலரான முதன்
மந்த்ரி வியப்படைந்து இவரடியிற் பலமுறைபணிந்து, உமக்கிது
வரையிற் பணிசெய்து க்ருதார்த்தனாயினேன் என்னப்பனே
யென்றுதுதித்து, உடனேபடைவீட்டிலிருந்து பாங்கானதொரு
தண்டிகையைக் கொண்டுவரச்செய்து இவரையதிற்பக்குவமாகக்
கிடத்தித், திருமேனிக்குத்தான் காவலாகவிருந்துகொண்டுவந்து
திருப்படை வீட்டில் பஞ்சணைமேற் படுக்கவைத்து, அபரிமித
மான சைத்ய வுபசாரங்களினால் தெளிவடையச்செய்ய, இவர்
தெளிந்தெழுந்து அனுபவஜனித ப்ரீதியதிசயத்தினால் வேதோப
ப்ராம்ஹணசார பூதமாய் மணிமந்த்ர அவிஷதங்களை விவரிக்கும்

ஸ்ரீமுகுந்த மாலையென்கிற ஸ்ரீஸூக்தியைப் பாடியருளி, அன்று தொடங்கி ப்ரபஞ்சவாழ்வைத் தினையளவேனும் நினைவிற்கொள்ளாமல் பகவத்விஷயத்தி * லாழங்காற்பட்டுச் சக்ரவர்த்தித்திருமகனையே திருவாராதனமாக வெழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஸ்ரீமத்ராமாயணக் காலக்ஷேபத்தைப் பூர்த்திசெய்துப், பெருமாளுடைய திருவவதார நவமி நெருங்கினவளவிலே பெருமாளையுத்சவங் கண்டருளப்பண்ணுகையில் மந்திரிகள்பார்த்து சகியாமல், நம்முடைய ராஜனுக்கு இந்த ஸ்ரீவைஷ்ணவர்களுடைய சகவாசத்தாலன்றோ இத்தனை கலக்சங்களுந் தேற்றங்களும் வந்தன; ஆகையாலரசனுக்கிவர்கள் விஷயத்தில் வெறுப்புண்டாகச்செய்யவேண்டுமென்றாலோசித்துப் பெருமாளுடைய திருவாபரணப்பெட்டியிலிருந்ததொரு நவரத்நசோபிதமானஹாரத்தையெடுத்து மறைத்துவைத்துவிட்டு இவருக்கந்தரங்க வுத்தேசியரான ஸ்ரீவைஷ்ணவர்க ளெடுத்துக்கொண்டார்களென்று காவற்காரர்களை யேவிப் பழிதூற்றி விட்டார்கள். இவரதைக் கேட்டு மிகவுஞ் † சந்தாபங்கொண்டுக், கனவிலுஞ்சொல்லப்படாத விப்பழியை விளைத்தவர்கள் துர்க்கதிக்காளாவதொரு பட்சமாயினும்,இவ்வசையைக்கேட்பவர்களுஞ்சந்தேகித்துநசித்துப்போக நேரிடுகிறபடியால் இதனை நாமே நிவர்த்திசெய்ய வேண்டுமென்றெண்ணி, உழையர்களை யேவிக்கொடியவிஷமுடைய சிலசர்ப்பங்களைப்பிடித்தோர் பெருங்குடத்திலடைத்துக்கொண்டுவரும்படியாக்ஞாபிக்க, அவர்களுமப்படியே கொண்டுவந்து சபைநடுவில் வைக்க, இவர் அமைச்சர்களைநோக்கி, அந்ததிருவாபரணத்தை ஸ்ரீவைஷ்ணவர்களேயெடுத்தார்களென்று சொல்லுமவர்களாரேயாயினும்இந்தகுடத்திற்கையையிட்டுப்ரமாணபூர்வமாகச்சொல்லித் தேறுவார்களாகில் உண்மையெனக் கொள்வேனென்ன, அவர்களிலொருவரும் வாய்திறந்துவிடைசெய்ய வகைகாணாமல் இதேதுபுலியைக்கிளப்பக் காடுகலைக்கப்போய் சிம்ஹத்தினிரைக்கிலக்கானாற்போலாயிற்றென்றெண்ணி அசந்துநின்றார்கள். அப்போதுஇவர்தாமேசபைநடுவிலெழுந்துநின்று "பரனன்பர்கொள்ளார்" என்கிறபடியே சத்யகாம சத்யசங்கற்பனானசுவாமிக் கன்பராயிருப்பவர்களெடுத்திரார்களென்று பூமியையும்ஆகாயத்தை

---

* ஆழங்காற்பட்டு-முழுதும் ஈடுபட்டு (அழுந்தி).

† சந்தாபம்-வருத்தம்.

யுந் திசைகளையும் பார்த்துக் கையையுயரவெடுத்துச் சொல்லிக் குடத்திலுங்கைவிட்டு அதனுள்ளடங்கியிருந்த சர்ப்பங்களின் றலைகளின்மீதறைந்து சத்யஞ்செய்தார். அப்போது, அந்தசர்ப்பங்களிலொன்று, இவர் * பாஹுவழியே யூர்ந்துத் திருத்தோளின்மேலிருந்தும் பணத்தை விரித்துத் திருமுடிமேற் குடையாகக் கவிந்துநிற்க, மற்றொன்று பழிவிளைத்தவர்களைச் சீறித் துறத்த, அவர்கள் பயந்திவர் திருவடிகளில் வீழ்ந்து உண்மையை வெளியிட்டுத்திருவாபரணத்தையுஞ்சமர்ப்பித்துக்ஷமைகேட்டுக் கொள்ள க்ஷமித்தருளி "நஹௌரிசிந்தாவிமுகஜநஸம் வாஸவைஶஸம் வரம்ஹுதவஹஜ்வாலா பஞ்சஜராந்தர் வியவஸ்திதி:"என்கிறபடியே பகவத்வைபவங்களைச்சொல்லக்கேட்டுப் பொறுக்காதார் மத்தியிலிருக்குமிருப்பைக்காட்டில் அக்னிஜ்வாலாமயமான † பஞ்சரமொன்றி லடைபட்டு வருந்தும் ஸ்திதி உத்க்ருஷ்டமாகக் காணுமென்றும்,எப்போதிவ்வாத்மாபகாரிகளுடைய சகவாசங்களை யொழியப் பெறுவோமென்றுஞ் சிந்தாகுலரா யிருந்து, அனந்தரமொருநாளில் எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளைச் சேவித்துக் காலாழ்ந்து, கண்சுழன்று, நெஞ்சழுந்தியிருக்கையில் சிலபரிசாரகர்கள் மந்திரிகளாலேவப்பட்டு இவரெதிரிலோடிவந்துநின்றுபெருமூச்செறிந்து, ஐயோ!!!உமதுபுத்ரன் குளத்தில் மூழ்கிவிட்டானே என்செய்யக்கடவோமென்று கூவ, இவரதற்குப் புத்ரன் கைவிட்டாலென்ன பெருமாள் கைவிடாதிருக்கும்படி அவன் ‡ பலமுந்துசீரிற்படியவேண்டுங் கிடீரென்றுரைத்து விட்டுப் பகவதனுபவத்தை விடாதிருந்து, ஒரு முஹூர்த்தமானபிறகு திருக்கண்களை விழித்தார். அப்போது புத்ரன் திருமேனி நலங்காமலெதிரிலுலாவிக்கொண் டிருக்கையால் அவர்கள் சொல்லிய § அபோஹத்திற்கஞ்சியும், இனியவர்கள் மத்தியிலிருக்கில் ஆத்மா வனர்த்தப்படுமென்றெண்ணியும், "பரித்யக்தாமயாலங்காமித்ராணிசதநாநிச" என்றும் "த்யக்த்வாபுத்ராம்ஶ்சதாராம்ஶ்ராகவம் ஶரணம் கதா:" என்றும் ஸ்ரீவிபீஷணாழ்வான் இலங்காபுரியையும் புத்ர மித்ர களத்ர தனாதி போகங்களையும் $ ஸவாஸனமாகவிட்டுச் சர்வலோகசரண்யனான பெருமாளையாசிரயித்தாற்போல,தத்க்ஷணமே

* பாஹு-புஜம். † பஞ்சரம்-கூடு. ‡ பலம்-பயன். § அபோஹம்-விபரீதம். $ ஸவாஸனமாக-அடியோடு.

ராஜ்யத்திலும் * ஐஹிகாமுஷ்மிக திவ்யமாநுஷ போகங்களி லும் நசையற்று திடவ்ரதரென்கிற தமது திருக்குமாரருக்கு இராஜ்யாபிஷேகஞ்செய்து வைத்துவிட்டு, எம்பெருமான் திரு வரங்கம் எங்கே? எங்கே? யென்னுஞ் சோராத காதல்கொண்டு வெளிப்பட்டுத் தமக்கந்தரங்கரான ஸ்ரீவைஷ்ணவ சகவாசத் துடனே "நல்லார்கள் வாழும் நளிரரங்க" த்தை நோக்கி எழுந் தருளி ப்ராகாரமண்டப விமானாதிகளை ஸ்வரூபாநுரூபமாகச் சேவித்துச் சேனைமுதலியாரை யடிபணிந்து "புஜோபதாநம் ப்ரஸ்ருதான்யஹஸ்தம் நிகுஞ்சிதோத்தா நிதபாதயுக்மம், ஸு தீர்க்க முத்பாஹு முரப்ரதேசம் புஜம்கதல்பம் வுருஷம் மஹம் தம்" என்கிறபடியே வலத்திருக்கரத்தைச் சிரசின்கீழ்ப்படுத்தி, இடத்திருக்கரத்தைத் தொடையின்மேல் நீட்டிக்கொண்டு, விசா லமான வக்ஷஸ்தலத்தையுடையனாய், அரவரசப்பெருஞ்சோதி யனந்தனென்னு மணைமேற் பள்ளிகொண்டருளி, பெருவிடா யடைந்தவனுக்குத் தெளிந்ததீர்த்தமும் குளிர்ந்தசோலையும் அகப்பட்டாற்போலே தன்னை அடியவர்க்ககப்படச் சேவை சாதிக்கின்ற பெரியபெருமாளை மணாற்றானை பற்றிநின்று பாதாதிகேசம் கேசாதிபாதமாகப் பலமுறைசேவித்து சகல தாபங்களையும் போக்கிக்கொண்டுத் ததீயாராதன கைங்கர்யத்தி லீடுபட்டுத், திருமுற்றத்தடியார்களோடு சிலகாலம் வாசஞ் செய்துகொண்டிருக்கப், பெரியபெருமாளிவர் கைங்கர்யத்தி † லுவப்புடையவராய் நம்முடைய திருக்கண்ணபுரத்துக்கு வாரீ ரென்ன, இவரும் அவ்வாறே திருக்கண்ணபுரத்துக் கெழுந்தரு ளிச் சௌரிராஜனழகிலீடுபட்டு நீங்காதசெல்வம் பெற்றிருக்கை யில் அவரும் ஆழ்வீர்! நம்முடைய தில்லைத் திருச்சித்ர கூடத் திற்கு வாரீரென்ன, அவ்விடத்துக் கெழுந்தருளி ருத்ரன் பணி ந்து ஆனந்தித்து நர்த்தனஞ் செய்யும்படித் தன்னுடைய நிர் வாஹத்வங் காட்சியிலே தோற்றத் திருவனந்தாழ்வான் பேரில் சாய்ந்தருளி யிருக்கிற 'தெய்வச்சபாநாயகனை கோவிந்தராஜ னைத் திருவடிதொழுது, ததனந்தரம் ஆழ்வார் திருநகரிக்கடுத்த

* ஐஹிகாமுஷ்மிக திவ்யமாநுஷ போகம் - (ஐஹிகம்) இகலோகத் தில் (மாநுஷ) மனிதர்களாலும் (ஆமுஷ்மிகம்) பரலோகத் தில் (திவ்ய) தேவர்களாலும் (அநுபவிக்கப்படும்)போகங்கள்.

† உவப்பு - மகிழ்ச்சி.

வீரநாராயண புரத்துக்கெழுந்தருளி மன்னனாரைச்சேவித்துத், தத் * ஸௌந்தர்யாசக்தசித்தராய் அவ்விடத்தில்தானே பெருமாளுடைய கைங்கர்யத்தி லீடுபட்டிருந்து அறுபத்தேழாவது திருநட்சத்திரத்தில் ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீதேவிபூஷணயுத பரிஜனங்களோடு வீற்றிருந்து தனிக்கோல் செலுத்துகின்ற திருநாட்டுக் கெழுந்தருளி அடங்காப் பெருங்காதலோ டடி பணிந்து "அந்தமில் பேரின்பத்தடியரோடு" திருமாமணி மண்டபத்தி லெழுந்தருளி யிருந்தார்.

திருநக்ஷத்ர தனியன்.

"கும்பேபுநர்வ ஸௌஜாதம் கேரளே சோளபட்டணே
கௌஸ்துபாம்ஶம் தராதீஶம் குலஶேகரமாஶ்ரயே."

ஸ்ரீகுலசேகராழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

☞ ஸ்ரீகுலசேகராழ்வார் திருவவதார வருஷம்-ச௯௫௬-க்குச் சரியான பஹுதான்ய வருஷம் மாசி௴.

* ஸௌந்தர்யாசக்தசித்தர்-ஸௌந்தரியத்தில் காதலுற்ற சித்தத்தையுடையவர்.

பெரியாழ்வார் வைபவம்.

தனியன்கள்.

நேரிசை வெண்பா.

மின்னார் தடமதில்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகாற்
சொன்னார் கழற்கமலஞ் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோங் கீழ்மையினிச் சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்
றீண்டிய சங்க மெடுத்தூத—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான்
பாதங்கள் யாமுடைய பற்று.

"தாதாத்விக † ப்ரதிபலத் பகவத்பரத்வம் விஸ்தீர்ய பாண்ட்ய கதகேந்த்ர ஜயீகஜேந கச்சந்ப்ரி யாதுபகதே கருடே நநாதே ப்ரேம்ணஹிஷம்ரசயதிஸ்ம நமோஸ்து தஸ்மை; ஜ்யேஷ்ட்ஷேதமாஸே பவமாநதாரேப்ரேஷ்டோகுணே நாஜநி பட்டநாத: தத்ரத்ரயீரூப கருத்மதாத்மா கடாக்ஷ லக்ஷ்யம் கமலாபதேர்ய:" என்கிறபடி இப்புவியில் பாண்டியநாட்டில் ஆனிமாசம் சுவாதி நட்சத்திரத்தி லவதரித்தருளிச், சர்வேசுவரனுடைய கிருபைக்குப் பாத்ரராகிப், பரதெய்வ நிர்ணயஞ் செய்துப் பஹுஜனங்கள் சூழ்ந்துவர ஜெயப்ரதமான யானை யின்மேலிருந்து பவனிவந்து அந்த சர்வேசுவரன்றனே வேத ரூபியான பெரியதிருவடியின்மேலெழுந்தருளி ஸ்ரீதேவி பூஷண யுத பரிஜனங்களுடன் ஆகாசத்திலிருந்து சேவைசாதிக்கச் சாக்ஷாத்கரித்துச் சோராதகாதல்கொண்டு அவன் வடிவழகுக் குத் தீங்குவராதபடி மங்களாசாசனஞ்செய்தவரான பட்ட நாதனை நமஸ்கரிக்கிறேனென்று இவ்வாழ்வாருடைய அவதார விசேஷத்தைத் திவ்யசூரிசரிதையிற் சொல்லிற்றிறே.

இவருடைய வைபவமெங்ஙனே யென்னில் "வேதவாய்த் தொழிலாளர்கள் வாழ்வில்லிபுத்தூர்" என்கிறபடியே வையத் தேவர்களான ப்ராம்ஹணோத்தமர்கள் வாழாநின்ற "தந்விபுரி" என்கிற ஸ்ரீவில்லிபுத்தூரிலே, போதாயன சூத்ரம் எஜுச் சாகையையுடைய குடியில்வேதாந்த பாரங்கதரான முகுந்த

† 'ப்ரதிபயா பகவத் பரத்வம்' என்றும் பாடம்.

பட்டரென்னுமொரு முன்குடுமிச் சோழியப்ராம்ஹண ஸிரேஷ்டர் பத்நீசஹிதராய் வடபெருங் கோயிலுடையானை முப்போதுந் தப்பாதடிப்பணிந்துத் திருமுற்றத்தடியார்க் காட்பட்டுக் கைங்கர்யத்தி லூற்றமுடையவராகி யிருக்கிறகாலத்தில், பெருமாளுவந்து தன்னுடைய நித்யவிபூதியிலிருக்கிற பெரியதிருவடியை நோக்கி, நீர் நம்முடைய லீலாவிபூதியின்கண் வடபெருங்கோயிலை யாசிரயித்துக் கொண்டிருக்கிற முகுந்தபட்டருடைய பத்நியாகிய பத்மவல்லியம்மையார் கர்ப்பத்திலமர்ந் தவதரித்துப் பொலிந்து அஞ்ஞானமென்னுங் கொடியசர்ப்பத்தாற் கடியுண்டு விஷமேறிமடிய மயங்குகிறமாந்தர்களைத் தெளிவுபெறச்செய்து வரக்கடவீரென்று நியமித்தருள, அவரிவ்வாழ்வாராகத் "தத்வாப்தாபகமேகவெளயுகபரேஸம் வஸ்தரேக்ரோதநே சண்டாம்ஸௌமிதுநங்கதேஹ்நி நவமேபக்ஷேவளர்க்ஷேபிச ஸ்வாத்யாம் பாஸ்கர வாஸரேஸௌபதிதாவேகாதஸீநாமநி ஸ்ரீமாநாவிரபூத சிந்த்ய மஹிமாஸ்ரீ விஷ்ணுசித்தோநக:" என்கிறபடியே கலியாப்தம் நாற்பத்தேழாவதாண்டில் நிகழ்ந்த குரோதனவருஷம் ஆனிமாசம் சுக்லபக்ஷம் ஏகாதசி ஞாயிற்றுக்கிழமை சுவாதி நக்ஷத்ரங்கூடிய சுபதினத்திலவதரித்தருளி எண்ணரும்புகழுக் கிடமான விஷ்ணுசித்தரென்கிற திருநாமத்தைப்பெற்று வடபெருங்கோயி லுடையானுடைய நிர்ஹேதுகஜாயமான கடாட்சத்தினுல் மயர்வற மதிநல மருளப்பெற்று "ப்ரக்லாதோ ஜந்ம வைஷ்ணவ:" என்கிறபடி ஸ்ரீபிரஹ்லா தாழ்வானைப்போலே ஜந்மவைஷ்ணவராய் "ஆத்மதாஸ்யம் ஹரேஸ்வாம்யம்" என்கிறபடி வேதமுதல்வனுக்கே இவ்வுயிரடிமை யென்னுஞ் சொல்லிளக்கும் ஸ்வரூபாநுரூபமான க்ஞானமும் க்ஞாநுநுரூபமான வ்ருத்தியுமுடையவராய் "நாகிஞ்சித்குர்வதஸ் ஸேஷத்வம்" என்கிறபடி தாம் பகவத்விஷயத்தில் கிஞ்சித்கரித்தே ஸ்வரூபத்தை நிறம்பெறச் செய்துகொள்ள வேண்டுமென்று பார்த்து, அதைச் செய்யுமிடத்துத் "தனக்கேயாகவெனைக் கொள்ளுமீதே" என்கிறபடியே அவனுகந்த வடிமையில் தாமீடுபடுவதுதான் கர்த்தவ்யமென்றநுசந்தித்து, அதையறிகைக்கு அவனுடைய அவதாரங்களை யாராயப்புகுந்தார்.

எங்ஙனென்னில் மண்ணின் பாரத்தை நீக்குவதற்காகவும் தர்மஸ்தாபனை செய்துவைப்பதற்காகவும் "ஏஷநாராயண ஸ்ரீ

மான் க்ஷீரார்ணவ நிகேதநஃ நாகபர்யங்க முத்ஸ்ருஜ்யஹ்யாகதோ மதுராம்புரீம்" என்கிறபடி திருப்பாற்கடலில் வடதளத்தின் மேல் சேஷசாயியாயிருக்கும் யாவனொரு நாராயணனே வட மதுரையிற் கண்ணனாகவந் தவரித்தருளினானென்றும் "புண் யாத்வாரவதீயத்ர தத்ராஸ்தே மதுஸூதநஃ ஸாக்ஷாத்தேவஃ புராணோஸௌ ஸஹிதர்மஸ்ஸநாதநஃ" என்கிறபடி அநாதியா யும் சனாதன தர்மாத்மாவாயு மிருக்கின்ற அந்த மதுசூதன னுடைய அவதார விசேஷத்தால் திருவாய்ப்பாடியுந் திருத்வார கையும் பரிசுத்தமாவதற்கு ஹேது கண்டனனென்றும், அவன் † சாது பரித்ரா ணாதித்ரயத்துக்காகத் "திருவின் வடிவொக்குந் தேவகி" பெறப்பிறந்து, "மைத்தடங்கண்ணியசோதை" வளர்க் கச், "செய்த்தலைநீலச் சிறுபிள்ளையாய்" வளர்ந்தருளி"சூட்டுநன் மாலைக ளேயனவேந்தி விண்ணோர்கணன்னீ, ராட்டியந் தூபந்தரா நிற்கவே யங்கோர் மாயையினால்,ஈட்டிய வெண்ணெய் தொடுவுண் ணப்போந்தவன்" என்கிறபடியே பரமபதத்தில் நித்யமுக்தர்க ளான வமரர்கள் தூபந்தரா நிற்குஞ் சமயத்தில் மாயமாய்மறை ந்துவந்து வ்யூகத்தைச்செய்து அந்த புகைக்கொழுந் தடங்குவ தற்குள்ளாகவே லீலாவிபூதியைச் சிருஷ்டித்துப்போயினானென் பதுபோலவே, வ்யூகத்திலும், இந்திராதிதேவர்கள் அவனுடைய திருமேனி யழகுக்கேற்ற கோலமாமலர் மாலைகளைக் கையிலேந்தி நின்றுகொண்டு நாற்றிசை தீர்த்தங்களையும் நறுமணச்சாந்துகளை யுங்கொணர்ந்து திருமஞ்சனங் கண்டருளப்பண்ணித் தூபந்தரா நிற்க, அந்தப் புகைச்சாயலில் தானேமறைந்து வடமதுரையி லுதித்துத் திருவாய்ப்பாடியைச்சேர்ந்து அளையுண்ணப்போந் தவனாகையாலே, அந்த வாசனையைப்பின்னாட்டிக் "கம்ஸகார்ய வதஸ்தஸ்யஸ தாமஸதனம் ப்ரதிஸ்வயமேவார்பிதம்மாலா மக்ரஹீஸ்தாக்ரஜஸ்ததஃ" என்கிறபடி கம்ஸகார்யமாக வெழுந் தருளினபோது அந்த கம்ஸனுக்குப் பணிசெய்துபோந்த ஸ்ரீ மாலாகாரருடைய திருமாளிகைக்குள் புகுந்து பூமாலையை யிர ந்து "ப்ரஸாத பரமௌ நாதௌ மமகேஹமுபாகதௌ தன் யோஹ, மர்ச்சயிஷ்யாமீ த்யாஹ மால்யோப ஜீவநஃ" என்கிற படி அவர் என்னாதர்களே! இப்படி வலியப்புகுந்து இருவராய்

† சாது பரித்ராணாதித்ரயம்-சாதுக்களை ரக்ஷித்தல், துஷ்டர்களைச் சிக்ஷித்தல், பூபாரந்தீர்த்தல்.

வந்தென் முன்னேநின்று என்னை யாட்கொள்ளவு மிசைந்துத் தன்யனுகச்செய்த கிருபைக்குக் கைம்மாறேது காண்பேனென்று துதித்துக் கம்ஸ னுக்கேயைக் காற்கடைகொண்டு கட்டி வைத்திருந்த புஷ்பமாலையை யெடுத்துச்சூட்டச் சூடிக்கொண்டு மகிழ்ந் திருந்தானென்று சொல்லப்பட் டிருக்கிறதை யறிந்து இவ்விஷயத்துக்குப் பூவிடுகையே யுகப்பென்றுதேறினர்.

உடனே தம்முடைய பிதுரார்ஜிதங்களை யெல்லாங்கொண்டு ஒரு நீர்ப்பாங்கான நிலத்துக்கிட்டு வேலிவளைத்து, அதனிடையில் திவ்யமான திருக்குளங்களெடுப்பித்து "நாட்கமழ் பூம்பொழில்" என்கிறபடியே பரிமள ப்ரசுரமான பூந்துளவம், செந்தாமரை, வெண்டாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், மல்லிகை, முல்லை, மாதவி முதலிய நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, கோட்டுப் பூக்கள் மலிந்து பொலியும்படியாகத் திருநந்தனவனந் திருத்தி நாடோறும், ப்ரதம காலையிலெழுந்து தீர்த்தமாடி ஸ்வரூபாநுகுணமான வனுஷ்டானங்களை முடித்துக்கொண்டுத், தமது நாசியில் வாசனையேறுதபடித் திருப்பரிவட்டத்தாற் கட்டிக்கொண்டு, வண்டுகள் மொய்த்து எச்சிற் படுத்தா முன்னமே திருவுகிர்படாதபடிப் பக்குவமாகக் கொய்துத் திருப்பூக் கூடையிற் சேர்த்துக்கொண்டு வந்து பிணையல், கண்ணி, கோவைமுதலிய பலவித மாலைகளாகக் கட்டிக்கொண்டுபோய் வடபெருங்கோயிலுடையானுக்குச் சமர்ப்பித்துக் கொண்டிருந்தார்.

அப்போது, நாட்டை யாண்டுக்கொண்டிருந்த மஹா தார்மிகனுன ஸ்ரீவல்லபதேவ பாண்டியனென்னு மரசன் கூடலென்கிற மதுரையில் ஒருநாளிரவில் நகரசோதனர்த்தமாக வேஷமாறித் திரியுமளவில், அங்கொரு திண்ணைமேல் ஒரு ப்ராம்ஹணர் நித்ரைசெய்துக்கொண்டிருக்கக்கண்டு, அவரையெழுப்பி நீரார்! இவ்வளவுபோதிலிங்குத் தனித்துக் கிடக்கைக்கு ஹேதுவென்னென்று கேட்க, அவரும் நானொரு ப்ராம்ஹணன் கங்காஸ்நானம்பண்ணித் திரும்பிச் சேதுதர்சனர்த்தமாக விவ்வழியே வந்து இராப்பொழுதாகவே இங்கு தங்கினே னென்ன; நீர் சாஸ்த்ர சஞ்சாரமுந் தேச சஞ்சாரமுஞ் செய்திருப்பவராக உம்முடைய நினைவாலு மிருப்பாலுங் காணப்படுகையால் நீரறிந்துங் கேட்டு மிருப்பவைகளி லொரு நன்மார்க்கத்தைக் காட்டுவதான

க்ரந்தஞ் சொல்லுமென்றிரந்தான். அப்போதந்த ப்ராம்ஹணர் "வர்ஷார்த்தமஷ்டௌ ப்ரயதேதமாஸாந் நிஶார்த்த மர்த்தந்திவஸம்யதேத வார்த்தக்யஹேதோர்வயஸாநவேந பரத்ரஹேதோரிஹஜன்மநாச" என்னுமிச்சுலோகத்தைச்சொல்ல,அரசன் அதிக *வ்யுத்பன்னனாகையாலே, வர்ஷாகாலமாகிற நாலுமாசங்களிலிருந்து ஜீவனஞ்செய்வதற்கு வேண்டிய உபகரணங்களை மிகுந்த எட்டுமாசங்களில் சேர்த்துக்கொள்ள வேண்டுவது போலும், இராக் காலங்களில் வேண்டியதாகிற உணவுகளைப் பகற்காலங்களில் தேடிக்கொள்ள வேண்டுவதுபோலும், வார்த்தக்ய காலத்தில் தேஹசம்ரக்ஷணை செய்துகொள்ளுவதற்கு வேண்டிய த்ரவ்யங்களை வாலிபகாலத்தில் சம்பாதித்துக்கொள்ள வேண்டுவது போலும், பரலோகத்தி லிருந்து சுகாநுபவம் பண்ணுவதற்கு வேண்டிய தத்வக்ஞான ஸ்வரூப வைலக்ஷண்யாதிகளை இந்தஜன்மத்திற்றானே சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்னும் பரமார்த்த மிதிலிருப்பதாக வுணர்ந்துத் தானதுவரையிலும் பரலோகவின்பத்தைப்பேணி யாசரித்ததொன்று மில்லையேயென்று நெஞ்சங்குழைந்து,அந்த ப்ராம்ஹணரை யடிபணிந்துக்,கொஞ்சநாள் தன்னிடத்திலிருந்துத் தன்னை நல்வழிக் காளாக்கிவைத்து அனந்தரம் சேது தர்சனத்திற்குப்போகச் சித்தம்வைத் தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்து அவரை அரண்மனைக்கழைத்துக் கொண்டுபோய் உபசரித்துச் சிலநாளைக்குள் அவரால் நல்லகேள்வியையுடையவனாகி அவரைச் சேது தர்சனத்துக் கனுப்பினன்.

பின்பு ஒருநாள் தனக்கு ஹிதஞ்சொல்வாராரென்று சிந்தித்துக்கொண்டிருக்கையில், ஸ்ரீயஃபதியினுடைய திருவடிகளில் சித்தம் நன்கொருங்கின ஸ்வரூபவைலக்ஷண்யமுடையவராய்,வேதாகமசாஸ்த்ரங்களில்அதிகநிபுணரானசெல்வநம்பியென்னும்புரோஹிதர் அங்கெழுந்தருள, அவரை யெதிர்கொண்டுபோ யடியில் முடிதாழ்த்தி யழைத்துவந்து ஆசனத்தின்மீதெழுந்தருள்வித்து அஞ்சலிஹஸ்தனாய் நின்று சுவாமீ! புருஷார்த்த நிர்ணய பூர்வகமாக அத்ருஷ்ட சித்திக்குச் செய்வதேதென்று கேட்டனன். அவர் அரசனைக் குளிரக் கடாக்ஷித்து அந்தப் புருஷார்த்தஞ் சித்திக்க வேண்டுமாகில், தத்வக்ஞானிகளான பரம பாகவதர்களை

---

* வ்யுத்பன்னன் - அறிஞன்.

வாக்கு மனசு காயங்களாகிற த்ரிகரண சுத்தியோடுந் திருவடி தொழுது, அவர்கள் திருவாய் மலர்ந்தருளும் பரமார்த்தங்களை மனனஞ்செய்து, அவர்களிட்டவழக்கி லீடுபட்டிருக்கவேண்டும்; அப்படியிருக்குமிடத்துந் த்ரிமூர்த்திசாம்யபுத்தியையொழித்துக் "காரணம் துத்யேய:" என்கிறபடி யாவனொருவன் ஜகத்காரண வஸ்துவோ அவனேசேதனனுடைய த்யானத்துக்குரியவனென்னுமுபாயத்தைப் பற்றவேண்டும்; அவ் வுபாயத்தை யுள்ளபடி யறியப்புகில், உம்முடைய சமஸ்தானத்தில் "ஞானம் பல பல" என்கிறபடியே, பலசமயங்களிலுந் தலையிட்டுக் கொண்டிருக்கிற வித்வான்களனந்தம்பேரிருக்கையால், ஒவ்வொருவரும் அவரவர் மதத்தினதிதேவதையையே பரதெய்வமென்று வாதித்துச் சம்சயப் பெருங்கடலில் மூழ்த்த விடங்காண்பார்களானால், நாம் சொல்லுவதினுமக்கு * ஆசக்தி யிருக்கமாட்டாதேயென் றஞ்சுகிறோமென்று சொன்னார். அவ்வளவிலே அரசன் அவர் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு அதைத் தேவரீரே விவரிக்க வல்லீரென் றிரந்தனன். நம்பி அவனைநோக்கி அரசனே! அதை விவரிப்பது † க்யாதிபூஜாலாபங்களுக்காகவன்றேதானும்பிறரும் நசிக்க ஹேதுவில்லாதபடி யாராய்ந்' துரைக்கத்தக்க தொன்றுகையால், நீர் உம்முடைய நீதிஸ்தானத்தில் ஒரு தோரணக்கம்பம் நாட்டி அதனுச்சியில் வித்யாசுல்கத்தை நிர்மித்துவைத்து, எந்த மதஸ்தர் வேதோக்தமாகப் பரத்வ ப்ரதிபாதனம் பண்ணி அதைத் தன்கடையே யறுந்துவிழச் செய்வரோ அந்த மதத்திலடிமைப்பட நிச்சயித்திருக்கிறே னென்று உம்முடைய தேசத்திலுந் தேசாந்தரங்களிலும் பறையறைவித்துந் தூதுசெலுத்தியுமறிவித்துப் பல வித்வான்களைத் திரட்டி வாதிக்கச்செய்வீராகில் அப்போது நாம் சொல்லிய தத்வஜ்ஞானிகள் தங்களை வெளியிட்டுக்கொண்டு வந்து நிர்ணயஞ்செய்து கிழியையறுத்து உம்மையாட்கொண்டு உபாயவைபவமிருக்கும்படியை யருளிச்செய்வர்களென்ன; அரசனு மப்படியே செய்தான். அப்போது சமண, பௌத்த, சைவ, சாக்தேய, மாயாவாத, வைசேஷிக, சாங்க்ய, பாசுபதாதி மதங்களில் ஆசிரியத்வம் பூண்டிருந்த பெருந்தலைகளும் வித்வான்களுந் தங்கள் தங்க ளிருப்பிடம்விட்டு வெளிப்பட்டுத் திரள் திரளாகத் தென்மதுரைக்குள் வந்து நிறைந்து

* ஆசக்தி - பிரியம். † க்யாதி - புகழ்.

குறிப்பிட்டிருந்த நாளை யெதிர்பார்த்திருந்தார்கள். செல்வ நம்பி யென்னும் ஸ்ரீமான் வடபெருங்கோயி லுடையானைத் திருவடி தொழுது இவ்வர்த்தமானத்தை விண்ணப்பஞ் செய்து நின்னருளே பார்த்திருப்பேனென்று தீர்த்தமேற்றுக் கொண்டவரானார்.

அதன்பின்பு வடபெருங் கோயிலுடையான் "பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டுபட்டுப் பொய்ந்நூலை மெய்ந்நூலென்றென்றுமோதி, மாண்டவத்தம்போகாதே" என்கிறபடியே அபாயத்தைத்தருமவற்றையே யுபாயமாகப்பற்றி அசுர ராக்ஷச மோஹனார்த்தமாகக் கற்பிதமா யிருக்கிற மோஹ சாஸ்திரங்களையே மஹா கலைகளாக ப்ரமித்துப் போந்து ஜனன மரணாதிகளில் தோள்மாறியுழலுஞ் சம்சாரிகளை அவற்றினின்றும் மீட்பதாகத் திருவுள்ளம்பற்றி, மெய்ந்நாவரும் மெய்யடியருமான விவ்வாழ்வாருடைய சயனப்ரதேசத்துக் கெழுந்தருளி விஷ்ணுசித்தரே! நீர் பாண்டியன் சதசுக்குப்போய் அவன் கட்டியிருக்கிற கிழியையறுத்துவாருமென்றார் - இவர் பெருமானை நோக்கி, அது வித்யாசுல்கமாகநிர்மிதமாயிருக்கிறதே! "நலங்களாயநற்கலைகள்" நவின்றிலாத அடியேன்போய் கையிலிருக்கும் * கொட்டுத்தழும்பைக் காட்டியறுப்ப தொன்றுகுமோவென்ன; அது உமக்குப் பரமன்றுகாண்? நாமே வேதார்த்த ப்ரதிபாதனத்துக்குக் கடவோமென்று நிர்ப்பந்தித்தருளினார். இவர் திடுக்கிட்டுநித்ரைகலைந்தெழுந்து, ஈதொருஸ்வப்ன மிருந்தபடியென்னென்று † விஸ்மிதராய் விசுவசித்துக்கொண்டிருக்கையில், பெருமான் சந்நிதிகாக்குமுதலிகளி லொவ்வொருவருடைய ஸ்வப்நத்திலு மெழுந்தருளி நாம் விஷ்ணுசித்தரையிடுவித்துப் பாண்டியனால் நிர்மிதமாயிருக்கிற கிழியை யறுக்கப்போகிறோ மாகையால், நீவிர் நம்முடைய சகல விருதுகளையு மெடுப்பித்துக்கொண்டு அவருக்குத்துணையாகப்போய் வாரீரென்றருளிச்செய்தபடியால், அவர்களும் நித்ரைகலைந்தெழுந்து ஒருவரோடொருவர் கலந்து வசனித்து அற்புதமடைந்து "சிற்றஞ்சிறுகாலே" தீர்த்தமாடி நித்யாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டுத் திருப்பல்லக்குத் திருவெண்கொற்றக்குடை, வெண்சாமரை, திருச்சின்னமுதலிய விருதுகளை யெடுப்பித்துக்கொண்டு இவரிடம்வந்துபெருமானுடையநியமனமிருந்த

* கொட்டுத் தழும்பு - மண்வெட்டி. † விஸ்மிதர் - ஆச்சரியப்பட்டவர்.

படியை விண்ணப்பஞ்செய்தார்கள். இவர் அவனுகந்த வடிமையி லீடுபடுவதே தமதுஸ்வரூபத்துக்கு * நிறமென்றநுசந்தித்து வட பெருங்கோயிலுக்குப்போய்ப்பெருமானைத் திருவடிதொழுது திரு மாலை திருப்பரிவட்டமும்பெற்றுக்கொண்டுத் திரும்பி மாடவீதி கடந்துதிருப்பல்லக்கிலேறியருளி ஸ்ரீவைஷ்ணவகுழாங்களுடன் பாண்டியன் சதசுக்கெழுந்தருளினார். ஸ்ரீமானனசெல்வநம்பியும் அரசனும் † அப்யுத்தான ப்ரணாம பூர்வகமாக இவரையாதரித் தார்கள். அவ்வளவிலே சதசில் வாதித்துக் கொண்டிருந்த வித் வஜ்ஜனங்கள் இவருக்கு வேதாப்யாச மிகவுமில்லை யென்னும் புத்தியாலே அரசனை ‡ அதிக்ஷேபிக்க, அபிமானதுங்கரானசெல்வ நம்பிஇவரைத்தெண்டனிட்டு வேதாந்தப்ரதிபாத்யமான பரதத் வத்தை நிச்சயித்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்தார்.

பரத்வ நிர்ணயம்.

அப்போது "சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து, வேரிமயிர் பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி, மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப் பட்டுப் போதருமாபோலே" என்கிறபடியே குகைக்குள் கிடந் திருந்த கண்டீரவமானது துயிலுணர்ந்தவாறே கண்ணைப்புரட்டி விழித்தெழுந்து நாற்புறமும்பார்த்து ஹஸ்தபாதங்களை நெரித்து மெய் திமிர்வாங்கி பிடரியைச்சிலிர்ப்பி மிடற்றொலி செய்து பில வாய்விட்டுவெளிப்படுமாபோலே இவ்வாழ்வாருடைய அகவாயி லமர்ந்திருந்த பெருமான் ஆனந்தமயமான திவ்யாத்ம ஸ்வரூபத் தையும் ஆனந்தகுணங்களுந் தண்ணளியுமான செறிவனைத்தையு முடையதன்னை இவர்திருவாக்காலேவெளியிட்டுக்கொள்ளத்திரு வுள்ளம்பற்றிஇவரைக்குளிரக்கடாக்ஷிக்க; இவர் "ஹஸிதம்பாஷி தஞ்சைவகதிர்யாயச்ச சேஷ்டிதம் தத்ஸர்வந்தர்மவீர்யேணயதா வத்ஸம் ப்ரபஶ்யதி" என்கிறபடியே ப்ரம்ஹாவின் ப்ரசாதத் தாலேசக்ரவர்த்தித்திருமகனுடைய சிரிக்கை,பேசுகை,நடக்கை, கிடக்கை முதலியவற்றையே சர்வதேச சர்வகால சர்வாவஸ் தையிலும் நினைந்துநினைந்து ஆனந்திக்கும்மனதையுடையவரான ஸ்ரீவால்மீகியைப்போலும் "ஶங்கப்ராந் தேநே கோவிந்தஸ் தம்

---

* நிறம் - பண்பு. † அப்யுத்தான ப்ரணாமபூர்வகமாக - எழுந்து வந்து தெண்டனிட்டு முறைப்படி. ‡ அதிக்ஷேபிக்க - குதர்க் கிக்க.

பஸ்பர்ஶக்ருதாஞ்ஜலிம்,உத்தாநபாததநயம்முநிவர்யம்ஜகத்பதிঃ ததঃப்ரஸந்நவதநஸ்தத்க்ஷணந்நருபநந்தநঃ,துஷ்டாவப்ரணதோ பூத்வாபூததாதார மச்யுதம்" என்கிறபடியே ஸ்ரீபாஞ்ச ஜன்ய ஸ்பரிசத்தாலே க்ஞானவைலட்சண்ய முடையனாய் முனிசிரேஷ்டனாய்ச் சர்வேசுவரனை வேதசாஸ்த்ரசம்மதமாய்த் துதிக்கவல்ல சர்வக்ஞனை துருவனைப் போலுஞ், சகல வேதார்த்தங்களையுந் ததுபப்ரம்ஹணங்களான புராணேதிஹாசங்களையுஞ்சாக்ஷாத்கரித்துக் கரதலாமலகமாக்கிக்கொண்டுத்தோரணக்கம்பத்தடிவாரத்துக் கெழுந்தருளிநின்றுக் "காரணந்துத்யேயঃ" என்கிறபடியே இந்த ஜகத்துக்குக் காரணவஸ்து எவனோ அவனே த்யானத்துக் குரியவனென் றருளிச்செய்து, முதலில் வேதத்திற்றொடங்கி "யதோவா இமாநி பூதாநிஜாயந்தே யேநஜாதாநி ஜீவந்தியத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வதத்ப்ரஹ்மேதி" என்கிறபடியே, எவனிடத்திலிருந்து உடலுமுயிருஞ் சரமு மசரமுமாக்க்காணப்படுகிற பொருளனைத்து முண்டாகின்றனவோ, எவனாலிவையாவும் நிலைபெற் றிருக்கின்றனவோ, முடிவிலெவனிடத்திலிவையனைத்தும் லயமாகின்றனவோ அவனேபரப்ரம்ஹம் என்றும், "யதோவாசோநிவர்த்தந்தே அப்ராப்யமநஸாஸஹ ஆனந்தப்ரம்ஹணோ வித்வான் நபிபேதிகுதச்சந" என்கிறபடியே எது வாக்கினாலும் மனதினாலுந் துதிக்கவும் அறியவும் அருமையாகவிருக்குமோ அந்த பரப்ரஹ்மத்தை யறிந்து கொண்டவர்கள் எமாதிகட்கும் பயப்படார் என்றும், "யத்வேதாதௌஸ்வரঃ ப்ரோக்தோவேதாந்தேசப்ரதிஷ்டிதாঃ, தஸ்யப்ரக்ருதிலீநஸ்யயঃ பரஸ்யமஹேஸ்வரঃ" என்கிறபடி வேதங்ளி னுதியிலும் அந்தத்திலுஞ் சொல்லப்பட்டிருக்கிற ப்ரணவமெதுவோ அதன் பிறப்பிடமாகிய அகாரத்தில்*லீனமாயிருப்பவனெவனோ அவனேபரனும் மஹேசுவரனுமாகச்சொல்லப்படுகிற பரப்ரம்ஹம் என்றும் "நதத்ஸ மஶ்சாப்யதிகஶ்சத்ரு ஶ்யதே" என்கிறபடி அந்த பரப்ரம்ஹத்துக்குஒத்தார்மிக்காரில்லையென்றும், "யஸ்யப்ரம்ஹாச க்ஷத்ரஞ்ச உபேபவதவோதநே" என்கிறபடி அவன் ப்ரம்ஹாவையும் க்ஷாத்ரத்தையுடைய ருத்ரனையும் அன்னத்தை யுண்பதுபோல் கற்பாந்த்யத்தில் புஜிக்கிறனென்றும், "ம்ருத்யுர்யஸ் யோபஸேசநம்" என்கிறபடியே ப்ரளயகால ருத்ர னவனுக்கு

* லீனம் - ஐக்கியம்.

ஊருகாய்ஸ்தானமாகிறானென்றும், "யதோர்ணநாபிஸ்ஸ்ருஜதே க்ரஹ்ணதேச ததாப்ரத்திவ்யாமோஷதயஸ்ஸம்பவந்தி" என்கிறபடியே சிலந்திப்பூச்சியானது எவ்வளவுபொழுதில் நூலைச்சிருஷ்டித்து க்ரஹித்துக்கொள்ளுமோ அவ்வளவுகாலத்தில் இந்த ப்ரிதிவ்யாதி சகலபதார்த்தங்களையும் அந்த பரன் படைத்தானென்றும், "யோஸௌசயஜிதோ விஷ்ணுஸ்ஸத்வ குணப்ரணிதோபவத்" என்கிறபடியே அந்தபரன் விஷ்ணுவென்னு மபிதானத்தையுடையனாய்ச் சாத்விகனாய்த் தன்னையொழிந்த சர்வராலுந் தொழப்படுகிறானென்றும், "தஸ்யநாபேரஜ ஆத்மாஸ்வயம்பு:" என்கிறபடியே அவனுடைய நாபீ கமலத்திலிருந்து இராஜஸனான ப்ரம்ஹா பிறந்தானென்றும், "ததாதஸ்ய ப்ருவோந்த ராளாத்தமோருத்ர: ப்ராதுரபவத்" என்கிறபடியே அந்த ப்ரம்ஹாவின் புருவங்களின் மத்ய ப்ரதேசத்திலிருந்து தாமசனான ருத்ரன் பிறந்தானென்றும், "வந்தே விஷ்ணும் ஓங்கார வாச்யம்" என்கிறபடி ஓங்கார வாச்யனான அந்த விஷ்ணுவை நமஸ்கரிக்கிறேனென்று சுருதி சொல்லிற்றென்றும், "ஓங்காரோ பகவான் விஷ்ணுஸ் த்ரயீந வசஸாம்பதி:, தஸ்யோச்சாரண மாத்ரேண பரப்ரம்ஹாதிகச்சதி" என்கிறபடியே ஓங்காரத்துக்குப் பொருள் விஷ்ணு வொருவனேயென்றும், அவன் * த்ரயீயென்கிற வேதவசனங்களுக்கு நாயகனென்றும், ஜீவர்களந்த ஓங்காரத்தை யுச்சரித்த மாத்ரத்தில் அவனை யடைகிறார்களென்றும், அப்படிப்பட்ட ஓங்காரத்தில் ப்ரதம ஸ்வரமான அகாரம் அவனையே குறிப்பிடுகிறதென்றும், "அகாரோவை ஸர்வவாக்" என்கிறபடியே அந்த அகாரம் சர்வ வாக்குகளுக்கும் மூலாக்ஷரமென்றும், "அகாரோவிஷ்ணு: ப்ரதமநாமோச்யதே" என்கிறபடியே அகாரம் விஷ்ணுவினுடைய ப்ரதான திருநாமத்தை ப்ரதிபாதிக்கிறதென்றும், "அஇதி பகவதோ நாராயணஸ்ய ப்ரதமாபிதாநம்" என்கிறபடியே அகாரமானது அந்த பகவானாகிய நாராயணனுடைய ப்ரதான திருநாமமென்றும், "அபஹதபாப்மா திவ்யேதேவ ஏகோ நாராயண:" என்கிறபடி அந்த நாராயணனொருவனே பாப ரஹிதனா யிருக்கிறா னென்றும், "அத புருஷோஹவை நாராய ணஸ்ஸோகாமயத ப்ரஜாஸ்ருஜேயேதி ஆஸ்ருஜந் நாராயணாத் ப்ரம்ஹா ஜாயதே நாராயணாத்ருத்ரோ

* த்ரயீ - இருக்கு, எசுர், சாமம்.

ஜாயதே நாராயணு திந்த்ரோ ஜாயதே நாராயணு த்வாதஶாதித்யா: ருத்ரா: வஸவருஷய: ப்ரஜாபதயஶ்ச பூர்வே தேவாஸ்ஸமுத்பத்யந்தே” என்கிறபடி ஸ்ரீமந்நாராயண னிடத்திலிருந்து ப்ரம்ஹாவும் ருத்ரனுந் த்வாதசாதித்யரும் ஏகாதசருத்ரர்களுஞ் சப்தருஷிகளும் நவப்ரஜாபதிகள் முதலான தேவர்களும் பிறந்தனரென்றும், “ஏகோஹவை நாராயணஆஸீத் நப்ரம்ஹா நஶங்கர: ஸமுநீர் பூத்வாஸமசிந்தயத்ததஏதே த்யாநாஜ்ஜாயந்தேவிஶ்வோ ஹிரண்யகர்ப்போக்னி யமவருண ருத்ரேந்த்ரா:” என்கிறபடி ப்ரம்ஹ ருத்ர ஈசான ப்ரிதிவ்யாதி பதார்த்தங்களனைத்துங் கற்ப * க்ஷயத்திலழிந்து நாராயணனொருவனேயிருந்துப் பின்பு அவன் நினைவினாலே அவையாவு முண்டாயினவென்றும், “நாராயண பரம் ப்ரம்ஹ தத்வம் நாராயண: பர:” என்கிறபடி நாராயணனே பரப்ரம்ஹ, நாராயணனேபரன் என்றுஞ்சொல்லுகிற இத்யாதி வேத உபநிஷத்வாக்ய ஸஹஸ்ரங்களையருளிச்செய்து, அனந்தரம் அவைகளை நன்றாக விளங்கச்சொல்லும் இதிஹாசங்களில் புகுந்து “மந்நாபி பங்கஜாஜ் ஜௌதோபத்மயோநி: பிதாமஹதல்லலா டோத்பவோ ருத்ரஸ்தஸ்மாஜ்ஜாதஷ்ஷடாநந:” என்கிறபடி என்னுடைய நாபீ கமலத்திலிருந்து ப்ரம்ஹாவும் அவனுடைய புருவங்களினிடையிலிருந்து ருத்ரனும் அவனிடத்திலிருந்து அறுமுகனுமாகப் பிறந்தனரென்று பகவானே கீதையி லருளிச்செய் திருப்பதையுமெடுத்துதஹரித்துத், ததனந்தரம் இப்படிப் பரத்வங்கூறினார் தமக்கு முன்பேயும் பல பெருந்தலைக ளிருந்தன ரென்பதை நிர்வஹிப்ப, தாய்த்திருவுள்ளம்பற்றி அதர்வணச்சிரம்என்கிறசுருதியில்“அஹமேக:ப்ரதமமாஸம்வர்த்தாமிபவிஷ்யாமிசநாந்ய:கச்சின்மத்தோ வ்யதிரிக்த: இதிஸோந் தராதந்தரம் ப்ராவிஶத்தி ஶஶாந்தரம் ப்ராவிஶத்ஸோஹந்நித்யா நித்யோஹம் ப்ராஞ்சோஹம் ப்ரத்யஞ்சோஹம் உதஞ்சோஹம் அதச்சோர்த்வா திஶச்சாஹந் த்ரிஷ்டு ஜகத்யனுஷ்ப்ஸோஹஞ் சந்தோஹந் த்யரஹம் பார்ஹஸ்பத்ஸோஹம்” என்கிறபடி ருத்ரன் தெய்வ லோகத்துக்குப் போயிருந்தபோது ஒரு ப்ரஸ்தாபத்தில் அந்த நாராயணன் என்னுளந்தர்யாமியா யிருக்கையால் நான் த்ரிலோகாதிபதியா யிருக்கப் பெற்றேனென்றும், அவ்வேற்றத்தாலே பூத, பௌஷ்ய,

* க்ஷயம் - முடிவு.

வர்த்தமான காலங்களிலு மெனக்கீடானவ ரொருவருமில்லை யென்றுஞ் சந்தோஷப் பெருக்காலே தேவசபையில் நின்று சொல்லி யிருக்கிறானென்றும், "யந்நதேவாந்ந முநயோந்ந சாஹந்த சஶங்கரஃ ஜாநந்தி பரமேஶஸ்ய தத்விஷ்ணோஃ பரமம் பதம்"என்கிறபடி தேவர்களாலுஞ்சனகாதிமுனீசுவரர்களாலும் என்னாலுஞ் சங்கரனாலும் பரமேசுவரனாய் விளங்கா நின்றுள்ள அந்த விஷ்ணுவின் பரமமான பதத்தை அறியக்கூடாதென்றும் ப்ரம்ஹா சொல்லியிருக்கிறானென்றும், ஸோபித்யாய ஶரீராத் ஸ்வத்ஸ்ஸ்ருக்ஷுர்விவிதாப்ரஜாஃ" என்கிறபடியே அந்தபகவான் தன்திருமேனியினின்றும் வெவ்வேறுபட்ட ஆத்மாக்களைச் சிருஷ்டிக்கும்படித் திருவுள்ளம் பற்றி முதலில் ஜலத்தையுண்டாக்கி அதில் அண்டத்தை நிர்மித்துத் தன்னுந்தியினின்றும் ப்ரம்ஹாவைத் தோற்றுவித்து அவனால் ருத்ரனையும் மற்றவரையும் படைத்தாரென்று (மநு) ஸ்மிருதியிற் சொல்லியிருக்கிறானென்றும், ஸஹோதாச வ்யாஸஃ பராஶர்யஃ" என்கிறபடி க்ஞானாதிக்யரான பராசரனுருடைய புத்ரராகிய வியாசரது வசனங்கள் சத்தியமானவையென்று எசுர்வேதத்திற் சொல்லியிருக்கிறபடியே சத்யவாதியான வியாசர் "நாராயண பரோ தேவோ நபூதோநபவிஷ்யதி, ஏதத்ரஹஸ்யம் வேதாநாம் புராணாநாஞ்ச ஸம்மதம், ஸத்யம் ஸத்யம் புனஸ்ஸத்யம் உத்ருத்ய புஜமுச்யதே, வேதஶாஸ்த்ராத்பரம் நாஸ்திநதைவங் கேசவாத் பரம்" என்கிறபடியே பூத பௌஷ்ய வர்த்தமான காலங்களிலும் நாராயணனுக்கு மிஞ்சின பரதெய்வமில்லையென்று வேதங்களும் புராணங்களு மிணங்கி இரட்டித்துச் சத்ய பூர்வகமாகச் சொல்லி யிருக்கையால் அவ்வர்த்தத்தை இந்த ருஷிகூட்டத்தினடுவில் நானுமொருமுறை ப்ரமாணபூர்வமாகச் சொல்லக்கடவேனென்று கையையுயரவெடுத்து மூன்றுதரஞ் சத்யஞ்செய்து வேதங்களுக்கு மிஞ்சின சாஸ்திரமுங் கேசவனுக்கு மிஞ்சின பரதெய்வமு மில்லையென்று சொல்லியிருக்கிறாரென்று மருளிச் செய்தார். ஆகவித்தியாதிகளாலே சமஸ்த வேதார்த்தங்களும் வேதாந்தத்தி லடங்கி, வேதாந்தம் அஷ்டாக்ஷரத்தி லடங்கி, அஷ்டாக்ஷரம் ப்ரணவ தாற்பர்யமாகி, அந்த ப்ரணவம் அகாரத்தி லைக்கியமாயிற் றென்றும், அதுகொண்டு "ஸமஸ்த ஶப்த மூலத்வா தகாரஸ்யஸ்வபாவதஃ" என்கிறபடியே அகாரத்தைச்

சமஸ்த சப்தங்களுக்கும் மூலமாயிருக்கும் ஸ்வபாவத்தையுடைய தாகச் சொல்லுகையென்றும், "அக்ஷராணாமகாரோஸ்மி" என்கிறபடியே கீதோபநிஷதாசார்யனான கண்ணன் அக்ஷரங்களில் அகாரமாயிருப்பவன் நானேயென்று திருவாய்மலர்ந்தருளினானென்றும், "யதாஸர்வேஷுதேவேஷு நாஸ்திநாராயணாத் பர: ததாமந்த்ரேஷுஸர்வேஷு நமந்த்ரோஷ்டாக்ஷராத்பர:" என்கிறபடியே சமஸ்ததேவர்களிலும் வைத்துக்கொண்டு நாராயணனொருவனே பரனாயிருப்பதுபோல சர்வ மந்த்ரங்களிலும் அஷ்டாக்ஷர மொன்றே பரதத்வ நிர்ணயஞ்செய்யும் பரமமான மந்த்ரமா யிருப்பதென்றும் ப்ரசங்கித்து, இத்யாதிசுருதிஸ்ம்ருதிஇதிஹாச புராணவசன சம்மதங்களை முன்னிட்டுக்கொண்டுக் "கண்ணனல்லாற் றெய்வமில்லை" என்று நாமுஞ்சொன்னோம், நமருஞ் சொல்மின் என்றார். அப்போது வித்யாசுல்கமாகக் கட்டியிருந்த கிழியானது தன்கடையே தாழவளைந்து இவர் திருக்கையைத்தீண்ட "விரைந்து கிழியறுத்தான்" என்கிறபடியே அதனை யறுத்தருளினார்.

அப்போது சதசிலிருந்த சமயாசாரியர் பலரும் வித்வஜ்ஜனங்களும் அவர்களுடன் அநுவர்த்தித்த அரசனும் விஸ்மிதராய் இவ்வாழ்வார் திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்து "வேதாந்த விழுப்பொருளின் மீதிருந்த விளக்கை விஷ்ணுசித்தன் விரித்தனன்" என்று அதிக ப்ரீதியுடனே இவரை ஆனைக் கழுத்தின்மீதேறி யருளப்பண்ணி அரசனே தொடக்கமான யாவருஞ்சத்ரசாமர தாலவ்ருந்தாதிகள் தரித்துச்சேவித்துவர "வேதப் பயன்கொள்ளவல்ல விஷ்ணுசித்தர்" வந்தாரென்றும், "வில்லிபுத்தூர் வேதக்கோன்" வந்தாரென்றும், விருதூதித் திருச்சின்னம் பரிமாறி "ஈண்டிய சங்கமெடுத்தூதி" அரச னிவருக்குப் பட்டர்பிரான் என்று திருநாமஞ்சாற்ற அதை யாவருமுவந்து ஏககாலத்தில் பலமுறையுச்சரித்துக் கரதாளந் தட்டிக் கொண்டு, மங்களவாத்யமுழங்க, நகர்வலமாகப் பவனிமஹோத்சவங் கண்டருளப் பண்ணினார்கள். அவ்வேளையில் (புத்ரர்களை ப்ரம்ஹரதம் பண்ணுகையில் காணவாதரித்துவரும் மாதா பிதாக்களைப்போல) ஸ்ரீமந்நாராயணன் நிரூபக பூதையான பிராட்டி சஹிதனாய் "மஞ்சுயர் பொன்மலைமேலெழுந்த மாமுகில்"என்கிறபடியே பனிதோயும் முகட்டையுடைய கனககிரியே

போல் ஆகாரவிசேஷத்தையொத்துத் "திருச்சக்கரஞ் சங்கினொடும்" என்கிறபடியே சங்க சக்ர திவ்யாயுத தரனாய்க் "கிளர்ந்த பிரமன் சிவனிந்திரன் விண்ணவர்சூழ விளங்கவொருநாள்காண வாராய் விண்மீதே" என்கிறபடியே "அப்ராக்ருதம் ஸூரைர்வந்த்ய மயுதார்க ஸமப்ரபம்" என்கிறபடியே ப்ரம்ஹருத்ராதிதேவர்களால் சேவிக்கப்படுமவனாய் ஆயிரஞ் சூர்யரோரிடத்திற் சேர்ந்திருப்பதுபோற் காணுஞ் சுடர்ச்சோதியோடுங் கூடிய அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹவிசிட்டனாய் ஆகாசத்திலிருந்து சேவைசாதிக்க, இவர் சேவித்துப் பகவத்ப்ரசாதமடியாக நிரவதிக பக்தியைப் பெற்றிருப்பவராகையாலே, தமக்குவேண்டிய அபேக்ஷிதங்களைப் ப்ரார்த்தியாமல் அவனுடைய சர்வக்ஞத்வ சர்வசக்தித்வ சர்வரக்ஷகத்வாதிகளை யநுசந்திக்கப்புக்குக், * காலக்ருத பரிணாமமின்றிக்கே † ஸதைகரூபமாய், நித்ய ஸித்தமாய்ப், பஞ்சோபநிஷண்மயமான பரமபதத்தில் "ஸதாபஶ்யந்திஸூரய:" என்கிறபடியே நித்யசூரிகளால் ஸதாதர்சிக்கப்படுகிற வஸ்து அந்த பரமாத்ம ஸ்தானத்தை யாதரியாமல் காலக்ருதபரிணாமமாய் ‡ க்ஷணக்ஷரண ஸ்வபாவமாய், அரக்கரசுரர்க்கு வாசபூமியாய்த் துர்வித்வான்கள் § துரபிசந்தி பண்ணும் ஸ்தலமாய்க், கலி $ சாம்ராஜ்யம்பண்ணுகிற இவ்விருள்தரு மாஞாலத்திலேவந்து ¶ சக்ஷூர்விஷயமாகிறதானால், ப்ரம்ஹருத்ராதிகள் தொடக்கமான வித்தேசத்தாருடைய த்ருஷ்டியால் இவ்வஸ்துவுக்கென்ன தீங்குவருகிறதோவென்னும் மதிசங்கையாலே, யானைக்கழுத்தின்மேற்கிடந்த மணிகளைத் தாளமாகக்கொண்டு, அந்த சௌந்தர்யாதிகளுக் கொருதீங்கும் வாராமல் நித்தியமாகச் செல்லவேண்டுமென்று தம்முடைய ஸ்வரூப தசையைமறந்து ப்ரேமபரவசராகி மங்களாசாசனம் பண்ணியருளி, இவ்விஷயத்தில் தாமொருவரே நிற்கில் போதாதென்று நினைத்துத், தமக்குத்தோள் தீண்டிகளான ஐசுவர்ய கைவல்ய பகவத்சரணார்த்திகளையும் மங்களாசாசனயோக்யராம்.

* காலக்ருத பரிணாமம்-காலத்தினாற் செய்யப்படும் விகாரங்கள்.

† ஸதைகரூபமாய் - ஒரேதன்மையான ரூபமாய். ‡ க்ஷணக்ஷரண ஸ்வபாவமாய் - க்ஷணத்துக்குக்ஷணம் விகாரப்படுந் தன்மையதாய். § துரபிசந்தி - குதர்க்கம். $ சாம்ராஜ்யம் - அரசாட்சி. ¶ சக்ஷூர் விஷயமாய் - கண்ணுக்குத் தெரியும்படி.

படித் திருத்திச் சேர்த்துக்கொண்டுப் பலவகையாலுந் திருப் பல்லாண்டு பாடியருளினார்.

பின்பு அரசனையும் விசேஷகடாக்ஷஞ்செய்தருளி "வில்லி புத்தூ ருறைவான்றன் பொன்னடி" காண்பதோ ராசையினால் மீண்டு ஸ்ரீ வில்லிபுத்தூரிலெழுந்தருளிக் கிழிச்சீரையிலிருந்த தனத்தை வடபெருங் கோயிலுடையான் திருமுன்வைத்துத் தண்டன் சமர்ப்பித்துத் தாஞ்செய்துகொண்டிருந்த "கானார் நறுந்துழாய்க் கைசெய்த கண்ணியும்" "செண்பக மல்லிகை யோடு செங்கழுநீ ரிருவாட்சி" யுமான திருமாலை கைங்கர்யத்தி லிழிந்து வடபெருங் கோயிலுடையானை யுகப்பித்து, அவன் கிருஷ்ணாவதாரத்தில் ஸ்ரீமாலாகாரரை யிரந்து பூமாலை சூட்டிக் கொண்டவநந்தரம் மல்லரோடு பொருது வெற்றி கொண்ட தோளுக்குப் பல்லாண்டு பாடினவராகையாலே, அவ்வவதார விசேஷத்தில் ப்ரவணராய்க் "கண்ணன் கேசவநம்பி பிறந்த னில்" என்று அவதரித்தது முதலாக "வென்றிசேர்பிள்ளை நல்விளையாட்டையும்" என்னுமவனுடைய வதிமாநுஷ சேஷ்டிதங்களைத் தாமுங் கோபஜன்மத்தை யாஸ்தானம் பண்ணி யநுசரித்து, அவனுடைய ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணங்களில் ஆழங்காற்பட்டு அதிப்ரீதராகிப் பெரியாழ்வார் திருமொழி என்கிற திவ்ய ப்ரபந்தத்தையுந் திருவாய்மலர்ந்தருளிச், சாயை போலப் பாடவல்ல ஸஜ்ஜநங்களுக்குபகரித்தருளி உலகத்தை வாழ்வித்தருளினார்.

திருநக்ஷத்ரத் தனியன்.

மிதுநேஸ்வாதிஜம் விஷ்ணோ ரதாம்ஸந் தன்விநஃபுரே,
ப்ரபத்யேஸ்வஸுரம் விஷ்ணோ விஷ்ணுசித்தம் புரஸ்ஸிகம்.

ஸ்ரீபெரியாழ்வார் திருவடிகளேசரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

☞ பெரியாழ்வார் திருவவதார வருஷம்-௪௲௮௪-க்குச் சரியான பஹுதான்ய வருஷம்.

ஸ்ரீ ஆண்டாள் வைபவம்.

தனியன்கள்.

வெண்பா.

ஸ்ரீஉய்யக்கொண்டா ரருளிச்செய்தது.

அன்ன வயற்புதுவை யாண்டா ளரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதிகம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாணற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்.

சூடிக் கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடி யருளவல்ல பல்வளையாய்—நாடிநீ
வேங்கடவற் கென்னை விதியென்ற விம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

"தேவஸ்யமஹிஷீந் திவ்யாமாதௌ கோதா முபாஸ்மஹே யன்மௌலிமாலிகாம் ப்ரீத்யாஸ்வீகரோதிஸ்வயம் ப்ரபு:" என்கிறபடி ஸ்ரீய:பதியான சர்வேசுவரன் பூமிப்பிராட்டியின் ஹம்சையான எந்த கோதாதேவியினுடைய திருக்குழலில் சூடிக் கொடுத்த பூமாலையைப் போக்யமாக வங்கீகரித்தானோ அந்த வேதமஹிஷியை ஆசிரயிக்கிறேன் என்றும் "ஸவிஷ்ணு சித்தஸ் துளஸீவ நாவநிங்கநித்ர வக்த்ரேணநிகாதயந் கலௌ பப்ரே மூஹூர்த்தேபப்ரிமாசிபல்குநீ ப்ரதீததாரே துளஸீவநாந்தரே புவோபவத்காஞ்சன பாலகன்யகா பூம்யம்சகாம் வீக்ஷ்யவிஸிஷ்மியேமுதா" என்கிறபடி விஷ்ணுசித்தரென்கிற பெரியாழ்வார் தமது துளசிவனத்தில் களைகொத்திக் கொண்டிருக்கையில் ஆடிமாதம் பூரநட்சத்ரத்தில் நல்லமுஹூர்த்தத்தில் மண்ணில் அங்கொரு திருத்துழாய் வேரின்கீழ் சுவர்ண கவசத்திற்குள் † காஞ்சனமயமான பசுங்குழந்தையாய் ப்ரகாசித்துக்கொண்டிருந்து சேவைதந்தருளிய பூதேவியின் ஹம்சையான கோதாதேவியைத்தர்சித்து ஆச்சர்ய மடைந்தாரிறே என்றும் இவரவதார விசேஷத்தைத் திவ்ய சூரிசரிதையில் சொல்லிற்று.

---

† காஞ்சனம்-பொன்.

(†) எங்ஙனேயென்னில் "அயதேக்ருஷதஃ க்ஷேத்ரம் லாங்கலாதுத்திதா மயாக்ஷேத்ரம் ஸோதயதாலப்தா நாம்நாஸீதேதி விஶ்ருதா பூதலாதுத்திதாஸா துவ்யவர்த்ததமமாத்மஜா" என்கிறபடியே ஸ்ரீஜனகராஜன் யாகசாலைக்காக ஸ்தலந்திருத்த நிலம்

(†) மற்றொருபிரதியில்:—ஸ்ரீமந்நாராயணன் திருப்பாற்கடலில் யோகநித்திரையினின்றும் நீங்கி ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவிகளாகிய பிராட்டிமார் மூவரோடு நவரத்நகசிதமாகிய சிங்காஸனத்தின்மேலெழுந்தருளியிருக்க, அப்பொழுது பிராட்டிமார்மூவருள் பூப்பிராட்டியாரெழுந்து எம்பெருமான் திருவடிகளை வணங்கிக் கைகுவித்து நின்றுகொண்டு ஸ்வாமி! பூலோகத்திலுள்ள ஆத்துமாக்களில் யாரிடத்தில் தேவரீர் பிரியங்கொள்வீரென்று கேட்க ஸ்ரீமந்நாராயணன் பிராட்டியாரது திருமுகத்தைக் குளிரநோக்கிப் புன்னகைகொண்டு, அநித்யமாகிய ப்ரபஞ்சத்தில் பற்றுவையாமல் நித்யமாகிய நமது பரமபதத்தினிடத்துப் பற்றுவைத்து இடைவிடாது பக்திபூர்வமாக நம்மை நினைத்து நமது விஷயமாகப் பாமாலையும் பூமாலையுந் தொடுத்துச் சாத்துகின்ற பாகவதர்களிடத்தே பிரியங்கொள்வோமென்று திருவாய் மலர்ந்தருளினன்.

அதுகேட்டுப் பூதேவியார் ஸ்வாமி! அடியேனும் அந்தப்ரகாரந்தேவரீர் விஷயமாகக் கைங்கர்யங்களைத் திருவுள்ள முகக்கும்படிச்செய்து வந்தாலல்லவோ இத்தேக மெடுத்ததனாலாகிய பயனைப் பெற்றுக்கொள்வேன்;ஆதலால் அடியேனையும் அவ்வாறு செய்வித்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க, ஸ்ரீமந்நாராயணன் பூலோகத்தில் நமது பெரியதிருவடி அம்சராகிய விஷ்ணுசித்தரென்னும் விப்ரோத்தமர் ஸ்ரீவில்லிபுத்தூரென்னுந் திவ்யதேசத்தி லிருந்து கொண்டு அந்த கைங்கர்யங்களைச் செய்து வருகின்றார்; அவருக்குப் புத்ரியாகவுதித்து உன்னுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொண்டு வருவாயென்றருள; அதுகேட்டுத்தேவியார் அதிகஆனந்தமடைந்து ஸ்வாமி வில்லிபுத்தூரென்னுந் திவ்யதேசத்தின் வரலாறும் அவ்விடத்தி லெழுந்தருளி யிருக்கின்ற தேவரீரது லீலையும் அந்த பாகவதரது பெருமையும் அடியேனுக்குத் தெரிவித்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்தார்.

ஸ்ரீமந்நாராயணன் திருவுளமுவந்து பூலோகத்தில் ஜம்பூத்வீபத்தில் தக்ஷிணதிசையிலுள்ள பாண்டியதேசத்தில் ஒரு திவ்யக்ஷேத்திர முண்டு, அதனிடத்து அர்ச்சாவதாரமாகவிருந்த நாம் பூர்வம் உனக்குத் துன்பமுண்டாக்கிய இரணியாக்ஷனை வராகவடிவங்கொண்டு வென்றுஉனக்குப் பலதர்மங்களையும் உபதேசம்பண்ணினோம். அப்போது நீ யிவ்விடத்தில் இவ்வுருவோடு எழுந்தருளியிருக்க வேண்டுமென்று நம்மை ப்ரார்த்தித்தபடி நாம் அத்தலத்தில் வராகவுருவத்துடன் அனேககற்பங்களுன்னோடு கூடியிருந்தோம். பின்பு அந்தஸ்தலம் ஆரண்யமாக அனேககால மிருந்

உழுகையில் அந்தப்படைச்சாலிலே * ப்ராதுர்ப்பவித்தருளிச் சீதையென்னுமபிதானம்பெற்று அவனுக்குப் புத்ரியாகவளர்ந் தருளின "பார்வண்ணமடமங்கை" என்கிற பூமிப்பிராட்டி வேயர் குலத்திலு மொருகால் வளர்ந்தருளத் திருவுள்ளம்பற்றி, ஸ்ரீவில்

* ப்ராதுர்ப்பவித்தருளி - வெளிப்பட்டு.

தது. அதில் ப்ருகு மார்க்கண்டேயர் முதலானரிஷிகள் இருந்து நம்மிடத்தில் அன்புவைத்துத் தவஞ்செய்யும்போது காலநேமி யென்னும் ராக்ஷஸன் அவர்கள்செய்யுந் தவத்துக்கு இடையூறுசெய்ய, அவர்கள் நம்மைக் குறித்து முறையிட,நாம் திருப்பாற்கடலைவிட்டுவந்து அவனைச்சக்ராயுதத்தால் ஸம்ஹரித்தோம். பின்பு அவனது இரத்தந்தோய்ந்திருந்த சக்ரத்தைக் கழுவும்படி வருணனுக்கு ஆக்யாபித்தோம். அவன் கங்கை-யமுனை ஸரஸ்வதி என்னு மூன்றுநதியையும் அவ்விடத்திலழைத்து அவைகளால் சக்கரத்திற்படிந்த இரத்தத்தை அகற்றினன். அன்றுதொட்டு அந்தத் தீர்த்தமூன்றும் திருமுக்குளமென்று பேர்பெற்று அந்த க்ஷேத்திரத்தி லிருக்கலாயிற்று. அந்த ரிஷிகள் எங்கள்நிமித்தந் திருப்பாற்கடலைவிட்டு எழுந்தருளியபடி இந்தக்ஷேத்திரத்தில் சேஷசாயியாய் ஸேவை ஸாதித்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவ்வாறே வடபத்ரத்தில் சேஷசயனத்தின்மேல் படுத்திருக்கும் பாவனையாக ஸேவைஸாதித்தோம்.அதனால் அத்தலத்திற்கு வடவேசுவரபுரமென்றும் நமக்குவடவேசுவரனென்றும் பெயருண்டாயிற்று. அவ்வாறு அறுபத்துநாலு சதுர்யுகம் தேவர்கள் முனிவர்கள் ஆராதிக்க உன்னோடும் லக்ஷ்மியோடுங் கூடியிருந்தோம். இவ்வாறு பலயுகங்கள் சென்றபின்பு திரும்பவும் ஆரண்யமாய்ப் புத்தூரென்று ஒரு பேருண்டாய் அதன் ஸமீபத்தில் வேடர்கள் அனேகர் குடிகொண்டு அவர்களே அவ்வூருக்கு அதிகாரிகளாகவிருந்தார்கள். அவ்வேடக்குடியில் மல்லியென்னும் ஸ்திரீயினிடத்தில் வில்லியென்றுங் கண்டனென்றும்இரண்டுபிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் வலியுள்ளவராகையால் அவ்வேடச்சேரியில் அதிகாரிகளாக விருந்தார்கள்.

அவ்வாறிருந்தவர்கள் ஒருநாள் வேட்டையாடப் புறப்பட்டு அந்த ஆரண்யத்திற்குட்புகுந்து நாம் புதரால் மூடப்பட்டுச் சயனித்திருந்த இடத்திற்குச் சமீபமாக வரும்போது அங்கொரு புலியைக்கண்டு இளையவனான கண்டனென்பவன் அதைத் துரத்தியோட, அப்புலியானது ஓர் புதர்மறைவிற் பதுங்கிநின்று அவன் சமீபத்தில் வரக்கண்டு அவன்மேற் பாய்ந்து கொன்றுவிட்டது. அதையறியாமல் தமயனான வில்லியென்பவன் தம்பியைத் தேடிப்போய்த் தம்பி யிறந்து கிடக்கிறதைக்கண்டு அழுதழுது கீழ்விழுந்து புரண்டுபுரண்டு மூர்ச்சையாயினன். அவன்கனவில் நாம்போய் அப்பா! இவ்விடத்தில் நாம் சேஷசயனத்தில் சயனித் திருக்கிறோம். நீ நமக்குக் கோயில் முதலானவைகளைக் கட்டுவித்து நால்

லிபுத்தூரிலே வேதக்கோனை பெரியாழ்வார் ஒருநாள் தமது திருநந்தனவனத்தில் திருத்துழாய்க்குக் ‡ கொட்டெடுத்துக் கொத்திக்கொண்டுவராநிற்க, அங்கொரு திருத்துழாய்வேர் மண்ணின்கீழ் "ஸித்தாநாம் ஸரதாம்கலாவ பகமேவர்ஷே நளாக்

‡ கொட்டு-களைகொத்துங் கருவி.

வகைக்குடிகளையும் ஏற்றி நித்தியமாகப் பிரதிதினந் திருவிழா முதலியவை நடத்தென்றுசொல்ல; அவனும் ஸ்வாமி! புலியினாலிறந்த என்தம்பியை எழுப்பிக்கொடுத்து வேண்டிய திரவியங்கள் வரும்வழியுங் காட்டியருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க; அதற்கு நாம் உன்தம்பி உயிர்பெற்றெழுவான் நீயுமவனுமாகக்கூடி அவனைக்கொன்ற புலி ஓர் குகையி லிறந்து கிடக்கின்றது. அந்தக்குகைக்குள்ளிருக்கின்ற அளவிறந்த திரவியங்களை எடுத்துக்கொள்ளுங்களென்று ஆக்கியாபித்தோம். அவனுங் கண்விழிக்கத் தம்பியும் உயிர்பெற்றெழுந்துவரக்கண்டு அதிசயமடைந்து ஸந்தோஷத்துடன் தம்பிக்குத் தான் கண்டகனவைத் தெரிவித்து அவனுடன் சிலதூரம் போகும்போது அங்கு ஒருகுகையில் அந்தப்புலியானது அம்புபட்டு இறந்து கிடக்கின்றதைப்பார்த்து ஆச்சர்யமடைந்துஅக்குகையிலுள்ள அளவிறந்த திரவியங்களைக்கண்டு ஸந்தோஷித்து அந்தக்குகையை முற்றுகையிட்டுக் காவல் செய்து பின்பு ஸ்வாமி எங்கே சயனித்திருக்கின்றனரென்று தேடிக்கொண்டுபோக அங்கோரிடத்தில் ஓர் ஆலவிருக்ஷத்தினடியில் மூடிய புதரினிடமாக நம்மைக்கண்டு ஆனந்தமடைந்து அந்த திரவியங்களைக்கொண்டு நமக்கு மண்டபம், மதில், கோபுர முதலியவைகளுங் குறைவில்லாமல் கட்டுவித்துத், திருவீதி முதலானவைகளும் ஏற்படுத்திப் பின்பு அதையடுத்துக் கொஞ்சந்தூரத்திலுள்ள புத்தூரென்னும் ஊரிலிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் முதலானவர்களை வருவித்து அதில் குடியேற்றித் திருவாராதனந் திருவிழா முதலானவைகளை விபவமாக நடப்பித்துக் குடியேறிய ப்ராமணர் முதலானவர்கள் முன்னிருந்த புத்தூருந் தன்பெயராகிய வில்லியென்பதுஞ்சேர்த்து அவ்வூர்க்கு வில்லிபுத்தூரென்றும், பழமையாகவிருந்த க்ஷேத்ரத்தைத் தான் புதுக்கியபடியால் புதுவையென்றும் பேர் விளங்கவைத்தான். இவ்வாறு திருவிழாமுதலானசிறப்புகளைத்தேவர்களுங்கண்டு அதிசயிக்கும்படிநெடுநாள்செய்வித்துவந்து பின்பு தன் தம்பியுடன் ஸ்ரீவைகுண்டம்பெற்றான்.

இப்பால் பட்டர்பிரானாகிய விஷ்ணுசித்தர் உலகத்தவரைத் திருத்தும்பொருட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்து ஐந்துவயதிலேயே நித்யவஸ்து நாமென்று அறிந்து அதுதொட்டு நந்தவனங்கள்வைத்துவளர்த்து நமக்குப் பூமாலைகட்டிச் சாத்திக்கொண்டு பாண்டியனது ஸபையிற்கட்டிய பொற்கிழியை யறுத்துப் பரசமயங்களைக் களைந்து ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்த ஸ்தாபனஞ்செய்து அரசன்முதலான ஸமஸ்தரையுந்திருத்தி

யேரவெள,யாதேகர்க்கடகம் விதாவுபசிதேஷஷ்டேஹநி ஸ்ரீமதி, நக்ஷத்ரேய மதைவதேக்ஷிதிபுவோவாரே சதுர்த்யாந்திம்தள, கோதாப்ராதுரபூதசிந்த்ய மஹிமா ஸ்ரீவிஷ்ணுசித்தாத்மஜா" என்கிறபடியே கலியாப்தந் தொண்ணூற்றெட்டில் நிகழ்ந்த நளவருஷத்தில் கர்க்கடக சூர்யப்ரவேச காலமாகிய ஆடிமாசம் ஆருந்திகதி சுக்லபக்ஷஞ் சதுர்த்தசி செவ்வாய்க்கிழமைகூடிய பூரநக்ஷத்ரமாகிய சுபதினத்தில் ஸ்ரீபூமிப்பிராட்டியின்ஹம்சையாய்ச் சுவர்ணகலசத்தினுள் அதிகவற்புதமான திருவுருக்கொண்டு அமர்ந்து ப்ரகாசிக்க, அவர் கண்டு விஸ்மிதராய், மின்னனைய நுண்ணிடையாளான இந்த ஸ்த்ரீரத்நத்தை அதிப்ரீதியுடன் தனக்குப் புத்ரியாகவெடுத்துக்கொண்டு "சுரும்பார்குழற்கோதை" என்று திருநாமஞ்சாற்றித் திருமகள்போலே யொளிபெற வளர்த்து வந்தார்.

இங்ஙனமிருக்கையில் இந்நாச்சியார் தமது திருத்தகப்பனராகிய பெரியாழ்வார் வடபெருங்கோயி லுடையானுக்காகத் திருமாலை கட்டிப்போருகிறவிதத்தை அதிகநுட்பமாகக் கவனித்துக் கற்றுச் சிலநாளைக்குமேல் தாமுமவரைத் தொடர்ந்து திருநந்தவனத்துக்குப்போய்ப்பூக்கொய்துப்*புட்டிலிற்சேர்த்துக்கொண்டுவந்து செண்டுமாலை, குழல்மாலை, முடிமாலை, கிளிமாலை, தொங்கல்மாலை, உலாமாலை,வெற்றிமாலை முதலிய நானாவிதமாலைகளைத் தகப்பனர் மகிழ்வடையும்படிக் கட்டிக்கொடுத்துவந்து,நாளுக்கு

* புட்டில்-புஷ்பக் கூடை.

மற்றவர்களையுந் திருத்தும்பொருட்டு நமது லீலைகளையமைத்துச் செந்தமிழாற் பாமாலைகளுந் தொடுத்துச் சாத்திவருகின்றாரென்று திருவாய் மலர்ந்தருளினர்.

பூதேவியார் அதுகேட்டு ஆனந்தமடைந்து எம்பெருமானிடத்தில் விடை பெற்றுக்கொண்டு தேவர்கள் முனிவர்கள் பூமாரிபொழிந்து ஸ்துதிக்கவும்ஸ்ரீமந்நாராயணனுடைய திருவுள்ளந்தொடர்ந்துவரவும்உலகத்திலுள்ள ஜீவாத்மாக்களெல்லாங் கடைத்தேறவும் அனேக அற்புதங்கள்உண்டாகி விளங்கவும் ஸ்ரீவில்லிபுத்தூரிலே விஷ்ணுசித்தராகியபெரியாழ்வார் வைத்து வளர்த்துவருகின்ற நந்தவனத்திலுள்ள திருத்துழாயினிடமாகக் கலியுகம்தொண்ணூற்றேழுக்குமேற் செல்லுகின்ற நளவருஷம் ஆடிமீ சுக்லபக்ஷம் சதுர்த்தி செவ்வாய்க்கிழமைகூடிய பூரநக்ஷத்திரத்தில் பூப்பிராட்டியார் அம்சமான தாம் அவதாரஞ்செய்து கோடிசூரிய ப்ரகாசம்போற் ப்ரகாசித்திருந்தார்.

நாள் பெருமாள்பக்கல் ப்ரேமையதிகரிக்கப்பெற்று ஆழ்வாரில்லாத அவசரங்களிலே கட்டிவைத்திருக்கும் மாலைகளையெடுத்துச் சூடிக்கொண்டு இந்த வடபெருங்கோயி லுடையானுக்கு நேரொவ்வா திருக்கிறேனோ? ஒத்திருக்கிறேனோ? என்னுஞ் சொல்விளைத்துக், * காரைபூண்டு கூறையுடுத்துச் சூடகமணிந்து தோள்வளை தரித்துக் கைவளைகுலுக்கிக் காலிற் சிலம்பும் பாடகமுமணிந்து அஞ்சனந் தீட்டிக் கோவைச்செவ்வாய் திருத்தி அசைந்தசைந்து அவ்வொப்பனை யழகை அங்குள்ள கண்ணாடியிலேகண்டு ஹ்ருதயங் குளிர்ந்து அனந்தரங் களைந்து அவை தம்மை முன்னிருந்தபடியே வைத்துவிட்டு வேறு கைங்கர்யத்திலீடுபட்டிருப்பார்.

இப்படித் தினந்தினமும் நடந்தேறிவருவதைப் பெரியாழ்வா ரறியாதவராகியே புட்டிலிலிருக்கும் புஷ்பங்களை யெடுத்துக்கொண்டு போய்ப் பெருமாளுக்குச் சமர்ப்பித்துக் கொண்டிருக்க, அந்த புஷ்பங்கள் பெருமாள் திருமேனியில் சாத்தின வளவிலே என்றுமில்லாத நறுமணத்தை வீசத்தலைப்பட்டன; அதைக்கவனித்த அர்ச்சகருந் திருமுற்றத்தாரும் ஆழ்வாருடைய கைங்கர்யத்தின் வாசிதான் இப்படி மணங்கமழ்ந்து போருகிறதென்று சொல்லி அவர் திருவடிகளிலே மிகவும் பக்தியுக்தராயிருந்தார்கள்.

இப்படி யிருக்கையில், வடபெருங் கோயிலுடையான் தனது நிர்ஹேதுக கடாக்ஷத்தாலே இந்த ரஹஸியத்தை வெளிகாணச்செய்து நாச்சியாருடைய அவதார விசேஷமிருக்கும்படியை யாவருமறிந் துஜ்ஜீவிக்கலாம்படித் திருவுள்ளம்பற்றி, ஒருநாள் இந்தநாச்சியார் அவனுக்காக வைத்திருந்த மாலைகளைச் சூடிக்கொண்டு கண்ணாடியில் ஈடழகு பார்த்துக் கொண்டிருக்கையில் நினைவைக் கிஞ்சிற்று மாற்றிவிட, அவ்வளவிலே தகப்பனான பெரியாழ்வாரங்கெழுந்தருளிப் பார்த்து வியப்படைந்து, குழந்தாய்! அழகிது நீசெய்தது, அடிமைக்கவத்தம் விளைவதே! என்று கடிந்து விரைவில் திருநந்தனவனம்புக்குப் பூக்கொய்துவந்து மாலைகட்டிக்கொண்டுபோய்ச் சன்னிதியில் ஸமர்ப்பிக்க, அர்ச்சகர் வழக்கப்படி யம்மாலைகளை எடுத்துச் சாத்தப்

* காரை — கண்டாபரணம்.

போகையில், வடபத்ரசாயி முகத்திருப்பங்கொண்டு சேவை சாதித்தான்; மாலைகளும் பூர்வம்போலே மணங்கமழாதிருந்தன. அதுகண்டு அர்ச்சகர்முதலான கோயிற்பரிகரத்தார் * விஸ்மிதராய்விட, அன்றிரவில் வடபத்ரசாயி ஆழ்வாருடைய ஸ்வப்நத்திலெழுந்தருளி ஏதுகாண்! இற்றைக்கு நீர் நமக்குச்சிறிதும் மணமில்லா மலர்மாலைகளை வருத்தீரென்று வினவியருள; ஆழ்வாரும், எந்தையே! வழக்கப்படி வருத்து வைத்திருந்த நறுமண திருமாலைகளைத் தேவரடிமைச் சிறுபெண் வழங்காவகை கண்டனள்; அதனைப் பொறுத்தருள வேண்டுமென்று திருவடிகளைப் பிடித்துக்கொண்டு ப்ரார்த்திக்க, வடபத்ரசாயி ஆழ்வாரை நோக்கி, அழகிது நீர் சொன்னது, அவளை நமக்குச் "சூடிக்கொடுக்கவந்த சுடர்க்கொடி" யென்றறியீரோ? இனி அவள் தீண்டிமுடித்துக் கொடுக்கும்மாலையே நாம் விருப்புற்றதென்றறிந்து கொள்ளுமென் றருளிச்செய்துவிட்டு மறைந்து, சன்னிதி முதலிகளுக்கு மிப்படியே ஸ்வப்னமருளிவிட்டுப் போயினன்.

அனந்தரம் ஆழ்வார் நித்ரைகலைந் தெழுந்து விஸ்மிதராய் வீற்றிருக்கையில், சன்னிதிகாப்போரோடிவந்து தங்கள் ஸ்வப்நமிருந்தபடியை விண்ணப்பஞ்செய்ய, இவருந்தாம்கண்டதை யவர்களுக் கறிவித்து, இதனை யாராயக்கடவோமென்று, அன்றெடுத்துவந்து கட்டியபுஷ்பங்களை நாச்சியார் திருமுன்புவைத்து இவற்றைச் சூடிக்கொடுக்கவேண்டுமென்றிரக்க, அவ்வண்ணமே நாச்சியாருஞ்செய்ய, அம்மாலைகளை யெடுத்துக்கொண்டுபோய்ச் சுவாமிக்குச் சமர்ப்பித்தார்; அவைதம்மை அர்ச்சகரெடுத்துச் சாத்தப்போகையில் வடபத்ரசாயி,முன்னாள் திருப்பிக்கொண்ட தன்னுடைய திருமுகத்தை அந்நாள் செவ்வேதிருத்தித் திருக்கண்களையலர்த்தி முத்தனைய வெண்முறுவல்செய்து மகிழ்வெய்திச் சேவை தந்தருளினன். அப்போது அர்ச்சகருங் கோயில் பரிகரத்தாரும் அத்யாச்சர்யமடைந்து நாச்சியார் திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்து க்ருதார்த்தராயினர்கள்; ஆழ்வாரும் பெருங்களிப்படைந்து தம்முடைய திருமகளாரை அருட்கண்களால் நோக்கி ஆனந்தபாஷ்பம் பெருகப் புளகீக்ருதகாத்ரராய்த் திருவாய்திறந்து, என்னை ஆண்டாளிவளே!! என்றருளிச்செய்து, நாளுக்குநாள் ப்ரீதிமேற்பட்டு, இவள் பின்னைகொல்! நிலமா

* விஸ்மிதராய் — ஆச்சரிய முற்றவராய்.

மகள்கொல்! திருமகள் கொல்! இங்ஙன மவதரித்திருப்பதென்று விஷேப்ரதிபத்தி செய்துப்போந்தார்.

அதன்பின்பு, இந்நாச்சியார் ஈட்டுப்பெண்களோடு கலந்து தெள்ளியமணலால் சிறுவீடுகட்டி விளையாடுகையில் அழகியமணவாளன் பால்யனாய்வந்து திருவடியாலதைச் சிதைத்தோட "இன்றுமுற்று முதுகுநோக விருந்திழைத்த விச்சிற்றில்" தீமை செய்யுஞ் சிரீதராவெங்கள் சிற்றில்வந்து சிதையேலே" என்று பாசுரமிட்டு அந்த அவசரம் நீங்கினவாறே அவனுடைய கல்யாணகுணாதிசயங்களை வாயினாற்பாடி மனத்தினாற்சிந்திப்பது தொடக்கமான ப்ராவண்யத்தால் "அவனை விட்டகன்றுயிராற்றகில்லா" என்கிறபடியே பெரிய † அபிநிவேசத்தைப் பண்ணிக்கொண்டு வடபெருங்கோயிலுடையானோடே தழுவி முழுகிப் பரிமாறவேணுமென்று செல்ல; அர்ச்சாவதார சமாதியாகையால் நினைத்தபடிக் கவன்முகங்காட்டாமையாலே மிகவுநொந்து, அவனோடு பரிமாறப்பெற்றாருண்டோ வில்லையோ வென்றாராய்ந்து பார்த்துத், திருவாய்ப்பாடியில் பிறந்தபெண்கள் யதாமனோரதம் அவனோடனுபவிக்கப் பெற்றதை யறிந்து, அதுவுங் காலாந்தரத்திலாகையாலே அதற்குத்தவப்பேற்றிலோ மென்றுருகி, அவனுலாவிப்போன அடிச்சுவடும் அவனும் பெண்களுமாய்க் குளித்துத்திளைத்த யமுனையும் அவனெடுத்த கோவர்த்தனமுங் கிடந்தனவாகில் அவற்றைப்போய்க் கண்டாகிலுந் தரிப்போமென்று பார்த்து, அதற்குந் தனக்குப்போக பலமில்லாமையாலே அவற்றையனுசந்தித்துக் காலாழ்ந்து கண்சுழன்று நெஞ்சழிந்து ‡ அவஸந்நையாய், ஸ்ரீஜனகராஜன் றிருமகளைப் போலே வில்லென்றொரு அவதி பெறுதலும் நப்பின்னை நங்கையைப்போலே எருதென்றொரு அவதி பெறுதலுஞ் செய்யப்பெறாமையாலே தளர்ந்து, இனி உய்யு முபாயமேதென் றாராயப்புக்கு, க்ருஷ்ணனும் பெண்களுமாய்க் குரவைகோத்து அதிரஸம் செல்லா நிற்க, ப்ரீதியாலே குமிழி நீருண்டு இனி நற்கேடு கெட வொண்ணாதென்று அந்தரஸம்மாறுகைக்காக, அவனந்தப் பெண்களைப் பிரிந்து ஒளிக்க "துஷ்டகாளி யதிஷ்டாத்ர க்ருஷ்ணோ ஹமிதிசாபரா" என்கிறபடியே க்ருஷ்ணவிரஹத்

† அபிநிவேசம் – அபிப்பிராயம்.

‡ அவஸந்நையாய் – மூர்ச்சித்தவளாய். (மெய்மறந்தவளாய்.)

தைச் சகியாமல் அவனையே யநுகரித்துத் தரித்தார்களென்று சிலதார்மீகர் ப்ரசங்கிக்கக் கேட்டு அவர்களைப்போலே தாமும் மார்கழி நீராட்டமென்கிற நோன்புசெய்யப் புகுந்தார்.

தாம் ப்ராம்ஹணியா யிருக்கையிலும் (யாகத்திலே தீக்ஷித்தவர்கள் * தேவதத்தாதி நாமங்களைத்தவிர்ந்து அது முடியுந்தனையும் யஜமானனென்றும் அத்வர்யுவென்றும் ஹோதாவென்றும் பெயர்கள் வஹித்திருப்பதுபோல) ஸ்ரீவில்லிபுத்தூரைத் திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்களை இடைப்பெண்களாகவும், தாம் அவர்களிலொருத்தியாகவும்,வடபெருங்கோயிலை நந்தகோபன் திருமாளிகையாகவும், உள்ளுறங்குகிறவனை க்ருஷ்ணனாகவும் அநுசந்தித்துத்,திருவாய்ப்பாடியில் தம்முடைய திருவுள்ளங் குடிபோய்ப் † பாவனா ப்ரகர்ஷத்தாலே § அநுகாரம் முற்ற, இடைப்பேச்சும் இடை நடையும் இடைமுடியுமுடையளாய், நிகில உபநிஷத்ஸாரமான (‡) திருப்பாவை முப்பதும் பாடியருளி,நோன்புநோற்றும், நாச்சியார் திருமொழியென்னும்

* அதாவது யாகஞ்செய்யப்புகுந்தோர் அதுதொடங்கி முடியுமளவும் தங்களுக்கு வேறுபெயர் வைத்துக்கொள்வது விதியாதலின் அதுபோலவே நாச்சியாருஞ் செய்யத் துணிந்தார்.

† பாவனா ப்ரகர்ஷத்தாலே - மேன்மையானபாவனையாலே.

§ அநுகாரம் - பாவனை.

(‡) மற்றொருபிரதியில்:—

மார்கழித் திங்களென்று தொடங்கித் திருப்பாவை முப்பது பாட்டாகப்பாடி எம்பெருமான் தம்மையணைதற்கு உபாயஞ் செய்யவேண்டுமென்று மன்மதனை வேண்டி அதுதோன்ற தையொருதிங்களென்று தொடங்கி மேகத்தைத் தூதுவிடல், திருமாலிருஞ்சோலைப் பெருமானை வழிபடல், மால்செய்வகையொடு மாற்றமியம்பல், திருவரங்கத்துச் செல்வனைக்காமுறல், சீதரனிருந்துழிச் செலுத்தவேண்டல், அழகியமணவாளன் அணிபொருள்கொண்டு அவலந்தீர்ப்பீரென்றல், ப்ருந்தாவனத்துப் பரந்தாமனைக்காணல், எம்பெருமான் தன்னைக் கனவில் பாணிக்கிரஹணம்பண்ணல் என்னு மிவைகளை யமைத்துத் தனித்தனிப் பத்துப் பத்துப் பாடலாகப் பாமாலைபாடி ஸ்ரீரங்க நாதனிடத்தில் அளவிறந்த காதல் கொண்டு இருந்தார்.

ஒருநாள் இவர் பெரியாழ்வாரைப்பார்த்து அடியேன் ஸ்ரீரங்கநாதனை ஸேவிக்க விரும்பினேனென்று சொல்ல ஆழ்வாரும் அதை வடபெருங்கோயிலானுக்கு அறிவித்து அவரது ஆக்ஞைப்படி கோதையாரைப்

ப்ரபந்தத்தை யருளிச்செய்தும் [திருத்துழாயானது பரிமளத்தோடேகூடி முளைக்குமாபோலே ஆஜந்ம (பிறந்ததுமுதல்) பால்ய யௌவனுவஸ்தைகள்தோறும் பரபத்தி பரக்ஞான பரம பக்திகளை யுடையராய்க்கொண்டு] அவன் விஷயமான காமபஜனுதிகளைப் பண்ணி வாழுங்காலத்திலே "பதிஸம்யோக ஸுலபம் வயோத்ருஷ்ட்வா சமேபிதா, சிந்தார்ணவகதஃ பாரந் நாஸஸாதாப்லவோயதா" என்கிறபடியே ஸ்ரீ ஜனகராஜன் பிராட்டிக்குப் பர்த்ருஸம்ஸ்லேஷ யோக்யமான பருவம் நெருங்கினவளவிலே, சாகரத்தில் நழுகின ஒருவன் கரையேறுவதற்கு ஓரோடத்தை யபேக்ஷித்து நையுமாபோல, இந்த பொற்கொடிக்கேற்ற ஓர் பதியை நாம் கண்டு கொடுக்கக் கால மெங்ஙனங் குறுகுமென்று சிந்தார்ணவகதனு (எண்ணமாகிய கடலுளழுந்தினவனு) யினதை யொத்துப் பெரியாழ்வாரும் இந்த நாச்சியாருடைய விவாஹ யோக்ய பருவத்தைக்கண்டு வ்யாகுலாந்தஃகரணராக, அவர் கருத்தை யறிந்த நாச்சியார் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் நான் வாழகில்லேன்" என்ன; ஆழ்வார் பின்னை எங்ஙனே யென்ன; அதற்கு "மற்றொருவர்க் கென்னைப் பேசவொட்டேன் மாலிருஞ்சோலையெம் மாயவற்கல்லால்" என்கிறபடியே அவன் முகத்தன்றி விழியேனென்ன; ஆழ்வார் நூற்

பொற்சிவிகையி லேற்றிக்கொண்டு ஸ்ரீரங்கத்தைக்குறித்துத்தென்திருக்காவேரிக்குச் சமீபத்தில் எழுந்தருளும்போது நாச்சியார் இதுதொட்டிறங்கி நடந்துபோகவேண்டுமென்று நினைக்க எம்பெருமான் நாச்சியாருள்ளத்தையறிந்து, நடந்தால் வருந்துவாளென்று தமதருளினுல் அந்த க்ஷணமே யொருவருமறியாதபடி ஸந்நிதிக்கு வரும்படித் திருவுளங்கொண்டருள நாச்சியாரும் அப்படியே ஸந்நிதிக்கெழுந்தருளி அழகிய மணவாளனைச் சேவித்து ஸமீபத்தில் வீற்றிருந்தார். சிவிகையெடுக்கின்றவர்கள் பாரந்தோன்றுமலிருப்பதறிந்து அதிசயித்து ஆழ்வாரிடத்து விண்ணப்பஞ்செய்ய ஆழ்வாருஞ் சிவிகையைத்திறந்து திகைப்படைந்து அந்த க்ஷணமே விரைந்து ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியிற்சென்று கண்களில் நீர் வடியநின்று எம்பெருமானே எமது அரும்பொருளாகிய கோதையாரைத் தேவரீரே மாயஞ்செய்து மறைத்ததாகத் தோன்றுகின்றது; அவரைக் காட்டி அடியேனையும் ரக்ஷித்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க; எம்பெருமானும் ஆழ்வாரே! உமது புத்ரியாரை யிதோபாருமென்று காட்டியருள அதுகண்டு மகிழ்ந்து ஸ்வாமி! தேவரீர் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளிப் பரமபாகவதர் முதலிய பலருங் கண்டு களிப்படையக் கோதையாரைப் பாணிக்ரஹணம் பண்ணியருளவேண்டும்; அப்போது அந்த

றெட்டுத் திருப்பதியி னெம்பெருமான்களில் நீராருக்கு வாழ்க்கைப் படுகிறீரென்ன; அதற்கு அவ்வவருடைய குணாதிசயங்களைக் கீர்த்தித்தருளினால் குறிப்பிடுகிறேனென்ன; ஆழ்வாரும் வடபெருங்கோயிலுடையான் வைபவமடியாகப் பாண்டியமண்டலத்திலும், வட திருவேங்கடந்தொடங்கித் தொண்டமண்டலத்திலும், தென்றிருவேங்கடந் (திருமாலிருஞ்சோலைமலை) தொடங்கி சோழமண்டலத்திலுமுள்ள திருப்பதியி னெம்பெருமான்களின் வைபவங்களையெல்லாம் அருளிச்செய்தார்.

நாச்சியார் இவற்றைக்கேட்டு ஆனந்தபாஷ்பந் துளிக்கப் புளகீக்ருத காத்ரராய்த் தென்னரங்கத் தின்னமுதருடைய குழலழகு வாயழகு கண்ணழகுகளை மனதில்நாட்டி வ்யாகுலராய் மாலேறி மோஹித்து "வந்தானோ திருவரங்கன் வாரானோ வென்றென்றே வளையுஞ்சோரும்" என்கிறபடியே அழகியமணவாளனையே காமித்திருக்க, அவனும் நாச்சியாருடைய ஸ்வப்நத்தில்வந்து பாணிக்ரஹணம் பண்ணிப்போக, அந்த ஸ்வப்நவைபவத்தாலுண்டான களிப்பு உள்ளடங்காமல் சிந்தையைத்தூண்ட "நாளை வதுவை மணமென்று நாளிட்டுப், பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ், கோளரி வாமனன் கோவிந்த னென்பானோர், காளை புகுதக் கனாக்கண்டேன்" என்றும், "மத்தளங் கொட்ட

மணவாளக்கோலத்தை யடியேனுங் கண்குளிரக்கண்டு ஆனந்த மடைய வேண்டும் என்று ப்ரார்த்தித்து ஸாஷ்டாங்கமாகச் சேவித்து நின்றார்.

அப்பொழுது அழகியமணவாளனாகிய எம்பெருமான் ஆழ்வாரைக் கடாக்ஷித்து உமது இஷ்டப்படியே பங்குனியுத்திரத்தில் ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு வருகிறோம் நீர் கோதையாருடன் முன்னதாகப் போமென்று ஆக்யாபிக்க விடைபெற்றுப் பொற்சிவிகையில் கோதையை யெழுந்தருளப்பண்ணித் தாமும் வேறு சிவிகையி லெழுந்தருளி அனேக ஸம்ப்ரமங்களுடன் இடையிலுள்ள திவ்யதேசங்களி லெழுந்தருளிய எம்பெருமானை யடிபணிந்து ஸ்ரீ வில்லிபுத்தூரையடைந்து அந்நகரிலுள்ளவர்களெதிர்கொள்ள வடபத்திரசாயியின் ஸந்நிதிக் கெழுந்தருளி எம்பெருமானைச் சேவித்துத் தமது திருமாளிகைக் கெழுந்தருளினார். பின்பு அழகியமணவாளர் பங்குனியுத்திரத்தில் கோதையாரைப் பாணிக்ரஹணஞ் செய்துகொள்ள எழுந்தருளுவதான சுபச்செய்தியை அந்நகரத்திலுள்ள பலர்க்கும் அறிவிக்க அனைவரும் கேட்டுமகிழ்ந்து ஆழ்வார் திருமாளிகைக்குவந்து கோதையாரையும் ஆழ்வாரையும் பலமுறைஸேவித்து ஸ்தோத்திரஞ்செய்து எங்களது கண்களினால் ப்ரம்மாதி தேவர்களுக்குங் கிடைத்தற்கருமையாகிய ஸ்ரீமந்நாராயணனது மணவாளக் கோலத்தைச்

பரிசங்கம் நின்றூத, முத்துடைத் தாம நிரைதாழ்ந்த பந்தற் கீழ்" "பூப்புனைகண்ணிப் புனிதனோ டென்றன்னைக், காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன்" என்றும், "மந்திர கோடி யுடுத்தி மண மாலை, அந்தரிசூட்டக் கனாக்கண்டேன்" என்றும், மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக், கைத்தலம் பற்றக் கனாக்கண் டேன்" என்றும், "காய்சின மாகளி றன்னானென் கைப்பற்றித், தீவலஞ்செய்யக்கனாக்கண்டேன்" என்றும், "நம்மையுடையவன் நாராயண நம்பி, செம்மை யுடைய திருக்கையாற் றாள்பற்றி, அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன்" என்றும், "அரிமுக னச்சுதன் கைமேலென் கைவைத்துப், பொரிமுகந் தட்டக் கனாக்கண் டேன்" என்றும், "மங்கல வீதி வலஞ்செய்து மணநீர், அங்கவ னோடு முடன்சென்றங் கானைமேல்" "மஞ்சன மாட்டக் கனாக் கண்டேன்" தோழீ என்றும் பாசுரமிட்டுக்கொண்டு, ஒளியரங் கத்துளோங்கு மொளியுளாரான அணியரங்கத் தம்மானுக்கே தீர்ந்த காதலை யுடையராக விருந்தார்.

அவ்வளவில் ஆழ்வார் கோதைக்குத் தக்க வரன் கோயிற் பிள்ளைதா னென்றுகருதி இது கைகூடும்படி எங்ஙனேயென்று சிந்தைகலங்கிக் கண்வளர்ந்தருளத், திருவரங்கச் செல்வனார்

சேவித்து க்ருதார்த்தர்களாகும்படிச் செய்யுமுதவிக்கென்ன பிரதியுபகா ரஞ்செய்வோமென்று நாநாவிதமாக வுவந்து விடைபெற்றுத் தங்கள்தங் கள் கிரகத்திற்சென்று தங்கள் தங்கள் வீதிகளில் மலர்ப்பந்தல் சித்திரக் கொடி மகரதோரணம் முதலாகிய அலங்காரங்களைச்செய்து மாளிகை முகப்புகள்தோறும் மலர்மாலைமுதலிய மாலைகளைத்தூக்கி வாழை கமுகு முதலியவைகளை நாட்டிப் பூரணகலசங்கள் முகவிளக்குகள் கண்ணாடிகள் முதலிய அஷ்டமங்களங்களைநிரப்பித் தாங்கள்தாங்களும் ஆடையாபரண முதலிய அலங்காரங்களைச் செய்துகொண்டும் ப்ராம்ஹண போஜனமுத லிய கருமங்களைச் செய்துகொண்டும் பங்குனி யுத்திரம் எப்போது வரு மென்று எதிர்பார்த்திருந்தார்கள். இவ்வாறிருக்க எம்பெருமா னருளிய படி பங்குனியுத்திரத்தில் பெரியாழ்வார் தமது திருமாளிகையை யலங் கரித்து விவாஹஞ்செய்தற்கு வேண்டிய உபகரணங்களை யெல்லாம் நிரப்பிப் பேரிகை மத்தளந் தாளமுதலிய மங்களவாத்தியங்கள் கோஷிக் கவும் நாடகக்கன்னிகையர்நடிக்கவுங் கீதம்பாடவும் அழகியமணவாளனை யெதிர்நோக்கியிருந்தார்.

பின்பு ஸ்ரீமந்நாராயணன் ஆக்ஞைப்படி ப்ரம்ஹா ருத்திரன் தேவேந் திரன் முதலான தேவர்களுங் காந்தர்வர் கிம்புருடர் கின்னரர் சித்தர் முனிவர் முதலான பதினெண் கணத்தாரும் ஸ்ரீ வில்லிபுத்தூரையடை

அவர் ஸ்வப்நத்தி லெழுந்தருளி, ஆழ்வீர்! உம்முடைய புத்ரி யாகிய கோதையை நம்முடைய திருவரங்கந் திருமுற்றத் தேறக் கொண்டுவாரீர்; நாமே தகுதியாக பாணிக்கிரஹணம் பண்ணு கிறோமென் றருளிச்செய்துபோக, ஆழ்வாரும் நிர்ப்பரரா யிரு ந்துவிட்டார்.

அவ்வளவிலே திருவரங்கச்செல்வனார் திருமுற்றத் தடியார் களைக் கடாக்ஷித்து நம்முடைய சத்ரசாமர தாலவ்ருதாதி சகல பரிஜன பரிச்சதங்களுடனே ஸ்ரீ வில்லிபுத்தூ ரேறச்சென்று விஷ்ணு சித்தருடைய திருமகளாரான சூடிக்கொடுத்தாளை அழைத்துக்கொண்டு வாருமென்று பவளச்செவ்வாய் திறந்தரு ளிச்செய்ய; அவர்களும் நியமனப்படியே ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்று ஆழ்வாரைக்கண் டடிபணிந்து நம்பெருமாளருளப் பாடிட்டபடியை விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் அதிப்ரீதி யாய் ஆச்சர்யப்பட்டு வடபெருங் கோயிலுடையான் றிருவடி களில் விண்ணப்பஞ்செய்து விடைகொண்டு, ஆண்டாளை மணிப் பல்லக்கி லெழுந்தருளுவித்துக்கொண்டு ஸ்ரீவல்லபதேவ பாண்டி யனுஞ் செல்வநம்பியும் மற்றுமுள்ளவர்களுங் கூடிச் சேவித்துக் கொண்டுவர அகில வாத்யகோஷத்துடனே அனைவருங் காணும்

ந்து ஆழ்வாரது திருமாளிகையிற்சென்று கோதையாரையும் ஆழ்வாரை யும் வணங்கிப் பலவிதமாகப் புகழ்ந்து கோதையாரை அலங்காரஞ்செய் வித்து வடபத்ரசாயியின்கோயிலை அலங்கரித்து ஸேவித்திருந்தார்கள். இவ்வாறிருக்க கோதையார் அழகிய மணவாளனை இன்னும் எழுந்தரு ளக் கண்டேனில்லையே யென்செய்வேனென்று மனமுருகிப் பெரிய திருவடியைக்குறித்து ஸ்தோத்திரஞ்செய்ய அவர்வந்து எதிர்நிற்க அவ ரைநோக்கி என்னுயிர்த் தலைவனாகிய ஸ்ரீரங்கநாதனை நீர்போயழைத்து வரவேண்டும்; அப்படிச்செய்தால் நாமும் அவருமிருக்கின்ற ஆஸனத்தில் நீருமிருப்பீர் என்றுசொல்ல; அதுகேட்டு இதோ அவ்வாறே செய்கின் றேன் என்று அந்தக்ஷணமே ஸ்ரீரங்கத்திற்குப்போய் ஸ்வாமியையேஸவித் துத் தேவரீர் இன்னுமரைக்கணம் எழுந்தருளத்தாழ்ந்தால் கோதையார் உயிர் தரியாரென்று விண்ணப்பஞ்செய்ய; அதுகேட்டருளி எம்பெரு மான் அவர் திருத்தோள்களி லாரோகணித்துக்கொண்டு ஸ்ரீ வில்லிபுத் தூருக் கெழுந்தருளினார். அதுகண்டு ப்ரம்மாதி தேவர்களும் மற்றவர் களும் ஆனந்தபரவசராய்த் தண்டன் ஸமர்ப்பித்து ஸ்தோத்திரஞ் செய்ய ஸ்வாமியுங் கருடனைவிட்டிறங்கி வடபெருங்கோயிலுக் கெழுந்தருளப் பெரியாழ்வார் கோதையாருடன் வந்து எம்பெருமானை யடிபணிந்து என்புத்திரியாகிய கோதையாரைத் தேவரீருக்குக் கொடுத்தேனென்று

படி நிசுளாபுரமென்கிற உறையூரிலே வந்துதங்க; அப்போது அழகியமணவாளன் சத்ரசாமராதி யலங்காரத்தோடு தீர்த்தப்ரசாதங்களனுப்பி வைக்க; அவைகளை ஆழ்வாருந் திருமகளாரும் அதிப்ரீதியுடன் ஸ்வீகரித்துத் தத்சேஷத்தை மற்றவர்களுக்கு ப்ரசாதித்து அங்கிருந்தும் புறப்பட்டுத் திருவரங்கன் திருப்பதியுள் எழுந்தருளினவாறே சூடிக்கொடுத்தாள் வந்தாள்! சுரும்பார் குழற் கோதை வந்தாள்! ஆண்டாள் வந்தாள்! ஆழ்வார் திருமகளார் வந்தார்! திருப்பாவைபாடிய செல்விவந்தாள்! தென்னரங்கந்தொழுந் தேவி வந்தாள்! என்று பல சின்னங்கள் பரிமாற வெழுந்தருள்வித்துக்கொண்டு அழகியமணவாளன் திருமண்டபத்துட் சென்று நின்று திருப்பல்லக்கின் பட்டுத்திரையை வாங்க, அப்போதே நாச்சியார் அகிலருங்காணும்படி, உதறி

தாரைவார்த்து விவாகோத்ஸவத்துக்கு வேண்டிய சடங்குகளைச் செய்விக்க எம்பெருமானுங் கோதையாருக்குத் திருமங்கலியதாரணஞ் செய்தருளினார். அதுகண்டு தேவர்கள் புஷ்பமாரிபெய்தும் முனிவர்களாசீர்வதித்தும் ஆனந்தவசத்தரா யிருந்தார்கள். திருக்கலியாணத்தை ஸேவித்த ஸ்ரீவைஷ்ணவர்கள் முதலிய பலரும் கண்களித்தும் மனமகிழ்ந்தும் ஆத்மலாபத்தை யடைந்தவர்களா யிருந்தார்கள். சுமங்கலிகள் மங்களம் பாடவும் மற்றைச்சடங்குகள் முழுதும் முடிக்கவும் எம்பெருமான் நாச்சியாருடன் ஸகலஸம்ப்ரமங்களோடு வெள்ளையானையின்மேல் எழுந்தருளி ஊர்கோலம் வந்தருளித் திருக்கல்யாணத்தை ஸேவிக்கவந்த தேவர்-முனிவர்-பாகவதர்-முதலிய யாவருக்கும் அனுக்கிரஹஞ்செய்து விடைகொடுத்தருளிப் பெரியாழ்வாரை நோக்கி ஆழ்வாரே! நீர் நமது மாமனாராகக்கடவீரென்று நியமித்து ஸ்ரீரங்கத்துக்கு வாருமென்று திருவாய் மலர்ந்தருளிச் சூடிக்கொடுத்த நாச்சியாராகிய கோதையாருடன் திருவரங்கம் பெரியகோயிலுக் கெழுந்தருளினார்.

பின்பு ஆழ்வாரும் வடபத்ரசாயியை ஸேவித்து அங்கு நின்றும்புறப்பட்டு ஸ்ரீரங்கத்துக் கெழுந்தருளி யெம்பெருமான் சந்நிதியிற்சென்று தண்டன்சமர்ப்பித்துக் கைகுவித்து ஸ்தோத்திரஞ்செய்துகொண்டுநிற்க அழகியமணவாளன் பெரியாழ்வாரை நோக்கி நீர் இவ்விடத்தில் ஒரு கோயில்கட்டி ஓர் ஆஸனத்தில் நம்மையுங் கோதையையுங் கருடனையும் எழுந்தருளப்பண்ணி ஆராதனஞ்செய்துகொண் டிருமென்று ஆக்யாபித்தருள; அந்தப்படியேகட்டுவித்து அதில் எம்பெருமான்முதலாக மூவரையும் எழுந்தருளப்பண்ணி இந்த லீலாவிபூதியில் - (அரு) - ஸம்வத்ஸரம் எம்பெருமானை ஆராதித்துக்கொண்டு பெரியாழ்வார் பின்பு சூடிக்கொடுத்த நாச்சியார் முன்னிலையாகத் திருமந்த்ரத்தை யோதி ஸ்ரீமந்நாராயணனது திருவடிகளை யடைந்தார்.

யுடுத்த பட்டுச்சேலையும் பருத்த செங்கழுநீர்மாலையுந் திருநுதற் கஸ்தூரிநாமமுங் கயல்போல் மிளிர்ந்து காதளவோடிய கடைக் கண்விழியும் ப்ரகாசிக்கச் சிலம்பார்க்கச் சீரார் வளையொலிப்ப அன்னமென்னடைகொண்டு அணியரங்கத்தம்மான் திருமுன்பே சென்று கண்களாரக் கண்டுகளித்துக் கேசவநம்பியைக் கால் பிடிப்பாளென்னும் பேர்பெற்று உள்ளேபுகுந்து நாகபர்யங் கத்தை மிதித்தேறித் திருவரங்கச்செல்வனைச் சேர்ந்து அவன் றிருவடிகளிலே யந்தர்ப்பவித்தருளினார்.

அப்போது ஆழ்வாருஞ் செல்வநம்பியும் ஸ்ரீவல்லபதேவ பாண்டியனும் மற்றவரும் விஸ்மயப்பட்டிருக்கத் திருவரங்கச் செல்வனார் ஆழ்வாருக்கருளப்பாடிட்டு, க்ஷீரசமுத்ரராஜனைப் போலும் ஸ்ரீஜனகராஜனைப்போலுங், கும்பாண்டன் தொடக்க மானவர்களைப்போலவும், நீர் நமக்கு † ஸ்வஸுரராய்விட்டீ ரென்று உவப்புடனருளிச்செய்து ஸ்ரீவிஷ்ணுசித்தரழ்வான் எப்போ தும் நம்மருகிலிருப்பதுபோல நீரும் ஸ்ரீவில்லிபுத்தூருறைவான் பொன்னடியைப்பூண்டு வாழக்கடவீரென்று திருமாலை திருப் பரிவட்டந்தீர்த்தமும் ஸ்ரீசடகோபனையும் ப்ரசாதித்து விடை கொடுத்தருள, ஆழ்வார் அதிப்ரீதியுடனுந் திருமகளாரைப்பிரிய நேரிட்டதுக்கத்துடனும் ஸ்ரீவில்லிபுத்தூருக் கெழுந்தருளிப் பூர் வம்போலே வடபெருங்கோயிலுடையானுடைய கைங்கர்யத்தி லீடுபட்டு, ஆண்டாளுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை யேறி யருளப்பண்ணிவைத்து ஆண்டாளையே த்யானித்துக்கொண்டு எண்பத்தைந்தாவது திருநட்சத்ரமளவும் எழுந்தருளியிருந்து அனந்தரம் நித்யவிபூதியைத் திருவுள்ளம்பற்றினார். நாச்சியார் அதிமானுஷவிக்ரஹமாக வெழுந்தருளியிருந்தது பதினாறு திரு நக்ஷத்ரம்.

திருநக்ஷத்ரத் தனியன்.

கர்க்கடே பூர்வ பல்குண்யாம் துளஸீகாந நோத்பவாம்
பாண்ட்யே விஸ்வம்பராங் கோதாம்வந்தே ஸ்ரீரங்கநாயகீம்.

ஸுசிமாஸிபாண்ட்ய புவிபூர்வபல்குநீ கநபோநதுலஸீ வநாந்தராத், தயதாமுதார குணரங்க நாயக ப்ரியவல்லபாம் வஸுமதி முபாஸ்மஹே.

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்.
ஜீயர்திருவடிகளேசரணம்.

☞ ஸ்ரீ ஆண்டாள் திருவவதாரவருஷம் ஈஅஅச-க்குச் சரியான ப்ரம்மாதி வருஷம்.

---

† ஸ்வஸுரர் — மாமனார்.

ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் வைபவம்

தனியன்கள்.

திருவரங்கப் பெருமாளரைய ரருளிச்செய்தது.

இருவிகற்பநேரிசைவெண்பா.

மற்றொன்றும் வேண்டா மனமே மதிளரங்கர்
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ்—உற்ற
திருமாலை பாடுஞ்சீர்த் தொண்ட ரடிப்பொடியெம்
† பெருமானை யெப்போதும் பேசு.

மண்டங் குடியென்பர் மாமறையோர் மன்னியசீர்த்
தொண்ட ரடிப்பொடி தொன்னகரம்—வண்டு
திணர்த்தவயற் றென்னரங்கத் தம்மானைப் பள்ளி
உணர்த்தும் பிரானுதித்த வூர்.

"சோளக்ஷிதௌ தநுஷி மாஸிமஹேந்த்ரதாரே, யஃப்ராது ராஸமுரஜித் வநமாலிகாம்ஸ:, ரங்கேஸ கேளிஸகமூர்த்வ ஸிகந் த்விஜேந்த்ரம், பக்தாங்கிரிரேணு மநகாத்மகுணம் ப்ரபத்யே" என்கிறபடி சோழதேசத்தில் மார்கழிமாசம் கேட்டைநக்ஷத்ரத்தில் எம்பெருமானுடைய வனமாலாம்ச ஸம்பூதராய் முன்குடுமிச் சோழிய ப்ராம்ஹண வம்ஸத்திலவதரித்தருளி நம்பெருமானுடைய கல்யாணகுணங்களி லாசக்தியுடையவரும் நிர்த்தோஷமான ஆத்மகுணங்களை யுடையவருமான ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வாரைச் சேவிக்கிறேனென்றும் "தத்ரோதபூத் பாகவதாத் த்விஜேந்த்ராத் மாஹேந்திரபேமாஸிச மார்க்கஸீர்ஷே, ஸ்ரீவிப்ர நாராயண நாமதேயஃ முராரிவக்ஷோ வநமாலிகாம்ஸ:" என்கிறபடி சோழதேசத்தில் மார்கழிமாசங் கேட்டைநக்ஷத்ரத்தில் எம்பெருமானுடைய வனமாலாம்சராய் ப்ராம்ஹணஸிரேஷ்டரான விப்ரநாராயணரென்கிற ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார் அவதரித்தருளினாரென்றும் இவருடைய அவதாரவிசேஷத்தைத் திவ்யசூரி சரிதையிற் சொல்லிற்று.

---

† "பெம்மானை" என்று பாடாந்தரம். இதன்படி இஃது இரண்டாமடி யிறுதி தனிச்சொற்பெற்று மூன்று விகற்பத்தான்வந்த இன்னிசை வெண்பா.

இவர் ப்ரபாவமிருக்கும்படி எங்ஙனேயென்னில் "ததோம ஹாந் ஸ்ரீமதி சோளதேஸைக வேரஜாயாஸ் தடஸீம்நி கஸ்சித், க்ராமேஸ்தி மண்டங்குடி நாமதேயோ தத்ராஸதே ஸப்தஸதாநி விப்ரா:, ருக்வேதிந: கேசநபூஸுரேந்த்ரா: கேசித் யஜுர்வேத விதோமஹாந்த:, ஆந்யேபி ஸாமஸ்வதி காநஸாண்டா: தந்வந்தி யத்ரோர்த்வ ஸிகாநிவாஸம்" என்கிறபடி திருக்காவேரிதீரத்தில் சம்பத்துநிறைந்த திருமண்டங்குடியென்கிற அக்ரஹாரத்தில், ருக்வேதிகளும் எஜுர்வேதிகளும் சாமவேதிகளுமாக நிறைந் திருந்த எழுநூறு திருமாளிகை ப்ராம்ஹணருள் சிரேஷ்டரான வேதவிசாரதரென்னும் திருநாமத்தையுடைய முன்குடுமிச்சோ ழியர் புத்ரப்பேறுவேண்டி யாதவாத்ரிக்குப் பத்னீசஹிதராய்ச் சென்று திருநாராயணனை யடிபணிந்து ப்ரார்த்திக்க, அவ்வெம் பெருமானும் கடாக்ஷித்தருள, தத்பத்னீ கர்ப்பவதியாய் "தேஹ ஸ்ரீஸரதுத்தரே ப்ரபவநாம்நயப்தே கலௌபாஸ்கரே, சாபக்ராஹிணி பூமிஸூநுதிவஸே ஜ்யேஷ்டாபிதே ஸ்ரீமதி, ருக்ஷேக்ருஷ்ண சதுர்த்தஸீதிதியுதே பக்தாங்க்ரிரேணுஸ்ஸுதீ: ரங்கேஸாங்க்ரி ஸரோருஹைக ஹ்ருதய: ப்ராபாவதாரம்புவி" என்கிறபடியே கலியாப்தம் இருபத்தெட்டுக்குமேல் ப்ரபவவரு ஷம் மார்கழிமாசங் க்ருஷ்ணபக்ஷஞ் சதுர்த்தசி செவ்வாய்க்கிழ மைகூடிய கேட்டைநட்சத்ரமாகிய சுபதினத்தில்ப்ரசவிக்க, எம் பெருமானுடைய வனமாலாம்சரான இவ்வாழ்வா ரவதரித்தரு ளினர். நம்பெருமாளிவரை ஜாயமான கடாக்ஷத்தாலே அமலங் களாக விழித்தருள, மாதா பிதாக்கள் மனங்கொள்ளாத மகிழ் ச்சியடைந்து இவருக்கு விப்ர நாராயணரென்று திருநாமஞ்சாற் றிக் காலவளவுபடிக்குச் சௌள உபநயனாதிகளைச் செய்துவை த்து வேதசாஸ்த்ர முதலான அகிலவித்தைகளையு மதிகரிப்பிக்க, இவருமதிகரித்து அதிக விரக்தராய் "மருத்வ்ருதாயா மத்யஸ் தம் சந்த்ரபுஷ்கரிணீதடே, ஸ்ரீரங்கமதுலம் க்ஷேத்ரம் ஸ்ரியா ஜுஷ்டம் ஸுபாஸ்பதம்" என்கிறபடி உபயகாவேரி மத்தியில் சந்த்ரபுஷ்கரணிக் கரையில் சமானாதிக ரஹிதமும், மங்களாதார முஞ், சேவிக்கச் சுபகரமானதுமாயிருக்கிற திருவரங்கப்பெரு நகரத்துக் கெழுந்தருளி "விமாநமப்யேத்ய சது: ப்ரதக்ஷிணஞ் சதுர்த்தி ஸம்தஸ்ய க்ருதப்ரணாம:, ததந்தராவிஸ்ய விதிர்ததர் ஸத மிந்த்ர நீலாசல ஸந்நிகாஸம், ப்ரஸந்ந வக்த்ரம் நளிநாயதே

க்ஷணங் க்ருபாமயங்காந்தி நிகேதரூபம்" என்கிறபடி அங்கே அரவரசப்பெருஞ்சோதியான திருவனந்தாழ்வான்மேல் அஞ்சனமலைபோல அகிலதேஜசுக்கு மாதாரபூதனாய் விளங்கிக் குளிர்ந்த திருமுக மண்டலத்தை யுடையனாய், க்ருபையே புறவிதமாக விருக்கிற புண்டரீக * சதுர்சாவயவனாய்ச் சாய்ந்தருளியிருக்கிற பரவாசுதேவனைச் சதுர்முகனான ப்ரம்ஹா ப்ரத்க்ஷிணஞ்செய்து கீர்த்தனம்பண்ணி யடைந்தாற்போலே அடைந்து கண்டு களிக்கலுற்றார்.

அழகிய மணவாளனும் இவரது விஷயவாசி யறிந்து வந்து பற்றுகிறதே பற்றாசாகத் தன்னுடைய குழலழகு கண்ணழகு வாயழகுகளைக் காட்டிப் "பும்ஸாந்த்ருஷ்டி சித்தாபஹாரிணம்" என்கிறபடியே ஸ்ரீதண்டகாரண்ய வாசிகளான ருஷிகளை மோஹிப்பித்தாற்போலே இவரையுந் தன்னுடைய வடிவழகி லீடுபட்டு நிரதிசய பக்தியுக்தராம்படிக் கடாக்ஷித்தருள, இவர் ஸ்ரீபுண்டரீகரைப்போலும் "தந்யோஹம்" என்கிறபடி அசோதை யிளஞ்சிங்கமான கண்ணபிரானுக்கு நறுமணத் திருமாலைகளைச் சாத்தித் தன்யனாயினே னென்று ஸந்துஷ்டரான ஸ்ரீமாலாகாரரைப்போலும் "ஸதுநாக வரஸ்ஸ்ரீமாந்" என்கிறபடி கைங்கர்யசிரேயஸ்ஸாலே ஸ்ரீமானான ஸ்ரீகஜேந்த்ராழ்வானைப் போலும் "எண்பகர்பூவுங் கொணர்ந்தேன்" என்கிற பெரியாழ்வாரைப்போலும் "அலங்கலந்தொடையல் கொண்டடியிணை பணிந்து" தொடையொத்த துளவமுங் கூடையும் பொலிந்து தோன்றிய தோள்தொண்ட ரடிப்பொடி யென்னும், அடியனை யெளியனென் றருளி நின்னடியார்க் காட்படுத்தாய்" என்னுமளவான பாமாலையோடு பூமாலையையுஞ் சமர்ப்பித்துத் திருநந்தனவனஞ் செய்து போருகிறகாலத்திலே ஒருநாள் திருக்கரம்ப னூரிலிருந்த அதிசுந்தரையான தேவதேவியென்னுமொருவேசி திருஉறையூருக்குப்போய், நிசுளாபுரேந்த்ரனான சோழராஜாவைத் தர்சித்துத் திரும்பி வருகையில் தடத்தோரத்திலிருந்த இவ்வாழ்வாருடைய திருநந்தனவனத்தைக் கண்ணுற்றாள்.

கண்டவள் தனது மார்க்காயாசத்தைப் போக்கிக்கொள்ளும் நிமித்தம் அதனுள் ப்ரவேசித்து ஓர் வ்ருக்ஷத்தி னடியிலே தன் சகிகளோடு நின்றுகொண்டு, அந்த சோலையின் சிங்காரத்

* சதுர்சாவயவன்-(புண்டரீகத்தை) ஒத்த அவயவத்தையுடையவன்.

12

தைச் சுற்றிச்சூழ்ந்து பார்க்கப், பலா பாடலீ தென்னை அசோகு புன்னை எலுமிச்சை பூகம் வாழை மா விளா வகுளம் நார்த்தம் ஆமலகாதி வ்ருக்ஷஸமூஹங்கள் மலிந்து பொலிவடைந்து அவற்றின் கிளைகள்மேல் மஞ்ஞை மைநாகங் கிள்ளை பூங்குயில் முதலிய பட்சி சமூகங்களமர்ந்து செவிக்கின்பமா யொலிக்கவும், புஷ்பமதுக்களையுண்டு களித்துக் கிளம்பிய † ப்ரமரங்களிசைக்கவுந், தாழை தண்ணும்பல் மல்லிகை முல்லை இருவாட்சி செண்பகம் பச்சை தமனகம் பாதிரி பத்மம் முதலிய புஷ்பங்கள் மணக்கவும், மனோகரமா யிருக்கிறதைக்கண்டு, தன் அக்கையான தேவியென்பவளை நோக்கி இந்த்ரனுக்கோர் பூங்காவனமுண்டெனவுஞ் சைத்ரரதனுக்கோர் உத்யானவனமுண்டெனவும் நாம்கேட்டிருப்பதே யொழியப்பார்த்திருப்ப தில்லையே; இந்த திருநந்தவனத்தைப் பார்த்த பின்பும் அவற்றி னலங்காரங்களைக்கேட்டுப் பிரமிப்போமென்பதுண்டோ? இஃதிங் கமைந்திருப்ப தியாருக்காகவோ என்றுவினவ, அவளும் தேவதேவியை நோக்கித் தங்காய்! இதிலுள்ள தருக்குலங்கள் பெரியபெருமாளுடைய வருளையே தாரகமாகப் பெற்றுப் பொலிவடைந்து புஷ்பித்து ப்ரகர்ஷத்தாலே அவர் திருமுடியைப்பூஷித்து வருமவையாயும், இத்தோட்டம் அவர் வேட்டையாடி வந்து ஆயாசந் தீர்த்துக்கொள்ளுமிடமதாயு மிருக்கின்றமையாலே அஸ்மதாதிகளுக்குச் சிரமஹரஞ்செய்து சிங்காரமாய்க்காணு தொழியுமோவென்று ப்ரியாலாபம் பண்ணிக்கொண்டிராநிற்க, அவ்வேளையிலிவ்வாழ்வார் தலையிற் சிகையாலும் முகத்தில் மீசையாலும் திருமேனியெங்கும் ரோமங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருக்கிற திருவுருவினராய், மஹா தாவள்யமான தந்தபங்க்திகளையுடையராய்த் தூல்யமான மடியையுந் த்வாதசோர்த்வ புண்ட்ரங்களையுந் துளசீநளீநாட்சமாலைகளையுந் தரித்துக்கொண்டு அங்கே தருக்குலங்களுக்குக் குழிகட்டித் திருமஞ்சனம் பரிமாறிக்கொண்டு சஞ்சரிக்க, அவர்களிருவரும் இவரை அத்யாச்சர்யத்தோடு பார்த்துக்கொண்டேயிருக்க, இவர் தமது கைங்கர்யத்தில் ஆசக்தசித்தரா யிருந்துகொண்டு அவர்களை முகமெடுத்துப் பாராதே திரஸ்கரித்திருந்துவிட்டார்.

அவ்வளவிலே தேவதேவி யென்பவள் ‡ஸ்வாக்ரஜையை நோக்கி இதென்ன! நாமிவன்முன்னே வந்துநின்று இத்தனைபோதாக

† ப்ரமரம்-வண்டு. ‡ ஸ்வாக்ரஜை-தமக்கை.

நமது கண்வலையை இவன்மேல் வீசுகையிலும் நம்மை நோக்கா தொழிகிறானே! இவன் நபும்சகனோ? அல்லது உன்மத்தனோ கண்டுசொல்லாயென; அவளுந்தங்காய்! இவர் நபும்சகரு மன்று உன்மத்தரு மன்று; ஸ்ரீரங்கேச கைங்கர்யாசக்த சித்தரான விரக்தராகையாலே உன்சௌந்தர்யத்தைக் காறி யுமிழ்ந்திருப்பரென்ன; அதற்கவள்இப்படிப்பட்டவரைநானொருகால்கைகோர்க்காதொழிவேனோ வென்ன; மூத்தவள் நீயிவரை யுன் சௌந்தர்யத்தில் மோஹிக்கச் செய்வாயாகில் நானுன்னை வாரஸ்திரீகளுக்குள் முக்யையென்று சொல்வதோடு ஆறுமாசகாலமுனக்கடிமைப் பெண்ணாகவு மிருப்பேனென்ன, அவளும் நானிவரைவசீகரியாவிடில் உனக்காறுமாசம்பணிவிடைக்காரியாகிறேனென்று ப்ரதிக்ஞை பண்ணி அப்பொழுதே தான் தரித்திருந்த திவ்ய வஸ்த்ராபரணாதிகளைக்களைந்து தன் அக்கைகையிற் கொடுத்துச் சகிகளுடனேகூட்டியனுப்பிவிட்டுச் சாத்விகவேஷந் தரித்துக்கொண்டு இவ்வாழ்வார்திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்து நின்றாள். ஆழ்வாரவளைப்பார்த்து நீயார் பிள்ளாயென்றுகேட்க, ஸ்வாமி! அடியேனொரு வாரஸ்திரீ வசத்திலே ஜன்மாந்தர வினையின் வழியாலேபிறக்க, அவள் ஸர்வரையும்பஜித்து * அர்த்தார்ஜனை பண்ணென்றுபாதிக்க, அடியேன்அஸஹ்யையாய்ப், பூர்வம் பண்ணினபாபத்தாலே இந்தஜன்மமெடுக்கநேரிட்டதே! இன்னமும் பாபார்ஜனைபண்ணிப் படுகுழியில் விழவோ தொழில் கற்பிக்கிறாயென்று அவளைப்பரித்யஜித்து ஸ்ரீரங்கேசனுக் கந்தரங்க கைங்கர்யாசக்தசித்தராயிருக்கிற தேவரீருடைய திருவடிகளிலே அபயம் புகுந்து உஜ்ஜீவிக்கலாமென்று வந்திருக்கின்றேன்; † ஆகிஞ்சின்யையாய் அனன்யகதித்வமுடைய அடியேனைஇரங்கியருளித் திருநந்தனவன கைங்கர்யத்திலிருக்கும்படி நியமித்தால் தேவரீர் பெருமாளுக்குத் திருமாலை சமர்ப்பித்துப் பிக்ஷைக்ஷ பண்ணிக்கொண்டு வருமளவும் இப்பொழிலிலே மேயவருகிற கறவைகளை யுள்ளேவிடாமல் காத்துக்கொண்டு கையாளாகியிருந்து மனோவ்ருத்தியை யடைவேனென்று ப்ரார்த்தித்தாள். இவ்வாழ்வாரும் அவள்ப்ரார்த்தனைக்கிரங்கியருளித் தமமுடைய திருவாராதனமான பெருமாளுக்கு நித்யமும் ‡ பைக்ஷத்தை

* அர்த்தார்ஜனை-பணம்சம்பாதித்தல் † ஆகிஞ்சின்யை-தரித்திரை. ‡ பைக்ஷம்-நைவேத்தியம் (உபாதானம்.)

யமுது செய்வித்துத் தாமு மமுதுசெய்த வனந்தரஞ் சேஷித் ததை யவளுக்கு ப்ரசாதித்து வந்தார்.

அனந்தரந் தேவதேவி ஆழ்வார்நியமனப்படிப் புஷ்பதருக் களுக்குக் களையெடுத்தல் குழிகட்டல் திருமஞ்சனம் பரிமாறல் முதலியகைங்கர்யங்களில் அதிகபக்தியுக்தையைப்போலீடுபட்டு, ஆறுமாஸம்வரையிலும்இப்படிக்காலம்போக்கி, ஒருநாளில்திருத் துழாய்க்குக் குழிகட்டித் திருமஞ்சனம் பரிமாறிக்கொண்டிருக் கையில் ஒருபெருவர்ஷம்வர்ஷித்ததால் ஆழ்வாருடைய பர்ணசா லையின் வெளிப்புறத்தி லொதுங்கிநின்று நனைந்துகொண்டிருக்க, இதை ஆழ்வார்கண்டிரங்கியவளையுள்ளேயொருபுறமாய்வந்திருக் கும்படியாக்ஞாபிக்க, அவளும் உள்ளேபோனவளவில் ஈரவஸ்த்ர த்தோடிருக்கக்கண்டு, தம்முடைய உத்தரீயத்தை ப்ரஸாதிக்க அதையவள் வாங்கித் தரித்துக்கொண்டு, ஆழ்வாரிடத்தில் நய வார்த்தையால் திருவடிகளை வருடுகிறேனென்று ப்ரார்த்தித்து, அவரையதற் கனுகூலிக்கச் செய்துகொண்டு, வருடுகிறதறுவா யில், * அவள் களாசாஸ்த்ர முறையறிந்தவளாகையாலே, சில நரம்புகளைப்பக்வமாய்த்தீண்டி, இவர்மதியைமயக்கிக்கடைக்கண் ணால் மிரட்டிக் கிஞ்சுகம்போல் கொஞ்சிக்கொண்டு பக்கத்தில் நெருங்கி, இவர்தன்கையைப்பிடிக்குமளவுஞ்செய்யவேண்டியப்ர யத்தனங்களை யெல்லாங் குறைவறச்செய்து, ஒருகாலும் விஷய வாசனையே யறியாத விவரைக் கடாலிங்கனஞ்செய்து ரமித்து, மறுநாள் தன்னுடையதிவ்யவஸ்தராபரணாதிகளையழைப்பித்துத் தரித்துக்கொண்டு, தன்னுடைய ரூபலாவண்யங்களை யதிகமாய் ப்ரகாசிப்பித்து, அதனாலிவரைப் பின்னும் விசாரிக்கச் செய்து தன்வசப்படுத்திக்கொண்டு, இவருடையசந்தி ஜபதபாதிகளையும் வர்ணாசிரமதர்மத்தையுங்குலைத்துத், திருநந்தவனத்தையும் விட் டுத் தன்க்ரஹத்துக்கே யழைத்துக்கொண்டுபோய் இவருடைய ஸர்வார்ஜிதங்களெல்லாந் தன்வசமாகுமளவுந் தழுவிப் பரிமாறி அச்செல்வ மொழிந்தவாறே வெளியில் தள்ளிவிட்டாள்; பிறகு இவர் அவளைப்பிரிந்ததா லுண்டான துக்கத்தில்மூழ்கி அவளு டைய வாசல்காப்பானாகிப் படிமேலுறங்கிக்கிடக்க, அப்போது பெரியபெருமாள் பிராட்டி சஹிதராய் ஸ்வவிலாஸ ஸஞ்சாரம் பண்ணிக்கொண்டு அவ்வழியே யெழுந்தருளா நிற்கப் பிராட்டி

* களாசாஸ்த்ரம்-காமநூல்.

இவர் கிடக்கையைக்கண்டு மந்தஹாஸம் பண்ணிப் பெருமாளு டனே * வேசியாக்ரஹத்வாரத்திற் கவலையுட்பட் டுறங்கிக்கிடக் கிற விவராரென்ன; பெருமாளும் இவனே நமக்குப் பூமாலைதந்து கொண்டிருந்தவிப்ரநாராயணன்; இவன்வேசியாஸக்தனுகிஸ்வார் ஜிதங்களையும் பறிகொடுத்து இப்போதவளால் தள்ளுண்டு கிடக் கிறுனென்றருளிச்செய்தார்.

அவ்வளவிலே பிராட்டி, சுவாமி! நமக்கந்தரங்கரானவிவர் இப்படி வேசியாஸக்தராளுலும் விசுவமோஹன ஹேதுவான தேவரீர்மாயைக்கு விஷயமில்லாமையோ? இவருடைய தோஷங் களை யாராயாமல் பூர்வம்போலே நமக்கந்தரங்கராம்படிக் கடா க்ஷித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அதற்குப்பெ ருமாளிசைந்து தம்முடைய பஞ்சபாத்ரத்திலே பருத்திருக்குஞ் சுவர்ண சுத்தோதகபாத்ரத்தையெடுத்துக்கொண்டுபோய் அந்த வேசியாக்ரஹத்வாரத்தில் நின்று கதவைத்தட்டித் தேவதேவீ கதவைத்திறவாயென்றழைக்க; அவள் ஆரென்று கேட்க; நான் அழகிய மணவாளதாஸன், விப்ரநாராயணர் அனுப்ப வந்தே னென்ன; அவளுஞ் சடக்கெனக் கதவைத்திறந்து என்னென்று வினவ; உனக்கிந்தச் சுவர்ணபாத்ரத்தை விப்ரநாராயணர் தந்தா ரென்ன; அதையவள் மஹா சந்துஷ்டையாய் வாங்கிக்கொண்டு அவரை யுள்ளேவரச் சொல்லுமென்ன; பெருமாளும் இவரண் டையில் வந்து நின்று விப்ரநாராயணரே! உம்மைத் தேவதேவி உள்ளேவரச்சொன்னுளென்றருளிமறைய; இவருக்கவ்வார்த்தை கர்ணாம்ருதமாக விருக்கையாலே சந்துஷ்டராகித் திடுக்கென் றெழுந்து உள்ளேசெல்ல, அவளிவரை மஹா ப்ரீதியுடனுதரித் திருந்தாள்.

இஃதிப்படியிருக்க, மறுநாள்விடிவுகாலத்தில் கோயில்திருக் காப்பைநீக்கினவளவிலே சுவர்ணசுத்தோதகபாத்ரத்தைக்காணு மையால்,அர்ச்சகபரிசாரகர்களனைவரும்பயந்து அதிகாரிகளுக்க றிவிக்க, அவர்களும் அரசனுக்கறிவிக்க, அவன்மஹா †குபிதனுய், அர்ச்சகபரிசாரகர் முதலியோரைத் திருத்தேரடியிலே நிறுத்தி அபராததண்டம்வாங்க, அத்தறுவாயில் தேவதேவி அகத்துக்கு ஜலங் கொண்டுவரப் போன அடிமைப் பெண் ணொருத்தி

* வேசியாக்ரகத்வாரத்தில்-வேசிவீட்டுத் தெருவாசற்படிக்கண்.

† குபிதனுய்-கோபமூண்டவனுய்.

அவ்வழியேசெல்ல, அங்கே தன்னோடு சம்மந்தமுடையா னொருவனை அரசன் பாதிக்கக்கண்டு, இதுவென்னென்று விசாரித்துச் சுவர்ணபாத்ரக்களவைப்பற்றி நடத்துவதென்றறிந்து, அரசனை நோக்கி ஐயனே! அந்தபாத்ரத்தை விப்ரநாராயண னென்பவன் எங்கள் தேவதேவிக்குக் கொடுத்திருக்கின்றான்; அவளு மதைத் தன் மெத்தைத் தலைக்கணைக்குள் வைத்திருக்கின்றா ளென்ன; அரசன் தத்க்ஷணமே இவ்விருவரையுஞ் சுவர்ண பாத்ரத்துடன் கண்டுபிடித்துக் கைப்பிடியாகக் கொண்டுவரச் செய்து தேவதேவியைப் பார்த்ததட்டி, நீபெருமாளுடையபொருளை யிப்படி யபஹரிக்கலாமோவென்றுகேட்க அவள்*நாயன்தே! இந்தவிப்ர நாராயணர் அதைத்தன்றாதனுகிய அழகியமணவாள தாஸனிடத்திற்கொடுத்து அடியேனுக்கனுப்பிவைக்க, அதை இவர்பொருளாக விருக்கலா மென்றே நம்பி வாங்கிக் கொண்டே - னித்தனை யல்லது அடியேன் புத்திபூர்வமாக அபராதியாகவில்லை யென்றாள்; அப்போது அரசன் இவரை நோக்கி நீரிப்படிச் செய்த துமக்குத் தகுதியோவென்ன? இவர் நானவ்வட்டிலையுமறியேன் எனக்கொரு தாதனுமில்லையென்ன; அவளுமுண்டென்ன; இவரில்லையென்ன; அவனிவ்விருவர் விவாதத்தையுங் கேட்டுக் குபிதனுகித் தேவதேவியிடத்தில் அபராதம்வாங்கி வட்டிலைப்பெருமாளுக்குச் சமர்ப்பித்து விட்டு, இவரை நன்றுயாராய்ந்து தண்டிப் போமென்று காவலில் வைத்துப்போயினன்.

அவ்வேளையில், லோகமாதாவான பெரியபிராட்டியார் திருவரங்கச்செல்வனுரையடிபணிந்து சுவாமி! தேவரீரினிமேலாவது நம்முடைய விப்ரநாராயணரை மாயைக்கு விஷயமாக்காது க்ருபைக்கு விஷயமாக்கி ரக்ஷித்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்கத், தென்னரங்கத் தின்னமுதனும் அன்றிரவில் தானே சோழபூபதியின் ஸ்வப்னத்திலெழுந்தருளி அரசனே! அந்த விப்ரநாராயணர்க்குப்ராப்தகர்மங்கழிகைக்காகநாமேதபனியப்பாத்ரத்தை யெடுத்துக்கொண்டுபோய்த் தேவதேவிக்குக்கொடுத்து அவரை யிப்படித் தண்டிப்பித்தோ மித்தனையல்லது, அவர் தண்டியரே யன்று; ஆகலின், நிர்த்தோஷரான அவரைக்காவலரையிலிருந்து விடுத்துப் பூர்வம்போலவே யவரை நம்முடைய கைங்கர்யத்தில் நிறுத்திவையுமென்றும் அந்த விலைமகள் வசப்பட்டபொருளில்

* நாயன் தே-அரசனே.

நமக்கபேக்ஷித மில்லை யென்று மருளிச்செய்து மறைய; அரசன் திடுக்கிட்டு விடிவுகாலத்தி லெழுந்து மந்த்ரிகளுடனே பெரிய பெருமாளுடைய நியமனமிருந்த படியைச்சொல்ல, அனைவரும் விஸ்மிதராகி அப்பொழுதேஇவ்வாழ்வாரிடத்தில்வந்து தண்டன் ஸமர்ப்பித்துத் திருப்பல்லக்கி லேறியருளப் பண்ணிக்கொண்டு அரசனிடம்வர, அரசனும் இவரையடிபணிந்து பெரியபெருமா ளருளிச்செய்த படியை விண்ணப்பஞ் செய்து க்ஷமைபெற்றுக் கொண்டான்.

அனந்தரம் ஆழ்வார் தமக்கு ப்ராப்தமாயிருந்த நிந்திதக்ருத் யங்களையெல்லாம் நினைந்துநைந்து "யஸ்யமூர்த்நி ஸ்திதம்யாவத் வைஷ்ணவாங்க்ரிரஜஸ்ஸ்பம், கங்காதிஸர்வ தீர்த்தாநிதாவத்தி ஷ்டந்த்யஸம்ஶயம்" என்கிறபடியே பாகவதர்களுடைய ஸ்ரீபாத தூளி எவன் சிரசில்படிந்திருக்குமோ அவன் கங்காதிஸகல தீர்த் தங்களிலும் ஸ்நானஞ்செய்வதினால்வரும்பலனை சம்சயமின்றிப் பெறுகிறானென்றும், "நிரபேக்ஷம் முநிம்ஶாந்தம் நிர்வைரம் ஸமதர்ஶிநம் அநுவ்ரஜாம் யஹந்நித்தியம் பூயயேத்யங்க்ரிரேணு பிஃ" என்கிறபடியே நிரபேக்ஷபுத்யானசீலத்வமுஞ்சமதமாதி குணங்களும் அத்வேஷமுஞ் சமநோக்கும் உடையவர்களான பாகவதர்களின் ஸ்ரீபாதரேணு ஒன்றே பரிசுத்தத்தைத் தருமதென்றும், "ஏதத்ஸமஸ்த பாபாநாம் ப்ராயஶ்சித்தம்மநீஷிபிஃ, நிர்ணீதம் பகவத்பக்த பாதோதகநிஷேவணம்" என்கிறபடியே சகல பாபங்களுக்கும் ப்ராயச்சித்தமாக பகவத்பாகவத ஸ்ரீபாத தீர்த்தத்தை ஸ்வீகரிப்பதைவிட வேறுபாய மில்லையென்றும் "மாயன்றமரடி நீறுகொண்டணிய முயலில் மற்றில்லை கண்டீரிவ் வணங்குக்கே" என்றும், "நாதனை நரசிங்கனை நவின்றேற்றுவா ர்களுழக்கிய பாததூளிபடுதலாலிவ்வுலகம் பாக்கியஞ்செய்ததே" என்றும், தொண்டரடிப்பொடியாட நாம்பெறிற் கங்கை நீர் குடைந்தாடும் வேட்கையென்னாவதே" என்றும் வேதவித்துக் கள்பலராலும் உத்தேசியதமமாகவருளிச் செய்யப்பட்டிருக்கிற படியே, பகவத்பாகவத ஸ்ரீபாத தீர்த்தத்தை யபேக்ஷித்து ஸ்வீகரித்து க்ருதார்த்த னாயினேனென்று மனங்குளிர்ந்து ஸ்ரீதுளவத்தொண்டிலே நிஷ்டராய்ப்போரும் ஸ்ரீவைஷ்ணவர்க ளையே தமக்குத்தேசியர்களாகவெண்ணிப்பூர்வம்போலவேகைங் கர்யநிரதராகி (க்ராமகுலாதிகளால்வரும்பெயர் அனர்த்தஹேது

வாகையாலே) முன் தசையிலிருந்த விப்ரநாராயணரென்கிற பெய ரொழிந்து ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வாரென்னுந் திருநாமத் தைப்பெற்றும் "பாவோநாந் யத்ரகச்சதி" என்கிறபடியே என் மனம் சக்ரவர்த்தித்திருமகன் திருவடிகளையன்றிவேறோரிடத்திற் பற்றுகிறதில்லையென்கிற சிறிய திருவடியைப்போலும் "ஐஶ்வர் யம்வாபிலோகாநாம்காமயேநத்வயாவிநா" என்கிறபடி உன் திருவ டிகளையன்றி இப்ரபஞ்ச ஐஶ்வர்யாதிகளில் எனக்கிச்சையுண்டாக வில்லையென்கிற இளையபெருமாளைப்போலும் "மாயாப்பெருவிற லுலகம் மூன்றினொடுநல்வீடு பெறினுங்கொள்ளுவதெண்ணுமோ தெள்ளியோர்குறிப்பு" என்கிறபடி த்ரைலோக்கிய ஐசுவர்யாதிக ளடையத் திரண்டெதிர்படுவதாயினும் நல்வீடென்கிற கைவல்ய புருஷார்த்தம்சித்திப்பதாகவிருக்கினும்ஸாராஸாரங்களைப்பகுத் தறிந்து ஸ்ரீயப்பதியினுடையதிருவடிகளில்நாட்டினமனதையுடை யபெரியோர்களான க்ஞானிகளுடையலக்ஷ்யத்தில் அவைகொள் ளப்படாஎன்கிறநம்மாழ்வாரைப்போலும் "இந்திரலோகமாளும் அச்சுவைபெறினும் வேண்டேன்" அதாவது இந்திரையென்கிற லக்ஷ்மிக்குவல்லபனான ஸ்வாமியின் லோகமான பரமபதந்தமக்கு ப்ராப்தமாவதாயிருக்கினும் இங்கேபெரியபெருமாளுடைய திரு வடிகளிலேயடிமைப்பட்டுத்திருநாமஞ்சொல்வதிலிருக்கிறஸாரம் அதைமறுக்கச் செய்கையால் அதிற்பற்றற்ற திருவுள்ளத்தை யுடையராய் "என்னைத்தீமனங்கெடுத்தாய்" என்றும் "மருவித் தொழும் மனமேதந்தாய்" என்றுஞ் சொல்லுகிறபடியே "மாத ரார் கயற்கணென்னும் வலையுட்பட்டழுந்துவேனைப் போதரே யென்று சொல்லிப் புந்தியிற்புகுந்து தன்பாலாதரம் பெருக வைத்தவழகன்" அதாவது ஸ்த்ரீகளுடைய கண்வலைக்கு ளகப்ப ட்டுமீளவகையறியாதேமக்னனானவென்னைவாராயென்றுதரித்து நம்மைச் சேவித்துக்காணுமென்று ஹிதமுரைத்து, என்ஹிரு தயத்திலும் ப்ரவேசித்து அத்யந்தபக்தியை யுண்டாக்கியருளிய தயாளுவே! என்று அழகியமணவாளனுடைய திருநாமவைபவ ங்களையே அநுஸந்தித்துக்கொண்டு க்ருதக்ஞராயிருக்க, நம்பெரு மாளு மிவர்க்கு மயர்வறமதிநலமருளித் தன்னுடைய பரத்வாதி * பஞ்சப்ரகாரரூபமான † விபூதி சேஷ்டிதங்களை யெல்லாங்

*. பஞ்சப்ரகாரரூபம்-பரத்வம், வ்யூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என்னும் ஐந்து வடிவங்கள். † விபூதி - செல்வம்.

காட்டிக்கொடுக்க இவர்தெளிவுற்ற சிந்தையராய்ப் பரபக்தி பரக்ஞான பரமபக்திகள் தலையெடுக்கப்பெற்றுப்"பிதாபுத்ரஶ்சநாராயண:" என்கிறபடியே தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய ஸர்வவிதோத்தாரக பந்துவாயிருப்பவன் நாராயணனொருவனேயென்று திருமந்த்ராநுஸந்தானத்தாலே யநுஸந்தித்துத் "திறம்பேன் மின்கண்டீர் திருவடிதன்னாமம் மறந்தும் புறந்தொழாமாந்தரை" என்கிறபடி அயர்வறுமமரர்தலைவனான ஸ்ரீய:பதியினுடைய துயரறு சுடரடியை ஸர்வகால ஸர்வதேச ஸர்வாவஸ்தைகளிலுந் தங்களுக்குத் தாரக போஷக போக்யாதிகளாக, த்யானித்துக் கொண்டிருக்கும் ப்ரபந்நர்களைக் கண்டால் ஆனை போல் மதித்துச் செல்லுகிற நீவிர் பூனைபோலொடுங்கிச் சத்வ குணப் போலிகளாகித் தண்டன் ஸமர்ப்பித்து அவர்கள் க்ருபைக்குப் பாத்ரராகக்கடவீரென்று எமன் பாஸ ஹஸ்தனை ஸ்வ புருஷனைப் பார்த்துக் கர்ணமூலத்திலே யுபதேசிக்கத்தக்கதாக, "நமன்றமர்தலைகண்மீதே நாவலிட் டுழிதருகின்றோம்" என்று வாலியின் பெயர் கேட்டவளவிலே ஜ்வரமடைந்து குகையிற்பதுங்கியிருந்த ஸ்ரீசுக்ரீவமகாராஜர்,சக்ரவர்த்தித்திருமகனை அண்டைகொண்ட பலத்தாலே கிஷ்கிந்தாபுரி த்வாரத்திற்சென்று நின்று, தம்மைஜெயிக்கவல்லவருண்டானால்எதிர்கொண்டுவரலாமென்று அறைகூவினாற்போலே, முன்பு எமன்பெயர்கேட்க அஞ்சிக்கிடந்த இவர் திருநாமத்தையண்டைகொண்ட பலத்தாலே * சமனபுரித்வாரத்திற் சென்றுநின்று (நான் பண்ணின பாபத்துக்காக நீ சித்ரகுப்தனா லெழுதி வைத்திருக்கிற பட்டோலையைக் கொண்டு என்னைத் தண்டிக்க வல்லையாகில் புறப்படாயென்று) அறைகூவி அவன் தலைமீதும் அவனுகந்தார் தலைமீதும் தாமுந் தாமுகந்தாரும் அடியிட்டுச் சஞ்சரிக்கச் சக்தராகிறதாக வருளிச்செய்து, ஸ்ரீவைஷ்ணவர்களடியிலே முடியிட்டு, ஆனந்தித்து, திருமாலைகட்டித் திருமாலைசாற்ற நினைத்த இவர் (ஸ்ரீசௌனக பகவான் வக்தாவாகியிருந்து திருநாமங்களைச் சொல்ல, ஸ்ரீ சதாநந்தர் சுரோதாவாகி யிருந்து கேட்டாற்போலே) பெரிய பெருமாள் சுரோதாவாகத் தாம்வக்தாவாகித் திருமாலையை யருளிச்செய்தார்.

---

* சமனபுரி-எமபுரம்.

பிறகு "பூதாநி சகவர்க்கேண சவர்க்கேணேந்த்ரியாணிச, டவர்க்கேண தவர்க்கேணஜ்ஞாநகந்தாதயஸ்ததா, மந:பகாரேணைவோக்தம்ഫகாரேண த்வஹங்க்ருதி:, ബகாரேணഭகாரேணமஹாந்ப்ரக்ருதிருச்யதே" என்கிறபடியே "பொங்கைம்புலனும்பொறியைந்துங்கர்மேந்திரியமைம்பூதம், இங்கிவ்வுயிரேய் பிரகிருதி மானாங்காரமனங்கள்" என்கிறபடியே, க, ഖ, ഗ, ഘ, ங ஆகிய விவ்வைந்தக்ஷரங்களால் நிரூபகமான ப்ரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்கிற பூதங்களைந்தும், ச, ഛ, ஜ, ഝ, ஞ, ஆகிய வைந்தாலும் நிரூபகமான வாக், பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என்கிற கர்மேந்த்ரியங்களைந்தும், ட, ഠ, ഡ, ഢ, ண ஆகிய வைந்தாலும் நிரூபகமான த்வக்கு, சக்ஷுஸ், சுரோத்ரம், ஜிஹ்வை, ஆக்ராணம் என்கிற க்ஞானேந்த்ரியங்களைந்தும், த, ഥ, ദ, ധ, ந ஆகிய இவ்வைந்தாலும் நிரூபகமான சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்கிற புலன்களைந்தும், ப, ഫ, ബ, ഭ, ஆகிய விந்நான்காலும் நிரூபகமான மனம், அஹங்காரம், மஹத், ப்ரக்கிருதி என்னும் நான்குங் கூடிய இருபத்துநான்கு தத்வாத்மகமான சரீரத்தில் பண்ணும் ஆத்மபுத்தியைச் சிதலமான வெளிச்சுவரையுடைய க்ருஹத்தில்வைக்கு மாசையையே போன்றதென்று விவரித்து "ஆத்மாதுஸமகாரேண பஞ்சவிம்ஶ:ப்ரகீர்த்தித:" என்கிறபடியே இருபத்தைந்தாமக்ஷரமான மகாரம் ப்ரக்ருதே:பரனை ஆத்மஸ்வரூபத்தை விளக்குகிறதென்று நிர்த்தேசித்து "மெய்ம்மையே மிகவுணர்ந்து உன்கடைத்தலையிருந்து வாழுஞ் சோம்பர்" என்று சேஷத்வபாரதந்த்ரியம் கைபுகுந்தவர்களே தமக்கு உத்தேசியர்களென் றருளிச்செய்து உன்னடியார்க்கென்னை யாட்படுத்தாயென்று பெரியபெருமாள் தமக்குண்டாக்கின ததீயசேஷத்வத்தை ப்ரார்த்தித்து, இவ்வர்த்தங்களை அகிலருமறிந்துஜ்ஜீவிக்கும்படித் "திருமாலை" "திருப்பள்ளியெழுச்சி" என்கிற ப்ரபந்தங்களிலே விஶதமாக வருளிச்செய்து நூற்றைந்து திருநக்ஷத்ர மெழுந்தருளியிருந்து உலகத்தை வாழ்வித்தருளினார்.

தேவதேவியென்பவளும் இவ்வாழ்வார் ஈடுபாட்டைப்பார்த்துத் தானு மிவரைப்போலவே உஜ்ஜீவிக்க வேணுமென்றெண்ணித் தன் ஸர்வசொத்தையும் நம்பெருமாள் திருவடிகளில்

ஸமர்ப்பித்துப் பரமஸாத்விகையாய் (ஸத்ஸங்கம் ஸதாதர்சனத்தில்வைக்கு மென்னுமாபோல) கோயிலிலே கடைத்தலை சீக்குங் கைங்கர்ய நிரதையாயிருந்து கடுவினை களையப்பெற்று உஜ்ஜீவித்தாள்.

திருநக்ஷத்ர தனியன்.

கோதண்டே ஜ்யேஷ்ட நக்ஷத்ரே மண்டங்குடி புரோத்பவம்,
சோளோர்வ்யாம் வநமாலாம்ஸம் பக்த பத்ரேணுமாஶ்ரயே.

ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

குறிப்பு:—ஸ்ரீநஞ்சீயர் இவ்வாழ்வாருடைய வைபவ முழுமையுங்கேட்டு ஸ்ரீபட்டர் திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து, ஸ்வாமி இப்படிப்பட்ட மஹாநுபாவருக்கிந்த நிந்திதக்ருத்யமெப்படி ப்ராப்தமாகலாமென்று அடியேன் பேதைமையால் மயங்குகிறேன்; ஆகையால் ஸர்வக்ஞரான தேவரீரிதனை விளங்க வருளிச் செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவரும் கேளீர் பண்டிதாக்ரேசரே! பூர்வம் த்ரேதாயுகத்தில் ஸர்வேசுவரன் சக்ரவர்த்தித் திருமகனாக வவதரித்திருந்தபோது, அந்த திருவுருவத்தைக் கண்ட ஸ்ரீதண்டகாரண்யவாசிகள் மோஹித்தாற்போலே, இராவணவதோபாயஸஹகாரியான சூர்ப்பநகை யென்பவளும் மோஹிக்க, அவ்வவதாரத்தில் பெருமாள் ஏகபத்நீ வ்ரதரானபடியாலே அவளைத் திரஸ்கரித்துவிட்டு, த்வாபரயுகத்தில் அந்த ருஷிகளையெல்லாங் கோபாங்கனைகளாகவும் இராஜகன்னிகைகளாகவும் ஜன்மிக்கச்செய்து தான் க்ருஷ்ணாவதாரஞ் செய்தபோது அந்தச் சூர்ப்பநகையுங் கம்ஸபுரியிலொரு குப்ஜையாய்ப் பிறந்திருந்து கம்ஸ ஸம்ஹாரார்த்தமாக ஸ்வாமி யெழுந்தருளுகையில் ஸ்ரீகந்த சாத்துபடி கொண்டுவந்து ஸமர்ப்பித்து மானஸமாக மோஹித்துத் தண்டனிட அப்போது ஸ்வாமி க்ருபைகூர்ந்து, கலியுகத்தில் நிமக்னரை யுயர்த்த தம்முடைய வனமாலாம்சையை ஸ்ரீவிப்ரநாராயணரென்னும் த்விஜராயவதரிக்கச் செய்தும், அப்போதவளைத் தேவதேவி யென்கிற வாரஸ்திரீயாகப் பிறப்பித்து அவளவளை ஸவாஸனமாகவொழித்து நம்பெருமாளுக்குநந்த கைங்கர்யபுக்தைபாக்கி அனந்த

ரம் மேல்வீடளிக்கவுந் திருவுள்ளத்திற் குறிப்பிட்டருளியதாய் ஸ்ரீப்ரம்ஹாண்ட புராணத்தில் சொல்லியிருக்கிறது. ஆகையால் இவ்வாழ்வாருக்குந் தேவதேவிக்கும் வாய்த்த ஸம்மந்தம் எம்பெருமானுடைய லீலைக்கு விஷயமா யிருந்ததென் றருளிச்செய்தார். அதன்மேலும் ஜீயர் ஸ்வாமி! இங்ஙனமிருந்ததே யாகிலும், இவ்வாழ்வாருக்கது நிந்தையாகாதோ வென்ன? கேளீர் ஜீயரே! தேனை இச்சித்த கொசுக்கூட்டம் அதிலிறங்கினமாத்ரத்தில் அதன்பசையால் இறகும் காலுமொட்டிக்கொள்ள, அதனால் வருந்தி, வருந்துந் தசையிலுந் தமக்கதனால் வாய்த்தது இவ்விதியென்று கிஞ்சிற்றேனுமெண்ணாமல் உயிர்விடுமளவுமதையே சுவைத்து ஒழியுமாபோலே, இம்மாயாப் பெருவிற லுலகவின்ப சாகரத்தில் ஆழமறியாது காலிட்டுக்கொண் டழுந்துவோர்களான ஜீவர்களை அதினின்றும் மீட்கத் திருவுள்ளம்பற்றிய சர்வேசுவரன் வழிகாட்டிகளாக அவதரிப்பித்தவர்களோடு தாமுமொருவராய்க் கலந்திழிந்து ஜீவர்களது தீய க்ருத்யங்களையெல்லாந் தாமேறிட்டுக்கொண்டு, அவ்வவற்றி னுழைங்களை யளவிட்டுக் காட்டியும், அவை தம்மிலிருந்து மீளுவதற்குபாயமானது எம்பெருமான் றிருவடிகளேயென்று பாசுரமிட் டறிவித்தும், அவ்வுபாயத்தில் மனம் நிலைமாறுதிருக்கவேண்டித் தேஹாரோக்கியத்தினால் வருஞ் செருக்கையடக்குமதான கைங்கர்யமடியாய் வரும் நைச்சியாநு ஸந்தானத்தை யநுஷ்டித்துக்காட்டியும் போரு மவரானுலொழிய, ஜீவர்கள் திரும்பார்கள் காணீரென் றருளிச செய்தார்.

பட்டர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் திருவவதார வருஷம் ௪௱௲௩-க்குச்சரியான ப்ரமாதி வருஷம்.

ஸ்ரீ திருப்பாணாழ்வார் வைபவம்

தனியன்.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

திருமலைநம்பிக ளருளிச்செய்தது.

காட்டவே கண்ட பாதங் கமல நல்லாடை யுந்தி
தேட்டரு முதர பந்தந் திருமார்பு கண்டஞ் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி முனியேறித் தனிபு குந்து
பாட்டினால் கண்டு வாழும் பாணர்தாள் பரவி னோமே.

"ஸ்ரீ லோகஸாரங்க மஹா முநீந்த்ர ஸ்கந்தாதிரூடங் கலயாமி நித்யம் - ஸ்ரீரங்கரங்க மநீயபக்தம் கவீஸ்வரம் காயக ஸார்வ பௌமம்" என்கிறபடி நிர்த்தோஷரும் நிரவதிக பக்தியையுடையவருங் கவிஶ்ரேஷ்டரும் ஸ்ரீ லோகசாரங்க மகாமுனிவருடைய தோளின்மேலெழுந்தருளினவருமான திருப்பாணாழ்வாரை எப்பொழுதுந் துதிக்கின்றேன் என்றும், "அததத்ர குலேந்திமேரமார மணோரஸ் ஸ்திதலாஞ்சநாம்ஶஜ:, ஸமஜாயத பாணஸம்ஜ்ஞகஸ் ஸகவி: கார்த்திக மாஸிவைதபே" என்கிறபடி திருஉறையூரில் கார்த்திகைமாஸம் ரோஹிணிநட்சத்திரத்தில் அந்த்ய ஜாதியில் விலட்சண கவிசிரேஷ்டராய்த் திருமருவு மார்பனுடைய ஸ்ரீவத்ஸாம்சபூதராய் ஸ்ரீதிருப்பாணாழ்வா ரவதரித்தருளினார் என்றும் இவரவதாரவிசேஷத்தைத் திவ்யசூரி சரிதையில் சொல்லிற்று.

திவ்யதேச ப்ரபாவம்.

"காவேரீதோயமா ஸ்ரீத்யவாதோய த்ரப்ரவர்த்ததே, தத்தேஶவாஸிநாம் முக்தி: கிமுதத்தீரவாஸிநாம்" என்கிறபடி திருக்காவேரியின் ப்ரவாஹ ஸ்பர்ஸ ஸம்மந்தமுடைய காற்றானது சஞ்சரிக்கிற ப்ரதேசங்களில் வசிப்பவர்களெல்லோருஞ் சுகிர்தத்தைப் பெறுவார்களென்றால் அந்த தீரத்தில்தானே வாஸஞ்செய்யுமவர்க்குள்ள சம்பத்தை விவரிக்க வேண்டுவதுண்டோ? என்னலான திருக்காவேரி நதிக்கரையில் நிசுளாபுரியென்று சொல்லப்பட்டிருப்பதாய் மாட கூட ப்ரஸாதோபசோபிதமான திருவுறையூரிலே தர்மவர்மாவின் வம்சோற்பவனான சோழபூபதி மஹாதார்மீகனாய் ப்ருத்வீ பரிபாலனம்பண்ணாநிற்கச்செய்தே, நீளாதேவியின் ஹம்சையான உறையூர்நாச்

சியார் அவனுக்குப் புத்திரியாக வவதரித்தருள, அவன் மனமகிழ்ச்சி யுடையவனாய், ஸ்ரீஜனகராஜன் பிராட்டியைப் ப்ரீதியோடே பெற்றெடுத்து வளர்த்தாற்போலே, உவப்போடே வளர்க்க வளர்ந்தருளுந்தசையில் பாலக்ரீடாகாலத்திலும் நம்பெருமாளையல்லாது வேறு விளையாட்டை யறியாதவளாய்த், தன் சகிகளோடு ஒருநாள் உத்யானவனத்திலே டோலாலீலைகள் செய்துகொண்டு ப்ராப்தயௌவனையாய் ப்ரகாசித்துக்கொண்டிருக்க "வேட்டையாடிவருவானை விருந்தாவனத்தே கண்டோமே" என்கிறபடியே நம்பெருமாள் அங்கே ம்ருகயாவிஹாரபரராய் இந்த நாச்சியார் கண்ணிற்காணும்படி யெழுந்தருள, நாச்சியார் மோஹித்து ஊருக்குள்வந்து, பிதாவை யடிபணிந்து நம்பெருமாளையல்லது வேறொரு புருஷனுக்கு நான் வாழ்க்கைப்படேனென்றும் அவருக்கே என்னை உதகம்பண்ணிக்கொடுமென்றும் ப்ரார்த்திக்க, ராஜனும்சந்துஷ்டனாய், நம்பெருமாள் சன்னிதியிற்சென்று, அச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய,பெருமாளும் உவப்புடன்நோக்கி நாமே பாணிக்ரஹணம் பண்ணுவோம், உதகம் பண்ணிக்கொடுமென்று திருவுள்ளம்பற்ற, அவனுஞ் சந்துஷ்டனாய் அரங்கமாநகரை யலங்கரித்துப் பற்பல பறைமுழக்கத்தோடு அதிப்ரீதியுடனே பெருத்த கல்யாணஞ் செய்து, நாச்சியாரை உதகம் பண்ணிக்கொடுக்க; பெருமாளும் உவப்புடன் அங்கீகரித்தருள; அது அடியாக அரசன் தன்னுடைய ஸர்வ சொத்தையும் நம்பெருமாளுக்கேயாக்கி வாழ்ந்திருந்தான்.

ஆழ்வார் பிரபாவம்.

அக்காலத்திலே அந்த திருஉறந்தையில் "ஸ்ரீ வேலாப்தவிநிர்க்கமே கலியுகே ஸம்வத்ஸரே துர்மதௌ, பாநௌவ்ருஶ்சிகபாஜிபஞ்சமதி நேவாரே புதஸ்யோத்தமே, ரோஹிண்யாஸஹிதேஸத் யுடுபதௌ க்ருஷ்ணே த்விதீயேதிதௌ, ஸஞ்ஜஜ்ஞே முநிவாஹநஶ் சரணயோர் யோரங்கிணோந்தர்த்ததே" என்கிறபடிகலியாப்தம்முன்னூற்றுநாற்பத்துமூன்றில்நிகழ்ந்த துன்மதி வருஷம் வ்ருச்சிக ஸூர்ய ப்ரவேசகாலமாகிய கார்த்திகைமாதம் ஐந்தாந்திகதி க்ருஷ்ணபக்ஷம் த்விதியை புதவாரம் ரோஹிணி நட்சத்திரங்கூடிய சுபதினத்தில், நம்பெருமாளுக் கந்தரங்கரான இவ்வாழ்வார், ஸ்ரீவத்ஸாம்சராய்ச் செந்நெற் பயிரிடமாக வவதரித்தருளிச் சுவர்ணபிம்பம்போல் ப்ரகாசித்துக்கொண்டிருக்க;

அவ்வேளையில், அந்தச் செஞ்சாலி வரப்பின்மார்க்கமாய்ப் பத்நீ சகிதனாய் வந்துகொண்டிருந்த ஓர் பக்திசீலனான † பாணன் கண்டு ஆச்சர்யமடைந்து புத்ரசம்பத்தைக் கோரிவருந்தின தன்னுவல்தீர, நித்யதரித்ரன் நிதியைக்கண்டாற்போலே, தன் தசைமாறி இருகையாலுந் தழுவியெடுத்து மார்போடணைத்து மயிர்க்கூச்செறிய ஆனந்தித்துத், தன்பத்னி கையிற்கொடுக்க, அவ்வம்மையும் ஆதரம் விஞ்சி அங்கையிற்றாங்கி மார்வத்திலணைத்து மனமகிழ, அந்தக்ஷணமே ஸ்தனத்தில் பால் சோர்ந்தது. அது கண்டு அவ்வம்மை மிகவுமுவந்து அதை இவர்க்குண்ணக்கொடுக்க இவரதை யுண்ணாதவராகச், சதிபதிகளிருவரும் இவரைப் புத்ரஸ்வீகாரம் பண்ணிக்கொண்ட சந்தோஷப்பெருக்கோடு தங்கள் சேரிக்குக் கொண்டுபோய் ஆவின்பால்புகட்ட, அதை யுண்டருளினார்; அவர்கள் அன்றுதொட்டு இவர்க்கு ஆவின்பாலையே புகட்டி வளர்த்துவந்தார்கள். இப்படி வளர்ந்தருளுகிறகாலத்தில் "ஜாயமாநம்ஹி புருஷம்யம் பஶ்யேந்மதுஸூதந:, ஸாத்விகஸ்ஸதுவிஜ்ஞேயஸ்ஸவை மோக்ஷார்த்தசிந்த:" என்கிறபடி எந்த புருஷன் ஸ்ரீய:பதியினுடைய கடாக்ஷத்தைப் பெற்றுப் பிறக்கின்றானோ அவனே சத்வகுண ப்ரசுரனாயும் மோக்ஷத்திலிச்சையுடையவனாயுங் காணப்படுவானென்கிறபடியே, எம்பெருமானிவர்க்கு மயர்வற மதிநல மருளியபடியாலே கேவல ஸத்வகுண ப்ரசுரராகியும், மோக்ஷார்த்தியாகியும், ஆத்மகுணங்களைப் பெருக்கி, சேமமுடைய நாரதரைப்போலும் "நிக்ரஹாத் தாரயாஸ்மாத்வைதே நகீதபலேநமாம், ஏவமுக்த்வாதுசண்டாளம் ராக்ஷஸஶ் ஶரணங்கத:" என்றுஞ் சொல்லுகிறபடியே எம்பெருமானைப்பாடின கைசிகஸ்வரத்தின் பலனைக்கொடுத்து எனக்கு வாய்த்திருக்கிற இந்த நீச உருவத்தைப்போக்கி ரக்ஷித்தருள வேண்டுமென்று சரணாகதனான ப்ரம்ஹ ராக்ஷஸனுக்கிரங்கித் தான் படுகிற யாதொரு கைசிக கானத்தின் அந்த்யபாகத்திற்குறுப்பான பலனெதுவோ அதைக்கொடுத்து அவனுக்கு மங்களமுண்டாக்கியருளின காரணத்தால் (ப்ராம்ஹண வேள்விக் குறைமுடித்த பாகவத) ரென்றழைக்கப்படுகிற ‡ நம்பாடுவானைப்போலும், பகவத் க்ஞான வித்யைக்குச் சார்வபௌமராய் "பரமாத்மனைச் சூழ்ந்துநின்று" ஸாமகானம் பண்ணும் நித்யசூரிகளிலொருவர் வந்திங்கவதரித்திருக்கின்றாரோ! வென்று சொல்லலாம்படியான திவ்ய சரித்ரத்தை யுடையராகி ஸ்வ

---

† பாணன் — பஞ்சமன்.

‡ நம்பாடுவானென்னுமோர் பாகவதோத்தமர், திருக்குறுங்குடிக்குச் சமீபத்தில் முனிக்ராமமென்னும் ஊரைச்சேர்ந்த சேரியில் ஒரு

தோஷாநு ஸந்தானத்தாலே ஸ்வவரணாநுகூலமாக இரண்டாற்றுக்குநடுவில் தாம் மிதியாமே, தென்னாற்றின் தென்கரையில் திருமுகத்துறைக்கெதிரே நின்றுகொண்டு "தொழுமத்திசை யுற்று நோக்கி" என்கிறபடியே திருவரங்கமேயான்றிசையை நோக்கி "வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்று" உள்கலந்து, ப்ரதிதினமும் வீணையை

பாணனுக்குப் புத்ரராயவதரித்தருளி எம்பெருமானுடைய ஜாயமான கடாக்ஷத்தால் பால்யந்தொடங்கி இடையறாத பக்திரூபாபன்னக்ஞான சீலராகி, ப்ரதி ஏகாதசியிலும் வீணையுங்கையுமாய்த் திருக்குறுங்குடிக் கெழுந்தருளித் திருமதிட்கு வெளிப்புறத்தில் நின்றுகொண்டு நம்பியின் வடிவழகைத் தமது க்ஞானத்ருஷ்டியால் பர்வணிபுரிந்து திருப்புகழைப் பாடுவதும் அதில் நம்பி உவப்புடையவராய் இவரிருக்குமிடத்தேற வெழுந்தருளிச் சேவைசாதிப்பதுமாக பஹுகாலம் நடந்துவரா நிற்கக், கார்த்திகைமாஸம் சுக்லபக்ஷம் ஏகாதசிகூடிய ஓராளொருநாளில் இந்த பாகவதர் வழக்கப்படியே வீணையுங்கையுமாய்த் திருக்குறுங்குடிக்கு எழுந்தருளுகையில் நம்பியினுடைய வடிவழகை அகக்கண்ணாலேயுற் றனுபவித்துக்கொண்டே நடவாநிற்க, வழிமாறி யோர்காட்டுக்குள்ளே போய்விட, அங்குள்ள ஒரு ப்ரம்ஹராக்ஷஸன் இவரை மடக்கிப் பக்ஷணம்பண்ணப்புக, இவர் திடுக்கிட்டுப் பார்த்துத் தம்முடைய நல்வார்த்தையா லவனவசரத்தைப் போக்கித், தாம் நம்பியைச் சேவித்து மீளுகையில் அவ்வழியேவந்து அவனுக் காஹாரமாவதாய்ச் சத்யஞ்செய்து கொடுத்து விடுபட்டு நம்பி சன்னிதிக்கு த்வரையாயெழுந்தருளி வழக்கப்படிப்பாடி நம்பியை உவப்பித்தனுபவித்து மீண்டுவந்து அந்தராக்ஷஸனெதிரில்நிற்க; அவன் இவரடிகளில் தண்டனிட்டு அஞ்சலிஹஸ்தனாய் நின்று, சுவாமீ! அடியேன் பூர்வத்திலோர் ப்ராம்ஹணனாயிருந்து ஒரு ப்ரபலமான யாகத்தைச் செய்யப்புக்கு, அதில் மந்த்ரலோப க்ரியாலோபங்கள் நேரிட அதனால் சாபமேற்று இவ்வனுசிதமான நீசதேஹத்தை யடைந்திருக்கின்றேனாகையால் தேவரீர் எம்பெருமானை யுகப்பிக்கிற கைசிககானத்திற்குரிய பலனை அடியேனுக்குத் தத்தஞ்செய்தருளி இந்தச் சாபத்தினின்றும் மீட்டு ரக்ஷித்தருளவேண்டுமென்று பஹுப்ரகாரமாக ப்ரார்த்திக்க; இவரவனுக்கிரங்கித் தம்முடைய கானத்தின் அந்த்யபாகத்திற் குறுப்பானபலனை யவனுக்குத் தானம்பண்ணி மங்கள முண்டாக்கி யருளினவரானார். அந்தக் காரணத்தால் இவரை "ப்ராம்ஹண வேள்விக்குறைமுடித்த பாகவதர்" என்றும், கார்த்திகை மாஸம் சுக்லபக்ஷத்தில் வருகிற ஏகாதசியை "கைசிக ஏகாதசி" என்றும் சொல்வதாயிற்று. இவர் ப்ரபாவத்தை வராஹபுராணம் கைசிக மஹாத்மியத்தில் விரிவாய்க் காணலாம்,

மார்பிற்றூங்கி, மெல்லியவிரல்கள் சிவப்பெய்தத் தடவிமிழற்றிச் "சிந்திக்குந்திசைக்குந்தேறுங்கைகூப்பும்" என்கிறபடியே பெரிய பெருமாளை அனவரதபாவனை பண்ணிக்கொண்டு திருப்புகழ் பலவும்பாடிப் போருகையில், ஒருநாள் பெரிய பெருமாளுடைய திருமஞ்சனார்த்தமாக ஸகலவைபவங்களுடன் திருக்காவேரிக்கு வந்த ஸ்ரீலோகசாரங்க முனிவரரென்கிற ஜீயர் மெய்மறந்து கானம்பண்ணிக்கொண்டு நிற்கிற இவரைப்பார்த்து த்யானநிஷ்டரென் றறிந்துகொள்ளாமல் தமது வர்ணதர்மத்தை மாத்திரமே கவனித்துச் சீற்றங்கொண்டு சமீபஸ்தர்களுக்கு ஸூசிப்பிக்க, அவர்களிவர்மேல் கல்கொண்டெறிய, அது இவர் திருமேனியிற்படத், திருக்கண்களை விழித்துப்பார்த்துப் பயந்து "அபராதாந்க்ஷமஸ்வ" என்கிறபடி அடியேனுடைய அபராதங்களை க்ஷமித்தருளவேண்டுமென்று சொல்லிக்கொண்டே பிற்காலித்து விலகினர்.

அவ்வளவிலே, பக்த ஹ்ருதய நிவாசியான ஸ்ரீரங்கநாதனுடைய திருமேனியில் செந்நீர் ப்ரவாஹமிட்டது. அதைக் கண்ட அர்ச்சகபரிசாரகர்கள் பயந்தோடிச் சோழபூபதிக்கறிவிக்க, அவனும் வந்து சேவித்து நடுநடுங்கி அனேக விக்ஞாபனங்கள் செய்து கொண்டவனாயினன். அனந்தரம் நாச்சியார் பெருமாளிடத்தில் நமக்கந்தரங்கரான பாண்பெருமாள் இன்னமும் புறம்பே நிற்கலாவதோவென்று விண்ணப்பஞ் செய்யத் "தநோதாமேதத்கதம்மநஃ" என்கிறபடியே பெருமாளும் உவந்தவுள்ளத்தராகி, இவரை அருளப்பாடிட்டுப்போகவிட; அப்போதும் இவர் நித்யசூரிகளே சிறுமாமனிசராய் வந்து சஞ்சரிக்கிற இரண்டாற்றின் மத்யப்ரதேசத்தை நீசனாகிய இவன் மிதிக்கக் கூடுமோவென்று ஸ்வரூபத்தால்வந்த நைச்சியத்தாலும் ஸ்வவர்ணத்தால்வந்த நைச்சியத்தாலும் பிற்காலித்துக் கடுநடையிட்டு அகலப்பார்த்தார். அதனால் பெரிய பெருமாள், பின்னையுமிவர் பக்கலுள்ள க்ருபாதிசயத்தாலும், தனது நிரங்குச ஸ்வாதந்த்ரியத்தாலும் ஸ்ரீலோகசாரங்க முனீந்த்ரரைப் பார்த்து ஜீயரே! நமக்கந்தரங்கரான பாண்பெருமாளை நீர் நெகிழ நினைத்து நம்முடைய திருமேனியை நோகச்செய்வது தகுதியோ? அவரை உமது தோளிலேற்றிக்கொண்டு நம்பக்கலில் கடுகக் கொண்டுவரவேண்டுமென்று ஸ்வப்நமுகேன வருளிச்செய்தார்.

அவரும் விடிவோரையிலெழுந்திருந்து "அத்யமே ஸபலஞ் ஜந்மஸ¬ப்ரபாதாசமேநிஶா" என்கிறபடியே அற்றைவிடிவு தமக்கு நல்விடிவாயிற்றென்றுந் தம்முடைய ஜன்மம் நற்ப்ரயோசனத்தை யடைந்ததென்றும் நினைத்து ஸ்வப்நத்தை நிச்சயித்து, மிகவும் ஹ்ருஷ்டராய்த், தோதவத்தித் தூய்மறையோருடன் திருமுகத்துறையிலே "நாட்காலே நீராடி" அநுஷ்டானத்தை முடித்துக்கொண்டு "ஸ¬தூரமபிகந்தவ்யம் யத்ரபாகவதஸ்ஸ்திதஃ" என்கிறபடி பாகவதர்கள் எவ்வளவு தூரத்திலிருக்கினும் ஆயாசமில்லாமலே எதிர்கொண்டுபோய்க் காணவேண்டியது ஸ்வரூபமாகையாலே, "யாழினிசை வண்டினங்களாளம் வைக்கும்" அரங்கத்தை நோக்கி ஸேவித்துக் காணஞ்செய்து கொண்டு அதிதூரத்தில் நிற்கிற இவ்வாழ்வாரிடத்தேற விருப்போடெழுந்தருளித் திருவடிகளிலே தாளுந்தடக்கையுங் கூப்பிப் பணிந்து ஸ்வாமி! தேவரீரை நம்பெருமாள் எழுந்தருளுவித்துக்கொண்டு வரவேண்டுமென்று அடியேனை நியமித்தருளினாரென்று விண்ணப்பஞ்செய்ய; இவர் "குலந்தாங்குசாதிகள் நாலிலுங்கீழிழிந்து" என்றும், "குலங்களாய வீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன்" என்றும், "நீசனேனிறைவொன்றுமிலேன்" என்றுஞ் சொல்லுகிறபடியே நைச்சியத்தை முன்னிட்டுக்கொண்டு பிற்காலித்துத், திருவரங்கப் பெருநகரை நான் மிதிப்பேனோவென்ன; ஜீயர் ஆகில் பெரியபெருமாளருளப்பாடிட்டபடியே யடியேனுடைய தோளின்மேலே எழுந்தருளுவித்துக் கொண்டு போகச் சித்தமா யிருக்கின்றேனென்ன; அதின்மேல் இவர் "செய்த்தலையெழுநாற்றுப்போலவன் செய்வனசெய்துகொள்ள" என்கிறபடியே அவன்செய்யுஞ் சேமத்தையெண்ணித் தெளிவுற்றுப் பரதந்த்ரராய்நிற்க; ஜீயர் முக்தனைப்போருமவனை ஆதிவாஹிகர் எழுந்தருளுவித்துக் கொண்டு திருமாமணி மண்டபத்தேறப்போமாபோலே, இவரைத் தமது திருத்தோளின்மேலே கொண்டு அழகிய மணவாளன் திருமண்டபத்தவ்வருகேபுகப், பெரியபெருமாள் தம்முடைய திவ்யமங்கள விக்ரஹத்தை நித்யதரித்திரனுக்கு நிதிகாட்டுவாரைப்போல, இவருக்ககப்படக்காட்டியருள "கிரீடகேயூரக ரத்நகுண்டல ப்ரலம்பமுக்தா மணிஹார

பூஷிதம், விஸாலவக்ஷஸ்ஸ்தலஶோபி கௌஸ்துபம், ஶ்ரியாச தேவ்யாத் யுஷிதோருவக்ஷஸம், ப்ரதப்தசாமீ கரசாருவாஸஸம் ஸமேகலம்நூபுர ஶோபிதாங்க்ரிகம் ஸவர்த்துநீஜாத ம்ருணாளகோமளம் ததாநமச்சச்ச வியஜ்ஞஸூத்ரகம், புஜோபதாநம்ப்ரஸ்ருதாந்யஹஸ்தம், நிகுஞ்சிதோத்தா நிதபாதயுக்மம், ஸுதீர்க்கமுத்பாஹு முதக்ரவேஷம் புஜங்கதல்பம் புருஷந்த தர்ஶ'' என்கிறபடி இரத்னகசிதமான கிரீட-கேயூர-கௌஸ்துப-முக்தாஹார-யக்ஞோபவீத-பாதாபரணாதிகளையும் பெரிய பிராட்டியார் அமர்ந்திருக்குஞ் செல்வக்களஞ்சியமான விசாலவக்ஷஸ்தலத்தையும் ப்ரகாசித்து வலத்திருக்கரத்தைச் சிரசுக் கணையாக வைத்து இடத்திருக்கரத்தைத் தொடையின்பேரில் படியவைத்துக்கொண்டு, வலத்திருத்தாளைச் செவ்வேநீட்டி, இடத்திருத்தாளை யதன்மேல் அழகாய்த் துவளக்கிடத்திக்கொண்டு, திருவனந்தாழ்வானென்னும் படுக்கைமேல் சாய்ந்தருளியிருக்கிற திருக்கோலத்தைச்சேவித்து, ஸ்தனந்தயப்ரஜைமாதாவினுடைய ஸர்வாவயவங்களுங்கிடக்கச்செய்தே, முலையிலே வாய்வைக்குமாபோல (சேஷிபக்கல் சேஷபூதன் இழியுந்துறை திருவடிகளாகையாலே) அவனுடையஸர்வாவயவங்களுங்கிடக்கச், சேஷித்வ-போக்யத்வ - உபாயத்வங்களில் குறைவற்ற திருவடிகளையே பற்றி "அரங்கத்தம்மான் றிருக்கமலபாதங்கள் வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றவே'' என்று பாசுரமருளிச்செய்து (அரங்கத்தம்மான் என்கையால்) சேஷித்வத்தையும், (கமலம் என்கையால்) போக்யத்வத்தையும், (பாதம் என்கையால்) உபாயத்வத்தையும் வெளியிட்டு ஸ்ரீபெரியாழ்வார் "திருப்பாத கேசத்தை விருப்பாலுரைத்'' தனுபவித்தாற்போல, "இருளகற்று மெறிகதிரோன் மண்டலத்தூடேற்றிவைத்தேணிவாங்கி, யருள்கொடுத்திட் டடியவரை யாட்கொள்வானை'' அழகிய மணவாளனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தைப் பாதாதிகேசாந்தமாக அநுபவித்து அவ்வநுபவஜனிதப்ரீதி யதிசயத்தாலே "அமலனாதிப்பிரான்'' என்கிற திவ்ய ப்ரபந்தத்தைப் பத்துப்பாசுரங்களாகப் பிற்பாடரும் அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கலாவதாகத் திருவாய்மலர்ந்து உபகரித்தருளி உலகத்தை வாழ்வித்து மிகவு

முவப்போடே நிற்க அப்பொழுதே அழகிய மணவாளன் (குறுவேர் சூடுமவர்கள் மண்பற்றுகழற்றுதாப்போல) இவரை அந்த திருமேனியோடே அங்கீகரித்தருள, அகிலரும் காணும்படி இவர் அவன் திருவடிகளிலே அந்தர்ப்பவித்தருளினர். இவ்வாழ்வார் இந்த விபூதியிலெழுந்தருளியிருந்தது எண்பது திருநக்ஷத்ரம்.

திருநக்ஷத்திரத் தனியன்.

வ்ருஸ்சிகே ரோஹிணிஜாதம் ஸ்ரீபாணிம்நிசுளாபுரே, ஸ்ரீவத்ஸாஙஙகாய கேந்த்ரம் முநிவாஹஸமாஸ்ரயே.

ஸ்ரீ திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

☞ ஸ்ரீ திருப்பாணாழ்வார் திருவவதாரவருஷம் ௪௯௲௯-க்குச்சரியான ப்ரமாதி வருஷம்.

ஸ்ரீ திருமங்கையாழ்வார் வைபவம்.

தனியன்.

உடையவ ரருளிச்செய்தது.

நேரிசை வெண்பா.

வாழி பரகாலன் வாழி கலிகன்றி
வாழி குறையலூர் வாழ்வேந்தன்—வாழியரோ
மாயோனை வாள்வலியான் மந்திரங்கொண் மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்.

“ஸமஜாயத தத்ர ஸாபரப்ரமுக: கஸ்சநீலநாமக:, புருஷோத்தம கார்முகாம்ஸஜஸ் ஸ்புரிதேகார்த்திகக்ருத்திகோடுநி” என்கிறபடி கார்த்திகைமாதம் க்ருத்திகைநக்ஷத்ரத்தில் ஸ்ரீசார்ங்காம்ச பூதரான கலிகன்றி நீலனென்னும் பெயரையுடையவராய் மிலேச்சகுலத்தி லவதரித்தருளினர் என்றும் “பரகாலஹரிம்வந்தே ஹரிபாதகுஹாஸயம், உந்நதப்ரதிகூலேப கும்பஸம்பேத விப்ரமம்” என்கிறபடி ஸ்ரீய:பதியினுடைய திருவடித்தாமரைகளாகிற குஹையை ஆசிரயித்து ப்ராந்த லட்சணத்தையுடைய ப்ரதிவாதிகளான யானைகளின் மஸ்தகங்களைப் பேதிக்குமதில் கிஞ்சிற்றேனும் அவகாசம்பெறுமல் வ்யாபரிக்கும் பராக்ரமசாலியான பரகாலனென்னும் ஹிம்ஹத்தைச் சேவிக்கின்றேன் என்றுஞ், சப்தபலத்தாலே மிரட்டப்படுகிற பாஹ்யமதயானைகளைப் பரிவாரங்களாகவுடைய ஸ்ரீய:பதியினுடைய திருவடிகளில் வணங்கும் முடியினையுடைய பரகாலனென்னும் ஸிம்ஹமே! தேவரீருடைய திருவடிகளை யாசிரயிக்கிறேன் என்றும் இவரவதாரவிசேஷத்தைத் திவ்யசூரிசரிதையில் சொல்லிற்று.

இவ்வாழ்வாருடைய வைபவமிருக்கும்படி யெங்ஙனேயென்னில்; திருவாலிதிருநகரியைச்சார்ந்த திருக்குறையலூரில் கள்ளக்குடிமரபில் தலைவனயிருந்த நீலன் என்பவருக்குப் புத்ரராக “ஸப்ததாஹ்ராநாப்தாநாம் கலியுக ஹவாநாம பகமே, நளேவர்ஷேமாஸேஸரதிசரமே தைவதகுரோ: திநேதாரே வஹ்நேஸ்ஸிஸிரகிரணே பூர்ணிமஜுஷி, க்ஷிதாவாவிர்ப்பூத: கலிரிபுரமே

யாத்ம மஹிமா" என்கிறபடி கலியாப்தம் மூன்னூற்றெட்டில் நிகழ்ந்த நளவருஷம் சரத்ருதுவில் வ்ருச்சிக சூர்ய ப்ரவேசகால மாகிய கார்த்திகைமாஸம் குருவாரம் பௌர்ணமி க்ருத்திகாநட்சத்ரங்கூடிய சுபதினத்தில் ஸ்ரீ சார்ங்காம்சராயவதரித்தருள; தந்தையார்இவருடையகட்டழகைக்கண்டுகளித்துஜாதகர்மமுதலியவற்றைச்செய்துவைத்து இவருக்கும் நீலனென்றே நாமகரணஞ் செய்துவளர்த்துவருகையில் இவர் "தெரியேன்பாலகனாய்" என்கிறபடியே பால்யாவஸ்தானந்தரம் சகல வித்யாபாரங்கதராய் மல்வித்தை வில்வித்தை அஸ்வாரோஹண கஜாரோஹண ரதாரோஹணாதி சங்க்ராமலக்ஷணானுபவங்களிலும் அதிநிபுணராய்ச், சோழபூபதியைச்சேவித்து ஓர்சேனாவீரராகி நீர்மேல்நடப்பான், நிழலிலொதுங்குவான், தோராவழக்கன், உயரத் தொங்குவான், தாளூதுவான்,சாயைபிடிப்பான்என்கிறதோள்துணைவர்களோடு அதிக பராக்ரமசாலியாயிருக்கச், சோழராஜன்கண்டு சந்தோஷித்து இவரைத்திருவாலி திருநகரிக்குச் சிற்றரசனாக்கிவைத்தான்.

அக்காலத்தில் இவர் "மாரனார்வரிவெஞ்சிலைக்காட்செய்து" "தெரிவைமாருருவமேமருவி" மிகவும் விஷயப்ரவணராயிருக்க; ஆலிநாட்டிலேநன்றாயிருப்பதொரு தடத்தவிழ் தாமரைப்பொய்கையில் "சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர்களாடுஞ்சீர்" என்கிறபடியே சில அப்ஸரஸ்ஸுக்கள்நாளும்வந்து ஜலக்ரீடைபண்ணிப் போகாநிற்க; அவர்களில் திருமங்கையென்னுமொரு அப்ஸரஸ்ஸு ஒருநாளில் குமுதமலர் கொய்துவரப்போக அச்சமயத்தில் மற்றவர்களவளைமறந்துவிமானமேறிக்ககனமார்க்கமாய்ப்போய்விட; அந்த மங்கையர்க்கரசி மானுஷமான சரீரத்தைப் பரிக்ரஹித்துத்தனித்துநிற்க; அப்பொழுது திருநகரியில் எம்பெருமானைச்சேவித்துத்திரும்பித் திருநரங்கூருக்குப்போவாரொரு பாகவதர் அனுஷ்டானார்த்தமாக அந்தப் பொய்கைக்குச் சென்று தனித்துநிற்கிற அப்பெண்ணரசியைப்பார்த்து நீயார் பிள்ளாய்! என்றுகேட்க; சுவாமி அடியேன் திருமங்கையென்னும் நாமத்தையுடையளாய்ச் சகிகளான அப்ஸரஸ்ஸுக்களோடு அவர்கட்கெல்லாம்நாயகியாய்த்திவ்யரூபத்தோடேசஞ்சரித்துக்கொண்டிருந்தவள்; அப்படியிருக்கையி லொருநாள் ஹிமவத்கிரிக்குப்போய் அங்குள்ள வைபவங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு வருமளவில் ஒருசித்தாசிரமத்தில் ஸ்ரீமந்நாராயணாம்சஜரான கபிலாசார்

யர்பகவத்வைபவங்களைச்சொல்லஅதைக்கேட்டுக்கொண்டிருந்த மஹருஷிகளில் ஒருவரைப்பார்த்து இவர் குரூபியாய்க் காணப் படுகிறுரென்று அடியேன் பரிஹாசம்பண்ணுகிற்க, கபிலாசார்ய ருக்கு அடியேன்பேரில் சீற்றம்பிறந்து நீ மனுஷ்யதேஹத்தைப் பரிக்ரஹித்து நீசனுக்கு வாழ்க்கைப்படக்கடவாயென்று சபிக்க; அப்போது அடியேன் அதிகசோகத்தோடே அவரை ப்ரார்த்தி க்க; அவர் ப்ரஸன்னராய்ப் பிள்ளாய்! ஜகத்ரக்ஷணார்த்தமாக நம் முடைய சார்ங்காம்சஜரான பரகாலனென்பவர் திருக்குறைய லூரில் அவதரித்துத் திருவாலி திருநகரிக்கதிபதியாகி வாழ்கி ன்ருராகையால் நீ அவருக்குப்பத்நியாயிருந்து அவரைப் பாகவ தோத்தமராம்படிக்குப்புருஷகாரம்பண்ணுவாயாகில் அப்போ துன்குறை தீருமென்று திருவாய்மலர்ந்தருளினர்; ஆகலின் அடியேனிங்குவந்து இங்ஙனம் மானுஷமானசரீரத்தை ப்ராபித் திருக்கின்றேனென்று தான்வந்த க்ரமத்தைச் சொல்ல; அந்த பாகவதரும் புத்ரஹீனதையாலே மிகவுஞ் சந்துஷ்டராயுகந்து; ஆகில் குழந்தாய்! நமக்கு நீர் புத்ரியாகவிருப்பீர் வாருமென்று தமது திருமாளிகைக் கழைத்துக்கொண்டுபோய்ப் பத்நியை யழைத்துத் தமக்குக் குமாரி வந்த க்ரமத்தைச் சொல்லி ரட்சிக் கும்படிக் காட்டிக்கொடுக்க; அவ்வம்மையும் * வந்த்யையாகை யாலே, அதிப்ரீதியோடே யங்கீகரித்துக் குமுதமலரைக் கையிற் கொண்டிருந்ததே காரணமாகக் "குமுதவல்லிநாச்சியார்" என்று திருநாமஞ்சாற்றி வளர்த்துக்கொண்டுவர; அவ்வளவில் அந்தப் பெண்பிள்ளையின் கட்டழகைக்கண்டுங் கேட்டுமிருந்த சிலர் நீல நிறத்தரான இவ்வாழ்வாருக்குணர்த்தினர்.

அதுகேட்டு இவர் நின்றவா நில்லாநெஞ்சினையுடையராய்க் "கலவியேகருதியோடினேன்" என்கிறபடியே அப்பொழுதே திருநாங்கூருக்குச் சென்று, மருத்துவனை அந்தப்பாகவத ரக த்தேபுகுந்துஅவருடனேசம்பாஷணம்பண்ணிக்கொண்டு இடை கழியிலே யிருக்கச்செய்தே, அப்பெண்பிள்ளை அவ்விடத்திலுலா வக்கண்டு விஸ்மிதராய், அந்தப்பாகவதருடனே இந்தச் சுவர்ண சோபிதமான திருவுருவமைந்தபெண் அனபத்யரான உமக்கு எங்ஙனம் வாய்த்ததெனென்றுகேட்க; அவர் அப்பெண்ணின் வர லாற்றை விவரமாகத்தெரிவித்துத் தனக்கிருந்தபுத்ரசோகந்தீரப்

* வந்த்யை - மலடி.

பெற்றதையுமுரைத்து அக்ஞாதகுலகோத்ரையான இவளையாரு க்கு வாழ்க்கைப்படுத்துவதென்று இவளுடைய விவாஹோசித பருவத்தைக்கண்டு வ்யாகுலாந்தகஃ கரணனாகாநின்றே னென் றுஞ் சொல்ல; அவ்வளவிலே இவர், அப்பெண்ணைத் தமக்கே பத்நியாகத் தரவேண்டுமென்று கேட்டு அப்போதே வஸ்த்ரபூஷ ணாதிகளைச்சங்கோசமறக்கொடுத்து மிகவுமனுவர்த்திக்க; அவரு மிவருக்கே உதகம்பண்ணிக்கொடுக்க உத்யோகிக்க; அத்தறுவா யில் அந்தப்பெண்பிள்ளை "தாபஃபுரண்ட்ரஸ்ததாநாம மந்த்ரோ யாகஶ்சபஞ்சமஃ" என்கிறபடி தப்தசக்ராங்கன - ஊர்த்வபுண் டரதாஸ்யநாம - திருவஷ்டாக்ஷரி யுபதேச-திருவாராதனங்களை யுடையவர்களுக்கொழியமற்றொருவற்கென்னைப்பேசவொட்டே னென்று தன்னுடைய அத்யவஸாயத்தைச்சொல்ல; இவர் அவ் வசனத்தைக்கேட்டதேகாரணமாகத் திருநறையூருக்குச்சென்று "ஶுபஸ்ய ஶீக்ரம்" என்கிறபடியே அதித்வரையோடு "பொன் னியலுமாடக்கவாடங் கடந்துபுக்கு" என்கிறபடியே திருநறை யூர்நம்பி திருமுன்பேசென்றுநின்றுப்ரார்த்தித்து "அக்நிதப்தே நசக்ரேண பாஹூமூலேது லாஞ்சிதஃ" என்கிறபடியே தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்தருசக்கரத்தின் கோயிற் பொறியாலேயொற்றுண்டு "ஸர்வைஶ் ஶ்வேதம்ருதா தார்யம் ஊர்த்வபுண்டரம் யதாவிதி, ருஜூநி ஸாந்தராளாநி ஹ்யங் கேஷு த்வாதஶஸ்வபி" என்கிறபடி நெற்றி-உதரம்-கண்டம்-உத ரத்தின் வலப்புறம் - இடப்புறம் - வலப்புஜம்-இடப்புஜம்-வலத் தோள்-இடத்தோள்-அடிமுதுகு-பிடரி ஆகிய விப்பன்னிரண்டு அவயவப்ரதேசங்களிலும் இடைவெளியுடைய ஊர்த்வபுண்ட்ர ங்களைத் தரித்துக்கொண்டு துளசீநளினாக்ஷமாலைகளைக் கழுத்தி லணிந்து கம்பீரமாய்க்காண்பதோர் சிரேயஸ்ஸையுடையராய்க், குமுதவல்லியார் திருமாளிகைக்கேறவந்து அந்தத் திருமங்கை யின்ஸ்வீகாரதந்தையைநோக்கி என்பட்சத்திலினியென்னகுறை காண்பீர்கள்? என்று கேட்டு நிற்க; குமுதவல்லியார் "ஆராதநா நாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதநம்பரம், தஸ்மாத்பரதரம் ப்ரோக்தம் ததீயாராதநம் ந்ருப" என்கிறபடியே சமஸ்த தேவ தைகளையு மாராதிப்பதைக்காட்டில் விஷ்ணுவை ஆராதிப்பது சிரேஷ்டமென்றும், அதைக்காட்டில் அவனடியார்களான பாக வதர்களை யாராதிப்பது அத்யுத்க்ருஷ்டமென்றும் சொல்லப்படு

கையால், நீர் ஒரு ஸம்வத்ஸர காலம் நித்தியம் ஆயிரத்தெட்டு ஸ்ரீவைஷ்ணவர்களை அமுதுசெய்வித்து அவர்களுடைய ஸ்ரீபாத தீர்த்த தளிகை ப்ரசாதங்களை ஸ்வீகரித்து ஸ்வரூபக்ஞரானு லொழிய உம்மை நான் பர்த்தாவாக அங்கீகரியேனென்று ஒரு நியமம் பண்ண; இவர் அதற்குமிசைந்து ப்ராவண்யாதி சயத் தாலே ப்ரதிக்ஞைபண்ணிக் கொடுக்க; அனந்தரம் அந்தப்பெண் பிள்ளையை இவருக்கு ஊரும் நாடுமறிய நல்லதோர் வதுவை செய்து உதகபூர்வகமாகச் சமர்ப்பித்தார்கள்.

அதன்பின்பு இவ்வாழ்வார்திருமாலடியாரைப்பூசிக்க ஒருப் பட்டு,அதற்காகத்தம்முடையசர்வசொத்தையும்வ்ரயம்பண்ணித் ததீயாராதனகைங்கர்யஞ்செய்துகொண்டிருக்க;அப்போதுபுறங் கூறிக்காலங்கழிக்குஞ் சிலபுத்திஹீனர்கள் சோழபூபதியிடத்திற் போய்ச்சமயம்பார்த்துப் பரகாலன்பகுதித்ரவ்யங்களையெல்லாம் வ்ரயம்பண்ணித் ததியாராதனஞ்செய்து, ஏழையாய் விடுகிறானே நீர் அவன்கையில் ஒருதேசத்தின் ஆளுகையைக்கொடுத்திருக்கை யால் என்ன பிரயோசனத்தை யடையப்போகிறீரென்ன? அவன் அதைக்கேட்டுக் குபிதனாய்ப்பகுதிக்காக இவர்பக்கல்தரவுக்காரர் களையனுப்ப; அவர்கள் அதித்வரையாய் இவரிடம்வந்து பகுதி யைக் கொடுமென்றுகேட்க; இவர் அவர்களுக்குச்சில சமாதான வார்த்தைகளைச்சொல்ல அதை அவர்கள் கேளாமல் நிர்ப்பந்திக் கத்தலைப்பட, இவரவர்களைத் தள்ளிவிட, அவர்கள் அரசனிடம் போய் நடந்ததை யறிவிக்க அவன் தன்னுடைய ஆக்ஞைக்குப் பங்கம் வரலாமோவென்று சீறித் தன்னுடைய சேனாநாயகனை சண்டஸ்வரனென்பவனை யழைத்து நீபோய் அந்தப்பரகாலனைக் கைப்பிடியாகக்கொண்டுவரக்கடவா யென்றாக்ஞாபிக்க; அவனும் அப்போதே நால்வகைச்சேனைகளையுங்கூட்டிக்கொண்டு வெளிப் பட்டுவந்து,நாகைப்பட்டணத்திலிருந்து திருவாலிதிருநகரிவரை யில் அங்கங்குந் தளத்தைப் பிரித்து அணிவகுத்து வளைத்துக் கொண்டுகோலாஹலஞ்செய்ய;அந்தச்செய்தியைஇவர்சாரர்களா லறிந்துகொண்டு தம்முடைய சேனாபதியான சத்ருபஞ்ஜனனை அவர்கள்மேலேவ; சத்ருபஞ்ஜனனும் அந்தக்ஷணமே சில சைன் யங்களுடன் எதிர்கொண்டுபோய் தளநாயகனாய்வந்திருந்த சண் டஸ்வரனை ஸம்ஹரித்து, அவன் சேனைகளையும் பராஜிதராக்கி யோட்டிவிட; அந்தச் சண்டஸ்வரனுடைய புத்ரனாகிய சுப்ர

மண்ய உபாசகனான கார்த்திகேயனென்பவன் பிதாவின்மரணத்தைக்கேட்டுக் சோகாவிஷ்டனாய்க் கோபித்தெழுந்து, திரும்பிச் சேனைகளைத் துணைசேர்த்துக்கொண் டெதிர்த்துவந்து, ப்ரமாதமான யுத்தஞ்செய்தும் ஜயம்பெறாமல் அலுத்துத் திரும்பியோடி அரசனுக்கறிவிக்க; அவனும் விதேஹ பர்ப்பராதி ராஜர்களைச் சஹாயமாகக் கூட்டிக்கொண்டு படையெடுத்து, அதிரப்பறை முழக்கஞ்செய்துகொண்டு யுத்தத்திற்குவர; அவனெதிரில் இவர் தாமே யுத்தோன்முகராகி ப்ரபலமானயுத்தஞ்செய்து கொண்டிருக்கையில், இவருடைய மந்த்ரிகளிலொருவனான சாயை பிடிப்பான்கையிலே அவன் பாண்டிய மிதுலாதிபதிகளோடும் அகப்பட்டுக்கொண்டு பராஜயமடைந்து பிழைக்க விடந்தேடி யோடிச் சிலநாள்கழிந்தபின்பு ஸ்ரீவைஷ்ணவவேஷம் பூண்டுவந்து கலந்திருந்து ஆயமறிந்துகொண்டு, சமயம்வாய்த்தபோது கபடமார்க்கமாய்த் தன்னுடைய சேனைகளை வரவழைத்துத் திடீரென்று வளைத்துக்கொண்டு, இவரைப் பிடித்துக் காவலுக்குட்படுத்தி நரையூர் நம்பி சன்னிதியிலே கொண்டுபோய்விட்டுக் காவல்வைத்துப் போயினான்; அன்றிரவில் நரையூர் நம்பியிடத்தில் நாச்சியார் சுவாமீ! தேவர் சன்னதியில் நம்முடைய பரகாலன் உபவசிதராயிருப்பது தகுமோவென்ன; நம்பி நாச்சியார் கேள்விக்கிசைந்து நாச்சியாருந்தானுமாய் மடைப்பள்ளிக்குள்போய், அங்கிருந்த ப்ரசாதசேஷங்களையும் பாலமுதையும்நாச்சியார்திருக்கையாலெடுப்பித்துக் கொண்டு இவரிடம்வந்து அவற்றை ப்ரசாதிக்க; இவர் ஸ்வீகரித்துச் சயனித்துக்கொண்டு, தனக்குநேர்ந்த ஆபத்தை நினைப்பதை விட்டு, இன்றுதொட்டு ததியாராதன கைங்கர்யம் சித்தியாமற் போகிறதேயென்று வ்யாகுலமடைந்து, பெரியபெருமாளையும், பேரருளாளனையும், திருவேங்கடத்தப்பனையும் நினைவிற்கொண்டு சோகித்துக்கிடக்க; இவருடைய ஸ்வப்பநத்தில் பேரருளாளன் ப்ரசன்னமாய், ஆழ்வீர்! நீர் நம்முடைய காஞ்சீமஹா நகரிக்குவருவீராகில் உம்முடைய கவலையைத் தீர்த்தருள்வோமென் றருளிச்செய்து போக இவரும் வைகறையிலெழுந்து சோழபூபதியின் மந்த்ரிகளை நோக்கி, நீங்கள் என்னுடன் காஞ்சீபுரிக்கு வந்தால், அவ்விடத்தில் ஆபத்தனமாகச் சேமித்துக்கிடக்குந் தனத்திலிருந்து உங்களுக்குத் தரவேண்டிய பகுதி த்ரவ்யங்களைக் கொடுத்து விடுவேனென்ன; அவர்களிதை அரசனுக்குத் தெரியப்படுத்த; அவன் இவரைக் காவலுடனே

கொண்டுபோய் இப்போது சொல்லியபடியே செய்யக் கடவீ ரென் றுக்ஞாபித்தான்.

அவர்களும் ஆக்ஞைப் படிக்கே இவரைக் காவலோடே காஞ்சீநகர்க் கழைத்துப்போக;இவரவ்விடத்திற்போய்ப் பேரரு ளாளன் றிருவடிகளில் தம்முடைய நெஞ்சை யொப்புவித்துக் கண்களை மூடிக்கொண்டு கிடக்கக் கருணாகரனும் அர்த்திதார்த்த ப்ரதானரான பேரருளாளன் மறுபடியும்இவர்ஸ்வப்நத்தில்வந்து அஞ்சாதே கொள்ளும் ஆழ்வீரென்று வேகவதி தீரத்திலே தன மிருக்குமிடத்தை அடையாளத்தோடுங் காட்டி யருளிப்போக; இவர் விழித்தெழுந்துபோய் அவர் காட்டிய அடையாளத்தைக் கண்டு அவ்விடத்தில்பூமியைக் கல்லிச்சோதித்து த்ரவியமிருக்கக் கண்டு,இராஜமனுஷ்யரிடத்திற்சேர்க்கவேண்டியபகுதித்தொகை யைக்கொடுத்துவிட்டு மிகுதியாயிருந்த த்ரவியத்தைத் ததீயாராத னார்த்தமாகவைத்துக்கொள்ள; அப்போதுந்தரவுக்காரர்கள் இத ன்றியுந் தான்யமும் வரவேணுமென்று நிர்ப்பந்திக்க; இவர் அற் றைப்பொழுதெல்லாம் வ்யாகுலாந்தஃகரணராகியிருக்க; அன்றிர விலும் அருளாழிப்பிரானான பேரருளாளன் இவருக்கு ஸ்வப்நஞ் சாதித்து ஆழ்வீர்! அஞ்சாமற்போய் ஆற்றின்மணலைத் திரட்டி அளந்துகொடுமென் றருளிச்செய்துபோக; இவர் விடிவோரையி லெழுந்து அவர்களைவேகவதியாற்றுக்கழைத்துக்கொண்டுபோய் அங்குள்ள மணலைத்திரட்டி மரக்காலிட்டளக்க, அது அவர்கள் கண்ணுக்குச் செந்நெல்லாக, அவர்களற்புத மடைந்து பெற்றுக் கொண்டு இவரைவிட்டுச் சோழராஜனிடத்திற்போய் பகுதித்திர வ்யமுந் தரவுதான்யமுங் கிடைத்தவிதத்தை உள்ளபடி யறிவிக்க அவன்கேட்டு அச்சமுற்று, இவர் சாமான்யரல்லரென் றுணர்ந்து த்ரௌபதைக்குக்காதகரெதிரில் புடவைசுரந்தாற்போலே இவரு க்கும் காவலனெதிரில் த்ரவியஞ்சுரந்தது காண் என்று மந்திரிகளி டத்திற்சொல்லிஆச்சர்யப்பட்டு,அந்தத்ரவ்யத்தைத்தன்னுடைய நிதியில் சேர்த்துக்கொள்ளாமல் ஒருபுறமாய்வைத்திருந்து, இவ ரை அதிகமர்யாதையோடுவரவழைத்து, இவர்திருவடிகளில் அவ ற்றை அபராதகாணிக்கையாகச் சமர்ப்பித்துத், தண்டனிட்டெ ழுந்து அஞ்சலிஹஸ்தனாய் நின்று அபராதக்ஷாபனம் பண்ணிக் கொண்டு, பஹுமுகமாக பஹுமானமுஞ் செய்து போக விட் டான். அதன்பின்பு இவர் அந்த த்ரவ்யத்தைவைத்துக்கொண்டு

சிலகாலந் ததீயாராதனத்தைநடத்திவந்து, அதுவுஞ் சிலவழிந்த வாறே, கைங்கர்யத்தி லுண்டான ஊற்றத்தால், வழிபறித்தாகி லும் அதைக்குறைவற நடத்தவேணுமென்று நாளும் அரண்யங்க ளிற்போய் வழிகட்டிப் பறித்துக்கொண்டுவந்து கைங்கர்யத்திற் குபயோகப்படுத்தி வருகையிலுந் த்ரவ்ய மெட்டாமையா யிருக் கப் பின்னையுந்தனார்ஜ்ஜனம்பண்ணவேண்டி, நீர்மேல்நடப்பான்-நிழலிலொதுங்குவான்-தாளூதி-தோராவழக்கன் என்கிற நால்வ ரையும் வெவ்வேறு மார்க்கத்தில்நிறுத்தித் தாமுமொரு மார்க்க த்திலிருந்து அந்திசந்தி இரவுகாலங்களில் வழிநடப்பவர்களுக் குள் உலோபர்களாய்க் காணப்படுமவர்களை மடக்கி, அவர்கள் ஸ்வத்தையெல்லாம் பறித்துக்கொண்டு வந்து, யதா மனோரதமா ய்ச் சிலவிட்டுத் ததீயர்களையாராதித்துவந்தார். ஒருநாள் மத்திய ராத்திரியில் ஒரு அம்மையார் தன்னுடைய பர்த்தா ப்ரஸாதங் கொண்ட காம்ஸ்ய பாத்ரத்தைச் சுத்திசெய்கைக்காக வெளியே கொண்டுவர, இவர் திடுக்கென்றோடி அதை வெடுக்கென்று பிடு ங்க, அந்த அம்மையார் திருவரங்கம்பெரியகோயில் என்று திரு ம்ப; இவர் பயந்து ஐயோ! இவ்வம்மையாரைப் பாகவதையென் றறியாமற்போனோமே! என்று விசனப்பட்டு அந்த பாத்ரத்தை அவர் வாசற்படியில் எறிந்துவிட்டோடிப்போய், மார்க்கத்தில் * திருமணக்கொல்லையில் உன்னதமாயிருந்ததொரு அஸ்வத்த வ்ருக்ஷத்தின்மே லேறிப்பதுங்கி இன்னும் யாராவது நடப்பா ருண்டோ வென்று பார்த்துக் கொண்டிருந்தார்.

அவ்வளவிலே "ஸாக்ஷாந்நாராயணோதேவ: க்ருத்வாமர்த்யமயீந்தநும்-மக்நாநுத்தரதேலோகாந்காருண்யாச்சாஸ்த்ரபாணிநா" என்கிறபடி ஸர்வஸ்வாமியானஸ்ரீயஃபதிதன்னுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தாலே, சம்ஸாரார்ணவத்தில்முழுகிக்கிடக்கிற சேதனர் களைத் தன்னுடைய சாஸ்த்ரமாகிய திருக்கையாலெடுத்து ரக்ஷிக் கைக்காக மனுஷ்யதேஹத்தைத்தரித்து எதிரேவருகிறானென்னு மதற்கொக்க, வயலாலிமணாளன் (இவர் வழிபறித் தாகிலுந் ததியாராதனையாகிற சரமபுருஷார்த்தநிஷ்டையில் த்ருடம்பெற் றிருப்பதையே பற்றாசாக) இவரை விசேஷ கடாக்ஷம் பண்ணி

---

*ஸ்ரீயஃபதிமணக்கோலங் கொண்டெழுந்தருளியதே காரண மாக அந்த கொல்லைக்குத் "திருமணக்கொல்லை" எனப் பெயர் வந்தது.

யங்கீகரிக்கக் கடவோமென்று திருவுள்ளம்பற்றிப், பிராட்டி சஹிதனாய் ப்ராம்ஹண வேஷம்பூண்டு மணக்கோலந்தரித்து அளவற்ற ஸ்த்ரீதன த்ரவ்யங்களை யெடுப்பித்துக்கொண்டு ஒரு பெருந்திரளோடு வாராநிற்க; இவர்கண்டு, அதிக சந்தோஷத்துடனே ஆலோசித்துக்கொண்டு ஆயுததரராய் நெருங்கிப் பெரிய ஆரவாரம்பண்ணி வளைத்து, வஸ்த்ராபரணாதி ஸர்வ ஸ்வத்தையும் அபஹரித்துக்கொண்டு, கடைசியாகப் பிராட்டியின் ஸ்ரீபாதங்களிலிருந்த அருகாழிகளையும் விடத் திருவுள்ளமில்லாதவராய்த் தண்டன் ஸமர்ப்பிக்குமாபோலே காணும்படி முடியை வணக்கித் திருவாய்த் திருமுத்துக்களால் கவ்வி நீக்கியெடுத்துக்கொள்ள; அப்போது வயலாலிமணாளன் இவரை நோக்கி நீர் நங்கலியனோ? என்றருளிச்செய்தான்.

பின்பு இவர்தாம் பறித்துக்கொண்ட ஸ்வத்துக்களையெல்லாஞ் சுமை சுமையாகக்கட்டி யெடுக்கப்போக, அவைபெயர்க்கவுங் கூடாதபடி யிருந்தமையால், மணவாள ப்ராம்ஹண வேஷதாரியான வயலாலிமணாளனை நோக்கி ஓய் ப்ராம்ஹணரே! நீரிப்போது மந்த்ரவாதம்பண்ணி நம்மை மயக்கப் பார்க்கிறீர்போலும்; அம்மந்த்ரத்தை நமக்கறிவித்தாலொழிய நீர் நம்முடைய வாளிலிருந்து மீளப்போகிறதில்லைகாணும் என்று தம்முடைய வாளையுருவி மினுக்கிடத் திருப்பி வலிகாட்ட வயலாலிமணாளன் பயந்தவன்போலே நின்று அழகோதமேறியிருக்குந் திருவாயைத்திருத்தி, நான் உமக்கதை யறிவிக்கிறேன் வாருமென்றருளி இவர் கழுத்தை யணைக்க; இவர்சம்மதித்துக் கேட்கப்புக; இவருக்கு "ருசோயஜூம்ஷி ஸாமாநி ததைவாதர்வணாநிச, ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்ஸ்தம் யச்சாந்ய தபிவாங்மயம்" என்கிறபடி ருக் யஜுஸ் சாம அதர்வணவேதங்களாகிய சப்தசமூஹங்கள் சமஸ்தமும் அஷ்டாக்ஷரத்தி லுள்ளவையே என்றும், "ஸர்வவேதாந்த ஸாரார்த்தஸ் ஸம்ஸாரார்ணவதாரகः - கதிரஷ்டாக்ஷரோ ந்ரூணா மபுநர்பவகாங்க்ஷிணாம்" என்கிறபடி ஸர்வ வேதாந்த ஸாரபூதமாயும், சம்ஸாரமாகிற சமுத்ரத்தினின்றும் கரையேற்றுவிக்குமதாயு மிருக்கிற திருவஷ்டாக்ஷரி ஒன்றே சேதனர்க்குக்கதியாகும் என்றும், "ஐஹலௌகிக மைஸ்வர்யம் ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம் கைவல்யம் பகவந்தஞ்ச மந்த்ரோயம் ஸாதயிஷ்யதி" என்கிறபடி இந்த லோகத்திற் பெற

வேண்டிய சம்பத்தாலும், ஸ்வர்க்க லோகத்தி லடையவே ண்டுகிற சம்பத்தாலும், பரலோகாநுபவமாலும், கைவல்ய மென்கிற ஆத்மாநுபவஸம்பத்தை யடையவேண்டியதாலும், ஸர்வஸ்வாமியாகிய ஸ்ரீயஃபதியையேயடையவேண்டுவதாலும், இத்யாதியையும் ப்ராப்தமாகச்செய்புமது இந்தத் திருமந்த்ர மொன்றேயாகும் என்றுஞ் சொல்லுகிறபடியே அனந்தக்லேச பாஜனமான ஸம்ஸாரார்ணவத்தி லிருந்து கரையேற்றுவிக்கு மதாய்ச் செவிக்கினிய செஞ்சொல்லாய் ஐஹிக, ஆமுஷ்மிக, ஐசுவர்ய, கைவல்ய, புனராவ்ருத்திரஹித பரமபுருஷார்த்த முதலான அகிலார்த்த ப்ரதமுமாய் "ஓமித்யக்ரேவ் யாஹரேத், நமஇதிபஸ்சாத், நாராயணாயேத்யுபரிஷ்டாத்" என்கிறபடி முத லில் ஓம் என்றும் பின்பு நமஃ என்றும் அதன்பிறகு நாராயணாய என்றும் உச்சரிக்கக்கடவன் என்றும் "ஓமித்யேகாக்ஷரம், நம இதித்வே அக்ஷரே, நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி" என்கிற படி ஓம் என்பது ஒரு அக்ஷரம் நமஃ என்பது இரண்டக்ஷரம் நாராயணாய என்பது ஐந்தக்ஷரமென்றும், "அவன் பெயரெட் டெழுத்தும்" என்றுஞ் சொல்லுகிறபடியே எட்டெழுத்தாய்ப் பதத்ரயாத்மகமாய், வைகுந்தந் தரவல்லதொன்ருகையாலே, ஸ்வரூபோபாய புருஷார்த்த ப்ரகாசகமுமாய் மற்றைய வ்யா பகமனு சதுஷ்டயம் போலன்றிக்கே நார சப்த முண்டாகை யாலே சப்தபூர்த்தியை யுடையதாய்ப், "பேராளன் பேரோதும் பெரியோர்" என்கிறபடியே சிஷ்டபரிக்ரஹமுமாய் "மந்த்ரா ணாம் பரமோமந்த்ரோ குஹ்யாநாங் குஹ்யமுத்தமம், பவித் ரஞ்ச பவித்ராணாம் மூலமந்த்ரஸ்ஸநாதநஃ" என்கிறபடியே மந்த் ரங்களுக்கெல்லா முத்க்ருஷ்டதமமாகச் சொல்லப்படுகிற மூல மந்த்ரமாயும், ரஹஸ்யங்களுக்கெல்லாம் சிரேஷ்டமாகச் சொல் லப்படுகிற பரமரஹஸ்யமாயும், பவித்ரங்களுக்கெல்லாம் மேம் பாடாகச் சொல்லப்படுகிற பரமபவித்ரமாயும் சாஸ்வதமாயு மிருக்கிற மூலமந்த்ரமென்னும் பெரிய திருமந்த்ரத்தைப், பூர் வம் வதரியாச்சிரமத்தில் நரநாராயணனாகவிருந்து (கேட்பாரில் லாமையால்) தனக்குத்தானே யுபதேசித்துக்கொண்ட இழவு தீர, கிழிச்சீரையோடே தனத்தைக் கொடுப்பாரைப்போலே இவருடைய வலத்திருக்காதிலே "குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார் படுதுயராயின வெல்லாம், நிலந்தரஞ்செய்யும் நீள்விசும்

பருளும் அருளொடு பெருநிலமளிக்கும், வலந்தருமற்றுந் தந்தி
டும் பெற்றதாயினுமாயினசெய்யும், நலந்தருஞ்சொல்லை நான்
கண்டுகொண்டேன் நாராயணா வென்னு நாமம்'' என்று இவர்
திருவாக்காலே அதிசயித்துச் சொல்லிக் கொள்ளலாம்படிக்குப்,
புருஷாகாரபூதையான பிராட்டிக்கும் விபுவானதனக்கும், மத்தி
யிலே "பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகி" என்கிறபடியே
உபதேசித்தருளி "லக்ஷ்ம்யாஸஹ ஹ்ருஷீகேஸோ தேவ்யா
காருண்ய ரூபயா" என்கிறபடியே க்ருபையே யொருவடிவு
கொண்டாற்போலே, காருண்யரூபையான ஸ்ரீசஹாயனைக்
கொண்டு "ஸுபர்ணப்ருஷ்டே ப்ரபௌஸ்யாமஃ பீதாம்
பரோஹரிஃ" என்கிறபடி சுவர்ணமயமான பெரிய திருவடியின்
மே லெழுந்தருளிவந்து நீலமேக நிபமானவடிவை, கனககிரியின்
மீமிசைக்காளமேகம் படிந்துலாவுமாபோலே, விக்ரஹசேவை
யையும் சாக்ஷாத்கரிப்பித்தருள; இவரும் தனக்கு நிர்ஹேதுக
மாக லப்தமான திருமந்த்ரத்தையும், அம்மந்த்ரத்துக்குள்
ளீடான ஸ்ரீமந்நாராயணனுடைய ஸ்வரூபரூபகுண விபூதி
சேஷ்டிதங்களையும் "திருமாமகளாலருள்மாரி" என்கிறபடியே
பெரிய பிராட்டியாரருளாலே, தக்க ஞானக்கண்களைப் பெற்
றனுபவித்து, அவ்வனுபவஜனித ப்ரீதியுள்ளடங்காமையாலே
வாக்ப்ரவாஹமுண்டாக, அதனால் பெரியதிருமொழி திருக்
குறுந்தாண்டகம் திருநெடுந்தாண்டகம் திருவெழுகூற்றிருக்கை
சிறியதிருமடல் பெரியதிருமடல் என்கிற ஷட்ப்ரபந்தங்களை,
ஸ்ரீசடகோபவாங்மயமான த்ராவிடவேத சதுஷ்டயத்துக்கு
ஷடங்கமாக ஆசு மதுரம் சித்ரம் விஸ்தாரம் என்கிற சாதுர்
யுக்தமான கவிகளாலேபாடி லோகத்துக்குபகரித்தருளி "நாற்
கவிப்பெருமாள்" என்றும் "அருள்மாரி" என்றும் ப்ரசித்தரா
யிருந்தார்.

இப்படி யிருக்கையில் ஒருநாள், பெரியபெருமாளவரைக்
குளிரநோக்கி ஆழ்வீர்! நீரும்முடைய பரிவாரத்துடனே திவ்ய
தேசங்கள் தோறும்போய் மங்களாசாசனம் பண்ணவாருமென்
றருளிச்செய்ய; இவரும் அப்படியே பத்னீசஹிதராய் மந்த்ரிக
ளோடே புறப்பட்டுப், பினாகினி க்ருஷ்ணை கோதாவிரி நதிகளில்
தீர்த்தமாடிப்பத்ராசலஸிம்ஹாசலநாதர்களையும், ஸ்ரீகூர்மநாதனை
யும் ஸ்ரீபுருஷோத்தமனையுஞ்சேவித்துக் கயையிலே தீர்த்தமாடி

ஸ்ரீ விஷ்ணு திருவடியைத் தொழுது, யமுனையில் தீர்த்தமாடிக்
கோவர்த்தனம், கோகுலப்ருந்தாவனம், வடமதுரை,த்வாரகை,
திருவயோத்தி, பதரிகாசிரமம், நைமிஸாரண்யம், திருப்பிரிதி,
சாளக்ராமம் முதலிய திவ்யதேசங்களை மங்களாசாஸனஞ்செய்து
பாண்டுரங்கனையுந் திருவடிதொழுது தொண்டனூர் திருநாரா
யணபுரத் தெம்பெருமான்களைச் சேவித்துப் பெருமாள் கோவி
லுக்கு வந்து, தத்புரோபவனத்தில் பத்நியுந்தானுமாய்ப் பரி
வாரங்களோடும் உபவஸித்திருக்க; அப்போது அட்டபுயகரத்து
அழகியசிங்கன் ப்ராம்ஹண வேஷதாரியாய்க் காமதேனுவைக்
கொண்டுவந்து இவர்முன்னே நிறுத்திநிற்க; இவர்கண்டு நீராரெ
ன்றுகேட்க; நான் அட்டபுயகரத்தேன், நீவிர் உபவசித்திருக்
கையால் ஆராதிக்க வந்தேனென்று இவர்களை ஆராதித்து அந்
தர்த்தானமாக இவர் பரிவாரத்துடனே அட்டபுயகரத்துக்குப்
போய் அழகியசிங்கனைக் கண்களாரச்சேவித்துத் "திரிபுரமூன்
றெரித்தானு மற்றை மலர்மிசைமே லயனும்வியப்ப - முரிதிரை
மாகடல்போல்முழங்கி மூவுலகும் முறையாய்வணங்க வெரியெ
னக் கேசரிவாளெயிற்றோ டிரணியனாக மிரண்டுகூறாய் - அரியுரு
வா மிவரார்கொலென்ன அட்டபுயகரத்தேனென்றாரே" என்னு
மிதுதொடக்கமான பத்துப்பாசுரங்களால் மங்களாசாஸனஞ்
செய்து அத்திகிரியருளாளனையு மடிபணிந்து, திருவேங்கடத்
துக் கெழுந்தருள; அங்கே திருமலையாழ்வான் ஸஹஸ்ரபணங்க
ளோடேகூடிய தன்னுடைய சேஷரூபத்தைச் சாக்ஷாத்கரித்த
ருள; இவர் தண்டன்சமர்ப்புத்து அடியிட்டேறுவது ஸ்வரூப
மன்றே யென்றஞ்சி, அடிவாரத்தில்தானே மூன்றுநாள்வரை
உபவசித்திருக்கத், திருவேங்கடத்தப்பன் இவர் அத்யவசாயத்
துக்கிசையத் தானே பிராட்டிசஹிதனாய் இவரிருக்குமிடத்தே
சேவைசாதித்துத் தீர்த்த ப்ரஸாதங்களருள, இவரவனருளை
நினைந்து நினைந்து மாற்றத்தரமற்று, மனக்களிப்புக்குப் போ
க்குவீடாக, "உன்னைக் காண்பதோராசையினால் - நாயேன் வந்
தடைந்தேன்" என்றும், "அப்பாவந்தடைந்தேன்" என்றும்,
"அண்ணா வந்தடைந்தேன்" என்றும் "ஆனாய் வந்தடைந்
தேன்" என்று மிவைதொடக்கமான நாற்பது பாசுரங்களால்
பலவாறு புகழ்ந்து பாடியாடித் திருவடிதொழுது, விடைகொ
ண்டு திரும்பித், திருவெவ்வுள் திருப்புட்குழி எம்பெருமான்
களை மங்களாசாஸனஞ்செய்து, திருக்கடன்மல்லைத் தலையசயனத்
துறைவாரைச் சேவிக்கவேண்டி யெழுந்தருளுகையில் தடத்
தருகேயிருந்த திருநின்றவூரை எம்பெருமான் உகந்தருளி யிரு
க்கும் ப்ரதேசமென்றறியாமல் கடுநடையிட்டுப்போய்த் தலை
சயனத்துறைவாரைச் சேவித்து நிற்குந் தறுவாயில், திருநின்ற

வூரான் பிராட்டிசஹிதனாய் அவ்விடத்திற்கே யெழுந்தருளிச் சேவைசாதித்து நாற்கவிப்பெருமாளே! நம்விஷயத்திலுமக்கிப் படிப் பராமுகமிருக்கலாமோ? நம்மைக் கவிபாடத் திருவுள்ள மில்லையோவென்ன; இவர் அறியாமல் வந்துவிட்டதற்காக அச்ச முற்றும் அவனுடைய வாத்சல்ய சௌலப்யங்களுக்காக ஆச் சர்யமடைந்தும், † எனைப்பெற்றதாயே! என்று புருஷாகார பூதையான பிராட்டி திருவடிகளிலும், பத்தராவியே! என்று ரக்ஷகனை பெருமாள் திருவடிகளிலும் முடியையணைத் தெழு ந்துநின்று "பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டுபட்டுப் பொய்ந்நூலை மெய்ந்நூலென்றென்றுமோதி - மாண்டவத்தம் போகாதேவம்மி னெந்தை - என்வணங்கப்படுவானைக் கணங்க ளேத்தும் - நீண்டவத்தைக் கருமுகிலையெம்மான்றன்னை-நின்ற வூர் நித்திலத்தைத் தொத்தார்சோலைக் - காண்டவத்தைக் கன லெறிவாய்ப் பெய்வித்தானைக்-கண்டதுநான் கடன்மல்லைத்தலை சயனத்தே" என்றொரு பாசுரமருளிக், கடன்மல்லைநாதனுடன் சேர்த்தியிலே மங்களாசாசனஞ்செய்து விடைகொண்டு நீர்மலை யாதியையும் திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதி தொடக்கமான வெம்பெருமான்களையும் திருவடிதொழுது, திருக்கோவலூருக் கெழுந்தருளி ஆயனாரைச்சேவித்துத் திருவயிந்திரபுரஞ்சென்று தெய்வநாயகனை யடிபணிந்து, சோழமண்டலத்தில் ப்ரவேசித்து (சீர்காழி) என்கிற காழிச்சீராமவிண்ணகரத்திற்குள் போமளவில், இவருடைய சிஷ்யர்கள் நாற்கவிப்பெருமாள் வந்தார்! ஆலி நாடர் வந்தார்! அடையார்சீயம் வந்தார்! அருண்மாரி வந்தார்! மங்கைவேந்தன் வந்தார்! கொற்றவேற்பரகாலன் வந்தார்! பர வாதிமத்தகஜகண்டீரவம் வந்தார்! என்று இத்யாதிவிருதாதி நடவாநிற்க, அங்குள்ள சைவசமயாசிரியரான சம்பந்தரென்பவ ருடைய சிஷ்யர்கள் பொறுப்பிலிகளாகி இவ்விருதுகளங்குச் செல்லாதென்றும், செல்லவேண்டுமாகில் தங்கள் சம்பந்தப் பெருமானிடத்தில் உத்தர ப்ரத்யுத்தரங்கள் சொல்லித் தேற வேணுமென்றுஞ் சொல்லி அடிபெயர்க்கலாகாதென்று தடுக்க; இவர் அவர்கள் சம்பந்தரிருக்குமிடத்தைக் காட்டவேணுமெ

† இவர் அன்றழைத்ததே காரணமாக இன்றுவரையிலும் திருநின்றவூரானுக்குப் "பத்தராவி" என்றும், பிராட்டிக்கு "எனைப்பெற்றதாய்" என்றும் பெயர்வரலாயிற்று.

ன்ன; அவர்களிவரை யழைத்துக்கொண்டு போய்விட்டு நடந்ததையறிவிக்க; அந்தச்சம்பந்தரு மிவருடன் தர்க்கிக்கவர,அந்த ப்ரதேச முழுமையும் வீரசைவபூயிஷ்டமாய், ஊரடைய ஏக கக்ஷியாயிருக்கக்காண்கையால், இவர் பக்கல் ஒருபகவத்விக்ரஹ மிருந்தாற் போதுமென்று சிந்திக்க; அவ்வளவில் வைஷ்ணவியாயிருப்பாளொரு அம்மையார் அங்கே வரக்கண்டு, அவருடைய திருவாராதனமான வெண்ணெயுண்ட தாடாளனை ஒருக்ஷணப்போது தந்தருள வேணுமென்று கேட்டெழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டு, இனித் தர்க்கஞ்செய்யலாம் வாருமென்று சம்பந்தரை யழைத்தார். அப்போது சம்பந்தர், ஒரு குறள்பாடுமென்ன; இவர் அவருடைய கேள்வியிலுதித்த வாக்யத்தையே முதலாக வமைத்துக்கொண்டு "ஒருகுறளா யிருநிலமூ வடிமண் வேண்டி-உலகனைத்து மீரடியாலொடுக்கி யொன்றுந்-தருகவெனு மாவலியைச் சிறையில் வைத்த - தாடாளன் தாளணைவீர் தக்க கீர்த்தி - அருமறையின் றிரள்நான்கும் வேள்வி யைந்தும் - அங்கங்க ளவையாறு மிசைக ளேழும் - தெருவில்மலி விழாவளமுஞ் சிறக்குங்காழிச்-சீராம விண்ணகரே சேர்மினீரே" என்று பாடியருளி நீரொருகவி சொல்லுமென்று அவரைக்கேட்க; அதற்கவர் சிலசொல்ல, அதன்மேலிவர்"பொருவில்வலம் புரியரக்கன் முடிகள் பத்தும் புற்றுமறிந்தனபோலப் புவிமேற் சிந்தச்-செருவில்வலம் புரிசிலைக்கை மலைத்தோள் வேந்தன் - றிருவடிசேர்ந்துய்கிற்பீர் திரைநீர்த் தெள்கி - மருவிவலம் புரிகைதைக் கழியூடாடி - வயனண்ணி மழைதருநீர்த் தவழ்கான் மன்னித் - தெருவில்வலம் புரிதரள மீனுங் காழிச் - சீராம விண்ணகரே சேர்மினீரே" என்கிற பாசுரத்தையுமருளி உம்முடைய கவியில் இங்ஙனம் ரஸமிருக்குமோ வென்றுரைத்து அதன்மேலும் தம்முடைய வேற்றந் தோன்றுமாறு மற்றொருபாசுரத்தில் "ஆலிநாடனருண்மாரி யரட்டமுக்கி யடையார் சீயங்-கொங்குமலர்க் குழலியர் வேள்மங்கை வேந்தன் - கொற்றவேற் பரகாலன் கலியன் சொன்ன-சங்கமுகத் தமிழ்மாலை" என்றமைத்துப்பாட, அச்சம்பந்தர் இவர்விஷயத்தில் அச்சமுற்று, உமக் கித்யாதி விருதுகளுஞ் செல்லுமென்றுசொல்லி, இவர் விஷயமாகக் "கடியுண்ட நெடுவாளை கராவிற்றப்பிக் கயத்துக்கு ளடங்காமல் விசும்பிற் பாய - படியுண்ட பெருமானைப் பறித்துப் பாடிப் பதம்பெற்ற

பெருமானே தமியேன்பெற்ற - கொடியொன்று நின்பவனிக் கெதிரேசென்று-கும்பிட்டா ளுயிரொன்றுங் கொடுவந் தாளே" என்றொரு கவியையும் பாடித் தமது கையிலிருந்த வேலாயுதத் தையுஞ் சமர்ப்பித்துப் போகவிட்டார்.

அனந்தரம் இவர் திருநறையூருக்கெழுந்தருளி நறையூர் நம்பியைச்சேவித்து அவ்வடிவழகி லீடுபட்டுப் பரவசராய் "நன்னறையூர்நம்பி தன் நல்லமாமலர்ச் சேவடிசென்னியிற்-சூடியுந் தொழுதாடியுந் தொண்டர்கட்கவன் சொன்னசொன் மாலைப் பாடல்பத்திவைபாடு மின்றொண்டீர் பாடநும்மிடைப்பாவம் நில்லாவே" என்னுமளவாகவுள்ள பாசுரங்களை யருளிச்செய்ய, நம்பி இவரைக்கடாக்ஷித்து இவர் தன்னைக் கால்வாசி யறிவாரா யிருந்தனரென்று, ஆழ்வீர்! நீர் நம்முடைய திருச்சேறையில் வந்தால் உம்முடைய அபேக்ஷிதத்தைத் தலைக்கட்டித் தருகிறோ மென்ன; இவரும் திருச்சேறைக்கெழுந்தருளி சாரநாதனைத்தர் சித்துக், "கண்சோர வெங்குருதி வந்திழிய வெந்தழல்போற் கூந்தலாளை - மண்சேரமுலையுண்ட மாமதலாய் வானவர்தங் கோவே" என்றுபாட; அவ்வளவிலே மாமதலைப்பிரான் தன்னுடைய திருவடிகளைக்கொண்டு இவர் திருமுடியிலே வைக்கவர, இவரவற்றைப் புறங்கையாலே தட்டி, நின்போதுநின்ற பொன்னங்கழலோ வென்றலைமே லிருக்கக்கருதினேனென்ன; மாமதலைப்பிரான் மற்றெதுகாணென்ன; "உன்றாள் தொழுவார் காண் மினென்றலைமே லாரென்றார்; அவனிதைக்கேட்டு உமக்கு நாம் அந்தர்யாமியாயிருக்கிறோமேயென்ன; உன்றாள் தொழுவாரெப் பொழுது மென்மனத்தே யிருக்கின்றாரே" என்றார். நா முமக் கர்ச்சாவதாரமாய்ச் சுலபனா யிருக்கிறோமே யென்ன; "கடன் மல்லைத் தலைசயனத் துறைவாரைக்கொண்டாடு நெஞ்சுடை யாரவரெங்கள் குலதெய்வமே" என்றார். ஆகி லவர்க ளெங்கே யுள்ளார்காணென்ன; "போதோடு புனல்தூவும் புண்ணியரே விண்ணவரிற் பொலிகின்றாரே" என்றார். ஆகில் "கண்களாரளவு" மென்கிறபடியே கண்ணுக்கிரை யிடுகைக்கும், அனுசந்தான மாக நெஞ்சுக்கிரையிடுகைக்கும், நாமுமக்குவேண்டுமேகா ணென்ன; "வண்சேறை யெம்பெருமானடியார் தம்மைக்கண்டே னுக் கிதுகாணீ ரென்னெஞ்சுங் கண்ணிணையுங் களிக்குமாறே" என்றார். ஆகிலும், ஆழ்வீர்! உபாய உபேயங்களுக்காவது நாம்

வேண்டாமோ வென்ன; உபாயத்துக்கு முற்பாடராகையாலும் உபேயத்துக்கு எல்லைநிலமாகையாலும் இங்குள்ள நாளைக்கு உசாத்துணை யாகையாலும் "பேராளன்பேரோதும் பெரியோரை யொருகாலும் பிரிகிலேனே" என்றார். இதென்கொண்டு சொல்லுகிறீரென்ன; ஒருவனைக்கவிபாடுமவன் ஊரும்பேருங் குடியும் உகந்தாரும் வரக்கவிபாடுமாபோலே சொன்னேனித்தனை என்றும் "அடியார்க்கென்னை யாட்படுத்தாய்" என்கிறபடியே ததீயவிஷயத்தையே உத்தேசித்துச் சொன்னேனென்றும் சாதித்தார். அதன்மேலும் மாமதலைப்பிரான் ஆழ்வீர்! நம்மை இப்படிப் பிரித்துச் சொல்லலாமோவென்ன; பர்த்தாவினுடைய தேஹத்தை விரும்பும் பதிவ்ரதைக்கு அதில் குற்றந் தோற்றினலன்றோ தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹத்தை விரும்பு மடியேனுக்கு மதில் குற்ற முண்டாமென்றார். இப்படி இவர் ததீயவிஷயத்தில் தமக்குண்டான ஊற்றத்தைச் சொலிக் களித்து நிற்பதை மாமதலைப்பிரான்கண்டு உகந்து மடலெடுக்கும்படி யாயினன்.

அனந்தரம் இவர் "காவேரீ விரஜாதோயம் வைகுண்டம் ரங்கமந்திரம்-ஸவாஸுதேவோ ரங்கேஶ ப்ரத்யக்ஷம் பரமம் பதம்" என்கிறபடி காவேரியே விரஜையாயும், ஸ்ரீரங்கக்ஷேத்திரமே வைகுண்டமாயும், ஸ்ரீரங்கநாதனே ஸாக்ஷாத் பரவாசுதேவனாயும் விளங்குகிறபடியால் பரமபதமான அந்த ஸ்ரீரங்கக்ஷேத்திரத்தைப் பிரத்தியக்ஷமாகச் சேவிக்கிறேனென்றும், விமாநம் ப்ரணவாகாரம வேதஶ்ருங்கம் மஹாத்புதம் - ஸ்ரீரங்கஶாயீபகவாந் ப்ரணவார்த்த ப்ரகாஶகஃ" என்றுஞ் சொல்லுகிறபடி அத்யாச்சர்யகரமாய் வேதரூபங்களையே கலசங்களாகவுடையதாய், ப்ரணவாகாரமானதாய் அந்த ப்ரணவார்த்தத்தை ப்ரதிபாதிக்கக் கடவனை ஸ்ரீயஃபதியையும் மத்ய ப்ரதேசத்தில் சாய்ந்தருளப் பெற்றிருக்குமதான விமானத்தையுடைய திருவரங்கம் பெரியகோயிலுக் கெழுந்தருளி "மன்னுடைய விடணர்க்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்க்கண் வைத்த" பெரிய பெருமாளையும் திருவரங்கச் செல்வரான அழகிய மணவாளனையும் தர்சித்து, அங்கே விமான கோபுரமண்டப ப்ராகாராதி ரூபமான கைங்கர்யங்களைச் செய்யவேணுமென்று திருவுள்ளமாய், அதற்காகத் தம்முடைய பரிசனங்களை யழைத்துத் தனார்ஜ்ஜனம் பண்ணுகைக்கு விரகேதென்றுகேட்க; அவர்கள் நாகைப் பட்டணததிலே புலியறமா யிருப்பதொரு பௌத்த ப்ரதிமை பொன்னுற் செய்யப்பட்டிருக்கிறதாகக் கேள்விப்படுகிறோம்; ஆகையால் அதனைக் கொண்டுவந்து நெருப்பிலிட்டழித்து த்ரவ்ய மாக்கிக்கொண்டு கைங்கர்யத்தை

முடிக்கலாகுமென்றார்கள்; இவரதைக்கேட்டு "அறுப்பதேகரு மங்கண்டாய்" என்கிறபடியே அதிகதுணிவுடையராய்த் தம்முடைய மைத்துனராகிய எதிராஜரைக் கூட்டிக்கொண்டு பரிவாரத்துடனே அவ்விடத்துக்குப்போய் அங்கேபரமபாகவதையாயிருப்பாளொரு அம்மையாருடைய திருமாளிகைக்கெழுந்தருள; அவ்வம்மையாரும் ஸ்வரூபாநுரூபமாகத் தண்டன் ஸமர்ப்பித்து வந்தகாரியமேதென்றுவினவ; இவர் அம்மணீ! நாம் வந்தகாரியம் சிலகைங்கர்யத்தை நாடியிருக்கும் ஆதலால் இவ்விடத்திலுள்ள ஆலயங்களில் ஏதாவது ரஹஸியங்களிருக்கில் உமக்குத்தெரிந்தவரையில் நமக்கறிவிக்கவேண்டுமென்ன; அவ்வம்மையாரும் சுவாமி! இவ்வூரில் ஒருபௌத்தாலயமுண்டு; அதிலொருசுவர்ண விக்ரஹமுண்டு; அவ் விக்ரஹத்தை இதராள் பார்ப்பதற்குக் கூடாமையென்றார்; ஆகில், நாம் அதைப்பார்ப்பதற் குபாயமேதென்ன; சுவாமி! அந்த ஆலயத்திற் கெம்முகத்திலும் வழியில்லையென்றும் அதையபிமானித்தவர்கள் மாத்ரம் போகவர நிலவறையால் மார்க்கம்வைத்திருக்கிற தென்றும், அம்மார்க்கத்துக்கு முகத்வாரம் வெகுதூரத்தில் வைத்திருக்கிறதென்றும், அம்முகத்வாரத்துக்குப்பஹுபத்ரமான கதவமைத்துக் காவல்வைத்திருக்கிறதென்றும், யாராவது ஒருசமயத்தில் மேலேயேறிஸ்தூபியைக் கல்லிவழிசெய்து கொண்டு உள்ளே இறங்கிவிடுவார்களென்கிற யோசனையால் அதனுட்புறத்தில் ஒரு யந்த்ரம் வைத்திருக்கிறதென்றும், அந்த யத்ரமானது ஸ்தூபியின்மேலேறினோர்கலசத்தைத் தொட்டமாத்திரத்தில் அவர்களைச் சுழற்றி யுள்ளேயிழுத்துக்கொண்டு கண்டித்து விடுகிறதென்றும், அவ்வித சூத்ரத்தைச்செய்த சிற்பாசாரி † சிங்களத்வீபத்திலிருக்கிறானென்றும், அவனந்த சூத்ரத்தின் நுட்பத்தைப் பிறருக்கறிவிப்பானாகில் அப்போதே இந்தப் பௌத்தர்கள் அவன் சிரஸைச் சேதித்து விடுவதாய் உடன்படிக்கை செய்து கொண்டு பஹுத்ரவ்யத்தை யவனுக்குபகரித் திருக்கிறார்களென்றும், அடியேனுடைய மாமியார் ஒருகாலத்தில் பஹுரஹஸியமாகச் சொல்லிக்கொண்டிருக்கையில் கேட்டிருக்கிறேனென்றனள்.

இவரிந்த வ்ருத்தாந்தத்தைக்கேட்டு அதித்வரையாய் ஓடமேறி சிங்களத்வீபத்துக்குப்போய் அந்தச் சிற்பாசாரியிருக்குமிடத்தை பஹுதந்த்ரமாய் விசாரித்தறிந்துகொண்டு அவனு

† இப்போது கொழும்புதேசமென்று சொல்லப்படுகிறது.

டைய இடைகழியிலேயெழுந்தருளித் தம்முடைய துணைவர்களோடு சம்பாஷித்துக்கொண்டிருக்க; அந்தச்சமயத்தில் சிற்பாசாரியும் அடிசிலுண்டு கையிற் றம்பூலங்கொண்டு இடைகழிக்கு வந்து இவர்களைப் பார்த்து நீவிராரென்றுகேட்க; இவர் நாங்கள் வர்த்தககார்யமாய் வந்திருக்கிறேமென்ன; உங்களூரெதுவென்ன; நாங்களிருக்குமூர் நாகைப்பட்டணமென்ன; அவ்வூரில் தேவஸ்தானம் பத்ரமா யிருக்கிறதோவென்ன; அவ்வளவிலே இவர் வயிற்றைப்பிசைந்து கொண்டு துக்கிக்க; ஏனிப்படி வருத்தமுறுகிறீரோ தெரியவில்லையேயென்று அவன் அயர்ந்து நிற்க; அத்தறுவாயில் இவருடைய மந்த்ரிகளிலொருவரான சமயநிரீக்ஷகன் என்பவர் அந்தச்சிற்பா சாரியைநோக்கி என்ன காண்? ஒழிந்திருந்த துக்கத்தை ஊற்றெடுத்துச் சொரியச் செய்தாயென்ன; அவனதை விவரமாகத் தனக்குச்சொல்ல வேண்டுமென்று ப்ரார்த்தித்தவனாக; நம்முடைய ஊரில்வெகுநாளாயிருந்த சுவர்ணவிக்ரஹத்தைத் துருஷ்க்கர்நெருங்கி ஆலயத்தின் ஸ்தூபியையிடித்து வழிகண்டு உள்ளே யிறங்கி யபஹரித்துக்கொண்டு போய்விட்டதால் நாங்களடைந்திருக்கிற துக்கத்துக்குமளவில்லை, அவ்வாலயத்திலிருந்த மகுட சூத்ரத்தின் ரஹஸியத்தை வெளியிட்டிருப்பவன் றலையுமொழியாதிருக்கப் போகிறதில்லை காணென்றார்; அவ்வளவிலே அவன் மிகவும் நடுங்கிக் கையிலிருந்த தாம்பூலத்தை நிலத்தில் சோரவிட்டுத், தந்தலையோடழியவந்தவரிவர்களென்று துக்கித்துக் கண்ணீர்விட்டுக்கைகாலோய்ந்து ஒருபுறஞ்சாய்ந்து பிதற்றல்காண; அத்தசையிலே ஐயோ !! என்னுலொருசூதும் நடந்ததில்லையே யென்ன; அப்போது ஆலிக்குறும்பனென்னு மிவருடையமற்றொரு மந்த்ரி உன்னாலல்லது அவ்வாயம் வெளிப்பட்டிருக்குமோ காணென்ன; அவன்கேவலம்பேதனாய், என்னால் வெளிப்படவேயில்லை, நானந்த ஆலயத்தின் மகுடசிகரத் தடிவாரத்தில் வைத்த சூத்ரத்திலிருந்திழிய விட்டபிணையல் சங்கிலியை கோமுகை விழுகிற ஜலதாரையின்கீழே கல்லுக்குள் இருப்பாணியிலிறுக்கியபோது அந்த ஊரிலிருந்த கம்மாளரிலெந்த த்ரோஹியோ என்னையுமறியாமல் கண்டிருந்து, சமயம்பார்த்து த்ரவ்யாபேக்ஷை கொண்டுவெளியிட்டு என்தலைக்கு ஆக்ஞைநேரிடச் செய்துவிட்டான்போலிருக்கிறதே !!! என்றுமிகவும் பரிதபிக்க; இவ்வாழ்வார் இத்தனை ரஹஸியங்களும் வெளிவருமளவும் மௌனமாயிருந்து அவற்றை

ன்றாய் க்ரஹித்துக்கொண்டு உள்ளில்சந்த்ருஷ்டராகி அந்தச் சிற்பாசாரியைப் பார்த்து, நீசொல்லியபடியே சங்கிலி சூத்ரம் வெளிப்பட்டிருக்குமாகிலும், சிகரசூத்ரம்யாரால் வெளிப்பட்டிருக்குமென்பாயென்ன; அவனும் ஐயனே! எப்போது சங்கிலி தளர்ந்ததோ அப்போதே மேலிருந்த சக்கரத்தின்பலங்குறையுமென்பதில் ஐயமேது; அவ்வளவு பலஹீனமதற்குண்டான வாறே அதை நிறுத்திவிடுவதற்கு வாழைவிஸ்தரித்துக் கிடக்கிற தேசத்தில் வேறுபாயந்தேட வேண்டியதில்லையே யென்றான். அதன்பின்பு இவரவனுடையபயத்தையொருவாறு போக்கித் தம்முடைய மந்த்ரிகளைப்பார்த்துக், காலகதிக்கு இவனென்செய்வானென்று, பக்வமாகச் சம்பாஷணையை முடிவுபெறச்செய்து, உடனே ப்ரயாணமாய்ச் சமுத்ரகரைக்குவந்து ஓடந்தேடினர்.

அவ்வளவிலே அங்கேயொரு வர்த்தகன் பாக்குப்பொதிகளை யேற்றுவிக்க ஓரோடத்தைக்கொண்டுவர, இவரவனைக்கண்டு நாமுமிந்த ஓடத்தில்தானே உம்முடன் நாகைப் பட்டணத்துக்குவர இடங் கொடுப்பீரோவென்றுகேட்க, அவனும் சம்மதிக்க, இவர் தம்முடைய பரிவாரத்துடனேயேறி † நாவாய் ப்ரயாணமாக, ஜலத்தில் மத்யதூரத்தில் வருகையில், இவருடைய மந்த்ரிகளி லொருவனான தோராவழக்கனென்பவன் ஒரு பாக்கைச் சீவி ஒரு பாதியைத்தின்றுவிட்டு மறுபாதியை அந்த வர்த்தகனுக்குக் காட்டி ஐயா! நானிந்த பாதிப்பாக்கை உம்முடைய படுவையில் வைத்திருக்கிறேன்பாரும்; ஒருவேளை இதை உம்முடைய ஸ்வத்தாகவெண்ணி உமதுகிங்கரர் நம்மிடத்திலபராதம் வாங்காதிருக்கும்படி இப்படுவையில் நமக்குப் பாதி பாக்குண்டென்று ஒருகை முறிச்சீட்டுக்கொடுமென்று இனியவார்த்தைகளால் கேட்க; அவனுமப்படியே கொடுக்க; அதைவாங்கிப் பத்ரமாகவைத்துக்கொண்டு கரையில்வந்தவாறே, வர்த்தகன் பாக்குமூட்டைகளை யெடுப்பிக்கையில், அந்தச் சீட்டைக்காட்டி நமக்குமிப்படுவையில் பாதிக்குப்பங்குண்டேயென்ன; வர்த்தகன் திடுக்கிட்டு, ஏதுகாணென்ன; அவனைமடக்கிவைத்துக்கொண்டு பாக்குமூட்டைகளுக்குங் காவலிட்டு, நாவாய்த்துறை நியாயாதிபனிடத்தில் விண்ணப்பங்கொடுத்துச் சீட்டையுங்காட்ட; அவனும் ந்யாயசோதனைசெய்து, படுவையில் வந்திறங்கியபாக்கில் பங்கு வாங்கிக்கொடுக்க; அவ்வர்த்தகன் அதற்குரிய க்ரயத்தை

† நாவாய் - மரக்கலம், ஓடம், படுவை.

க் கொடுத்து விடுகிறேனென்று கேட்டுக்கொள்ள ; அப்படியே க்ரயத்தைப் பெற்றுக்கொண்டு ஆழ்வார் திருவடிகளில் ஸமர்ப்பித்தான்.

அதன்பின்பு இவ்வாழ்வார் பரிவாரத்துடனே நாகைப்பட்டணத்துக்குள் ப்ரவேசித்து மத்யராத்ரியில் பௌத்தாலயத்துக்குப்போய்க் கோமுகை தீர்த்ததாரையின்கீழே கல்லிச்சோதித்துச் சிற்பாசாரிசொல்லியிருந்த சங்கிலிசூத்திரத்தைக்கண்டு பேதித்து ஸ்தூபியின்மேலேறிக் கலசத்தை இடவலமாகத் திருப்பிப்பிடுங்கி விட்டு அதன்கீழே ப்ராணுபாயத்தைத் தருமதாய் இடவலமாகச் சுழன்றுகொண்டிருந்த மகுடசூத்திரத்திற்கு வாழைத்தண்டை இரையாகக்கொடுத்து அதனோட்டத்தை யடக்கிவைத் தங்கிருந்த த்வாரமுகத்தால் உள்ளே அதிகசோபிதமாயிருந்தவொரு சுவர்ண விக்ரகத்தைப் பார்த்து (ஈயத்தாலாகாதோ இரும்புதன்னாலாகாதோ, பூயத்தால்மிக்கதொரு பூதத்தாலாகாதோ-தேயத்தேயபித்தளை நற்செம்புகளாலாகாதோ-மாயப்பொன்வேண்டுமோ மதித்துன்னைப் பண்ணுகைக்கே) என்றுசொல்லி, அதிலிறங்கியுள்ளே போவாராரென்றுயோசிக்க ; இவர் மைத்துனராகிய எதிராஜரென்பவர்வந்து சுவாமி! அடியேனைப்பணிகொள்ளலாகாதோவென்ன ; ஆகிலிறங்குமென்றார் ; அவருமிறங்கி அந்த விக்ரஹத்தைத், தூங்குசங்கிலியிற் கட்டிவைத்துத் தாமுமேறிக்கொள்ள ; மேலேயிருந்த ஆழ்வாரும் மந்த்ரிகளுமாகச் சங்கிலியையிழுத்து விக்ரகத்தை யெடுத்துக்கொண்டு, எதிராஜருக்குக் கைகொடுத்து இழுக்கையில் அவர் விக்கிரஹத்தை யெடுத்துக்கொண்ட மாத்ரத்தில் கைங்கர்யத்துக்கு த்ரவ்யம் சித்தித்ததே யென்கிற சந்தோஷத்தினால் தேஹம் பூரித்துவிட்டபடியால் அந்தத்வாரத்தில் வரமாட்டாமல் ஒரு கையும் தலையுமாத்திரம்வர, இவ்வாழ்வார்கண்டு திடுக்கிட்டு, அதிகசோகத்துடனே எதிராஜா? மோசம்நேர்ந்ததே !! பரமபாகவதோத்தமரான உம்மைவிட்டுத் தரிப்பேனே ! உம்மைப் பிறர்கையாற்சம்ஹாரம் செய்யவிடலாமோ ! ஆகிஞ்சின்ய அனன்யகதித்வ முடையவளாய்த், பரமசாத்விகையாய், அகிலபாகவத கைங்கர்யோபகரணஜீவியாய்ச்,சகலசுபஸத்குணசமேதையாய் எனக்குச் சகோதரியாயிருப்பாளொரு ஆண்டாளுக்கு வைதவ்ய முண்டாம்படி செய்துபாகவதாபசாரத்திற்குப்பாத்ரனுனேனே !இனியெனக்கு கைங்கர்ய மேதுக்காம்; சுவர்ணவிக்ரஹமேதுக்காம்; என்று அத்

யாத ஆர்த்தியுடன் போரக்லேசிக்க; இதைக்கேட்டு எதிராஜர் பரமப்ரீதியுடனே இவருக்குத் தண்டன் ஸமர்ப்பித்துச் சுவாமி! தேவரீர் பரமபத நாதனுடைய சார்ங்காம்ஸராய், அகிலசேதனுஜ் ஜீவனார்த்தமாகத் திருவவதரித்து, அஸ்மதாதிகளுக்குச் சகல புருஷார்த்தங்களையும் ப்ரஸாதித்து, இப்போது ரங்கேச கைங்கர்ய நிர்வாஹமே பரம புருஷார்த்தமென்று உத்தேசித்து நியமித்தபடியால், இதி லிறங்கியிருக்கிறேன்; இக்காயமோ "மின்னி னிலையில மன்னுயிராக்கைகள்" என்கிறபடி பிணி பசி மூப்புத் துன்பங்களுக்கு நிலமானதாய்ப், "பஸாருதிர மாம்ஸஞ் சமேதோ மஜ்ஜாஸ்திரேதவி" என்கிறபடியே ஸப்ததாது ஸம்வேஷ்டிதமாய்ப் பாஞ்சபௌதிகமாய்ப் பசி - உஷ்ண - சோக - மோஹ - மல - மூத்ர - பித்த - சிலேஷ்ம - ஸ்வேத-ஜராரோஹ பூரித துர்க்கந்தமான இவற்றோடுங்கூடியதாகையாலிதைப் பரித்யஜித்துப் "பரமேஷ்டிः புமாந்" என்கிறபடியே பஞ்சோபநிஷண்மயமான திவ்யதேஹத்தைப்பெற்று நித்யமுக்தர்களோடு கூடித், † தத்ததவஸரோசிதமான பகவத்கைங்கர்ய நிரதிசயானந்தத்தைப்பெற்றுவாழும்படி க்ருபை பண்ணுவதற்குத் தேவரீர் இங்கெழுந்தருளி யிருக்கக், கேவலம்பத்த சம்ஸாரியைப் போலே துக்கிப்ப தடுக்குமோ? ஆபாஸ தர்மத்தைப்பற்றின சிபிச்சக்ரவர்த்தி ததீசி முதலானவர்களுடைய வ்ருத்தாந்தங்களே அசிந்த்யமாயும் அதிதுஷ்கரமாயு மிருக்குமானால் பகவதைகபாராயணரான சுத்ததார்மீகர்கள் விஷயத்தில் சொல்ல வேண்டியது முண்டோ? பரமபுருஷார்த்தமான நம்பெருமாள் கைங்கர்யத்தி லிச்சரீரத்தைச் சமர்ப்பிக்கலாகாதோ? ஆக வித்யாதி யோசனையால் அடியேனைப் பிறர்கையி லொப்புவிக்காமல் அடியேனுக்கிரங்கியருளித்தேவரீருடையஸ்ரீஹஸ்தத்தால்தானே அடியேனுடையகண்டத்தை ஸ்ரீரங்கேசார்ப்பிதமாகக்கண்டித்து விட்டு இந்தச்சுவர்ண விக்ரஹத்தைக் கொண்டுபோய்க் கைங்கர்யத்தை நிறைவேற்றத் திருவுள்ளம்பற்ற வேண்டுமென்று பஹுவிதமாய்ப் பிரார்த்தித்தார். அனந்தரம் இவர் கொஞ்சநேரம் யோசித்து விடிவுகாலம் சமீபிப்பதை நோக்கி நெஞ்சுத்ருடராய் எதிராஜா? த்ரிபாத் விபூதிக்கு அதிநாதனானவன் நீயல்லவோ? என்று ஆலீடபாதராய்ச் சடக்கெனக்கரவாளையுருவி எதிராஜா? ரங்கநாதா? என்றுச்சரித்துக்கொண்டே அவர் சிரஸைக் கண்

† தத்ததவஸரோசிதமான - அந்த அந்த அவஸரத்துக்கு உசிதமான.

டித்துச் சுவர்ண விக்ரஹத்தையும் அந்தச் சிரஸையும் ஒரு பாடையில் வைத்து மூடியெடுப்பித்துக் கொண்டு நெருப்புச்சட்டியுங் கையுமாய் ரோதனஸத்ருசமாய் நகரத்தைக்கடந்து வெகு தூரம்போய்க் காட்டிலேயொரு புதரில் அந்தச் சிரஸை நாய் நரிகள் தீண்டாதபடி பக்குவப்படுத்தி வைத்துவிட்டு விக்ரஹத்தைமாத்ரம் எடுப்பித்துக்கொண்டு கடுநடையிட்டு நம்பெருமாள் சன்னிதியை நோக்கி வந்தார்.

இங்கே வர்த்தமானமிப்படியிருக்க, அங்கே பெரிய கோயிலிலே ஸ்ரீரங்கநாயகித்தாயார் பெரியபெருமாளை யடிபணிந்து, ஐயோ! நமக்காக வெதிராஜன் ப்ராணன்விட்டதைப் பார்த்திருக்கலாமோ? தேவரீருடைய ஸர்வக்ஞத்வ ஸர்வசக்யாதிகள் மாயமாய்ப் போய்விட்டதோ? ராஜ்யத்துக்காகவும் பெண்டுக்காகவும் ஆசிரயித்த சுக்ரீவமஹாராஜனுடைய சைன்யங்கள் இந்த்ரஜித்து கையிலகப்பட்டு ப்ரம்ஹாஸ்த்ரத்தாலே உயிரை விட்டபோது தேவரீர் அவர்களைப் புனர்ஜீவிதராம்படிச் செய்யவில்லையோ? சமுத்ரத்திலே பஞ்சஜனனென்கிற ராக்ஷசன்வாயில் விழுந்து மாண்டுபோன சாந்தீபபுத்ரனை பஹுஸம்வத்ஸரங்களுக்குமேல் தேவரீர்சமனபுரிக்குப்போய்மீட்டுக்கொண்டுவந்து குருதக்ஷிணையாகச் சமர்ப்பிக்கவில்லையோ? தேவகியார்வயிற்றுதித்துக் கம்ஸனாற் கொல்லப்பட்ட முதலாறு புத்ரர்களையும் அவ்வம்மையார் விருப்பின்படிச்சுதலலோகஞ்சென்று மீட்டுவந்தளிக்கவில்லையா? மற்றும் வடமதுரையில் ஓர்விப்பிரனுக்குப்பிறந்தவுடன் இறந்து வந்த பத்துக்குழந்தைகளையும் அவ்விப்பிரனது வேண்டுகோளுக்கிரங்கி அருச்சுனனும்வியக்கும்படித் திருப்பாற்கடலை யடைந்து ஆங் கறிதுயிலமரும் பரஞ்சுடராகிய பகவானிடத்தி னின்றும் பெற்றுவந் தளிக்கவில்லையா? அப்படியிருக்கத் தூயராய்வந்து, தேவரீர் திருவடிகளையே உபாயோபேயங்களாகக் கொண்டு (ஸ்வப்ரயோசனத்தைப்பற்றிச் சரணாகதரான ஸ்ரீவிபீஷணகஜேந்த்ர ப்ரகிருதிகள்போலன்றிக்கே) தேவரையே "உண்ணுஞ்சோறும் பருகுநீர்த்தின்னும்வெற்றிலையுமெல்லாம் கண்ணன்" என்று தாரகபோஷகபோக்யங்களாகநெஞ்சுள்வைத்துத் தந்தைநற்றாய் தாரம் தனயர் பெருஞ்செல்வங்களாக "பிதாசரக்ஷகஶ்ஶேஷீ" என்கிறபடியே சேஷிபக்கல் சேஷபூதனிறங்குந் துறையான சரணாகதி மார்க்கத்தில் நின்று, தேவருகந்த கைங்கர்யத்தைச்

செய்யப்புக்கு, மஹாவிபத்து எதிர்ப்பட்ட காலத்திலும், கைங்கர்யத்தில் ஹானிவரக்காணுமல் தீரத்வத்தோடும் உயிரைவிட்டவராகிருரேயென்று விண்ணப்பஞ்செய்ய; அவ்வளவில், பெரிய பெருமாள் மந்தஸ்மிதஞ்செய்து பெரிய திருவடியையழைத்து நீர் சீக்கிரமாய் நாகைப்பட்டணத்துக்குப்போய் அங்கே பௌத்தாலயத்துக்குள்ளே விழுந்துகிடக்கிற எதிராஜருடைய தேஹத்தை யெடுத்துக்கொண்டு புதரிலே யிருக்கிற அவருடைய சிரஸை யெடுத்துப் பொருந்த வைத்து ப்ராண ப்ரதானம்பண்ணி அதிவேகமாய்க் கொண்டுபோய் நம்முடைய பரகாலன்சன்னிதியில் விட்டுவாருமென்று ஆக்ஞாபிக்க; அவரும் தன்யனுயினேனென்றுரைத்து உடனே ப்ரயாணப்பட்டுப்போய் எதிராஜர் தேஹத்தைக்கண்டு, இப்படி நம்பெருமாளுக்காகச் சரீரத்தைச் சமர்ப்பித்த பரமதார்மீகனை இதுகாறும் இந்த ப்ரம்ஹாண்டத்தில் சேவிததில்லையேயென்று ஆச்சர்யப்பட்டு, அந்தச் சரீரத்தை யெடுத்துக்கொண்டு புதரிலிருந்த சிரஸில் பொருந்த வைத்து ப்ராணப்ரதானம்பண்ண; எதிராஜர் திருக்கண்களை விழித்துப்பார்த்துப் பெரிய திருவடியைச்சேவித்து, அவராலே நம்பெருமாளுடைய ஆக்ஞாப்ரகாரத்தை யறிந்துகொண்டு ஐயோ! அடியேன் நித்யசௌக்கியம்பெறுவது நம்பெருமாளுக்குத் திருவுள்ளமில்லையோ! என்று போரக்லேசிக்கப் பெரியதிருவடி அவரைத்தேற்றித் தன்முதுகில் எடுத்துக்கொண்டுவந்து இவ்வாழ்வார் சன்னிதியில்விட்டு, நம்பெருமாள் நியமனமிருந்தபடியை யறிவித்து அவரால் பஹுமதிக்ருதராய் மீண்டுபோய் நம்பெருமாளிடத்தில் நடந்த வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ் செய்தவராயினுர்.

பின்பு இவ்வாழ்வாரும் மந்திரிகளும் எதிராஜரைக்கண்டு, சவத்தில் ஆத்மா ஸ்புரித்த பின்பு சுப்ரகாசமான இந்த்ரியங்களைப்போலும், நித்தியதரித்ரன் நிதியைக்கண்டாற்போலும், தேசாந்தரகதமான புத்ரனைக்கண்ட மாதாபிதாக்களைப்போலும், அத்யந்த சந்தோஷத்தில்மூழ்கிக் காடாலிங்கனஞ் செய்துகொண்டு ஹர்ஷத்துடன் கூத்தாடி, எதிராஜா! நீர் எங்களைவிட்டுத் தனியேபோய்ப் பரமபதத்திலனுபவிக்கிற பரமசுகமும் உமக்குச் சுகமாமோவென்று சொல்லி இனி ப்ரம்ஹருத்ரேந்த்ராதி ஸுராசுரர்களும் ஏககண்டமாய்க்கூடி இந்தக் கைங்கர்யத்தை வித்

னஞ்செய்வதாக வந்தெதிர்த்தாலும் நிமிஷமாத்திரத்தி லவர்க ளைப் பராஜிதராக்கி, ஸ்ரீமத்ரங்கேச மண்டபப்ராகாராதிகளை நிரங்குமாகத் தீர்க்கக்கடவோமென்று அதிகோலாஹலத் துடன் புறப்பட்டுக் கண்ணங்குடி மார்க்கமாய் வருகையில் அவ் வூர்த் தலையாரிப்பறையனொருவன் இவர்கள் பின்னே தடதட வென்றோடிவர; இவ்வாழ்வார்திரும்பி, நீயாரென்று கேட்க; சுவாமி! அடியேனிந்த ஊர்த் தலையாரிப்பறையன் இந்த ப்ரதே சத்தில் எவ்விடத்தில் குளமெடுத்தாலும் தீர்த்தமுண்டாகிற தில்லை யாகையால் தேவரீர் இங்கெழுந்தருளிக் கடாக்ஷித்தால் தீர்த்த முண்டாமென்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருந் தேன்; ஆகலின் ஒருபக லிங்கெழுந்தருளும்படியாய் ப்ரார்த்திக் கிறேனென்ன; இவர் ஒரு கல்லையெடுத்து அதில் அடையாளம் வைத்து அவனுக்குக்காட்டி இது விழுந்த இடத்தில் தீர்த்தமுண் டாகும் போவென்று ஊரைநோக்கி யெறிந்துவிட்டு விடிவுகால மாகிறதற்குள்ளாக ஒரு அக்ரஹாரத்துக் கருகேவந்து அங்கே உழுது சேறுக்கி வைத்திருந்த ஒரு வயலில் சுவர்ண விக்ரஹத் தைப் புதைத்துவிட்டுச் சமீபத்தி லிருந்ததொரு திந்த்ருணி வ்ருக்ஷத்தடியில் வீற்றிருக்க; அவ்வளவில் போதுவிடிய; அந்த வயலை யுடையவன் நடுகைக்கு நாற்றுச் சுமையை யெடுத்துக் கொண்டுவந்து அதிலிறங்க; உடனே தோராவழக்கனெழுந் தோடி அவனைத்தடுத்து எம்முடைய பிதாமகன் றேடிவைத்த செய்யில் நாற்று நடுவதற்கு நீயெங்கிருந்துவந்தாய்கா ணென்று வழக்கிட; அவன் திடுக்கிட்டு வ்யவஹாரிகளைக் கொண்டுவந்து பேச; அவர்களுடன் அஸ்தமயமாகிற காலமளவும் வியவஹாரம் பண்ணி, அவ்வயல் தம்முடைய பிதுரார்ஜிதமென்று நிரூபிக்கத் தக்க சாசனங்களை மறுநாளுதயத்திற் கொண்டுவந்து காட்டு கிறேனென்ன; வ்யஹாரபுருஷர்கள் அப்படியே செய்யக்கடவா யென்றுசொல்லி உழவனைநாற்றுச் சுமையோடு வீட்டுக்கனுப்பி விட்டுப் போயினார்கள். இவர்கள் அன்றிராத்ரியில்தானே புதை த்துவைத்த விக்ரஹத்தை யெடுத்துக்கொண்டு அவ்விடம்விட்டு ப்ரயாணமாய் அதிக கடினமான யாத்ரைசெய்து சூர்யோதய மாவதற்குள்ளாக உத்தமர் சன்னிதிக்கு வந்துசேர்ந்து, அவ் விக்ரஹத்தை † நிக்ஷேபஞ்செய்துவிட்டார்கள்.

† நிக்ஷேபம் - புதையல்.

(†) இதற்குள்ளாக நாகைப்பட்டணத்திலுள்ளவர்கள் பௌத்தாலயத்தின் சிகரத்தை மழித்துவிட்டிருக்கக்கண்டு வெகு விபரீதங்களைப்பண்ணி, மணியக்காரர்களும் தலையாரிகளும் அடிச்சுவடுசோதிக்கத்தலைப்பட; அது கண்ணங்குடிவரையில் கொண்டுவந்து அங்கிருந்து அக்ரஹாரத்தின் வயல்மார்க்கமாய் உத்தமர் சன்னிதியளவும்வந்து இவர்களடியில்மறைய; அவர்களிவர்களைச் சூழ்ந்துகொண்டு விக்ரஹத்தைத் தரவேண்டுமென்று பாதிக்க; அவ்வளவிலே இவ்வாழ்வார் சன்னிதிக்குள்ளிருந்து வெளியேவந்து அவர்கள்செய்கிற ‡ விபரீதங்களைக்கண்டு அவர்களவசரத்தையொருவாறடக்கி நீங்கள்சுவடுகண்டுவந்ததும் விக்ரஹத்தையிழந்திருப்பதும் உண்மையாகில் நாம் நிரவிசாரித்து சிக்ஷித்து வாங்கித்தருவோம்; நீங்கள்பயப்படவேண்டியதில்லையென்றுசொல்ல; அவர்களிவரைஆலிநாட்டரசனென்றறிந்திருந்தார்களாகையால், சுவாமி! இப்போதுசொன்னபடிச்செய்துதருகிறேனென்று ஒரு சீட்டு கொடுத்தால் எங்கள் தலைவருக்குக்காட்டி எங்களுக்கு நேரும் தண்டனையிலிருந்து மீள்வோமென்று கேட்டுக்கொள்ள; இவர்தோராவழக்கனையழைத்துச்சீட்டெழுதுமென்ன; அவனும் உங்களுடைய சுவர்ண விக்ரஹக் களவைக் கண்டுபிடித்துச் சிறு

‡ "தோராவழக்குத் திருக்கண்ணங்குடி ஊறாக்கிணறு உறங்காப்புளி" என்னும் பழமொழி யீங்கறிதற் பாற்றும்.

(†) மற்றொரு பிரதியில்:—

பின்பு நாகப்பட்டணத்திலிருக்கின்ற பௌத்தர்களெல்லாந் தங்கள் ஸ்வர்ண விக்ரகத்தையெடுத்துப்போனவரின்னாரென்று கேள்விப்பட்டுச் சோழராஜனிடத்திற்போய்ச்சொல்லிமுறையிட்டுக்கொண்டார்கள். அரசன் திருமங்கையாழ்வாரை யழைப்பித்துக் கேட்க; ஆழ்வாரும் நாமே அந்த விக்ரகத்தை யெடுத்துக்கொண்டுபோய் எம்பெருமானான ஸ்ரீரங்கநாதனுடைய கைங்கர்யங்களுக்கு உபயோகித்தோம்; அதனால் குற்றமென்ன? பொய்யாகிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டு நிஷ்பலமாக இவர்கள் வணங்குகின்ற புத்தவிக்ரகம் பெரும்பேறு பெற்றதென்றுசொல்ல; பௌத்தர்கள் அரசனைப்பார்த்து ஐயா! இவர்திருடிப்போனதுமல்லாமல் எங்கள் ஸமயம்பொய்யென்று நிந்தனையுஞ் செய்தார். இவர்ஸமயம் எப்படிப்பட்டது? இவ்விருஸமயங்களையுங் குறித்து உமதுஸமுகம் சாக்ஷியாக வாதிக்கலாம்; அதிலிவர்தோற்றால்இதற்குத்தக்கதண்டனைசெய்யவேண்டியது; நாங்கள்தோற்றால் எங்களுக்குத்தக்க தண்டனை செய்கிறது மல்லாமல் எங்கள்விக்ரகத்தை யெடுத்துப்போனதற்குக் கேள்வி வேண்டுவதில்லை என்று சொல்ல, அரசன் திருமங்கையாழ்வாரைப் பார்த்து இது

விரலைக் குறைவுபடாமல் கொடுப்பிப்போமென்றும் அதற்குக் காலவரை வருகிறவருஷம் பங்குனிமாதம் ரோஹிணி நக்ஷத்ரமென்றுமெழுதிக்காட்ட; அதிலிவர்கையெழுத்திட்டுக்கொடுக்க; அவர்களதைச் சமாதானமாய் வாங்கிக்கொண்டு போயினார்கள். அங்கே கண்ணங்குடி பறையனும் ஊருக்குள்போய் இவர் அடையாளமிட்டெறிந்தகல்லைச் சன்னிதிக்குமுன்பே விழுந்திருக்கக்கண்டு, இவர் நியமனத்தை க்ராமாதிபர்க்கறிவிக்க; அவர்களும் கிணறெடுப்பித்துத் தீர்த்தமுண்டாகக்கண்டு ஊரடைய மகிழ்வெய்தினார்கள்.

அதன்பின்பு இவ்வாழ்வார்சங்கையில்லாமல்விக்ரஹத்தைச் சுட்டுரைத்து நன்பொன்னாக்கிக், கோடிபொன்னாக்கிக்கொண்டு, பெரியபெருமாளுக்குத் திருமண்டபப்ராகாராதிகைங்கர்யங்களை நிறைவேற்றவேண்டுமென்று திருவுள்ளமாய்க், கட்டுவிக்கிறசெவ்வையிலே, ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலைகட்டுகிற ஸ்தலம் நேர்பட, இவரந்தஸ்தலத்தைத்தப்புவித்துத் திருமதிளை யொதுக்கிக்கட்டுவிக்க; இவருக்கவ்வாழ்வார்ப்ரஸன்னராய்த் தம்முடைய திருப்பூக்கூடைக்கு இவருடைய திருநாமங்களிலொன்றாகிய "அருள்மாரி" என்கிற திருநாமத்தைச்சாற்றி ப்ரீதராயருளினார். பிறகு இவர் கைங்கர்யங்களைப் பூர்த்திசெய்துவைத்துத், திருக்குறுங்குடிநம்பியைச்சேவித்துவரத் திருவுள்ளம்பற்ற; அத்தறுவாயில் நாகைப்பட்டணத்தி லிருந்து சுவர்ண விக்ரஹத்துக்காக அவர்கள் சீட்டை யெடுத்துக்கொண்டுவந்து காட்டிக் காலவரையாயிற்றென்ன; இவரந்த விக்ரஹத்தின் சிறுவிரலைப் பத்ரமாகவைத்திருந்து கொடுக்க; அவர்கள் விக்ரஹமுழுமையும் வரவேண்டாமோ வென்ன; சீட்டை நன்றாக வாசித்துப் பார்த்து அதன்படியே பெற்றுக் கொள்ளக் கடவீர்களென்ன; அவர்களிவரை வ்யவஹாரஸ்தானத்திலழைப்பிக்க; இவர் அங்கும்போய்ச் சீட்டின்படியே சிறுவிரலைச் சேர்ப்பிக்கக் கடவேனென்று வழக்

விஷயத்தி லுமதுகருத்தென்னவென்று கேட்க; ஆழ்வாரும் பௌத்தர்களைப்பார்த்து உங்கள் ஸமய லக்ஷணங்களைச் சொல்லுங்களென்ன? அவர்கள் அவைகளைச்சொல்லுந்தோறும் அவைகளிலுள்ள ஆபாசங்களையெல்லாம் விளங்கும்படித் தெரிவிக்க; அவர்கள் எங்கள் ஸமயம் நிற்கட்டும், உமது சமயலக்ஷணங்களைச் சொல்லுமென்று கேட்க? ஆழ்வார் நித்தியவஸ்துவைக் காட்டுகின்ற ஸ்ரீவைஷ்ணவஸமய ஸித்தாந்தத்தை யாவருமறிந்து அன்புகொள்ளத் திருவாய்மலர்ந்தருளி அப்புத்தர்களைவென்று ஆண்சிங்கம்போலப் பெருமிதத்துடன் முகமலர்ந்திருந்தார்.

காட; ந்யாயாதிபனும் இவர்பட்சத்தில் தான் நியாயமுண்டெ ன்று அந்தச் சிறுவிரலையேவாங்கி அவர்களுக்குக் கொடுத்துப் போகவிட்டான்.

அதன்பிறகு, இவர் பரிவாரத்துடனே திருக்குறுங்குடிக்கு ப்ரயாணமாய்ப் போகையில், திருக்குருகூரில் ஆதிப்பிரானை யடி பணிந்து, திருப்புளியின்கீழே அர்ச்சையாயெழுந்தருளி யிருக் கிற நம்மாழ்வாரைத்தர்சித்துச், "சேமங் குருகையோ செய்ய திருப்பாற்கடலோ நாமம் பராங்குசனோ நாரணனோ-தாமந், துளவோ வகுளமோ தோளிரண்டோநான்கும், உளவோபெரு மானுனக்கு" என்கிறபடி சுவாமி! தேவரீருக்கு இன்புறுமிடம் க்ஷீரசாகரமென்றும், திருநாமம் நாராயணனென்றும், தரித்திரு ப்பது திருத்துழா யலங்கலென்றும், திருத்தோள்கள் நான்குண் டென்றும் அடியேன் சாஸ்த்ரங்களா லறிந்திருக்கிறேன்; ஆனு லிப்போது ப்ரத்யக்ஷத்தில் அதற்குநேர் புரட்டாக இருப்பிடம் திருக்குருகையாயும், திருநாமம் பராங்குசனெனவும், தரித்தி ருப்பது வகுளமலர்மாலையாயும், திருத்தோள்க ளிரண்டாயு மிருப்பதைப்பற்ற, இனி அடியேன் பாவனு நிஷ்டையில் இவ்வி ரண்டுவகையி லெதைக் கொள்ள வேண்டுமோ சொல்லீரென் ருர். அப்போது ஸ்ரீபராங்குசர் அவ் விருப்பில்தானே சதுர்ப் புஜ சங்கசக்ராதி திவ்யாயுததரராய் வைகுண்டநாதனுகி ஸ்ரீமதுர கவியாழ்வாரைப் பிராட்டியாகவும் திருப்புளியாழ்வானை அனந் தாழ்வானுகவும் செய்துகொண்டு சேவைசாதித்தருள; இவர் ஹர்ஷப்ரஹர்ஷராய் ஆடிப்பாடி (உளவோ பெருமானுனக்கு என்பதையறிய) அடியே னிரண்டு வகையைப் பற்றிக் கேட்கப்

அரசன் மனமகிழ்ந்து ஆழ்வாரைவணங்கி அளவிறந்த திரவியங்களை யும் அபாரமான வஸ்த்ராபரணங்களையும் ஸமர்ப்பித்து, மதம் பொழி கின்ற யானையின் பிடரிமேலெழுந்தருளப் பண்ணிக்கொண்டு அந்நகர் வலஞ்செய்வித்து, மங்களவாத்யங்கள்கோஷிக்கத் தனது மந்த்ரிமுத லானவர்களுடன் சூழ்ந்துபோய்த் திருவரங்கத்திற்கு எழுந்தருளச்செ ய்து தான் விடைபெற்றுக்கொண்டு திரும்பித் தந்நகரத்துக்குப் போய் விட்டான். ஆழ்வாருந் திருவரங்கத்தையடுத்து யானையை விட்டிறங்கி ஸந்நிதியிற் சென்று ஸ்ரீரங்கநாதனை யடிபணிந்து புறம்வந்து ததீயாரா தனஞ்செய்வித்து ப்ரஸாதமும் ஸ்ரீபாததீர்த்தமும்பெற்றுக் குமுதவல்லி யிடத்திற்குவந்து அரசன் கொடுத்த பரிசுகளைக்காட்டி ஸந்தோஷஞ் செய்வித்து இன்புற்றிருந்தார்.

புக; இஃதொரு சம்பிரமான சேவையையுந்தந்தீரே? இதுவெமொன்றுண்டோ தேவரீருக்கு என்று விண்ணப்பஞ் செய்து தீர்த்தப்ரஸாதங்களை லபித்துக்கொண்டு விடைகொண்டு திருக்குறுங் குடிக்கெழுந்தருளி நம்பியை மங்களாசாஸனஞ்செய்து மீண்டும் நம்பெருமாள் சன்னிதிக்கெழுந்தருளினர்.

அப்போது திருமதிள் கட்டினகொல்லர் முதலிய தொழிலாளிகள் தங்களுக்குக் கொடுக்கவேண்டிய கூலிக்காக ஒருமித்து வந்து இவரைப்பாதிக்க; இவரவர்களிடத்தில் ஹிதமாகப்பேசித் திருக்காவேரி த்வீபத்தில் சில த்ரவ்யம் சேமித்து வைத்திருக்கிறதென்றும் அங்கேவந்தால் வேண்டியவரையில் கொடுப்போமென்றுஞ்சொல்ல; அவர்களுமிசைய; அவர்களையெல்லாம் ஓர் ஓடத்திலேற்றிக்கொண்டு திவ்யக்ஞானங்களை அமோஹமாய்ப் போதித்து அவர்களுக்கிந்த ஜகத்திலிருந்த இச்சையைமாற்றிப் பக்வஸ்தர்களாம்படிப்பண்ணி ப்ரவாஹத்தின் மத்தியிலே போமளவில் இவர் அவர்களைநோக்கி, உங்களுக்கெல்லாமிப்போது த்ரவ்யத்தின்பேரி லிச்சையோ? நித்யவாழ்வைப்பெற விச்சையோ? என்றுகேட்க; நித்யவாழ்வே வேண்டுமென்று அவர்களெல்லாம் ஏககண்டமாய் ப்ரார்த்திக்க; அப்படியாகில் யாவரும் சிரஸின்மேல் கைகளைக்கூப்பிக்கொண்டு பெரியபெருமாள் திருவடிகளில் மனதைச் சத்யமாக நிறுத்திவைத்து த்யானித்து நிற்பீர்களாகில் இப்போதே அந்தப்பரமபதநாதனை நாம் ப்ரத்தியக்ஷமாக்கித் தருகிறோமென்ன; அவர்களு மப்படியே செய்து நிற்க; அந்தசமயத்தில் ஓடக்காரனுக்குச் சவுக்ஞைபண்ணி, அவனுந் தாமுமாய்ப் பிணையல் போட்டுக்கொண்டுவந்த மற்றோரோடத்தில் தாண்டிக்கொண்டு, அவர்களையோடத்தோடே கவிழ்த்துவிட்டுத் திருநாடளித்துத் திரும்பிவந்து கோயிலிலெழுந்தருளி யிருந்தார். அனந்தரம் அந்தத்தொழிலாளிகளுடைய புத்ரபௌத்ரர்கள் இந்த வர்த்தமானத்தை யறிந்துகொண்டு, எங்களுடைய பிதாக்களையும் பிதாமஹர்களையும் கொன்றுவிட்டிருப்பதற்குக் காரணஞ் சொல்லுமென்று இவரைச் சூழ்ந்துக்கொண்டு பஹுவிதமாக இரைய; அப்போதிவர் மஹாதுக்கத்துக்குள்ளாகி விழித்துக்கிடக்க; நம்பெருமாளிவருடைய ஸ்வப்னத்திலெழுந்தருளி ஆழ்வீர்? நீரேதுக்கஞ்சிக் கிடக்கிறீர்? அவர்களையெல்லாம் திருக்காவேரியில் தீர்த்தமாடித் திருமண் தரித்துக்கொண்டு நம்முடைய திருமண்டபத்தில் வந்து நின்று அவரவர் பிதாக்களை அழைக்கச்சொல்வீராகில் நாமவர்களைக் காட்டித்தரமாட்டோமோ வென்று திருவாய்மலர்ந்தருளிப் போக; இவருமவர்களைப்பார்த்துப் பெரியபெருமாள் நியமனப்

படியே சொல்லித் திருக்காவேரியில் தீர்த்தமாடித் திருமண் தரி த்துக்கொண்டு வரச்செய்து அழகியமணவாளன் திருமண்டபத் தில் அழைத்துக்கொண்டுபோய் நிறுத்தி, உங்களுடைய பெரி யோர்களைப் பெயரிட்டு அழையுங்கோளென்ன; அவர்களு மவ் வாறே யழைக்க; அவர்கள் பெரியோரெல்லாம் பெரியபெரு மாள் பின்னே நின்றுகொண்டு முகங்காட்டி ஆழ்வாருடைய க்ருபையால் நித்யத்வத்தைப் பெற்றுச் சுகித்திருக்கிற நாங்க ளன்றோ உங்களுடைய துர்க்கதியைக்கண்டு வ்யஸனப்பட வேண்டியது; அப்படியிருக்க, நீங்களெங்களுக்காகத் துக்கிக்க லாமோ? நீங்களும் இவ்வாழ்வாருடைய திருவடிகளை ஆசிரயித் துச் சீக்கிரத்தில் எங்களுடன்வந்து கலக்கும்வகை தேடிக்கொ ள்ளவேண்டுமென்றுசொல்லிமறைந்துவிட்டார்கள்; அப்போது அவர்களெல்லோரும் ஆழ்வார்திருவடிகளி லபசாரப்பட்டோ மேயென்று வருந்தித் தண்டன்ஸமர்ப்பித்து அபசாரக்ஷாபணம் பண்ணிக்கொண்டு இவர் திருவடிகளை யாசிரயித்திருந்தார்கள்.

(†) அனந்தரம் இவர் ஒருநாள் பெரியபெருமாளைச் சேவி த்துநின்று ஒருவாறு சிந்தித்துக் கொண்டிருக்கப்: பெரியபெரு மாள் கடாக்ஷித்து நீரேதுக்குச் சிந்திக்கிறீர்காணென்ன? இவர்

(†) மற்றொரு பிரதியில்:—

இப்படியே நாள்தோறும் சேஷசாயியான ஸ்ரீரங்கநாதனை ஸேவி த்து வருகின்றவர் ஒருநாள் ஸந்நிதியில் திருநெடுந்தாண்டகமென்னும் ப்ரபந்தத்தைத் தேவகானத்தினுல் பாடிக்கொண்டு மனமுருகிநிற்க: ஸ்ரீரங்கநாதனும் திருவுளமுவந்து ஆழ்வாரைக் கடாக்ஷித்தருளி உமக் கென்ன வேண்டியதென்று திருவாய்மலர்ந்தருள; ஆழ்வாரும் எம்பெரு மானை யடிபணிந்து ஸ்வாமி! முன் ஸ்ரீசடகோபாழ்வார் திருவாய்மலர்ந் தருளிய திராவிடவேதங்களாகிய நாலையும் ‡ திருவத்யயனோத்ஸவத்தில் கீர்வாணவேதங்களுடன் ஸ்ரீவைஷ்ணவர்கள் பாராயணம் பண்ணும்படி க்ருபைசெய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொள்ளப்; பெரிய பெருமாளும் அவ்வாறே அனுக்ரகஞ்செய்தருளினர். பின்பு திருக்குரு கூரிலிருக்குஞ் சடகோபரும் ஸ்ரீரங்கத்துக் கெழுந்தருளும்படித் திரு முகப்பட்டயமெழுதி ஸந்நிதியிலிருக்கின்ற ஸ்ரீவைஷ்ணவரிடத்தில் கொடுத்தனுப்பத் திருமுகத்தைக் கொண்டுபோய்த் திருக்குருகூர்நம்பி ஸந்நிதியில்கொடுக்க ஆழ்வார்பரிஜனங்கள் அந் நியமனப்படி ஆழ்வாரை ஸ்ரீரங்கத்துக் கெழுந்தருளப்பண்ணத்; திருமங்கையாழ்வாரும் நம்மாழ் வாரை யெதிர்கொண்டு திருவடிதொழுது ஸந்நிதிக்கு எழுந்தருளப்பண் ணிக் கொண்டுபோய்நிற்க; எம்பெருமான் ஆழ்வாரை க்ருபைகூர்ந்து நம்மாழ்வாரே யென்றழைத்தருளித் திருப்பரிவட்டம் திருமாலை முத லானவரிசைகளை ப்ரசாதித்தருளினர்.

---

‡ இதன் விரிவைக் கலியனருளப்பாட்டிற் கண்டுகொள்க.

18

சுவாமி! இந்த ஸ்ரீரங்கவிமானத்தைச் செம்பொன்னால் முடித்துக் காண யோக்யனாகாமற் போனேனே யென்னப்; பெரியபெருமாள் அந்த நிமிஷத்தில்தானே விமானமண்டப கோபுராதிகளை யெல்லாம் பொன்மயமாய்க் காணும்படிச்செய்ய; இவர்தர்சித்து என்னாளுமிப்படியே இருக்கும்படிக்குத் திருவுளம்பற்றவேண்டு மென்று ப்ரார்த்திக்கப்; பெரியபெருமாள், ஆழ்வீர்? த்ரவ்யாபேக்ஷைகொண்டு தீயகதிக்காளாகும் இம்மண்டலத்தாருக் கிந்த விமானம் உம்முடைய அபீஷ்டப்படி யிருக்குமாகில் பஹு ப்ரமாதங்களாய்விடு மாகையால் இங்ஙனே மிருக்கலாகாதென்று சாதித்துப், பழையபடியே செய்துவிட்டு, இன்னமு மும்முடைய நினைவிலிருப்பதைச் சொல்லிக்காணுமென்ன; இவர், சுவாமி! இப்போது திருமதிள் வேலைக்காரர்களைத் தேவரீர் ஆட்கொள்ள இடமாகவமைந்த வடதிருக்காவேரிக்குக் “கொள்ளிட”மெனவும் அந்தத்துறைக்குப் “பார்வானத்துறை” யெனவும் பெயர்வருமாறு அந்ததீரத்தில் அடியேன் வேலியிட்டுக்கொள்ளவும் அவ்வேலிக்குள் அநாத ப்ரேதங்களுக்கெல்லாம் அடியேன் சம்ஸ்காரஞ் செய்து கொண்டிருக்கவும் அவைகளுக்குத் தேவரீர் பரமபதம் சாதித்துவரவும் க்ருபை புரியவேண்டியதாய் ஓர் வரங்கேட்கின்றேனென்னப்; பெரியபெருமாள்

ஆழ்வாரும் விடைபெற்றுக்கொண்டு திருமங்கையாழ்வாருடன் எழுந்தருளியிருந்தார். பின்பு திருமங்கையாழ்வார் மறுநாள் ஏகாதசி தொடங்கிப் பத்துநாள்மட்டும் பகலில் கீர்வாணவேதபாராயணமும் இரவில் திருவாய்மொழியாகிய திராவிடவேத பாராயணமும் செய்வித்துப் பத்தாவதுநாளிரவில் திருவாய்மொழியோதிச் சாத்தும்போது ஸ்ரீசடகோபர் ஜீவாத்மாக்கள் ஸ்ரீரங்கநாதனைத் திருவடிதொழும்படியான வழியை யநுசரித்தருளும்படிச் செய்வித்துப் பின்பு வருஷந்தோறும் இவ்வாறே எழுந்தருளும்படிச் சடகோபரது திருவுள்ளம் பெற்றுக்கொண்டார். சடகோபரும் பெரியபெருமா ளடிபணிந்து விடைகொண்டு திருக்குருகூருக் கெழுந்தருளினார். பின்பு திருமங்கையாழ்வார் உலகிலுள்ளவர்க ளியாவரும் கடைத்தேறும்பிடியாக ஸ்ரீரங்கநாதனுடைய திருவுள்ளப்படி அந்தத் திவ்யதேசத்தி லொருபக்கத்தில் சிறிது நிலம்வளைத்து முதுகாடாக்கி இந்நிலத்தில் புண்யாத்மாக்களே யல்லது பாபிகளாயினும் தபனம்பண்ணப் பெறுவார்களானால் பரமபதம் அடைவார்களென்று உண்மையாகத் தெரிவித்தருளினார்.

பின்பு சிலகாலம் ஸ்ரீரங்கத்திலே யிருந்தருளிப் பூர்வம் திவ்யதேச யாத்ரை செய்யும்போது மந்தரகிரிக்குஸமீபத்தில் பத்ராஸ்ரமமென்று சொல்லப்பட்ட திருக்குறுங் குடியிற்சென்று நம்பியினழகைக்கண்டு களித்து நித்யவாசஞ்செய்ய வேண்டுமென்று எண்ணியும் அவ்வெண்ணத்தை முடிக்காது ஸ்ரீரங்கத்தில் கைங்கர்யஞ் செய்யவேண்டி வந்தவ

உவந்தவுள்ளத்தராய் ஆழ்வீர்? நீரிடுகிற வேலிக்குள் விழுந்திறக்கிற மனுஷ்ய பசுபக்ஷியாதி சகலசீவர்களுக்கும் பரமபதந்தரவிருக்கிற நாம் உம்மால் சம்ஸ்காரம் பண்ணப்படுமவர்களுக்கு மாத்ரமோ இல்லையென்போமென்று வரந்தந்தருள; இவர் புளகீக்ருதகாத்ரராய்ப் பார்வானத் துறையைத் திருத்தி மண்டபமியற்றி அனந்தமான அநாதப்ரேத சம்ஸ்காரங்கள் செய்து அவர்களுக்கெல்லாம் முக்தி தந்துகொண்டிருக்குந் தசையிலே, ஒருநாள் பெரிய பெருமாள் இவரைநோக்கி உமக்கின்னமும் நம்மாலாக

ரானபடியால் அத் திருக்குறுங்குடிக்கு எழுந்தருள வேண்டுமென்று திரும்பவும் ஆசைமேற்பட்டு ஸ்ரீரங்கநாதனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுக் குமுதவல்லியாருடன் பரிஜனங்கள்சூழப் பரசமயகோளரி வந்தாரென்று சின்னங்களூத வெழுந்தருளிச், சோலைமலையழகரையும், கூடலழகரையும், ஸ்ரீவில்லிபுத்தூர் வடபத்ரசாயியையும், பெரியாழ்வாரையும், திருப்பொருனை வடகரையில் ஸ்ரீவைகுண்டநாதனையும், எம்மிடர்கடிவார் காசினிவேந்தர் அரவிந்தலோசனர் மாயக்கூத்தர் வைத்தமாநிதி என்கின்ற திருநாமங்களையுடைய எம்பெருமான் அர்ச்சாவதாரங்களை அவ்வவ்விடங்களி லெழுந்தருளி ஸேவித்துக்கொண்டு திருக்குருகூர் வானமாமலைமுதலான திவ்யதேசங்களிற் சென்று எம்பெருமானை அடிபணிந்து திருக்குறுங்குடிக்கு எழுந்தருளினார்.

ஆழ்வார் எழுந்தருளுவதைக்கேட்ட அந்தஸ்தலத்திலுள்ள பரிஜனங்களுடன் ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாருந் திரண்டு எதிர்கொண்டுபணிய அவர்களுடன் சென்று திருப்பாற்கடலில் தீர்த்தமாடிக் கோபுரவாயிற் குட்புகுந்து கரண்டமாடு பொய்கையின் கரையில் கரும்பனைப் பெரும்பழம் விழுவதும் வாளைபாய்வதும் பார்த்துமகிழ்ந்து ஆனந்தபரவசராய், பேரன்புடன் உடல்முழுதும் புளகமெழக் கைகளைக் குவித்துக்கொண்டு கண்களில் ஆனந்த பாஷ்பம் பொழிந்து ஆனந்தமுடையவராய் விழுந்து விழுந்து தண்டன் ஸமர்ப்பித்து நின்ற நம்பி இருந்தநம்பி கிடந்தநம்பி திருப்பாற்கடல் நம்பி திருமலைநம்பி என்கிற ஐந்து நம்பிகளையும் ஸேவித்து அடியேனுக்கு இன்றுபரமபதம் ப்ரசாதித்தருள வேண்டுமென்று அழகிய நம்பியின் பொன்னடியிரண்டையும்பற்றிக் கீழ்விழுந்துருகியுருகியன்பே வடிவாகக் கிடந்தார். அப்பொழுது எம்பெருமான் ஆழ்வாரே உமது இஷ்டப்படியே கொடுத்தருளினோமென்று திருவாய்மலர்ந்தருள; அந்தக்ஷணமே திருமங்கையாழ்வார் ஸ்ரீமந்நாராயணனுடைய நியமனப்படி அவர்ஸந்நிதியில் ஸகல வரிசைகளையும் பெற்று மணவாளப் பிள்ளையைப்போலே ஸ்ரீவைகுந்த மாநகரத்திலிருக்கும் திருமாமணி மண்டபத்தைச் சேர்ந்தருளினார். இவர் இந்த லீலாவிபூதியில்-க0௫-திருநக்ஷத்திரமெழுந்தருளி யிருந்தார். திருக்குறுங் குடியில் கழனிக்காட்டில் திருமங்கையாழ்வாருடைய சந்நிதியொன்று ஸ்தாபிக்கப்பட்டு இன்றும் நித்யோத்ஸவ முதலியவை நடந்தேறிவருவது மிங்கறிதற்பாற்றும்.

வேண்டியது எதுவாயினுமிருக்கில் கேளீரென்ன; இவர், தேவரீருடைய தசாவதாரத்தைச் சேவிக்கப் பெற்றிலேனே யென்ன; அப்போதே பெரியபெருமாள், மச்ச கூர்ம வராஹ வாமன நாரஸிம்ஹ த்ரிராமக்ருஷ்ணர்களான ஒன்பது விபவங்களைச் சேவை தர; இவர், சுவாமீ! தேவரீர் இனிவருங்காலத்தி லெடுக்கப்போகிற பத்தாவது விபவமான கலிகாவதாரத்தைச் சேவிக்கும்நாள் குறுகுமோ வென்ன, பெரியபெருமாள் இவரைப்பார்த்து நாம் அந்த அவதாரமெடுக்கும்போது நீர் நம்மிடம் அர்ச்சையாயிருந்து சேவிக்கலாமென்றார்.

அனந்தரம் கலியாப்தம் நானூற்றெண்பதுக்குமேல் திருமங்கையாழ்வார் தசாவதாரக் கோயிலைக்கட்டிப் பிரதிஷ்டிப்பித்துத் தம்மையும் விக்ரஹராக மூலோத்ஸவ விக்ரஹங்களை ஏறியருளப்பண்ணி ப்ரதிஷ்டிப்பித்து, அதற்கு வடபுறமாகத் தாம் வாள்கடைதூரம் (அதாவது ஆழ்வார்தமது கையிலிருந்தவாளை வீசியெறிய அஃது எவ்விடம் விழுந்ததோ அவ்வளவு தூரம் என்றபடி) நிலங்கொண்டு ஸ்ரீபண்டாரத்திலே திரவியத்தை முதலிட்டுப் 'பாடிய வாளன்துறை' என்று அதற்குத் திருநாமஞ் சாற்றி அவ்விடத்திலே ஸம்ஸ்க்ருதரான பேருக்குப் பரமபதமுண்டாகத்தக்கதாக அந்த ப்ரதேசத்துக்கு ஸ்ப்ருஷ்டியில்லாதபடிப் பெருமாள் சந்நிதியில் வரம்பெற்று, அத்துறைக்கு இன்றும் 'திருமங்கை மன்னன் படித்துறை' எனப் பெயர்வழங்கும்படிச் செய்து தாம் பெரிய பெருமாளுடைய திருவடிகளையே உபாயோபேயங்களாகப் பற்றிக் குமுதவல்லியாருடன் எழுந்தருளி நித்திய சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். இவர் மானுஷ விக்ரஹமாக விருந்தது நூற்றைந்து ஸம்வத்ஸரம்.

திருநக்ஷத்ரத் தனியன்.

வ்ருச்சிகே க்ருத்திகாஜாதம்
சதுஷ்கவி ஶிகாமணிம்
ஷட்ப்ரபந்த க்ருதம்ஶார்ங்
மூர்த்திம் கலிஹமாஶ்ரயே.

ஸ்ரீ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.
ஜீயர்திருவடிகளேசரணம்.

ஸ்ரீ திருமங்கையாழ்வார் திருவவதாரவருஷம்-சஙுஅச-க்குச் சரியான ப்ரமாதி வருஷம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான

நம்மாழ்வார் வைபவம்.

ஈச்வரமுனிக ளருளிச்செய்தது.

நேரிசை வெண்பா.

திருவழுதி நாடென்றுந் தென்குருகூ ரென்றும்
மருவினிய வண்பொருந லென்றும்—அருமறைகள்
அந்தாதி செய்தா னடியிணையை யெப்பொழுதுஞ்
சிந்தியாய் நெஞ்சே தெளிந்து.

சொட்டைநம்பிக ளருளிச்செய்தது.

நேரிசை வெண்பா.

மனத்தாலும் வாயாலும் வண்குருகூர்ப் பேணும்
இனத்தாரை யல்லா திறைஞ்சேன்—தனத்தாலும்
ஏதுங் குறைவிலே னெந்தை சடகோபன்
பாதங்கள் யாமுடைய பற்று.

“ததஃ கலியுகஸ்யாதௌ வைஶாக்யாம் விஶ்வஸாவநஃ-விஷ்ணுபக்தி ப்ரதிஷ்டார்த்தம் ஸேநேஶோவதரிஷ்யதி” என்கிறபடி கலியுகாரம்பத்தில் விசாகநக்ஷத்ரத்தில் விஷ்ணுபக்தியை நிலைநிறுத்தும்பொருட்டு விசுவசமஸ்தத்தையுங் காட்டிநிற்கும் சேனைமுதலியாருடைய ஹம்ஶபூதரொருவர் அவதரிக்கப்போகின்றாரென்றும், “ஸேநேஶகருணாலப்த திவ்யமந்த்ர த்வயம் முதா—த்ராவிடாம்நாயவக்தாரம் ஶடகோபகுரும்பஜே” என்கிறபடி நிலமகளுக்கு முக்யாபரணத்தைப் போல்பவராயும் ருஷிசிரேஷ்டராயுமிருந்து சேனைமுதலியாருடைய கடாக்ஷத்தைப் பெற்று வேதத்தினுத்தரபாகத்திலுள்ள மஹாமந்த்ரத்வயார்த்தங்களை ப்ரதிபாதியாநின்ற தமிழ்வேதங்களை யருளிச்செய்த ஆதிகுருவாகிய ஸ்ரீசடகோபரைச் சேவிக்கின்றேன் என்றும், “ஸ்ரீவிஜ்ஞாநதிநோத்த ரேஹநிகலௌள வர்ஷேப்ரமாத்யாஹ்வயே மாஸே மாதவநாம்நி பார்க்கவதிநே ருக்ஷேவிஶாகாபிதே-லக்நேஶாத்த சதுர்த்தயீ திதியுதே ஸ்ரீமத்குளீரேபிச க்ஷித்

யாம்ப்ராதுர பூத்பராங்குஶகவிர் பாக்யோதயோஸ்மாத்ருஶாம்" என்கிறபடி இவ்வுலகில் கலியுகாதியில் நாற்பத்து மூன்றுவதுநாளில் ப்ரமாதிவருஷம் வைகாசிமாதம் சுக்ரவாரம் சுக்லபக்ஷம் சதுர்த்தசி கடகலக்னம் விசாகநக்ஷத்ரங் கூடிய சுபதினத்தில் அவதரித்து நம்போலிகளுக்குப் பாக்யகாரணராயிருக்கிற ஸ்ரீபராங்குசரைத் துதிக்கின்றேன் என்றும், "வகுளாலங்க்ருதம் ஸ்ரீமச்சடகோபபதத்வயம்-அஸ்மத்குலதநம் போக்யமஸ்துமே மூர்த்நபூஷணம்" என்கிறபடியே வகுளபுஷ்பாலங்க்ருதரான ஸ்ரீசடகோபருடைய உபயதிருவடிகளும் எமக்குக் குலதன மாகையாலே அவற்றை எம்முடைய சிரஸுகளில் வைத்துக்கொண் டனுபவிப்போமாக என்றும், "அஸ்திபாண்ட்யேஷு தேஶேஷு காசிச்ரீ நகரீஹி-தாம்ரபர்ணி நதிதீரே ஸாக்ஷாத் த்ருஷ்டோஹயதோக்ஷஜஃ சங்காசயமுநாசைவ ததா கோதா ஸரஸ்வதி நர்மதாஸிந்து காவேரிதாம்ரபர்ணீ ஸரித்வரா" என்கிறபடியே கங்கை-யமுனை-கோதாவரி-ஸரஸ்வதி-நர்மதை-சிந்து-காவேரி-நதிகளுக்கெல்லாம் உத்க்ருஷ்டமாயிருக்கும் தாம்ரபர்ணி நதிக்கரையில் பாண்டியதேசத்தில் திருநகரியென்னும் ப்ரசித்தமாயிருப்பதொரு ப்ரதேசத்திலே ஸ்ரீயஃபதியே வந்து இப்படி உருக்காட்டினுன் என்றும் திவ்யசூரி சரிதையிலே சொல்லிற்று.

ஆழ்வார் திருவவதாரஞ்செய்த குலத்தின்வைபவம்.

இவ்வாழ்வாருடைய குலவைபவமெங்ஙனே யென்னில்:—

* பொருநற்றுறையில் "நல்லார்நவில்குருகூரில்" "எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கு மூந்தை" என்கிறபடியேயும், "ஏழாட்காலம்பழிப்பிலோம்" என்கிறபடியேயும், எழுதலைமுறையிலும்புறந்தொழாமையையுடைத்தாய்க்குடிகுடிவந்தாட்செய்த †பூவைசியகுலத்தில் திருவழுதிவளநாடரென்கிற அரசன் மஹாதார்மீகனாய் நெறிமுறைதவறாது ராஜ்யபாரஞ் செய்துகொண்டிருக்கையில், ஒருதினத்தில் கும்பசம்பவர் ஆங்கிரசர்முதலான மஹாருஷிகள் அவரிடத்திற்குவர, அவர் எதிர்கொண்டுபோய்த் தண்டன்ஸமர்ப்பித் தழைத்துவந்து ஆசனத்திலிருத்தி அர்க்யபாத்யாதிகளா லுபசரித்துச் சத்கரித்து வந்தகார்யமேதென்று வினவ; கும்பசம்பவர்மஹாப்ரீதராய் அரசனே! உமதுமுற்பாட்டனை குருகன் என்பவர் இராஜ்யாபிஷேகஞ் செய்துகொண்டபோது இந்தநகரியை ஜனஸ்தானமாக்கிக்கொண் டிருந்தாராகை

* தாம்ரபர்ணி எனவும் பொருநல்நதி எனவும் பெயருண்டு.

† பூவைசியர்-வேளாளர்.

யால், இதற்குக் குருகாபுரியென்று பெயர் வந்திருக்கிறது; அவ்வரசனால் அசுரராக்ஷஸ பயமின்றிக்கே ப்ரஜைகள் சுகித்திருக்கக் கண்டிருக்கின்றோம்; அப்படியே நீரும் ஆண்டுக்கொண்டிருக்கிறபடியால், எங்களுக்கு நேர்ந்திருக்கிற ஆபத்தைத்தீர்த்துக் காப்பீரென்றெண்ணி இங்குவந்திருக்கின்றோமென்னத், திருவழுதிவளநாடர், அடியேனுக் கதையறிவித்துப் பணிகொள்ள வேண்டுமென்று ப்ரார்த்திக்க, அப்போது ‡ கும்பசம்பவர் கேளீர் அரசனே! துந்துமாரனென்னுமொரு ராக்ஷஸன், ப்ரம்ஹாவினுடைய வரப்ரசாதத்தால் அதிகபலிஷ்டனாய், மாயாரூபங்களையெடுக்கவும் வல்லவனாய், எங்களாசிரமங்களையும் யாகதபோத்யயனாதிகளையும் வேதசாஸ்த்ர புராணங்களையும் நாசஞ்செய்ய வெத்தனித்து அதிக வுபத்ரவம் செய்யாநிற்க நாங்கள் சஹிக்காமல் பிரம்ஹா பக்கல் போய் அவனுடைய துன்மார்க்கங்களை யெல்லாம் விண்ணப்பஞ்செய்து அவனுக்கு எந்தக்காலத்திலெவரால் முடிவுநேருமென்று கேட்க; அதற்கு ப்ரம்ஹா திருப்பாவையை க்ரமமாக ஜபிக்கிற ஒருவனுக்குச் சுதர்சனசஹிதனாய் விஷ்ணுஹம்சபூதனாய்ப் பௌத்ரனாய் வரப்போகிற சக்ரபாணியால்மாத்ரந்தான் சம்ஹரிக்கப்படவேண்டுமென்றும் அல்லாதாரால் தனக்கு முடிவுநேரிடலாகாதென்றும் அவன் நம்மிடத்தில் வரம்பெற்றிருக்கின்றானகையால், நீங்கள் ஸ்ரீயஃபதியான விஷ்ணுவை ப்ரார்த்தித்து அவரா லவனுக்கு முடிவுதேடக் கடவீர்களென்றாக்ஞாபிக்க, நாங்கள் க்ஷீராப்திக்குப்போய் எம்பெருமானையடிபணிந்து இந்தவிருத்தாந்தங்களை விண்ணப்பம்பண்ணிக்கொள்ள; அந்தத் தயாளு எங்களுக்கிரங்கி அஞ்சவேண்டாம் முனிவர்களே! பாண்டியதேசத்தில் ஸ்ரீநகரிக்கதிபதியான திருவழுதிவளநாடரென்கிற அரசனுக்கு நாமே பௌத்ரனைப் பிறந்து உங்களுடைய குறையைத்தீர்த்துக்கொடுக்க விருக்கின்றோமாகையால் நீங்கள்போய் அவ்வரசனுக்குத் திருப்பாவையை யுபதேசித்து, க்ரமமாக ஒருவருஷகாலஞ் ஜபித்துக்கொண் டிருக்கும்படிச் செய்யவேண்டுமென்றாக்ஞாபிக்க; அதைச்சிரமேற்கொண்டு, இப்போது உம்மிடத்தில் வந்திருக்கிறோம் காணீர்; இனி எங்கள் மனோரதத்தை வ்ருத்திசெய்தற் பொருட்டுப், பஞ்ச ஸம்ஸ்கார பூர்வமாக அந்தத் திருப்பாவையைக் கேட்டுணர்ந்து ஜபிக்கவேண்டியதொன்றுதான் உம்மாலெங்களுக் காகத்தக்க உபகாரமென்று சொன்னார்கள்; அதன்பின்பு அரசன் அகஸ்தியரை நோக்கிச் சுவாமி! பூர்வகாலத்திலெவராகிலு மிந்தத் திருப்பாவையை

இவ்விதமாக வனுசந்தித்துச் சந்தானாபிவிருத்தி பெற்றிருந்ததுண்டாகில் அடியேனுக்குணர்த்த வேண்டுமென்று ப்ரார்த்தித்தவனாகக்; கும்பமுனிவர், கேளீர் வழுதிவளநாடரே! பூர்வத்தில் மஹீஸாரக்ஷேத்ரத்தில் சய்ஹனனம் என்கிற நகருக்கதிபதியாயிருந்த க்ஷேத்ரவ்ரதனென்பவன், சஹவாஸத்தாலேகெட்டு இந்திரியங்களைத்துர்வ்யாபாரங்களிலேசெல்லவிட்டவனாய் பஹு காலமுழன்று, அதற்குப்பலனான ரோகங்களைச்சம்பாதித்து அவற்றால் பீடிக்கப்பட்டுமஹா துக்கத்துக்காளாகி, அந்தத்தசையில்ஜன்மாந்தரசுகிர்தவழியில் க்ஞானோதயத்தைப்பெற்று மதியைப்பெருக்கி நல்லகேள்விகளை யுடையவனாய் ஸ்ரீவைஷ்ணவ சஹவாசத்தைப் பேணிப் பஞ்சஸம்ஸ்கார பூர்வகமாக, இந்தத் திருப்பாவையைக் கேட்டுமனதிற்பதித்து, நித்யமாய்ப்பக்திபுரஸ்ஸரமாக அநுசந்தித்துக்கொண்டு திருவேங்கடமுடையானையே தஞ்சமென்றடைந்து சத்கதிக்காளாகினான். அன்றியும் வடதிசையில் சங்கரநாமநகரத்துக் கதிபதியாயிருந்த சைவசமயியான உக்ராஸ்யனென்பவன் தனது மந்த்ரியாகிய புண்டரீகரென்கிற ஸ்ரீவைஷ்ணவருடைய புருஷாகாரத்தால் திருவரங்கம் பெரிய கோவிலுக்குப் போய் நம்பெருமாளைச் சேவித்து, அங்கே விப்ரநாராயணரென்னுமொரு பாகவதோத்தமரை யாசிரயித்துக்கொண்டிருக்க; ஒருநாளில் அந்தப்பாகவதர் அவன் முகத்தைப்பார்த்து, உம்முடைய மனதிலேதோ குறையிருப்பதாகத் தென்படுகிறது காணென்ன; அவன் சுவாமி! தேவரீருடைய க்ருபையால் அடியேனுக்கு ஐசுவர்யந் தொடக்கமான எதிலுங் குறைவில்லையாயினும் சந்தானமில்லாத குறையொன்றே எவ்வகைப்பட்ட சஜ்ஜனர்கள் சாங்கத்யத்திலிருக்கிலும் அடியேனை வாடி வருந்தச் செய்கின்றதென்ன; அந்தப்பாகவதர் அவனுக்கிரங்கிப், பஞ்சஸம்ஸ்காரஞ்செய்து திருப்பாவையை யுபதேசித்து, இதை நீர் ஒருவருஷகாலவரை அனுசந்தித்துப் போகுவீராகில் உமக்குச் சுபுத்ரனுண்டாவானென் றருளிச்செய்ய; அவனும் மஹாபாக்யமென்று சொல்லி விடைபெற்றுத் தன்னுடைய நகரத்திற்குப் போய்ச் சிலநாளைக்குப்பின், குதிருஷ்டிகளுடைய சஹவாசத்தால் மதிமயக்குண்டு அநுசந்தானத்தைமறந்து பழய நடையைப்பற்ற; சிலவருஷங்களாவும் அவனுக்குச் சந்தானமுண்டாகாமலே யிருந்தது; அதன்மேலவன் மிகவும் புத்ராபேக்ஷையால் வருந்திப் பித்தேறி ஓரானொருநாளில் பசுபதி கோயிலுக்குப்

போய்த் தன்னுடைய உடைவாளை யுருவிக்கொண்டு, ஓ! சந்த்ர சேகரனே! சந்தானஹீனனான எனக்கு ராஜ்யமிருந்தேதுக்காம்? ப்ராணனிருந்தேதுக்காம்? இதோ உன்னடிநிலையில் என்னுயிரை விடுகிறேன் கொள்ளுமென்று சிரஸைச் சேதித்துக்கொள்ள எத்தனிக்கையில், பசுபதிபார்த்து நில்லுங்காண்! ஒருகாலத்தில் உபய விபூதி நாயகனான நம்பெருமாள் சன்னிதிக்குப்போய்ப் பரமபாகவதரான விப்ரநாராயணராலே திருப்பாவையை லபித்துக்கொண்டுவந்த நீர் அவருடைய ஆக்ஞைப்படியே அதை யநுசந்திக்க வேண்டியதாயிருக்க, அயோக்யரைப்பேணி அதை அனுதரணம்பண்ணி அபசாரப்பட் டிருக்கிறீராகையால் உமக்கிப்படிச் சபலம் நேரிட்டது; ஆகையா லிப்போதாவது அந்தத் திருப்பாவையை க்ரமப்படிக்கு அநுஸந்தானம்பண்ணிப் போருவீராகில் சிலநாளைக்குள் ஒரு புத்ரனுண்டாகி, முதலில் வைஷ்ணவ த்வேஷியாயிருந்து பின்பு ஸ்ரீவைஷ்ணவனாகி, உமக்குச் சத்கதியையுந் தரவல்லவனாவானென்ன; உக்ராஸ்யன் உடைவாளை யுறையிலிட்டுக்கொண்டு ஆஸ்தானமடைந்து, க்ரமப்படிக்குத் திருப்பாவையை யநுசந்தித்துக்கொண்டிருக்க; அவன்பத்நி கர்ப்பவதியாய்ச் சங்கரதத்தனென்னுமோர் குமாரனைப் பெற்றாள். அந்தப்புத்ரன் வ்யவகாரதசையை யடைந்தவாறே, வைஷ்ணவர்களை த்வேஷித்துச் சதுரங்க பலத்துடன் பலவிடங்களுக்குஞ்சென்று உபத்ரவஞ்செய்து கடைசியில் பதரிகாசிரமத்திற் கடுத்த ஸ்ரீவைகுண்டபுரம் என்கிற நகரத்துக்குப்போக, அங்கிருந்த கோபாலகுலதிலகரான கோவிந்ததாஸரென்னுமொரு பாகவதர் தன்னுடைய சைந்யங்களைக் கூட்டிக்கொண்டு வந்தெதிர்த்து அவனைப் பராஜிதனாக்கி அவனுடைய ராஜ்யத்தையும் ஆக்ரமித்துக்கொள்ள; * அவன் காந்திசீகனாய்த் தனிப்பட்டுக் காடுறைய; அவ்வளவிலே திருவேங்கடத்தெந்தை அவன் விஷயத்தில் க்ருபையுடையவராக; அவன் தன்னுடைய துன்மார்க்கச் செய்கைகளைத் தன்னுட்டானே யோசித்து மனம்நொந்து, ஸ்ரீநிவாசனை ப்ரத்யக்ஷதெய்வமென்று தன்னுடையபூர்வதசையில் கேட்டிருந்ததையும் நினைத்துத், திருமலைக்குப்போய்த் திருவேங்கடமுடையானைச் சேவித்துப், பாண்டவதீர்த்தத்தருகிலிருந்த ஓர் ஸ்ரீவைஷ்ணவரை யாசிரயித்துப், பஞ்ச ஸம்ஸ்கார

* காந்திசீகனாய்—ஒளிகுறைந்தவனாய்.

ஸம்பன்னனாய்த் திருவேங்கடதாசனென்று தாஸ்யநாமமும் பெற்றுத், திருப்பாவையை லபித்து, ஸக்ரமமாக ஒருவருஷ காலம் ஜபித்துக்கொண்டிருக்கத் திருவேங்கடத்தப்பன் மிகவும் ப்ரீதனாகிக் கோவிந்ததாஸருடைய ஸ்வப்நத்திற்போய்க் கோவிந்ததாஸரே! பூர்வம் சங்கரதத்தனென்னும் பெயரையுடையவனாய் உம்மிடம் வந்தெதிர்த்துப் பராஜிதனாய்ப்போன வைஷ்ணவத்வேஷி இப்போது நம்முடைய திருமலையையடைந்து ஸ்ரீவைஷ்ணவனாய்த் திருவேங்கடதாஸனென்னுந் திருநாமத்தைப்பெற்று, நம்முடைய சன்னிதியில் திருப்பாவையை ஜபித்துக்கொண்டு க்ருதார்த்தனாய்ப் போருகிறான். ஆகையால் நீர் அவனுடைய ராஜ்யத்தை அவனுக்கே ஸமர்ப்பித்துவிட்டு ஸ்வஸ்தானத்திற்குப் போமென்று ஆக்ஞாபிக்கக் கோவிந்ததாஸரும், பரிவாரத்துடனே திருமலைக்கெழுந்தருளித் திருவேங்கடதாசரைக்கண்டு சேவித்துப் பஹுமர்யாதைகளுடனே அழைத்துக்கொண்டுபோய், இராஜ்யாபிஷேகஞ் செய்துவைத்துத் தன்னுடைய நகரத்துக்குப் போயினனென்று கும்பமுனிவ ரருளிச்செய்தார்.

அப்போது திருவழுதிவளநாடர் கும்பமுனிவரை யடிபணிந்து அடியேனை க்ருதார்த்தனாக்கியருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க; அவர் பஞ்சஸம்ஸ்காரபூர்வகமாகத் திருப்பாவையை யுபதேசித்து அநுசந்தான க்ரமத்தையு மருளிச்செய்து, ஆங்கீரசாதி ருஷிகளுடனே தம்முடைய ஆசிரமத்தை யடைந்தவராயினார். அனந்தரம் திருவழுதிவளநாடர் திருப்பாவையை ஸ்வரூபானுரூபமாக ஒருவருஷகாலஞ்ஜபித்து, ஸ்ரீமந்நாராயணனையே தர்மதரனென்னும் புத்ரனாகப் பெற்று, அப்புத்ரன் ப்ராப்த யௌவனனானவாறே, இராஜ்யாபிஷேகஞ் செய்துவைத்துப் பத்னிசஹிதனாய்த் திருமலைக்கெழுந்தருளினார். பின்பு தர்மதரர் ப்ரஜாபரிபாலனஞ் செய்துக்கொண்டிருக்கையில், ஒருநாளில் ஸ்ரீநாரதர் அங்கெழுந்தருளி அவருக்கு மந்த்ரரத்னத்தை யுபதேசஞ்செய்துபோக; அவரதைச் சாங்கமாக ஜபித்துக்கொண்டு வருகிறகாலத்தில், ஸ்ரீயঃபதி ஸ்ரீசுதர்சன ஸஹிதராய் அவருக்குச் சக்ரபாணியென்னும் புத்ரராகப்பிறந்து, சிலநாளைக்குமேல் சேனைசமேதராய்த் துந்துமாரனென்னும் ராக்ஷசனிருக்குமிடந் தேடிப்போய்ச்சம்ஹாரஞ்செய்து லோகத்தைவாழ்வித்தருளிச், சகல சுரமுனிகண சேவிதராய்த் தர்மமார்க்கத்தில் ராஜ்யபாரஞ் செய்துகொண் டிருந்தார்.

இவ்வண்ணமாக வந்த மரபில் சக்ரபாணி யென்பாருக்கு அச்யுதர் என்கிறவரும், அவருக்குச் செந்தாமரைக்கண்ணர் என்கிறவரும், அவருக்குச் செங்கண்ணர் என்கிறவரும், அவருக்குப் பொற்காரி என்கிறவரும், அவருக்குக் காரி என்கிறவரும், அவருக்கு மாறனென்கிற நம்மாழ்வாருமாகச் சந்தானபரம்பரையுண்டாய் ஆட்செய்யுந் தொண்டர்களாயினார்கள்.

ஆழ்வாருடைய திருவவதாரம்.

கீழ்ச் சொல்லப்பட்டிருக்கிற பொற்காரி என்பவர் தம்முடைய புத்ரராகிய காரியென்பவருக்கு விவாஹோசிதபருவம் வரக்கண்டு, திருவண்பரிசாரத்தில் தமக்குச் சமானராயும் சம்பந்த யோக்யராயுமிருந்த திருவாழ்மார்பர் என்பவருடைய புத்ரியாகிய உடையநங்கையைத் திருக்கல்யாணஞ் செய்து வைக்கக் காரியார் பத்னி ஸஹிதராய்த் திருவண்பரிசாரத் தெம்பெருமானை யடிபணிந்து, திருக்குருகூருக்கு வராநிற்கச் (சக்ரவர்த்தித்திருமகன் ஸ்ரீ மிதிலாபுரிக் கெழுந்தருளித் திக்கு நிறை புகழாளனை ஜனகராஜன் றிருமகளாரைத் திருமணம்புரிந்து மீண்டெழுந்தருளும்போது திருவயோத்தியிலுள்ள ப்ராஹ்மணாதி பௌரஜனங்கள் "பதாகாத் வஜிநீம் ரம்யாம் தூர்யோத் குஷ்டநிநாதிதாம் - ஸிக்தராஜ பதாம்ரம்யாம் ப்ரகீர்ண குஸுமோத்கராம்-பௌரை: ப்ரத்யுத்கதோ தூரம்த்விஜைஶ்ச புரவாஸிபி:" என்கிறபடியே ராஜமார்க்கத்தைப் பரிமளமூட்டப்பெற்ற திவ்ய தீர்த்தங்களால் நனைத்து, மணமிகுந்த புஷ்பங்களைப் படுகாடுபடத் தூவித், தோரணங்களா லலங்கரித்துவைத்து, மங்கள வாத்யத்துடன் வந்தெதிர் கொண்டாற்போல் திருக்குருகையிலுள்ள ஜனங்கள் "பூரணபொற் குடம்வைத்துப் புறமெங்குந் தோரண நாட்டித்" * துழனியெழுப்பறைகொட்டி † உபலாளித் தெதிர்கொள்ள நகரத்துக்குள் புகுந்து, இல்லற தர்மத்தில் நியதராயிருக்கச் சிலநாளைக்குப்பின்பு, தம்முடைய பத்நியாகிய உடையநங்கையார், பிறந்த அகத்துக்குப் போய் வரத் திருவுள்ளம்பற்றத், திருவண் பரிசாரத்துக் கழைத்துக் கொண்டுபோய்ச் சிலநாள் தங்கிமீண்டுவருகையில், "தேன்கொள் சோலைத் திருக்குறுங்குடி"க்குச்சென்று, நம்பியைச்சேவித்துத் தமக்கொரு சந்தானந் தந்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க;

* துழனி - ஓசை. † உபலாளித்து - ஆயதாக்கி.

நம்பி அர்ச்சகமுகேந! உமக்கு நாமேபுத்ரனாக அவதரித்தருளப் போகிறோ மென்று சாதிக்க; அதைக்கேட்டு ப்ரீதராய்த் தீர்த்த ப்ரசாதங்களை லபித்துக்கொண்டு ஸ்வஸ்தானஞ்சேர்ந்து மகிழ் வெய்தி யிருக்குநாளில் (பரமபதநாதன் தன்னுடையதும், பஞ் சாயுதங்களினதும், அனந்தாழ்வானதும், சேனைமுதலியாரது மாகிய அஷ்டாம்சங்களை ஸ்ரீபராங்குசரென்கிற முனீசுவரராக அவதரிப்பித்துச், சாமவேதார்த்த ப்ரதிபாத்யமாய், த்ராவிட பாஷா ரூபமாயிருக்கும், திருவாய்மொழியை ப்ரகாசிப்பிக்க வும், பூத-காஸார-மஹதாஹ்வய-பார்க்கவகுலசேகர ஸ்ரீ விஷ்ணு சித்த பக்தாங்க்ரிரேணு-யோகிவாஹ - பரகாலாதி முனீசுவரர்க ளாலே யருளப்படும் த்ரிவிதவேதார்த்தங்களை ரக்ஷிப்பிக்கவுந் திருவுளம்பற்றின னாகையாலே) உடையநங்கையார் கர்ப்பவதி யாகிக் கலியுகாதி நாற்பத்துமூன்றாவதுநாளான ப்ரமாதி வரு ஷம் வசந்தருதுவில் வைகாசிமாசம் சுக்லபக்ஷம் சுக்ரவாரம் பௌர்ணமி கர்க்கடக லக்னம் விசாகநக்ஷத்ரங் கூடிய சுபதினத் தில், ஆதித்யராமதிவாக ராச்யுதபானுக்க ளுதயத்திலே நீங்காத உள்ளிருள்நீங்கிச் சோஷியாத பிறவிக்கடல்வற்றி விகசியாத கம லங்களு மலர்ந்ததைப்போல், அனேகசுப சகுனங்களுண்டாக, வகுளபூஷண பாஸ்கரனென்கிற இவ்வாழ்வார் உடையநங்கை யார் கர்ப்பமாகிற கீழ்த்திசையி லுதயமாகி, ப்ராக்ருத சிசுக் களைப்போலே அழாமலும் கண்திறவாமலும், தம்முடைய திரு வாயால் முத்தனை யமுறுவல் செய்து மூக்குறிஞ்சி முலையுண்ணா மலும், ஜலமல விஸர்ஜ்ஜனாதிகளற்றும், நாளுக்குநா ளபிவ்ருத்தி யாகிற திருமேனியை யுடையவராயிருக்கக் காரிமுதலியாரும் இவரைப்பெற்ற வயிறுடையாளான உடையநங்கையாரும் பார் த்துத் திருக்குறுங்குடி நம்பியினுடைய வரப்ரஸாத மிவ்வண்ண மிருக்குமாகில் நம்மாலாவதென்னவென்று "உன்மனத்தாலென் னினைந்திருந்தாய்" என்கிறபடியே நம்பிபக்கல் ந்யஸ்தபரராகிப் பன்னிரண்டாவதுநாளில் "ஶங்கதீர்த்தஸமீபே து தாம்ராயா தக்ஷி ணே தடே-ஸம்ஸ்திதம் புண்டரீகாக்ஷம், ஶங்கசக்ர தரம்ஹரிம்- வரதாபயஹஸ்தஞ்சரம்யா தரயாஸஹ-நவநீரதநீலாபம்பீதவாஸ ஸமச்யுதம்" என்கிறபடி த்திருச்சங்கணித்துறையையுடைத்தான பொருநல்நதியின் தென்கரையில்திவ்யமங்களவிக்ரஹயுக்தனாய்ச், ஶங்கசக்ரதரனாயப், புண்டரீகாக்ஷனாய், இஷ்டத்தைக்கொடுத்து

அநிஷ்டத்தைப் போக்குவதைச் சூசிப்பிக்கிற திருக்கைகளையுடையனாய், நீலமேகஸத்ருசனாய், ஆச்ரிதர்களை யெந்தக்காலத்திலும் நழுவவிடாதவனாய், எழுந்தருளியிருக்கிற பொலிந்துநின்றபிரான் திருமுன்பு எடுத்துக்கொண்டுபோய்ச் சேவிக்கப்பண்ணித் திருப்புளியாழ்வாரடியிலே ஆணிப்பொன்னாற்செய்த வண்ணச்சிறு தொட்டிலிற்கிடத்தி, "மாறன்" என்று திருநாமஞ்சாற்றி மகிழ்வெய்தி நிற்குந்தறுவாயில், இவ்வாழ்வார் கீழேநழுவித் தவழ்ந்துபோய் இவருக்காகவே (த்வாபரயுகம் எட்டுலக்ஷத்தறுபத்து மூவாயிரத்தெண்ணூற் றெழுபத்தொன்பதாவதான ஈசுவரவருஷம் ஆனிமாதம் மூலநக்ஷத்ரத்தில் திருவனந்தாழ்வானுடைய ஹம்சபூதரா பவதரித்து உறங்காப்புளியென்கிற அபிதானத்தைப்பெற்று இவருக்கு வர்ஷதாப நிவாரணார்த்தமாக) வளர்ந்திருக்கிற திருப்புளி யாழ்வாரடியிலே பத்மாசனமிட்டுக்கொண்டு ஞானமுத்ரைதரித்து வீற்றிருக்க, மாதாபிதாக்களும் கோயிற்பரிகரத்தாரும் கண்டு விஸ்மயப்பட்டு, இவரைப் புத்ர ப்ரதிபத்திபண்ணாமல் "எங்கள் குடிக்கரசே" என்கிறபடியே தங்கள் குடிக்குக் குலதெய்வமாகப் பாவித்துச் சேவித்துக்கொண்டிருந்தார்கள்.

அனந்தரம் பரமபதநாதனுடைய நியமனத்தால், ஸ்ரீசேனைமுதலியார்வந்து மந்த்ர மந்த்ரார்த்த நிகில புருஷார்த்தங்களையும் த்ராவிடவேதங்களையும், பிறர்காதிற்படாதபடி உபதேசித்துத் திவ்ய ஜ்ஞான சம்பன்னராக்கி வைத்தெழுந்தருள "ஸுஜ்ஞாநகநபூர்ணத்வாத்திந்த்ரிணீ மூலஸம்ச்ரயः - பாலஆஷோடசாப்தாத்து மூகஸாவஸ் கமிஷ்யதி" என்கிறபடி பசுங்குழந்தையான இவ்வாழ்வார் உத்க்ருஷ்டமான ஜ்ஞானபூர்ணராகித், திருப்புளி யாழ்வானடியில்தானே பதினாறு திருநக்ஷத்ர மளவாக, அவன்முகத்தன்றி விழியேனென்று முகுளிதநயனராய், லௌகிகரைக் கண்திறந்து பாராமல் தாமறிந்துகொண்டிருப்பதை யாருக்குச்சொல்வதென்றாலோசிக்கையில் சமீபத்திலொருவரும் பக்வப்பட்டவர்களா யில்லாமையாலே, மௌனியா யிருந்துவிட்டார். இப்படி யிருக்கையில்:—

ஸ்ரீமதுரகவியாழ்வார் வைபவம்.

"பாண்ட்யக்ஷமாயாம் ப்ரதிதாவதாரம் சைத்ரஸ்தசித்தோடு ஜமூர்த்வசூடம், ககாம்சபாஜம் மதுரங்கவீந்த்ரம் சடாரிபக்தம் சரணம்ப்ரபத்யே" என்கிறபடி பாண்டியதேசத்தில் சித்

ரைமாஸம் சித்ரைநக்ஷத்ரத்தில் முன்குடுமிச்சோழிய ப்ராஹ்மணவம்சத்தில், பெரியதிருவடியின் ஹம்ஸபூதராய், ஸ்ரீபராங்குசருக் கந்தரங்கபக்தராய் அவதரித்து மதுரகவீந்த்ரர் என்கிற ப்ரசித்தமான பெயரையுடையரான மதுரகவியாழ்வாருடைய திருவடிகளை யுபாயமாகப் பற்றுகிறேனென்றும் "யாதேஸம் வத்ஸரௌகேஹ ஸதமதஜநேத்வாபரஸ்யே ஶ்வராப்தே, சைத்ரேமாஸேத்விஸப்தோத்தரதிவஸவரே ஶுப்ரபக்ஷேசருச்யே, சித்ராக்யே பார்க்கவீயே குணவதிசதிநேப்ராது ராஸீச்சடாரே, ரந்தே வாஸீத்விஜேந்த்ரோ மதுரகவிரஸௌமாத்ரு குஜ்ஜீவநாய" என்கிறபடி த்வாபரயுகத்தில், எட்டுலட்சத் தறுபத்து மூவாயிரத்தெண்ணூற் றெழுபத்தொன்பதில் நிகழ்ந்த ஈசுவர வருஷம் சித்ரைமாஸம் இருபத்தைந்தாந்திகதி சுக்லபக்ஷம் சுக்ரவாரம் சித்ரைநக்ஷத்ரங் கூடிய சுபதினத்தில் நம்போலிகளை யுஜ்ஜீவிக்கச் செய்தற்பொருட்டு ஸ்ரீசடகோபருக்குச் சிஷ்யராக ஸ்ரீமதுரகவியாழ்வார் அவதரித்தருளினாரென்றும் "சைத்ரஸ்ஸ்ரீமாநயம்மாஸஃபுண்யஃ புஷ்பிதகாநநஃ - † ஶ்ணேஶஃ குமுதோநாம்நாகவிர் மதுரஸம்ஜ்ஞகஃ-சைத்ரமாஸி ஶுபேசித்த தாரகாயாமஜாயத" என்கிறபடி ஸ்ரீமத்தாகச் சொல்லப்படுகிற சித்ரைமாஸம் சித்ரை நக்ஷத்ரத்தில் விஷ்வக்சேன குமுத-வைநதேயாம்சங்கள் ஒருருவாகி மதுரகவி யாழ்வாரென்கிற அபிதானம் பெற்று அவதரித்தனவென்றும் திவ்யசூரிசரிதையிற் சொல்லப் பட்டிருக்கிறபடியே:—

ஆதித்யோதயத்திற்கு முன்னே அருணோதய முண்டாவதுபோல ஸ்ரீவகுளபூஷண பாஸ்கரோதயத்திற்கு முன்னமே இவருதயமாகி "அங்காநிவேதாஶ் சத்வாரோமீமாம்ஸா ந்யாயவிஸ்தாஃ-புராணந்தர்ம ஶாஸ்த்ரஞ்ச வித்யாஹ்யேதாஶ் சதுர்த்தஸ" என்கிறபடி சிக்ஷை - வ்யாகரணம் - சந்தஸ்ஸு-நிருக்தி-ஜ்யோதிஷம்-கற்பம் என்கிற ஆறுசாஸ்த்ரங்களிலும், ருக்-எஜுஸ்ஸு-சாமம்-அதர்வணம் என்கிற நான்கு வேதங்களிலும் மீமாம்சை-ந்யாயம்-தர்ம சாஸ்த்ரங்களிலும், அஷ்டாதச புராணங்களிலும் அதிநிபுணராய் விரக்திதசையையடைந்து "அயோத்யா மதுராமாயா காஸீகாஞ்சீ ஹ்யவந்திகா-புரீத்வாரவதீசைவ

† முன்சுலோகத்தில் "ககாம்ஶபாஜம்" என்றும் இச்சுலோகத்தில் "ஶ்ணேஶ: குமுதோநாம்நா" என்றும் சொன்னபடியால் இம் மதுரகவிகளைக் கருடபகவான் குமுதரென்ற கணேசர் ஆகிய இவ்விருவரம்ஸமுமுடையவரென்பார் பெரியோர்.

ஸப்தைதே முக்தி தாயகா:” என்கிறபடி முக்திப்ரதமாகச்சொல்லப்படுகிற திவ்யதேசங்களைச் சேவிப்பதாகத் தம்முடைய அவதார ஸ்தலமான திருக்கோளூரைவிட்டுப் பெருமாள்கோயில் வடமதுரை-அவந்திகாபுரி-கங்கைக்கரை கண்டம், திருத்வாரகை முதலிய திருப்பதிகளைச்சேவித்துத் திருவயோத்தியில் யோக நிஷ்டையிலெழுந்தருளி யிருக்கையில் ஸ்ரீநம்மாழ்வாருடைய ப்ரபாவங்களைத் தெரிந்துகொண்டிருக்கச்செய்தே, ஓராளொருநாளிராத்திரியில் இவர் ஜலசங்கா நிவ்ருத்யர்த்தமாக வெளியில் வந்தபோது தென்றிசையிலொரு அப்ராக்ருத தேஜஸ்ஸுதோன்ற இஃதென்னென்று திகைத்து, ஏதேனும் க்ராமநகரங்களில் தீமண்டினதோ அல்லது காட்டுத்தீயோவென்று தம்மில்தாமே அனுமானித்து உள்ளேபோய் அற்றைக்குக் கண்வளர்ந்தருளினார். அந்தத்தேஜஸ்ஸு பின்னையும் அடுத்தடுத்து இரண்டு மூன்றுநாள் அவ்விதமே காணப்பட; இவரதை நன்றாகப்பார்த்து, இது நாமெண்ணியபடிபோ லிருக்குமானால் அப்ராக்ருததேஜஸ்ஸை யுடையதாயிராதே! ஆகையாலிதனைப் பரீக்ஷிக்கக் கடவோமென்று மறுநாளிராத்ரி அது தோன்றிய திசையைநோக்கிச் செல்ல; அதுதென்றிசையி லொதுங்கிப்போக; இவர் ஆச்சர்யமடைந்து அன்றிரவெல்லாம் அதைத் தொடர்ந்துபோய், விடிந்தவாறே ஓரிடத்தில்தங்கி, அன்றுதொடங்கிச் சிலநாள்வரையில் ப்ரதிராத்ரியிலும் அந்தத் திசையில்தானே அலுப்பின்றி நடந்து அதுசெல்லும் புண்யக்ஷேத்ரங்கள் தோறுஞ்சென்று பெரியகோயிலுக் கெழுந்தருளி அங்கிருந்தும் அதைத்தொடர; அது மாடமாளிகைசூழ்ந் தழகாய திருக்குருகூரில் சென்று பொலிந்துநின்ற பிரான் சந்நிதிக்குளடங்க; இவருமங்கேசென்று, சன்னிதி முதலிகளைப்பார்த்து, இங்கேதாவது அதிசயங்களுண்டோவென்றுகேட்க; அவர்கள் திருப்புளியாழ்வாரடியிலேயுண்டென்ன; இவரங்கேபோய்ப் “பத்மாஸநோபவிஷ்டம் பரபதயுகளே நிவிஷ்ட சைதந்யம் பரதத்வபோத முத்ரம் பரமாசார்யம் பராங்குசம்வந்தே” என்கிறபடி சுஜ்ஞானகணபூர்ணராய், முகுளிதநயனராய், ஷோடசவார்ஷிகராய், ஷோடசகலாபூர்ணனான சந்த்ரனைப்போலே திருமுகமண்டலப்ரகாசமுடையவராய்ப் பரதத்வபோதமுத்ரா யுக்தராய் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீபராங்குசரைச்சேவித்து அவருடைய ஸ்ரீசூக்தியைக் கேட்க

வேண்டுமென்று திருவுள்ளமாய்க்,கையையோசையெழத்தட்டிச் செத்தத்தின்வயிற்றில் சிறியதுபிறந்தால் எத்தைத்தின் றெங்கே கிடக்கும்” என்று வினவ; அவர் திருக்கண்களை மலர விழித்து

“ * செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத்தின் றெங்கே கிடக்கும்” என்றும் “அத்தைத்தின் றங்கேகிடக்கும்” என்றுமிருக்கிற வினவிடைகளுக்குப் பொருளேதென்னில்:- செத்தத்தின் உயிரற்றதாய், ஜடமாய், அநித்யமாயிருப்பதொரு ப்ரக்ருதியென்கிற சரீரத்தின், வயிற்றில்-உள்ளே, சிறியது—அணுரூபமாய் நித்யமாயிருப்பதொரு ஆத்மாவென்கிற ஜீவன், பிறந்தால்-ப்ரவேசித்தால், எத்தை-எதை, தின்று-புஜித்து, எங்கே-எவ்விடத்தில், கிடக்கும்-(சுகமுண்டென்று பேணி) யிருக்கும் என்று வினவியதாம்.

அத்தை-அந்தச் சரீரத்தைப்பற்றிய சப்த ஸ்பர்ச ரூப ரச கந்தாதிகளால் வரும் சுகதுக்கங்களையே; தின்று-அனுபவித்து, அங்கே-அவ்வநித்யமானசரீரத்தையே ஆதரவாகப்பற்றி, கிடக்கும்-சுகித்தேன், இளைத்தேன் என்னுமிவை தொடக்கமான ப்ரசங்கங்களைச் செய்துகொண்டிருக்கும் என்று விடைகொடுத்ததாம்.

அன்றியும், “சித்தின்வயிற்றில் சிறியது பிறந்தால் - எத்தைத்தின் றெங்கேகிடக்கும்” என்றும், “அத்தைத்தின் றங்கேகிடக்கும்” என்றும் பூர்வ ஆறுயிரப்படி க்ரந்தங்களில் எறியருளப்பண்ணியிருக்கின்றன. இவற்றிற்கு அஸ்மத் க்ருபாமாத்ர ப்ரஸன்னாசார்யர்களான அஸ்மதாசார்யரும் ஸ்ரீமான் முடிச்சூர் அப்பாக்யதேசிகரும் இன்னுஞ் சில வைதிகோத்தமரும் பொருள் கூறியிருப்பதைப் பார்க்க, இவையே பெரியோன் றிறத்துக்கும் முனிவனுரைக்கும் அடுத்த கடாவிடை யாகலாமெனவும், பின்பழகராம் பெருமாள் ஜீயரால் அருளப்பட் டிருக்கலாமெனவுங் காணப்படுகின்றன.

பொருள்:—“அணோரணியாம்” என்கிறபடியே சித்தின்-சித்தென்கிற அணுரூபமான ஆத்மாவினிடத்தில், சிறியது-பரமாணுரூபமாய்க்கலந்த ஈச்வரனுடைய நிர்ஹேதுக ஜாயமான கடாக்ஷமானது, பிறந்தால்-மயர்வற மதிநலமருளினன் என்கிறபடியே உண்டாகுமானால், எத்தை-தேஹ-ஆத்மாவாகிற உபயயாத்ரைக்கும் எந்த ஆஹாரத்தை, தின்று-போக்யமாகப் புஜித்து, கிடக்கும் - எவ்விடத்தைத் தனக்கு நித்யானந்த ஸ்தானமாகப்பேணி அமர்ந்திருக்கும் என்று கடாவினதாம்.

அத்தை—அப்படி, “தீர்ந்துதன்பால் திருத்தின”வன் எவனோ அந்த ஈச்வரனுடைய கல்யாண குணங்களையே, தின்று-“உண்ணுஞ் சோறும் பருகுநீரும் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன்” என்கிறபடியே உண்ணுஞ்சோறுதியாகவனுபவித்து, “உண்ணாநாளவைபட்டினிநாளே” அவ்வனுபவந் தவிர்ந்திருக்கும் தினமே தனக்கு உபவாசதினமா மென்றெண்ணி, (அங்கே) அந்தக் கற்பகத்தருவின் அடியையே, “பரமாபக்திருச்யதே” என்கிறபடி பரமபக்தியோடு பேணி, கிடக்கும்-நித்தியானந்தம் பெற்றமர்ந்திருக்கும் என்று விடைசெய்ததாம்.

இவரைக்கடாக்ஷித்து "அத்தைத்தின்றங்கே கிடக்கும்" என்று விடைசெய்ய; இவரவரை அடியேனுக்குத்தோன்றிய தென்றிசைச்சூர்யன் தேவரீர்தாறே ! என்று தாளுந்தடக்கையுங் கூப்பித் தண்டனிட்டெழுந்து அஞ்சலிஹஸ்தராய் நின்று தம்மை யங்கீகரித்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க; அவர் இவருக்குப் பஞ்சசம்ஸ்காரங்களை ப்ரஸாதித்து நாம் பகவதனுபவத்திற்குப் போக்கு வீடாகச்சொல்லும் பாசுரங்களை நீர் பட்டோலையி லேறியருளப் பண்ணுமென் றுக்ஞாபிக்க; அவ்வளவில்:—

ஸ்ரீநம்மாழ்வார் வைபவம்—(தொடர்ச்சி).

"ஆதிதேவோ ஜகந்நாதோ வாஸுதேவோ ஜகத்பதி: சதுர்ப்புஜஶ் ஶ்யாமளாங்க: பரமேவ்யோம நிதிஷ்டதி" என்கிறபடியே ஸர்வகாரணபூதனாய், ஸர்வாந்தர்யாமியாய், ஸர்வஸ்வாமியாய், ஸர்வநியந்தாவாய், இந்த்ரநீலநிறமான திருமேனியையும் சதுர்ப்புஜங்களையுமுடையனாய், ஸ்ரீவைகுண்டத்திலெழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந்நாராயணன் நம்மாழ்வாருக்குத் திருமுக ப்ரதானம் பண்ணவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி "அதாகதங் கருடமரும்புரஸ்ஸ்திதம் மஹாகிரிம் ஜலதஇவாருரோஹஸ:" என்றும் "பொலிந்திருண்ட கார்வானில் மின்னேபோல் தோன்றி-மலிந்த திருவிருந்த மார்பன்-பொலிந்த, கருடன் மேற்கொண்டகரியான்" என்றுஞ் சொல்லுகிறபடியே இறைப்பொழுதும் மார்பைவிட் டகலாத கருணைருபையான பிராட்டி சஹிதனாய்ப் பெரியதிருவடிமே லெழுந்தருளிவந்து தன்னுடைய ஸ்வரூபரூபகுணவிபூதி சேஷ்டிதங்களையெல்லாங் குறைவறக் காட்டி, மயர்வறமதிநலமருள, ஆழ்வார் "பொன்னிவர்மேனி மரகதத்தின் பொங்கிளஞ்சோதி"யான வெம்பெருமானுடைய திவ்யாத்மஸ்வரூபத்தையும் அதற்கு ப்ரகாசகமான திவ்யமங்கள விக்ரஹத்தையும், அதற்கு ஆதேயமான திவ்யகுணங்களையும் நன்றாகவனுபவித்து, அவ்வனுபவ ஜனிதப்ரீதியுள் ளடங்காமையாலே, ருக்-யஜுஸ்ஸு-அதர்வணமென்கிற வேதத்ரயங்களைத் திருவிருத்தம்-திருவாசிரியம்-பெரியதிருவந்தாதியாகவும் "வேதாநாம் ஸாமவேதோஸ்மி" என்கிறபடி வேதங்களுக்குள் சாமவேதம் நானேயாகிறேனென்று கீதாசார்யனால் நிலாகிக்க நின்ற சாமவேதத்தைச் சரமப்ரபந்தமான திருவாய்மொழியாக

வும் நாடுமூலகுமுய்ய நல்வகையால் திருவாய்மலர்ந்தருள, அவைதம்மை மதுரகவியாழ்வார் தொடக்கமான ஸஜ்ஜனங்கள், "மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள்" என்று நெஞ்சுட்கொண்டு அறியக்கற்றுவல்லார்களாக; அத்தறுவாயில், † புஷ்பத்யாக போகமண்டபங்கள் தொடக்கமான திவ்ய தேசத் தெம்பெருமான்கள் ஆழ்வாரிருக்குமிடத் தேறவெழுந்தருளித் திருமுக ப்ரதானம் பண்ணியருள: அப்போது நித்தியசூரிகளும் சுவேத த்வீபவாசிகளும் திரண்டுவந்து திருப்புளியாழ்வா னடியிலுள்ள வைபவங்களைச் சேவித்துநிற்க: இவரவர்களைப் "பொலிகபொலிக" வென்று மங்களாஸாஸனம்பண்ணி, அவர்கள் வைபவங்களை யறிந்தனுபவித்த தமக்கு "மாறுளதோவிம் மண்ணின்மிசை" என்றும் "இனியாவர் நிகரகல் வானத்தே" என்றும் அநுசந்தித்து உபயவிபூதியிலும் தமக்கு நிகரில்லாத ப்ரபாவத்தை யுடையவராய் "உண்ணுஞ்சோறும் பருகுநீர்த்தின்னும் வெற்றிலையு மெல்லாங் கண்ணன்" என்கிறபடியே (பூமியிற்பிறந்தார் சோறு நீர் அடைக்காயிலை முதலியவற்றைத் தேஹயாத்ரையாகக் கொள்வதுபோலல்லாமல்) இவர் அவனுடைய கல்யாணகுணாதிகளையே தம்முடைய தேஹயாத்திரைக்கு வேண்டின சோறு நீராதிகளாக வனுபவித்து "ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துஸ்ச ப்ரத்யகாத்மந: - ப்ராப்த்யுபாயம் பலம்ப்ராப்தேஸ்ததாப்ராப்தி விரோதிச - வதந்திஸகலா வேதாஸ் ஸேதிஹாஸபுராணகா:" என்கிறபடி சேதனர் கதியென் றடையப் படுமவனுன எம்பெருமானுடைய ஸ்வரூபத்தையும், அடையப்புகுகிற ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தையும், அடைதலாகிறபலத்தின் ஸ்வரூபத்தையும், அந்தப்பலனை யடைதலினின்றும் பிரித்துவிடுமதான விரோதிஸ்வரூபத்தையும், விளக்குகிற சகலவேத சாஸ்த்ரார்த்தசங்க்ரஹமான அர்த்தபஞ்சகத்துடன் "த்வயாத்பரதரம்நாஸ்திமந்த்ரம்வேதேஷ்வபித்விஜ" என்கிறபடி மந்த்ர ப்ரதிபாதகங்களான வேதங்களில் எதற்குமிஞ்சினதொன்றில்லையென்று சொல்லப்பட்டிருக்கின்றதோ, அந்த மந்த்ரரத்னமென்கிற த்வயத்தை இரண்டு கண்டமாய்ப் பத்து வாக்யங்களாக்கிச் சரமப்ரபந்தமென்கிற திருவாய்மொழியில்

---

† புஷ்பமண்டபம்-திருவேங்கடத்தில் ஆனந்தநிலையவிமானம். த்யாகமண்டபம்-திருக்கச்சியில் பெருமாள் கோவிலென்கிற புண்ணியகோடிவிமானம். போகமண்டபம் - திருவரங்கம் பெரிய கோவிலென்கிற ப்ரணவாகாரவிமானம்.

முதற்பத்தில் "மலர்மகள் விரும்புநம் அரும் பெறலடிகள்" "மலராள்மைந்தன்" "திருமாமகளார்தனிக்கேள்வன்" "திருவின் மணாளன்" "பூமகளார் தனிக்கேள்வன்" "மலராள்மணவாளன்" என்னு மித்யாதி பாசுரங்களால் பூர்வகண்டத்தில் முதல்வாக்யமான "ஸ்ரீமன்" என்கிற சப்தத்திற்குரிய ஸ்ரீய:பதித்வத்தையும், இரண்டாம்பத்தில் "எம்பெருமான் நாரணன்" எம்பிரானெம மான் நாராயணன்" "நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்வேத மயன்" என்னுமித்யாதி பாசுரங்களாலே இரண்டாம்வாக்யமான "நாராயண" என்கிற சப்தத்திற்குரிய வேதமயமான நாராயணத்வத்தையும், மூன்றும்பத்தில் "நாண்மலராமடித்தாமரை" "அங்கதிரடியன்" "அவன்பாதபங்கயம்" "அன்றுதேர்கடவிய பெருமான் கனைகழல்" "மூவுலகுந் தொழுதேத்துஞ் சீரடியான்" என்னுமித்யாதிபாசுரங்களாலேமூன்றும்வாக்யமான"சரணௌ" என்கிற சப்தத்திற்குரிய சர்வலோக சரண்யமான ஸ்ரீமந்நாராயணனுடைய சரணாரவிந்த யுகளத்தையும், நான்காம்பத்தில் "இலங்கை நகர் அம்பெரியுய்த்தவர்" "வல்வினைதீர்க்குங் கண்ணன்" தொல்வினைதீர "வெய்ய நோய்கள்முழுதும் வியன்ஞாலத்துவீய" "மேவிநின்று தொழுவார்வினை போகமேவும்" "பிறந்துஞ் செத்துநின் றிடறும் பேதைமை தீர்ந்தொழிந்தேன்" 'நோயே மூப்புப் பிறப்பிறப்புப்பிணியே யென்றிவையொழிய" "வேட்கையெல்லாம் விடுவித்துக் கூட்டரிய திருவடிக்கட்கூட்டினை" "அஃதேயுய்யப்புகுமாறு" "உய்வுபாயமற்றின்மைதேறி" என்னுமித்யாதி பாசுரங்களால் நான்காம் வாக்யமான "பரண" என்கிற சப்தார்த்தமானவனுடைய அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்பிராப்தி ஹேதுவான ப்ராபகத்வத்தையும், ஐந்தாம்பத்தில் "தமியேனுக்கருளாய்" "ஆறெனக்கு நின்பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்" உன்னாலல்லா லியாவராலு மொன்றுங் குறைவேண்டேன்" "அவனையுயிருண்டான் கழல்களவையே சரணாகக் கொண்ட சடகோபன்" "நாமங்களாயிரமுடைய நம்பெருமானடிமேல் சேமங்கொள் தென்குருகூர்ச் சடகோபன்" "நாகணைமிசை நம்பிரான் சரணேசர ணமக்கென்று நாடோறு மேகசிந்தையனாய்" என்னுமித்யாதி பாசுரங்களால் ஐந்தாம் வாக்யமான "ப்ரபத்யே" என்கிற சப்தார்த்தமான ப்ரார்த்தனாகர்ப்ப விஸ்ரம்பத்தையும், ஆறும்பத்தில் "திருமாமக ளிருந்தாமு மலிந்திரு

ந்து" "அடிமைசெய்வார் திருமாலுக்கே" "ஒசிந்தவொண்மல் ராள் கொழுனன்" "என்றிருமார்பர்" "கோலத் திருமாமகளோ டுன்னை" என்னுமித்யாதி பாசுரங்களால் உத்தரகண்டத்தில் முதல்வாக்யமான "ஸ்ரீமதே" என்கிற பூர்வார்த்தமான கைங் கர்ய ப்ரார்த்தனு கர்ப்பமாயிருந்துள்ள நித்யசம்பந்தத்தையும், ஏழாம்பத்தில் "கன்னலேயமுதே" "திருமாலின்சீரிற்படிந்தெதிர் காலம் பருகினுமார்வனே" "ஏழுலகையின்பமயக்க" என்னு மித்யாதி பாசுரங்களால் இரண்டாம் வாக்யமான "நார" சப்தத் திற்குரிய கைங்கர்ய ப்ரதிசம்பந்தமான ஈச்வரனுடைய நிரதிசய போக்யதையையும், எட்டாம்பத்தில் "அடியேன் பெரியவம் மான்" "விண்ணவர்கோன்நங்கள்கோன்" "அமர்ந்தநாதனை" நேர் படநிறை மூவுலகுக்குநாயகன்" "மூவுலகாளி" என்னுமித்யாதி பாசுரங்களால் மூன்றும் வாக்யமான "அயன" சப்தத்திற்குரிய ஸ்வாமித்வத்தையும், ஒன்பதாம்பத்தில் "பண்டைநாளாலே நின் றிருவருளும் பங்கயத்தாள் திருவருளுங் கொண்டு நின்கோயில் சீய்த்து" "நின்றீர்த்தவடிக் குற்றேவல்" "தொடர்ந்து குற்றே வல்செய்து" "கொடுமாவினை யேனும்பிடிக்க" உறுவதிதுவென் றுனக்காட்பட்டு" "ஆட்கொள்வானொத்து" "நானுமீளா வடி மைப்பணிசெய்யப்புகுந்தேன்" என்னுமித்யாதிபாசுரங்களாலே நான்காம்வாக்யமான "ஆய" சப்தார்த்தமான நித்யகைங்கர்யத் தையும், பத்தாம் பத்தில் "துயர்கெடும்" "கெடுமிடராயவெல் லாம்" "எழுமையு மேதஞ்சாரா" "இப்பிறப்பறுக்கும்" "பிணி யொன்றுஞ்சாரா" "பிறவித்துயர் கடிந்தோம்" "விண்டேயொ ழிந்த வினையாயினவெல்லாம்" "அமரா வினைகளே" "கடுநரகம்புக லொழித்த" "தடுமாற்றவினை கெடவீர்த்தான்" "பிறவி கெடுத் தேன்" "அவாவற்றுவீடுபெற்ற" என்னுமித்யாதி பாசுரங்களால் ஐந்தாம்வாக்யமான "நம:" சப்தார்த்தமானகைங்கர்யப்ரதிபந்தக நிச்சேஷ நிபர்ஹணத்தையும் தெளிவாகத் தொண்டர்க்கமுதுண் ணச் சொல்மாலைகளாகப் பெண்ணும்பேதையுமறிந் துஜ்ஜீவிக்க ஹேதுவாயருளிச் செய்து லோகத்தை வாழ்வித்தருளி பரபக்தி பரஜ்ஞானபரமபக்திகளையுடையராயிருந்து முப்பத்தைந்தாவது திருநட்சத்ரத்தில் அவாவற்று வீடுபெற்றருளினர்.

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதுரகவியாழ்வார்வைபவம்—(தொடர்ச்சி)

பின்பு "திருமால் திருப்பேர்வல்லா ரடிக்கண்ணி சூடியமாறன்" என்கிற நம்மாழ்வாருக்கு முக்யசிஷ்யரான ஸ்ரீமதுரகவியாழ்வார், ப்ரபன்னஜனகூடஸ்தரான ஸ்வாசார்யவைபவத்தைக் "குருபாதாம் புஜந்த்யாயேத் குரோர்நாம ஸதாஜபேத்" என்கிறபடியே கண்ணிநுண் சிறுத்தாம்பு என்கிற திவ்யப்ரபந்தத்திலருளிச்செய்து சரமார்த்தமான பஞ்சமோபாய நிஷ்டையை மூமூக்ஷுக்களுக்குபகரித்தருளி அர்ச்சாவதாரரூபமான நம்மாழ்வாருக்கு நித்யோத்ஸவ - பக்ஷோத்ஸவ - மாஸோத்ஸவ - ஸம்வத்ஸரோத்ஸவ - மஹோத்ஸவாதிகளைக் குறைவற நடத்திக்கொண்டு, ¶ வேதந்தமிழ்செய்த பெருமாளெழுந்தருளினார்! திருவாய்மொழிப் பெருமாளெழுந்தருளினார்! திருவழுதிவளநாடரெழுந்தருளி

¶ மற்றொருபிரதியில்:—

பாண்டிநாட்டிலுள்ள திருக்குருகூரென்னும் திவ்விய தேசத்தில் ஆழ்வாருக்குக் கோயிலிலும் வீதிப்புறப்பாட்டிலும் வெகுகாலமாக வேதந் தமிழ்சசெய்த மாறன் சடகோபனென்பது முதலாகப் பற்பல விருதுகூறித் திருச்சின்னமூதிவருவதையும் பிரமோச்சவம் கண்டருளப் பண்ணுவதையும் பற்றி ஒருகாலத்தில் மதுரைச் சங்கத்தார் கர்வத்தால் அசூயைகொண்டு இந்த ஆழ்வார் பக்தரேயல்லாமல் பகவானல்லவே; இவருக்கு விருதுகூறித் திருசசின்ன மூதுவதும் உச்சவம் நடத்துவதும் வியர்த்தமே; இது அணிற்பிள்ளையின் தலைமேலே அம்மிக்கல்லை வைக்கிறதுபோலிருக்கிறது. இவர்பாடின திருவாய்மொழி யென்ன? சங்கமேறிய செய்யுளா? அதை வேதத்தமிழென்று அவ்வளவாகச் சிலாகிப்பது தகுதியல்லவேயென்று வாய்மதம்பேசி அபசாரப்பட்டார்கள். அத்தருணத்தில் ஆழ்வார் திருநகரியிலிருந்த வைஷ்ணவர்களுக்குச் சகியாமல் மனம்பதைத்தமையால், குருகைப்பிரான் சந்நிதியிற்போய் அவர்கள் சாஷ்டாங்கமாய் விழுந்து சேவித்து, ஆழ்வாரே! உம்மையும் உமது திருவாய்மொழியையும் அவமதித்த சங்கத்தாருக்குக் கர்வபங்கமாம்படி தேவரீர் ஏதாவது பிராயச்சித்தம் செய்வித்தாலொழிய அடியோங்கள் எழுந்திருக்கக் கடவோமல்லோமென்று தீர்க்கவைராக்கியசித்தர்களாய் மூன்றுநாள் வரையில் ஸ்நானம், அனுஷ்டானம், ஜெபம், ஹோமம், வேதபாராயணம், பகவதாராதனம் முதலானவைகளும் இல்லாமற் கிடந்தகிடையா யெழுந்திரா திருந்தார்கள்.

அதுபற்றி, ஆழ்வார் ஒருவிருத்த பிராமணனாகி வந்து ஆர்காணும் மூன்றுநாளாக இந்தக்கோயிலின்வாசலிற் கிடக்கிறவர்கள்? என்ன நிமித்தத்தால் இப்படிச் செய்வதென்று கேட்க; அவர்கள் நம்மாழ்வாரையும்

னார்! திருநகரிப் பெருமாளெழுந்தருளினார்! திருக்குருகூர் நம்பி எழுந்தருளினார்! காரிமாறரெழுந்தருளினார்! ஸ்ரீசடகோபரெழுந்

அவரது திருவாய் மொழியாகிய திரவிட வேதத்தையும் சங்கத்தார் இகழ்ந்தபடியினாலே அவர்களுக்கு ஆழ்வார் யாதேனும் பிராயச்சித்தம்செய்விக்கவேண்டுமென்பது எங்கள் அபிமதமென்ன; பிராமணன் இந்தக்கலிகாலத்திலும் அப்படி நடக்குமா இதென்ன பைத்தியமென்ன; வைஷ்ணவர்கள் நடந்தால் எழுந்திருக்கிறோம்; நடவாவிட்டால் இங்ஙனமே அன்னபானாதிக ளில்லாமலிருந்து பிராணனை விட்டுவிடுகிறோமென்ன; ஆழ்வார் அவர்கள் மனோநிச்சயத்தை அறிந்து குறுநகை கொண்டு நீங்கள் சடகோபர் அருளிச்செய்த திருவாய்மொழியில் இன்னபாடலின் இத்தனையாம்பாதத்தை ஒரு சிறு நறுக்கில் எழுதிக்கொண்டுபோய்ச் சங்கப்பலகையின்மேல் வையுங்கள்; உங்கள் அபீஷ்டப்படி நடக்குமென்று சொல்லி அந்தர்த்தானமாய் விட்டார். வைஷ்ணவர்கள் திருக்குருகைப் பிரானாரே இத்தன்மையாக எழுந்தருளினாரென்று தெரிந்து அவரருளிச் செய்தபடி செய்தார்கள்.

அவர்கள் அந்தத் திருவாய்மொழிச் செய்யுளடியை எழுதிய ஒருசிறு முறியைக்கொண்டுபோய்வைத்தமாத்திரத்தில் சங்கப்புலவர்கள் ஏறியிருந்த பலகையானது பொற்றாமரைத் தடத்தில் ஆச்சரியமாய் மூழ்கிவிட்டது. அதிலிருந்த புலவர்களெல்லாம் நீரில் திடீரென்று விழுந்து அமிழ்ந்து தத்தித் தடுமாறி எழுந்து மெல்லநீந்திக் கரைசேர்ந்து பார்க்கும் பொழுது, அமிழ்ந்தபலகை உடனே குபீரென்று கிளம்பித் தன்னிடத்தில் வைக்கப்பட்ட சிறுமுறியைமாத்திரம் ஏந்திக்கொண்டு மிதந்தது. அவர்களதை யெடுத்து அதிலெழுதி யிருக்கின்ற ஆழ்வாரருளிச்செய்த ஆயிரப்பிரபந்தத்தின் தொண்ணூற்றைந்தாந் திருவாய்மொழியில் "கண்ணன் கழலிணைகள், நண்ணுமனமுடையீர், எண்ணுந்திருநாமம், திண்ண நாரணமே" என்னும் முதற்கவியின் முதற்பாதத்தைவாசித்தறிந்து, உலகெலாம் உள்ளடியடக்கிய கண்ணன் கழலிணைகளைத் தன்னிடத்தில் அடக்கிய இச்சிறுமுறிக்கு இடங்கொடுத்த சங்கப்பலகை இதனோடு சமானஸ்கந்தமாக நமக்கும்இடங்கொடுக்குமா? கொடாதாதலால் நம்மை அகற்றிவிட்டதென்றும், சகலவேத சாஸ்திரங்களையும் பிறரால் கற்பிக்கப்படாமல் தாமேயுணர்ந்த சாட்சாத் பகவதமிசமாகிய ஆழ்வாருடைய தெய்வீகமான பாண்டித்தியத்திற்கு நமது பாண்டித்தியம் சதாமிசத்தில் ஏகாமிசமுங்காணாதேயென்றுநினைத்துத்துக்கித்து, மற்றும்திருவள்ளுவர் குறள் செய்தகாலத்தில் அவரும் ஔவையும் இடைக்காடரும் சந்தித்த சமயத்தில் வள்ளுவரைநோக்கி மற்றையிருவரும் நீர்செய்த நூல் எத்தன்மைத்தாகியதென்று வினவ; அவர் அகஸ்தியராற் பிரசித்தம் பண்ணப்பட்ட இயல் இசை நாடகமென முத்திறத்ததாகியதமிழும் என்னாற்செய்யப்பட்ட குறளும் உடையநங்கையின் திருக்குமாரராகிய சடகோப ரருளிச்செய்த திருவாய் மொழியின் புத்திரஸ்தானமாகிய வழிநூலா மென்னும் கருத்தை உள்ளமைத்து

தருளினர்! ஸ்ரீபராங்குச ரெழுந்தருளினர்! ஸ்ரீவகுளபூஷண பாஸ்கர ரெழுந்தருளினர்! பொருநற்றுறைவரும் புங்கவர்கோன்

"குறுமுனிவன் முத்தமிழு மென்குறளு நங்கை
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்"

என்று சொன்னதையும்,

அதுகேட்டு ஔவை, அர்த்தபஞ்சகத்தையும், சதுர்வித புருஷார்த்தத்தையும் அறப்பால்முதலிய முப்பாலுள் அடக்கி அமைக்கப்பட்ட உண்மைப்பொருளை, எவ்வகைப்பட்ட வேதங்களுக்கும் சம்மதமாகிய மேலானபொருளைக் குளிர்ச்சிதங்கிய தாம்ரபரணி தீரத்திலிருக்கும் திருக்குருகூரிற் காரிமுதலியார் புதல்வராய் அவதரித்த நம்மாழ்வாரது திருவாய்மொழியாகிய திரவிடவேதமென்று சிலர்சொல்வார்கள். நான் அவர்கள் சொல்லை மறுத்து அக்குறளை இந்த வுலகத்திற்குத் தாயாகிய ஸ்ரீமந் நாராயணனாற் பிரமனுக்கு உபதேசிக்கப்பட்டுவந்த கீர்வாண வேதமென்றே சொல்லுவேனென்னும் கருத்தை உள்ளிட்டு,

"ஐம்பொருளு நாற்பொருளு முப்பொருளிற் பெய்தமைத்த
செம்பொருளை யெம்மறைக்குஞ் சேட்பொருளைத்-தண்குருகூர்ச்
சேய்மொழிய தென்பர் சிலரியா னிவ்வுலகின்
தாய்மொழிய தென்பேன் றகைந்து"

என்று சொன்னதையும்,

இடைக்காடர், த்ரவிட வேதமாகிய சேய்மொழியையும், கீர்வாண வேதமாகிய தாய்மொழியையும் ஆராய்ந்துசொல்லுமிடத்தில் இரண்டும் ஒன்றேயாம். திருவாய்மொழியை யாவரும் சங்கையின்றி வேதமென்றே சொல்லுவார்கள். திருவாய்மொழியைப்போல சிறந்த நூல்கள் அனேகம் உண்டென்று சிலர் குதர்க்கம்செய்தாலும், நானவர்களை மறுத்து அவைகளும் இந்தக்குறளும் அத்திருவாய் மொழியினது சாயையாயிருப்பவைகளென்றே சொல்லுவே னென்னுங் கருத்தை அடக்கி,

"சேய்மொழியோ தாய்மொழியோ செப்பி லிரண்டுமொன்றவ்
வாய்மொழியையாரு மறையென்ப - வாய்மொழிபோல்
ஆய்மொழிகள்சால வுளவெனினு மம்மொழியின்
சாய்மொழியென் பேன்யான் றகைந்து"

என்று சொன்னதையும் நினையாமற் போனேமே. அவைகளை நினையாவிடினும்,

ஒருகாலத்தில் தாம்ரபரணி நதியின் வடகரையில் வசித்திருந்த யோகியொருவர் வளர்த்த நாயொன்று தென்கரையிலுள்ள ஆழ்வார் திருநகரிக்குப் பிரதிதினமும் மத்தியான வேளையிற்போய் வீதியிலிருக்கும் வைஷ்ணவர்களுடைய உச்சிஷ்டத்தைத்தின்று வயிற்றை நிரப்பிக்

எழுந்தருளினார்! என்று பலசின்னம் பரிமாறி விருதூதிக் கொண்டு வராநிற்க; அவ்வளவிலே, சங்கத்தார் சிஷ்யர்கள்

கொண்டு வருவதுண்டு. அவ்வழக்கப்படி ஒருநாள் போய்த் திரும்பிவர நேரப்பட்டதனால், யோகியானவர் நாயின்னும் வரவில்லையேயென்று ஆற்றோரத்தில்வந்து பார்க்கும்பொழுது, அந்நாய் நட்டாற்றில் வருகையில், அகஸ்மாத்தா வெள்ளம்வந்தமையால் நீந்தி காலோய்ந்துபோய் நீரில் அமிழ்ந்து கிளம்பிற்று. அத்தருணத்தில் அதன்கபாலம் வெடித்து அந்தரந்தனத்தின்வழியாய் நாயின்ஆத்மாவாகிய ஜோதியானது எழுந்து அமாவாசை யிருளில் கோடிசூரியப் பிரகாசம்போல பிரகாசித்ததைப் பிரத்தியக்ஷமாகப் பார்த்து; அசேதனமாகிய நாயும் பெறுதற்கரியபேறு பெற்றதே, இதென்ன சாதனத்தை யுடைத்தா யிருந்தது. ஒன்றுமில்லாதிருந்தும், ஆழ்வார் திருநகரியின் உச்சிஷ்டத்தை உண்டதனாலல்லவோ இப்படிச்சம்பவித்தது. இது தபசிகள் யோகிகள் ஞானிகள் முதலானவர்களுக்கும் சித்திக்கமாட்டாதே என்று நினைத்து மனதுருகிக் கண்ணீர்விட்டு அழுது அவர்,

"வாய்க்குங் குருகைத் திருவீதி யெச்சிலை வாரியுண்ட
நாய்க்கும் பரம பதமளித் தாயந்த நாயொடிந்தப்
பேய்க்கு மிடமளித் தாற்பழு தோபெரு மாள்மகுடம்
சாய்க்கும் படிக்குக் கவிசொல்லு ஞானத் தமிழ்க்கடலே"

என்பது முதலாகச் சிலபாடல்களால் ஆழ்வாரை ஸ்தோத்திரித்ததையாவது, அல்லது வல்லபதேவ னென்னும் பாண்டியன் சபையிற் பெரியாழ்வார் கிழியறுத்துப் பரத்துவ நிர்ணயஞ் செய்தபொழுது நாம் கர்வபங்கப்பட்டதையாவது நினைக்கவேண்டுமே; அப்படியும் செய்யாமற் செருக்கினால் ஆழ்வார் விஷயத்தில் அபசாரப் பட்டோமே; அவர் திருவாய்மொழியையும் அவமதித்தோமே யென்று எண்ணி யெண்ணி அனுதாபப்பட்டுப் பின்பு அவர்களெல்லாம் நிகர்விகளாய், அவ்வபசாரத்தை ஆழ்வார் க்ஷமிக்கும் பொருட்டு அவருடைய மகிமை தங்கிய பிரபாவத்தைக் குறித்து,

"சேமங் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
நாமம் பராங்குசமோ நாரணமோ—தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கும்
உளவோ பெருமா னுனக்கு"

என்றுபாடி ஸ்துதி செய்தார்கள்.

சங்கப்புலவர்கள் அத்தனைபெயரும் ஆழ்வார் விஷயத்திற் பாடிய பாடல்களெல்லாம்ஒன்றுக்கொன்று ஒருசொல்லாவது,ஓரெழுத்தாவது, எழுத்தின் உறுப்பாவது, அசை சீர் தளை முதவியவைகளில் ஏதாவது

அங்குவந்து இவருடன் தர்க்கித்து உங்கள்பெருமான் எங்கள்சங் கத்தாரிடம்வந்து ஜயித்து சங்கப்பலகையேறினலொழிய வேதந் தமிழ்செய்தபெருமாளென்று நீர்விருதுபிடிப்பது செல்லும்; அப் படிக்கில்லாவிடிற்செல்லாதென்று தடுக்க; இவரதைக்கேட்டருளி நீர் சொல்லுவது ந்யாயமேயாகிலும், எங்கள் பெருமான் திருப் புளியாழ்வானடியை விட்டெழுந்தருளின தில்லையே! இப்போது நாம் அவருடைய அருளிச்செயல்கள் ஆயிரத்திலொரு பாசுர த்தை இந்தச்சிறுமுறியிலேறியருளப்பண்ணிக்கொடுக்கின்றோம்; நீர் இதனைக்கொண்டுபோய் உம்முடையசங்கப்பலகைமேல்வைத் துச்சங்கத்தார்களதைஜயிக்கவல்லவர்களாகிறார்களோஇல்லையோ வென்று பார்த்து எம்மிடம்வந்து தர்க்கிக்கலாமென்ன; அவர்க ளும்கொடுமென்ன; இவர் ஒருசிறுமுறியில் "கண்ணன்கழலிணை" என்னும் பாசுரத்தை ஏறியருளப் பண்ணிக் கொடுக்க; அவர்க ளதை யெடுத்துக்கொண்டுபோய்ச் சங்கத்தாரிடம் நடந்த வாக் வாதங்களையுஞ் சொல்லிப் பலகையின்மீதுவைக்க; உடனே அந் தப்பலகை தன்மீதிருந்த முன்னூறு சங்கத்தமிழ்ப் புலவர்களை யும் குபீரென்று கவிழ்த்துவிட்டு ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தி சிறு முறியை மாத்ரம் தரித்து நிற்க; அவர்களெல்லோரும் பயந்து, ஒவ்வொருவரும் தனித்தனியே ஆழ்வார் திருவடிகளில் கவிகள் சமர்ப்பித்து அபசாரக்ஷாபணம் பண்ணிக் கொண்டவர்க

சிறிதும் பேதமில்லாமல் இவ்வொரு பாடலின்படியே இருக்கக்கண்டு இதென்ன அற்புதமென்று அதிசயப்பட்டுப் பின்பு அவரது திருவாய் மொழியின் ஏற்றத்தைப்பற்றி,

"ஈயாடுவதோ கருடற்கெதிரே யிரவிக்கெதிர்மின் மினியாடுவதோ நாயாடுவதோ வுறுவெம்புலிமுன் நரியாடுவதோ நரகேசரிமுன், பேயா டுவதோ வழகூர்வசிமுன் பெருமான் வகுளாபரணன் னருள்கூர்ந் தோவாதுரையாயிரமாமறையி னொருசொற்பொருமோ வுலகிற்கவியே" என்பதும்,

"நீயே யறிவை நினதகத் தேநிற்கு நேமியங்கை
யாயே யறியுமற் றாரறி வாரடி யோங்களுக்குத்
தாயே பொருனைத் திருக்குரு கூர்த்தமிழ்க் காரிபெற்ற
சேயே நினது திருவாய் மொழியின் செழும்பொருளே"

என்பது முதலாகச் சிற்சில கவிகள்பாடி ஸ்தோத்திரஞ்செய்து, அவ் வாழ்வாருக்கு அன்றுமுதல் விருதுகூறல் முதலிய சகல விபவங்களும் முன்னிலும் விசேஷமாக நிராடங்கமாய் நடப்பிக்கும்படி செய்தார்க ளென்பதாம்.

ளாக, அந்தப்பலகை மறுபடி அவர்களுக்கிடங்கொடுத்தது; அப்போது அவர்கள் "ஈயாடுவதோ கருடர்க்கெதிரே இரவிக்கெதிர் மின்மினியாடுவதோ-நாயாடுவதோவுறுவெம்புலிமுன் னரிகேசரி முன் னடையா டுவதோ - பேயாடுவதோ வெழிலூர் வசிமுன் பெருமான் வகுளாபரணன்னருள்கூர்ந், தோவா துரையாயிரமா மறையின் னொருசொற் பொருமோ வுலகிற்கவியே" என்று கவிசொல்லி ஆழ்வார் திருவடிகளிற் சமர்ப்பிக்கும்படிப் போக விட; அதைக்கொண்டுவந்து மதுரகவி யாழ்வாரிடத்திற் சமர்ப்பித்துத்தண்டனிட்டுத்தாமுன்பு இவரிடத்தில் வாக்வாதம் பண்ணினதுதுர்வாதமென்று, சங்கப்பலகைமேல்கண்டஅதிசயத்தையும்விண்ணப்பம்பண்ணிக்ஷமைபெற்றுப்போயினார்கள்இப்படிக் "குரும்ப்ரகாஸயேத்தீமாந்" என்கிறபடியே ஸ்ரீமதுரகவி யாழ்வார், ஸ்வாசார்யரான நம்மாழ்வார்வைபவத்தை ஊரும்நாடும்

தமிழின்வைபவம்:—

சிவபிரான் உமாதேவியைப் பாணிக்கிரஹணம் செய்துகொள்வதைப் பார்க்கும்படி பல திக்குகளிலுமிருந்து தேவர்களும் தபோதனர்களும் திரண்டுவந்து சேர்ந்தபோது, பூமியின் வடபுறம் கனத்துத் தென்புறம் மேலெழுந்தமையால், சிவபிரான்விசுவகர்மாவைப்பார்த்து நீர்தென்புறம் போய் உயர்ந்தபூமியைச் சமமாகச்செய்வீராகவென்றுசொல்ல; விசுவகர்மாவும் சிவபிரானைப்போற்றி இத்தேவ மாதவ கூட்டத்தினின்றும் அவ்விடத்திற்கு யாவர்போயினும் பூமிசமப்படாது; சமுத்திரபானஞ்செய்த பெருந்தவத்தையுடைய அகஸ்தியமுனிவர் போவாராயின் பூமிசமப்படும் என்று சொல்லினன். உடனே சிவபெருமான் அகஸ்தியரைப்பார்த்து மிக்க தவத்தையுடையீர்! நீவிர் மேலெழுந்த பூமியினிடத்திற்குச் செல்வீராக என்றுகூற; முனிசிரேஷ்டர் பெருங்கோபத்துடன் விசுவகர்மாவை நோக்கி உமாதேவியின் திருக்கல்யாணத்தைத் தரிசிக்கவந்த என்னைப் பிரித்த உன்னுடைய குலமுழுதும் பேதமாய்ச்செய்யுந்தொழில் அதிகப்பட்டு பெறும் பொருள்களும் அற்பமாய் ஒழியக்கடவன என்று ஒழியாத சாபத்தைக் கொடுத்தனர்; விஸ்வகர்மாவும் கோபாவேசனாய் நான் எல்லோருக்கும்இதமானதையே ப்ரேரேபித்ததைக் குற்றமாகஎண்ணியபடியால் உனது அழகுநிறைந்த தமிழானது வேதத்துக்குப் புறம்பான தன்மையதாகிப் புதர்விடுக்கக்கடவது என்று சபித்தான்; அகஸ்தியர் வியாகுலாந்தக்கரணராய்ச் சிவபிரான் முன்சென்று சுவாமீ! தேவரீர் அடியேனுக்கருளிய செவ்விய தமிழானது வேதத்திற்குப் புறம்பானதாகப் பரிசுத்தர்கள் எண்ணக்கடவர்களென்று விசுவகர்மா சாபமிட்டனன்; அச்சாபத்தைப் போக்குவீராகவென்று இரங்கி வேண்ட; சிவபிரான் அகஸ்

உலகுமறியும்படி ப்ரகாசிப்பித்துக் கொண்டிருந்து உலகத்தை வாழ்வித்தருளிக் கலியாப்தம் 50-வது வருஷமான தம்முடைய நூற்றெழுபத்தோராவது திருநக்ஷத்ரத்தில் தம்முடைய சிஷ்ய ரான ஸ்ரீபராங்குசதாஸரிடத்திற் பரமாசார்யரான ஸ்ரீபராங்குச ருக்காகவேண்டிய கைங்கர்யங்களை யொப்புவித்துத் தன்னடிச் சோதிக் கெழுந்தருளினார்.

ஸ்ரீ மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்.

தியரைப்பார்த்து,நாமஉமது தமிழைப் பரிசுத்தமான வேதத்தினும் சிறந்ததாகவிரும்புவோமென்று வரங்கொடுத்தனர்.அகஸ்தியரும் விடைபெற்றுக்கொண்டுமுனிவரும்தேவரும் கரங்களைமேலெடுத்துஅதிசயிக்க மாவிந்தமலையினின்றும் உயர்வடைந்த தென்றிசையைச்சேர்ந்தனர். பொதிய மலையின்கண் பொருந்தி விதிமுறைதவறாது தமிழைப் பூமியில் ப்ரவர்த்திப்பித்துக்கொண்டு வரும்போது தத்துவஞானம் வழுவாத பரமபாகவதர்கள் இத்தமிழ் மோக்ஷத்தைத் தராதென்று அநாதரித்துவிட; அது கண்டமுனிவர் ஆயிரத்திருநூறுஸம்வத்ஸரம் ஸ்ரீமந்நாராயணனைநோக்கி அருந்தவம் புரிந்தனர்; அப்போது பகவான் அவர்முன் ப்ரசன்னமாய் முநீந்திரரே! வேதமனைத்தையும் உமது செந்தமிழாக்குவோம், அன்றியும் கீர்வாணவேதத்தினும் திரவிடவேதமே சீரியதெனப் பூமியிலுள்ள அறிஞர் யாவராலும் நன்குமதிக்க வைப்பதுடன் நமது மனன சீலர்களாகிய பாகவதர்களும் கைப்பற்றி யனுபவித்துக்கொண்டாடவுஞ் செய்வோம்; எமக்கும் இன்பமானதாக அணிவோம்; நீவிர் தளரவேண்டாவென்று வரங்கொடுத்துப் பஞ்சாயுதங்களையும் ஆதிசேஷரையும் பூமிதேவியையும் கௌஸ்துபத்தையும் ஸ்ரீவற்சத்தையும் வனமாலையையும் பெரிய திருவடியையும் பூமியில் அவதரிப்பித்து அவர்களால் சொல்வதற்கரிய வேதநூலைத் தமிழிற்சொல்வித்துத் திருவரங்கமுதலிய திருப்பதிகளில் அவர்களுக்குப்பிரசன்னமாய் அவர்களைக்கொண்டு உலகத்தார்க்குத் திருவிலச்சினை முதலியவை செய்வித்து இகபரபோகங்களை அடையச் செய்தனன். மற்றும் பகவான் தன்விஷயமாய்ச்சொல்லிய தமிழை யாவரொருவர்சொல்லினைத்தாலும் தப்பில்லாமற்சொன்னாலும் அவ்வாழ்வாராசார்யர்களைத்துதித்தாலும் மூவிதபிறப்புமின்றி உயர்ந்த மோக்ஷத்தையடைவார்கள் என்று அருளிச்செய்தனன். இவ்வாறு சேனைமுதலியாரது திருத்தேவியாரான சூத்திரவதியாருக்குப் பெரியபிராட்டியார் தாம் பகவானிடம் கேட்ட வண்ணஞ் சொல்லப்பட்டதென்று வேறொரு குருப்பரம்பரையின் பரமபதச்சருக்கத்தி லெழுதப்பட்டிருக்கின்றது.

அனந்தர மொருகாலத்தில், ஔவையார் திருக்குருகூர் மார்க்கமாய்த் தென்காசிக்குப்போகும்போது, ஸ்ரீபராங்குசதாசர் தம்முடைய பரமாசார்யரான நம்மாழ்வாருக்கு வருஷோத்சவங்கண் டருளப்பண்ணி, மாடவீதியி லெழுந்தருளப்பண்ணிக்கொண்டு ஆழ்வாருக்குரிய விருதுகளையெல்லாம்கூறித் திருச்சின்னம் பரிமாறுவதைக்கண்டு அவரைப்பார்த்து உம்முடைய பரமாசார்யனருளிச்செயல்களை நாம் பார்க்கவேண்டுமென்ன; அவரும் திவ்யப்ரபந்தங்களைத் தர்சிப்பிக்க; ஔவையார் மிகவும் ப்ரீதையாய் ஆழ்வாருடைய அவதாரக்ரமங்களையும்கேட் டானந்தித்துஆழ்வாரைத் துதித்துப் போயினாள்.

நம்மாழ்வார் திருநட்சத்ரத் தனியன்.

"வ்ருஷபே விஶாகாயாம்
குருகாபுரி காரிஜம்
பாண்ட்யதேஶே கலேராதௌ
ஶடாரிம் ஸைந்யவம்பஜே".

மதுரகவியாழ்வார் திருநக்ஷத்ரத் தனியன்.

"மேஷேசித்ராஸ முத்பாதம்
பாண்ட்யதேஶே கணும்ஶகம்
ஸ்ரீபராங்குஶ ஸத்பக்தம்
மதுரம்கவி மாஶ்ரயே.

ஸ்ரீநம்மாழ்வார் திருவடிகளே சரணம்.
ஸ்ரீமதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்.
ஜீயர்திருவடிகளேசரணம்.

ப்ரதமபாகம்ஸம்பூர்ணம்.

ஸ்ரீநம்மாழ்வார் திருவவதாரவருஷம் - சகூஅக - க்கு } சரியான
ஸ்ரீமதுரகவியாழ்வார்திருவவதாரவருஷம் - ருக0உ - க்கு } ப்ரமாதி-ஞு

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ

ஸ்ரீமந் நாதமுநிகள் வைபவம்.

தனியன்.

"வ்யோம்நஃ பரஸ்தாத்ஸவிதம் ஸமேத்ய லக்ஷ்ம்யாநியோ காத்குருகாதிராஜஃ - ஸமந்த்ர ரத்நந்த்வயமா ஹயஸ்மை நாதாய தஸ்மை முநயே நமோஸ்து.

இவ்வுலகில் பரமக்ருபையாலே அவதரித்தருளி உய்பவர்க்குய்யும் வண்ணமாகத் திவ்ய ப்ரபந்தங்களைத் திருவாய்மலர்ந்துபகரித்தருளினவர்களான ஆழ்வார்கள் தன்னடிச்சோதிக்கெழுந்தருளினபின்பு, அவ்வருளிச்செயல்களில் பக்திவிசுவாசம் வைத்து ஓதி வழிவழிவந் தாட்செய்த தொண்டர்கள் விஷயத்தில் ஸர்வேஶ்வரன் மஹாப்ரீதனாய், "ஓதவல்லார் பிறவாரே" என்றும், "சோரார் விடார் கண்டீர் வைகுந்தந் திண்ணனவே" என்றும், "வல்லாருளரேற் கூடுவர் வைகுந்தமே" என்றும், "பன்னிருநாமம் பாட்டண்ணல் தாளணைவிக்குமே" என்றும், "பண்டலையிற் சொன்ன தமிழாயிரத்திப் பத்தும் வல்லார் விண்டலையில் வீற்றிருந்தாள்வ ரெம்மாவீடே" என்றும், "கெடலில் வீடுசெய்யுங்கிளர்வார்க்கே" என்றும் "அருளுடையவன்றாளணைவிக்கு முடித்தே" என்றும், "உயிரின்மேலாக்கையூணிடையொழிவிக்குமே" என்றும், "தழுவப்பாடி யாடவல்லார் வைகுந்தமேறுவர்" என்றும், "வயிரஞ்சேர் பிறப்பறுத்து வைகுந்தம் நண்ணுவரே" என்றும் "திருவடியே யடைவிக்கும்" என்றும், "மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றதுகையதுவே" என்றும், "ஆர்வண்ணத்தா லுரைப்பார் அடிக்கீழ் புகுவார்பொலிந்தே" என்றும், "இறந்துபோய் வைகுந்தஞ்சேராவா றெங்ஙனேயோ", என்றும், "மாகவைகுந்த மகிழ்வெய்துவர்வைகலுமே" என்றும்' "பிடித்தார்பிடித்தார் வீற்றிருந்து பெரியவானுண்ணிலாவுவரே" என்றும், "முகில்வானத் திமையவர் சூழவிருப்பர் பேரின்ப வெள்ளத்தே" என்றும், "வானின்மீதேற்றி யருள்செய்து முடிக்கும் பிறவிமாமாயக் கூத்தினையே" என்றும், "வைகுந்தமேறுதல்

பான்மையே" என்னுமிவை தொடக்கமான ஆழ்வாருடைய மங்களா சாசனத்தின் படியே, மேல்வீட்டுக் கடிமை கொண்டருள் வதைக் கண்ட ப்ராம்ஹணர்கள் கலிமஹிமையாலும் அபிஜன வித்யாவித்தங்களாலும், மதாந்தர்களாய், அவ்வருளிச் செயல் கள்மேல் (கொல்லும்பாட்டென்று) தோஷங்கூறி ஆசுர ப்ரக்ருதிகளாய், அவற்றை நெருப்பிலிட்டு உருவழிக்கத்தலைப்பட்டு ஏறக்குறைய மூவாயிர வருஷங்களுக்குள்ளாக ஆராவமுதன் விஷயமான பத்துப் பாசுரங்களும், மதுரகவியாழ்வா ரருளிச் செய்த கண்ணிநுண் சிறுதாம்புந்தவிர மிகுந்தவை யெல்லாம் பற்றற அழிந்து அவைகளிருந்தனவென்னும் சுவடுகூட உலகத்தாருக்குத் தெரியாமற் போய்விட்டது; அப்போது பொதிய மலையில் வாழும் கும்பசம்பவரும் ஆங்கீரசாதி ருஷிகளும் (மது கைடபர்களிடத்தில் வேதங்களைப் பறிகொடுத்த சதுர்முகனைப் போலே) மிகவும் கிலேசித்துத், திருமலைக் கெழுந்தருளித், திருவேங்கடத்தப்பனைத் திருவடிதொழுது, விண்ணப்பஞ் செய்து கொள்ள; அப்பன், அவர் முறைக்கிரங்கி கும்பசம்பவரே? நீர ஞ்சவேண்டாம், வீரநாராயணபுரத்தில், மன்னனார் சந்நிதியில் நித்யவாசஞ் செய்துகொண்டு அவருக்கு அந்தரங்க பக்தராயிருக்கிற ஈஶ்வரபட்டாழ்வானுக்கு நம்முடைய ஹம்சபூதரொருவரை, நாதமுனிகளென்னும் அபிதானத்தால் அவதரிப்பித்து, த்ரவிடவேதங்களைக் கொடுப்பிக்கக் கடவோமென்று திருவாய் மலர்ந்தருள; ருஷிகள் அபயமாய் விடைகொண்டு, வீரநாராயணபுரத்திற் கெழுந்தருளி, மன்னனாரை யடிபணிந்து, ஈஶ்வர பட்டாழ்வாருக்குச் சேவைதந்து, திருவேங்கடத் தப்பன் றிருவுள்ளமிருக்கும் படியைத்தெரிவித்து, அவரால் பஹூக்ருததராய்த், திரும்பி, ஸ்வஸ்தானஞ் சேர்ந்து, "இனியுன் றிருக் குறிப்பே" என்கிறபடியே ஸ்ரீநிவாசனருளையே எதிர்பார்த் திருந்தார்கள். அதன்பின்பு ஈஶ்வரபட்டாழ்வாருடைய பத்னி கர்ப்பவதியாய்க், கலியாப்தம் மூவாயிரத் தறுநூற்றெண்பத் தைந்தில் நிகழ்ந்த சோபக்ருது வருஷம் ஆனிமாஸம் சுக்ல பக்ஷம் த்ரயோதசி புதவாரம் அநுஷநக்ஷத்ரங் கூடிய சுபதினத்தில் ப்ரஸவிக்க இம்மஹாநுபாவர் அவதரித்தருளினார்; இதை இவர் திருத்தந்தையார் கும்சம்பவருக் கறிவிக்க; அவரும் அதி ப்ரீதியுடன் அப்பொழுதே புறப்பட்டுவந்து (இவர் நாத னரு

ஞ்ருருவானவர்; ஆகையாலே) இவருக்கு நாதமுனிகளென்று நாமகரணஞ்செய்து, அவ்வக்காலவளவு படிக்கு நடக்கவேண்டிய சுபசூசகமான கர்மங்களையெல்லாம் தாமே அருகிலிருந்து நடத்திவைத்து, வித்யாப்யாசந் தொடக்கமான சர்வ சாஸ்திரங்களிலும், † அணிமா-மஹிமா-கரிமா-லஹிமா-ப்ராப்தி ப்ராகாம்யம் - ஈசத்வம் - வசித்வம் என்கிற அஷ்டமா சித்தியிலும், ‡ இயமம்-நியமம்-ஆதனம்-ப்ராணாயாமம் - ப்ரத்யாஹாரம்-தாரணை த்யானம்-சமாதி என்கிற அஷ்டாங்கயோகங்களிலும் அதிநிபுணராக்கிவைத்துத் தாம் திருவேங்கடத் தப்பனிடத்தில் செய்துகொண்ட விண்ணப்பத்தையும், அவனருளிச்செய்திருந்ததையும், இவரை ஏகாந்த ஸ்தலத்தில் வைத்துக்கொண் டறிவித்துவிட்டுப் போயினர்.

---

† 1. அணிமா-மிகச் சிறிய வுருவினையுடையதாதல். 2. மஹிமா-மிகப்பெரிய வுருவினையுடையதாதல். 3. கரிமா - மிகக்கனத்திருத்தல். 4. லஹிமா - துரும்பைப்போன்று கனமின்றி மிகநொய்தாயிருத்தல். 5. பிராப்தி - விரும்பியதை விரும்பியவாறடைதல். 6. பிராகாம்யம்-பரகாயப் பிரவேசஞ்செய்தல், ஆகாயகமனம் புரிதல், இச்சித்த சர்வ போகங்களு மிருந்தவிடத்திற்பெறுதல், சூரியவொளியால் பொருள்களைக் காணுமாறுபோன்று தனதுடலொளியால் பொருள்களைக்காணுதல், திரிகாலவுணர்ச்சி. 7. ஈசத்வம் - எத்தகையோர்க்கு மேற்பட்டிருத்தல். 8. வசித்வம் - சராசரப்பொருள்க ளியாவற்றையும் தன் வசமாக்கல். இவை அஷ்டமாசித்தி யெனப்படும்.

‡ 1. இயமம் - கொல்லாமை, மெய்ம்மைகூறல். திருடாமை, பிறர் பொருட்கண் ஆசையின்மை, இந்திரியங்களை யடக்கலாம். 2. நியமம்-தவம், சௌசம் (அதாவது உடலை நீரினாலும், மனத்தைச் சத்தியத்தினாலும் பரிசுத்தமாக்கல்), தத்துவநூலாராய்ச்சி, பெற்றதுகொண்டு மகிழ்தல், தெய்வவழிபாடு என்பனவாம். 3. ஆதனம்-(அதாவது இருப்பு) பத்திரமென்றும் அதாவது பீஜத்தின்கீழ்ப் பாகமாகிய நரம்பி னிருபக்கங்களிலும் இருகாற்பரட்டையுஞ்சேர்த்து அவ்விருகால்களையும் இருகைகளாலும் இறுகப்பிடித்து அசையாதிருத்தல்; கோமுகமென்றும் அதாவது சகன (பிருஷ்டபாகம்) பக்கத்தில் இரண்டுகால்களின் பரட்டையும் மாறவைத்து அந்த இரண்டுகால்களின் பெருவிரல்களைக் கைகளால் பிடித்திருத்தல்; பங்கயமென்றும் அதாவது இரண்டு தொடைகளின் மேலும் இரண்டு உள்ளங்கால்களையும் மாறித்தோன்ற வைத்தல்; கேசரியென்றும் அதாவது பீஜத்தின் கீழ்ப்பாகமாகிய நரம்பின் இருபக்கங்களிலும் இரண்டு பரடுகளையுஞ்சேர்த்து முழந்தாளின்பேரில் இரண்டு கைகளையும் நன்றாய்ப்பொருந்தும்படி வைத்து அக் கைவிரல்களைச் செவ்வையாய்விரித்து வாய்திறந்து நாக்கைநீட்டிக்கொண்டு மூக்குநுனி

அனந்தரம் ஈஶ்வரபட்டாழ்வாரும், ஸ்ரீமந்நாதமுனிகளும் இவர் திருக்குமாரர் ஈஶ்வரமுனிகளும் ஒருநாளளவில், மன்னனார் திருமுன்பு சென்று தண்டன்ஸமர்ப்பித்து "பரித்ராணாய ஸாதூநாம்விநாஶாய சதுஷ்க்ருதாம்—தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமியுகேயுகே" என்னுந் திருமுகப்படியே தேவரீர் துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தமாக அவதரித்து விளையாடியருளின ஸ்ரீவடமதுரை-திருவாய்ப்பாடி-ஸ்ரீப்ருந்தாவனம் யமுனாதீரம் - ஸ்ரீ கோவர்த்தனகிரி - ஸ்ரீமத்வாரகை - திருவயோத்யை ஸ்ரீ சாளக்ராமம்-ஸ்ரீபதரிகாசிரமம்-ஸ்ரீநைமிசாரண்யம்-ஸ்ரீஸிம்ஹகிரி முதலிய வடதிசையிலுள்ள திவ்யதேசங்களெங்கும் திருவடிதொழுதுவர நியமித்தருள வேணுமென்று விண்ணப்பஞ்செய்து, அர்ச்சகமுகேன விடைபெற்றுக்கொண்டு ஸகுடும்பமாகப் புறப்பட்டுப்போய் (வடதிசைமதுரை சாளக்ராமம் வைகுந்தந்துவரையயோத்தி - இடமுடைவதரி) முதலான திவ்யதேசத் தெம்பெருமான்களைத்திருவடிதொழுது,"யமுநாஞ் சாதிகப்பீரம் நாநாவர்த்தசஷாகுலாம்" என்கிறபடியே மஹாகம்பீரமாய்ப்பலமடுக்களையும் அவற்றில்சுழிகளையுமுடைத்தாய்ப் பெருகாநிற்கிற, யமுனாதீரத்திலுள்ளகோவர்த்தனபுரத்திலெழுந்தருளியிருக்கிற, யமுனைத் துறைவனைத் திருவடி தொழுது

யைப் பார்த்திருத்தல்; சுவத்திகம் என்றும் அதாவது தொடைக்கும் முழங்காலுக்கும் இடையே இரண்டு உள்ளங்கால்களையுஞ் செலுத்தி இறுமாந்திருத்தல்; சுகாதனம் என்றும் அதாவது எவ்விதமிருந்தால் திடமும் சுகமும் உண்டாகுமோ அவ்விதமிருத்தல் என்பனவாம். 4. பிராணயாமம்-இரேசகவாயுவை மூக்கின் வலது துவாரத்தால் விடுத்தல், பூரகவாயுவை மூக்கின் இடது துவாரத்தின் வழியாக உள்ளுக்கிழுத்தல்,கும்பகம் (வாயுவையுள்ளே அடக்குதல்) செய்தலாம். 5. பிரத்யாஹாரம்-விஷயங்களில் செல்லாவகை சகல இந்திரியங்களையும் தடுத்து உள்நோக்கியிருத்தலாம். 6. தாரணை-தைலதாரைபோன்று இடைவிடாது அந்தக்கரணம் ஒருவகைப்பட் டிருத்தலாம். 7. தியானம் - கடவுளிடத்து விட்டு விட்டுச் செல்லும் அந்தக்கரணத்தின் ப்ரவாகமாம். 8. சமாதி-உண்டாயிருக்கும் சமஸ்காரங் (வாசனை) களின் ஒழிவும் அடங்கியிருக்கும் சமஸ்காரங்களின் வெளிப்பாடும் உண்டாகி அந்தக்கரணம் ஒருமுகமாய் பரிணமித்திருத்தலாம். இயமம் பத்துவகைப்படும் என்பதும், நியமம் பத்துவகைப்படும் என்பதும், ஆதனம் எண்பத்துநான்கு வகைப்படும் என்பதும், பிராணயாமம் இருவகைப்படு மென்பதும் பிறவுமாகிய இவற்றின் விரிவெல்லாம் அடயோகதீபிகை முதலியவற்றிற் கண்டுகொள்கவும்.

மிகவும் ப்ரீதராய், அவ்விடத்தில்தானே சிலகாலம் நித்யவாசஞ் செய்யத் திருவுள்ளமாய், ஸர்வவித கைங்கர்யங்களும் பண்ணிக் கொண்டு ஸேவித்திருக்கிறகாலத்தில், ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு மன்னனார் ஸ்வப்நங்காட்டி நம்முடைய வீரநாராயணபுரத்தேற வரலாகாதோ வென்று சாதித்தருள; இவர் இனி செய்யத்தக்க தென்னென்று, யமுனைத்துறைவன் திருமுன்புநின்று தண்டன் ஸமர்ப்பித்து, மன்னனார் திருவுள்ளத்தை விண்ணப்பஞ்செய்து கொள்ள; யமுனைத்துறைவனும் அர்ச்சகமுகேன தீர்த்த ப்ரசாதங்களை ப்ரஸாதித்து விடைகொடுத்தருளினார்; பின்பு இவர் அங்குநின்றும் குடும்ப ஸஹிதமாகத் திரும்பி, வாரணாசிமார்க்கமாய் "ஸப்த ஸப்தஸு லோகேஷு லோகாலோகே சராசரே-நாஸ்தி நாஸ்தி ஸமம் க்ஷேத்ரம் உத்தமம் புருஷோத்தமம்" என்று சதுர்த்தச புவனங்களிலும் தனக்கு நிகரில்லையெனச் சொல்லப்படுகிற ஸ்ரீ புருஷோத்தமத்துக் கெழுந்தருளி ஸ்ரீஜகந்நாதனைத் திருவடிதொழுது, அங்குநின்றும் புறப்பட்டு ஸிம்ஹாத்ரிக் கெழுந்தருளி ஸிம்ஹகிரியப்பனை யடிபணிந்து, அஹோபிலத்துக் கெழுந்தருளி "அஹோவீர்ய மஹோசௌர்யம் அஹோபாஹு பராக்ரம: - நாரஸிம்ஹ: பரந்தைவம் அஹோபல மஹோபிலம்" என்கிறபடியே அத்யாச்சர்யத்திற் கிடமான சௌர்ய பராக்ரமாதிகளையுடைய அழகிய சிங்கரைத் திருவடி தொழுது "பரன்சென்றுசேர் திருவேங்கட"த்துக் கெழுந்தருளித் திருமலையாழ்வாரைச் சேவித்து "மாயாவீபரமாநந்தந்த்யக்த்வா வைகுண்ட முத்தமம்-ஸ்வாமிபுஷ்கரிணீ தீரே ரமயாஸஹ மோததே" என்கிறபடி ஜகந்நாடக சூத்ரதாரனை ஸ்ரீவைகுண்டநாதனை இவ்விபூதியி லுள்ளாரை ரக்ஷிக்கையி லுள்ள நசையாலே தன்னுடைய பரமபதத்தை யுபேக்ஷித்து வந்து திருக்கோனேரி புஷ்கரிணிக்கரையில் திருமகளோடு சர்வ சுலபனாய் ஸ்ரீநிவாசனென்னு மபிதானத்தால் சேவைசாதித்துக் கொண்டிருக்கிறானென்ன நின்ற திருவேங்கடத்தப்பனைச் சேவித்து அங்கே நித்யவாசம் பண்ணவேணுமென்கிற ப்ரீதியைக் கொள்ள; அப்படிச் செய்யும் விஷயத்தில் மன்னனாருக்குத் திருவுள்ள மில்லாதிருக்கையில், விடைகொண்டு, கடிகாசலத்திற் கெழுந்தருளிக் "கடிகைத்தடங் குன்றின்மிசை"யிருக்கும் அக்காரக்கனி அழகியசிங்கரைத் திருவடிதொழுது, திருப்புட்குழிக்

கெழுந்தருளிப் "புட்குழியம்போரே"றான விஜயராகவனையும் * பெரிய வுடையாரையும் சேவித்து "நகரீணாஞ்ச ஸர்வாஸாம் புரீகாஞ்சீ விஸிஷ்யதே-கிரீணாஞ்சாபி ஸர்வேஷாம்ஶ்ரேஷ்டோ ஹஸ்தி கிரிஸ்ஸ்ம்ருதஃ-வேகவத் யுத்தரேதீரே புண்யகோட்யாம் ஹரிஸ்ஸ்வயம்-வரதஸ் ஸர்வபூதாநாம் அத்யாபிபரித்ருஶ்யதே" என்கிறபடி வேகவதியின் வடதிருக்கரையில் நகரங்களுக்கெல்லாம் உத்தமமான நகரியாயிருக்கிற காஞ்சிநகரியில், கிரிகளில் சிரேஷ்டமான அஸ்திகிரியின்மேலே புண்யகோடி விமானத்தின் மத்தியில் எழுந்தருளிநின்று அடியார்கள் பாபநிவர்த்தகனாய், ஸர்வசேதனராலும் சேவ்யமானனாய், ஸர்வபல ப்ரதனாயிருக்கிற பேரருளாளனையும், அந்த க்ஷேத்ரத்திலுள்ள மற்றவெம்பெருமான்களையும் சேவித்துத் திருவயிந்திரபுரத்துக்கெழுந்தருளித் தெய்வநாயகனையும் திருக்கோவலூரில் மூவராழ்வார்களையும் ஆயனாரையும் திருவடிதொழுது "ரங்கம் ரங்கமிதிப்ரூயாத் க்ஷுதப்ரஸ் கலநாதிஷு-விஷ்ணுலோக மவாப்நோதி ஸத்யஃ பாபக்ஷயாந்நரஃ" என்கிறபடி தும்மல் தொடக்கமான கலக்கங்கள் நேர்ந்தால் தத்தோஷ நிவிர்த்யர்த்தமாகத் திருவரங்கம் பெரியகோயில் என்றநுசந்தேயமாய், அதுவே பாபஹரமாய் மோக்ஷப்ரதமமாயிருக்கிற பெரியகோயிலுக்கெழுந்தருளிப் பெரியபெருமாளைச்சேவித்துத் திருக்குடந்தைக்கெழுந்தருளி ஆராவமுதனைச் சேவித்து மீண்டு வீரநாராயணபுரத்திற்குவந்து மன்னனார்கோயி லேறவெழுந்தருள; அப்போது அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் எதிர்கொண்டு வரப்புகுந்து, மன்னனாரைத் திருவடிதொழுது, அதிப்ரீதராய்நிற்க; மன்னனார் இவரையும் ஈஶ்வரபட்டாழ்வாரையும் ஈஸ்வரமுனிகளையும் உகந்தருளி, அங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களை யழைத்து, நமக்குப் பிரியர்களா யிருக்குமிவர்களை நீவிர் ஆதரித்துக்கொண்டு போருமென் றருளிச்செய்ய; அவர்களும் தக்கபடி திருமாளிகை யியற்றிக்கொடுத்துத், திருமாளிகைக்கு வேண்டினவையெல்லாம் "நாளும் பைங்கான மீதெல்லா முனதேயாக" என்கிறபடியே சமர்ப்பித்துக்கொண்டு போருகிறகாலத்திலே

* ஜடாயுவைப் பெரிய உடையாரென்றும், சுக்ரீவரை மஹாராஜரென்றும், மாருதியைச் சிறிய திருவடியென்றும், தசரதரைச் சக்ரவர்த்தியென்றும் சொல்வது வைஷ்ணவதர்மம்.

இவர்கள் மன்னனாருக்குத் திருநந்தவனஞ்செய்து திருமாலைகள் கட்டி ஸமர்ப்பித்து அமுதுபடிதிருத்தல்-சாத்துபடிசேர்த்தல்-திருவிளக்கெரித்தல்முதலிய கைங்கர்யங்களையும் குறைவற நடத்திக்கொண்டு, வித்வத்கோஷ்டிகளுடன் சாஸ்த்ர ப்ரவர்த்தனங்களையுஞ் செய்துகொண் டிருக்கச்செய்தே மேல்நாட்டிலிருந்து சில ஸ்ரீவைஷ்ணவர்கள் அவ்விடத்திற் கெழுந்தருளி மன்னனாரைச் சேவித்து அவர்திருமுன்பில், "ஆராவமுது" என்கிற திருவாய்மொழியை யநுசந்தித்தருள; அதை ஸ்ரீமந் நாதமுனிகள் நன்றாகச் செவிசாய்த்துக்கேட்டருளி அதிப்ரீதராய் அவர்களைப் பார்த்து (ஆயிரத்துள் இப்பத்து) என்றிருக்கிறதே, இப்ரபந்தமுங்களுக்கு முற்றவும்வருமோவென்று கேட்டருள; அவர்கள் தங்களுக்கிப் பத்துப் பாசுரங்களே தெரிந்திருப்பதென்று விண்ணப்பஞ்செய்ய, இவர் உங்கள் நாட்டிலே இந்த ஸ்ரீகோசமுண்டோவென்று கேட்டருளத் தங்களுக் கெவ்வளவுவருமோ அவ்வளவே மற்றவரிடத்து மிருப்ப தென்றார்கள்; இவர் அவர்களுக்குமன்னனாருடைய தீர்த்தப்ரஸாதங்களை ப்ரஸாதிப்பித்தருளி இவ்வாயிரம் பாசுரங்களையுங் கண்டனுபவிப்பதற்கு விரகேதென்று ஆலோசித்து இவை ஸ்ரீ சடகோபரவதரித்தருளின திருக்குருகூர் ப்ரதேசத்திலே இருக்கவேணுமென்றுதேறி, உடனே திருநகரிக் கெழுந்தருளி ஆழ்வாரையும் பொலிந்துநின்ற ஆதிப்பிரானையும் சேவித்து அங்கே ஸ்ரீமதுரகவிகளுடைய சிஷ்யபரம்பரையில் வந்தவரான ஸ்ரீபராங்குசதாசரென்பவரைச்சேவித்து இவ்விடத்தில் திருவாய்மொழியை யோதினவர்களும் அந்த ஸ்ரீகோசமு முண்டோவென்று கேட்டருள, அவர், திருவாய்மொழியும் மற்றுமுள்ள திவ்ய ப்ரபந்தங்களும், ப்ரமுஷிதமாய் நெடுங்கால மாயிற்றென்றும் தமது பரமாசார்யரான ஸ்ரீ மதுரகவிகள் திருவாய்மலர்ந்தருளிய "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்னும் திவ்ய ப்ரபந்த மொன்றுமாத்ரமே இருக்கின்றதென்றும் சாதித்து அதையும்தர்சிப்பித்து இதை ஆழ்வார் திருமுன்பில், ஏகாசனத்திலிருந்து ஏகாக்ரசித்தராய் அவர் திருவடிகளையே த்யானித்துக்கொண்டு நியமத்துடனே பன்னீராயிரம் உரு அநுசந்தித்தால் ஆழ்வார் ப்ரஸன்னராவாரென்று நமதாசார்யரருளிச்செய்திருக்கிறாரென்ன; இவர் தண்டன்ஸமர்ப்பித்து அதை அடியேனுக்கு ப்ரஸாதித்தருள வேண்டுமென்று விண்

ணப்பஞ்செய்ய; அவரு மிகவு முகப்புடனே யோதுவித்தருள; இவரும் ஓதித் திருப்புளியாழ்வா ரடியிலிருக்கும் ஆழ்வார் திரு முன்பில் ஏகாசனத்திலிருந்து ஏகாக்ரசித்தராகி, நியமத்தோடே பன்னீராயிரமுரு அநுசந்திக்க: "ஆஸ்திகோ தர்மஶீலஶ்ச ஶீலவாந் வைஷ்ணவஶ்ஶுசிஃ—கம்பீரஶ்சதுரோ தீரஶ்ஶிஷ்ய இத்யபிதீயதே" என்கிறபடி பரலோகமும் அதிலிருக்கும் பரனொருவனும் உண்டென்னு மெண்ணத்தை யுடையவனும், சத்கர்மத்தில் மனோவ்ருத்தி யுடையவனும், விஷ்ணுபக்தி யுடையவனும், சுத்தாஹாரமுடையவனும், ஆசார்யமுகேன லபித்துக்கொண்ட பரமார்த்தங்களை உயிர்வாழ்க்கைக் குறுப்பான ஐசுவர்யமாகப் பாவித்துச் சிதறுதுகாப்பவனும் கிங்கரவ்ருத்தியில்அபிருசியுடையவனும், ஸம்ஸார தாபத்தில் சலியாமையை யுடையவனுமான ஒருவனையே சிஷ்யனாக ஆதரித்துப்போரலாகுமென்று சொல்லியிருக்கிறபடியே ஆஸ்திக்யாதி குணலட்சணங்களை யுடையரான இம்மஹாநுபவருக்குப் பெரியபிராட்டியார் நியோகேந ஆழ்வார் ப்ரஸன்னராகி, அஶரீரி வாணி சொல்லுமாபோலே திருவாய்மலர்ந்து ஏன்காணும் நம்மைக்குறித்து இப்படி உபாசியாநின்றீர்? என்று கேட்டருள; இவர் திருவாய்மொழி முதலான திவ்ய ப்ரபந்தங்களை அடியேனுக்கிரங்கி யருளவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய; ஆழ்வார் பட்டுத்திரையிடும்படி நியமித்தருளித் திரைக்குள்ளிருந்து ப்ரீதியுடனே ஸர்வேஶ்வரன் தமக்கு மயர்வற மதிநல மருளினாற்போலே இவருக்கு "திவ்யந்ததாமி தேசக்ஷுஃ" என்கிறபடியே திவ்யஜ்ஞான சக்ஷுஸ்ஸை ப்ரஸாதித்தருளித் தாம் திருவாய்மலர்ந்தருளிய ப்ரபந்தங்களோடு மற்றை யாழ்வார்களருளிச்செய்த ப்ரபந்தங்களையும் பூர்த்தியாக வருளிச்செய்து கொண்டு வர; இவர் பட்டோலை பிடித்து ஏறியருளப் பண்ணிக்கொண்டு வருகையில், "பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர் சாபம் - நலியு நரகமு நைந்து நமனுக்கிங் கியாதொன்று மில்லை - கலியுங் கெடுங்கண்டு கொண்மின் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல் - மலியப் புகுந்திசை பாடி யாடி யுழிதரக் கண்டோம்" என்னு மித்யாதி பாசுரங்கள் வர; இவர் விஸ்மிதராய், ஆழ்வார் திருவடிகளில் தண்டனிட்டு இப்படி அவதாரம் பண்ணப் போகின்றவரை இன்னாரென்றருளிச் செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்க; ஆழ்வாரும் க்ருபையுடையவராய், இந்த ப்ரபன்ன குலத்திலொரு மஹாநுபாவர் இராமாநுஜர் என்னும் அபிதானத்தா லவதரிக்கப் போகின்றார்; அவராலே நாடடங்க நாரணற்காளாகி வாழப்போகிறது காணென்ன; இவர் "பயனன்றாகிலும் செயல் நன்றாகத்

திருத்திப் பணிகொள்வான்" என்கிற பாசுரத்தை இயலுமிசை யுமாக ஏறிட்டு ஆழ்வாரைப்பாடி யுகப்பித்துத் தேவரீர் பூதபவி ஷ்யத் வர்த்தமான காலத்ரய பர்யவஸாயி ஜ்ஞானமுடைய ஸர் வக்ஞராகையாலே அறியப்போகாத தொன்றுமில்லாமையால், அந்த வ்யக்தியினுடைய ஸம்ஸ்தானத்தைத் தேவரீர் பாவித்துக் காட்டி யருள வேணுமென்று ப்ரார்த்திக்க; அன்றிராத்ரியில், ஆழ்வார் க்ருபாமாத்ர ப்ரஸன்னாசார்ய ரென்கிற இராமாநுஜ வ்யக்தியை த்வாதசோர்த்வ புண்ட்ர-காஷாய-திருப்பரிவட்ட த்ரிதண்டாலங் க்ருதராய், ஆஜானபாஹுவையும், நிரவதிக தேஜோரூபமான திருமுக மண்டலத்தையும் அதனிரு புறத்தி லும் "மகரஞ்சேர்குழை யிருபா டிலங்கியாட"த் தீர்க்கமாய்த் தரித்துக்கொண்டு, இவரிருக்குமிடத் தெழுந்தருளி, க்ருபாப்ர வாஹஸூசகமான முறுவலும் கமலக் கண்களுமாகச் சேவை சாதித்தருளி, ஸ்ரீமந் நாதமுனிகளே? அந்தவ்யக்தி யிருக்கும் படி இதுவேகாணீர் என்ன; இவருணர்ந்து ஆழ்வார் திருவடி களிலே சாஷ்டாங்கமாய்ப் படிந்து சேவித்துச் சுவாமீ! தேவரீ ருடைய ஸம்ஸ்தானத்திலும், தேவரீர் பாவித்தருளின ஸம்ஸ் தானம் அடியேனுக்கு மிகவும் ஆகர்ஷமாக விருக்கின்றதென்று விண்ணப்பஞ் செய்துநிற்க, ஆழ்வார் அழகிதுகாண் நீர்சொல் வது? இந்த வியக்கத்தியிலன்றோ! உபய விபூதியிலுள்ளாரும் விபூதிநாயகனை ஈஸ்வரனும் மேல்விழப்போகிறதென்று திரு வாய்மலர்ந்தருளினார். அதன் பின்பும் இவர் ஆழ்வாரை யுகப்பி த்துஇந்தபவிஷ்யத் ராமாநுஜாசார்யவிக்ரஹத்தை அடியேன் நித் யமாகவனுபவித்துக்கொண்டிருக்க விரகேதென்று தளர்ந்து விண் ணப்பஞ்செய்ய, ஆழ்வாரும் ஆக்கித்தரக்கடவோமென்று திரு வாய்மலர்ந்து எழுந்தருளிவிட்டு, மறுநாளிராத்ரியில், ஸ்வவிக்ர ஹத்துக்குக் கடவ சில்பவம்சரிடத்திலே ஸ்வப்நமுகேனவெழுந் தருளிப் பவிஷ்யத் ராமாநுஜாசார்ய விக்ரஹ வைலக்ஷண்யத்தை வகுத்துக் காட்டியருளி, நாளை நம் திருப்புளிக்கீழேவந்து இப் படியே ஸர்வாவயவ பூர்ணமாகச்சமையுங்கோளென் றருளிச்செ ய்ய; சில்பரும் விடிந்தவாறே, ஆழ்வார்சந்நிதிக்கெழுந்தருளி நிய மனமிருந்தபடியே, சீரசோதன பூர்வமாக ஆஹார நித்ரையின் றிக்கேயிருந்து அவ்விக்ரஹத்தை முடித்துக்கொடுக்க; ஆழ்வார், அதிலொரு சக்திவிஷயத்தை யதிஷ்டிப்பித்தருளி ஸ்ரீமந் நாத முனிகளை அழைத்து உம்முடைய அபேக்ஷிதத்தை இதோதலைக்

கட்டிவைத்தோம் கண்டீரோ வென்று அதை ப்ரஸாதித்தருளி, இதை நந் தர்சனத்துக்காக அடியிட்டு வைத்தோமாகையாலே இதை நம்முடைய அவயவமாகநினைத்துப்போரும் உம்முடைய குலத்திலொருவ ரவதரித்து இதைச் சாக்ஷாத் கரிக்கப் போகிறு ரென்றருளிச் செய்ய; இவர் ஆழ்வார் சேவைக்குத்தோற்று "யஸ்வாபகாலே கருணாகரஸ்ஸன் பவிஷ்யதாசார்ய வரஸ்வரூ பம் ஸம்தர்ஶயாமாஸமஹாநுபாவம் தங்காரிஸூநுஞ் ஶரணம் ப்ரபத்யே" என்று ஸ்தோத்ரம்பண்ணி நாலாயிரங்களையும் ஏறி யருளப் பண்ணிக்கொண்டு ஆழ்வார் திருவடிகளிலே கைங்கர்ய நிரதராய் நித்யவாசஞ் செய்துகொண் டிருந்தார்.

இப்படி யிருக்கையி லொருநாளில் மன்னனார் இவருடைய ஸ்வப்நத்தி லெழுந்தருளி, நீர் நம்முடைய ஸந்நிதியில்வந்து திவ்யப்ரபந்தங்களை ஒரு உருச்சொல்லலாகாதோ என்றுகேட்ட ருள; இவர் மறுநாள் ஆழ்வாரையும்பொலிந்துநின்ற பிரானையும் ஸேவித்துநின்று, இச்செய்தியைவிண்ணப்பஞ்செய்தவராக; ஆழ் வார் அர்ச்சகமுகேன, நீர்மன்னனார்திருவுள்ளப்படியே வீரநாரா யணபுரத்திற்குப்போய், இப்ரபந்தங்களைச் சமதமாத்யாத்மகுண ங்களையுடையரான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அறியக்கற்று வல்லா ராம்படி ஓதுவியுமென்றுநியமித்துத் தீர்த்தப்ரஸாதங்களையருளி விடைகொடுத்தருளினார்; அனந்தரம், இவர் ஆழ்வாராலருளப் பட்ட பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தை அதி வைபவத்துடனே மங்கள வாத்யங்கள் தொடக்கமான பற்பலசின்னங்களைப் பரி மாறி எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வழியிலுள்ள திவ்யதேசங் களைச்சேவித்து அவ்வவற்றின் ப்ரபாவத்தைவெளியிடுகிற திவ்ய ப்ரபந்தாநுசந்தானத்துடனே வீரநாராயண புரத்தேறவந்து, மன்னனாரைத் திருவடி தொழுதுநின்று, தாம் ஆழ்வாரா லபிமா னிக்கப்பட்டபடியை விண்ணப்பஞ் செய்ய; மன்னனாரும் மிகவு முகப்புடனே தன்னுடைய நிஜவுருவை ஸ்வப்நமுகேன இவருக் குக்காட்டியருளிநாதமுனிகளே! சம்சாரிகளை யுஜ்ஜீவிப்பிக்கைக் காக நாம் கரண களேபரங்களைக் கொடுத்தும், வழிபடுவதற் குறுப்பான சாஸ்திரங்களைத் தந்தும் அவற்றின் பொருளை யறிவிப்பதற்கு நாமே வந்து பிறந்து அறியாதன வறிவித்தும் செய்யாதன செய்துகாட்டியும் கார்யகர மாகாதொழியப் பின்பு ஆழ்வார்களை அவதரிப்பித்துத் திவ்ய ப்ரபந்தங்களைச் செய்ய, அவ்வழியில்கார்யகரமாயிற்று; இப்படிப்பட்டப்ரபந்தங்கள் ப்ர

முஷிதமானால் நாம்பார்த்திருக்கமுடியுமோ? இனிநீர் இவற்றை இயலுமிசையுமாக்கி உலகத்தில்ப்ரவஸித்தமாம்படி பண்ணக்கடவீ ரென்று நியமித்தருள; இவர் அப்படியே தம்முடைய மருமக்களான கீழையகத் தாழ்வானையும் மேலையகத் தாழ்வானையும் † திருக்கண்ண மங்கையாண்டானையும் அழைத்தருளி, ஆழ்வார் தம்மைப் பணிகொண்டு திவ்ய ப்ரபந்தங்களைக் கடாக்ஷித்தபடியையும், மன்னனார் அவற்றை இயலுமிசையு மாக்க வேணுமென்று நியமித்திருப்பதையு மறிவித்து, இன்கவிபாடும் பரமகவிகளாலே "செஞ்சொல்லாலெடுத்த தெய்வநன்மாலையாக" விருக்குமிவற்றைத் திவ்யகானத்திலேசேர்த்துப்பாடுவோம் வாரீரென்று கூட்டிக்கொண்டு (ஸ்ரீவேதவ்யாசபகவான் வேதங்களை உதாத்த அநுதாத்த ஸ்வரித ப்ரசயயுக்தங்களாக உச்சரிக்கலாம்படி செய்தாற்போல) திவ்ய ப்ரபந்தங்களைத் திவ்யமான கானங்களிலேயடைத்து, இயலுமிசையுமாக்கி அவர்களுக்குச் சிக்ஷை சொல்லிப் பாடுவித்தருள; அனந்தரம் அருளிச்செயல்கள் ப்ரவஸித்தமாயின.

---

† ஸ்ரீமந்நாதமுனிகளுடையசிஷ்யர்களில் ஒருவரான, திருக்கண்ண மங்கையாண்டானுடையவைபவத்தை இங்கே ஸ்ரீபட்டர் நஞ்ஜீயருக்குத் திருவாய்மலர்ந்தபடி யெங்ஙனேயென்னில்:—

ப்ரபன்னாம்ருதம்:—

தனியன்:—

"ஸ்ரீர்வைகுண்டலோகாதத ஹரிநியமத்க்ருஷ்ணபத்ரேஜநித்வா—க்ஷேத்ரே லக்ஷ்மீபதிரிதிவிதிதோ நாதமுன்யாச்ரயாட்ய: கர்த்தும்ரூபம் ப்ரபத்தே: ஸ்படித அதந்நிஜம் ஸாவமுத்வஸிருஜ்யசாங்யம்-முத்வா ஸக்தாச யாங்க்ரி ஸஹதனுரயதே நிர்ஸராபச்ய தாம்ஸ்த:" என்கிறபடி,

திருக்கண்ணமங்கையில் வாழ்க்கைப்பட்டிருந்த, ஸ்ரீமந் நாதமுனிகளுடைய உடன் பிறந்தாளுக்குப் புத்ரராக, பராபவவருஷம் ஆவணிமாஸம் திருவோண நக்ஷத்ரத்தி லவதரித்து; லக்ஷ்மீநாத ததாசார்யரென்கிற திருநாமம்பெற்று யௌவனம் வந்தவாறே க்ருஹஸ்தாசிரமத்தை வஹித்து, அந்தக்கிராமத்துக்கதிபதியாகித் "தனத்தாலுமேதுங்குறைவிலே"னென்கிறபடியே, சம்பத்தில் குறைவற்றவராயிருந்து ஆண்டுகொண்டிருந்த காரணத்தால் திருக்கண்ணமங்கையாண்டான் என்கிற திருநாமத்தையும்பெற்று ஸர்வசாஸ்த்ர ஸம்பன்ன ஆசார ஸுசீலஸஜ்ஜநனுமதராய் ப்ரகாசித்துத் தமது மாதுலராகிய ஸ்ரீமந் நாதமுனிகளுடைய திருவடிகளையாசிரயித்து, ஜ்ஞானபக்தி வைராக்யாதி சத்குணபரிபூர்ணராய், த்ரவிடாம்நாய நிரதராகி, ஸ்ரீ மதுரகவிகளைப்போலே வேதாந்த திவ்ய

அனந்தரம், அந்த ராஜ்யத்திற்கு அரசனாயிருந்த சோழன் வாசலிலே தேவகானம் பாடுவா ளொருத்தியும் மனுஷ்யகானம் பாடுவா ளொருத்தியுமான இரண்டு வாரஸ்த்ரீகள் தங்களில் தேவகான முத்க்ருஷ்டமென்று ஒருத்திசொல்ல; அஃதில்லை, மனுஷ்யகானமே உத்க்ருஷ்டமென்று மற்றொருத்தி தகைய; அதனால் விவாதமதிகரித்து, இராஜனிடத்திற்போக; அவனும் அனேகவித்வான்களைச் சேர்த்து மத்யத்தில் அவ்விருவரையும் பாடுவித்து, மனுஷ்யகானம் பண்ணினவளை மாத்திரம் ஸன்மானிக்க; முன்னவள் மிகவும் மனம்நொந்து, தான்படுகிறபாட்டையும் கானத்தையும் தேவர்களறியு மத்தனையே யல்லது மனுஷ்யர்களறிந்தது அன்றென்றெண்ணி சன்னிதிகள் தோறும் புக்குப் பாடிக்கொண்டுவந்து மன்னனார் கோயிலில் இவர்முன்னேபாட; இவரதைக்கேட்டுகந்துகொண்டாடி, அவளுக்கு மன்னனாருடைய தீர்த்தப்ரஸாதமும் திருமாலை திருப்பரிவட்டமும் ப்ரஸாதிப்பித்தருள; அவளிவரடியில் தண்டன் ஸமர்ப்பித்து விடைகொண்டு

ஸாரக்ஞராய் பஞ்சமோபாய நிஷ்டையைப்பற்றி மோக்ஷத்தில் ஆஸக்தியுடையவராய், ஸ்ரீ பக்தாங்க்ரிரேணு பட்டநாதர்களைப்போலே திருக்கண்ணமங்கை பக்தவத்ஸலப்பெருமாள் திருவடிகளில் அனவரத துளஸீதாம கைங்கர்யநிரதராய், அநவரதபகவத் தாஸ்யரஸிகராய், சரமசுலோகார்த்தம் நெஞ்சில் தேங்கி, சம்ஸாரசம்பந்தபரித்யாக த்ருடாத்யவஸாயத்தால் தினதினப் பிரவர்த்தமான கைங்கர்ய ப்ரவீணரா யிருக்கையில், ஒருநாளளவில், இரண்டு சூத்ரர்கள் கட்கபாணிகளாய்த் தாங்கள் வளர்த்துக்கொண்டிருந்த நாய்களைக் கூட்டிக்கொண்டு ஒருகார்யமாய்ப்போய் வருகையில், பக்தவத்ஸலன் சந்நிதிவெளிப்புறத்தில், தங்கள் பாதரக்ஷகளைவிட்டு அவற்றிற்கு நாய்களைக் காவல்வைத்துவிட்டுச் சன்னிதிக்குள் போய்ப் பக்தவத்ஸலனைச் சேவித்து மீளுந்தறுவாயில், அந்த நாய்களில் ஒன்று, மற்றொன்றின் யஜமானனுடைய பாதரக்ஷையைக் கடிக்க, அதற்குக் கோபமுண்டாய்ச்சீறி மேல்விழ, ஒன்றுக்கொன்று கலஹப்பட்டுக் கடித்துக் கொண்டதால் ஒருநாய்சாக; அதையுடையவன்கொன்றநாயை யடிக்க அதுவும்சாக; அதையுடையவன் இவன்மேல்விழ, இருவரும்சீறி, அன்யோன்ய கட்காகட்கிப்ரகாரத்தால் (சுந்தோப சுந்தாளிருவரும் ஹதமானாற்போல) வெட்டிக்கொண்டு மாய்ந்துவிட; அவ்விடத்தில் க்ராமவாசிகள் சூழ்ந்து வேடிக்கைப் பார்த்திருந்தார்கள். அப்போது அவ்வழியாய்ப் பல்லக்கிலேறி வந்துகொண்டிருந்த திருக்கண்ணமங்கையாண்டான், ஸ்ரீ பாதந்தாங்கியை யழைத்து நிஷ்காரணமாய் இவ்விடத்திலிப்படி பெருந்திரளுண்டாகைக் கடியென்னென்று அறிந்துவரவிட; அவன்போயறிந்துவந்து செய்தியை விண்ணப்பஞ் செய்ய; அதைக்

அரசனிடம்போய் நான்பாடுகிற தேவகானத்தை யறிவாரொருவர் வீரநாராயணபுரத்தில் மன்னனார் கோயிலி லிருக்கும் ஸ்ரீமந் நாதமுனிகளென்கிற பெரியவரேதவிர உலகில் மற்றொரு மில்லை யென்றாள்; அரசன் உடனே இவரை எழுந்தருள வேண்டுமென்றழைத்துவரவிட; இவர் திருவாய்மொழிமுதலான திவ்ய ப்ரபந்தங்களைத் திவ்ய கானத்திலடைத்திருப்பதையும் அவற்றின் வைபவத்தையும் இராஜகோஷ்டியி லறிவிக்கவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி யிருந்தாராகையாலே, உடனேயெழுந்தருளி இராஜனால் பூஜிக்கப்பட்டுத் திவ்யாசனத்தின்மீதேறியருளியிருக்க; அவன் அதிக வாதரத்துடனே இவருக்குத் தண்டனிட்டு, இவள் பாடுகிற தேவகானத்தைத் தேவரீர் அறிவீரோ வென்று கேட்டவனாக; இவர் மனுஷ்யகானம் பாடுகிறவளையும் தேவகானம் பாடுகிறவளையும் பாடச்செய்து கேட்டருளி அரசனைப்பார்த்து, அவள் பாடுகிற மனுஷ்யகானம் உங்களுக்குத் தெரியும் இவள் பாடுகிற தேவகானம் எனக்குத் தெரியுமென்ன; அரசன் தேவரீரறிவீரென்னுமிடம் நாங்களறியும்படி யெங்ஙனேயென்ன?

கேட்டு ஆச்சர்யப்பட்டுச் சற்றுநேரம் தீர்க்கமா யாலோசித்து க்ஷாத்ரப்ரக்ருதிகளாய், மனுஷ்யசேவகா வ்ருத்திசெய்து ஜீவிப்பவர்களாய்த் தர்மாதர்ம விவேக சூன்யர்களாயிருக்கு மிம்மனிசர்களுக்குத் தொண்டுபட்டநாய்களுக்காக வளர்த்த வாத்ஸல்யத்தா லிவர்களு முயிரிழந்தார்களானால் அவ்யாஜபந்துவாய், அகிலார்த்தவேதியாய், அமிதக்ருபாஸிந்துவாய், அகிலதர்மா தர்மஸூக்ஷ்ம விவேகியாய், ஸர்வக்ஞனாய், ஸர்வஜகதீசனாய்; ஸமஸ்தஜகத்ரக்ஷகனாய், ஸர்வேச்வரனாய், ஸகலஜகன்மாதர புருஷகார பூதையான பெரிய பிராட்டிக்குத் தனிக்கேள்வனாய்,ஸர்வலோகசரண்யனாயிருக்கிற ஸ்ரீமந் நாராயணனுக் கிங்ஙனந்தொண்டுபட்டால் அவனுடைய க்ருபை யெவ்வளவா யிருக்கலாமோ வென்று; ந்யஸ்தபரராய்த் தண்டிகையை விட்டுத் தொப்பென நிலத்திற் குதித்து அனுஷ்டானாதி சமஸ்த க்ரியைகளையும் ஸவாஸனமாக விட்டுத் திகம்பரராய், ஜானுபாணிகளால்தவழ்ந்துகொண்டு பக்தவத்ஸலன் சந்நிதிக்குட்போய், க்ராமஸிம்ஹம்போலே படுத்திருந்து, நித்யமும் க்ராமத்துக்கு வெளிப்புறத்திற்போய் ஜலத்தை வாயாற்பருகி உள்ளழுக்கைக்கழுவி வெளியிற் பாயவிட்டுப் பசுவைப்போலே ஜலத்திற்படிந்து நீராடிக்கரையேறித் தௌதாதிகளின்றிக்கே தவழ்ந்துகொண்டு சந்நிதிக்குள்ளேவந்து பக்தவத்ஸலனுக்குத் தண்டன்ஸமர்ப்பித்து வகுளவ்ருக்ஷத்தடியிலே யிருந்து (பக்தவத்ஸலன் இவர்விஷயத்தில் மஹா ப்ரீதனாகி நித்யப்படி அர்ச்ச

இவர் நூற்றுறு தாளங்களைக்கொண்டு வரச்செய்து, சேர ஒத்தச் சொல்லி, அவ்வோசையைக் கேட்டு அது இவ்வளவு நிறையுள் ளது, இது இவ்வளவு நிறையுள்ளதென்று ஒவ்வொன்றினுடைய நிறையையு மருளிச்செய்ய; அவற்றை அரசனும் தனித்தனியே நிறுத்துச் சோதித்து அவற்றில் முந்திரி நிறையாவது ஏற்றம் குறைவில்லா திருந்தபடியைக்கண்டு ஆச்சர்யப்பட்டுஇவருடைய ஸ்ரீபாதத்தில்தண்டனிட்டுப் பஹுத்ரவியங்களைச் சமர்ப்பிக்க வர; இவர் சதுர்முக-பசுபதி-சதமக ப்ரப்ருதி பதங்களையும்நிரா கரித்திருக்கும் நிஸ்ப்ருஹராகையாலே அவற்றை வேண்டாவெ ன்று அரசனை யாசீர்வதித்து மீண்டு வீரநாராயணபுரத்துக் கெ ழுந்தருளி மன்னனார் திருவடிகளில் கைங்கர்ய நிரதராய் வாழ்ந் துகொண்டிருக்குங்காலத்திலிவர் ஸ்ரீபாதத்தில் ஆஸ்ரயித்தவர்க ளாய் "ஶரீரம் வஸுவிஜ்ஞாநம் வாஸ: கர்மகுணாநஸூந்-குர்வர் த்தந்தாரயேத்யஸ்து ஸஶிஷ்யோ நேதரஸ்ஸ்ம்ருத:" என்கிறபடி சரீர-அர்த்தகாம்ய-சித்தவிருத்யாதிகள் யாவும் ஆசார்யனளவி லே விட்டுவைக்குஞ் சுகுணசிஷ்யர்களான உய்யக்கொண்டார்-குருகை காவலப்பன்-நம்பிகருணாகரதாசர்-ஏறுதிருவுடையார்-

---

கரையேவி இவருக்குத் திருமண்ணிடுவித்து ப்ரஸாதமனுப்ப) அவன் ஸ்வீகரித்த சத்சுகர பதார்த்தங்களையே ஸ்வீகரித்து, நிச்சலசித்தராய் மௌனியா யிருந்துவிட்டார். இப்படியிருக்கையில், அக்ரஹாரவாசிகளி ல் சிலர் இவரைப்பார்த்து ஐயோ! மஹாபுத்திசம்பன்னரும் சதாநிஷ்ட ரும் விலக்ஷண வைஷ்ணவோத்தமருமாயிருந்த இவர் எதுக்கிப்படியான தோ வென்றனுதபிப்பாரும், சிலர் ஐயோ! இவருடைய துர்ஜ்ஜயமான கர்மமிருந்தபடி இதுவோவென்று சொல்வாரும், சிலர் இவருக்கிப்படி நேர்ந்தவிதத்தை ஜனனமரணதுக்க சௌக்யாதிகளுக்கு நிலமான இந்த ஜகத்துக்குக் குலாலனைப்போலே நிமித்தகாரணனாய் த்யுமணி தீபத்தை ப்போலே சாக்ஷிபூதனாயிருக்கிற ஈஶ்வரன்தா னறிந்திருப்பான் என்று கூறுவாரும், சிலர் இவருடைய வ்யாபாரத்தை நன்றாகப் பார்த்து இவரு க்கு ஜ்ஞானபக்தி வைராக்யாதிகள் தலைமண்டை கொண்டுவிட்ட படி யால் நிர்ப்பரசித்தராய் நிர்ப்பயராயிருக்கிறாரென்று சொல்வாரும், சிலர் இவரை அற்பமாய்நினைக்கலாகாது, இவர் இதர வ்யாபாரங்களைவிட்டுப் பக்தவத்ஸலனையே கதியாகவடைந்து அவனுடைய தீர்த்தப்ரஸாதங்களு க்கே எதிர்பார்த்துக்கொண்டுஉலகருடைய சஹவாஸத்தை யொழித்துத்

வானமாமலை தெய்வநாயகஆண்டான் - உருப்பட்டூ ராச்சான் பிள்ளை-சொக்கத்தூராழ்வான்-பிள்ளை கருணாகரதாஸர் - மேலையகத்தாழ்வான்-கீழையகத் தாழ்வான் என்கிற பதின்மருக்கும் "அஹோரத்வயஸ்ய மாஹாத்ம்யம் அஹோவீர்ய மஹோபலம் - மந்த்ரரத்நம்ஸமுபகரம் வேதஸாரம்ஸநாதநம்" என்கிறபடி மந்த்ரரத்நமென்று சிலாகித்துச் சொல்லப்படுகிற த்வயார்த்தத்தை ப்ரஸாதித்துத் திருவாய்மொழி முதலிய திவ்ய ப்ரபந்தங்களை யோதுவித்து, வேத சாஸ்த்ரங்களை யதிகரிப்பித்து, ரஹஸ்ய த்ரய ஸாரார்த்தமாய்ச் சகல ஜகத்காரணபூதமான ஸ்ரீ புருஷ நிர்ணயத்தையும் ந்யாஸதத்வத்தையும் அருளிச்செய்து, ஆழ்வாருடைய கரியகோலத் திருவுருவைத் தியானித்துக்கொண்டு யோகத்தி லெழுந்தருளி யிருந்தார்,

இப்படியிருக்கும்நாளையில், அரசன் இவருடையயோகவைபவத்தைக்கேட்டு, அங்கேறவந்து, மன்னனுரைச் சேவித்துத் தானும் ஸ்த்ரீகளுமாகவந்து, இவர் யோகத்திலிருக்கும்படியைக் கண்டு ஆச்சர்யமடைந்து, மீண்டுபோகிறவளவில், இவர் "திருவுடை மன்னரைக் காணிற் றிருமாலைக் கண்டேனே" என்கிறபடியே அவர்களை க்ருஷ்ணனும் கோபிமார்களுமாக வெண்ணிக்கொண்டு மௌனமாயிருக்கையால் ஏதோசில அற்புதங்களை இவரால் காணவிருக்கிறோ மென்பாரும், சிலர் ஒன்றுஞ் சொல்லாமல் இவர் திருவடிகளே தங்களுக்கு உத்தாரகமென்று நினைத்துத்தண்டனிட்டுத் திரிவாருமாக விருந்தார்கள். இவ்வண்ணம் சிலகாலங் கழிந்தவாறே, இவருடைய ப்ரபாவம் தேசமெங்கு மெட்டி அவ்வவ் விடத்திருந்தும் அநேகர் வந்து தர்சித்து க்ருதார்த்தராயினார்கள்.

அனந்தரம், பெருமாள் திருக்கண்ணமங்கை ஆண்டானை ஒருநாளளவில் நோக்கி உமக்கு நாளையதினம் நம்முடைய மேல்வீடுதரப்போகிறோமென்று திருவாய்மலர்ந்தருளி அன்றிராத்திரியில்தானே அந்தத் திவ்யதேசத்திலுள்ள அநேக சத்புருஷர்களுக்கு ஸ்வப்நங்காட்டி, நம்முடைய அந்தரங்க பக்தரான திருக்கண்ணமங்கை யாண்டானுக்குநாளைய தினம் அபிஜின் முஹூர்த்தத்தில் மோக்ஷாத் ஸாஹதானம் க்ருபை செய்யப்போகிறோமாகையால் நீங்களெல்லாரும் வந்துசேவித்து க்ருதார்த்தராகவேண்டியதென்று வாத்ஸல்யத்தாலே நியமித்தருள; மறுநாள் ஆபாலவ்ருத்தர்க ளெல்லாரும் சந்தோஷத்துடன் சந்நிதியில் வந்துசேர்ந்திருந்தார்கள். அப்போது ஆண்டானும் பூர்வம்போலே தேகசோதகராய் வந்து சந்நிதியை ப்ரதக்ஷிணஞ்செய்து த்வார பாலகாளுக்குத் தண்

அவர்கள் பின்னே கங்கைகொண்ட சோழபுரத்தேற வெழுந்தருளாநிற்க; அதுகேட்டு உய்யக்கொண்டார் குருகைகாவலப்பன் உள்ளிட்டமுதலிகளடையப் பின்தொடர்ந் தெழுந்தருளி, இவரைக் கங்கைகொண்ட சோழபுரத்தில்கண்டு தேவரீரிப்படி செய்யலாகுமோவென்று விண்ணப்பஞ்செய்ய; அவர்களைக்ருஷ்ணனும் தோபிமார்களுமாக நினைத்து வந்தேனென் றருளிச்செய்து மீண்டெழுந்தருளினார். பின்னையுஞ் சிலநாள் கழிந்தவாறே, ஒருநாளளவில் அரசன்வந்து மன்னனாரைச்சேவித்துமீண்டுபோகையில் தன்னுடைய சாமந்தன் தலைமேலடியிட்டு ஆனைக் கழுத்தின்மீதேற, அதை இவர்கண்டுஸர்வேஶ்வரன் ப்ரஹ்மாதி தேவர்கள் தலைமீது அடியிட்டுப்பெரியதிருவடி மேற்கொள்ளும்படி இதுவாகாதோவென்று மோஹித்தா ரென்பதும் ப்ரஸித்தம். அனந்தரம்குருகைகாவலப்பனுக்கு யோகக்ரமத்தையருளிச்செ

டன்ஸமர்ப்பித்து உள்ளே ப்ரவேசித்துச் சுவாமி திருவடிகளை த்யானித்துச் சமீபத்திற்போய் "அதநாதகுரூத்தம்" என்றும் "அஸ்மதாசார்ய" என்று முச்சரித்தார்; அவ்வேளையில், சஜ்ஜனங்களெல்லாரும் அவ்வுச்சாரணையைக் கேட்டுப் பஹுகாலமாய் வாய்திறவாயல் மௌனியாயிருந்தவர் இப்படி ஸர்வருங்கேட்கும்படித் திருவாய் மலர்ந்ததைப் பற்றி அற்புதமடைந்து இமைகொட்டாமல் இவரையும் பெருமாளையுமே பார்த்திருந்தார்கள்; அப்போது பக்தவத்ஸலன் திருவடிகளில் மஹத்தான வொளியோடுங் கூடிய ஒரு மின்னலுண்டாக, அதைக்கண்கொண்டுபார்க்க ஒருவருக்குங் கூடாமையாய்க் கண்களைமூடிக்கொண்டு சிரஸின்மேல் கைகளைக்குவித்துக்கொண்டு பக்தவத்ஸலா! பக்தவத்ஸலா!! வென்று அடுத்தடுத்துப் பெருமிடறுசெய்துநிற்க; அவ்வளவிலே பக்தவத்ஸலன் ஆண்டானைத் திருமேனியோடும் மேல்வீட்டுக்கனுப்பியருளிப் பழையபடியிருந்தான். அதன்பின்பு அனைவரும்கண்களைத்திறந்து பார்த்துஆண்டான் மாயமானதைக் கண்டு பக்தவத்ஸலன் றிருவடிகளை அத்யாதரத்துடன் பற்றி வாழ்ந்திருந்தனர்களென்றும், கண்ணன் அன்று திருத்தேர்தட்டிலேயருளிச்செய்த சரமசுலோகத்தின் அர்த்தாநுஸந்தானமிருக்கும்படியைப் பக்தவத்ஸலன் இன்று திருக்கண்ணமங்கையில் ஸர்வருஞ்சுலபமா யறிந்துகொள்ளும்படிஇவர்மூலமாகப்ரகாசிப்பித்தானென்றும் ஸ்ரீபட்டர் நஞ்ஜீயருக் கருளிச்செய்தார்.

திருக்கண்ணமங்கையாண்டான் திருவடிகளே சரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

யது, உய்யக்கொண்டாரையழைத்துநீரும்யோகரஹஸ்யத்தைஅ
ப்யஸியுமென்ன; அவர் பிணங்கிடக்க, மணம்புணரலாமோ? இந்
தசரீராவஸாநதசையிலே அநுபவிக்கவமையுமென்றுவிண்ணப்ப
ஞ்செய்ய; ஆகில் நீர் சாஸ்த்ரத்தையும் திருவாய்மொழிமுதலான
திவ்யப்ரபந்தங்களையும்ப்ரவர்த்திப்பியுமென்றருளிச்செய்து, தம்
முடைய புத்ரராகிய ஈஶ்வரமுனிகளைப் பார்த்து, உமக்கொரு
குமாரருண்டாகப்போகிறார், அவருக்குயமுனைத்துறைவரென்று
திருநாமஞ்சாற்றுமென்று அருளிச்செய்து, உய்யக்கொண்டாரை
அழைத்து ஆழ்வார் தமக்குப்ரசாதித்தருளின பவிஷ்யதாசார்ய
விக்ரஹத்தைக் காட்டிக்கொடுத்து இதை ஈஸ்வரமுனிகள் குமார
ருக்கு நாம் விரும்பின விஷயமென்று சொல்லித் தஞ்சமாகக்
காட்டிக்கொடுமென் றருளிச்செய்து, அனந்தரம் குருகை காவ
லப்பனையு மழைத்துங்களுக்கு நாம்சொன்ன தர்ஶன தாத்பர்ய
யோகரஹஸ்யார்த்த விசேஷங்களை யமுனைத்துறைவருக் குப
தேசியுங்கோளென்று நியமித்தருளி, முன்போலவே யோகத்தி
லிருந்து அனந்தர மொருநாளில் அரசன் ஸபரிகரனாய் வேட்
டைக்குவந்து மீண்டுபோகா நிற்கச்செய்தே; இவருடைய பெண்
பிள்ளைகள்வந்து ஐயா! நம்மகத்திலே ஒருகுரங்கும் இரண்டு
வில்லிகளும் ஒருபெண்பிள்ளையுமாக வந்து நாதமுனிக ளெங்கே
யென்று தேடிப்போனார்களென்ன; அப்பொழுதே இவர் "அக்
ரதஃ ப்ரயயௌராமஸ் ஸீதாமத்யேஸு மத்யமா ப்ருஷ்டதஸ்து
தநுஷ்பாணிர் லக்ஷ்மணோநுஜகாமஹ" என்று சொல்லப்பட்ட
பெருமாளும் பிராட்டியும் பின்சென்ற வில்லியான இளையபெரு
மாளும் ப்ரயோஜநாந்தர நிரபேக்ஷ லக்ஷணத்தைக்கண்டு பெரு
மாளுகந்து ஸஹபோஜன யோக்யராக்கிக்கொண்ட ஐந்த்ரவ்யா
கரண பண்டிதனுமாகலாமென்று திருவுளம்பற்றிப் பின்றொடர்ந்
தெழுந்தருளி, வழியி லெதிரில் சந்தித்தவர்களைப் பார்த்து இவ்
வண்ணமாய்போகின்றவர்களைக்கண்டீரோவென்றுகேட்க; அவர்
களும் போகிறார் போகிறார்களென்று சொல்ல, கடுநடையிட்டு
நெடுந்தூர மெழுந்தருளிக் கங்கைகொண்ட சோழபுரத்தின் கீழ்
வாசலளவாகவெழுந்தருளி அங்குள்ளவர்களையும்பார்த்து இன்ன
படி போகின்றவர்களைக்கண்டீர்களோவென்றுகேட்க; அவர்கள்
கண்டிலோமென்ன; இவர் ஏங்கி யடித்துக்கொண்டு விழுந்து
மோஹித்து, அதுவேஹேதுவாகப் "பரந்துவைஷ்ணவம்லோகம்

நித்யாநந்தம் ஸுகாவஹம்-தத்ரஸம்வாஹிநீந் திவ்யாம் விரஜாம் வேதஸம்பவாம்-ஸர்வேஹிரண்மயாஸ்தத்ர-ஸர்வேவேதமயாஶ்ஶுபா:-அப்ராக்ருதமயாநித்யா:புநராவ்ருத்திவர்ஜிதா:;ஏகாந்திநஸ்ஸதா ப்ரஹ்மத்யாநிநோயோகி நோஹிபே - தேஷாந்தத்பரமம்ஸ்தானம்யத்வை பஶ்யந்திஸூரய:"என்கிறபடிவ்ரஜாநதிக்கு அக்கரைப்பட்டதாயும் - மாற்றற்ற சுவர்ணமயமாயும் - வேதமயமாயும்-ஆனந்தமயமாயும் - பரிசுத்தமாயும் - அப்ராக்ருதமாயும் - நாசரஹிதமாயும் - அடைந்தாரை மீளக்கொடுக்காததாயும் - ஸர்வகாலமும் பகவத் பாராயணமென்னும் யோகத்தில் அக்ரேசர்களான நித்ய சூரிகளால் சாமகானஞ் செய்யப்பெற்றதாயும் -

குறிப்பு:—திருமங்கையாழ்வாரால் நடத்தப்பட்டுப் பிறகு கலிதோஷத்தால் நின்றுபோயிருந்த நம்மாழ்வாரது அத்யயநோற்சவாதிகளை முன்புபோலேநடைபெறுமாறு அத்யயநோத்ஸவத்திலே ஆழ்வார்கோயிலேற வெழுந்தருளும்படிக்கும் வேத பாராயணத்தோடு கூட திருவாய்மொழி அநுஸந்தாநம் நடக்கும்படிபண்ணிப், பெரியபெருமாள் திருவாய்மொழிக்கு வேதஸாம்யத்தை அநுக்ரகிக்கையாலே, வேதங்களுக்கு உபக்ரமோத்ஸர் ஜந காலநியம முண்டானாற்போலே (த்ராமிடம்ப்ரம்ஹஸம்ஹிதாம்) என்று ஓதப்பட்ட த்ராவிடவேதமான திருவாய்மொழிக்கும் திருக்கார்த்திகை திவ்ய மஹோத்ஸவத்திலே உத்ஸர்ஜநகாலமென்றும், மார்கழிமாஸத்தில் அத்யயநோத்ஸவத்திலே உபக்ரம காலமென்றும், த்ராவிடவேதமான திருவாய்மொழியைத் திருக்கார்த்திகை திவ்ய மஹோத்ஸவத்திலே உத்ஸர்ஜநம்பண்ணி, உபக்ரமக் காலமான அத்யயநோத்ஸவத்திலே பெரிய பெருமாள் கேட்டருளுமளவும் ஸ்ரீவைஷ்ணவர்கள் நெஞ்சினால் நினைந்து வாயினால் மொழியாமலிருக்கும்படிக்கும், பெரியபெருமாள் ஆழ்வாருக்கு ப்ரதிவருஷம் திருமுகப்பட்டையம் ப்ரஸாதிக்கும்படிக்கும், அன்று திருக்கார்த்திகை திவ்ய மஹோத்ஸவத்திலே பெரியபெருமாள் தாம் சாத்திக்கொண்ட எண்ணெய்க்காப்பு ஶேஷத்தைத் திருமங்கை மன்னன் திருமிடற்றிலே சாத்துவித்து அவர் தம்மைப்பாடின இளைப்பெல்லாம் தீரும்படி பண்ணின கட்டளையை, ப்ரதிஸம்வத்ஸரம் திருக்கார்த்திகை திவ்ய மஹோத்ஸவத்திலே பெரிய பெருமாள் சாத்திக்களைந்த எண்ணெய் ஶேஷத்தை ஆழ்வார்களுக்கெல்லாம் தலைவரான நம்மாழ்வார் திருமிடற்றிலே சாத்தி அந்தசேஷத்தை ஸ்ரீவைஷ்ணவர்கள் தங்கள் தங்கள் திருமிடற்றிலே சாத்தும்படிக்கும், ரிகாதிபேதேந சதுர்விதமான வேதங்களுக்கு சிக்ஷாதிகளும் இதிஹாஸ புராணங்களும் அங்கோபாங்கங்களாயிருக்குமாப்போலே, ஆழ்வா ரருளிச்செய்த நாலு ப்ரபந்தங்களும்

ஸர்வ பலப்ரதனை ஸ்ரீயஃபதியினுடைய சேவையைச் சதாதந்து கொண்டிருப்பதுமான 'பிணைகொடுக்கிலும் போகவொட்டாத' அடியார் நிலவுகின்ற வைகுந்தமாநகரைத் தமது முன்னூற்று முப்பதாவது திருநட்சத்ரமான தாதுசம்வத்ஸரம் மாசிமாஸம் சுக்லபட்சம் ஏகாதசியில் வைகுந்தத் தமரரு முனிவரும் வந்தெதிர்கொள்ள ப்ராபித்தருளினார்.

(ஆஹா! பெருமாளைக்கலந்து பிரிந்து பிராட்டி பத்துமாசம் தரித்திருந்தாராகிலும் இவர் கண்டுகந்து காண்பதற்குமுன்னே

நாலுவேத ஸ்தாநேயாகவும்; திருமங்கைமன்னன் அருளிச்செய்த ஆறு ப்ரபந்தங்களும் மற்றையாழ்வார்களும் ஆண்டாளும் அருளிச்செய்த ப்ரபந்தங்களும் அங்கோபாங்கங்களாகவும்; திருவாய்மொழிதானும் த்வயார்த்த விவரணமென்றும், திருப்பல்லாண்டுமுதல் பெரியாழ்வார் திருமொழி, திருப்பாவை, நாச்சியார் திருமொழி, பெருமாள் திருமொழி, திருச்சந்தவிருத்தம், திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனாதிபிரான் ஆக இப்ரபந்தங்கள் ப்ராயேண ப்ரணவார்த்த ப்ரகாசகமாகையாலே முதலாயிரமென்றும்; கண்ணிநுண் சிறுத்தாம்பு நமஶ்ஶப்தார்த்த விவரணமென்றும்; திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், முதலாழ்வார்களருளிச்செய்த திருவந்தாதிமூன்றும், நான்முகன் திருவந்தாதி, திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரியதிருமடல் மந்த்ரவிஶேஷ விவரணமென்றும்; இவற்றில் திருவந்தாதி மூன்றுமுதலாக பெரியதிருமடலீறாக ஶப்த்ரஸப்ரதாநமா யிருக்கையாலே இயற்பா என்றும்; இப்படி இருபத்துமூன்று ப்ரபந்தங்களும் திருமந்த்ரார்த்த விவரணமென்றும்; இப்ரபந்தங்களிலே ஆழ்வார்களநுபவத்துக்கு விஷயமாய் எம்பெருமான் விரும்பி வர்த்திக்கிற ஸ்தலங்கள் பரமபதம் திருப்பாற்கடல் தொடக்கமாக நூற்றெட்டென்றும்; திருவாய்மொழியொழிந்த ப்ரபந்தங்கள், திருப்பல்லாண்டு முதலாக திருநெடுந்தாண்டகமளவாக, அத்யயநோத்ஸவத்துக்கு முன்புபத்துநாளாகப் பெரியபெருமாள் கேட்டருளும்படிக்கும், திருவந்தாதி முதலாக பெரியதிருமடல் ஈறாக, அத்யயநோத்ஸவாநந்தரம் மற்றைநாள் கேட்டருளும்படிக்கும், ஆழ்வார்கள் பதின்மர், ஆண்டாள், ஸ்ரீமந் மதுரகவிகள் ஆக பன்னிரண்டு திருநாமங்களும் அருளிச்செய்த இருபத்துமூன்று ப்ரபந்தங்களில் பாட்டு நாலாயிரமென்றும்; பிராம்ஹணனுக்கு வேதவேதாந்தங்கள் இதிஹாஸ புராணங்கள் அதிகரிக்க வேண்டுமோபோலே, ப்ரபந்நரான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு திவ்யப்ரபந்தங்கள் அதிகரிக்கவேணுமென்றும்; இவற்றில் திருப்பாவை திருப்பள்ளியெழுச்சி எம்பெருமானைத் திருப்பள்ளியுணர்த்துவ

காணப்பெறாத இழவு இருஞ்சிக்கொண்டுபோக வெழுந்தருளிரு ரென்ப தொருவிசேஷமிறே) இச்செய்தியை உய்யக்கொண்டார் தொடக்கமான சிஷ்யர்கள்கேட்டு வ்யாகுலப்பட்டு அங்கேறப் போய் இவருடைய விமல சரம விக்ரஹத்தைச் சேவித்துத் தங்கள் கண்ணிலும் நெஞ்சிலுந்தேக்கிக்கொண்டு சோகார்த்தராய்க் கிடந்து துடித்து, ஒருவாறுதேறி, ஈச்வரமுனிகள் திருக்கையாலே ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரமடங்கச் சரமகைங்கர்யங்களைச் செய்வித்துத் திருப்பள்ளிபடுத்திப் பின்பு வீரநாராயணபுரத்திற் கெழுந்தருளி மற்றுஞ் செய்யவேண்டிய க்ருத்யங்களையெல்லாம் ஈச்வரமுனிகளைக் கொண்டு செய்வித்தார்கள். ஸ்ரீமந் நாதமுனிகள் எழுந்தருளியிருந்த யோகஸ்தானத்தருகே குருகை காவலப்பன் எழுந்தருளியிருந்தார்.

திருநக்ஷத்ரத்தனியன்.

ஜ்யேஷ்டமாஸேத்வநூராதஜாதம்நாதமுனிம்பஜே
யஶ்ஶ்ரீஶௌரேஶ்ருதவான்ப்ரபந்தமகிலம்முனேரோ:

ஸ்ரீமந் நாதமுனிகள் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமந் நாதமுனிகள் திருவவதார வருஷம் கஉகூஎ-க்குச்சரியான ப்ரமாதி வருஷம்.

தாகையாலே ப்ராதகாலத்திலே நித்யம் அநுஸந்தேயமென்றும்; எப்போதும் ப்ரபந்தாநுஸந்தாநத்துக்கு முன்பு மங்களாஶாஸந பரமான திருப்பல்லாண்டு அநுஸந்தேயமென்றும்; திருவாய்மொழி அநுஸந்தாநத்துக்கு பூர்வோத்தரங்களிலே ஆழ்வார் விஷயமான கண்ணிநுண் சிறுத்தாம்பு அநுஸந்தேயமென்றும்; இப்படி ஸ்ரீவைஷ்ணவ தர்ஶநத்திலே அநேக ஸ்ரீவைஷ்ணவ தர்மங்களை ஸ்ரீமந்நாதமுனிகள் நியமித்த நியமநமுமிங் கறிதற்பாற்றும்.

ஸ்ரீ உய்யக்கொண்டார் வைபவம்.

தனியன்.

நமஃபங்கஜநேத்ராய நாதஸ்ரீபாதபங்கஜே
ந்யஸ்தஸர்வபராயாஸ்மத் குலநாதாயதீமதே.

ஸ்ரீ உய்யக்கொண்டார் ஸ்வாசார்யரான ஸ்ரீமந் நாதமுனிகளால் ஆக்ஞாபிக்கப் பட்டபடியே அவர் ஸ்ரீபாதத்தில் ஆசிரயித்திருந்த முதலிகளைக் கூட்டிக்கொண்டு திருவாய்மொழி தொடக்கமான திவ்ய ப்ரபந்தங்களையும் தர்ஶன சாஸ்த்ரார்த்தங்களையும் அருளிச்செய்து ஆதரித்து வருகையில், மணக்கால் நம்பி-திருவல்லிக்கேணி பாண்பெருமாளரையர் - செட்டைப்பூசிச் - செண்டலங்காரதாஸர்-புண்டரீகாக்ஷதாசர்-கோமடம் திருவிண்ணகரப்பன்-உலகுபெருமாள்நங்கை யென்கிற இவ்வாறு முதலிகளும் வந்து ஆசிரயித்துத், தர்ஶன சாஸ்த்ரார்த்தங்களை யதிகரித்துப் போந்தார்கள்; இவர்களில், மணக்கால்நம்பி யென்பவர் உய்யக்கொண்டார் திருவடிகளிலே "அஹம்ஸர்வங் கரிஷ்யாமி" என்கிற இளைய பெருமாளைப்போலே ஸர்வவித கைங்கர்யங்களையுஞ்செய்து கொண்டிருக்கையில் உய்யக்கொண்டாருடைய திருத்தேவிகளான ஆண்டாள் திருநாட்டுக்கெழுந்தருள; (வயிற்றுத்தொழிலையுடையவன் மடைப்பள்ளியில் உத்யோகந் தேடியமருமாபோலே) இவரும் கைங்கர்யத்தி லபிருசியுடையவராகையாலே திருமாளிகையின் கைங்கர்யமெல்லாம் தமக்கேபரமாக நடத்திக் கொண்டுபோகச்செய்தே, ஒருநாளில் உய்யக்கொண்டாருடைய பெண்பிள்ளைகளிருவரையும் தீர்த்தமாடச்செய் தழைத்துக்கொண்டுவர; வழியிலே குறுக்கான வாய்க்கால் சேறுயிருக்கக்கண்டு அவர்கள் திகைத்துநிற்கத் தாம் அங்கே படியாய்க்கிடந்து அவர்களைத் தமது முதுகின்பேரில் அடியிட்டெழுந்தருளுவித்துக்கொண்டு வந்தார். இச்செய்தியை உய்யக்கொண்டார்கேட்டு, இவரிப்படிசெய்வதே! என்று போரப்ரீதராய் மணக்கால்நம்பியினுடைய உத்தமமான அங்கத்தைத் தமது திருவடித்தாமரைகளாலே அலங்கரித்துப், பொன்னடிப்பூவை அவர் முடியிற்சூட்டி நாமுமக்குச் செய்யவேண்டுவ தென்னென்று கேட்டருள; அவர் "உற்றேனுகந்து பணிசெய் துனபாதம்பெற்றேனீதே யின்னம் வேண்டுவதெந்தாய்" என்கிற

படியே தேவரீர் திருவடிகளின் சேவையே அடியேனுக்கு வேண்டியிருப்பதென்ன; அவரையுகந்து உகப்பின் மிகுதியாலே "அதிதாநாகதஜ்ஞாந மாத்ம தத்வப்ரகாஶகம்-ஸர்வவேதார்த்த விஜ்ஞாநம் ஸர்வஶாஸ்த்ரார்த்ததர்ஶநம், மாநஸம் வாசிகம்பாபம் காயிகஞ்சத்ரிதாக்ருதம் - த்வயஸ்மரண மாத்ரேண நாஶம் யாதி ஸுநிஶ்சிதம்" என்கிறபடி போயகாலங்கள் போகுங்காலங்களின் தன்மை யிருக்கும்படியையும், ஆத்மஸ்வரூப மிருக்கும் படியையும், வேதாந்த தாத்பர்யங்களையும் தெரியச்செய்து, மனத்தாலும் - வாக்காலும் - காயத்தாலும் செய்யப்படு மவையான மூவித பாபங்களினின்றும் (உச்சரித்த மாத்திரத்தில்) விடுவித்துக் காக்குமதான மந்த்ர ரத்ன மென்கிற த்வயத்தை மீளவு முபதேசித்தருளினர்.

அனந்தரம் சிலநாள்கழிந்தவாறே, உய்யக்கொண்டார் திருநாட்டுக் கெழுந்தருளுந் தசையாக அப்போது மணக்கால்நம்பி தண்டன் ஸமர்ப்பித்து, இனி தர்ஶந ப்ரவர்த்தகராவார் ஆரென்று கேட்க? இங்குள்ள முதலிகளைக் கூட்டிக்கொண்டு நீரே தர்ஶநத்தை நிர்வஹியுமென்று சாதித்துத் தம்மிடத்தில் ஸ்ரீமந்நாத முனிகள் ப்ரஸாதித்திருந்த பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தையுங் கொடுத்து நம்பீ! செவி சாயுமென்ன; நம்பியும் வணங்க; நம்முடைய ஆசார்யரான ஸ்ரீமந் நாதமுனிகள் தம்முடைய அந்திமதசையிலே இந்த விக்ரஹத்தை நமக்குக் காட்டிக்கொடுத்து ஈஶ்வர முனிகளுக்கொரு புத்ரருண்டாகப் போகிறாரென்றும், அவருக்கு யமுனைத்துறைவரென்று திருநாமஞ்சாற்றி அருளிச் செயல்களையும் தர்ஶந சாஸ்த்ரங்களையும் தெரிவித்து இவ்விக்கிரஹத்தை அவருக்குத் தஞ்சமாகக் காட்டிக்கொடுக்க வேண்டுமென்றும் நியமித்திருந்தார். அவர் ஆஜ்ஞைப்ரகாரம் செய்யலாமென்று நாம் மிக விருப்போடிருந்தும் நம்காலத்தில் அவர் அவதரிக்கப் பெற்றிலோமானோம்; ஆகையால் இனியிருக்கப் போகின்றவர் நீரானபடியால் அவரை யநுவர்த்தித்தாகிலும், நந்தர்ஶன க்ரந்தங்களையும் சாஸ்த்ரார்த்தங்களையும்பழக்கவோதி இவ்விக்ரஹத்தை அவர் திருப்பாட்டனார் விரும்பின விஷயமென்று தஞ்சமாகக் காட்டிக்கொடுத்துத் தர்ஶந ப்ரவர்த்தகராம்படி செய்யக் கடவீரென்று நியமித்தருளி, ஸ்ரீமந் நாதமுனிகளுடைய திருவடிகளிலே த்யானபரராய்க் கொண்டு பத்மாஸ

ஞேபவிஷ்டராய்த் திருவணையிலேசாய்ந்து திருநாட்டுக் கெழுந் தருளினார்.

இவர் ஜயத்சேனும்ஸர். இவருக்குத் திருநாமங்கள்:—உய் யக்கொண்டார்-புண்டரீகாக்ஷர்-பத்மாக்ஷர்-ராஜீவாக்ஷர்-அரவிந் தாக்ஷர். இவரவதரித்த காலம்:—கலியாப்தம்-௩௬௨௭ - ல் நிகழ் ந்த பராபவ வருஷம்-சித்திரைமாஸம் - சுக்லபக்ஷம் - ப்ரதமை- புதவாரம்-க்ருத்திகா நக்ஷத்ரங்கூடிய சுபதினம். அவதாரஸ்தலம் திருவெள்ளறை - எழுந்தருளியிருந்தது நூற்றைந்து திருநக்ஷ த்ரம். சிஷ்யர்கள் உள்ளே சொல்லப்பட்டிருக்கிற அறுவர்.

திருநக்ஷத்ரத்தனியன்.

மேஷமாஸே ஸரோஜாதம் க்ருத்திகா ஜாதமாஶ்ரயே
நாதயோகிஸுதாபோஜ த்வந்த்வப்ரவணமாநஸம்.

ஸ்ரீ உய்யக்கொண்டார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

☞ ஸ்ரீஉய்யக்கொண்டார் திருவவதார௵-௯௦௫-க்குச் சரியான ப்ரமாதிவருஷம்.

ஸ்ரீமணக்கால்நம்பி வைபவம்

தனியன்.

அயத்நதோயாமுநமாத்மதாஸ
மளர்க்கபத்ரார்ப்பணநிஷ்க்ரயேண
யஃக்ரீதவாநாஸ்திதயௌவராஜ்யம்
நமாமிதம்ராமமமேயஸத்வம்.

ஸ்ரீ உய்யக்கொண்டார் திருநாட்டுக் கெழுந்தருளினபடி யைக்கண்டு ஸ்ரீமணக்கால்நம்பி உள்ளிட்டமுதலிகளெல்லாரும் மிகவும் சோகார்த்தராய் ஆசார்ய விஶ்லேஷாஸஹிஷ்ணுக்களா ய்ப் பெருமிடறுசெய்துவிழுந்து போரக்லேசித்துத் தங்களில் தாங்களே ஒருவாறுதேறி, அவரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ் கரித்துத் திருப்பள்ளிபடுத்திப் பின்னுஞ் செய்யவேண்டிய க்ரு த்தியங்களை யெல்லாம் குறைவறச்செய்து, சிலநாள்வரையில் ஆறுதவர்களா யிருந்து, அனந்தரம் இனிசெய்வதேதென்று ஆலோசித்திருக்கையில்; ஸ்ரீமணக்கால்நம்பிகள் அவர்களைக்கூட்

டிக்கொண்டு தர்ஶனம் நிர்வஹித் தருளாநிற்கச்செய்தே, ஈஶ்வரமுனிகளுக்குக், கலியாப்தம் நாலாயிரத்துப் பதினெட்டில் நிகழ்ந்த, தாதுவருஷம்-ஆடிமாசம்-பௌர்ணமி - புதவாரம்-உத்ராட நக்ஷத்ரங்கூடிய சுபதினத்தில் ஒருபுத்திரர் அவதரித்தருள; நம்பிகள்கேட்டு அதிசந்துஷ்டராய் அங்கேறவெழுந்தருளி "ஜாதகர்மண்யலாபேது விஷ்ணோஶ்சக்ரஸ்யதாரணம் - சௌளோபநயநேசாபி தந்மந்த்ராத்யயநேபிவா-விதிநாவைஷ்ணவஞ் சக்ரந்தார யித்வாத்விஜோத்தமஃ" என்கிறபடியே ஈஶ்வரமுனிகளைக்கொண்டு ஜாதகர்மங்களைச் செய்வித்து "வைஷ்ணவைஶ் சைவஸம்க்லைஶ்ச குர்யாத்ஸம் மார்ஜநம்ஶிஶோஃ-தஸ்யதக்ஷிணகர்ணேது ஜபேதஷ்டாக்ஷரந்த்வயம் - மூர்த்நிஹஸ்தம் விநிக்ஷிப்ய ஜபேச் சத்வாதஶாக்ஷரம்-நாமகுர்யாத்ததஃ பஶ்சாத் வைஷ்ணவம் பாபநாஶநம்" என்கிறபடியே பன்னிரண்டாவதுநாளில் விஷ்ணுசூக்தங்களாலே ஸ்நானஞ்செய்வித்து, வலத்திருக்காதில் அஷ்டாக்ஷர மந்த்ரத்தையும் த்வயத்தையும் ஓதி, சிரஸின்பேரில் தமது ஸ்ரீஹஸ்தத்தைவைத்து த்வாதசாக்ஷர மந்த்ரத்தை ஜபித்து, அனந்தரம் "யமுனைத்துறைவர்" என்கிற விஷ்ணு ஸம்பந்தமான திருநாமத்தை (தமது பரமாசார்யரான ஸ்ரீமந் நாதமுநிகள் திருவுள்ளப்படியே) சாற்றியருளி ஸ்ரீஉய்யக்கொண்டார் அகமகிழும்படிக் கெழுந்தருளியிருந்தார்.

(இன்னும் பின்தொடர்களில் வரும்.)

ஸ்ரீ ஆளவந்தார் என்கிற

ஸ்ரீ யமுனைத்துறைவர் வைபவம்.

தனியன்.

ஸ்ரீராமமிஶ்ர ஸச்சிஷ்யம் வந்தேதத்வார்த்த கோவிதம்
வாதாதவாப்த ராஜ்யாத்யோ விரக்தோ யாமுநோபவத்
யத்பதாம் போருஹ த்யாநவித்வஸ்தா ஶேஷகல்மஷஃ
வஸ்துதா முபயாதோஹம் யாமுநேயம் நமாமிதம்.

ஸிம்ஹாஸநாம்ஶபவ மீஶ்வரயோகிஸிந்து
முக்தாமணிம் மஹிதநாதமுநீந்த்ர பௌத்ரம்
ப்ரஜ்ஞாவிஶேஷ ஜலதிம் ப்ரதிவாதிதூல
ஜஞ்ஜாநிலம்ஹ்ருதய சிந்தய யாமுநார்யம்.

ஸ்ரீயமுனைத்துறைவருக்குத் திருத்தந்தையாரான ஈஶ்வர முனிகள் காலக்ரமப்படிக்கு அந்நப்ராஶந சௌளோபநயநாதிகளையும் செய்தருளி ஐந்தாவது வயதில் அக்ஷராப்யாசஞ்செய்து வைத்து அனந்தரம் வேதாத்யயனம் பண்ணுவிக்க; யமுனைத்துறைவர் மஹாமேதாவியாய் ஸகாத்யாயிகள் இரண்டாமுறை சந்தை சொல்லும்போது என்னகாண்? ஓதினவிடத்தையே மறுபடியும் ஓதுகின்றீர்களென்று தாம் ஓதாமல் தவிர்ந்திருந்தும், அதைத் திருத்தந்தையார் பார்த்து என்பிள்ளாய்? ஓதப்போகவில்லையென்றால் அவர்கள் ஓதினவிடத்தையே ஓதாநின்றார்களென்றுவிடைகொடுத்தும், ஏகசந்தக்ராஹியாயிருந்துகொண்டு அங்கோ பாங்கங்களோடு பதக்ரம ஸஹிதமாக அத்யயனம் பண்ணினவராகி ஆறுவது திருநட்சத்ரத்தில் மஹாபாஷ்யபட்டரென்கிற பண்டிதாக்ரேசரிடத்தில் சாஸ்த்ராப்யாசம் பண்ணிக்கொண்டிருக்க; † அந்நாளில்சோழராஜனுடைய புரோஹிதனாய் மஹா வித்வானுமாயுமிருந்த வித்வஜ்ஜன கோலாஹலனென்னும்

மற்றொரு பிரதியில்:—

† பூமாதேவியின் முகதிலகம்போன்ற செந்தமிழ்ப் பாண்டிநாட்டின் ராஜதானியாகிய மதுரைமாநகரத்தில் எழுநூறு வருஷத்திற்கு முன்பு அரசாண்ட பாண்டியகுலத்தரசன் ஒருவனுடைய சமஸ்தானத்தில் வித்வஜன கோலாகலனென்னும் எண்டிசையிலும் பிரசித்தமாகப் பெயர்பெற்ற சமஸ்கிருதவித்வான் ஒருவனிருந்தான். அவன் தர்க்கம், வியாகரணம், மீமாஞ்சை, தர்மசாஸ்த்ரமென்கிற நான்கிலும் பூரணபாண்டித்திய முள்ளவன். மற்ற வித்வஜனங்கள் யாவரும் அவனைக் காணுமிடத்திற் கருடனைக்கண்டபாம்புபோலவும், யமனைக்கண்ட உயிர்போலவும் நடுங்குவார்கள். அவன் அத்தன்மையாகிய வித்தியாசாமர்த்திய முடையவனாதலால், பாண்டியன் அவனைச் சன்மானித்துத் தன்னருகில் அதிககௌரவமாகவைத்துச் சம்ரட்சணை செய்துவந்தான்; அவ்வித்வான் தனக்குண்டான வித்தியா கர்வத்தினாலும், "கொண்டவன் பலமிருந்தாற் குப்பையேறிச் சண்டைசெய்யலாம்" என்பதற்கிசைய, அரசன் தன்மேல்வைத்த தயையினாலும் ஒருவரையும் மதிக்கிறதேயில்லை. பச்சோந்தியைக்கண்டு பயந்து மயில் தன்கண்ணை அதனிடத்திற் கொண்டுபோய்க் கொடுப்பதுபோல, பலதேசங்களிலும் இருக்கின்ற கவிஜனங்களெல்லாம் அவனுக்கு அஞ்சி வருஷாந்தரம் கப்பம் கொடுத்து வந்தார்கள். கையில் ஏடுமெழுத்தாணியும் எடுத்தவர்களிடத்திலெல்லா மவன் கப்பம் வாங்கிவருகையில்,

ஸ்ரீவைஷ்ணவ சமயாசாரியர்களுக்குள் மகிமைதங்கிய யமுனைத்துறைவரென்றும், யமுனாரியரென்றும், ஸ்ரீஆளவந்தாரென்றும் திருநாம முடைய அவதார புருஷரொருவர் ஏறக்குறையப் பத்துப்பன்னிரண்டு

பெயரையுடைய ஆக்கியாழ்வா னென்பவன் அந்தத் தேசத்தி லுள்ள வித்வான்களையெல்லாம் ஹிம்ஸித்துக் கப்பம் வாங்கிக் கொண்டுவரும் அதர்மசாலியாய் ப்ரகாசித்து, மஹாபாஷ்யபட் டர் பக்கலிலும் கப்பம் வாங்கிவரும்படி தரவுக்காரரை யனுப்பி வைக்க, அவர்களைக்கண்டு மஹாபாஷ்யபட்டர் திடுக்கிட்டுக்கிட

வயதுள்ள சிறு பிள்ளையாய்ப் பாஷ்யாசாரியரென்னும் உபாத்தியாய ருடைய பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டிருந்தார். ஒருநாட்காலை யில் ஏழெட்டு நாழிகைக்கு அப்பள்ளிக்கூடத்தில் இப்பிள்ளையைக் காவ லாகவைத்துவிட்டு, மற்றபிள்ளைகளும் உபாத்தியாயரும் போஜனத்திற் குப் போயிருந்தார்கள். அத்தருணத்தில் அந்த உபாத்தியாயர் நாலைந்து வருஷத்துக்கு வரி கொடுக்கவில்லையென்று அதைக்கேட்டு வாங்கிவர வித்வஜன கோலாகலன் அனுப்பிய தண்டற்காரன்வந்து உபாத்தியாயர் எங்கே போனாரென்று கேட்க? காவலாயிருந்த யமுனைத்துறைவர் எங்க ளுபாத்தியாயரைத் தேடுகிறவிதம் என்னவென்றுகேட்டார்? அச்சேவ கன் வித்வஜனகோலாகலனென்னும் எங்கள் வித்வசிரோமணி உங்க ளுபாத்தியாயரிடத்தில் கப்பம்வாங்கிவரச் சொன்னார்; அதுநிமித்தம் அவரைத்தேடுகிறேனென்ன; யாமுனாரியர் வரிவாங்குவதுஏதுக்காகவெ ன்ன? அவன் எங்கள்வித்வான் சகலபண்டிதர்களுக்கும் சிரேஷ்டராகை யால் அவருக்கு ஏடுமெழுத்தாணியும் பிடிக்கிறவர்களெல்லாம் கொடுக் கிறது வழக்கந்தானென்றான். அதைக்கேட்டு யமுனைத்துறைவர் இதெ ன்ன வழக்கம்! நியாயவிரோதமாயிருக்கின்றதே! பிடித்தவருக்கெல்லாம் பெண்டுபோல உலகாள்பவருக்கும் வரி கொடுக்கிறது, இவனுக்கும் வரி கொடுக்கிறதா? நன்றாயிருக்கிறதென்று அதிசயித்து வரி கொடுக்கிற தில்லையெனப் போய் சொல்லென்றார். அச்சமயத்தில் உபாத்தியாயர் வந்து அதை யறிந்து சிங்கசொப்பனங்கண்ட யானையைப்போலக் கை கால் விலவிலக்கக் குடிமுழுகிப்போயிற்றே! சுபாவத்திலேயே அவன் கொடியவன்; அப்படியிருக்க, இதைக்கேட்டால் அவன்சும்மாவிடுவானா? வாதுக்கழைப்பானே! அந்த யமகண்டனை ஆர்வெல்லுகிறதென்று பயந் தார். யமுனாரியர் தேவரீர் அதைப்பற்றிக் கண்கலக்கம் கொள்ளவேண் டியதில்லை; வெந்நீரில்வீடுவேகுமா? இருப்புத்தூணைச் செல்லெரிக்குமா? அப்படியே வருமானால் தாமொன்றுஞ் சிந்தியாமல் அடியேனை ஏவினால் நான்போய் உமது கடாட்சத்தினால் ஜயிக்கிறேனென்று விண்ணப்பஞ் செய்தார். இவர் எத்தனைவிதத்திற் சொன்னாலும் அவைகளை உபாத்தி யாயர் "கண்ணைப்பிடுங்கி முன்னே யெறிந்தும் கண்கட்டுவித்தை என் பார்போல்" நம்பவில்லை.

இப்படி வார்த்தைசொல்லிக்கொண்டிருக்கையில் அந்த ஆள் போய் இங்கே நிகழ்ந்தவைகளை யெல்லாம் சொல்ல; அவ்வித்வான் "கொட்டி னால் தேளும் கொட்டாவிட்டாற் பிள்ளைப்பூச்சியுமா" என்று கோபித்

க்க, யமுனைத்துறைவர் அவரைநோக்கி நீரிப்படி கிடைக்கைக்கு ஹேதுவென்னென்றுகேட்க; அவரும் தனக்கு நேர்ந்திருப்பதைச்சொல்ல; இவர் அந்த ஓலையை வாங்கிக் கிழித்துப்போகவிட்டார். ஆக்கியாழ்வா னிவ்வர்த்தமானமறிந்து அதிக வருத்

துக்கொண்டு, அந்தச்செய்தியை அரசனுக்கறிவித்து, அவனுடைய அனுமதிப்படி வாதுக்கு வரச்சொன்னான். அதுகேட்டு உபாத்தியாயர் மனங்கலங்கி ஐயையோ! இனி நானெப்படி தலையெடுப்பதென்று துக்கித்தார். யமுனைத்துறைவர் அவருக்கு நிர்ப்பயமாகும்படி தைரியஞ்சொல்லிச் சேவகனைப்பார்த்து வாதுசெய்கிறதற்கு உங்கள் வித்வானை இங்கேவரச்சொல்; அல்லவென்று நம்மை அவ்விடத்திற்கு அழைப்பிக்கிறதானால் மரியாதைப்படி நடந்துகொள்ளச் சொல்லென்றார். உடனே சத்திர சாமரமுதலிய பரிவட்டங்களோடு பல்லக்குவந்தது. அதன்மேலேறிச் சென்று மதுரையின் ராஜவீதியிற் பிரவேசிக்கும்போது, உப்பரிமேல் உலாவிக்கொண்டிருந்த பாண்டியராஜன் கண்டு மிகவும் ஆச்சரியங்கொண்டு கைகொட்டிச் சிரித்தான். அவனருகிலிருந்த ராணியானவள் மகாப்பிரபு! நீர்நகைக்கின்றகாரணமென்னவென்றாள்; மகாராஜன்பெண்ணே! இதோபார் வீதியில் பல்லக்கில்வருகிற இந்தக் குழந்தை நமது வித்வஜன கோலாகலனுடனே வாதுசெய்ய வருகிறதாமென்றான். ராஜபத்தினி அக்குழந்தையின் திருமுக தேஜஸை நன்று யுற்றுப்பார்த்து அதிக மகிழ்ச்சிகூர்ந்து இவர் வாதுசெய்வதன்றி நமதுவித்வானையும் அவருக்கு மேலானவர்களையும் ஜெயிப்பதும் அருமையல்லவென்றாள்; அரசனுக்கு அந்தச்சொற் புண்ணிலே கோலிட்டதுபோல வருத்தத்தை விளைக்க அவன் போபோ நீயென்ன பேதையாயிருக்கிறாய்; நமது வித்வானுக்கு மேலானவர்களும் உண்டென்றுசொல்வது "பெட்டைக்குதிரைக்கு இரட்டைக்கொம்பு முளைத்தது" என்பதுபோலிருக்கின்றது. இச்சிறுபிள்ளையும் அவரை வெல்லுமா? காலில்லாத முடவனுங் கடலைத்தாண்டுவானா? மண் பூனையும் எலி பிடிக்குமா?" இது சொப்பனந்தானென்றான். ராஜமஹிஷி வித்வான் தோற்பது நிச்சயமே. அது இவர் முகக்குறியால் எனக்கு உள்ளங்கைப் பொருள்போல விளங்குகின்றது; சந்தேகமில்லையென்றாள். இவ்வாறு இருவரும் சம்பாஷிக்கையில் அரசன் நீ இந்தப் பிள்ளையை எவ்வளவு சிறப்பித்துச்சொன்னாலும் நான் நம்பமாட்டேன்; விரல் உரலானால் உரல் எப்படியாகமாட்டாது; நமது வித்வானே ஜயிப்பார்; இவர் ஆரம்பத்திலேயே தோற்பார்; தோற்றால் நீயென்னசெய்வாயென? இராக்கினி மெய்யா யிவர் தோற்றாரானால் நான் உமது தாதிக்குத் தாதியாகி அவளிட்ட வேலைசெய்வேனென்றாள். வேந்தன் பைத்தியக்காரி "மண்குதிரையைநம்பி ஆற்றிலிறங்குவார்போல்" யோசியாமற்பேசுகிறாய்; உன்சொற்படியே இவர் ஜயித்தால் நான் இவருக்கு எனது ராச்சியத்திற் பாதிபகிர்ந்து கொடுப்பேனென்றான்.

தப்பட்டுக் கிழித்தவன் வெறுங்கவியோ? தந்த்ரபாரகனோ? என்று கேட்டுவரவிட; அதற்கிவர் "நவயம்கவயஸ்து கேவலம் நவயம்கேவலதந்த்ர பாரகா: - அபிதுப்ரதிவாதி வாரணப்ரகடாடோப விபாடநக்ஷமா:" என்கிறபடி நாங்கள் கேவலமான கவிகளு மல்லோம் சாமான்யமான சாஸ்த்ர

பின்பு யமுனைத்துறைவர் அவ்வரசன் சமூகத்தில்வந்தார். அப்போது அங்குவந்த வித்வஜ்ஜன கோலாகலன் அவர் வடிவைப்பார்த்து வயதைக் குறித்துக் குலுங்கநகைத்து, நெடிய மகா மேருவுடனே அற்பமாகிய ஒரு திரணமானது எதிர்ப்பதுபோல, சுண்டுவிரலத்தனை சிறுபையல் வாதுசெய்ய வந்தானேயென்று அலட்சியம்பண்ணி மிகவும் கர்வத்தோடே அவரைநோக்கி ஓய் சிறுபிள்ளாய்! நீ ஹரிச்சுவடி வாசித்தாயா? உனக்கு எழுத்து கூட்டத்தெரியுமா? உன்பெயரைப் பிழையில்லாமலெழுதுவையா? ஒரு பூனைக்குட்டியானது வேங்கைப்புலியை வெல்ல வருவதுபோலக் கவிச்சிங்கமாகிய நம்முடன் வாதுக்குவந்தவன் நீதானோ? வென்றான். யாமுனாரியர் இவன் ஆரம்பசூரத்துவமாய்ப் பேசுகிறானென்று புன்சிரிப்புகொண்டு, நீர் பெரியவராயும் நாம் சிறுபிள்ளையாயுமிருப்பதைப்பற்றி நம்மை அவமதிக்கிறீர். யானை எத்தனைபெரிது, அதைக் கண்டவுடனே உக்கிரங்கொண்டு விசையாயெழும்பிப் பாய்ந்து அதன் மஸ்தகத்தைப்பிளக்கின்ற சிங்கக்குட்டி எத்தனை சிறிது. மலை பிர்மாண்டமானதாயிருந்தும் அதை ஒரு விரலளவான சிற்றுளி சக்கைசக்கையாகப் பெயர்த்தெறியவில்லையா? அறுகம்புல் நுனியில்தங்கி நிற்கின்ற தினையளவாகிய பனித்துளி பெரிய பனையளவையும் தனக்குள் அடக்கிக்காட்டவில்லையா? ஒரு பயறளவாகிய நெருப்புப்பொறியுமல்லவோ ஆகாசமளாவிய வைக்கோற்போரைச் சுட்டெரிக்கின்றது. சிறிய மீன்சினையிலும் அதிநுட்பமாகிய வித்திலிருந்து வெகுதூரமட்டும் கிளைத்து நன்றாய்த் தழைத்து ஓங்கி மேலெழுந்து வளர்ந்து பூமியின்கீழ் இரண்டு மூன்று புருஷபாகம் வேர்வீழ்த்து அடரவிழுதுவிட்டு மட்டற்ற யானை சேனைகளோடு அரசர்களுக்கு இருக்க நிழற்கொடுக்கின்ற ஆலவிருட்சம் உற்பத்தியாகின்றதே. பெருந்தாழி நிறையப் பூரிக்கப்பட்ட பாலைத் துளி மோர்பிரையானது தயிராய்ப் பரிணமிக்கப் பண்ணுகின்றதே. உலகமெங்கும் வியாபிக்கின்ற சூரியனை ஒரு கைக்குடையுமல்லவோ மறைக்கின்றது. இருபத்தொருநிலைக் கோபுரம்போலுயர்ந்த தேரை நடத்துவது இறையத்தனை அச்சாணியல்லவா? அன்றியும், அங்குஷ்டப்பிரமாண தேகத்தையுடைய அகஸ்தியமுனிவர் அண்டத்தை முட்டிய விந்திய பர்வதத்தை அடக்கி மகாசமுத்திரத்தையும் உட்கொள்ளவில்லையா! இவைகளையெல்லாம் நீர் ஆலோசியாமல் இளையரென்றும் முதியரென்றும் விவகரித்துக்கொண்டு வீண்காலம் போக்குவானேன்; எடுத்தகாரியத்தை நடத்தத் துணிவதே யுக்தமென்றார். வித்வான் அப்பொழுதும் இறுமாப்படங்காமல் அவரைக் கிள்ளுகீரையாக நினைத்து முட்டைப்பணியாரம்போலக் குதித்தெழும்பித் தன்னறிவின்மையால் ஆழ

சோதனை யுடையவர்களு மல்லோம்; மற்றெப்படிப்பட்டவர்க ளென்னில்; ப்ரதிவாதிகளாகிற மதங்கொண்ட கஜங்களுடைய மஸ்தகங்களைப் பேதிக்கும் ஸிம்ஹங்களென வறிந்துகொள்வ தென்று அர்த்தந்தரும் இந்தச் சுலோகத்தை யெழுதிப் போக விட்டார்; அவனிதைப் பார்த்து, நமக்கிப்படி யெழுது மொரு வித்வானும் நாட்டிலிருக்கின்றுனு! என்று ஆச்சர்யமும் கோப முங்கொண்டு அரசனுக்குக்காட்ட; அரசன் "யமுனைத்துறைவர் நமது சபாமண்டபத்துக்குச் சடக்கெனவருக" வென்று சாஸ னம்வரவிட; இவரதையும் முன்போலவே கிழித்துவிட்டார்; அதை அரசன் பார்த்து நம்முடைய சாஸனத்தை ஒருசிறுவன் இப்படிக் கிழித்தனுப்புவதற்குக் காரண மெதுவாகலாமென்று மந்த்ரிகளுடனே தீர்க்கமாய் ஆலோசித்து ஒன்றுந் தோன்றுமல் அந்தஃபுரத்திற்குட்போய் ஒருவாறு சிந்தாக்ரந்தனுய்ச் சாய்ந் திருந்தான்; அப்போது இராஜபத்நி வந்து இங்ஙனஞ் சோர்ந் திருப்பதற்குக் காரணமென்னென்று கேட்டுணர்ந்து ஆச்சர்ய மடைந்து சற்றுநேரம் ஆலோசித்து, அரசனைப்பார்த்து, நீர் வித்வான்களைவரவிடும் மரியாதைகளைக் காட்டினீரில்லையாகை யால் அவரும்முடைய சாஸனத்தைக் கிழித்திருப்பாராக வென்

மறியாமல், இவனுக்குச் சாஸ்திரத்திற்கும் எவ்வளவுதூரம்; "கிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பம் தெரியுமா"; நாம் அதுவியாஜமாக வேறெ தையாவது பேசி அவரைக் கணத்தில் விரட்டித் துரத்திவிடலாமென்று அவருடனே தர்க்கமுதலிய சாஸ்திர விஷயத்தைப்பற்றிச் சிலநேரம் சம்வாதித்து அதனுல் அசைக்கக்கூடாமை கண்டு, அவரைநோக்கிச் சாஸ்திரவாதம் செய்யத்தொடங்கினுல் வெகுநாட் செல்லும்; நீரும் சிறு பிள்ளை; "குருவியின் தலைமேலே பனங்காயை வைப்பதுபோல" உமக்கு அதிக பிரயாசத்தைத்தர நமக்குச் சம்மதியில்லை. ஆகையால் அதுநிற்க, மற்றெந்தவிஷயத்தையாவது நீரேபேசும் பார்ப்போமென்று கபடமாகச் சொன்னுன். யமுனைத்துறைவர் எதிவன் நம்மிடத்திற் பரிவுள்ளவன் போற் பேசுகிறுன். இது உண்மையா; "ஆடு நனைகின்றதென்று கோநாய் குந்தியழுமா"? ஜாலமேயல்லாமல் வேறல்லவென்று நினைத்துக்கொண்டு அவனை நீர் பார்க்கிறதென்பதென்ன? உமது அனுமதிப்படியே செய் வோம்; அதிகமாய்ப் பேசவேண்டுவதில்லை; நாம் ஆமென்கிற மூன்று கேள்வியைமாத்திரம் அல்லவென்று மறுப்பீராலுல் நம்மை ஜயித்ததாக ஒப்புக்கொள்ளுகிறோம்; உமக்குச் சம்மதிதானுவென்றுர். அதற்கு அவ னும் அரசனும் சரிதானென்று சம்மதித்து உடன்படிக்கை செய்தார்கள்.

முதற்கேள்வி:—சிறுகுழந்தையாகிய யாமுனரியர் அவ்வித்வானை 'ய குறித்து, ஐயா! உமது தாய் புத்திரவதியென்கிறேம். நீர் உம்

றெனக்குத் தோன்றுகின்ற தென்ன; அரசன் அதுமெய்யே யாகலாமென்றுதேறித் தன்னுடைய முத்துப்பல்லக்கையும் சிவிகையாரையுமனுப்பிவைக்க; இவர் அந்தத் தண்டிகையிலேறிக் கொண்டு ராஜஸ்தானத்துக் கெழுந்தருளி "ஆஶைலாதத்ரிகந்யா சரணகிஸலய ந்யாஸதந்யோபகண்டா தாரக்ஷோநீதஸீதாமுக கமலஸமுல்லாஸ ஹேதோஶ்சஸேதோ:- ஆசப்ராச்யப்ரதீச்ய க்ஷிதிதரயுகளாதர்க்கசந்த்ராவதம்ஸாந் மீமாம்ஸா ஶாஸ்த்ரயுக்ம ஶ்ரமவிமலமநாம். ருக்யதாம்மாத்ருஶோந்ய:" என்கிறபடி மலையரசன் மகளுடைய செந்தளிரையொத்த பாத ஸ்பர்சத்தையுடைய ப்ரதேசங்களாற் சூழப்பட்டிருக்கிற ஹிமாசலத்திற்கும் இராவணபவனத்தில் சிறையிருந்தபிராட்டியினுடைய முகோல்லாச ஹேதுவாயமைந்த * திருவணைக்கும் சூர்யசந்த்ரர்களைச் சிரோபூஷணங்களாகவுடைய உதயகிரி அஸ்தமனகிரிகளுக்கும் மத்யத்திலிருக்கிற நாடுகளுக்குள் கர்மமீமாம்ஸை-ப்ரஹ்மமீமாம்ஸை என்கிற ப்ரபலமான உபய சாஸ்திரங்களிலும் பாரங்கதனாய் நிகரற்றிருக்கிற என்னைப்போலொரு வித்வானைத்தேடி

* திருவணை — சேது.

முடைய வாக்கு வல்லமையால் அவள் புத்திரவதியல்லவென்று மறுத்துவிடும் பார்ப்போமென்று கேட்டார். அதுகேட்டு வித்வான் நெடுநேரமாகப் பலவிதத்திலும் ஆராய்ந்தும் மறுக்கக்கூடாமையால், அவன் என்னைப்பெற்றதாய் மலடிதானென்று வீண்குதர்க்கம் செய்வேனானால்,கேட்பவர்கள் அனைவரும் என்னகாணும் நீ அவள் கர்ப்பத்திலிருந்து கொழுக்கட்டைபோலப் பிறந்து குட்டிச் சுவர்போல நட்டநடுவி விருந்துகொண்டு வாய் கூசாமல் அவளை மலடியென்று பிரத்தியட்சவிரோதமாக விதண்டாவாதம் செய்கிறையேயென்பார்களே! அதற்கு என்ன உத்திரம் சொல்லுகிறது; இதேது முதற்கோணல் முற்றுங்கோணலாய் முடிவதுபோலக் காண்கிறதே; இப்படி இறங்குந் துறையிலேயே நீச்சாயிருந்தால் ஏறுவதெப்படியென்று மயங்கினான்.

இரண்டாவது கேள்வி:—யமுனைத்துறைவர் வித்வானைப்பார்த்துப் பாண்டியனைக்குறித்து, இந்த அரசன் தர்மவானென்கிறோம்; ஏதோ நீர் மறுக்கக்கூடுமானால் மறுக்கலாமென்றார். வித்வஜன கோலாகலன் அந்தக்கேள்வியை மறுக்க வேண்டுமென்று தன் கருத்தினால் கூடியவரையில் எட்டிப் பார்த்தும் எட்டக்கூடாமற் கடினமாயிருந்ததனால், அவன் ராஜா தர்மவானல்லன் என்போமானால் அரசனே நம்மைப் பகைத்து அடா நன்றிகெட்ட பாதகா, என்னுடைய சொத்தை உன் இஷ்டப்படி கைகொண்டமட்டும் கொள்ளைகொண்டு ஆயுஷ்காலமெல்லாம் அனுப-

முன்விட உம்மாலாகுமோ என்று பொருளாகிற இச் சுலோகத்தை எழுதி ஆக்கியாழ்வானுக்குக் காட்ட; அவன் பார்த்து மிகவும் சந்தாபங்கொண்டு இவருடனே நான் தர்க்கிக்கக்கடவேனென்று அரசன் அநுமதியைக் கேட்க; அரசனிவரைப்பார்த்து, யமுனைத்துறைவரே! நம்முடைய புரோஹிதருடனே தர்க்கியுமென்ன; இவர் நாங்களிருவருந் தர்க்கிப்போமானால் வெற்றியுந் தோல்வியும் இன்னவர் பக்ஷமென்று அறுதியிடத்தக்க சிலவித்வான்கள் மத்யஸ்தராகவேண்டிய தன்றோ? நாங்களிருவருமே போதுமென்றால் எங்களில் எவர் அபஜயமடைந்தாலும் தோற்றோமென்ன நாவெழாதே! ஆகையா லிக்கார்யத்தில் சில வித்வான்கள் மத்தியிலிருந்து சீர் பெறுவதே யோக்யமாம் என்றார். அரசன், இவர்சொல்வது உண்மைக்குச் சேர்ந்ததேயென்று, சில வித்வான்களைத் திரட்ட; அவ்வளவிலே இராஜபத்நி ஒருசாளரத்வாரத்தாற் பார்த்து, இவர் திருமுகமண்டலத்தைத் தர்சித்து அச்சமுற்று அரசனைத் தூதுவரால் உள்ளேயழைப்பித்து அந்தச் சிறுவரை நீர் சாமான்யரென் றெண்ணலாகாதென்ன; அவன் உனக்கெப்படித் தெரியுமென்ன; நான் சாளரவழியாய் அவர்

வித்து இப்பொழுது என்னைப் பாவியென்று சொல்லி எனக்கே துரோகம் செய்கிறையாவென்று உடைவாளை உருவி ஒரேவீச்சாக வீசிவிடுவானே என்ன செய்வதென்று தியங்கினான்.

மூன்றாவது கேள்வி:—யமுனைத்துறைவர் இந்த ராஜபத்தினி பதிவிரதையென்றார். அது வித்வான் செவியில் நுழைந்தவுடனே அடிவயிற்றில் இடிவிழுந்ததுபோல அவனுக்கு யாதொன்றும் தோன்றாமையால், அவன் இவரை நீறுபூத்த நெருப்பென்று நினையாமல் எளிதாகச் சிறுபையலென்று அவமதித்தோமே நமக்கென்ன கிரகசாரந்தான் போதாதோ, இத்தனைகாலமாய் மகாவித்வான்கள் அனைவரையும் அவர்கள்தலைக்குப்போட்டால் நாம் காலுக்கும்; காலுக்குப் போட்டால் தலைக்கும் போட்டு ரசாபாசப்படுத்திப் பட்டிமிரட்டு மிரட்டிச் செயித்துவந்தோமே; இப்பொழுது ஒரு குழந்தை கேள்விக்கு உத்தரம் சொல்ல வகைதெரியாமற் கற்றறி மூடனாய்விட்டோமே; இனி நமக்கென்ன பெருமை; பண்டிதனென்னும் பட்டமும் பறந்துபோம்; முதற்கேள்வி ஒன்றுக்காவது உத்தரம்சொன்னோமா இல்லையே; ஆயினும் அது ஒருவேளை "ஆனைக்கும் அடிசறுக்கும்" என்பதாகத் தவறியதென்று நினைக்கவுங் கூடும். ஆதலால் பெரிதல்ல. இரண்டாவதற்காவது சொல்லவேண்டுமே; அதுவும் ஈடேறாமற் போயிற்றே; போனாலும் போகட்டும், மூன்றாவதற்காவது சொல்லலாமென்றால், ராஜபத்தினி வியபிசாரியென்றல்லவோ

திருமுக மண்டலத்தைத் தர்சிக்கப் பெற்றபோது என்னுள்ளத்தில் அவர் சுத்தசத்வமயமான பரப்ரஹ்மமாம்ஶ பூதராகவே தோற்றினராகையால் நீர் ஆக்கியாழ்வானுக்காகப் பரிந்து அவர் திருவடிகளில் அபசாரப்படலாகாதென்றாள்; அதன்பேரில் அவன் பெண்ணே? இன்னுங் கொஞ்சபொழுதிற்குள் நம்முடைய சபாமண்டபத்தில் வித்வஜ் ஜனங்கள் மததியில் ஆக்கியாழ்வானெதிரில் அவர் திறமை நிலைபெறுமாகில் நீசொல்வதை உண்மையெனக் கொள்வேனென்ன; அவள் ஏனிப்படிசொல்வதோ! அவர் ஜயம்பெறுமற் போவாராகில் அந்த சமயந்தொடங்கி நானும்முடைய நாய்களுக்கு எரித்திடுந் தொழில்செய்யக்கடவேனென்று ப்ரதிக்ஞைபண்ண; அதன்மேல் அரசன் குபிதனாய் ஆக்கியாழ்வான் தோல்வி யடைவானாகில் நான் என்னுடைய ராஜ்யத்தில் யமுனைத்துறைவர்க்குச் சமபாகங்கொடுத்துவிடக் கடவேன் என்று ப்ரதிக்ஞை செய்துகொண்டான். அப்போது இராஜபத்னி அரசனைநோக்கி நீரிதைச் சபையிலறிவிக்காமலும் நிஷ்பக்ஷபாதியாயு மிருந்து தர்க்கத்தை நடத்துவதோடும் அக்காலத்தி லென்னையும் உமதருகே இருத்திக்கொண்டு ந்யாய சோதனை செய்யவேண்டுமென்ன; அவன் அதற்குஞ் சம்மதித்து, உடனே ஸிம்ஹாஸனத்தின்மீது (ஒருபுறத்தில் பட்டுத்திரை

சொல்லவேண்டும்; எவவிதத்தில் நாவெழுந்து சொல்லுகிறது. சொன்னாற் பக்கத்தார் பல்லை உதிர்க்கார்களா? மேல் அரசனைக்குறித்துப் பிறந்த இரண்டாங்கேள்வியிலும் இம் மூன்றாங்கேள்வி பழியும் பாவமும் விரோதமும் விளைக்கத்தக்கதா யிருக்கின்றதே; இதைக்குறித்து உத்தரஞ்சொல்ல வாயைத்திறக்கவுங் கூடுமோ; இந்தவிஷயம் கையுமெய்யுமாகக் கண்டுபிடிக்கப்பட்டாலும் வெளியிலே சொல்லத்தக்கதல்லவே. அரசன்மனைவி நிர்த்தோஷியாயிருக்க அவளைத் தோஷமுடையவளென்று சும்மா அவள் தலையில் வியபிசாரிப்பட்டம் கட்டலாமா; பெண் பாவமல்லவா; “மண்ணின்மேல்நின்று பெண்ணோரம் சொல்வ” தெப்படி? ஒருவர் தலையில் மாணிக்கமிருக்கிறதென்று அவர் தலையை வெட்டலாமா; நிர்நிமித்தமாகக் கங்கைகொதித்ததென்றால் நம்புதற்கு இடமுண்டோ? நாம் ஓட மருந்துண்டு உறங்கி விழுந்தாற்போலானோமே; “தன்வினை தன்னைசுடு” மென்பதாக நம்முடைய மதமே நம்மை அழித்தது; நமக்கு அடக்கமென்பது சற்றுமில்லாமற் கல்வியில் நாமே பெரியமென்று அகங்கரித்துப் பிறரைப் பொருள்செய்யாமல் அரசனது சபையிலே அவர்களை அவமானப்படுத்திவந்த அந்தக் கொடுமையல்லவோ இப்படி விளைந்து நமது வாயைக்கட்டியதென்று எண்ணாதது மெண்ணித் திக்பிரமங்கொணடு ஏங்கியிருந்தான். அதுகண்டு ராஜபத்னி மனமுருகி நான்செய்த பிரதிக்கினையை முடித்து என்மூக்கை முன்னுக்குக் கொ

யிடுவித்துப் பார்க்க வழிசெய்துவைத்து) பத்நீ ஸஹிதனாய் வீற்றிருந்து ஆக்கியாழ்வானை யழைத்து, யமுனைத்துறைவரை உம்முடன் தர்க்கிக்கவரும்படி தூண்டுமென்று ஆக்ஞாபிக்க; அவன் ஸபைமுகமாய்த் திரும்பி யமுனைத்துறைவரே! நீர் மிகவும் பால்யராய்ப் பால்சுணைமாறாத முகதேஜஸையுடைய பருவத்துக்குட்பட்டவரா யிருக்கையாலே சாஸ்த்ரவாதஞ்செய்யச் சக்திபெற்றிருப்பீரென்று ஒருவரும் நம்புவதற் கிடமில்லை; ஆகையால் லௌகிகமாய் ஒரு மூன்றுவார்த்தைகளை யுத்திபண்ணி சொல்லிக்காணீர்? அவற்றில் நீர் அன்றென்பதை நான் ஆமென்பேன்; ஆம் என்பதை அன்றென்பேன்; முடிவில்ஜெயித்தவன் தோற்றவன்தலைமீது தாடனஞ்செய்யக்கடவன்; ஆக இந்த ப்ரதிக்ஞையின்பேரில் தர்க்கம் நடக்கவேண்டிய தென்றான். அதைக் கேட்டு இவர் புன்முறுவல் செய்து முத்தனைய வாய்திறந்து

(க) த்வந்மாதா நவந்த்யா—உன்னைப்பெற்றதாய் மலடியல்ல.
(உ) ராஜாஸார்வ பௌமஃ—ராஜா சார்வபௌமன்.
(ங) ராஜபத்நீ பதிவ்ரதா—ராஜபத்நி பதிவ்ரதை.

என்னுமிம்மூன்று வாக்யங்களை யருளிச்செய்து ஐயா! ஆக்கியாழ்வாரே! இவற்றில் முன்வாக்யப்பொருளை ஆமென்றும்

ண்டுவந்தாரேயென்று பெருமகிழ்ச்சி கூர்ந்து ஆனந்தக்கண்ணீர்பெருக அக்குழந்தையாகிய யமுனைத்துறைவரைத் தன்னிருகையாலும் இறுகத் தழுவிக்கொண்டு இவர் என்னை ஆளவந்தாரோவென்று வியந்தாள். அன்றுமுதல் அவருக்கு ஆளவந்தாரென்கிற திருநாமம் வழங்கத் தலைப்பட்டது. அத்தருணத்தில் ஆனைபோலிருந்த வித்வஜனகோலாகலன் பூனைபோலொடுங்கிச் சிவுக்கென்றெழுந்து வித்வஜன கோலாகலனென்னும் இத்தனை பெரியபெயர் எனக்கேன்; எனக்கு விருதுகளும் வேண்டுமாவென்று சலிப்புற்றுத் தன் விருதுகளையெல்லாம் வாங்கி அவருக்கு முன்பாகவைத்து அவரை வணங்கிநின்றான்.

அரசன் இவைகளையெல்லாம் கண்ணாரக்கண்டு காதாரக்கேட்டுப் பிரமிப்படைந்து ஆளவந்தாரை விழிகளிக்க நோக்கிச் சுவாமி! தேவரீர் கேட்ட மூன்றுகேள்விகளில் ஒன்றையாவது நமது வித்வான் மறுக்கச் சக்தியில்லாமல் தோற்றது வாஸ்தவமே. அம்மூன்றில் ஒன்றேனும் இரண்டேனும் தேவரீரால் மறுக்கக்கூடுமோவென; அவர் மூன்றும் மறுக்கக்கூடுமென்று உத்தரிக்கின்றார்:—

பின்னிரண்டு வாக்யங்களின் பொருளை அன்றென்றும் சொல்லி உம்முடைய ப்ரதிக்ஞையை நிலைபெறச் செய்து கொள்ளுமென்றார்; அதற்கவன் அறிவை யிழந்தோமேயென்று ஐயமுற்றுவாய் திறவாதிருக்க; அப்போதிவ ரவனைப்பார்த்து நீர் நம்மைப்பால் யனென்று விடைசெய்யவில்லையோ? அல்லது வகைகாணமல் சிந்திக்கின்றீரோ? என்று கேட்டருள; அவன் நிமிர்ந்துபார்த்து நீர் சொன்னவைக்கு நீரே மாறுசொல்வீராகில் உம்முடைய பக்ஷமே ஐயமென்பேனென்றான். இவர் அப்படியே சொல்வோமென்று,

(க) த்வந்மாதா வந்த்யா—உன்னைப்பெற்றதாய் மலடியே.

(உ) ராஜா நஸார்வ பௌமஃ—ராஜா சார்வபௌமனன்று.

(ங) ராஜபத்நீ அபதிவ்ரதா—ராஜபத்நி பதிவ்ரதையன்று.

என்றார். இவ்வாறு சொல்லியதற்குக் காரணங் காட்டுமென்ன; அதற்கு,

(க) உன்னைப்பெற்றதாய் மலடியே:-எங்ஙனமென்னில்,“அபுத்ரஸ்ய கதிர்நாஸ்தி” என்கிறபடி புத்திரனில்லாதவர்களுக்குச் சத்கதியில்லையென்று சாஸ்திரஞ்சொல்லுகையாலே, உலகத்தில்

க—வது. “உமதுதாய் புத்திரவதி” என்றதற்கு உத்தரம்:—வாழையானது ஒருகுலை ஈனுவதுபோல இந்த வித்வானுடைய தாய் இவரொருவரை மாத்திரம் பெற்றதனால் “ஒருபிள்ளையும் பிள்ளையல்ல ஒருமரமுந் தோப்பல்ல” என்கிற பழமொழிப்படியே அவள் வாழை மலடியாதலால் புத்திரவதியல்ல ளென்றார்.

உ—வது. “ராஜாதர்மவான்” என்றதற்கு உத்தரம்:— “மண்டலத்தோர்கள் செய்தபாவ மன்னவரைச் சேரும். திண்டிறன்மன்னர்செய்த தீங்குமந்திரியைச்சேரும், தொண்டர்கள்செய்த தோஷந்தொடர்ந்து தங் குருவைச்சேரும், கண்டனமொழியார் செய்த கன்மமுங் கணவர்க்காமே” என்றுள்ள நீதிவாக்கியப்படியே, தேசத்தார் செய்தபாவம் அரசனை அடையுமென்பதனால், ராஜா தர்மவானல்ல வென்றார்.

ங—வது. “ராஜபத்னி பதிவிரதை” என்பதற்கு உத்தரம்:—கருஉற்பத்தியாற் சந்திரனுக்கும், விளையாட்டாற் கந்தருவனுக்கும், தீபனவிர்த்தியால் அக்கினிக்கும், முன்பு சுவாதந்திரியப்பட்டுப் பின்பு மணஞ்செய்து கொள்பவனுக்கு உரியவளாகின்ற காரணத்தால் நான்கு பகுதிகளை யுடையவளாதலாலும்,

“அன்றியுங் கனலிசான்ற யல்லது வதுவையாற்றற்
கொன்றுமோ வருணனெவ்வா துதகமோ டளிக்குந்தூய
மன்றலெவ் வாறுமுற்றும் வானவ ரருளில்லாமற்
றுன்றுநீர்ப் புவியிற்பார்க்குஞ் சூழ்வினை முடிக்கலாமோ”

மாதாபிதாக்கள் சத்கதியை யபேக்ஷித்துச் சந்தானம் வேண்டித் தபஞ்செய்வது உபவாசமிருப்பது திவ்யதேசவாஸ புண்யநதி ஸ்நானஞ்செய்கிறது தொடக்கமான ப்ரயாசைகளை வெறுப்பின்றிப்படுகிறார்கள். இங்ஙனமிருக்கையில், புத்ரனாய்த் தோன்றினவன் அவர்களுக்குக் கதியளிக்கைக்குறுப்பான ஒழுக்கங்களையுடையனாயிராமல் வீணிற் காலங்கழிப்பானாகில் அவர்கள் கருத்து தலைக்கட்டினதில்லை; அஃதில்லையானபோது அவர்கள்புத்ரனில்லாதவர்களோடு ஒப்பிடப்படுவார்களன்றோ? இதைப்பற்றப் பரஹிம்சையில் ஆசக்தியுடையவனாய்த் துராஹங்காரியாயிருக்கு மும்மைப்பெற்றவள் எக்கதியு மடையப்போகிறதில்லையென்பது சித்தமாகையால் அவளும்மைப்பெற்றும் மலடியாயினளென்றோம். அன்றியும் ஸ்த்ரீகளுடைய உள்ளத்தை ப்ரதிமாதமும் வெளிப்படுகிற க்ரமமொழிந்து, நாலாறுமாதகாலம் கட்டுப்பட்டுவெளிநோக்குமானால் எப்படிஉபத்ரவத்தைத்தந்து அஸஹ்யமாய்க் காணப்படுமோ அப்படியே "பெற்ற தாயார் வயிற்றினிற் பெருநோய் செய்வான் பிறந்தான்" என்பதற்கொக்க, நீரும் பத்துமாதகாலம் கட்டுப்பட்டிருந்து மஹோபத்ரவத்தை விளைத்து வெளிவந்து ஸஜ்ஜனங்களுக்கு அஸஹ்யமாய்த் தோன்றுகிறீ ரத்தனையல்லது பிறந்தாரோடு சேர்த்தியில்லை; உமது தாயும் பெற்றாரோடு சேர்ந்ததில்லை என்றும்,

(உ) அரசன் சார்வபௌமனன்று:- எங்ஙனமென்னில் இவ்வரசன் ஸர்வதோ திக்கும் ஆள்பவனன்று; எதிரிவந்தபோது இளைத்தோடும் ஒருவனாகையாலும் ப்ரஹ்மாதிகளுக்கு நாயகனாகாமையாலும் ஸார்வபௌமத்வ மிவனுக்கில்லை; அன்றியும் "ராஜாராஷ்ட்ரக்ருதம் பாபம் ராஜபாபம் புரோஹித" என்கிறபடி தன்னுடைய தேசஜனங்களைப் பாபக்ருத்யங்கள் செய்யா

என்றவாறே, மணஞ்செய்யுங்காலத்தில் அக்கினி வருணன்முதலிய பஞ்ச தேவர்களுக்கு அவள் சமர்ப்பிக்கப்படுதலாலும் ஸ்திரீக்குப் பதிவிரதா பங்கம் வருகின்றதென்றார்.

இவ்வண்ணமாக ஆளவந்தார் வித்வஜன கோலாகலனை முன்பு கேட்ட மூன்று கேள்விகளையும் பின்பு தாமே சாஸ்திரசம்மதமாகவும், உலகத்தாருக்கு அங்கீகாரமாகவும் மறுத்துரைக்கக்கேட்டுப் பாண்டிய ராஜனானவன் சிறுபாலகனாகிய இவர் இத்தனை அருமையும் பெருமையுமாகியகேள்வி உத்தரங்களையெல்லாம் எப்படி உணர்ந்துரைத்தார்;

திருக்கப் பார்க்கவேண்டியது அரசன்கடமை; அதில்நினைவுவை யாகுகில் அவர்கள் செய்யும் பாபமெல்லாம் இவனையே சேரு மென்றும், அப்படி பாபத்திற்காளாகும் அரசனுக்குக் காலமறி ந்து அதைத் தெரியக்காட்டித் திருத்தவேண்டியது புரோஹி தன் கடமையாயிருக்க அங்ஙனம் செய்யாதொழிந்தால் அரச னுடைய பாபம் இவன் தலையேட்டி லெழுதப்படுமென்றும் சாஸ்த்ரஞ்சொல்லுகையால், உம்மைப் புரோகிஹிதராகவைத் துக்கொண்டு உமதுபுத்தியைக்கேட்டு அதின்படி நடப்பவனுகிற போது தர்மசாஸியென்று சொல்லவுங்கூட விடமில்லை என்றும்,

(ந) இராஜபத்நி பதிவ்ரதையன்று:-எங்ஙனமென்னில், எப் பொழுதும் பதியினுடைய க்ஷேமத்தில் நோக்குடையவளாய் அவன்சொல்லுக் கெதிர்சொல் லிளைக்காதவளா யிருக்குமவளை யே பதிவ்ரதையென்று சொல்வதாயிருக்க இந்த ராஜபத்நி தன் னுடைய பதிக்கு க்ஷேமபீடமான ஸிம்ஹாசனத்தை இரண்டு கூறுக்க வகைகண்டு அதை முடிக்குமளவும் மஞ்ஞபீஷ்டமாருத வளாய் இந்தச் சபையிலும்வந்து நம்பக்கல் சாக்ஷிபூதையாயிரு ந்தால் எப்படி பதிவ்ரதையென்னலாம்; அன்றியும் பர்த்தாவின் வாக்கே பத்னிக்குப் பற்றுக்கோடாக இருக்குமென்று தர்ம சாஸ்த்ர முரைத்திருக்க, இந்த ராஜபத்நி தன்னுடைய பர்த்தா வின் வாக்கில் நிச்சயங்கொள்ளாமல், கைமேல் கைதட்டிச் சத் யம்பண்ணிக்கொடுக்கக் கேட்டிருக்கையால் பதிவ்ரதையென்ன விடமில்லையே என்றும் சாதித்தருளினர்.

தாமுரைத்தவைகளைத் தாமே மறுக்கவும், மறுத்தவைகளை ஸ்தாபிக்கவுந் தக்க பரமசத்தி இவருக்கு எங்கிருந்து உற்பத்தியாயிற்று; மேலும் நமது வித்வான் தாய்க்கு ஏகபுத்திர விஷயமென்பது எவ்விதத்தில் தெரியவந் தது. அது ஜோதிஷத்திஞல் அறியலாமென்றால் அவர் சாதகத்தையும் இவர் பார்க்கவில்லையே; ஆதலால் அசாத்தியம் அசாத்தியமென்று பல முறையும் நினைத்து ஆச்சரியவெள்ளத்தில் மூழ்கி, பூர்வம் போஜராஜ சமஸ்தானத்திலிருந்த காளிதாசன், தண்டி, பவபூதி முதலாகிய சமஸ் கிருத வித்வான்களும், இந்தமதுரையில் தமிழ்ப்புலமை செலுத்தியதெய் வீகம் வாய்ந்த சங்கப்புலவர்களும் இவருக்கு ஒப்பல்லர்; இவர் சரஸ் வதி விக்கிரகமாயும், அவதார புருஷராயு மிருக்கின்றரென்று பிரமா னந்தமடைந்து, ரகசியத்தில் தன் பத்தினிக்கெதிரே தான் நிருணயித்த படி தன் இராச்சியத்திற் பாதிகொடுத்தான்.

அப்போது ராஜனும் ராஜபத்நியும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்து நாம் அந்தஃபுரத்தில் செய்துகொண்ட ப்ரதிஜ்ஞையை இவர் அறிந்துகொண்டவா றெங்ஙனமென்று ஆச்சர்யமடைந்து இவர் ஸர்வஜ்ஞராகவேணுமென்று உறுதிகொண்டு இவர் திருவடிகளையே நோக்கிக்கொண் டிருந்தார்கள். ஆக்கியாழ்வானும் இவரை ஸர்வஜ்ஞரென் றறியாமற் போனோமே யென்று மனந்தளர்ந்து மௌனமாயிருந்தான். அனந்தரம், இவர் ஆக்கியாழ்வானைநோக்கி நீரிதற்குள்ளாகச் சோர்வடையவேண்டாம்; உம்முடைய வேண்டுகோளால் நாம் சொன்னது மூன்றுவாக்யங்களானால், நம்முடைய வேண்டுகோளால் நீருஞ் சிலசொல்லி ஜெயிக்கப் பார்க்கவேண்டுவதில்லையோ! நீர் தொடக்கத்தில் தானே நமக்குச் சாஸ்த்ரங்களிற் ப்ரவேசமுண்டோ இல்லையோவென்று சந்தேகித்தீரே! இனி "அஸாரமல்பஸாரஞ்ச ஸாரம் ஸாரதரம்" என்கிறபடியே அஸாரசாஸ்த்ரம்-அல்பஸாரசாஸ்த்ரம்-ஸாரசாஸ்த்ரம்-ஸாரதரசாஸ்த்ரம் என்றுள்ள நால்வகைச் சாஸ்த்ரங்களுள் மூன்றுஐந்துஅல்லது ஏழுவாக்கியங்கள் கடாவி நம்மை ஜெயிக்கலாகாதோ! என்ன; அவன் கிஞ்சிற்று தைர்யசாலியாய் நிமிர்ந்துபார்த்துச் சாஸ்த்ரங்களில் பொருள் விள்ளாத சிலவாக்யங்களை ஆய்ந்தெடுத்துக்கடாவியும் தக்கபடி இவர் விடைசெய்ததினால் தோல்வியடைந்து தலையிரக்கங்கொண்டு நிலத்தைக் கீறிக்கொண்டிருந்தான்; அப்போது, அரசனே தொடக்கமான கோஷ்டிகளனைவரும் இவர்பக்ஷத்தில் ஜயங்கூறினார்கள். இவர் ஆக்கியாழ்வானைப்பார்த்துக் குஞ்ஜரபீகரமென்கிற இந்தஸிம்ஹம் குண்டுசட்டியின் கீழடங்கும் பூனையாய் விட்டதேயென்று அவன்விஷயத்திலிரங்கி ஐயா பண்டிதாக்ரேசரே!

ஸ்ரீஆளவந்தார் அந்த ராசசியத்தை வகித்து நெடுநாள் அரசாண்டு வருகையில், இவருக்கு முன்னடியார் பின்னடியார் யாவர்க்கும் பரமாசார்யராகிய ஸ்ரீமந் நாதமுனிகள் நியமனப்படி, ஸ்ரீராம மிஸ்ரரென்னும் மணக்கால் நம்பிவந்து ஆளவந்தாருக்கு மிகவிருப்பமாயும் ஞானசாதனமாயு மிருக்கின்ற தூதுளங்கீரை எவ்விடத்திலிருந்தாலும் தேடிக்கொய்துகொடுத்துக்கொண்டிருந்தார். அதை மடைப்பள்ளியில் தளிகைசெய்பவர்கள் வாங்கித் துவையலரைத்துப் பரிமாற, ஆளவந்தார் இஷ்டமாய்ப் புசித்துவந்தார். இப்படி ஐந்தாறுமாதம் நடந்தும் அவர் ஏதென்று கேளாமையால் பிறகு சிலநாள் அந்தமணக்கால் நம்பி அதைக் கொண்டுவந்து கொடாதிருந்தார். அன்று ஆளவந்தார் தூதுளங்கீரைத் துவையல் ஏன் பரிமாறவில்லை யென்றார்? இன்றைக்கு அந்த வைஷ்ணவர் கொண்டுவந்து கொடுக்கவில்லையென்று பாகஞ்செய்வோர்சொல்ல;

நீர் சோகிக்கவேண்டாம்; லௌகிகத்தில் ஒரு ப்ரபுவாலபிமானிக்கப் பட்டிருப்பவனும் வயோவ்ருத்தனா யிருப்பவனும் எக்காரியத்தைச் செய்யினும் தாக்ஷண்யத்தையும் தயவையும் கம்பீரத்தையும் முன்னிட்டுக்கொண்டு குற்றங்காணார்கள்; அதை நீர் நன்றாக வுணர்ந்திருப்பவராகையாலே, நாம் அரசனபிமானவர்த்தியா யிருப்பதினால் இந்தச் சிறுவனைத் தாடனஞ்செய்தனுப்பி விடலாமென்றெண்ணி இவ்வித ப்ரதிக்ஞையை நீரே மேல்விழுந்து செய்துகொண்டீர்; நாம் ஒன்றையும் நினைத்ததில்லையாகையாலும் நீர் வயோதிகராகையாலும் சிறியார் பெரியார் என்கிறவரம்பு சாமான்ய வகுப்புக்கும் அவஸ்யாபேக்ஷிதமாயிருக்க நாம் அதிக்ரமிப்பது கூடாதாகையாலும் உம்மைத் தாடனஞ்செய்யோ மென்றருளிச்செய்தார்; அப்பொழுது இராஜசபையிலிருந்த மேதாவிக ளெல்லோரும் இவருடைய செப்பமிருந்த படியைப்பார்த்துச் சந்தோஷித்து, ஆக்கியாழ்வானுடைய விருதுகளைப் பிடுங்கிவிட்டு இவரை ப்ரஹ்மரதங் கண்டருளச் செய்துகொண்டு அரண்மனைக்குள் எழுந்தருளுவிக்க; அவ்வளவிலே இராஜபத்நியோடிவந்து “என்னை ஆளவந்தவரோ” என்றுசொல்லிக் கட்டிக்கொண்டு முத்தமிட்டு த்ருஷ்டிசாந்திகள்செய்து அந்தஃபுரத்திற் கழைத்துக்கொண்டுபோய்ப் பர்த்தாவுந் தானுமாக விருந்து இவருடைய திருவாக்கால் சில இன்பப் பாக்களைக் கேட்டுமகிழ்ந்து அனந்தரம் சபாமண்டபத்துக்குவந்து மந்த்ரிகள் முன்னிலையில் இவருக்கு ராஜ்யத்தைப் பாகித்துக்கொடுக்கவேண்டியதற்குறுப்பான சாஸனங்களையெல்

ஓ! ஓ! அவர் ஆரோ? எது நிமித்தமோ தெரியவில்லை; அபசாரம் வந்ததேயென்று அனுதாபப்பட்டு நாளைக்குவந்தால் நம்மைக்கண்டுபேசிப் போகச்சொல்லுங்களென்று நியமித்தார். மற்றை நாள் அவர் நாம் தூதுளங்கீரையைக் கொண்டுபோய்க்கொடாது நிறுத்தினதனால் யாமுனாரியருக்குக் கேள்வியாயிருக்கலாம்; இன்றைக்கு நமது மனோரதம் முடியுமென்று வழக்கப்படி தூதுளங்கீரை கொண்டுவந்தபொழுது ஆளவந்தார் அவரைக்கண்டு எங்கிருந்துவந்தீர்? உமது திருநாமம்யாது? என்னகாரியார்த்தமாய் இங்ஙனம் நடத்தி வருகிறீரென்ன ? அவர் நாம் மணக்காலென்னும் ஊரில் வசிக்கும் காரணத்தால் நமக்கு மணக்கால்நம்பி யென்றுபெயர். நமது பிதாமகனாராகிய ஸ்ரீமந்நாதமுனிகள் தேகவியோகமாகுங்காலத்தில் அவரது ஆர்ச்சிதமாகிய திரவியநிட்சேபத்தை எமது ஆசாரியரதுஅடைக்கலத்தில்வைத்து இதைநம்முடையபேரனாரிடத்தில் ஒப்புவிக்க வேண்டுமென்று நியமித்துப்போனார். அதை உம்மிடத்திற் சேர்ப்பிக்கும்பொருட்டுநம்பெருமாள்கோயிலிலிருந்துவந்தோமென்றார்.

லாம் செவ்வையாகச் செப்பேட்டி லெழுதிச் சமர்ப்பித்து நல்ல முஹூர்த்தம் குறித்து நாடும் நகருமறிய சிங்காதனத்தில் வீற்றிருக்கச்செய்து அர்த்த ராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்து வைத்தார்கள்.

அனந்தரம், சில வருஷங்களுக்குமேல் இவருக்கு ஈஶ்வர முனிகள் திருக்கல்யாண மஹோத்ஸவஞ் செய்துவைத்து, இவர் பத்நீஸஹிதராய் ராஜபோகத்திலமர்ந்து வாழுங்காலத்தில், இவர் அவதாரவைபவத்தைப்பற்றியும் மணக்கால் நம்பிகளிடத்தில் உய்யக்கொண்டார் இவருக்காகச் சில புருஷார்த்தங்களை யிட்டுப் போயிருப்பதைப்பற்றியும் ஸூக்ஷ்மமாயறிவித்துவிட்டுத் திருநாட்டுக்கெழுந்தருளினார். இவரவருக்கு ப்ரஹ்மமே தஸம்ஸ்காரந்தொடக்கமான சகல கைங்கர்யங்களையும் விதிப்படி செய்தருளினார்; அதன்பின்பு சிலநாளைக்குமேல் இவருக்குத் திருவரங்கப்பெருமாளரையர் - தெய்வத்துக்கரசு நம்பி - பிள்ளையரசு நம்பி-சொட்டைநம்பி என்கிற நான்கு புத்ரர்களுண்டாக, நிகரற்ற சந்தோஷத்தையுடையவராய் ராஜ்யபரிபாலனஞ் செய்து கொண் டிருந்தார்.

ஸ்ரீமணக்கால்நம்பி வைபவம்—(தொடர்ச்சி).

இச்செய்தியை ஸ்ரீமணக்கால்நம்பி கேட்டருளிக் கொண்டைகோல்கொண்டு கூத்தாடி, இவரைக் காணவேணுமென்று பேராசைகொண்டு, ராஜஸ்தானத் தேறவெழுந்தருளி, அங்கே

ஸ்ரீஆளவந்தார் அந்த நிட்சேபதனம் எப்படிப்பட்டது? எவ்வகையாற்காண்பது? என்னஉபாயத்தாற் கைவசமாம்? எவ்விடத்திலுள்ளது? வெளியிடவேண்டுமென்ன; மணக்கால்நம்பி அவரைநோக்கி அரசர்முதலானவர்களிடத்திலுள்ள நிதிபோல வெள்ள முதலானவைகளால் அதற்கு அபாயமில்லாமையால் அது அழியாநிதி; நிரஞ்சனதிர்ஷ்டியாலன்றி அஞ்சனதிர்ஷ்டியாற் காணப்படாதது; பிருகபலி நரகபலி இடவேண்டுவதில்லை; வெறும் பசிலையைக் கிள்ளியிட்டு எளிதிற் கைப்பற்றிக் கொள்ளலாம்; இரண்டாற்றுக்கு நடுவே ஏழுசுற்றுக்கோட்டைக்குள் பிரணவ பீஜயந்திரத்திலிருக்கிறது. அதை ஒருபாம்பு சுற்றிக்கொண்டு நிற்கிறது; பன்னிரண்டு வருஷத்திற்கு ஒருமுறைஅவ்விடத்திற்குத் தென்சமுத்திர மத்தியிலிருந்து ஒரு ராட்சதன் வந்து அதைப் பார்வையிட்டுப் போவதுண்டு. இத்தன்மையாயிருக்கின்ற நுமது பிதிரார்ச்சிதமாகிய க்ஷேமதிரவியத்தை நாம் எத்தனைகாலமாய்ப் பாதுகாத்து வருவோம். இனித்தாம் கிருபை செய்துவந்து கைப்பற்றிக் கொள்ளவேண்டுமென்னார்.

ராஜபதமாய்க் கட்டுங்காவலுமா யிருக்கையாலே ஸ்ரீஆளவந்தாரைக் காணக்கூடாமையாக ஏக்கமடைந்து திருமடைப்பள்ளிக்குப்போய்த் திருப்போனகஞ்செய்கிற ஸ்ரீவைஷ்ணவரைப்பார்த்து, ஸ்ரீஆளவந்தார் விருப்பமா யமுதுசெய்யுங் கறியமுது எதுவென்றுகேட்டுத், தூதுளை இலைக்கறியமுதென்று தெரிந்துகொண்டு, அதை ஆறுமாஸகாலவரை நித்யப்படி பறித்துக்கொண்டுவந்து ஸமர்ப்பித்துக் காத்திருந்தும் கார்யகரமாகாதிருக்க நாலுநாள் அந்த கைங்கர்யத்தை விட்டிருந்தார்; அந்நாளில் ஸ்ரீஆளவந்தார் அமுது செய்யும்போது பரிசாரகனைப் பார்த்துத் தூதுளையின்றிக்கே யிருப்பானேனென்று கேட்டருளப் பரிசாரகன் ஸ்வாமீ! ஒரு வ்ருத்த ஸ்ரீவைஷ்ணவர்ஆறு மாஸகாலமாய் ப்ரஸாதித்துக்கொண்டுவந்து ஏனோ இப்போது தவிர்ந்திருக்கின்றாரென்று விண்ணப்பஞ்செய்ய; அதைக்கேட்டு விஸ்மயப்பட்டு, இனி அவர் வருவாராகில் நமக்கறிவியுமென்று நியமித்தருளினார்; இங்ஙனமிருக்கையில் நம்பி மறுநாட்காலையில் மடைப்பள்ளிக்கெழுந்தருளப் பரிசாரகனோடி ஸ்ரீயாளவந்தாருக்கறிவிக்க, அவர் இவரை அழைத்துவாருமென் றருளப்பாடிட்டு எழுந்தருளுவித்துப்ரத்யுத்தாநாபிவாதநபூர்வகமாய்த்திவ்யாசனத்தில் வீற்றிருக்கச்செய்து ஸ்வாமீ! நீரித்தனை நாளும் நமக்குத் தூதுளை இலைக்கறியமுதிட்டது த்ரவ்யம்வேண்டியோ? அல்லது க்ஷேத்ரம் வேண்டியோ? வென்று கேட்டருள; உம்முடைய பூர்வர்கள் தேடின அர்த்த க்ஷேத்ரங்களை உமக்காக நம்மிடத்தில்வைத்துப்போயிருக்க, அவற்றைநாம் உமக்குக்கொடுப்பதை

திரவியமென்ற மாத்ரத்தில் ஆளவந்தார் அரசாள்பவராகையாலும்; பாட்டனுடைய ஸ்திதியாகிய பைத்ருக தனத்திற்குப் பேரன் உரியவனென்பதனாலும், அதன்மேல் அபேக்ஷைகொண்டு ஏதோ அதைக்காண்பியும் வருகிறோமென்று தமது பரிசனங்களுடனே பிரயாணப்பட்டார். மணக்கால்நம்பி இந்தக் கூட்டத்தை நிராகரித்து நீர் மாத்திரம் வந்தாற் காண்பிக்கிறோமென்ன; அப்படியே அவர் தனித்துவர அழைத்துப்போய்த் திருவரங்கம் பெரியகோயிலிலே சயனத் திருக்கோலமா யெழுந்தருளிய எம்பெருமானைக்காட்டி, உங்கள்பாட்டனார் நம்முடைய அடைக்கலமாக வைத்து உமதுவசம் ஒப்புக்கொடுக்கும்படி நியமித்த பரம தனத்தைப் பாருமென்றார்.

ஆளவந்தார் திருவரங்கநாதனைச்சேவித்துப் பரவசமாய் இந்த மகானுபாவருடைய குணப்பிரபாவத்தை என்னவென்று வர்ணித்து ஸ்துதி

யொழிந்துநீர்தேடியிருப்பதிலும்நாட்டம்வைத்துவருவோமோ? அங்ஙனமில்லை; உம்முடைய பிதாமஹரான ஸ்ரீமந்நாதமுனிகள் நீரவதரிக்கப் போகிறீரென்று † தீர்க்கதரிசனம்பண்ணி எமதாசார்யரிடத்தில் அவர் தேடினதையெல்லாம் வைத்து உமக்குக் கொடுக்கும்படி நியமித்துத் திருநாட்டுக் கெழுந்தருள, அவரும் தாமிருந்த காலவரையில் நீர் அவதரிக்கப் பெறுமையாலே, அவற்றை நம்மிடம் காட்டிக்கொடுத்துப் போயிருக்க, நாமும் வ்ருத்ததசையை யடைந்துவிட்டதால் உம்முடைய அவதாரம் லபிக்குமோ லபிக்காதோவென் றையுற்றிருக்கிறநாளில்அவதரித்தீர்; அதுகண்டு நாம் அஸ்மதாசார்ய பரமாசார்யர்களுடையஆக்ஞாகைங்கர்யத்தைச்செய்து உகப்பிக்கப்பெறுவோமென்று சந்தோஷித்து உமக்குப்பருவம் நிரம்பினவாறே காட்டிக்கொடுக்க வெண்ணியிருக்கையில் நீர்இந்தப்பதவியைப்பெற்றீரென்றுகேள்விப்பட அந்தச் சந்தோஷமானது பின்னுங் கிளர்ந்து நமது சிந்தையைத்தூண்ட, அங்கிருந்தும் புறப்பட்டு இங்கேறவந்தோம்; வந்தவிடத்தில் கட்டுங்காவலுமாக விருக்கையால் உம்மைக் காணக்கூடாமையாக,இனியென்னசெய்வதென்றுலோசித்துஇங்ஙனமாவதொருகைங்கர்யத்தைமுன்னிட்டுக்கொண்டு காத்திருந்தால், இதன்மேல் என்றாவதுஒருநாளில்விசாரமுண்டாகிக் காணவாய்க்குமென் றெண்ணிச் செய்து போந்தே னித்தனையல்லது வேறொன்றையும் நாடிச்செய்தே னில்லையென்று அருளிச்

† தீர்க்கதரிசனம்—எதிர்காலத்திலுண்டாவதையறிந்துசொல்லுதல்.

செய்கிறதென்பதாய், அத்தியவசாயத்தோடேமணக்கால்நம்பி தம்பக்கல் எழுந்தருளியதுமுதல் அவர் தமக்கு ரங்கதாமனைக் காட்டிக்கொடுத்தது வரையில் நிகழ்ந்தவையாவையும் ஒவ்வொன்றாக நினைவு கூர்கின்றார்.

பங்கனிருக்கு மிடத்தைத்தேடிக் கங்கை வந்ததுபோல இந்த ஸ்ரீவைஷ்ணவசீலர் ஈஷணாத்திரயமாகியசேற்றில் அழுந்திக்கிடந்த அசேதனனென்னும்அடியேனைப்பொருள்செய்துதாமேவந்துசந்தித்து,கரும்பு தின்னக் கூலிகொடுப்பதுபோலத் தூதுளங்கீரையைத் தேடிக்கொண்டு வந்துகொடுத்து, எனக்குத் தத்துவஞானம் உதயமாகிப் பரிபாகம் வருமளவும்காத்திருந்து, "மண்தின்னும் பிள்ளைக்கு மருந்தூட்டத் தின்பண்டம் காட்டிச் செல்வத்தாய் அழைப்பது" போல உங்கள் பிதிரார்ச்சிதமாகிய பணப்புதையல் இருக்கின்றது வந்து கைக்கொள்ளுமென்றார். அதன் கருத்து நாயேனுக் கப்பொழுது சாதாரணமாகிய லோகதிரவியமென்றேதோன்றிற்று.இப்பொழுதோசகலபுவனகர்த்தாவாகியசாக்ஷாத்

செய்தார். ஸ்ரீ ஆளவந்தார் இத்தனையுங்கேட்டு எழுந்து இவர் திருவடிகளில் வீழ்ந்து அடியேனுக்கவற்றைத் தேவரீருடைய திருவுள்ளப்படியேப்ரசாதித்தருளவேண்டுமென்றுப்ரார்த்திக்க; நம்பி, மஹா சந்துஷ்டராய் அப்பனே! என்று வாரியணைத்துக் கொண்டு, அந்நிதியும் க்ஷேத்ரமும் ஒருநாள் இரண்டு நாளளவில் காட்டிக் கொடுக்கப்படுமவையல்லவே! நாளுக்குநாள் க்ரம க்ரமமாகக் கொடுத்துவரவேண்டியதாகையாலே, நாம் அவற்றை உமக்குச்செலுத்துமளவும் நித்யமாக உம்மிடத்தில்வந்து போம்படி க்ருபைசெய்து, வாசல் தகையாதபடிக்கு த்வாரபாலகருக்கு ஆக்ஞையிட்டு வைக்கவேண்டுமென்ன; அப்படியேகட்டளையாக; நம்பி நித்யமும் ஸ்ரீ ஆளவந்தார் பக்கல்வந்து வேதங்களின் ஸாரமான ஸ்ரீபுருஷ ஸூக்தத்தையும், ஸ்மிருதிகளில் ஸாரமான மனுஸ்ம்ருதியையும், புராணங்களில் ரத்நமான ஸ்ரீவிஷ்ணு புராணத்தையும் நன்றாகவருளிச் செய்து, அனந்தரம் இவையனைத்தையும் கைப்படுபொருளாகக் காட்டிக் கொடுக்கும் ஸ்ரீ பகவத்கீதையின் பதினெட்டு அத்யாயங்களை விசித தமமாக வருளிச்செய்ய; இவரந்த ஆரணஸாரத்தை க்ரஹித்து நாளுக்கு நாள் ஆர்த்தியுடையவராய் நம்பியைத்தொழுது ஸ்வாமீ! இதிற் சொல்லப்படுகிற வஸ்துவைக் காணலாகு முபாய முண்டோ வென்று கேட்க; நம்பியும் உண்டென்று சாதித்து ஏகாந்த ஸ்தலத்தில் வைத்துக்கொண்டு, "மெய்ம்மைபெறுவார்த்தை" யான சரமஶ்லோகார்த்தத்தைச்சாதித்தருள; அதைக்கேட்டு(நெல்லுக்குப்பால்பிடிக்கக் கதிர்கனத்துத்தலைவணங்குமாபோலே) சரணு

சுவாமியாய் விளங்குகின்றது. பின்பு பரமகாருணியராகிய இவரை நோக்கி அந்தத் திரவியம் பொன், வெள்ளி; ரத்தினத்தோடு சம்பந்தப் பட்டதோ, அல்லது நகைநாணயங்களா யிருப்பதோ வென்னும் கருத்து கொண்டு நான் அது எப்படிப்பட்டதென்ன? மற்றநிதிபோல நசுவரப்பவெதல்ல; அழியாநிதியென்றார். அதனால் அவ்வீஶ்வரனும் நிருபாதிகநித்தியனுமாமென்று பொருள்படுகின்றது. அதன் பின்பு நான் மண்ணிற் புதைத்ததிரவியம் மறைந்துபோகுமென்பதனால் அதை எவ்விதத்தாற்காண்பதென்ன? நிரஞ்சன திர்ஷ்டியாலன்றி அஞ்சனதிர்ஷ்டியாற் காணப்படாதென்றார்; என்றதனாற்சர்வாந்தரியாமியானவன் அஞ்ஞானிகளுக்கன்று மெஞ்ஞானிகளுக்கே பிரசன்னமாவானென்று விளங்காநின்றது. பிறகு புதைப்பொருளைப் பூதங்காக்குமென்பதனால் அது எனக்கு என்ன உபாயத்தாற் கிடைக்கு மென்ன?பலியிடவேண்டுவ தில்லை பச்சிலையைக்

கதி நெஞ்சில்தேங்கிச் சுத்த சாத்வீகந்தலைப்பெய்ய; ஆனு
கூல்யமிருந்து ஹிரண்யவிஷய ப்ராவண்யாதிசயத்தாலே ஸம்
ஸாரத்தில் அருசிபிறந்துவிட; நம்பியும் அதுகண்டு இவரைக்
கூட்டிக்கொண்டு "நசஜ்ஞாநஸ்ய ஸங்கோசஃ நசைவயமஹோ
சரஃ-தஸ்மாத்ரங்கம் மஹாபுண்யம் கோநஸேவேத புத்திமாந்"
என்கிறபடியே ஜ்ஞானவர்த்தகமாய், நமன்றமரால் ஆராயப்
பட்டறியாததாய்ப் புண்யவர்த்தகமுமாயிருந்துள்ள திருவரங்கம்
பெரியகோவிலுக் கழைத்துக் கொண்டுபோய்ப் பெரிய பெரு
மானைத் திருவடிதொழச்செய்து "நிதிரவ்யயஃ" என்கிறபடியே
உங்கள் பூர்வர்கள் தேடிவைத்த க்ஷேத்ரமும் நிதியும் இவையே
காணுமென்று கோயிலையும் பெரியபெருமாள் திருவடிகளையும்
காட்டியருளினார்.

ஸ்ரீ யமுனைத்துறைவர் வைபவம்—(தொடர்ச்சி).

ஸ்ரீ ஆளவந்தார் பெரியபெருமாளுடைய "முடிவில்லதோ
ரெழில் நீலமேனியைப்" பாதாதிகேசம் கேசாதிபாதமாகச்சேவி
க்கையில் பெரியபெருமாள் தன்னுடைய அகவாயிலுள்ள தண்
ணளியையும் செறிவையும் நன்றாக ப்ரகாசிப்பிக்க, இவர் அவ்வடி
வழகிலுருகிப் "பழுதே பலபகலும் போயினவென் றஞ்சியழுதே
னரவணைமேற்கண்டுதொழுதேன்" என்கிறபடியே கழிந்தநாள்
களுக்காகவருந்திக்கண்ணுங் கண்ணீருமாயுருகி அரங்கத்தம்மானை

கிள்ளியிட்டுப்பற்றிக்கொள்ளலாமென்றார்; அக்குறிப்பு அந்தப்பரமாத்மன்
திருத்துழாயால் அர்ச்சித்தவர்களுக்குச் சுவாதீனப்படாமற் போகானெ
ன்பதாயிற்று. மற்றும் காடோமலையோகாணுமோ அது இருக்குமிடமென்
றெண்ணி நான் எவ்விடத்தி லுள்ளதென்ன? இரண்டாற்றுக்கு நடுவே
யென்றார். அது தென்காவிரி வடகாவிரியாகிய உபயகாவிரிக்கு மத்திய
மென்றும்; ஏழுசுற்றுக்கோட்டையென்றார், அது சப்த பிராகாரங்களாற்
சூழப்பட்ட திருவரங்கக்கோயிலென்றும்; பிரணவபீஜயந்திரமென்றார், அ
து ஓங்காரவிமானமென்றும்; பாம்புசுற்றியிருக்கின்றதென்றார், அது சேஷ
சயனமென்றும்; ஒருராட்சஸன்வந்து பார்வையிட்டுப்போகிறானென்றார்,
அங்கே விபீஷண ஆழ்வார் துவாதச வருஷத்திற்கு ஒருகால் வந்து
சேவித்துப் போகிறாரென்றும்; இந்தத்தனத்தை உங்கள் பிதாமகனார்
உமக்கு ஒப்புக்கொடுக்கச்சொன்னாரென்றார், அது சுவாமிகைங்கரியத்தை
உள்ளிட்ட பிரபத்திநிஷ்டையைக் கைக்கொள்ளும்படி ஸ்ரீமந்நாதமுனிக
ளால் நியமிக்கப்பட்டதென்றும் குறிப்பித்தவைகளா யிருக்கின்றனவெ
ன்று நிச்சயித்துணர்ந்து, இவர்செய்த பரமோபகாரம் ஆர் செய்வார்க

யனுபவித்துப் "பிறந்தார்பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம்துற
ந்தார்தொழுதாரத்தோள்" என்கிறபடியே "க்ஷேத்ராணி மித்ரா
ணிதநாநிநாத புத்ராஸ்சதாரா: பஸவோக்ருஹாணி - த்வத்பாத
பத்ம ப்ரவணாத் மவ்ருத்தேர்பவந்திஸர்வேப்ரதிகூலரூபா:" என்
கிறபடி ஸ்வாமி! ஆத்மயாத்திரைக்கு நிலமாயிருக்கிற தேவரீரு
டையதிருவடித்தாமரைகளில் ப்ரபத்திசெய்கிறவர்களுக்குப்பசு-
பத்நி-புத்ர-மித்ர-தன - க்ருஹ-க்ஷேத்ராதிகள் ப்ரதிகூலங்களாக
விருக்குமன்றோ? வென்றருளிச்செய்து "ஸர்வஸங்காந் பரித்ய
ஜ்ய"என்கிறபடியே ஸர்வஸங்கபரித்யாகபூர்வகமாக ‡ஆஸ்ரமப்
ராப்திபண்ணியருளி, "அண்டர்கோனணியரங்கனென்னமுதினை
க்கண்ட கண்கள்மற்றொன்றினைக்காணாவே"என்கிற திருப்பாணா
ழ்வாரைப்போல நினைவைப்பெருக்கிப் "பரமாத்மநியோரக்தோ
விரக்தோ பரமாத்மநி" என்கிறபடியே அபரமாத்ம வைராக்யம்
பூண்டு, பரமாத்மாசக்தசித்தராய் எழுந்தருளியிருந்தார்; அக்கா
லத்தில் இவர் திருவடிகளில் பெரிய நம்பி-பெரிய திருமலைநம்பி-
திருக்கோட்டியூர்நம்பி-மாறநேர்நம்பி-திருக்கச்சிநம்பி-திருமாலை
யாண்டான்-வானமாமலையாண்டான் - தெய்வவாரியாண்டான்-
ஈசனாண்டான் - ஜீயராண்டான் - ஆளவந்தாராழ்வான்-திருக்குரு

‡ ஆஸ்ரமப்ராப்தி=சன்யாசம்பெற்றிருக்கை.

ளென்றும்,யாதொருசாதனமுமில்லாமல்தாபத்திரயாக்கினியால்தகிக்கப்
பட்டுக் கேவலம்அசத்தனாயிருக்கின்ற எளியேற்கு 'முடவனுக்குக்கொம்
புத்தேன்கிடைத்தது" போலப் பரமார்த்தம்சித்தித்ததேயென்றும்; இது
அநேககோடிகாலம்அகோரதபசு, அஷ்டாங்கயோகமுதலானவைகளைச்
செய்தவர்களுக்குத்தான்வாய்க்குமோவென்றும்;இதற்குமேலானவாழ்வு,
அல்லது இகபரசாதனம் வேறென்ன இருக்கின்றனவென்றும்; தேடி
வந்தசீதேவியை வேண்டாமென்று விலக்கிவிடுவதுபோல இதைக்கைவி
ட்டு எத்தனைவருஷகாலம் அரசாட்சிபண்ணினாலும் சஞ்சித ஆகாமிய
பிராரப்த கர்மவசத்தனாகி உழல்வதேயல்லாமல் நித்தியபாக்கியமாகிய
மோட்சத்திற்குஅருகனாகக்கூடுமோ; கூடாதுசெய்தலால், இதுதான்ஆத்
மார்த்தமென்றும் தமக்குள்உறுதியாகக்கொண்டு, இராச்சியத்தைவாந்தி
செய்த அசனம்போல அருவருத்துக்கைவிட்டு, கடல்நடுவில் அமிழ்கின்ற
வன் அங்கொருதெப்பத்தைக்கண்டுபிடித்துக் கரையேறுவதுபோல, பக
வத்கடாட்சத்தால்ஆசாரியராயெழுந்தருளியமணக்கால்நம்பிதிருவடிகளை
ஆசிரயித்துப் பஞ்சசமஸ்கார சம்பன்னராய் ஸ்ரீஆளவந்தார் பிரபத்திநிஷ்
டையை அவர் உபதேசிக்கப்பெற்று வாழ்ந்திருந்தார் என்பதாம்.

கூரப்பன்-திருமோகூரப்பன்-திருமோகூர்நின்றான்-தேவப்பெரு மாள்-வகுளாபரண சோமயாஜியார்-திருக்குருகூர்தாஸர்-திருமாலிருஞ்சோலைதாசர் - வடமதுரைப் பிறந்தார் என்கிற கோவிந்த தாஸர் - ஆட்கொண்டார் அம்மங்கி - இராஜ புரோஹிதராகிய நாதமுனிதாஸர் - இராஜனுன சோழனுண்டான் - இராஜபத்தினியான திருவரங்கத்தம்மை ஆகிய இவ்விருபத்து மூவரும் ஆஶ்ரயித்திருந்தார்கள். இவர்களில் முற்பட்ட இருபது முதலிகளும் * வித்வான்களும் தர்ஶன ப்ரவர்த்தகர்களுமா யிருக்கையில், ஸ்ரீ ஆளவந்தார் தர்ஶன நிர்வாஹம்பண்ணிப்போரும் வைலக்ஷண்யமிருக்கும்படியன்றோ விதுவென்று ஸ்ரீமணக்கால்நம்பி உள்ளடங்காதசந்தோஷத்தையுடையவராய் ஸ்ரீஆளவந்தாரையழைத்து இன்னுமொருரஹஸ்யம்குருகைகாவலப்பனிடத்திலுண்டாகையாலே நீர்அவரிடம்போய்க்கேளுமென்றருளிச்செய்ய; இவர் ஸ்வாமி! அது தேவரீரிடத்தி லில்லாமற் போவானேனென்று கேட்க? உம்முடையதிருப்பாட்டனர் நமதாசார்யரான ஸ்ரீ உய்யக்கொண்டாருக்கு அந்த ரஹஸ்யத்தை ப்ரஸாதிக்கத் திருவுள்ளம்பற்றுகையில், அவர் பிணங்கிடக்க மணம்புணரலாமோவென்று விண்ணப்பஞ்செய்து, சரீராவஸானத்தி லனுபவிக்கவமையுமென்றதால், அவ்விஷயம் அவருக்கில்லையாக, நமக்கும் இல்லாமற்போயிற்று; ஆகையால் நீரங்கேறப்போ யறிந்து கொள்ளுமென் றருளிச்செய்ய; இவரும் சம்மதித்திருந்தார்.

* மானுடம்பாடும் புன்கவிகளையும், அவர்களைச்சிலாகித்துப் புகழ்க்கவிசாற்றும் பொய்க்கவிகளையும்போலன்று இவர்கள் வித்வத்திருந்தபடி "புருஷோ வேதம்" என்கிறபடியே, ஆரணமென்கிற சாகரத்திலழுந்திக் கிடந்தஜீவரத்நங்களை ஆய்ந்தெடுத்து, இன்பப்பாமாலைகளாகத்தொடுத்து ஸர்வேஶ்வரன் திருவடிகளுக்கேசமர்ப்பிக்கும் பரமகவிகளான ஆழ்வார்களினேற்றமும்,அருளிச்செயலி னேற்றமுமறிந்து அவற்றின்ஸாரங்களை அனுபவித்துத் "ததோவித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்சந" என்கிறபடியே புண்ய பாபங்களாகிற இருவகை விலங்குகளையும் அறுத்துக்கொண்டு, பற்றற்றுப்பேறுபெறுகிறசக்திமான்களாகையாலே, அனுபவஜனித ப்ரீதியதிசயமுள்ளடங்காமல் பொங்கிவழிய, அவ்வருளிச்செயல்களுக்குத் தனியன் சாற்றியும் உபன்யாசங்கள் கூறியும் எற்றமடைந்த வித்வான்க ளென்னப்படுவார்கள்.

ஸ்ரீமணக்கால்நம்பி வைபவம்—(தொடர்ச்சி).

அனந்தரம், ஸ்ரீமணக்கால்நம்பி தம்முடைய ஸ்ரீபாதத்து முதலிகளுக்குத் தர்ஶன தாத்பர்யவிசேஷங்களை யருளிச்செய்து கொண்டு சிலகால மெழுந்தருளியிருந்து சரமதசையை யடைய அப்போது ஸ்ரீமந்நாதமுனிகள் இவருடைய ஸ்வப்நத்தி லெழுந்தருளி நம்பீ! நம்முடைய ஸ்ரீயமுனைத்துறைவருக்கு நாட்டை யளித் துய்யச்செய்து நடத்து மொருவனை நாம் தேடிவைக்கச் சொன்னோமென்றுரைத்து, நாம் விரும்பின பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தை அவருக்குத் தஞ்சமாகக் காட்டிக் கொடுமென்று அருளிச்செய்து நிற்க; இவர் தண்டன் ஸமர்ப்பித்து; அஸ்மதாசார்யரான ஸ்ரீ உய்யகொண்டார் ஆஜ்ஞையை அடியேன் மறப்பதுண்டாகிலன்றே! தேவரீரும் சாதித்தருள வேண்டியதென்ன; அவர் கேளீர் நம்பீ! நமக்கு ஸ்வப்நத்ருஷ்டமான அந்த வ்யக்தி நம்பேரனுக்கு ப்ரத்யக்ஷஸித்தமானால் நாம் நெஞ்சாறியிருப்போமென் றருளிச்செய் தெழுந்தருளினார்; இவருடனே துயிலுணர்ந்து மிகவும்விஸ்மயப்பட்டு, நிர்ஹேதுகமாக நமக்கிப்படிப்பட்ட பேறுகிடைத்ததேயென்று போரப்ரீதராயெழுந்தருளி யிருக்கையில்; ஸ்ரீ ஆளவந்தார் அங்கெழுந்தருள; அவரைப்பார்த்து எம்மையாளவந்தவரே! வாரீரென்றழைத்துச் சமீபத்தில் வைத்துக்கொண்டு நீர் ஸ்ரீமந்நாதமுனிகளுடைய திருமேனிசம்பந்தமும்பெற்றீர்; திருவடிசம்பந்தியுமானீர்; ஆகையால் நீர் அவருடைய திருவடிகளையே ப்ராப்யமும் ப்ராபகமுமாகநினைத்துப் போரவேண்டும்; நமக்கு உம்முடைய சம்பந்தமிருந்தபடியால் அவர் நிர்ஹேதுகமாக ஸ்வப்நத்திலெழுந்தருளிச் சேவைசாதித்துத் திருப்பவளந்திறந்து சிலவற்றையருளிச்செய்து அருட்கண்ணால் நோக்கியாட்கொண்டார் என்றருளிச்செய்தார்; ஆளவந்தார் ஸ்வாமீ! அவர் திருவாய்மொழியைக் கேட்க விருப்புற்றிருக்கின்றேனென்று விண்ணப்பஞ்செய்ய; இந்தவிக்ரஹத்தைத் தாம் விரும்பின விஷயமென்று உமக்குக்காட்டி இதைத் தஞ்சமாகப் பற்றியிருக்கும்படி சொல்ல வேண்டுமென்று நியமித்தருளினார்; ஆகையால் நீர் இவ்வவதார ரஹஸ்யத்தைப்பேணி நோக்கிக் கொண்டு போருவீராகில் இந்த வ்யக்திமானைச் சாக்ஷாத்கரிக்கப் பெறுவீரென் றருளிச்செய்தார்.

அனந்தரஞ்சிலநாளைக்குமேல் பெரியபெருமாளிவருக்குமேல் வீடுதந்தருளத் திருவுள்ளம்பற்ற; இவர் ஸ்ரீ ஆளவந்தாரையழைத்து உம்மைப்போலேயொரு தர்சனப்ரவர்த்தகரைத்தேடிவைக்கும்படி உம்முடைய பிதாமஹர் உமக்குச்சொல்லும்படி நியமித்திருக்கின்றார்; ஆகையாலதைத் தலைக்கட்டிவைத்துக் கோயிலைவிடாமல் நெடுங்கால மெழுந்தருளியிருமென் றருளிச்செய்து, ஸ்ரீ உய்யக்கொண்டார் திருவடிகளை த்யானித்துக்கொண்டே திருவணையில்சாய்ந்தருளித் திருநாட்டுக்கெழுந்தருளினார். அப்போது ஸ்ரீ ஆளவந்தார் தொடக்கமான முதலிகளெல்லோரும் மிகவும் அவஸன்னராய்த் தரைமேற்கிடந்து, அனந்தரம் ஒருவாறுதேறி நிற்க; ஸ்ரீஆளவந்தார் அந்தவிமலசரம விக்ரஹத்தை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்து மற்றுமாகவேண்டிய க்ருத்யங்களையெல்லாம் குறைவறச்செய்தருளினார்.

திருநக்ஷத்ரத்தனியன்.

கும்ப மாஸேமகோத்பூதம் ராமமிஶ்ரமுபாஸ்மஹே
புண்டரீகாக்ஷ பாதாப்ஜ ஸமாஶ்ரயண ஶாலிநம்.

இவர் குமுதாம்சர். அவதரித்தகாலம்:-கலியுகம்-ந௲௯ந-ல் நிகழ்ந்த விரோதிக்ருது வருஷம் - மாசிமாசம் - சுக்ல சதுர்த்தசி-சோமவாரம்-மகநட்சத்திரங்கூடிய சுபதினம். திருவவதாரஸ்தலம்:—கோயிலுக்கடுத்த மணக்கால் என்கிற அக்ரஹாரம். எழுந்தருளி யிருந்தது ௧0௫-திருநக்ஷத்ரம்.

இவருடைய திருநாமங்கள்:—ஸ்ரீ மணக்கால் நம்பி-ஸ்ரீராமமிஶ்ரர். இவர்திருவடிகளையாஶ்ரயித்த முதலிகள்:—ஸ்ரீ ஆளவந்தார் - திருவரங்கப்பெருமாளரையர் - தெய்வத்துக்கரசு நம்பி - பிள்ளையரசு நம்பி - சொட்டை நம்பி - சிறுப்புள்ளூருடையார் - பிள்ளை திருமாலிருஞ் சோலைதாசர் - வங்கிபுரத்தாய்ச்சி முதலானவர்கள்.

ஸ்ரீமணக்கால் நம்பி திருவடிகளே சரணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

☞ ஸ்ரீ மணக்கால்நம்பி திருவவதாரவருஷம்-௧0௪௯-க்குச் சரியான ப்ரமாதி வருஷம்.

ஸ்ரீ யமுனைத்துறைவர் வைபவம்—(தொடர்ச்சி).

அதன் பின்பு, ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீ மணக்கால்நம்பி நியமித்திருந்ததைத் திருவுள்ளத்திற்கொண்டு, ஸ்ரீபாதத்து முதலிகளும் தாமுமாய்க் குருகைகாவலப்பன் யோகத்திலெழுந்தருளியிருக்குமிடத்தேற வெழுந்தருளி, அவரை ஸமாதி பங்கம் பண்ணவொண்ணாதென்றெண்ணி, தும்முதல் - இருமுதல் - அடியோசைப்படுதல் முதலிய அரவஞ்செய்யாமல் மௌனமாய் அவருக்குப் பின்னே சுவர்ப்புறத்தில் நின்றுகொண்டு சமயம்பார்த்திருந்தார்கள்; அப்போது அப்பன் பின்னே திரும்பிப்பார்த்து இங்கே சொட்டைக்குலத்தார் ஆரேனும் வந்திருப்பதுண்டோவென்று கேட்டருள; இவர் அடியேன் யமுனைத்துறைவன் விடைகொண்டிருக்கின்றேனென்று எதிரில்வந்து சேவித்திருந்து, அடியோங்கள்சுவர்ப்புறத்தில்தெரியாமல் நின்றுகொண்டிருந்ததைத் தேவரீர் உணர்ந்ததெங்ஙனமென்றுகேட்டருள? அப்பனிவரைக்குளிர நோக்கி, அடியேனுந்தானுமாய்அநுபவியாநின்றால் பிராட்டியார் திருமுலைத்தடத்தாலேநெருக்கிய ணைத்தாலும் அவள்முகம்பார்க்கவு மவசரப்படாத ஸர்வேஶ்வரன் என்தோள்கள்மீது கைகளையூன்றிக்கொண்டு எட்டி எட்டிப்பார்த்ததால்(சொட்டைக்குலத்தில் அவனுக்குமிகவும் ஊற்றமுண்டாகையாலே) சொட்டைக்குலத்திலுள்ளார் ஆரேனும்வந்தாருண்டாகவேண்டுமென்று கேட்டேனென் றருளிச்செய்தார். இவரதைக்கேட்டுப் போர உகந்தருளி, அடியேனுக்கு இந்தயோகரஹஸ்ய க்ரமத்தையருளிச்செய்யவேண்டுமென்று அப்பன் ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டுக்கிடக்க, அப்பனுமிவரையுகந்து அப்படியேசெய்கிறேனென்றருளிச்செய்து முடிபிடித்தெடுத்து நம்முடைய சரீராவஸானத்திலே உமக்குச் சொல்லக்கூடும். அதுவும் வருகிற புஷ்யமாஸத்திலே குருபுஷ்யயோகத்தில் அபிஜன் முஹூர்த்தத்திலே ஆகையால், அதற்கு முன்னதாக உதவவேண்டுமென்று திருமுகமெழுதிக் கொடுத்தருளினர். இவரும் அதைப்பெற்றுக்கொண்டு கோயிலேற வெழுந்தருளி யிருந்தார்.

அனந்தரம் ஒருநாளில் திருவத்யயனத் திருநாளிலே பெரிய பெருமாள் திருவத்யயனங் கேட்டருளுகையில், ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் "கெடுமிடர்" என்கிற திருவாய்மொழியை அபிநயித்துப் பாடியருளுகிறவர் ஆளவந்தாருடைய திருமுகமண்டலத்தைப் பார்த்தருளி "நடமினோ நமர்களுள்ளீர் நாமுமக் கறியச் சொன்னோம்" என்று பலகால் அருளிச்செய்ய ஆளவந்தா ரதைக்கேட்டு, ஆழ்வாருடைய தமரிலே அந்தர்ப்பூதமாம்போது, திருவனந்தபுரம் புக்கு சேவிக்க வேண்டியிருந்ததென்று அப்போதே திருவோலக்கத்தில் நின்று மெழுந்திருந்து பெரிய பெருமாளுக்கும் பெருமாளரையருக்கும் தண்டன் ஸமர்ப்பித்து விடைகொண்டு புறப்பட்டருளி, மடத்துக்குக் காவலாகத் தெய்வவாரியாண்டானை நியமித்துவைத்துத் திருவனந்தபுரத்துக் கெழுந்தருளிப் "படமுடையரவிற் பள்ளி பயின்ற" அனந்தபுரத்தம்மானை, த்வாரத்ரயேண திருவடிதொழுது அங்கே எழுந்தருளியிருந்து ஒருநாளளவில் அப்பன் ப்ரஸாதித்திருந்ததை நினைவிற்கொண்டு, சன்னிதி முதலிகளைப் பார்த்துக் குருகைகாவலப்பன் நமக்கிட்டுத்தந்த திருமுகத்தைக் கொண்டு வாரீரென்ன; அவர்களும் கொணர்ந்து கொடுக்க; அதைப்பார்த்தருளி மாஸமும் திவசமும் அன்றைய தினமாகவே யிருந்தபடியால், இனி ஒரு புஷ்பவிமான மிருந்தாலன்றி நம்மெண்ணத்தை முடித்துக்கொள்ளக் கூடுவதோ! அதையும்பெற்றிருக்கிலோமே! என்று சோகார்த்தராய் மீண்டெழுந்தருளாநிற்கக் கோயிலில் தெய்வவாரி யாண்டானுக்கு இவருடைய விஶ்லேஷம் பொறுமல் திருமேனி சோஷிக்க; அங்கிருந்த முதலிகள் வைத்யர்கள் பலரையுங்கொண்டு பார்த்தபோது அவர்கள் இவருக்கு விஷயஸ்ப்ருஹையால் இப்படியாயிற்றென்ன; முதலிகள் ஆண்டானைக் குறித்து உமக்குள் எந்த விஷயஸ்ப்ருஹை யிருக்கிறதென்று கேட்க; அவர் அடியேனுக்கு ஆசார்யன்விஷயமொழிய வேறொன்று முண்டோவென்ன; ஆகில் இவரை அங்கேறக் கொண்டு போவதே இந்நோய்க்கு மருந்தாகுமென்று வைத்யர்கள் சொல்ல; முதலிகளும் ஆண்டானைக் கட்டணத்தில்வைத்து எடுத்துக் கொண்டுபோக; நாளுக்குநாள் திருமேனிவாட்டந்தீர்ந்து பின்பு நடக்கவும் வல்லவராய்ச் செல்கிறவளவிலே திருவநந்தபுரத்தில் நின்று மீண்டு அரைக்காத வழியில் கரைமனையாற்றங்கரையிலே

எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஆளவந்தார் முதலிகளையும் ஆண்டானையும்பார்த்து இப்படி நிஷ்காரணமாய் நாமிருக்கச்சொன்ன விடத்தைவிட்டு இவர்கள் வருவதேதுக்கென்று யோசித்துக்கொண்டிருக்கையில்; ஆண்டான் அதிக ஆவலோடும் ஓடிவந்து அவருடைய ஸ்ரீபாதத்தில் விழுந்து கிடக்க; இவர் அவருடைய திருமேனி வெளுத்து உருமாறியிருக்கிற காரணத்தையும் வந்த காரணத்தையும் மற்றவர்களா லறிந்துகொண்டு கேட்டீரோ முதலிகாள்! பெருமாள் ஸ்வதந்த்ரருமாய்ச் சூரருமாயிருக்கையாலே, அன்று ஸ்ரீபரதாழ்வான் அவர் வைத்தவிடத்தே யிருந்தார், நாம் ஸ்வதந்த்ரனுமின்றிக்கே சூரனுமின்றிக்கே யிருக்கையாலே யிறே, இன்று நாம்வைத்தவிடத்தில் இவர் இராமல் வந்தாரென்றருளிச்செய்ய; இதைக்கேட்டு ஆண்டான்வந்து ஸ்வரூபஹானி பட்டேனே! என்று மிகவும் ஸத்தைகுலைந்து விழுந்தபடியேகிடக்க; இவர் அவரெழுந்திராத படியைக்கண்டு, என்னை ஸ்வதந்த்ரனும் சூரனுமாக்கினை லொழிய, எழுந்திரேனென்று கிடக்கின்றீரோ? வென்ன; ஆண்டான் வந்து ஸ்வரூப மிழந்தவோபாதி இதுவும் ஒரு ஸ்வரூபஹானி யாயிற்றேயென்று பரபரப்பாய் எழுந்துநிற்க; அப்போது ஸ்ரீபாதத்து முதலிகள் "ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ" என்கிறபடி ஜலத்தைவிட்டுக் கரையில் கிடத்திய மத்ஸ்யம்போலே சக்ரவர்த்தித் திருமகனை விட்டுப் பிரிந்தால் வாடிப்போம் இளையபெருமாளைப் போலவே இந்தத் தெய்வவாரி யாண்டானும் ஆசார்ய விஶ்லேஷத்தால் பட்டபாடு என்று சொல்லிக்கொள்ள; ஸ்ரீ ஆளவந்தாரும் இது ஒரு அதிகார விசேஷந்தானென்று ஆண்டானைப் போர உகந்தருளி ஆண்டானே! மிகவும் மெலிந்தீரேயென்று அவர் முதுகைத் தடவி, அதிக்ருபாசித்தராய்த் திருவநந்தபுரத்துத் திருக்கோபுரத்தைக் காட்டி அதோ தோன்றுகிறதே அனந்தபுரம், நீரும் போய் ஆயிரந் தலையையுடைய அனந்தன்மேற் கண்வளரு மவனைச்சேவித்து வாருமென் றருளிச்செய்ய; ஆண்டான் அடியேனுடைய அனந்தபுர மெதிரேவந்திருக்க அங்கே தோன்றுவதற்குப் போவானேனென்று முதலிகளைப்பார்த்துச்சொல்ல; அது "யேநைவகுருணாயஸ்யந்யாஸவித்யாப்ரதீயதே-தஸ்யவைகுண்டதுக்தாப்தி த்வாரகாஸ்ஸர்வ ஏவஸ:" என்கிறபடி எந்த ஆசார்யனாலே ந்யாஸவித்தையென்கிற சரணாகதி மார்க்கத்தை ஒருவ

னறிந்து கொள்ளுகிறானே, அந்தமஹாத்மாவையே தனதுபேற்றுக்குறுப்பான ஸ்ரீவைகுண்டம் திருப்பாற்கடல் திருத்வாரகை தொடக்கமான எம்பெருமா னுகந்தருளின திவ்ய தேசங்களென்று நினைக்கத்தக்கது என்கிற ப்ரமாணத்துக்கும் "வில்லார் மணிகொழிக்கும் வேங்கடப்பொற் குன்றமுதல்-செல்லார் பொழில்சூழ் திருப்பதிக-ளெல்லாம், மருளாமிருளோடமத்தகத்துத் தந்தாள்-அருளாலே வைத்தவவர்" என்கிற ப்ரமாணத்துக்கும் ஒத்திருக்கையாலும், அருளிச் செயல்கள்தோறும் "நின்றவண் கீர்த்தியும்" என்றுதொடங்கி "உன்னிணை மலர்த்தாள் என்றனக்குமது" என்பது தொடக்கமாயிருக்கு மவைகளும் சேர்ந்திருக்கையாலும், அவருடைய அத்யவஸாயத்துக்கு ஸ்ரீஆளவந்தாருகந்தருளி, அவரையுங்கூட்டிக்கொண்டு கோயிலேறவெழுந்தருளிப் பெரியபெருமாளைச் சேவித்துக்கொண்டு, தாமும் ஸ்ரீபாதத்து முதலிகளுமாக விருந்து, தர்ஶனம் நிர்வஹித் தருளுகிறபோது, ராஜவ்ரணம் ப்ராப்தமாய்ச் சிலநா ளனுபவித்துக்கொண்டிருந்து ஒருநாளில் முதலிகளைப்பார்த்து, இனி தர்ஶன ப்ரவர்த்தகராவார் ஆர்? என்றுகேட்டருளி ஒருவரையுங் காணாமல் சிந்திக்க, அப்போது முதலிகளி லொருவராகிய சதுர்த்தவருணத்தி லவதாரமான மாறநேர்நம்பி யென்பவர் இவருக்கு இவ்ரணத்தாலே யாதேனும் அபாயம் வருவதாகுமோ வென்று பயந்து அழகியமணவாளன் திருமுன்புபோய் ப்ரபத்திபண்ண; அவனும் உகப்போடு அந்த வ்ரணத்தை சுவடுகாணாமல்போக்கிவிட, ஸ்ரீ ஆளவந்தார் சுகமே யெழுந்தருளியிருந்தார்.

இவருடைய வைபவம் இன்னும் பின்தொடர்களில் வரும்.

ஸ்ரீராமாநுஜர்

என்கிற

ஸ்ரீ இளையாழ்வார் வைபவம்.

தனியன்.

யோநித்ய மச்யுத பதாம்புஜ யுக்மருக்ம
வ்யாமோஹ தஸ்ததிதராணி த்ருணாயமேநே
அஸ்மத் குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே.

ஸ்ரீஆளவந்தாருடைய ஸ்ரீபாதத்தில் ஆஶ்ரயித்த முதலிகளிலொருவரான * பெரியதிருமலைநம்பி "வேங்கடத்தைப் பதியாகவாழ்வீர்" என்கிறபடியே திருவேங்கடமுடையானை "அடிக்கீழமர்ந்து" சேவித்துக்கொண் டெழுந்தருளியிராநிற்க, அவருடன் பிறந்த ஸ்ரீபூமிப்பிராட்டியார் பெரியபிராட்டியாரி னம்ஶரான காந்திமதி என்றும் த்யுதிமதி என்றும் பெயருடைய பெண்பிள்ளைகளிருவரில் மூத்தவரான காந்திமதி அம்மையார், ஸ்ரீபெரும்பூதூரில் ஆசூரி வம்ஶஸ்தரான கேசவ சோமயாஜியாரென்கிற ஸர்வக்ரது தீக்ஷிதருக்கும் இளையவரான த்யுதிமதி அம்மையார் மழலை மங்கலத்தில் வட்டமணிக் குலத்தரான கமலநயனபட்ட ரென்பவருக்கும் திருமணம் புணர்ந்து வாழ்க்கைப்பட்டிருக்க; அந்நாளில் பெரிய

---

* ஸ்ரீபெரியதிருமலைநம்பிகள் ப்ரபாவம்.

தனியன்.

ஸ்ரீபாஷ்யகாரோத்தமதேசிகாய ப்ராசேத ஸாதேஶபலப்ரதாய
பிதாமஹஸ்யாபிபிதாமஹாய ஸ்ரீஶைலபூர்ணாயநமோநமஸ்தாத்.

ஸ்ரீ ஆளவந்தார் பகவத்விஷயஞ் சாதித்துக்கொண் டிருக்கையில் "சுமந்து மாமலர் நீர்சுடர் தூபங்கொண் - டமர்ந்து வானவர் வானவர் கோனொடும்-நமன்றெழுந்திருவேங்கடநங்கட்குச்-சமன்கொள்வீடு தருந் தடங்குன்றமே" என்னுமித்யாதி பாசுரார்த்தங்கள்வர, அப்போது ஸ்ரீ பாதத்துமுதலிகளைநோக்கி,நித்தியசூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும்ஒக்க முகங்கொடுத்துக்கொண்டுநிற்கிறநிலையாலுள்ளஏற்றமுண்டிறேதிருமலைக்குஆகலின்திருவேங்கடத்தெந்தைக்குநித்தியமும் ஒருகுடம்திருமஞ்சன

திருமலைநம்பியினுடைய ஸஹாத்யாயியான*திருக்கச்சிநம்பியார் பூவிருந்த வல்லியிலிருந்து திருக்கச்சியூரானை தேவப்பெருமாளுக்குத் திருமாலை எடுத்துக்கொண்டுபோய் ஸமர்ப்பித்துத் திருவாலவட்ட கைங்கர்யமுஞ் செய்து திரும்புகையில் ஒவ்வொரு முறையிலும் கேசவசோமயாஜியாருடைய திருமாளிகையில் தங்கிப்போவதுவழக்கமாயிருக்கையால், ஓராறொருநாளில்அவரைக் கேசவசோமயாஜியார் அடிபணிந்து ஸ்வாமீ! தேவரீர் நித்யமும் பேரருளாளனுக்கும் பெருந்தேவித் தாயாருக்கும் அந்தரங்க கைங்கர்யஞ்செய்து அதிரஸமானவார்த்தைகளாடிவருகிறவரானபடியால் அடியேன் கருத்திலொன்றுண்டு; அது என்றைக்குத் தலைக்கட்டுமோ தெரியவில்லையாகையால், அதைத்தேவரீர் கேட்டு வந்து சாதித்தருள வேண்டுமென்ன; அவரும் உகந்தருளி மறுமுறையெழுந்தருளி அருளாளனுக்கு ஆலவட்டந்திருத்திக்கொண்டிருக்கையி லருளாளன்நம்பியைப்பார்த்து மந்தஸ்மிதஞ்செய்து, நீர் நம்மிடம் ஏதோ ஒன்றைக்கேட்கவெண்ணியிருக்கிறீர்போற்றோன்றுகின்றதென்ன; நம்பி அடிபணிந்தெழுந்து, கேசவசோம

* திருக்கச்சிநம்பிகள் ப்ரபாவத்தைமேலேலட்டு அடிவருக்கத்தில் காண்க.

தீர்த்தகைங்கர்யம் செய்து அவனை உகப்பிக்கக்கடவதாகப்போவார் இந்தத்திரளில்ஆராவதுண்டோ? என்றுகேட்டருள; அவ்வேளையில், பெரிய திருமலைநம்பிகள் சடக்கெனவெழுந்து உத்தரீயத்தை அரையில் சேர்த்துக்கொண்டு அஞ்சலிஹஸ்தராய்நின்று ஸ்வாமீ! இப்படி உபயவிபூதியிலுமுள்ளபெருந்தலைகளுடையகைங்கர்யத்திற்குநிலமாக உத்தேசித்துவரும் மஹாத்மியத்தைப் பெற்றிருக்கிற திருமலையாழ்வான் மேலேநிற்கிற அப்பனுக்கு இவ்வேழையை உதவக்கடாக்ஷித்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்துவிடைகொண்டுதிருமலையேறவெழுந்தருளி, ஸ்ரீநிவாசனைத்திருவடிதொழுது, ஆசார்யநியமனமிருந்தபடியைவிண்ணப்பஞ்செய்து,சன்னிதிக்கப்புறத்தில் இரண்டுகோசு அளவிலிருக்கும் பாபவிநாசனிக்குத் தினமுமெழுந்தருளித்தீர்த்தந்திரட்டிக்கொண்டுவந்துஉதவிப்போந்தார்;இப்படி நெடுநாளாக இவர் செய்து போந்தகைங்கர்யத்தை, அப்பன் உகந்தருளி உகப்பின்மிகுதியாலே, ஒருநாளளவில் இவர்தீர்த்தம் திரட்டிக்கொண்டு மடங்குஞ்சமயத்தில், ஒருவில்லியைப்போலேதிருவுருக்கொண்டு தனுர்ப்பாணியாய், இவர் கண்படும்படியான பக்கங்களில் இங்குமங்குமாக உலாவிக்கொண்டு விந்தைகள்செய்யாநிற்க; இவர்கண்டு, ஒருவில்லியினுருவில் இப்படிப்பட்ட அங்கலக்ஷணசம்பத்தும் அதற்கேற்ற திருமுகமண்டலதேஜசும் கம்பீரமானநோக்கும் ஒய்யாரமான நடைமுதலியனவும் குடிபுகுந்திருக்கின்றனவே!என்று ஆச்சரியத்துடன்பார்த்துக்கொண்டேவர,

யாஜியார்சொல்லியிருந்ததை விண்ணப்பஞ்செய்ய; அதற்கு அருளாளன்நம்பீ! அவருக்குவிதியின்படிபுத்ரப்பேறுஇல்லை; ஆயினும் நீர் நம்மைநாடிக் கேட்டீர் ஆனபடியாலே அவர் நம்முடைய கைரவணீ தீரத்துக்குப்போய்ப் புத்ரகாமேஷ்டி யாகத்தைச் செய்து நம்மையுகப்பிப்பாரரகில் அவரபீஷ்டத்தைத்தலைக்கட்டி வைப்போமென்றருளிச்செய்ய; நம்பியும் அதைக்கேட்டு மிகவும் சந்துஷ்டராய் அருளாளனைத் திருவடிதொழுது, சோமயாஜியாரிடமெழுந்தருளித்தீக்ஷிதரே!நீர்கொண்டிருந்தஎண்ணமின்னது, அருளாளன் திருவாய்மலர்ந்ததிவ்விதம் என்று சாதித்தருளச்; சோமயாஜியார் திருக்கச்சிநம்பியைத் திருவடி தொழுது அவருடைய ப்ரபாவத்தை வெளியிட வகையறியாதவராய், உள்ளுக்குள்ளேகனிந்து, உடனே திருவல்லிக்கேணியைச்சேர்ந்து பார்த்த சஹாயன் சன்னிதியில் கைரவணிதீரத்தில் புத்ரகாமேஷ்டியைப் பஹுநியமத்தோடிருந்து பூர்த்திபண்ணிப் பெருமாளையுகப்பித்தவராக; அப்போது ஸ்ரீய:பதியாய் அசேஷ ஜகஜ்ஜன பாலனை கதீக்ஷாபடு சக்தனும் (ஸர்வ ஜகங்களிலுமுள்ள ஜனங்களைப் பரிபாலிக்குந் தீக்ஷையில் திடசக்தியுடையவனும்)ப், பரமசாந்த

சமீபத்தில்வருகையில், வேடுவப்பெருமான் எதிர்கொண்டோடிவந்து, தாதா என்றழைத்து; அடியேனுக்குப் பஹுதாகமாயிருக்கிறபடியால், ஒரு சிறுங்கைதீர்த்தம்ப்ரசாதித்து ரக்ஷித்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க; இவர்பிள்ளாய்? வேங்கடத்துறைவானுக்குத்திருமஞ்சனத்திற்குதவுகைக்காகத் திரட்டிக்கொண்டுவருகிற தீர்த்தமாயிற்றே! இதிலிருந்து எப்படி உதவலாகுமென்ன; எனக்குக்கொடுப்பது அவனுக்குமிகவும் உகப்பேயாகும் தாதா என்ன; இவர் ஆசார்ய நியமனம் இல்லையே பிள்ளாய்? என்று உரைத்துக்கொண்டேநடக்க அவன் இவர் பின்னேதொடர்ந்து இவருக்ககப்படாமலேதீர்த்தக்குடத்தைத்தன்கையிலிருந்த அம்பாற்கீளறி த்வாரஞ்செய்து, அதுவழியேகுடத்துளிருந்ததீர்த்தமடங்கமடுத்துவிடக்குடம் வெறுமையானவாறே இவருக்குக்கனம்குறைவுபட, அதை இறக்கிப்பார்த்து, அற்புதமடைந்து வேங்கடவில்லியைப்பார்த்து, இங்ஙனம்குடத்தை த்வாரம்செய்துதீர்த்தத்தையொழுக்கிவிட்டுப் பரிஹாசம்பண்ணுகிறவன் நீயல்லது ஆராவார்பிள்ளாய்? அடுக்காதகார்யத்தைச்செய்தனையே! இனி நாம் மறுபடியும் தீர்த்தம் திரட்டிக்கொண்டுமடங்குவதற்குள்ளாக, அப்பனுக்குத்திருமஞ்சனவேளை தவறிப்போமேஎன்செய்தால் தீருமோதெரியவில்லையே! என்றருளிச்செய்து கொண்டே மீண்டு தீர்த்தத்திற்காகப் போக;அவ்வளவிலே,வில்லியப்பன் அவரைமடக்கிச்சிரித்துக்கொண்டே

மனஸ்கனுய் (மனதையுடையவனுய்) ஸர்வலோகோ பரிவாஸ மான கோடிவிபாகரசோபா (ஸர்வலோகங்களுக்கும்மேற்பட்ட வாசஸ்தானத்தையுடைய கோடிசூர்யப்பிரகாசத்தாற்)பரிபூர்ண ஞைபரமபதநாதன், ஸ்ரீவைகுண்டநகர திவ்ய திருமாமணிமண் டபத்தில் ஸ்ரீதேவி பூதேவி ஸஹிதனுய் அனந்தராஜ சை (படு க்கையாகிற) ஆசனத்தில் சாந்தாதிசமஸ்த சத்குணநிசாந்தனுய் வீற்றிருந்து, நிவாஸ, சை (படுக்கை), யாஸன, பாதுகாம்ஸோத் யாதி பகவத்கைங்கர்யபரராய்ச் சேஷ நாமதேய ப்ரகாசகரான திருவனந்தாழ்வானைக் கடாக்ஷித்து, இப்போது லீலாவிபூதியில் ஆங்காங்கு அவதரித்திருக்கின்ற வைஷ்ண வாக்ரேசர்களான நித்யசூரிகள், "ஸ்ருதிர்நஷ்டா ஸ்ம்ருதிர்லுப்தா ப்ராயேண பதி தாத்விஜாঃ-அங்காநிசவிசீர்ணாநி ஹாவ்ருத்தோ வர்த்ததேகலிঃ" என்கிறபடியே கலியின் மஹிமையால் பூலோகத்திலே வேதார்த் தங்கள் நஷ்டமாய், ஸ்ம்ருதி அர்த்தங்கள் லோபித்து, வேதாங் கங்களின் தாத்பர்யம் பலவாய்ப்பட்டுப், பதிதார்த்தங்களாலே கவனிக்கப்பட்டு. ப்ரஹ்ம வித்தைக்குரிய ப்ராஹ்மணர்களும் கர் மப்ரவாஹத்திலகப்பட்டுத் துறைதப்பிப் பதிதர் (பாபி)களா யிருப்பதைப் பார்த்து ஆச்சர்யமடைந்து அவற்றையளித் துய் யச்செய்யவேண்டி, உம்முடைய அவதாரத்திற்காகக் காத்துக் கொண் டிருக்கிறுர்கள்; ஆகையாலே, மத்(எனது) சேஷபாவா

தாதா நீர் இந்த வயோதிகதசையில் (போதலும் வருதலும்கூடித்) தின மும் அரைக்காதவழிநடந்து சிரமப்படுவதைநோக்கிச் சமீபத்தில்தானே என்னுடைய அம்பின்மஹிமையால் ஒரு திவ்ய தீர்த்தத்தைக் கற்பித்துக் கொடுத்து, அந்தச்சிரமத்தைப் போக்கித் தரவேண்டுமென்று எண்ணிய ன்றோ இங்ஙனஞ் செய்தவனுயினேன் என்றருளிச்செய்து தத்க்ஷணமே, ஆலீடபாதனுய்க்கொண்டு ,ஆகர்ணபர்யந்தம்சிலையைவளைத்து அதில்அம் பைப்பூட்டிச், சமீபத்திலிருந்த ஒருமலைக்கூம்பின் உச்சியிலிருக்கு மொரு பாறையின் மத்தியப்பிரதேசத்தை லக்ஷ்யமாக்கிக்கொண்டு எய்ய, அந்தப் பாறை படீரெனப் பிளக்கப்பட்டு,அதினின்றும் (திருவிக்ரமாவதாரத்தில் அவன் திருவடியால் பேதிக்கப்பட்டு ப்ரவஹித்த ஆகாசகங்கையைப் போலே) ப்ரவாஹமுண்டாக, இவர் இத்தனை அதிசயத்தையுங்கண்டு, அப்பனே இவனுகவேண்டுமென்று அச்சமுற்று, விஷ்ணுசித்தர் கேட்டி ருக்கும் மெய்ம்மைபெறுவார்த்தையை ஸ்மரித்து "அவன்செய்வன செய் துகொள்ள" என்று நின்று மெய்மறந்திருக்க; அப்போது அப்பன் தன் னுடைய திவ்யமங்களவிக்ரஹ ஸ்வரூபத்தைக்காட்டியருளி நம்பீ?இன்று தொட்டு இந்தத் தீர்த்தமே நமக்கு உகந்ததுகாணும் என்றருளிச்செய்து அந்தர்த்தானமாயினுன்.

திகரானநீர், நம்முடைய சங்க-சக்ர-கதா-கட்க-கோதண்டங்களி னுடைய அம்ஸங்களையும் கூடப்பெற்று, ஷடாம்சபூர்ணராய் ராமாநுஜ அபிதானத்தால்அவதரித்து லீலோபகரணபோகோப கரணங்களானஉபயவிபூதிக்கும்நாயகராயிருந்துசேதனோஜ்ஜீவன மார்க்கங்களைக் குருசிஷ்ய க்ரமத்தால் தெரியக்காட்டி நாட்டை யளித்து நம்முடையபுகழைநிறுத்தி நந்தர்சனத்தை உம்முடைய பெயரால் ராமாநுஜதர்சனம் என்று சொல்லத் தக்கபடிசெய்து இருநூறு ஸம்வத்ஸர மிருந்துவரக் கடவீரென்று நியமித்தருளி அப்பொழுதே கேசவஸோமயாஜியாருடைய ஸ்வப்நத்திலெழுந் தருளிக் கேசவப்பெருமாளே? நாம் உம்முடையயாகத்தை உக ந்தோமாகையாலே நம்முடைய திருவனந்தாழ்வானை உமக்குப் புத்ரனாக அவதரிப்பிக்கப்போகின்றோமென்று திருவாய்மலர்ந்த ருளிப்போகப்; பெரியதிருவநந்தாழ்வானும்ஸ்ரீயஃபதியினுடைய நியமனப்படியே "அநந்தஃப்ரதமம் ரூபம் லக்ஷ்மணஸ்சததஃபரஃ- பலபத்ரஸ்த்ருதீயஸ்து கலௌகஸ்சித் பவிஷ்யதி" என்கிறபடி திருவனந்தாழ்வா னென்கிற முதலுருவினர் திரேதாயுகத்தில் இளையபெருமாளென்கிற இரண்டாவதுருவைப்பெற்று, த்வாபர யுகத்தில் பலராமரென்கிற மூன்றுவதுருவில்தோன்றிக், கலியுகத் திலும் ஒரு மஹாபுருஷரூபத்தைப் பரிக்ரஹிக்கப்போகின்றாரெ ன்கிற பௌஷ்யத்வாக்யம் ப்ரத்யக்ஷமாம்படி, அகிலாத்மோஜ்ஜீ வனார்த்தமாகத் தம்திருவவதாரத்திற்குஇடம்பார்த்து ராமதிவா கர-அச்சுதபானுக்கள்கௌஸல்யைகர்ப்பத்தையும் தேவகீகர்ப்ப த்தையும் விரும்பினாற்போலே ராமாநுஜதிவாகரராய் ஸ்ரீபெரும் பூதூரிலேவாழ்கிற கேசவப்பெருமாளுடைய திருத்தேவியாரான

இவருக்கு அன்றுதொட்டுத் தாததேசிகரென்றும், தாதாசார்யரென் றும், அந்தத்தீர்த்தத்திற்கு ஆகாசகங்கையென்றும் திருநாமங்களுண்டா யின. தாததேசிகரெனிலும் தாதாசார்யரெனிலும் பொருளொன்றே. இவருடைய திருவம்சஸ்தரையே இப்போதும் தாதாசார்யர்களென்ற ழைப்பது. ஆகில் இடைநிகழ்ந்தகாலத்தில் இவர்கள் அனுஷ்டான பேத த்தினாலும் ஆசாரபேதத்தினாலும் இரண்டு பிரிவாயினார்கள்; எங்ஙனமெ னில் சிலர் ஸ்ரீவேதாந்த தேசிகருடைய பூர்வதசையில் அவரை ஆசிரயி த்து வடவார்யராயினார்கள்; அவர்கள் பரம்பரையே இப்போது பெரு மாள் கோவில் ப்ரதேசங்களிலிருக்கும் தாதாசார்யர்கள். மற்றவர்கள் நம்பிகள் காலத்திலிருந்தபடியே தென்னாசார்யர்களாக இருக்கிறார்கள்.

திருமலைநம்பிகள் திருவடிகளேசரணம்.

காந்திமதியாரது உத்தமகர்ப்பத்தை ப்ராபித்தருளி இவ்விருள் தருமாஞாலத்தில் "கலியுங்கெடுங் கண்டு கொண்மின்" என்று நம்மாழ்வாருமருளிச் செய்திருந்தபடியே, கலியுகவருஷம் நாலாயிரத் தொருநூற்றுப்பத் தொன்பதுக்குச்சரியான சாலிவாஹன சகவருஷம் "தீர்லப்தா" என்கிற கணக்கின்படியே தொளாயிரத்து முப்பத் தொன்பதில் சென்ற (வர்த்தமான) பிங்கள ஸம்வத்ஸரத்தில், சைத்ரமாஸம் சுக்லபக்ஷம் சதுர்த்தசி வெள்ளிக்கிழமை திருவாதிரை நக்ஷத்ரம் ஆயுஷ்நாமயோகம் பத்திவாகரணம் கூடிய சுபதினத்தில் கடகலக்கினத்தில் அவதரித்தருளினார்.

விண்ணின் தலைநின்று மண்ணின்தலத் துதித்தவர்க்குப் பிதாவானவர் ஸசேல (கட்டியிருந்த உடையுடன்) ஸ்நாநபூர்வகமாக ஜாதகர்மத்தைச்செய்து தான்ய,தன,பூ,கோதாநந்தங்களு விசேஷமாகப்பண்ணக் காந்திமதியாரும் மனமகிழ்ந்து வனமுலை சோர்ந்துபாயப் பால்கொடுத்துப் புத்ராநநாவலோகநம்பண்ணி (புத்ரனுடைய முகத்தைப்பார்த்து)க் கொண்டிருக்க; "கேசவ நம்பிபிறந்தனில், எண்ணெய்சுண்ண மெதிரெதிர்தூவி" னது போலே,அங்கிருக்கிற கேசவநம்பியான எம்பெருமானும் வைதிகோத்தமமான இவரவதாரத்துக்கு அநுகுணமாகக் கேசவன்றமரான வைதிகரைக்கொண்டு தமது திருமுற்றமெங்கும் ஸ்நேகப்ரவாஹமாக ஸம்ப்ரமத்துடனே ஸம்பவோத்ஸவத்தை நடத்துவித்துப் பஞ்சாயுத ஆவேஶாவதாரமான இவர்க்குப் பஞ்சாயுத ஆபரணத்தையும்பாலபரிபாலநார்த்தமாகத் தரிப்பித்தருளினார்.

இச்செய்தியைத் திருமலைநம்பி கேட்டருளி,ஸ்ரீபெரும்பூதூருக்குச்சென்று, கேசவப்பெருமாளைக்கண்டு சத்கரித்து, அவர் புத்ரராகிய இவரையும் முகவொளிதிகழக் கடாக்ஷித்தருளி, இப்புத்ரர்ஸர்வலக்ஷண ஸம்பந்நராய், ஸகலசாஸ்திரங்களையு மதிகரிக்கத்தக்கவராகக் காண்கையாலே "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்நஃ" என்கிற இளையபெருமாளுடைய ஸர்வலக்ஷணங்களும் பொருந்தியிருக்கிற இவருக்கு நாமே நாமகரணஞ்செய்விக்கக் கடவோமென்றருளிச்செய்து, பன்னிரண்டாம்நாளில் "தக்ஷிணந்து புஜம் பூர்வம் சக்ரேண ப்ரதபேச்சிரோஃ-வாமாம்ஶம் ப்ரதபேத்பஶ்சாத்ஶங்கேநைவ த்விஜோத்தமஃ" என்கிற ப்ராஹ்மண விதிப்படியே சங்கசக்கர லாஞ்சனஞ்செய்து இளையாழ்வார் என்று திருநாமஞ்சாற்றி யருளினார்.

இப்படி ஆதரணீயரான இளையாழ்வாரை வண்ணச்சிறு தொட்டிலிலே கண்ணுக்கினிதாகக் கண்டுகொண்டிருந்து "அத்திரிசூழ் ஞால மநந்தாவ தாரமெனச், சித்திரையி லாதிரைநாள் வந்துதித்த தேசிகனே"; "கேசவனார் வாழக் கிளைவாழக் கீர்த்தி மிகும், ஆசூரி வந்துதித்த வாரியனைச் சொன்னரார்" என்று தாலாட்டிச் சீராட்டிச், "செங்கண்மால் கேசவன்றன் திருநீர் முகத்துத் துலங்குசுட்டி" என்னும்படி கேசவசிசுவின் சுட்டியையும் முகத்தையும் கண்களாலே கண்டு உபலாளிக்க; அவ்வளவிலே யஜ்ஞபத்நிகளான நங்கைமார்களும் வந்து இவரை யுத்தானஞ்செய்துகந்தருள; நாலாமாஸத்திலே ஆதித்யதர்ஶநம் சந்த்ரதர்ஶநம் முதலானவற்றையும் பண்ணுவித்துக் "கேசவநம்பீயுன்னைக்காதுகுத்த" என்னும்படி வார்காதுதாழப்பெருக்கி, ஆறுமாஸத்திலே அந்நப்ராஶநமும், மேலாறுமாஸம் சென்ற அளவிலே நூற்றிருபதாண்டுக்கடியான ஆண்டுநிறைவு கல்யாணமும், மூன்றும் வருஷத்திலே சௌளகர்மமும் பஹுவாதரத்துடன்செய்து மகிழ்ந்தார்கள். இளையாழ்வாரும் பொற்பூவாலே அலங்க்ருதமான பிற்பக்கத்திலே சிறுகுடுமியும், திருக்கழுத்திற்காறையும், பின்னில்துலங்கு மரசிலையும், பீதகச் சிற்றாடையும், பொன் னரைஞாணொடு மாணிக்கக் கிண்கிணியுமான ஆகாரத்துடனே பூர்ணராய்த் தன்னேராயிரம் பிள்ளைகளான வைதிக புத்ரர்களுடனே பகவல் லீலாநுகாரிகளாய்"கேசவா"என்றும், "கேசவனேயிங்கேபோதராய்"என்றும்,"கேசவநம்பியைக் கால்பிடிப்பாள்" என்றும், "கேட்பவர்கள் கேசவன் கீர்த்தியல்லால் மற்றுங்கேட்பரோ"என்றும் சொல்லுகிறபடி எப்போதும் கேசவன்றமராய்க் கேசவனையேபேசுவது, எழுந்தருளப்பண்ணுவது, திருவடி தொழுவதுமாகவிருந்து "கேசவ னெம்பெருமானைப் பாட்டாயபலபாடி" "இன்புறுமிவ் விளையாட்டு"களாலே எல்லாரையும் உகப்பித்துக்கொண்டு "பொன் னிவர்மேனி" என்னும்படியான வடிவழகாலும் நடையழகாலும் கௌமுதீ சந்த்ரனைப் போல கண்டவரைக் கண்குளிரப் பண்ணிக்கொண்டு வளர்ந்து வருநாளில்"அஇதிப்ரஹ்ம"என்றும்"அக்ஷராணா மகாரோஸ்மி" என்றும் சொல்லுகிறபடி சப்தங்களுக்கெல்லாம் மூலமான அகாராத்யக்ஷர சிக்ஷைபண்ணும்பொருட்டு மண்ணளந்த பெருமாள் கோயிலில் உபக்ரமித்து அக்ஷரசிக்ஷகனிடத்திலே வைக்க

அந்த "மண்ணையிருந்து துழாவி" "சங்கு சக்கரம் தண்டு வாள் வில்லுமல்லதிமைக்க லுருள்" என்னும்படி அதிலேஇவரும் தக்ஷ ராய் (வல்லவராய்)த் தெரித்தெழுதிவாசித்துத் திருந்தின வநந்தரம்; கர்ப்பாஷ்டமத்தில் (எட்டாவதுவயதில்) தானே உபநயந கர்மத்தையும் சீரியதாகச் செய்துமுடிக்க; இளையாழ்வாரும் பொங் கிலங்குபுரிநூலும் தோலுமானவடிவும், வடுவான ஆகாரத்துக்கு அநுகுணமாக கௌபீந கடிஸூத்ரமும் (அரைஞாணும்), முஞ்சியாலே அஞ்சிதமான (மான்தோல்கூடிய பரிசுத்தமான கயிற்றினூற்பொருந்திய) அரையும், பாலாஸதண்ட மண்டிதகரமும், புண்ட்ரகுண்டல மண்டிதமுகமுமாய் விளங்காநிற்க, இவருக்குப் ப்ரதமோபாகர்மம் நிறைவேறினபிறகு" ஸ்வாத்யாயோத்யேதவ்ய:" என்று விதிக்கிற க்ரமத்திலே வேதாத்யயநம் ஆரம்பித்து நடத்த "ப்ரஹ்மாதீத்ய ஸவிஸ்தரம்"என்று க்ருஷ்ணன் ஸாந்தீபிநி பக்கலிலே அல்பகாலத்திலே அதிவிஸ்தாரமான வேதத்தை அதிகரித்ததுபோல் இவரும் ஸாங்கோபாங்கமாகச் சதுர்வேதத்தையும் "சுருதிகள்நான்கும் எல்லையில்லா வறநெறி யாவுந்தெரிந்தவன்" என்னும்படித் திருத்தமப்பனார் ஸந்நிதியில் அதிகரித்து ப்ரஹ்மசர்யவ்ரதத்திலே நிரதராயிருந்தார்.

அநந்தரம் இவர் ஷோடஶவார்ஷிகரான வளவிலேஇவரது பிதாவானவர் கோதாநவ்ரத ஸமாவர்த்தந பூர்வகமாக இவருக்கு ஸத்ருஶமான ஸ்தலத்திலே ஸம்பந்த மாம்படி திருமணோத்ஸவத்தையும் நிறைவேற்ற இளையாழ்வார் க்ருஹஸ்தாஶ்ரமத்திலே யிருந்து கொண்டு ‡ வேள்வி ஐந்திலும் ஏதமில்லாத

‡ "கிருகஸ்தன் எந்திரம் அல்லது முறம், அம்மி,துடைப்பம், உரல், உலக்கை, தண்ணீர்க்குடமென்னு மிவ்வைந்தினையு முபயோகப்படுத்திக் கொள்ளுவதால் அவனுக்கு ஐவகைக் கொலைப்பாவங்க ளுண்டாகின்றன"; "அவ்வைந்து பாவங்களையும் போக்குவதற்காக மகரிஷிகளால் தினந்தோறும் ஐந்து மகா யக்கியங்கள் கிருகஸ்தனுக்குக் கிரமமாக விதிக்கப்பட்டிருக்கின்றன"; "அவ்வைந்து யக்யங்களில் வேதமோதுதல் பிரமயக்கியம், அன்னத்தினாலாவது ஜல தருப்பணத்தினாலாவது பிதிர்களைக் குறித்துத் திருப்தி செய்வது பிதிர் யக்யம், தேவதைகளைக் குறித்து அக்கினியிலோமஞ் செய்வது தேவயக்யம், வாயச (காக்கை) பலி முதலானவை வைப்பது பூதயக்யம், அதிதிகளுக்குச் சாப்பாடு போடுவது மானுடயக்யம் ஆக மகாயக்யம் ஐந்து"; "இவ்வைந்து மகா யக்யங்களையும் தன்சத்திக்குத் தக்கபடி யெவன் செய்கின்றானோ அவன் கிரு

வராய் வாழ்கின்ற காலத்தில்; பெருமாள் கோயிலைச் சேர்ந்த திருப்புட்குழியிலே யாதவ ப்ரகாசனென்பானொரு ஏகதண்ட சன்யாஸி வேதாந்தம் வாசிப்பிக்கின்றானென்றுகேட்டு அங்கே எழுந்தருளி, அவன்பக்கலுள்ள சுரோதாக்களோடே தாமும் சுரோதாவாய் வேதாந்தம் வாசித்தருளாநிற்க; அவ்வளவிலே மழலைமங்கலத்து கமலநயனபட்டருக்கும் (அவருடைய பத்நியான த்யுதிமதியார் கர்ப்பவதியாய், கலி-நாலாயிரத்திருபத்தேழாவதில் சென்ற-க்ரோதனவருஷம்-தைமாஸம்-புனர்வசு நட்சத்ரத்தில் ப்ரஸவிக்க) வைநதேயாம்ஸரான ஒரு புத்ரனுண்டாக, அந்த வர்த்தமானத்தையும் பெரியதிருமலைநம்பி கேட்டருளி அங்கேறவந்து அப்புத்ரனைத்தமது தாமரைக்கண்களாலே நோக்கி இவன் ஸர்வவித்தைகளையுமதிகரித்து வைதிகபக்ஷவானுவானென்று சாதித்துக் கோவிந்தன் என்று திருநாமஞ்சாற்றியருளித் திருமலைக்கெழுந்தருளிவிட; கமலநயனபட்டரும் அந்தப்புத்ரனுக்குச் செய்யவேண்டிய ஸர்வமங்கள கர்மங்களையுஞ் செய்து அக்ஷராப்யாசந் தொடக்கமானவைகளையுஞ் செய்வித்து அனந்தரம் க்ருஹஸ்தாசிரம ப்ராப்திபண்ணுவித்தருள; அவர் திருப்புட்குழியில் இளையாழ்வார் யாதவப்ரகாசனிடம் வாசிக்கின்றாரென்றுகேட்டுப் பேராசையோடும் வந்துசேர்ந்து இருவருமாக வேதாந்தம் வாசிக்கத் தொடங்கினார்கள்.

இங்ஙன மிவர்களிருவரும் வாசித்துக்கொண்டு வருகையில், யாதவ ப்ரகாசன் தன்பக்கலுள்ள சுரோதாக்களுடன் வேதாந்தார்த்த வ்யாக்யானங்கள் செய்து கொண்டிருக்கச்செய்தே,ஒரு நாள் யாதவப்ரகாசன் "ஸத்யம்ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம"என்கிற சுருதிவாக்கியத்துக்குக் கண்டத்வம் (கொம்பு அறுப்புண்டிருத்தல்),முண்டத்வம் (கொம்பின்றிமொட்டையாயிருத்தல்), பூர்ண சிருங்கத்வங்கள் (கொம்புபூர்த்தியாக வளர்ந்திருத்தல்) ஒரு

கஸ்தாசிரமத்திலிருந்த போதிலும் மேற்சொன்ன ஐந்து கொலைகளின் தோஷங்களை யடைகிறதில்லை" என்று மனுதருமசாஸ்திரம் மூன்றா மத்தியாயத்தில் ஐம்பெரும் வேள்விசெய்வதற் கேதுசொல்லப்பட்டிருக்கின்றது. "ஒண்பி ரமவேதமோதுதலோ மம்வளர்த்தல், எண்டெய்வ மீதல்பலி யேபூதம்—ஒண்டொடியீர், எண்ணீர்க் கடனுற்ற லேபிதிர்வி ருந்தோம்பல், அண்ணீர்மை மானுடயா கம்" என்னும் வெண்பாவினும் ஐம்பெரும் வேள்வியின் தன்மை யுணர்தற் பாற்று மென்க.

கோவ்யக்தியிலே (ஒருபசுவினிடம்) கடிக்கும் (பாதிக்கும்)போதி றே, ப்ரஹ்மத்துக்கு இந்தவிசேஷணங் கூடுவதென்று அபார்த்த ப்ரதிபாதனம் பண்ண; இளையாழ்வார் * அதிக்ஷேபித்து 'ஸத்ய' சப்தத்தாலே † க்ஷணிகவ்யாவ்ருத்தியையும், 'அநந்த' சப்தத் தாலே ‡ சேதனவ்யாவ்ருத்தியையும், 'ஜ்ஞான' சப்தத்தாலே § அசித்வ்யா வ்ருத்தியையும்பண்ணிச் சேதனசேதன விலக்ஷண மாய் நித்தியமாயிருக்கும் ப்ரஹ்மமென்று பொருளாகிறதே! என்றருளிச்செய்ய, அவன் ஹுங்காரம்பண்ணிப் பராமுகமா யிருந்துவிட்டான்.

பின்னுமொருநாள் இளையாழ்வார் யாதவப்ரகாசனுக்கு அப் யஞ்ஜனத்தொழில் செய்யாநிற்க; அவ்வேளையில் சுரோதாக்க ளில் ஒருவர் "தஸ்யயதாகப்யாஸம்புண்டரீகமேவமக்ஷிணீ" என் கிற சுருதிக்கு அர்த்தங்கேட்டு நிற்க; அவன் அதற்கு அநுசிதா ர்த்தம்சொல்ல; அதைக்கேட்கவே இவருக்குச் சோகமுண்டாய், அதனால் திருக்கண்களிலிருந்து தெண்ணீர்முத்துதிர, அது அவன் தொடையில் விழுந்து $ கொழுவைக் காச்சிச் சொருகினது போலே சுட்டுருவிப்போக, அவன் துடிதுடித்து இவர் திருமுக த்தைப் பார்த்துத் துக்கப்படுவானேனென்ன; இவர் "கம்பிப தீதி=கபிஃ" என்று சூர்யனை "ஆஸஉபவேஶநே"என்று உபவே ஶனம் ஆஶ்ரயணமாய்ச் சூர்யாஶ்ரயணத்தையுடைத்தான கம லம்போலே என்று பொருளாவதிருக்க; அயதார்த்தங் கேட்ட வாறே சஹிக்கத்தரமற்றேனென்ன; இதைக்கேட்டு அதிக குபித னாய் நாம் சொன்னபடிகேட்க விரும்புவீராகில் நம்மிடத்தில் வாசித்திருக்கலாம், இல்லையாகில் விட்டுப்போமென்றான்; இவ ரதைக்கேட்டுச் சிந்தைகலங்கித் தவிர்ந்திருந்தார்.

அவன் தன்னுடையசிஷ்யர்களில் அநுகூலரைக்கூட்டி ஏகா ந்தத்திலே வைத்துக்கொண்டு, நீங்களெல்லோரும் நாம்சொன்ன அர்த்தத்தைச் சம்மதித்திருக்க, இளையாழ்வார் ஒருவர் மாத்தி ரமே எப்போதும் நமக்கு எதிர்த்தட்டாய்நின்று வாதிப்பதால் நம்முடைய அத்வைதரீதி பஹுசீக்கிரத்தில் இவரால் குன்றிப் போகுமல்லவோ? ஆகையால் இவரை முடித்துவிடுவது உத்தம

* அதிக்ஷேபித்து=மறுத்து. † க்ஷணிக வ்யாவ்ருத்தி=அநித்திய லக்ஷணத்தைத் தள்ளுதல். ‡ சேதனவ்யாவ்ருத்தி – ஆத்மாவினுடைய சொரூப வியாப்தியை நிரசித்தல். § அசித்வ்யாவ்ருத்தி=ஜடலக்ஷணத் தைப் போக்குதல். $ கொழு - காறு.

மாக நமக்குத் தோற்றுகிறது; இதற்கு விரகுண்டோவென்று கேட்க; அவர்களும் அவன் எண்ணத்திற் கேற்றபடி பலபடியாய்ப் படும் வகைசொல்ல; அவன் அவற்றை யெல்லாங் கேட்டு, அவர்கள் சொன்னபடி செய்தால் பழிபாவமுண்டாகுமென்றெண்ணி, அவைசேராவகை முடித்துவிடக் கங்கையில் மணிகர்ணிகையில் வீழ்த்திவிடுவதே நலமென்றும், அதில் விழுந்து முடிவாருக்கும் தள்ளி முடித்தவருக்கும் ஒக்க சத்கதியுண்டென்று தீர்த்த மஹாத்மியத்தில் சொல்லியிருக்கிறபடியால் அப்படி செய்து முடிப்பதே நல்லுபாயமாமென்றுஞ் சொல்ல; அவர்களும் இது நன்றென்று ஐக்யமத்யம் பண்ணிக்கொண்டு, துர்யோதனன் தர்மபுத்ரர் விஷயத்தில் * ஜதுக்ருஹத்திலே † விஶஸநம் பண்ணினதுபோலே அந்தரங்கித்து, இவரைஅழைத்து நீரில்லாதபோது எங்களுக்கொருசாயலாயிருக்கிறது; ஆனபடியால் நாம்சொன்னதற்காக நீர் கோபிக்காமல் க்ரந்தத்தை ‡ அவிச்சின்னமாக நடத்துமென்று நன்மையுரைத்து உள்ளிட்டுக்கொண்டு, சிலநாள் கழிந்தபிறகு, கபடயோசனையால் கங்காயாத்ரையை உத்யோகித்து சிஷ்யர்களோடு இவரையுங் கூட்டிக்கொண்டு புறப்பட்டுப் போய்ப் பயணகதியில் தங்கும் இடங்களில், இளையாழ்வாரும் கோவிந்தபட்டரும் § கூட்டரவுபடாதபடி காத்துவரவேண்டுமென்று சிஷ்யர்களுக்கு அதிக ரஹஸ்யமாய்ச் சொல்லிவைத்திருந்தானபடியாலே, அவர்களிவ்விருவருங் கூடியிராதபடி பண்ணிக்கொண்டும் கூடினால் இரஹஸ்யங்கள் நடவாதபடிக்குக் காத்திருந்தும் வழிநடவாநிற்க; விந்த்யாரண்யத்தில் செல்லும்போது ஒருநாள் ஒருபள்ளத்தாக்கில் இளையாழ்வார் ஜலஸ்பர்ஶார்த்தமாக எழுந்தருளக் கோவிந்தபட்டரும் ஏனைய சிஷ்யர்களுக்குக் காணப்படாமல் செடிகளில் மறைந்துகொண்டே அவ்விடம் போய் இவர்களுடைய கபடயோசனையை அவருக்கறிவித்து அகன்றுபோய் விடுமென்று சொல்லிவிட்டுத் தாம்பழையபடியே கூட்டத்திற் போய்ச்சேர்ந்து கொண்டார். இளையாழ்வாரும் மஹா வ்யாகுலாந்தஃகரணராய் அவ்வழியைவிட்டுக் குறுக்கே பாய்ந்து வெகுதூரம்போய் ஒரு மரத்தடியில் நின்றுகொண்டு சுற்றிலும் பார்க்க, அவ்விடம்வெம்பி யெரிகானகமாய் நிர்ஜ்ஜல

* ஜதுக்ருஹம் — அரக்குமாளிகை. † விஶஸநம் — கொலை. ‡ அவிச்சின்னம் — இடைவிடாமை. § கூட்டரவு - சேர்க்கை.

ப்ரதேசமாய் * ஸுஷ்ககண்டகாவ்ருதமாய்ப் "பொருந்தார் கைவேல்நுதிபோல் பரல்பாய மெல்லடிகள் குருதிசோர - விரும் பாத கான்விரும்பி வெயிலுறைப்ப வெம்பசிநோய்கூர" என்கிற படியே ஊன்றுவெம்பரற்களையும் தீக்ஷ்ண்யதாபகர ரவிகிரணங் களையு முடைத்தாயிருக்க, அந்த விந்த்யாடவி என்கிற சிறந்த காட்டிலே தனியே நின்றுகொண்டு "ஆவாரார்துணை" என்று பக்கம்நோக்கி 'வழிதிகைத்தலமருகின்றேன்' என்னும்படி † திக் விப்ரமம்பிறந்து 'மதியெல்லாமுள்கலங்கி' அடியிடத்திமிர்த்துக் கொண்டு சோகித்திருந்தார்.

அவ்வேளையில் "நாஹமாத்மா நமாஶாஸே மத்பக்தைஸ் ஸாதுபிர்விநா" என்கிறபடியே சத்துக்களான தன்னுடையஅடி யார்களை இடரில்விட்டுத்தன்னில்தானே சந்தோஷத்தைப்பெறு கிற ஸ்வபாவத்தையுடைத்தாயிராத சர்வேஶ்வரன் திருக்கச்சி யில் நின்றும் பத்நீசஹிதனாய்ப் புறப்பட்டு ஒரு வில்லியைப் போலும் வில்லிச்சியைப்போலும் வேஷம்பூண்டு வாளும் வில்லு மேந்திக்கையில்கோராங்கழியைப் பிடித்துக்கொண்டுஇடர்கெட வந்துதோன்ற; இவர் அவர்களைக்கண்டு, கலக்கந்தீர்ந்து உள்ளந் தேறிநின்று, நீங்கள் எங்குநின்றும் வந்தீர்கள்? எவ்வூர்க்குப் போகின்றீர்களென்று கேட்க? அவர்கள் உத்தரதேசத்தில் சித் தாசிரமத்தில்நின்றும்புறப்பட்டு, ‡ ஸத்ய வ்ரதக்ஷேத்ரத்துக்குப் போகின்றோ மென்ன; நானும் உங்களுடனே புண்யகோடிக்கு வருவானாக நினைத்திராநின்றேனென்ன; அவர்கள் நல்லது வாரு மென்றழைத்துக் கொண்டு, தாங்கள் முன்னடியிடுவதும் இவர் பின்னே செல்லுவதுமாய், ஸ்வாதீனமாக வழிநடந்து விந்த்யா ரண்யம் பிற்காலித்துச் சந்த்யாகாலம் சமீபித்தவளவிலே காலோ சிதமான அனுஷ்டானங்களைச் செய்துகொண்டு, அனந்தரம் வல்லிரவாய் முன்னடிதோன்றாமல் காடாந்தகார பூயிஷ்டமாய் நள்ளிருளானவாறே, ஒரு ராஜ வ்ருக்ஷத்தடியிலே உபவாசமாய் அவர்களுடனே யிருந்தார்; அப்போது வ்யாதபத்நியாயிருக்கிற பெருந்தேவித்தாயார் நல்ல தீர்த்தம்மடுக்க ஆசைப்பட, வ்யாத புருஷனா யிருக்கிற பேரருளாளன் பெண்ணே? சமீபத்தில்

---

* ஸுஷ்க - உலர்ந்த, கண்டக - முள்(ளுகளாலே), ஆவ்ருதமாய் - சூழப்பட்டதாய். † திக்விப்ரமம் - திசைதெரியாதமயக்கம். ‡ ஸத்திய 'விரதக்ஷேத்ரம் - காஞ்சீபுரி.

தானே * பாநார்ஹமான கிணற்றில் மதுரநிர்மல சீதளகந்தயுத பாநீயம் இருக்கின்றது; ஆயினும் பொழுதுவிடியக் காட்டுகிறே னென்ன; இவரதைக்கேட்டு, ஐயோ! பரமோபகாரிகளான இவர்களை லப்தமனோரதராக்குவோமென்றுபார்க்கில், இது நமக்குக் குறிப்பறியாத தேசமாய்விட்டதே! என்றனுதபித்துக்கொண்டு, சற்றே திருக்கண்வளர்ந்தருளினார்.

அவ்வேளையில் பெருமாளும் பிராட்டியும் அந்தர்த்தானமாய் விடக் கீழ்வானம் வெள்ளென்று கீசுகீசென்று ஆனைச்சாற்றங் கலந்துபேசப்புள்ளுஞ்சிலம்பிக் 'கொழுமலரணவிக்கூர்ந்ததுகுணதிசைமாருதம்' என்கிறபடியே மந்தமாருதம்வீச ஹரியென்ற பேரரவமுங் கேட்டுச் சடக்கெனவெழுந்திருந்து காலிக கர்மத்தைச் செய்துகொண்டுவந்து வழிநடத்து மவர்களைக் காணுமல் தேடிச் சர்வதிக்குமாக நோக்கிக் கூப்பிட்டுத், தமக்குத் தோன்றினவழியே நடந்துவருகையில், 'கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைய' ஜனபதங்கள் ஸ்பஷ்டமாகத் தோற்றக்கண்டு, நேற்று நின்றநிலைக்கு இப்படியும் ஒருவெளிநாடு காணப்பெற்றதே! என்று போர ஆச்சர்ய யுக்தராய்நோக்க, அங்கே ஒரு தோப்புங் கிணறுமாய் நாலிரண்டுபேருமாய் நிற்கக்கண்டு, இது எத்தேசம்? எவ்வூர்? எந்த ஸ்தலமென்று? அவர்களைக்கேட்க; அவர்கள் என்ன ப்ராஹ்மணரே? புண்யகோடிவிமானம் முன்னே தோன்றுகையில் ஊர்பெயர் உரைக்கவும் வேண்டுவதோ! என்றார்கள். இவரப்படி சொல்லக்கேட்டதே, இராவணவதம்கேட்ட பிராட்டிக்கும் - பிராட்டியைக்கண்டேனென்று சிறிய திருவடி வந்து சொல்லக்கேட்ட பெருமாளுக்கும்-மதுவனத்திற் புகுந்த சிறிய திருவடிக்கும் உண்டான சந்தோஷங்க ளெவ்வகைப்பட்டனவோ அவ்வகையாய்ச் சந்தோஷித்துத் தாம் இங்கிருந்து விந்த்யாரண்யம்வரையில் செல்லுகையில் இடையில்கழிந்த நாட்களையும் அடைந்த சிரமத்தையும் அங்கிருந்து திரும்புகையில் சென்றபொழுதையும் அநாயாசத்தையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப்பார்க்க, மேருவுக்கும் அணுவுக்கு முண்டான வாசிபோலிருக்கையால், வழிநடத்தினவர்கள் பேரருளாளனும் பெருந்தேவித்தாயாருமாகவே யிருந்தார்களென்று நினைத்து (க்ருஷ்ணவதாரசௌலப்யத்தைநினைத்து 'எத்திறம்' என்று மூவாறு மாசம் மோஹித்துக்கிடந்த) நம்மாழ்வாரைப்போலே மோஹி

* பாநார்ஹகமான — பருகத்தகுதியான.

த்துக் கிடந்து, தம்மில் அந்த * வ்யாமோஹம் தெளிந்தவாறே, "ஹேக்ருஷ்ண ஹேயாதவ ஹேஸகே" என்னும்படி கூடத்திரிந்த அர்ஜுனனை ப்ரமிக்கச்செய்தாற்போலே, என்னையும் நீர்மையால், 'நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்து உருக்காட்டாதேயொளிப்பதே' என்று பலவகையில்சொல்லிப்புலம்பித் தம்மில்தாமே உள்ளந்தேறி,ஆனந்தநிர்ப்பரராய்ப்,பெரிய ராஜமார்க்கத்தாலே சென்று வையமாளிகையேறித் 'தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்ப்பூண்டவன்பாளன்'என்கிறபடியே அருளாளனுடைய திருப்பொலிந்த சேவடிகளைச்சேவித்து, விழுந்தெழுவதுந் தொழுவதுமாய் ஆனந்தக்கண்ணீர் பனிப்பப் புளகீக்ருதகாத்ரராய் ஆனந்தித்து, அவன் விந்த்யாடவியில் சேவைசாதித் திருந்தபோது பிராட்டிக்குத் தீர்த்தத்தில்திருவுள்ளமுண்டாக அவன்குறிப்பிட்டுக்காட்டிய தீர்த்தக்கேணியே அங்கிருக்கும் சாலைக்கிணறாகையாலே,அன்றுதொடங்கி திருவாராதனத்துக்குதவும்படி அந்தக் கிணற்றிலிருந்தே திருமஞ்சனங் கொண்டுவந்து சமர்ப்பித்துக் கொண்டிருந்தார்.

இவர் இப்படியிருக்க, அங்கே விந்த்யாடவியில், யாதவப்ரகாசனுந் திரளுமாக இவரைத்தேடிக்காணமல், கோவிந்தபட்டரைப் பார்த்து இளையாழ்வாரை நீர்கண்டீரோ? என்றுகேட்க; அவர்நான்கண்டிலேனென்ன; அவன்ஐயோ!இந்தக்கடுங்காட்டில் என்ன தீங்குவந்ததோ! என்று ஸர்வரும் மேலுக்குத் துக்காகுலராயிருப்பதுபோல்காட்டி உள்ளுக்குள்ளே நினைத்துவந்த கார்யம் ஸபலமானதென்று சந்தோஷித்துக்கொண்டு, ப்ரயாணகதியிலேபோய்க் கங்காதீரத்தையடைந்து † மாகஸ்நானம்பண்ணுகிற்க,ஒருநாள்கோவிந்தபட்டர் ‡அஹமர்ஷண ஸ்நானம்பண்ணுகிறபோது,§யாத்ருச்சிகமாய்அவருடையஉள்ளங்கையிலேஒருலிங்கம்வந்துசேர, அதைக்கண்டு அவர் விஸ்மிதராய், யாதவப்ரகாசனுக்குக்காட்ட,அவனும்அதிகப்ரீதியுடையவனாய், நீர்தெய்வக்ஞராகையாலே கங்காஸ்நானபலம் கைசேர்ந்தாற்போலே கங்காதரனே கைபுகுந்தானென்றுரைத்து அவரிடத்தில் விசேஷப்ரதிபத்தியுக்தனாகி, அவருக்கு உள்ளங்கைகொணர்ந்த நயினாரென்று பெயரிட்டுக்,கங்கைக்கரையினின்றும்மீண்டு,ஜகந்நாதம்-அஹோ

* வ்யாமோஹம்-பெருங்காதல். † மாகஸ்நாநம்-மாசிமாத மகஸ்நாநம். ‡ அஹம்-பாபம், மர்ஷண-நிரஸந. § யாத்ருச்சிகமாய்-தன்னடையே

பிலம் வழியாக வருகையில், உள்ளங்கைகொணர்ந்த நயினார் யாதவப்ரகாசனைப்பார்த்து இந்தலிங்கத்தை ஒருஉசிதஸ்தானத்திலே ப்ரதிஷ்டிப்பித்து வருகிறேனென்ன; அப்படியே செய்யுமென்று அவரைமார்க்கமத்தியில்அனுப்பிவிட்டுச் சிஷ்யர்களுடனேபெருமாள்கோயிலேறப் போந்தான். பின்பு உள்ளங்கை கொணர்ந்த நயினாரும் தன்னுடைய ஜன்மபூமியான மழலை மங்கலத்தைச்சேர்ந்து, அங்குள்ள விசேஷவித்வத் மஹாஜனங்களைத்திரட்டி * ஸ்வகரத்த லிங்கத்தை அங்கேப்ரதிஷ்டிப்பித்துத் தத்பக்தனாயிருக்க; அவ்வளவிலே காளஹஸ்திநாதன் அவர் கனவில் வந்து, நீர் நம் பக்கல் வந்திருக்க வேண்டுமென்று சொல்லி, ஸ்தானத்தார்க்கும் ஸ்வப்நங்காட்டி, உள்ளங்கைகொணர்ந்த நயினாரை அழைத்துக்கொண்டுவாருங்கோளென்று ப்ரரேபிக்க; அப்படியேஅனைத்துக் கொத்திலுள்ளாரும் மழலைமங்கலத்துக்கு வந்து அவரைப் பலவகையில் பஹுமானம்பண்ணி அழைத்துக்கொண்டு போய் ஸ்தான நிர்வாஹத்துக்கு வேண்டின இலச்சினை மோதிரமுங் கொடுத்துத் தங்களுக்கு முக்யராக்கிக்கொள்ள அவரும் தத்பக்தியுக்தராய் அங்கேயிருந்துவிட்டார்.

அதன்பின்பு, யாதவப்ரகாசன் ஒருநாளளவில் அருளாளன் சன்னிதிக்குள் சிஷ்யர்களுந்தானுமாய்ப்போகையில், இளையாழ்வாரைக்கண்டு ஆச்சர்யப்பட்டுமிகவும்சந்தோஷித்தவன்போலே பாவனைகாட்டி; விந்த்ய ப்ரதேசத்திலேஉம்மைத்தேடிக்காணாமல் அந்யதாசங்கை பண்ணிக் கனக்க வருத்தப்பட்டிருந்த நான் உம்மைக்காணவும் பெற்றதே! என்றுசொல்லி, இடையில் நிகழ்ந்த வர்த்தமான மென்னென்று கேட்க; இவர்வழி தப்பி உங்களைக் காணாமல் அலைந்து திகைத்துக்கொண்டிருந்து, சித்தாசிரமத்திலிருந்து இவ்விடத்திற்கு பயணகதியிலே வந்துகொண் டிருந்த ஒருவில்லியைத்துணைப்பற்றிவந்துசேர்ந்தேனென்று ஸவிஸ்தாரமாக வருளிச்செய்ய; அவன் கேட்டு இவர் நடை லோகாதீதமாயிருந்ததென்றெண்ணி உள்கலந்து ப்ரீதனாய் ஸ்வகோஷ்டியிலே கூட்டிக்கொண்டு க்ரந்தத்தை நடத்தினான்.

அந்நாளில் அந்தராஜ்யத்தில் இராஜாவின் குமாரத்தியை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு பிடித்துக்கொண்டு பாதிக்க, அந்தராஜன், இவ்விடத்தில்இதையோட்டத்தக்கமந்த்ரவாதிகள்ஆரேனுமுண்டோ

* ஸ்வகரத்த - தனதுகையிலுள்ள.

வென்று ஆராய்ந்து யாதவப்ரகாசன் விசேஷ மந்த்ரவாதியாகு மென்றறிந்து அவனிடம் ஆள்வரவிட; வந்த ராஜமனுஷ்யர்கள் எம்முடைய அரசன்மகளை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு பாதிக்கின்றபடியால் உம்மை யழைத்துவரும்படி ஆக்ஞையாயிருக்கிறதென்ன; இவன் அவர்களைப் பார்த்து, நாம் போகச்சொன்னோமென்று அந்தப் பேய்க்குச் சொல்லுங்கோளென்ன; அவர்கள் திரும்பிப் போய் இவன் சொன்னதைச்சொல்ல; அது அவர்களை உற்றுப் பார்த்து அவனை இருக்குமிடம் விட்டு நாம்போகச் சொன்னோமென்று சொல்லுங்கோளென்ன; அவர்கள் பயந்து வந்து, ப்ரஹ்மரக்ஷஸ்ஸு இவ்வண்ணஞ் சொல்லிற்று கண்டீரோ! என்ன; இவன் குபிதனாய் அந்தக்ஷணமே புறப்பட்டு அங்கேறப்போய் இராஜக்ருஹத்திலே யிருக்கிற அந்த ப்ரஹ்மரக்ஷஸ்ஸுக் கெதிரில் நின்றுகொண்டு மந்த்ரத்தை ஜபித்து முஷ்டிபிடிக்க, அவ்வேளை, அது முடக்கிக் கொண்டிருந்த கால்களைச் செவ்வே நீட்டிக்கொண்டு ஓ! யாதவப்ரகாசா? நீஜபிக்கிறமந்த்ரத்தை நானறியேனோ? அந்தமந்த்ரம் இன்னதல்லவோ? என்று பஹிரங்கமாய் அதைத் தன்வாயால்சொல்லி, ஏ ஸந்யாஸீ! நான் இந்த மந்த்ரத்துக்கும் உனக்கும் போகத்தக்கவன்தானோ? பூர்வஜென்மத்தில் நீ ஆராயிருந்தாயென்பதும் நான் ஆராயிருந்தேனென்பதுமே அறியாத நீயோ என்னைப்போகச்சொல்பவன்! இவ்விரண்டையும் நன்றாகவறிந்திருக்கிற நான்தானோ உன் மந்தரத்துக்குப் பயப்படப் போகிறவன் என்ன; இவன் திடுக்கிட்டு, ஆச்சர்யமடைந்து வேறொரு ப்ரயத்தனமும் செய்ய அசக்தனாய், அதைப்பார்த்து இப்படி இருவர் பிறப்பின் பூர்வோத்திரங்களை அறிந்திருக்கிற ஸர்வக்ஞத்வம் உனக்கிருக்கையில் இந்தக்கதி உனக்கு வந்தவாறேதென்ன; பூர்வஜென்மத்தில் நீயொரு உடும்பும் நானொரு ப்ராஹ்மணனுமா யிருக்கையில், கோயில் பெருங்கூட்டம் ஒரு காலத்தில் திருமலையாத்ரை செய்யா நிற்க, மார்க்கத்திலிருந்த மதுராந்தகத் தேரியில் நீராடி அந்தக் கரையோரத்தில் பெருமாளை யாராதித்து அமுதுசெய்துபோக, அவ்விடத்தில் சிந்தின ப்ரஸாதத்தையும் தீர்த்தத்தையும், அங்கொருபுறத்தில் புற்றுக்குள்வசித்திருந்த நீ ஸ்வீகரித்ததினால் அந்தப் பலன் உனக்கிந்த ப்ராஹ்மண ஜன்மத்தையுங் கொடுத்துப் பண்டிதாக்ரேசனுமாக்கிற்றென்றும், நான் ப்ராஹ்மணஜன்மத்தில் மஹாசீலவானாயிரு

ந்து ஒரு ப்ரபலமான யாகத்தைச் செய்யப் புக, அதில் மந்த்ர லோப க்ரியாலோபங்களுண்டாகி அதனால் இந்தக் கதியையடைந்து இப்படிகாலங்கழிக்கின்றேனென்றும்சொல்ல; அதன்பின்பு இவன் ஏ! ப்ரஹ்மரக்ஷஸே? நான் உடம்பாயிருந்தபோது பாகவத ப்ரஸாதசேஷத்தை ஸ்வீகரித்திருப்பதுண்மையாகில் அதற்குப் பலன் இதுவாகாதே! ஜனனம் வாராதொழியவேண்டுமே? என்ன; நீ புத்திபூர்வகமாக அந்த ப்ரஸாத வைபவ மிப்படிப்பட்டதென்று நினைத்து ஸ்வீகரித்திருக்கில் அப்படியே முடிந்திருக்கும்; அப்படிக்கில்லாமல் நன்மை தீமைகளைப் பகுத்தறியச் சக்தியற்றஜந்துவாயிருந்து * க்ஷுத்தால்வருந்தி அதைத்தணித்துக்கொள்ளும் பொருட்டே ஸ்வீகரித்தனையாகையால் ஜன்மம் முடிவதற்கு ஹேதுவில்லையாயிற்று என்றுசொல்ல; அனந்தரம் யாதவப்ரகாசன் அதைநல்வார்த்தையாலாவது போகச்செய்தாலொழிய தன்னை அரசன் சன்மானிக்க மாட்டானே யென்றெண்ணி, நீபோகுங்காலத்தையும் உனக்கிந்த அவதியாரால்தொலைக்கப்படுமோ! அதையும் சத்தியமாய்ச் சொல்ல மாட்டுவாயோ? என்றுகேட்க; அது இவன்பக்கல்வாசிக்கும் இளையாழ்வார்தமது திருவாயைத்திறந்துபோவென்றருளிச்செய்வாராகில் அந்தச்சமயமே நான்போகுங்காலமும் க்ஷேமமடையுங்காலமுமாமென்ன; இவன்இளையாழ்வாரைவரவழைத்து நீர்அதைப்போகச்சொல்லுமென்ன; அவர் அதைப்பார்த்து நீஇவனைவிட்டுப்போகக்கடவாயென்றருளிச்செய்ய, அதுசீக்ரமாயெழுந்துதண்டன்சமர்ப்பித்து ஸ்வாமீ! தேவரீருடையபோதுநின்றபொன்னங்கழலைக்கொண்டு அடியேனைப்போன்ற பாபிகளுடைய முடிகள்மேலிட்டுச் சத்கதியளிக்கத் திருவுள்ளம்பற்றியன்றோ த்ரிபாத்விபூதியில் சேஷநாமஸூரியாயிருந்த இருப்பைவிட்டிந்த இருள்தரு மாஞாலத்திலவதரித்திருப்பது; ஆகையால்அடியேன்முடிமீதும் அந்தத்தாமரை சத்ர்சமான சரணயுகளத்தைப் பொருத்தினாலொழியப் போகேனென்ன; இளையாழ்வாரும் உகந்து அப்படியேசெய்தருள; அது மிகவுஞ்சந்துஷ்டியடைந்து, யாதவப்பிரகாசனைப்பார்த்துச்சிரித்துக் "கலௌகஶ்சித்பவிஷ்யதி" என்கிற வாக்கியத்தை மாத்ரம் உணர்ந்தும் பிறர்க்குரைத்து மிருக்கின்றா யத்தனையல்லது அந்த மஹா புருஷன் உன் சமீபத்தி லிருந்ததை யறியாமலே நாளைக்

* க்ஷுத்தால் - பசியால்.

கழித்தாயே! என்றுசொல்லி, இதோ இந்தமஹாநுபாவருடைய அருளால் திவ்யதேஹம் பெறப்போகிறேன் பாராயென்று எதிரிலிருந்த அரசமரத்தை மளமளவென்று முறித்துத்தள்ளி அதினின்றும் ஒரு ப்ரகாசமுண்டாகி வட்டமிட அவ்வட்டத்தின் மத்தியில் திவ்யதேஹம் பெற்றுவிளங்கி, 'இராமாநுஜன் றுள் வாழி அத்தாள் தொழுவார்தாம்வாழி' என்றுசொல்லிக்கொண்டேஊர்த்வமுகமாகச்சிலதூரம்போய்த் தோன்றுமற்போயிற்று.

ஸ்ரீயமுனைத்துறைவர் வைபவம். (தொடர்ச்சி)

கோயிலில் ஸ்ரீஆளவந்தார் தமக்கு ஸ்ரீ மணக்கால்நம்பி ப்ரஸாதித்திருந்த பவிஷ்யத் ராமாநுஜாசார்ய விக்ரஹத்தை ஆராதித்துக்கொண்டிருக்கையில், இந்த வியக்திமான் இந்நாளில் அவதரித்திருக்க வேண்டுமென்று யோசனைசெய்தருளி, ஸ்ரீபாதத்து முதலிகளைப்பார்த்து, இப்போது ஒரு மஹாபுருஷன் அவதாரஞ் செய்திருக்கவேண்டும்; அந்த மஹாபுருஷனாலே 'கலியுங்கெடும் கண்டுகொண்மின்' என்று நம்மாழ்வாரருளிச் செய்ய; நம்முடைய பிதாமஹரான ஸ்ரீமந் நாதமுனிகள்கேட்டு வியப்புற்று அவ்வவதாரமாமளவும் இருக்கப் பெற்றிலோமே! என்கிற அனுபாவத்தை வஹித்திருந்து அதை உய்யக்கொண்டாருக் கருளிச்செய்ய; அவரு மவ்வண்ணமே மயங்கி, நமதாசார்யரான ஸ்ரீ மணக்காலநம்பிகளுக்குச் சாதிக்க; நம்பிகளும் அடியேனுக்கதை யருளிச் செய்து "தீர்லப்தா" என்கிற கணக்கின்படியே அவதாரகாலம் சமீபித்ததென்றும் அஸ்மதாதிகளுக்குச் சேவை தருமென்றும் திருவாய்மலர்ந் திருக்கின்றுராகையால் இதைக்காண்கைக்கு விரகேதென்று வினவியருளிக்கொண்டிருக்க; அப்பொழுதுபேரருளாளன் சன்னிதியில்நின்றும்வந்து நம்பெருமாளைத் திருவடிதொழுத இரண்டு ஸ்ரீ வைஷ்ணவர்கள் இவர் திருவடிகளிலே சேவித்துநிற்க; இவர் அவர்களைக் கடாக்ஷித்துப் பேரருளாளன் கோயிலின் விசேஷங்களைக் கேட்டருள; அவ்வளவிலே பராஸங்கிகமாய் யாதவப்ரகாச னென்பானொரு ஏகதண்டசந்யாசி பக்கல் ஸ்ரீபெரும்பூதூர் இளையாழ்வாரென்னுமொருவர் வேதாந்தம் வாசியாநிற்க "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம" என்கிற சுருதிவர, அவன் அதற்கு * வ்யாவ்ரு

* வ்யாவ்ருத்தம் - குணநீக்கம்.

த்தந் தோன்ற அர்த்தஞ்சொல்ல; இளையாழ்வார், குணயோகஞ் சொல்லலாயிருக்க வ்யாவ்ருத்தஞ் சொல்லில் சேராதென்ன; அதற்கவன் ஹூங்காரம்பண்ணிப் பின்னையுமொருநாள் "தஸ்யயதா கப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணீ" என்கிறதற்கு அநுசிதார்த்தஞ்சொல்ல; அதைக்கேட்டு இளையாழ்வார் க்லேசித்து நிற்கையில், அவர் சோகத்தாலுண்டாகிய திருவிழிநீர் அவன் தொடையிலேவிழுந்து தீப்பொறிபட்டாற்போலேயாக, அவன் பதறி அவர் முகத்தைப்பார்த்து க்லேசமுண்டாவதற்கு ஹேது வேதென்ன; அவர் சூர்யனைக்கண்டு அப்போதலர்ந்த கமலம் போல விருக்கும் பரமபுருஷனுடைய திருக்கண்களென்று இங்ஙனம் பொருளாவதிருக்க, அயதார்த்தங் கேட்டவாறே உருகினேனென்றும், அதோடு ப்ரஹ்மராக்ஷஸைப் போக்கிய வர்த்தமானத்தையும் ஸவிஸ்தாரமாக விண்ணப்பஞ்செய்தார்கள்; ஆளவந்தார் இவையனைத்தையும் அமர்ந்து கேட்டருளி "அஸந்த ஏவாத்ரஹி ஸம்பவந்தி ஹஸந்திகாயா மிவஹவ்யவாஹ: - அத்ரைவஸந்தோ யதிஸம்பவந்தி தத்ரைவலாட்ஸ் ஸரஸீருஹாணாம்" என்கிறபடி கும்மிட்டியில் அக்னி கிளர்வதுபோல அஸத்துக்கள் ப்ரபலித்திருக்கிற இவ்வுலகத்தில் ஓராளொரு மஹாபுருஷன் அவதரிக்கையாலே, * இந்தளத்தில் தாமரையும் பூக்கக் கண்டோமென்ன வமையுமென்றது உண்மையன்றோ! என்று சந்தோஷித்து முதலிகளுடைய முகங்களைப் பார்த்தருளி, அப்பொழுதே அவரைக்காண ஆசைப்பட்டு முதலிகளுந் தாமுமாகப் புறப்பட்டு நம்பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்து அவர் அநுக்ரஹம்பெற்றுப் பயணகதியிலே திருக்கோவலூரிலெழுந்தருளி, ஆழ்வார்களையும் ஆயனரையும் அடிபணிந்து, "புரீணமபி ஸர் வாஸாம் ஸ்ரேஷ்டாபாபஹரா ஹிஸா - நாம்நாகாஞ்சீ திவி க்யாதா புரீபுண்ய விவர்த்தநீ" என்கிறபடி ஸமஸ்த நகரங்களிலுஞ் சிரேஷ்டமாய்ப் பாபஹரஞ் செய்யுமதாய்ப், புண்யவர்த்தகமாய்க் காஞ்சீபுரி என்கிற ப்ரசித்தமான பெயரையுடையதாயிருக்கும் பெருமாள் கோயிலுக் கெழுந்தருள; அங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களும் வரந்தரும் பெருமாளரையரும், ஸ்ரீ சடகோபனையும், தீர்த்த ப்ரஸாதங்களையும் கொண்டு அதி சம்ப்ரமத்துடனே எதிர்கொண்டெழுந்தருள; இவர் மிகவும் சந்துஷ்டராய்ச் சாஷ்டாங்க ப்ரணமம் பண்ணித், தீர்த்த

* இந்தளம் - தீப்பிழம்பு.

ப்ரஸாதங்களை ஸ்வீகரித்தருள; அப்போது † திருக்கச்சி நம்பிவந்து இவர்திருவடிகளிலே அடைவுகெடவிழுந்துசேவிக்க; அவரை அதிப்ரீதியுடனே முடிபிடித்தெடுத்து ஸ்ரீகஜேந்த்ர தாஸரே? பேரருளாளனுக்கு அந்தரங்க திருவாலவட்டகைங்கர்யம் அவிச்சின்னமாய் நடக்கிறதோவென்றுகேட்க; அவர்வாய்புதைத்துத் தேவரீருடைய நிர்ஹேதுக க்ருபையாலே,பேரருளாளன்கொண்டருளுகிறுனென்று விண்ணப்பஞ்செய்துநிற்கப் பின்பு அவரையுங்கூட்டிக்கொண்டு 'உலகேத்தும் ஆழியான் அத்தியூரான்' என்கிற $ அர்த்திதார்த்த பரிதான தீக்ஷிதனை பேரருளாளனையும்

$ அர்த்திதார்த்த பரிதாந தீக்ஷிதன் - தன்னை அர்த்தித்தவர்களது இஷ்டகாரியங்களைக் கொடுத்தருள்வதில் தீக்ஷைகொண்டுள்ளவன்.

† ஸ்ரீ திருக்கச்சிநம்பிகள் ப்ரபாவம்.

கருணாகரபாதாப்ஜ - ஶரண்யமஹாத்மநே
ஸ்ரீமத்கஜேந்த்ரதாஸாய - காஞ்சீபூர்ணாயதேநம:

ஸ்ரிய:பதியாய் அவாப்த ஸமஸ்தகாமனாய் ஸர்வலோக ஶரண்யனாய் ஸ்ரீவைகுண்ட நிகேதநனை ஸர்வேஶ்வரன் தான் ஸர்வஸ்வாமியாகிலும் அருள்புரிந்த சிந்தை யடியார்மேல் வைத்து ஸ்வஜ்ஞாந வர்த்திகளாய்த் தைவப்ரக்ருதிகளானகோதிலடியார்களைத்திருத்தும்தன்னுடையஸஹஜ ஸௌஹார்த்தத்தாலே இவர்கள் உஜ்ஜீவிக்கும் விரகேதோவென்று சிந்தித்துப் பார்வைவைத்து மிருகம் பிடிப்பாரைப்போலே ஸஜாதீயரைக் கொண்டு இவர்களைத் திருத்துவோமென்று திருவுள்ளமாய் "வைகுந்தத் தமரரும்முனிவரும்" என்று சொல்லப்பெறுகிற அந்தமில்பேரின்பத்தடியார்களிலே ஒருவரான ஸ்ரீஸேநாபதியாழ்வாரைக்குறித்து நீர் இருள்தருமாஞாலத்திலே மனுஷ்ய ஸஜாதீயராய் அவதரித்துத் தெரிவரியவளவில்லாச்சிற்றின்பத்திலே அநர்த்தப்படுகிற ஸம்சாரிசேதனரைக்கரையேற்றி வாருமென்று ப்ரேரிக்க; ஸ்ரீஸேநாபதியாழ்வாரும் திருமழிசைக்கடுத்த பூவிருந்தவல்லி என்கிற கிராமத்தில் எல்லாம் அறியவல்ல இயல்புடையராகையாலே எல்லாருடைய ஸ்வபாவத்தையும் ஸாக்ஷாத்கரித்துத் தஶரதசக்ரவர்த்தியைப் பிதாவாகஅங்கீகரித்தபெருமாளைப்போலே விசேஷ செல்வந்தரும்தார்மீகருமான வீரராகவவபிதானங்கொண்ட ஒருசெட்டிக்குல ப்ரபுவையும் அவரது திருத்தேவியார் கமலையாரையும் தமக்கு ஜநகராக ஸ்வீகரித்து அநுப்ரவேஶித்தார். பின்பு ஒரு ஶுபதினத்திலே அந்தத் தம்பதிகளுக்கு ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமாய்க் கமலையாரும்கர்ப்பந்

பெருந்தேவித் தாயாரையும் சேவித்து மீண்டு ப்ரதக்ஷிணமாக எழுந்தருளாநிற்க; "உதக்பஶ்சிமபாகஸ்தம் வல்மீகம்மஹதோகி ரே:- பூஜநீயஶ்சதத்ராஸ்தே ஶேஷ:பணப்ருதாம்வர:" என்கிற படி உத்தரதிக்கில் மேலண்டைபாகத்தில் சுரமுனிகண சேவித ராய் எழுந்தருளியிருக்கிற திருவனந்தாழ்வானுடைய திருப்புற் றின்சமீபத்திற்போய்அவரையும்சேவித்து, அதற்குக்கிழக்கிலிரு க்கிற கரியமாணிக்கத்தாழ்வாரையுஞ்சேவித்து, முதலிகளுடனே எழுந்தருளி யிருக்க; அப்பொழுது, யாதவப்ரகாசனும் தன்னு டையதிரளுடனேவந்துபெருமாளைச்சேவித்து ப்ரதக்ஷிணம்பண் ணிக்கொண்டுவராநிற்க; இவர்பார்த்து இவர்களில் இளையாழ்வா ரென்பவர் ஆரென்று திருக்கச்சி நம்பியைக் கேட்டருள? அவர்

தரித்தார். அப்போது பூர்வ கர்ப்பங்களிற்போ லன்றிக்கே ஆஶ்சர்யமா யிருப்பதொரு காந்தி விசேஷத்தைக்கண்டு பந்துக்கள் இதுவொரு அதி ஶயமிருந்தபடி யென்னதானென்று விஸ்மிதராய் மஹாபுருஷாதிஷ்டா நத்தாலே வந்ததென்று நிஶ்சயித்தார்கள். வீரராகவரும் இந்தக்கர்ப்பத் தாலே லோகத்துக்கு அதிஸயமுண்டென்று நிஶ்சயித்து ஸந்தோஷித் துக் கொண்டிருந்தார்.

அனந்தரம் ஶகவர்ஷம் ௯௱௩௰க-க்கு மேற்செல்லுகின்ற ஸௌம்யவர் ஷம் மாசிமாஸம் சுக்லதஶமியும் வியாழக்கிழமையுங்கூடின ம்ருகசீர்ஷ நக்ஷத்திரத்திலே வ்ருஷப லக்கினத்திலே "பருவம் நிரம்பாமே பா ரெல்லாமுய்யத் திருவின் வடிவொக்குந் தேவகிபெற்ற" என்கிற படியே நான்காவது புத்ரராய் அவதரித்தருளினர். வீரராகவரும் அதி ஸந்துஷ்டராய் ஸ்நாநம்பண்ணிக், கோதான முதலிய தஶதாநங்களையும் ஸத்பாத்ரங்களிலே தானம் செய்து ஜாதகர்மத்தையும் விதிப்படி நிறை வேற்றிப் பன்னிரண்டாநாள் அநேக ஸ்ரீவைஷ்ணவர்களைத்திரட்டி இவ ருக்கு மேல்வருவதான பேரருளாளன் திருவடிகளிலே கைங்கர்யத்துக் கீடாகத் திருக்கச்சிநம்பி என்று திருநாமஞ்சாத்தினர். இவரும் அதிதே ஜஸ்வியாய் அத்யந்தம் மேதாவியுமாய் ஸவயஸ்கரெல்லாரிலும் விஞ்சின ஸாமர்த்யமுடையவராய் ஶுக்லபக்ஷ சந்த்ரனைப்போலே வளர்ந்துகொ ண்டு குணவத்தையாலே பிதாவுக்கும் மற்றுமுள்ள பெரியோர்களுக்கும் ஆநந்தாவஹராயிருந்தார். இவருடையமாதாவாகிய கமலையாரும் "என்ன நோன்பு நோற்றாள்கோலோ யிவனைப்பெற்ற வயிறுடையாள்" என்று எல்லாருங் கொண்டாடும்படியானர்.

பின்பு நம்பிகளும் தம்முடையவர்ணத்துக்கேற்ற வித்யாஸ்தாநங்களை யெல்லாம் ஆயாஸமின்றிக்கே அதிகரித்துப்பிறர்க்கு உபதேஶிக்கும்படி யானபாண்டித்யத்தையுடையவராய், ப்ராதாக்களுடனே ஒத்தமனமுடை யராய், அர்த்தகாமாதிகளில்ஆஸக்தியில்லாவிட்டாலும் வாணிஜ்யத்திலே

ஸ்வாமீ! அதோ சிவந்து நெடிய வலியவராய் ஆஜாநபாஹுவாய் நடுவே வருகின்றவரென்று விண்ணப்பஞ்செய்ய: அவரைத் தமது ப்ரஸந்ந மதுர கம்பீர நயநங்களாலே செவ்வரியோடப் பார்த்துத் தம்மிடத்திலிருக்கிற பவிஷ்ய தாசார்ய விக்ரஹத்துக்கும் அவருக்கும் திருவவயவங்களெல்லாம் ஒரு அச்சில் வார்த்தது போலிருக்கக்கண்டு ஆமுதல்வ னிவனென்று விசேஷகடாக்ஷம்பண்ணி யருளி, அப்பொழுதே அருளாளனை நோக்கி "யஸ்ய ப்ரஸாத கலயா பதிரஸ்ஸ்ருணோதி பங்கு: ப்ரதாவதி ஜவேநச வக்தி மூக:- அந்த: ப்ரபஸ்யதி ஸுதம் லபதேசவந்த்யா தந்தேவ மேவ வரதம்ஸரணங்கதோஸ்மி" என்று தேவரீர் ஸகலப்ரதரானையாலே 'தாம்வேண்டும் காமமே காட்டுங் கடிது' என்கிறபடி

நிரதிஶயமான நைபுண்யத்தை யுடையராய்ப் போருகிறகாலத்திலே வ்ருத்தரான வீரராகவரும் குமாரர்களுக்குத் தகுந்த காலங்களிலே உபநயன கர்மத்தையும் நிறைவேற்றிப், பின்பு ஸ்வார்ஜிதமான தனத்தை இவர்களைக்கொண்டு வ்ருத்தி செய்வித்துத் தாமிளைப்பாற நினைத்துப் பிள்ளைகளையழைத்து "நமது குலத்துக் குசிதமான வாணிஜ்யதநத்திலே நிரந்தரமாய் வ்யாபரித்துப்போந்த நான் ஶ்ராந்தனானேன். இனி நீங்கள் இந்தத் தநத்தைக் காலதேஶாநுகுணமாகப் பந்துவிரோதமில்லாதபடி ந்யாயோபேதமாயிருந்துள்ள வாணிஜ்யதர்மத்தாலே வர்த்திப்பித்துக்கொண்டு வாழுங்கள்" என்று ஸமமாகப்பிரித்து நாலுபேருக்கும் கொடுக்க அவர்களும் அப்படியே ஸ்வவர்ணோசிதமான வாணிஜ்யத்திலே ப்ரீதியையுடையராய்ப் பிதாவினுடைய அநுமதியை அவலம்பித்துத் தந்தாமுடைய தநத்தையதோசிதமாய் வ்ருத்திசெய்து வந்தார்கள். திருக்கச்சிநம்பியோ பகவத் குணாநுபவத்தி லீடுபட்ட ஹ்ருதயத்தையுடையராகையால் க்ஷுத்ர புருஷார்த்தமான தநதான்யாதி த்ரவ்ய ஸம்பாதநத்திலே நோக்கற்றவராய் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானைப்போலே தாமும் பகவத்விஷயைக ப்ரவணராய், இதரரையும் பகவத்ப்ரவணராம்படித் திருத்திக்கொண்டு பிதா அளித்த தநத்தை எழ்படிகால் தொடங்கிவந்து குடிகுடியாட்செய்யும் தொண்டரான ததீயர்கள்பொருட்டு விநியோகியாநின்று அவர்களுடனே பகவத்குணங்களையே பேசிக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

அக்காலத்தில் ஒருநாளளவிலே இவருடைய பிதாவான வீரராகவர் இவருடைய சீலத்தை யறிந்தாலும் புத்ரர்களையழைத்து "வாருங்கள் பிள்ளைகாள்? நான் முன்னம் உங்களுக்குத் தந்த தநத்தின்மேல் நீங்கள் உங்களுடைய ஸாமர்த்யத்தாலே ஆர்ஜித்த தெவ்வளவு? அதை நான்பார்க்கவேண்டும்" என்னத், திருவேங்கடவர் முதலானார் மூவரும் அப்படியே கொண்டுவந்து காட்ட வீரராகவரும் கண்டு களித்துத் திருக்கச்சி

யே அவ்வவருடைய இஷ்டகாரியங்களைத் தந்தருளுகையாலே அடியேனும் இவ்விளையாழ்வாராகிற இராமாநுஜனை நம் தர்சன ப்ரவர்த்தகராய்விளங்க விசேஷகடாக்ஷம் செய்தருளும்படி சரணம்புகுந்தேனென்று விண்ணப்பஞ்செய்து, பின்பு அத்திகிரியின்மேலே எழுந்தருளிப் பெருமாளைச் சேவித்துத் தீர்த்தப்ரஸாதங்களை லபித்துக்கொண்டு, திருக்கச்சிநம்பியைச் சன்னிதியில்தானே நிறுத்திவிட்டு, இளையாழ்வாரிடத்தில் ஒரு நல்ல வார்த்தைசொல்ல அவசரங் காணாமையாலே மீண்டும் கோயிலுக்கெழுந்தருளினார்.

நம்பியை யழைத்து நீர் ஸம்பாதித்த தநமெங்கேயென்ன? இவரும் கலங்காப்பெருநகரிலே சேமித்துவைத்தேனென்ன; வீரராகவரும் அதாவதென்னென்ன? நம்பியும், வானிளவரசு வைகுந்தக்குட்டன் வாசுதேவன் மதுரைமன்னனுடைய முகமலர்ச்சியே புருஷார்த்தமாக வெண்ணித் தத்ஸாதநமான ததீயாராதநத்தைப் பண்ணினேனென்ன; அதைக் கேட்டு வீரராகவரும் ஹர்ஷப்ரஹர்ஷத்தை ஹ்ருதயாந்தர்க்கதமாக மறைத்துக்கொண்டு க்ரோதத்தை ஆரோபித்துப் புத்ரருக்கு ஹிதகாமராய் ஆகில் உமக்குத் தாதராய்ப்போக வமையுமென்ன; அந்த ஸமயத்திலே மாதாவான கமலையார் சில தனங்களைக்கொடுத்து இந்தத்தனத்தை உம்முடைய பிதாவுக்குக் காண்பியுமென்ன; நம்பியும் அது உசிதமன்று; ஹிதபரரான பிதாவினுடைய வாய்மொழிப்படியே நடக்கவேண்டுமென்று நிஸ்சயித்து நிர்மலராய் க்ருஹக்ஷேத்ராதிகளைவிட்டுத் திருவல்லிக்கேணியிலேசென்று தெள்ளிய சிங்கமாகிய தேவையும், பார்த்தன்றேர் முன்னின்றானையும், சிற்றவை பணியால் முடிதுறந்தானையும், ஆனையின் றுயரந்தீரப் புள்ளூர்ந்து சென்றுநின் றாழிதொட்டானையும்; வேதத்தின் சுவைப்பயனாகிய மன்னாதனையும், பக்திஸாரரையும், பேயாழ்வாரையும் ஸேவித்து ஐந்தாறுநாள் எழுந்தருளியிருந்து, பின்பு தக்கோர் பரவுந் தடஞ்சூழ் பெரும்பூதூர்க்கெழுந்தருளி வாசம்செய்துகொண்டு "ஹஸ்திகிரியிலே பேரருளாளர் ஸந்நிதியில் நித்திய வாஸம் செய்துகொண்டு அயர்வறு மமரர்க ளதிபதியாகிய தேப்பெருமாளுடைய திருவடிகளிலே அநவரத கைங்கர்யம் செய்துகொண் டிருக்கும்படியான காலம் எப்போதுவாய்க்கும்" என்று ப்ரார்த்தித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கும் நாளிலே, பிணியொழித்தமரர் பெரும் விசும்பருளும் பேரருளாள னெம்பெருமானான ஹஸ்திகிரியருளாளர், நம்பி ஸ்வப்நத்தில் எழுந்தருளிவாரீர்நம்பி! நம்மூரில்வந்து நம்பரிஸரத்திலே நுமது மநோரதப்படி வர்த்தியும் என்ன; நம்பியும் தேவரீரெழுந்தருளியிருக்கிற திவ்ய தேஸமேது? தேவரீர் திருநாமமென்னவென்று வினவக் கச்சிநகர் காணும் நம்மூர், உலகேத்துமாழியான் அத்தியூரான்காணும் நமதுநாமம் என்ன; இவரும் ஆகிலும்மூர்க்கு வழியறியேனென்னப், பேரருளாளரும்

அனந்தரம் ஒருநாள் ஸ்ரீயமுனைத்துறைவர் கோயிலில்வியாக்யானஞ் செய்துகொண்டிருக்கையில் 'இலிங்கத்திட்ட புராணத்தீரு' மென்கிற பாசுரம் ப்ரஸ்துதமாக, நமக்குப்பின்பு இந்தத் தர்சனத்தை நிர்வஹித்து நடத்துவாரெவரென்று யோசித்து இளையாழ்வார் பக்கல் திருவுள்ளமாய், முதலிகளைப்பார்த்து,இப்போது இளையாழ்வாரை யாதவப்ரகாசனுடன் உறவறுத்து நம் பக்கல் சேர்க்கும் விரகுண்டோவென் றருளிச்செய்து, பின்னையும் பேரருளாளனைக் குறித்து, நம் ப்ரபத்தியை ஸபலமாக்கியருளவேண்டுமென்று ப்ரார்த்தித் தருளினர்.

இங்கு நின்று நம்மூரைக்குறித்துப் புறப்பட்ட வுமக்கு எவ் வழியிலே செங்கழுநீர்ப்புஷ்பம்சிந்திக்கிடக்கிறதோ அவ்வழியேபார்த்துக்கொண்டு வாருமென்றருளிச்செய்ய; நம்பியும் மற்றுநாள் விடியோரை யெழுந்துஸ்வப்ந மிருந்தபடியை நினைத்து விஸ்மிதராய் அவ்வுத்தேஶத்தோடு புறப்பட; அவ்வழியிலே செங்கழுநீர்ப்புஷ்பம் சிந்தி யிருக்கக்கண்டு களித்து மண்திணிஞாலமும் எழ்கடலும் நீள்விசும்பும் கழியப் பெரிதாலென்கிற காதலுடனே சென்று "பூவியல் பொழிலுந் தடமு மவன் கோயிலுங் கண்டு ஆவியுள்குளிர" என்கிறபடியே சைத்ரரதத்தையும் நந்தவனத்தையும் பரிஹஸியாநின்றுள்ள திருநந்தநவநங்களையும், தாமரைத் தடாகங்களையும் கண்டுகந்து, "நீசனேன் நிறைவொன்றுமில்லேன்" என்கிறநீசனை எனக்கு இந்த மஹாபுருஷார்த்தம் கிட்டுவதோவென்று ஸந்தேஹித்துப் பதாஞ்சலிபுடராய், நிரவதிகமான ஹர்ஷத்தா லுண்டான பாரவஶ்யத்தாலே ஒசிந்த நுண்ணிடைமேற் கையைவைத்து நொந்து நொந்து கசிந்த நெஞ்சினனாய்க் கண்ணனீர்துளும்பச்சென்ற உண்ணுஞ் சோற்றில் பிராட்டியைப்போலே ஒருவண்ணஞ் சென்றுபுக்கு, அதிபாவநமாயும் மநோஹரமாயுமிருந்துள்ள திருவநந்தஸரஸிலே நீராடி ஶுத்தவஸ்த்ரதரராய்க் கேஶவாதித்வாதஶ நாமங்களாலே ஊர்த்வ புண்ட்ரங்களையும் பகவதபிஷேகோபயுக்த ஹரித்ரா சூர்ணத்தையும் தரித்தருளி ஸ்ரீபலிபீடத்தையும் த்வஜஸ்தம்பத்தையும் ஸேவித்து ப்ரதக்ஷிணமாக வுள்ளே புகுந்து திருவபிஷேக மண்டபத்தைத் தண்டன் ஸமர்ப்பித்து ப்ரதக்ஷிண க்ரமத்திலே பேரருளாளர் பெருந்தேவித் தாயாரையும் திருவடிதொழுது "பங்கயத்தாள் திருவருளுங்கொண்டு" என்கிறபடியே தத்கடாக்ஷங்களிலே ஸந்துஷ்டதராய் த்ருதீயா வர்ணத்திலே ப்ரவேஶித்து அவரனுமதிபெற்று முக்தனுணவன் திருவநந்தாழ்வானைக் காலாலே துகைத்தேறுமாப்போலே ஸோபாநமார்க்கத்தாலே ஹஸ்திகிரியாகிற திருமலையிலேயேறிக் கச்சிக்கு வாய்ந்தான் என்கிற திருமண்டபமான வையமாளிகையிலே சென்று தண்டன் ஸமர்ப்பித்து ஜயவிஜயாநுஜ்ஞையாலே பொன்னியலுமாடக் கவாடங்கடந்து புக்குமன்னன் திருமார்பும் வாயுமடியிணையும் பன்னுகரதலமுங் கண்களும் பங்கயத்தின்

அந்தச் சமயத்தில் பெருமாள்கோயிலில் யாதவப்ரகாசன் க்ரந்தம் நடத்தாநிற்கச்செய்தே "ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" "நேஹநாநாஸ்திகிஞ்சந" இத்யாதி வாக்யங்களை அத்வைதபரமாக்கி ஜீவப்ரஹ்மணோரைக்யம் ப்ரதிபாதிக்க, இளையாழ்வார் அதை நிராகரித்து, அவ்வாக்கியங்களை விசிஷ்டாத்வைதபரமாக்கி அர்த்தஞ்சொல்ல; அவன்குபிதனாய், இன்றுமுதல் உம்முடைய புத்திக்குத் தகுதியான விடத்தேபோய் க்ரந்தம்வாசியுமென்று போகச்சொல்ல; அவர் அதிக ப்ரீதியோடே மீண்டு தம் திருமாளிகைக்குப்போய்த் திருத்தாயாரிடத்தில் நடந்த செய்தியைச்சொல்ல; அவர் பிள்ளாய்! முன்பே நீ படித்தது போதுமானதாகவிருக்க இன்னமும் அதில்தானே பொழுதைக் கழிப்பதேதுக்கு? தேவப்பெருமாளைச்சேவித்து அவருக் கந்தரங்கராயிருக்கிற திருக்கச்சிநம்பியாரை யநுவர்த்தித்து அவர் அருளிச்செய்கிறபடி செய்துகொண்டிருமென்றுசொல்ல; அப்படியே திருக்கச்சி நம்பியைச் சேவித்துக்கொண்டு க்ருதார்த்தராய் "க்ரியதா மிதிமாம்வத" என்பதுபோல அடியேன் செய்யத்தக்க கைங்கர்யத்தை அருளிச்செய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொள்ள; நம்பியுகந்து, பெருமாளுக்குச் சாலைக்கிணற்றுத்தீர்த்தம் உசப்பாயிருப்பதென்று முன்னமே நீ ரறிந்திருக்கின்றீ ராகையால் ப்ரதிதினமும் ஒருகுடம் திருமஞ்சனங்கொண்டுவந்து சமர்ப்பியும் என்றருளிச்செய்ய; அந்தக் கைங்கர்யத்தி லீடுபட்டிருந்தார்.

பொன்னியல்காடோர் மணிவரைமேல் பூத்ததுபோல் துன்னியொளி படைப்ப வின்னுணுந்தோள்வளையும் மன்னியகுண்டலமு மாரமு நீண்முடியுந் துன்னு வெயில்விரித்த மணிமயமான ஒரு தேஜோ விசேஷத்தைக்கண்டு "என்னுடைய கண்களிப்ப நோக்கினேன்" என்கிறபடியே ஸேவித்து விஸ்மிதராய் ப்ரணாமாதிகளைப்பண்ணி, அஜ்ஞனாய் அசக்தனாய் அப்ராப்தனான நான் ஹிதமறிந்து செய்யலாவதொன்றுமில்லை; ஸர்வபூத ஸுஹ்ருத்தான தேவரீரே ஸ்வரூபோசிதமான ஒரு கைங்கர்யத்திலே அடியேனை ப்ரேரித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்தார். பின்பு பேரருளாளரும் உத்தரவேதியில் அக்னிமத்யத்திலே ஆவிர்ப்பவித்தருளினவராகையாலே அவ்வௌஷ்ண்யம் கோதிலடியரான இவருடைய அந்தரங்க வ்ருத்தியிலே ஆறுமென்கிற திருவுள்ளக்கருத்தாலே திருவாலவட்ட கைங்கர்யத்திலே யிவரை நியமித்தருளினார். இவரும் அப்படியே "என்னமுதனைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்று போக்யமுமாயிருந்துள்ள தத்தி வ்யாவலோகந ஸந்துஷ்டராய்த் திருவாலவட்டத்தையே ஸேவித்துக்கொண்டு போந்தார்.

அப்போது ஸ்ரீயமுனைத்துறைவர் திருமேனியிலே நோவு சாத்திக்கொண்டிருக்கத் திருக்கோட்டியூர் நம்பியும் பெரியநம்பியும் திருவரங்கப் பெருமாளரையரைப் புருஷகாரமாக்கிக்கொண்டு ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு அடியோங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தத்தை ப்ரஸாதித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து கொள்ள; ஸ்ரீயமுனைத்துறைவர் முதலிகளிருவரையும் உகந்தருளி உங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொன்றேதென்னில் கோயிலாழ்வாரே உங்களுக்கு உயிர்நிலையும் தஞ்சமுமென்று புத்திபண்ணிப்போருகையும், பெரிய பெருமாள் திருவடிகளின்கீழே வீணையுங்கையுமாய்ச் சேவித்திருக்கும் திருப்பாணாழ்வாருடைய திவ்யமங்களவிக்ரஹத்தைப்பாதாதிகேசாந்தமாகச் சேவித்துக்கொண்டு போருகையுமே தஞ்சமான அர்த்தமென்றும், அதற்கு ப்ரமாணமாகத் திருவேங்கடமுடையானுடைய உயிர்நிலையை அறிந்துபோரும் குறும்பறுத்த நம்பியையும், பேரருளாளன் உயிர்நிலையை அறிந்துபோரும் திருக்கச்சி நம்பியையும், பெரிய பெருமாளுடைய உயிர்நிலையை அறிந்து போரும் திருப்பாணாழ்வாரையும், திருப்பாணாழ்வார் உயிர்நிலையை அறிந்துபோரும் திருவரங்கப் பெருமா ளரையரையும் காட்டியருளி, அனந்தரம் ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையரைப் பார்த்துப் பெரியபெருமாளுடைய உயிர்நிலையை அறிந்து சேவித்துப் போருகிற விக்ரஹமே அடியேனுக்கும் உபாயோபேயமென்று புத்திபண்ணிப் போருவனென் றருளிச் செய்ய; அவர் இவர் ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டுத் தேவரீர் நித்ய விபூ

இப்படி நிரந்தரமாக ஆறுமாசம் ஸ்வசரண கமல பரிசர்யைகபரண ராய்ப்போருகிற இவர் முகத்தாலே சில சேதனரை உஜ்ஜீவிப்பிப்போமென்று திருவுள்ளமாய்த் தேவப்பெருமாள் திருவாய்மலர்ந்தருளி இவருடனே ப்ரஸ்நப்ரதிவசனங்களை நடத்தியருளினார். நம்பியும் இதைக் கண்டு அர்ச்சாவ்யவஸ்தையை அதிக்ரமித்து க்ஷேத்ரஜ்ஞனை அடியேனுடன் இப்படி பரிமாறலாமோ என்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் நாமுமொரு ப்ரயோஜநத்தைக் கணிசித்துக்காணும் உம்மை யிங்கே யவதரிப்பித்தது; உமக்கு இதுகொண்டுகாரியமில்லையென்றருளிச்செய்ய; நம்பியும் தம்முடைய ஸேஷத்வ காஷ்டையான பாரதந்த்ர்யத்துக்கீடாக அவன் செய்யும்சேமத்தையெண்ணித்தெளிவுடையராயிருந்தார்; பின்பொருநாள் நம்பியும் ஏகாந்த ஸமயத்திலே பேரருளாளரைக் குறித்து அடியேனுக்கு

திக்குச்சென்று பரமபதநாதனைச் சேவித்து இமையாத கண்ண
ராய்க்கொண்டு போரத் திருவுள்ளம்பற்றியருளினதோவென்று
விண்ணப்பஞ் செய்ய; நீர் பரஸம்ருத்திக்கு உகந்து அத்யவஸித்
திருமென்று அருளிச்செய்து, பின்னையும் ஒருவன்ப்ரபந்நனாகை
யில் பகவததீனமான ஆத்மயாத்திரையிலும் கர்மாதீனமான
தேஹயாத்ரையிலும் சேர அந்வயம் உண்டென்றிருந்தானானால்,
ஆத்மஸமர்ப்பணங்குலைந்து நாஸ்திகனாய்விடுவான்; ஆகையாலே
த்ரிவிதகரணங்களிலும் உபயயாத்திரையிலும்சேர அந்வயமில்லை
யென்றும் நாராயணனுக்கு நைரந்தர்யவேஷம் தம்பக்கல் பேற்
றுக்கு நம: என்றெண்ணாதவர்களை 'வானவர்நாட்டையும் நீ
கண்டுகொள்' என்று ஒரு ஔதார்யவிசேஷமுண்டு; நாரங்களு
க்கு நைரந்தர்யவேஷமாவது 'நாராயணனே நமக்கே பறைதரு
வான்' என்கிறபடியே நிர்ப்பரராயிராமல் தம்பேற்றுக்கு த்வரித்
திருக்கையும் ஸ்வரூபஹானி, எம்பெருமானை ரக்ஷகனென்றிருக்
கையும் ஸ்வரூபஹானி, எம்பெருமான் ரக்ஷ்யனென்றிருக்கை
யும் ஸ்வரூபஹானி; இப்படி யிருந்தானாகில் அனன்யார்ஹசேஷ
த்வத்துக்கும் ஸ்வஸ்வாமி ஸம்பந்தத்துக்கும் சேராதென்றரு
ளிச்செய்தார். மீளவும், முதலிகள் அடியோங்களுக்குப் பற்றும்

ஸதாசார்ய ஸமாஶ்ரயணமெங்கேயென்றுகேட்கப், பேரருளாளரும் மிக
வும்ப்ரீதராய் நம்முடையபெரியகோயிலேறப்போய்ப் பெரியநம்பி புருஷ
காரமாகப் பெரியமுதலியாரைத் திருவடிதொழுது அவர்திருவடிகளிலே
ஆஶ்ரயியும் என்ன; நம்பியும் மற்றாநாள் விடிவோடே பேரருளாளரை
ஸேவித்து அநுமதிகொண்டுபுறப்பட்டு ஜ்ஞாநவர்த்தகமுமாய்ப்புண்யவர்
த்தகமுமான திருவரங்கப்பெருநகரைநோக்கிப்பயணகதிகளிலேசென்று
திருக்கோவலூரிலே யெழுந்தருளி ஆழ்வார்கள் நயினாரையும் முதலாழ்
வார்களையும்ஸேவித்து அற்றைக்கங்கே யெழுந்தருளியிருந்து மற்றாநாள்
புறப்பட்டு மூன்றுநாலு பயணத்திலே யெழுந்தருளித் "திசையெல்லாங்
கமழும்பொழில்சூழ் திருவெள்ளறை நின்றானே" என்கிறபடியே திரு
வெள்ளறையிலே சென்று வெள்ளறையுட் கல்லறைமேற் பொன்னையுங்
கண்டு களித்து உள்ளே புகுந்து புண்டரீகாக்ஷனையும் நாச்சியாரையும்
ஸேவித்து அற்றைக்கங்கே யெழுந்தருளியிருந்து மற்றாநாள் புறப்பட்டு
மண்டிணிஞாலமும் ஏழ்கடலும் நீள்விசும்புங் கழியப் பெரிதான காதலு
டனே மஹாநீசனான எனக்கு இந்த மஹா புருஷார்த்தம் கிட்டக் கட
வதோ வென்று எழுந்தருளுகிறபோது தூரத்திலே திருக்கோபுரம் திரு
மதில்களையும் கண்டு ஸேவித்துக் கைகூப்பி நிரவதிகமான ஹர்ஷத்தா

உபாயமேதென்று கேட்க; நீங்கள் அடியேனைப் புத்திபண்ணிப் போருங்கோள் என்கை அடியேனுக்கு ஸ்வரூபஹானியாகும்; ஆகையால் 'எம்பெருமான்றாள் தொழுவாரெப்பொழுது மென் மனத்தே இருக்கின்றாரே' என்னுமதுவே உங்களுக்கு உபாயோபேயங்களாகப்புத்திபண்ணிப் போருங்கோளென் றருளிச்செய்தார் அப்பொழுதுமுதலிகளுக்குக்கலக்கமுண்டாய்விழித்திருக்க நீங்கள்விழிக்கவேண்டா; உங்களுக்குத்திருமந்த்ரார்த்தம் போகமண்டபம் - சரமச்லோகார்த்தம் புஷ்பமண்டபம் - மந்த்ரார்த்தம் தியாகமண்டபம் என்றும், இதற்குப்ரமாதாக்கள் திருப்பாணாழ்வார் முதலானவர்கள் என்றும் அருளிச்செய்தார்; இவற்றைத் திருவரங்கப்பெருமாளரையர் திருவுள்ளம்பற்றித் தேவரீர் அவதாரம் தீர்த்தம் ப்ரஸாதித்துப் போகுமானால், அனந்தரம் இங்குள்ள க்ரிமி கீடாதிகளுக்கு ஓரழிவுவந்தால் செய்வதொன்றில்லையேயென்ன; அதைக்கேட்டுப் பராக்கடித்து ப்ரத்யுத்தரம் செய்யாமலிருந்துவிட்டார். இவ்வார்த்தையைநம்பிகளிருவரும் நன்றாகத் திருவுள்ளம்பற்றி, ஸ்ரீஆளவந்தார் வியோகத்தில் நாம் ப்ராணத்யாகம் பண்ணக்கடவோமென்று நிச்சயித்திருக்கையில்

லுண்டான பாரவச்யத்தாலே "உந்திமேல்நான்முகனைப்படைத்தானுலகுண்டவன், எந்தைபெம்மானிமையோர்கள்தாதைக்கிடமென்பரால், சந்திரேறுமணியுங்கொழிக்கும்புனற்காவிரி,யந்திபோலுநிறத்தார்வயல்சூழ் தென்னரங்கஞ்"சேர்ந்துவடதிருக்காவேரியிலேநீராடிக் கேசவாதித்வாதசநாமங்களிலே ஊர்த்வபுண்ட்ரங்களையும் ஹரித்ராசூர்ணத்தையும் தரித்து அவ்வருகுண்டான அழகிய திருத்தோப்புகளையும், அங்குண்டான திருப்பூமரங்களையும், அவ்வருகிலுண்டானவண்டினமுரலுஞ்சோலைகளையும், அங்கயல்பாய் வயல்களையுங்கண்டு களியாநின்றுகொண்டு "மீனோடாமை கேழலரிகுறளாய் முன்னுமிராமனாய்த் தானாய்ப் பின்னுமிராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியுமானான் றன்னை" என்கிற தசாவதாரக் கோயிலையும், திருமங்கையாழ்வாரையும் திருவடிதொழுது வடக்குத்திருவாசலாலேப்ரதக்ஷிணமாகவெழுந்தருளிப்பெரியநம்பிதிருமாளிகையிலே எழுந்தருள; அவருங்கண்டு பேரருளாளருகந்த விஷயமன்றோ வென்றெதிரேவந்து ஸாதரராய்க் குசலப்ரச்நம்பண்ணத்; திருக்கச்சிநம்பியும் அவர்திருவடிகளிலேஸேவித்துநின்று தாம்வந்தவரத்தைஅவருடன்விண்ணப்பஞ்செய்யப்; பெரியநம்பியுங்கேட்டுமிகவும்ஹ்ருஷ்டராய் அவரையுங் கூட்டிக்கொண்டு மடத்துக்குப்போகிறபோது நம்பிக்கு ஆசார்யப்ரேமங் கனத்திருக்கப்; பெரிய நம்பியும் முன்பே ஸ்ரீஆளவந்தார் கோஷ்டியிலே

அவ்விசேஷத்தைப் பெரியபெருமாள் அறிந்து திருவோலக்கத்திலே யிருந்துகொண்டு அவர்களை அருளப்பாடிட்டு, ஸ்ரீ ஆளவந்தார் வியோகத்திலே நீங்கள் அவிவேகம்பண்ணினீர்களாகில் நம் மாணை என்று ஆஜ்ஞாபித்துத்திருவரங்கப்பெருமாளரையர் திருக்கையிலே அவர்களைக் காட்டிக்கொடுத்தருள; அவர்முதலிகளிருவரையும் கைபிடித்துக் கொண்டு ஆளவந்தாரிடஞ் சென்று இவ்விசேஷத்தை விண்ணப்பஞ் செய்ய; ஆளவந்தார் அவர்களைப் பார்த்து நம்பேற்றுக்கு ஸஹியாதவர்கள், பெரியபெருமாள் இரண்டாற்றுக்கு நடுவே திருவாராதனங் கண்டருளுவதைச் சஹியாதவர்களாவார்கள்என்றருளிச்செய்து,நம்வியோகத்திலே அவிவேகம்பண்ணினீர்களாகில்ஸ்ரீஉய்யக்கொண்டார்மணக்கால் நம்பிமுதலான பெரியபெருமாளுகந்தமுதலிகள் நம்சடகோபன் ஆகியவிவர்கள் திருவுள்ளத்தைமறுத்தவர்களாவீர்கள்என்று தம்முடைய திவ்யாக்ஞையிட; அனந்தரம் அவர்கள் சற்றுதணிந்திருந்தார்கள். பின்பு ஸ்ரீ ஆளவந்தார்மாறநேர்நம்பியை அருளப்பாடிட்டுநமக்குராஜவ்ரணம்வந்திருந்தபோது நீர்பெரியபெருமாளிடத்தில்ப்ரபத்திபண்ணிப்போக்கிவிட்டிருக்கையால் அவ்வனுபவசேஷத்துக்காக மறுபடி இவ்விருள்தருமாஞாலத்தைப்பற்ற வேண்டிவருமாகையால் நீர்திரும்பவும் ப்ரபத்திபண்ணி நமக்கு

எழுந்தருளிப் பேரருளாளர் சந்நிதியினின்றும் திருக்கச்சிநம்பி எழுந்தருளினரென்று விண்ணப்பஞ் செய்ய; ஸ்ரீ ஆளவந்தாரும் எண்ணினபலம் எதிரேவந்துவாய்த்ததென்றுஅருளிச்செய்யத்; திருக்கச்சிநம்பியும்ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளிலே தாளுந் தடக்கையுங் கூப்பித் தண்டன் ஸமர்ப்பித்துத் திருவடிகளைக் கண்ணிலுந் திருமுடியிலுந்தரித்து நெடும்போதெழுந்திராம லிருக்க; ஸ்ரீ ஆளவந்தாரும் ப்ரேம பூர்வகமாக அவரை எடுத்தணைத்து முதலிகளைப் பார்த்து இவர் நித்யஸூரிகளிற் றலைவரன்றோ வென்றருளிச் செய்யத்; திருக்கச்சிநம்பியும் "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்று தம் மபேக்ஷிதங்களை விண்ணப்பஞ்செய்ய; ஸ்ரீ ஆளவந்தாரும் திருவிலச்சினையைப்ரஸாதித்து ஸவிநயரானநம்பியைத் தம்முடைய வலப்புறத்திலே வைத்துத் திருக்கையாலே ஸ்பர்சித்து மணக்கால் நம்பி திருவடிகளை ஸ்மரித்துக்கொண்டு குருபரம்பராபூர்வகமாக மந்த்ர ரத்நமான த்வயத்தை ஸாங்கோபாங்கமாகநம்பி திருச்செவியிலே யுபதேஸித்துப் பேரருளாளதாஸரென்று தாஸ்யநாமத்தையும் ப்ரஸாதித்து ஸ்ரீபாத தீர்த்தத்தையும் ப்ரசாதிக்க; நம்பியும் ஹ்ருஷ்டராய் ஸகல ரஹஸ்யார்த்தங்களையும் ப்ரஸாதித்தருள வேண்டுமென்று ப்ரார்த்-

அதை ப்ராப்தமாம்படி செய்யுமென்ன; அவ்விதமே அவரும் செய்யப், பெருமாளும் ப்ரஸாதித்தருள, அதைப்பெற்றுக்கொண்டுவந்து ஸ்ரீபாதத்தில் தண்டன்ஸமர்ப்பித்து ஸ்வாமி! தேவரீருக்கு அனுபவசேஷமுமில்லை இப்போது ப்ராப்தமாவதுமொன்றில்லை; அதனைப்பெருமாள் அடியேனுக்கு ப்ரஸாதித்தாரென்று விண்ணப்பஞ்செய்ய; அவருடைய அத்யவஸாயத்துக்காக உகந்து, பெரியநம்பியைப்பார்த்து நீர் இந்த மாறநேர்நம்பிக்கு ஸகல உபசாரமும் செய்யக்கடவீரென் றருக்ஞையிட்டருள; அவரும் தன்யனுயினேனென்று ஏற்றுக்கொண்டார்.

அதன்பின்பு ஸ்ரீஆளவந்தார் முதலிக ளெல்லோரையும் பார்த்துத்தம்முடைய முத்தனைய திருவாய்திறந்து பகவத்பாகவதவிஷயங்களிலே தரமிடாதே, பாகவதவிஷயத்திலே பகவந்நோக்கானவனுய்ப், பகவானைக் குருபரம்பராதியாக திருவடிவிளக்குமாபோலே பாகவத விஷயத்திலும் தன்சத்தைமாண்டு ஆசார்யவிக்ரஹத்தை அநுஸந்தித்துத் தீர்த்தங்கொண்டு போருகையும், அவர்களுக்குத் தீர்த்தங்கொடுக்குமிடத்தில் அர்த்தகாம பரவசரன்றிக்கே தாங்களும் நேரே ஆசார்யனை நோக்கிக்குருபரம் பராபூர்வகமாக த்வயத்தை அநுஸந்தித்துக் கொடுக்கையும், இவர்க்கு உபாதேயம் ஜ்ஞாநாதிக விஷயமுமாய்ச், சமூஹத்திற் சென்றவளவிலே இருவரும் அர்த்தகாம பரவசராய், ப்ராக்ருத சரீரத்திலேநோக்காய்ச் சமூஹத்திற்சென்று முதலிகளை யிழந்து திருவுள்ளம் கன்றுமாகில், ஆசார்யனே ஆகிலும் இவர்களுக்குத் தீர்த்தம் உபாதேயமன்று என்றும், உங்களுக்குச் சரமார்த்தம் பெரியபெருமாள் திருவடிகளிலே ஒருகருமுகை முகிழ் வெடிப்

திக்க; சிஷ்யலக்ஷணபூர்த்தியுடையரான இவருக்கு "முமுக்ஷுவாய்ப்ரபந்நனுயிருக்குமவனுக்குக்காலக்ஷேபமாவது குருபரம்பராபூர்வகமாகத்வயத்தை ஸதாநுஸந்தானம் பண்ணுவது (த்வயமாவது உபய விபூதிநாயகனுய் ஸ்ரீய:பதியான ஸர்வேஶ்வரனும் நாச்சிமாரும் நித்யஸூரிகளுங்கூட எழுந்தருளியிருக்கும் பீடகத் தட்டா யிருக்குமதொன்றாகையாலே யிறே) என்றும், 'திருவுடைமன்னரைக்காணிற் றிருமாலைக் கண்டேனே' யென்றும், வைஷ்ணவ விஷயத்திலே த்ரிவித கரணங்களாலேயும் அபசாரம்வாராதபடி ஆதரவோடே ஸேவித்திருக்கை" என்றும், அருளிச்செய்து இவரைப் பாகவத நிஷ்டராக்கி அதற்குமேலே "பீதகவாடைப் பிரானூர் பிரமகுருவாகிவந்து" என்றும், "தேனூர்கமலத் திருமகள்

பிக்கையும், ஆசார்யவிஷயத்தில் ப்ரதமதசை மத்யமதசையில் நின்று சரமதசையை அநுசந்தித்துப் போருகையும் உத்தாரக ப்ரதிபத்தியென்றும் அருளிச்செய்து, திருவரங்கப்பெருமாளரையரைத்தண்டனிட்டுத் திருக்கோட்டியூர் நம்பியையும் பெரியநம்பியையும் அவர்கையில் காட்டிக்கொடுக்க; அரையர் அவர்களைக் கைக்கொண்டு நீங்கள் ஆசார்யவிஶ்லேஷத்தில் அவிவேகம் பண்ணுவீர்களாகில் உங்களுக்குத் தேசவிசேஷமின்றிக்கே, நித்யசூரிதிரளிலும் புகப்பெறாத இழப்புறுவீர்களென்றருளிச்செய்ய; ஸ்ரீஆளவந்தாரும் அதைக்கேட்டு உகந்து முதலிகாள்! உங்களுக்குத் திருவரங்கப்பெருமாளரையர் விக்ரஹமே உபாயோபேயமாகுமென்று புத்திபண்ணிப் போருங்கோளென் றருளிச்செய்ய; அவர்களும் அப்படியே புத்திபண்ணி யிருந்தார்கள்.

அனந்தரம் ஸ்ரீஆளவந்தாருக்குத் திருமேனி பாங்காகத்தீர்த்தமாடிப் (பெரியபெருமாளுக்கு உத்ஸவமாய்ப்பெரியதிருமஞ்சனம் கண்டருளி உடுத்திமுடித்துச் சார்த்துப்படிசார்த்தி, அங்குள்ளஸ்ரீரங்கமாமறையோர்சேவிக்கஅமுதுசெய்தருளித், திருத்திரைநீக்கியிருக்கிறவளவிலே) திருவோலக்கத்தேறவெழுந்தருளி

கொழுநன்றானே குருவாகி” என்றும், ஈஶ்வரன் தானாகச் சொல்லப்பட்ட ஆசார்யனே சிஷ்யனுக்குத் திருநாடு திருப்பாற்கடல் நூற்றெட்டுத்திருப்பதிகளும், அன்னையாயத்தனாய் என்னும் படியான ஸர்வவிதபந்துவும் மாடும் மனையும் பொருளும் பூமியும் எல்லாம் ஆகக்கடவன் என்றும் விசேஷார்த்தங்களை யெல்லாம் அருளிச்செய்யக்கேட்டு நம்பியும் ப்ரீதராய் எழுந்தருளியிருந்தார்.

பின்பு ஸ்ரீஆளவந்தார் முதலிகளையும் நம்பியையுங்கூட்டிக்கொண்டு புருஷகார பூதையான ஸ்ரீரங்கநாயகியாரை ஸேவித்து ப்ரதக்ஷிணமாக ஆழ்வார் ஸந்நிதியிலே யெழுந்தருளி ஆழ்வாரையும்ஸேவித்துத், திருமங்கைமன்னனையும் தண்டன் ஸமர்ப்பித்துப் பெரிய திருவடிநயினாரையும் திருவடிதொழுது, உள்ளேபுகுந்து ஸ்ரீ பலிபீடத்தடியிலே தண்டன்ஸமர்ப்பித்து ப்ரணவாகாரமான ஸ்ரீ ரங்கவிமானத்தையும் சேனை முதலியாரையும் சேவித்து, அழகிய மணவாளன் திருமண்டபத்திலேசென்று ஜய விஜயர்களைத் தண்டன்ஸமர்பித்து, உள்ளேபுகுந்து மணற்றூணைப்பற்றி நின்று வாயாரவாழ்த்தி ப்ரேம பரவஸராய் அமலனாதிப்பிரான்படியே “என்ன முதனைக்கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே” என்று பாதாதிகேஶாந்தமாக ஸேவித்துத், திருப்பல்லாண்டை யநுஸந்தித்து நிற்கப்; பெரிய பெருமாளும்தீர்த்தம் திருமாலைதிருப்பரிவட்டம் ஸ்ரீஶடகோபங்களையும் ப்ரசாதித்தருள; ஸ்ரீயாளவந்தாரும் நம்பியை ஸகலவரி

க்ருதாஞ்சலிபுடராய்ச் சேவித்துநிற்கப், பெரியபெருமாளிவரை உகந்தருளித், திருவரங்கப்பெருமாளரையரை அருளப்பாடிட்டருள அவரும் சேவிக்குமடைவை யொழிய "சூழ்விசும்பணிமுகிலைச்" சேவிக்கத், திருவோலக்கமடைய, இஃதென்னென்றுவிஸ்மயப்பட; அப்பொழுதுபெருமாள் திருநெற்றியில்மாலைநழுவிவிழ, அதனை அரையர் சடக்கெனவெடுத்து இவருக்குப்ரஸாதித்தருளி தேவர்நினைவு சித்தித்ததோவென்ன; இவர் உகந்ததிருவுள்ளத்தராக; அவ்வளவிலே தீர்த்தப்ரஸாத ஸ்ரீசடகோபனையும்ப்ரசாதித்து விடைகொடுத்தருள; இவர் மடத்துக்கெழுந்தருளித், திருவரங்கப் பெருமாளரையர் திருக்கோட்டியூர்நம்பி முதலானோரைத்தீர்த்தங்கொண்டு அமுது செய்தருளப் பண்ணித், தண்டனிட்டு ஸர்வாபராதங்களையும் பொறுத்தருளவேண்டு மென்று க்ஷமைகொண்டு எழுந்திராதிருக்கத், திருவரங்கப்பெருமாளரையர் ஸ்வாமீ! உமக்கொரு அபசாரமு முண்டோவென்று முடிபிடித்தெடுக்க வெழுந்திருந்து, பின்புஅமுதுசெய்து, அனந்தரம் பூர்வம்போலவே நல்லவார்த்தைக ளருளிச் செய்துகொண் டிராநிற்க; அத்தறுவாயில் இவர்திருமேனியில்நோவுசாத்தி யருளினாரென்று கேட்டு இரண்டுஸ்ரீவைஷ்ணவர்கள் பேரருளாளன் சன்

சைகளுடனே மடத்துக்கு அழைத்துக்கொண்டெழுந்தருளி மத்யாஹ்நத்திலே பெருமா ளமுதுசெய்தருளினபின்பு ஸ்ரீபாததீர்த்தத்தை நம்பிக்கு ப்ரஸாதித்துத் தளிகைப்ரஸாதத்தையும் ப்ரஸாதித்தருளினார். நம்பியும் அதை ஸ்வீகரித்து க்ருதார்த்தராய்ப் பெரியநம்பி திருமாளிகையிலே நித்ய ஸேவைபண்ணிக் கொண்டு திருவாய்மொழி முதலான திவ்ய ப்ரபந்தங்களையும் தத் வ்யாக்யானங்களையும் சேவித்துக்கொண்டு பெரியநம்பி நம்மை யளியநம்பையலென்று அபிமானித்தவன்றாயிற்று ஸ்வரூபஸித்தியுள்ளதென்று அறுதியிட்டு அவரபிமானத்தையபேக்ஷித்துக் கொண்டிருக்கப்; பெரியநம்பியும் ஒருநாள் இவரைக்காணாமல் நம்முடைய திருக்கச்சிநம்பித் தாஸரெங்கேயென்று கேட்க; இதைச சிலர் திருக்கச்சிநம்பிக்கு அறிவிக்க; அவருமிவ்விஶேஷத்தைக் கேட்டு "அடியானிவனென்றெனக்காரருள்செய்யும் நெடியான்" என்று மிகவும் ஸந்துஷ்டராய் அவர்பின்செல்ல; ஸ்ரீயாளவந்தாரும் இவர்கருத்தறிந்து விடைகொடுத்தருள; நம்பியும் மடத்தினின்றும் புறப்பட்டுக் கோயிலுக்கெழுந்தருளிப் பெரியபெருமாளைத் திருவடிதொழுது பன்னரிய திருமணற்றூணருகே நின்று பங்கயப்பொற் சேவடியிணையையும் அதிலே வீணையும் கையுமா யெழுந்தருளியிராநின்ற திருப்பாணாழ்வாரையும் கண்டு சேவித்துக்கொண் டிராநிற்கத் திருக்கச்சிநம்பியைப் பெரியபெருமாளும் க்ருபையாகக் கடாக்ஷித்தருளி நம்பிக்குத் திருமாலை திருப்பரிவட்டம்

னிதியில் நின்றும் அங்கெழுந்தருளி இவர் ஸ்ரீபாதத்தில் தண்ட
னிட்டுநிற்க; அவர்களிடத்தில் பெருமாள்கோயில் விசேஷங்களை
க்கேட்டருளி ஸ்வாமிகாள்! அவ்விடத்தில்இப்போது இளையாழ்
வார் செய்கிறதென்னென்று வினவ? அவர்கள் ஸ்வாமீ! இக்கா
லம் அவர் யாதவப்ரகாசனிடத்தில் சீற்றம்பிறந்து அவனைத்துற
ந்துபேரருளாளன்பக்கல் ப்ரவணராய் நில்லாநின்றாரென்று விண்
ணப்பஞ்செய்ய; அதைக்கேட்டு உகந்தருளி நம்முடைய ப்ரபத்
தியைப் பேரருளாளன் சபலமாக்கியருளினார் காணீரென்று
பெரியப்ரீதியோடு அருளாளன் பெருமையைப் பேசவல்லரா
ய்க்கொண்டு ஒரு ஸ்தோத்ரத்தையும் திருவாய்மலர்ந்தருளி,
ஸ்வாமிமானுந்தர்ப்பூதரான பெரிய நம்பிகள் திருக்கையிலே
கொடுத்து, நீரிந்த விண்ணப்பத்தை யெடுத்துக்கொண்டு
போய்ப் பேரருளாளன் திருவடிகளிலே ஸமர்ப்பித்து, அங்கே
இளையாழ்வார் இக்காலத்தில் யாதவப்ரகாசனை வெறுத்துப்
பெருமாள்பக்கல் ப்ரவணரா யிராநின்றா ராகையாலே அவ
ரை நம்மோ டொக்கச்சேர்க்க வகைதேடக் கடவீரென்று
நியமித்தருள, அவரும் ஆக்ஞைப்ரகாரமே அப்போதே சடக்
கெனப்புறப்பட்டுப் பெருமாள் கோவிலுக் கெழுந்தருளினார்.
அதன்பிறகு, இவர், பின்னையும் திருமேனியில் நோவுசார்த்திக்
கொண்டு, மிகவுந்தளர்ந்து கண்வளர; முதலிக ளனைவரும்

ஸ்ரீஸடகோபமும் ப்ரசாதிக்க; நம்பியும்பெரிய பெருமாளுக்குத் திருவா
லவட்ட கைங்கர்யம் செய்யலாமென்று திருவுள்ளத்திலே யோசிக்க;
அவ்வளவிலே பெருமாள் திருவாய்மலர்ந்தருளி, நம்பி! 'தெண்ணீர்ப்
பொன்னித் திரைக்கையா லடிவருடப் பள்ளிகொள்ளும் அரங்கத்தர
வணையில் குளிர்ச்சிநீங்காமலிருப்பதால் ஸைத்யோபசாரம் நமக்குவேண்
டுவதில்லை; உத்தரவேதியிலே ஹோமகுண்டத்தில் ஆவிர்ப்பவித்துநிற்கி
றேனே அங்கே மஹா இஷ்டமாயிருக்கு மாகையாலே நீர்அவ்விடத்திற்
குப் போய்த் திருவாலவட்ட கைங்கர்யமும் சாலைக்கிணற்றுத் திருமஞ்ச
னமும் ஸமர்ப்பித்துக்கொண்டுவாரும்' என்று நியமித்தருள; நம்பியும்
தண்டன்சமர்ப்பித்து விடைபெற்று ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளி
ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதியிலேசென்று சேவித்து ஸகல வரிசைகளையும்
பெற்று க்ருதார்த்தராய்ப்புறப்பட்டு மடத்திலெழுந்தருளி ஸ்ரீஆளவந்
தார் திருவடிகளிலே தாளுந் தடக்கையுங்கூப்பித் தண்டன்ஸமர்ப்பிக்க
ஸ்ரீஆளவந்தாரும் நம்பியை முடிபிடித்தெடுத்து ஸஸ்நேஹ பஹுமானத்
துடனே கடாக்ஷித்துப் பேரருளாளர் ஸந்நிதிக்கு எழுந்தருளுமென்று
விடைகொடுத்தருள; நம்பியும் ஸ்ரீஆளவந்தாரையும் பெரியநம்பி முதலா
னோரையும் சேவித்து அவர்கள் அநுமதிகொண்டு கோயிலினின்றும் புறப்
பட்டு எழுந்தருளினார்.

கலங்கிப், பெரியபெருமாள் திருவுள்ள மெப்படியிருக்குமோ என்று மிகவும் சிந்தாகுலரா யிருந்தவளவிலே, பேரருளாளனுடைய அயன்கண்ட வைகாசித்திருநாள் நேர்பட; அவப்ருதத்தினன்று இவர்நீராடிப் பெரியபெருமாளைத் திருவடிதொழுதுவருவதாகச்சென்று பெருமாள் உத்தமஸந்தி யமுதுசெய்து திருத்திரைநீக்கினசமயத்திலேதண்டன்சமர்ப்பித்துப், பாதாதிகேசம் கேசாதிபாதாந்தமாகக் கண்களாரளவும் சேவித்துத், திருவடிக்கீழமர்ந்திருக்கும் திருப்பாணாழ்வாரையும் அசமகிழ்ந் தனுபவித்து, நம்பியாரால் ஸ்ரீசடகோபனும் தீர்த்தப்ரஸாதமும் ப்ரஸாதிக்கப்பெற்று விடைகொண்டு, ஸ்ரீபாதத்துமுதலிகள் சூழ்ந்துவர, மடத்துக்கெழுந்தருளி, மீண்டும் முதலிகளைத் தீர்த்தங்கொண்டு அமுதுசெய்தருளப்பண்ணி, முஹூர்த்தமிட்டு, வைகாசி மாதம் ஆருந்திகதி திருவோணநட்சத்திரத்தில், அபிஜிந்முஹூர்த்தத்திலே முதலிகள் சேஷமு மங்கீகரித்து, ஆழ்வார்களைச் சரணம்புகுந்து, ஆசார்யர்கள் முதலிகள் ஸ்தானத்தார் முதலாக வெல்லோரையும் அழைப்பித்து க்ஷமைகொண்டு வேண்டிக்கொள்ள; அவர்களும் கலங்கின திருவுள்ளத்தவர்களாய் ஸ்வாமீ! பெரியபெருமாளுக்கு அபராத முண்டாகிலன்றோ! தேவரீருக்கு அபராதமுண்டாவதென்ன; அதன்மேலும்,ஸ்தானத்தாரைநோக்கிப்,பெரியபெருமாளுடையதிருவாராதனம்திருமந்த்ரபுஷ்பமுதலானவைகளைக் காலக்ரமப்படிக்குநடத்திக்கொண்டும் தேசாந்த்ரிகளை ஆதரித்துக்கொண்டும்போருங்கோளென்று நியமித்துத் திருவரங்கப்பெருமா ளரையரையும் ஸ்ரீபாதத்து முதலிகளையும்

இப்படி எழுந்தருளுகிறவர் சோழமண்டலத்திலே பெருமாள்களையும் திருவடிதொழவேண்டுமென்கிற திருவுள்ளமாய்த் திருப்பேர் நகரிலே எழுந்தருளித் திருக்காவேரியிலே நீராடி த்வாதஶோர்த்வ புண்ட்ரங்களையுந்தரித்து அவ்விடத்துப் பெரியோர்களையும் ஸேவித்து அவர்கள் புருஷாகாரமாகக் கோயிலிலேசென்று பலிபீடத்தடியிலே ஸேவித்து த்வாரபாலகரநுமதியுடனே உள்ளேபுகுந்து "திருமாலிருஞ்சோலை மலையென்றேனென்னத் திருமால்வந்தென்னெஞ்சுநிறையப் புகுந்தான், குருமாமணியுந்துபுனற் பொன்னித்தென்பால், திருமால்சென்று சேர்விடந் தென்திருப்பேரே" என்று ஆழ்வார் அருளிச்செய்த பாசுரங்களை விண்ணப்பஞ்செய்துஸேவித்துநிற்கத் திருப்பதியார் தீர்த்தம் திருமாலை ஸ்ரீஶடகோபம் முதலான வரிசைகளை ப்ரஸாதிக்க நம்பியும் ஹ்ருஷ்டராய் அற்றைக்கங்கேயிருந்து மற்றைநாள் புறப்பட்டுத் திருக்கண்டியூரிலே சென்று ஹரஶாபதீர்த்த பெருமாளைஸேவித்து அங்குநின்றும்

அவர்கள்கையிலே காட்டிக்கொடுத்தருள; அவர்களும் ஆக்ஞையின்படியே நடந்துகொள்ளக் கடவோமென்று விண்ணப்பஞ்செய்து விடைகொண்டு, இற்றைப்பொழுதில் இவர்சாதிப்பதெல்லாம் புதுமையாகவன்றோ! காண்கிறதென்று ஒருவரோடொருவர் வார்த்தையாடிக்கொண்டு ஸந்நிதிக்கெழுந்தருளினார்கள்.

அனந்தரம் ஸ்ரீஆளவந்தார் ஸ்ரீபாதத்துமுதலிகளைப் பார்த்தருளி, இளையாழ்வாருக்கு ஸமாஸ்ரயணஞ்செய்து வைக்கும்படி பெரியநம்பிக்குச்சொல்லும்படியாயும், சரமஸ்லோகார்த்தத்தை ப்ரஸாதிக்கும்படி திருக்கோட்டியூர் நம்பிக்கும், பகவத் விஷயத்தை யருளிச்செய்யும்படி திருமாலையாண்டானுக்கும், ஸ்ரீராமாயணசாரத்தை விசதமாகச்சாதிக்கும்படி பெரிய திருமலைநம்பிக்கும், தந்திருவுள்ளக்கருத்தையும், பெரியபெருமாள் திருவடிகளிலடங்கியிருக்கிற விக்ரஹத்தின் ரஹஸ்யத்தையும் அறிவிக்கும்படி திருவரங்கப்பெருமா ளரையருக்கும் நியமித்தருளிப் பவிஷ்யதாசார்ய விக்ரஹத்தைத் திருக்கோட்டியூர் நம்பிகளுக்கு ப்ரஸாதித்து,இந்தமூர்த்தியே அந்தஇளையாழ்வார்காணீரென்றுதிருவாய் மலர்ந்தருளிப், பின்பு பத்மாசனத்திலேயிருந்து ஸ்ரீமணக்கால் நம்பிகளின் வடிவழகனைத்தையும் தம்முடையநெஞ்சிலும் கண்களிலும்தேக்கிக்கொண்டு அவர் திருவடிநிலையை எதிரிலெழுந்தருளப்பண்ணித்தண்டன்ஸமர்ப்பித்து 'ப்ரஹ்மவல்லி' 'ப்ருகுவல்லி' "புருஷஸூக்தம்" "அர்ச்சிராதி" "சூழ்விசும்பணிமுகில்" தொடக்கமானவைகளை முதலிகள் ஸேவிப்பதும், திருச்சங்கு பரிமாறுவதும் ஸகலவாத்தியங்களையு முழக்குவதுமாகவிருக்குஞ் சமையத்திலே ப்ரஹ்மரந்த்ரத்தாலே திருநாட்டுக் கெழுந்தருளினார்.

புறப்பட்டுக் காவேரிக்கரைக்குடந்தையிலே சென்று கோயிலில் புக்கு ஸ்ரீ ஆராவமுதாழ்வாருடைய ஸௌந்தர்யத்திலேயீடுபட்டு "ஆராவமுதேயடியேனுடலம் என்னும் பாசுரமுதலாகச்சேவித்து "நடந்தகால்கள் நொந்தவோ நடுங்கஞாலமேனமாய், இடந்த மெய்குலுங்கவோ விலங்கு மால்வரைச்சுரம், கடந்தகால்பரந்த காவிரிக்கரைக்குடந்தையுள், கிடந்தவாறெழுந்திருந்துபேசு" என்று திருமழிசையாழ்வார் மங்களாஸாஸனம்செய்ய அப்படியே எழுந்திருக்கிற அவஸரமாக யாவதாத்மபாவியாய் ஸேவை சாதிக்கிற ஸேவையையும் பக்தபராதீனனான அவருடைய வாத்ஸல்யத்தையுங்கண்டு போரவுகந்து திருவடிதொழ ஆராவமுதாழ்வாரும் திருமாலை திருப்பரிவட்டம் ஸ்ரீஸடகோபம் முதலான வரிசைகளையும் ப்ரசாதிக்க அவற்றைப்பெற்று க்ருதார்த்தராய் ஸாரங்கபாணி ஸந்நிதி

ஸ்ரீஆளவந்தாரைத் திருப்பள்ளிபடுத்தல்.

அநந்தரம் திருவரங்கப் பெருமாளரையர் தொடக்கமான வெல்லோரும் ஸ்ரீஆளவந்தார் வியோகத்தில் தரியாதவர்களாகி, வேரற்றமரம்போலே கோஷித்துக்கொண்டு விழுந்து சோகிக்க, அங்குள்ளார் இவர்களை யொருவாறுதேற்றி, ஆளவந்தார் திருக்குமாரரானபிள்ளையரசு நம்பியைக்குறித்து இனிநடக்கவேண்டிய க்ரமத்தைச் செய்யவேண்டுமே யென்ன; அவர் ப்ரயத்னமாகித் தாசிகளைவரவழைத்துத் திருவாசலில் திருவலகிட்டு, ஸ்தலசுத்தி செய்து, வேதநல்வாயர்களான வைதிகோத்தமரைக் கொண்டு *திருக்காவணமிட்டுக்கோடித்துத், தர்ப்பமாலைசெங்கழுநீர்மாலைகளைக்கட்டிப்பலவிதபட்டுகளாலும், † சுப்ரசாமரங்களாலும் குச்சுக்கட்டியலங்கரித்துத், திருக்காவணத்தின் நாலுவாசல்களிலும் ‡ கதலித்தாறும்,இளங்கமுகும்,கரும்புநாட்டிப் பலவித § பலங்களையுங்கட்டி, நாலுமுகத்திலும்கொடியாடைகள் கட்டிச் சித்ரப்பத்ரங்களைத்தொடுத்துச்சதுர்த்வாரங்களையும் $ பலாசு அசுவத்த கதிர உதும்பர தோரணங்களாலலங்கரித்து, ¶ த்ரோண வ்ரீஹி சொரிந்துபரப்பி, நடுவிலும்நாலுகோணங்களிலும் பூர்ணகும்பங்களைவைத்துக், கேசவாதி நாமோச்சாரணம் பண்ணிக்கொண்டு, த்வாதசகலசங்களமைத்துக்-குச || தூர்வா-தர்ப்ப-விஷ்ணுக்ராந்தி முதலான புஷ்பாதிகளையிட்டுக், குருபரம்பரா பூர்வகமாக த்வயாநு சந்தானத்துடன் கும்பார்ச்சனை பண்ணி, த்வாதசநாமங்களாலே அந்தக்கலசங்களை ஸ்தாபித்துப்பின்பு o பஞ்சாம்ருதஸ்நா

* திருக்காவணம் – பச்சைப்பந்தல். † சுப்ரசாமரம்-வெண்சாமரம். ‡ கதலித்தாறு - வாழைமரம். § பலம் — பழம். $ பலாசு - முருக்கஇலை; அசுவத்தம் - அரசஇலை; கதிரம் - கருங்காலி இலை; உதும்பரம் - அத்தி இலை. ¶ த்ரோண வ்ரீஹி-பதக்கு நெல். || தூர்வம் - அறுகம்புல். o பஞ்சாம்ருதம் - கோசலம், பால், தயிர், நெய், கோமயம்.

க்கு எழுந்தருளி அவரையும் திருவடிதொழுது ஸகலவரிசைகளையும்பெற்று அங்குள்ள பெரியோர்களையும் ஸேவித்து அற்றைக்கங்கேயிருந்து மற்றைநாள் “நாதனுறைகின்றநகர் நந்திபுரவிண்ணகர நண்ணுமனமே” என்றநுசந்தித்துக் கொண்டு நாதன்கோயிலுக்கெழுந்தருளி நாதனையும் ஸேவித்து ஸகலவரிசைகளையும்பெற்று அங்குநின்றும் புறப்பட்டு “வண்டுணுநறுமல ரிண்டைகொண்டு” என்று தொடங்கி “ஆண்டாயுன்னைக் காண்பதோ ரருளெனக்கருளுதியேல், வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகரமேயவனே” என்று அநுசந்தித்துக்கொண்டு ஊரிலே

நம் பண்ணுவித்து, ஈசான்யபாகத்தில், சங்கர்ஷணகும்ப மொழிந்த நாலுகும்பங்களையுங்கொண்டு, ஸ்ரீபுருஷஸூக்தத்தாலே திருமஞ்சனம்பண்ணுவித்து-முதலிகள் தீர்த்தங்கொண்டு சுருளமுது திருத்தி வேண்டிக்கொண்டு, அவர்களை வலம்வந்து, வாசல்முன்னிலே கோமய * க்ருத ஸ்தலத்தின் மேலே த்ரோண வ்ரீஹி பரப்பி, உலூகல † முஸலங்களை மந்த்ரபூதஸ்நானம்பண்ணுவித்து நவவஸ்த்ர வேஷ்டநம்பண்ணி, அந்த உலூகலத்தை ‡ ஸ்தண்டிலோபரீக்ருத வ்ரீஹியின்மேலேவைத்து, அதிலே § ஹரித்ரா நிக்ஷேபனம் பண்ணிச் சுத்த வஸ்த்ர $ சுக்ல மாலாலங்க்ருதைகளாய்ச் சக்ரமுத்ரா முத்ரிதைகளாய், வைஷ்ணகவிகளாயிருக்கும் விஷ்ணுதாசிகள் திருவிக்ரமன் றிருவீதியை வலம் வந்து, திருவாசலில் ஸ்ரீவைஷ்ணவ சமூகத்துக்குத் தண்டன் ஸமர்ப்பித்து, அவர்களின் ¶ அநுக்ஞைகொண்டு நடுவே நின்று, || நவவஶ்த்ர வேஷ்டிதமேருதைவத்யமான முசலத்தைக் கைக்கொண்டு, த்வாதஶநாமோச்சாரணம் பண்ணிக்கொண்டு திருச்சூர்ணமிடிக்கத், திருவரங்கப் பெருமாளரையர் முதலானோர் 0 ஸ்தண்டில மத்யஸ்தமாய் நவகண்டப்ருதிவ் யாகாரமாக உல்

* க்ருதம் - நெய். † உலூகலம் - உரல்; முசலம் - உலக்கை.

‡ ஸ்தண்டிலம் - அரிசி; உபரி - மேல்; க்ருதம்-நெய்; வ்ரீஹி-நெல்.

§ ஹரித்ரா - மஞ்சள்; நிக்ஷேபணம் பண்ணி - வைத்து.

$ சுக்ல மாலாலங்க்ருதைகளாய் - வெண்மையான மாலைகளினால் அலங்கரிக்கப் பட்டவர்களாய். ¶ அநுக்ஞை - அநுமதி.

|| நவ - புதிய; வஸ்த்ர வேஷ்டித - வஸ்த்ரத்தால் உடுக்கப்பட்டு; மேரு-(உரலில் நிரப்பிய சகலபதார்த்தங்களின்) மேலே (நாட்டப்பட்ட); தைவத்யமான - தெய்வத்தன்மையான; முசலத்தை - உலக்கையை.

0 ஸ்தண்டில மத்யஸ்தமாய் - அரிசி நடுவாக; நவகண்டப்ருதிவ்யாகாரமாக - பூமியை ஒன்பதுகண்டங்களின் வடிவமாக; உல்லேகனம்பண்ணி - கோடுகிழித்து; வ்ரீஹி உபரிஸ்தாபிதமாய் - நெல்லின்மீது ஸ்தாபிக்கப்பட்டு; பூமி - பூமியில்; தைவத்யமான - தெய்வத்தன்மையான; உல்லேகனத்தில் - கோட்டில்.

சென்று திருவிண்ணகரப்பனையும் ஸேவித்து அங்கு நின்றும் புறப்பட்டுத் "தென்னுடன் குடக்கொங்கன் சோழன் சேர்ந்த திருநறையூர் மணிமாடஞ் சேர்மின்களே" என்கிறபடியே திருநறையூரிலே சென்று நாய்ச்சியாரையும் நம்பியையும் ஸேவித்து மூன்றிராத்திரியங்கே எழுந்தருளியிருந்து அங்கு நின்றும் புறப்பட்டுக் "கண்சோர வெங்குருதிவந்

லேகனம்பண்ணி, வ்ரீஹ்யுபரிஸ்தாபிதமாய்ப், பூமிதைவத்யமான உல்லேகனத்தில் அஷ்டதிக்குகளிலும், திவ்யசூர்ண திவ்யதைல திவ் † யாநுலேபன திவ்யமால்ய திவ்யலாஜ திவ்யதுக்த திவ்யததி திவ்யசுத்ததீர்த்த பூர்ணங்களாய்த், தர்ப்பபவித்ர அசுவத்தபத்ர பவித்ரிதங்களான கலசங்களை, த்வயாநுசந்தானத்துடன் ஸ்தாபித்துப், பரமாகாச தைவத்யமான ‡ சூர்ப்பத்திலே திவ்யநக்ஷத்ரதைவத்யமான $ நிஸ்துஷ நவலாஜத்தை நிரைத்து பூர்வ திக்கில் வைத்து ஸ்ரீவைஷ்ணவர்களைத் தீர்த்தங்கொண்டு, ஸ்ரீபாததீர்த்தம் நிறைந்தகும்பத்தை மேற்கேவைத்து ஸ்ரீவைஷ்ணவர்களுக்குஸமர்ப்பணீயமான திரவ்யக்கிழியைவடக்கேவைத்துப், பெருமாள் சாத்திக்களைந்து வரவிட்டருளினதிருமாலை திருப்பரிவட்டப்ரஸாதங்களைப் பொற்றட்டிலிட்டுத்தென்னருகேவைத்து ஸ்ரீஆளவந்தாரைத் தண்டனிட்டு, அவ்விமலசரம விக்ரஹத்தை நெஞ்சிலுங் கண்ணிலுந் தேக்கிக்கொண்டு, சூழவெழுந் தருளியிருந்து, திருப்பல்லாண்டு, கண்ணிநுண் சிறுத்தாம்பு, சூழ்விசும்பணி முகில்களைத் திருவரங்கப்பெருமாளரையர்இயலுமிசையுமாக வநுசந்தித்துத் திவ்ய ந்ருத்த கீதவாத்யத்துடன் திருவீதியில்

† அநுலேபனம் - பூசுதற்குரியசந்தனம்; திவ்யமால்யா - திவ்யமானமாலை; திவ்யலாஜம் - திவ்யமானபொரி; திவ்யதுக்தம் - திவ்யமானபால்; திவ்யததி - திவ்யமானதயிர். ‡ நவசூர்ப்பம் - புதியமுறம்.
$ நிஸ்துஷ - உமிகலவாத; நவலாஜம் - புதியபொரி.

திழிய" என்றுதொடங்கிச் "செல்வத்தண்சேறை யெம்பெருமான் தாள் தொழுவாரெப்பொழுதுமென்மனத்தேயிருக்கின்றாரே" என்றும், "தண்சேறை யெம்பெருமான் தாளையேத்திப், போதோடு புனல்தூவும் புண்ணியரேவிண்ணவரிற்பொலிகின்றாரே" என்றும், "தண்சேறையெம்பெருமானும்பராளும்பேராளன்பேரோதும் பெரியோரையொருகாலும் பிரிகிலேனே" என்றும், "தண்சேறையெம்பெருமான்தாளைநாளும், சிந்திப்பார்க்கென்னுள்ளந் தேனூறியெப்பொழுதுந்தித்திக்குமே" என்றும், "வண்சேறை யெம்பெருமா னடியார்தம்மைக் கண்டேனுக்கிதுகாணீ ரென்னெஞ்சுங் கண்ணிணையுங் களிக்குமாறே" என்றும் இப்படி ஆழ்வாரும் மடிபிடித்துப்பாகவத எற்றம் அறிவிக்கும்விஷயமானபரமகாருணிகரான ஸாரநாதருடைய ஸௌலப்ய ஸௌந்தர்யங்களையும் அநுபவித்து நிற்கப் பெருமாளும்நம்பிக்குத்தீர்த்தம்திருமாலைதிருப்பரிவட்டம்ஸ்ரீஸடகோபம் முதலான வரிசைகளையும் ப்ரஸாதிக்க நம்பியும் அவற்றைப் பெற்றுத் தண்சேறை எம்பெருமானைத் தண்டன் ஸமர்ப்பித்து விடைகொண்டு தக்ஷிண த்வாரகைக்கெழுந்தருளி ராஜமன்னாரை ஸேவித்துத்

திருவிருத்தத்தை இயலாக அநுஸந்தித்துக்கொண்டுவலம்வந்து, மடத்தின் வாசலிலே இயல்சாத்தி ஸ்ரீஆளவந்தாருக்குத் திவ்யதைலதிவ்யசூர்ணங்கள்சாத்தி நீராட்டிப், பெருமாள்சாத்திக்களைந்து வரவிட்டருளின திவ்யாநுலேபன திவ்யமால்ய திவ்யபீதாம்பரதிருப்பரிவட்டங்களால்அலங்கரித்துத் தத்ப்ரஸாதமாய்ச்சேஷித்தஎண்ணெய்ஸ்ரீசூர்ணப்ரஸாதங்களைத் திருவரங்கப்பெருமாளரையர்முதலானார்ப்ரஸாதப்பட்டு, அப்போதிருந்த இருப்பையும் நெஞ்சிலே தேக்கிக்கொண்டு தண்டன் ஸமர்ப்பித்துத், திருவடிகளை அவரவர்திருக்கண்களிலும் திருமார்பிலும் திருமுடிகளிலும் தரித்துக்கொண்டு, திருமிடறு தழுதழுப்பத் திருமேனிகள் வாடத், திருக்கண்களில்நின்றும் திருமுத்துதிர்த்துத்,திருமூக்கு வியர்வையுற ஆசார்ய விஶ்லேஷம் பொறுதவர்களாய், ஆர்த்தராய்ப், பரவசப்பட்டுச் சோகிக்க, அங்குள்ள முதலிகள்வந்து இவர்கள் திருக்கண்களைத் துடைத்து, † ஆஶ்வஸிப்பித்துத் தேற்ற ஒருவாறுதேறி, மேன்மையிலே, மெள்ளமெள்ள நடையிட்டு வந்துநின்று, ‡ பீடயானத்திலே அவ்விக்ரஹத்தையேறியருளப்பண்ணி, அநுசந்தானத்துடனே ஸ்ரீபாதந் தாங்கிக்கொண்டு திருச்சங்கம் பரிமாற, நிருத்த கீதவாத்தியங்களெங்கும்

† ஆஶ்வஸிப்பித்து - சொல்லவேண்டுவனவற்றைச் சொல்லி.

‡ பீடயானம் - பீடப்பல்லக்கு.

திருக்கண்ண மங்கையில் எழுந்தருளிப் "பெரும்புறக்கடலை யடலேற்றினை" என்று தொடங்கிக் "கண்ணமங்கையுட் கண்டுகொண்டேனே" என்று அநுஸந்தித்துப் பக்தவத்ஸலப்பிரானை ஸேவித்துத் திருக்கண்ணங்குடியிலே சென்று "வங்கமாமுந்நீர் வரிநிறப்பெரியவாளரவினணைமேவி" என்று தொடங்கித் "திருக்கண்ணங் குடியுள் நின்றானே" என்றநுசந்தித்து ஸேவித்து அனந்தரம் நாகப்பட்டணத்தில் எழுந்தருளிப் "பொன்னிவர்மேனி மரகதத்தின்" என்றுதொடங்கி "அச்சோவொருவரழகியவா" என்று திருநாகையழகப்பிரானுடைய அழகுகளைப் பெருக்க அநுபவித்து மற்றை நாள் புறப்பட்டு திருக்கண்ண புரம் புக்குஸேவிக்கவேண்டுமென்கிறஅபிநிவேஶத்துடனே ஊரருகேசென்று நீராடி, ஊரையும் மாடத்திருவீதியையும் ப்ரதக்ஷிணமாகவந்துஅவ்விடத்திலேபுக்கு பலிபீடத்தடியிலே தண்டன் ஸமர்ப்பித்து ப்ரதக்ஷிணமாகவுள்ளேசென்று சவுரிராஜனையும் ஸேவித்து "சிலையிலங்குபொன்னாழி" என்றுதொடங்கிக் "கருவரைபோனின்றானைக்கண்ணபுரத்தம் மானைகண்டாள்கொலோ" என்றும் "நீணிலாமுற்றத்துநின்றிவணோக்கினாள், காணு

முழங்க, வேதபாராயணம் பண்ண, அருளிச் செயலியல் நடக்க, இடைவிடாமல் பட்டுகளால் நடைபாவாடையிட்டுக் கரும்பும் குடமுமேந்திப்பொரியும்புஷ்பமுமெங்குஞ்சிதற,அந்தத்திருப்பதியிலுள்ள சுமங்கலிகள் மங்கள தீபமேந்தி முன்னேசெல்லத், தர்சனத்தில் ஸ்ரீஆளவந்தார் திருநாட்டுக் கெழுந்தருளினா ரென்னுங் குறிதோன்ற ஒற்றைச்சின்னமூதத் திருவீதிகள் தோறும் வலம்வந்து, திருக்கரம்பன்துறையில் எழுந்தருளுவித்துக்கொண்டுபோய், ஒழிந்த சங்கர்ஷண கும்ப பூர்ண ஜலத்தைக்கொண்டு, அநுசந்தானத்துடன் திவ்யஸ்தல சுத்திபண்ணி,† யதிஸம்ஸ்கார விதியுக்தமான படிக ளடங்கச்செய்து, திருப்பள்ளிபடுத்தயத்தனித்தார்கள்; அவ்வளவிலே பெருமாள்கோயிலுக் கெழுந்தருளின பெரியநம்பிகள் ஸ்ரீஆளவந்தாருடைய திருவுள்ளக்குறிப்பைத் திருக்கச்சிநம்பிக்கருளிச்செய்து, அவர்புருஷாகாரமாகப்பேரருளாளன் ஸந்நிதிக்குச்சென்றுஸ்தோத்ரத்தை ஆசார்ய நியமனப் படியேஅநுசந்தித்துத் தீர்த்தப்ரசாதம் ஸ்வீகரித்து, ஸந்நிதியில் நின்றும் புறப்பட்டு, இளையாழ்வார் திருமஞ்சனங் கொண்டுவருகிற சாலைக்கிணற்று வழியிலே ஸ்தோத்ர ரத்நத்தை யநுசந்தித்துக்கொண்டிராநிற்க, "ப்ரஹ்மாஸிவஸ்ஸதமகஃ பரமஸ்வராடித்

† யதிஸம்ஸ்கார விதியுக்தமான படிகள் - யதீஸ்வரர்களுக்குத்தேகவ்யோகாந்தத்தில் செய்யவேண்டிய விதியோடு கூடிய நியமங்கள்.

மோகண்ணபுரமென்றுகாட்டினுள்"என்றும், "செங்கமலநாபனுக் கிழந்தேனென்செறிவளையே"என்றும், "வேதமுதல்வன் விளங்குபுரிநூலன், பாதம்பரவிப்பலரும்பணிந்தேத்திக்,காதன்மைசெய்யுங்கண்ணபுரத்தெம் பெருமான், தாதுநறுந்துழாய் தாழ்ந்தூதாய்க் கோத்தும்பீ" என்றும் அநுஸந்தித்துநிற்கச்சவுரிராஜனும் நம்பிக்குத்திருமாலைதிருப்பரிவட்டம் ஸ்ரீஸடகோபம் முதலானவரிசைகளையும் ப்ரஸாதித்துவிடைகொடுத்தருளநம்பியும்சவுரிராஜனையும் திருக்கண்ணபுரநாயகியையும்ஸேவித்து ஆழ்வாருக்குஅஷ்டாக்ஷரத்தைவிளக்கியஸ்தலமன்றோவென்றுஎழுராத்ரியங் கெழுந்தருளியிருந்து பின்புசிறுபுலியூருக்கெழுந்தருளிக் கோவிலிலேசென்று "கள்ளம்மனம்விள்ளும்"என்றுதொடங்கி,"கருமாமுகிலுருவாகனலுருவாபுனலுருவா, பெருமால்வரையுருவா பிறவுருவாநினதுருவா, திருமாமகள்மருவும் சிறுபுலியூர்ச்சலசயனத், தருமாகடலமுதேயுனதடியேசரணமே" என்றநுஸந்தித்து அருள்மாகடல் நாயகனுடைய ஸௌந்தர்யங்களை நன்றாகஅநுபவித்துத் திருமழிசைப்பிரானுடைய ப்ரபாவத்தைநன்றாக எல்லோரு மறியும்படித் தாமே வெளியிட்ட பக்தவத்ஸலனான சலசயனத் தெம்பெருமானுடைய க்ருபைக்குப் போரவுகந்து மூன்றுநாள்

"யேதேபியஸ்ய மஹிமார்ணவவிப்ருஷஸ்தே" என்கிற சுலோகத்தை இளையாழ்வார் கேட்டருளி, இது யாவராலருளிச்செய்யப்பட்டதென்று பெரிய நம்பியைக் கேட்க? அவர் இது ஸ்ரீஆளவந்தாராலருளிச் செய்யப்பட்டதென்ன; அந்த மஹாநுபாவரை அடியேன் காணுமாறருள வேண்டுமே! என்னப்; பெரியநம்பி என்னுடன்வாரும் காண்பீரென்ன; உடனே இளையாழ்வார் திருமஞ்சனத்தைக் கொண்டுபோய்ப் பெருமாள் திருமுன்பு ஸமர்ப்பித்துச்சேவித்துவிடைகொண்டு திருக்கச்சி நம்பியையுஞ் சேவித்து அவருக்குஞ்செய்தியை விண்ணப்பஞ்செய்து புறப்படப் பெரிய நம்பிகள் அவரைக்கூட்டிக்கொண்டு கோவிலுக்கு $ ஆசந்நமாக எழுந்தருளும்போது திருக்கரம்பன் துறையிலே திரண்டிருந்த பெரிய ஜனத்திரளைக் கண்டு, இத்திரளேதென்று எதிரேவருகிறவர்களைக் கேட்க; அவர்கள் ஸ்ரீ ஆளவந்தார் திருநாட்டுக் கெழுந்தருளினா ரென்றுசொல்ல; இதைக்கேட்டுப் பெரியநம்பிகள் மிகவும் ஏங்கி, மோஹித்து விழுந்து, சோகார்ணவ நிமக்நராய்க் கிடந்து துடிக்க; அவ்வளவிலே, இளையாழ்வார் "பஹுதாவிலலா பஹா" என்னுமாபோலே பலவகையாய்ப் புலம்பி, 'எங்கே காண்கேன்" என்று நிலந்துழாவித் தளர்ந்து தரையில் வீழ்ந்து மோகித்து "ஸர்வமேகபதே நஷ்டம் லக்ஷ்மணே நவிநாதிதம்" என்னுமாபோலே † அஸ்மிதாந்ய பாவராய் ‡ நிவர்த்தன முகராய்க் கண்பனிசோரா நிற்கப் பெரியநம்பிகள் அந்தக்கோலத்தைக்கண்ணுற்றுத் தாளாதவராய் "வாளேறு காணத் தேளேறு

$ ஆஸந்நமாக - ஸமீபிக்க. † அஸ்மிதாந்யபாவராய் - கைகூடாத எண்ணமுடையவராய். ‡ நிவர்த்தனமுகராய் - முன்செல்லமனமின்றி வந்தவழியே திரும்புநோக்கத்தராய்.

அங்கே எழுந்தருளியிருந்து மற்றைநாள் திருவெள்ளியங் குடியிலே சென்று "முடியுடையமரர்க்கிடர்செயுமசுரர்தம் பெருமானையன்றரியாய், மடியிடைவைத்து மார்பைமுன்கீண்ட மாயனார் மன்னியகோயில்" என்றநுசந்தித்துக் கோலவில்லிராமனைச் சேவித்து அங்குநின்றும் புறப்பட்டுத்தாடாளன் கோயிலிலே சென்று "ஒருகுறளாயிருநில மூவடிமண் வேண்டி" என்றுதொடங்கிப் "பொருவில்வலம்புரியரக்கன்முடிகள்பத்தும் புற்றுமறிந் தனபோலப் புவிமேற்சிந்தச், செருவில்வலம் புரிசிலைக்கை மலைத்தோள் வேந்தன் திருவடிசேர்ந்துய்கிற்பீர் திரைநீர்தெள்கி, மருவி

மாயும்" என்னுமாபோலே தன்னுடைய விசனத்தை மறந்து இளையாழ்வாரைத்தழுவிக்கொண்டு, "ஶ்ரேயாம்ஸி பஹுவிக்நாநி பவந்தி மஹதாமபி" என்கிறபடியே ஶ்ரேயஸ்ஸான கார்யங்களைச் செய்யப் புகும்போது செய்பவர்க்கு அனேகவிக்னங்கள் உண்டாவதியல்பே! ஆகையால், நீர் சோகிக்க வேண்டாமென்று ஹிதஞ்சொல்லித்தேற்றிக் கையைப்பிடித்துக் கொண்டு போய் ஸ்ரீஆளவந்தாருடைய விமலசரம விக்ரஹத்தைச் சேவிக்கப்பண்ண; இளையாழ்வார்சேவித்துத் தண்டனிட்டு, இப்படியும் நமக்கொரு † அலப்யலாபம் நேர்படுவதே! என்று விஸ்மிதராய்ப், பாதாதி கேசமாகச் சேவிக்கிறவளவில், அவ்விக்ரஹத்தினுடைய வலத்திருக்கையில் மூன்றுதிருவிரல்கள்மடங்கி யிருக்கக்கண்டு, முன்பே இவருக்கிப்படி யிருந்ததுண்டோவென்று முதலிகளைக்கேட்க; அவர்கள்இப்போது காணப்பெற்றதேயொழிய முன்பு இப்படி யிருந்ததில்லை யென்றார்கள். ஆகில் இவர் திருவுள்ளத்திலேதேனுமொரு குறிப்பிருக்க வேண்டுமென்றெண்ணி, முதலிகளைப்பார்த்து, முன்பு வ்யாக்யானசமயங்களில் இவர் ‡ அபிமதசல்லாபங்களைக் கேட்டிருந்தவர்களாரேனுமிக்குழவி லுண்டோவென்று விசாரித்தருள; அவர்களில் சிலர், ஸ்வாமீ! இவருக்கு வ்யாச பராசரர்களிடத்திலே உபகாரஸ்ம்ருதியும், நம்மாழ்வார்பக்கல் ப்ரேமாதிசயமும், விசிஷ்டாத்வைதபரமாக வியாசசூத்ரத்தில் வ்யாக்யான வாஞ்சையு முண்டாகி, இவற்றை முற்றுமனுபவித்து நிலைபெறச்செய்ய ஓர் உசாத்துணையும் காலமும் போரவில்லையேயென்று பலகாலு மருளிச்செய்யக்

† அலப்யலாபம் - கிடைத்தற்கரியபேறு.

‡ அபிமதசல்லாபம் - இஷ்டமான வார்த்தைகள்.

வலம் புரிகைதைக் கழியூடாடி வயல்நண்ணி மழைதருநீர் தவழ்கால்மன்னித், தெருவில்வலம் புரிதரள மீனுங்காழிச் சீராமவிண்ணகரே சேர்மினீரே" என்று அநுஸந்தித்து மண்ணளந்த தாடாளனைத் திருவடி தொழுது,திருமங்கையாழ்வாருக்காகஇந்தத்தாடாளன்விசேஷகடாக்ஷம் செய்து அவருக்கு ப்ரத்யக்ஷமானதும், கலியன் ஸம்பந்தமூர்த்தியை ஜயித்த அன்றுமுதல் தாடாளன் நித்யசன்னிதிபண்ணி யெழுந்தருளியிருந்து எல்லோருக்கும் ஸேவை ஸாதித்துக்கொண் டெழுந்தருளியிருக்கிற பக்தபராதீனமான ஸௌலப்யத்துக்கும் ஆஶ்சர்யப்பட்டு நெஞ்சுருகிக் கண்பனிப்பநிற்கத், தாடாளனும்நம்பிக்குத் திருமாலைதிருப்பரிவட்டம் ஸ்ரீசடகோபம்முதலானவரிசைகளையும் ப்ரஸாதிக்க, அவைகளைப்பெற்று க்ருதார்த்தராய்த் திருவாலி திருநகரியேற எழுந்தருள

கேட்டிருக்கிறோமென்னப்; பிறகு, இளையாழ்வார் அந்த விக்ரஹத்தின் அகவாயி லெண்ணெத்தி னேற்றமறிந்து, தம்முடைய திருவாய்மலர்ந்து, ஸ்வாமிகாள்! அடியேனுக்கு இந்தச்சரீரமும் த்ருடமாயிருந்து, இவ்வாசார்யக்ருபையும் அடியேனிடத்தில் பூர்ணமாயிருந்து, ஸர்வேஶ்வரனும் அடியேனுடைய நினைவின்படி கூட்டிவைப்பானாகில், இம்மூன்று எண்ணங்களையும் அடியேனே தீர்த்துவைக்கக் கடவேனென்றருளிச்செய்ய; உடனே அம்மூன்று திருவிரல்களும் நிமிர்ந்தன; இவ்வற்புதத்தை அகிலருங்கண்டு ஆச்சர்யமடைந்து, இளையாழ்வாரை நோக்கி ஸ்வாமீ? இவ்வாசார்ய க்ருபையும் உம்மிடத்திலுண்டு; இவருடைய திவ்யசக்தியும் உம்மிலே கூடும்; நீரே இந்தத் தர்சனத்திற்கு நிர்வாஹகருமாவீரென்று மங்களாசாசனம் பண்ணினார்கள். அனந்தரம் இளையாழ்வார் அவ்விக்ரஹசேவையை "என் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நீங்காவே" என்னும்படியே கண்களிலும் நெஞ்சுதனிலுந் தேக்கிக்கொண்டு நம்பெருமாள் நமக்குச் செய்தபடி யென்னென்று போரக்லேசித்து † அவப்ருத ஸ்நானஞ் செய்து, பெரிய நம்பியைத் தண்டனிட்டு விடைகொண்டு, நம்பெருமாளைத் திருவடிதொழுவதற்கு நெஞ்சுகூடாமல் பெருமாள் கோயிலேற வெழுந்தருளினார்.

† அவப்ருதஸ்நாநம் - தொடங்கிய கருமம்முடிந்தபின் செய்யும் ஸ்நாந விசேஷம்.

வேண்டுமென்று குதூஹலத்தை யுடையராய்ச் சென்று அவ்விடத்தில் பெரியோர்களையும் ஸேவித்துத் திருமங்கையாழ்வார் ஸந்நிதியிலே எழுந்தருளி ஆழ்வாரை ஸேவித்து, ஆழ்வாரைச் சூழ்ந்துகொண் டிருக்கிற பதினொரு திருப்பதி யெம்பெருமான்களையும் ஆழ்வாரைச் சேவித்தது போலே அந்தந்த ஸ்தலவிஷயமான பாசுரங்களையும் அநுஸந்தித்து ஸேவித்து ஹ்ருஷ்டராய் அங்குநின்றும் புறப்பட்டுச் சித்திரகூடத் தேற வெழுந்தருளி "ஊன்வாடவுண்ணா துயிர்காவலிட்டு" என்றுதொடங்கித் "தில்லைத் திருச்சித்திரகூடஞ்சென்று சேர்மின்களே" என்றநுஸந்தித்துக் கோவிந்தராஜனையும் ஸேவித்து அற்றைக்கங்கே யிருந்து, மற்றைநாள் வீரநாராயணபுரத் தேறச்சென்று நாதமுனிகளையும் மன்னனாரையும் ஸேவித்துத் தமக்குப் பரமாசார்யரான நாதமுனிகள் யோகத்திலே எழுந்தருளியிருந்த ஸ்தலத்தையும் ஸேவித்து அங்கு நின்றும் புறப்பட்டு இருந்தண் மாநிலமேனமதாய் வளைமருப்பினிலடக்கிக்கருந்தண்மாகடற் கண்டுயின்றவ னிடமான திருவயிந்திரபுரத்தேற எழுந்தருளிக் கருடநதியிலே நீராடித் திருமகளார்தனிக் கேள்வனென்னும்படி திருவடி

பின்பு முதலிகள் ஸ்ரீஆளவந்தாரைத் திருப்பள்ளி படுத்தி, செய்யவேண்டிய க்ருத்யங்க ளடங்கக் குறைவறச் செய்தருளி னார்கள்.

இவருடைய அவதாரஸ்தலம்:—சோழதேசத்தில் திருக்காவேரி தீரத்திலிருக்கும் வீரநாராயணபுரம்; திருநாமங்கள்:— ஸ்ரீயமுனைத்துறைவர், யாமுநாசார்யர், வாதிமத்தேபஸிம்ஹேந்த்ரர், ஸ்ரீஆளவந்தார்; செய்தருளின ப்ரபந்தங்கள்:—ஸ்தோத்ரரத்னம், ஸித்தித்ரயம், அகண்டமாயாவாதகண்டனம், ஸ்ரீகீதாஸாரஸங்க்ரகம், சதுச்சுலோகிமுதலானவை; எழுந்தருளியிருந்தது நூற்றிருபத்தைந்து திருநட்சத்ரம்; ஸிஷ்யர்கள்:— இவரது சரித்திரத்திற் குறித்திருக்கிற இருபத்துமூன்று திருநாமங்கள்.

திருநக்ஷத்ரதனியன்.

ஶௌமாஸ்யுத்தராஷாட்ஜாதம் யாமுநதேஶிகம்
ஸ்ரீராமமிஶ்ரசரண ஸரோஜாஶ்ரிதமாஶ்ரயே.

ஸ்ரீஆளவந்தார் திருவடிகளேசரணம்.
ஜீயர் திருவடிகளே சரணம்.

☞ ஸ்ரீஆளவந்தார் திருவவதாரவருஷம் கூகூஎ-க்குசரியான, கலி சகூ௲உ-ல் நிகழும் விக்ரமவருஷம்.

திருவநந்தாழ்வானை இவர்களுடைய தவப்பலமாய் அடியார்களுக்கு மெய்யனாகிய தெய்வநாயகனையும் ஸேவித்து மற்றைநாள் புறப்பட்டுத் தமக்கு ப்ராப்ய பூமியான கச்சிநகர்க்க கெழுந்தருள வேண்டுமென்கிற த்வரையுடனே எழுந்தருளாநிற்க; "என்னெஞ்சமே யானென் சென்னியான் றானவனை, வன்னெஞ்சங்கீண்ட மணிவண்ணன் முன்னஞ்சே, யூழியா னூழி பெயர்த்தா னுலகேத்தும் ஆழியானத்தியூரான்" என்றும் 'பிணியவிழ்தாமரை மொட்டலர்த்தும் பேரருளாளர்' என்றும் "தொழுதெழு தொண்டர்கள் தமக்குப் பிணியொழித்து அமரர்பெரு விசும்பருளும் பேரருளாள னெம்பெருமான்" என்றும் இப்படி ஆழ்வார்கள் பாசுரங்களை யநுஸந்தித்துக்கொண்டு ஊரிலேசென்று திருவநந்தஸரஸிலே நீராடிக கேஶவாதித்வாதஶோர்த்வ புண்ட்ரங்களைச சாத்திக்கொண்டு பலிபீடத்தருகே தண்டன் ஸமர்ப்பித்து உள்ளேபுகுந்து திருவபிஷேக மண்டபத்திலே தண்டன் ஸமர்ப்பித்து ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளிப் பெருந்தேவித் தாயாரையும் ஸேவித்துப் பின்பு வையமாளிகையிலே ஏறிக் கச்சிக்கு வாய்த்தானென்கிற திருமண்டபத்தைத் தண்டன்

இளையாழ்வார் வைபவம் (தொடர்ச்சி).

அனந்தரம் இளையாழ்வார் பயணகதியில் தாமெண்ணினவாறு காமையாலே, அத்யந்தம் ¶ அவஸந்நராய் க்லேசித்துக்கொண்டே பெருமாள்கோயிலுக் கெழுந்தருளித், திருக்கச்சிநம்பியின் ஸ்ரீபாதத்தில் தண்டன்ஸமர்ப்பித்து, ஸ்ரீஆளவந்தார் திருநாட்டுக் கெழுந்தருளின செய்தியை விண்ணப்பஞ்செய்து சோகித்துக் கிடக்க; அவரும் போரக்கிலேசித்து, இவரை முடிபிடித்தெடுத்து மார்போடணைத்துக்கொண்டு முதுகைத்தடவிப், பேரருளாளன் ஸர்வக்ஞனும் ஸர்வசக்தனுமா யிருக்கையிலே, உம்முடைய நினைவைத் தலைக்கட்டி யருளாதொழிவானோ! அஞ்சவேண்டாமென்று ஹிதஞ்சொல்லித்தேற்றிப், பின்பு ஸ்ரீஆளவந்தாருக்குத் தாமுமொருமுறை ஸ்ரீசூர்ண பரிபாலனஞ்செய்து பெருக்கத் திருவத்யயனஞ் செய்தருளினார். அதன் பின்பு இளையாழ்வார் ††தைர்யாவலம்பியாய்ப் பேரருளாளனைச் சேவித்துப் பூர்வம்போலே திருமஞ்சன கைங்கர்யத்தி லீடுபட்டிருந்தார்.

இப்படியிருக்கையில், திருக்கச்சிநம்பிக்குஇவர்பக்கல்க்ருபை மிகுத்துவர, இவருக்கும் நாளுக்குநாள் அவர் பக்கல் ப்ரேமம் கனத்துவர இவர் அவருடைய அநுபவங்களையெல்லா மறிந்து ஓராளொரு நாளில் அவர் ஸ்ரீபாதத்திலே ஆஸ்ரயிக்க வேண்டுமென்று ஆர்த்திபிறந்து ஸ்வாமி! இவ்வாத்மாவைத் தேவரீர்

¶ அவஸந்நராய் - வியாகுலராய்.

†† தைர்யாவலம்பியாய் - தைரியங்கொண்டவராய்.

ஸமர்ப்பித்து ஜயவிஜயர்களையும் ஸேவித்து உள்ளேபுகுந்து பேரருளாளரையும் வரதராஜரையும் ஸேவித்து நிற்கப் பேரருளாளரும் போரவுகந்து திருக்கச்சி நம்பிக்குத் தீர்த்தம்திருமாலைஸ்ரீஸடகோபம்முதலான வரிசைகளை ப்ரஸாதித்தருள நம்பியும் அடியேனுக்குத் தாஸ்யநாமம் ப்ரஸாதித்தருள வேண்டுமென்று ஏகாந்த ஸமயத்திலே விண்ணப்பஞ்செய்ய; ஒரு வாரணம் பணிகொண்ட வாரணசைலபதியும் அவ்விடத்தில் க்ருபாபரையான பிராட்டியும் ஸ்ரீகஜேந்த்ர தாஸனென்று தாஸ்யநாமம் ப்ரஸாதித்து நமக்கு அந்தரங்ககைங்கர்யமான திருவாலவட்ட கைங்கர்யத்தை நித்யமாய்ச் செய்துகொண்டிருமென்று நியமித்தருளினார். நம்பியும் 'தந்யோஸ்மி' என்று அந்தக் கைங்கர்யத்தைச் செய்துகொண் டெழுந்தருளியிருந்தார். இப்படியிருக்கிற நம்பியினுடைய வைபவத்தைப் பித்ராதிகள் கேட்டு ஸந்துஷ்டராய்ப் பெருமாள்கோயிலிலேவந்து பேரருளாளரை ஸேவித்து நம்பிபாடேசென்று நாங்கள் உம்முடைய வைபவத்தை

உஜ்ஜீவித் தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க; அவர் ஆச்சர்யப் பட்டுக் "கிமப்யத்ராபிஜாயந்தே யோகிநஸ்ஸர்வயோநிஷு-ப்ரத் யக்ஷிதாத்ம நாதாநாம்நைஷாம் சிந்த்யம் குலாதிகம்" என்கிற படி ஸ்ரீயப்பதியின் கருணைக்கிலக்கான மகாத்மாக்கள் எந்தக் குலத்திலும் பிறந்திருப்பார்கள்; ஆகையால் அந்தத்தொண்டக் குல அரசுகளிடத்தில் அற்பபுத்தி பண்ணலாகாதென்று சொல் லுகிறபடியே நீரும் ஆத்மகுணத்திற்குச் சேர்ந்திராநின்ற பரம வைதிகநிஷ்டராகையாலே, பேரருளாளன் பொருளல்லாத வென்னைப்பொருளாக்கி யடிமைகொண்டிருப்பதைநோக்கி,இங் ஙனஞ்செய்யவிரும்பினீர்; ஆகில் அடியேன் பக்ஷத்தில் வர்ணாசிர மத்துக்கடுத்த லௌகிக மர்யாதைக்குப் போந்திராதே! என்று விலக்கினார். அதின் மற்றைநாள் நம்பிகளிடத்தில் இளையாழ்வா ருக்கு ப்ரஸாத ப்ரதிபத்தியு முண்டாக; அதை லபித்துக்கொள் ளும் நிமித்தம், அவர் திருவடிகளில் தண்டனிட்டு ஸ்வாமீ! அடி யேன்குடிசையில் ஒருவேளை யமுதுசெய் தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க; அவர் சம்மதித்து மறுநாள் எழுந்தருளுவதாக விடைதர; இவர் சந்தோஷத்தினால் தூண்டப்பட்ட மனதை யுடையவராய் அதிசீக்ரமாகத் திருமாளிகைக் கெழுந்தருளித் தேவியாருக்கு இச்செய்தியை யறிவித்து, மற்றைநாள் பாங்கய கப் பலவகை சித்ரான்னம் ஸவ்யஞ்ஜனான்னம் தொடக்கமான

யறியாமலிருந்தோம், உம்மை யெங்களோடு ஸஜாதீயராக எண்ணி நாங் கள் செய்த குற்றங்களைப்பொறுத்து நம்மூரிலே வந்து ஹிதோபதேசத் தைப் பண்ணிக்கொண்டிருக்கவேண்டும். நாங்கள் உமக்கு இஷ்டமான படி நடந்துகொண்டு க்ருதார்த்தராகிறோம் ஊரிலே வாருமென்ன; நம் பியும் இனி அது கூடுமோ அடியேனைவிட்டுப் பேரருளாளர் அரைக்ஷண மாகிலும் எழுந்தருளியிரார்; அடியேனும் பேரருளாளரைப் பிரிந்து இறைப்பொழுதும் இருக்ககில்லேனென்ன; அவர்களும் அப்படியாகில் ஒருநாளாகிலும் நீர் அங்கே எழுந்தருளிவரும்படி பார்க்கலாமோ என்ன; நம்பியும் அப்படியே யாகிறதென்று அவர்களை ஊருக் கனுப்பிவைத் தார். அநந்தரம் ஒருநாள் நம்பியும் இச்செய்தியைப் பெருமாள் ஸந்நிதி யிலே விண்ணப்பஞ்செய்யப் பெருமாளும் அப்படியே செய்வோம், உம் முடைய ஸம்பந்தத்தாலே அவர்களும் உத்தீர்ணராகக் குறையில்லை யென்றுஅற்றையிரவில் பெரியதிருவடிமேற்கொண்டு நம்பிக்கும்ஒருகதி விசேஷத்தையுண்டாக்கிப் பூவிருந்தவல்லியிலேஅவர்கள்கிருஹத்திலே எழுந்தருள; வீரராகவரும் பத்நீபுத்ரஸமேதராய்எழுந்திருந்து ப்ரதக்ஷிண ப்ரணாமாதிகளைப் பண்ணித், தந்யோஸ்மி அநுக்ரஹீதோஸ்மி' என்று

வைகளைத் தளிகைக்குப்பண்ணுவித்துத் தீர்த்தமாடி நித்ய அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, பேரருளாளனுக்குத் திருமஞ்சன கைங்கர்யத்தையும் த்வரையாகச் செய்துவிட்டுத் தமது க்ருஹார்ச்சனையான பேரருளாளனை அமுதுசெய்தருளப்பண்ணி நம்பியை அழைத்துவருவதாகத் தெற்குத்திருவீதியாலே மடத்தைநோக்கியெழுந்தருள; அப்பொழுதே, நம்பிகள் மற்றொரு திருவீதியாலே இவர் திருமாளிகைக் கெழுந்தருளி அம்மணீ அடியேன் திருவாலவட்டகைங்கர்யத்துக்கு உதவப்போகவேணுமாகையாலே, த்வரையாய் ப்ரஸாதம் பரிமாற வேண்டுமென்று கேட்டு, ஸமர்ப்பிக்கப்பெற்று ஸ்வீகரித்து எழுந்தருளிவிட; உடனே தேவிகள், அவர் அமுதுசெய் தருளின இலையைக் கோலாலே தள்ளிவிட்டு அந்தவிடத்தைக் கோமயத்தாலே சுத்திபண்ணித், தாமும்நீராடிநிற்க; அவ்வளவிலே இவர்நம்பியை மடத்தில் காணமல்மீண்டுவந்து, தேவிகளைப்பார்த்து, நீராடிநிற்கும்படியென்னென்ன? அந்தஸ்ரீவைஷ்ணவரெழுந்தருளிஅமுதுசெய்து, திருவாலவட்ட கைங்கர்யத்திற்கு உதவப் போகவேண்டுமென்றவசரித்துப் போய்விட்டார்; அவர் வர்ணாந்தரத்திற் பிறந்

ஆனந்தபரவசரா யநுஸந்தித்துப் பெருமாள் திருமுகமண்டலத்தை அநிமிஷரைப்போலே ஸேவித்துத் தேவரீருக்கு நிருபாதிக ஶேஷனானஇவ்வாத்ம வஸ்துவையும் ஏததநுபந்திகளான சேதநா சேதநங்க ளெல்லாவற்றையும் தேவரீரே அங்கீகரித்தருள வேண்டுமென்று ஸமர்ப்பித்து, இருள்தருமாஞாலத்து ளிருப்பையொழித்து நலமந்தமில்லதோர் நாட்டிலே அந்தமில் பேரின்பத் தடியருடனே சேர்த்தருள வேண்டுமென்று ஶரணம்புகப், பெருமாளும் அப்படியே செய்கிறோமென்று அவர்கள் ஸமர்ப்பித்த தன கநகாபரணங்களெல்லாவற்றையும் வினதை சிறுவன் மேல் வைத்து பொன் மலையின்மீதே காளமேகம்போலே செழும்பறவை தானேறி நம்பியுடனே ஸ்ரீஹஸ்திகிரி ஶிகரத்தில் வையமாளிகையிலே எழுந்தருளினார். இப்படி இளையபெருமாளைப்போலே நிரதிஶயமான ப்ராவண்யத்தாலே இடைவிடாமலிருந்து அடிமை செய்கிற நம்பி திறத்தில் பேரருளாளரும் அப்படியே அன்புகூர்ந்திருந்தார். இவருடைய மாதா பிதாக்களுக்கும் அவர்கள் ப்ரார்த்தித்தபடியே முக்தியை ப்ரஸாதித்தருளினார். நம்பியும் அங்கிருந்துவந்த தநங்களையும் ரத்நங்களையும் கொண்டு தேவப்பெருமாளுக்கு அனேக திவ்யாபரணங்களைப் பண்ணி ஸமர்ப்பித்து ஸேவியா நின்றுகொண்டு ஹ்ருஷ்டராயிருந்தார்.*

* இளையாழ்வாருக்கும் இவருக்கும் நடந்த வைபவவிசேஷங்களை இளையாழ்வார் சரிதத்துட் கண்டு கொள்கவும்.

திருப்பவ ராகையாலே, அமுதுசெய்த இலையைக்கோலாலே தள்ளிவிட்டு ஸ்தலசுத்திசெய்துவிட்டு நீராடினேனென்ன; இவர் அதைக்கேட்டுத் தேவிகள்மேல் மிகவும்கோபித்துப் "போனகஞ் செய்தசேடம் தருவரேற் புனிதமன்றே" என்கிறபடியே தாம் எண்ணினவாறு அபீஷ்டம் நிறைவேறாமற் போனபடியாலே "எண்ணுதனகளெண்ணும்" என்கிறபடியே தம்முடைய திருவுள்ளத்திலேஇனிசெய்யஅடுப்பதென்னென்றுஆலோசித்து, ஒன்றுந் தோன்றாமல், சடக்கெனத்திரும்பி மடத்துக் கெழுந்தருளி, நம்பிதிருவடியில் தண்டனிட்டு, ஸ்வாமீ! தேவரீர் திருவுள்ளத்தாலே அடியேனை யொதுக்கியருளினீர்; ஆகிலும் அருளாளனைக்கேட்டாவது அடியே னுள்ளிருக்குஞ் சில நினைவுகளைத் தலைக்கட்டிவைத்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க;அப்படியேயாகட்டுமென்றுநம்பிகள் பேரருளாளனுக்குக் கைங்கர்யங்களைச் செய்த வனந்தரம்,கைகளைக்கூப்பிக்கொண்டுநிற்க;அப்பொழுது அருளாளன் அதிக வாத்ஸல்யத்துடனே நம்பீ? நீர்நம்மிடத்தில் ஏதோ சிலவார்த்தை சொல்லவெண்ணி நிற்கின்றீரே யென்று கேட்டருள,ஸ்வாமீ!இளையாழ்வார் சிலநினைவுகள் கொண்டிருப்பதாகவும் அவை கைகூடும்படி யெங்ஙனென்று தேவரீரைக்கேட்டு

அனந்தர மொருநாள் கச்சிக்கு வாய்த்தான் திருமண்டபத் தருகே யிருந்து நம்பி இளையாழ்வாருக்குப் பகவத் வைபவத்தை அருளிச்செய்து கொண் டெழுந்தருளி யிருக்கும் ஸமயத்திலே பேரருளாளப் பெருமாளும் பெருந் தேவித்தாயாரும் அர்ச்சாஸமாதியை அதிக்ரமித்து விபவாவதாரம்போலே ஒருவர்க்கொருவர் வார்த்தை யருளிச்செய்துகொண்டு திருக்கைகளைக் கோர்த்துக்கொண்டு கச்சிக்கு வாய்த்தான் மண்டபமான வையமாளிகையில் உலாவி யருளாநிற்க, நம்பியும் அந்தத் திவ்ய தம்பதிகளைக் கண்டு அடிக்கடி பதாஞ்ஜலிபுடரா யெழுந்திருக்கிற படியைக்கண்டு இஃதென்னவென்று இளையாழ்வார் கேட்க, நம்பியும் "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக் கண்ட சதிர் கண்டொழிந்தேன்" என்று மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வாருக்கு ப்ரத்யக்ஷ ஸாக்ஷாத் காரமாக ஸேவை சாதித்ததுபோல் "பொருளல்லாத வென்னைப் பொருளாக்கி யடிமைகொண்டாய்" என்கிறபடியே ஸ்ரீயமுனாசார்யருடைய திருவடி ஸம்பந்தத்தாலே யென்னைப் பொருளாக க்ருபைசெய்தருளிப் பேரருளாளரும் பெருந்தேவித் தாயாரும் வையமாளிகையில் உலாவியருளி ஸேவைஸாதித்தால் அடியே னெப்படி யெழுந்திராம லிருக்கிறது என்று ஸாதிக்க; இளையாழ்வாரும் நம்பியினுடைய வைபவ மிருந்தபடியைக்கண்டு விஸ்மிதரானார்.

அறிவிக்க வேண்டுமென்று விரும்பினாரென்று நம்பிகள் விண்ண ப்பஞ்செய்ய; அருளாளன்நகைத்து, ஸஹஜதாஸ்யத்தையுடைய வனாய்ச் சந்தானு வர்த்தனம் பண்ணியிருப்பானாய், நாம் சாந் தீபனிடத்தில் வித்யாப்யாசம் பண்ணினாற்போலே, பலவிடங்க ளிலேயும் ஸகல சாஸ்த்ரங்களையும் அலகலகாகச் சோதித்திருப் பானான ஒருவன் இப்படிக்கேட்டு வரவிட்டான் காணும்! என்று ஆறுவார்த்தைகளை யருளிச்செய்து, இவையே இளையாழ்வார் நினைவிலுள்ளவை என்றான்.

அவ் வாறு வார்த்தைகளாவன:—

(க) அஹமேவ பரந்தத்வம்—நாமேபரதத்வ வஸ்து. (உ) தர்சநம் பேதமேவச—சித்தாந்தம் ஆத்ம பரமாத்ம பேதத்தை யுடையது. (௩) உபாயேஷு ப்ரபத்திஸ்யாத்—மோக்ஷத்திற்கு ப்ரபத்தியே சிறந்த உபாயம். (௪) அந்திமஸ்ம்ருதி வர்ஜநம்— அந்திமகாலத்தில் ஸ்ம்ருதி வேண்டிய தில்லை. (௫) தேஹாவ ஸாநே மோக்ஷஞ்ச—சரீர முடிவில் மோக்ஷமுண்டு. (௬) பூர்ணா சார்ய ஸமாஶ்ரயம்—பெரியநம்பியை ஆஶ்ரயிக்கவேண்டியது.

பின்பொருநாள் தேவப்பெருமாளுக்கு நித்யப்படி ஷட்ரஸோபேத மான ப்ரஸாதங்களை ஸந்நிதியில் திருமுன்பே ஸ்வயம்பாகிகள் ஸமர்ப்பி க்க அர்ச்சகர் ஶுத்தோதகங்கொண்டு வேதோக்த மந்த்ரங்களாலே ப்ரோக்ஷித்து ஸமந்த்ரகமாக அமுதுசெய் தருளப் பண்ணப்புக, ஆஶ்ரித ருடைய கரஸ்பர்ஶமுள்ள த்ரவ்யமே தமக்குத் தாரகமென்று தோற்று கைக்காகவும் நம்பிதிறத்தில் தம்முடைய வாத்ஸல்யாதிஶயத்தை வெளி யிடுகைக்காகவும் நம்பியை யழைத்தருளி, வாரீர் நம்முடைய முன்பே வைத்திருக்கிற ப்ரஸாதத்தை உம்முடைய கையாலே யெடுத்துத் தரவல் லீரோ வென்று பெருமா ளருளிச்செய்ய; நம்பியும் நாயிந்தேன் தேவரீ ரிப்படி யருளிச்செய்யலாமோ! இது உலகத்துக்கும் வேதமார்க்கங்களுக் கும் சேருமோ வென்னப்; பெருமாளு மிவரை நிர்ப்பந்தித்து நியமித் தருள; ஸர்வேஶ்வரியினுடைய நிரங்குஶஸ்வாதந்த்ரியத்துக்கு அஞ்சிப் பயபக்தியுடன் அன்புகொண்டு தம்முடைய திருக்கையாலே ப்ரஸாத வகைகளை யெடுத்து ஸமர்ப்பிக்க உலகமுண்ட பெருவாயாலே ப்ர ஸாதங்களை யெல்லாம் அமுதுசெய்தருளினார்; அர்ச்சகர்களும் கண்டே யிருந்தார்கள்.

பின்பொருநா ளிரவிலே க்ஷீராந்நமும் குழம்புப்பாலும் ஸைத்யோப சாரமாக வாஸனை த்ரவ்யம் சேர்த்த ஸ்ரீகந்தமும் பரிமள த்ரவ்யம்சேர்த்த அடைக்காயமுதும் சேர்த்தியில் சாத்திக்கொள்ள சிறுசெண்பகம் ஜாதி

அவ் வாறுவார்த்தைகளையும் நம்பிகள் கேட்டுக்கொண்டு தண்டனிட்டுவிடைகொண்டு மடத்துக்கெழுந்தருளி,விடிவோரையில் இளையாழ்வாரை யழைத்து வெளியிட்டு, இவைதாமோ உம்முடைய நினைவி லிருந்தவையென்ன? இளையாழ்வார் ஆம்! ஆம்!! என்றுபோரப்ரீதராய் அவர்திருவடிகளில் தண்டன்ஸமர்ப்பித்து இவ்வுபகாரத்திற்காக கைம்மாறில்லையே! என்றார்; நம்பியும் இவரை மிகவும் உகந்தருளிப் பேரருளாளன் றிருவுள்ளமும் இவர் நினைவும் ஒன்றாகவிருந்ததை யறிந்து ஆச்சர்யமடைந்திருந்தார்.

(இங்ஙன மிருக்கையில்)

ஸ்ரீ இளையாழ்வார் பெரியநம்பிகளை ஆஶ்ரயித்த வைபவம்.

கோயிலில் முதலிகளெல்லாரும் திரளாகவிருந்து பெரிய நம்பியைநோக்கி இத்தர்சனத்துக்குக் கடவாராரென்றுகேட்கப், பெரியநம்பியும்அவர்களைப்பார்த்து,ஸ்ரீ ஆளவந்தார்முன்பேநினைவிட்டு விசேஷகடாக்ஷம்பண்ணி யருளினதும், அவருடைய திருவிரல் நிமிர்ந்தருளிய ஏற்றமும் உங்கள் திருவுள்ளங்களில் நிலையிடவில்லையோ!ஸர்வதா ஸ்ரீ ஆளவந்தார் அபிமானம்பொய்யாகக்

செங்கழுநீர்முதலிய புஷ்பங்களுங்கொண்டுவந்து பீகமுத்ரை ஸமயத்தில் ஸமர்ப்பித்து அமுதுசெய்யப்பண்ணவந்த அர்ச்சகரைப்பார்த்துப் பெருமாள் இவையெல்லாவற்றையும்நீர் இங்குவைத்துவிட்டுப் பீகமுத்ரைபண்ணிக்கொண்டு போமென்று நியமிக்க, அப்படியேவைத்துவிட்டுப் பீகமுத்ரைபண்ணிக்கொண்டுபோனபின்பு நம்பியையழைத்து அவரைக்கொண்டு ஆஶ்ரிதகரஸ்பர்ஶமாக புஷ்பத்தை ஸமர்ப்பிக்கச்சொல்லிச் சாத்துப்படியையும் 'சாத்திக்கொண்டு ப்ரஸாதத்தையும் குழம்புப் பாலையும் முக்கால் வரிசை அமுதுசெய்து நம்பியைக் கொஞ்சம் ப்ரஸாதம் எடுத்துக்கொள்ளச் சொல்லியும் கொஞ்சம் ப்ரஸாதம் வெண்கலத்திலேயே ஸந்நிதிகைங்கர்யபரருக்கிருக்கட்டுமென்றும்நியமிக்க;நம்பி"தந்யோஸ்மி" என்று அப்படியே செய்து சிலபோது திருவாலவட்ட கைங்கர்யமானபின்பு ஸ்வாமி நியமனப்ரகாரம் மடமேற எழுந்தருளினார். மறுநாள்காலையில் திருக்காப்புநீக்கி ஸ்வரூபஸேவை ஸேவிக்கும்போது கொஞ்சம் ப்ரஸாதமும் குழம்புப்பாலுமே சேஷித்திருந்ததைக்கண்டு பகவத்வைபவமும் நம்பியினுடைய ப்ரபாவமுமறிந்தமஹாநுபாவர்கள் நம்பியினுடைய ப்ரபாவத்தையும் பேரருளாளருடைய ஸர்வ நியந்த்ருத்வத்தையுங்கண்டு ஆனந்தபரவசரானார்கள். சில மந்தமதிகள் பெருமாள் பேரைச்சொல்லி நம்பி பசியாற்றிக்கொண்டாரென்று நினைத்து ஊரிலே நம்பி விஷயமாக அபலாபவார்த்தைகளைச்சொல்லித்திரிந்தார்கள். அதை நம்பிகேட்டு உல

கூடாதன்றோ! வென்ன; முதலிகளெல்லாரும் இவையே மெய்யென்று சம்மதித்துத், தேவரீர் பெருமாள்கோவிலுக் கெழுந்தருளி இளையாழ்வாரைவிசேஷகடாக்ஷஞ் செய்தருளித், தர்ஸன ப்ரவர்த்தகராம்படி திருத்தி அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய; இவர் அப்போதே குடும்பசஹிதமாய்ப் புறப்பட்டு, நம்பெருமாளைச் சேவித்து, விண்ணப்பஞ் செய்து அவரநுமதிகொண்டு த்வரித்துப், பெருமாள்கோயிலுக்கெழுந்தருளாநிற்கச்செய்தே, மார்க்கத்தி லிருக்கிற மதுராந்தகத்தில் † ஏரிகாத்தபெருமாள் சன்னிதியிலே அவசரித்தெழுந்

* ஏரிகாகுத்தப் பெருமாள்என்றும் பாடாந்தரம்.

கர் பழிநூற்றில் துதியாகுமென்று ஸந்துஷ்டராயிருந்தார். பேரருளாளர் ஸர்வஜ்ஞராகையாலே மந்தமதிகளாயிருக்கிறபேர்கள் நம்பிவிஷயத்தில் அபசாரப்பட்டு அதோகதியையடைய எத்தனித்திருக்கிறார்கள்; அதற்கு மூலம் நாமாகிறோமாகையாலே அந்த நிந்தை நீங்கும்படியாயும் நம்பியை எல்லாரும் கொண்டாடும்படியாயும் தம்முடைய ஸர்வஶக்தித்வமும் அகடிதகடனு ஸாமர்த்யமும் ஆஶ்ரிதவாத்ஸல்யமும் வெளியாகும்படியாகவும் ஸங்கற்பித்து வடக்கே மஹாதனிகனான ஒரு கோசாயிக்கு ஸ்வப்நம் ஸாதித்து அந்தகோஸாயி ப்ரயாணமாய்த் திருமலைக்குவந்து திருவேங்கடமுடையானைத் தண்டன் ஸமர்ப்பித்துப் பெருமாள் கோயிலுக்குவர; ப்ரயாணகதியிலே தேவப்பெருமாள் அந்தக் கோஸாயி ஸ்வப்னத்திலே யெழுந்தருளி உன்னுடையஸொந்தத்ரவ்யத்திலே மனப்பூர்த்தியாய் ஆயிரந்தளிகையும் அக்காரவடிசிலும் காலசந்தியிலே அமுதுசெய்யும்படியாயும் உச்சிகாலத்தில் அலங்கார ப்ரஸாதம் லக்ஷம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆகும்படியாயும் செய்வித்து அதைநாம் அமுதுசெய்தவுடனே நீ கிட்டவிருந்துபார்த்து ஸந்தோஷிக்க வேண்டுமென்று ஸ்வப்நமாக, அந்தக்கோஸாயியும் ஸ்வப்நமிருந்தபடியை நினைத்துப் பஹு குதூஹலனாய்ப் பொருளல்லாதவென்னைப் பொருளாக்கித்தாமேயெழுந்தருளி ஸ்வப்நம்ஸாதித்தாரேயென்று அப்போதே சிலத்ரவ்யங்களைக்கொடுத்துத் தன் ஸொந்த மனுஷ்யர்களையனுப்பிக் காஞ்சீபட்டணத்தில் வேண்டிய ஸாமக்ரியைகளைச்சேர்த்துவைக்கக்;கோவில் தர்மகர்த்தாவுக்குப் பெருமாள் ஸ்வப்நம் ஸாதித்து அந்தக் கோஸாயி சொன்னப்ரகாரம் செய்விக்கும்படி நியமித்தருளினார்.

பின்பு கோஸாயி பெருமாள்கோயிலில்வந்துசேர்ந்து ஸகல ஸாமக்ரியையுங்குறைவறஸமர்ப்பித்துப்பட்டணத்தில் ஒருவரும்தளிகைபண்ண வேண்டாம் பெருமாள் அமுதுசெய்து ப்ரஸாதம் ஸாதிக்கிறாரென்று பறைசாற்றி உதயமானவுடனே ப்ரஸாத வகைகளை யெல்லாம் பெருமாள்சந்நிதி வையமாளிகையில்கொண்டுவந்துசேர்த்து அர்ச்சகர் அமுது

தருளியிருக்க; இளையாழ்வாரும் தமக்குப் பேரருளாளன் திருக்கச்சிநம்பி முகேன நியமித்தருளினபடியே பெரியநம்பி திருவடிகளில் ஆஶ்ரயிப்பதாகப் புறப்பட்டுத், திருக்கச்சி நம்பியையும் தேவப் பெருமாளையுஞ் சேவித்து அவர்க ளனுமதிகொண்டு கோவிலைநோக்கி வராநிற்க; ஏரிகாத்த பெருமாளைச் சேவிப்பதாக வெழுந்தருளுகையில், அங்கே நம்பிகள் எழுந்தருளியிருப்பதைத் தூரத்திலிருந்தே கண்டுகொண்டு, அதிக ஆச்சர்யமடைந்து எண்ணினபலன் எதிரில்தானே வந்துவாய்த்ததென்று சந்தோஷித்துத் தம்முடைய நெஞ்சைநோக்கி, நம்பிகள் நமக்கருளிச்செய்வதாய் எதிரேவந்தபடிகண்டாயே நெஞ்சே! என்று

செய்யப்பண்ணவந்துநிற்கப்; பெருமாள் திருக்கச்சிநம்பிக்கருளப் பாடிட்டழைக்க,அவரும்அஞ்சியிருக்க; அர்ச்சகரைக்கொண்டு நம்பியைஉள்ளே அழைத்து மற்றொருவரும் உள்ளேவராமல் திட்டம் செய்து வையமாளி கையிலிருந்த தளிகைகளையெல்லாம் அர்ச்சகர் கொண்டுவந்து கொடுக்க நம்பிவாங்கி ஸ்வாமிக்குஸமர்ப்பிக்கக் கோவர்த்தனத்துக்கு இட்டபொங்கலை அங்கோர் பூதவடிவுகொண்டு கண்ணன் அமுதுசெய்ததுபோல் தேவப்பெருமாள் உலகமுண்டபெருவாயாலே யெல்லாவற்றையு மமுதுசெய்தருளித் திருக்காப்பைநீக்கிக் கோஸாயிமுதலானபேரை சேவிக்கப் பண்ணிவைத்துப்பின்பு அலங்காரத்தை அர்ச்சகர்களைக்கொண்டு அமுதுசெய்யப்பண்ணுவித்து ஊரிலெல்லாருக்கும் ப்ரஸாதங் கொடுப்பித்து, எல்லாரும் ஸந்தோஷப்படும்படியாயும்; இத்தனைதளிகைகளையும் வேதப்பெருமாள் ஒருவருமேகொஞ்சமாகிலும்ஶேஷியாமல் அமுதுசெய்தாரே யென்கிற ஆஶ்சர்யமுற்று, இந்தக்கோஸாயினுடையஸொத்தும் நல்லது, இவர் மனஸும் நல்லதென்று எல்லாரும்கொண்டாடும்படியாயும் செய்தருளினவளவிலே, முன்பொருநாள் க்ஷீராந்நமும் குழம்புப்பாலும் பெருமாள் ஶேஷம்வையாமல் அமுதுசெய்திருக்க ஜனங்க ளதையறியாமல் திருக்கச்சி நம்பிமேலே பழிசொன்னார்களே அது பெருமாளுக்குத் திருவுள்ளம்ஸஹியாமல் தம்முடைய ஆஶ்ரிதவாத்ஸல்யத்தையும் நம்பியினுடைய ப்ரபாவத்தையும் கோஸாயினுடைய ஹ்ருதய பரிஶுத்தத்தையும் வெளிப்படுத்தத் திருவுள்ளமாய் இப்படிசெய்தாரென்று எல்லாரும் வசனித்துக்கொண்டார்கள்.

பின்பொருநாள் தேவப்பெருமாளும் நம்பியும் ஸல்லாபியா நிற்கிற ஸமயத்திலே நம்பியைப்பார்த்து ப்ராரப்தகர்மபலமாய் வருகிற வ்யஸநம் அனுபவித்தேயறவேண்டுங்காணுமென்று அருளிச்செய்ய; நம்பியுமதைக் கேட்டு ஏதுக்காக இங்ஙன மருளிச்செய்ததென்று விண்ணப்பம் செய்ய; பெருமாளும் உமக்கு ஏழரையாண்டுசனிவருகிறதுகாணும் அந்த வ்யஸ

நிர்ப்பரானந்த பாஷ்பங்களை யுடையராய், அப்போதே ஓடி ஸ்ரீபாதத்திலே ஹர்ஷ ஸம்ப்ரமத்துடனே தண்டன்சமர்ப்பித்து நிற்க; நம்பிகள் அவரைக்கண்டு நம்முடைய அபிலாஷை அதிசீக்ரமாய் எதிரேவந்து சித்தித்ததென்று வாரியெடுத் தணைத்துக் கொள்ள; மறுபடியும்இளையாழ்வார் க்ருதாஞ்சலி புடராய்நின்று, அடியேனுக் கிப்போதே தேவரீர் ஹிதோபதேசஞ் செய்தருள வேண்டுமென்றுப்ரார்த்திக்க;"அஸ்திஹஸ்திகிரிர்நாமதத்ரஶைல வரோமஹாந்-வியாத்ராப்யர்ச்சிதோ விஷ்ணுஸ்தஸ்ய ஶைலஸ்ய மூர்த்தநி - புண்யகோடிதிவிக்யாதம் விமாநம் புண்யவர்த்தநம்

மநுபவித்துத் தீரவேண்டுமென்ன; நம்பியும் அடியேனநுபவிக்கமாட்டேனென்னப்;பெருமாளும் ஆகில் ஏழரைமாசமாகிலும் அநுபவிக்கவேண்டுமென்ன; நம்பியும்என்னால்முடியாதென்னப்; பெருமாள் ஏழரைநாளாகிலும் அநுபவிக்கவேண்டுமென்ன; நம்பியும் அதுவும் அஶக்யமென்னப்; பெருமாளும் ஆகில் ஏழரைநாழிகையாகிலு மநுபவித்தே தீரவேண்டும்; ஶாஸ்த்ர வையர்த்யம் வாராமைக்காக வென்றருளிசசெய்தார். அநந்தரம் ஒருநாள் உதயத்திலே ஸந்நிதிகாப்போர் திருக்காப்புநீக்கி உள்ளே புக்கு ஶோதித்தவிடத்திலே நவரத்நகசிதமாய்ப் பெருமாள் திருத்தோளிலே சாத்தியிருந்த திவயாங்கதத்தைக் காணமல் பரபரப்போடேயெங்குந் தேடிப்பார்த்து அதிகாரிக் கறிவிக்க; அவனு மங்குள்ளாரெல்லாரையும் அழைத்து சீக்ரமாக ஆபரணத்தைக்கொண்டு வாருங்களென்ன; அவர்களுங்கூடி ஸங்கேதம் பண்ணிக்கொண்டு ஸந்நிதியிலேயெப்போதும் நம்பி யிருக்கிறபடியால் அவரே எடுத்திருக்க வேண்டுமென்ன; அதிகாரியும் நம்பியை நிர்ப்பந்தித்து அதைக் கொண்டுவாருமென்ன; இவரு மடியேன் அறியேனென்ன; அதிகாரியும் ரோஷாவிஷ்டனாய்க் கடுமையோடு நிர்ப்பந்திக்க நம்பிதுஸ்ஸஹமான துக்கத்தையும் லஜ்ஜையையும் அடைந்திருந்தார். அவ்வளவில் பெருமாளும் ஆஶ்ரித வாத்ஸல்ய ராகையாலே தன்திருத்தோளிலே அந்த திவயாங்கதத்தை ப்ரகாசித்தருளினர். அர்சசகர்களும் அதைக்கண்டு திகைத்து அவனுடனே இசசெய்தியைச சொல்ல அவனும் விஸ்மிதனாய் நம்பியைத் தண்டன்ஸமர்ப்பிதது அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டு நீர் ஸந்நிதிக்கெழுந்தருளுமென்று போகவிட்டான். நம்பியும் திருவநந்த ஸரஸிலே நீராடி அடியேனுக்குப் பஹுகாலாநு பவமாகவேண்டி யிருந்த பாபராசிகளைச சேர்ததுக் கோடியைக் காணியாக்கி, "லகுதண்ட ப்ரபந்நஸ்ய ராஜபுத்ரா பராதவத்"என்கிறபடியே கசைகாட்டிப்போக்குவதே! இதென்ன நீர்மையிருந்த படிதானென்று பெருமாளுடைய அபாரகாருண்யத்தைக் கொண்டாடி நின்றுகொண்டு ஸந்நிதியிலேகிட்டிப் பேரருளாளர் திருவடிகளிலே தாளுந் தடக்கையுங்கூப்பித் தண்டன்ஸமர்ப்பித்து எழுந்திராமலிருக்கப்; பெருமாளும் மிகவும் க்லேசப்பட்டீரே என்று வினவி

என்று சொல்லப்படுகிற ஹஸ்திகிரியில் புண்யகோடி விமான மத்யத்திலே ப்ரஹ்மாதி சகலசேதனராலும் சேவ்யமானவரான பேரருளாளன் சன்னிதியிலே செய்கிறோம் வாருமென்றருளிச் செய்ய; இளையாழ்வார் ஸ்வாமீ! காலக்ஷேபம் பண்ணவொண்ணாமைக்கு ஸ்ரீஆளவந்தார் பக்கல் கண்டது அமையாதோ! மின்னின்னிலையில்லாத இச்சரீரம் ஹஸ்திகிரிக்குப் போருமளவும் இருக்குமென்று எங்ஙனம் நிச்சயிக்கலாகும்; ஆகையால் இப்போதே செய்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்து, ஸ்ரீபாதத்தில் விழுந்துகிடக்க; இவர் அவரை ஆதரத்தூடனெடுத்து, அவர் யருளிப், பின்பு ப்ரக்ருதி கர்மம் இருந்தபடி கண்டீரேயென்று அருளிச்செய்ய; நம்பியும் 'உன்மாயங்கள்மேலைவானவருமறியா ரினியென்பரமே' என்று விண்ணப்பஞ்செய்து தமக்கு நியதமானகைங்கர்யத்திலே தற்பரராயிருந்தார்.

பின்பொருநாள் ராத்ரியிலே நம்பி "பாலாழி நீகிடக்கும் பண்பை" என்று ஆழ்வார்கள் ஈடுபடும்படியானதேவரீர் திருப்பாற்கடலிலே திருக்கண்வளர்ந்தருளுகிறபடியை அடியேனுக் கருளிசசெய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யப்; பெருமாளும் அஃதிருக்கும்படிகேளீர், நாமங்கே யோகநித்ரையாகிற ஜகத்ரக்ஷண சிந்தையைப் பண்ணுவோங் காணும், அதாகிறது வ்யூஹ சதுஷ்டயத்தில் அநிருத்த ஸம்ஜ்ஞையாலே தேஜஸ்ஸுக்கள் தரித்துக்கொண்டு ஸகலசேதனர்களுடைய உஜ்ஜீவநமும் எவ்வழியாலேசெய்ததாமென்று த்யானித்திருக்கை. இவை ஆபந்நருடைய குரல்கேட்டு அவர்களுடைய அபிமதத்தைத்தலைக்கட்டுவதாய் அநந்தாவதாரங்கள் என்றருளிச்செய்ய; இதைக்கேட்டுநம்பியும் ஹ்ருஷ்டராய் இன்னும் சில விசேஷார்த்தங்களை அருளிச்செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யப், பெருமாளும் கருடத்யாநத்தாலே விஷந்தீருமாபோலே ஆசார்யத்யானத்தாலே ஸம்சாரமாகிற விஷந்தீரும்; "கானத்தின் கடன்மல்லைத் தலசயனத்துறைகின்ற, ஞானத்தினொளியுருவை நினைவாரென்னுயகரே" என்றும் "கடன்மல்லைத் தலசயனத்துறைவாரைக், கொண்டாடும் நெஞ்சுடையா ரவரெங்கள் குலதெய்வமே" என்றும் கலிகன்றியருளிச்செய்கையாலே பகவத்சேஷத்வத்திலும் பாகவத சேஷத்வமே ஆத்மாவுக்கு நிலைநின்ற ஸம்பத்து என்றும், பகவதபசாரம், பாகவதபசாரம், அஸஹ்யாபசாரம் என்னுமூன்றனுள், பகவதபசாரமாவது ஸ்வயத்நஸாத்ய னெம்பெருமானென்றிருக்கை; பாகவதபசாரமாவது ஸ்ரீவைஷ்ணவர்களோடு தன்னையும் ஸமானப்ரதிபத்திபண்ணுகை; அஸஹ்யாபசாரமாவது அர்ச்சாவதாரத்தினுடைய த்ரவ்ய நிரூபணம்பண்ணுதல்; ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஜாதிநிரூபணம்பண்ணுதல் என்றும், மருகாந்தா

ஆர்த்தியிருந்த படியைக்கண்டு உகந்து கையைப்பிடித் தழைத்துக் கொண்டுபோய் அந்தச்சன்னிதி ப்ரகாரத்துக்குள் ளிருந்த வகுளவ்ருக்ஷத்தி னடியிலே எழுந்தருளியிருந்து "மந்த்ரஸம்ஸ்காரஸித்யர்த்யம் மந்த்ர தீக்ஷாவிதௌதயா - சக்ரஸ்யதாரணம் ப்ரோக்தம் மந்த்ரைஃ பஞ்சாயுதாநிவா" என்கிறபடி மந்த்ரசித்தியின் பொருட்டுப் பஞ்சாயுதங்களின் மந்த்ரங்களையும் அதிஷ்டிப்பித்த சங்கசக்ரலாஞ்சனங்களை முதலில்தரிக்கக்கடவன்என்றும், "சக்ராதிதாரணம் பும்ஸாம் பரஸம்பந்த வேதநம் - பதிவ்ரதாநிமித்தம்ஹிவலயாதி விபூஷணம்" என்கிறபடி சேதனனுக்குச் சர்வேஶ்வரனான ஸ்ரீயஃபதியின் சம்பந்தமுண்டாம்பொருட்டுப்,

---

ரத்தில் தண்ணீர்ப்பந்த லோபாதி ஸம்ஸாரத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸஹவாஸமென்றும், அம்ருதபானத்தாலே ஜராமரணநாஸ முண்டாமாபோலே ஸ்ரீவைஷ்ணவ க்ருஹத்திலே அம்புபாநத்தாலே ஸகலபாபங்களும் நஸிக்குமென்றும் அருளிச்செய்தார்.

இப்படி ப்ரஸங்காத் ப்ரஸங்கத்தாலே சென்றபோது தெரியாதே நல்லநிஸியாகப்பெருமாளும் நம்பியைப்பார்த்து மிகவும் பொழுதாயிற்று காணும் மடமேறப் போய்வாருமென்ன; நம்பியும் வெளியிலேவந்து காடாந்தகாரமாயிருக்கக்கண்டு, தம்மநுசரனை அருளாளாபந்தங்கொண்டு வாவென்ன? அவனொருமூலையிலே புக்கு நித்ராக்ராந்தனாகப், பெருமாள் தாமே தம்முடைய திருவாழியை தீபமாகக்கொண்டு அவனைப்போலே கூடவந்து மடத்திலேபுகுமளவிலேகாணாமற்போக, நம்பியும் விஸ்மயபரவஸராய்ச் "சூட்டு நன்மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள் நன்னீராட்டியந்தூபந்தராநிற்க" என்று நித்யஸூரிநிவஹங்கள் திருவோலக்கங்களாகவிருந்து பணிசெய்ய அவர்கள்கையில் கைங்கர்யங்களைக்கொண்டு ஆனந்திக்கும் இந்தப் பரமபுருஷன் அர்ச்சாவதாரமாய் ஹஸ்திகிரியில் எழுந்தருளி அந்த அர்ச்சாஸமாதியையு மதிக்ரமித்துப், பொருளல்லாத வென்னைப் பொருளாக்கித் திருப்பவளந் திறந்து வார்த்தையருளிச்செய்வதுமல்லாமல் அநுசரக்ருத்யமும் செய்யும்படி திருவுள்ளமானால் அடியேன் எங்ஙனமிவர்திருவடிகளிலே அபசாரப்பட்டுக்கொண்டிருக்கிறது; ஆகையால் இந்த த்யாகமண்டபத்தைவிட்டுப் புஷ்பமண்டபத்துக்குப் போகக்கடவேன் என்று அப்போதே புறப்பட்டுவிட்டார்.

அங்கு நின்றும் கடிகாசலத்தேறப்போய் அக்காரக்கனியையும் ஸேவித்துத்தக்கானையும்திருவடிதொழுது ராக்ஷஸகுலகாலனாக உத்யோகித்துத் திருவாழி திருச்சங்குடன் சதுர்ப்புஜமும் யோகபட்டையும் சாத்திக்கொண்டு வீற்றிருந்த திருக்கோலமாக எழுந்தருளியிருக்கிற சிறிய திருவடியையும் ஸேவித்துப் பயணகதியிலே சென்று "வணங்குமினோ சேணுயர் வேங்கடத்தை" என்று ஆழ்வார் பாசுரத்தை அநுஸந்தித்துக்

பதிவ்ரதைக்கு மங்களஸூத்ரமும் விரலாழிகளும் கைவளைமுதலிய பூஷணங்களு மிருப்பதுபோலே, சங்கசக்ரலாஞ்சனாதி சின்னங்களைத் தரிக்கக்கடவது என்றும், "நிவேஶ்ய தக்ஷிணேஸ்வஸ்ய விநீதாஞ்ஜலிஸம்யுதம்-மூர்த்நிஹஸ்தம்விநிக்ஷிப்ய தக்ஷிணம் ஜ்ஞாநதக்ஷிணம்-ஸ்வயந்துஹ்ருதி விந்யஸ்யக்ருபயா வீக்ஷயேத்குரு:-ஸ்வாசார்யம் ஹ்ருதயேத்யாத்வா ஜப்த்வா குருபரம்பராம்-ஏவம் ப்ரபத்யதேவே ஶமாசார்ய: க்ருபயாஸ்வயம் - அத்யாபயேந் மந்த்ரரத்நம் ஸர்ஷிச்சந்தோ திதைவதம்"என்கிறபடி ஆசார்யனாயிருப்பவன் தன்னை ஆட்கொண்ட ஆசார்யனை ஹ்ருதயத்திலே த்யானம் பண்ணிக்கொண்டு, ஆசார்ய பரம்பரையையும் உச்சாரணம் பண்ணிக்கொண்டுவணக்கின திருமேனியையுடையவனாகித் கொண்டெழுந்தருளும்போது "காண்பதெஞ்ஞான்று கொலோ வினையேன் கனிவாய்மடவீர், பாண்குரல்வண்டினொடும் பசுந்தென்றலுமாகி யெங்கும், சேண்சினையோங்குமரச் செழுங்கானற்றிருவல்லவாழ், மாண்குறட்கோலப்பிரான்மலர்த்தாமரைப்பாதங்களே" இத்யாதிகளிற்படியே காணவேண்டுமென்கிற பெரியவாசையோடேபோகிறவிவர்நடுவழியிலே ஒரு ஓடையிலே ஒருவன் செங்கழுநீர்க்கிழங்குகளைப் புதைக்கக்கண்டு ஆருக்காக வென்ன? அவனும் சிந்துபூமகிழுந் திருவேங்கடத்தானுக்கென்ன, நம்பியுமவனையிப்போபுஷ்பிக்குமோவென்ன? அவனும்இப்போது கிழங்கைப் புதைக்கவாவது இப்போதே யது புஷ்பிக்கவாவது போம் போம் பெரியதாதரேயென்று பரிஹஸிக்க; நம்பியுமதைக்கேட்டு அஃதப்படியே யாங்காணும் "கள்ளார்துழாயுங்கணவளரும்" என்றன்றோ ஞானவான்கள் பாசுரமிருக்கும்படி ஆகையால் இப்போது நட்டகிழங்கும் இப்போதேதழைத்துப் புஷ்பிக்கவேண்டுங்காணென்று அருளிச்செய்யத் தத்க்ஷணத்திலே தழைத்துப் பூத்துநின்றது; அதை நம்பிபார்த்து இவற்றையிப்போதேகொண்டுபோய் ஸ்ரீநிவாஸன் திருவடிகளிலே ஸமர்ப்பிக்கவேண்டுமென்கிற அபிநிவேஶங்கனத்து அந்தப் புஷ்பங்களையெல்லாம் ஒருகுடலையிலே எடுத்துக்கொண்டு அதித்வரையோடே போகாநிற்க; அவ்விடத்திலே அதி மநோஹர ரூபலாவண்யஶாலியா யிருப்பானொரு மகாபுருஷன்வந்து இங்கே தந்திடலாகாதோ வென்ன? நம்பியுமப்படியேயென்று கொடுக்க; அவருமந்தப்புஷ்பத்தையெல்லாந் தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும்புனைந்து மறைந்துபோனார்.

நம்பியும் அவர் திருமேனி அழகையும் அந்தத் திருமேனிக்குப் பராபாகமாக இந்தப் புஷ்பங்களைச் சாத்திக்கொண்ட அழகையும் ஸேவித்து விஸ்மிதராய் அவரிலுமிவர் அதி ஸரஸியாயிரா நின்றாரென்று கொண்டு

தனக்கு வலப்புறத்தில்ஆஶ்ரயிக்கிறசேதனனை உட்காரவைத்துக் கொண்டு, சிரேஷ்டமாகச் சொல்லப்படுகிற வலத்திருக் கரத்தை அவன் சிரஸின்மேலே வைத்து, க்ருபையோடு நோக்கிக் கொண்டு,ஸகல தேவதா நிர்தாஹகனாய்த் தனக்கு மஹோபகாரனாய் மந்த்ர நிர்வாஹகனாகிய ருஷியும் சந்தஸ்ஸும் வஸ்துவும் கூடியிருக்கிற த்வயத்தை ஓதக்கடவன் என்றும் சொல்லுகிற படியேஇளையாழ்வாருக்குச் சங்கசக்ரதாரணம்செய்துவலப்புறத்திலே யிருக்கவைத்துக்கொண்டு, தம்முடைய ஸ்ரீஹஸ்தத்தாலே அவர் சிரஸை ஸ்பர்சித்துக்கொண்டு, தமக்குச் சதாசார்யரான ஸ்ரீஆளவந்தார் திருவடிகளை ஸ்மரித்துக்கொண்டு, குருபரம்பரா

அறக்கடுகித் தெழிகுரலருவித் திருவேங்கடத்தெழில்கொள் சோதியை யெப்போது காண்போமென்கிற பேராசையோடே கடுநடையிட்டுத் திருப்பதியேற வெழுந்தருளி ஆழ்வார்தீர்த்தத்திலே நீராடி அவ்விடத்தி லிருக்கிற பெரியோர்களையும் ஆழ்வார்களையும் நாச்சிமார்களையும் பெருமாளையும்ஸேவித்து மறுநாள் விடிவோரையில் திருமலை அடிவாரத்திலே அழகியசிங்கரைத் திருவடிதொழுது ப்ரபத்திபண்ணிக்கொண்டு மெள்ள யேறி அங்குள்ளபக்ஷி ஸங்கங்களையும் வ்ருக்ஷ ஷண்டங்களையும், கண்டு களித்துக்கொண்டு வண்டுகள்முரலுகிற பாட்டுகளையும் ஆலித்துக் கூவாநின்ற குயிலினங்களின் குரலோசையையுங் கேட்டுக்கொண்டு, சேரார் சுனைத்தாமரைச் செந்தீமலருந் திருமலையையும், திணரார்மேக மெனக் களிறுசேருந்திருவேங்கடத்தையும், செடியார்வினைகள் தீர்மருந்தாயதிரு வேங்கடத்தையும், தேனேய் பூம்பொழில்சூழ் திருவேங்கடமா மலையையும், குன்றேமேக மதிர்குளிர் மாமலைவேங்கடத்தையும், நிலந்தோய் நீள் முகில்சேர் நெறியார் திருவேங்கடத்தையும், விண்ணோர் நீள் சிகர விரையார் திருவேங்கடத்தையும், கரிசேர் பூம்பொழில் சூழ் கனமாமலை வேங்கடத்தையும், கோற்றேன்பாய்ந்தொழுகுங் குளிர்சோலைசூழ் வேங்கடத்தையும், கற்றேன் பாய்ந்தொழுகுங் கமலச்சுனை வேங்கடத்தையும், விலங்கற்குடுமித் திருவேங்கடத்தையும், விண்டோய் சிகரத்திரு வேங்கடத்தையும், சேணார் திருவேங்கடத்தையும், வில்லார் மலிவேங்கட மாமலையையும், கானவரிடுகாரகிற் புகையோங்கு வேங்கடத்தையும், குறவர்மாதர்களோடு வண்டுகுறிஞ்சி மருளிசைபாடும் வேங்கடத்தையும், எங்கும் வானவர் தானவர் நிறைந்தேத்தும் வேங்கடத்தையும், கவரிமாக் கணஞ்சேரும்வேங்கடத்தையும், வேய்கள்நின்று வெண்முத்தமே சொரி வேங்கடத்தையும், ஆடுதாமரையோனுமீசனு மமரர்கோனுநின்றேத்தும் வேங்கடத்தையும், மின்னுமாமுகில் மேவுதண் டிருவேங்கடத்தையும் கண்டுகளித்து அவ்விடத்திலே மலைகுனிய நின்றான், திருவாழி பரப்பினான், பங்கயச்செல்வி, திருமலைநம்பி, திருமழிசைப்பிரான், குலசேகரன்

பூர்வகமாக மந்த்ரரத்னமான த்வயத்தைச் சாங்கோபாங்கமாக அவருடைய வலத்திருச்செவியில் உபதேசித்தருளி இளையாழ்வாரே! பெருமாள், நாட்டுக்குரக்ஷகமாக ஸ்ரீபரதாழ்வான் றலையிலே தம்முடைய திருவடிநிலைகளை வைத்தருளிக் காட்டுக்கெழுந்தருளினாற்போலே ஸ்ரீஆளவந்தாரும் உமக்காகத் தம்முடைய திருவடித் தாமரைகளை என்றலைமேலேவைத்தருளித் திருநாட்டுக் கெழுந் தருளினா ரென் றிருங்கிடீர் என்றருளிச் செய்தார். பின்பு இளையாழ்வார் இதற்கு ப்ரமாணமெது? ப்ரமேயமெது? ப்ரமாதாக்களார்? என்று கேட்க; நம்பிகள் உகந்து "மாதவன் பேர்சொல்லுவதே யோத்தின் சுருக்கு" என்கிறபடியே த்வயமே ப்ரமாணம்; ப்ரமேயத்தால் ப்ரதிபாத்யனாய் ஸ்ரீஹஸ்திகிரியின்மேலே கையுந் திருவாழியுமாய் நிற்கிற பெருமாளே ப்ரமாதா; இந்த ப்ரமாணத்தில் ப்ரமேயத்தை யனுபவிக்கத் தக்கவர்நீரே என்றருளிச்செய்தார்.

அதின் மற்றைநாள் பெரியநம்பிகள் ஏரிகாத்தபெருமாளைத் திருவடிதொழுது "ஸராமோலோக ரஞ்ஜநஃ" என்னுமாபோலே தேவரீர் திருநாமத்துக்குத்தகுதியாக, இத்தர்சனம் பிந்ந தடாகமாகாதபடி ஒருவரையிட்டுத் தந்தீரேயென்று மங்களாசாசனஞ் செய்து இளையாழ்வாரையுங் கூட்டிக்கொண்டு பெருமாள்கோயிலேறவெழுந்தருளினார்; அப்போது திருக்கச்சிநம்பி எதிரேவந்து சேவிக்க; இவர் அவரையுங் க்ருபைசெய்து, அவர்புருஷாகாரமாகப் பேரருளாளனைச் சேவித்து; ஸ்ரீமந்நாதமுனிகள் உய்யக் கொண்டாருக் கருளிச்செய்தபடியை, உய்யக்கொண்டார் நிய

திருவேங்கடத்து நின்றான், வண்சடகோபன், யமுனைத்துறைவன், அழகியமணவாளன், பேரருளாளன், திருமங்கைமன்னன், தொண்டரடிப்பொடி, ஹரிசரணாலயன், புண்டரீகன், திருப்பேர்நகரான்தொடக்கமான அனேகந்திருநந்தனவனங்களையும்ஸேவித்துவிஸ்மிதராய்த்திருமலையைக் கிட்டி யாளியுங்கோளரியும் பொன்மணியும் முத்தமும் பூமரமும்பன்மணி நீரோடு பொருதுருளும் கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடமென்கிற நன்மணிவண்ணனூரிலே சென்று அவனுடைய ஸௌஸீல்யத்திலே ஆழங்காற்பட்டு ஸ்வாமி புஷ்கரணியிலே நீராடி த்வாதசநாமங்களையும் ஸ்ரீ சூர்ணத்தையும்தரித்து ஸந்துஷ்ட ஹ்ருதயராய் வையமூன்றுமேனத்துருவாயிடந்த ஞானப்பிரானையும்ஸேவித்து உள்ளேபுகுந்து திருவேங்கடமுடையானுடைய திவ்யாவயவங்களுக்கும் திருப்பீதாம்பரத்துக்கும் திருவாபரணங்களுக்குமுண்டான சேர்த்தியழகைக்காணலுற்றார்.

மனப்படி மணக்கால்நம்பிகள் ஸ்ரீஆளவந்தாருக்குப்பச்சையிட்டு உபதேசித்துக் கோயிலேற அழைத்துக்கொண்டுபோய்ப் பெரிய பெருமாளைச் சாக்ஷாத்கரித்து அநுபவிப்பித்ததுபோலே தாமும் ஸ்ரீஆளவந்தார் நியோகாத் இளையாழ்வாரைப் பலகால் அதட்டி யுபதேசித்துப்பேரருளாளப்பெருமாளைச் சாக்ஷாத்கரித்து அநுபவிப்பித்தருளினார். பின்பு இளையாழ்வார் திருமாளிகைக் கெழுந்தருளி, அதன் மேல்பாதியிலே, நம்பிகள் குடும்ப சஹிதமாக எழுந்தருளி யிருக்கப் போதுமான இடம் சமர்ப்பித்து, நித்ய கைங்கர்யத்திற்கு வேண்டின ஸமஸ்த பதார்த்தங்களையும் சமர்ப்பித்துவர; அங்கே நம்பிகள் ஆறுமாதகால மெழுந்தருளியிருந்து, இளையாழ்வாருக்கு த்ராவிட வேத ப்ரபந்தங்களையும் தர்சன விசேஷ ரஹஸ்யங்களையும் ப்ரசாதிக்க; அவரும் செவிக்கினிய செஞ்சொல் கேட்டு க்ருதார்த்தரா யிருக்குங்காலத்திலே, ஒருநாள் திருமஞ்சனமுறையிலே எண்ணெய்க்காப் பிடவந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவர், பசிநலியாநின்ற தென்றவாறே, இளையாழ்வார் தம் தேவிகளான தஞ்சமாம்பாளை அழைத்து, இந்த ஸ்ரீவைஷ்ணவர் பசியால் இளைத்திருக்கின்றார் பர்யுஷிதான்ன மிருக்கில் ப்ரஸாதிக்கலாகாதோவென்னத்; தேவிகள் அற்பமாகிலும் இல்லையென்ன; அப்போது தேவிகளை ஒருகார்யத்தில் ஏவிவிட்டு, உள்ளேபுகுந்து சோதித்தருளிப் பழைய ப்ரஸாத மிருக்கக் கண்டு, தேவிகளை யழைத்து, ஒரு வைஷ்ணவர் பசியால் இளைத்துக் காண்கையில் இவ்வளவு ப்ரஸாதங்களை வைத்துக்கொண்டே இல்லையென்னலாமோ? நீ "இடும்பையா லடர்ப்புண்டிடுமினோ துற்றென் றிரந்தவர்க்கில்லையே யென்று, நெடுஞ்சொலால் மறு

உடனே "முடிச்சோதியாயுனது முகச்சோதிமலர்ந்ததுவோ, அடிச்சோதி நீ நின்ற தாமரையா யலர்ந்ததுவோ, படிச்சோதியாடையொடும் பல்கலனாய் நின்பைம்பொற், கடிச்சோதிகலந்ததுவோ திருமாலே கட்டுரையே" என்கிறபடியே யநுபவித்துக்கொண்டிருக்க அவருடைய திவ்யாவயவ ஸௌந்தர்ய சாகரதரங்க பரம்பரைகளிலே ஆக்ருஷ்டரான இவருக்குத் தீர்த்த ப்ரஸாதத்தையும் ஸ்ரீஶடகோபனையும்ப்ரஸாதித்து உமக்கிஷ்டமானபடியே நம்பரிஸரத்திலே வர்த்திக்கவமையுமென்று அர்ச்சகமுகேநவருளிச்செய்யநம்பியும் "அம்மாவடியேன்வேண்டுவதீதே" என்று இசைந்திருந்தார். இப்படி பகவந் நியமனத்தாலும் ஸ்வாபிலாஷையாலும் திருமலையில் வர்த்திக்கும்போது அதிமநோஹரங்களாயும் அதி சீதளங்களாயுமுள்ள திருவருவிபாய்ச்சல்களாலே ஆஶ்ரிதவிஷயத்தில் நிராபாதக

த்த" நீளையிறே? என்று கனக்கச் சீற்றங்கொண்டு, முன்னொரு முறையில் மஹாநுபாவரான திருக்கச்சிநம்பிகளை அவமதித்து நம்மைக் கலங்கப் பண்ணினவளவில் நாம் உனக்கு க்ருத்யாக்ருத்ய விவேகங்களை வேண்டியவரையில் விரித்துரைத்திருந்தும், நீ அவற்றைமறந்து இங்ஙனஞ் செய்திருப்பது அடுக்காது என்று சலித்துக்கொண்டு, அனந்தரம் ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண் டிருந்தார். இப்படி யிருக்கையில் தானே ஒரு தினத்தினளவில் தஞ்சமாம்பாளும் பெரியநம்பிகள் தேவிகளான விஜயாம்பாளும் தீர்த்தங் கொண்டு வருவதாகப் போய்த் தீர்த்தமெடுக்கையில் விஜயாம்பாளுடைய குடத்திலிருந்த தீர்த்தம் தளும்பினதால் அதில் நின்றும் ஒருதுளி தஞ்சமாம்பாள் குடத்தின்மேல்விழ, அதைக்கண்டு தஞ்சமாம்பாள், ப்ரஹச்சரண குலத்தரும் ஆசாரஹீனர்களும் அற்பவித்யா புஞ்சங்களும் ஐசுவர்யத்தில் குறைந்தவர்களு மன்றோ நீங்கள்; எம்முடைய குடத்தினருகே உம்முடைய குடத்தை வைக்க விடங்கொடுத்ததும் அபிமானத்தைப்பற்றி யிருக்குமென் றெண்ணுமலும், அக்ரகுலத்தர்கள் நாங்களென்று மதியாமலும், ஆசார்ய பத்நியென்கிற செருக்கால் இங்ஙனம் செய்வதடுக்குமோ? ஆசார்யத்வம் அகத்திலிருக்கலாம், குலாசாரத்தையுங் கெடுக்கவிருக்குமோ? என்று பலவிதமாய் மனநோகும்படி வாக்வ்ரயஞ்செய்துவிட; விஜயாம்பாள் கண்ணீர் விட்டுக்கொண்டு திருமாளிகைக்கு வருகையில் பெரியநம்பிகள்கண்டு, ஏதுகார்யத்தில் இங்ஙனம் நொந்தாய்? என்றுகேட்க; நடந்ததை விண்ணப்பஞ்செய்ய; நம்பிகள் தமது

மாய் ப்ரவஹியாநின்றுள்ள திருவேங்கடத்தானுடைய ஸாரங்களை வ்ருஜியாநின்றுள்ள திருத்தாழ்வரைகளையுடையதாய்ப் "பெருகுமதவேழம்மாப் பிடிக்கு முன்னின், றிருகணிளமூங்கில்வாங்கி-அருகிருந்த, தேன்கலந்து நீட்டுந் திருவேங்கடங்கண்டீர், வான்கலந்தவண்ணன்வரை" என்று முக்தப்ராயருங்கொண்டாடும்படியான திருமலையினுடையசௌபாக்கியத்தையும் "சங்கினோடும் நேமியோடுந் தாமரைக் கண்களோடுஞ் செங்கனிவாயொன்றினோடும் செல்கின்ற தென்னெஞ்சம்" என்று திருக்குறுங்குடி நின்ற நம்பியினுடைய திவ்யசௌந்தர்யத்தைத் திருக்குருகூரில் திருப்புளியாழ்வாரடியிலே எழுந்தருளியிருந்த நம்மாழ்வாருக்குத் திருக்குறுங்குடி நம்பி சென்று ப்ரத்யக்ஷாத்காரமாக ஸேவைஸாதிக்க ஆழ்வாரும் கண்டு அநுபவித்ததுபோல் திருக்கச்சிநம்பியும் வேங்கடத்துத்தன்னைகந் திருமங்கை தங்கிய சீர் மாயனை திருவேங்கடமுடையான் திவ்யாயுதங்

தேவியாரையே தண்டித்து, இனி இங்கிருப்போமாகில்உன்னால் அடிக்கடி இப்படியே விபரீதங்கள் விளைந்து பாகவதாபசாரத்திற் குள்ளாக வேண்டிவரும் என்றருளிச்செய்து, இளையாழ்வார் இச்செய்தியை அறிவதற்குமுன்னமே நாம் கோயிலுக்குப் போய்விடுவது உத்தமம் புறப்படாய் என்று தத்க்ஷணமே தேவிகளைக் கூட்டிக்கொண்டு கோயிலுக் கெழுந்தருளிவிட்டார்.

ஸ்ரீ இளையாழ்வார் வைபவம் (தொடர்ச்சி).

அனந்தரம் இளையாழ்வார் திருமாளிகைக்கு வந்து நித்யாநுஷ்டானத்தை முடித்துக் கொண்டு வழக்கப்படி தண்டன் ஸமர்ப்பிக்கப் பெரியநம்பிகளெழுந்தருளியிருந்த மேற்பாதிதிரு மாளிகைக்குள்போய் அவரைக் காணமல்தேடி விசாரிக்கையில் அங்கே வர்த்திக்கிறவர்கள், பத்நீஸஹிதராய்க் கோயிலுக்கெழுந்தருளிவிட்டாரென்ன; இவர் ஆச்சர்யமடைந்து, அவர் நமக்கருளிச் செய்யாமல் எழுந்தருளி விடுகைக்கு ஹேது வென்னென்று கேட்டருளத்; தீர்த்தத் துறையில் மதினியாருக்கும் மதினியாருக்கும் ஒரு தோண்டியடியாக சண்டையானவாறே, அவர் தம்முடைய தேவியார்மீது கோபித்துக்கொண்டு பாகவதாபசாரத்திற்கு இறுய்த்து அப்போதே எழுந்தருளிவிட்டாரென்ன; இவர் அதனை ஸவிஸ்தாரமாகக் கேட்டுத் தஞ்சமாம் பாளைப் பார்த்துஅதிகுபிதராய்ப் "பாபநாமாகரஸ்ஸ்த்ரியः"என்கிறபடி ஸ்த்ரீகளே தோஷப்ராப்திக்கு ஆதாரமென்று சாஸ்த்ரஞ் சொல்லியிருப்பதை ஸ்பஷ்டமாக்கினையே! நீ முன்பே திருக்கச்சிநம்பி விஷயத்திலும் அபசாரப்பட் டிருப்பது நிறம்பெற

களையும்திவ்யாபரணங்களையும் திவ்யாவயவங்களையுங்கண்டுபெஹு-ப்ரகாரமாக வநுபவித்துக்கொண்டு போராநிற்கிற விவர் த்ரஷ்டவ்ய ஶ்ரோதவ்ய ஜ்ஞாதவ்யங்களை மறந்து கதங்களானவஹோராத்ரங்களையுமறியாதே இருந்து அவ்விடத்தில்யாகோத்பவரான தேப்பெருமாளுக்குத் திருவாலவட்டம் வீசுகிறதுபோலே யிவ்விடத்தில் திருவேங்கடமுடையானுக்கும் திருவாலவட்டம்ஸேவிக்கத், திருவேங்கடமுடையானும் நாம் குளிரருவி வேங்கடத்தின் கோவிந்தனன்றே, அஹோராத்ரமும் மிளகோரையும் மிளகுகஷாயமும் அமுதுசெய்து சீதள உபசாந்தமாகப் பச்சைக் கற்பூரத்தையெப்போதும் விடாமல் சாத்திக்கொண்டிருக்கிற நமக்குச் சீதோபசாரம் ஏதுக்கு? உத்தரவேதியிலேஹோமகுண்டத்தில் அவதரித்தோமே அவ்விடத்தில் இஷ்டமா யிருக்குமாகையால் அவ்விடத்துக்குப்போய்த் திருவாலவட்டஞ்சுழற்றிப் பரிமாறுமென்று நியமித்தருளினன்.

வில்லையென்றோ! இப்போது நமக்குஆத்மேஶ்வரரான ஆசார்யன் பத்னிகளிடத்தும் பிணங்கி மனம்நோகச்செய்து அசஹ்யாப சாரம் ஏற்றுக்கொண்டனே? என்றருளிச்செய்து சிந்தாக்ராந்தராய், இப்படி அதிதிசத்கார யோக்யதை யன்றிக்கே யிருந்துள்ள இவளுக்கும் நமக்கும் க்ருஹதர்மம் பொருந்தாதே! இவளை விட்டகல்வதற்கு விரகுண்டோவென்று தம்மில்தாமே யோசித்துக்கொண்டிருந்து அன்றுதொடங்கித் தஞ்சமாம்பாளிடத்தில் வார்த்தையாடுவதைத் தவிர்ந்திருந்தார்; இப்படியிருக்கையில் ஒருநாளிரவில்! இவர் அருளாளன் சன்னிதியில் கைங்கர்யத்திலீடுபட்டிருக்குஞ் சமயத்தில் ஒரு தேசாந்த்ரிவந்து பசியால் நலிகின்றேனென்று விண்ணப்பஞ்செய்ய; இவர் அவரைக்கடாக்ஷித்துப் பெருமாளுக்கு ப்ரஸாதங் கண்டருளப் பண்ணுவதற்குக் கொஞ்சம்போது கொள்ளும் ஆகையாலே நீர் 'அகத்துக்குப் போய் நாம் சொன்னதாகச்சொல்லி ப்ரஸாதம் பரிமாறக் கேளு மென் றனுப்பிவைக்க; அந்த ஸ்ரீவைஷ்ணவர் திருமாளிகைக்கு வந்து தஞ்சமாம்பாளைக் கண்டு, இளையாழ்வார் இங்ஙனம் நியமித் தருளினாரென்று விண்ணப்பஞ்செய்து ப்ரஸாதம் பரிமாற வேண்டுமென்று கேட்கத்; தஞ்சமாம்பாள் கிஞ்சிற்றேனு மில்லையே! என்று அபோஹஞ்சொல்லி அவரைத் திருப்பிவிட்டு, அந்தச்சமயத்தில் தன்னுடைய தம்பியாருடைய திருக்கல்யாண அறிக்கைஓலை கொண்டுவந்திருந்த பந்துக்களுக்கு இஷ்டான்னம் பரிமாறிக்கொண்டிருக்க; அந்தத்தேசாந்த்ரி சன்னிதிக் கெழுந்தருளி ஸ்வாமீ! திருமாளிகைக்குப்போய்த் தேவரீருடைய நிய

நம்பியும் ஹ்ருஷ்டராய் "ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி" என்று தொடங்கி ஆழ்வார்கள் பாசுரங்களை விண்ணப்பம்செய்து நிற்கத், திருவேங்கடமுடையானும் நம்பிக்குத்தீர்த்தம் ஸ்ரீஶடகோபன்முதலான வரிசைகளையும்ப்ரசாதிக்க நம்பியும் அவ்விடத்தினின்றும்புறப்படுகிற சமயத்திலே பேரருளாளரும் நம்பியைப் பிரிந்திருக்க மாட்டாதே அவரையழைத்துக்கொண்டு வரவேண்டுமென்கிற திருவுள்ளத்தையுடையராய்த் திருமலையேற வெழுந்தருளி நம்பி முன்னேநிற்க, நம்பியும்கண்டு துணுக்கிட்டெழுந்திருந்து ப்ரதக்ஷிண ப்ரணாமாதிகளைப் பண்ணி ஸவிநயராய் நிற்கப் பேரருளாளரும் முன்பு நாம் ஜானகியைப் பிரிந்து பட்டதெல்லா மிப்போ தும்மைப் பிரிந்து பட்டோங்காணும்; இறையு மகலகில்லேன் காணும் என்ன, நம்பியும் திருவேங்கட முடையானுடைய திருமுகமண்டலத்தை ஸேவிக்க அவரும் விடையளித்தருள, ஹ்ருஷ்டராய்ப் பர்த்ரு

மனத்தை விண்ணப்பஞ் செய்கையில், தேவிகள் கிஞ்சிற்றேனும் ப்ரஸாத மில்லையென்று முகங்கொடாமல் வார்த்தைசொன்னார்; ஆகிலும் அனந்தரம் உள்ளே சிலர் அமிசித்துக்கொண் டிருந்த அரவம் அடியேனுக்கு அகப்படுகையில்,அதில் ஐயங்கொள்கிறேனென்று விண்ணப்பஞ் செய்ய; இவர் அவரைக் கூட்டிக்கொண்டு திருமாளிகைக் கெழுந்தருளிப் பார்க்கையில் அவர்சொன்ன துண்மையாய்க் காணத்; தேவிகளை அழைத்து நாம் ஒரு ஸ்ரீவைஷ்ணவரை இப்போது கொஞ்ச நேரத்திற்கு முன்பு அனுப்பி வைத்தோமே, அவருக்கு ப்ரஸாதம் பரிமாறினையோ வென்று கேட்டருளத்; தஞ்சமாம்பாள் கிஞ்சித் ப்ரஸாதமேயிருப்பது, ஆகையால் கொஞ்சநேரம் எழுந்தருளியிருந்தால் செய்து பரிமாறுகிறேனென்று விண்ணப்பஞ்செய்கையில் அவர்தாமே அடியேன்பேரில் கோபித்துக்கொண் டெழுந்தருளிவிட்டாரென்று விண்ணப்பஞ்செய்ய; இவர் கோபமும் ஆச்சர்யமும் கொண்டு, நல்லது திருக்கல்யாண ஓலைகொண்டு வந்தவர்களையனுப்பினோமே அவர்களையாவது நன்றாக உபசரித்தாயோ இல்லையோவென்று கேட்கக், குறைவற உபசரித்திருக்கிறேனென்ன, அதைக்கேட்டு இந்தச்சமயமே இவளைவிட்டுவிலக அநுகூலிக்குமென்று உள்ளுக்குள்ளே எண்ணிக்கொண்டு தஞ்சமாம்பாள் மேலுண்டானகோபத்தையும் வெளிக்குக்காட்டாமல், நல்வார்த்தையாடித், திருக்கல்யாணத்திற்காக, நீபிறந்த அகத்துக்குப் போகவேண்டியதில்லையோ வென்றுகேட்கப்; போகவேவேண்டுமென்று தஞ்சமாம்பாள சொல்ல; நல்லது இற்றைப்பொழுது நல்லமுஹூர்த்தமாகக்காண்கையால் உன்னுடைய சர்

க்ருஹத்தினின்று மாத்ருக்ருஹத்துக்குவரும்பாலவதுபோலேபேரருளாளர்பின்சென்றார். பின்பு திருக்கச்சியிலேசேர்ந்து பேரருளாளரைநோக்கித் தேவரீருடையதிருவடிகளில்அநுகூலவ்ருத்திகளைப் பண்ணவேண்டுமென்றன்றோஅடியிலே கரசரணாதிகளைப்ரஸாதித்தருளியது. ஆகையால் தேவரீரே கைங்கர்யத்தை நியமித்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்யப், பெருமாளும் இன்றுமக்குசசொல்ல வேண்டுவதென்ன, அடிதொடங்கிப்பண்ணினகைங்கர்யத்தையேநடத்திக்கொண்டுவாருமென்ன இவருமதையிடைவிடாமல்செய்துகொண்டுபோராநிற்க, ஒருவர்ஷாகாலத்தில் க்ருஷ்ணபக்ஷராத்ரியிலே பெருமாள் திருமுன்பேநின்று திருவாலவட்டம் ஸேவித்துக்கொண்டு நிற்கிற நம்பி தாபத்ரயாபிபூதனாய் ஸம்ஸாரத்திலே நிர்விண்ணனாய் முமுக்ஷுதையை ஜநித்திருக்கும் சேதனனுக்கு ஜ்ஞாதவ்யங்களான அர்த்தவிசேஷங்களை அடியேனுக்கு ப்ரசாதித்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்கப், பேரருளாளரும் அர்த்தபஞ்சகங்களை அருளிச்செய்தார்.

வாபரணங்களையும் வஸ்த்ரம் முதலானவற்றையும் எடுத்துக் கொண்டு நாம்கொடுக்கும் த்ரவ்யங்களையும் பத்ரமாய்க்கொண்டு போய் வைத்திருந்து முஹூர்த்தத்திற்காகவேண்டிய ப்ரயத்னங்களை நீ அருகிலிருந்துசெய்துவைத்தால் நாம் அந்தச்சமயத்தில்வந்து ஒத்துக்கொள்வோமென்று சாதித்து விடைகொடுத்து வழிகூட்டி யனுப்பிவிட்டு, மற்றைநாள் காலையில் 'அநந்தஸரஸி ஸ்நாத்வா விமாநச் சாயயாந்விதே - விமுக்தஸ்ஸர்வ பாபேப்யோ விஷ்ணுலோகம் ஸமச்சதி" என்கிறபடி ஸ்நான மாத்ரத்தாலே ஸர்வ பாபங்களினின்றும் விடுவித்துப், பரமபதத்தைத் தருமதான புண்யகோடிவிமானச் சாயையோடுகூடிய திருவனந்தஸரஸின் ஜ்ஞானஸ்வரூபமான தீர்த்தத்தில் நன்றாகத் தீர்த்தமாடி இதரவிஷயவாஸனைகளற்றுப், பேரருளாளனையே உபாயமாக வடையவேண்டிய தென்கிறபடியே, நீராடி "ஸம்யங்நாமாஹ்வயே தீர்த்தே விமாஹ்யமதகில்பிஷ: - நிரஸ்தேதர போமா ஸோவரதம் ஸரணங்கத:" என்கிறபடி சன்யாசியையும் பெருமாளையும் ஆசார்யனாக அங்கீகரிக்கக்கடவதென்கிற க்ரமத்திலே "தொழுதெழுதொண்டர்கள்தமக்குப் பிணியொழித்தமரர்பெருவிசும்பருளும் பேரருளாளன்" சந்நிதியில்நின்று "தாயேதந்தையென்றும் தாரமேகிளை மக்களென்றும் நோயேபட் டொழிந்தேன்" என்றுபமவத் பாமவதாசார்ய அனுவர்த்தனத்துக்கு விலக்கடியான ஸம்ஸாரபந்தத்தை அடியேன் இனிவேண்டுவதில்லைத், தேவரீரை ஆசார்யனாக வடைந்து, ஸன்யஸித்துத் தேவரீர் திருவடித்தாமரைகளில் சேவையே வேண்டுகின்றேனாகையாலே "த்ரிதண்டம்வைஷ்ணவம் லிங்கம் விப்ராணும்முக்தி

பின்பு நம்பியைப்பார்த்து மத்ய ராத்திரியாயிற்று மடமேறப்போய் வாருமென்று நியமித்தருள, நம்பியும் வெளியிலே வந்துபார்த்து மழை பொழிகையாலே தம்மநுசரனை பேரருளாளனைக் குடைகொண்டுவா வென்ன, அப்போது அவன் ஒரு மூலையிலே நித்ராபரவஸனாயிருக்கப் பெருமாள்தாமே"சென்றாற்குடையா"மென்கிறதிருவனந்தாழ்வானையே குடையாகவெடுத்துக்கொண்டுவாரீரென்று மடமளவும்சென்றுமறைந்து போகநம்பியும்விஸ்மிதரானர். பின்பொருநாள்பெருமாள்உச்சிகாலத்தில் அமுதுசெய்துவிஸ்ரமித்தருளுகிறவளவிலே நம்பியும்மடமேறவெழுந்தருளுவதாகப் புறப்பட்டுத் திருவீதியிலே சென்றவிடத்திலே ஸூர்யனும் ஔஷ்ண்யத்தையுடைய கிரணங்களாலே பூமியை தபிப்பிக்கையாலே தரையிலேநடக்கமாட்டாதே பாதுகைகளை இடுக்கிக்கொள்ள அவையும்

ஸாதநம் நிர்மாணம் ஸர்வதர்மாணு மிதிவேதாநு ஶாஸநம்” என்கிறபடி விஷ்ணு ஸம்பந்தத்தைக் காட்டும் குறியானது த்ரிதண்டமென்றும், ப்ரமக்ஞானிகளுக்கு அதுவே முக்திசாதகமாமென்றும், உத்க்ருஷ்டதர்மத்தைக்கொடுப்பதென்றும் வேதாந்தங்களில் நிச்சயித்திருக்கிறபடியே, அடியேனுக்கு த்ரிதண்டகாஷாய வஸ்த்ரங்களை ப்ரஸாதித்தருள வேண்டுமென்று பேரருளாளனை ஆசார்யத்வேன அங்கீகரித்து விண்ணப்பஞ்செய்ய அருளாளனும் இவரை மிகவும் உவந்து “த்ரிதண்ட முபவீதஞ்ச வாஸஃ கௌபீநவேஷ்டநம் - சிக்யங்கவச மித்யேதத் பிப்ருயாத்யாவதாயுஷம்” என்கிறபடி எதியானவன் முக்கோலும் யக்ஞோபவீதமும் கௌபீனமும் உரியும் கவசமுமான இவற்றைத் தன் வயதளவாகத் தரிக்கக்கடவன் என்கிறபடியே, த்ரிதண்டகாஷாயாதிகளை ப்ரஸாதித்து இராமாநுஜமுனி யென்று திருநாமஞ்சாற்றித், திருக்கச்சிநம்பியை நோக்கி, நம் இராமாநுஜனை மடத்திலேவைத்து வாருமென்றருளிச் செய்ய, அவரும் அப்படியே உபலாளித்துக்கொண்டுபோய் மடத்திலேவைத் தெழுந்தருளினார்.

அதன்பின்பு இராமாநுஜர் ஆசிரமத்தை விமரிசையாய் நடத்திக் கொண்டுவரா நிற்கையில் ஒருநாள், தம்முடைய பூர்வோத்தரதசைகளை நினைத்தருளி, நமக்கு ஸ்ரீ ஆளவந்தார் விசேஷகடாக்ஷம் பண்ணினதற்கு ஈடாக, விரோதிகள்கழிந்து ஆநு

அத்யுஷ்ணமாய்த் துஸ்ஸகமானபடியினாலேநம்பியுந்தளரப், பெருமாளும் அந்தவெதுப்பையடக்க, நம்பியும் மடத்திலேயெழுந்தருளித் தம்முடைய பாதுகையைப்பார்க்க அந்தப்பாதுகை கூர்மாரூபமாகத்தோற்ற, ஸ்வதந்த்ரனுடைய வ்யாபார மிருந்தபடியைக்கண்டு இதென்ன நீர்மைதானென்று நினைத்து விஸ்மிதரானார்.

பின்பொருநாள்ராத்ரி நம்பி திருவாலவட்டம் ஸமர்ப்பிக்கும்போது பேரருளாளர நம்பியை நோக்கி “நம்பீ உம்முடைய ஜன்ம பூமியான பூவிருந்தவல்லிக்கு நீர்முன்னதாகப்போய் ஒருநாள் அவ்விடத்திலிரும் நாம் வருகிறோம்” என்ன, ‘தந்யோஸ்மி’ என்று நம்பி விடைகொண்டு பூவிருந்தவல்லிக்கெழுந்தருள அவ்வூரார் திரண்டு எதிர்கொண்டு வந்துநம்பியைத் தண்டன்ஸமர்ப்பித்து ஆஹ்வானம்செய்து எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போனார்கள். அன்று ராத்ரி கோயில் திருமலை பெருமாள்கோயில் ஆகிய மூன்று திவ்யதேசத் தெம்பெருமான்களும் எழுந்

கூல்யம் கூடாநின்றதன்றே! ஆகையால் அவர் திருவுள்ளக் கருத்தை நிறைவேற்றும் பொருட்டு நமக்கொரு சஹாயம் உண்டாகவேண்டுமே யென்று விசாரமுண்டாய்த் தமக்கு ஹிதப்ரவர்த்தகராயிருந்த கோவிந்தபட்டரை நினைத்து, ஸர்வ விஷய விரக்தரும் சாஸ்த்ர வைதக்த்ய முள்ளவருமான அவரை நம்மோடு சேர்ப்பாருண்டாகில் நலமாயிருக்கும்; அப்படி செய்கைக்கு அவர் இப்போது தேவதாந்தர பரரா யிருக்கையால் அவ்வுள்ளங்கை கொணர்ந்த விடத்திற் சுருள் நாற்றத்தை எழுப்பி "ஸர்வ கந்தஸ் ஸர்வரஸஃ" என்னு மவனுடைய ஸௌகந்த்யத்தைக் காட்டி மீட்கும் விரகர் ஆராவாரென்று சிந்தித்து,

---

தருளி நம்பிக்கு ப்ரத்யக்ஷமாய் ஸேவைஸாதித்து, அவ்வூரார்க்கெல்லாம் ஸ்வப்நத்திலே ஸேவை சாதித்து நம்பிக்காக நாங்களிங்கே வாசஞ்செய்யத் திருவுள்ளமாயிருப்பதால் நீங்கள் எங்கள் மூன்று திருநாமங்களையும் அர்ச்சாரூபமாக ப்ரதிஷ்டைசெய்து, நம்பியையும் அர்ச்சாரூபியாக ப்ரதிஷ்டியுங்களென்று நியமித்து, நம்பியை உத்தரவேதிக்கு அதித்வரையில் வரும்படி நியமித்து எழுந்தருளினார்கள். ஊராரெல்லாரும் உதயத்தி லெழுந்திருந்து நம்பியிடத்துக்குவந்து ஸ்வப்ந வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ்செய்ய நம்பியும் ஸ்வாமி திருவுள்ள ப்ரகாரமே யாகக் கடவதென்ன; அவர்களும் அடியோங்களுக்கு நியமித்த கைங்கர்யம் நிர்விக்னமாக நடந்து தலைக்கட்டும்படி தேவரீர்கள் க்ருபைசெய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்க; நம்பியும் அகடிதகடனா ஸாமர்த்யமுள்ள எம்பெருமான்கள் நியமித்த கைங்கர்யம் குறைவற நிறைவேறும் என்று அநுக்ரஹித்துத் தாமும் த்யாக மண்டபத்துக்கு எழுந்தருளினார். அவர்களும் ஸந்நிதிகட்டிக் கோயில் திருமலை பெருமாள்கோவில் எம்பெருமான்களையும் நம்பியையும் திருப்ரதிஷ்டைபண்ணித் திவ்யோத்ஸவங் கண்டருளப் பண்ணினார்கள். நம்பியும்சென்று ஒருராத்ரி ஜ்ஞாநாதிகரு மீடுபெடும்படியான திவ்ய ஸௌந்தர்யத்தையுடைய பேரருளாளர் திருமுகமண்டலத்தை இமைகொட்டாது ஸேவித்துக் கொண்டிருக்கும்போது ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலே நம்பிகள் சற்றே கண்ணுறங்கத் திருக்கையில் திருவாலவட்டம் நெகிழ, நம்பியும் துணுக்கிட்டுப் பகவத் கைங்கர்யத்துக்கு ப்ரதிபந்தகமான இந்த ப்ரக்ருதிபந்தத்தைக் கழித்தருள வேண்டுமென்று பெருமாள் ஸந்நிதியில் விண்ணப்பஞ்செய்ய; பெருமாளும் நம்பீ! நீர் நிர்ப்பரராயிருமென்றருளிச்செய்யப், "பச்சைமாமலைபோன் மேனி பவளவாய் கமலச் செங்கண், அச்சுதா வமரரேறே யாயர்தங் கொழுந்தே யென்னும், இச்சுவை தவிர யான்போ யிந்திர லோகமாளும், அச்சுவை பெறினும் வேண்டே னரங்கமா நகருளானே"

விசேஷ ஆத்மகுணங்களை யுடையராய் வேதவேதாந்த விதக்ரேசராய், வகுளாபரண ப்ரபந்தமுகுளா மோதித சித்தராய்த் "திலதமுலகுக் காய்கின்ற திருவேங்கடத் தெம்பெருமானை" அனவரதபாவனை பண்ணிக்கொண்டு அப்பெருமானால் பிதாமஹரே! என்றழைக்கப்பட்ட புண்ய சீலரான தாதா தேசிகரென்கிற பெரிய திருமலைநம்பி ஒருவரே இக்கார்யத்துக்குக் கடவரென்று நிச்சயித்து, ஒரு அநுகூலமான ஸ்ரீவைஷ்ணவரையழைத்து [அடியேனுடன் பூர்வம் ஸஹாத்யாயியாய் அநுகூலித்

என்று பெருமாள் திருமேனியி லீடுபட்ட தொண்டரடிப்பொடியாழ்வார் நிலையாகத் திருக்கச்சிநம்பியும் தேப்பெருமாளுடைய திருமேனியழகி லீடுபட்டுக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

பின்பொருநாள் நம்பியுடைய ஆத்மகுண பூர்த்தியையும் அவருடைய திருமேனித் தளர்ச்சியையுங் கடாக்ஷித்துப் பேரருளாளர் நம்பீ! உம்முடைய பாஞ்ச பூதிக தேஹம் மிகவும் தளர்ந்திருப்பதாலும் நாமுமைப் பிரிந்து தரிக்கமாட்டாமையாலும் இன்னுஞ் சில ஆயுஸு உமக்குத்தருகிறோம் விபீஷணாழ்வானுக்குக் கொடுத்ததுபோல,அப்போது உமக்குத் தேஹத்தில் த்ருடம்வரும்என்றுஅருளிச்செய்ய;நம்பியும் நடுநங்கி "வெள்ளத்திடைப்பட்ட நரியினம்போலே, யுள்ளந் துளங்காநிற்பனூழிமுதல்வா", "இடையு|னெறிந்த மரமே யொத்திராமே, யடையவருளா யெனக்குன்றனருளே" என்கிறபடியே பரமபக்தி தலையெடுத்து வரதராஜாஷ்டகமென்கிற ஸ்தோத்ரத்தை விண்ணப்பஞ்செய்து பேரருளாளர் திருவடிகளிலே தீர்க்க சரணாகதிபண்ணி யெழுந்திராமலிருக்கப் பெருமாளும் நம்பீ! நீரஞ்சவேண்டாம் உம்முடைய மநோரதப்படியே ஆகிறது எழுந்திரும் என்று முடிபிடித் தெடுத்துத் தீர்த்த ப்ரசாதம் ஸ்ரீஶடகோபன் முதலான வரிசைகளையும் ப்ரஸாதித்து நீர் மடமேறப் போயிருமென்று விடைகொடுத்தருள; நம்பியும் ப்ரக்ருதி ஸம்பந்த மறந்து தேஶ விசேஷ ப்ராப்தி யணித்தானவாறே சிறைகூடத்திலிருந்த ராஜகுமாரன் முடிசூட வருமாபோலே பெரிய ப்ரீதியோடே மடத்திலேஎழுந்தருளி க்ருதக்ருத்யராகையாலே தேஹவியோகத்தை யாசைப்பட்டுக்கொண்டு பெருமாளுடைய ஶௌஸீல்யத்தை அநுபவியாநிற்க: அத்திவ்ய நகரத்திலுள்ள விலக்ஷணர்க ளெல்லாரும் அச்செய்தியைக்கேட்டு இவருடைய அந்திமதஶையைஸேவிக்கவேண்டுமென்கிற அபிலாஷையினாலே திரளாகவந்தார்கள். நம்பியும் இவர்களை யதோசிதமாக ஸகபாவனைபண்ணித் தேவரீர்கள் பொருளல்லாதவென்னைப் பொருளாக்கி இத்தஶையிலே யிவ்வளவாக வெழுந்தருளுவதேயென்று விண்ணப்பஞ்செய்தார். அவர்களுந் தேவரீ ரிப்படி யருளிச்செய்யலாமோ பெருமாளுமுட்பட தேவரீரிடத்திலே குடிபுகுந்திருக்

திருந்த தேவரீருடைய மருமகனை வட்டமணி கோவிந்தபட்டன்,* துர்வாசனுதிசயத்தாலே அந்யபரனுய்க் காளஹஸ்தியான் கடுங்காட்டிலேநில்லாநின்முன்; ஆகையால் தேவரீர் அடியேனுக்காக அவனிடத்தே நிர்ஹேதுக க்ருபைபண்ணி ஆட்கொண்டருள வேண்டுமென்று விண்ணப்ப மெழுதிக்கொடுத்து] அவர் சன்னிதிக்குப் போகவிட்டார்.

கிற திருவுள்ளத்தை யுடையராயிருக்க, இஃதாச்சர்யமோவென்று விண்ணப்பஞ் செய்தார்கள். நம்பியும் அவர்களைக்குறித்து இப்படி பெருமாள் அடியேனிடத்தில் க்ருபை பண்ணுகைக்கு நிதானம் ஸ்ரீஆளவந்தாருடைய கடாக்ஷ விசேஷங் காணுமென்று அருளிச்செய்து ஸ்ரீஆளவந்தார் திருவடிகளை த்யாநியா நின்றுகொண்டு நிமீலிதாக்ஷரானுர்.

திருக்கச்சிநம்பிகள் ப்ரபாவம் முற்றிற்று.

திருக்கச்சிநம்பிகள் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

முதலியாண்டானும் கூரத்தாழ்வானும் இராமாநுஜர் திருவடிகளில் ஆசிரயித்தது.

இவர் இப்படி ஆஶ்ரமப்ராப்தி பண்ணி எழுந்தருளி யிருக்கையில் இவருக்குப் பாகிநேயரான கந்தாடை முதலியாண்டானும் கூரத்துக் கதிபதியாயிருந்த ஹாரீதகுல கோத்ரராகிய † திருமறு மார்பனென்னும் கூரத்தாழ்வானும் இவரை அதி ப்ரீதியோடே சேவித்து அடியோங்களுக்குப் பஞ்ச ஸமஸ்காராதிகளை ப்ரஸாதித்து க்ருதார்த்தர்களாக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்க; இவர்திருவுள்ளமுகந்து அவர்கள் ப்ரார்த்தித்தபடியே செய்தருள; அவர்கள் க்ருதார்த்தர்களாய், "அதீத்யமந்த்ர மாசார்யம் பூஜயேச் சக்திதோத்விஜஃ- ஆசார்யாதீநவ்ருத் திஸ்து யாவஜ் ஜீவம் ஸதாஶுசிஃ" என்கிறபடியே (திருமந்த்ரத்தை அத்யயனஞ்செய்து ஆசார்யனைப் பக்தியுடன் ஆராதித்து ஸர்வகாலமும் பரிசுத்தமான மனஸ்ஸை யுடையவனாய் ஆசார்யனிட்ட வழக்காய் எப்பொழுதுஞ் ஜீவிக்கக் கடவன் என்கிறபடியே) ஸர்வாசார்யரான இராமாநுஜரை ஒருகாலும் பிரியாமல் தத்கைங்கர்ய ரஸராய்ச் சேவித்திருந்தார்கள்.

யாதவப்ரகாசன் த்ரிதண்ட சன்யாசியானது.

பின்பு யாதவப்ரகாசனுடைய தாயாருக்குப் பலகாலும் பேரருளாளனுடைய சேவையும் திருக்கச்சிநம்பியின் பார்வையும் இராமாநுஜரிடத்தில் ப்ரேமசம்பாஷணமும் நடவாநிற்க, அவளுக்கு அதுவே நிதானமாகத் தர்சனத்தில் ஊற்றம்பிறந்து, ஒருநாள் இத்தர்சனத்தில் நம்முடைய யாதவனும் இறங்கினால் நலமாகாதோ! என்று நினைத்து வையமாளிகைப்படி யேறாநிற்க;

---

† ஸ்ரீகூரத்தாழ்வானுடைய பூர்வ விருத்தாந்தம்:—

இவர் பெருமாள் கோவிலுக்கடுத்த திருக்கூரமென்கிற நகரத்துக்கு அதிபதியாகி அரசு செலுத்திக்கொண்டிருந்த ஹாரீத கோத்ரம் எஜுச் சாகை ஆபஸ்தம்ப ஸூத்ரத்தையுடைய நந்தர் என்கிற வடம ப்ராஹ்மணருக்கும் அவர் பத்நியாகிய பெருந்தேவி நாயகி யம்மையாருக்கும் புத்ரராக அவதரித்துத் திருமறுமார்பன் என்னும் அபிதானம்பெற்று ஸகல சாஸ்த்ரங்களிலும் மஹா நிபுணராய் வர்த்திக்கும் நாளையில், பிதாவானவர் இவருக்குத் திருக்கல்யாணஞ் செய்வதாக எத்தனிக்க, அதை நிராகரித்து ப்ரம்ஹசரிய வ்ரதியாய் அதிதி அப்யாகதர்களைச் சத்கரித்து அன

அப்போது "நல்லது - நல்லது" என்று கிம்வதந்தியுண்டாக; அவளதைக்கேட்டு அதி சந்தோஷத்துடனே யாதவப்ரகாசன் பக்கல்சென்று இச்செய்தியைச் சொல்லி, அப்பனே? நீயும் இராமாநுஜரைப் போலே சிகாயக்ஞோபவீத பூர்வகமாக விலக்ஷணாய் த்ரிதண்டத்தைத் தரித்துக்கொள்ளவேண்டுமென்ன; அவனுக்கு அப்பொழுது ஸ்வாபிமானத்தாலே அர்த்தஞ்சொல்லுகையொழிந்து பாரமார்த்திகதயா ஸ்வாபிமத அர்த்தத்தில் அருசி தோன்றி நிற்கையாலும், இராமாநுஜர் அந்நாளில் ப்ரிதியோகித்வேன சொல்லியிருந்த அர்த்தங்கள் அவன் நெஞ்சிலே புண்பட்டு நிற்கையாலும், இராமாநுஜர் மஹாத்மியங்களை ப்ரஹ்மரக்ஷஸ்ஸு சொல்லி யிருக்கையாலும், கங்காயாத்ரையில் வ்யாத ரூபேணவந்த ராம ஸாக்ஷாத்கார சஹாயமிருந்ததாலும், மாத்ரு வாக்யத்தை மறுக்கப்போகாதென்று தோன்றுகையாலும், அவள் சொன்னதற்குச் சம்மதித்து, அம்மணீ! த்ரிதண்டதாரணம் பண்ணுமிடத்தில் நான் இப்போது சிகாயக்ஞோபவீதத்யாகம்பண்ணியிருக்கையாலே இதற்கு ப்ராயச்சித்தமாகப் பூப்ரதக்ஷிணம் செய்யவேண்டியதாகுமே! செய்துவரலாமென்னில் அது வயோவ்ருத்தனான என்னால் இனிசெய்துமுடியுமோ! ஆகையால் இப்படி அசக்தனாயிருக்கிற நான் இனிசெய்ய வேண்டுவதைத் தெரிந்துசொல்லாயென்று கேட்டுக் கலங்கியிருந்தான். அன்றிரவில் பேரருளாளனே அவன் ஸ்வப்னத்தி லெழுந்தருளி யாதவா? நீ நம்முடைய இராமாநுஜனைச் சமீபத்தி லிருக்கப் பெற்றும் பூப்ரதக்ஷிணம் பண்ணவேண்டியதென்று சிந்திப்ப

வரதம் அருளாளன் திருவடிகளில் அந்தரங்க பக்தியாயிருக்கும் திருக்கச்சிநம்பிகளின் அபிமானத்தைப் பெற்று நாளுக்குநாள் ஜ்ஞாநாதிகராகிப் போருகையில், இவருடைய பிதா இவருக்கு இராஜ்யாபிஷேகஞ் செய்துவைத்துத், தாம் திருமலையை யடைந்து உஜ்ஜீவிக்கவிரும்பிப், பத்நீசஹிதராய்ப் புறப்பட்டுப் போய்விட; அனந்தரம், இவர் சிம்மாசனமேறிச் சிறியதைப் பெரியது நலியாதபடி நியதி தவறாமல் இராஜ்யபரிபாலனஞ் செய்துப் போந்தார்.

ஒருநாள், நள்ளிருளில் மத்யராத்ரியில் நகர்சோதனார்த்தமாகத் தன்னந்தனியே எழுந்தருளி வீதிகள்தோறும் புக; அக்ரஹாரவீதியில் ஒரு க்ருஹத்தில் தலைவாசற்கதவைத் தாளிட்டுக்கொண்டு ஒரு அறைக்குள்ளே நாலிரண்டுபேர் சேர்ந்து பேசத்தொடங்க; இவர் அவ்வரவங் கேட்டுச், சுவர்ப்புறத்திலிருந்து செவிகொடுத்து நிற்கையில்; அவர்களில், ஒரு ப்ராஹ்மணனுக்கு ஒரு பெண்குழந்தை யுண்டாக, அதற்கு

தேன்! இதுவோ உன்ஜ்ஞான மிருந்தபடி! நம் மிராமாநுஜனை ஒரு ப்ரதக்ஷிணம் செய்து உன்னுடைய ஸகல தோஷங்களையும் போக்கிக்கொண்டு த்ரிதண்ட காஷாயங்களைப் பெற்றுச் சிகாய க்ஞோபவீதந்தரித்துச் சன்யசிக்கப்பாராய்! என்றருளிச்செய்ய; அவன் அந்த ஸ்வப்நத்தை விசுவசியாமல், திருக்கச்சிநம்பியிடம் போய் என்னுடைய நினைவிலொன்று கொண்டேன் அதனை நீர் அருளாளன் றிருவடியில் விண்ணப்பஞ்செய்து அவர் திருவுள்ளத்தை எனக்கு ப்ரஸாதிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க; அவரும் அன்றிரவில் பெருமாளைச் சேவித்து விடைகொள்ளுந் தறுவாயில், யாதவப்ரகாசன் ஒரு நினைவுகொண் டிருப்பதாகச் சொன்னனென்று விண்ணப்பஞ்செய்ய; அவனுடைய தாய் நம் மிராமாநுஜனைப்போலவே அவனையும் த்ரிதண்டத்திலே சன்யசிக்கும்படிசொல்ல; அதற்குத் தான் பூப்ரதக்ஷிணம் பண்ணவேண்டுமென்றுபார்த்து அசக்தனாய்ச் சிந்தித்துக்கிடக்க; நாம் அதுகண்டு அவன் ஸ்வப்நத்திலேபோய் நம்மிராமாநுஜனை ஒரு ப்ரதக்ஷிணம்செய்து க்ருதார்த்தனாய்ச் சன்யாசிக்கச் சொல்லி வந்திருக்க; அவன் அதைவிசுவசியாமல் உம்மை யிடுவித்துக் கேட்கிறான் கிடீரென்று அருளாளன் அருளிச்செய்ய; நம்பியார் விடிவோரையில் இச்செய்தியை அவனுக்கருளிச்செய்ய; அவன் விசுவசித்து அப்பொழுதே த்வரித்துவந்து இராமாநுஜர் திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்து ப்ரதக்ஷிணம்பண்ணி எதிரில் நின்று அடியேனுக்கு த்ரிதண்டதாரணம் பண்ணுவித்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்தான்.

ஜ்யோதிஷர்களைக்கொண்டு ஜாதகங்கணித்துப் பார்க்கையில், அந்தப் பெண்ணை மணம்புணர்பவனுக்கு அப்போதே நிர்யாணம் ப்ராப்தமாமென் றிருந்ததால், அவள் தனக்கு ருதுப்ராய மடையுங்காலம் வந்தும் ஒருவர்க்கும் பேச்சுப்படாதவளாக; அவளுடைய தாய் தந்தையரும் உற்றார் உகந்தாருமாகச் சேர்ந்து இப்படி பேச்சுப்படாத பெண்ணைக் குடியில் வைத்திருந்தால் உலகம் பழிக்குமே! இதற்குச் செய்யப்படுவ தென்னென்று ஆலோசித்து அவளை முடித்துவிடுவதே உத்தமமென்று தங்களுக்குள்ளே தீர்மானித்து, அவ்விதம் முடிப்பதற்கு நாளும் வேளையுங் குறிப்பிட்டுக் கொண்டார்கள். இவரிவை யனைத்துங் கேட்டு "ஓஒ உலகின தியல்பே" என்கிறபடியே உலகத்தியல்புக்குப் பயந்து ஒன்றுந் தோன்றாதவராய்ப் படைவீட்டுக்கு வந்து, ஜீவஹிம்சைசெய்ய வெத்தனித் திருப்பவர்களுடைய தைர்யத்தை நினைந்தும், அந்த ஜீவன் இவர்களிட்ட வழக்காய் முடிவதோ! வென்கிற ஐயத்தையடைந்தும், அவ்விர

இராமாநுஜர் அவனுடைய உசிதநிர்வேதங்கண்டு, அது செய்யுமிடத்து ப்ராயச்சித்தாபேக்ஷை வேண்டுமென்ன; அவன் பகவதுக்தி ப்ரகாரத்தை விண்ணப்பஞ்செய்து, அவ்விதிப்படி ப்ராயச்சித்தம் செய்துகொண்டே நிற்கிறேனென்ன; அவ்வளவிலே ஆழ்வானும் ஆண்டானும், பகவதாநுகூல்யமும் இவருடைய நினைவு மிருந்தபடியென்னென்று விஸ்மிதராய் "த்வேஷாச்சைத்யாதயா:" என்கிறபடியே ஸ்வாமி? தேவரீருக்குச் செய்யா நின்ற த்வேஷந்தானே இவருக்கு உஜ்ஜீவன ஹேதுவாயிற்றென்று சொல்லி ஆச்சர்யப்பட்டு "அஸ்மாபிஸ்துல்யோபவது" என்கிறபடி இவரும் அஸ்மதாதிகளைப்போலே க்ருதார்த்தராம்படி க்ருபைசெய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய; இராமாநுஜர் அவனைப்போர உகந்தருளிச் சாஸ்த்ரோக்தப்ரகாரம் ப்ராயச்சித்த பூர்வகமாகச், சௌளோபநயனாதிகளைச்செய்வித்து, த்ரிதண்டகாஷாயாதிகளை ப்ரஸாதித்து ஸ்ரீ கோவிந்த ஜீயர் என்று திருநாமமும் ப்ரஸாதித்துப் பஞ்ச ஸம்ஸ்கார யுக்தராக்கிக் குருபரம்பராபூர்வகமாக மந்த்ர ரத்னார்த்தத்தையும் க்ருபைபண்ணி யருளினார். அனந்தரம் சிலநாளைக்குமேல் கோவிந்தஜீயர் ஸ்வாசார்யரான இராமாநுஜருடைய நியமனப்படிக்குச், சாஸ்த்ரங்களிலே இதரேதரவசன வையர்த்யம் பிறவாத

வெல்லாம் படுக்கையிற் பொருந்தாதவராய் உலாவிக்கொண்டே, அந்த ஸ்த்ரீரத்னத்தி னுயிரைக் காப்பதற்கு விரகேதென்று தம்மில்தாமே யோசிக்கலானார்.

அனந்தரம் அப்பெண்மணியைத் தற்காலத்தில் அவ்வாபத்திலிருந்து மீட்டுவைத்தாலும், அவளுடைய ஜாதகத்தைப்பற்ற, ஒருவரும் அவளை அண்டக்கொடாதவர்களாகி, மற்றொரு காலத்தில் வேறெந்தவிதத்திலாவது முடித்துவிட வகை தேடாதொழியார்களன்றோ என்றும், அவ்வித இடர் நேர்படாத படிக்கும் காக்க வேண்டுவதானால் தாமே அப் பெண்ணைப் பாணிக்ரஹணஞ் செய்துகொண்டு காப்பதுதான் கூடிவரும் கார்யமாமென்றும் எண்ணிச், சூர்யோதயமானவாறே அறிக்கைக் காரர்களை ஏவி அப்பெண்ணின் தாய்தந்தையரை அழைப்பித்து நேற்றைய இரவில் உங்கள் அகத்தில் நடந்த சேதியை ஒளிக்காமல் சொல்லுங்கோள்என்ன; அவர்கள் பயந்து, நடந்ததை விண்ணப்பஞ் செய்துவிட; இவர் நகைத்து, ஈசுஶ்வர ந்தர்ப்பூத ஜீவர்களில் ஹிதமில்லாத உங்களுக்கு ப்ராஹ்மணத்வமும் சத்கதியும் எங்ஙன முண்டாகுமென் றெண்ணுகிறீர்க ளென்றுரைத்து, அப்பெண்ணை நாமேபாணிக்ரஹணம் பண்ணிக்கொள்ளவிரும்பியிருக்கிறோ மாகையால் உங்கள் கருத்தைச் சொல்லுங்க ளென்று

படி "யதிதர்மசமுச்சயம்" என்கிற ஒரு ப்ரபந்த மருளிச்செய்து "விதிஃகர்த்ருதஸாலிங்கம் ப்ரயோஹோ முக்யகர்மச அஹோரா த்ரக்ரியா சாரோலிங்கதர்மோ ஹதிஸ்திதிஃ - ப்ராயஸ்சித்தாநிஸம் ஸ்கார இத்யேகாதஸபர்வகஃ" என்று இவ்விதமாகச்செய்து சன்னிதானத்தில்வைத்து தண்டன்ஸமர்ப்பித்து ஆசார்யமுகோல்லாசம்பெற்று ஆசார்யபரதந்த்ரராயிருந்து சிலகாலத்துக்குமேல் அசிரேண பரமபதத்தைப் பிராபித்தருளினார். இப்படியிருக்க:-

இராமாநுஜரைத் திருவரங்கப் பெருமாளரையர் கோவிலுக்கெழுந்தருளப்பண்ணின வைபவம்.

கோவிலில் ஸ்ரீஆளவந்தார் ஸ்ரீபாதத்து முதலிகள் எல்லாரும் பெரியநம்பிகளிடத்தில் போய் ஸ்வாமீ? இப்போது இளையாழ்வார் பேரருளாளனிடத்தில் ஆசிரம ப்ராப்திபண்ணியருளி, யாதவப்ரகாசனையும் ஆட்கொண்டு த்ரிதண்டதாரணம் பண்ணுவித்துக், கந்தாடைமுதலியாண்டானையும்கூரேசனையும்திருத்திப் பணிகொண்டு அவர்களுக்கு மீமாம்ஸா சாஸ்த்ரயுக்மஸ்ரமம் பண்ணுவித்துக்கொண்டு, "இராமாநுஜமுனி" என்கிற அபிதானம்பெற்றுப்ரஸித்தராயிருப்பதாகக்கேள்விப்படுகிறோம்; ஆகையால் அவரைஇங்கே யழைப்பித்துக்கொண்டு அரங்கமாநகருக்கு

கேட்டருள; அவர்கள் திடுக்கிட்டுக் கையை முறித்துக் கொண்டு, ஒரு பெண்ணைப்பற்றி உத்க்ருஷ்ட ஜாதகராயிருக்கிற எங்கள் அரசை இழப்பதானால் நாடடங்க இழவு படாதோவென்று மறுத்தார்கள்.

இவர்தாம் விஷயாரோக்யம் வேண்டிய க்ரஹிக்கவெண்ணிலன்றோ அங்ஙனம் அமையும்; அப்படிக்கின்றி; ஈசுவர முகோல்லாசத்திற்காகக் கைப்பிடிக்கு மத்தனைமாத்ரமே நாம் நினைத்திருப்பதுகிடீர்? என்ன அதற்கு அவர்கள் சம்மதிக்க; அனந்தரம் முஹூர்த்தமிட்டுபாணிக்ரஹணம்பண்ணிக்கொண்டு, தேவியாரிடத்தில் ஸ்த்ரீபுத்திபண்ணி அவளிவளென்னாமல் புருஷ புத்திபண்ணி அவரிவரென்று வார்த்தையாடும் மர்யாதைகொண்டிருக்கத்தேவியாரும், இவரை தன்பக்ஷத்தில் ப்ரத்யக்ஷமாக சரூபியாய்வந்து (கஜேந்த்ரனை ரக்ஷித்ததுபோலே)ரக்ஷித்தருளின ஈசுவரனே யென்றும் ஆசார்யனே என்றும் பாவித்து விஷயவைராக்யம் பூண்டு சிசுருஷைசெய்துக்கொண்டு வாழும்நாளையில்,ஒருநாளில் சூர்யன் அஸ்தமித்த ஒருஜாமப் பொழுதுக்குமேல் இவருடைய சபாமண்டபத்தின் தலைவாசற்கதவு சாத்தப்படுகையில் அதிலிருக்கும் வெண்கலமணி

அழகுண்டாக்கி யருளவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்து கொள்ள; அவர் முதலிகளையெல்லாங் கூட்டிக்கொண்டு, திருவரங்கப் பெருமாளரையரைமுன்னிட்டுக்கொண்டு, பெரியபெருமாளிடத்தில் முதலிகளுடைய விண்ணப்பத்தை வெளியிட்டருளப், பெரியபெருமாளும் அதை உகப்பாய்க்கொண்டு, பேரருளாளனுக்குத் திருமுகம் போகவிட்டருளப், பேரருளாளன் கேட்டருளித், தந்தம் அபிமானத்தைப் புறம்போக விடிலன்றோ நாமும் நம்மிராமாநுஜனை விடுவதென்று அருளிச்செய்துவிட; இச்செய்தியைப் பெரியநம்பிமுதலானமுதலிகள் எல்லாருங்கேட்டு, இனிச் செய்யும் விரகேதென்று, தங்களுக்குள்ளே விசாரித்தருளுகையில் தேவப்பெருமாள் பரமஉதாரராயும் பாட்டுக்குப்போர நல்லராயுமிருப்பரென்று தெரிந்துகொண்டு, ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரைக்குறித்து "வேகவத்யுத்தரே தீரே க்ஷேத்ரே ஸத்யவ்ரதாக்யகே - அஸ்தி காஞ்சீ திவிக்யாதாபுரீ புண்ய விவர்த்தநீ" என்று இப்படிசொல்லப்படுகிறகாஞ்சிமாநகரிக்குத் தேவரீர் எழுந்தருளிப் புண்யகோடிவிமான மத்யஸ்தராய் அமர்ந்திருந்து யாவர்க்கும் அகிலாபேக்ஷித ப்ரதராயிருக்கிற பேரருளாளரைப்பாடி யுகப்பித்து இராமாநுஜரைப் பெற்றுக்கொண்டுவந்து அடியோங்களைத்தழைக்க வருள்புரியவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டார்கள்.

அவரும் அப்பொழுதே புறப்பட்டுப் பெரியபெருமாளிடத்தில் விடைகொண்டு பெருமாள் கோயிலுக்கெழுந்தருளி, அங்கிருக்கும் ஸ்வஜனமான வரந்தரும் பெருமாளரையரால் எதிர்கொண்டெழுந்தருளச்செய்யப்பட்டும், சத்கரிக்கப்பட்டும், அவர் திருமாளிகையில் தானே அன்றையதினம் எழுந்தருளியிருந்து மற்றைநாள்விடிவோரையில் பேரருளாளன் வையமாளிகையிலே "கச்சிக்குவாய்த்தான்" என்கிற திருமண்டபத்தில் ஏறியருளி, அனைத்துக்கொத்திலுள்ள பரிகரமும் சேவித்திராநிற்கத், திருக்

கள் கணகணவென்று வொலிக்க, அவ்வோசையைப் பெருந்தேவித்தாயார்கேட்டுப் பேரருளாளனைப்பார்த்து, இவ்வோசை எங்குநின்றும் எழுந்ததென்று கேட்டருள, அருளாளன் சந்தோஷத்துடனே, திருக்கூரத்து அரண்மனைத்தலைவாசலிற் கதவிலுள்ள வெண்கலமணி ஒலியாகும், நங்கூரேசன் இன்னேரமளவும் நியதி நடத்தினாற்போல் காண்கிறது என்றருளிச்செய்யப், பிராட்டி மகிழ்வெய்தி யிருந்தார்.

கச்சிநம்பி திருவாலவட்டம்பரிமாற அவர் அருகே இராமாநுஜர் தாம் அருளிச்செய்த "வரதராஜாஷ்டகத்தை" அநுசந்தித்துக் கொண்டு நிற்கச்செய்தே, இவருமெழுந்தருளத், திருக்கச்சிநம்பியார் எதிர்கொண்டுவந்துசேவிக்க, அவரைக்ருபையால்ஆதரித்துக் குசலப்ரஶ்னங்கள் செய்து பேரருளாளனைச் சேவிக்கவேண்டுமென்று அவரைமுன்னிட்டுக்கொண்டு, திருவோலக்கத்திலெழுந்தருளி வரதராஜனைச்சேவித்துக் "கதாபுநஶ்ஶங்கரதாங்க கல்பக த்வஜாரவிந்தாங்குஶ வஜ்ரலாஞ்சநம் - த்ரிவிக்ரம த்வச்சரணாம்புஜத்வயம் மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி" என்கிறபடி சுஜனதுர்ஜனவிபாகமறத் திருவடிகளின் யோக்யதையைக்கூடப்பாராமல் எல்லார் சிரசிலும்வைத்து ரக்ஷித்தருளிய பேரருளாளா? சங்க - சக்ர-கற்பக - பதாக-அரவிந்த - அங்குச-வஜ்ராயுதரேகைகளால் அலங்கரித்திருக்கும் அகவிதமையுடைய தேவரீர் சரணகமலங்களை இதுகாறும் நித்யசம்சாரிகளை ஆஶ்ரயித்திருந்த அடியேன் முடிமேல் தரித்துக் க்ருதார்த்தனாக்கி யருளவேண்டுமென்று ஸ்தோத்ரஞ்செய்து தண்டனிட்டு நிற்கப், பெருமாள் தீர்த்தப்ரஸாத ஸ்ரீசடகோபனையும் ப்ரஸாதித்தருள, இவர் "உன்திருப் பொலிந்த சேவடியென்சென்னியின்மேற் பொறித்தாய்" என்று ப்ரீதராய்நிற்கிறவளவிலே, அருளாளன் இவரை அருளப்பாடிட்டருள, இவர் பக்திபுரஸ்ஸரமாக "என்னெஞ்சமேயான்" என்று தொடங்கி "உலகேத்தும் ஆழியான் அத்தியூரான்" என்றும் "தொழுதெழுதொண்டர்கள் தமக்குப்பிணியொழித்தமரர்பெருவிசும்பருளும் பேரருளாளனெம்பெருமான்" என்றும் ஆழ்வார் திவ்யசூக்திகளான "பாலேய் தமிழான பண்ணார்பாடல்" "இன்கவிகளைத்" தேவகானத்திலே இயலுமிசையுமாக நாடகத்துடன்பாடத், "தென்னாவென்னுமென்னம்மான்" என்கிறபடியே பேரருளாளன்போரவுகந்தருளித், தாம் சார்த்திக்கொண்டிருந்த திருமுகத்தின் தாழ்வடம், திருப்பரிவட்டம், சத்ரசாமராதிகளையும் இவருக்கு வரிசைகளாக ப்ரஸாதித்தருளினான்.

அதைமற்றைநாள் நம்பிகள் ஒருப்ரஸ்தாபத்தில் இவருக் கருளிச்செய்ய, இவர்நெஞ்சங் குழைந்து எண்ணாதனகளெண்ணி, நம்அருளாளனுடைய செல்வத்தை ப்ரஹ்மாதிகளும் அளவிட அசத்தர்களாயிருக்க, ஆகிஞ்சின்யனாய் அவனுடைய படைப்பில் ஒருகீட ப்ராயமாயிருக்கிற இவனுடைய செல்வத்தைக்கண்டு அவனும்பிராட்டியும் மெச்சினார்க

இவர் நாயன்தே! அடியேனுக்கு இவை யொன்றிலும் அபேக்ஷையில்லை; தேவரீர் அர்த்திதார்த்த பரிதான தீக்ஷிதரா கையாலே, அடியேன் அர்த்திப்பதைத் தந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்து, பின்னையும்கனக்கப்பாடியருளினார். அதைக்கேட்டு அருளாளன் அதிப்ரீதனாய், நீர் வேண்டினதைத் தருகிறோம் சொல்லிக்காணீரென்று திருவாய்மலர; இராமாநுஜரைக் காட்டி இவரை அடியேனுக்குத் தந்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க; அருளாளன் இவரையொழிய நீர் கேளீரென்ன; "ராமோத்விர்நாபி பாஷதே" என்கிறபடி தேவரீர் முதற்சொல்லியவார்த்தையை மாற்றுவதான இரண்டாஞ்சொல் விளக்காதவராயிற்றே! அடியேனுக்காக இப்போது மாறுசொல்லத் திருவுள்ளம்பற்றல் தகுமோ! என்று விஜ்ஞாபிக்க; அப்போது அருளாளன் இவரைப்பார்த்து இன்னுப்புடன் தந்தோம் கொண்டுபோமென்றருளிச்செய்ய; இவர் இராமாநுஜரைக் கையைப்பற்றிவாரும் என்ன; அவர் பேரருளாளனுக்குத் தண்டன்ஸமர்ப்பித்து விடைகொண்டு, இவருடனே கோயிலுக்குப் புறப்படுவதாகக் கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் பார்த்தருளி மடத்துக்குப்போய் நமது திருவாராதனமான பேரருளாளனையும் மற்றுமுண்டான சம்பந்தங்களையும்கொண்டு வாருங்கோள்? என்றருளிச்செய்து மடத்தில் புகாமல் நேரே கோயிலுக் கெழுந்தருளினார். அவர்களும் நியமனப்படியே, ஸமஸ்த ஸம்பந்தங்களையும் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வரக் கூடினவளவிலே திருக்கச்சி நம்பியும் வந்து இவரை வழிவிட்டு மீண்டெழுந்தருளினார்.

அநந்தரம் இராமாநுஜர் அரையருடன்கூடி "யத்ருத்வாந நரோயாதிநரகஞ் சாப்பதோகதிம்" என்கிறபடிஎந்தஸ்தலத்தை யடைந்தால் நாரங்களாகிய ஆத்மகோடிகள் நரகத்தில் நின்றும்

ளென்பது கூடுவதோ! இதுஇவ்வாத்மாவுக்கு ஸ்வரூபஹானியை யுண்டாக்காதோவென்று உடனே தம்முடைய ஸர்வஸ்வத்தையும் நாட்டையும் அருளாளன் திருவடிகளில் ஸமர்ப்பித்துவிட்டுப் புண்யகோடி விமானச்சாயையில் வாசஞ்செய்யத் திருவுள்ளங்கொண்டு தேவியாரும் தாமுமாய் உடுத்த வஸ்த்ரங்களோடு புறப்பட்டுப் பெருமாள்கோயிலை நோக்கி வாராநிற்கச் சந்த்யாவேளை யானவாறே, தேவியார் இவரைநோக்கி, வழியில் கள்ளர்பயமுண்டோவென்ன, மடியிலேதேனும்கனத்திருக்குமோ? வழியில் பயமுண்டோவென்று கேட்கைக்கு? என்ன, அவர் தம்முடைய

விடுபடுவார்களோ அதுவான ஸ்ரீரங்கதாமம் என்கிறகோயிலை நாடி எழுந்தருளுகையில் பயணகதியில் வடதிருக்காவேரியில் நீராடி அநுஷ்டானத்தை முடித்துக்கொண்ட வளவிலே, இவ ரெழுந்தருளின செய்தியைப் பெரியநம்பி முதலானோர் கேட் டருளி ஜீயர்களையும் ஏகாங்கிகளையும் ஸ்ரீவைஷ்ணவர்களையும் கூட்டிக்கொண்டு பெரியபெருமாளிடத்தில் விண்ணப்பஞ்செய் யப், பெருமாள் சேனைமுதலியாருக் கருளப்பாடிட்டு நம்மிரா மாநுஜனை எதிரேற்றிக்கொண்டு வாருமென்று திருவுள்ளமா யருளச் சேனைமுதலியார் அவர்களுடன் கோயிற் பரிகரத்த ரான அனைத்துக் கொத்தாரும் சேவித்துவர, அகில ந்ருத்த கீத வாத்யங்களுடனே முக்தனைப்போருமவனை நித்யசூரிகள் விர ஜாநதிக்கு அக்கரையளவாகவந்து எதிர்கொள்ளுமாபோலே, திருக்காவேரி வடவாற்றின்கரையளவாகவந் தெதிர்கொள்ள, இராமாநுஜர் அவர்களைச்சேவித்துப் பின்சென்றுபோய்க் "கொ டியணி நெடுமதிட் கோபுரங் குறுகினர்" என்கிறபடியே, திட் கொடிமதில்களையும் தாமோதரன் திருக்கோபுரத்தையும் கிட் டிச், சாஷ்டாங்க ப்ரணாமம்பண்ணித் திருமாலைதந்த பெருமாள் திருவீதி முன்னாகப்புகுந்து, ப்ரதட்சிணமாக வெழுந்தருளித் திருவிக்ரமன் திருவீதியையும் ப்ரதட்சிணஞ்செய்து புகுந்து, பெரிய பலிபீடத்தடியிலே சென்று தண்டன் சமர்ப்பித்துச் சேவாக்ரமத்திலே ஆளரியைத் திருவடிதொழுது ஸ்ரீரங்கநாயகி யாரைச் சேவித்து ஸ்ரீசந்த்ர புஷ்கரிணியிலே தீர்த்தஸ்வீகாரம் பண்ணியருளி ஸ்ரீகோபுரங்கள் நயினாரையும் சேவித்துப் புகு ந்து "கடைத்தலையிருந்து வாழுஞ்சோம்பர்" ஆகிய நம்மாழ் வார் தொடக்கமான ஆழ்வார்களையும் மற்றுஞ் சுற்றுமுள்ள எம்பெருமான்களையுஞ் சேவித்து "அணியனார் செம்பொனாய வருவரையனையகோயில்" ஆகிற அணியரங்கன் றிருமுற்றத்தே புகுந்து, தண்டனிட்டு உள்ளே புகுந்து ப்ரதட்சிணம் பண்ணி

மடியிலிருந்த தொரு பொன் வட்டிலை யெடுத்துக்காட்டி இதைத் தேவ ரீருக்குப் பாலமிசைசெய்விக்கைக்காக எடுத்துக்கொண்டு வந்திருக்கிறே னென்று விண்ணப்பஞ்செய்ய, அதையும் வாங்கி விட்டெறிந்து, இனி பயமின்றி நடக்கலாகும் வாவென்று கூட்டிக்கொண்டு பெருமாள் கோயிலைச்சேர்ந்து, திருக்கச்சி நம்பியைத் திருவடி தொழுது; அடியோ ங்கள் செய்ய அடுப்பதொரு கைங்கர்யத்தை நியமித்தருளி ஹிதஉபதேச ங்கள்செய்து, உஜ்ஜீவிப்பிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவர் இவ

ப்ரணவாகாரமான திவ்யவிமானத்தைச்சேவித்துச், சேனைமுதலியாரைத் திருவடிதொழுது அழகிய மணவாளன் திருமண்டபத்தேற வெழுந்தருளுகையில், "வந்தவரெதிர்கொள்ள மாமணி மண்டபத்து" என்கிறபடியே முக்தனைப் போருமவனை வைகுண்டநாதன் எதிர்கொள்ளுமா போலே நம்பெருமாள் திருக்கைத்தலத்தில், ஏறியருளிப் புறப்பட்டு, அழகிய மணவாளன் திருமண்டபத்தளவாக வெழுந்தருளி எதிர்கொண்டு உள்ளே புகுந்தருள, இவர் விழுவது எழுவது தொழுவதாகச் சேவித்துத் திருப்பள்ளி யறையிலே புகுந்து "அரங்கந்தன்னிடை" "பாம்பணைப் பள்ளிகொள்ளும்" "கடல்விளங்கு கருமேனியம்மான் றன்னைக்கண்ணாரக்கண்டுகந்து" "மணற்றாணைப் பற்றிநின்று வாயாரவாழ்த்தி" ப்ரேமபரவசராய் "அமலனாதிப்பிரான்"படியே பாதாதிகேசாந்தமாகக் "கண்கள்மற்றொன்றினைக் காணாவே"என்னும்படியேஅநுபவித்துத்திருப்பல்லாண்டையநுஸந்தித்து "நமோநமோ வாங்மநஸாதிபூமயே நமோநமோ வாங்மநஸைக பூமயே-நமோ நமோ நந்தமஹாவிபூதயே நமோநமோ நந்ததயைக ஸிந்தவே", "நதர்மநிஷ்டோஸ்மிநசாத்மவேதீ நபக்திமாம் ஸ்த்வச்சரணாரவிந்தே - அகிஞ்சநோநந்யகதிஶ் ஶரண்யத்வத் பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே" என்கிறபடியே வாக்குக்கும் மனஸூக்கும் அதீதராயும், வாக்கு மனஸூகளுக் கடங்கினவராயும் பரிச்சேதிக்கவொண்ணாத உபயவிபூதியை யுடையவருமாயு மிருக்கிற க்ருபாஸிந்துவே? நிஷ்டையில்லாதவனும் ஆத்மக்ஞான மில்லாதவனும் பக்தியில்லாதவனுமான அடியேன் உபாயாந்தர சூன்யனாயும் ரக்ஷகாந்தர சூன்யனாயு மிருக்கையாலே, பரிச்சேதிக்கவொண்ணாத மஹிமையையுடைய தேவரீருடைய திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேனென்று

ருக்கிரங்கிக், கூரேசரே? நமக்கும் நமக்கு முற்பாடருக்கும் பிற்பாடருக்கும் நாயக ரத்நமாய் வீற்றிருக்கிற இராமாநுஜரை ஆசிரயித்து வழிபடுவதே உமக்கடுத்ததென்றருளிச்செய்ய, ஆகில் தேவரீரே புருஷகாரஞ் செய்ய வேண்டு மென்று ப்ரார்த்தித்து அவரை முன்னிட்டுக்கொண்டு யதிசேகரரான இராமாநுஜரிடத்தில் ஆசிரயித்துக், கூரத்தாழ்வானென்றும் கூரத்தாண்டா னென்றும் தாஸ்யநாமங்கள் பெற்று வாழ்ந்தார்கள்.

(மேல் வ்ருத்தாந்தங்களைச் சரித்ரக் கோவையிற் காண்க.)

சேவித்து நிற்கப்; பெரியபெருமாள் இவரைமிகவும் க்ருபைபண்ணித் தீர்த்தப்ரஸாதங்களருளிச் "செம்மாபாதபற்பத்தலே சேர்த்து" என்கிறபடியே தமது தேனே மலருந் திருவடித்தாமரைகளான துயரறு சுடரடிகளாலே இவருடைய உத்தம அங்கத்தை அலங்கரித்தருள; இவரும் அவன் தாளிணைக்கீழ்வாழ்ச்சிபெற்று, நிரதிசயானந்த நிர்ப்பரராயிருந்தார்.

இவரைப்பெருமாள் தமது தாமரைக்கண்களால் நோக்கிச், சோதிவாய்திறந்து, இராமாநுஜரே "பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும்" என்கிற நம்முடைய உபயவிபூதி ஐசுவர்யத்தையும் உமக்கும் உம்முடையார்க்கும் தந்திருக்கிறோம்; ஆகையால் இன்றுமுதல் நீர் இவற்றுக்கு உடையவர் என்னும் பட்டத்தை வஹித்து நம் கார்யத்தை யெல்லாம் ஆராய்ந்து நடத்துமென்று திருவுள்ளமாயருள; இவர் தீர்த்த ப்ரசாதமும் பெருமாள் சூடிக்களைந்த தண்டுழாய் விரைநாறு கண்ணித் திருமாலை ப்ரஸாதமும் பொலிந்துநின்ற பொன்னங்கழலான ஸ்ரீசடகோபனையும் "வானவர்நாட்டையும் நீ கண்டுகொள்" என்னும்படி உபயவிபூதி ஐசுவர்யத்தையும் கரதலாமலகமாக ப்ரஸாதிக்கப்பெற்றுப், பெரியநம்பிகளுடைய திருமுகத்தைபார்த்துப் "பெரியார்க் காட்பட்டக்கால் பெறுதபயன் பெறுமாறு" என்கிறபடியே தேவரீருடைய திருவடிசம்பந்தம் .வாய்த்திருக்கையால் பெரியபெருமாள் இப்படி வாழ்வித்தருளினுரென்று விண்ணப்பஞ்செய்தார்.

அவர் இவரை மார்போ டணைத்துக்கொண்டு "கலியுங் கெடுங்கண்டு கொண்மின்" என்று அன்று ஆழ்வார் அருளிச்செய்த பவிஷ்யதர்த்தம் இன்று ப்ரசித்தமாயிற்று என்றருளிச் செய்து,உடையவரே? என்று ஒருமுறை அழைக்கக், கோஷ்டிகளெல்லாரும் அந்த திருநாமத்தைப் பலமுறை சொல்லி ஆனந்தக்கூத்தாடி அடங்காதமகிழ்வெய்தினுர்கள். பின்பு பெரியநம்பிகள் இனி பெருமாள் நியமனப்படி கார்யமாராய்ந் தருளப்பாரீர் என்று இவரைக் கேட்டுக்கொள்ள; முதலிகளெல்லாரும் "எண்ணுதனகளென்னும்நன்முனிவர்" என்கிறபடியே கோயிலிலுள்ள நிறைவு குறைவுகளையெல்லாம் ஆராய்ந்து பணிகொள்ளவேண்டுமென்று ப்ரார்த்தித்துப் பெரிய திருமண்டபத்தில் எழுந்தருளப்பண்ண; இவர் எழுந்தருளி யிருந்துக் கருவூலங்களெல்லாம்

ஆராய்ந்து அமுதுபடி சார்த்துப்படி திருமாலை திருவிளக்கு முதலியவற்றையும் திருவாராதனத்திற்கு வேண்டியவற்றையும் குறைவறநடத்தியருளிக்கோவில் அனைத்துக்கொத்தில் அவரவர் ஏற்றத் தாழ்வுகளையும் ஆராய்ந்து திருமதிள் முதலான விடங்களில் திருப்பணிகளையும் நடத்தி, வண்டினமுரல்வதும் மயிலினமாலுவதும் குயிலினம் கூவுவதும் கொண்டல் மீதணவுவதுமான கடியார் பொழில்களில் திருச்செண்பகம் தொடக்கமான திவ்ய புஷ்பத்தருக்களையும் திருநந்தவனங்களையும், மற்றும் திருவரங்கச் செல்வனாருடைய திருவிளையாடல் சீர்மை ப்ரதேசங்களையும் ஆராய்ந்தருளி அவ்வவற்றிற்குச் செய்யப்படுவனவெல்லாம் செய்வித்துக்கொண்டு * பிள்ளையுறங்கா வில்லிதாஸரையும் அகளங்க நாட்டாழ்வானையுஞ் சிஷ்யனாக்கிக்கொண்டு கோயிலுக்கு மேற்காவலாக அகளங்கநாட்டாழ்வானை நியமித்து வைத் தருளினார்.

திருமலைநம்பி சன்னிதிக்குப் போகவிட்டிருந்த ஸ்ரீவைஷ்ணவர் கொண்டுவந்த செய்தி.

இங்ஙனமிருக்கையில் முன்பு திருமலைநம்பி சன்னிதிக்குப் போகவிட்டிருந்த ஸ்ரீவைஷ்ணவர் ஹர்ஷ ப்ரகர்ஷத்துடனே யெழுந்தருளி இவர் திருவடிகளில் சேவித்து நிற்க இவர் அவருடைய முகவிகாசங்கண்டு கார்யசித்தியா யிருக்குமென்று நிச்சயித்துத், தத்வ்ருத்தாந்தத்தை விவரியும் என்று ப்ரீதியுடனே கேட்டருள அவர் விண்ணப்பஞ்செய்யத் தொடங்கி ஸ்வாமீ?

---

* ஸ்ரீஎம்பெருமானார் திருவடிகளில் பிள்ளையுறங்கா வில்லிதாஸரும் அகளங்கநாட்டாழ்வானும் ஆஶ்ரயித்து மாட்சிபெற்றது.

ஸ்ரீஎம்பெருமானார் கோவில் கார்யங்களை நோக்கிச் சீர்திருத்திக் கொண்டு தர்சன ப்ரவர்த்தகராய்ப்போருகிற சமயத்தில், நிசுளாபுரியென்கிற உறையூரிலிருந்து சோழ தேசத்தை யாண்டு கொண்டிருந்த அகளங்கசோழன் என்னு மரசனிடத்தில் கையாள்களாகவிருந்த வில்லிகள் மூவரில் உறங்கா வில்லி யென்னு மொருவர், உறை யூரிலிருந்து திருவெள்ளறைக்குப் போகா நிற்க; நடுப்பக லாகையாலே, திருக்காவேரி மணலில் நடக்கும்போது, அதிசுந்தர கோமளாங்கியான தன்னுடைய பத்நியின் சிவந்த பாதங்களில் ரத்தங் குழம்பி வருத்த முண்டாக; அவ்வம்மை அதனால் துக்கிக்க: அவர் கண்டு மனந்தளர்ந்து,

தேவரீர் விடைப்ரசாதித்தருளின பின்பு அடியேன் க்ரமத்திலே போய் திருமலையேறி, நம்பியைச்சேவித்து, நியமனப்படியே விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க, அதை நம்பி பார்த்தருளி இது நாமே செய்யக்கடவதாயிருக்க, நம்மிராமாநுஜனும் "எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதாகப்" பெற்றதே! என்று தேவரீருடைய ஆநுகூல்யத்துக்கு உகந்த திருவுள்ளத்தராய், அப்பொழுதே ஸ்ரீபாதத்து முதலிகளுடன் அடியேனையுங் கூட்டிக்கொண்டு காளஹஸ்தியைச் சேர்ந்து அங்கொரு குளக்கரையில் ஒரு மரத்தடியில் எழுந்தருளியிருக்க; அங்கே உள்ளங்கை கொணர்ந்த நயினார், ருத்ராபிஷேகார்த்தமாகக், குடங்கொண்டு, சில பாட்டுகளையுங் கதறிக்கொண்டுவர, நம்பிகண்டு "கொன்றை முடி யானைக்குளிரநீ ராட்டினால் என்னுனக் குண்டாம் பயன்" என்றருளிச்செய்ய; நயினார் இப்பாசுரங்கேட்டு ஸம்ப்ரமான முகராய் இவரை ஏறப்பாராநின்று கொண்டு போய்விட; இவர் "அவன் செய்யும் சேமங்களை" எண்ணித் தெளிவுற்ற சிந்தையராய் மீண்டு திருமலைக் கெழுந்தருளிவிட்டுப் பின்பு ஒருநாள் அந்த ப்ரதேசத்திற்போய் அந்தக் குளக்கரையில்தானே அவ் விருக்ஷத்தடியில் முதலிகள் சூழவிருக்க வீற்றிருந்து நயினார் வருவரோவென்று பார்த்துக்கொண் டிருந்தார்.

அப்போது முன்போலவே அவர் ஜலாஹரணார்த்தமாகக் குடமெடுத்துவரஇவர்கண்டுஅப்போதொருசிந்தைசெய்து"என் மனஞ் சூழவருவாளுய் உறங்குவான்போல் யோகுசெய்வான் றனை யுணர்வைப் பெற வூர்ந்தவனுறங்குகிறானே" என்று தம்முடைய பரமாசார்ய திவ்யஸூக்தியில் இருக்கிற "ஸ்வாபாவி

இராஜனால் தனக்கு வெகுமதி செய்யப் பட்டிருந்த பட்டு உத்ரீயத்தை நடை பாவாடையாகப் பரப்பி அதன்மீது மெள்ள மெள்ள மேன்மையிலே நடத்திக்கொண்டு, முகத்தில் வெயில் படாமலிருக்கும்படி குடை பிடித்துக்கொண்டுவர; இந்தப் புதுமையை அங்கெழுந்தருளி யிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் கண்டு எம்பெருமானாருக்குக் காட்ட; எம்பெருமானாரும் பார்த்தருளிச், சமீபத்தில் வருகையில் அழைத்து வரச்செய்து, பிள்ளைகாள்? நீங்கள் எங்கே போவதாகப் புறப்பட்டு இப்படி வருத்தப் படுகிறீர்களென்று கேட்டருள; வில்லி ஸ்வாமீ! அடியேனிருப்பது திருவெள்ளறை; தொழில் செய்வது உறையூரில் அகளங்கனிடத்தில், இவள் அடியேனுடைய மனையாட்டி, இப்போது செல்வது திருவெள்ளறைக்கு என்று விண்ணப்பஞ் செய்தார்.

காநவதிகாதிஸயே ஸித்ருத்வம்” என்கிற சுலோகத்தை ஒரு ஓலைப்புறத்திலே எழுதி அவர் வருகிறவழியிலே போகவிடுத்திருந்தார்; அவர் அவ்வோலையைக் கண்டெடுத்து வாசித்துக்கொண்டு, கடக்கப்புகட்டுத் தங்கார்யத்தைநாடிப்போய் மீண்டுவருகையில் ஏதோ நினைவிற் கொண்டவராய் எறிந்தவிடத்தில் தேடிப்பார்த் தெடுத்துக்கொண்டு இவரிடம்வந்து “ஸோகஸ் ஸ்லோகத் வமாகத:” என்று ஸ்ரீவால்மீகிபகவான் அர்த்தசிந்தனை பண்ணினாற்போலே, சுலோகார்த்த பர்யாலோசனைசெய்து நின்றுகொண்டு, இது உங்கள் கையினின்றும் நழுவின பொருளோ? வென்று கேட்க; இவர் வேறு சிலர்பொருள் நழுவுமே யொழிய எங்களது நழுவும் பொருளல்லவென்ன; அது கிடக்கிடீர்; நீங்களெல்லாரும் ஓரிடத்தில் சேர்ந்திருக்கைக் கடியென்ன? வென்ன; இவர் மார்க்கம் கலக்கமற் றிருக்கையாலே என்ன; அவர் கேவலருக்கு மார்க்கமுண்டோ? வென்ன; இவர் பொருள் கையுண்டாய்ச் செல்லுமவனுக்கு அடுப்பதிதுவன்றோ வென்ன; அவர் இப்போது உங்களில் யாரேனும் உற்றுரை வழிவிட இங்கு வந்தீர்களோ? வென்ன; இவர் அதுவல்ல, கறவைகள் கொள்ளவந்தோமென்ன: அவர் அநுஷ்டாதாக்களுக்குப் பசுபாததூளி பவித்ரமன்றோ? வென்ன; இவர் அது இடமறிந்து நேர்படில் நல்லதென்ன; அவர்குருக்கு நெடுக்காகில் பேதமென்? னென்ன; இவர் செவ்வையிருக்கத் திர்யக்காகையே பேதமென்ன; அவர் இது புதியவார்த்தைக்கட்டுகளோ? வென்ன; இவர் பழையவார்த்தைக் கட்டுகளுமிப்படியே யென்ன, அவர் இதில் பூர்வ விசாரம் வேண்டாவோ? வென்ன; இவர்

எம்பெருமானார் பிள்ளாய்? தொழில் செய்யப் போமிடத்துக்கு ஸ்திரீயுடனும் போய் வருவதுண்டோ? என்று கேட்க; வில்லி தன்னுடைய பத்நியைக் காட்டி, இப்படி யழகில் மிகுந்த ஒரு அரிவை எங்கள் குலத்தில் மாத்ரமே யல்லாமல் மற்றெந்தக் குலத்திலுமே அகப்படுவது அருமையா யிருக்குமானால், கிடைக்கப்பெற்ற அடியன் இவளை விட்டுப் பிரிந்திருக்கவும் இவள் கண்ணழகைப் பாராதிருக்கவும் எங்ஙனம்கூடும்? என்றுசொல்ல; எம்பெருமானார் கலுக்கென நகைத்துப் பிள்ளாய்? நீ இவள் கண்ணழகி லகப்பட்டிருந்தால் உன்னுடைய சிந்தா குலம் தவிருவதெப்படி காணென்ன; வில்லி ஸ்வாமீ? அதைத் தவிர்க்கும் பொருளும் உலகத்தி லுண்டோ வென்ன; எம்பெருமானார் உண்டெனக் காட்டுவோமாகில் நீர் கொள்வீரோ? வென்ன; வில்லி கொள்வே னென்று

பரத்வத்திலேகாண்? விசாரமிருப்பது என்ன; பின்பு அவர் இவரை ஏறப்பாரா நின்றுகொண்டு யதாஸ்தானம் நோக்கித் தலையசைத்து அடைவுகெடக்காணலாம்படி போயினர். அனந்தரம் "ப்ரஸாதமஹமச் சித்தம்" என்னுமாபோலே, நெஞ்சமுருகாநின்றதே! அவரே இனியாவார் என்றநுசந்தித்துச், சாத்யகோடியிலேறிட்டு, முதலிகளுடன் சல்லாபித்துக்கொண்டு மீண்டு திருமலைக் கெழுந்தருளினரென் றிவ்வகையாக அந்த ஸ்ரீவைஷ்ணவர் விண்ணப்பஞ் செய்தவாறே, உடையவர் மிகவும் ஆனந்தித்துக் கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் முதலிகளையும் பார்த்தருளிக் கேட்டீர்களோ! கோவிந்தனுக்கு ஸ்ரீஆளவந்தார் ஸ்ரீசூக்தி நெஞ்சிலுற்று, அதற்கு வாங்மாத்ரத்தாலே வைதண்டிகச் சாயையைக்காட்ட, நம்பிகள் சாயாமாத்ரத்தாலே ஸதுத்தரங்களை வாக்சாதுர்யங்களாலே ரசிக்க, அவன் சாஸ்த்ர விதத்தஞைகயாலே நம்பியினுடைய ஸ்ரீசூக்தி ஸாரத்ய க்ரமத்தில் ஈடுபட்டு நிருத்தரனானிறே; எங்ஙனே யென்னில்:—"கூடஸ்தோக்ஷரஉச்யதே", "அமரர்களாதி முதல்வன்", "தேஹீஸங்மார்க்கவர்த்தந:", "நெறிவாசல் தானேயாய்நின்றான்", "கஶ்சிந்மாம் வேத்திதத்வத:", "யானேநீ யென்னுடைமையும்நீயே", "ஜ்ஞாநேநஹீந: பஶுபிஸ்ஸமாந:", "என்னினைந்து போக்குவரிப்போது", "யேவாலலாட ஃலகேலஸதூர்த்வபுண்ட்ரா:", "தவளப்பொடிகொண்டு நீறிட்டிடுமின்", "ஊர்த்வபுண்ட்ரந் த்விஜாதீநாம்", "நீறுசெவ்வே யிடக்காணில்", "வேதமூலப் ப்ரமாணாத்", "மிக்கவேதியர்", "நால்வேதம்", "ஸதேவஸோம்யேத

சம்மதிக்க; ஆகில் வாருமென்று கூட்டிக்கொண்டு வந்து திருக்காவேரியில் திருக்காவணத்தின் கீழே, சைத்ரோத்ஸவங் கண்டருளுவதாக, எழுந்தருளி யிருந்த திருவரங்கச் செல்வனாரைச் சேவிக்கப் பண்ணியருள, அந்நேரத்தில் பெருமாள் விபவ ரூபமாய்ச் சேவை சாதிக்கத் திருவுள்ளம் பற்றினராகையாலே உறங்கா வில்லியும் அவர் பத்நியும் சேவித்துக் "குன்றாடுகொழுமுகில்போற் குவளைகள் போற் குரைகடல் போல், நின்றாடு கணமயில்போல் நிறமுடைய திருமாலார்" என்னும்படியே யிருந்தபடியால், பார்த்தகண் வாங்காதபடிக்குப் பாதாதிகேசம், கேசாதிபாதாந்தமாகப் பலமுறை விழுந்துசேவித்து அவ்வடிவழகைக் கண்களிலும், நெஞ்சிலும் தேக்கிக்கொண்டு, மீண்டும் எம்பெருமானார் திருவடிகளில் தண்டன் சமர்ப்பித்து ஸ்வாமீ? இனி யறியவேண்டுவனவெல்லாம் தேவரீர் ஸந்நிதியிலே யன்றி வேறெங்குமிரா ஆகையாலே, அவற்றை அடியோங்களுக்கு ப்ரஸாதித்துத்திருத்திப் பணிகொள்ள வேண்டுமென்று ப்ரார்த்தித்தார்.

மக்ர ஆஸீத்","தர்மேஸர்வம் ப்ரதிஷ்டிதம்","அவித்யயா ம்ருத்யுந்தீர்த்வா வித்யயா ம்ருத மஸ்நுதே", "ப்ரணவோ ஃநுஃஸ ரோஹ யாத்மாபரஹ்மதல்லக்ஷ்ய முச்யதே-அப்ரமத்தேந வேத்ஃவ்யம் ஸரவத் தந்மயோ பவேத்", "நாரயணாத் ப்ரஹ்மாஜாயதே, நாராயணாத் ருத்ரோஜாயதே" என்றிப்படி யிருந்துள்ள சுருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களிலே ப்ரதிபாதிக்கின்ற அர்த்தங்களையெல்லாம் தத்காலத்திலே அவன் மணசானது அவகாஹிக்க, அவன் நிருத்தராய் டோலாயமான சித்தனாய்ப் போகையாலும், நம்பிகள் அவனைச் சாத்தியகோடியிலே ஏறிட்டுத் திருப்புகையாலும், நம்பிக்கு அவனுடன் ஓடினசாமர்த்யமிருந்தபடி யென்னென்று விஸ்மிதராய் அந்த ஸ்ரீவைஷ்ணவரை உபலாளித்தருளிப், பின்னையும் நடந்ததைச் சொல்லுமென்று கேட்டருள; ஸ்வாமீ? "யம்யம்ஸ்ப்ருஶதி பாணிப்யாம் யம்யம் பஶ்யதி சக்ஷுஷா - ஸ்ஃாவராண்யபி முச்யந்தே கிம்புநர்ப்பாந்ஃதாஜநா:" என்கிறபடியே அக்கோவிந்த பட்டருக்குத் தேவரீருடைய உபயவிதசம்பந்தமிருக்கையில் அவற்றின் ஏற்றம் பழுதாவதுண்டோ! மூன்றும் முறையில் கார்சித்தியானபடியை விண்ணப்பஞ் செய்துகொள்ளுகிறேன் கேட்டருள வேண்டுமென்று சொல்லத்தொடங்கி ஸ்வாமீ? மற்றொருநாள் நம்பிகள் திருமலைச் சிந்தாமணியைத் திருவடிதொழுது புறப்பட்டுக்காளஹஸ்தி எல்லைநிலத்தோப்பிலே எழுந்தருளி யிருந்து ஸ்ரீபாதத்துமுதலிகளுக்குத் திருவாய்மொழி வ்யாக்யானம் ப்ரஸாதித்தருளாநிற்க; நயினார் புஷ்பாஹரணம் பண்ணுநின்று கொண்டு

அப்பொழுதில்தானே அவ்விருவரையும் பஞ்சஸமஸ்கார பூர்வகமாக ஆட்கொண்டு பிள்ளை யுறங்கா வில்லி தாஸரென்றும் பொன்னாச்சியார் என்றும் தாசிய நாமங்களிட்டு ஆதரித் தருளினார். அனந்தரம் பிள்ளை யுறங்கா வில்லிதாஸர், தம்முடைய மருமக்களான வண்டவில்லி என்பவரையும் செண்டவில்லி என்பவரையும் எம்பெருமானார் திருவடிகளிலே தம்மோடொக்க, ஆஶ்ரயிக்கும்படி செய்துவைக்க,எம்பெருமானார் அவர்களையும் ஆட்கொண்டு, வண்டலங்கார தாஸர் என்றும், செண்டலங்கார தாசரென்றும் தாசிய நாமங்களிட்டு ஆதரித்தருளினார். அனந்தரம் இம்மூவரும் கோவிலில் தானேவசிக்க இடந்தேடிக்கொண்டு ஆசார்ய சேவையை யொருபொழுதேனும் தவிராதபடி யனுபவித்துக்கொண்டு,திருஉறையூருக்குப்போய் உத்யோக கார்யங்களை மாத்ரம் பார்த்துக்கொண்டு, அரசனிடத்திற் பெறுகிற மாதத்தவணை நிதியைக்கொண்டுவந்து எம்பெருமானார் திருவடிகளில் ஸமர்ப்பித்துவர, எம்பெருமானார் அதை

ஒருபாதிரி மரத்தில் ஏறியிருக்க; அவ்வளவிலே "திண்ணன்வீடு" என்கிற திருவாய்மொழிக்கு நம்பிகள் அர்த்தம் அருளிச்செய்ய; நயினார் மூன்றுபாட்டளவும் பூப்பறிக்கையைத் தவிர்ந்து உற்றுக்கேட்டு, நாலாம்பாட்டிலே "எம்பெருமானுக்கல்லால் பூவும் பூசனையுந்தகுமே"யென்றுவர; அம்மரத்தினின்றுந் திடுக்கெனக் குதித்துக், கையிலிருந்த பூப்படலிகையை ஒருபுறம் எறிந்துவிட்டுத் தரித்திருந்தவற்றையும் அலங்கலழிய வாங்கி வீசிப்போகவிட்டுத் "தகாது தகாது"என்று சொல்லிக்கொண்டே அடைவுகெட வந்து நம்பி திருவடிகளிலே விழுந்து கிடந்து "அஜ்ஞஸ் சாசார ஹீநஸ்சமலிநோதுஃ கஸாஹ்ரே நிமக்நஃ" என்கிறபடி ஜ்ஞானசூனியனும் ஆசாரசூன்யனும் துக்கசாகரத்தில் மூழ்கிக்கிடக்கின்றேன் என்றும், "நீசனேன் நிறையொன்றுமிலேன்" என்றும் சொல்லுகிறபடியே தன் வர்த்தமானத்தையெல்லாம் சொல்லி அதிக விஷண்ணராயினர்; எங்ஙனேயென்னில், உபய விபூதி நிர்வாஹத்துக்கும் முடிசூடினவனிருக்க, விரிதலையனை விரும்பினேனே! என்றும், புதுக்கணிப்புடைய புண்டரீகாக்ஷனிருக்கப் புகைக்கண்ணனைப் பூசித்தேனே! என்றும், கடல் மண்ணுண்ட கண்டனிருக்கக் கறைகொண்ட கண்டனைக் காமித்தேனே! என்றும், கல்லெடுத்துக் கல்மாரிகாத்த கற்பகமிருக்கக் கையார் கபாலியைக்கண்டு வணங்கினேனே! என்றும், திருவிருந்த மார்பனிருக்கத் திருவில்லாத் தேவனைத் தொழுதேனே! என்றும், பீதகவாடைப் பிரானிருக்கப் புலியுரியுடையானைப் பின்றொடர்ந்தேனே என்றும், சதிரான கங்கையடியானிருக்கச் சுடுகாடுகாவலனைச் சுற்றிவலம் வந்தேனே! என்றும், பெருமலராகிற பெருந்துழாய் வனமிருக்கப் பெருங்கையாற் குடமெடுத்துப் பேய்ச்சுரைக்கு நீர் வார்த்தேனே! என்றும்

யங்கீகரித்து,இவர்களுக்கு ஶ்ரேயஸ்ஸுண்டாகும்படியாகப் பகவத்பாகவத ஆசார்யவிஷயங்களில் கைங்கர்யரூபமாகச் செலவிட்டு வந்தார் இப்படியிருக்கையில் அரசனை அகளங்கன் ஒருநாள் அந்திப்பொழுதில் உலாவப்போக விச்சித்து வண்டலங்கார தாஸரையும் செண்டலங்கார தாஸரையும் இருபுறத்திலும் மெய்க்காவலாக வைத்துக்கொண்டுபோகாநிற்க, அவன் இவர்களுடைய வைஷ்ணவ துல்யத்தையும் புறந்தொழாக் கொள்கையையும் உணர்ந்திருப்பவனுகையாலே, பரிக்ஷார்த்தமாக எதிரில் அதிதூரத்திலே தோன்றாநின்று கொண்டிருந்த ஒரு சமண ஆலயத்தின் கோபுரத்தைக் காட்டி, இப்போது நாம் ஸ்ரீரங்கத்தை நெருங்கி விட்டாற்போ லிருக்கிறது காண்? அதோ ஸ்ரீரங்கவிமானம் தெரிகிறதே! என்று வியப்புடையவன் போலே

இப்படிபலவகையாலும்புலம்பி, இவ்வாத்மாவை உஜ்ஜீவிப்பிக்க வேண்டுமென்று தண்டனிட்டுக் கொண்டு எழுந்திராம லிருக்க; நம்பிகள் முதலிகள் முகத்தைப்பார்த்துச் சுத்தியோக முண்டா யிருந்தது கண்டீரே! ஸ்ரீ ஆளவந்தார் க்ருபை பண்ணும்படிக் குக் குறைவில்லையென் றருளிச்செய்து அவரை முடிபிடித்தெடு த்து உடம்பைத்தடவிப் பலபடி சாந்த்வ வாதனம் பண்ணி "ஆபிபந்நிவசக்ஷுர்ப்யாம்" என்கிறபடியே குளிரநோக்கி விஸ் ரம்பகதநம்நடவாநிற்கத் தத்ஸ்தானத்தார் இச்செய்தியையடை யக்கேட்டு அனைவரும்வந்து, நம்பியுடனே எங்கள்ஸ்தானத்துக் குக் கடவரான இவரை இங்ஙனம் அம்மான்பொடியிட வடுக்கு மோ?வென்ன; நம்பியும் அம்மான்பொடிக்கிடுபட்ட இவரையே கேட்டுக்கொள்ளுங்கோள்? எங்கள்வழிஅந்யாத்ருசம், அசல்வழி வருகிறோமல்லோம் என்றருளிச்செய்ய; அவர்களும் நயினாரே வாருமென்று கையைப்பிடிக்க; அவர் உதறிக்கொண்டு நீவிர் நம்முடைய கையைப் பிடிக்கக்கூடுமோ வென்று கருவூலத்தின் திறவுகோல் இலச்சினை மோதிரம் முதலிய யாவத் சம்பந்தத்தை யும் எறிந்துவிட்டு, உங்களுக்கும் எனக்கும் இனி பிணையில்லை யென்றுசொல்லிக் கைதட்டி முகந்திருப்பிநிற்க; அவர்களும் நிராசரராய் நம்பியைப் பார்த்து நாங்கள் இச்செய்திகளை யெல் லாம் இன்றேகேட்டோம், நங்கள்பிரான் வழிக்கு வருவானென் றெண்ணியே உங்களுடன் சண்டைசெய்வதாக இவ்வளவுதூரம் வந்தோம் என்றுசொல்லித் தாங்கள் காளஹஸ்திநாதனிடத்தில் கேட்டிருந்ததையும் அடியில்வருமாறு சொன்னார்கள். எங்ஙன மெனில்:—எங்கள் காளஹஸ்தியுடையார் "பாஷண்ட பௌத்த சார்வாகைஸ்த்ரயீஶர் மோவிலோபிதः" என்கிறபடியே வேத பாஹ்யரான பௌத்தாதிகளாலே, வேதசாஸ்த்ரங்கள் ப்ரமுஷி

சொல்ல, இவர்களதை உண்மையென்றேநம்பித்தக்ஷணமே தாளுந்தடக் கையுங்கூப்பி அத்திசையுற்றுத் தண்டனிட்டுக்கிடக்க, அப்பொழுது அக ளங்கன் பரிஹஸித்து, ஐயோ! இப்பொழுது நீங்கள் தண்டனிட்டது சமண ஆலயத்திற்கல்லவோ? எழுந்து நன்றாய்ப் பாருங்கோளென்ன, அதைக்கேட்டு அவர்கள் அப்படியே மூர்ச்சையாய்விட, அவன் இவர்கள் விழுந்து நெடுநேரமாயும் எழுந்திராததென்னென்று, புறட்டிசோதி த்து, உயிரிழந்தவர்கள்போ லிருக்கக்கண்டு பயந்து, தன்னுடைய ஆள் களைக்கூவி, இசசெய்தியை உறங்காவில்லிக்குத் தெரிவித்து வாருங்கோ ளென்ன, அவர்களோடிவந்து பிள்ளையுறங்கா வில்லிதாசருக் கறிவிக்க,

தங்களாகநிற்க "த்ரிதண்டதாரிணா பூர்வம் விஷ்ணுநா ரக்ஷிதாத்ரயீ" என்கிறபடியே நாஸ்திக நிரஸனார்த்தமாக த்ரிதண்ட சன்யாசியான தத்தாத்ரேயரைப்போலே, சேஷாசன அனந்தவைநதேயாம்சங்கள், யமுனைத்துறைவர் இளையாழ்வார் கோவிந்த பட்டராகவும் 'இவர்கள் சேர்த்திக்குச் சங்கசக்ராம்சங்கள் முதலியாண்டான் கூரத்தாழ்வானாகவும், மற்று மிப்படியே யுள்ள விஷ்ணு பார்ஷதங்களும்வந்து அவதரித்திருப்பது நமக்கு ப்ரியமாகையாலே, கோவிந்தபட்டருக்கு முன்பு காசிவாசாபேக்ஷையாயிருந்ததைப்பார்த்து, அந்தபுத்தியைத் தவிர்க்கைக்குநாமே, உள்ளங்கை கொணர்ந்த வ்யாஜமிட்டு அழைத்துவந்த தொழிய மற்றில்லை என்று எங்கள் ஸ்வப்நத்தில் சொல்லியிருந்தது சரியாகவே முடிந்துவிட்டதென்று சொல்லி மீண்டு போயினார்கள். பின்பு நம்பி, கோவிந்தபட்டரைக் கூட்டிக்கொண்டு திருமலையேறவெழுந்தருளித், தத்க்ஷணமே அவருக்கு உபநயனாதிகளைச் செய்வித்து "ஸம்ஸ்காராஃ பஞ்சகர்த்தவ்யா:" என்று நெடுமாலருவி சமீபத்துக்குளக்கரையிலே பஞ்சஸம்ஸ்காரங்களையும் ப்ரசாதித்தருளித், ¦ திருப்பல்லாண்டு முன்னாக ஆழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்களையும்ஓதுவித்து, அர்த்தபஞ்சக ஜ்ஞானத்தையுண்டாக்கிவைத்தருள, அவர்தேவுமற்றறியாதே ஆசார்யபதைக நிஷ்டராய், "அஹம் ஸர்வங்கரிஷ்யாமி"என்றிருக்குமா போலே "ஒழிவில் கால" ப்படி, நம்பிகள் திருவடிகளில்தானே, சிந்தையாலும் சொல்லாலும் செய்கையாலும் ஸர்வகைங்கர்யங்களையும் செய்துகொண்டு க்ருதார்த்தராயிராநின்றார் இவற்றையெல்லாம் அடியேன் சேவித்துக்கொண்டிருந்து இந்நாள்விடைகொண்டேனென்று அந்தஸ்ரீவைஷ்ணவர்விண்ணப்பஞ்செய்ய, உடையவர் அதிப்ரீதராய் அவரை க்ருபைசெய்தருளினார்.

அவர் உடனே அவ்விடத்தேற வெழுந்தருளிக் கடாக்ஷித்து வர்த்தமானத்தை அகளங்கனால்தானே அறிந்துகொண்டு "மறந்தும் புறந்தொழா மாந்தர்க்கு மாயன் றமர்களடிப்பொடியேமருந்து" என்றருளிச்செய்து, தம்முடைய திருவடியால் அவர்களுடைய திருமேனியைத் தடவியருள, அப்போதே அவர்கள் உயிர்பெற்றெழுந்தார்கள்.

இந்த ஆச்சர்யத்தை அகளங்கன்கண்டு இம்மூவர் விஷயத்திலும் பயந்தவனாகி, ஸ்வாமிகாள்? இதுவரையில் அடியேன்தேவர்களைச் சாதாரண மனிதராக எர்றுக்கொண்டிருக்கிற அபசாரங்களைப் பொறுத்து

உடையவர் திருக்கோட்டியூர் நம்பி சந்நிதிக் கெழுந்தருளுதல்.

அனந்தரம் உடையவர் ஒருநாளளவில் பெரிய நம்பிகள் திருவடிகளிலே தாளுந்தடக்கையுங் கூப்பித் தண்டன் சமர்ப்பித்து, ஸ்வாமீ? அடியேன் ஸ்ரீஆளவந்தார் ஸ்ரீபாதத்திலேசேவியாத இழவு தீரும்படி தேவரீர் திருவடிகளில் ஆசிரயிக்கப்பெற்றேன், இனி அடியேனுக்குத் தேவரீர் திருவுள்ளத்திலுண்டான அர்த்தவிசேஷங்களை ப்ரஸாதித்தருள வேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொள்ள, அவர் அப்படியே செய்கிறோம் வாருமென்று "அஹோத்வயஸ்ய மாஹாத்ம்ய மஹோவீர்யமஹோபலம்-மந்த்ரரத்நம் ஸாபகரம் வேதஸாரம் ஸநாதநம்-ஸர்வபாபக்ஷயகரம் ஸர்வபுண்ய விவர்த்தநம் - ஸ்ரீகரம்லோக வஶ்யஞ்சஸத்யம்ஸம்ஸாரதாரணம்"என்கிறபடியே பாபஹரமாய்ப்புண்யவர்த்தகமாய் ஸம்ஸார ஸம்பந்தத்தையறுக்க வல்லதாய் மிகவும் சிலாகிக்கப்படுவதாய்வேதஸாரதமமாய்,மாங்கல்யகரமாயிருப்பதொன்றான த்வயார்த்தத்தை ப்ரசாதித்தருளி, ஸ்ரீ ஆளவந்தார் தமது அபிமானாந்தர்ப்பூதரான திருக்கோட்டியூர் நம்பியினிடத்தில் இன்னுஞ் சில ரஹஸ்யார்த்த விசேஷங்களை உமக்காக வைத்துப்போயிருக்கையால், அவற்றையும் நீர் அவர் ஸ்ரீபாதத்திலே சென்று கேளுமென்று அருளிச்செய்ய, இவர் அப்பொழுதே அங்கேறவெழுந்தருளி "மாற்றிலிசோறிட்டுத் தேசவார்த்தை படைக்கு" மவர்களான திருக்கோட்டியூர் வாசிகளைப்பார்த்து நம்பிகள் திருமாளிகை எங்கேயென்று கேட்டருள, அவர்கள் அதோ தோன்றுகிற கூரையென்று காட்ட, இவர் அவ்விடந் தொடங்கி நம்பிகள் திருமாளிகையளவும் தண்டனிட்டுக்கொண்டு (அவ்வூரில் "குற்றமின்றிக் குணம்பெருக்கிக் குருக்களுக்கனுகூலரான"சத்துக்களனைவரும் நம்பிகளுடைய ப்ரபாவ மிருக்கும்படியை அறியும்படிசெய்து) எழுந்தருளி, நம்பிகள் ஸ்ரீபாதத்திலே

ரக்ஷித்தருள வேண்டுமென்று தண்டனிட்டு அனேகமாகச் சன்மானித்து இனிமேற்பட கோவிலில்தானேவாசஞ்செய்துகொண்டு அடியேன்ப்ரதிமாதமும் ஸமர்ப்பிக்கிற த்ரவ்யத்தை யங்கீகரித்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்து அனுப்பிவிட, இம்மூவரும் எம்பெருமானார் ஸ்ரீபாதத்தேற வந்துதண்டனிட்டு அரசனுக்கும்தங்களுக்கும்நடந்தசெய்தியை விண்ணப்பம்பண்ணிக் குருகுலவாசஞ் செய்துகொண் டிருந்தார்கள்; அதன்பின்பு

சாஷ்டாங்க ப்ரணாமம்பண்ணி, அடியேனைக்கடாக்ஷித்து அறிய வேண்டிய ரஹஸ்யார்த்தங்களை யறிவித்து ரக்ஷிக்க வேண்டுமென்றுப்ரார்த்திக்க, அவர் இவருடைய அத்யவசாய பாஹுள்யத்தை நன்றாயறியத் திருவுள்ளம்பற்றி "ஆருக்கென் சொல்லுகேன்" என்று முகங்கொடாமலெழுந்தருளியிருக்க, இவர் மீண்டு கோயிலேற வெழுந்தருளிவிட்டார்.

திருக்கோட்டியூர் நம்பி, நம்பெருமாள் நியமனத்தின்பேரில் உடையவருக்கு ரஹஸ்யார்த்தங்களை ப்ரஸாதித்தல்.

ஒருநாள் திருக்கோட்டியூர் நம்பிகள் திருநாள் சேவிக்க வேண்டிக் கோயிலுக்கெழுந்தருளியிருந்து, தம்மூருக்குப் புறப்பட அப்போது, நம்பெருமாள் அவரைஅருளப்பாடிட்டுத், திருமாலை, திருப்பரிவட்டம், தீர்த்தம், ஸ்ரீசடகோபனையும் ப்ரஸாதித்து நம் இராமாநுஜனுக்கு ரஹஸ்யார்த்த விசேஷங்களை உபதேசியுமென்று அர்ச்சகமுகேனநியமித்தருள,நம்பிகள், "நாஸம்வத்ஸரவாஸிநே ப்ரப்ரூயாத்"என்கிறபடி ஒருஸம்வத்ஸரகாலம் சலிப்பின்றி ஆசார்யன்சன்னிதியில்வாசம்செய்கிற சிஷ்யனுக்கே உபதேசிக்கத் தக்கதென்றும், "இதம்தேநாதபஸ்காய", "நசாஶுஶ்ரூஷவேவாச்யம்" என்று என்னுலுனக்குச் சொல்லப்படுகிற இந்தவிசேஷத்தைசரணாகதனாகாதவனுக்கும் பக்தியில்லாதவனுக்கும்ஶுஶ்ருஷைசெய்யாதவனுக்கும்'என்னுடையஅவதாராதிகளில் அசூயை படுகிறவனுக்கும் ஒருகாலும் சொல்லலாகாது என்றும், தேவரீர்நியமித்தருளவில்லையோவென்று விண்ணப்பஞ்செய்ய, அதற்குப்பெருமாள் "ஶரீரம்வஸுவிஜ்ஞாநம்" "வாஸஃகர்ம குணாநஸூந்" என்றுசொல்லப்படுகிற சிஷ்யலக்ஷணபூர்த்தி நம்மிராமாநுஜன் பக்கலுண்டாகையாலே, நீர்சொல்லில் குறைவு நேரிடாது என்றருளிச்செய்ய, நம்பிகள் உடையவரை நோக்கி, நம்மூரே வாருமென் றருளிச்செய்து எழுந்தருளிவிட்டார்.

அரசன் வழக்கப்படிக்கு மாதக்கட்டளைநிதியைச் சேவகர்மூலமெடுப்பித்து இம்மூவருக்கும் அனுப்பிக்கொடுக்க, இவர்களதைப் பெற்றுக்கொண்டு போய் எம்பெருமானார் திருவடிகளில்ஸமர்ப்பிக்கப்புக, அவரதைப் புறங்கையாலேதட்டிவெறுப்புடனேபிள்ளைகாள் 'இதுவரையில்நீங்கள்கொணர்ந்த திரவியம் மெய்வருந்திச் சம்பாதித்திருந்ததாகையாலே நம்மாலங்கீகாரம்பெற்றிருந்தது, இப்போது அப்படிக்கில்லாமல், இராஜஸ தாமஸ

பின்பு உடையவர் திருக்கோட்டியூருக் கெழுந்தருளி நம்பி கள் சந்நிதியைக்காக்க; அவர் பார்த்து இன்றைக்குப் போய் வாருமென்ன; இவர் அவர் நியமனப்படியே மீண்டுவந்தார். இப் படியே பலகாலும் பதினெட்டுமுறை நடப்பித்தருளி:—

(க) "பங்காதுத் பத்திதே கீடம் கீடம்பங்க நபத்யதே-லோகாதுத்பத்திதே ஜ்ஞாநி ஜ்ஞாநிலோகம் நபத்யதே"

பிள்ளைப்பூச்சிக்குச் சந்த்ருப்தி புழுதியிலேயானாலும் அதற் கந்தப்புழுதி யொட்டாதுபோலே ஜ்ஞானிக்குப் பிறப்பிடம் லோகமேயானாலும் அவனுக்கு லோகவாசனை சேராதிருக்கும் என்கிறபடியே முமுக்ஷுவுக்குச் சம்ஸாரபீஜம் நசிக்கவேண்டும்.

(உ) "அக்நிர்வ்யாபகதீ பஞ்சசைத்யாம் கர்வவிவர்ஜயேத"

அக்னியிலே பிறந்தவிளக்கானது சீதளமான காற்றினாலே அமருமாபோலே, சாத்விகம் தலையெடுக்க அஹங்கார மமகாரங் கள் நிவ்ருத்தியாம் என்கிறபடியே சம்சாரபீஜம் நசித்தாலொ ழிய அஹங்கார மமகாரங்கள் நிவ்ருத்தியாகமாட்டா.

(௩) அகங்கார மமகார நிவ்ருத்தியானாலொழிய தேஹாபி மானம் போகாது.

(௪) தேஹாபிமானம் போனாலொழிய ஆத்மஜ்ஞானம் பிறக்கமாட்டாது.

(௫) ஆத்மஜ்ஞானம்பிறந்தாலொழிய ஐசுவர்ய போகாதிக ளிடத்தில் உபேக்ஷை பிறக்கமாட்டாது.

(௬) ஐசுவர்யபோகாதிக ளிடத்தில் உபேக்ஷை பிறந்தா லொழிய பகவத் ப்ரேமம் பிறக்கமாட்டாது.

(௭) பகவத் ப்ரேமம் பிறந்தாலொழிய விஷயாந்தர ருசி விடாது.

ரூபமாய் வந்திருக்கின்றபடியால் சாதுகோஷ்டிக்கு விநியோகார்ஹ மாகாது, அதவா, அதை விநியோகித்தாலும் விஷமிச்ர க்ஷீரம்போலே யாமென்றே ஐயப்படுகிறோம்; ஆகையால் இதைத்திருப்பிவிட்டு வாருங் கோளென்று ஆக்ஞையிட; அவர்க ளெடுத்துக்கொண்டு திரும்பி அரச னிடத்துக்குப்போய்த் தங்களாசார்யர் திருமுகப்படியிருந்தபடியைத் தெரிவித்து, இனி இந்த த்ரவ்யாபேக்ஷை தங்களுக் கிருப்பதில்லையென்

(௮) விஷயாந்த்ரருசி விட்டா லொழிய பாரதந்த்ரியம் பிறக்க மாட்டாது.

(௯) பாரதந்த்ரியம் பிறந்தாலொழிய அர்த்த காம ராக த்வேஷாதிக ளொழியா.

(௧௦) ராக த்வேஷாதிக ளொழிந்தாலொழிய ஸ்ரீவைஷ்ணவத்வம் கைகூடாது.

(௧௧) ஸ்ரீவைஷ்ணவத்வம் கைகூடினாலொழிய சாத்விக பரிக்ரஹம் பிறக்கமாட்டாது.

(௧௨) சாத்விகபரிக்ரஹம் பிறந்தாலொழிய பாகவத பரிக்ரஹம் பிறக்கமாட்டாது.

(௧௩) பாகவத பரிக்ரஹம் பிறந்தாலொழிய பகவத் பரிக்ரஹம் பிறக்கமாட்டாது.

(௧௪) பகவத் பரிக்ரஹம் பிறந்தாலொழிய அனன்ய ப்ரயோசன னாகமாட்டான்.

(௧௫) அனன்ய ப்ரயோசன னாகாதே அனன்யார்ஹ சேஷபூத னாகமாட்டான்.

(௧௬) அனன்யார்ஹ சேஷபூத னாகாதே அனன்ய சரண னாகமாட்டான்.

(௧௭) அனன்ய சரண னாகாதே அதிகாரி புருஷ னாகமாட்டான்.

(௧௮) அதிகாரி புருஷனானவனுக்கே திருமந்த்ரார்த்தம் கைகூடும்.

என்னுமிவற்றில் ஒவ்வொருமுறையிலும் பரீக்ஷார்த்தமாக ஒவ்வொன்றை யருளிச்செய்து, அனந்தரம் இவர் நாடிக் கேட்டதை யருளிச்செய்யாமலே வெறுமனே யிருந்துவிட்டார்; இவர்

றுரைக்க; அவன் இவர்களை யேறநோக்கித் தன்னிடத்தில் இவர்கள் தத்பூர்வத்தில் வஹித்திருந்த நைச்சியத்தையும் தற்காலத்தில் பெற்று வந்த தைர்யத்தையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப்பார்த்துக் கொஞ்ச நேரம் அசைவற்றிருந்து யோசித்து, மண்ணையும் பொன்னையுந் தேடும் அவாவில் மூழ்கி மாயுமவர்க்கு மாத்ரமே இவ்வுலகத்தில் பயமிருக்குமென்றும், தன்னையு மிறைவனையும் பகுத்தறிந்து அனுபவிக்கும் மஹாத்

அப்போதைக்கும் சலியாமலே நித்யமும் மாதூகரம்பண்ணி அமுது செய்து கொண்டு, நம்பிகளுடைய நியமனத்துக்; கெதிர் பார்த்துக்கொண்டு ஆறுமாசகாலம் காத்து அந்நாளில் ஒருநாள் இராமாநுஜர் திருப்பாவையை அநுசந்தித்துக்கொண்டே மாதூகரத்திற் கெழுந்தருளாநிற்கப், "பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாடச், செந்தாமரைக்கையால் சீரார்வளையொலிப்ப, வந்து திறவாய்" என்கிறவிடம் அநுஸந்தானமாகும்பொழுதில், நம்பிகள் திருமாளிகையின் தலைவாசலைக் கிட்டினவராக, அப்பொழுது உள்ளே பந்தும் கையுமாக விளையாடிக்கொண்டிருந்த தேவகிநாச்சியார் என்கிற நம்பிகள் திருக்குமாரத்தி, அந்ததிருக்கோலத்தோடேவந்து, மணிக்கதவந் தாள்திறக்க, இவரது திருக்கண்களுக்கு அந்தப் பெண்பிள்ளை பாசுரார்த்தப்படியே பந்துங் கையுமாக வந்து ஸேவைதந்தபடியால், நப்பின்னைப் பிராட்டியாகவே எண்ணிப் பஞ்சித்திருவடிகள் பாரிற்படிய அடிபெயர்த்து வந்து மெல்விரல்கள் சிவப்பெய்தத் தாள்திறப்பதே! என்று ஆனந்த புளகீக்ருதராய்த் தம்முடைய பொன்னொத்த திருமேனி புழுதியிற் புரளவிழுந்து தண்டன் சமர்ப்பித்துக்கிடக்க; அவ்வளவிலே அப்பெண்பிள்ளை பரபரப்புடன் ஓடி நம்பிகள் முன்னே நின்று கையைமுறித்துக்கொண்டு இதென்னவிபரீதம் ஐயா? மாதூகரத்திற்கு வருகிற த்ரிதண்டசன்யாசி, இற்றைப்பொழுதில் வருகையில்தானே கதவைத்திறவாயென் றழைத்துத், திறந்தமாத்ரத்தில் அடியேனை ஏறப்பார்த்து மோஹித்துத் தலைவாசலில் தரையிற் கிடக்கின்றாரே! என்று விண்ணப்பஞ்செய்ய; நம்பிகள் தேவகிநாச்சியாருடைய திருக்கோலத்தையும் பார்த்து, உடையவருடைய அநுசந்தான வைபவத்தையும் அறிந்துகொண்டு சடக்கெனத் தலைவாசலுக்கு வந்து, உடையவருடைய கிடக்கையைக்கண்டு, பக்வமாகத்தேற்றி, "உந்துமதக்களிற்றன்" பாசுரத்தை அநுசந்தித்துக்கொண்டு வந்தீரோ!

மாக்களுக்குப் பயமிருக்கமாட்டாதென்றும் உணர்ந்து, அவ்வுணர்வின் வழியாலே தான் ரக்ஷிக்கப்படுமாறும் இவர்களாதரணையால்தானே காணலாகுமென் றுணர்ந்து, அவ்வுகப்பின் மிகுதியாலே தலைவணக்கமுடையவனாகி, ஆசனத்தினின்றும் தொப்பென நிலத்திற் குதித்து இவர்களை நமஸ்கரித்து ஸ்வாமிகாள்! உங்களுக்கிப்படி நிர்ப்பயத்தை யுண்டாக்கி வைத்தருளின மகாத்மாவான உங்கள் ஆசார்யனுடைய க்ருபைக்கு அடியேனையும் ஆளாக்கி யருளவேண்டுமே யென்று இரக்கமுண்டாமாறு வேண்டிக் கொண்டான்.

திருப்பாவைஜீயரே? என்று கேட்க; இவரும் ஆமென்ன; அவர் இவருடைய அத்யவசாய மிருந்தபடியைத் தமது திருக்குமாரத் திக்கு அறிவித்து அபசாரக்ஷாபணம் பெற்றுக்கொள்ளாயெ ன்று நியமித்தருள; அவரும் அப்படியே இவர் திருவடிகளில் தண்டனிட்டு க்ஷமைபெற்றுக் கொண்டார்.

அனந்தரம் ஒருநாளில் இவர் நம்பிகளைத் தண்டன் சமர்ப் பித்துச் சேவிக்கையில் நம்பிகள் இவரைப்பார்த்து நீர் இப்பொ ழுது கோயிலுக்குப் போயிருந்து இனியொரு சமயத்தில் வாரு மென்று நியமித்தருள; இவர் பெரிய ஆர்த்தியோடே இணைமல ர்க் கண்ணீர்த் ததும்ப மீண்டு கோயிலேற வெழுந்தருளி யிருந் தார். அவ்வளவிலே, திருக்கோட்டியூரிலிருந்து நம்பிகளின் சிஷ் யரான ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வந்து பெரிய பெருமாளைச் சேவி த்து மீண்டு எழுந்தருளுந் தருவாயில் இவருடைய ஸ்ரீபாதத் திலே தண்டனிட்டுநிற்க, இவர் அவரிடத்தில் தம்முடைய ஆர் த்தியெல்லாம் தோன்றும்படிப் "பொன்னுழிக் கையார்க்குப் பூந்துழாய் முடியார்க்கிங் கென்னுவி யீடழித்தல் தகவலவென் றியம்பீரே" என்று விண்ணப்பஞ்செய்துப் போகவிட்டருள; அவர்சென்று நம்பிகளுடைய திருவடிகளில் இச்செய்தியை விண்ணப்பஞ்செய்ய; அவர் கேட்டருளி இராமாநுஜருடைய ஆர்த்தியிருந்த படியையறிந்தோம், ஆகிலும் நிராஹாரம்பண்ணி மாசோபவாச மிருந்து தண்டும் பவித்ரமுமாய் அவர் ஒருவரை மாத்ரமே வரச்சொல்லுமென்று அந்த ஸ்ரீவைஷ்ணவரையே யனுப்பியருள; அவர் வந்து உடையவருக்கு நம்பிகள் திருவுள் ளத்தை யறிவிக்க; உடையவர் அதற்கும் திருமுகம் வாட் டமில்லாமலே சம்மதித்து அங்கேறப்போய் நம்பிகள் திருவடி களில் தண்டன் ஸமர்ப்பித்துச் சௌம்ய நாராயணன் சன்னிதி யில் நிராஹாரம் பண்ணிக்கொண் டிருக்க; அப்பொழுதில் பதி னாறுநாள் கழிவதற்குள்ளாக இவருடைய திருமேனியெல்லாம் சுஷ்கித்துப் பதினேழாவது தினத்தில் இட்டகால் இட்டகைக ளாகிக் கிடக்க; அவ்வளவிலே அங்கிருந்த ஸ்ரீவைஷ்ணவர்க ளெ

அவனை ஆதரவுடனே கூட்டிக்கொண்டு வந்து, எம்பெருமானார் ஸந்நிதியில்விட்டு, வ்ருத்தாந்தத்தை விண்ணப்பஞ்செய்து ஸ்வாமி! இந்த ஆத்மாவுக்கு இப்போது ராஜஸ தாமஸங்களொழிந்து ஸத்வம் தலையெடு த்து வந்து தேவரீர் திருவடிகளை உய்யும் உபாயமாகப் பற்றுதற்கு அபி லாஷைகொண்டு நாடியிருக்கின்றபடியால் க்ருபைசெய்தருள வேண்டு மென்று புருஷாகாரஞ்செய்ய; எம்பெருமானார் அவனையும்உகந்து பஞ்ச

ல்லாரும் போரக்லேசித்து, நம்பிகள் வைத்திருக்கிற பத்யத்தைப் பார்க்கில், இனி இவ்வைஷ்ணவ மார்க்கம் அடங்கிவிடும் போலேகாண்கிறதே! என்று ஒருவரோடொருவர் வார்த்தையாடிக்கொண்டிருக்க; அதை முன்னே புருஷாகாரம்பண்ணின ஸ்ரீவைஷ்ணவர்கேட்டு, அதித்வரையாய் ஓடிவந்து இவர் கிடைக்கையைப் பார்த்து, மனம் தாளாமல் வாயிலறைந்துகொண்டு, நம்பிகளிடத்திற்போய் இப்படியும் இவரை ஈடழிப்பதே! என்று விண்ணப்பஞ்செய்ய; அப்பொழுதும் நம்பிகள் அந்த ஸ்ரீவைஷ்ணவரைப் பார்த்து நீங்கள் ஏதுக் கஞ்சுகிறீர்கள்; அந்த இராமானுஜர் இங்கிருக்கப் பெற்றாராகில் அறிய வேண்டுவனவற்றை இவ்விடத்தே அறிந்துகொள்ளாதொழியார்; அப்படிக்கின்றி மேல்வீட்டுக் கெழுந்தருளுவாராகில் அங்கே ஸ்ரீஆளவந்தாரிடத்தில் அறிந்துகொள்ளாதொழியார்; ஆகையால் ப்ரபன்னனுக்கு உபயவிபூதியிலும் நயமேயன்றி பயம் ஒருகாலும் நேரிடாதுகிடீர்! என்று அருளிச்செய்தார்.

அப்போது அந்த ஸ்ரீவைஷ்ணவர் தண்டனிட்டு இன்று தொடங்கி ஒரு சிறுங்கை தீர்த்தமாவது உட்கொள்ளும்படிக்கு நியமனமாக வேண்டியதென்று ப்ரார்த்தித்து நம்பிகளனுமதி பெற்றுக்கொண்டு வந்து, சௌம்யநாராயணனுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தில் ஒருசிறுங்கை தீர்த்தம் எடுத்து இவருக்குப் புகட்டித் தேற்றிவைக்க; அன்று தொடங்கித் தீர்த்தஹாரத்தைப் பண்ணிக்கொண்டு மாசத்தைப் பூர்த்திசெய்து, அனந்தரம் கூரத்தாழ்வானையும் முதலியாண்டானையும் கூட்டிக்கொண்டு நம்பிகள்

ஸம்ஸ்கார பூர்வகமாக ஆட்படுத்திக்கொண்டு, அகளங்கநாட்டாழ்வானென்னும் தாஸ்யநாமமும் ப்ரஸாதித்தருளி ஆழ்வானே? நீர் அரசனுகையாலே, தர்மாதர்ம ஸூக்ஷ்மங்களறியும் விவேகியாயிருப்பீராகையாலே, இன்றுதொட்டு நீர் நம்பெருமாளுடைய கார்யங்களில் லோபம்நேரிடாதபடி மேற்பார்வை வைத்து நடத்தவேண்டுமென்று நியமித்தருளினார்.

ஸ்ரீஎம்பெருமானார் திருவடிகளில் பிள்ளையுறங்காவில்லிதாஸரும் அளங்கநாட்டாழ்வானும் ஆஶ்ரயித்து மாட்சிபெற்றது.

முற்றிற்று.

திருமாளிகைக்கு மெள்ள மேன்மையிலே எழுந்தருளி ஸ்ரீபாதத்தில் தண்டன் ஸமர்ப்பித்திருக்க; அப்போது நம்பிகள் க்ருபையுடனே இவரை முடிபிடித்தெடுத்து, நாமும்மை ஒருவரை மாத்ரமே வரச்சொல்லியிருக்க, இருவரைக் கூட்டிக்கொண்டு வருவானேனென்று கேட்டருள? இவர் ஸ்வாமீ? தேவரீர் அடியேனைத் தண்டும் பவித்ரமுமாக வரும்படி நியமித்திருந்தபடியே, அடியேனுக்குத் தண்டும் பவித்ரமுமான இவர்களைக் கூட்டிக்கொண்டு வந்தேனென்று விண்ணப்பஞ்செய்ய; ஆகில் இவர்களில் யாரை த்ரிதண்டம் என்றீர்? யாரைப் பவித்ரம் என்றீர்? என்று நம்பி கேட்டருள; இவர் முதலியாண்டானை த்ரிதண்டம் என்றும் கூரத்தாழ்வானைப் பவித்ரம்என்றும் காட்டியருள; நம்பிகள் இவ்வார்த்தையை இவர்களுக்கொழிய மற்றெவர்க்குஞ் சொல்லாமல் கொள்ளுமென்று நியமித்தருளித் தம்முடைய பரமக்ருபையாலே, இவரை வலப்புறத்தில் வைத்துக்கொண்டு "ப்ரணவாத்யம் நமோ மத்யம் நாராயணபதாந்திமம் - மந்த்ரமஷ்டாக்ஷரம் வித்யாத் ஸர்வஸித்திகரம் ந்ருணாம் - முமுக்ஷூணாம் ஸதாஜப்யம் ஸ்க்திமுக்தி பலப்ரதம் வைஷ்ணவாநாம் ஸதாஜப்யம் ஸக்திஜ்ஞாந ப்ரவர்த்தநம்" என்கிறபடியே எட்டுத்திருவக்ஷரமாய்ப், பதத்ரயாத்மகமாய் ஜ்ஞானபக்தி வைராக்யஜனக மாகையாலே முமுக்ஷூகளுக்கு நாத்தழும்பெழ ஸதா அநுஸந்தேயமான "நலந்தருஞ் சொல்" என்கிற பெரிய திருமந்த்ரார்த்தத்தை ப்ரஸாதித்தருளினார்; இவரும் பசியன் சோற்றைக் கண்டாற்போலே அநுபவித்து க்ருதார்த்தராய்:—

உடையவர் திருமந்த்ரதானம் செய்தல்.

அந்த மஹார்த்தத்தை க்ரஹிக்கும் பொருட்டு, நம்பிகளையுகப்பிக்கத் தாமடைந்த சிரமத்தை நன்றாக நினைவிற்கொண்டு, இப்படி ப்ராணபர்யந்தமான பரீக்ஷைக்குட்பட்டு இந்தமஹார்த்தத்தை க்ரஹிக்க வேண்டுபவர்கள் இவ்வுலகின்கண் கோடியிலொருவர் உண்டாகார்களென்றால் இந்தத் தர்சனம் பூமியில் பரவாதிருக்கைக்குக் காரணம் சொல்லவேண்டியது முண்டோ! என்றும், நாமும் இந்த க்ரமத்தையே பற்றுவோமாகில் ஸ்ரீ ஆளவந்தார் திருவுள்ளக்குறிப்பைத் தலைக்கட்டிவைக்க நம்மாற் கூடாதன்றோ! என்றும், பலபலவகையாய்அன்றிரவெல்லாம் தம்மில்தாமே சிந்தித்துக்கொண்டிருந்து, அதின் மற்றைநாள் அந்

தத் திவ்யதேசத்தில் எம்பெருமான் திருவோலக்கத்தி லெழுந்தருளி, அனேகம் ஸ்ரீவைஷ்ணவருக்கு மத்தியில் நின்று, வள்ளலாய்க்கொண்டு, நம்பிகளிடத்தில் கேட்டறிந்த மந்த்ரார்த்தத்தை ஸவிஸ்தாரமாக அனைவர் செவிகளிலும் படும்படி, திருவாய் மலர்ந்தருளித் தானஞ்செய்து, அதினால் திருமேனி பூரிக்கப்பெற்றுக் கராவின் வாய்ப்பட்ட கஜேந்த்ரனைக் கடாக்ஷித்து நின்ற வரதனைப்போலே கோஷ்டிகளைக் கருணையோடு திருக்கண்களால் நோக்கி மகிழ்வெய்தினார்; அவ்வளவிலே, இச்செய்தியை நம்பிகள் கேட்டருளி, இவரை அழைத்து, நாம் உம்மைப் பலபடியாலும் சோதித்து ஒருவர்க்குஞ் சொல்லலாகாதென்று நியமித்து அதிரஹஸ்யமாக ப்ரஸாதித்த பெரிய திருமந்த்ரார்த்தத்தை நீர் பெருமாள் திருவோலக்கத்தில் பெருந்திரளிலே நின்றுகொண்டு, யாவர்செவியிலும் விழும்படியாய் வெளியிட்டீரென்று நாம் கேட்டோமே! இது உண்மைதானோ? என்று கேட்டருள; இவர் ஸ்வாமீ? இது உள்ளதே; அடியேன் தேவரீர் திருவடிகளை முன்னிட்டுக்கொண்டு சொல்லி யிருக்கிறேனென்று விண்ணப்பஞ்செய்ய; நம்பிகள் நீர் அதை ஒருவருக்குஞ் சொல்லலாகாதென்று நியமித்தன்றோ சொல்லிவைத்தோம்! அதை மறுத்து இப்படி செய்த உமக்குப் பலம் எதுவாகுமென் றெண்ணுகிறீரென்ன? இவர் ஆசார்ய நியமனத்தை மறுத்த அடியேனுக்கு நரகமொழிய வேறெதுவு மிருக்காது என்று கைகுவித்து நம்பிகள் திருவடிகளை நோக்கிக்கொண்டு தலைகுனிந்தபடி நிற்க! நம்பிகள் ஐயோ!! இதை அறிந்திருந்தும் செய்வானேனென்று கேட்டருள; இவர் அடியேன் ஒருவன் நரகம் புகுவதைப்பற்றிச் சிந்திக்கவேயில்லை, தேவரீருடைய திருவடிகளைமுன்னிட்டுக்கொண்டு சொல்லுகையாலே, இவ்வாத்மகோடிகளெல்லாம் அந்த ஸம்பந்தத்தாலே உஜ்ஜீவிப்பர்களன்றோ! என்று சொல்லிவிட்டே னித்தனை என்று விண்ணப்பஞ்செய்தார்; அப்பொழுது நம்பிகள் இவருக்கிருந்த பரஸம்ருத்தி நமக்குக் கூடிற்றில்லையே! என்று இவரைப்போர உகந்தருளி, எம்பெருமானாரே? வாருமென்று தழுவி அணைத்துக்கொண்டு, ** அவர்தானோ! நீர் என்றருளிச் செய்து, அந்த உகப்பின் மிகுதியாலே, முதலிகளைப் பார்த்து

** அவர்தானோ! என்கையால் முன்பொருகால் சேனைமுத்ரத்தில் அர்ஜுனனுக் கருள்புரிந்த கீதாசார்யனோ! என்று பொருளாம்.

கண்டீர்களோ முதலிகாள்? இதுவரையில் இந்தத் தர்சனம் பரம வைதீக சித்தாந்த மெனப்பெயர் வஹித்திருந்தது; இன்று முதல் இது "எம்பெருமானார் தர்சனம்" என்னநின்றது; ஆகையால் நம்மவர்க ளெல்லாரும் இதை எம்பெருமானார் தர்சன மென்றே சொல்லக் கடவீர்கள் என்றருளிச்செய்தார்.

அனந்தரம் நம்பிகள் உடையவரைக் கூட்டிக்கொண்டு ஒரு புறத்தி லெழுந்தருளி, எம்பெருமானாரே? இவ்வளவிலே நீர் த்ருப்தரா யிராநின்றீரே; இன்னும் உமக்கு ஒருபரம ரஹஸியார்த்தஞ் சொல்வதாக இராநின்றோம்; ஆகையால் அதற்கு உம்முடைய அத்யவசாயத்தைச் சொல்லிக் காணீரென்ன; இவர் ஸ்வாமீ? தேவரீர் அருளிச்செய்த அர்த்தத்துக்குமேலே இன்னு மொன்று உண்டென் றிருந்தேனாகில் அவிசுவாசி யாவேன்; தேவரீர் நியமித்திருக்கிறபடியே கேளாதிருந்தேனாகில் அருளிச்செய்திருக்கிற அர்த்தமும் நெஞ்சில்படப் பெற்றிலே னாவேன் என்று தோன்றுகையால், விண்ணப்பம் செய்துகொள்ள விரகறியாமல் சுரோதவ்ய சாபேக்ஷனாய் வியாகுலாந்தஃ கரணனா யிராநின்றேனென்று விண்ணப்பஞ்செய்ய; நம்பிகள் இப்போது நீர்போய் மற்றொருமுறை நீர் ஒருவருமே ஏகாந்தமாய் வாரு மென் றருளிச்செய்ய; இவர் கோயிலேற வெழுந்தருளினார்.

திருக்கோட்டியூர் நம்பி எம்பெருமானுக்குச் சரமசுலோகார்த்தம் ப்ரஸாதித்தல்.

பின்பு உடையவர் திருக்கோட்டியூருக்குத் தனியே எழுந்தருளி நம்பிகளைத் திருமாளிகையிற் காணாமையாலே தேவகி நாச்சியாரைப் பார்த்துத், திருத்தகப்பனார் எங்கே என்றுகேட்டருள; அவர் மேல்தளத்தி லிருக்கிறாரென்ன; இவர் மேலே எழுந்தருளிப் பார்க்க; அப்பொழுது நம்பிகள் தியானசமாதியி லெழுந்தருளியிருக்க; அரவஞ்செய்ய லாகாதென்று இறங்கிவந்து கூடத்திலிருக்க; அனந்தரம் ஒருமுஹூர்த்தப்பொழுது கழிந்தவாறே நம்பிகள்வர; இவரெழுந்து தண்டனிட்டுக்கிடக்க; அவர் இவரை இருகையாலும் எடுத்து கையைப்பிடித்து அழைத்துக் கொண்டுஏகாந்தமாக மேல்தளத்திலேறிப்படிக்கதவைவிழவிட்டு எழுந்தருளியிருந்து ஒருவருக்குஞ் சொல்லாதபடி திருவடிகளைத் தொடுவித்துச் * சூளறவு கொண்டு தம்முடைய நிர்ஹேதுக

* சூள்-ஆணை. சூளறவு-ஆணையிட்டுத் தர்மத்தைப் பேணுதல்.

க்ருபையாலே "ஸர்வகுஹ்யதமம் பூய: ஶ்ருணுமே பரமம்வச:-
இஷ்டோஸிமேத்ருடஇதி ததோவக்ஷ்யாமிதேஹிதம்" என்கிற
படி சமஸ்த ரஹஸியோத்தமமான ஹிதவசனத்தை உனக்குச்
சொல்லுகிறேன் நீ த்ருடாத்பவ சாயனாயிருந்து கேழ்க்கக் கட
வாயென்று குந்தீபுத்ரனான அர்ஜுனனுக்குக் கீதாசார்ய னரு
ளிச்செய்ததுபோல, இவருக்குப் பரமரஹஸியமான சர்மஶ்லோ
கத்தை அருளிச்செய்து அதினால் ப்ரதிபாதிக்கப்படுகிற இத
ரோபாயத்யாக பூர்வகமான ஸித்தோபாய வைலக்ஷண்யத்தை
யும் ப்ரஸாதித்து, இந்தப் பரம ரஹஸியார்த்தத்தை "இதந்தே
நாத பஸ்காய நாபக்தாய கதாசந-நாசாஶுஶ்ரூஷவேவாச்யம்
நசமாம் யோப்யஸூயதி" என்கிறபடி பகவத்விமுகர் முதலான
நாஸ்திகர் செவிப்படாதபடி பேணிக்கொண்டு போருமென்று
நியமித்தருள, அவ்வேளையில் இவர் ஸ்வாமீ? அப்படிப்பட்டவர்
களுக்கு அடியேன் சொல்லக் கடவேனல்லேன், ஆகிலும் பகவத்
ப்ரவணரான கூரத்தாழ்வானுக்கு மாத்ரம் சொல்ல வொண்ணு
தோவென்று விண்ணப்பஞ்செய்ய, அதற்கு நம்பிகள் அவருக்கு
இவ்வர்த்தங்கேட்க அதிகார முண்டேயாகிலும் "ஸம்வத்ஸரந்
ததர்த்தம்வா மாஸத்ரய மதாபிவா - பரீக்ஷ்யவிவிதோபாயை:
க்ருபயாநிஸ்ப்ருஹோவதேத்" என்கிறபடியே பஹுப்ரகாரத்
தாலும் அவருடைய அத்யவசாயத்தை அறிந்து ஒரு ஸம்வத்சர
காலம் சிஶ்ருஷைகொண்டு அனந்தரம் சொல்லக்கடவீரென்று
நியமித்தருளினார். அதின் மற்றைநாள் இவர் நம்பிகள் ஸ்ரீபாத
த்தில் தண்டன் ஸமர்ப்பித்து, அடியேன் நேற்றையபொழுது
தேவரீரைத் தேடிப்பார்க்கையில் மேல் தளத்தில் தேவரீர்
த்யான சமாதியில் இருந்தீரே, அதற்கு விஷயமேது, மந்த்ர
மேது, இவ்விரண்டையும் தெரிந்துகொள்ள விருப்புற் றிருக்கி
றேன் என்று விண்ணப்பஞ்செய்ய, நம்பிகள் இவரை உவப்புட
னே நோக்கி, ஸ்ரீஆளவந்தார் கோயிலில் எழுந்தருளி இருந்த
பொழுது அவர் வடத்திருக்காவேரியிலே குனிந்து கவிழ்ந்து
ஸ்நானஞ்செய்கையில் சிவந்து அழகியதாய்ப் பொற்கடாரங்
கவிழ்ந்தாற்போலே காணும் பின்னழகே அல்லும்பகலும் நம்
முடைய த்யானத்திற்கு விஷயம், அவருடைய திருநாமமான
ஆறு அக்ஷரங்களே அந்த த்யானத்திற்கு மந்த்ரம் என்று அரு
ளிச்செய்தார்; இவர் இத்தனையுங் கேட்டருளி, ஸ்ரீஆளவந்தா

ரை நாம் சேவித்து அனுபவியாத இழவை நம்பிகளிருந்தன்றோ தீர்த்துக் கொடுக்கின்றாரென்றெண்ணி, "மாயனன்றோதிய வாக்கதனை"க் கேட்டு, யதார்த்த ஜ்ஞானமுடையவராய், நம்பிகளுக்கு ஸ்ரீஆளவந்தார் பக்கல் கனத்திருக்கும் பக்தியை யறிந்து "மெய்மை பெறு வார்த்தை விஷ்ணுசித்தர் கேட்டிருப்பர்" என்கிறபடியே நிர்ப்பரராய், அவ் வநுசந்தானத்தால் வந்த ப்ரீத்யுத்ருதியா லுண்டான ராஜகுல மஹாத்மியத்தோடும் விடைகொண்டு கோயிலுக் கெழுந்தருளினார்.

எம்பெருமானார் கூரத்தாழ்வானுக்குச் சரமஶ்லோகார்த்தம் ப்ரஸாதித்தல்.

அப்போது, கூரத்தாழ்வான் வந்து இவர் ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு நிற்க, இவர் அவரைப் பார்த்தருளி, ஸ்ரீஆளவந்தார் நம்மை விசேஷ கடாக்ஷம்பண்ணிப் பேரருளாளனை நோக்கி ப்ரபத்திபண்ணி யருளினது ஸபலமாம்படி. நம்பிகள் நம்மை வாழ்வித்தருளினார் கண்டீரோ! என்று அகமகிழ்ந் தருளிச்செய்து இந்தமுறையில் நாம் நம்பிகளிடத்தில் பெற்றுக்கொண்டு வந்திருக்கிற பொருளை உமக்கு சொல்ல வேண்டுமாகில், உம்மை ஒரு ஸம்வத்ஸரகாலம் சிஶ்ருஷைகொண்டு பஹுவிதத்தில் உம்முடைய அத்யவசாய பாஹுள்யத்தை யறிந்து சொல்லும்படியாய் நியமித்திருக்கின்றாரென்ன; ஆழ்வான் ஸ்வாமீ? அப்படியாகில் ஒரு ஸம்வத்ஸரமளவும் இச்சரீரத்திற்கு நிலையுண்டென்பதற்கு எங்ஙனம் கூடும் என்று விண்ணப்பஞ்செய்ய; இவர் ஆழ்வானுடைய பேராசையைக்கண்டு, உகந்த உள்ளத்தராய், ஆழ்வானே? ஆசார்யன் சன்னிதியில் ஒருமாசம் உபவசித்திருந்தால் ஸம்வத்ஸர சிஶ்ரூஷா ஸமமாகுமென்று சாஸ்த்ரஞ் சொல்லுகையால் அங்ஙனமாவது செய்யுமென்று நியமிக்க; ஆழ்வானும் அதை லபித்துக்கொண்டா லல்லது, தரியாத ஆர்த்தியோடே மாச உபவாச மிருந்து, பிறகு வந்து ப்ரஸாதிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்க, அப்போது சரமஶ்லோகார்த்தத்தை யருளிச்செய்தார்.

எம்பெருமானார் முதலியாண்டானைத் திருக்கோட்டியூர் நம்பிகள் அநுமதி பெற்றுக்கொண்டு வரும்படி செய்து சரமஶ்லோகார்த்தம் ப்ரஸாதித்தல்.

அப்போது முதலியாண்டானும் வந்து இவர் திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து, அடியேனுக்கும் இவ்வர்த்தம் ப்ர

ஸாதித்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க; இவர் ஆழ்வானொருவனுக்கு மாத்ரமே நாம் கேட்டுக்கொண்டதும் நம்பிகள் நியமித்திருப்பது மாகையாலே, நீர் அவர் ஸ்ரீபாதத்தேறச் சென்று கேட்கவேண்டுமென் றருளிச்செய்ய; முதலியாண்டான் அப்பொழுதே விடைகொண்டு திருக்கோட்டியூருக்குச் சென்று, நம்பிகள் ஸ்ரீபாதத்தில் தண்டனிட்டு ஆறுமாசகாலம் காத்திருந்தும் நம்பிகள் முகங்கொடாமலே யிருந்து, பின்பு ஒருநாளளவில் தமக்கே க்ருபை பிறக்க ஆண்டானைப்பார்த்து நம்முடைய ராமாநுஜ பரிக்ருஹீ தனைப்போலே இருந்தீரென்ன; அப்போது ஆண்டான் அடியேன் தாசரதீஎன்று விண்ணப்பஞ் செய்து நிற்க; ஆகில் வந்த தேதுக்கென்று கேட்டருளச், சரமாஹஸ்யார்த்தத்தை அடியேனுக்கும் ப்ரஸாதித்து ரக்ஷித்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க, அதற்கு நம்பிகள் "வித்யாமதோ தநமத ஸ்த்ருதீயோ பிஜநாந்மதஃ - ஏதேமதாவலிப்தாநா மேதஏவஸதாந்தமாஃ" என்கிறபடியே வித்தையில்மிஞ்சி யிருக்கிறோமென்று எண்ணுகிற மதமும், த்ரவ்யத்தில் மிஞ்சினவனா யிருக்கிறோமென்று எண்ணுகிற மதமும், உயர்ந்தகுலத்தில் பிறந்திருக்கிறோமென்று எண்ணுகிற மதமும், ஆகிய இம் முக்குறும்புகளையும் ஜ்ஞான, பக்தி, வைராக்கியம் என்னும் இம்மூன்று அங்குசங்களாலே கண்டித்து ஒழித்துக் கொள்ளுபவர்க்கே கொடுப்பதாகிற மேம்பொருளை நீர் நாடிக்கேட்கின்றீர் ஆகையாலே இம்மூன்றும் உம்மிடத்தில் ஒழிந்திருக்குமாகில் எம்பெருமானாரே உமக்கிரங்கி யருளுவார், நீரஞ்சாதே போமென்று சாதித்துத், தம்முடைய திருவடித்தாமரைகளை ஆண்டானுடைய உத்தமாங்கத்தைப் பூஷிக்கும்படி ப்ரஸாதித்து விடைகொடுத்தருள, ஆண்டான் சமதமாதி ஆத்மகுணங்களை மிகவும் பெருக்கினவராய்க் கோயிலுக்கெழுந்தருளி, விபீஷணாழ்வான் பெருமாள் திருவடிகளிலே சரணம் புகுந்தாற்போலே எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்று, தம்முடைய ஆர்த்தியெல்லாம் தோன்றும்படிவந்து இவர் ஸ்ரீபாதத்தில் தண்டன் ஸமர்ப்பித்துக்கிடக்க, இராமாநுஜர் சன்னிதி முதலிகளைப் பார்த்து ஆண்டான் நம்பி ஸன்னிதியில் ஸ்வரூப சிக்ஷைபெற்றுவந்த வேஷமிருந்தபடியைக் கண்டீர்களோ? வென்றருளிச் செய்து ஆண்டானை முடிபிடித்தெடுத்துச், சென்றகார்ய மென்னவாயிற்றென்று கேட்ட

ருள, ஆண்டான் நம்பிகளருளிச் செய்தபடியை விண்ணப்பஞ் செய்து ஸவினயராய் நிற்க, இவர்மிகவும் உகப்போடே ஸர்வ குஹ்யதமமான சரமச்லோகார்த்தத்தை உபதேசித்தருளி, அதிசந்துஷ்டராகி, இப்போதன்றோ நமக்குந் தண்டும் பவித்ர மும் கைபுகுந்ததென் றருளிச்செய்தார்.

எம்பெருமானார் திருமாலையாண்டான் சன்னிதியில் ஈடுகேட்டல்.

அனந்தரம் சிலநாள் கழிந்தவாறே திருக்கோட்டியூர் நம்பி கள் கோயிலுக்கெழுந்தருளி, நம்பெருமாளைச் சேவித்துப் புறப் பட்டுத் திருமாலை யாண்டானையும் அழைத்துக்கொண்டு, எம் பெருமானார் மடத்திற்கெழுந்தருளி, எம்பெருமானாரே? நீர் திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழிக்கு அர்த்தம் கேளுமென் றுரைத்துத் திருமாலையாண்டான் திருக்கையிலே காட்டிக்கொடுத்து மீண்டு திருக்கோட்டியூருக் கெழுந்தருளி னார். பின்பு திருமாலையாண்டான் நம்பிக ளருளிச்செய்தபடியே, திருவாய்மொழிக்கு அர்த்தஞ்சொல்லத்தொடங்கி நடத்தாநிற்க, ஸ்ரீஆளவந்தா ரருளிச்செய்தபடியே அர்த்தம் நிர்வஹித்துப் போருகையில், எம்பெருமானார் பாசுரங்கள்தோறும் சிலஅர்த்த விசேஷங்களைப் ப்ரதிபாதித்து அருளிச்செய்ய, அவற்றுக்கு ஆண்டான் ஸ்ரீஆளவந்தார் இப்படி அருளிச்செய்யக் கேட்டறி யோ மென்றுரைத்து, "அறியாக்காலத்துள்" என்கிற பாசுரத் திற்கு அறிவு நடையாடாத தசையிலே சம்பந்த ஞானத்தைப் பிறப்பித்து, அப்படி பிறந்த ஞானத்தை அழிக்கக் கடவதான தேஹசம்பந்தத்தோடே பின்னையும் வைத்தாய் என்கிற இழ வாலே ஆழ்வார் அருளிச்செய்கிறார் என்று வ்யாக்யானஞ்செ ய்ய, எம்பெருமானார் கேட்டருளி முற்பட்ட பாசுரங்களும் பிற் பட்ட பாசுரங்களும் பெரிய ப்ரீதியோடே நடவாநிற்க, நடுவே அப்ரீதிதோன்றச் சொல்வது சேராதாகையாலே "அறியா மாமாயத் தடியேனை அறியாக்காலத்துள்ளே அடிமைக்கணன்பு செய்து வைத்தாயால்" என்றருளிச் செய்வதாகுமென்று உப கார ஸ்ம்ருதிபரமாக்கி அர்த்த மருளிச்செய்ய, ஆண்டான்கேட் டருளி இது விஸ்வாமித்ர ஸ்ருஷ்டிபோல் காண்கிறதே! இப்படி ஆளவந்தார் அருளிச்செய்ய நாம் கேட்டறியோம் என்று வ்யா க்யான மருளிச்செய்கையைத் தவிர்ந்திருந்தார். இச்செய்தியைத்

திருக்கோட்டியூர் நம்பிகள்கேட்டுக், கோயிலில் திருமாலையாண்டான்பக்கலிலெழுந்தருளித் திருவாய்மொழிக்கு அர்த்தம் நடக்கிறதோ வென்று கேட்க, ஆண்டான் அடியேன் ஆளவந்தார் பக்கல் கேட்ட அர்த்தமொருபக்கமிருக்க, இவர் வேறேசில அர்த்தங்களை ஸ்வகல்பிதமாகச் சொல்லுகையாலே தவிர்ந்திருக்கிறேன் என்ன, நம்பிகள் எம்பெருமானார் சொன்னது ஏதென்ன, "அறியாக்காலத்துள்" என்கிற பாசுரார்த்தம் உபகார ஸ்ம்ருதியாக வேண்டுமென்றார் என்ன, நம்பிகளதைக்கேட்டுச் சந்தோஷித்து ஆண்டானைத் தழுவிக்கொண்டு, இவ்வர்த்தத்தை ஆளவந்தார் அருளிச்செய்ய நாம் கேட்டிருக்கிறோமே! என்றருளிச்செய்து, திருவாய்ப்பாடியில் வளர்ந்தவன் சாந்தீபன் பக்கல் வேதாத்யயனம் பண்ணினாற்போலே காணும் இந்த எம்பெருமானார் உம்முடைய பக்கல் திருவாய்மொழிக்கு வ்யாக்யானம் கேட்பது, இவர் மனதில் ஸ்ரீ ஆளவந்தார் திருவுள்ளத்திலுள்ள அர்த்தமொழிய வேறே தோன்றாதென்றிரும் என்றும், இவருக்கு நீர் அஜ்ஞாத ஜ்ஞாபனம் பண்ணுகிறோமென்றிராதீர் என்றும் அருளிச்செய்து, அவரையும் பெரியநம்பிகளையும் கூட்டிக்கொண்டு, எம்பெருமானார் மடத்திற்கெழுந்தருள, அப்பொழுது எம்பெருமானார் அதிப்ரீதியுடன் எதிர்கொண்டு வந்து, தானுந்தடக்கையுங் கூப்பி இவர்கள் திருவடிகளில் சேவித்து நிற்க, நம்பிகள் இருவரும் ஆண்டானைநோக்கி, இனி, திருவாய்மொழியில் விட்ட தறுவாய் தொடங்கி நீரே அநுவர்த்தித்தாகிலும் ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுமென்று அருளிச்செய்து மீண்டெழுந தருளினார்கள். பின்னையும் ஆண்டானால் திருவாய்மொழி தொடங்கப்பட்டு நடவாநிற்கச்செய்தே, மீண்டும் ஒரு அர்த்த ப்ரஸ்தாபத்திலே, ஆண்டான் ப்ரதிபாதித்த அர்த்தத்தை எம்பெருமானார்கேட்டு, ஸ்ரீ ஆளவந்தார் இப்படி அருளிச்செய்யார் என்று விண்ணப்பஞ்செய்ய, ஆண்டான் நீர் ஆளவந்தாரைக் கண்ணாலுங் காணாதிருக்க, இப்படி அருளிச்செய்யாரென்கைக்கு நிதான மேதென்று கேட்டருள, எம்பெருமானார் த்ரோணாசார்யனுக்கு ஏகலவ்யன்போலன்றோ! அடியேனும் ஸ்ரீ ஆளவந்தாருக்கு என்று விண்ணப்பஞ்செய்ய, அப்போது ஆண்டானுக்குத், திருக்கோட்டியூர் நம்பி உரைத்திருந்தது தோற்றி, இதுவும் ஒரு திருவவதாரமே! என்று மனதுட்கொ

ண்டு எம்பெருமானரே? நாம் ஆளவந்தார்பக்கல் கேளாத அர்த்தங்களை யெல்லாம் இங்கே கேட்டோமென்றுரைத்து எழுந்து தண்டனிட்டருளினர். பின்பு எம்பெருமானர் திருவாய்மொழி சாற்றிப் போரப்ரீதரா யெழுந்தருளினர்.

எம்பெருமானர் திருவரங்கப்பெருமாளரையர் சன்னிதிகாத்துப் பஞ்சமோபாய நிஷ்டையை லபித்துக்கொள்ளுதல்.

அவ்வளவிலே பெரிய நம்பிகள்வந்து எம்பெருமானரே? இன்னுமொருஅர்த்தவிசேஷத்தையும் ஸ்ரீஆளவந்தார் ஆழ்வார் திருவரங்கப்பெருமாளரையர் பக்கலிலே வைத்துப் போயிருக்கிறாராகையாலே நீர் அவர் பக்கல்போய்க் கேளுமென்றருளிச்செய்ய, இவர் அதை லபித்துக்கொள்ளுகைக்காக, அன்றுமுதல் ஆறுமாஸகாலம் அரையருக்கு உகப்பாகப்பாலமுது காய்ச்சிக் கொண்டுபோய் ஸமர்ப்பித்தும், திருவத்யயன காலங்களிலே அரையர்திருமேனிக்கு அனுரூபமாக மஞ்சட்காப்பு அரைத்து சமர்ப்பித்தும் அநுவர்த்தித்துப் போந்து ஒருநாள் அரையரை நீராடப் பண்ணுகிறபோது அன்று அரைத்துவைத்த மஞ்சட்காப்பு அவர்திருமேனிக்கு அநுகுணமாயிராதிருந்தபடியை அவருடைய திருமுகமண்டலவிகாரத்தினல் கண்டுகொண்டு, அந்தப் பாத்ரத்தைக் கடக்கவைத்து, அப்போதே வேறேபாங்காக அரைத்து ஸமர்ப்பித்து நீராடப்பண்ணியருள, அரையர் அதை யறிந்து மிகவும் திருவுள்ளமுகந்தருளி, இவரைக் குளிர நோக்கி, நீர் நம்முடைய ஸர்வஸ்வத்தையும் கொள்ளைகொள்ளவோ! இப்படி செய்தீரென் றருளிச்செய்து, எம்பெருமானரே? உமக்கு ஒரு சரமபுருஷார்த்தம் சொல்வோம் கேளீரென்று தேவுமற்றறியாத ஸ்ரீமதுரகவியாழ்வாரைப்போலே "குருரேவ பரம் ப்ரஹ்ம குருரேவ பரந்தநம் - குருரேவபரஃகாமோ குருரேவ பராயணம் - குருரேவபராவித்யா குருரேவபராமதிஃ - யஸ்மாத் ததுபதேஷ்டாஸௌ தஸ்மாத்குருதரோ குருஃ" என்கிறபடி ஆசார்யனையே தொழத்தக்க தெய்வமென்றும், அடையப்படுகிற கதியென்றும், தேடத்தக்க நிதியென்றும், கற்கத்தக்க வித்தையென்றும், காமிக்கத்தக்க வஸ்துவென்றும் விசுவசிக்கத் தக்கது என்று சொல்லி யிருக்கிறபடியே, தீமனங்கெடுத்தும், மருவித் தொழும் மனமே தந்தும், அறியாதன அறிவித்த ஆசார்யனையே உபாய உபேயமென்றும் விசுவசித்து "ஆசார்யஸ்

ஸஹரிஸ் ஸாக்ஷாச் சரரூபீ நஸம்ஶய:” என்றும், “பீதகவா டைப்பிரானார் பிரமகுருவாகிவந்து” என்றும் சொல்லுகிறபடி யே, உறங்கும்பெருமாள்தானே உலாவும்பெருமாளாய் வந்தார் என்றறிந்து கொள்ளக் கடவீரென்று, பஞ்சமோபாய நிஷ்டை யான சரம பதார்த்த விசேஷத்தை ப்ரஸாதித்தருளினார்.

எம்பெருமானார் பல ஸ்ரீபாதங்களிலும் உபதேசம் பெறுகைக்கு அடி.

இவர் பெரியநம்பிகள் ஸ்ரீபாதத்தில் ஆஶ்ரயித்தபோதே ஸ்வரூப ஸித்தியுண்டாயிருக்கப், பலருடைய ஸ்ரீபாதங்களிலும் உபதேசங் கேட்கைக்கும், அவர்களும் தாமே மேல்விழுந்து வந்து ஒவ்வோ ரர்த்த விசேஷங்களை உபதேசிக்கைக்கும் அடி யென்னென்னில், அரசனா யிருந்தா னொருவன் ஸ்வகுமா ரார்த்தமாகப், பல மந்த்ரிகளிடத்தில் நிதிகளை வைத்துக் குமாரன் ப்ரபுத்தனானவாறே கொடுக்கச் சொல்லிப் போமாபோலே, ஸ்ரீஆளவந்தார் தம்முடைய சரமதசையிலே இவ்வாசார்யர் களைக் கடாக்ஷித்து, முதலிகாள்? ஸ்ரீஇளையாழ்வாரை நாம் ஆமுதல்வனென்று கடாக்ஷித்து, அவரைப் பெருமாள் கோவிலி னின்றும் இங்கே எழுந்தருளுவிக்கப் பார்த்தோமன்றோ! ஆகை யால் அவருடைய ஸம்பந்தம் உங்களுக்கு விலக்ஷண முண்டா க்குமென்றிருந்து, இப்போதுங்களிடத்தி லுபதேசித்து வைத் திருக்கிற அர்த்த விசேஷங்களை அவருக்கறிவிக்கக் கடவீர்களெ ன்று நியமித்திருக்கையாலே, எம்பெருமானார் அவர்பக்கல் நேரேபெறாத இழவுதீர இவர்கள் பக்கல் அவற்றைப் பெற்றுக் கொண்டார். ஆகையாலிறே எம்பெருமானா ரிவ்வாசார்யர்களுக் குச் சிஷ்யரெனினும் ஒக்கும், ஆசார்யரெனினும் ஒக்கும்-எங்ங னேயெனில், இப்புடைகளால் முற்பட்டவர்களான இவர்கள் இவருடைய விலக்ஷண ஸம்பந்தம் வேண்டியே மேல்விழுந்து வந்து ஒரோ அர்த்தவிசேஷங்களை யுபதேசித்து இவருக்கு ஆசார்யர்களாகி வீறுபெற்றார்களென்றும், பிற்பட்டவர்கள் சிஷ்யர்களாகி ஸ்வரூபம் பெற்றார்களென்றும் சித்தாந்த முண் டாகையாலே, பல மணிகளால் கோத்த ஒருஹாரத்தி னடுவே ஒரு சாதிமாணிக்கம் கிடந்து அவற்றைச் சோபித மாக்குமா போலே, ஆசார்ய கோவையாகிற ஹாரத்தினடுவே இராமாநுஜ முனியாய் மத்யமணி யானாரென்னக் குறையில்லையிறே.

எம்பெருமானார் கோங்குபிராட்டிக்கு இரங்கியருளல்.

எம்பெருமானார் இப்படி மேன்மையும் உபயவிபூதி நாயகத்வமும் பெற்றிருக்கச் செய்தே, நித்யமும் ஏழகத்தில் மாதூகரம் பண்ணிக்கொண்டு அமுதுசெய்யும் க்ரமத்தை வஹித்தருளினார். அக்காலத்தில் மேல்நாடுகளில் மாரியில்லாமல் க்ஷாமம் ப்ரபலமாயிருந்தபடியால் * கொங்குதேசத்தில் கொள்ளைக்களமென்கிற அக்ரஹாரத்தி லிருந்து கோவிலை ஆஸ்ரயமாகப் பற்றி வந்திருந்த, சுமதியென்னுந் திருநாமமுடைய ஒரு அம்மையார், இவருடைய மாட்சியைப்பார்த்து, ஓரானொருநாளில், தானிருக்கும் அகத்தில் இவர் மாதூகரத்திற்காக வெழுந்தருளுகையில் இவ்விதம் பிக்ஷைபண்ணிப்போகும் ஒரு சன்னியாசியினால், என்னகிடைக்கப் பெறலாமென்று, அரசனே தொடக்கமான அனைவரும் ஆட்செய்து வாசல்காப்பா ரானார்களென்று, தன்னில்தானே யோசித்து, ஒன்றுந் தோன்றாதவளாகி, மற்றைநாள் பகலில், இவரெழுந்தருளினவுடனே, மேல்தளத்தினின்று சடக்கென இறங்கிவந்து, இடைகழியில் காத்திருந்து, இவர் அந்த அகத்தில் ப்ரஸாதம் பெற்றுக்கொண்டு திரும்பும்போது, கையைக்குறுக்காக நீட்டி வழியைத்தகைய, இவர்கண்டு வியப்புற்று, நீர் இங்ஙனம் செய்வதற்குக் காரணமேது அம்மணீ? என்று கேட்டருள, அடியேன் தேவரீரை ஒரு ஸம்சயம் கேட்க வந்திருக்கின்றேன் ஆகையால் அதனைத் தெளிவாகவுரைத்தருளித் திருவடி பெயர்க்கவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, இவர் அப்படியாகில் சொல்லிக்காணீரென்ன; அவ்வம்மையார் ஸ்வாமீ? தினமும் மாதூகரம் பண்ணிக் காலம் நடத்து மொருவருக்கு,ப்ரஹ்மாதிகளுக்கு முண்டாகாத மாட்சியுண்டாயிற்றென்னலாம்படி, அரசனை அகளங்கனே தொடங்கி, ஸர்வசாஸ்த்ர விதக்ரேசரான ப்ராஹ்மணர்களும்,மற்றுமுள்ள பெரியாரும் சிறியாருமான பலசார்பினரும் சமரசமாக அடங்கியொடுங்கி அடிக்கீழமர்ந்து காத்திருப்பதைப் பார்க்கையில் அதிசயமாகவிருக்கின்றதே! இதனை விவரமாகத் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய; இவர் அம்மணீ? அரசனேயாகிலும் அயிராணிக் கேள்வனேயாகிலும் அகிலதேவர்களேயாகிலும், பகவத்விஷயமான நல்வார்த்தைகள் ஆயிரங்களில் ஒருவார்த்தையை

---

* கொங்குதேசமென்பது இப்போது கோயம்புத்தூ ரென்றழைக்கப்படுகிறது; கொள்ளைக்களத்தைக் கொள்ளேகாலம் என்கிறார்கள்.

உள்ளபடி சொல்லி யுணர்த்தப் புக்கால், செவி சாய்த்து முடி வணங்கி யடங்கா தொழியார் கிடீர்? என்றருளிச்செய்ய; அவ் வம்மையார் ஸ்வாமீ? அப்படிப்பட்ட அரும்பொருளை, அடியே னும் கற்று உயிர்வாழ்க்கையைப் பெறும்படிக்கு க்ருபைசெய் தருளவேண்டுமென்று ஸ்ரீபாதத்தில் விழுந்துகிடக்க; இவர் முடி பிடித்தெடுத்து நம்முடைய மடத்தேற வாருமென் றருளிச் செய்து எழுந்தருளிவிட; அனந்தரம் அவ்வம்மையார் மடத் துக்குவந்து திருவடிகளில் தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, இவர் மிகவும் உகந்தருளிப், பஞ்ச ஸம்ஸ்கார பூர்வகமாக த்வயத்தை யுபதேசித்தருளிக், "கொங்கர்கோன் குலசேகரன்" என்று அருளிச்செய்த நம்மை யாளுடையார்களில் ஒருவருடைய தேச த்தினின்றும் வந்து, அவருடைய ஸம்பந்தத்தை நாம் நேரே பெறுதிருக்கினும், 'அவருடைய தேச ஸம்பந்தத்தையாவது நீர் பெறச்செய்தீ ரானையாலே உமக்குக் கொங்குபிராட்டி யென்று தாஸ்யநாம மிருக்கக்கடவதென் றருளிச்செய்து விடைகொடுத் தருளினார்.

அதன்பின்பு, மேல்நாட்டில் நல்லமாரி யுண்டாகி க்ஷாமம் நீங்கினவாறே, கொங்குபிராட்டியார், தன் அகமுடையாரோடு ஸ்வதேசத்துக்குப்போக நேரிட, அப்பொழுது தான் எம்பெரு மானாரைச் சேவித்து விடைகொள்ளச் சமையமா யிருக்கவில் லையேயென்று தளர்ந்திருக்க, அவ்வேளையில் இவர் யாத்ருச்சிக மாக அங்கே எழுந்தருளாநிற்க, அதியாவலோடு எதிர்கொண்டு வந்து தண்டன்ஸமர்ப்பித்து, ஸ்வாமீ? அடியேன் அகமுடையா ரோடு நாடேறப்போகின்றேனாகையால், இனி அடியேன் தேவ ரீரை நித்யமும் சேவித்துக்கொண் டிருக்கும்படிக்கு க்ருபைபுரி ந்து ஏதேனுமொரு அடையாளம் ப்ரஸாதித்தருளி இன்னு மொருமுறை அம்மந்த்ரத்தை யுபதேசித்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க, இவர் தம்முடைய திருவடிநிலையை ப்ரஸாதித்து, த்வயத்தை வாக்ய குருபரம்பராபூர்வகமாக உபதேசித்தருள, அவற்றை லபித்துக்கொண்டு இவருடைய, அடியழகு; இடைய ழகு, வயிறழகு, உந்தியழகு, மார்பழகு, மெய்ந்நூலழகு, தோள ழகு, கையழகு, ஏந்தியமுக்கோலழகு, கண்டத்தழகு, வாயழகு, கண்ணழகு, காதழகு, மூக்கழகு, புருவத்தழகு, திருநெற்றி யழகு, ப்ரபன்னபாகை யழகுகளைச் சேவித்து, ப்ரதக்ஷிணமாக

வந்து, பின்னழகையும்சேவித்துப், பூர்த்தியாகவநுபவித்து அவற்றைத் தன்னுடைய மனமென்னும் தர்ப்பணத்தில் (கண்ணாடியில்) ப்ரதிபலிக்கச்செய்துகொண்டுதண்டனிட்டு விடைகொண்டு, தம் அகமுடையாரோடு, ஊரேற வெழுந்தருளினார்.

எம்பெருமானாருக்கு ஒருவைஷ்ணவன் விஷமிச்ர அன்னமிடுவித்தல்.

அனந்தரம் ஸ்ரீஎம்பெருமானார் கத்யத்ரயமும் நித்யதிருவாராதனப்படியு மருளிச்செய்து, ஸ்ரீமந்நாராயணனே பரனென்று அறுதியிட்டுத்,தர்சனப்ரவர்த்தனம்பண்ணிக்கொண்டுபோருகிற காலத்திலே, கோவில் கார்யங்களில் லோபம் நடவாதபடிக்கு, ஸ்தானத்துறையை நெருக்கிக்கொண்டு போக; ஸ்தானத்தாரில் சிலர் இவர்விஷயத்தில் கடுஞ்சினங்கொண்டு, இவரைமுடிக்கவழி தேடி, இவர் மாதுகரம்பண்ணு மிடங்களில் ஒருவரை இவருக்கு விஷமிச்ர அன்னமிடும்படிநியமித்துவைக்க, அந்தக்க்ருஹஸ்தரும் தன் பத்னிக்குச் சொல்லி அவ்வாறு செய்யும்படி ஆக்ஞாபிக்க, அவ்வம்மை இப்படி செய்வதினால் மஹத்தானபாபம் ஸம்பவிக்குமே யென்று பர்த்தாவின் யோஜனையைத் தகைய, அவனதிக கோபங்கொண்டு நிர்ப்பந்தியாநிற்க, அதன்மேல் அவ்வம்மை தன்பர்த்தாவின் ஆக்ஞைக் குடன்பட்டவள் போலவே நடித்து, மற்றைநாள் இவர் மாதுகரத்திற் கெழுந்தருளுகையில், விஷங் கலந்துவைத்திருந்த ப்ரசாதத்தைக் கையி லெடுத்துக்கொண்டு, முகவாட்டத்துடனே வந்து இவர் மற்ற அகங்களில் பெற்றுக் கொண்டுவந்த ப்ரஸாதத்திரளில்இதுசேராதபடிக்கு, அவற்றைக் கூடையினுள்ளே ஒருபுறமாகவொதுக்கிவைத்து, இதைத்தனிப் பட வொருபுறம் ஸமர்ப்பித்துவிட்டு, பஹு துக்கத்தோடே, இவர் திருமுகத்தையேறப்பார்த்துத்தண்டனிட்டெழுந்து, சடக் கெனத்திரும்பிக், கண்களைக் கசக்கிக் கொண்டே தலைகுனிந்த வண்ணமா கஉள்ளேபோய்விட்டார். இவர்ஸர்வக்ஞராகையாலே, அவ்வம்மையார் காட்டிய அறிகுறிக ளித்தனையும் நன்றாகக்கவனித்து, இவ்வன்னத்தில் ஏதோ க்ருத்ரமம் செய்யப்பட்டிருக்கிறதென்று திருவுள்ளத்திற் கொண்டு, நேரே ஸாகரகாமினியான திருக்காவேரிக்குச்சென்று ப்ரஸாதமனைத்தையும் தீர்த்தத்தில் கரைத்துவிட்டுக், கரையோரத்தில் ஒருவ்ருக்ஷத்தினடியில் வீற்றிருக்கையில் அவ்வேளை அங்கே பறந்துகொண்டிருந்த ஒரு-

காகம் இறங்கி, இவர் கரைத்துவிட்டதினின்றும் சிந்திக்கிடந்த ப்ரஸாதத்தைத் தின்று உடனே தலைசுற்றிக்கொண்டு விழுந்திறக்க, அதனையும் இவர்கண்டு உலகத்தியல்பை யறிந்துகொண்டு, அற்றைப்பொழுதுதொடங்கி சிலநாளளவும் உபவஸித்திருந்துவிட்டார். இச்செய்தியைத் திருக்கோட்டியூர் நம்பி கேட்டருளிப், பதைபதைத்து, உடனே கோவிலைநோக்கிப் ப்ரயாணப்பட்டுவந்து, திருக்காவேரியளவாக எழுந்தருளுகையில், இவர் கேட்டு, எதிர்கொண் டெழுந்தருளி அவர் ஸ்ரீபாதத்திலே தாளுந் தடக்கையுங் கூப்பித் தண்டன் ஸமர்ப்பித்துக் கிடக்க, நம்பிகள் இவரை யாதரித்து எழுந்திருக்கும்படி நியமிக்காமல் நிற்க, இவருடைய ஸ்ரீபாதத்துமுதலிகளில் ஒருவரான கிடாம்பியாச்சான் கண்டு, அப்போது உச்சிப்பொழுதாகையாலே, மனம் பதறி, இதென்ன சிஷ்யாசார்ய க்ரமந்தானோ தெரியவில்லையே!! அங்கே அவளிட்ட விஷத்தைப்பார்க்கில், இந்தவெயிலில் திருக்காவேரிமணலில் கிடப்பது கொடிதாகாதோ!! கருமுகை மாலையைக் கடும்வெயிலிலேயிட்டுக் கனக்க மகிழ்ந்திருப்பதும் க்ரமந்தானோ! என்று ஓடிப் பரிந்தெடுத்தார். அப்போது நம்பிகள் கனக்க நகைசெய்து ஆச்சானே இந்த எம்பெருமானார் பக்கல் பரிவுடையார் யாரேனு முண்டோ வென்று இத்தனைபோதும் சிந்தித்து நின்றதே யொழிய வேறொன்றிற்காகவு மன்று; ஆகையாலே அவருக்குப் பிரியரான நீரே இன்றுதொடங்கித் தளிகை பண்ணி, ஏகமாதூகரமாக ஸமர்ப்பித்துக்கொண்டு போரக்கடவீரென்று நியமித்தருளிவிட்டுப்போக, ஸ்ரீஎம்பெருமானார் அன்று முதல் ஆச்சானால் ஸமர்ப்பிக்கப்பட்ட ஏகமாதூகர ப்ரஸாத ஸ்வீகாரஞ் செய்துகொண் டெழுந்தருளி யிருந்தார்.

இப்படியிருக்கையில், ஒருநாள் கிடாம்பியாச்சானை இவர் உகப்புடனே கடாக்ஷித்து, ஆச்சானே? அன்று நீர் நமக்காகப் பரிந்து நம்பிகள் விஷயத்தில் கலங்கி "இதென்ன சிஷ்யாசார்ய க்ரமந்தானோ" என்றீரே, அதுகூடுமோ? கூடாது. "மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள், நிற்கப் பாடியென் னெஞ்சுள் நிறுத்தினான், தக்கசீர்ச் சடகோபன்" என்று நம்மாழ்வாரைக் காட்டில் "தேவுமற்றறியேன்" என்றும், "என்னப்பனில், நண்ணித்தென் குருகூர் நம்பி யென்றக்கால், அண்ணிக்கும் அமுதூறும் என் னாவுக்கே" என்றும் பாகவதசேஷ பர்யந்தமாகக் கண்ணிநுண்

சிறுத்தாம்பாலே ப்ரகாசிப்பித்தருளின ஸ்ரீமதுரகவிகளுக்கு ஸ்ரீநம்மாழ்வாரிருப்பதுபோலேகாணும், நம்பிகள்நமக்கிருப்பது ஆகையாலிறே, * பாகவதாபிமானமில்லாதார்க்குமோக்ஷஸித்தி ஸம்ஶயமென்று பேரருளாளன் திருக்கச்சி நம்பிகளுக்குத் திருவாய்மலர்ந்ததை நாமுணர்ந்து வழிபடுகைக்கு உம்முடைய அபிமானத்தில் நம்மை வைத்தருளுவதாகப் பரீக்ஷித்தாரென்று சாதித்தார். அப்போது ஆச்சான் தலைகுனிந்தவண்ணமே நைச்யாநுஸந்தானஞ் செய்துகொண்டு தண்டனிட்டு க்ஷமைகொண்டு வாழ்ந்திருந்தார்.

ஸ்ரீஎம்பெருமானார் யஜ்ஞமூர்த்தி என்னும் மாயாவாதியை ஆட்படுத்திக்கொள்ளுதல்.

பின்பு யஜ்ஞமூர்த்தியென்பாரொரு ப்ராஹ்மணன் காசிப்ரதேசத்துக்குப்போய்க், கங்காஸ்நானஞ் செய்து, அங்குள்ள வித்வான்களையெல்லாம்ஜயித்து, மாயாவாதஸந்யாஸ்ரமத்தையும்பரிக்ரஹித்து, வித்யையாலும் சிஷ்யஸம்பத்தாலும் மிகுந்தவனாயிராநிற்க, அங்கே எம்பெருமானாருடையவைபவத்தைச் சிலர்சொல்லக்கேட்டுச், சகியாதவனாய் இவருடனே தர்க்கித்து ஜயிக்கவேண்டுமென்றெண்ணி, அநேக சாஸ்த்ரங்களைச் சுமை சுமையாக வெழுதிக்கட்டி யெடுப்பித்துக் கொண்டு, தனது வித்யாகர்வமெல்லாந்தோற்றும்படி, பெரியமதிப்புடனே, அதித்வரையிலே

* பாகவதாபிமான மில்லாதார்க்கு மோக்ஷமில்லையென்று அருளாளன் திருவாய்மலர்ந்ததற்கடி;—

ஸ்ரீ திருக்கச்சிநம்பிகள்நித்யமும் வேகவதிநதிக்கரைக்கெழுந்தருளும்போது, அங்கேவள்ளுவகுலத்திற்பிறந்தாரொரு வைஷ்ணவன் குலநைச்யத்தாலே அதிதூரத்திலிருந்தபடியே இவர் திருவடிகளைத் தர்சித்துக் கொண்டேயிருப்பதும், இவர்எழுந்தருளினபின்னே, திருவடிகளால்மிதியுண்ட மணற்பொடிகளை யெடுத்துத் தன் சிரஸில் தரித்துக் கொள்வதுமாகிறவழக்கத்தை அநேகநாளனுசரித்துக்கொண்டுவராநிற்க ஒருநாளளவில் அவனுடைய வநுஸந்தானத்தை இவர் கண்டு, நீ இப்படி செய்வதற்கடி என்ன பிள்ளாயென்ன; ஸ்வாமி? அடியேன் தவத்துள் சிறந்தவனுமன்று, குலத்தில் மிகுந்தவனுமன்று, தனத்தில் மிஞ்சினவனுமன்று, ஆயினும், மேலோர்பெறும்பேற்றைப்பார்க்கில் ஆசைகரைபுரளக்கொண்டவனாயிரு நின்றேன்; அவ்வாசை கைகூடுவதற்கோ, அருளாளனுடைய க்ருபைவேண்டியது; அதுவோ சுலபத்தில் சாத்தியமாகிறதன்று ஆனால் தேவரீர் அருளாளனை நித்யமும் கைங்கர்யத்தி லுகப்பித்து ப்ரத்யக்ஷ

கோயிலேறவந்து, எம்பெருமானாரைக் கண்டு, தன்னுடன் தர்க்கிக்க வரவேண்டுமென்ன; இவர் அதற்கு ஒப்புக்கொண்டு நீர் தோற்றா லென்னசெய்வீரென்று அவனைக்கேட்க, நான் தோற்றால் உம்முடைய பாதரக்ஷையைச்சுமந்து, உமது திருநாமத்தையிட்டுக்கொண்டு, உம்முடைய மதத்திலும் ப்ரவேசிக்கக் கடவேனென்றுசொல்லி, நீர்தோற்றால் என்னசெய்வீரென்று இவரைக் கேட்க, நான்தோற்றால், க்ரந்தசந்யாசஞ்செய்துகொள்ளக் கடவேனென்று சொல்ல, அதற்கு அவன் சம்மதித்தவாறே, இருவரும் அந்யோந்ய ப்ரதிஜ்ஞை செய்துகொண்டு, தர்க்கத்திற்குக் காலவரை பதினெட்டு நாளிட்டு நிச்சயித்து, ஒருவருக்கொருவர் தோலாமல் மத்தகஜங்கள் எதிர்க்குமாபோலே தர்க்கிக்கையில், பதினாறு நாள்வரையிலும் இவர் அவனை ஜயிக்கப்போகாதபடியிருந்தும், பதினேழாவதுநாளில், அவனுடையயுக்திப்ரபலமாகவிருந்தபடியால், அதற்குமேல் இவருக்கு ஒன்றுந்தோன்றாதபடியிருக்க, அவ்வளவிலே அவன் தனதுவெற்றியே தோற்றும்படி எழுந்திருந்து இவரை நாளைவாருமென் றனுப்பிப்போக, இவர் வ்யாகுலாந்தஃகரணராய் மடத்துக்கெழுந்தருளித் தமதுதிருவாராதனமான பேரருளாளனைத் திருவடி விளக்கி அமுதுசெய்தருளப்பண்ணிக், கைகூப்பி நின்று, பேரருளாளா? இத்தனைகாலம்! ஆழ்வார்தொடங்கி ஸ்ரீஆளவந்தார்அளவாக, ஓரான்வழியாய்சுப்ரதிஷ்டமாகிவந்த இந்தத்தர்சனம் இந்நாள் தோற்கக்கடவதோ

மாய்வார்த்தையாடிக்கொண்டிருக்கிறமஹானுபாவராகையாலே, தேவரீருடைய திருவடிதூசு ஒன்றுமே அடியேனுக்கந்த அபேக்ஷையைத்தலைக்கட்டிவைக்குமென்று இங்ஙன் செய்யாநின்றேனென்ன, இவர் பிள்ளாய்? நீர்மஹா ஜ்ஞாதாவாய்க் காண்கிறீரே! இங்ஙன் செய்வது தகுதியோவென்ன; ஸ்வாமீ? இது தகுதி யன்றென்றீர், ஆகில் மற்றெந்தவிதத்தில் அடியேனுடைய அபேக்ஷை தலைக்கட்டுமோ அதனை அருளாளனைக் கேட்டாவது அறிவித்தருளினால் அடியேன்பிழைத்துப்போவேனென்ன; இவர் அன்றிரவில் அருளாளன் பக்கல் இதை விண்ணப்பஞ்செய்துகொள்ள, அருளாளன் குறுநகைசெய்து, நம்பீ? நம்மடியாரடிப்பொடி அவன் றலைமே லிருக்கையில் பேற்றில் சந்தேகமு முண்டோவென் றருளிச்செய்ய; இவர் மறுநாள் காலையில் மார்க்கத்தில் காத்துக்கொண்டேயிருந்த அந்த வைஷ்ணவனை மிகவும் ஆதரத்தோடேகடாக்ஷித்து, உமக்குப்பேறு சித்தமா யிருக்கிறதுகா ணென்றருளிச் செய்தார். அப்போது அந்தவைஷ்ணவன் இவர்திருவடிகளில்தண்டனிட்டு, ஸ்வாமீ? தேவர்திருவடிகளின் ப்ரபாவத்தினாலன்றோ! அடியேனுக்கு இப்படிப்பட்ட பேறு

இந்நாள்வரையில் தேவரீருடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளைச் சத்யமென்னும்படிக்கு ப்ரமாணத்தைநடத்திக்கொண்டு போந்த தேவரீரே இப்பொழுது இந்த ம்ருஷாவாதியைக் கொண்டுவந்து விட்டு,அடியேனதுகாலத்திலேஎல்லாப்ரமாணங்களையும்அழித்து விட்டு லீலைகொண்டாடத் திருவுள்ளம் பற்றுவதானால், அஸ்மதாதிகளாலேஆவதொன்றில்லையே! என்று விண்ணப்பஞ்செய்து, தாம்அமுதுசெய்யாமலேகண்வளர்ந்தருளப், பேரருளாளன்இவருடையஸ்வப்நத்திலெழுந்தருளி,எம்பெருமானாரே? நீர் நினைப்பதேதுக்குச், சமர்த்தனாயிருப்பவனான இவனைஉமக்குச்சிஷ்யனாக்கித்தந்தோமென்றுகாணீர், நீர்உம்முடையபரமாசார்யரான ஸ்ரீ ஆளவந்தாரருளிச்செய்திருக்கிற அகண்டமாயாவாதகண்டனத்தைச்சொல்லி ஜயிக்கப் பாரும்மென்று அருளிச்செய்துபோக, இவர்விடிவோரையில் திருநாமோச்சாரணம் பண்ணிக் கொண்டேயெழுந்திருந்து, இதொருஸ்வப்நமிருந்தபடியென்னென்று மிகவுந் திருவுள்ள முகந்து, ஸ்வப்நத்தி லருளிச்செய்த யுத்தியைத் திருவுள்ளத்திற் கொண்டு, அதிசந்தோஷத்துடனே நித்யாநுஷ்டானவிதிகளை முடித்துக்கொண்டு, பேரருளாளனைச் சேவித்துப் புறப்பட்டு, ப்ரஸந்நகம்பீரராய்த், தர்க்ககோஷ்டியிலே யெழுந்தருள, அவன் பாவக்ஞவித்யானானைகையாலே, இவர் எழுந்தருளுகிற காம்பீர்யத்தையும் சந்தோஷத்தையுங் கண்டு, திடுக்கிட்டு,

---

சித்திப்பது, தேவரீருக்குப்பேறுசித்திக்குங்காலத்தையும்அடியேனறிந்து கொண்டால் அருகிலிருந்து சேவிக்கலாகுமென்று அபேக்ஷித்திருக்கிறேனனபடியாலே, அதையும்கேட்டு அருளிச்செய்யவேண்டுமென்று மிகவும் வேண்டிக்கொள்ள; இவர் இதனை எப்படி கேட்கலாகுமென்று ஐயுற்றுக் கொண்டேபோய், வழக்கப்படி கைங்கர்யத்திலீடுபட்டிருக்கையில், அருளாளன் இவரைத்தாமேகடாக்ஷித்து, அந்தவைஷ்ணவனுக்கு நந்திருவுள்ளக்குறிப்பை வெளியிட்டீரோ வென்று கேட்க, இவர் வெளியிட்டேனென்ன; அதற்கவ னென்னசொன்னானென்று கேட்க, அவன் கேள்வியிருந்தபடியை இவர் விண்ணப்பஞ் செய்ய, அருளாளன் நகைசெய்து, நம்பீ? நம்முடைய அபிமானமும் ஆசார்யாபிமானமும் சிறப்புடையவைகளேயாகிலும், பாகவதாபிமானமே பேற்றுக்குக் கொள்கொம்பாயிருப்பது; அஃதில்லாதார்க்குப்பேற்றில் ஸம்சயமுண்டென்றுசொல்லவும்வேண்டுமோ வென்ன; அப்பொழுதே இவர் அருளாளனிடத்தில் நியமனம் பெற்றுக்கொண்டு, திருவரங்கப்பதிக்கெழுந்தருளித், தாம் தரித்திருந்த பரிவட்டங்களைக்களைந்துபத்ரப்படுத்திக்கொண்டு, ஒருமாடுமேய்ப்பவனைப்போலேவேஷம்பூண்டு, பெரியநம்பிகளிடத்தில்போய்வேலைக்கமர்ந்து,

நேற்று இங்குநின்றும் சோம்பிக்கொண்டுபோன. இவர் இன்று இப்படிமத்தகஜம்போலேவாராநிற்பதற்குக்காரணங்காணோமே! என்றுசிந்தித்து, இது ஒரு அதிமாநுஷ சேஷ்டிதமா யிராநின்றதென்று நிச்சயித்துச் சடக்கெனவெழுந்து எதிர்கொண்டுவந்து, இவருடைய திருவடிகளில் சேவித்து, ஸ்வாமி? தேவரீருக்குத் தோற்றேனென்றுரைத்து ஸ்ரீபாதரக்ஷைகளை யெடுத்துக்கொண்டு, அடியேனை இரங்கியருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க, இவர் விஸ்மயப்பட்டுத், தர்க்கிக்கலாகாதோவென்ன, தேவரீருக்குப்பெருமாள் ப்ரத்யக்ஷமானபின்பு அவருக்கும் தேவரீருக்கும் பேதமில்லையென்று அறிந்தேனானபடியினாலே, இனி தேவரீருடைய ஸந்நிதியில் வாய்திறந்து ஒரு வார்த்தை சொல்லத் துணிவுகொள்வதுமுண்டோ! என்ன; இவர் ஏன்காணும் நீர் மாயாவாதத்தில், ப்ரஹ்மம் நிர்க்குணமென்கையாலே, அந்தப்ரஹ்மத்திற்கு ஸத்யத்வாதி குணயோகங்களைச் சொல்லுகிற வேதவாக்யங்கள் உம்மால்அப்ரமாணமாய்விடும்அன்றோ! அவித்யாதிரோஹிதமான ப்ரஹ்மத்திற்குக் குணயோகமுண்டாகையாலே, ஸகுணஶ்ருதியில் விரோதிக்க வில்லை யென்றீராகிலும் அது கூடாதே! எங்ஙனே யென்னில், "ஜ்ஞாநரூபம் பரம்ப்ரஹ்ம தந்நிவர்த்யம் ம்ருஷாத்மகம் - அஜ்ஞாநஞ்சேத் திரஸ்குர்யாத்

அநேகநாள் மாடுமேய்த் தடிமைசெய்யாநிற்க; ஓரானொருநாள், நம்பிகள் க்ராமாந்தரஸஞ்சாரஞ்செய்யத் திருவுள்ளம்பற்றியெழுந்தருளித் திரும்பி வருகையில், அஸ்தமித்த வனந்தரம் பெருங்காற்றும் பெருமழையுமுண்டாகிவழிநெடுகப்பெருவெள்ளங்கோக்க,அந்தச்சமையத்தில், வண்டியோட்டிக்கொண்டிருந்த இவர் ஒருகையில் மாடுகளின்தலைக்கயிற்றைப்பிடித்துக்கொண்டும், மற்றொருகையில் விளக்குக்கூட்டைப் பிடித்துக்கொண்டும் நனைந்துகொண்டு, வழிகாட்டி வண்டியை நடத்தியும், சேற்றுப்பாங்கில்வண்டியுருளைகள் அழுந்தும்போதெல்லாம் தாமேதோள்கொடுத்துக் கிளப்பித்தள்ளி அதிப்ரயாசையோடேவழிகண்டு திருமாளிகைக்குக்கொண்டுவந்துசேர்த்துவிட்டு நம்பிகள் உள்ளேயெழுந்தருளி, உடைமாற்றிக்கொள்ளுகையில்,இவர்மாடுகளைப்பிடித்து ஒருபுறங்கட்டிவிட்டுக்,குளிருக்கஞ்சி,அடுத்ததிருமாளிகையின்தாழ்வாரத்திண்ணைமேலேறி,நனைந்தவஸ்திரங்களைப்பிழிந்து காற்றிலாறும்படிகட்டிவிட்டு, மாற்றுடைவேறேயில்லாமையாலே, தத்பூர்வம் தாம் பெருமாள்கோயிலிலிருக்கும்போது தரித்துக்கொண்டிருந்த பரிவட்டங்களை யெடுத்துடுத்துக்கொண்டு ஒரு மூலையில் ஒதுங்கியிருக்க, இதற்குள்ளாக, உள்ளேசென்றநம்பிகள் தாம் உடுத்துக்களைந்த வஸ்த்ரங்களில் நல்லதாய் இரண்டுடை இவருக்காகக் கையி

கஃப்ரபுஸ்தந் நிவர்த்தநே” என்கிறபடியே ஜ்ஞான ரூபமாயிருந்துள்ள ப்ரஹ்மத்தை அஜ்ஞானரூபமான அவித்யை மறைத்ததாகில், அந்த அவித்யைக்கு நாசமில்லையென்று பொருள்தேறுகையாலே, அவித்யை நித்யமாய் விடும்ன்றோ! அப்படியாகுகையில் அவித்யையென்றும், ப்ரஹ்மம் என்றும் வஸ்துக்களிரண்டு உண்டென்ன விடமுண்டாகவில்லையோ! இப்படி இடங்கண்டபோது உம்முடைய அத்வைதமென்கிற மஹாகஜம் த்வைதமாகிற ஆழங்காலிலே அமிழ்ந்துவிட்டது பாரீர்? என்று இத்யாதி யுக்திகளை யருளிச்செய்ய, அவன் இக்கருத்துக்கிசைந்து, தனது ஏகதண்டத்தைமுறித்தெறிந்துவிட்டு இவர்திருவடிகளிலே சாஷ்டாங்க ப்ரணாமம்பண்ணிக்கிடக்க, இவர் தமது திருவடிமலர்களாலே அவன்முடியைச்சோபிதமாக்கி எடுத்தணைத்துக்கொண்டு மிகவும் க்ருபைசெய்தருள, அவன் தனக்கு த்ரிதண்டகாஷாயாதிகளை ப்ரஸாதிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்க, இவர் அப்படியே செய்தருள்வதாகத் திருவுள்ளம்பற்றி (அவன் சிகாயஜ்ஞோபவீத த்யாகம்பண்ணின சன்யாசியாகையாலே) “ஹீநோ யஜ்ஞோபவீதேந யதிஸ்யாத்த்யாந பிக்ஷுகஃ-தஸ்யக்ரியா நிஷ்பலாஸ்ஸ்யுஃ ப்ராயஶ்சித்தம் விதீயதே - காயத்ரீஸஹிதாயைவ ப்ராஜா பத்யாந் ஷடாசரேத் - புநஸ்ஸம்ஸ்காரமாஹ்ருத்யஊர்

லெடுத்துக்கொண்டு இடைகழிக்குவந்துஇவரைத்தேடிக்காணமல், மனந்தளர்ந்து, பரிசாரகர்களைக்கூவி என்னகாண்? நம்முடையமாட்டுக்காரன் இந்தமழையில் தன்னுடைய தேஹாத்யந்தமும் சிலிர்க்கும்படி நனைந்து கஷ்டப்பட்டுநம்மைக்காப்பாற்றிக்கொண்டுவந்துசேர்த்தபடியாலன்றோ! நீங்கள் நம்மைக்காண வாய்த்தது; இப்போது அவனை அநாதரித்து விட்டீர்களேயென்றுவ்யஸனப்பட்டு, அந்தமழையில்குடையையொருகையிற் பிடித்துக்கொண்டு ஒரு கையில் விளக்குக்கூட்டை ஏந்திக்கொண்டு வெளியே புறப்பட்டு அடா! மாட்டுக்காரா! மாட்டுக்காரா! என்று கூவிக்கொண்டே இரண்டுமூன்று அடிபெயர்த்துநடந்தார். இதைத் திண்ணையிலிருந்த திருக்கச்சிநம்பி கேட்டு, உடனே குதித்தோடி வந்து தண்டன் சமர்ப்பிக்க, நம்பிகள் கண்டு ஆச்சர்யப்பட்டு, இந்தவேஷத்தை இத்தனை நாளும் எப்படி மறைத்துவைத்து மோசஞ்செய்தீர் காஞ்சீபூர்ணரே? என்று ஆலிங்கனஞ்செய்தருளி அனந்தரம்திருமாளிகைக்குள்ளே யெழுந்தருளப்பண்ணி, இப்படி செய்ததற்கடி யென்னென்றுகேட்டுத் தெரிந்துகொண்டு சிலநாள் அங்கேதானேவைத்துக்கொண்டிருந்து சன்மானித்து விடைகொடுத்தருளினர். திருக்கச்சிநம்பிகள் பூர்வம்போலே பேரருளாளனிடத்துக்குவந்து கைங்கர்யத்தி லீடுபட்டிருந்தார்.

யம் யஜ்ஞோபவீதகம்" என்கிறபடி சன்யாசியா யிருப்பவன் ஒருகாலத்தில் சிகையும் யஜ்ஞோபவீதமு மில்லாதிருப்பானாகில், காயத்திரியுடன் கூடின ப்ராஜாபத்ய, க்ருச்ராதி ப்ராயச்சித்தங் களைப்பண்ணி, மறுபடியும் சௌள உபநயனாதிகளைச் செய்து கொண்டே சிகாயஜ்ஞோபவீதங்களைத் தரிக்கக்கடவன், என்னு மித்யாதி சாஸ்த்ரவிதிக ளுண்டாயிருப்பதைப்பற்றி, அவனுக்கு இவை யாவற்றையும் செய்துவைத்து, அனந்தரம் த்ரிதண்ட காஷாயாதிகளை ப்ரஸாதித்து, அவன் அருளாளனாலே தமக்குத் தரப்பட்ட ஜ்ஞானபுத்ர னாகையாலே, அவர்பக்கல் தமக்குள்ள உபகார ஸ்ம்ருதியால், அவர் பெயரையும் (முதலில் செய்து கொடுத்திருக்கிற ப்ரதிக்ஞையின்படியே) தமது திருநாமத்தை யும்சேர்த்து "அருளாளப் பெருமா ளெம்பெருமானார்" என்று தாஸ்யநாமத்தையும் சார்த்திக், கோவிலுக் கழைத்துக்கொண்டு போய்ப், பெரியபெருமாளைச் சேவிக்கப்பண்ணித், தீர்த்த பர ஸாத ஸ்ரீசடகோபனையும் ப்ரஸாதித்து, அனந்தரம் மடத்துக் கழைத்துக் கொண்டுபோய், அருளாளனையுஞ் சேவிக்கப்பண் ணிக், கண்டீரோ? உம்மை நம்பக்கல்சேர்த்தருளினவர் இவரே! என்றருளிச்செய்து, பெருமாளைத் திருவடிவிளக்கி, அமுதுசெய் வித்துத், தாமும் அமுதுசெய்தருளி, அனந்தரம் அவரையும் அமுதுசெய்வித்து, இனி 'நீர் ஆழ்வார்க ளருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களை ஓதீர்' என்று நியமித்துத், "திருப்பல்லாண்டு" தொடங்கி நாலாயிரத்தையும் ஓதுவித்து, இன்னு மறிவிக்க வேண்டிய தத்வ சிக்ஷைகளையும் ப்ரஸாதித்தருளினார்.

அதன்பின்பு எம்பெருமானார் ஆழ்வானையும் ஆண்டானை யும் அருளாளப் பெருமாளெம்பெருமானாரையும் க்ருபையுடன் நோக்கிக்கொண்டு வித்வத்கோஷ்டியாகக் காணும்படி நடத்தி யருளுகிறகாலத்திலே, ஆசார்யர்களாயிருப்பாரெல்லாரும் இவர் திருவடிகளிலேவந்து ஆஸ்ரயிக்கிறார்களென் றறிந்துகொண்ட அனந்தாழ்வானும், எச்சானும், தொண்டனூர் நம்பியும், மரு தூர்நம்பியும் ஆஸ்ரயிக்க வேண்டுமென்று வந்து அடிபணிந்த வர்களாக, இவர் அவர்களை அருளாளப்பெருமா ளெம்பெருமா னார் திருவடிகளிலே ஆஸ்ரயிப்பித்தருளினார். அருளாளப்பெரு மாளெம்பெருமானார் பீதராய், அவர்களை நோக்கிக், கேளீர் முதலிகாள்? குருவியின் கழுத்தில் பனங்காயைக் கட்டினாற் போலே, எம்பெருமானார் உங்களை நமக்குக் கட்டிவைத்தார். ஆகையாலே நீங்கள் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென் றிருங்கோளென் றருளிச்செய்தார்.

எம்பெருமானார் அனந்தாழ்வானைத் திருமலைக்குப் போகவிட்டு அனந்தரம் தாமுமெழுந்தருளின வைபவம்.

எம்பெருமானார் இப்படி கோஷ்டிப் பெருக்கையுடைத்தாகி, "அமர்சுவையாயிரம்" ஆன திருவாய்மொழிக்கு அர்த்தமருளிச் செய்துகொண்டெழுந்தருளி யிருக்கிறவளவிலே, "ஒழிவில் காலமெல்லா முடனாய்மன்னி" என்னுந் திருவாய்மொழிக்கு வ்யாக்யானம்நடத்தாநிற்கையில் "சிந்துபூமகிழுந் திருவேங்கட" மென்கிறவிடம் ப்ரஸ்துதமாக, முதலிகள் முகங்களைப் பார்த்தருளிப், புஷ்பமண்டபமென்கிற பெரிய திருமலையிலே திருவேங்கட முடையானுக்கு உகப்பாக ஒரு திருநந்தவனமுண்டுபண்ணித் திருமாலை கைங்கர்யஞ் செய்யப்போவார் இந்தக் கோஷ்டியிலே யாரேனு முண்டோ? என்று கேட்டருள, அப்போது அனந்தாழ்வா னெழுந்திருந்து, அடியேன் விடைகொள்ளுகிறேனென்று விண்ணப்பஞ்செய்து தண்டன் ஸமர்ப்பித்து நியமனம் பெற்றுக்கொண்டுபோய்த் திருவேங்கடமுடையானைத் திருவடிதொழுது, திருநந்தவனம்செய்ய இடங்கோலிக் காடுவெட்டி, நிலத்தைச் சமன்செய்வதாக உத்தேசித்து, மேடுகளை அழிக்கத்தொடங்கி, வெட்டிக்கழிக்கிற மண்ணை அப்போதைக் கப்போது கூடையில் நிறைத்துத், தம்முடைய தேவியார் தலைமீதெடுப்பித்து அங்கங்கே சில பள்ளங்களைக் குறிப்பிட்டு அவற்றில் கொட்டிவிட்டுவரும்படி ஆக்ஞாபிக்கத், தேவிகளும் அப்படியே அந்தக் கைங்கர்யத்தைச் செய்யாநிற்கப், பூர்ணகர்ப்பிணியாகையாலே ஓராளொருநாள் உச்சிவேளை வெயிலிலே மெய்வருந்தி மண்சுமப்பதைப், பரமதயாளுவான திருவேங்கடத்தப்பன் கடாக்ஷித் திரங்கியருளி, ஒரு மண்ணுழவனைப்போலே வேஷந்தரித்துக்கொண்டு எதிரேவந்து அம்மணீ? நீர் நம்முடைய மகளொருத்தியைப்போலே காணப்படுகின்றீரே உம்முடைய பர்த்தாவானவர் இந்த முழுப்பகல் வெயிலிலே பூர்ணகர்ப்பிணியான உம்மைக்கொண்டும் இங்ஙனம் கார்யங்கொள்வது அடுப்பதுதானோ! பெண்களைப் பெறாதார்க்கு, இவ்வருத்தம் தெரிவது அரிது; அந்தக் கூடைச் சுமையை என்னிடம் கொடும் என்று வாங்கிக்கொண்டு, தான் சுமந்துக் கொண்டுபோய்க் குறிப்பிட்டிருக்கிற இடங்கள்தோறும் கொட்

டிவிட்டுவந்து அவ்விடத்தில்தானே நின்றுகொண்டிருந்து, ஒரு முஹூர்த்தகாலம் வரையில் சுமந்துவருகிற மண்களையெல்லாம் தான் வாங்கிக்கொண்டு ஓடியோடிக் கொட்டிக் கொண்டிருக்க, இதற்கு முன்னேரத்தில் அனந்தாழ்வான், நாலு கூடைகளுக்காகு மவ்வளவு மண்ணைவெட்டிச் சேர்க்கும்பொழுதளவுக்குத், தேவிகள் ஒரு கூடைமண் சுமந்துகொண்டு போய்வருவது மிகவும் துர்லபமாயிருக்க, இந்த ஒரு முஹூர்த்தகாலத்திலே, ஒரு கூடைக்கு வெட்டிச் சேர்ப்பதற் குள்ளாகவே பரபரப்பாய் வருவதைப் பார்த்து ஏது இவ்வளவு சீக்கிரத்தில் வாராநின்றாய் பெண்ணே? குறிப்பிட்டுக் காட்டிய பள்ளங்கள் அதிதூரத்திலிருக்கையாலே, அங்கே சுமந்துகொண்டுபோக அஞ்சி இடையில் ஏதேனுமொரு புதரில் கொட்டிவிடுகின்றனையோ? என்று கேட்க, ஸ்வாமீ! இந்த மேட்டுக்கப்புறத்தில் ஒரு மண்ணுழவன் வந்து, அடியேனைப் பெண்பரிவாலே நோக்கி உதவுகின்றனென்ன; நல்லே! நல்லே! என்னகார்யஞ் செய்தனை, அவன் நம்முடைய கைங்கர்யத்தைக் கொள்ளையிடுவதாகவன்றோ! இங்ஙனம் உதவுவான்போலேவந்து கூடியிருப்பது, அவனை நமக்குக் காட்டிக்கொடாய்? என்று கொட்டுங்கையுமாகப் புறப்பட்டுப்போய் நெருங்க, அந்த மாயாபுருஷன் இவரைக்கண்டு ஓட, இவர் அவனைப் பின்தொடர்ந்து வெகுதூரமோடி அலுப்படைந்து நிற்க, அவன் இவரைத் திரும்பிப்பார்த்துச் சிரித்துநிற்க, இவர் தம்முடைய கையிலிருந்த கொட்டை அவன்மேல் வீசிவிட, அவன் தனது மாயாவுருவை மறைத்து ப்ரத்யக்ஷமாகி நிற்க, இவர் தண்டன் ஸமர்ப்பித்து, அபசாரக்ஷமைகேட்க, அப்போது ஸ்ரீநிவாசன் தனது சோதி வாய்திறந்து ஆழ்வானே? நாமுமக்கென்ன தீங்கு செய்தோமென்று இங்ஙனம் துறத்திக்கொண்டு வந்தீரென்ன; ஸ்வாசார்யன் செய்விக்கும் கைங்கர்யத்தைக் கொள்ளை கொள்ள வந்தது தீங்கன்றோ! என்று இவர் சொல்ல; ஆகில் நீர் நம்முடைய க்ஷேத்ரத்தில் வந்தேறியா யிருக்கச்செய்தேயும், நம்மையே துறத்தி நல்லசொல் சொன்னீர்காணுமென்ன; ஸ்வாமீ? தேவரீரும் பரமபதத்தைவிட்டுப் பக்தஜன பரிபாலனார்த்தம் இந்த க்ஷேத்ரத்துக்கு எழுந்தருளினீர், அடியேனும் ஆசார்யனுடைய ஆக்ஞா கைங்கர்ய பரிபாலனார்த்தம் விடைகொண்டிருக்கிறேன், இப்படி நாமிருவரும் வந்தேறிக

ளானபோது இது ஒருவர்க்கு ஸ்வாதீனமாயும் ஒருவர்க்குப் பராதீனமாகவும் மிருக்கலாமே! என்று விண்ணப்பஞ்செய்ய; நல்லீர்! நல்லீர்! நம்மை வேண்டியன்றோ உமதாசார்யன் உமக்கு இந்த கைங்கர்யத்தைக் கொடுத்திருப்பது? என்று கேட்க; ஸ்வாமீ! இது உண்மையே ஆகிலும் சேஷியானவன் தன் க்ரமமொழிந்து சேஷபூதன் கைங்கர்யத்தில் உள்நுழைந்து பரிமாறுவது, தனது சேஷித்வ பூர்த்திக்குக் குறைவாகாதோ! என்று விண்ணப்பஞ்செய்ய; இத்தனையும் ஸ்ரீநிவாசன்கேட்டு அகமகிழ்ந்து அனந்தாழ்வானைக் குளிரக்கடாக்ஷித்து மறைந்தருளினான்.

அதன்பிறகு அனந்தாழ்வான் காடு மேடுகளைச் செவ்வையாகத் திருத்தித் திருநந்தன வனமுண்டாக்கி, அதற்கு இராமாநுஜனென்று திருநாமமிட்டுத் திருவேங்கடமுடையா னுகப்புக்குத் தக்கபடி புஷ்ப கைங்கர்யஞ் செய்துகொண்டிருந்தார். இவ்வைபவத்தை எம்பெருமானார் கேட்டருளிப் பெரிய உகப்புடனே தாமு மங்கெழுந்தருளத் திருவுள்ளம்பற்றித் திருவாய்மொழி ப்ரபந்த வ்யாக்யானத்தைத் தீவ்ரமாகச் சாற்றியருளி, நம்பெருமாளைச் சேவித்து, ஸ்வாமீ! அடியேன் திருவேங்கடமுடையானைத் திருவடிதொழுது மீண்டு விடைகொள்கிறேனென்று விண்ணப்பஞ்செய்து நியமனம் பெற்றுக்கொண்டு, முதலிகளோடும் புறப்பட்டுப், பயணகதியில், திருக்கோவலூர் ஆழ்வார்கள் நைனாரையுஞ்சேவித்துப், பெருமாள்கோவிலுக்கெழுந்தருளித் திருக்கச்சி நம்பிகள் மடத்துக்குச்சென்று "ஸ்ரீமத்காஞ்சீ முநிம்வந்தே கமலாபதிநந்தநம்-வரதாங்க்ரி ஸதாஸங்க ரஸாயந பராயணம்" என்கிறபடி கமலையாரின் பதியாகிய வீரராகவருக்குத் திருக்குமாரரா யவதரித்துத் தேவப்பெருமாள் திருவடிகளிலே எப்பொழுதும் சேர்த்தி ஸம்பந்தமாகிற ரஸகண்டத்தை ப்ராப்யமாகப்பெற்று, வாழ்ச்சியுண்டாய்க் காஞ்சீபூர்ணரென்கிற திருநாமத்தால் விளங்கப்பட்ட மஹாநுபாவரா கிற திருக்கச்சி நம்பியைச் சேவிக்கிறேனென்று விண்ணப்பஞ்செய்துகொண்டு நம்பிகள் திருவடிகளில் தண்டனிட்டு நிற்க, அவரும் க்ருபைபண்ணியருள, இவர் அவருடனேகூட வெழுந்தருளி, அவர் புருஷகாரமாக ஸ்ரீகோபுரராஜனையும் ஆனைகாத்த பெருமாளையும் சேவித்து உள்ளே புகுந்து, "மஹாவராஹந்தே வேஶம் த்ரஷ்டு காமோரஸாதலாத் - நிர்ய யௌயத்ர

பகவா நநந்த: பந்நகேஶ்வர: - தீர்த்தேஷ தஸ்மிந் மஹாபுண்யே ஸித்தஸங்க நிஷேவிதே - ஸமாஹ்ருதா நிதீர்த்தாநி ஸர்வாணி முநிபிஸ்ததா" என்கிறபடி அத்யந்தபுண்யகரமாய்ச் சித்தகணங் களால் சதா சூழப்பட்டு ஸமஸ்தமான 'தீர்த்தங்களின் மஹா பலன்களையெல்லாம் தானே தரத்தக்கதாக விருக்குமென்று ருஷிகளாலே கூறப்பட்டிருக்கிற மஹா ப்ரபாவத்தையுடைய திருவனந்தசரசிலே தீர்த்தமாடிக் கேசவாதி த்வாதசோர்த்வ புண்டரங்களைத் தரித்துக்கொண்டு பன்னகேஶ்வரனுன ஆதி சேஷனுனவன் எந்தத் தேவனைச் சேவிக்கவேண்டி அதியாவ லோடு த்வரித்துத் தன்னிருப்பிடமான பாதாள லோகத்தை விட்டுப் புறப்பட்டுவந்து நாடினுனே அந்தக் "கோலவராஹப் பிரானை"யுஞ் சேவித்து, ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளித் திருவ னந்தாழ்வானையுஞ் சேவித்துத் திருபுற்றுக் கழலடியிலே தண்ட னிட்டு, அதற்குக் கிழக்கிலிருக்கிற (தம்மை விசேஷக் கடாக்ஷம் பண்ணியருளின) யமுனைத்துறைவர் திருமுற்றத்தில் சென்று "நமோநமோ யாமுநாய யாமுநாய நமோநம:" என்று அநுஸந் தித்துத் தண்டன்ஸமர்ப்பித்துக் கரிய மாணிக்கத் தெம்பெரு மானைத் திருவடிதொழுது, ஸ்ரீ புண்யகோடி விமானத்தையும் திருமடைப்பள்ளியையுஞ்சேவித்துப் பேரருளாளனையும்பெருந் தேவித் தாயாரையுந் திருவடிதொழுது, உள்ளேபுகுந்து "ஆகா ரத்ரயஸம்பந்நா மரவிந்த நிவாஸிநீம் - அஶேஷ ஜகதீஶித்ரீம் வந்தே வரதவல்லபாம்" என்கிறபடி அனன்யார்ஹ சேஷத்வ அனன்ய சரணத்வ அனன்ய போக்யத்வங்களாகிற ஆகார த்ர யத்தை யுடையளாய், எல்லா உலகுக்கும் நியாமகையாயிருக்கிற பெருந்தேவித் தாயாரைச் சேவிக்கிறேனென்று அநுசந்தித்துக் கொண்டு தீர்த்த ப்ரஸாதங்கள் ஸ்வீகரித்துப் புறப்பட்டு ப்ர தக்ஷிணமாக வெழுந்தருளித் திருவபிஷேக திருமண்டபத்திலே திருவாழி யாழ்வானையும் பெரிய திருவடியையுஞ் சேவித்துச் 'சேண்டல வமரர்தமையாளும்' சேனைநாதன் கழல்வணங்கி, "அஶேஷகிரி ராஜாய ஸ்ரீஹஸ்தி கிரயேநம:" என்கிறபடி எல் லாப் பர்வதங்களுக்கும் சிரேஷ்டமான ஸ்ரீஹஸ்திகிரி ராஜனைத் தொழுகிறேனென்று தண்டனிட்டு, வையமாளிகையிலே யேறி, ஸேவாக்ரமத்திலே, நம்பியை முன்னிட்டுக்கொண்டு உள்ளே புகுந்து "உலகேத்து மாழியானை" அத்தியூரானைச் சேவித்து

நின்று "திருப்பல்லாண்டையும்" ஸ்ரீ வரதராஜாஷ்டகத்தையு மனுசந்தித்துத் தென்னத்தியூரர் கழலிணைக்கீழ் பூண்டவன் பாலனாய் நிற்க, நம்பிகள் இவருக்குத் தீர்த்தப்ரஸாதமும் "தூய ரறுசுடரடியான" ஸ்ரீசடகோபனையும் ப்ரஸாதிப்பித்தருள, அவற்றை ஸ்வீகரித்து, க்ருதார்த்தராகிப் புறப்பட்டு அதிப்ரீதியோடே திருமலைக்கெழுந்தருளு மளவிலே மார்க்க மத்தியிலே வழி தப்பித் திகைத்து, அங்கு ஏற்ற மிறைப்பானொருவனைக்கண்டு திருமலைக்கு வழி எங்கேயென்றுகேட்க, அவன் செவ்வையான நல்வழியைக் காட்ட, அப்போது எம்பெருமானார் குதூஹலமுடையவராய், இஃதொரு அமானவன் புருஷகாரமிருந்தபடியென்னென்று அவனைத்தண்டனிட, முதலிகள் இந்தப் பரமாஸ்திகத்வத்தைக் கண்டுகளித்துத் தாங்களும் தண்டனிட்டார்கள். அனந்தரம் திருமலைக்கெழுந்தருளித் திருமலை யாழ்வாரையும் திருத்தாழ்வரையிலே யெழுந்தருளியிருக்கிற ஸ்ரீபராங்குச பரகால ப்ரப்ருதிகளான ஆழ்வார்கள் பதின்மரையும் சேவித்துத் திருப்பதியிலே யெழுந்தருளியிருந்து, ஊராளியாயிருந்த விட்டலதேவனையும் சிஷ்யனாக்கிக்கொண்டு அவ்விடத்தில் ஸ்வசிஷ்யர்களில் முப்பது திருநாமத்தைக் குடியேற்றிவைத்து, இளமண்டியம் என்கிற க்ராமத்தை அவர்களுக்குக் கைப்பற்றாகவிடுவித்து, அங்கே யெழுந்தருளி யிருந்தார்.

இச்செய்தியைத் திருமலைமே லிருந்த அனந்தாழ்வான் தொடக்கமான ஸ்ரீவைஷ்ணவர்கள் கேள்விப்பட்டு அங்குநின்றும் இறங்கிவந்து, இவரைச் சேவித்து, ஸ்வாமீ? தேவரீர் அப்பனைச் சேவித்து அடியோங்களை ரக்ஷித்தருளத் திருவுள்ளம் பற்றவேண்டுமே என்று விண்ணப்பஞ்செய்ய, இவர் மந்தஸ்மிதஞ்செய்து, நித்யஸூரிகளே சோலையும், தீர்த்தமும், மண்டபங்களும், படிகளுமாகவும், பெரிய திருவனந்தாழ்வானே திருமலையாகவும் அவதரித்திருப்பதாகத் தெரிந்தன்றோ! ஆழ்வார்கள் இத்திருமலைமே லடியிட்டு மிதிக்க அஞ்சித் திருத்தாழ்வரையிலேயே யிருப்பது; இப்படியிருக்க, நாம்மாத்ரம் ஏறக்கூடுவதுண்டோ! இங்கே எழுந்தருளியிருக்கிற ஆழ்வார்களைச் சேவித்துக்கொண் டிருக்கிறோமென்றருளிச்செய்ய, அவர்கள் ஸ்வாமீ? தேவரீர் ஏறாதபோது, இனி தேவரீருடன் இங்கேயெழுந்தருளியிருக்கிற பாகவதர்களாவது அடியோங்களாவது இம்மலைமேல்

ஏறப்போகிறதே யில்லையென்று விடைசெய்ய, இவர் தீர்க்கா லோசனை செய்தருளி இவர்களிப்படி செய்யப்புக்கால், அப்ப னுக்கு முகமும் தகவு மறியாத வித்தேசத்தில் கிங்கரர்கள் லபிப் பது துர்லபமாய்ப்போய்விடும்போல் காணப்படுகிறதே என்று திருவுள்ளத்திற்கொண்டு, அனந்தாழ்வானைக் கடாக்ஷித்து, நாம் வருகிறோம் புறப்படுமென் றருளிச்செய்து, ததனுகுணமாகத் திருமேனியைச் சோதித்துக்கொண்டு எழுந்தருளி, அடிப்புளி யாழ்வாரடியிலே திருமலையாழ்வாரைச் சேவித்துப் "பாதேநா த்யாரோஹதி" என்று ஸ்ரீவைகுண்டநாதனுடைய நியமனத் தால் சேதனன் பாதபீடத்தின்மேலே அடியிட்டேறுமாபோ லே, ப்ரதிபத்தி பண்ணிக்கொண்டு, திருவேங்கடமுடையான் அருளப்பாடிடத் திருமலையேறிச், 'செப்பார்திண்வரையையும்' "பன்மணி நீரோடு பொருதுருளும் கானுற்றையும்" "அன்ன னைய பொற்குவடுகளையும்" "வேய்கணின்று வெண்முத்தமே சொரியும் கானமும் வானரமும் வேடுமுடை" வேங்கடத்தைக் கண்டுகளித்துத், திருப்பரியட்டப்பாறையளவிலே யெழுந்தரு ளாநிற்கப் பெரியதிருமலைநம்பி திருவேங்கடமுடையானுடைய தீர்த்தப்ரஸாதங்களை யெடுத்துக்கொண்டு எதிரேயெழுந்தருளி வந்து ப்ரஸாதித்தருள, இவர் அவருடைய திருவடிகளில் சாஷ் டாங்க ப்ரணாமம்பண்ணி, அவற்றை ஸ்வீகரித்து, ஸ்வாமீ? இவ னுக்காகத் தேவரீ ரிவ்வளவு தூரம் எதிர்கொண்டு வரவேண்டு மோ? யாரேனும் சிறியாரை வரவிடலாகாதோ! என்று விண் ணப்பஞ்செய்ய, நம்பிகள் அருள்நகைசெய்து, அப்பனே? இந் தத் திருவேங்கடப்பதியில், நாலுதிருவீதியிலும் ஆராய்ந்துபார் த்தவிடத்தில் இவனிற்காட்டில் சிறியவர்களைக் கண்டிலேன் ஆகையால் இவனே வந்ததாயிற்று என்றருளிச்செய்தார்.

இவர் இவ்வார்த்தையிலிருக்கும் ரஸத்தை யறிந்துகொண்டு ஆச்சர்யப்பட்டுக், கல்வேலியளவிலே எழுந்தருளாநிற்க, ஜீயர் களும் ஏகாங்கிகளும் ஸ்ரீவைஷ்ணவர்களும் ஸ்தானத்துறை ஸ்ரீபாதந்தாங்கிகள் முதலான அனைத்துக்கொத்தி லுள்ளாரும் எதிர்கொண்டுவந்து சத்கரித்து வழிநடத்த, வைகுந்தன் றிரு வாசலிலேசென்று தண்டன் ஸமர்ப்பித்துத், திருக்கோனேரியில் நீராடிக், கேசவாதி ஊர்த்வபுண்ட்ரங்களை யேறியருளப்பண் ணிக்கொண்டு, நாலுவீதிகளும் ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளிச்,

“சிந்தாமணிகள் பகரல்லைப் பகல்செய்” என்கிறபடியே கசிதானர்க்க ரத்ன த்யுதி ரஞ்சிதமான - மாடகூட-ப்ரஸாத தோரண கோபுர ப்ராகாரங்களை அநுபவித்து, அங்கே தமது கைங்கர்யமான “இராமாநுஜன்” என்கிற திருநந்தவனத்திலெழுந்தருளித் திருக்கண்சார்த்தி யுகந்து, அனந்தாழ்வானைக் கடாக்ஷித்து, “வளர்த்ததனாற் பயன்பெற்றேன்” என்று மிகவும் க்ருபை பண்ணி அணைத்துக்கொண்டு, மற்று மங்குண்டான “தேனேய் பூம்பொழில்” என்றும் “விரையார்பொழில்” என்றும் “கோற்றேன் பாய்ந்தொழுகுங் குளிர்சோலை” என்றும் சொல்லப்படுகிற மொய்த்த சோலைகளையும், அச்சோலைக் கலங்காரமான “செண்பகமாய் நிற்குந் திருவுடைய” செண்பகஞ், செருந்தி, திருமகிழ், பாடலம், சுரபுன்னை, புன்னாகம், இருவாட்சி, மல்லிகை, முல்லை, தொடக்கமான கொடிமலரழகுகளையும் “மொய் பூந்தடந்தாழ்வரை” என்று சொல்லப்படுகிற செந்தீமலரையும் “சேறார் சுனைகளில்” செந்தாமரை ஸ்ரீயையும், “தெண்ணீர்ச் சுனை”களில் மீனாய்ப்பிறக்கும் விதியுடையாரையும், “கோனேரி வாழும்” குருகு கொக்கு நாரைமுதலான பக்ஷி ஸங்கங்களையும், வ்ருக்ஷசாகாரூட பிககூஜிதகாகளீ நாதங்களையும், கொண்டலதிரத் தோகைவிரித்து, நடமாடுகிற” மாயூர கேகாரவத்தையும், “வண்டினங்கள் தென்னாதெனாவென்று பண்பாடுகிற” பாடலையும், கண்டுகேட்டு ஆனந்தித்து, ‘நிலங்கோட் டிடைக்கொண்ட’ ஞானப்பிரானையுஞ் சேவித்து, “அவாவறச்சூழ்ந்தான்” திருவாசலிலே தண்டனிட்டு, “அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்” குலசேகரன் படிதொடக்கமான திருப்படிகளையுங் கடந்து, உள்ளே புகுந்து, அத்தாணிப்புளியைச் சேவித்து, ஸ்ரீபலிபீடத்தடியிலே தண்டனிட்டு “யமுனைத்துறைவர்” என்கிற திருப்பூமண்டபத்தைத் தர்சித்து, ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளித், “தநுர்மாஸே ஸிதேபக்ஷேத்வாதஶ்யாமருணோதயே- ஆயாந்தி ஸர்வ தீர்த்தாநி ஸ்வாமி புஷ்கரிணீஜலே” என்று சொல்லப்படுகிற ஸ்வாமி புஷ்கரிணியிலே தீர்த்தஸ்வீகாரஞ்செய்து, செண்பகத் திருவாசலுக்குள்ளேபுகுந்து தண்டன் ஸமர்ப்பித்து, திருமடைப்பள்ளி யாகசாலை திருமாமணி மண்டபத்தையுஞ் சேவித்துச், சேனைமுதலியாரை அடிபணிந்து, வேங்கடத்தரியைத் திருவடிதொழுது, ஆநந்தநிலயமென்னும் திவ்ய

விமானத்தைக் கண்ணாலே யனுபவித்துத் "திலதமுலகுக்காய் நின்ற" "தண்ணார்வேங்கடவிண்ணோர் வெற்பனை" "எண்ணம் புகுந்து தித்திக்கும்" செந்தாமரைக்கண் செங்கனிவாய் நாற்றோள் அமுதனுடைய "செங்கமலக்கழல்" படியேயும், "சீதக்கடல்" என்கிற திருமொழிப்படியேயும் மணிநூபுராதி க்ரீடாந்த திவ்யாபரண திவ்யமால்யாம்பர திவ்யாங்கராக சோபிதமான வடிவழகனைத்தையும் பாதாதிகேசாந்தமாக அநுபவித்து, அலர்மேல்மங்கையுறைமார்பா" "புகலொன்றில்லாவடியே னுன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேன்" என்று பூவார்கழல்களைக்கிட்டி, க்ருதாஞ்சலிபுடராகி அநுபவித்துநின்று, தீர்த்தப்ரஸாத ஸ்ரீசடகோபனை லபித்துக்கொண்டு இது ஸ்ரீவைகுண்டமாக வன்றோ யிருப்பது! என்று ஆச்சர்யப்பட்டுத் திருமஞ்சன காலமும், அழகப்பிரானுடைய ஸ்ரீமஹாபலித் திருநாளையும் சேவித்து, "விண்ணோர் வெற்பு" ஆகையாலே, தாம் இங்கே வர்த்திக்க வொண்ணாது என்றருகி அப்போதே திருமலையினின்றும் இறங்கிவிட வேண்டுமென்று உத்தேசித்தார்.

இந்தக் குறிப்பைப் பெரிய திருமலைநம்பி யறிந்து இவரை நோக்கி, இதுவென்னஆச்சர்யம், எப்போதும் திவ்யதேசங்களில் ப்ரவேசித்தவர்கள் மூன்றுநாள் தங்கி விடை கொள்ள வேண்டுமென்று, சாஸ்திரஞ் சொல்லாநிற்க, நீர் இப்படி த்வரிப்பது கூடுமோவென்று தடுக்க, அப்படியே மூன்று நாளும் அங்கே தங்கி, அமுதுசெய்யாமலே, அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதமான அப்பனை யநுபவித்து, அதுவே தாரகமாக வெழுந்தருளியிருந்து, நம்பியுடன் அப்பன் சந்நிதிக்குச்சென்று, திருப்பல்லாண்டை யநுஸந்தித்து அஞ்சலித்து நிற்க, அப்பன் மிகவும் உகப்புடனே இவருக்குத் தீர்த்தப்ரஸாத பூர்வகமாகத் தமது பூவார்கழல்களைச் சிரோபூஷணமாக்கித் திருக்கண்களில் அருள்பொழியநோக்கி எம்பெருமானாரே? உமக்கும் உம்முடையார்க்கும் உபயவிபூதி ஐசுவர்யங்களையுந் தந்தோமென்று நம்முடைய தெற்கு வீட்டிலிருந்து சொல்லியிருக்கின்றோமன்றோ! அதையிங்கும் சொன்னோம் கொள்ளுமென்று திருப்பவளச்சோதிவாய்திறந் தருளிச்செய்ய, இவர் மஹாப்ரஸாதமென் றங்கீகரித்து விடைபெற்றுக்கொண்டு அப்பொழுதே திருமலையினின்று மிறங்கித் திருப்பதியில் பெரியதிருமலை நம்பிகளுடைய திருமாளிகைக் கெழுந்தருளி அங்கே அமுதுசெய்தருளினார்.

எம்பெருமானார் பெரியதிருமலை நம்பிகள் பக்கல் ஸ்ரீராமாயணத்திற்கு அர்த்தங்கேட்கை.

அனந்தரம் எம்பெருமானார் பெரிய திருமலைநம்பி ஸந்நிதியிலே இதிஹாஸ சிரேஷ்டமான ஸ்ரீராமாயணத்திற்கு அர்த்தங்கேட்டுக்கொண்டு ஒரு ஸம்வத்ஸரகாலம் அங்கே எழுந்தருளியிருந்தார். அக்காலத்தில் ஸ்ரீகோவிந்தப் பெருமாள் என்பவர் நம்பி திருமாளிகையில் ஸர்வவித கைங்கர்யங்களையும் செய்துகொண்டு போரும் சீர்மையைப்பார்த்து, இவர் அவரிடத்தில் மிகவும் ப்ரீதராயிருக்கிற வளவிலே, ஒருநாள் அவர் திருமலை நம்பிக்குத், திருப்படுக்கை திருத்திவைக்கும்போதில், முந்துறத்தாமே அதன்மீதுபடுத்தெழுந்துவர, அந்தக்ருத்யத்தை இவர்கண்டு, இதுபொல்லாங்காகாதோவென்றெண்ணி நம்பிகளிடத்தில் விண்ணப்பஞ்செய்துகொள்ள, நம்பியும் அவரையழைத்துக் கோவிந்தப் பெருமாளே? நீர் நமக்காகத் திருத்தின படுக்கையிலே, முந்துறப், படுத்தெழுந்தீரென்றுகேட்டோம்; இப்படி செய்யத்தகுமோ! இதற்குப் பலனின்னதென் றறிந்திருப்பீரோ இல்லையோ? சொல்லீர் என்று கேட்டருள; ஸ்வாமீ? நரகமே இப்படிசெய்த அடியேனுக்குப்பலனென்றறிந்தேன்என்றுவிண்ணப்பஞ்செய்ய; நம்பிகள் நீரறிந்துவைத்து இப்படி செய்வானேனென்று கேட்டருளத், தேவரீர் திருமேனியில் யாதாமொன்று உறுத்தல் ஊறுதல் கடித்தல்செய்யாமல் கண்வளர்ந்தருளப் பெற்றால், அதுவே அடியேனுக்கு ப்ராப்ய ப்ராபகங்கள்போலேகாணும்; அதற்காக முந்துறப்படுத்துப் பரீக்ஷித்ததற்குப்பலன் எதுவானாலும் சம்மதமே என்று விண்ணப்பஞ்செய்து நிற்க; நம்பிகள் அவரைப் போர வுகந்தருளினார். இதை இவர்கண்டு அவருடைய ஆசார்ய ப்ரதிபத்தி விசேஷ மிருக்கும்படிதா னென்னென்று ஆச்சர்யப்பட்டு அவர்பக்கல் ப்ரீதி கரைபுரண்டு விசுவசித்திருந்தார்.

மற்றொருநாள் இவர் நம்பிகளுடைய திருநந்தனவனத்தை நோக்கிக்கொண்டு செல்லாநிற்க, அப்போது கோவிந்தப் பெருமாள் இருந்ததிருக்கக் கைங்கர்யத்தையொருபுறம்விட்டு, ஓரிடத்திலே ஒருபாம்பின்வாயிலே கையையிட்டுமீளவும் நீராடிக், கைங்கர்யத்திலேபுக; இவர் அதையுங்கண்டு கோவிந்தப்பெருமாளே? நீர் இப்போதென்னசெய்து வந்தீரென்று கேட்க, ஸ்வாமீ? ஒரு

நாகப்பாம்புநாக்கைநீட்டிக்கொண்டுவாயைத்திறந்தவண்ணமாக நோவுபட்டுக்கொண் டிருந்தபடியால், அடியேன்போய் அதன் வாயைச் சோதிக்குமளவில் அடிநாக்கில் ஒருமுள் பொத்துக் கொண்டிருக்கக்கண்டு அதனைவாங்கிவிட்டு வந்தேனென்று விண்ணப்பஞ்செய்ய, இவர் அவருடைய பூததயையின் அளவுக்காக மென்மேலும் ஆச்சர்யங்கொண்டு உகந்தருளினார்.

பின்பு எம்பெருமானார் ஸ்ரீராமாயணத்தைச்சாத்தினவாறே நம்பிகள் ஸ்ரீபாதத்திலே தண்டனிட்டு, அடியேன் திருவரங்கப் பெருநகரைநோக்கி விடைகொள்ளுகிறேனென்று விண்ணப்பஞ் செய்ய; நம்பிகள் இவரைக்குளிரநோக்கி, எம்பெருமானாரே? இத்தனைதூரமெழுந்தருளின உமக்கு நாம் ஒன்றுந்தரப் பெற்றிலோமே என்றருளிச்செய்ய; ஸ்வாமி! பூர்வம் அடியேன் "உடன் கூடுவதென்றுகொலோ" என்கிறபடியே அநுதபித்திருந்ததைத் தேவரீர் தலைக்கட்டி வைத்தருளத் திருவுள்ளம் பற்றியன்றோ! இந்தக் கோவிந்தப் பெருமாளைச் "சார்ந்த விருவல் வினைகளுஞ் சரிந்துமாயப்பற்றறுத்துத், தீர்ந்து தன்பால்மனம்வைக்கத் திருத்தி"ப்பணிகொண்டு"பொய்ந்நின்றஞானமும் பொல்லாவொழுக்கும் அழுக்குடம்பும், இந்நின்ற நீர்மையினியா முறாமை" என்னும்படி பண்ணியருளியிருக்கிறது; ஆகையாலே இவரைத்தந்தருளலாகாதோவென்று மறுபடி யொருவிண்ணப்ப மிட்டுக்கொள்ள, நம்பிகள் திருவுள்ளங்குளிர்ந்து பெருமதிப்புடனே கோவிந்தப்பெருமாளையழைத்து, வாரீர்? இன்றுதொட்டு நீர் இந்தஎம்பெருமானாரை நம்மைக் கண்டாற்போலே சேவித்திருமென்று, அவரை உதகபூர்வகமாகக் கொடுத்தருள எம்பெருமானார் அவரையுங் கூட்டிக்கொண்டு, நம்பிக்குத் தண்டன் ஸமர்ப்பித்துப் புறப்பட்டு "வண்டுவளங் கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகைக்கு"ச்சென்று, கடிகாசலமேறி "மிக்கார் வேத விமலர் விழுங்கும் அக்காரக்கனி"யைக்கண்டுகளித்து அடிபணிந்து, அங்குநின்றும் புறப்பட்டுத், திருப்புட்குழிக்குச் சென்று "க்ருத்ரபுஷ்கரிணி"யிலே தீர்த்தஸ்வீகாரஞ் செய்து, பெரிய உடையாரைத் திருவடி தொழுது, சண்டப்ரசண்டர்களைச் சரணமடைந்து, உள்ளேபுகுந்து, மரகதவல்லியாரையும் திருவனந்தாழ்வானையுஞ் சேவித்து, ப்ரதக்ஷிணமாக வெழுந்தருளிப் புகுந்து சேனைமுதலியாரைத் திருவடிதொழுது "பொன்முடி யெம்போரேற்றை யெம்மானை

நாற்றடந்தோள் தன்முடிவொன்றில்லாத தண்டுழாய்மாலையனை"ச் சேவித்து "ஸுவர்ணமகுடாநந்த துளஸீ மால்யஶோபித-ஸமஸ்த ஜகதாதார ஶங்கசக்ரத்ரதாதர-தாமோதர ஹ்ருஷீகேஶ த்ரயீமய ஜநார்த்தந-தாநவாரே ஜகந்நாதஶார்ங்கபாணே நமோஸ்துதே" என்று, சுவர்ணமயமான திருவபிஷேகத்தாலும் சிரேஷ்டமான துளசிமாலையாலும் சோபிதமானவனே! எல்லா உலகுக்கும் ஆதாரமானவனே! சங்குசக்ராதி திவ்யாயுதங்களைத் தரித்திருப்பவனே! தாமோதரநாமதேயனே! இந்திரியங்களுக்கு நியாமகனே! வேதஸ்வரூபியே! ஸமஸ்த ஜனங்களாலும் சேவிக்கப்படுமவனே! ராக்ஷஸகுல நாசகண்டீரவமே! ஜகத்காரணனே! கோலவில் கையிற்கொண்ட விஜயராகவனே! உன்னை நமஸ்கரிக்கின்றேனென்று, இத்யாதிகளை யநுஸந்தானம்பண்ணிக்கொண்டு நின்று, தீர்த்தப்ரஸாதாதிகள்ப்ரஸாதிக்கப்பெற்றுத், தண்டனிட்டுப்புறப்பட்டுத், திருவெஃகா முதலான திவ்யதேசங்களையும் சேவித்து மீண்டு, திருக்கச்சிநம்பி ஸந்நிதிக்கெழுந்தருளினார்.

அப்போது "அவனைவிட் டகன்றுயி ராற்றகில்லா" என்னுமாபோலே, கோவிந்தப் பெருமாளுக்குத் திருமலைநம்பியைப் பிரிந்த ஏக்கத்தினாலே, திருமேனியில் வைவர்ண்யம் பிறந்து முகமுருவியிருக்க, எம்பெருமானார் கண்டு, நீ அவருடைய அகவாயிலெண்ணத்தை யறிந்துகொண்டு, நீர் போய் நம்பியைச் சேவித்து வாருமென்று விடைகொடுத்து, இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களையும் அவருக்குத் துணையாகக்கூட்டியனுப்பிவிட்டுத், திருக்கச்சி நம்பியுடனே பெருமாளைச் சேவித்துக்கொண் டிருந்தார். இங்ஙனமிருக்கக் கோவிந்தப்பெருமாள் திருப்பதிக்குப்போய்த் திருமலைநம்பிகளின் றலைவாசலிலே தண்டனிட்டு நின்றுகொண்டிருக்க, அதனை அங்குள்ளார் உள்ளேசென்றறிவிக்க, நம்பிகள் திருவுள்ளங்கலங்கி அந்தப்பித்தனைப்போகச் சொல்லுங்கோளென்ன, அப்போதுதேவிகள் இரங்கியருளிஸ்வாமீ? இத்தனைதூரம் நடந்து இளைத்துவந்திருப்பவரை ஒருவாறு ஆதரித்துச், சேவையும் தீர்த்த ப்ரசாதமும் ப்ரஸாதிக்க வேண்டாவோ! என்று விண்ணப்பஞ்செய்துகொள்ள, பெண்ணே! விற்றபசுவுக்குப் புல்லிடுவார் ஆர்சொல்லாய்? என்று அப்போதும் நைஷ்டுர்யத்தையே ப்ரகாசித்து, முகங்கொடாமலகற்றிவிடக், கோவிந்தப்பெருமாள் அவர்பக்கல் நிராஶராய்த், தலைவாசலிலிருந்தபடியே தண்

டன் ஸமர்ப்பித்து மீண்டு ஸ்ரீவைஷ்ணவர்களுடனே வந்து எம்பெருமானாரைச் சேவித்து நிற்க, எம்பெருமானார் அந்த ஸ்ரீவைஷ்ணவர்களாலே அங்கு நடந்த செய்தியை யறிந்துகொண்டு நம்பிகளின் ஸர்வஜ்ஞதையைக் குறித்து மிகவும் சிலாகித்துக் கோவிந்தப் பெருமாளைப் பிற்காலியாதபடி, தம்முடைய சௌலப்ய சௌசீல்யாதி குணங்களாலே ஆதரித்து ஆழங்காற் படுத்திக்கொண்டு, திருக்கச்சிநம்பியுடனே, அருளாளன் ஸந்நிதியில் சென்று, தண்டன் ஸமர்ப்பித்து நிற்க, அருளாளன் தனது சோதிவாய் திறந்து எம்பெருமானாரே, நம்முடைய வடக்குமலைக்குப்போய் வந்தீரோ? என்று வினவித், தீர்த்தப்ரஸாத ஸ்ரீசடகோபனை ப்ரஸாதித்தருள, அவற்றை லபித்துக்கொண்டு விடைபெற்றுப் புறப்பட்டுத், திருவரங்கப் பெருநகருக்கு வந்து முதலிக ளெதிர்கொண்டு வந்துநடத்த, மடத்திற் ப்ரவேசித்து, ஸ்வாமிமானுந்தர்ப் பூதரான முதலிகளை க்ருபைபண்ணி எழுந்தருளி யிருந்தார்.

எம்பெருமானார் கோவிந்தப் பெருமாளுக்கு த்ரிதண்ட காஷாயங்கள் ப்ரஸாதித்தல்.

எம்பெருமானார் திருமலையாத்ரையை முடித்துக்கொண்டு திரும்பிவந்து கோயிலி லெழுந்தருளி யிருக்கையில், கோவிந்தப் பெருமாளுக்கு எம்பெருமானாரின் கோஷ்டியில் அநுபவமும், அவருடைய விக்ரஹாநுபவமும், சல்லாபங்களும், அவருடைய திருவடிகளில் கைங்கர்யங்களுமே காலக்ஷேபமாய் நித்ராலஸ்யங்களின்றிக்கே ப்ரத்யஹம் நடவாநிற்க, ஒருநாள் எம்பெருமானாரும் முதலிகளும் பெரிய திருவோலக்கமா யெழுந்தருளி யிருக்கையில், முதலிகளெல்லாரும் கோவிந்தப் பெருமாளுடைய ஜ்ஞான பக்தி வைராக்ய ஸ்வாசார்ய பதைகநிஷ்டைகளைக் கொண்டாடித் தலைதுலுக்க, அவை தம்பக்கல் ஒக்கும்! ஒக்கும்! என்று ஸ்ரீகோவிந்தப்பெருமாளும் தம்மைத் தாமே மிகவும் சிலாகித்துக் கொண்டார். எம்பெருமானாரதைக்கண்டு, அவர்கள் உம்மைச் சிலாகித்தால் நீர் நைச்யாநுசந்தானம் பண்ண வேண்டியிருக்க, உம்மைச் சிலாகித்துக் கொண்டீரே இது ஸ்வரூபத்திற்குச் சேருமோ? என்றுகேட்க, ஸ்வாமீ! அடியேனை முதலிகள்கொண்டாடில் அது "பேதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து" என்கிறபடியே காளஹஸ்தியில் கையில் குட

மும் கழுத்தில் இலந்தைக்கொட்டை வடமுமாய்க் கொண்டு, எளியவரவுபட்டு, நித்யஸம்ஸாரிகளிலும் கடைகெட்டுக் கிடந்த இவ்வாத்மாவை, அந்நிலையிலிருந்து எடுக்கைக்காகவே! ஒரு திருவவதார மெடுத்து அதற்குரிய க்ருஷிபரம்பரைகளைச் செய்து போந்த தேவரீருடைய கல்யாண குணங்களுக்கன்றோ சேர்ந்திருக்கிறது, ஆகையாலே அடியேனும் "எனக்கினியார் நிகர் நீணிலத்தே" என்றும், "நெஞ்சமே நல்லை நல்லை" என்றும் சொல்லுகிறபடியே, தேவரீருடைய க்ருபையினாலே வந்தவாழ்வை முன்னிருப்புக்கு ஒத்திட்டுப் பார்க்கையில் அலாகிக்க ப்ராப்தி யுண்டாயிற்று என்றுவிண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானார் அவரை நல்லீர்! நல்லீர்! என்று போர உகந்தருளினார். அனந்தரம் ஒருநாள், கோவிந்தப்பெருமாள் நால்யகருமங்களையுஞ் செய்வதொழிந்து, எம்பெருமானாருடைய அடியாளொருத்தியின் தலைவாசலிலே வெகுநேரம் நின்றுகொண்டே யிருக்க, அதையொரு ஸ்ரீவைஷ்ணவர் கண்டுவந்து கோஷ்டியிலே நின்று வெளிப்படுத்த, எம்பெருமானார் அவரையழைத்து வரச்செய்து, நீர் அந்தவிடத்தில் நின்றதேதுக்கு? என்று கேட்க, ஸ்வாமீ? தேவரீருடைய திருநாமத்தில் தாலாட்டும், குணாநுபவமும், அவள் திரு முற்றத்துக் குள்ளே மதுரமாய், இசையேறிச் செவிக்கினிய செஞ்சொலாய்ப்பெருகிக் கேட்பவர்களைமுன்னடிவளையக்கட்ட, அதனால் அடியேன் போக்கடி யற்று நின்றேனென்று விண்ணப்பஞ்செய்யக்; குணாநுபவத்தில் அவருடைய ப்ராவண்ய மிருந்தபடியைக் கண்டு, பெருமகிழ் வெய்தினார். அனந்தரம் கோவிந்தப்பெருமாளுக்கு, இருளும் ஏகாந்தமுமின்றிக்கே, த்ரிவித கரணங்களாலும் "இராமாநுஜன் மிக்கசீலமல்லா லுள்ளாதென்னெஞ்சு" என்கிறபடியே, எம்பெருமானாருடைய "மெய்யில் பிறங்கிய சீரில்" ஈடுபட்டுக்கொண் டிருக்கையில், ஒருநாள் அவருடைய திருத்தாயார் வந்து அப்பா கோவிந்தப் பெருமாளே? உம்முடைய தேவிகள் பக்வமாகினாளே, உம்முடைய கருத்தென்னென்ன; ஆகிலென்ன ப்ரமாதம் அம்மா? இருட்டும் தனியுமாயிருக்கும் அவகாசம் பார்த்து, நீர் அவளை நம்மிடம் வரக்காட்டவேண்டு மென்றார். திருத்தாயார் அனேகநாளளவும் அப்படிப்பட்ட அவகாசத்தைத் தேடியுங் காணாமையாலே, இதற்கு விரகேதென்று யோசித்து, எம்பெருமானாரிடத்தில் நேரேசென்று ஏகாந்தத்தில் விண்ணப்பஞ்செய்துகொள்ள, எம்

பெருமானார் அவரையழைத்துக், கோவிந்தப் பெருமாளே? நம்மாணை! ஒரு ருதுகாலத்தில் நீர் போய்வர வேண்டியதென்று நியமித்தருளப் பின்பு அப்படியே யவர்போய், இராமுற்றும் அந்தர்யாமியை அனுபவித்துத், தத்குணசேஷ்டிதங்களைத் தேவிகளுக்குக் கீர்த்தித்தருளிப் போகவிட, அதுகேட்டுத் திருத்தாயார் விடிவோரையில் வந்து அப்பா? இப்படியும் செய்யலாமோ? என்றுகேட்க; அம்மா அகவாயில் அந்தர்யாமி ப்ரகாசித்துக் கொண்டிருக்க அழிச்சாட்டங் கூடுமோ! என்றருளிச்செய்தார். இச்செய்தியை அவருடன் அணுகியிருந்த சிலமுதலிக ளறிந்து கொண்டு, எம்பெருமானாருக் கறிவிக்க; எம்பெருமானார் அவர் வந்தவுடனே, என்செய்து வந்தீரென்று மந்தஸ்மிதஞ்செய்து கேட்டருள, ஸ்வாமீ! அந்தர்யாமி ப்ரகாசித்துக்கொண் டிருந்ததாலே, அந்த விஷயத்திற்கு ஏகாந்தம் கண்டிலனென்று விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானார் அவர் திருத்தாயாரை வரவழைத்துக், கோவிந்தப்பெருமாளிருப்பை யறிந்துகொண்டீரோ! என்று கேட்டருளத், திருத்தாயார் அறிந்துவைத் தென்செய்வதென்று க்லேசிக்க, இனியொருவிரகில்லையே! நாம் என்னசெய்யலாம்; வேண்டுமாகில் அவர் படியை மற்றொரு ப்ரகாரத்தில் காட்டுகின்றோம் பாரீர்? நீர் அவரை நித்ய ஸம்ஸாரிகளோ டொக்க எண்ணுதல் கூடாதென்று கையில் ஒரு சிறிய ஊசியைக்கொடுத்து, ஒரு இருட்டறையிலே எறிந்துவிட்டுவரச் செய்து அனந்தரம் முதலிகளையழைத்து அவர்கள் கையில் திருவிளக்கைக் கொடுத்து, முதலிகாள்? நம் அம்மாள் அந்த அறையில் ஒரு சிறிய ஊசியைக் கைசோர்ந்துவிட்டுவந்து அனுதபிக்கின்றாள், ஆகையாலே யாராவது அதைக்கண் டெடுத்துக்கொண்டு வாருங்கோளென்று போகவிட்டருள, ஒருமுஹூர்த்த காலமளவும் முதலிகள் தேடித்தேடிக்காண அசக்தர்களாகி, வெளியேவந்து திருவலகெடுத்துக்கொண்டுபோய்க் கூட்டிச்சேர்த்து, முற்றத்தில் கொண்டுவந்து தூற்றிப்பார்க்க யோசித்தவர்களாக, உடனே எம்பெருமானார் அவர்களை யழைத்தருளித் தம் மருகிலிருக்கச்செய்து, ததனந்தரம் கோவிந்தப்பெருமாளை அழைத்துவரவிட்டு, நீர் அந்த இருட்டறைக்குள்ளே சென்று, அங்கே நிலத்தின்பேரில் ஏதேனுமொரு நூதனப்பொருள் கிடக்கின்றதோ பாரும்? என்று திருவிளக்கைக் கொடாமலேயனு

ப்ப, அவர்போய் உடனே அந்த ஊசியை எடுத்துக்கொண்டு வந்துகாட்டி, இதுதவிர வேறொருபொருளும் அந்த நிலத்தின் பேரி லில்லை என்று விண்ணப்பஞ்செய்துநிற்க, அப்போது எம்பெருமானார் அவர் திருத்தாயாரையும் தேவிகளையும்பார்த்து கண்டீர்களோ நமது கண்ணழகன் படியை என்றருளிச்செய்து, "நாரணன் றம்மன்னை நரகம்புகாள்" என்கிறபடியே 'என்ன நோன்பு நோற்றாய்கொல் இவனைப்பெற்ற வயிறுடையநீ' என்று சிலாகிக்கத், திருத்தாயார் மகிழ்வெய்தினாள். முறையே அவர் தேவிகளைக் கடாக்ஷித்து ஸ்ரீபாததீர்த்த ப்ரசாதங்களை ப்ரசாதிக்க, அவருக்கும் திவ்யக்ஞானம் பிறந்து, இவர் திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்துச், சன்யசித்துக்கொள்ள ப்ரார்த்தித்து, (இவரால் அப்படியே க்ருபைசெய் தருளப்பட்டுக்) காஷாய ஸ்வீகாரஞ் செய்துகொண்டு.சிறியாண்டாளென்னும் தாஸ்யநாமமும்பெற்று, அம்மைமார்களில் ஒருவராக இருந்து விட்டார்.

அதன்பிறகு கோவிந்தப்பெருமாளை யழைத்து, உமக்கு விஷயாந்தரவிரக்தி யுண்டாயிருக்கையாலே "அநாஶ்ரமீ நஸந்திஷ்டேத்" என்கிறவாக்யத்தை யறியாதவரன்றே, சன்யசித்துக் கொள்ளப் பாராதிருப்ப தேதுக்கென்ன, ஸ்வாமீ? அதுசெய்தருளிவைக்கக் கடவரும் தேவரீரே! என்று ஸ்வதந்தரிக்காதிருந்து விட்டதாயிற்று; இனி க்ருபைசெய்து ப்ரஸாதித்தருளினால் சுகமாகவே காணுமென்ன; உடனே அவருக்கு த்ரிதண்ட காஷாயாதிகளை ப்ரஸாதித்தருளித் தம்முடைய திருநாமத்தையும் அவருக்குச் சாற்றியருள அப்போது அவர் தமது முகத்தை வாடவைத்துக்கொண்டுநிற்க, இவர் ஏதுக்கிந்த குறிப்பமைந்ததென்று கேட்க; ஸ்வாமீ? ஸ்ரீபாதச்சாயா பன்னனா யிருக்குமிவனுக்குத் தேவரீருடைய திருநாமத்தைச் சாற்றினால் பொறுப்பதுதானோவென்று விண்ணப்பஞ்செய்து தண்டனிட்டுக்கிடக்க அனந்தரம் அந்தத் திருநாமத்தை, ப்ரத்யாஹரித்து, ஆத்யந்த அக்ஷரங்களை மாத்ரம்சேர்த்து எம்பார் என்று திருநாமம் சாற்றியருளி முடிபிடித்தெடுத்து க்ருபைசெய் தருளினார்.

அருளாளப்பெருமா ளேம்பெருமானார் எம்பெருமானாருடைய திருவடிகளில் நித்யகைங்கர்யஞ் செய்துகொண்டிருக்க ஆசைப்பட்டது.

அதன்பிறகு தேசாந்தரத்திலிருந்து இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் கோயிலுக் கெழுந்தருளா நிற்கச்செய்தே, திருவீதியில்

நின்றுகொண்டு சிலரைப்பார்த்து எம்பெருமானாருடைய மடம் எங்கேயென்று விசாரிக்க;அவர்கள் எந்த எம்பெருமானாருடைய மடத்தைக் கேட்காநின்றீர்களென்ன; அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் நந்தர்சனத்திற்கு எத்தனைபேர் எம்பெருமானார்களுண்டென்று இப்படி பரிஹாஸவார்த்தை யாடுகிறீர்களென்ன; அவர்கள் அச்சமடைந்து, ஸ்வாமிகாள்? நாங்கள் பரிகாசம்பண்ணின தில்லை, இங்கே அருளாளப்பெருமா ளெம்பெருமானாரென்னும் ஒரு ஸ்வாமியின் மடமுமிருக்கின்றபடியாலே, இங்ஙனம்சொன்னோமென்ன; நாங்களவரை யறியோம் உடையவர் மடத்தைக் கேட்டோமென்ன; அதன்பிறகு அவர்கள் இராமாநுஜர் மடத்தைக்காட்ட, அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அங்கேசென்று உடையவரைச் சேவித்திருந்தார்கள், இந்த ப்ரசங்கங்களை யாத்ருச்சிகமாக அருளாளப்பெருமா ளெம்பெருமானார் கேட்டருளி, ஐயோ! நாம் உடையவரைப் பிரிந்து ஸ்தலாந்தரத்திலே வர்த்திக்கையாலன்றோ நம்மை எம்பெருமானாருக்கு எதிர்த்தட்டாக உலகத்தார் சொல்லிக்கொள்ள இடங்கண்டது! அனர்த்தப்பட்டோமே! என்று மஹா வ்யாகூலப்பட்டுத் தம்முடையமடத்தை இடித்து நிலத்தோடே சமன்செய்துவிட்டுப் புறப்பட்டுவந்து உடையவர் திருவடிகளைக் கட்டிக்கொண்டு, ஸ்வாமீ? இவ்வாத்மா அனாதிகாலம் தேவர் திருவடிகளையகன்று அநர்த்தப்பட்டது போதாதன்றோஇப்போதும்அகன்றுகிடக்கத் திருவுள்ளம் பற்றினது! என்று மிகவும் சோகிக்க; எம்பெருமானார் நீர் இப்படி சோகிக்கைக்குக் காரணமென்னென்று வினவியருள; அங்குப் பிறந்த சொல்லை விண்ணப்பஞ் செய்துகொள்ள; ஆனால் உமக்கு நாம் செய்ய அடுப்பதென்னென்ன; ‘நின்றாளிணைக்கீழ் வாழ்ச்சி யான் சேரும் வகையருளாய்’ என்கிறபடியே, தேவரீருடைய திருவடிகளின்கீழே அடியேனை வைத்துக்கொண்டு, நித்ய கைங்கர்யங் கொள்ளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அப்போது எம்பெருமானார் அவரை முடிபிடித்தெடுத்து அஞ்சாதீர் என்றுதரித்து அரைக்ஷணமேனும் தம்மைவிட்டுப் பிரியாதபடி வைத்துக்கொண்டு அகிலார்த்தங்களையும் ப்ரஸாதித்து வாழ்வித்தருளினார்.

எம்பெருமானார் ஸ்ரீஆளவந்தார் திருக்குறிப்பிலிருந்த குறைகளைத் தீர்த்தருளியது.

அனந்தரம் ஸ்ரீ எம்பெருமானார் 'இலிங்கத்திட்ட புராணத்தீரும் சமணரும் சாக்கியரும், மலிந்து வாது செய்வீர்களும்' என்னும்படி யிருக்கிற 'இடங்கொள் சமயத்தையெல்லாம், எடுத்துக்களைகைக்காக'த் 'தத்வமஸி' இத்தியாதி வாக்ய ஜன்ய ஜ்ஞானமே மோக்ஷசாதன மென்றிருக்கிற மாயாவாதிகளையும், ஜ்ஞான கர்ம ஸமுச்சயமே மோக்ஷசாதனமென்றிருக்கிற குதிர்ஷ்டிகளையும் நிரசித்து, வேத கர்மாங்கமாய், வேதநத்யானோபாசனாதி சப்த வாச்யமாய்ப், பக்திரூபாபன்னமான உபாசனாத்மக ஜ்ஞானமே வேதாந்த ப்ரதிபாத்யமான மோக்ஷசாதனமென்று வேதாந்தம் நடத்துவதாகத் திருவுள்ளம்பற்றி முதலிகளைச் சேர்த்துக்கொண்டு, ஸ்ரீகூரத்தாழ்வானை நோக்கி நாம் சொல்லிக்கொண்டுவரும் பாஷ்யவாக்யம் உமது திருவுள்ளத்துக்கு ஒத்திருந்தாலொழிய நீர் திருவெழுத்துச் சாத்த வேண்டாமென்று நியமித்துவைத்துத், தாம் திருவாய்மலர்ந்தருளுவதும் ஆழ்வான் திருவெழுத்து சாத்துவதுமாக நடத்திக்கொண்டு வருகையில், ஒரு ப்ரகரணத்தில் ஆத்மாவுக்குச் சேஷத்வ விதுரமான ஜ்ஞாத்ருத்வம் ப்ரதிபாதித்து ஒருவாக்ய மருளிச்செய்ய, அதில் ஜீவாத்மாவுக்குப் பகவத்சேஷத்வ விதுரமான ஜ்ஞாத்ருத்வத்தோடு தேஹாத்மாபிமானத்தோடு ஒரு வாசியில்லாமையாலே, அது ஆழ்வான்திருவுள்ளத்திற்கு ஒவ்வாமையாக, அவர் திருவெழுத்து சாத்தாதிருக்க, அதனை எம்பெருமானார் நிரூபித்துப்பாராமலே எழுதுமென்ன; அவர் அப்போதைக்கும் தவிர்ந்திருக்க அவரைக்கோபித்து, நீரே பாஷ்யஞ்செய்யுமென்று உதைத்துப்போகவிட; ஆழ்வானெழுந்துபோய்விட்டார். அப்போது முதலிகள் ஆழ்வானைப்பார்த்து ஸ்வாமீ? நீர் இங்ஙனம் என்செய்தீரோ அறிகிலோமே! இதனால் ஸ்வாமியின் கோபத்துக் கிலக்காய்விட்டீரே! என்றுசொல்ல; ஆழ்வான் அவர்களை நோக்கி நகைத்து, உடைமையானது உடையவனிட்ட வழக்கிலிருக்குமாபோலன்றோ, நாமும் ஆசார்யனிட்ட வழக்கிலிருக்க வேண்டியது; இப்போது ஆசார்யன் கோபத்தினாலகற்றினாராகில், நாளை அருளாலே அணைத்துக்கொள்ளவும் பற்றுவார். ஆகையாலே அவருடைய கோபத்துக்கும் நமக்கும் யாதொரு

ஸம்பந்தமில்லை, நமக்கு அவருடைய திருவடியில் ஸம்பந்தம் வேண்டியிருப்பது, இது வுண்மையாகையாலே, இத்தனை பேரிருக்க நமக்குமாத்ரம் அந்தத் திருவடியை ப்ரஸாதித் தருளினார் என்று சொல்லியருளினார். அதன்பிறகு எம்பெருமானார் தாம் திருவாய்மலர்ந்தருளிய வாக்யார்த்தத்தை நன்றாகப்பரியாலோசித்துக்கொண்டு, ஆழ்வானை யழைத்துத், தாம் அவர் மீது கோபித்துக் கொண்டதற்கு மிகவும் அனுதபித்து, அந்தவாக்யத்துக்குப் பகவத்சேஷத்வத்தோடே கூடின ஜ்ஞாத்ருத்வம் ப்ரதிபாதித்து அருளிச்செய்ய, ஆழ்வான் திருவெழுத்து சாத்தினார். இப்படியாக ஸ்ரீபாஷ்யம் - வேதாந்ததீபம் - வேதாந்த ஸாரம்-வேதார்த்த சங்க்ரஹம்-கீதாபாஷ்யம் முதலானவற்றை யருளிச்செய்து இவற்றால் ஸ்ரீஆளவந்தாருடைய திருவுள்ளக் குறிப்பிலிருந்த குறைகள் மூன்றிலொன்றைத் தீர்த்தருளினார்.

எம்பெருமானார் திக்விஜயம்.

அப்போது முதலிகள் எம்பெருமானாரை அடிபணிந்து ஸ்வாமீ? தேவரீர் இதர சமய நிராகரண பூர்வகமாகத் தர்சனஸ்தாபனம் பண்ணியருளினதாயிற்று; இனி இதுகொண்டு நீதில் நன்னெறிகாட்டித் தேசமெங்கும் திரிந்து திக்விஜயம்பண்ணி ஆங்காங்குமுள்ள திவ்ய தேசங்களையுஞ் சேவித்து எழுந்தருளத் திருவுள்ளம்பற்ற வேண்டுமென்று ப்ரார்த்திக்க; எம்பெருமானார் திருவுள்ளம் பற்றியருளி முதலிகளுடனே புறப்பட்டு நம்பெருமாள் திருமுன்புசென்று தண்டன் ஸமர்ப்பித்து விடைகொண்டு புறப்பட்டருளிச், சோழமண்டலத்திலுள்ள திருக்குடந்தை முதலான திவ்யதேசங்களையும், பாண்டிய மண்டலத்திலுள்ள திருமாலிருஞ்சோலைமுதலான திருப்பதிகளையும், மலைநாட்டிலுள்ள திருவனந்தபுரந் தொடக்கமான திவ்ய தேசங்களையும் திருவடிதொழுது ஆங்காங்குமுள்ள குதிர்ஷ்டி மதங்களையும் ஜயித்து மீண்டுவருகையில் திருக்குறுங்குடிக் கெழுந்தருளிச் 'சோலைத் திருக்குறுங்குடி நம்பியைச்' சேவித்துத், தீர்த்த ப்ரஸாதங்கள் ஸ்வீகரித்து நிற்க; அவ்வளவில் நம்பி அர்ச்சகமுகேன, எம்பெருமானாரே? நாம் ராமக்ருஷ்ணாதிரூபேண 'ஜன்மம் பலபல' செய்துவந்து சேதனரைத் திருத்தப் பார்த்தவிடத்தில், அவர்கள் ஆஸுரப்ரக்ருதிகளாய் நம்மைக்கிட்டினாரில்லைபே? நீர் இத்தனை திருநாமங்களை எங்ஙனம் திருத்திப் பணி

கொண்டீரோ, இதனைத் தெரிவிக்கவேண்டுமென்றுகேட்டருள; ஸ்வாமீ! தேவரீர் கேட்கும் க்ரமத்திலே கேட்டருளினால் அடியேன் சொல்லுமடைவிலே சொல்வேனென்று இவர்விண்ணப்பஞ்செய்ய; நம்பி இவருக்கு ஒரு உயர்ந்த ஆசனமிடுவித்துத், தாம் ஒரு ரத்ன கம்பளத்தின்மீதிருந்து கேட்டருள; இவர் அந்த உயர்ந்த ஆசனத்தின்மீது தமது ஆசார்யரான பெரிய நம்பியே யிருந்துகொண்டு தம்மை இடுவித்துச் சொல்லுகின்றாரென்று பாவித்துக்கொண்டு தாம்நிலத்திலேயிருந்து நம்பியினுடைய திருச்செவியில் மந்த்ரரத்னத்தைஅநுஸந்தித்தருள; அவர் போர உகப்புடையராய், இவரைக்குளிரநோக்கி, இன்றுதொட்டன்றோ! நாம் இராமாநுஜனை யுடையோமானோம் என்றருளிச் செய்தார். இவரும் அவருக்கு ஸ்ரீவைஷ்ணவ நம்பி என்னும் தாஸ்யநாமமிட்டருளினார். அனந்தரம் அவரிவரை ப்ரஹ்மரதமேற்றி உபலாளித்தருளினார்.

ததனந்தரம் இவர் அவரைச்சேவித்துநின்று “அபசாராந்மாந்ஸர்வாந் க்ஷமஸ்வபுருஷோத்தம” என்றவாறே சர்வ அபசாரங்களையும் பொறுத்து ரக்ஷித்தருள வேண்டுமென்று கைகூப்பித் தண்டனிட்டு விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு, உத்தரதேசத் தேறவெழுந்தருளி,வடதிசைமதுரை, சாளக்கிராமம், திருவயோத்தி, பதரிகாஸ்ரமம், நைமிசாரண்யம், புஷ்கரம், திருவாய்ப்பாடி, கோவர்த்தனம், ப்ருந்தாவனம்தொடக்கமான திவ்ய தேசங்களைச்சேவித்து, ஆங்காங்குமுள்ள அன்யசித்தாந்தவாதிகளையுஞ் ஜயித்து, அனந்தரம் பட்டிமண்டபத்தைக்கிட்டிச் சரஸ்வதி பண்டாரத்தேறவெழுந்தருள, அங்கே சரஸ்வதிதேவி தானே தன்கோவில்வாசலைத் திறந்துகொண்டு எதிரேவந்து இவரைப்பார்த்துத் “தஸ்யயதாகப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ” என்கிறசுருதிக்குப்பொருள்சொல்லிக்காணீரென்றுகேட்க,இவர் “கபிஸ்த்வாதித்யஂ கம்பிபதிகிரணை ரித்யபிகபிர் பிபஸ்தீத் யாம்நா தஸ்ஸகபிரமுநா ஸ்தம்யதிஹதத்-ப்ரதீமஃ கப்யாஸந்திவஸகர தேஜோவிகஸிதம் ஸூபத்மம் ஸ்ரீமத் த்வாதமணிபக வச்சக்ஷூருபமா” என்றார். இதன்பொருள் கம்-ஜலத்தை, கிரணைஃ பிபதி இத்யபி - பானஞ் செய்கிறான என்பதில, கபிஸ்து - கபி என்னப்படுகிறவன், ஆதித்ய - சூர்யனாகின்றான் அதனாலும், கபிஂ-கபி என்பது, பிபஸ்தீதி-கிரணமென்று பொருளாய், ஆம்

நாதஃ-கபிர்பிபஸ்திதேஜனம் என்றோதப் பட்டபடியாலும், கபிஃ-கபி என்பதினால் ஸூர்யகிரணமென்று பொருளாய், அமுநா-அந்தச் ஸூர்யன் தன் கிரணங்களாலே, ஆஸ்தம் - மலர்த்தப்படுவது, யத்-யாதுளதோ, தத் - அதுவே, கப்யாஸம் - கப்யாஸமென்று சொல்லப்படுகிறது, இஹ-இந்தச்சாந்தோக்கியத்தில், தத் - அந்தக் கப்யாஸமானது, திவஸகர - பகலவன் என்று சொல்லப்படுகிற ஸூர்யனுடைய, தேஜஃ-ஒளியினாலே, விகஸிதம் - மலர்த்தப்பட்ட, ஸுபத்மம்-நற்றாமரை மலரெனப் பொருளாம் என்று, ப்ரதீமஃ -எண்ணுகின்றனம் (ஆகலின் அது), ஸ்ரீமத்வாத்-பெருமாளுடைய திருக்கண்போன்ற காந்தியையுடைத்தாயிருத்தலை நோக்கிப், பகவத்-பெருமாளுடைய, சக்ஷு-திருக்கண்களுக்கு, உபமா-உவமானப் போலியாக, அமணி - சொல்லப்படுகின்றது என்றார். இவ்வர்த்தத்தைச் சரஸ்வதி கேட்டுச் சந்துஷ்டையாய் இவர் இட்டருளின ஸ்ரீபாஷ்யத்தையும் சிரஸாவஹித்து அங்கீகரித்துத் திருக்கையைப் பிடித்துக்கொண்டு நீர் சொன்னபொருளும் இட்ட சாஸ்த்ரமும் பஹுஅந்தமாயிருந்தன, ஸ்ரீபாஷ்யகாரரே? என்று சிலாகித்துத், தன்னிடமிருந்த ஸ்ரீஹயக்கிரீவரையு மெழுந்தருள்வித்துக் கொடுத்து அபரிமிதமாகச் சன்மானித்தருளினள்.

அப்போது இவர் அவளைநோக்கி அம்மணீ! நீர் இப்படி நிர்நிமித்யமாக நம்மை ஆதரிக்கைக்கு அடியென்னென்ன, அவள் நல்லீர் நல்லீர்! முன்பொருகால் இங்குவந்த சங்கரசன்யாசியை இந்தச் சுருதிக் கர்த்தங்கேட்டளவில், அவன் குரங்கு ப்ருஷ்டம் போலேயிருக்குந் திருக்கண் என்று சேராததொரு அபஹாஸ்யமான பொருள்சொல்லி வெட்கிப்போயிருக்கின்றான், அப்படிக்கன்றி, சுருதியின் கர்ப்பார்த்தத்தையுமறிந்து என் கருத்துக்கு இசையப் பொருள்சொன்ன உம்முடைய அருமையான ஜ்ஞானத்தின் மாற்றைக்கொண்டு இங்ஙனம் செய்யாநின்றேனென்றனள். இவ்வர்த்தமானத்தை அத்தேசத்திலுள்ள ப்ரதிபக்ஷ சித்தாந்திகள் கேட்டுத் தரிக்காமல் பொறுப்பிலிகளாகி வந்து இவருடன் தர்க்கிக்கத்தொடங்க, அவர்களை இவர் ஜயித்தருள, அதுகேட்டு அரசனும்வந்து இவர் ஸ்ரீபாதத்தில் ஆஸ்ரயிக்க, அவனையும் க்ருபைசெய் தெழுந்தருளியிருந்தார். அவ்வளவிலே சில ப்ரதிபக்ஷ சித்தாந்திகள் இவரை உயிருடன்வைக்கவொண்ணாதென்று அபிசரிக்கத் தொடங்க, அதுதன்னையும் இவர்கேட்டுக் காணக்கடவோமென்றிருக்க; அப்போதே அவர்க

ளெல்லாரும் பித்தேறினவர்களாய்த் தங்களில் தாங்களே ஒருவரோடொருவர் மோதிக்கொண்டு பேய்கள்போலே யோடித் திரிந்தார்கள். அந்த விபரீதத்தை அரசன் நோக்கி இவர் திருவடிகளில் விழுந்து அவர்களை ரக்ஷிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள, அவர்களையும் க்ருபைசெய்தருளி ஆட்படுத்திக்கொண்டு சிலநாள் அந்தப் பதியில்தானேயிருந்து அனந்தரம் அரசனை தொடக்கமான யாவருங் கூடித் தம்மைத்தம் பரிவாரத்துடனே ஒரு காதவழியளவும் வந்து வழிவிட, அங்குநின்றும் புறப்பட்டு வாரணாசிபுரம் வழியாகச்சென்று, கங்கையைக்கிட்டிக் கங்கையின் கரைமேல் கண்டமென்னுங் கடிநகரில் எம்பெருமானைக் கைதொழுது கழலிணை பணிந்து மீண்டு, ஸ்ரீ புருஷோத்தமத்துக் கெழுந்தருளி ஸ்ரீஜகந்நாதனையும், ஸ்ரீ கூர்மத்தேறச் சென்று கூர்மநாதனையும், ஸிம்ஹகிரிக் கெழுந்தருளிச் ஸிம்ஹகிரி அப்பனையும், அஹோபிலத்தில் நாரஸிம்ஹனையும், 'தெழிகுரலருவித் திருவேங்கடமலை' யேறி வேங்கடத்தெந்தையையும் சேவித்தருளினார். இங்ஙனமாக இவர் திருவேங்கடமலைமேல் எழுந்தருளியிருக்கும் சமயத்தில், அங்கே 'தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும், சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்-சூழும், திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக், கிரண்டுருவு மொன்றா யிசைந்து' என்று ஆழ்வார் அனுபவித்த ஹரிஹராகாரம் ஒத்திருந்ததால் அங்கிருந்த சைவர்கள் இவர் எங்கள் நயினாரென்று பிணங்கிவர, அவர்களுக்குஞ் சொல்லவேண்டுந் திறத்துடன் அனந்தவிதமாகச் சொல்லியும் அவர்கள்கேளாமல் மென்மேலும் வாதிடாநிற்க, உங்களுடைய தம்பிரானுக்கு அசாதாரண சின்னங்களான த்ரிசூலடமருகாதிகளையும் எங்கள் ஸ்வாமிக்கு அசாதாரண சின்னங்களான திருவாழிசங்கங்களையும் கொணர்ந்துவைத்து ப்ரார்த்திப்போமானால் அவர் எதைத் திருவுள்ளம்பற்றித் தரித்துக்கொள்ளுவாரோ அதை முன்னிட்டு ஸ்வரூபநிரூபணம் பண்ணக்கூடுமென்ன; அதின்படியே இருபக்ஷத்தாரும் அவரவர் சமயசின்னங்களையும் கொண்டு வந்து ஸ்வாமியின் திருவடிக்கீழ் வைத்துக் கர்ப்பக்ருஹத்தில் ஒருவருமிலலாதபடி சோதித்துத் திருக்காப்பைச் சேர்த்துக் கொண்டு வெளியே புறப்பட்டுத் தக்கபடி காவல் அமைத்து வைத்துவிட்டு, மறுநாள் உபயபக்ஷத்திலுள்ளாரையும் ஒருங்கே சேர்த்துக்கொண்டுபோய்த், திருக்காப்பை நீக்கிச்சோதிக்கப்

புக அந்நேரம் திருவேங்கடத்தமுதன் கூராராழி வெண்சங்கே ந்தி த்ரிசூலடமருகாதிகளைக் கற்கடைகொண்டு நின்றுசேவை சாதித்தருள, யாவருமதிசயிக்குமளவிலே, இவர் திருக்கண்களில் ஆனந்தாஸ்ருக்கள் பனிப்பக் கொந்தளித்துக்கொண்டு ஆனந்தக்கடலில் மூழ்கித்தெளிந்து அனந்தரம் ப்ரதிபக்ஷத்தாரை அங்குநின்றும் அகற்றிவிட்டுப் 'பின்னைவேங்கடத் துச்சியிற் கண்டு' என்றவாறே வர்ஷுகவலாஹகம் போலே அகிலர்க்கும் நிகிலபாபத்தையும்போக்கிச் சகலாபேக்ஷிதப்ரதனை திருவேங்கடத் தப்பனைத் திருவடிதொழுது, அப்போதே திருமலையினின்றுமிறங்கித் தாழ்வரையையடுத்து ஆழ்வார்களைத் திருவடிதொழுது புறப்பட்டுப், பெருமாள்கோவிலுக் கெழுந்தருளிப் பேரருளாளனையும் சேவித்து விடைகொண்டு, ஸ்ரீபெரும்பூதூர் திருநீர்மலை முதலான கிழக்குத் திருப்பதிகளையும் மதுராந்தகத் தேறச்சென்று ஏரிகாத்த பெருமாளையும் அங்கே முன்னொருகால் பெரியநம்பி தம்மை க்ருபைபண்ணி யருளின திருமகிழடியையும் திருவயிந்திரபுரஞ்சேர்ந்து தெய்வநாயகனையும் திருவடி வணங்கித், தொண்டைமண்டலத்திலிருந்த மாயாவாதிகளையுஞ் ஜயித்துப்புறப்பட்டு, வீரநாராயணபுறத்தே சென்று ஸ்ரீமந்நாதமுனியையும் மன்னனுரையும் அங்கே நாதமுனிகள் யோகத்திலே எழுந்தருளியிருந்த இடத்தையும் சேவித்துப், ப்ரதக்ஷிணம் பண்ணினவராகித், திருப்பித்திருவணையாடித் திருவரங்கப் பெரிய கோயிலைநாடி எழுந்தருளிப், பெரியபெருமாளை அமலனுதிபிரானில் திருப்பாணாழ்வார் அனுபவித்தபடியே, பாதாதிகேசமாக முடிவில்லதோரெழில் நீலமேனியை அநுபவித்து அஞ்சலித்துக்கொண்டு ஜய ஸ்ரீயுடன்நிற்க; அவ்வேளை பெரியபெருமாள் இவரைநோக்கித், தமதுபவளவாய் முறுவல் ப்ரகாசிக்கும்படி, பாஷ்யகாரரே? உமக்கொரு குறைவுமில்லையே யென்ன, இவர் 'திருமாலுருவோடவன் சின்னமே பிதற்றுநிற்பதோர் திருமால்தலைக்கொண்ட நங்கட்கெங்கே வருந்தீவினையே' என்கிறபடியே, கங்குலும்பகலும் தேவரீரையேசிந்தித் தெங்குந்திரிந்துவந்த அடியேனுக்கு ஒரு குறையுண்டாகுமோ வென்றார். அதற்குப் பெரிய பெருமாள் உவந்து தீர்த்தப்ரஸாதாதிகள் ப்ரஸாதிக்க ஸ்வீகரித்து விடைகொண்டு மடத்துக்கெழுந்தருளி 'அணியரங்கன் திருமுற்றத்தடியார் தங்கள் இன்பமிகும் பெருங்குழவு கண்டுகந்து இருந்தார்.

ஸ்ரீபட்டர் அவதார வைபவம்.

இப்படி உடையவர் ஊரும்நாடும் உலகமும் தம்மைப்போலேயாகச்செய்து வாழ்ந்தருளுங் காலத்தில், இவரை ஆஶ்ரயித்த முதலிகளில், சகலசாஸ்த்ர வித்தமரான ஸ்ரீகூரத்தாழ்வான், அஹன்ய ஹநிஸிஷ்டாக்ரகண்ய ஜனக்ருஹங்களில் உபாதானம் பண்ணியே திருமேனி யாத்ரையை நடத்துபவரா யிராநிற்க, வர்ஷ காலசந்தியில் ஒருநாள் உச்சிப்பொழுதளவாக மழைபெய்துகொண்டிருக்க, உபாதானகாலந் தவறினமையால், அன்றைக்குத் திருமாளிகையில் சஞ்சிதபதார்த்தங்க ளொன்றுமில்லாமையாக அவர் நீராடி எழுந்தருளிப், பெருமாளைத் திருவடிவிளக்கி ஒரு பலத்தை யமுதுசெய் தருள்வித்துச் சாயங்காலமானவாறே நம்பெருமாளைச் சேவித்துவந்து, திருவாய்மொழியே தாரகமாக அநுசந்தித்துக்கொண்டு பட்டிணியே கண்வளர்ந்தருள, அவ்வேளையில் பெரியபெருமாள் அமுதுசெய் தருளித், திருச்சின்னம்பரிமாற, அந்தநாதம் கூரத்தாண்டாளுக்குக் கேட்க, ஆண்டாள் பெரிய பெருமாளிருக்குந் திசையைநோக்கி ஸ்வாமீ? உம்முடைய பத்தர் பட்டினியேகிடக்க, நீர்மாத்ரம் குலாவிக் குலாவி அமுதுசெய்கிறீரே! என்று விண்ணப்பஞ்செய்ய; இவ்வாக்யம் பெருமாள் செவியிற்புக, அங்கே திண்ணையின்பேரில் நித்ரைசெய்துகொண்டிருந்த உத்தம நம்பியின் கனவில் எழுந்தருளி நம்பீ? ஆழ்வான் இன்றைப்பொழுது உபவசித்திருக்கின்றான், நீர் அக்காரவடிசில் தளிகைகளைக்கொண்டு, உபயசத்ரசாமர சகல வாத்யங்களுடனே போய்க்கொடுத்துவாருமென் றருளிச்செய்ய, அப்போதே நம்பி, ஸ்வப்னந்தெளிந்து விழித்துப் பார்த்து, த்வரித்தெழுந்து நியமனப்படிக்கே, தளிகை ப்ரஸாதங்களைத் தாமே சிரஸா வஹித்துக்கொண்டு அகில வாத்யத்துடன் ஆழ்வான் திருமாளிகை வாசலுக்குச்செல்ல, இதுகண்ட கூரத்தாழ்வான் பதறி எழுந்து இது என்னென்று திகைத்து எதிரேசெல்லக், கொள்ளீர் ஆழ்வானே? பெருமாள்நியமன மிங்ஙன மிருந்ததென்று உத்தமநம்பிசொல்ல ஆழ்வான் அவற்றை அங்கீகரித்துச் சிரஸாவஹித்துக்கொண்டு உள்ளேசென்று, ஆண்டாளைநோக்கிப், பெரியபெருமாள் நமக்குச் சர்வாபீஷ்டமும் அடியிலே தந்தருளி யிருக்கச்செய்தே, இன்றுநேர்பட்ட ப்ரகாரத்தை அவர் எதுகொண்டு செய்திருக்கலாம்? நீர் ஏதாகிலும் நினைத்ததுண்டோ சொல்லுமென்று கேட்க, ஆண்டாள்

தமது உள்ளத்தின்கருத்தை உள்ளபடியே விண்ணப்பஞ்செய்ய, ஆழ்வான் திகைத்து என்னினைந்தீர்! நீர்; இதுகாறுமில்லாத இதோ ரற்புதங்கண்டோமே! என்று சிந்தித்துக், கண்டீரோ இது க்ரயத்தளிகையாய்விட்டது ஆகலின் ப்ரஸாத புத்தியால் மாத்ரம் நமக்கிதில் அன்வயமுண்டாகலாமே யொழிய மற்றைச் சர்வப்ரகாரத்திலும் உமக்கே இதிலன்வயமுண்டென்ன வமைந்தது. அதுகொண்டு நீர் இரண்டுபாகம்கொள்ளும் நமக்கு ஒரு பாகமேபோதும் என்றருளிச்செய்து அவற்றைக்கலந்து மூன்றுகைத் திரளையாகச் செய்து இரண்டு திரள்களை ஆண்டாளுக்குக் கொடுத்து ஒன்றைத் தாமமுதுசெய்திருந்தார். இப்ரகாரமாக இவ்வாண்டாளுக்குக் கொடுக்கப்பட்ட ப்ரஸாதத் திரளிரண்டும் இரண்டு பிண்டங்களாய்க் கருவிலமைந்து கர்ப்பவதியாய் நவமாசங்கள் பூர்ணமானவாறே வைகாசிமாதம் அநூராத நட்சத்திரத்தில் ஆண்டாள் இரட்டைப்பிள்ளைகளைக் கருவுயிர்த்தருளினர். இந்தப் பிள்ளைக்குத் திருநாமங்கள் சாற்றுகை தொடக்கமானவற்றிற்கு எம்பெருமானரே கடவரென்றும், தமக்கதில் ஒருவிதத்திலும் அன்வயமில்லையென்றும் ஆழ்வான் திருவாய்மலர்ந்தருளி வெறுமனே யிருந்துவிட, ஸூதிகா சௌசநிவ்ருத்தியானவுடனே, எம்பெருமானர் ஆழ்வான் திருமாளிகைக்கெழுந்தருளி எம்பாரை யழைத்து அந்தக் குழந்தைகளை எடுத்துக்கொண்டு வரும்படி நியமிக்க, அவர் ஆண்டாள் பக்கல் சென்று குலக்கொழுந்துகளான குமாரர்களை இருகையாலு மேந்திக்கொண்டு த்ருஷ்டிதோஷாதிகள் தாங்காதபடிக்கு த்வயத்தை ரக்ஷார்த்தமாக அநுசந்தித்துக்கொண்டுவந்து காட்ட, எம்பெருமானர் ஹர்ஷப்ரகர்ஷத்துடனே தமது தண்டாமரைக் கண்களாலே கடாக்ஷித்துச் சிசுக்களுடைய பச்சைப்பசுக்கென்ற தேஜோவிசேஷத்தையும் திருமுக வொளியையுங் கண்டு எம்பாரே? இந்தச் சிசுக்கள்மேல் த்வயம் பரிமளியா நிற்கிறதே! நீர் என்செய்தீரென்ன, அவர்களுக்குக் காப்பாக த்வயாநுஸந்தானம் செய்து விடைகொண்டேனல்லது மற்றொன்றுமறியேன் என்று அவர் விண்ணப்பஞ்செய்ய, அப்போது எம்பாரை நோக்கிக், கர்த்தவ்யாம்ஸத்திற்கு நீரேமுற்பட்டவரானீர், ஆகையாலே திருமேனி பேணுதலுக்கும் உகந்து உஜ்ஜீவனம்ஸத்துக்கும் நீரே கடவீரென்றுநியமித்துப், பஞ்சாயுததிருவாபரணமும்சாத்தியருளி, நாம

கரணத்தில், எம்பாரைக்கொண்டு திருவிலச்சினை செய்வித்து முந்திப்பிறந்த பிள்ளைக்கு ஸ்ரீபராசரபகவான் திருநாமத்தைச்சாற்றி இளையபிள்ளைக்குச் சீராமபிள்ளையென்று நாமகரணஞ்செய்தருளினார்.

பின்பு பராசரபட்டரைப் பெருமாள் மஞ்சள்நீர் குடிப்பித்துப்புத்ரஸ்வீகாரம்பண்ணியருளித் திருமணத்தூணருகேதொட்டிலிட்டு நாச்சியார் சீராட்டிவளர்க்க, அவரும் வளர்ந்துவந்தார். அப்படிவளருகையில் அவர்பெருமாள் அமுது செய்வதற்குமுன்னே தவழ்ந்து சென்று அமைத்திருக்கும் ப்ரசாதத்தை அள்ளி அமுது செய்து போருவர்; ஐந்து திருநட்சத்ரமானவாறே ஒருநாள் கூரத்தாழ்வார் ‘நெடுமாற்கடிமை’ என்கிற திருவாய்மொழியை அநுஸந்தித்துக் கொண்டிராநிற்க, அவரைப்பார்த்துப் பட்டர் அப்பா? ஆழ்வார் சிறுமாமனிசர் என்றாரே, சிறுமை பெருமைஎன்கிற பரஸ்பரவ்ருத்த தர்மத்வயமும் ஒருவஸ்துவில்கிடக்குமோ? இப்படி இரண்டையு மருளிச்செய்வதற்கடி யென்னோவென்று கேட்டுநிற்க, அவர் ஆச்சர்யப்பட்டு, நல்லீர் பிள்ளாய், நீர் கேட்டகேள்வி அழகியதே! ஆகில் நீர் உபநயனம்பெறுதிருப்பதினாலே உமக்கிப்போது சாஸ்த்ரத்தைக் கொண்டு இசைவிக்கவொண்ணாது, ஆயினும் ப்ரத்யக்ஷத்திலே உமக்குணர்த்துகிறோம் கேளீர்; திருமேனி சிறுத்தும் ஞானம்பெருத்து மிருக்கிற சிறியாச்சானும் அருளாளப்பெருமாளெம்பெருமானாரையும் போல்வாரைக்காணீர் இங்கு ‘சிறுமாமனிசர்’ என ஆழ்வார் அருளிச்செய்திருப்பது என்று’சொல்லி இசைவித்தருளினார். அனந்தரம் பட்டர் அந்த வயதில்தானே, மற்றொருநாளில் திருவீதியிலே புழுதியளைந்து விளையாடிக் கொண்டிராநிற்க, மாயாவாதி யொருவன், ஸர்வஜ்ஞபட்டனென்றுபெயர்வைத்துக்கொண்டு அதிசம்ப்ரமத்துடனே காளமூதிக் கொண்டும் கட்டியங் கூறுவித்துக் கொண்டும் தண்டிகை ஏறி அந்த வீதியேவர, இவர்பார்த்து இவனாரடா! உடையவர், ஆழ்வான்,ஆண்டான், அருளாளப்பெருமாளெம்பெருமானார், எம்பார் முதலான பெரியோர்களு மிருக்கும் ஸ்தலத்திலே விருதூதிவருகின்றான்? இவன் ஸர்வஜ்ஞதையை முன்னமுன்னம் நானே ஆராய்ந்து விடுகின்றேன் பார் என்று, இரண்டு திருக்கைகளிலும் புழுதியை அள்ளிக்கொண்டு அவனெதிரே போய் நின்று, அவனைப் பார்த்து நீ ஸர்வஜ்ஞனாகில்,

இது எவ்வளவென்றுசொல்லி அனந்தரம் உன்விருதை ஊதினுல் மாத்ரம் உன்னைமதிப்போம் என்று கேட்டருள, அவனிதைக் கேட்டு ப்ரமித்து ஒன்றுஞ்சொல்ல வகையறியாதவனுய் வாயடைத்துநிற்க, இவர் சிரித்துக், கெடுவாய்? இது ஒருகைப்புழுதி யென்று சொல்லத்தெரியாத உனக்கோ! ஸர்வக்ஞனென்று விருதூதித்திரிவது, அழகிதுகாண்! உன்விருதைநிறுத்து என்றுசொல்லி உடனிருப்பவரைப்பார்த்து இவன் காளத்தையும் பல்லக்கு முதலிய சம்ப்ரமங்களையும் பறித்துக் கொண்டனுப்புங் கோள்? என்று அதட்டிநிற்க, அவன் இவருடைய மழலைச்சொல்லைக்கேட்டு, இவர் ஆருடைய புத்ரர் என்றுகேட்க, ஆழ்வான் புத்ரரென்று அங்கிருந்தவர்கள்சொல்ல, அம்மம்ம!! பறப்பதன்குஞ்சோ தவழும் என்று ஆச்சர்யப்பட்டு, இவரைத் தனது தண்டிகையிலேறியருளப் பண்ணிக்கொண்டு ஆழ்வான் திருமாளிகைவாசலிலேசெல்லப், பொன்னுச்சியார்கண்டு, இவர்செய்த சிறுச்சேவகத்தைக்கேட்டு ஓடிவந்து வாரி எடுத்துக்கொண்டு, த்வயாநுஸந்தானத்தாலே ரக்ஷைபிட்டு, இப்படியும் தம்பரமல்லன ஆண்மைகளைத்தனியேநின்று தான்செய்வரோ? எம்பெருமான்! உன்னைப்பெற்ற வயிறுடையாள் இனிச்செய்வதியாது? என்று முன்றானையாலே மூடிக்கொண்டு உள்ளேசென்று, இவரைத் திருவீதியில் கண்ணெச்சிற்படப் போகவிடுவது இயல்பாமோ! என்று வெறுத்துக்கொண்டு. ஆண்டாள் திருக்கையிலேகொடுக்க; ஆண்டாள் ஸ்ரீபாததீர்த்தத்தை ப்ரோக்ஷித்து, இவ்விபூதியில் இவர் நெடுநாள்தங்குமவர்தாஞே! என்றுவயிறுபிடித்தார். அனந்தரம் இவர் உபநீதரானவாறே இவரை வேதாத்யயனம் பண்ணுவிக்க, அதிசீக்ரபுத்தியோடேஒருமுறைசந்தையில்தானேமுழுவதுமுணர்ந்துவர,ஆழ்வானும் ஆண்டாளும் இவருக்குக்கண்ணெச்சிற்படுமென்று பயப்பட்டுச் சிறிதுநாள் ஓதுவிக்காமல் சங்கித்திருந்து, பின்பு எம்பெருமானுருடைய நியமனத்தின்பேரில் ஆழ்வானும் எம்பாருமே அர்த்த சிக்ஷைகளெல்லாம் பண்ணிவைத்தார்கள்.

பின்புஒருநாள் பெரியபெருமாள் திருத்திரையைவளைத்துக் கொண்டு ஏகாந்தமாயிராநிற்க, அவ்வேளையில் இவர் திருவடிதொழப்புகப், பெருமாள்முனிந்து இவரைப்புறப்படவிடத் திருவுள்ளமாக அதை இவர் அறிந்துகொண்டு திரும்பிவிட, உடனே பெருமாள் இவருக்கருளப்பாடிட, இவர்உள்ளேபுகுந்துதண்டன்

ஸமர்ப்பித்து நிற்கப், பெருமா ளிவரைநோக்கி, நாம் உம்மைப் புறப்படவிட்டபோது என்னினைந்தீர்சொல்லுமென்ன, ஸ்வாமீ! இன்றுதான் அரங்கமாளிகையிலிருப்பவர்கள் பெருமாளும் பிராட்டியுமாகக் காணப்படுகிறார்கள் என்று நெஞ்சிற் கொண்டேனென்ன, முன்பு நினைத்திருந்தபடி எங்ஙனென்ன, ஆழ்வானும் ஆண்டாளுமாக நினைத்திருந்தேனென்ன, அப்போது பெருமாள் பெரிய உகப்போடு திருவாய்மலர்ந்து பட்டரே! நம்மாணை நீர் நம்மை முன்பு நினைத்திருந்தது போலவே மனதில் கொள்ளக் கடவீரென் றருளிச்செய்தார்.

அனந்தரம் ஸ்ரீஉடையவர் "பாலமூகஜடாந்தாஶ்சபங்கவோ பதிராஸ்ததா-ஸதாசார்யேணஸந்த்ருஷ்டா: ப்ராப்நுவந்திபராங் கதிம்" என்றவாறே, பெண்கள் பேதைகள் குருடர் செவிடர் மூகர் பித்தர் தொடக்கமான யாவரும் ஸம்ஸாராதுத்தீர்ணராம்படி விசேஷகடாக்ஷஞ்செய்தருளிக்கொண்டிருக்கையில் எம்பார் திருத்தம்பியாராகிய சிறியகோவிந்தப் பெருமாளுக்கு ஒருதிருக்குமாரருண்டாக,அதுகேட்டுஸ்ரீஆளவந்தார்க்ருஷிபலிக்கப்பெற்றோமென்றுசந்தோஷித்து அங்கேறப்போய்,அந்தச்சிசுவைக்கடாக்ஷித்து, ஸ்ரீபராங்குசநம்பி என்று நம்மாழ்வார் திருநாமத்தைச் சாற்றியருளினார். அதன்பின்பு சிலகாலமானவாறே ஸ்ரீபட்டருக்கு விவாஹ உசிதபருவம்வரக்கண்டு ஆழ்வான் உடையவரிடம் சென்று ஸ்வாமீ? பட்டருக்கு விவாஹம் செய்துவைக்க வேண்டுமே! நம்உறவின்முறையார் ப்ராக்ருதராகையாலே என்னசெய்வதோ தெரியவில்லையே! என்று விண்ணப்பஞ் செய்துகொள்ள, அதற்கு அவர்கேளீர் ஆழ்வானே, பெரிய நம்பியின் திருமேனி சம்பந்தத்தில் ஸ்ரீவைஷ்ணவசந்தானிகரிடத்திலே பெண்கொணர்ந்தால் ஸ்வசூத்ரசாகைகளுக்கும் ப்ராஹ்மண்யவைஷ்ணவத்திற்கும்தட்டாகாது என்றருளிச்செய்தார். ஆழ்வானும் அப்படியே ஆண்டாளுடன் ஆலோசித்து உடையவரை முன்னிட்டுக்கொண்டே அவர்களிடத்தில் போய் பெண்கேட்க, அவர்கள் முற்பட இசைந்து அனந்தரம் ஒருயோசனையால் இது புதுசம்பந்தமாகக் காணப்படுகிறதென் றுஇசையாதிருந்துவிட்டார்கள்.அதன்பின்பு சிலநாள்கழிந்தவாறே ஆண்டாள்ஆழ்வானைநோக்கிப்,பிள்ளைகள் மூத்தார்களே அவர்களுக்குச்செய்வனசெய்விக்கவேண்டாவோ? என்றுகேட்க, ஆழ்வான்சிரித்து ஈஶ்வரகுடும்பத்தை நந்தலைமே

லேறிட்டுக்கொண்டு அதற்காகக்கரைவதும் ஸ்வரூபந்தானேவெ ன்றருளிச்செய்து, அங்கிருந்து கோவிலுக்குப்போய் பெரியபெ ருமாளைச்சேவித்து, ஆண்டாள் கேள்வியிருந்தபடியை விண்ணப் பஞ்செய்து, தேவரீர் திருவுள்ள மெப்படியோ அறியகில்லேனெ ன்று தண்டன்ஸமர்ப்பித்துநிற்க, அதற்குப் பெருமாள் மந்தஸ் மிதம்செய்து அதை நாம் தகுதியாகச் செய்விப்போம் நீர் போ மென்று அருளிச்செய்துவிட்டு, மறுநாள் பெண்ணுடையவர்க ளுக்கு ஸ்வப்னங்காட்டிக், கொடுக்கும்படி நியமித்தருள, அவர் கள் ஆழ்வான்திருமாளிகையையடுத்துத், தங்களுடைய இரண்டு பெண்களையும் கொடுப்பதற் கிசைந்திருக்கிறதாகச் சொல்ல, ஆழ்வான் ஆச்சர்யப்பட்டு முன்னே ஒரு பெண்கொடுப்பதற்கே இசையாதிருந்த நீங்கள் இப்போது இரண்டுபெண்களையும்கொடு க்க இசைந்து வந்தவா றெங்ஙனேயோ சொல்லீரென்ன; அவர் கள் சொல்லத்தொடங்கிப் பெருமாள் எங்களுடையஸ்வப்னத்தி லெழுந்தருளி ஆழ்வான், நம்முடைய திருக்குமாரரான பட்டரு க்கு ஏகநாயகியை இசைவிக்க எண்ணினது நம்முடைய குடிமர புக்கு ஒவ்வாதசம்ப்ரதாயமாய்க்காணப்பட்டபடியாலே, நாமே முற்படவிசைந்த உங்கள் மனதில் ஒருகலக்கத்தையுண்டுபண்ணி இசையாதிருக்கச் செய்தோம். இப்போது நீங்கள் சடக்கெனப் போய் உங்கள் பெண்களிருவரையும் கொடுப்பதாக விசைந்து, நமது பட்டரை உபய நாச்சிமார்களோடு வீற்றிருக்கச்செய்து திருக்கல்யாணமஹோத்ஸவத்தை நடத்திவைத்து நம்மை உகப் பிக்கக்கடவீர் என்று நியமித்தருளினர். அப்போது பட்டர் பெருமாளுக்குத் திருக்குமாரரானவாறெங்ஙனமென்று நாங்கள் சங்கித்திருக்க, அதையுமவர் அறிந்துகொண்டு, முன்னொருகால் ஸ்ரீயமுனைத்துறைவர் ஸ்ரீபராசரபகவான் பேரைக்குறிக்க ஒரு சத்புத்ரனுண்டாக்கவேணுமென்று ப்ரபத்திபண்ணியிருந்தபடி யாலும், அவர் கருத்தை உடையவர் தலைக்கட்டிவைக்கவேண்டு மென்று ப்ரபத்திசெய்ததினாலும், அவர்களை உகப்பிக்க நாம் காலந்தேடிக்கொண் டிருக்கையில், ஒருநாள் ஆழ்வான் பட்டி னியே கண்வளர்ந்திருந்த சமயத்தில், நாம் அமுதுசெய்யாநிற்க, அவ்வேளை த்வனித்த திருச்சின்னநாதத்தை ஆண்டாள் கேட்டு, நம்முடைய ப்ரஸாதத்தில் புத்திசெலுத்தி ப்ரார்த்திக்க, நாம் அனுப்பிவைத்து, அதை அவர்கள் ஸ்வீகரிப்பதன்முன் ஆழ்

வான் உள்ளத்தில் ஒரு சங்கையுண்டுபண்ணி, ப்ரஸாதத்தை மூன்றுபாகமாக்குவித்து இரண்டு பாகத்தை ஆண்டாளுக்குக் கொடுக்கும்படி செய்து, அவற்றை ஆண்டாள்கருவில் இரண்டு பிண்டங்களாயமையும்படி கடாக்ஷித்துப், புத்ரர்கள் பிறந்தபின்னர், முற்படப்பிறந்தவரை நாம்ஸ்வீகாரம்செய்துகொண்டு, பின் பிறந்தவரை அவர்களுக்காகவிட்டோம் கண்டீர்களோ? ஆகலின் பட்டரை நீங்கள் நாட்டுமானிடரோடு சமபுத்திபண்ணுவீர்களாகில் கெடுவீர்கள்; அரங்கமாளிகைச் செல்வரென்று உங்கள் உள்ளத்திற் கொள்ளக்கடவது என்று நியமித்திருக்கின்றார் பெருமாளென்றார்கள். அனந்தரம் ஆழ்வான் இச்செய்தியை உடையவருக்கு விண்ணப்பஞ்செய்ய, அவர்பெரிய உகப்புடனே அரங்கமாளிகையில் தானே திருப்பந்தலமைத்துப் பெருமாள் திருவுள்ளப்படிக்கு அவ்விருபெண்களையும் இருபக்கத்தில் இருத்தி அதிசம்ப்ரமமாகத் திருக்கல்யாண மஹோத்ஸவம் நடத்தியருளினார்.

ஸ்ரீஉடையவர் முதலியாண்டானை அத்துழாயம்மாளுக்கு ஸ்ரீதனமாகக்கொடுத்தருளியது.

இப்படியிருக்கையில் பெரியநம்பியின் திருமகளாரான அத்துழாயம்மாள் புக்ககத்தில் வாழாநிற்க, ஒருநாள் தான்தீர்த்தமாடப்போகையில் மாமியாரைத் துணைவரவேண்டுமென் றபேக்ஷிக்க, அவள் உனக்காரேனும் ஸ்ரீதனவெள்ளாட்டி வந்திருந்தால்கொண்டுபோகாயென்றுகடிந்துபேச, அங்கிருந்தும் பிறந்தகத்துக்குவந்து நம்பியிடத்தில்நின்று, அப்பா? என்னை என்மாமி சொன்னசொல்லைக் கேளீர் என்று விண்ணப்பஞ் செய்ய, அவர் அம்மணி? இதற்கு நாம் வகையறியோம் உங்கள் ஜீயரிடத்தில் சொல்லிக்கொள்ளாயென் றுரைசெய்ய, அவ்வண்ணமே உடையவரிடத்தில் வந்து விண்ணப்பஞ் செய்துகொள்ள இவர் அப்போதே சமீபத்திலிருந்த முதலியாண்டானைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொடுத்து, இந்தச்சீதன வெள்ளாட்டியை அழைத்துக் கொண்டுபோகாயென்ன, ஆண்டானும் நியமனப்படிக்கே கூடவெழுந்தருளி நீராடப்பண்ணுவித்து அழைத்துக் கொண்டு போய்ப் புக்ககத்தில் விட்டு அங்கேவகுத்த தாஸவ்ருத்திகளைச் செய்துகொண்டிருக்க, அங்குள்ளார் ஆண்டானைப் பார்த்து

இஃதென்ன காரணமென்றுகேட்க, என்னைவரவிட்ட உடையவரைக் கேட்டறியுங்கோளென் றுரைத்து, அங்குதானே யிருந்துவிட்டார்; இதுகேட்டு அவர்கள் அச்சமடைந்து நம்பிகள் ஸ்ரீபாதத்திலடுத்து ஸ்வாமி? முதலியாண்டானைவரவிட்டு எங்களைநசிப்பிக்கத்தேடுகின்றீரோ! என்ன, அவர் இதைநாமறியோம் உடையவரைக் கேளுங்கோளென்ன, பிறகு அங்கேசென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவர் அவர்களைக்கடாக்ஷித்து, நம் தங்கைக்குச் சீதனவெள்ளாட்டியொருத்தி குறைவாயிருக்கக் கண்டமையால் அனுப்பித் தந்தோம் அது உங்களுக்கு அநிஷ்டமாகில் இங்கிருந்தே அவ்வடிமைத் தொழில்களைச் செய்விப்போமென் றருளிச்செய்து ஆண்டானை யழைத்துக்கொண் டருளினார்.

மாறனேர்நம்பியின் சரமதிசையில் நடந்தசெய்தி.

பின்பு மாறனேர்நம்பிக்குச் சரமதசை ப்ராப்தமாக, அவர் பெரிய நம்பியை அழைத்து நம்பீ? தேவார்ஹமான புரோடாசனத்தை நாய்க்கிடாதே கொள்ளுமென்று கையைப் பிடித்துக்கொண்டு ப்ரார்த்தித்துச் சுலோகத்வயத்தை அநுஸந்தானஞ்செய்துகொண்டே திருநாட்டுக்கெழுந்தருளினார். அந்தச் சரமவிக்ரஹத்தைப் பெரியநம்பி ப்ரஹ்மமேதஸம்ஸ்காரம்செய்து திருப்பள்ளிப்படுத்திவிட்டுவந்து, திருமாளிகைக்குள்ளேப்ரவேசித்துத் தீர்த்தமாடாமலே பெருமாளைத் திருவடிவிளக்கி அதிசந்துஷ்டராய்அமுதுசெய்துவித்துப்ரசாதப்பட்டிருந்தார். இச்செய்தியை ப்ராஹ்மணர்கள் அனைவருமறிந்து இவர்விஷயத்தில் சங்கித்திருக்க, அவ்வளவிலே உடையவர்ஒருநாள் ஏகாந்தசமயத்தில்பெரிய நம்பி திருவடிகளில்தண்டனிட்டு ஸ்வாமீ? ஸம்ஸாரம் சிறுகிடாதபடிக்கு அடியேன் ஒருவழியாலேவரம்புகட்டிவைக்கத், தேவரீர் மற்றொருவழியாலே அழித்து விடுகின்றீர்களே! மாறனேர் நம்பி விஷயத்தில் அடியேனளவான கிங்கரர்களுக்கு நியமித்துப் பணிகொள்ளாமல் தேவரீரே செய்யத் திருவுள்ளம்பற்றியது உலகத்தாருள்ளத்தைப் புண்படுத்துகின்றதே! இது அடியேனுடைய தோஷந்தானாகும் என்று விண்ணப்பஞ்செய்ய; நம்பி கலுக்கென நகைத்து, ஜீயரே? மாறனேர் நம்பியை என்னினைந்தீ ரும்மனத்

தால், அவர் ஸ்ரீ ஆளவந்தாருடைய அபிமானாந்தர்ப் பூதர்களி லொருவரன்றோ! ஆகையாலே நாம் அந்தி தொழுகைக்காளிட்டாலும் இடுவோம், இக்கார்யத்தில் மாத்ரம் ஒருவரையிடமாட்டோம். வரம்பையழித்துவிட்டதாகச்சொல்லவந்தீரே! வ்ருத்தாசாரமும் ஸ்வரூபமு மிருக்கும்படியை யோசிக்க வேண்டுவதில்லையோ! இக்ஷ்வாகுவம்ஶத்திற்பிறந்த பெருமாள் ககவம்ஶத்தில் வந்து தசரத அபிமானாந்தர்ப்பூதரான ஜடாயுவுக்குப் புத்ரக்ருத்யஞ்செய்தருளிய ஏற்றத்தைக் கொண்டன்றோ! ப்ரபன்னர்கள் ஜடாயுவென்றழைப்பது ஸ்வரூபத்துக்குச்சேராதென்று பெரிய உடையாரென்றழைப்பது; விதுராழ்வான் ஸ்ரீக்ருஷ்ணாபிமானாந்தர்வர்த்தியா யிருந்ததைக்கண்டன்றோ! பாண்டுவின்குமாரனை தர்மபுத்ரர் புத்ரக்ருத்யம் செய்தது; இந்த வ்ருத்தாசாரங்களை ஸ்ரீநம்மாழ்வார் அருளிச்செய்த சரமப்ரபந்தத்தில் 'பயிலுஞ்சுடரொளி' 'நெடுமாற்கடிமை' இத்யாதி திருவாய்மொழிகளோடு ஒத்திட்டு உணர்ந்து அவர்களுக்கும் நமக்கும் வாசிபார்த்தால் பெருமாளையும் தர்மபுத்ரரையுங் காட்டில் நான் பெரியவனாகேனே! மாறனேர்நம்பி பெரிய உடையாரையும் விதுராழ்வானையுங்காட்டில் சிறியராகாரே! அவர்களுடைய சாமான்ய தர்மத்தைக் காட்டில் அஸ்மதாதிகளுக்குவகுத்திருக்கிற ஆழ்வார் அருளிச்செயல்கள் சாமான்யமான கடலோசையாகாதே! இனி இது கொண்டு நீரென்சொல்லவல்லீரென்றுகேட்க; உடையவர் சம்மதித்து அகிலப்ராஹ்மண வைஷ்ணவர்களுக்கும் பெரியநம்பியின் உத்க்ருஷ்டமான திருவுள்ளக்குறிப்பை வெளியிட்டு அவரவர் கொண்டிருந்த மதிமயக்கத்தை நீக்கியருளினார்.

ஸ்ரீஉடையவர் மேல்நாட்டில் சஞ்சரித்தருளியது.

இப்படியிருக்கும் நாளில் சோழமண்டலத்தை யாண்டு கொண்டிருந்த சோழராஜன் அதிகக்ரூரசைவனாகையாலே வேத விருத்தமான மோஹனசாஸ்த்ரங்களையே மெய்யான நூலென்று த்ருடதர ப்ரமாணங்களாகவெண்ணித்தானும் தன்புரோஹிதருமாகக்கூடி தன்னுடையநாட்டிலுள்ள வித்வான்கள் ஸர்வரையும் சேர்த்து, "சிவாத்பரதரம்நாஸ்தி" சிவனுக்குமிஞ்சினபரதேவதையில்லையென்று ஓரோலையிலெழுதி அதில் அவர்களைச் சம்மதிக் கையெழுத்திடச் சொல்லித்தண்டிக்க, அவர்களில்சிலர் அவனால் கொடுக்கப்பட்ட அர்த்தக்ஷேத்ராதிகளில் ஆசைவைத்தும், சிலர்

தண்டனைக்குப் பயந்தும் கையெழுத்திட, அந்த விபரீதத்தை அவனுக்கு மந்த்ரியாயிருந்த நாலூராச்சான்கண்டு, அரசனே? இந்த ஆபாச வித்வான்கள் கையெழுத்திட்ட மாத்ரத்திலே சிவ பரத்வம்நிலைபெறுமென்று ஒருபோதும் எண்ணாதீர், திருவரங்க க்ஷேத்ரத்திலிருக்கும் எம்பெருமானார் கூரத்தாழ்வான்தொடக்கமான மஹாவித்வான்கள் உபய வேதாந்தங்களிலும் வல்லவர்களாகையாலே, அவர்கள்கையெழுத்தை வாங்கினீராகில் இதுநிலைபெறும் என்றுசொல்ல, அவன் உடனே தன்னுடையமனுஷ்யர்களையேவி, எம்பெருமானார் தொடக்கமான வித்வான்களை அழைத்து வாருங்கோளென்ன, அவர்கள் அப்படியே கோயிலுக்குவந்து எம்பெருமானார் மடத்தின் தலைவாசலிலே நின்று எம்பெருமானாரை அரசன் அழைத்துவரச் சொன்னானென்று சொல்ல, திருவாசல்காக்கு முதலிகள் அந்தராஜ மனுஷ்யர்களிடத்தில் உபாயமாகச்சிலநல்வார்த்தைகளாடி அவர்களைக்கொண்டே அரசன் வரவழைக்கிற கார்யமின்னதென்றுணர்ந்து உள்ளேபோய் உடையவருக்குத் திருமஞ்சனம் சமர்ப்பித்துக் கொண்டிருந்த கூரத்தாழ்வானுக்கு விண்ணப்பஞ்செய்ய, அவர் திரிகால ஞானியாகையாலே முன்னுக்கு நடக்கப்போகிற அசம்பவங்களை யறிந்துகொண்டு இந்தச்சமயம் நம்மாசார்யரை அரசன் சபைக்குத் தனியே போகவிடலாகாதென்றெண்ணி உடையவருடைய த்ரிதண்ட காஷாயாதிகளைத் தாம் தரித்துக்கொண்டு, பெரிய நம்பியையுங் கூட்டிக்கொண்டு, நிர்மானுஷ்யர்களுடனே சோழன் சபாமண்டபத்துக் கெழுந்தருளினார்.

பின்பு உடையவர் தீர்த்தமாடித் திருமேனி ஒற்றிக்கொண்டு த்ரிதண்ட காஷாயாதிகளைத் தாருங்கோளென்று பரிசாரகர்களைக்கேட்க, ஸ்வாமீ? அவற்றைஸ்ரீகூரத்தாழ்வான்பூண்டு பெரிய நம்பியைக்கூட்டிக்கொண்டு சோழன் சபாமண்டபத்துக்கெழுந்தருளினாரென்றுவிண்ணப்பஞ்செய்து, சோழனுடைய உத்தேசியத்தையும் அதற்குக் கூரத்தாழ்வானும் பெரியநம்பியும் செய்த தந்திரத்தையும் உள்ளபடி அறிவிக்க, அதுகேட்டு நம்பிக்கும் ஆழ்வானுக்குமென்னதீங்குவருகின்றதோவென்று உள்கரைந்து சிந்திக்க, அப்போது முதலியாண்டான் தொடக்கமான முதலிகள் உடையவர் திருவடிகளில் தண்டனிட்டு, ஸ்வாமீ? அரசன் பரிகரவானாகையாலே, தேவரீர் இத்தருணத்தில் இங்கேதங்க

வொண்ணுதென்று விண்ணப்பஞ் செய்துகொள்ள, உடையவர் அப்போதே பெரிய பெருமாளிடம் சென்று சரணம்புக்கு, 'வெறுப்பொடுசமணர் முண்டர் விதியில்சாக்கியர்கள் நின்பால், பொறுப்பரியனகள்பேசில்போவதேநோயதாகிக், குறிப்பெனக் கடையுமாகில் கூடுமேற்றலையை யாங்கே, அறுப்பதே கருமங் கண்டா யரங்கமாநகருளானே' என்கிற திருமாலைப் பாசுரத்தை யநுசந்தித்து, ஸ்வாமீ? அரசன்பரிகரவாஞைகயாலே இப்போது ஒன்றுஞ் செய்யக் கூடாது, ஆயினும் முகாந்தரேண செய்துவர லாமென்றெண்ணுகின்றேன்; இந்நிலைவைத் தேவரீர் தலைக்கட்டி யருளவேண்டுமென்றுப்ரதிபத்திபண்ணி விடைபெற்று, வெள்ளை சாத்திக்கொண்டு, சடக்கெனஅரங்கமாநகரைவிட்டுப்புறப்பட்டு முதலிகளைக் கூட்டிக்கொண்டு மேற்கே நோக்கி எழுந்தருளிவிட் டார். இந்தச் செய்தியை ராஜமனுஷ்யர்க ளறிந்து இவர்களைப் போகவிடாமல் தடுக்கவேண்டுமென்று பின்னேதொடர, அதை முதலிகளறிந்து அதித்வரையில்நடவாநிற்க, அப்படிசெய்தபோ தும் அவர்கள் நெருங்கிவிட்டார்கள். அவ்வேளையில் முதலிக ளெல்லாரும்நடுக்கமுற்றுத்திகைக்க, உடையவர் அவர்களுக்குத் தைர்யஞ்சொல்லித், தம்முடையதிருக்கையால் மணலை அள்ளிக் 'கொடுமைசெய்யுங் கூற்றமுமென்கோலாடிக் குறுகப்பெறு, தட வரைத்தோட் சக்ரபாணி சார்ங்கவிற்சேவகனே' என் றுஓதி அம் மணலை வழிநெடுக ஒழுக்கிக்கொண்டேபோக இராஜமனுஷ்யர் கள் அந்தமணலைமிதித்து உடனேமதிமயங்கித், திக்குத்தோன்று மல்திகைத்து, அப்பால் அடியிடப் போகாத படியாகச், சலிப் படைந்து, முன்னேசெல்லுகின்ற பார்ப்பார் மந்த்ரவாதம் பண் ணிப்போனூர்களென்று சொல்லிக்கொண்டு வீர்யமடங்கி மீண்டு போயினார்கள். இவர்கள் இப்படி பயணகதியில்த்வரித்து நடவா நிற்க, நீலகிரிச்சாரலாகியபாலைமலையோரத்திலேகாவேரியாற்றங் கரையில் நல்லான்சக்ரவர்த்தியின்சிஷ்யர்களான சிலவேடமுதலி கள் புலம் பாவாநிற்க, ஒருஸ்ரீவைஷ்ணவர் உடையவரைத்தேடிக் கொண்டு அந்தமார்க்கமேபோக, அவர்கள்ஆதரித்து, எங்குநின் றும் புறப்பட்டீர்களென்றுவினவ; கோவிலிலிருந்து வருகின்றே னென்று அவர் சொல்ல, ஆகில் கோவிலில் எம்பெருமானார் பாங்காயிருக்கின்றாரா? என்று கேட்க, அந்த ஸ்ரீவைஷ்ணவர் அதிக துக்காவேசராய், ஐயோ! சண்டாளனை சோழனுடைய

தூர்க்குணத்துக்கு அவர் இருய்த்து வெள்ளை சாத்திக்கொண்டு புறப்பட்டுச் சிலமுதலிகளைக் கூட்டிக்கொண்டு மேற்கேநோக்கி எழுந்தருளிவிட்டாராம்; அதைக்கேட்டு நான் அவரைத்தேடித் திரிகின்றேனே! நீங்கள் கேட்ட கேள்வி புகைந்துக்கொண்டிருக்கிற அக்னிகுண்டத்தில் நெய்விட்டாலெப்படி கிளருமோ அப்படிக்கு என் துக்கத்தைப் பெருக்கிவிட்டதே! யாருக்கென் சொல்லுகேன் என்று வ்யசனப்பட, வேடமுதலிக ளிவ்வர்த்தமானத்தைக்கேட்டுத் துக்கசாகரத்தில் மூழ்கிப், புலம் பாவுவகையைத் தவிர்ந்து, உண்ணுமல் ஆறுநாள் பட்டிணியா யிருந்துவிட்டார்கள். ஆறும்நாள் அஸ்தமித்தவாறே அம்மலையடியிலேயே உடையவரும் முதலிகளும் மழையால் நனைந்தும் குளிரால் ஈடுபட்டும் வருந்தித் தங்குவதற்கு இடம் தேடிக்கொண்டு செல்லுகையில், ஒரு புலத்தின் தலைமாட்டிலே நெருப்பொளி கண்டு அங்கேசென்று வேலியைக்கிட்டி வழியெங்கே பிள்ளைகாள் என்று கேட்க, அங்கிருந்த வேடமுதலிகள், இதேது இந்நேரத்தில் ஒற்றைக்குரலாய்ப் ப்ராஹ்மண சப்தமாய் விடாய்த்த சொல்லாயிருக்கின்றதென்று யோசித்துச், சடக்கென ஓடிவந்து வேலியை விலக்கி வழிகாட்டி உள்ளே அழைத்துக்கொண்டுபோய்த், தரித்துக்கொள்வதற்கு வேறே உடைகொடுத்து ஈரப்பரிவட்டங்களை வாங்கிப்பிழிந்துஉலரவிட்டுத் திருமேனிகளிலுண்டான சிலிர்ப்பு போம்படி,வஸ்த்ரங்களைப்பந்துபோல்சுருட்டிநெருப்பில்காய்ச்சி ஒற்றி, ஆயாசம்போக்கி, அனந்தரம் எங்கிருந்து புறப்பட்டீர்களென்றுகேட்க, இவர்கள் கோயிலிலிருந்து வந்தோமென்ன, அங்கே எம்பெருமானுர் பாங்காயிருக்கின்றுரா? வென்றுவினவ, அவரை நீங்களறிந்தபடி யெங்ஙனே யென்று இவர்கள் கேட்க, ஸ்வாமிகாள்? அடியோங்கள்நல்லான்சக்ரவர்த்தியின்அடிமைகள், அவர் அடியோங்களுக்கு ஹிதஞ்சாதித்தருளுகையில் (நமக்கெல்லாம் பரமாசார்யர் எம்பெருமானுராகையாலே) நீங்கள் எம்பெருமானுர் திருவடிகளேசரணமென் றிருங்கோளென்று நியமித்தருளினுரென்ன; அப்போது முதலிகள் இவர்தான் அவர் என்று உடையவரைக் காட்டிக் கொடுக்க, அவர்கள் உடையவர் ஸ்ரீபாதத்தைக் கட்டிக்கொண்டு வ்யாகூலப்பட்டு விழுந்து சேவித்துத், தேனும் தினையும் கொண்டுவந்து வைத்து, இதைவறுத்து இடித்துத் தேனிற்கலந்து அமுதுசெய்தருள வேண்டுமென்று ப்ரார்த்

திக்க, முதலிகள் அப்படியேதிருத்தி யமுதுசெய்து, கண்வளர்ந் தருளினார்கள்.

மறுநாள் விடிவோரையில் உடையவர் வேட முதலிகளி லொருவரையும் ஸ்ரீபாதத்துமுதலிகளி லொருவரையும் கூட்டிக் கோவிலுக்குப்போய் க்ஷேமசமாசாரம்சொல்லிவரும்படி போக விட்டு, அங்குநின்றும் புறப்பட்டு மேற்கே ப்ரயாணமாக, அந்த வேடமுதலிகள் அறுகாத வழியளவும் தொடர்ந்துபோய் மற் றொரு வேடமுதலி அகத்தில்விட்டுவிடைகொண்டார்கள். அனந் தரம் அவ்வகத்துவேடமுதலி பகலெல்லாம் காட்டில் சஞ்சரித்தி ருந்து அஸ்தமித்தவாறே அகத்துக்குவந்து இவர்களைப்பார்த்து, ப்ராஹ்மணர்கள் பட்டினியேகிடக்க, நாம்உண்பதுகூடாதேயெ ன்று ஆலோசித்துச் சமீபத்திலிருக்கும் கொள்ளைக்களம் என்கிற அக்ரஹாரத்தில் கட்டளைவாரி யென்பாரொருவர் ப்ராஹ்மணனு டைய அகத்தில் எழுந்தருளப்பண்ணி, இவர்களை இப்போதே அமுதுசெய்யப்பண்ணுவியுங்கோளென்றுசொல்லிப்போக, அவ் வகமுடையாளான அம்மையாரிவர்களுக்குத் தண்டன்ஸமர்ப்பி த்து அமுதுசெய்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க, முதலிகள் வேண்டாமென்ன,அவள்பஹுமானைச்சியத்தாலேநோக்கி,ஸ்வாமி காள்! அடியேனும் எம்பெருமானார் ஸ்ரீபாதத்தை யுடையவள் தான், ஆகையாலே சங்கையில்லாமல் அமுதுசெய்யத் திருவுள் ளம் பற்றலாமென்று ப்ரார்த்திக்க, முதலிகள் ஆச்சர்யப்பட்டு, நீர் அவர் ஸ்ரீபாதத்தை ஆஶ்ரயித்த தெங்ஙனமென்று கேட்ட ருள, இந்நாட்டிலே முற்காலத்தில் மாரியில்லாமல் க்ஷாமம் ப்ர பலித்தபோது அடியேன்அகமுடையாரோடு கோவிலுக்குவிடை கொண்டு சிலகாலம் அங்கே ஒரு மச்சின்பேரில் வாசஞ் செய்து கொண்டிருக்கையில், தினமும் எம்பெருமானார் ஏழகத்தில் மாது கரஞ்செய்து வருவதைக்கண்டு ஒருசங்கையுண்டாகி ஒருநாளள வில் மச்சினின்று மிறங்கிவந்து அவரைக்கேட்க, அவர் அதுவே அடியாக அடியேனை ஆட்படுத்திக்கொண்டு, கொங்குபிராட்டி யென்னும் தாஸ்யநாமமும் ஆத்மஸம்ரக்ஷணார்த்தமாக ஸ்ரீபாது கையையும் ப்ரஸாதித்தருளியிருக்கின்றாரென்று பூர்வவ்ருத்தாந் தங்களை விஸ்த்ருதமாக விண்ணப்பஞ் செய்ய; இதை முதலிகள் கேட்டு உடையவருக்கறிவிக்க; உடையவருங் கேட்டு ஆச்சர்யப் பட்டு முதலிகளை நோக்கி அங்கே மலையோரத்தில் நடுக்காட்டில்

நல்லான் என்கிற காளமேகம் வர்ஷித்திருந்ததைக் கண்டோமே என்றிருக்கையில்தானே இங்கேபழையசம்பந்தமும் ஒன்றுநேர்ப்பட்டிருக்கின்றதே! அழகிது! அழகியமணவாளன் நமக்குவழித்துணையா யிருப்பதாக வன்றோ! காணப்படுகிறது; இருக்கட்டும் இச்சம்பந்தம் நமக்குள்ளதேயாயினும், இது நெடுங்காலத்துக்கு முற்பட்டதாகையாலும், தேசம் வேறுபட்டிருப்பதாலும், இவ்வம்மையாருடைய தற்கால அனுஷ்டானமிருக்கும்படியை ஆராய்ந்தல்லது இசையலாகாது, ஆகையாலிவ்வம்மையாரைத் திருப்போனகஞ்சமைக்கும்படி நியமித்துவிட்டு, யாராவது மறைவாக விருந்து இவர்செய்யும் அநுஸந்தாநாதிகளை ஆராய்ந்துவந்து நமக்கறிவியுங்கோளென்ன; அவர்கள் அப்படியே அவ்வம்மையாருக்குநியமிக்க, அவர் தன்யோஸ்மியென்று அதிக பரபரப்புடன் அடைவாகச் சமைத்துவைத்து முன்பு உடுத்தியிருந்த புடவையைக் களைந்து வைத்து வேறொரு சுத்தமான புடவையை யுடுத்திக்கொண்டு எம்பெருமானார் திருவடிகளே சரணமென்று உச்சரித்து ஸ்ரீபாதுகையை ஏறியருளப்பண்ணி அமுது செய்தருள்வித்துப் புறப்பட்டுவந்து முதலிகளை அமுதுசெய்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவ்வேளை உடையவர் மறைவிலிருந்து பரீக்ஷித்த ஸ்ரீவைஷ்ணவரை யழைத்து நீர் கண்டபடி என்னென்ன, ஸ்வாமீ! எல்லாம் சம்ப்ரதாயத்துக்கு ஒத்திருந்தது, ஆனால் அங்கங்கே கறுத்து நீண்டிருந்த தொன்றை ஏறியருளப்பண்ணி அமுதுசெய்விக்கக் கண்டேன், அதுவோ எம்பெருமான் விக்ரஹமாகக் காணப்படவில்லை என்று விண்ணப்பஞ்செய்ய உடையவர் அவ்வம்மையாரை அழைத்து அம்மணீ? நீர் திருப்போனகம் சமைத்து வைத்து உள்ளேசென்று செய்ததென்னென்று கேட்டருள, ஸ்வாமீ? முன்பு அடியேனுக்கு எம்பெருமானார் ப்ரஸாதித்த ஸ்ரீபாதுகையைத் திருவடிவிளக்கி அமுதுசெய்தருள்வித்தேன்என்ன; ஆகில் அதை இப்போது கொண்டுவந்து காட்டுமென்றுநியமிக்க, அவர்கொண்டுவந்துகாட்ட, அவைஇவர் திருவடிகளுக்குஒத்திருந்தமைபால்திருவுள்ளமகிழ்ந்து அம்மணீ! இந்தக் கோஷ்டியில் அந்த எம்பெருமானாருண்டோ இல்லையோ அதைக் கண்டு சொல்லீரென்ன, அவ்வம்மையார் திருவிளக்கைக் கையிலேந்திக்கொண்டு ஒவ்வொருவருடைய திருவடிகளேயும் அடைவே பார்த்துக்கொண்டு வந்து உடையவர் திருவடி

களைக்காணப் பெற்றமாத்ரத்தில் திகைத்துநின்று, ஸ்வாமிகாள்? இது எம்பெருமானாருடைய திருவடிபோலே இராநின்றது, ஆகில் த்ரிதண்ட காஷாயாதிகளில்லாமையாலே தெரிகிறதில்லை யென்ன, அவ்வளவிலே உடையவர் அருள்நகை செய்து, நாம் தான்காணீர் என்றருளிச்செய்ய, திருவடிகளைக் கட்டிக்கொண்டு இந்தக்கோலம்வாய்த்ததேதுக்கு, இப்படித்திருமேனிஇளைத்திருப்பதற்கடியாது என்றுதுக்கத்தாலே அழப்புக, அவர்கண்ணைத் துடைத்துத் தேற்றி, அம்மணீ? அன்று அரங்கமாநகரத்திலே நாம் உமக்கு ஓதின வார்த்தையை நம்முடைய காதிலே ஓதிக் காணீரென்ன, அவர் அப்படியே இவர்திருச்செவியில் விண்ணப்பஞ்செய்ய, அதுவும் ஒத்திருந்ததனாலே "விதுராந்நாநிபுபுஜே ஶுசீநிகுணவந்திச" என்கிறபடியே ஸ்ரீகண்ணபிரானுக்கு விதுராழ்வானுடைய அன்னமானது மஹாபரிசுத்தமும் இனியதுமாயிருந் தமுதுசெய்தருளினாற்போலே அவ்வம்மையார் சமைத்த திருப்போனகத்தைச்சிலாகித்து முதலிகளை அமுதுசெய்வித்துத் தாம் எதித்தலைநாதனனபடியினாலே ஸ்த்ரீபாகம் கூடாதென்கிற ந்யாயங்கொண்டு பாலும் பழமும் கொண்டு பெருமாளை அமுது செய்தருள்வித்து அதை ப்ரஸாதப்பட் டிருந்தார். அனந்தரம் முதலிகளும் உடையவரும் கண்வளர்ந் தருளினார்கள்.

பின்பு கொங்குபிராட்டியார் முதலிகள் ஸ்வீகரித்து விட்ட ப்ரஸாத சேஷங்களையெல்லாம் ஒன்றாகத்திரட்டி, மச்சின்மேலேயிருந்த தன்பர்த்தாவுக்குக் கொண்டுபோய் ஸமர்ப்பித்து ப்ரஸாதப்படச்செய்து தாம்மாத்ரம்பட்டினியேயிருக்கப், பர்த்தாவானவன் பார்த்து இன்னேரமளவும் ஏன் உண்ணாதிருக்கின்றாயென்ன, கோயிலினின்றும் எம்பெருமானாரும் ஸ்ரீபாதத்து முதலிகளும் எழுந்தருளி ப்ரஸாதப்படாமல் கண்வளர்ந்தருளியிருக்கின்றார்களே, நான்உண்ணலாகுமா? என்றுஎதிர்வினவிட, அதற்கவன் நான் செய்யத்தக்க தென்னென்ன, நீ எம்பெருமானாரை ஆஶ்ரயித்தாலல்லது அவர்கள் நம்மகத்தில் ப்ரஸாதப்படமாட்டார்களென்ன, அப்படியேசெய்கிறேனென் றவனிசைந்து ப்ரத்யயம்பண்ணிக்கொடுக்க, அதற்குமேல்கொங்குபிராட்டியார் குதூஹலமுடையவராய் ப்ரஸாதப்பட்டுக்கண்வளர்ந்துமறுநாள் தம் பர்த்தாவை உடையவர் திருவடிகளிலே ஆஶ்ரயிப்பித்தார். இதனைக்கண்டிருந்தகொங்குபிராட்டியின் மாமியாகிற ஒருகிழவி,

தன்னை நெடுங்காலமாகச் சமையல்புரைக்குள்கலந்துபரிமாறுதிரு க்கிறவயிறெரிவோடு இதுவும் ஒருவிபரீதமாகக்கொண்டு பிள்ளை யின்பேரிலும் நாட்டுப் பெண்பேரிலும் அதிகமாக மறுகிக்கொ ண்டு, அசலகங்களில்சென்றுபுறங்கூறிக்கொண்டிருந்தனள். இப் படியிருக்கமூன்றுவதுநாள்கொங்குபிராட்டி திருவாராதனைசெய் கையில், கிழவி இவள் உள்ளேபுகுந்து என்செய்கின்றாள் பார்ப் போமென்று கதவின்த்வாரத்தால் பார்வையிட, அங்கேகறுத்து நீண்ட ஒன்றைப் பட்டுவஸ்திரத்தில் வைத்திருக்கக் கண்டாள்.

பின்பொருநாள் அதை நன்றாகக் கண்டறிய வேண்டி, கொங்குபிராட்டியில்லாதசமயத்தில், அதுசேமித்து வைத்திருக் கும் இடந்தேடிப் பார்த்தவளவில், அது ஒருபாம்பாய்ச் சீறக்க ண்டுபயந்தோடிவந்து, தன்புத்ரனுக்கறிவித்து, நம்மைக்கொல்லு நிமித்தம் இவள் ஒருசர்ப்பம் வளர்க்கிறாளென்று கலகம்புரிந்து கொங்குபிராட்டியை அகற்றிவிட்டார்கள். இஃதிப்படியிருக்க:-

மற்றுநாள் மேற்கே வஹ்நி புஷ்கரிணி யாகிற க்ராமமேற வெழுந்தருளி யங்கே சிறிதுகாலந் தங்கியிருந்து, அங்குநின்றும் மிதிலாபுரி, ஸாளக்ராமத் தேறவெழுந்தருள வூரடையப்ரச்சந்ந விரோதிக ளாகையா லந்தவீரசைவ ப்ராஹ்மணர்கள், உடைய வரை யநாதரித்திருக்க, உடையவரும் முதலியாண்டானையழைத் திவ்வூரார் நீர் எடுக்குந் துறையிலே நீர் ஸ்ரீபாதத்தை விளக்கி வாருமென்று நியமித்தருள, ஆண்டானுமப்படியேசெய்ய, அவ் வூராரிவர் ஸ்ரீபாததீர்த்த ப்ரபாவத்தாலே நிவ்ருத்தாஹங்கார ராய்த் தெளிந்துவந்து, உடையவர் திருவடிகளை யாஶ்ரயித்தார் கள். அத்தீர்த்த ப்ரபாவத்தையிட்டு அன்றுமுத லவ்வூருக்கு ஸ்ரீசாளக்ராமமென்று திருநாமஞ்சாத்தியருளினர். அங்கேவடுக நம்பியை ஸ்வபாதச்சாயா பந்நராம்படி விசேஷ கடாக்ஷஞ்செய் தருளியவருக்குத் தர்சநார்த்தங்களை ப்ரஸாதித்துக் கொண்டு சிங்கர்கோயிலில் சிறிதுநாளெழுந்தருளியிருந்து, விஷ்ணு வைஷ் ணவ த்வேஷியானசோழன் க்ரிமிகண்டனாய் நசித்துப்போம்படி யபிசரித்து மந்த்ரவாதம் பண்ணி யங்குநின்றும் புறப்பட்டுத் தொண்டனூரேற வெழுந்தருளினர். அங்கே யத்தேசத்துக் கதி பனான விட்டலதேவராயன்மகள் பிசாசாவிஷ்டமாயிருக்கிறவளவி லவனும் மந்த்ரவாதிகள் பலரையுங்கொண்டு தீர்க்கத் தேறின விடத்திலுந் தீராதபடியாலே துக்கிதனாயிருக்கத் தத்பத்நியும் நிர்

வாணமாயோடித்திரிகிற பெண்ணைக்கண்டு மிகவும் வ்யாகூலப்ப ட்டிருக்கிறவளவிலே, தொண்டனூர்நம்பி யுபாதாநார்த்தமாக ராஜக்ருஹத்தேறவெழுந்தருளித் துக்கிதையான ராஜபத்நியைக் கண்டு துக்கஹேது என்னவென்று கேட்க, அவளுந் தத்காரண த்தைச்சொல்லத், தொண்டனூர்நம்பியுங்கேட்டருளி; நம்மாசா ர்யரான எம்பெருமானாரெழுந்தருளினாராயின் அவர் கடாக்ஷத் தினால் இப்பேய்காடேறி யோடிப்போமென்று, ப்ரஹ்மராக்ஷஸ் ஸின் கதையையவளுக்கருளிச்செய்ய; அவள்கேட்டு ஆத்யாச்சர் யப்பட்டு, இவருக்கிரண்டு கையையுங் கூட்டி யொருகை தநங் கொடுத்துத் தன்னுடைய பர்த்தாவுக்கறிவிக்க; அவனும்பேயை விடுவிக்கவல்லவராகிலவரே நம்மாசார்யர் என்று அவர் திருவடி களை யாஶ்ரயிக்கக்கடவேனென்ன; அவ்வளவி லவன் ஸ்வகுருக் களுக்கு விருந்திடத் தேட, இவளுந்தன் பர்த்தாவைக் குறித்து, ஸ்ரீரங்கஸ்ரீநரென்று அவர்களிங்கேவாரார்கள் என்ன; அவனும் அவர்கள்வாராதிருப்பார்களோவென் றிவள்வார்த்தையை யதிக் ரமித்துச் சொல்லிப் போகவிட; குருக்களும்முன்பு டில்லீஶ்வர னை துருஷ்கனிவனை யாக்ரமித்துப் பிடித்துக் கொண்டுபோய் பட்டத்துக்கு அர்ஹனன்றிக்கே போம்படி யோரங்குலிச் சேத னம்பண்ணியதால் விடலதேவராய னென்று ப்ரஸித்த னாகை யாலே, ஸ்ரீநாங்கனகத்தே யுண்ணலாகாதென்று சாஸ்த்ரஞ்சொ ல்லுகிறதென்று சொல்லியனுப்ப; அதுகேட்டவன் அதிகோபா வேசனாய் அவர்களைத் திரஸ்கரித்திருக்கிறவளவில், அவனுடைய ஸ்த்ரீயுமவனைக்குறித்து, உடையவர்திருவடிகளி லாச்ரயித்துஜ்ஜீ விக்கலாகாதோ,இவர்களாலென்னப்ரயோஜநமுண்டென்ன, அவ னுமிசைந்து, ஸ்வக்ருஹத்தேற வெழுந்தருள வேண்டுமென்று உடையவரைப்ரார்த்திக்க, இராமாநுஜரும் நாம் இராஜதானியை மிதிப்போமல்லோமென் றருளிச்செய்ய; அவ்வளவிலேதொண்ட னூர்நம்பி முதலான முதலிகளவனை விசேஷ கடாக்ஷம் பண்ணி னால் நம்தர்சநத்துக்குப் பஹூபகார முண்டென்றும், திரு நாராயணபுர மவனுடையதா யிருக்கிறபடியால் திருநாராயண புரஞ் ஜீர்ணோத்தாரணம் பண்ணலாம் என்றும், பகவத்கைங்கர் யார்த்தமிவனுடைய க்ரஹத்துக்குத் தேவரீரெழுந்தருளவேண்டு மென்றும் வேண்டிக்கொள்ள; உடையவரும்ஸம்மதித்து அவன் க்ருஹத்துக் கெழுந்தருளினவளவிலே யவனு மதிஸந்துஷ்டனாய்

இவர் திருவடிகளில் சாஷ்டாங்க ப்ரணாமம்பண்ணி ஸவிநயமாய் நிற்கிற வளவிலே, முதலிகளும் உடையவர் ஸ்ரீபாததீர்த்தத்தை யவன் புத்ரிக்கு ப்ரஸாதித்துத், தீர்த்தத்தைத் தலையிலே ப்ரோக்ஷிக்க, அவளுடைய சித்தபயம்போய்த் தெளிந்துவந்து சேலையைத்தரித்து உடையவர் திருவடிகளை ஸேவித்துப், பரமபதத்திலே நித்யஸூரிகள் தலைவரான வெம்பெருமானார் க்ருபைபண்ணினதினாலே யீடேறினேனென்று அப்பெண் விண்ணப்பஞ்செய்ய, இதனை விடலதேவராயனும், அவன் பக்தியுங் கண்டு அத்யாச்சர்யப்பட்டுத் தத்க்ஷணத்திலவர் திருவடிகளை யாஸ்ரயிக்க, அவர்களையு மிரங்கியருளித் திருவடிகளுக் கந்தரங்கராம்படி கடாக்ஷித்தருளினார். இப்படி யவனையும் ஸ்வவைபவத்தினால் சிஷ்ய னாக்கிக்கொண்டு, அவனுக்கு ஸ்ரீவிஷ்ணுவர்த்தன தேவராயனென்று திருநாமம் ப்ரஸாதித்தருளி ஸந்துஷ்டராயிருக்கிற வளவிலே யெங்கள் சிஷ்யனை நீரிங்ஙனே மயக்கிச் சிஷ்யனாக்கிக் கொள்ளும்போது, எங்களை ஜயித்தன்றோ நீரிப்படி செய்ய லாவதென்று பன்னீராயிரம்பேர் க்ஷமணர்க ளேககாலத்திலே வந்து தர்க்கிக்கத்தொடங்க, மின்னுக் கஞ்சுமவர்க ளிடியின்கையி லகப்பட்டாற் போலேயும், தேளுக்கஞ்சிப் பாம்பின் வாயிலகப்பட்டாற் போலேயும், விலங்கை விட்டுத் தொழுவிற் சிக்கினாற் போலேயு மாச்சுதே யினியென்ன செய்யக்கடவோமென்று விசாராக்ராந்தராயிருக்கத், தொண்டனூர்நம்பி முதலான முதலிக ளெல்லாருந் தேவரீருடைய ப்ரபாவத்தை யறிந்து உஜ்ஜீவிக்கும்படி வெளியிடவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரு மினி நம்மை வெளியிடாதிருக்க வொண்ணாது என்று பார்த்து, ப்ரதிவாதிக ளெல்லாரையு மிருக்கச் சொல்லித், தாமொரு மண்டபத்திலே வந்து திருத்திரையை வளைத்துக்கொண் டெழுந்தருளி யிருந்து, ஸஹஸ்ர பணாமண்டலமுடைய திருவநந்தாழ்வானா யொவ்வொவ்வருக்கும் ஒவ்வோர்முகமாகப் பதினாயிரமுகங்கொண்டு ப்ரத்யுத்தரமருளிச் செய்து, அவர்கள்வாயை மூடுவித்து ஜயித்து, ஸ்வஸித்தாந்தத்தை ஸ்தாபித்துவிட, முன்பு சக்ரவர்த்தித் திருமகன் "சதுர்த்தச ஸஹஸ்ராணி ரக்ஷஸாம் பீமகர்மணாம், ஏகச்சராமோ தர்மாத்மாகதம் யுத்தம்பவிஷ்யதி" என்று சொல்லுகிறபடியே தர்மாத்மாவான பெருமாள் இளையபெருமாளைப் பிராட்டிக்குக்

காவலாகவைத்துத், தாம் ஒருவருமே அந்தக் கரதூஷணாதிக ளான பதினாலாயிரம் ராக்ஷஸர்களை நிரஸித்து, மீண்டெழுந்தரு ளிப் பிராட்டியோடே கூடினதுபோலே யிவருமவர்களை ஜயி த்துவிட, அவர்களெல்லாரும் விஸ்மிதராய், இவர் திருவடிகளி லாச்ரயிக்க, அவர்களையு மடிமைகொண்டு, ஸ்ரீவைஷ்ணவர்க ளாகும்படி விசேஷ கடாக்ஷம்பண்ணித் தம்முடைய திவ்ய சக்தி யை ப்ரகாசிப்பிக்க, இதைக்கண்டு இராஜ்யாதிபதியான விஷ்ணு வர்த்தநனும் இராமாநுசர் திருவடிகளிலே யதிப்ரவணனாயிரு க்க, அங்குள்ள எம்பெருமானைத் தொண்டனூர்நம்பி யபிமா னித் திருக்கையாலே யவர்க்கு நம்பிமூத்தபிரானென்று திரு நாமஞ்சாற்றி யுகந்து, அங்கே வேதாந்த வ்யாக்யானஞ் செய்து கொண்டு, சிங்கர் கோயிலிலே யெழுந்தருளி யிருக்கிற காலத் திலே, யுடையவர் திருக்கையில் திருமண் செலவாய்ச் சாத்து கைக்குத் திருமண் பெற்றிலோமேயென்று சிந்தித்துக் கண்வள ர்ந்தருள; அன்றிராத்ரி திருநாராயணப் பெருமாளும் 'அணித் தாக யதுகிரியிலே யும்முடைய வரவு பார்த்துக்கொண்டு நில்லா நின்றோம், உமது திருவுள்ளத்துக்குப் போந்த திருமண்ணு மங்கேயுண்டு; சடக்கெனப் புறப்பட்டு வாரீ'ரென்று ஸ்வப்நங் காட்டியருள, விடிவுகாலத்திலே யுடையவரு மதிப்ரீதரா யெழுந் தருளியிருந்து, இதை முதலிகளுக் கருளிச்செய்து ஸ்ரீவிஷ்ணு வர்த்தந ராயனை யழைப்பித்துத் தாம் ஸ்வப்நங் கண்டபடி யரு ளிச்செய்ய, அவனுங்கேட்டுப் ப்ரஸன்னனாய் ஸம்மதித்துக் காடு வெட்டுவித்துக் கொண்டு, உடையவர் பின்னே ஸேவித்துக்கொ ண்டு செல்ல, பஹுதாந்ய ஸம்வத்ஸரம் தைமாஸத்திலே "நாரா யண கிரிர்நாம ஸம்ஸாரார்ண தாரணঃ - ஸஹ்யத்ரேஸ்ஸகிரிঃ பூர்வஸ்ஸஹ்ய ஜாயாஸ்ததோத்தரঃ - தூராதாலக்ஷ்ய தேசஶ்ருங் கைঃ துঃகஸாகரஸேதுபிঃ - தத்ரார்சநவிதாநேந தபஸாதி தை வதம் - அப்யர்ச்ய விவிதாந் காமாந்லபதே கமலாஸநঃ - ஸ்ரீபக வாந் - அத்ரோப த்ருஷ்டரூபேண வர்த்ததேதத்ர மஹீதரே- ஹ்ருதயம்மமதஸ்தாநம் ஶ்ருதீநாம் நயநம்பும் - முநிநாமபி ஸர்வஸ்வம் முக்தேஶ்ச ப்ரதமாங்குரம் - தக்ஷிணோத்தர பேதே நத்வா வேதௌஹி மமாஶ்ரயௌ - ஸத்வோத்தராணும் பூயஸ் த்வாத் ஶது ஶத்வோத்த ரோகிரிঃ - குணத்ரிதய பேதேநப்ரக் ருதிர் பித்யதேபரா - நாராயணாத்ரி நிஷ்டாநாம் நரஜோஶ்ஶ

குதஸ்தம: - ஸ்ரீரங்கே வ்ருஷபாத்ரௌச க்ஷேத்ரே ஸத்யவ்ர தேமம - விஷ்ணுலோகேசயாப்ரீதிஸ்ஸா ப்ரீதிஸ்த த்ரஜாயதே- தத்ரஶேஷஶ்சதநுதே ஶேஷவ்ருத்திம் யுகேயுகே - அஶேஷ ஶேஷிணேமஹ்யம் ஶேஷாஶந முகைஸ்ஸஹ - அநந்த: ப்ரத மம் ரூபம் லக்ஷ்மணஶ்ச தத: பரம் - பலபத்ரஸ்த்ரிதீயஸ்து கலௌகஶ்சித் பவிஷ்யதி - அர்ச்சித: க்ருஷ்ணராமாப்யாம் தத் ராஹம் த்வாபரேயத: - தேநயாதவ ஶைலோய மிதிலோ கேஷுகத்யதே - ஸஹஸ்ரசிகரஸ் ஸோயம்ஸாக்ஷாத் ஶேஷா த்மகோகிரி:-வைகுண்டாதபி யத்ராஸ்தேரமயாஸஹ மோததே- வைகுண்டாத் யகிலஸ்தாந ஶாரஸ்யம் யதுபூப்ருத: - ஸேவ யாக்ருத்ஸமத்ஸ்தாநே ஸேவா த்வத்ரபவிஷ்யதி - வைகுண்ட வாஸிநஸ்ஸர்வேஶேஷஶேஷா ஶநாதய: - திர்யக்ஸ்தாவர ஜங் மாஶ்ஶ்ரயந்தேயதுபூதரே” என்கிறபடி எம்பெருமானும் செம்பொன்யதுகிரியேறி, வேதபுஷ்கரிணிக் கரையிலே யெழுந் தருளிப் “பரிதாநசிலாந்த்ருஷ்ட்வாப்ரணமந்தித்விஜோத்தமா:” என்கிறபடியே பரிதானசிலையையும் சேவித்தங்கே நீராடி “வேத புஷ்கரிணீதீரே விஶாலேசிலாதலே, பரிதாநம்ஸஜக்ராஹ கா ஷாயம்பரம: புமாந்” என்கிற தத்தாத் ரேயரைப்போலே தாமும்மீளவும் காஷாயம் தரித்தருளி முன்னடந்து, திருநாரா யணப் பெருமாளெழுந்தருளி இருக்கிறவிடம் தேடிக்காணாமை யாலே பகவத் ப்ரபாவத்துக்குக் குறையாகவென்ன செய்தோ மென்று திருவுள்ளங் கலங்கிக் கண்வளர்ந்தருளின வளவிலே, மீண்டுந் திருநாராயணப்பெருமா ளுடையவர் ஸ்வப்நத்திலே எழுந்தருளிக், கல்யாண ஸரஸ்ஸின் தென்மேலையிலே செண்ப கச் சோலைக்கருகே திருமகிழுக்குத் தென்பார்ஶ்வத்திலே வள ர்ந்த திருத்துழாயின்கீழே பெரிய புற்றுக்குள்ளே இராநின் றோம்; திருமண்ணும் அந்தக்கல்யாண ஸரஸுக்கு வடமேலை யிலே “ஶ்வேதத்வீபாத்கமேஶேந ஶுத்தம்ருத் த்ரவ்யமாஹ்ருதம் - யாதவாத்ரௌ விநிக்ஷிப்தமக்ஷ யந்தந்மமாஜ்ஞயா”என் கிறபடியே பெரிய திருவடி நைனாராலே ஶ்வேதத்வீபத்தி லிரு ந்து கொணர்ந்து யதுகிரியிலே நிக்ஷேபிக்கப்பட்டு மத்ப்ரபா வத்தாலே அக்ஷயமாகச் சேமிக்கப்பட்டிருக்கின்றது. நீர் க்லே சிப்பானேன், நாமுமக் கடையாளமாக நீரிருக்கிற விடந்தொட ங்கி நாமிருக்கும் புற்றளவாக முறித்திட்ட திருத்துழாய்க்கொ

ழுந்தே குறியாக வாரீரென்றுப்ரத்யக்ஷ சமாநுகாரமாக ஸ்வப்ந முகேன வருளிச்செய்ய, உடையவரும்முகந் துணர்ந்தெழுந்திருந்து முறித்திட்ட திருத்துழாய்க் கொழுந்தே குறியாகக் கல்யாணசரசின் மூலையிலே யெழுந்தருளித் திருமுகப்படியே செண்பகவனத்தின் சமீபத்திலே கப்புங்கவருமாய்ப் பணைத்துக் கொழுந்துவிட்டிருக்கிற திருத்துழாய் மரத்தைக்கண்டு சேவித்துக் களித்தாநந்த கோஷத்துடனே பலகாலும் தண்டனிட்டு அத்திருத்துழாய்மரத்தின் மண்காப்பு நீக்கினவளவிலே "சமபி யது கிரிஸ்ருங்காந்தி ஸிந்துந்ததர்ஸ" என்கிறபடியே திருப்புற்றுக்குள்ளே பொற்கோயில் தோன்றினபின் மற்றங்கு இனிதமர்ந்த மாதவனுடைய நீலசிகாமணி நிதிதோன்ற, சகவர்ஷம் ஆயிரத்திற்குமேல் பன்னிரண்டு சென்றவர்த்தமாந பஹுதான்ய ஸம்வத்ஸரம் தைமாதம் ஸுக்லபக்ஷத்தில் சதுர்த்தசியும் வியாழக்கிழமையும் கூடிய புநர்பூஸ நக்ஷத்ரத்திலே திருநாராயணனுருவங்கண்டு நலமிகுத்துக் கொந்தளித்து எல்லாரும் குணலைக்கூத்தடித்து மங்களஸங்க ம்ருதங்கபடஹாத் யகிலவாத்ய ஜயஜய சப்த கோஷம்பண்ணி ராஜாவையுமழைத்துக் காட்டியருளிப் பாலாலே திருமஞ்சனம்பண்ணிப் 'பகற்கண்டேன் நாரணனைக் கண்டேன் கனவில், மிகக்கண்டேன் மீண்டவனைமெய்யே-மிகக் கண்டேன்' என்கிறபடியே திருநாராயணப்பெருமாளை யடிக்குந்தலைக்கும் செவ்விதாகக் கண்ணாரக்கண் டநுபவித்துத் தம்முடைய திருக்கைகளாலே மூன்றுநாள் திருவாராதனஞ் செய்தருளி,மாறனடிபணிந் துய்ந்தவனென்கிறபடி பரமாசார்யரான ஸ்ரீபராங்குசருக் கத்யந் தாபிமத சிஷ்யராகையாலே,பித்ருதனத்தைப் புத்ரன் விநியோகங் கொள்ளுமாப்போலேயும் 'தமிழ் மறைகளாயிரமும் - ஈன்ற, முதல் தாய் சடகோபன் மொய்ம்பால்வளர்த்த, இதத்தாய் இராமாநுஜ' னாகையாலே, ஐசுவர்ய கைவல்யங்களென்கிற க்ஷுத்ர புருஷார்த்தங்களை யிகழ்ந்து கால்கடைகொண்டு திருநாராயணன் தாளே உபாயோபேயமென்று நிஷ்கர்ஷிக்கிற ஒருநாயகத் திருவாய்மொழியைத் திருநாராயணனுக்குச் சமர்ப்பித் தருளினர். பின்பு கல்யாணஸரஸ்ஸின் வடமேலை மூலையிலே தமது திரிதண்டத்தாலே கீறப் பாலாற்றைப்போலே பொங்கிக் கிளம்புகிற திருமண்குவைகளைக் கண்டு ஆனந்தாதிசயத்தால் அத்திருமண்கொண்டு தம்முடைய திருவாராதனமான பேரருளாளருக்குச் சாத்தித் தாமும் பன்னிரண்டு திருநாமம் சாத்திக்கொண்டு த்ரிதண்ட மண்டிதகர புண்டரீகராய் விளங்கியருளிக் காடுவெட்டி ஊருங்கோயிலும் சமைப்பித்துத் திருநாராயணப் பெருமானுக்கு ஸ்ரீபாஞ்சராத்ர ஸாத்வத ஸம்ஹிதையாலே ப்ரோ

க்ஷணுதி திருவாராதனங்களை ஸ்ரீரங்கராஜபட்டர் திருக்கையாலேசெய்வித்து, நித்யோத்ஸவபக்ஷோத்ஸவ மாஸோத்ஸவங்களெல்லாம்நடத்தியருளி மஹோத்ஸவம் நடத்துகைக்கு உத்ஸவபேர மில்லையென்று சிந்தா வ்யாகூலராய்க் கண்வளர்ந்தருள, அப்போதிவர் ஸ்வப்னத்திலே திருநாராயணப்பெருமாளெழுந்தருளி நம்முடைய உத்ஸவபேரமான ராமப்ரியரிப்போது லீலைகொண்டாடி டில்லியேற வெழுந்தருளித் துருஷ்கராஜ க்ருஹத்திலே இருக்கிறார், அங்கேறப்போ யெழுந்தருளுவித்துக் கொண்டு வாருமென்று திருவுள்ளமாயருள, உடையவரும் ப்ராதஃகாலமானவாறேஎழுந்திருந்து ஸ்வப்னத்தைமுதலிகளுடனாலோசித்துப் பயணகதியிலே த்வரித்துக் கொண்டு புறப்பட்டு, டில்லியேற எழுந்தருளினவாறே டில்லிபுரீந்த்ரனை ராஜாவு மிவரைக் கண்டு, ப்ரத்யுத்தான ப்ரணாம பூர்வகமாகப் பஹுமானபசாரத்துடனெழுந்தருளச்செய்து, கார்ய மருளிச்செய்ய வேண்டு மென்று விண்ணப்பஞ்செய்ய,உடையவருமெங்கள்தெய்வமான ராமப்ரியரிங்கே எழுந்தருளியிருக்கிறாரவரைத் தரவேண்டுமென் றபேக்ஷிக்க, ராஜாவும் உங்கள்பெருமாள்இங்கிருப்பாராயின் உமது ப்ராவண்யஸக்தியால் அழைத்துக்கொண்டு போமென்ன, உடையவரும் அவ்வாறே "தொடர்சங்கிலிகள் சலார்பிலாரென்ன" என்னும் பாசுரத்தை அநுசந்தித்தழைக்க, ராமப்ரியரும் ஆஸ்ரித வாத்ஸல்யந்தோன்ற இட்டசட்டையும், கட்டின சிறுச்சதங்கையும், இட்டகஸ்தூரிதிருநாமமும், முடித்தமைவண்ணநறுங்குஞ்சியும், தன்முகத்துச்சுட்டி தூங்கத்தூங்கநெறித்த குழலழகும் ப்ரகாசிக்கச், சஜ்ஜையிலுங் குதித்துத் 'தன்னியலோசை சலன்சலனென்றிட' வென்கிறபடியே செம்பொன் சலங்கை சலன்சலனென்றொலிக்க அகிலருங்காணும்படிவந்து உடையவர் திருமடியிலேயிருக்க; உடையவரும் புளகாங்கிதராய் ஆநந்தைகார்ணவாந்தர் நிமக்நராய் மார்பும் தோளும் பூரித்து என்னுடைய செல்வப்பிள்ளை யன்றோவென் றெடுத்தணைத்துக்கொண்டு உச்சிமுகந் தருளினார். அன்று முதல் ராமப்ரியர்க்குச் செல்வப்பிள்ளையென்று திருநாமமாயிற்று. இதைக்கண்டுராஜாவு மத்யாச்சரியப்பட்டு ப்ரீதியுக்தனாய் உடையவர் திருவடிகளிலே விழுந்து சேவித் தநேகவிதமாகச் சத்கரித்துப் பஹுமானபசார சகிதமாகச் சம்பத்குமாரரை யதிசார்வ பௌமர்க்கு எழுந்தருளுவித்து யதுகிரி நாச்சியாருடன் கொண்டுபோம்படி விடையளித்தான்,

* உடையவர் அவ்விக்ரஹங்களை எழுந்தருள்வித்துக்கொண்டு த்வரித்துப் பயணகதியிலே யாதவாத்ரியேற எழுந்தருளி ஸர்வரும் செல்வப்பிள்ளைக்கு எதிராஜகுமாரரென்னும்படி விசேஷித்துப் புத்ரவாத்ஸல்யம் பண்ணி அபிமானித்தருளி ப்ரோக்ஷணுதி பிரதிஷ்டாபூர்வகமாகத் திருநாராயணப்பெருமாளுடனே செல்வப்பிள்ளையையும் யதுகிரி நாச்சியாரையுஞ் சேர்த்துத் திருநாராயணப் பெருமாளுடைய திவ்யோத்ஸவ கர்த்தராக்கி நித்ய பக்ஷ மாஸ அயனசம்வத்ஸர மஹோத்ஸவ திருநாள்களெல்லாம்

* சிலபிரதிகளில்ராமப்ரியர்டில்லீஶ்வரன் திருமகளாரது சயனகிருஹத்தில் அவ்வம்மையாருடன் கூடியிருந்ததாகவும், உடையவர் ராமப்ரியரையழைத்துக்கொண்டுபோனபோது அவ்வம்மையார்பிரிவாற்ருராய்ப் பின் தொடர்ந்தனரென்றும் காணப்படும் விஷயம் சரியென்று தோற்றவில்லை. அடியிற்கூறியபடி டில்லீஶ்வரன்திருமகளாரான ஸுரதாணியாருடன்கூடியிருந்தவர்அழகியமணவாளரென்றும், அவரையேஅவ்வம்மையார்பின்தொடர்ந்தனரென்றும் வரும்விஷயமே ஒப்பத்தக்கதாய்விளங்குகின்றது. அதுவருமாறு:—

ஒருகாலத்தில் டில்லி பாஷாவுக்குப் பக்கப் பிளவு கண்டு நோய் பொறுக்கமாட்டாமல் தன் மந்திரி பெருமாள் பக்தராகையால் அவரைக் கூப்பிட்டு, நீர் பகவானுக்கு மிகவும் அந்தரங்கபக்தராதலால், நான் படும் படியான அவஸ்தையை நீக்கும்படி உமது ஸ்வாமியைப் பிரார்த்திக்க வேண்டுமென்றுசொல்ல, அவரும் அன்றிராத்திரி பெருமாளுக்குத் திருவாராதனஞ் செய்து அமுது செய்வித்துத் தாம் பட்டினியாயிருந்து சோகித்தவண்ணம்கண்வளர்ந்தருளிஞர். பெருமாள் அவர்ஸ்வப்னத்தில் எழுந்தருளி ஏன்சோகித்திருக்கிறீர்; பயப்படவேண்டாம்; நமக்கு அர்ச்சித்ததிருத்துழாயை எடுத்து அந்தப்பாஷாவின் புண்மீதுகட்டினால் சுகப்படுமென்றுசொல்ல; அப்படியே அவர் அதிகாலேயில்தீர்த்தமாடி அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பெருமாளுக்கு அர்ச்சித்த திருத்துழாயைக்கொண்டுபோய் அரசனிடம்கொடுத்து அதைப்பிளவின்மீதுகட்டச் சொல்ல, அப்படியே அவனும்செய்து சௌக்கியமடைந்தான்.

அனந்தரம் சிலகாலம் சென்றவாறே அரசன் தனக்குப் புத்திரனில்லாமையால் தனக்குப்பின் பட்டத்துக்குரியார் யாருமில்லையே என்று யோசித்திருக்கையில், முன்னொருகால் தனக்குத் தன் மந்திரிசெய்த உபகாரத்தை நினைத்து, மந்திரியைக் கூப்பிட்டு, எனக்கு வயதாய்விட்டது இதுவரையிலும் புத்திரசந்தானம்இல்லை, ஆகையால் உம்முடையஸ்வாமியைப்பிரார்த்தித்து அப்பேற்றை யான் பெறச் செய்யுமென்று சொல்ல, அவர் தமது திருவாராதனப்பெருமாளுக்குத் திருவாராதனஞ் செய்து

நடத்தியருளித் தீர்த்தப்ரஸாதமும்பெற்று எதிராஜமடமுங்கட்டிக் கோயில்காணியாக்ஷிக்காரராக ஐம்பத்திருவர்களை யழைப்பித்துச்சக்ராங்கிதம்பண்ணி, ஐம்பத்திருவர் ஸ்ரீவைஷ்ணவரென்று சமுதாயத்திருநாமமும், பிரத்யேகமாகத் தாஸ்யநாமங்களும் ப்ரசாதித்து அவர்களைச் செல்வப்பிள்ளையின் கைங்கர்யங்களி லன்பாக நிறுத்திப் பிரதிஷ்டிப்பித்துக் குறைவறத் திருவாராதனம் நடத்திக்கொண்டு எழுந்தருளி இருக்கிற காலத்திலே ஒருநாள் ஸ்ரீபாஷ்யகாரர் தம்முடைய ஸ்ரீபாதத்திலுள்ள ஆசார்யக

அமுதுசெய்வித்துத்தாம்சாப்பிடாமல்வியாகூலத்துடன் நமதரசன்ஊருக்கெல்லாம் பாக்ஷாவாகையால் என்னதீங்குசெய்வானோ என்று பயப்பட்டுக்கண்வளர்ந்தார். அப்போது அவர் மனைவியானவர் ஏன் விசனப்படுகிறீர் நமக்குப்பெருமாளிருக்க ஒருகுறையும்வாராதென்றுசொல்லித் தேற்றியும் தேறாது கலங்கியிருந்தார். பெருமாள் முன்போலவே அவர் ஸ்வப்னத்தில் ப்ரசன்னராய்ச் சேவைதந்து நீர் அஞ்சவேண்டாம்; இன்னம் கொஞ்சதினத்தில் அரசனது மனோபீஷ்டம் சித்திக்கும் என்று அவனுக்கறிவியும் என்றுரைத்தருளி அந்தர்த்தானமாயினார். மந்திரியும் கண்விழித்து ஸ்வப்னமிருந்தபடியைக் கண்டு போரவுகந்து தீர்த்தமாடித் திருவாராதனம்செய்து பெருமாளை அமுதுசெய்வித்துத் தாமு மமுதுசெய்து பாக்ஷா சபைக்குப்போய்ப் பாக்ஷாவுக்குப் பகவத் அநுக்ரஹத்தைச்சொல்லி மகிழ்வைத்தார்.

இஃதிங்ஙனமிருக்க:—பெருமாள் பாக்ஷாவின் மந்திரியாகிய தமது அந்தரங்கப்பக்தருக்கருளியவண்ணம்நிறைவேறுமாறு, பூமிப்பிராட்டியை டில்லிபாக்ஷாவுக்கு மகளாகப்பிறக்கும்படி நியமிக்கப், பிராட்டியும் லீலாவிபூதியின் விபரீதத்திற்கஞ்சி மயங்கப், பெருமாள் பிராட்டியை அவ்விபரீதங்க ளணுகாவென்று தேற்றிக், கொஞ்சதினத்தில் ஆனைகுந்திப் பட்டணத்தில் ஓர்கலகம்நடக்கும், அக்காலையில் பாக்ஷாவின் சேனைகள் பலவிடங்களிலும் கொள்ளையிட்டுத் தேவாலயங்களிலுள்ள விக்ரகங்களையும் கொண்டுபோவார்கள். அப்போதுநாமும்டில்லிக்குவருவோம் ஆகையால் அஞ்சவேண்டாமென்றுசொல்ல, அவ்வண்ணமேபிராட்டியும் டில்லிநகரிலோர் திருக்குளத்திற் செந்தாமரைமலரினிடம் அவதரிக்கலாயினார்.

டில்லிபாக்ஷா தனக்கு மந்திரி சொன்னபடி புத்ர சந்தானம் விரைவில் சித்தியாமையைக் குறித்து மந்திரியை வினவ, அன்றையதினம் பெருமாளுக்குத் திருவாராதனஞ் செய்து அமுதுசெய்வித்துத் தாம் பட்டிணியேகிடந்து கண்வளர, அவர் ஸ்வப்நத்திற்பெருமாள் ப்ரசன்னராய் அரசனது எண்ணம் நாளையதினம் சித்திக்கு மென்றுரைத்து அந்தர்த்தானமானார்.

ளுடனேயும்ஜீயர்களுடனேயும் ஐம்பத்திருவர்களுடனேயும்சாத்தினசாத்தாத முதலிகளுடனேயும் கொற்றி யம்மைமார்களுடனேயும் திருமேனிக்காவல்காரர் திருவிளக்குடையார் முதலான பேர்களுடனேயும் பெருங்கூட்டத் திருவோலக்கமாக ராமாநுஜனி லெழுந்தருளி இருந்து, யாதவாத்ரி இன்றுமுதல் திருநாராயணபுரமென்னக் கடவதென்று அந்நகரத்துக்குத் திருநாமஞ்சாற்றியருளித் திருநாராயணபுரத்திலே நித்யவாசம் பண்ணும் பெரியோர்களுக்குப்பரமபதமும் ஆசார்யகைங்கர்யமு முண்டாமென் றருளிச்செய்தருளினார்.

இதனைமந்திரிஅரசனுக்கறிவிக்க, அரசன்சந்தோஷத்துடன் புத்ரப்பேற்றை எதிர்நோக்கி யிருந்தனன். மறுநாள் தீர்த்தமாட வந்தபோது சமீபத்தில் ஒருகுழந்தையின்அழுகுரலைக்கேட்டு, அதனைஆராயும்படிதன் சேவகர்களுக்குக்கட்டளையிட, அவர்களும்தேடிப்பார்த்துஅழுகுரல்மாத்திரம் கேட்கிறதே யொழியக் குழந்தையைக்காணோமென்று சொன்னார்கள். உடனே அரசனும் மந்திரியும் புறப்பட்டுத்தாமே தேடப்புக, அந்த அழுகுரல் ஆங்குள்ள திருக்குளத்தினின்றும் எழுவதைக்கண்டார்கள்.

அனந்தரம் அந்தத்தடாகத்தைநன்குசோதிக்க, அதில் ஓர் பொற்றாமரைப்பூவின்மீது திவ்ய தேஜசோடுங் கூடிய பேரெழில்வாய்ந்த குழவியைக்கண்டு, மந்திரி தமது திருக்கைகளால் மிக்கமகிழ்வுட னெடுத்து வாயாரவாழ்த்தி அரசன்கையிற்கொடுக்க, அரசனும் தன்யோஸ்மிஎன்று பெற்றுக்கொண்டு ஆனந்தசாகரத்தில் மூழ்கித் தன்பத்நியிடங்கொடுக்க, அவ்வம்மணியும் அத்திருக்குழந்தையைப் பெற்றுக்கொண்டு அதியாவலுடன் பால்கொடுக்கக், குழந்தையும் ஸ்தன்யபானஞ் செய்யாமையைக் கண்டு, பசுவின்பாலைக் குடிப்பிக்க, அதனை யுகப்புடன் அருந்தியது. அரசன் தானடைந்த மகப்பேற்றைக் குறித்து அடங்காமகிழ்வுடன் மந்திரியைச் சன்மானித்துப் பலவாத்ய கோஷத்துடன் அபரிமிதமான தருமங்களைச்செய்து தக்க காலத்தில் தக்கோரைக்கொண்டு தன்புதல்விக்கு ஸுரதாணி என்னுந் திருநாமமிட்டு மிகவு மருமையுடன் செல்வமாய் வளர்த்துவந்தான்.

இப்படியிருக்கத், திருவரங்கப்பெருநகரிலே பெருமாள் பரிஜனங்களுடன் வாழ்ந்தருளுகிற காலத்திலே, டில்லீஶ்வரனான துலுக்கன் ப்ரதாப ருத்ரனை ஜயித்துத், தொண்டைமண்டலம் சோழமண்டலம் முதலான ப்ரதேசங்களிலே பரவி முற்றிலும் வியாபித்துத், திவ்ய தேசங்களில் பெருமாள்களையு மெடுத்துக்கொண்டு போமளவில்; திருவரங்கந் திருப்பதியிலேயும்வந்துபுகுந்து,கோயிலிலேப்ரவேசித்து, ஆரியபட்டாள் காவலான வடக்குவாசலிலே புகுரவர; அவ்விடத்திலே பஞ்சு

ஆகையாலே இத்திருமலைக்கு க்ரேதாயுகத்திலே சநத்குமாரன் சத்திய லோகத்திலிருந் தானந்தமயமான திவ்ய விமாநத்தோடே எழுந்தருளுவித்துக்கொண்டு திருநாராயணனை இங்கே ப்ரதிஷ்டிப்பிக்கையாலே 'நாராயணாத்ரி' என்றும், த்ரேதாயுகத்தில் தத்தாத்ரேயர் நான்கு வேதபுருஷர்களையும் சிஷ்யராக்கிக்கொண்டு வேதபுஷ்கரிணி கரையிலே ஸதாவேதாத்யயன நிரதராயிருக்கையாலே 'வேதாத்ரி' என்றும், த்வாபரயுகத்திலே நம்பி மூத்தபிரானும் ஸ்ரீகிருஷ்ணபகவானும் மாராதிக்கப்படுகையாலே 'யாதவாத்ரி' என்றும், "யுகேகலௌது ஸம்ப்ராப்தே யதிராஜே ஜநபூஜநாத் - யதிசைலமிதிப்ரோக்தம் நாமதேயாந் தரங்கிரேঃ" என்கிறபடி இக்கலியுகத்தில் எம்பெருமானாரெழுந்தருளி ஜீர்ணோத்தாரணம்பண்ணி யபிமானிக்கையாலே

கொண்டான் என்கிறவரிருந்து தடைபண்ணி அவர்களை நிறுத்தப், பஹுஜநங்களாகையாலே பத்துப்பேர் விழுந்து பஞ்சுகொண்டானைப் பிடித்துக்கொண்டு உள்ளே புகுந்து கருவுகலம் முதலானவைகளையும் கொள்ளையிட்டு, அழகிய மணவாளப்பெருமாள் சேரகுலவல்லியார் முதலான விக்ரஹங்களையும் எடுத்துக்கொண்டு, ஸர்வ சொத்தையும் கொண்டுபோகையில்; கரம்பனூரிலே ஒரு அம்மையார் "நித்யமாக அழகிய மணவாளப்பெருமாளைச்சேவியாமல் சாப்பிடுகிறதில்லை" என்று விரதம் பூண்டவராகையால் பெருமா ளெழுந்தருளினவுடனே உபவாஸம்பூண்டு ஸம்ஸாரத்தை விட்டு டில்லீச்வரன் பாளையத்திலே ப்ரவேசித்துத் தேஹதாரணம் பலஹாரமாகப் பண்ணிக்கொண்டு அந்தத் துலுக்கருடனே புறப்பட்டுத், திருநாராயணபுரத்திலே ராமப்ரியரையும் கொண்டு போகிறதைக்கண்டு, டில்லியிலேயும் வேஷதாரியாய்ப் பாக்ஷாவீட்டிலே புகுந்து, பெண்களையு மருவி, 'இந்தத் துலுக்கரரண்மனையிலே உக்ராணத்திலே அவற்றைவைக்க; அவற்றில் அழகிய மணவாளப்பெருமாளை அந்த டில்லீச்வரன் திருமகள் தனக்கு விளையாட்டுக் கருவியாக எடுத்துக்கொண்டு, தன்னுடைய சயன க்ருஹத்திலே வைத்துக்கொண்டிருக்கையில், இஃது அழகியமணவாளப்பெருமாள் திருமேனிக்கு ஸாதகமாகாதென்று அந்த அம்மையார் நிச்சயித்து, இந்தச் செய்தியை ஸ்தலத்திலே அறிவிக்க வேண்டுமென்று, திருவரங்கத் திருப்பதி யேறவந்து அச்சேதியை விண்ணப்பஞ் செய்யப், பெரியபெருமாளும் ஸ்பரிகராய்க் கொண்டு மிகவும் உகந்தருளி, அந்த அம்மையாருக்குப் பின்சென்றவல்லி என்று திருநாமஞ்சாற்றி ஸகல வரிசைகளும் ப்ரஸாதித்தார்.

அநந்தரம் ஸ்தலத்தாரனைவரும் அந்த விருத்தாந்தத்தைக் கேட்டு நன்றாக ஆலோசனைபண்ணி, ஸ்ரீரங்க நாச்சியாரை வில்வமூலத்திலே எழுந்தருளப்பண்ணிப், பெரியகோயில் திருவணுக்கன் திருவாசலைக் கல்திரை பரிமாறிக், கோயிலைப் பாழ்படவிட்டுப், பரிஜநங்களனைவருள்

'யதிசைலம்' என்றும் திருநாமங்கள் ப்ரஸித்தமான, அநந்தரம் உடையவர் பத்மகிரியிலே சென்று பௌத்த சமயங்களை வென்று என் பிள்ளைக்குத் தீமை செய்வார்க ளெங்ஙன மாவார்களே என்றிப்படி அவர்களெல்லாரையும் நிஶ்ஶேஷமாக நிரஸித்து நிஷ்கண்டக மாக்கியருளி ஸ்ரீபாஷ்யம் வ்யாக்யானித்துக்கொண்டு திருநாராயணப்பெருமாள் திருவடிகளிலே பன்னிரண்டு வருஷம் கைங்கர்யம் பண்ணிக்கொண்டு வாழ்ந்தருளினார். அக்காலத்திலே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கோயில்நின்று மெழுந்தருளி உடையவர் திருவடிகளிலே சேவித்திருக்க; இவரும் 'பெரிய பெருமாளும் திருச்செல்வங்களும் செய்கிறபடி யென்னென்று கேட்டருள; அவரும் தேவரீ ரில்லாத குறையேயொழிய மற்றொரு குறையு மில்லையென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவ

அறுபது திருநாமங்கள் பின்தொடர்ந்தவல்லியை முன்னிட்டுக்கொண்டு டில்லியிலேபோகப், பின்தொடர்ந்தவல்லியும் முன்புபோலவே வேஷத்தைத் தரித்து அரண்மனையிலே புகுந்து, பெண்டுகளை அநுவர்த்தித்து, அழகியமணவாளப்பெருமாள் அந்தத் துலுக்கன் திருமகள் ஸுரதாணியாருடனே பகல் அர்ச்சா விக்ரஹமாயும் ராத்ரி விபவாவதாரமாயும் ஸகல ஸம்ப்ரமத்துடனே விஹரித்துக்கொண் டிருக்கிறபடியைக்கண்டு, பரிஜநங்களுக்குச் சொல்ல, அவர்களும் பாடுவாரை முன்னிட்டுக்கொண்டு, டில்லீஶ்வரனைக்கண்டு ஜக்கிந்திநாட்டியத்தினாலே அந்த ப்ரபுவை நன்றாக வசீகரித்தார்கள். டில்லிபதியும் ஸந்தோஷப்பட்டுப் பஹுத்ரவ்யங்களைக் கொடுக்கப், பாடுவாரும் அவற்றை வாங்காமல் "நம்முடைய அழகிய மணவாளப்பெருமாளைத் தரவேண்டும்" என்று கேட்க; டில்லீஶ்வரனும் தன் மநுஷ்யரைக் கூட்டி, உக்ராணத்திலேயிவர்களுக்கு வேண்டின விக்ரஹத்தை எடுத்துக்கொண்டு போம்படி உத்தரவிட; இவர்களும் உக்ராணத்திலே சோதிக்குமளவில், அங்கே அழகிய மணவாளப்பெருமாளைக் காணாமையாலே கேவலம் விஷண்ணராய், அந்த அம்மையாரைக் கேட்டுக்கொண்டு, டில்லீஶ்வரனுடனே, "உம்முடைய குமாரத்தியார் எங்கள் பெருமாளை வைத்துக்கொண்டிருக்கிறார்" என்று சொல்ல, அவனும் "உங்கள் தெய்வத்தை நீங்களே அழைப்பித்துக் கொள்ளுங்கோள்" என்றுசொல்லப், பாடுவாரும் தேவகாநத்தினாலே அழகிய மணவாளப்பெருமாளை நன்றாக ஏத்தி ஆகர்ஷிக்கப்; பெருமாள் போகசிந்நங்களுடனே அந்தப் பெண்ணைத் தூங்கப் பண்ணித் தாமெழுந்தருளக்கண்டு பாடுவாரும் அரசனிடஞ் சொல்ல; அவனும் ஆச்சர்யப்பட்டு, "உங்கள் தெய்வத்தைக் கொண்டுபோங்கள்" என்று உத்தரங்கொடுக்க; அப்பொழுதே பரிஜநங்களனைவரும் பெருமாளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு அதிசீக்ரமாக அந்த ராத்திரியிலேயே எண்காதவழி கடந்து வந்தார்கள்.

ரும், 'சோழன்பக்க லெழுந்தருளின ஆழ்வானும் பெரிய நம்பியும் செய்கிறபடி யென்' னென்றுகேட்க; ஸ்ரீ வைஷ்ணவரும் கோயில்நின்றும் கூரத்தாழ்வானையும் பெரியநம்பியையும் ராஜமனுஷ்ய ரழைத்துக்கொண்டுபோய்ச் சோழன் முன்னேவிட; அவனு மிவர்களைப்பார்த்துச் சிவாத்பரதரம் நாஸ்தியென்றோலையில் கையெழுத்திடச் சொல்லக்; கூரத்தாழ்வானும் பஹு ப்ரகாரேண வநேக ஶ்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணாதிகளாலே ஸ்ரீமந்நாராயணனே ஸர்வ ஸ்மாத்பரன், ஜகத்காரணபூதன், த்யேயஞானவனு மவனே, ஸகல ஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தாவுமவனே, ப்ரஹ்மருத்ராதிகளுமவனுக்குப் புத்ரபௌத்ராதிகளாய் அவன் நியமனத்தினாலே இருக்குமவர்கள், இவ்வளவுமன்றியே "நான்முகனை நாராயணன் படைத்தான் நான்

மறுநாள் விடிந்தவாறே டில்லீஶ்வரன் பெண் எழுந்திருந்து, பக்கத்திலே பெருமாளைக் காணமல் திடுக்கிட்டு விஸநாக்ராந்தையாய் அந்தப்புரமெல்லாம் தேடிக்காணமல், உக்ராணம் முதலான வெளிகளிலும் காணமல், விரஹத்தினாலே துக்கிதையாய், ப்ராண ஸம்ஸயம் வந்தவளவிலே; தத்பிதாவான டில்லீஶ்வரன் இந்தச் சேதியறிந்து, தன் பட்டணத்திலே அந்தப் பரிஜநங்களை விசாரிக்குமளவில்; அவர்கள் முதல் நாள் ராத்திரியே புறப்பட்டுப் போனார்கள் என்கிற சேதியும் கேட்டு, "அவர்கள் கொண்டுபோகிற விக்ரஹத்தை அழைப்பிக்கிறபர்யந்தம் பெண் உயிர் தரிக்கமாட்டாள்" என்று அறிந்து பெண்ணைத் தானே பயணமாக்கி ஸேனைகளையும் கூட்டி, வழியி லெந்தவிடத்தி லவர்களைக் காணுகிறீர்களோ அந்தவிடத்திலேயே விக்ரஹத்தை வாங்கிக்கொண்டு வரச் சொல்லியனுப்ப; அவர்கள் புறப்பட்ட மூன்றுநாள் ஸேனையுடன் டில்லீஶ்வரன் புத்திரியாரான ஸுரதாணியாரும் புறப்பட்டுப், பெருமாளைக் காணுமாசையாலே ப்ராணன் தரித்துப், பயணகதியிலே திருவேங்கடத்தின் ஸமீபத்திலே சந்த்ரகிரி பர்யந்தம் வரப்; பெருமாள் பரிஜனங்களும் இவர்கள் கிட்டின சேதியைக்கேட்டு, "இனி மோசம் வந்தது; எப்படியும் இவர்கள் பெருமாளைக் கொண்டுபோவார்கள், ஆனபடியினாலே அவரவர்கள் தனித்து யதேச்சமாகப் போவோம்" என்றுநினைத்து, மைத்துனனும், மாப்பிள்ளையும், மகனுமாகிய கொடவர் மூன்று திருநாமங்கள்மாத்திரம் பெருமாளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு திருமலையிலே எறினார்கள்; மற்றை ஐம்பத்தேழுபேரும் தனித்து யதேச்சையாகப்போனார்கள். அந்தத் துலுக்கரும் வழியிலே யிவர்களைக் காணமல் பயணகதியிலே திருவரங்கந் திருப்பதியேறச்சென்று, அங்கே பெருமாள் எழுந்தருளாத சேதியையும் கேட்டுக், கோயில் திருவாசல் கல்திரையிட் டிருக்கிறபடியையும் கண்டவுடனே டில்லீஶ்வரன் புத்ரியாரான ஸுரதாணியார் விரஹாதிசயத்தாலே சரீரத்தை விட்டார்.

முகனும் தான்முகமாய்ச் சங்கரனைத் தான் படைத்தான்" என்றும் "ஏகஃ ப்ராஹ்மீ ஸரத்பாத மன்யஃ ப்ராக்ஷாளயந்முதா-அபரோதி தரன் மூர்த்நா கோதிகஸ்தேஷு புண்யதாம்" என்றும், 'சதுர்முகன் கையில் சதுர்ப்புயன் தாளில் சங்கரன் சடையினிற்றங்கி' என்றும் பெரியாழ்வார் நிர்வஹித்தபடி திருவடி நீட்டினவனொருவன், கமண்டலோதகத்தாலே பக்திபுரஸ்ஸரமாகத் திருவடி விளக்கினனொருவன், தத்தீர்த்தத்தை ப்ரீதியாலே சிரஸா வஹித்தானொருவன்; இவர்களில் பெரியோனாரென்று விசாரித்துக் காணுமென்ன? அவனு மிசையாதிருக்க; இவருமிம்மாத்ரமேயோ த்ரிவிக்ரமபாத தீர்த்த ஸங்கமத்தாலே கபாலித்வம் போய் ஶிவத்வ முண்டான சிவனிறே; அதுவுமன்றிக்கே "யச்சௌச நிஸ்ஸ்ருதஸரித் ப்ரவரோதகேந தீர்த்தேந மூர்த்நி வித்

அநந்தரம் துலுக்கர்சேனை திருமலைபர்யந்தம்போமளவில், அங்கே பெருமாள் திருமலையேறியெழுந்தருளின சேதிகேட்டு, அடிவாரத்திலேயிருந்துகொண்டு ஆளைவிட்டுத் திருமலையெல்லாம் தேடுவிக்குமளவில் பெருமாளுக்கு அந்தத் தேசத்திலே ரஹஸ்யமாயும் இருக்கப்போகாமலிருக்கையில், கொடவர் ஆலோசனைபண்ணி மைத்துனனையும் குமாரனையும் உயரவைத்துத், தாம் பெருமாள் திருமேனியை அணைத்துக்கொண்டு ஓஷதிபந்தம் பண்ணிவைக்கத், திருமலையில் தலையான பணுக்ருதியாயிருக்கிற சரிவிலே பெரிய கொடியைக்கட்டி மைத்துனனும் குமாரனும் உயரவிருந்துவிட, அதனாற் கீழிருந்த கொடவர் திருமேனி தீய்ந்து பெருமாள் ஆங்கே எழுந்தருளியிருக்க, மேலிருந்த கொடவரான அம்மானும் மருமகனும் கொடிகளைப் பிடித்துக்கொண்டு அந்தச் சரிவிலே யிறங்கிப் பெருமாளை ஸேவித்து, அவர் திருமேனியையும் ஸம்ஸ்கரித்து, அலர்மேல்மங்கை புரத்துக்கு வடக்குச் சரிவிலே பஹுகாலமிருக்க; அப்போது அம்மானும் பரமபதத்துக்குப்போய், மருமகன் மாத்திரம் அநேககாலம் கந்தமூலாசநராய்ப் பெருமாளுடன்கூட அஜ்ஞாதமாக இருந்தார்.

அந்தத் துலுக்கர்சேனையும் பெருமாளைத் தேடிக்காணாமல் டில்லிக்குப்போய், டில்லீஶ்வரனுடனே நடந்தசேதியைச்சொல்ல; டில்லீஶ்வரனும் சோகஹர்ஷாச்சர்யங்களுடனே யிருந்தான். பரிஜநங்களும் க்ரமேண திருவரங்கத்திலே வந்து சேர்ந்தார்கள்.

அநந்தரம் தத்தேசாதிபதியான சோழனநுமதியாலே கோயில் திருக்காப்பைநீக்கி, அழகிய மணவாளப்பெருமாளை நாநாதேசத்திலேயும் நாநாப்ரகாரத்தாலும் தேடுமளவில், பெருமாளையும் கொடவரையும் காணாமல், பெருமாள் தன்னுடைச்சோதிக் கெழுந்தருளினதாகத் தீர்மானித்துத் திருவரங்க மாளிகையாரைத் தத்ஸ்தாநத்திலே ப்ரதிஷ்டிப்பித்து; வில்வமூலத்திலே எழுந்தருளப்பண்ணியிருந்த ஸ்ரீரங்க நாச்சியார்

ருதேந சிவஶ்ஶிவோபூத்” என்னக்கடவதிறே யென்றருளிச் செய்யச் சோழனு மிதுகேட்டு அதிக்ருதனை நீர் பெரிய வித்வானாகையாலே உமக்கு வேண்டினபடியெல்லாஞ் சொல்லவல்லீரென்ன; இவரும் மீளவும் “நாராயணாத் ருத்ரோஜாயதே சிவஶ்ச நாராயண:” என்றும் த்ருடதரமாக ப்ரதிபாதிக்க; அவனு மங்ஙனன்று நான் சொன்னபடி சிவாத்பரதரம் நாஸ்தியென்றோலையில் கையெழுத்திடச்சொல்லி ஓலையைக்கையிலே கொடுத்துக் கனக்க நிர்ப்பந்திக்கக், கூரத்தாழ்வானும் தம்முடைய த்ருடாத்யவஸாயமாம்படியே ‘சிவாத்பரதரம்நாஸ்தி த்ரோணமஸ்தி தத:பரம்’ என்று ஓலையிலெழுதி யருளினார். சோழனும் வித்பன்னனாகையாலே இவரிப்படி பரிஹஸித்தோலைக் கொப்ப

ரையும் ப்ரதிஷ்டிப்பதாக வில்வமூலத்தைச் சோதிக்குமளவில், நாச்சியாரும் காணப்படாமையாலே, வேறே நாச்சியாரை ஏறியருளப்பண்ணுவித்து ப்ரதிஷ்டிப்பித்து, பூர்வப்ராகாரம்போலே ஸகல உத்ஸவங்களும் பெருமாளுக்கு நடப்பித்துக்கொண்டு போந்தார்கள்.

இந்தப்படி அழகிய மணவாளப்பெருமாள் கோயிலிலிருந்து புறப்பட்டருளி, டில்லீஶ்வரன் வீட்டிலே இரண்டுவருஷம் இருந்து பிறகு காட்டிலே வாசமாய் அறுபது வர்ஷத்துக்கு ஆறுமாசம் குறைவாயிருக்கிறகாலத்திலே, இரண்டு இருளர் திருமலை யடிவாரத்திலே ஒரு திவ்ய மங்கள விக்ரஹத்தையும், ததாராதகராய்த் தலை வளர்த்துக்கொண்டு ஒரு கொடியை அரையிலே கட்டிக்கொண்டு கமுகம்பட்டையாலே கௌபீநமும் தேக்குமடலாலே ஆச்சாதநமும் தரித்துக்கொண்டு கொத்தான்கொடியை யஜ்ஞோபவீதமாகத் தரித்துக்கொண்டிருந்த எண்பது வயதுள்ள வ்ருத்தரான ஒரு ப்ராஹ்மணரையுங்கண்டு; அந்த இருளரிருவரும் அந்த வ்ருத்தரண்டையிலேவந்து, பூர்வோத்தர வ்ருத்தாந்தங்களைக் கேட்க; அந்த வ்ருத்தரும் திருவரங்கந் திருப்பதியினின்றும் பெருமாள் புறப்பட்டருளினது முதலாக அற்றைவரைக்கும் நடந்த வ்ருத்தாந்தங்களைச்சொல்லி, “நாமும் வ்ருத்தரானோம். இந்தச்சேதியை நாட்டிலே அறிவித்துப் பெருமாளைக் கோயில்சேரும்படி பண்ணவேண்டும்” என்று அந்த இருளரைச் சரணம் புகுந்தார்.

அந்த இருளரும் சந்த்ரகிரி பட்டணம்போய் அவ்விடத்திய ப்ரபுவினுடனே இச்சேதியைச் சொல்லி, அந்த ப்ரபுவை துஷ்ப்ரவேசமான ப்ரதேசத்திலே கூட்டிக்கொண்டு வந்து, பெருமாளையும் அந்த வ்ருத்தரையும் சேவிக்கப்பண்ண, அந்த ப்ரபுவும் ஆச்சர்யப்பட்டு, வ்ருத்தரையும் பெருமாளையும் வெளிப்படுத்தி நாட்டிலே எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவர, சந்திரகிரியில் அந்த வ்ருத்தரும் தம்முடைய பிதாமாதுலருக்கு மந்த்ர ஸம்ஸ்காராதி கர்மங்களைப் பண்ணி நிறைவேற்றினார்.

மிட்டபடி கண்டு அத்யந்த கோபாக்ராந்தசித்தனாய்ப் பெரிய நம்பியை யழைத்து நீயெழுத்திடுமென்ன; அவரும் ஸ்ரீமந்நாராயணனே பரத்வமென்று பஹுமுகமாகவருளிச்செய்யத், தன்னுடைய சேவகரைப்பார்த்து இவர்களை நேத்ரோத்பாடனம் பண்ணச் சொல்லிப் போகவிட; அவ்வளவிலே கூரத்தாழ்வானும் சோழனைக் குறித்து நீ மஹாவீர சைவனாகையாலே உன்னைப்பார்த்த கண்கள் எனக்காகாவென்று தம்முடைய திருக்கை திவ்யநகங்களாலேகீறிக் கண்ணை வாங்கிப்போட்டார். பின்பு பெரியநம்பியை ராஜமனுஷ்யர் பிடித்துக்கொண்டுபோய் அவன் சொன்னதுபோலே செய்துவிட்டார்கள். இப்படி ஆழ்வானையும் பெரிய நம்பியையும் வருத்தித் தன்படை வீட்டில் நின்றும் புறப்படவிட, அத்தசையில் பெரியநம்பி திருமகளாரத்துழாயம்மை இவர்களிருவரையும் கூட்டிக்கொண்டுபோ யுபசரித்துக் கொண்டிருந்தார். ஆழ்வானும் தர்சனத்துக்காக தர்சனம் கொ

இந்தப்படி பெருமாள் அங்கே எழுந்தருளி யிருக்குங்காலத்திலே; துலுக்கர் பாண்டிய மண்டல பரியந்தம் வ்யாபித்திருக்க, வித்யாரண்யனாலே ஆனைக்கொந்திப்பட்டணம் ப்ரபலமாய், அங்கே ராயஸமஸ்தாநமுண்டாய், ஹரிஹரராயர் ராஜ்யம்பண்ணித் தொண்டமண்டலமளவாக ஆண்டுவருங்காலத்தில், அவருடைய காரியக்காரராகிய கோபண உடையார் செஞ்சியிலிருந்து திருவேங்கடமுடையானை ஸேவிக்கத்திருமலைக்கு வந்து, திருவேங்கடமுடையானைத் திருவடிதொழுது, அழகிய மணவாளப்பெருமாள் எழுந்தருளியிருக்கிற பூர்வோத்தரத்தை அங்குள்ளவராலறிந்துகொண்டு, சந்திரகிரிப் பிரபுவினிடமிருந்து பெருமாளை எழுந்தருளப் பண்ணுவித்துக் கொண்டுவந்து, சிங்கப்புரத்திலே ஒருவருஷ காலம்வரையில் எழுந்தருளப்பண்ணி, அங்கே அத்யயன உத்ஸவந் தொடங்கி அனைத்தழகும் கண்டருளப் பண்ணிக்கொண்டிருக்க; இச்செய்தியை அழகியமணவாளன் காணியாளரான சிங்கப்பிரான் புத்ரன் திருமணத்தூண்நம்பி அறிந்து உத்தமநம்பியைச் செஞ்சிக்கு அனுப்பி வைத்து, ஒரு காலவிசேஷத்திலே இவ்விடத்தில் நடந்த துலுக்கர் மயத்தைக் கோபண உடையாருக் கறிவிக்க; கோபண உடையாரும் நிரவதிக பலத்துடனேவந்து துலுக்கரை நிஶ்ஶேஷமாக அழித்து; அங்கிருந்தும் சகாப்தம் ஆயிரத்திருநூற்றுத் தொண்ணூற்று மூன்றில் செல்லாநின்ற பரிதாபி௵ வைகாசி௴ பதினேழாந்தேதி திருவரங்கந் திருப்பதியிலே பெருமாளை நாச்சியாருடனே எழுந்தருளப்பண்ணிக், கோயில் திருக்காப்பைநீக்கிப், பெரியபெருமாளுடன் சேர்த்து ப்ரதிஷ்டிப்பித்துத், திருவாராதநமும் பண்ணுவித்துத்; தர்மவர்மாவின் திரு

டுக்கப் பெற்றேமேயென்று ப்ரீதராயெழுந்தருளி இருந்தார். பெரியநம்பியும் வ்ருத்த ராகையாலே வேதனை பொறுக்க மாட்டாதே ஆழ்வான் திருமடியிலே திருமுடியும், அத்துழாயம்மை திருமடியிலே திருவடிகளுமாய்க் கண்வளர்ந் தருள; அப்போதாழ்வானு மத்துழாயம்மையும் தேவர் திருவவதரித்தகோயிலும், ஸ்ரீபாஷ்யகாரரும், பெருமாளு மிருக்க இந்தக்கங்கைகொண்டசோழபுரத்தி லொருகொல்லைத் தலைமாட்டிலிருந்து திருநா

மதிள்களின் கீழண்டை வெளிப்புறத்திலே தமக்குத் தனியன்கொடுத்த வ்ருத்தாந்தத்தையும் கோபண உடையார் வெளியிட்டருளினர்.
ஆநீயாநீலச்ருங்கத்யுதிரசிதஜகத்ரஞ்ஜ நாதஞ்ஜாநாத்ரேச்
செஞ்ஜ்யாமாராத்யகஞ்சித்ஸமயமதநிஹத்யோத்தநுஷ்கரான்ஸ்துலுஷ்கான்
லக்ஷ்மீக்ஷ்மாப்யா முபாப்யாம் ஸஹநிஜநிலயேஸ்த்தாபயந் ரங்கநாதம்
ஸம்யக்வர்யாம் ஸபர்யாம்குருத நிஜயசோதர்ப்பணோ கோபணார்ய:.
என்று சிலாலிகிதம் பண்ணுவித்தார்கள்.

கோபண உடையார், ஆனிமீ பதினேழாந்தேதி, உத்தமநம்பிகையிலே தாராபூர்வகமாகப், பதினேழாயிரம் பொன்னுக்குத் திருவிடையாட்டமாக, ஐம்பத்திரண்டு க்ராமங்கள் ஸமர்ப்பித்தார்; அவருடன் வந்த குண்டஸாளுவயர் பூர்வம் அணியரங்கன் திருமுற்றத்திலே பாண்டியன் கைங்கர்யமான பொன்னின் திருக்கொடிதட்டுத் துலுக்க ரழித்ததினால் வெண்கலவார்ப்பாகத் திருக்கொடிதட்டுபண்ணி நாட்டுவித்தார்; அதற்குப்பின்பு பெரியகிருஷ்ணராயர் உத்தமநம்பி. விஜயநகரத்துக்குப்போய் ராயரைக்கண்டு, அந்த ஹரிஹரராயர் குமாரன் உத்தரவின்படி, அணியரங்கன் திருமுற்றத்தில் திருக்கொடித்தட்டுக்குக் கிழக்கே துலாபுருஷ மண்டபமுங் கட்டிவைத்தார். அந்த ராயர் குமாரர் விருப்பண உடையாரும்வந்து துலாபுருஷத்தைப் பொன்மயமாக்கினர். ஹரிஹரராயர் துலாபுருஷங்கட்டிப் பொன் தாரைவார்த்தார். குட்டிக்கோயில் விமாநமும் பொன்மேய்ந்தன. இந்த ராயர் காணிக்கையான இரண்டு பொற்குடமும் உட்பட ஒன்பது பொற்குடமும் வைப்பித்துப் பெருமாள் பஹு நாளானபின் எழுந்தருளினபடியாலே நாநாதேசத்திலுமிருந்துவந்த பரிஜநங்கள்ஸேவிக்கும்படி, விருப்பண உடையார்பேரிலே சித்திரைத்திருநாள் த்வஜாரோஹணத் திருநாள் நடத்துகையில், திருமணத்தூண்நம்பி பண்ணின உபகாரம் திருவுள்ளத்திலே ஓடுகிறபடியினாலே, அழகியமணவாளர் குத்தகைப்பட்டையம் எழுதிவைத்து, வரிசையுடன் ப்ரஸாதித்துத், திருநாளுங் கண்டருளினர்.

பெருமாள் நாச்சியாருடன் கோயிலேற வெழுந்தருளியபோது, அவரை அழகிய மணவாளப்பெருமாள்தானே என்று ஸம்ஸயப்பட்டுக்கொண்டிருக்குமளவில், சோழனும் கோவிலுக்குவந்து பெருமாளை ஸேவித்து, இந்த வ்ருத்தாந்தங்களையும் கேட்டுத், திருவரங்கந் திருப்

ட்டுக்கெழுந்தருளவேண்டுமென்று திருவுள்ளமோவென்று க்லே
சிக்க;பெரியநம்பியும்"யத்ரக்வாப்யதவாதேசேவைஷ்ணவோம்ரி
யதேயதி-ததாதத்ராஸாந்நித்யங் கரோதிகருடத்வஜ:"என்கிற
படியே ராவணவேட்டை வ்யாஜ்யத்தாலேபெருமாள் தண்டகார
ண்யத்துக் கெழுந்தருளி, அங்கே பெரியவுடையாருக்குப்பெரு
மாள் திருவடிகள் சிந்தித்ததுபோலே,பெரியநம்பிக்கும்கண்டனை

பதியில் பூர்வீகரைத் தேடுமளவில், கோயில்வண்ணானொருவன் தொண்
ணூற்றுமூன்று வயஸில் வர்ணகாய தாருட்யமும் ப்ரஜ்ஞாபாடவமு
மிருக்க, வயோதிகத்தாலே த்ருஷ்டி சௌகர்யமில்லாமல் அந்தகனாயிரு
க்கக்கண்டு, அவனைப் பூர்வோத்ரங்களைக் கேட்குமளவில் அவன் சொல்
லுகிற பூர்வோத்தரமும், ஒத்திருந்தபடியினாலே, அந்த வண்ணானை அப்
புறம் இந்தத் திவ்ய மங்கள விக்ரஹத்தை நிர்த்தாரணம் பண்ணுகிறது
எப்படி? என்று கேட்க; அந்த வண்ணானும், தனக்கு த்ருஷ்டி தெரி
யாதபடியினாலே கண்டறியக்கூடாது. ஆனால், தான் பஹுகாலமாக
அழகிய மணவாளப்பெருமாள் சாத்தியருளினகைலியில் ஈரவாடை
தீர்த்தம் ஸாப்பிட்டுக் கைங்கர்யமும் பண்ணிப் பழகியிருக்கிறபடியாலே
இப்போது ப்ரதிஷ்டிப்பித்திருக்கும் பெருமாள் திருமஞ்சனதீர்த்தம்
அப்படியிருக்கவில்லை, ஆனபடியினாலே இருவருக்கும் திருமஞ்சனம்
பண்ணி ஈரவாடைக் கைலியைக் கொண்டுவந்து தனக்குத் தீர்த்தம் ப்ர
ஸாதிக்கச்சொல்ல; அந்தப்படியே இருவரையும் திருமஞ்சனம்பண்ணி
ஈரவாடை தீர்த்தம் ஸாதிக்க; அந்த வண்ணானும், அழகிய மணவாளப்
பெருமா ளீரவாடைதீர்த்தத்தை ஸாப்பிட்டு "இவரே நம்முடைய ஆண்
டவன்! அழகிய மணவாளப்பெருமாள்!" என்று கண்ணும் கண்ணீரு
மாக மோஹித்திருந்து, நெடுநேரத்துக்கப்புறம் மோகம் தெளிந்தது
கண்டு, சோழன் முதலானபேர்கள் அவனுடைய பக்திக்கு ஆச்சர்யப்
பட்டிருக்குமளவில்; அன்று ராத்திரி அந்த ப்ரபுவான சோழன் இந்த
வ்ருத்தாந்தங்களை அழகிய மணவாளப்பெருமாள் ஸ்வப்நம் ஸாதித்ததி
னாலே, அவன் ஸ்ரீரங்கநாச்சியாரையும் அழகிய மணவாளப்பெருமாளை
யும் பூர்வப்ரகாரமாக ப்ரதிஷ்டிப்பித்துப், பெருமாள் நியமனத்தினாலே,
ராஜமஹேந்திரன் திருவீதியில் வடகீழ்மூலையிலே திருநடை மாளிகை
யிலே அறையாகத்தடுத்து, அந்த டில்லீச்வரன் புத்திரியான ஸுர
தாணியாரைச் சித்ரரூபமாக எழுதிவைத்து ப்ரதிஷ்டிப்பித்துப், பெரு
மாள் நியமனத்தினாலே, நித்யமாக ப்ராதக்காலத்தில் டில்லியில் நடந்த
படிக்குக் கோதுமைரொட்டியும் மதுரப்பருப்பும் கிச்சிடியானபொங்க
லும் பெருமா ளமுதுசெய்தருளிச், சாந்து நாச்சியாரை யமுதுசெய்தரு
ளச்செய்து, அதற்காகக் கொறநாட்டில் இரண்டு கிராமம் ஸமர்ப்பித்
தான்.

சண்டிக்கிற வ்யாஜ்யத்தாலே ஆழ்வான்மடி ஸித்தித்தது; "வைஷ்
ணவஸ்யாங்க சையாயாம் வைஷ்ணவஸ்ய க்ருஹேபிணு" என்
றருளிச்செய்து ஒரு பாகவதன் மடியைக்காட்டிலுங் கோயில்
உத்க்ருஷ்டமன்றென்றும், நாமங்கேபோய் ப்ரக்ருதியைவிடில்
நமக்குப் பின்புள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் நம்பிக்கு முற்பட்ட
திருவடி சேரும்போது கோயிலேறப் போகவேண்டிய தில்லை
யோவென்று ஸங்கிப்பார்க ளென்றுஞ்சொல்லி, அடியிலே
ஆசார்யன் க்ருபைபண்ணினதற்குப் பரமபதம் ஸித்தமென்று
ஆளவந்தார் திருவடிகளைத் தம்முடைய திருமுடியிலும் கண்
ணிலு நெஞ்சிலு மொற்றிக்கொண்டு த்யானித்தவண்ணம் கூட
ஸ்தரான நாதமுநிகள் குருகைகாவலப்பன் திருநாட்டுக்கெழுந்
தருளின முக்தபூமியிலே இவரும் திருநாட்டுக்கெழுந்தருளினர்.
ஆகையாலே ப்ரபன்னனுக்கு அந்திமதேஸ நியதியில்லை யென்ற
படி. பின்பு அங்கே அநாத ப்ரேத ஸம்ஸ்காரம் பண்ணிக்கொ
ண்டு திரிவார் அங்குவந்து இவர்க்கு மப்படி பண்ணக்கடவோ
மென்று சொல்லித் தாங்கள் செய்வதாக உத்யோகிக்க, ஆழ்வா
னும் அத்யவசாயங் குலையாமல் வாருங்கோள் மாணிகாள்! ஈஸ்
வரனும் ஈஸ்வரவிபூதியும் வைஷ்ணவனுக்குக் கிஞ்சித்கரிக்கவிரு
க்க வைஷ்ணவனுமாய் அறவையுமாய் இருப்பாரை நீங்களெங்
கே தேடுவீர்களென் றவர்களை யுபேக்ஷித்துவிட்டார். இப்படி
இருக்குந் தசையிலே "கூரேஸஸஹபாந்தகத் விஜேந்த்ரைஸ்ம்
ஸ்க்ருத்யோசித விதிநாமஹார்ஹ பூர்ணம்" என்று சில ஸ்ரீவை
ஷ்ணவர்கள் பெரியநம்பியை அங்கே ப்ரஹ்ம மேதத்தாலே
ஸமஸ்கரித்துப் பள்ளிபடுத்தினர்கள். பின்பு ஒரு கட்டணத்
திலே ஆழ்வானை எழுந்தருள்வித்துக்கொண்டு இரவே ஒருவருங்
காணுதபடி கோயிலேற வந்து புகுந்தார்கள். கூரத்தாழ்வானும்
பெரிய நம்பியைப்போலே அடியேனுக்கும் இச்சரீரம் போக
வில்லையே யென்று கனக்க க்லேஸித்தார். பின்னையு மொருநாள்
தமது கையாலே தவழ்ந்துகொண்டு கோயிலிலே பெருமாளைச்
சேவிக்க வேண்டுமென்று ஆழ்வானெழுந்தருளத், திருவாசல்
காக்கும் முதலிகளுக்கு உடையவர் தமது ஸ்ரீபாதத்து முதலிக
ளொருவரையும் சேவிக்கவிட வொண்ணுதென்று திவ்யாக்ஞை
பண்ணி இருக்க, அவர்களு மாழ்வானைக்கண்டு தேவர் உடைய
வர் ஸ்ரீபாதத்தவரன்றோவென்ன, ஆழ்வானுமாமென்ன, அவர்

களுமாகில் உடையவர் ஸ்ரீபாதத்திலுறவுதேவையில்லை என்றால் சேவிக்கவிடுகிறோமென்ன, ஆழ்வானும் காதைப் புதைத்துக் கொண்டு எம்பெருமானார் திருவடி உறவு அறுத்துக்கொண்டு பெரியபெருமாளைச் சேவிக்க வேண்டாவென்று மீளவும் தம்முடைய திருமாளிகைக் கெழுந்தருளி, முறையோ வரவணைமேற் பள்ளிகொண்ட முகில்வண்ணனேயென்று போரக்லேசித்தாரென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் கேழ்ப்பார் செவிசுடு வார்த்தை கேட்டாரோ கண்ணபிரான் அறையோவென்று கோஷித்துக்கொண்டு, வேரற்றமரம்போலே விழுந்து கிடந்து துடித்துத் திருமிடறும் தழுதழுப்ப வத்யந்த மவஸந்நராய்ப் போரக்லேசிக்கும்படி கண்டு அருகிருந்த முதலிகள் தேற்றத் தேறி, ஆழ்வான் திருமேனியோடே இருக்கப்பெற்றோமென்றருளிச்செய்து பெரியநம்பிக்கு ஸ்ரீ சூர்ணபரிபாலனஞ்செய்து பெருக்கத் திருவத்யயநமும்நடத்தியருளி ஆழ்வானுக்குத் திருக்கண்கள் போயினவேயென்று வ்யாகூலஹ்ருதயராய் மாறொன்றில்லா மாருதிச் சிறியாண்டானை யழைத்து ஆழ்வானையு மாராய்ந்து அங்குள்ள விசேஷங்களையு மறிந்துவாருமென்று கோயிலுக்குப்போகவிட்டுப் பூர்வம்போலே வ்யாக்யானித்துக்கொண்டெழுந்தருளி இருந்தார். பெரியநம்பி திருநக்ஷத்திரம்-மார்கழி மாதத்தில் கேட்டை; அவர்தனியன் "கமலாபதி கல்யாணகுணாம்ருத நிஷேவயா-பூர்ண காமாயஸததம் பூர்ணாய மஹாத்மநே நமஃ, ஆசார்யாத் யாமுனேயாததிமத நிஹமாந்தார்த்த ஜாதம் ப்ரபத்திஞ் சோபாதிகூத்ர ஹஸ்யாந்யபி யதிபதயேகிஞ்ச தத்ர க்ஷுண்ணார்த்தம்-சோளேந்த்ரம் ப்ராப்ய சோக்த்வா ஸதவிபரபுமாந் ஸ்ரீபதிர்ஹேதி பீடாம் ஶாரீராந் தத்க்ருதாஞ்சாப்ய ஸஹதமநவைதம் மஹாபூர்ண மார்யம்" திருக்கோட்டியூர் நம்பியை அந்திமதசையில் "தேவரீர் திருவுள்ளத்திலே நினைத்திருக்கிற நினைவென்? னென்று ஸ்ரீபாதத்து முதலிகள் கேட்க" நம்பியும் சக்ரவர்த்தித் திருமகன் திருவுள்ளத்தை யொருபக்ஷி புண்படுத்தியதென்று சொல்லி நிர்ப்பரராய் ஆளவந்தார் திருவடிகளை த்யானித்துக்கொண்டு திருநாட்டுக்கெழுந்தருளினார். அதாவது 'ஶரணாகத பரித்ராணமும் போதாதென்றிருக்கு மவனிருக்க நமக்கினி வேறொரு நினைவுண்டோ? வென்பது கருத்து. இது கண்டு ஸ்ரீபாதத்து முதலிகள் ப்ராயேண துக்கித்துத் தேறித்

தெற்காழ்வாரைக்கொண்டு நம்பிக்குத் தீர்த்தங்கொண்டாடித் திருவத்யயனம் நடத்தி யருளினார்கள். திருக்கோட்டியூர்நம்பி திருநக்ஷத்திரம்-வைகாசியில் ரோகிணி. அவர் தனியன்:-"ஶம தம குணபூர்ணம் யாமுநார்ய ப்ரஸாதாதிகத பரமார்த்தம் ஜ்ஞான பக்த்யாதிஸிந்தும், யதிபதிநதபாதம் ஶ்லோகதத்வார்த்த நிஷ்டம் ஶமிததுரிதஹாரம் ஸ்ரீகோஷ்டி பூர்ணம் நமாமி" "யாமுநார்ய பதாம்போஜ தீபக்த்யம்ருத ஸாகரம், ஸ்ரீமத் கோஷ்டீ புரீபூர்ணம் தேசிகேந்த்ரம் பஜாமஹே" திருமாலையாண்டான் திருநக்ஷத்திரம்-மாசியில் மகம். அவர் தனியன்:- "ராமாநுஜ முநீந்த்ராய த்ராமிடீ ஸம்ஹிதார்த்ததம் - மாலாதர குரும்வந்தே வாவதூகம் விபஶ்சிதம்" திருவரங்கப் பெருமாளரையர் திருநக்ஷத்திரம்-வைகாசியில் கேட்டை அவர்தனியன்:— "அத்யாபயத் யதீந்த்ராய பராங்குஶ ஸஹஸ்ரிகாம், தந்நாதவம்ஶயம் வந்தேஹம் ஸ்ரீரங்காதிபதேசிகம் - பெரிய திருமலைநம்பி திருநக்ஷத்திரம்-சித்திரையில் ஸ்வாதி. அவர்தனியன்:—"பிதாமஹஸ்யாபி பிதாமஹாய ப்ராசேதஸாதேஶபல ப்ரதாய, ஸ்ரீபாஷ்யகாரோத்தம தேசிகாய ஸ்ரீஶைல பூர்ணாய நமோநமஸ்தாத்" திருக்கச்சிநம்பி திருநக்ஷத்திரம்-மாசியில் ம்ருகசீர்ஷம். அவர் தனியன்:—"கருணாகர பாதாப்ஜ ஶரண்ய மஹாத்மநே, ஸ்ரீமத் கஜேந்த்ர தாஸாய காஞ்சீ பூர்ணாயதே நம:"

அநந்தரம் மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டானும் த்வரித்துப் பயணகதியிலே சென்று கோயிலேறவெழுந்தருளிக் கூரத்தாழ்வானைச் சேவித்துநிற்க, ஆழ்வானும் மாருதிச்சிறியாண்டானைக்கண்டு உடையவரைச் சேவித்ததுபோலே ஸந்துஷ்டராய் உடையவர் செய்தருளுகிறபடி என்னென்று வினவியருள, அவரும் நடந்த விசேஷமெல்லாம் ஸவிஸ்தாரமாகச் சொல்லக் கேட்டு ஆநந்தித்திராநிற்க, அவ்வளவி லாண்டானும் உடையவரிப்போ தாசார்யவிஶ்லேஷா ஸஹிஷ்ணுவாய்த் தேவரீருக்குத் திருக்கண்மலர் போயினவேயென்று மிகவும் ஆர்த்தரா யடியேனை ஆராய்ந்துவரச் சொல்லியனுப்பி யருளினாரென்ன, ஆழ்வானும் உலகங்களுக்கெல்லா மோருயிரான தாம் சுகமாயிருக்கப்பெறில் இவ்விபத்து அடியேன் கண்ணழிவுமாத்திரமே கொண்டுபோகப் பெற்றதேயென்று ஹ்ருஷ்டரா யிருக்கிறாரென்று விண்ணப்பஞ் செய்யுமென்று விடையளிக்க, அவ்வளவிலே

சோழனுக்குக் கழுத்திலே புண்ணாய்ப் புழுத்துப் புரண்டானென்று கேட்டுக் கெங்கைகொண்ட சோழபுரத்தேற ஆண்டானும்சென்று அச்செவிக்கினிய செஞ்சொல் வார்த்தையை நிச்சயித்துக்கொண் டெழுந்தருளுகிறபோது வழியில் அம்மங்கியம்மாளு மெழுந்தருள, அவரையும் கூட்டிக்கொண்டு த்வரித்தெழுந்தருளி, ஒருநாளுடையவர் ஸ்ரீபாதத்து முதலிகளுடனே யநுஷ்டானார்த்தமாகத் திருக்கல்யாணி ஸரஸ்ஸின் கரையிலெழுந்தருளி நிற்கச்செய்தே, மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டானும் அம்மங்கியம்மாளும் உடையவர் திருவடிகளைத் தங்களாநந்தாஸ்ருக்களாலே நனைத்துக்கொண்டு தண்டன் சமர்ப்பித்து, ஆழ்வானுக்கும் பெரியநம்பிக்கும் அபராதம் பண்ணின சோழனுக்குக் கழுத்திலே புண்பிறந்து புழுத்துப் புரண்டுபோனானென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் கர்ணாம்ருதமான கட்டுரையைக் கேட்டு மார்பும் தோளும் பூரித்துத் தத்ஸந்தோஷாதிசயத்துடன் அவர்களை வாரியெடுத் தணைத்துக்கொண்டானந்தாஸ்ருக்களால் அவர்களை நனைத்து இத்தனைதூரமிவ்விசேஷங்கொண் டெழுந்தருளின இவர்களுக்குத் தகுதியாகக்கொடுக்கத் தக்கது த்வயமல்ல தில்லையென்று நிச்சயித்து த்வயத்தையே மீளவு மவர்களுக்குப் பரிசிலாக ப்ரசாதித்தருளினார். அருகிருந்த முதலிகளிப்போ திதுவென்னென்றுகேட்க, இத்தனைதூரம் நல்வார்த்தைகொண் டெழுந்தருளின விவர்களுக்கு த்வயமொழிய ஸத்ருசமாகக் கொடுக்கலாவ தொன்றும் கண்டிலோமென்றருளிச் சந்நிதிமுதலிகளைப்பார்த்து இது கல்யாண ஸரஸ்ஸு என்னுமது அந்வர்த்த சித்தமாகக்கண்டோமென் றருளிச்செய்தார். முதலிகளனைவரும் அப்படியாமென் றதனைக்கொண்டாட; அவர்களையுங் கூட்டிக்கொண்டு ப்ரஹ்லாத வரதரான அழகிய சிங்கர் திருமலையேறிச் சிங்கரைத் திருவடிவணங்கிநின்று முன்பு பகவத் பாகவத விஷயமென்றால் அஸஹமானனாய்ப் போந்த ஹிரண்யனை நிரஸித்ததுபோலே இப்போது பரதத்வமான தேவரீரை இல்லையென்று ஸாதுநாமுபமான பூதரான ப்ரஹ்லாதாழ்வானுக் கொப்பான கூரத்தாழ்வானுக்கும் பெரிய நம்பிக்கும் அபராதம் பண்ணின இந்தச் சோழனையும் க்ரிமிகண்டனாக்கி நசிப்பித்தருளலாயிற்றேயென்று விண்ணப்பஞ்செய்து தீர்த்த ப்ரஸாதமும் ஸ்வீகரித்து விடைகொண்டு அப்போதே

புறப்பட்டு உடையவரும் முதலிகளுமாகப் பெரியப்ரீதியோடே திருநாராயணப்பெருமாள் திருமுன்பேசென்று திருவடிதொழுது திருப்பல்லாண் டநுஸந்தித்து மங்களா சாஸனம்பண்ணி, நமோ நாராயணாயவென்று க்ருதாஞ்சலிபுடராய்ச் செல்வப்பிள்ளை திருவடிகளை நோக்கிநின்று, அடியேன் கோயிலேற விடைகொள்ளுகிறேனென்று விண்ணப்பஞ்செய்யத், திருநாராயணப் பெருமாளும் நெடும்போது வாய்விடமாட்டாமலிருக்க, உடையவரும் நீர் உள்ளமட்டுமிங்கே யிருமென்று அரங்கர் கோயிலிலே நியமித்தருள வில்லையோவென்ன, ஆகிலப்படியே செய்யுமென்று அர்ச்சகமுகேந திருவுள்ளமாயருள, எம்பெருமானாரும் புறப்பட்டருளி ஐம்பத்திருவரைப் பார்த்துத், திருநாராயணரையும் செல்வப்பிள்ளையையும் மங்களாசாசனத்துடனே ஸதாதர்சனம்பண்ணிக்கொண்டு காலந்தவறாது திருப்பணி திருவாராதனம நடத்திக்கொண்டு சேவித்திருங்கோளென்று நியமித்தருள, அவர்களு முடையவர் ஸ்ரீபாதத்திலே விழுந்து சேவித்துத் தேவரீர் திருவடிகளைப் பிரியில் சஹிக்கமாட்டோமென்று ஆர்த்தராய்த்தலைவணங்கியிருக்க, உடையவருமப்போதொரு சிந்தைசெய்து விக்ரஹத்துக்குப் படியெடுத்ததுபோலே விளங்குகிற தம்முடைய அர்ச்சாவதாரரூப விக்ரஹத்தையு மவதரிப்பித்து, அதிலே தம் திவ்ய சக்தியையும் பிரதிஷ்டிப்பித்து, ஐம்பத்திருவர் முதலானபேர்களையு மழைப்பித்து நாமுங்களுக்காக இங்கே இராநின்றோமென்றருளி, ஸ்வதிவ்ய சக்திபரிபூர்ணமான அவ்விக்ரஹத்தை யவர்களுக்குத் திருவாராதனமாகக் கொடுத்தருளி அவர்களைப்பார்த்துச் செல்வப்பிள்ளைகிணற்றின் கரையில் பிள்ளையாயிருக்கும், ஆதலாலவரைப் பேணிக்கொண்டு போருங்கோளென்று நியமித்து, அவர்கள்கையிலே செல்வப்பிள்ளையை யடைக்கலமாகக் காட்டிக்கொடுத்து, நமதுசெல்வப்பிள்ளைக்குத் திருவிளக்குத் திருமாலை யமுதுபடி சாத்துப்படி முதலான உபசாரங்களை எல்லாம் நன்றாக நடத்திக்கொண் டநுபோக்ய ஸஹ்ருதயராய் த்ரோக புத்திகளொருகாலும் நினையாதே ஊழிய கைங்கர்யங்களையும் மறவாதே பக்தி புரஸ்ஸரமாகப் பண்ணிக்கொண்டு போருங்கோளென்று தமது திருவடிகளைத் தொடுவித்து நியமித்தருளிச் செல்வப்பிள்ளையைப் பிரியமாட்டாமல் திருவடிகளைப் புகழ்ந்து முகந்தும் விழுவது

தொழுவதாய்த் திருவுள்ளமுருகித் திருக்கண்கள் துளிக்கப் புரிந்துபுரிந்து திவ்ய விமானத்தையும் திருப்பதியையும் திருச்சோலை எழில்களையும் திருமண்குவைகளையும் பார்த்துப் பார்த்து அஞ்சலித்து மங்களாசாசனம் பண்ணிக்கொண்டு செல்வப்பிள்ளையாகிற புத்ரவாத்ஸல்யம் பின்னே தள்ள நம்பெருமாளருளாகிற பித்ரு வாத்ஸல்யம் முன்னடத்த ஒருநடையிலே ஒன்பது நடைநடந்து கோயிலேற வெழுந்தருளினார். அநந்தரம் பயணகதியில் திருமுகத்துறையிலே நீராடிக் கேசவாதி த்வாதசோர்த்வ புண்ட்ரங்களையும் தரித்துக்கொண் டெழுந்தருளியிருக்க, ஸ்ரீரங்கத்திலுள்ளா ரெல்லாரும் வந்தெதிர்கொண்டு சேவிக்க, அவர்களையும் க்ருபைபண்ணி எழுந்தருளிப்புகுந்து சேவாக்ரமந் தப்பாமலடைவே சேவித்து அழகியமணவாளன் திருமண்டபத்திலே சென்று தெண்டன் சமர்ப்பித்து உறைகோயிலுள்ளே புகுந்து பெரியபெருமாளையும் நம்பெருமாளையும் திருவடிதொழுது மனமுருகி மலர்க்கண்கள் துளிக்கக் கண்ணாரப் பருகி வாயார வாழ்த்திநிற்கப் பெரியபெருமாளும் திருப்பவளச் செவ்வாய் திறந்து உடையவரைப்பார்த்து நெடுநாள் தேசாந்தரத்திற்சென்று போரமெலிந்தீரே என்று வினவியருள, எம்பெருமானாரும் பெருமாளைக்குறித்து, "அகமகிழுந் தொண்டர்வாழவன்பொடு தென்றிசைநோக்கித்" தேவர்பள்ளிகொண்டருளுகையால் வண்பெருவானகத்தில் சொல்லும்படியே உபயவிபூதியிலுள்ளார்க்கு மென்ன க்லேசமுண்டென்று விண்ணப்பஞ்செய்யப், பெருமாளுமுகந்து தீர்த்தமும் திருமாலையும் திருப்பரியட்டமும் ஸ்ரீசடகோபனையும் ப்ரசாதங்களும் ப்ரஸாதிக்க ஸ்வீகரித்து க்ருதார்த்தராய் நிற்கப், பெருமாளும் மடமேபோமென்று விடைகொடுத்தருள, இவரும் புறப்பட்டுத் திவ்யோத்ஸவங்கள் கொண்டாடும் திருமண்டபங்கள் திருக்கோபுரங்கள் திருமதில்கள் தொடக்கமான திவ்ய நகர ஸ்ரீயெல்லாஞ் சுற்றிச் சேவித்து முதலிகளும் தாமுமாக ஆழ்வான் திருமாளிகையேறவெழுந்தருள, ஆழ்வானு மெதிரே எழுந்தருளி உடையவர் திருவடிகளிலே விழுந்து சேவித்து உகப்பின் மிகுதியாலே திருவடிகளைப் பூண்டுகொண்டு கிடக்க, உடையவரும் ஆழ்வானைவாரி எடுத்தணைத்துக்கொண்டு க்லேஸாதிஸயேந சோகாஸ்ருக்கள் தாரா வர்ஷமாக வர்ஷிக்க நெடும்போ தொருவார்த்தையு மரு

ளிச்செய்யமாட்டாதே விம்மல் பொருமலாய்த் துக்கார்ணவமக் நராய்த் தழுதழுத்த திருமிடற்றொலியுடன் ஆழ்வானை இத்தர் ஶனத்திற்காக உமக்கிப்படி த்ருஷ்டிபோவதே யென்ன, ஆழ் வானு மொரு ஸ்ரீவைஷ்ணவர் திருமண்கோணிய தென்றுகினு நினைத்திரேனென்று விண்ணப்பஞ்செய்ய, உடையவரும் உமக்கு அஃது உண்டோ அடியேன் துஷ்கர்மமன்றோ உமக் கிப்படி வருகைக்கடியென்று திருவுள்ளம் புண்பட்டுத் துக்காப நோதனம் பண்ணியருள, ஆழ்வானும் தேறிநிற்க, மற்று மங் குள்ள ஸ்ரீவைஷ்ணவ சமூகத்துடன் கூடி மடமே எழுந்தருளி இருந்தார். பின்பு நாட்டிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் உடையவர் ஸ்ரீபாதத்தேறச்சென்று தண்டன்சமர்ப்பித்துப் பெரியநம்பி திருநாட்டுக் கெழுந்தருளினரே, ஆழ்வானுக்குத் திருக்கண்கள் போய்விட்டனவே என்று துக்காபநோதனம் பண்ணி இப்போது தேவரீரைப் பெற்றோமேயென்று சொல்லி எல்லாரும் ப்ரீதராயிருந்தார்கள். அக்காலத்திலே பாகவதாப சாரமன்றியிலே திருச்சித்திரகூடமென்கிற திவ்யதேசமும் அழி ந்ததென்று உடையவர்க்குச் சிலர்வந்து சொல்ல அதுகேட்டுத் துக்காகுலராய்ச் சோகித்துத் திருமுத்துதிர்த்தருளி அங்குள்ள மூலபேரமும் உத்ஸவபேரமும் திருப்பதியேற வெழுந்தருளி னார்களென்றுகேட்டு, அந்த இழவெல்லாமாறும்படி திருப்பதிக் கெழுந்தருளிப்பின்பு நாட்டிலுள்ள ஸ்ரீகோவிந்தராஜனையும் சே வித்து உத்ஸவபேர ஸஹிதமாகவங்கே பிரதிஷ்டையும் பண்ணி வைத்துத் "தென்றில்லைச்சித்திரகூடத் தென்செல்வனை, மின்னி மழைதவழும் வேங்கடத்தென் வித்தகனை" என்பது பொய்ம் மொழி யொன்றில்லாத மெய்ம்மொழியாகையாலே பவிஷ்யதர் த்தம் ப்ரத்யக்ஷமாச்சுதே என்று அவ்விழவுதீர்த்தருளித், திரு மலையேறித் திருவேங்கடமாமலையும் திருவடிதொழுது புறப்பட் டுப் பெருமாள் கோயிலேற வெழுந்தருளிப் பேரருளாளரையுந் திருவடிதொழுது மீண்டு பயணகதியிலே கோயிலுக்கெழுந்தரு ளிப்புகுந்து நம்பெருமாளைச்சேவித்து ஸ்வமடமே எழுந்தருளி ஸ்வாபிமானந்தர்ப்பூதர்க்குத் தென்றலுஞ் சிறுதுளியும்போலே தர்சன தாத்பர்யார்த்தங்களை யருளிச்செய்யா நின்றுகொண்டு சுகமே எழுந்தருளி இருந்தார். அதின் மற்றைநாள் உடையவ ராழ்வானை யழைத்துப் பேரருளாளர் அர்த்திதார்த்த பரிதான தீக்ஷிதராயிருப்பார்; நீரவரைக் கண்தந்தருள வேண்டுமென்று ஒரு ஸ்தோத்ரம் விண்ணப்பஞ் செய்யுமென்று அருளிச்செய்த ருள, ஆழ்வானுமிப்போ தடியேனுக்குக் கண்வேண்டாவென்று விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமானரு மப்படியன்று, உமக்

கன்றிக்கே ஸ்வரூபாந்தர்ப்பூதமாம்படி திவ்ய மங்கள விக்ரஹா நுபவத்தைப் பற்றச்சொல்ல வேண்டுமென்று நிர்ப்பந்திக்க, ஆழ்வானும் கண்ணழியாமல் வரதராஜஸ்தவத்தை யருளிச் செய்ய உபக்ரமித்து "ஸ்வஸ்தி ஹஸ்திகிரி மஸ்த ஶேகரஸ் ஸந்த நோது மயிஸந்ததம்ஹரிஃ நிஸ்ஸமாப்யதிம மப்யதத்தயந் தேவ மௌப நிஷதீஸரஸ்வதீ" என்றுசொல்லி "நீலமேக நிபமஞ்ஜன புஞ்ஜ ஶ்யாம குந்தலமநந்தஶயந்த்வாம் அப்ஜபாணி பதமம்புஜ நேத்ரம் நேத்ர ஸாத்குரு கரீஶஸதாமே" என்கிற இந்த ஶ்லோ கத்தாலே ஸதா தர்ஸனம்பண்ண யோக்யமான அப்ராக்ருத திவ்ய நேத்ரமே யடியேனுக்குத் தந்தருள வேண்டுமென்று விஜ்ஞாபிக்க, அன்றிரவே ஆழ்வானுக்குப் பேரருளாளரும் தந் தோமென்று ஸ்வப்னமுகேன வருளிச்செய்ய, ஆழ்வானும் ப்ர த்யூஷஃ காலத்திலே பெரிய ப்ரீதியோடே எழுந்திருந்து அநுஷ் டானஞ்செய்து வரதராஜ ஸ்தவத்தை நிறைவேற வருளிச்செ ய்து உடையவர் சன்னிதிக்குச்சென்று தண்டன்சமர்ப்பித்துத் தேவரீர் நியமித்தபடியே வரதராஜஸ்தவம் விண்ணப்பஞ் செய் தேனென்று வரதராஜஸ்தவத்தை முற்றும்விண்ணப்பஞ்செய்து காட்ட, உடையவரும் கேட்டுகந்தருளினவளவிலே ஆழ்வானும் "பிணியொழித்தமரர் பெருவிசும்பருளும்" பேரருளாளராகை யாலே அடியேன் கேட்டபடியே "வைகுண்டேதுபரேலோகே நித்யத்வேந வ்யவஸ்திதம், பஶ்யந்தி ஸஸதாதேவம் நேத்ரைர் ஜ்ஞாநே நசாமராஃ" என்றுஞ் சொல்லப்படுகிற ஸ்ரீவைகுண்ட நாதனை ஸதா தர்ஸனம் பண்ணுகிற வப்ராக்ருத திவ்ய சக்ஷு ஸ்ஸை ப்ரஸாதித்தருளினாரென்ன, உடையவரும் அங்ஙனன்று, அங்கேறப்போவோம் வாருமென்று ஆழ்வானைக் கையைப் பிடித்துக்கொண்டு பெருமாள் கோயிலேற வெழுந்தருள, ஆழ் வானுந் தாமருளிச்செய்த வரதராஜஸ்தவத்தை வரதராஜர் சந் நிதியிலே விண்ணப்பஞ்செய்து தலைக்கட்டுகிறபோது கார்யாந் தரத்தி லுடையவர் தாமதிக்கத், தத்காலத்திலே பேரருளாள ரும் திருச்செவிசாற்றி ப்ரஸன்னராய் உடையவர் வருவதற்கு முன்னே ஆழ்வானை யுமக்கபேக்ஷித மேதென்று கேட்டருள, ஆழ்வானுமுடையவர் திருவுள்ளம்பற்றினதை வேண்டிக்கொள் ளாதே நான்பெற்றபேறு நாலூரானும் பெறவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, அப்படியே பெறக்கடவனென்று பெரு மாள் திருவாய்மலர்ந்தருளின வளவிலே உடையவர் ஓடிவந்தி தைக்கேட்டுத் திருவுள்ளம்வருந்திப் பேரருளாளரைக் குறித்து ஸர்வக்ஞரான தேவரீரிப்போ தடியேன் நினைவைத் தலைக்கட்டி னீரில்லையே யென்றும், ஆழ்வானை நோக்கி நீர் ஸ்வதந்த்ரரா யென்னினைவை யதிலங்கித்து நான்வருவதற்குமுன்னே இப்படி

செய்தீரேயென்றுஞ்சொல்லி இருவரையும்வெறுத்து இனியென் னென்றுதிகைத்துநிற்கப், பேரருளாளர் நம்மையும் உம்மையும் காணுமிடத்திலுள்ள கண்ணாலே இவர் காணக்கடவரென்று வர ப்ரதானம்பண்ணியருள, ஆழ்வானும்பெருமாளையும் தம்கண்ணா லேகண்டு சேவித்துச் சாத்தின திவ்யாபரண திவ்யவிக்ரஹாவய வாதிகளை இவை இவையென்றுகுறித்துக் காட்டியருளி உடைய வர்விக்ரஹத்தையும் சேவித்துக்காட்டியருள, உடையவரும் க்ரு தார்த்தராய் அநுக்ஞைகொண்டு கோயிலேறவெழுந்தருளி ஆழ்வா னுடன்பூர்வம்போலேவ்யாக்யானித்திருக்கச்செய்தே,நாச்சியார் திருமொழிவ்யாக்யானத்தில் "நாறுநறும்பொழில்"என்கிற பாசு ரம் ப்ரஸ்துதமாக அந்தப் பாசுரத்தை அநுபவித்து "இன்று வந்தித்தனை" என்கிறபாசுரத்தையும் அநுபவித்து ஆண்டாள்பி ரார்த்தனையை நான் தலைக்கட்டவேண்டுமென்றப்போதே புறப் பட்டுத்திருமாலிருஞ்சோலைக்கு எழுந்தருளிக் கோதையார் பிரா ர்த்தித்தபிரார்த்தனையின்படியே நூறுதடாநிறைந்த வெண்ணெ யும், நூறுதடா நிறைந்த வக்காரவடிசிலும் பரிவுடனே திருமா லிருஞ்சோலைநின்றநம்பிக்கு அமுதுசெய்தருளப்பண்ணி, அங்கு நின்றும்புறப்பட்டு ஸ்ரீவில்லிபுத்தூரேறவெழுந்தருளிவடபெருங் கோயிலுடையானையுஞ்சேவித்து,நாச்சியார்திருமாளிகைக்கெழு ந்தருளி ஆழ்வார்திருமகளாரை அடிவணங்கிநிற்கக், கோதையா ரும் குலமுதல்வனைக் குறித்துத் தம்பிரார்த்தனை தலைக்கட்டின தற்குமிகவும் உகந்து 'நங்கோயிலண்ணர்' என்று அர்ச்சகமுகேந திருநாமம் பிரசாதித்து விடைகொடுத்தருள, அங்கு நின்றும் புறப்பட்டுத் திருநகரிக்கு எழுந்தருளி ஆழ்வாரையுஞ் சேவாக்ர மத்திலே சேவித்துத் தீர்த்த ப்ரசாதமும் ஸ்வீகரித்து மீண்டு கோயிலேற எழுந்தருளிப் பெரியபெருமாளையும் ஸ்ரீரங்கநாச்சி யாரையும்சேவித்துத் தம்முடைய மடமே எழுந்தருளி ஸ்ரீபாத த்து முதலிகளுக்குத் தர்சநார்த்தங்கள் பிரசாதித்துக் கொண்டு எழுந்தருளி இருந்தார்.

இப்படி எழுந்தருளி இருக்கிற ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீ பாதத்தில் ஆஶ்ரயித்த முதலிகளுடைய திருமுடியடைவு எங் ஙனே என்னில்:—

(௧) கூரத்தாழ்வான், (௨) மாடபூசிஆழ்வான், (௩) செட்ட லூர்ச் சிறியாழ்வான், (௪) அநந்தாழ்வான், (௫) நடாதூராழ்வா

ன், (௬) எங்களாழ்வான், (எ) அரணபுரத் தாழ்வான், (அ) அக ளங்கநாட்டாழ்வான், (௯) நெய்யுண்டாழ்வான், (௧0) உக்கலாழ் வான், (௧௧) கோமடத் தாழ்வான், (௧௨) வேதாந்தி யாழ்வான், (௧௩) நடுவிலாழ்வான், (௧௪) பிள்ளையாழ்வான், (௧௫) மிளகாழ் வான், (௧௬) காராஞ்சி யாழ்வான், (௧எ) ஈயுண்ணி யாழ்வான், (௧அ) கோயி லாழ்வான், (௧௯) திருக்கோவலூ ராழ்வான், (௨0) திருமோகூராழ்வான், (௨௧) முதலியாண்டான், (௨௨) பெரி யாண்டான், (௨௩) சிறியாண்டான், (௨௪) அம்மங்கி ஆண்டான், (௨௫) மாருதிப் பெரியாண்டான், (௨௬) மாறொன்றில்லா மாரு திச் சிறியாண்டான், (௨எ) சோமாஜி யாண்டான், (௨அ) கந் தாடை யாண்டான், (௨௯) ஈஸ்வராண்டான், (௩0) ஈயுண்ணி யாண்டான், (௩௧) பிள்ளையாண்டான், (௩௨) குறிஞ்சியூர்ச் சிறி யாண்டான், (௩௩) ஆளவந்தாராண்டான், (௩௪) ஜீயராண்டான், (௩௫) கிடாம்பியாச்சான், (௩௬) சிறியாச்சான், (௩எ) கணிய னூர்ச் சிறியாச்சான், (௩அ) கொங்கிலாச்சான், (௩௯) ஈச்சம் பாடியாச்சான், (௪0) என்னாச்சான், (௪௧) ஐயப்பிள்ளையாச்சான், (௪௨) தூயப்பிள்ளையாச்சான், (௪௩) ஆச்சியாச்சான், (௪௪) எச் சான், (௪௫) அருளாளப்பெருமாளெம்பெருமானார், (௪௬) தொண் டனூர்நம்பி, (௪எ) மருதூர்நம்பி, (௪அ) மளூர்நம்பி, (௪௯) சொட் டைநம்பி, (௫0) குரவைநம்பி, (௫௧) திருக்குறுங்குடி நம்பி, (௫௨) வங்கிபுரத்துநம்பி, (௫௩) முடும்பைநம்பி, (௫௪) ஸ்ரீபராங் குச நம்பி, (௫௫) ஸ்ரீவில்லிபுத்தூர் நம்பி, (௫௬) வடுக நம்பி, (௫எ) திருக்குருகூர் நம்பி, (௫அ) கோமாண்டூர் பிள்ளை நம்பி, (௫௯) ஸ்ரீபராசரபட்டர், (௬0) ஸ்ரீபராங்குசபட்டர், (௬௧) வரந் தரும்பெரியபெருமாள்பட்டர், (௬௨) அழகியமணவாளபட்டர், (௬௩) ஸ்ரீவேதவியாசபட்டர், (௬௪) சிறுப்பள்ளிதேவராஜபட்டர், (௬௫) கோவிந்தபட்டர், (௬௬) திருவரங்கபட்டர், (௬எ) நம்பி யாரில் ஸ்ரீரங்கராஜ பட்டர், (௬அ) பெரிய பெருமாள் பட்டர், (௬௯) சட்டம்பள்ளிஜீயர், (எ0) ஈச்சம்பாடிஜீயர், (எ௧) ஸ்ரீகுல சேகரஜீயர், (எ௨) திருவெள்ளறைஜீயர், (எ௩) ஆட்கொண்ட வில்லிஜீயர், (எ௪) திருமழிசைஜீயர், (எ௫) திருவாய்மொழிஜீயர், (எ௬) திருநாராயணபுரஜீயர், (எஎ) ஸ்ரீசாளக்ராமஜீயர், (எஅ) கோ விந்தஜீயர், (எ௯) திருமாலிருஞ்சோலை ஜீயர், (அ0) திருப்புட் குழி ஜீயர், (அ௧) திருக்குடந்தைஜீயர், (அ௨) திருமுட்டம்ஜீயர், (அ௩) திருநின்றவூர் ஜீயர், (அ௪) திருநாராயணபுரத் தரையர்,

(௮௫) பெருமாள்கோயில்பெருமாளரையர், (௮௬)ராஜநாராயணப்பெருமாளரையர்,(௮௭)திருவரங்கமாளிகையரையர்,(௮௮)திருவாய்மொழியரையர்,(௮௯)பிள்ளை திருநறையூரரையர், (௯0)திருக்குறுங்குடியரையர், (௯௧) திருநகரியரையர், (௯௨) திருக்கண்ணபுரத்தரையர், (௯௩)திருமாலிருஞ்சோலையரையர், (௯௪)திருவநந்தபுரத்தரையர், (௯௫)ராஜமஹேந்த்ரபுரத்தரையர், (௯௬) பிள்ளை விழுப்புத்தூரரையர், (௯௭) திருவேங்கடத்தரையர், (௯௮) ஆட்கொண்டவம்மாள், (௯௯) அம்மங்கி அம்மாள், (௧00) முடும்பையம்மாள், (௧0௧) பரித்திக்கொல்லை யம்மாள், (௧0௨) உக்கலம்மாள், (௧0௩) சொட்டையம்மாள், (௧0௪) ஆசூரிப்பெருமாள், (௧0௫) கிடாம்பிப்பெருமாள், (௧0௬) அம்மங்கிப் பெருமாள், (௧0௭) முனிப்பெருமாள்,(௧0௮)பட்டினப்பெருமாள்,(௧0௯)திருமலை நல்லான் (௧௧0) எம்பார், (௧௧௧) காராஞ்சி சோமயாஜியார், (௧௧௨) பெரிய கோயில் வள்ளலார், (௧௧௩) அலங்கார வேங்கடவர், (௧௧௪) திருக்குறுகைப் பிரான் பிள்ளான், (௧௧௫) ஆர்க்காட்டுப்பிள்ளான், (௧௧௬) கோமாண்டூர் பிள்ளான், (௧௧௭) இராமாநுஜப்பிள்ளான், (௧௧௮) திருநகரிப்பிள்ளான், (௧௧௯) கோமடத்தையன், (௧௨0) வைத்தமாநிதிச்சிறியப்பன், (௧௨௧) சிறுவையர், (௧௨௨) பெருமையர்,(௧௨௩)அணியரங்கத்தமுதனார், (௧௨௪)திருவரங்கத்தமுதனார்,(௧௨௫)கொமாண்டூர்இளையவல்லி,(௧௨௬)நம்பி (௧௨௭)கருந்தேவர், (௧௨௮) ஐம்பத்திருவர், (௧௨௯) எம்பெருமானார் செல்வப்பிள்ளை; சாற்றுத முதலிகள்:—(௧௩0) குலசேகரப் பெருமாள்,(௧௩௧)பட்டர்பிரான்தாசர்,(௧௩௨)பகைவில்லிதாசர் (௧௩௩) ஸ்ரீவில்லிபுத்தூர் தாசர், (௧௩௪) ஸ்ரீநாராயணதாசர், (௧௩௫)ஸ்ரீகோவர்த்தனதாசர், (௧௩௬)திருவழுதிவளநாடுதாசர், (௧௩௭) ஸ்ரீராமாநுஜதாசர், (௧௩௮) பிள்ளையுறங்காவில்லிதாசர், (௧௩௯) வண்டர், (௧௪0) சுண்டர், (௧௪௧) இராமாநுஜ வேளைக்காரர்; நத்தத்துமுதலிகள் மூவர்திருநாமம்:—(௧௪௨) திருவரங்கதாசர், (௧௪௩) திருமாலிருஞ்சோலைதாசர், (௧௪௪) வானமாமலைதாசர்; கொங்கில்முதலிகள்மூவர்திருநாமம்:-(௧௪௫) அழகியமணவாளதாசர்,(௧௪௬)திருவேங்கடதாசர்,(௧௪௭)பேரருளாளதாசர்; மழமலைக்கூர்நத்தத்தில் முதலிகள் மூவர்திருநாமம்:—(௧௪௮)யதிவரசூடாமணிதாசர், (௧௪௯)எதிராஜதாசர், (௧௫0)இளையாழ்வார்தாசர்; பாண்டியநாட்டுமுதலிகள் மூவர்திருநாமம்:—(௧௫௧) மகி

மூலங்காரதாசர், (௧௫௨) ஸ்ரீசடகோபதாசர், (௧௫௩) பிள்ளை திருவாய்மொழிதாசர்; ஸ்தானத்தாரில்:—(௧௫௪) சேனை நாத பிரஹ்மராயர், (௧௫௫) வீரசுந்தரபிரஹ்மராயர், (௧௫௬) ஜகந்நாத பிரஹ்மராயர், (௧௫௭) வீரராகவ பிரஹ்மராயர், (௧௫௮) பிள்ளை தேவராஜர், (௧௫௯) பிள்ளையுறங்கை யுடையார், (௧௬0) திருமஞ்சனமெடுக்கும் தூயமுனிவேழம், (௧௬௧) ஸ்ரீபண்டாரங்காவல் திருவரங்கத்துமாளிகையார், (௧௬௨) ஆண்டவர், (௧௬௩) அரியவர்; அம்மைமார்களில்:—(௧௬௪) திருவநந்தபுரத்தம்மை, (௧௬௫) திருவாட்டாற்றம்மை, (௧௬௬) திருவண்பரிசாரத்தம்மை, (௧௬௭) மன்னனார் கோவில் போரேற்றம்மை, (௧௬௮) திருநறையூ ரம்மை, (௧௬௯) திருக்கண்ணபுரத்தம்மை, (௧௭0) திருப்பதி ஸ்ரீகார்யஞ் செய்யுமம்மை, (௧௭௧) ஆண்டாளம்மை, (௧௭௨) நாயகத் தேவியார், (௧௭௩) தூயபெருந்தேவியார், (௧௭௪) பெரியபெருந்தேவியார், (௧௭௫) சிறியபெருந்தேவியார், (௧௭௬) பெரும்பூதூர் திருவரங்கம், (௧௭௭) திருக்குடந்தை துய்யவாயிரம், (௧௭௮) கொங்கில் பிராட்டியார், (௧௭௯) அத்துழாயம்மை, (௧௮0) அம்மங்கியம்மை, (௧௮௧) கூரத்தாண்டாள், (௧௮௨) தேவகிபிராட்டியார், (௧௮௩) எதிராஜவல்லியார், (௧௮௪) பங்கயச் செல்வியார், (௧௮௫) பொன்னாச்சியார், (௧௮௬) இன்னிள வஞ்சியார், (௧௮௭) சூடிக்கொடுத்தாள், (௧௮௮) திருப்பாவைபாடினாள் என்பவர்களாம்.

எம்பெருமானார் திருவடிகளிலே ஆஶ்ரயித்த முதலிகளான எழுபத்துநான்கு ஆசார்யர்களாரென்னில்:-ஆளவந்தார் குமாரர் சொட்டைநம்பி, அவர்குமாரர் என்னாச்சான், அவர்குமாரர் பிள்ளையப்பன்-௧, பெரியநம்பிகுமாரர் புண்டரீகர்-௨, திருக்கோட்டியூர் நம்பிகுமாரர் தெற்காழ்வான்-௩, திருமாலையாண்டான்குமாரர் சுந்தரத்தோளுடையார்-௪, பெரிய திருமலைநம்பிகுமாரர் ராமாநுஜனும் பிள்ளை திருமலைநம்பியும்-௫, கூரத்தாழ்வான்குமாரர் பட்டர் சீராமப்பிள்ளை-௬, முதலியாண்டான்குமாரர் கந்தாடையாண்டான்-௭, நடுவிலாழ்வான்-௮, கோமடத்தாழ்வான்-௯, திருக்கோவலூராழ்வான்-௧0, திருமோகூராழ்வான்-௧௧, பிள்ளைப்பிள்ளையாழ்வான்-௧௨, நடாதூராழ்வான்-௧௩, எங்களாழ்வான்-௧௪, அநந்தாழ்வான்-௧௫, மிளகாழ்வான்-௧௬, நெய்யுண்டாழ்வான்-௧௭, சேட்டலூர்சிறியாழ்வான்-௧௮, வேதாந்தியாழ்வான்-௧௯, கோயிலாழ்

வான்-௨0, உக்கலாழ்வான்-௨௧, அரணபுரத்தாழ்வான்-௨௨, எம்பார்-௨௩, கிடாம்பியாச்சான்-௨௪, கணியனூர்சிறியாச்சான்-௨௫ ஈச்சம்பாடியாச்சான்-௨௬, கொங்கிலாச்சான்-௨௭, ஈச்சம்பாடிஜீயர்-௨௮, திருமலைநல்லான்-௨௯, சட்டம்பள்ளிஜீயர்-௩0, திருவெள்ளறைஜீயர்-௩௧, ஆட்கொண்டவல்லிஜீயர்-௩௨, திருநகரிப்பிள்ளை ௩௩, காராஞ்சுசோமயாஜியார்-௩௪, அலங்காரவேங்கடவர்-௩௫, நம்பிகருந்தேவர்-௩௬, சிறுபள்ளிதேவராஜபட்டர்-௩௭, பிள்ளையுறந்தையுடையார்-௩௮, திருக்குருகைப்பிரான் பிள்ளான்-௩௯, பெரியகோயில் வள்ளலார்-௪0, திருக்கண்ணபுரத்தரையர் - ௪௧, ஆசூரிப்பெருமாள்-௪௨, முனிப்பெருமாள்-௪௩, அம்மங்கிப்பெருமாள்-௪௪, மாருதிப்பெரியாண்டான்-௪௫, மாறொன்றில்லாமாருதிச் சிறியாண்டான்-௪௬, சோமாஜியாண்டான்-௪௭, ஜீயராண்டான் - ௪௮, ஈஶ்வராண்டான் - ௪௯, ஈயுண்ணிப் பிள்ளையாண்டான்-௫0, பெரியாண்டான்-௫௧, சிறியாண்டான்-௫௨, குறிஞ்சிபுரச்சிறியாண்டான்-௫௩, அம்மங்கியாண்டான்-௫௪, ஆளவந்தாராண்டான்-௫௫, அருளாளப்பெருமா ளெம்பெருமானார் - ௫௬, தொண்டனூர்நம்பி-௫௭, மருதூர்நம்பி-௫௮, மழுவூர்நம்பி-௫௯, திருக்குறுங்குடிநம்பி-௬0, குரவைநம்பி-௬௧, முடும்பைநம்பி-௬௨, வடுகநம்பி-௬௩, வங்கிபுரத்துநம்பி-௬௪, ஸ்ரீபராங்குசநம்பி-௬௫, அம்மங்கியம்மாள்-௬௬, பரித்திக்கொல்லையம்மாள்-௬௭, உக்கலம்மாள்-௬௮, சொட்டையம்மாள் - ௬௯, முடும்பையம்மாள் - ௭0, கோமாண்டூர்பிள்ளை-௭௧, கோமாண்டூர்இளையவல்லி-௭௨, கிடாம்பிப்பெருமாள்-௭௩, ஆர்க்காட்டுப்பிள்ளான்-௭௪.

"ஸம்ஸேவிதஸ்ஸம்யமிஸப்த ஶத்யா பீடைஶ் சதுஸ்ஸப்ததிபிஸ்ஸமேதை:-அந்யைர நந்தைரபி விஷ்ணுபக்தை ராஸ்தேதிரங்கம்யதிஸார்வபௌமஃ" என்கிறபடியே எழுநூறு உத்தமாஶ்ரமிகளாலும், எழுபத்துநான்குசிம்ஹாஸநஸ்தரான ஆசார்யபுருஷர்களாலும், அஸங்க்யாதரான சாற்றின சாற்றுத முதலிகளிலும் பன்னீராயிர மேகாங்கிகளாலும் முந்நூறு கொற்றியம்மைமார்களாலும், எண்ணிறந்தராஜாக்களாலும் இப்படியகிலராலும் ஸேவ்யமானராயிவ்வைஶ்வர்யத்துடனே "ஸ்ரீரங்க நாதோஜயது ஸ்ரீரங்க ஸ்ரீஶ்சவர்த்ததாம்" என்று நம்பெருமாளைமங்களாசாஸனம்பண்ணிக்கொண்டுசேவித்திருந்தார். இப்படிஇருக்கிறதர்சனஸ்தாபனாசார்யரானஉடையவர்திருவடிகளிலே நித்யகைங்கர்யம்

பண்ணும்முதலிகளில்:—கூரத்தாழ்வானும் முதலியாண்டானும், நடாதூராழ்வானும் பட்டவர்க்கமும் ஸ்ரீபாஷ்யத்துக்கு உசாத்துணையாயிருப்பர்கள்; அருளாளப்பெருமா ளெம்பெருமானார் திருவாராதனஞ் செய்தருளுவர்; கிடாம்பிப்பெருமாளும், கிடாம்பியாச்சானும் திருமடைப்பள்ளி கைங்கர்யத்துக்குக் கடவராயிருப்பர்கள்; வடுகநம்பி எண்ணெய்க்காப்பு சாத்தி யருளுவர்; கோமடத்துச் சிறியாழ்வான் கலசப்பானையும், ஸ்ரீபாதரக்ஷையு மெடுப்பர்; பிள்ளையுறங்கா வில்லிதாஸர் கருவூலம் நோக்குவர்; அம்மங்கிபாலமுதுகாய்ச்சி யருளுவர்; உக்கலாழ்வான் பிரசாதகலமெடுப்பர்; உக்கலம்மாள்திருவாலவட்டம்பரிமாறுவர்; மாருதிப்பெரியாண்டான்திருக்கைச்செம்புபிடிப்பர்; மாருன்றில்லா மாருதிச் சிறியாண்டான் மடத்துக்கு அமுதுபடிபருப்பமுதுகறியமுதுகள்பாலமுது நெய்யமுதுமுதலானவை நடத்திக்கொண்டு போருவர்; துய்யமுனிவேழம் திருமஞ்சன மெடுப்பர்; திருவரங்கமாளிகையார் ஸ்ரீபண்டாரம் நோக்குவர்; வண்டரும் சுண்டரும் கைக்காயிரம் பொன்னுக்கு ராஜசேவை பண்ணி மடத்துக்குத் திருக்கை வழக்காக்கி யருளுவர்; ராமாநுஜ வேளைக்காரர் திருமேனிக் காவலாய்ப் போருவர்; அகளங்க நாட்டாழ்வான் ப்ரதிபக்ஷ நிரசனம் பண்ணிப் போருவர்.

வடுகநம்பி வைபவம்.

இவர்களில் வடுகநம்பி உடையவர் திருவடிகளிலே பரமாந்தரங்கராய் அவர் திருவடிகளே உபாயோபேயமென்று விஸ்வசித்து அவர்திருவடிகளையே திருவாராதனம் பண்ணிப்போருவர். வடுகநம்பி ஒரு பயணகதியிலே உடையவர் திருவாராதனமான பெருமாளையும் தம்முடையதிருவாராதனமான உடையவரையும் சேர வெழுந்தருளப் பண்ணிக்கொண்டுவர உடையவர் இதனைக் கண்டு வடுகா? என்னசெய்தாயென்ன, இவரும் தங்கள் தேவரில் எங்கள்தேவருக்கு வந்தகுறை என்னென்று விண்ணப்பஞ் செய்தார். வடுகநம்பி உடையவருடன் பெருமாளைச் சேவிக்கப்போனாலும் உடையவர் விக்ரஹத்தையே சேவித்துக்கொண்டு போருவார். ஒருநாள் எம்பெருமானார் இதுகண்டு வடுகநம்பியைப் பெரிய பெருமாளுடைய திருக்கண்ணழகைப் பாராயென்ன, இவரும்பெருமாள் திருக்கண்ணழகையும் உடையவர் திருக்கண்ணழகையும் பார்த்து 'என்னமுதனைக் கண்டகண்கள் மற்றொன்

றிணைக் காணுவே' என்ன, உடையவரும் இஃதொன்றிருந்தபடி என்னென்றுஉகந்து வடுகநம்பியைப் பூர்ணகடாக்ஷம்செய்தருளினார். வடுகநம்பி எம்பெருமானார் அமுதுசெய்தருளித் தளிகைப் பிரசாதம் பிரசாதித்தால் இரண்டு திருக்கைகளாலும் ஏற்றுக்கொண்டு பிரஸாத ஸ்வீகாரம் பண்ணித் தம்திருமுடியிலே திருக்கைகளைத்தடவிக்கொண்டுபோருவார்.இதனைஉடையவர்ஒருநாள் கண்டு கனக்கக்கோபித்து வடுகா? கையைக் கழுவிக்கொள்ளென்றருளிச் செய்தார். மறுநாள் நம்பெருமாள் அமுதுசெய்தருளுகிற காலத்தில் உடையவருடன் சென்றவளவிலே உடையவரும் தமக்குப்பிரசாதித்த பெருமாள்பிரசாதத்தைத் தாமும்ஸ்வீகரித்தருளி வடுகநம்பிக்கும் பிரசாதிக்க, நம்பியும் இரண்டுதிருக்கைகளாலும்அதனையேற்றுக்கொண்டுபிரசாதப்பட்டு ஸ்ரீவைஷ்ணவர் திருக்கைவிளக்கத்தீர்த்தம் பிரசாதிக்கத் திருக்கை விளக்கிக்கொண்டார். உடையவர் இதுகண்டு என்செய்தாய் வடுகா வென்ன, இவரும்நேற்று அருளிச்செய்தபடி செய்தேனென்றார். உடையவருமிதுகேட்டு உமக்குத் தோற்றோமென்றருளினார். வடுகநம்பி ஒருநாள் உடையவருக்குப் பாங்காகப் பாலமுது காய்ச்சா நிற்கப், பெருமாள் பெரிய திருநாளில் உடுத்து முடித்துப் பூண்டு புறப்பட்டருள, உடையவரும் பெருமாளைச் சேவிக்கப் புறப்பட்டு வடுகா! பெருமாளைச் சேவிக்கவாவென்ன, நம்பியும் உம்முடையபெருமாளைச் சேவிக்கவந்தால் என்னுடைய பெருமாளுக்குக் காயாநிற்கிற பாலமுது பொங்கிப்போமாதலால் வரக்கூடாதென்றருளினார். வடுகநம்பி அகத்தே பூர்வ சம்பந்திகளாயிருப்பார் சிலர்வந்து தங்கிப்போக அகத்தையெல்லாஞ் சோதித்துத் தத்ஸ்பருஷ்ட பாண்டங்களையும் உடைத்துவிட்டுப் பூசி இதற்கு ப்ராயஶ்சித்தம் என்னென்றுவிசாரித்து முதலியாண்டான் புழக்கடையில்கழித்துக்கிடந்தபாண்டங்களை விநியோகங்கொண்டார். ஆகையால் ஆசார்ய ஸம்பந்த முடையாரெல்லைக் குட்பட்டதில் அபாவநத்வ புத்தியின்றியே ஸ்வபாவ நத்வபுத்தி முற்றினபடி வடுகநம்பிஉடையவர்ஸ்ரீபாததீர்த்தமல்லதுமற்றொருவர்ஸ்ரீபாத தீர்த்தங்கொள்ளார்; தீர்த்தநியதியும் இவர்க்கேயுள்ளதொன்றிறே. இப்படிதீர்த்த நியதியை யுடையார், அவர் ஸ்ரீபாததீர்த்தத்தை ஸ்ரீசாளக்ராமத்திலே தமது தனமாகச் சேமித்து வைத்துப் பேணிக்கொண்டு, உடையவர் திருவடிநிலைகளையே திருவாராதன

மாகவுடையராய், அவை தம்மையே அங்கே ப்ரதிஷ்டிப்பித்து நோக்கிக்கொண்டுபோந்து தம்முடைய சரமதசையிலும் தமக்கு அந்தரங்கரான சரமாதிகாரிகளுக்குத் தஞ்சமாகக் காட்டிக்கொடுத்துச், சீர்த்ததநமிது, வருந்தியும் பேணிக்கொண்டு போருங்கோளென்று அடைக்கலங்காட்டிக் கொடுத்தருளினார்.

அநந்தாழ்வான் வைபவம்

அநந்தரம் அநந்தாழ்வான், ராமாநுஜப்புத்தேரிகட்டுவைக்கும்போது மண்சுமந்துநிற்கப், பிள்ளைகளிலேயொருவர்சென்று கூடையைவாங்கப்புக, நான் அத்தைவிடில் இளைப்பன், நீ இத்தைத் தொடில் இளைப்பாயென்றருளிச் செய்ய, இளைக்கமாட்டேனென்று பிள்ளை பின்னுங்கூடையைவாங்கப்புக, ஆகில்நான்ஜீவிக்கிற ஜீவனத்தைவாங்கவேணுமோ, நீயும்வேணுமாகில்ஒருகூடையை வாங்கிக்கொண்டு சுமக்கலாகாதோ வென்றருளினார். மீண்டுமொருநாள் கர்ப்பவதியான தமது தேவிகள் தலைமேலே மண்சுமத்தாநிற்க, இதுகண்டுதிருவேங்கடமுடையான்ஒருபிள்ளையாய்எதிரே வந்துவாங்கிக்கொண்டுபோகத், தேவிகள்கடுகவருமதுகண்டு இதுவென் கடுகவருகிறாயென்ன, தேவிகளும் ஒருபிள்ளை எதிரேவந்து கூடையை வாங்கிக்கொண்டு போகிறாரென்று சொல்லக் கேட்டு உடனே சென்று கண்டு கைங்கர்ய விக்நகாரீ நீகூடையைத் தொடாதேகொள்ளென்றுகொட்டெடுத்தடிக்கப்புகத்திருவேங்கடச் செல்வன் ஓடிச்சென்று கோயிலிலேபுகுந்தானென்பார்கள். அநந்தாழ்வான் திருநந்த வனத்திலே திருப்படித்தாம மெடாநிற்கத் திருக்கையிலே போகி சந்தஷ்டமாக, உடனே போய் நீராடிக் கைங்கர்யத்திலே போர; ஸ்ரீபாதத்துக்குப் பரிவராயிருப்பார் விஷந்தீர்க்கப்பார்க்க வேண்டாவோவென்ன, வேண்டாவென்று அத்தைநிவர்த்திப்பித்தருளினார். பின்பு கோயிலேற வெழுந்தருளினவாறே திருவேங்கடமுடையான் திருவாய்மலர்ந்து விஷந்தீர்க்க வேண்டா வென்று என்ன நினைத்துச் சொன்னீரென்று கேட்டருள, இவரும் 'கடியுண்ட பாம்புவலிதாகில் திருக்கோனேரியிலே தீர்த்தமாடித் திருவேங்கட முடையானைச் சேவிக்கிறேன்; கடித்தபாம்பு வலிதாகில் விரஜையிலே தீர்த்தமாடி ஸ்ரீவைகுண்டநாதனைச் சேவிக்கிறேனென்றிருந்தேனென்று விண்ணப்பஞ்செய்தார். அநந்தாழ்வான் சோசலராஜ்யத்திற்கு எழுந்தருளுகிறபோது கட்டுத்திருப்போனகம் (திருவமுது) கட்டிக் கொண்டுபோய் அமுதுசெய்யப் புக்கவாறே பட்டையடங்கலும்

சிற்றெறும்பாய்க் கிடக்க அதைக்கண்டு துணுக்கென்று முதலிகளைப் பார்த்து "எம்பெருமான் பொன்மலைமேலேதேனுமாவேனே" என்னுமவர்களிலே சிலராமிவர்கள்; இப்படியே கொண்டுபோய்த் திருமலையிலே வைத்து வாருங்கோளென் றருளிச்செய்தார். அநந்தாழ்வான் யமுனைத்துறைவனிலே திருமாலை கட்டாநிற்கத் திருவேங்கட முடையான் அருளப் பாடிடப்பேசாதே இருந்து திருமாலைசேர்த்துக்கொண்டு உள்ளேபுக்கவாறே திருவேங்கடமுடையானும் நாம் அழைக்க நீர்வராதிருந்ததென்னென்று திருவுள்ளமாக, இவரும் 'கருமுகை மொட்டு வெடியாநிற்க எனக்குத் தேவரீரைக்கொண்டு கார்யமென்' என்றார்; திருவேங்கடமுடையானும் ஆகில் நாமும்மை இங்குநின்றும்போகச் சொன்னோமாகில் நீர்செய்வ தென்னென்று திருவுள்ளமாய்க் கேட்க, இவரும் "பரன்சென்று சேர்திருவேங்கடம்" என்கிறபடியே தேவரீரன்றோ வந்தேறிகள்; இவ்விடம் தேவரீரையாஸ்ரயித்தவர்களுடையதன்றோ; தேவரீர் ஒரு கிழமை முற்பட்டுரித்தனை; இருவரும் திருமலையாழ்வாரை யாஸ்ரயித்தோமித்தனையன்றோ வென்று விண்ணப்பஞ் செய்தார்.

கூரத்தாழ்வான் வைபவம்.

இப்படிப்பட்ட சிஷ்ய சம்பத்துடனே உடையவர் வாழ்ந்தருளுங் காலத்திலே ஆழ்வான் எம்பெருமானாருக்கு விண்ணப்பஞ் செய்யாதே நம்பெருமாள் சந்நிதியிலே சென்று சேவித்து நிற்கப்;பெருமாளும்'ஆழ்வான்! நீர்ஒன்றுசொல்லுவான்போலேயிருக்கின்றீர்' என்று திருவுள்ளமாயருள, இவரும் ஒரு ஸ்லோகத்தைவிண்ணப்பஞ்செய்து உபன்யசிக்கப்; பெருமாளும் உமக்கு வேண்டின தெல்லாந் தருகிறோம் வேண்டிக் கொள்ளுமென்று உகப்பின்மிகுதியாலேதிருவாய்மலர்ந்தருளிச்செய்ய;ஆழ்வானும் நாயன்தே! அடியேனுக்குப் பண்டே யெல்லாந் தந்தருளினீரே என்னப்,பெருமாளுமப்படியன்று இப்போதும்வேண்டிக்கொள்ளும் நம்பெண்டுகள் ஆணை! நம்பிராமாநுஜனாணையே! தருகிறோமென்று திருவுள்ளமாக, ஆழ்வானும் த்வதநுபவ விரோதியான இச்சரீரத்தை விடுவித்து த்வதநுபவத்தைத் தந்தருள வேண்டுமென் றபேக்ஷிக்கப், பெருமாளும் அத்தை யொழியச் சொல்லுமென்ன, இவரும் "தாம் வேண்டும் காமமே காட்டுங் கடிது" என்கிறபடியே அடியே னபேக்ஷித்ததையே பிரசாதிக்கவேண்டு

மென்று விண்ணப்பஞ்செய்ய, ஆகில் உமக்கும் உம்முடைய சம்பந்தமுடையார்க்கும் பரமபதம் தந்தோமென் றருளிச்செய்தருளித், திருப்பரியட்டமும் தளிகை ப்ரசாதமும் பூந்தண்மாலைத் தண்டுழாயும் திருக்கைச்சிறப்பும் ப்ரசாதித்து விடைகொடுத்தருளினர் பின்பு ஆழ்வான் அர்ச்சிராதிமார்க்கத்திற்கு ப்ரதமாலங்காரம்போலேயிருக்கப் புறப்பட்டுத், தமது திருமாளிகையிலும் புகுராதே, ஆழ்வார்திருமாளிகையிலே புறவீடுவிட்டெழுந்தருளி இருந்தார். உடையவரு மிதைக்கேட்டு, உடுத்த காஷாயத்தை வாங்கி ஆகாசத்தேற வெறிந்து ஏற்றுக்கொள்ள, ஸ்ரீபாதத்து முதலிகள்இதுவென்? ஜீயரேஎன்றுகேட்க, உடையவரும்நமக்கு ஆழ்வான் சம்பந்த முண்டே பரமபதம்பெறலாமன்றோ? வென்றருளிச்செய்தார். ஆகையாலே சதாசார்ய சம்பந்தத்தோடு ஸச்சிஷ்ய சம்பந்தத்தோடு வாசி இல்லையிறே. உடையவரும் சோகாவிஷ்டராய், ஸ்ரீபாதத்து முதலிக ளெல்லாரையுங் கூட்டிக்கொண்டு ஆழ்வானிருந்த விடத்தேறச் சென்று ஆழ்வான்! நீரிப்படி செய்தருளலாமோ? வென்ன; ஆழ்வானும் பேசாதே இருந்தார். உடையவரும் ஆழ்வான்! உமக்கு முற்படவேண்டு மபிப்ப்ராயமென்? பேசாதிருக்கிற தென்னென்று கேட்டருள; ஆழ்வானும் பரமபதத்தில் நடக்கும் அடைவு கேட்டுக்கஞ்சி யென்ன; உடையவரும் அதுசொல்லிக் காணீரென்ன; ஆழ்வானும் 'முடியுடை வானவர் முறைமுறை யெதிர்கொள்ள' என்று முற்பட்டவர்கள் நித்ய சூரிகளுடன் பிற்பட்டவர்களை எதிர்கொள்ள வருவார்கள்; அது அடியேன் பிற்படில் அடைவுகேடா மென்ன; உடையவ ரிதுகேட்டு, "நஶாஸ்த்ரம் நைவசக்ரமஃ" என்று அடைவுகெட்டிருக்கும் போகவிபூதியிலே நீர் அடைவுதேடுவதே! இஃதொரு ஶேஷத்வ அதிகாரவிசேஷமிருந்தபடி! என்று போரவித்தராய்த் திருமுத் துதிர்த்து இவர்க்கு ஓடுகிற நினைவை யறிந்து இவர் செவியிலே த்வயத்தை அருளிச்செய்ய; முதலிகளும் இப்போதாக இதுவென்? என்ன; நீங்கள் அறியீர்களோ? ராஜகுமாரனுக்குக் கர்ப்பூரநிகரமில்லாதபோது நாக்குவறளுமாப்போலே, இவர்க்கு த்வயமில்லாதபோது நாக்கு வறளுமென் றருளிச்செய்து ஆழ்வானை யணைத்துக்கொண்டு விம்மல் பொருமலாய்த், திருவுள்ளம் வருந்தி, ஆழ்வான்! என்னுயிர் நிலையான உம்மை இழந்து எங்ஙனே தரிப்பேன் என்னையு முடன்கொண்டு

போகத்திருவுள்ளம்பெற்றிலீர்; நம்மைவிட்டுப்போகவுமக்குருசி ப்பதே! பரமபதநிலயன்பக்கல்சங்கம், "பும்ஸாந்த்ருஷ்டி சித்தா பஹாரி" யான பெருமாள்பக்கல் சங்கத்தை அறுத்து உம்மை மூந்துறப்பண்ணுவதே! பரமபதநாதனும், அங்குள்ளநித்யமுக்த ரும் என்னபாக்யம்பண்ணினார்களோ? இங்குறங்குகிற பெருமா ளும் இங்குள்ளநாங்களும் என்னபாபம்பண்ணினோமோ? உமது திருவுள்ளங் கலங்கச்சொல்லி என்ன ப்ரயோசன முண்டு? உம் பேற்றுக்குவிலக்கடியாகலாமோ? சுகமேநித்யவிபூதியேற எழுந்த ருளீரென்று ஆழ்வான் திருமுதுகைத்தடவி அஞ்சலித்து விடை கொடுத்தருள; ஆழ்வானும்உடையவர்திருவடிகளிலேவேரற்றமர ம்போலே விழுந்துகிடக்க; உடையவரும் இரண்டுதிருக்கைகளா லும் வாரி எடுக்க எழுந்திருந்து, உடையவர் திருவடிகளைத் தம் திருக்கண்களிலும், திருமார்பிலும் ஒற்றிக்கொண்டு ஸ்வசிரோ பூஷணமாக்கிக் கொண்டு தீர்த்தங்கொள்ள உடையவரும் திருக் கைகளாலேபிரசாதிக்க, ப்ரசாதப்பட்டு "யோநித்யமச்யுத பதா ம்புஜ யுக்மருக்ம வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாயமேநே அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ-ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்யே" என்று அநுசந்தித்துக்கொண்டு க்ருதாஞ்சலி புடராய், இனிமடமே எழுந்தருள வேணுமென்று விண்ணப்பஞ் செய்து, வடவாற்றங்கரையளவாக உடையவர் பின்னே சென்று, இனி நில்லுமென்று தெண்டன் சமர்ப்பித்து மீண்டுஆழ்வார்திருமாளிகைக்கு அருகிலிட்ட திருக்காவணத்தின் நடுவே எழுந்தருளியிருந்து ஆண்டானைப் பார்த்து, என்னினைத் திருக்கிறாயென்ன; ஆண்டானும் தேவரீர் திருவுள்ளத்தைப் பின் செல்லுகை யொழிய அடியேனுக்கு வேறொரு நினைவுண்டோ வென்று திருவடிகளிலே தெண்டனிட்டு அஞ்சலித்துநிற்க, ஆழ் வானும் பட்டரையும், சீராமப் பிள்ளையையும் அழைத்தருளிப் பெருமாளும் நாச்சியாரும் எழுந்தருளி இருக்க உங்களுக்கொரு தாழ்வில்லை நம்பெருமாள் பெற்றுவளர்த்தாரென்பது தஞ்சமெ ன்றிராது, எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள், ஆண்டாள் சொன்னபடியே வர்த்தியுங்கோள், பாகவதவிஷயத் திலே த்ரிவிதகரணங்களாலும் அபராதம் பண்ணாதே அவர்களை அநுவர்த்தித்துக் கொண்டு போருங்கோளென் றருளிச்செய்து, தம் திருவடிகளிலேவிழுந்துகிடக்கிற பட்டரையும் சீராமப் பிள்

ளையும் எடுத்துத் திருக்கையாலே கண்ண நீரைத்துடைத்து, நீங்கள் ப்ராக்ருத சம்பந்தத்தை நினைத்து க்லேசித்தீர்களாகில் உடையவர் திருவடிகளில் சம்பந்தத்தைத் தூஷித்தவர்களாவீர்கள்; ஆத்ம சம்பந்தத்தை நினைத்து க்லேசித்தீர்களாகில் நம்முடைய ஒழிக்க ஒழியாத உறவை அறிந்திலீர்களாவீர்களென்று அவர்களைத் தேற்றிக், கோயிலுக்குநேரே பிள்ளைப்பிள்ளையாழ்வான் மடியிலே திருமுடியையும், ஆண்டாள் மடியிலே திருவடிகளையும் வைத்து உடையவர் திருவடிகளைத்யானித்துக்கொண்டு அன்றே திருநாட்டுக்கெழுந்தருளினார்.

உடையவரும் இதுகேட்டு அங்சேற எழுந்தருளி ஆழ்வான் குமாரரான பட்டரைப்பார்த்து 'க்லேசியாதே' என்று அருளிச்செய்து 'ஆழ்வானுக்குச் சரமகைங்கர்யத்தைச் செய்யும்' என்ன, பட்டரும் பெருமாள்பரிகரத்தையும், அங்குள்ளஸ்ரீவைஷ்ணவர்களையுங் கூட்டிக்கொண்டு "ஸர்வகர்மணிஸம்ஶக்தேந காயத்ர்யா வைஷ்ணவேநச-நாராயணாநுவாகேந ஸ்நாபயேத்பிதரம்ஸுதஃ" என்கிறபடியே ஆழ்வானை நீராடப் பண்ணிக் கேஶவாதியான திருநாமங்களைச் சாத்தி அலங்கரித்து ஸ்ரீசூர்ண பரிபாலநம் பண்ணி எழுந்தருளுவித்துக்கொண்டு போய், கேஶவார்ப்பித ஸர்வாங்கம் ஶரீரம் மங்களாவஹம்-நவ்ருதா தாஹயேத்விப்ரோ ப்ரஹ்மமேதவிதிம்விநா" என்றும் "ப்ரஹ்மமேதவ்ரதம் ப்ரோக்தம் முநிபிர்ப்ரஹ்மதத்பரைஃ-மஹாபாகவதாநாம்ஹி கர்த்தவ்யமிதமுத்தமம்"என்றும் கேசவன் தமரானமுமுக்ஷுக்கள் திருமேனிவிட்டால் அத்திருமேனியை ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரமொழிய வேறொன்றால் ஸம்ஸ்கரிக்க வொண்ணாது என்கையாலே, மஹாபாகவ தோத்தமரான கூரத்தாழ்வானைப் பட்டர் ப்ரஹ்மமேத விதிப்படிஸம்ஸ்கரித்துப்பள்ளிபடுத்தியருளிப்பன்னிரண்டுநாளும்செய்யுங்க்ருத்யங்களை ஶாஸ்த்ரோக்தப்ரகாரமாகச்செய்தருளி, உடையவரையும் முதலிகளையும் எழுந்தருளுவித்துக் கொண்டு போய் "நாதஃ பரதரந்தீர்த்தம் வைஷ்ணவாங்க்ரி ஜலாச்சுபம்-தேஷாம்பாதோதகம் புண்யங் கங்காமபி புநாதிஹி" என்னும் வைபவமுடைய பாகவத ஸ்ரீபாத தீர்த்தத்தையும் ஸ்வீகரித்தருளி,"ஶுபாதௌ த்விஜவர்யைஶ்ச ஸர்வஸம் பச்சுபாவஹம்-ஸஹஸ்ரஶாகாத்யயநம்காரயேத்வைதிகோத்தமஃ-அஶுபாந்தே விஶேஷேண த்ராமிட ப்ரஹ்மஸம்ஹிதா - அத்யேதவ்யாத்விஜ

வரை ராஸௌசாகவிநாஸிநீ" என்றும், "வ்ருத்தாவாதௌக்ஷயே சாந்தே த்ராமிடீ ப்ரஹ்மஸம்ஹிதா - அத்யேதவ்யா த்விஜ ஶ்ரேஷ்டை ராத்யாகீத ஸகஸ்ரகீ" என்றும் ப்ரஹ்மாண்ட புராணத்திலே சொல்லுகிறபடியே திருவாய்மொழி ப்ரபந்தத்தை அநுஸந்தித்து, அநந்தரம் புஷ்பாஞ்சலி பண்ணிச் சாத்தியருளி "யதா துஷ்யதி தேவோஸௌ மஹாபாகவதார்ச்சநாத்- ததாந துஷ்யதே விஷ்ணுர் விதிவத்ஸ் வார்ச்சநாதபி" என்று சொல்லுகையாலே ஸ்ரீவைஷ்ணவர்களையும் அமுதுசெய்யப் பண்ணி ஸத்கரித்தருளினார்.

கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம், தையில் ஹஸ்தம்.

அவர் தனியன் "ஸ்ரீவத்ஸசிஹ்ந மிஶ்ரேப்யோ நமஉக்திமதீமஹே - யதுக்தயஸ் த்ரயீகண்டே யாந்திமங்கள ஸூத்ரதாம்", ஸ்ரீமத்கூர குலாதீஶம் ஸ்ரீவத்ஸாங்க முபாஸ்மஹே- அக்ர்யம்யதீந்த்ர சிஷ்யாணாம் ஆத்யம்வேதாந்த வேதிநாம்".

அதின் மற்றைநாள் உடையவர் பட்டரை அழைத்துக் கொண்டு நம்பெருமாளைச் சேவிக்க வெழுந்தருளி அழகிய மணவாளன் திருமண்டபத்திலே தெண்டன் சமர்ப்பித்துப் பட்டரைக் கையைப்பிடித்துக் கொண்டுபோய்ப், பெரியபெருமாள் திருவடிகளிலே காட்டிக்கொடுக்கப்; பெருமாளும் மீளவும் பட்டரை மஞ்சள்நீர்க்குடிப்பித்து விசேஷித்துப் புத்ரஸ்வீகாரம் பண்ணியருளி அர்ச்சகமுகேந திருவாய்மலர்ந்தருளி ஆழ்வானை இழந்தோமென்று வ்யாகூலப்படாதே, நம்மை யாழ்வானாக நினைத்திருமென் றருளிச்செய்தருள, இத்தைக்கண்டு உடையவர் சந்தோஷித்து நம்பெருமாளைக் குறித்துத் தேவரீரிவருக்குப் பூர்ணாயுஸ்ஸை ப்ரசாதித்தருளவேணும் அடியேன் வித்யைகளை அப்யசிக்கிறேனென்று விண்ணப்பஞ்செய்யப்; பெருமாளும் வாய்திறவாதே தீர்த்த ப்ரசாதமும் ப்ரசாதித்து விடைகொடுத்தருள, உடையவரும் பட்டரை யழைத்துக்கொண்டு மீண்டு தம்மடமே எழுந்தருளி எம்பாரைப்பார்த்து இவரை நம்தர்சன ப்ரவர்த்தகராம்படி சாஸ்த்ராப்யாசம் பண்ணுவியுமென்று அவர்கையிலே காட்டிக் கொடுத்து முதலிகளுக்குப் பகவத்விஷய வைபவமருளிச் செய்துகொண்டு எழுந்தருளி இருந்தார்.

இப்படி எழுந்தருளி இருக்கிற உடையவர் ப்ரபாவத்தைப் பெரியபெருமாளும், திருவேங்கடமுடையானும், பேரருளாளரும், திருநாராயணப் பெருமாளும், அழகரும், திருக்குறுங்குடி நம்பியும், நம்மாழ்வாரும், ஸ்ரீமந்நாதமுனிகளும், ஸ்ரீயாளவந்தாரும், பெரியநம்பியும், திருக்கோட்டியூர் நம்பியும், திருமலை நம்பியும், திருமாலையாண்டானும், ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரும், மற்றும் ஸ்ரீபாதத்துமுதலிகளும், ப்ரஹ்மரக்ஷஸ்ஸும், ஊமையும் வெளியிட்டார்கள். பெரியபெருமாள் வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:—திருப்பவளச் செவ்வாய் திறந்து உபயவிபூத் யைஸ்வர்யத்தையும் உமக்கு மும்முடையார்க்குந் தந்தோமென் றருளிச் செய்கையாலும்; அப்பன் வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:—உமக்கு மும்முடையார்க்கும் உபயவிபூத் யைஸ்வர்யத்தையும் தந்தோமென்று நம் தெற்கு வீட்டில் சொன்னோமே என்றருளிச் செய்கையாலும்; உடையவர் திருமலைக்கு எழுந்தருளும்போது ததிவிக்ரயம் பண்ணுமவளான தும்பையூர்க்கொண்டி என்பாளொரு கோபங்கனை க்ரயத்ரவ்யார்த்தமாக வந்து உடையவரையும் முதலிகளையுஞ் சேவித்துநிற்க, உடையவரவளுக்குத் தளிகை ப்ரஸாதம் ப்ரசாதிக்கச் சொல்லிக் கிடாம்பி யாச்சானை நியமித்தருள, அவரும் அப்படியே செய்தருளினபின்பு கிடாம்பியாச்சான் பிரசாதித்த ஸ்ரீபாததீர்த்த தளிகை ப்ரசாதத்தின் வைபவத்தினாலே அவளுக்கு ஸம்யக் ஞானோதய முண்டாய், அவளும் அடியேனுக்குத் ததிமூல்யம்வேண்டாம் மோக்ஷந்தர வேண்டுமென்று ப்ரார்த்திக்க, உடையவரும் அது திருவேங்கட முடையான் தரக்கடவரென்ன, அவளும் தேவரீரவர்க்கொரு சிறுமுறி தரவேண்டுமென்ன, உடையவரும் போரஉகந்துதர; அவளும் அதுபெற்றுத் திருமலையேறி த்வரித்து வரக்கண்டு திருவேங்கடமுடையவரெதிரேசென்று சிறுமுறியை வாசித்துக்கொண்டு சிரசாவஹித்துத் திருநாடு ப்ரசாதிக்கையாலும்; பேரருளாளர் வெளியிட்டபடி எங்ஙனே யென்னில்:—அருளாளப் பெருமா ளெம்பெருமானுருடன் தர்க்கித்தபோது உத்தரஞ் சொல்லமாட்டாமல் பேரருளாளர்க்கு விண்ணப்பஞ்செய்ய, அப்போது இன்னபடி உத்தரஞ் சொல்லுமென்று செங்கனிவாய் முறுவல் தோன்ற வருளிச் செய்கையாலும்; யாதவப்ரகாசனுக்கு ஸ்வப்ன

முகேன நம்மிராமாநுசனையொரு ப்ரதக்ஷிணம்பண்ணி த்ரிதண்டத்திலே சன்யஸியுமென்று அருளிச் செய்கையாலும்; திருநாராயணப்பெருமாள் வெளியிட்டபடி எங்ஙனே யென்னில்:—தொண்டனூரிலே ஸ்வப்னங்காட்டி அழைத்துக்கொண்டுபோய் இவருக்கு ப்ரசன்னராய் ப்ரகாசிக்கையாலும்,என்னுடைய செல்வப் பிள்ளையோ வென்று எடுத் தணைத்துக்கொண்டு உபலாளிக்க லாம்படி யதிராஜகுமாரரான சௌசீல்யத்தாலும்; அழகர் வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:—ஒருநாள் திருவோலக்கத்திலே நம் மிராமாநுஜனடியார்க்கு அருளப்பாடென்று திருவுள்ளமாயருள, நாயன்தே! என்றாசார்யர்க ளெல்லாரும் எழுந்திருந்து திருவடிகளிலே சேவிக்கப் பெரியநம்பி வழியிற் சிலர் வராதிருக்க, அழகரு மதுவென்? நீங்கள் நாமழைக்க வராதிருப்பதென்று கேட்டருள, அவர்களும் இராமாநுஜ னடியார்க்கு அருளப் பாடென்று தேவரீர் திருவுள்ளமா யருளுகையாலே அவர் எங்கள் பெரியநம்பி சிஷ்யரன்றோ வென்று வாராமலிருந்தோமென்று விண்ணப்பஞ்செய்ய, அழகரும் தசரத வசுதேவாதிகள் நம்மைப் புத்ர ப்ரதிபத்தி பண்ணினது போலே இருந்தது நீங்கள் இராமாநுஜனைச் சிஷ்யப்ரதிபத்தி பண்ணினது என்றும், ஒருநாள் கிடாம்பியாச்சானை அருளப்பாடிட்டு, ஒன்று சொல்லா யென்று திருவுள்ளமா யருள, அவரும்'' "அபராதஸஹஸ்ரபாஜனம்'' என்று தொடங்கி "அமதிம்'' என்றுசொல்ல; அழகரும் நம் மிராமாநுஜனை யுடையனுயிருந்து, "அமதிம்'' என்றுசொல்லப் பெறுமென்று திருவுள்ளமா யருளுகையாலும்,

திருக்குறுங்குடிநம்பி வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:—உடையவரும் முதலிகளும் நம்பியைஸேவிக்க எழுந்தருளினவளவிலே திருக்குறுங்குடி நம்பியும் திருவோலக்கமாக வெழுந்தருளி இருந்து, உடையவரை அருளப்பாடிட்டு, "பஹூநி மேவ்ய தீதாநி ஜன்மாநி தவசார்ஜுந'' என்று இத்தனை ஜன்மம் பிறந்தோமென்று தெரியாது, அஜ்ஜன்மங்களிலே ஒருவரும் அகப்படாமல் "ஆஸுரீம் யோநிமாபந்நா மூடா ஜந்மநி ஜந்மநி- மாமப்ராப்யை வகௌந்தேய ததோயாந்த்யதமாங்கதிம்'' என்கிறபடியே ஆசுரப்ரகருதிகளாய்ப்பிறந்த ஜன்மங்கள் தோறும் மூடராய் நம்மைவந்து கிட்டாதே அதமமான கதியை யடைந்

தார்கள்; இவ்வாத்மாக்களெல்லாரும் உமக்கு அகப்பட்ட விர கை நமக்குச்சொல்ல வேணுமென்று திருவுள்ளமாக, உடைய வரும் தேவரீர் கேட்கும் க்ரமத்திலே கேட்கில் சொல்லுகிறே னென்ன; நம்பியும் இவருக்கு ஒரு ரத்னகம்பளத்தை ஆசன மாக இட்டு, இனிச்சொல்லுமென்ன; உடையவரும் அவ்வாச னத்திலே பெரியநம்பி எழுந்தருளி இருக்கிறதாகப் பாவித்துக் கொண்டு, அவர் திருச்செவியிலே ஹிதத்தை விண்ணப்பஞ் செய்ய, அன்றுதொடங்கி நம்பியும், நம்மிராமாநுஜனை யுடை யோமென் றருளிச் செய்கையாலும்; நம்மாழ்வார் வெளியிட்ட படி எங்ஙனே என்னில்:—லோகத்தைத் திருத்துவதாக எம் பெருமானோடேமார்தட்டி "நின்கண்வேட்கை எழுவிப்பனே" என்றவர்தாமே, "ஏபாவம்பரமே" என்று க்லேசித்து "அக விடத்தை யாராய்ந்து அதுதிருத்த லாவதே" என்று ஈஶ்வரன் அவதரித்துத் திருத்த வொண்ணாத லோகத்தை நாமோ? திருத் தக்கடவோமென்று கைவாங்கி "யானுமென்னெஞ்சு மிசைந் தொழிந்தோம்" என்று தாமும் தம் திருவுள்ளமுமேயாய்" த்ரி காலக்ஞான ராகையாலே, "கலியுங்கெடும் கண்டுகொண்மின்" என்று உடையவர் திருவவதாரத்தைக் குறித்து அருளிச்செய் கையாலும்;

ஸ்ரீமந்நாதமுனிகள் வெளியிட்டபடி எங்ஙனேஎன்னில்:— "குளப்படியிலே தேங்கினால் குருவி குடித்துப்போம், வீரநாரா யணபுரத்தேரியிலே தேங்கினால் நாடுவிளையும்" என்று அருளிச் செய்தது, உடையவர் திருவவதாரத்தைக் குறித்தே என்னு மிடம், எம்பார் 'பெரியபெருமாளாகிற பெருங்கடலிலே ஆழ்வா ராகிற காளமேகம் படிந்து, தத்கல்யாண குணம்ரு தௌகத் தைப் பருகிவந்து,நாதமுநிகளாகிற மஹாமேருவிலே வர்ஷித்து, உய்யக்கொண்டார் மணக்கால் நம்பியாகிற அருவிகளாலே இற ங்கி, ஆளவந்தாராகிற பேராற்றிலேகூடிப், பெரிய நம்பியாகிற வாய்க்காலாலே புறப்பட்டு எம்பெருமானாராகிற பெரியஏரி யிலே வந்து தேங்கி, நம்மாசார்யர்களாகிற மதகுகளாலே புறப் பட்டு, இச்சம்சாரமாகிற கழனிக்கு ஏறிப் பாய்கிறது என்று அருளிச் செய்தவிடத்தில் ஒத்திருக்கையாலும்; ஆளவந்தார் வெளியிட்டபடி எங்ஙனே என்னில்:—இம்மஹாநுபாவன் இத் தர்சனத்திலே புகுந்தானாகில் 'இவன் முதல்வன் ஆம்' என்று அருளிச்செய்கையாலும்; பெரியநம்பி வெளியிட்டபடி எங்ஙனே என்னில்;—அத்துழாயும் தாமுமாக வெழுந்தருளி இருக்கச்

செய்தே, உடையவரும் முதலிகளுமாக வெழுந்தருளப், பெரிய நம்பியெழுந்திருந்து தெண்டனிட,இதுவென்? உடையவர் உமக்குச் சிஷ்யரன்றோ? இப்படிசெய்யலாமோ வென்று அத் துழாய் விண் ணப்பஞ்செய்ய, நம்பியும் "அத்தாளுக்குத்தக்க தலைகாண் இது" என்றும், ஒருநாள் உடையவரும் முதலிகளுமாக நீராடி எழுந் தருளும்போது பெரியநம்பி எதிரேகண்டு தாளுந் தடக்கையுங் கூப்பித் தெண்டனிட, உடையவரும் அஞ்சலித்து க்ருபைசெய் தருள, இத்தைமுதலிகள்கண்டு, இதுவென்? ஜீயரேஎன்ன,உடை யவரும் இப்போது அவரிஷ்டமநுவர்த்திக்கையன்றோ நமக்குள் ளது என்ன, முதலிகளும் பெரியநம்பி சந்நிதியில் சென்று உடையவரை நீர் சாஷ்டாங்க ப்ரணமம் பண்ணுகைக்கு அடி என்? என்றுகேட்க, நம்பியும் ஆளவந்தாரும் முதலிகளு மென் றிருந்தேனென்ன; அவர்களும், அதற்கு நிதான மென்னென்ன; நம்பியும் ஆளவந்தார்க்குப் பின்பு அகிலார்த்த பூர்த்தி யுள்ளது இவர்க்கே யாகையாலே சதாசார்ய சந்நிதியோடு ஸச்சிஷ்ய சந் நிதியோடு வாசியில்லாமையாலே சேவித்தேனென்றும் அருளிச் செய்து தமது குமாரர் புண்டரீகாக்ஷரையும் உடையவர் திருவடி களிலே யாஶ்ரயிப்பிக்கையாலும்; திருக்கோட்டியூர்நம்பி வெளி யிட்டபடி யெங்ஙனே யென்னில்:—தாம் திருமந்த்ரார்த்தம் ப்ர சாதிக்கும்போது ஒருவர்க்கும் சொல்லாதே கொள்ளுமென்று ஆக்ஞாபித் தருளிச் செய்ய, இவரும் அத்தைத் தெற்காழ்வார் திருவோலக்கத்திலே தூளி தாநமாக ஸர்வர்க்கு மருளிச்செய்ய, நம்பியும் இத்தைக்கேட்டுக் குபிதராய், உடையவரை யழைத்து ஆசார்யாஜ்ஞாதி லங்கநத்துக்குப் பலமேதென்ன, உடையவரும் நரகமே பலமென்ன, நம்பியும், ஆகில் அறிந்திருந்தும் செய்வா னென்னென்ன இவரும் அடியே னொருவனுமன்றோ நரகம் புகு வது, தேவரீர் சம்பந்தத்தாலே இவ்வாத்மாக்கள் எல்லாம் உஜ் ஜீவிக்குமென்று சொன்னேனென்று விண்ணப்பஞ்செய்ய, நம்பி யும் போர ப்ரீதராய், எம்பெருமானாரே! வாருமென்று எடுத் தணைத்துக்கொண்டு, இந்தப் பரசம்ருத்தி நமக்கில்லை யாய்விட் டதே! அவரோ நீரென்று அருளிச்செய்து, இன்றுமுதல் "எம் பெருமானார் தர்சன மென்னுங்கோள்" என்று சொல்லித், தம் குமாரர் தெற்காழ்வாரையும் அவர்திருவடிகளிலேயாஶ்ரயிப்பிக் கையாலும்; திருமலைநம்பிவெளியிட்டபடி எங்ஙனே என்னில்:—

உடையவர் திருமலைக்கெழுந்தருளும்போது திருப்பரியட்டப பாறை யளவாக எதிரே சென்று தீர்த்த ப்ரசாதம் ப்ரசாதிக்க, உடையவரும் ஸ்வீகரித்தருளி நம்பியைப் பார்த்துத், தேவரீர் எழுந்தருளவேண்டுமோ? வேறேசிறியவர்களொருவருமில்லையோ வென்ன, நம்பியும் நாலு திருவீதியிலும் ஆராய்ந்த விடத்தில் என்னிலுஞ் சிறியாரைக்கண்டிலேனென்கையாலும், எம்பாரை உடையவருக்குஉதகபூர்வகமாகக்கொடுக்கையாலும், தம்குமாரர் இராமாநுஜனையும், பிள்ளைத் திருமலைநம்பியையும் அவர்திருவடிகளிலே யாஶ்ரயிப்பிக்கையாலும்; திருமாலை யாண்டான் வெளியிட்டபடி எங்ஙனே என்னில்:—உடையவர்தம்பக்கல் திருவாய்மொழிக்கு அர்த்தங் கேளாநிற்க, "அறியாக் காலத்துள்ளே" என்கிறபாசுரத்துக்குஇவர்உபகாரஸ்ம்ருதிபரமாக அர்த்தமருளிச்செய்ய, ஆண்டானும் இதுவிஸ்வாமித்ரஸ்ருஷ்டி என்று அருளிச்செய்கை தவிர்ந்திருக்கப், பின்பு திருக்கோட்டியூர் நம்பி எழுந்தருளி, ஆண்டானையழைத்துச் சாந்தீபன்பக்கலிலே க்ருஷ்ணன் அத்யயனம்பண்ணினதுபோலேகாணும் இவர் உம்முடைய பக்கல் திருவாய்மொழிகேட்கிறது, இவ்விரண்டர்த்தமும்ஆளவந்தாரருளிச்செய்தது காணுமென்ன, உடையவரும் பின்னையுமொரு அர்த்த ப்ரஸ்தாபத்திலே ஆளவந்தார் இப்படி அருளிச்செய்யாரென்ன, ஆண்டானும் நீர் ஆளவந்தாரைக் கண்ணாலுங் காணாதிருக்க, இப்படியருளிச்செய்யார் என்கைக்கு ஹேதுவென்னென்ன, இவரும் நான் ஆளவந்தார்க்கு ஏகலவ்யனன்றோவென்ன, ஆண்டான்தெண்டனிட்டு, இதுவுமொருதிருவவதாரமோவென்றருளிச்செய்து, தம்குமாரர் சுந்தரத்தோளுடையாரை உடையவர் திருவடிகளிலே யாஶ்ரயிப்பிக்கையாலும்; திருவரங்கப்பெருமாளரையர் வெளியிட்டபடி எங்ஙனே என்னில்:—தம்பக்கல் உடையவர் ஆறுமாசம் சேவித்திருந்து, பாங்காக மஞ்சட்காப்பு அரைத்துச் சாத்தி நீராட்டப் பண்ணுவித்தருளத், திருவரங்கப்பெருமாளரையரும் ப்ரீதராய் என்னுடைய சர்வ ஸ்வத்தையும் கொள்ளை கொள்ளவோ நீரிப்படி செய்ததென் றுரைத்தருளிப் பஞ்சமோபாய நிஷ்டையை அருளிச்செய்து, தம்குமாரர் திருவாய்மொழி யரையரையும் உடையவர் திருவடிகளிலே யாஶ்ரயிப்பிக்கையாலும்; வடுகநம்பி ஆசார்யபதமென்று தனியே ஒரு பதமுண்டு, அது உள்ளது எம்பெருமானார்க்கே யாகையால்

எல்லார்க்குமெம்பெருமானார்திருவடிகளொழிய வேறுஉபாயோபேயமில்லை, அவர் திருவடிகளே தஞ்சமென் றிருங்கோளென்று அருளிச்செய்தருளினார். கணியனூர்ச்சிறியாச்சான் ஸசேலஸ்நானபூர்வகமாக ஆர்த்தியோடே உபசன்னராய்த் திவ்யாஜ்ஞையிட்டு எம்பெருமானார் திருவடிகளொழிய வேறு தஞ்சமில்லை என்று அருளினார், எங்ஙனே என்னில்:—“ஸ்தயம்ஸத்யம் புநஸ்ஸத்யம் யதிராஜோ ஜகத்குருஃ-ஸஏவ ஸர்வ லோகாநா முத்தர்த்தாநாத்ர ஸம்ஶயஃ” என்றிவர்தாமே பெரிய பெருமாள் திருவோலக்கத்திலே ஸ்ரீசடகோபனைத் தம்திருமுடியிலே நிறுத்திக்கொண்டு அருளிச்செய்தருளினார். அருளாளப்பெருமா ளெம்பெருமானார் தம் திருவடிகளிலே யாஶ்ரயித்த எச்சான், அநந்தாழ்வான், தொண்டனூர்நம்பி, மருதூர்நம்பி இவர்களுக்கு ஹிதோபதேசஞ்செய்து, உடையவர் “குருவியின் கழுத்திலே பனங்காயைக் கட்டினதுபோலே செய்தருளினார், நீங்கள் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென் றிருங்கோள்” என்றருளிச்செய்தருளினார். பிள்ளைப் பிள்ளை யாழ்வானும் கூரத்தாழ்வானை ஆஶ்ரயித்தவளவிலே ஆசார்ய தக்ஷிணையாக த்ரிவிதகரணங்களையும் பரிஹரித்துக்கொண்டு பாகவதர்களிடத்தில் ஆநுகூல்யைக ரசராய்ப் போந்திருமென் றருளிச்செய்ய, அவரு மிது அடியேனாலே பரிஹரித்துமுடியாதென்று பயப்பட்டு முசித்துக்கிடக்க, ஆழ்வானிவரை யழைத்து, எதிரியைக் குத்தினால் எதிரி கூடக்குத்தும்; ராஜதண்டமும் வரும்; ஆகையாலே காயிகாபராதஞ் செய்யக்கூடாது. “யதீச்சஸி வஶீகர்த்தும் ஜகதேகேநகர்மணா-பராபவாத ஸஸ்யேப் யோகாஶ்சரந்நிர்நிவாரய” என்கிறபடியே பராபவாதஞ் சொல்லுகிற வாக்கொன்றையே பரிஹரித்துக் கொள்ளுமென் றருளிச்செய்து, இனிமனஸ்ஸாலே நினைத்தீராகில் அநுதபித்து, இது எம்பெருமான் திருவுள்ளத்தில் படாதபடி எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிருமென் றருளிச்செய்தருளினார். மிளகாழ்வான்முதலியாண்டானைச்சேவித்து இவ்வாத்மா உஜ்ஜீவிக்கும்படி ஒருகால் ஸ்ரீபாததீர்த்தம்ப்ரசாதித்து அடியேனை க்ருபைபண்ண வேண்டுமென்ன, முதலியாண்டானும் பரிஹரித்துக் கூடாதென்ன, மிளகாழ்வான் சிறிது நாள் மறக்கவிட்டு முதலியாண்டானை யழைத்து, அடியேனுடன் தர்க்கிக்க வாருமென்ன, முதலியாண்டானும் நீர் தோற்றீராகில்

என்செய்கிறீரென்ன, மிளகாழ்வானும் நான் தோற்றேனாகில் உம்மைஎன்தோளின்மேலேசுமந்துகொண்டுபோகிறேனென்ன, அநந்தர முபயரும் தர்க்கிக்க முதலியாண்டானுக்கு மிளகாழ்வானும்தோற்று முதலியாண்டானுடைய ஸ்ரீபாதத்தைத் தாங்கிக் கொண்டு சற்றிடம்போய், நீரடியேனை இரங்கியருள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய; முதலியாண்டானும் மிளகாழ்வானை உடையவர் திருவடிகளிலே காட்டிக் கொடுத் தாஸ்ரயிப்பித்தருளி உமக்கொரு குறையுமில்லை, எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிருமென்றருளிச்செய்தருளினார். எம்பார்பட்டரைப் பார்த்து, நீர் நம்பெருமாள் நம்மைப்புத்ரஸ்வீகாரம்பண்ணியருளினார், நாமாழ்வானுடையகுமாரர், சகல சாஸ்திரங்களையு மப்யசித்தோமென்று மேன்மையை நினைத்து இறுமாந்திராதே எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிருமென்றருளினார். பட்டர் நஞ்சீயரைப் பார்த்து நீர் நாம் வேதாந்தி யென்கிற பேரையுடையோம்; எம்பக்கல் ஆஸ்ரயித்தோம். எமக்குப் பஹுத்ரவ்யத்தை ஆசார்யதக்ஷிணையாகத்தந்தோமென்றும், திருவாய்மொழிக்கு நூறு நிர்வஹித்து யதாபிஷேகம் பண்ணினோமென்றும் இறுமாந்திராதே எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிருமென்றருளிச் செய்தருளினார். நஞ்சீயர் நம்பிள்ளையைப்பார்த்து நீர் லோகாசார்யரென்கிற பேரையுடையோம்; திருவாய்மொழிக்கு ஆழ்வார் திருவுள்ளக் கருத்தின்படிக்கே பொருள் சொல்ல வல்லோம், சகல சாஸ்திரங்களையும் படித்தோமென் றிறுமாந்திராதே எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிருமென் றருளிச் செய்தருளினார். நம்பிள்ளை சிவக்கரைப்பிள்ளை திருக்கையைப் பிடித்துக்கொண்டு எழுந்தருளா நிற்கும்போது, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் நம்பிள்ளை திருமாளிகையில் திருவிடைகழியிலே கண்வளர்ந் தருளா நிற்கச், சிவக்கரைப்பிள்ளை யவரைக் காலை முடக்குமென்ன; நம்பிள்ளையும் "மயர்வற மதிநலமரு" ளப்பெற்ற ஆழ்வார் "திருத்தாள்" என்றருளிச்செய்யாநிற்க; நீர் காலென்றீரோவென்று கனக்கக் கோபித்து அவர்கையைவிட்டருளினார்; அவரும்சிவக்கரையிலேபோயிருந்து பின்பு சோகார்த்தராய் இரண்டாற்றுக்கும் நடுவே நின்று கவணிலே கல்லை வைத்து வீசினதுபோலே தள்ளிவிட்டருளினீரே; இனி அடியேனுக்குக்கதியென்னென்றுபிள்ளைக்கு விண்ணப்பஞ்செய்துபோக

விட, நம்பிள்ளையும் உமக்கொரு குறையுமில்லை எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிரும் என்றருளிச்செய்துபோகவிட்டு, அவரை யழைப்பித்துக் கொண்டு க்ருபைசெய்தருளினார். திருக்குருகைப் பிரான்பிள்ளான் சிறுப்புத்தூரிலே எழுந்தருளியிருக்கச்செய்தே, சோமயாஜியாண்டான் அவர் ஸ்ரீபாதத்திலே மூன்று உரு ஸ்ரீபாஷ்யம்வாசித்தருளிப், பிள்ளான்மீண்டு எழுந்தருளும் போது சோமயாஜியாண்டான் அவரையநுவர்த்தித்து, அடியேனிருக்கிற தேசமிது, அடியேனுக்குத் தஞ்சமா யிருப்பதொரு அர்த்தத்தை யருளிச்செய்யுமென்னப், பிள்ளான் ஆண்டானைப் பார்த்து நீர்பாட்ட ப்ரபாகர மீமாம்சை இவை யித்தனைக்கும் பொருள்சொல்ல வல்லோம்; ஸ்ரீபாஷ்ய ப்ரவர்த்தகராக இருக்கிறோம் என்று மேன்மையாயிராதே எம்பெருமானார்திருவடிகளே சரணமென்றிருமென்றருளிச்செய் தருளினார். கோமடத்துப் பிள்ளான் தமது ஸ்ரீபாதத்திலே காக்கைப்பாடியாச்சான்பிள்ளை மூன்று உரு ஸ்ரீபாஷ்யம் வாசித்து, மிகவும் மேன்மையுடையராயிருக்குமதுகண்டு, இவருக்கு இம்முகத்தால் அபசாரம்வருமோ வென்றஞ்சி, எம்பெருமானார்திருவடிகளே சரணமென்றிருமென்றருளிச்செய்தருளினார். எங்களாழ்வான் காக்கைப்பாடியாச்சான் பிள்ளையைப்பார்த்து உம்மைப்பெருமாள்முனிந்தருளினபோது என்ன நினைத்திருந்தீரென்றுகேட்டருள; அவரும் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிருந்தேனென்று விண்ணப்பஞ்செய்தார். நடாதூரம்மாள் ஸ்ரீபாதத்திலே பத்துப் பன்னிரண்டு திருநாமம் ஸ்ரீபாஷ்யம்வாசிக்கிறபோது, அம்மாள் அவர்களுக்கு ஸ்ரீபாஷ்யத்தை உபன்யசித்துக் காட்டியருள; அவர்களும் பக்தி ருபாயமாக இருந்ததென்ன; பின்பவரும் ப்ரபத்யுபாயத்தை யருளிச்செய்து காட்டியருள; பக்தியிலும் ப்ரபத்திதானரிதாயிருந்ததென்றவர்கள் விண்ணப்பஞ் செய்ய; ஆகில் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்று விஸ்வசித்து உஜ்ஜீவியுங்கோளென்றருளிச்செய்தார். நடுவிலாழ்வான் திருநாராயணபுரத்திலே எழுந்தருளியிருந்து ஸ்ரீபாஷ்யம்வாசிப்பிக்கிறகாலத்தில், வங்கிப் புரத்தாய்ச்சி சொட்டையம்மாளுள்ளிட்டார் ஸ்ரீபாஷ்யத்தைக் கேட்டு இது அருமையாயிருந்தது எங்களாலவகாஹிக்கப் போகாது என்ன; ஆகிலிது அருளிச்செய்தருளின எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிருங்கோளென்றருளிச்செய் தருளினார்.

ஸ்ரீவேதவ்யாசபட்டர் திருநாராயணபுரத்தே எழுந்தருளி, எம்பெருமானார் திருமுன்பே கோஷ்டிபண்ணி, ஸ்ரீபாஷ்யத்தை உபந்யஸிக்க; இதுகங்காப்ரவாஹமாயிருந்தது, இது எங்களால் அவகாஹிக்கப்போகாது என்று ஐம்பத்திருவரும்விண்ணப்பஞ் செய்யப்; பட்டருமாகில் உங்களுக்குக் குலதெய்வமான எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றுஜ்ஜீவியுங்கோளென்றருளிச் செய்தார். நடுவில்திருவீதிப்பிள்ளை வெள்ளைக்குளத்துஆனைகாத்த அழகியசிங்கர்திருமுன்பே கோஷ்டிபண்ணி ஸ்ரீபாஷ்யம்உபந்யஸிக்கத் தமது சிஷ்யரான இளையவழகியார் எழுந்திருந்து இது கங்காப்ரவாஹமா யிருந்தது. அவகாஹிக்கப் போகாதென்று விண்ணப்பஞ் செய்ய; ஆகி லெம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென் றிருமென் றருளிச்செய்தருளினார். வடுகநம்பி எம்பெருமானார் திருவடிகளே சரணம், நம்பெருமாள் திருவடிகளே சரணமென்றிரண்டையும் சேரவநுசந்திக்கிற ஆழ்வானையும், ஆண்டானையும் இருகரையரென்பர்; வடுகநம்பி எம்பெருமானார் திருவடிகளே சரணமென்னுமா போலேயும், பட்டர் அழகிய மணவாளப் பெருமாள் திருவடிகளே தஞ்சமென்னுமா போலேயும், அநந்தாழ்வான் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணமென்னுமாபோலேயும், திருக்கச்சி நம்பி பேரருளாளர் திருவடிகளே தஞ்சமென்னுமாபோலேயும், எம்பெருமானார் செல்வப்பிள்ளை திருவடிகளே தஞ்சமென்னுமாபோலேயும், ஒருவர்க்குமிசைந்திராது. திருக்கோட்டியூர்நம்பிஆளவந்தாரைப் பஹுவாக யநுவர்த்தித்து, அவர் ப்ரஸாதத்தாலே அவர்க்கந்தரங்கரான உடையவரது, பவிஷ்யத் விக்ரஹத்தைப் பெற்றுத் தம் அந்திமதசையிலே தம் குமாரத்தியைக் கடாக்ஷித்து அவள் திருக்கையிலே ப்ரசாதிக்கக், கிடாம்பியாச்சானும் நம்பி புத்ரியாரைப் பஹுவாக வநுவர்த்தித்து, அவர் ப்ரசாத லப்தமான அவ்விக்ரஹத்தைஉபாயோபேயமாகப்பற்றிஅப்யசித்திருந்தார். எம்பெருமானார் யாதவகிரி மாஹாத்மியத்திற்கு அர்த்தமருளிச் செய்கிறபோது "அநந்தஃ ப்ரதமம் ரூபம், லக்ஷ்மணஶ்சததஃபரஃ-பலபத்ரஸ் த்ருதீயஸ்து கலௌகஶ்சித் பவிஷ்யதி" என்கிற சுலோகத்தில் சதுர்த்த பாதத்திற்கு அர்த்தம் நாமே விஷயமென்று முதலியாண்டான் முதலான முதலிகளுக்கு அருளிச் செய்தார்.

ப்ரஹ்மரக்ஷஸ்ஸு வெளியிட்டபடி எங்ஙனேயென்னில்:— யாதவப்ரகாசனுக்கு உடையவரைக்காட்டி "இவர்நித்யசூரிகளில் தலைவர்" என்று சொல்லுகையாலும்; ஊமை வெளியிட்டபடி எங்ஙனே யென்னில்:—பெருமாள்கோயிலிலேயொருபாகவதனிடத்திலே யொருபிள்ளை ஊமையாய்ப்பிறந்து ஐந்துவயதளவாக வார்த்தைசொல்லாதிருந்து பின்பு இரண்டுசம்வத்ஸரம் காணாதிருந்து, பின்பெல்லாரும்காணும்படிவந்து, வார்த்தைசொல்லவல்லவனாக இவ்வாச்சரியத்தைக்கண் டெல்லாரும் திரள் திரளாக வந்து, ஊமையைநோக்கி நீ இத்தனைநாளுமெங்கே போனாயென்றுகேட்க; அவனும் நான்க்ஷீராப்திக்குப்போனேனென்ன; இவர்களுமங்கே என்னவிசேஷமென்றுகேட்க; ஸ்ரீ சேனைபதியாழ்வான் உடையவரவதாரமாகவந்து அவதரித்தருளினாரென்கிற இதுவே பெரிய விசேஷமென்றனன்; அநந்தரம் அவனைக்கண்டதில்லை என்று ஸ்ரீபகவத் சேனைபதி ஜீயரருளிச் செய்கையாலும்; இப்படி உடையவர் ப்ரபாவத்தை இவர்களெல்லாரும் ப்ரகாசிப்பித்தார்கள். ஸ்ரீமந்நாதமுனிகள் தொடக்கமான வாசார்யர்களிற் காட்டில் இவருக்கு ப்ராதான்யங் கொள்ளும்படி எங்ஙனே என்னில்:—பகவ தவதாரங்களெல்லா மொத்திருக்கச் செய்தே ஸ்ரீராம க்ருஷ்ணாவதாரங்களுக்குப் ப்ராதான்ய முண்டாகிறாப் போலேயும்; திவ்ய தேசங்களெல்லா மொத்திருக்கச் செய்தே கோயில், திருமலை, பெருமாள்கோயில், திருநாராயணபுரங்களுக்கு ப்ராதான்ய முண்டாகிறாப்போலேயும்; ருஷிகளெல்லாரிலும் வியாச, பராஸர, சுக, சௌனக, நாரதாதிகளுக்கு ப்ராதான்ய முண்டாகிறாப்போலேயும்; ஆழ்வார்களெல்லாரு மொத்திருக்க நம்மாழ்வாருக்கு ப்ராதான்யமுண்டாகிறாப்போலேயும்; ஆசார்யர்க ளெல்லாரிலும் உடையவர்க்கு ப்ராதான்யங் கொள்ளத் தட்டில்லையிறே. ஸ்ரீராமாவதாரத்துக்கு ப்ராதான்ய மெத்தாலே என்னில்:—அபய ப்ரதான மருளிச்செய்தும், ஸ்ரீகுஹப் பெருமாளுடன் ஸிநேஹித்த தோழமைகொண்டும், பெரிய உடையாரைப் ப்ரஹ்ம மேதத்தாலே சம்ஸ்கரித்துப் பள்ளி படுத்தியும், ஸ்ரீசபரி கையாலே சம்யக் போஜனம் செய்தும், திருவடியுடன் "உண்பன் நானென்ற ஒண்பொருள்" என்னும்படி சஹ போஜனம் பண்ணிப் போருகையாலும் ப்ராதான்யம். ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்துக்கு ப்ராதான்ய மெத்தாலே என்னில்:—ஸ்ரீ

சீதோப நிஷத்தை வெளியிட்டுச் சரமஶ்லோகமருளிச்செய்கையாலும், பீஷ்ம த்ரோணாதிகள் க்ருஹங்களைவிட்டு ஸ்ரீ விதுரர் திருமாளிகையிலே "ஶுசிநி குணவந்திச" என்கிற பாவனத்வ போக்யத்வங்களையுடைத்தாயிருந்ததென்றமுதுசெய்து, "த்விஷதந்நம் நபோக்தவ்யம்" என்று முறைகூறுகிற சோற்றை நிராகரித்து, இது தன்னையே சத்ருகோஷ்டியிலும் ப்ரசித்தமாக்குகையாலும்; கோயிலுக்கு ப்ராதான்ய மெத்தாலே என்னில்:—திருப்பாணாழ்வாரோடு கலந்து பரிமாறுகையாலே; திருமலைக்கு ப்ராதாந்யம் எத்தாலே யென்னில்:—குறும்பறுத்த நம்பிக்கும் தொண்டமான் சக்ரவர்த்திக்கும் வார்த்தை யருளிச் செய்து கலந்து பரிமாறுகையாலே; பெருமாள் கோயிலுக்கு ப்ராதான்ய மெத்தாலே என்னில்:—திருக்கச்சி நம்பியோடே ஸ்மித பூர்வகமாகச் சம்பாஷணம்பண்ணி மிகவும் கலந்து பரிமாறுகையாலே; திருநாராயண புரத்திற்கு ப்ராதான்யமெத்தாலே என்னில்:-ஸுசரிததநயன்டக்கலாதராதிசயத்தாலே தந்நிவேதிதான்னத்தை ஸம்யக்போஜனம்பண்ணி அவனை வாழ்விக்கையாலும், யதிராஜபுத்ரரான சௌசில்யத்தாலும், ஸ்ரீவேதவ்யாஸபகவான் வேதங்களை விஸ்தரித்து அதில் கர்மகாண்டத்தையிட்டு, ப்ரஹ்மபாகத்திலே புருஷஸூக்த சாந்தோக்ய வாஜஸனேய தைத்திரீயகஸ்வேதாஶ்வதரமஹோபநிஷதாதிகளிலும்,தது பப்ருஹ்மணங்களான புராணேதிஹாஸாதிகளிலும் "ஸத்யம்ஸத்யம்" என்று தொடங்கி "நதைவம் கேசவாத்பரம்" என்று ஸத்யபுரஸ்ஸரமாக பரதத்வநிர்ணயம்பண்ணுகையாலேயவர்க்குப்ராதான்யம். ஸ்ரீபராசர ப்ரஹ்மரிஷி "புராணேஷுசவைஷ்ணவம்" என்னும்படியான ஸ்ரீவிஷ்ணுபுராண ரத்நத்திலே சிதசிதீஸ்வர தத்வங்களை விசதமாக ப்ரதிபாதித்த உதாரரென்றும், ஸ்ரீயாளவந்தார் நமஸ்கரிக்கையாலும் ப்ராதான்யம். சுகப்ரஹ்மரிஷி பரிக்ஷித் ராஜாவுக்கு ஸ்ரீபாகவதத்திலேதத்வநிர்ணயம்பண்ணி "ஶுகோமுக்தஃ" என்னும்படியான வைபவத்தை யுடையனாகையாலே ப்ராதான்யம். ஸ்ரீஸௌநகபகவான் நைமிசாரண்யத்திலே தீர்க்க சத்ரத்திலே ஸ்ரீஸூதனுக்கு வ்யாசபதமான ப்ரஹ்மாஸன மிட்டு அநேகமான ரிஷிகளோடே தாம் தாழ நின்றுக்கொண்டிருந்து ஸ்ரீவிஷ்ணு தர்மோத்தரம்முதலான விஷ்ணுதர்மங்களிலே பலவிடங்களிலும் தத்வ நிர்ணயம் பண்ணுகையாலும் ப்ராதான்யம்.

ஸ்ரீநாரதபகவான் "புஜயுகமபி சிஹ்னைரங் கிதம் யஸ்ய விஷ்ணோ: பரமபுருஷநாம நாம கீர்த்தனம்யஸ்யவாசி - ருஜுதரமபி புண்ட்ரம் மஸ்தகேயஸ்யகண்டே ஸர்வஸிஜ மணிமா லாயஸ்ய தஸ்யாஸ்மி தாஸ:" என்றிப்படிப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தாசனென்றும் சொல்லுகையாலும், பெரியாழ்வாரும் "சேமமுடைய நாரதனார்" என்னும்படியான வைபவத்தினாலும் அவர்க்கு ப்ராதான்யம். ஆழ்வார்களில் நம்மாழ்வாருக்கு ப்ராதான்யமெத்தாலே என்னில்:—ஸஹஸ்ரஸாகையான நான்கு வேதங்களினுடைய பொருள்களையும் நாலு ப்ரபந்தமுகத்தாலே எல்லாருமுஜ்ஜீவிக்கும்படியாக நாதமுனிகளுக்கு ப்ரசன்னராய் அருளிச் செயல்களெல்லாம் ப்ரஸாதித்து மற்றுமுண்டான தத்வார்த்தங்களையு மருளிச்செய்து தர்சனத்தை நிலை நிறுத்துகையாலும், "பயிலுஞ்சுடரொளி", "நெடுமாற்கடிமை" முதலான விடங்களில் வர்ணோத்யுத்கர்ஷங்களை நிராகரித்து வேத ப்ரமாண முக்கிய தாத்பர்யமான ஸ்ரீவைஷ்ணவ லக்ஷண மெல்லார்க்கும் தெரியும்படி அருளிச்செய்கையாலும் ப்ராதான்யம்.

உடையவர் கீழ்ச்சொன்னவர்க ளெல்லாரையும் போலன்றிக்கே பெருமா ளருளிச் செய்த அபய ப்ரதானத்தை விசதமாக்குகையாலும், ஸ்ரீகீதாசார்யன் அருளிச்செய்த சரமசுலோகார்த்தத்தை ப்ரகாசிப்பிக்கையாலும், ரிஷி ப்ரோக்தமான ப்ரமாணங்களுக்கும் அர்த்த மருளிச் செய்கையாலும், மற்றையாழ்வார்களருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களையும் அங்கோபாங்க ஸஹிதமாக உடைய திருவாய்மொழி முதலான ப்ரபந்தங்களையர்த்தவத்தாக விசதீகரிக்கையாலும், நாதமுனிக ளருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களையும் ஆளவந்தா ரருளிச்செய்த திவ்ய ப்ரபந்தங்களையுங்கொண்டு ஸூத்ரவாக்யங்களை யொருங்கவிட்டும், ஸ்ரீபாஷ்யம் கத்யத்ரய முதலான ப்ரபந்தங்களையு மருளிச் செய்தும் நிகில குமதிசயங்களையும் நிராகரித்து, ஸ்வமத ஸ்தாபனம்பண்ணி 'எம்பெருமானார் தர்சன' மென்னும்படி பண்ணுகையாலும் இவரெல்லாரிலும் ப்ராதாந்யரிறே. இனி யாழ்வான் முதலியாண்டான் தொடக்கமானவர்களில் ப்ராதாந்யரென்னுமிடஞ் சொல்லவேண்டாவிறே. ஆக ப்ராதான்யஞ்சொல்லியாயிற்று. இனி ப்ரபாவமேதென்னில்:—"ஆசார்யவாந் புருஷோ வேத" என்றும், "பாபிஷ்டக்ஷத்ரபந்துஶ்ச புண்டரீகஶ்ச புண்

யக்ருத் - ஆசார்யவத்தயாமுக்தஃ தஸ்மாதாசார்ய வான்பவேத்” என்றும், “ஆசார்யஸ்ஸஹரிஸ் ஸாக்ஷாச் சரரூபீ நஸம்ஸயஃ” என்றும், “ஆசிநோதிஹி ஸாஸ்த்ரார்த்தா நாசா ரேஸ்தா பயத் யபி ஸ்வய மாசரதே யஸ்து ஆசார்யஸ் ஸோபிதீயதே” என்றும் “கு-ஸப்தஸ்த்வந்தகாரஸ்ஸ்யாத்ருஸப்தஸ்தந் நிரோதகஃ—அந் தகார நிரோதித்வாத் குருரித்யபிதீயதே” என்றும் “குருரேவ ப்ரம் ப்ரஹ்ம குருரேவ பராகதிஃ - குருரேவ பராவித்யா, குரு ரேவ பரந்தனம் - குருரேவ பரஃ காமோ குருரேவபராயணம்- யஸ்மாத்ததுப தேஷ்டா ஸௌதஸ்மாத் குருதரோகுருஃ” என் றும், “பீதகவாடைப் பிரானார் பிரமகுருவாகிவந்து” என்றும், “தேனார்கமலத் திருமாமகள் கொழுநன் தானே குருவாகி” என் றும், ஈஸ்வரன் தானாகச் சொல்லப்பட்ட வாசார்யனே சிஷ்ய னுக்குத் “தஸ்ய வைகுண்ட துக்தாப்தி த்வாரகாஸ்ஸர்வஏவஸஃ” என்று திருநாடு திருப்பாற்கடல் முதலான நூற்றெட்டுத் திருப் பதிகளும் “அன்னையா யத்தனாய்” என்னும்படியான ஸர்வ விதோத்தாரக பந்துவும் “மாடும் மனையுங்கிளையும்மறைமுனிவர், தேடு முயர்வீடுஞ் செந்நெறியும், பீடுடைய, வெட்டெழுத்துந் தந்த” வனும் எல்லாமாகக் கடவன். ஆழ்வான், ஆண்டான், அருளாளப் பெருமா ளெம்பெருமானார், எம்பார் தொடக்க மான வாசார்யர்கள், ஸ்ரீபராங்குசபட்டர் முதலான தந்தஞ் சிஷ்யர்களுக்கு எம்பெருமானார் திருவடிகளே சரணமென் றிரு ங்கோ ளென்கைக்கு ஹேதுவென் னென்னில்:—ஸ்வாசார்ய ப்ரீதி நிபந்தனமாகவும், “மாறனடி பணிந்துய்ந்தவன்” என்றும் சொல்லுகையாலே ஆழ்வார்க்கும் உடையவர்க்கும் நடுவுள்ள வாசார்யர்கள் நம்மாழ்வார்க்குக் கரண பூதராகையாலேயும், இவர்க்குநேரே ஆசார்யர் திருக்குருகைப் பிரானாகையாலும், “கலியுங் கெடும் கண்டுகொண்மின்” என்று இவ ரவதாரத்தைக் குறித்தருளிச் செய்கையாலேயும் ஆழ்வார்க்கு நேர் சிஷ்யர் உடையவராகக்கடவர்.

ஆழ்வாராலே ப்ரவர்த்திதமான தர்சனத்தை நிலைநிறுத்தி அவர் வைபவத்தை “குரும்ப்ரகாஸ யேத்தீமான்” என்று ப்ர காசிப்பிக்கையாலேயும் பெரிய நம்பிமுதலான பூர்வாசார்யர்கள் இவர்க்கு ஆசார்யர்களாயிருந்தும் இவர் சம்பந்தத்தாலே வீறு பெற்றார்கள். ஆழ்வான்முதலான மற்றை யாசார்யர்கள் சிஷ்யர்

களாய்ப் பேறு பெற்றார்கள்; ஆகையாலே சர்வாசார்யத்வ பூர்த்தியுள்ளது உடையவர்க்கே என்றருளிச்செய் தருளினார்களிறே. ஆளவந்தார் இவ்வர்த்தத்தை யநுஷ்டித்துக் காட்டி யருளினார். எங்ஙனே யென்னில்:—மணக்கால் நம்பி, உய்யக்கொண்டாரிவர்க ளுகப்பைப் பின்சென்று "பிதாமஹம் நாதமுனிம் விலோக்ய ப்ரஸீத" என்றும் "நாதாய நாதமுநயேத்ர பரத்ர சாபி நித்யம்" என்றும் இங்குமங்கும் ஆசார்யன் திருவடிகளே சரணமென்று ஆசார்யவிஷயத்தில் க்ருதஜ்ஞதை யாவதாத்மபாவி என்றருளிச்செய்தருளினார்; ஆகையாலே ஸ்வரூபோஜ்ஜீவனத்திற்கு ஆசார்யனே தஞ்சமென்று பற்றுதலொழிய வேறே இவ்வாத்மாவுக்கு உஜ்ஜீவிக்க விரகில்லையிறே. இவ்வர்த்தத்தை யநுஷ்டித்தா ரார்ரென்னில்:—ஸ்ரீமதுரகவி ப்ரப்ருதி ஸஜ்ஜனங்களிறே. உடையவர் புழுவின் வ்யாஜேன மேல்நாட்டுக்கெழுந்தருளினபோது உபன்யஸித்துக் கட்டளையிட்ட ஆசார்யர்களெல்லாரு மாச்சர்யப்பட, உடையவரும் எம்பரமாசார்யரான ஆளவந்தார் வார்த்தைகொண்டு சொன்னேன் இதுஆளவந்தார் கோஷ்டியிலே யொருநாளாகிலும் சேவிக்கப்பெற்றேனாகில் பரமபதத்தும் இங்கும் சுருளும்படி கட்டிவிட்டேனேயென் றருளிச்செய்தார்.

உடையவர் அபயப்ரதானம் அருளிச்செய்யாநிற்கப் பிள்ளையுறங்கா வில்லிதாசர் கோஷ்டியில் எழுந்திருந்து நிற்க; இதுவென்? பிள்ளாய் என்று உடையவர் கேட்டருள; "பரித்யக்தாமயாலங்காமித்ராணிச தநாநிச - பவத்கதம் மேராஜ்யஞ்ச ஜீவிதஞ்சஸுகானிச"என்றும், "த்யக்த்வாபுத்ராம்ஸ்ச தாராம்ஸ்ச ராகவம் ஸரணம் கதா" என்றும், பகவத் ஸமாஸ்ரயணத்திற்கு விலக்கடியானவைகளை யடையவிட்டுப், "பெருமாள் திருவடிகளே தஞ்சம்" என்று வந்து, "கஸ்த ஏவவ்யதிஷ்டத" என்று நிலத்திலே கால்பாவாதே, ககனஸ்தனாய் நிராலம்பநனாய் நின்ற விபீஷணாழ்வானையு மகப்பட, "வத்யதாம்" என்று கல்லுந் தடியுங்கொண்ட ராமகோஷ்டிக்குப் பசுபத்ந்யாதிகளோடு கூடினவடியேன் ஆளாகப் புகுகிறேனோ வென்றார்.

உடையவரும் பிள்ளாய்! அஞ்சாதே கொள்ளும், நான்பெற்றேனாகில் நீர்பெறுகிறீர்; பெரியநம்பி பெற்றாராகில் அடியேன் பெறுகிறேன்; மற்றுமுள்ளார் பெற்றாராகில் இவர்களும் பெறு

கிறார்கள். நம் சடகோபர் "அவாவற்று வீடுபெற்ற" என்று தம் வாக்காலே அருளிச்செய்கையாலே அவர்பெற்றது சித்தம். ஆன பின்பு நமக்கும் சித்த மென்றிரும். எல்லார்க்கும் நாச்சியார் புருஷகார முண்டாகும்போது அச்சம்வேண்டாம். ஆகையா லிறே நித்யயோகம்; ஆனபின்பு நித்யசம்சாரிகளும் எம்பெருமா னும் ஒரு சங்கிலித்துவக்கிலே காணுமிருப்பது; ஆகையால் நம் முடைய ஒழுக்குக்கூட்டம் நம்மைவிட் டகலாதென்றிரீர். கழு குண்ணில் வாழையுமுண்ணுமென்றிரும். ஸ்ரீவிபீஷணாழ்வா னேடுவந்த நால்வரையும் தகையென்றபோதுந் தனித்துத்தகை என்றதில்லையே; அருளப்பா டிட்டபோதுந், தனித்தருளப்பா டிட்ட தில்லையே; ஆனபின்பு நான்பெற்றேனாகில் நீரும் பெறு கிரீ ரஞ்சாதே சுகமே யிருமென் றருளிச்செய்தருளினார். "ஏத்தி யிருப்பாரை வெல்லுமே மற்றவரைச் சார்த்தி யிருப்பார்தவம்"; ஏத்தி இருந்தார் ஸ்ரீபரதாழ்வான், அவரைச்சார்த்தி யிருந்தார் ஸ்ரீசத்ருக்னாழ்வான்; ஏத்தி இருந்தார் நம்மாழ்வார் அவரைச் சார்த்தியிருந்தார் ஸ்ரீமதுரகவிகள்; ஏத்தி இருந்தார் பெரியாழ் வார் அவரைச் சார்த்தி இருந்தார் ஆண்டாள். இனி ஸ்வாசார்ய பரமாசார்யர்களைப் பற்றுமளவே ஸ்வரூபமாகில் திவ்ய தேசங் களைக் கைவிட்டானாகானோவென்னில், ஆகான்; எங்ஙனே என் னில் "இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் மாலிருஞ் சோலை யென்னும், பொருப்பிட மாயனுக் கென்பர்நல் லோரவை தன் னொடும்வந், திருப்பிட மாய னிராமா னுஜன்மனத்து" என்கை யாலே எம்பெருமானார் திருவடிகளைத்தொழவே திவ்ய தேசங்க ளெல்லாம் திருவடி தொழுதானாகக்கடவன்; உடையவரை யாரா தித்து அமுது செய்யப்பண்ணவே எல்லா திவ்யதேசத் தெம் பெருமான்களையு மாராதித் தமுதுசெய்யப்பண்ணினா னாகக்கட வன். "நின்றவண் கீர்த்தியும்" என்கிற பாட்டிலும், "பேறொன்று மற்றில்லை" என்கிற பாட்டிலும், கர்மமு முபாயமன்று, ஞானமு முபாயமன்று, பக்தியு முபாயமன்று, ப்ரபத்தியுமுபாயமன்று; எம்பெருமானார் திருவடிகளே உபாயோ பேயமென்கையாலே, எம்பெருமானாரைப் பற்றுகையே ப்ரபத்தி; ராமாநுஜ சதுரக்ஷ ரியே திருமந்த்ரம், அவர் திருவடிகளில் பண்ணுங் கைங்கர்யமே பரமபுருஷார்த்தம்,இதுவேஎன்னுடைய நிஸ்சிதார்த்தமானஎன் சித்தாந்தமென்று நடாதூரம்மாளருளிச் செய்தருளுவர். கூரத்

தாழ்வான் "ராமாநுஜேஜ்யேஷா சதுரா சதுராக்ஷரீ" என்றிப்படி நாராயண, ராமாநுஜ என்கிற திருமந்திரங்களுக்கு வாசி பந்த மோக்ஷங்க ளிரண்டுக்கும் பொதுவாகையும், மோக்ஷைக ஹேது வாகையு மாகிற வாசிதோன்ற சதுராசதுராக்ஷரீ என்றாரிறே. "கையிற்கனி" என்கிற பாட்டிலே ஈஶ்வரனைக் கரதலா மலக மாகக் காட்டித் தந்தாலும், உம்முடைய விக்ரஹ ஸௌந்தர்யா நுபவமே பரமப்ராப்யமென்றும் "ராமாநுஜனைத் தொழும் பெரியோ, ரெழுந் திரைத்தாடு மிடமடியேனுக் கிருப்பிடமே" என்று இராமாநுஜனைத் தொழும் பெரியோர் நித்யவாசம் பண்ணு மிடமே யடியேனுக்கு ப்ராப்ய பூமி என்றும் "உன்தொண்டர்கட்கே, அன்புற்றிருக்கும்படி யென்னை யாக்கியங் காட்படுத்தே" என்று இராமாநுஜனே! உன்னடியார் திறத்தி லூற்றமாறுதபடி பக்தியை யுண்டாக்கி யவர்கட்கே என்னையாட்படுத்தாய் என்றும் உடையவர் திருமுக மண்டலத்தைப் பார்த்து விண்ணப்பஞ் செய்ய இசைந்தெழுந்தருளி இருந்தாரிறே திருவரங்கத்தமுதனார். இதுவே இவ்வர்த்த நிச்சயத்துக்கு த்ருடதரமுக்ய ப்ர மாணமென்று நமக்கெல்லார்க்கும் புத்திபண்ணக் குறையில்லை; எங்ஙனெனனில்:—"அங்கயல் பாய்வயல்" என்கிற பாட்டின் படியே ஸர்வஸ்மாத்பரனாய் ஸர்வ நியந்தாவான எம்பெருமானையும், நாச்சியாரையும் புருஷாகாரமாகக்கொண்டு எம்பெருமானார் திருவடிகளையே பெறவேண்டுமென்று ப்ரபந்தத்தைத் தலைக்கட்டி யருளினாரிறே அமுதனாரும்.

இங்ஙனன்றிக்கே, "வேதாந்தாங் ஶங்கராத்யைঃ குமதி பிரஸதர்த்தாங் ஹ்ரீதாம்ஶ்சபூயஸ் ஸ்வார்த்தேதாத்பர்ய யுக்தாங்கல யிதுமபிச ஸ்ரீஶடார்யாத்ய பக்தைঃ-ப்ரோக்தாங் திவ்ய ப்ரபந்தாங் ஶரணவரணயோ காத்மகாங் ப்ரஸ்புடார்த்தாங் க்ருத்வோத் தர்த்தும்பவாப்தே ரகிலஜநமபூத்யோ மஹாபூததாம்நி" என்றும், "வேதாந்தா நாமமஹீம் நாங்குருதரகஹ நார்த்தைக வாக்யத்வ பூர்வம்வ்யாக்யாத் ருத்வாச்ச ஶேஷங்குரு பரவஹநா தீசிதுஸ் ஸைங்யநாதம் - ஸாதுத்ராணாத் ததங்யப்ரமத நகரணாச் சாபி தத்பஞ்சஹேதீ நாசார்ய த்வஸ்யபூர் த்யாய முருதரக்ருபம் ஸ்ரீபதிஞ் சாஹ ஸூரார்யாঃ" என்றும், "ஶ்ருத்யர்த்தாங் ப்ராப்ய தத்வேநசவ ரதமுகாதாஜ்ஞ யாத ஸ்யஸர்வம் ஸங்கந்த்யக்த்வா த்ரிதண்டாஞ்சித மஹிதகரோ ரங்கதாம் ந்யாஸ்தபஶ்சாத்-ஆர்

யைஸ்ஸா கஞ்சலக்ஷ்மீரமணக்ருத பதாந்திவ்ய தேஸாந்தராயாம் ஸேவம்ஸேவம் ப்ரகல்ப்யாத சமஹிதஸமாராதநம் தத்ரதத்ர'' என்றும், ''யாதோயஸ் ஸாரதாயாஸ்ஸ விதமததயா ஸத்க்ருதஸ் வப்ரபந்தோ பாஹ்யாந் வேதாத்குத்ருஷ்டீநபிகபட படூந்வாத தோர்நிர்ஜிகாய -ப்ராதக்ஷிண்யேநகச்சந் புவமகிலஜநம் வைஷ்ண வாக்ர்யஞ்சகுர்வந் ந்யாஸாக் யந்தேவகுஹ்யம் பரமஹிதமபித் ராக் ப்ரகாஸஞ் சக்ருத்வா'' என்றும், ''ரங்கே வேதாந்த பாஷ் யம் வ்யதநு தசததஃகிட கண்டஸ்ய ஹேதோர் கத்வாயோஹோ ஸலாக்யம்ஜந பதமமலே யாதவாத் ரௌநிவேஸ்ய - பஸ்சாதா ஹத்ய ரங்கங்குரு வரமுகதோ வைதிகாக்ர்யம் விசிஷ்டா த்வை தம் விஸ்தார்ந்த மஸ்மிந்ஜகதி பஹுமுகம் விஸ்த்ருதங்கா ரயித் வா'' என்றும், ''அத்யாப் யாஸ்தே யதுக்ஷ்மா ப்ருதிமஹித ஊயஸ் சாக்ஷாஷீம்ஸ்வீய மூர்த்திங் குர்வாணஸ்தம் யதீந்த்ரங் குருகுல ந்ருபதிம் நௌமிராமாநுஜார்யம்'' என்றும், ''கீதாபா ஷ்யம் பூஷ்ய வேதாந்தபாஷ்யம் ஸாரந்தீபங்கிஞ் சகத்யத்ரயஞ்ச வேதார்த்தாநாம் ஸங்க்ரஹம் நித்யயாகம் ப்ராஹைதாந் யஸ்தம் யதீந்த்ரம்பஜேஹம்'' என்றும், ''ஹஸ்த்யத்ரீ ஸப்ரஸாதாத திக தநிகமாந் தார்த்தகோயோ ஹிஜித்வா பாஹ்யாந் வேதாத் குத் ருஷ்டீநபி நிகிலஜநம் வைஷ்ண வாக்ர்யஞ் சக்ருத்வா - ரங்கே வேதாந்த பாஷ்யம் வ்யதநுததமஹம் நௌமி ராமாநுஜார்யம் ஸ்ரீரங்காத்யாலயே ஷப்ரகட குணகணம் ஸ்ரீபதிம்ஸேவ மாநம்'' என்றும் இப்படி பெரியபெருமாள் முதலானார் பஹு முகமாகப் பேசி வெளியிட்டார்கள். இப்படி ஸத்துக்களாலே ப்ராக்உக்தவைபவம் ஸங்க்ரஹேண உக்தமாயிற்று.

ஏவம்வித வைபவ யுக்தரான இந்த எம்பெருமானாரைத் தத்பாகிநேய ஸ்ரீநுவாய்த் தந்நாமத்தை யுடையராய்த் தந்நாம குணஹர்ஷிதரான கந்தாடை யாண்டான் கனக்க அநுவர்த் தித்து ''பரித்ராணாய'' இத்யாதிப்படியே தேவரீர் ''புண்யாம் போஜவிகாஸாய பாபத்வாந்தக்ஷயாயச-ஸ்ரீமாநாவிர பூத்பூமௌ ராமாநுஜதிவாகரஃ'' என்னும்படி அவதரித்தருளின ஸ்ரீபெரும் பூதூரிலே ஸர்வகாலத்திலும் ஸர்வசேதநர்க்கும் ஸேவ்யமாம்படி தேவரீருடைய அர்ச்சாவிக்ரஹத்தை ஏறியருளப் பண்ணவேண் டும் என்று விண்ணப்பஞ்செய்ய, ஸ்வாமியும் 'அப்படியே செய் யும்' என்று அநுமதி பண்ணியருள, அப்போதே ஆண்டானும்

அநுகூலனான சில்பியை அழைப்பித்து"புண்டரீகத்வாதஸம்பீர் யுதம் விலஸிதந்தண்டைஸ் த்ரிபிர்மண்டிதங் காஷாயேணசி கோபவீத ருசிரந்தோர் மூலசக்ராம்புஜம் - ஆஸீநஞ்ஜலஜாஸநே சதுளஸீ பத்மாக்ஷ மாலாஞ்சிதம் யுக்தஞ் சாஞ்ஜலி முத்ரயாச விசிபம் ஸ்ரீபாஷ்யகாரம்பஜே" என்கிற பரார்த்யமான வார்த் தக விக்ரஹாகாரத்தை ஸேவிக்கப்பண்ண, அவனும் "ஆதியஞ் சோதி யுருவையங்குவைத் திங்குப்பிறந்த" என்கிறபடியே அர் ச்சா விக்ரஹமாக எழுந்தருளப்பண்ணி ஸந்நிதியிலே கொண்டு வந்துவைக்கத், திருக்கண்சாத்தி யுகந்தருளி, அந்த விக்ரஹத் திலே தமது ஸர்வஶக்தியும் ப்ரகாசிக்கும்படி கடாக்ஷிங்கநம் பண்ணி 'இவ்விக்ரஹத்தைப் புஷ்யமாஸத்தில் குருபுஷ்யத்திலே ப்ரதிஷ்டிப்பியும்' என்று திருமுகமெழுதித் திநங்குறித்து அனு ப்பியருள, ஆண்டானும் அப்படியே திருவடிகளிலே ஸேவித்து அந்த விக்ரஹத்தை எழுந்தருளுவித்துக் கொண்டு வந்து மூல விக்ரஹத்தையும் ஏறியருளப் பண்ணுவித்துத் திருமுகப்படியே திருப்ரதிஷ்டையுஞ் செய்வித் தருளினார்.

இங்கே ப்ரதிஷ்டிப்பிக்கிற அற்றைத் திவஸத்திலே திரு மேனியிலே மிகவும் தளர்ச்சியாய்ப் பலஹாநி யுண்டாக, இரா மாநுசரும் இதென்னென்று பராமர்சித்து 'ஆண்டானுக்கு எழு திக்கொடுத்த திவசமேது? என்று கேட்டருள, அந்தத் திவஸம் அன்றாக இருக்கக்கண்டு விஸ்மயப்பட்டு 'ஶீக்ரம்வருவது' என்று ஆண்டானுக்குத் திருமுகம் போகவிட்டருள, அவரும் திருமுக த்தை ஶிரஸாவஹித்து அப்படியே மீண்டெழுந்தருளித் திரு வடிகளை ஸேவித்துக்கொண் டிருந்தார்.

அநந்தரம் அப்போது அத்யந்தம் அந்தரங்கரான ஆண் டான் முதலான முதலிகளெல்லாரும் பழுத்திருக்கிற தேமா வைக் கிளித்திரள்கள் காத்துக்கொண் டிருக்குமாபோலே, தத் துல்யரான இவர்களும் விமலசரம விக்ரஹத்தைக் "கையிற்கனி" இத்யாதிப்படியே மெய்யிற் பிறங்கிய சீரைப் பழுக்க ஸேவித் துக்கொண்டு, "அடையார் கமலத்தலர்மகள் கேள்வன்கை யாழி யென்னும், படையோடு நாந்தகமும் படர்தண்டு மொண்சார்ங்க வில்லும், புடையார் புரிசங்கமும் இந்தப் பூதலங் காப்பதற் கென்று, இடையே இராமாநுச முனியாயின விந்நிலத்தே" என் றும், "ஶேஷோவாஸைந்யநாதோவா ஸ்ரீபதிர்வேதிசாத்விகை:- விதர்க்யாய மஹாப்ராஜ்ஞைர் யதிராஜாய" என்றும், "தத்ரோ தஞ்சதி மண்டபேயதிவர: கக்ஷ்யாந்தரஸ் தேவஸம்பூர்வம் ராவ ணகம்ஸ முக்யதநுஜாந் ராமாநுஜாப்யாம் ஹதாந் - மத்வாஸங் கர யாதவாதிமுகதோ பூயோ வதீர்ணந்புவம் தத்பங்காயக்ரு

தோ தயஸ்த துசிதாம் ராமாநு ஜாக்யாம் வஹந்'' என்றும், "வ்யாஸோவா பகவாந் பராஶரமுநிஶ் ஸ்ரீஶௌநகோவாதவா ஸாக்ஷாந்நாரத ஏவவாஶடாரிபூர்வா கீஶ்வரோ வாஸ்வயம் - லோகேஶ: புருஷோத்தம: பணிபதிஶ்ஶே ஷீஜகச்சேஷிணீத்யாக்யா தும்ஜநதாம் ஹிதாயஸம பூத்ராமாநுஜார்யோ முநி:'' என்றும் சொல்லுகிறபடியே அநேக அவதார விஶேஷமென்று ஆதரித்துக்கொண் டிருந்தார்கள்.

இத்தால், ஏவம்வித மஹாத்ம்ய யுக்தரான உடையவருடைய வைபவமும் "சரிதம் ரகுநாதஸ்ய ஶதகோடி ப்ரவிஸ்தரம், என்கிற சக்ரவர்த்தித் திருமகன் வைபவம்போலே அவாங்மனஸகோசரமிறே. ஸாகரத்தைக் கைந்நீச்சாலே கடந்து கரையேறினாலும், உததியைச் சிறங்கித் தாலும், உடையவர் வைபவ மடையச்சொல்ல முடியாதிறே. யதாமதியதாஶ்ருதமாகச் சொன்னதித்தனை; பஹுஶ்ருதராய்ப் புத்திபாஹுள்யமுடைய பெரியோர்கள் விசதமாகக் கண்டு கொள்ளக் கடவரிறே. இப்படி அவதார விசேஷமான இவர்க்கு "ஶரச்சதம் வ்யதீயாயஸவிம்ஶ மதிகம் ப்ரபோ:'' என்கிற கணக்கிலே நூற்றிருபது திருநக்ஷத்திரம் பூர்ணமாயிற்று. "வையமன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே'' என்னும்படியான இவர் தம்முடைய வவதார ரஹஸ்ய ஜ்ஞானத்தாலும், விக்ரஹசேவையாலும், தத்ப்ரதக்ஷிண நமஸ்காராதிகளாலும், சதுரக்ஷரியாய், சதுரமான தம்முடைய திருநாம வைபவத்தாலும், தத்திவ்ய மங்கள விக்ரஹ த்யானத்தாலும், தத்தேக நிஷ்டையாலும், தத்கைங்கர்யைக பரதையாலும், பாஷ்யாம்ருத ப்ரதாநாதிகளாலும், மந்த்ரரத்ந ப்ரதாநாதிகளாலும், ததர்த்த ப்ரதிபாதநத்தாலும், ஸ்வபாதுகா ப்ரதானத்தாலும், தத்பாததீர்த்த ஸ்வீகாரத்தாலும், ஶுபாவநமான ப்ரஸாதஸ்வீகாரத்தாலும்,பாதஸ்பர்ஶ பவித்ரதையாலும், சஞ்சார பூதமான பாதஸஞ் சரணத்தாலும், ஸ்வபாவன கரஸ்பர்ஶத்தாலும், அப்படியே கடாக்ஷ விசேஷத்தாலும், பஞ்ச சம்ஸ்காராதிகளா லுண்டான சம்பந்த விசேஷத்தாலும் "புனந்திபுவனம் யஸ்யபாதாஶ்ரிதபதாஶ்ரிதா: கடாக்ஷாதிபிரேவாத்ர'' என்கிற ஸ்வகீயசம்பந்தத்தாலும், "பாலமூகஜடாந்தாஶ்சபங்கவோ பதிராஸ்ததாச தாசார்யேண ஸந்த்ருஷ்டா: ப்ராபனுவந்தி பராங்கதிம்'' என்றும், "ஸாக்ஷாந்நாராயணோ தேவ: க்ருத்வாமர்த்யமயீந்தநும் மக்னாநுத் தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ரபாணினா'' என்றும், "அங்வயாத பிசைகஸ்ய ஸம்யங்ந் யஸ்தாத்மநோஹரௌ-ஸர்வ ஏவப்ரமுச்யேரன்நரா: பூர்வேபராததா'' என்றும், பஶூர் மனுஷ்ய: பக்ஷீவா - யேச வைஷ்ணவ ஸம்ஶ்ரயா: தேநைவதே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ:

பரமம்பதம்" என்றுஞ் சொல்லுகிறபடி ஏதேனுமாயுள்ளதொரு ஸ்வஸம்பந்த விசேஷத்தாலே ஜ்ஞாத்ரஜ்ஞாத்ரு வியாபகமற ஜகத்தையெல்லாமுஜ்ஜீவிப்பித்தும்,இனிமேலும்ஸ்வஸம்பந்திகளா

உடையவர் ஸந்நிதிபரிகரங்களுக்குக் கைங்கர்யம் நியமித்தல்.

உடையவர் ஸந்துஷ்டராய்த் திருவுள்ளத்திலே நினைத்தபடியே ஸந்நிதிபரிகரங்களைப் பத்துக்கொத்தாகப் பெருக்கித் (க) திவ்யதேசவாஸிகளாய்ப் பூர்வம்கோயிலொட்டற்றுத் தம் திருவடிகளை ஆம்ரயித்தவர்களைத் "திருப்பதியார்" என்று ஒருகொத்தாகச்சாற்றி, அவர்கள் கைங்கர்யங்களை விபஜித்துத், திருப்பாற்கடல் தாஸர் திருக்குருகைப்பிரான்முதலாக உள்ளூர்க்காணியாளரான செல்வநம்பி முதலானோர்க்கும் கைங்கர்யங்களை நியமித்து; (உ) இரண்டாம் கொத்தான கொடவரில் திருத்தாழ்வரைதாஸர் திருவம்ஸரான அஞ்சுதிருநாமத்துக்கு ஆம்ரயணபூர்வகமாகத், "திருக்குருகூர்தாஸர், நாலுகவிப்பெருமாள் தாஸர், சடகோபதாஸர், திருக்கலிகன்றிதாஸர், ராமாநுஜதாஸர்" என்று திருநாமமும்ஸாதித்து, விசேஷகடாக்ஷம்செய்தருளி, அவர்களுக்குக் கோயில் கைங்கர்யங்களையும் வ்யவஸ்திதமாக்கித், "திருப்பணிசெய்வார்" என்று நிரூபகமாக்கி; (ங) மூன்றும் கொத்தாகப் பாகவதநம்பிமாரை ப்ரதிஷ்டிப்பித்து, அவர்களுக்குக்கைங்கரியமரியாதையைப்பண்ணுவித்து(ச)தோதவத்தித்தூய்மறையோரான கொடுவாளெப்பாரில், பெரியபெருமாள் திருவரங்கமாளிகையார்முதலானபேருக்கு ஆம்ரயணதிகளைப் பண்ணிவைத்து, "உள்ளூரார்" என்று வ்யவஹரிப்பித்து; (ரு) பாடுவாரான நாதமுனியரையர்களுக்கும் ஆம்ரயணதிகளை ஸாதித்துக், கைங்கரியவ்யவஸ்தையும் "விண்ணப்பஞ்செய்வார்" என்கிற வ்யவஹாரமும் கற்பித்து; (சு) திருவரங்கவள்ளலார் என்றும் தாயமுனி வேழம் என்று மிருக்கிற தம் சிஷ்யருக்குத் திருமஞ்சநம்முதலான சில கைங்கரியங்களை உண்டுபண்ணி ஒரு கொத்தாக்கி, அவர்களுக்குத் "திருக்கரகக்கையார்" என்று பேருண்டாக்கி; (எ) தழையிடுவாரான ஸேனைநாதப்ரஹ்மராயர் வீரஸுந்தர ப்ரஹ்மராயர் ஜநநாத ப்ரஹ்மராயர் முதலானோருக்கு ஆம்ரயணதிகளைஸாதித்து, அவர்களுக்குப் பூர்வம் அந்தந்தப்ரபுக்கள் பேர்கொடுத்ததுகளை விளங்கும்படிபண்ணி, அவர்களுக்கு "ஸ்தாநத்தார்" என்று வ்யவஹாரமுண்டாக்கி; (அ) ரிக்காதிவேத சதுஷ்டய புராணேதிஹாஸ இயல் ஸ்ரீரங்க மஹாத்ம்ய பூர்வோத்தர மீமாம்ஸாஸூத்ர ஸ்ரீபாஷ்ய ஆக்யாயந ஆபஸ்தம்ப போதாயநஸூத்ர ஸ்தோத்ர கத்ய பஞ்சாங்க ஸங்கீர்த்தநாதிகளை நித்யமாக ஸந்நிதியிலே திருவாராதந காலங்களிலே விண்ணப்பஞ்செய்யும்படி தத்தத் சாகாத்யாயிகளாய்த் தந்திருவடிகளை ஆம்ரயித்தவர்களாயிருக்கிறகருடவாஹநபண்டிதர், பெரியநம்பி, திருப்பணிசெய்வார், நம்பிமார், ஆழ்வான், கோவிந்தப்பெருமாள், ஆச்சான்,திருவரங்கத்தமுதனார்,

யுள்ளவர்களை "ஆரியர்காள்கூறும்" என்று பெரியோர்களை நினைத்துச் சேதநரை யுஜ்ஜீவிப்பித்துப்போருங்கோளென்று நியமித்தும் இப்படி அவதாரகார்யத்தைத் தலைக்கட்டிப் பின்பு உடைய

பிள்ளான், சிறியாழ்வான், அம்மாள் முதலானவர்களை நியமித்து, அவர்களை ஒருகொத்தாக்கிப் "பட்டாள்கொத்து"என்றுபேரிட்டு; (௯) "ஆரியபட்டாரையும்" ஒரு கொத்தாக்கி, அவர்கள் கைங்கர்யத்தையும் திட்டம் பண்ணி, (௧௦) புண்டரீகதாஸர் கைங்கர்யத்தையும் திட்டம்பண்ணித் "தாஸநம்பிகொத்து" என்று வ்யவஹரிப்பித்து;—இந்தப்படி பத்துக் கொத்தாக்கி, நியதபரிஜனங்களை வ்யவஸ்திதமாக்கி ஸ்ரீஸேநாபதி துரந்தரராய்க் கொவணவரான தாம் திருவரங்கந்திருப்பதி ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் தலைவராகையாலே, முதல்கொத்திலே அநுப்ரவிஷ்டராய்த், தாம் நித்யமாகக் கற்பித்த கருடவாஹநபண்டிதர் கைங்கர்யத்தையும் திருப்பதியார் கொத்தோடேசேர்த்து, இக்கொத்தார்க்கு முதல்பேரும், பாரம்பர்யமாகக் கொடவருக்கு இரண்டாம்பேரும், தாம் கட்டளையிட்ட பாகவதநம்பிமார்களுக்குந் தோதவத்தித்தூய்மறையோருக்கும் மூன்றும் பேருமாக, இப்படி கைங்கர்யத்தைப் பத்துப்பேருக்கும் திட்டம் செய்தருளினார்.

இப்படி பத்துக்கொத்துக்கும் கைங்கர்ய விபாகம்பண்ணிப், பரம விரக்தராய்த் தேசாந்தரிகளான ஏகாங்கிகள் நாலுபேருக்கும் வ்யவஸ்திதமாகச்சிலகைங்கர்யங்களை நியமித்துத்; தங்கப்பிரம்புநான்கு,வெள்ளிப் பிரம்பு இரண்டு, தலைவளைசல்பிரம்பு இரண்டு ஆக எட்டுப்பிரம்புக்கும் விரக்தரான திருநாமதாரிகளை நியமித்து, அவர்கள் கைங்கர்யங்களையும் விபஜித்துத் தேசாந்தரிகளான சாத்தாதமுதலிகளுக்கும் சிலகைங்கர்யங்களையும் நியதமாக நியமித்துப்; பத்துக்கொத்தாகத்திட்டம்பண்ணி; அந்தந்தவகையில் பத்துக் கொத்துக்கும் கைங்கர்ய விபாகம் செய்தருளித், திருவரங்கச் செல்வம் சிந்தாமலும் மங்காமலும் பொங்கும்படி ஆராய்ந்து கொண்டு வருங்காலத்திலே;

ஒரு திவ்யயநோத்ஸவத்துக்குத் திருநகரியில் ஆழ்வாரெழுந்தருளக் கூடாமல் சில உபாதிகளுண்டாயிருக்க, எம்பெருமானார் தாமேகோயிலிலே ஆழ்வாரைத் திருப்ரதிஷ்டைபண்ணிவைத்துத், திருமங்கைமன்னனைத்தவிர மற்றஆழ்வார்களையும் நாதமுனிகளையும் திருப்ரதிஷ்டைபண்ணிவைத்துத், திருமொழி திருவாய்மொழித் திருநாளுக்கு ஆழ்வார்கள் எழுந்தருளப், பெருமாள் அருளப்பாடுமுதலானவரிசைகளை ஆழ்வார்களுக்குஸாதித்து, அவர்களுக்குக் கரணபூதரான அரையருக்கு அருளப்பாடு சாதிக்கும்படி பண்ணி; இயற்பாவுக்குள் முதலாழ்வார்கள் முதலான இயற்பா அருளிச்செய்தவர் மாத்திரம் அழகியமணவாளன் திருமண்டபத்திலே ஸந்நிதிக்குநேராக எழுந்தருளியிருக்கும்படி செய்து, பெருமாளுடைய திருமுளைத் திருநாள்களிலே திருவீதிகளிலே தேசாந்தரி

வர் தம்முடைய திருவுள்ளத்தி லார்த்தியோடே பெரிய பெரும ளைத் திருவடிதொழுது ஸம்ஸாரத்தில் அருசிபிறந்ததென்று விண்ணப்பஞ்செய்யலுற்றார்.

ஸ்ரீவைஷ்ணவர்கள் திருக்கோவைகோத்து இயற்பாவை நித்யம் ஒருதிருவந்தாதியாக அநுஸந்தித்துவர; அந்தத்திருக்கோவை ஆழ்வார்திருவோலக்கமாகையாலே, திருப்பணி செய்வாருக்குத் தம் உகப்பினாலே ஆழ்வார்களுடைய ஸந்நிதிப்பேராக சில கைங்கர்யங்களை நியமித்துத்; தம்முடையதர்சனத்துக்குவெற்றிதோன்ற ஸமயசத்ரத்தைத் திருக்கோவைக்குமுன்னேபிடிக்கும்படி திருப்பணிசெய்வாரைநியமித்து, இவ்வாழ்வார்களுக்கும், ஆண்டாள்தவிர மற்ற ஆழ்வார்களுக்கும் அவரவர் திருநக்ஷத்ரத்தினன்று பெருமாள் திருமஞ்சனத்துடனே ஸந்நிதியிலே யெழுந்தருளி, ப்ரதம கடாக்ஷத்திலே மங்களாசாசனம் செய்தருளித், திருவாராதனமாய், அமுதுசெய்தருளி, சேனை முதலியாரும் அமுதுசெய்தருளினவநந்தரம், ஒரு தளிகை ப்ரஸாதமும் ஆழ்வார் அமுது செய்தருளி, ஸ்ரீபண்டாரத்துக்குப் போனபின்பு, பெருமாள் உடுத்துக்களைந்த பீதகவாடையும் சூடிக்களைந்ததிருமாலையும் பூசிக்களைந்தகளபமும் உடையவர் தமக்குரிய விருதுடன் ப்ரஸாதிக்கப்பெற்றுப் புறப்பட்டு, நாச்சியார் ஸந்நிதியிலேயும் அந்தப்படியே ஸத்க்ருதராய்த்திருவீதியிலே யெழுந்தருள; அத்யாபக ஸ்ரீவைஷ்ணவர்கள் இயல்ஸேவிக்கத், திருப்பணிசெய்வார் அந்தத் திருவோலக்கத்துக்கு ஸந்நிதிப்பேராய் இயலுக்கு ஸமர்ப்பிக்கிற அடைக்காயமுதுவாங்கியும், சந்தடி விலக்கியும், ஸமயசத்ரத்தைப் பிடித்துக்கொண்டு, ஆழ்வார்தம்கோயிலிலே எழுந்தருளினபின்பு, அரையருக்கும் ஸ்ரீபாதம்தாங்கினசாத்தாதமுதலிகளுக்கும், அத்யாபக ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் பஹுமாநம் திருப்பணிசெய்வார் ஸாதிக்கத்; தீர்த்தமும் சாத்துப்படியும், அடைக்காயமுதும், திருவோலக்கத்திலே விநியோகம் பண்ண, ஸேவாகாலமாய்த் திருவோலககம் கலைந்தபின்பு ததீயாராதநம் நடக்கும்படி பண்ணுவித்து, ஆண்டாள் திருநக்ஷத்ரத்துக்குத் தம்ஸந்நிதியிலேதானே சாற்றுமுறை ஸமயத்திலே பெருமாள் தோதவத்தித்தூய் மறையோர்கையிலே அறுவாணமனுப்பியருள, ஆண்டாளும் அவர்களை ஆதரிக்க ஆழ்வார் ஸந்நிதியைப்போலே நடக்கும்படி திட்டம்செய்தருளினார்.

இப்படி எம்பெருமானார் திட்டம் செய்தருளினபடியினாலே, பெருமாள்ஸந்நிதியிலே ஆழ்வாருக்குக் கரணபூதரான அரையர், ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்களை இசையுடனே விண்ணப்பஞ்செய்வார்கள். நாச்சியார்ஸந்நிதிமுதலான திருவிருப்புக்களிலே ஒருபாட்டு அரையர் இசையுடனே ஸேவிக்க, மற்றப்பாடல்களை இயலாக ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸேவிப்பார்கள். இயற்பாமுதலியன நாதமுனிகள் காலந்தொடங்கி உடையவர்காலத்திலேயும் அநேகநாள் அரையர் ஸேவித்துக்கொண்டு வருமளவில், ஒருகாலவிசேஷத்திலே, பெரியகோயில்நம்பி, தம்முடைய கோயில் பௌரோஹித்யத்தையும், புராணபடனத்தையும்

அயர்வறும் அமரர்களோடேகூடி அடிமை செய்யத் திருவுள்ளமாய்;—*சேணுயர்வானத்திருக்குந்தேவபிரானும், * அவாவறுமமரர்களதிபதியாய், "பாம்பணை மேலாற்குப்—பலபலவே

ப்ரஹ்மரதத்தையும் ஆழ்வானுக்குத் தாநம்பண்ணித், தாம் கோயிலிலே, ஒட்டற்றிருந்தபடியாலே, அதுமுதலாக ஆழ்வான் பட்டாள்கொத்திலே சேர்ந்து ஸந்நிதிப்பௌரோஹித்யமும் நிர்வஹித்துக்கொண்டு பூர்வம் திருக்குறுங்குடியிலே நடந்த கௌசிகவ்ருத்தாந்தத்தைப் பெருமாள் தம்முடைய ஸந்நிதியிலே உத்தாநத்வாதசியில் கால்யோத்ஸவகாலத்திலே விண்ணப்பஞ்செய்யச்சொல்லிநியமித்து, ஸ்ரீபாஞ்சராத்ரோக்தப்ரகாரமாகத் தாம் அந்த உத்ஸவாந்தத்திலே திருவீதியெழுந்தருளுகிற ப்ரஹ்மரதத்தைப் பௌராணிகரான பெரியகோயில் நம்பிக்குப் பாரிதோஷிகமாக ஸாதித்துத், தாமுள்ளே எழுந்தருளினது முதலாகக் கௌசிக புராணம்படித்துப், ப்ரஹ்மரதமேறிவீதிவலம்செய்கிறதும்ஆழ்வானுக்கே நடந்துவருகையில், இத்தை உடையவர் கடாக்ஷித்து, "வித்வானுன திருவரங்கத்தமுதனார் ஒழிந்திருக்கலாகாது" என்று திருவுள்ளம்பற்றிப் பிள்ளை திருவரங்கப் பெருமாளரையர் திருமாளிகைக்கு எழுந்தருளி இயற்பா ஸ்ரீகோசத்தைப் பிக்ஷையாகக் கேட்டுக்கொண்டு, '"இன்றுமுதலாக இயற்பாவை நீங்கள் ஸேவிக்கவேண்டும்" என்று நியமித்து, அமுதனாரை அழைத்து, ஒரு இயற்பாவைஸாதித்து, ஸ்ரீகோசத்தை ஸந்நிதியிலேவைத்து, ஸ்ரீகோசத்திலே "இயற்பா ஆயிரமும் ஸேவியும்" என்று நியமித்தருளி, அன்றைக்கு அரையருக்கு ஸாதிக்கிற வரிசையெல்லாம் அவருக்கு ஸாதிக்கும்படிபண்ண; அமுதனாரும், ஆழ்வாருக்குக் கரணபூதராய் இயற்பாவை ஸேவித்துச் சாற்றினபின்பு, அரையரைப்போலே வரிசைகளைஸாதித்து, வீட்டிலே விடுவித்தருளினார். நாச்சியார்கோயில் முதலானதுகளிலேயும் அமுதனார்இயற்பாவைத்தொடங்க, ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஸந்திப்பர்கள். இசையெல்லாம் அரையர் அநுஸந்திக்கிறது; இயலெல்லாம்ஸ்ரீவைஷ்ணவர்கள்அநுஸந்திக்கிறது. பெரியஸந்நிதியிலே இயற்பா அமுதனார் அநுஸந்திக்கிறது; மற்றவிடங்களிலெல்லாம் அவர் தொடங்க ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஸந்திப்பார்கள். திருவீதியில் இயல் திருக்கோவைஆழ்வார்திருவோலக்கமாகையாலே, அவ்விடத்திலே, ஆழ்வாருக்குக் கரணபூதர் ஸ்ரீவைஷ்ணவர்கள். திருக்கோவையில் ஆழ்வாருக்குக்கரணபூதரான ஸ்ரீவைஷ்ணவர்கள்திருவோலக்கத்தருகே திருப்பணி செய்வாரை ஸந்நிதிப்பேராக நியமிக்கையாலே, அந்தத் திருவோலக்கத்தில் விநியோகாதி கைங்கர்யபரர் திருப்பணிசெய்வார், ஆகையாலே, ஆழ்வார்கள் ஸந்நிதியிலே ப்ரஸாத திருப்பணியாராதி விநியோகமில்லை; ததீயாராதநமே உள்ளது.

இப்படி உடையவர் திட்டம்செய்தருளின வநந்தரம், சிலநாளைக்குப் பின்பு, திருவரங்கத்தமுதனார் எம்பெருமானார் விஷயமாகக் காயத்ரீஜப

யாபரணம்” என்னும்படி * பன்மணிப் பூணாரத்தையுமுடையவ ளாய், “உடையார்ந்தவாடையன்” இத்யாதிப்படியே * நடையா வுடைத்திரு நாரணனாய், * அரவினணையம்மானாய், * எழில்மலர் மாதருந்தானும்இன்பம்பயக்க இனிதுடன்வீற்றிருந்து அமர்ந்து

ஸங்க்யையாலே கலித்துறை நூற்றந்தாதியை விண்ணப்பஞ் செய்தார். பெருமாள், ஒருஸப்தாவரணத்திருநாளிலே, உடையவரைத் தம்முடனே கூடவரவேண்டாம் என்று நியமித்தருளித், திருவீதியிலே ஸகல வாத் யங்களையும்நிறுத்தி, அவ்வந்தாதியை ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஸந்திக்கக் கேட்டருளிப், போரவுகந்தருளினார்; அதுமுதலாக, பெருமாள் நியமநத் திலேபெரியஸந்நிதியிலே இயற்பா அநுஸந்தித்தவுடனேநூற்றந்தாதியை வரிசையுடன்சொல்லக்கேட்டருளுகிறார். நாச்சியார்கோயிலிலேயும்,அப் படியே; ஆண்டாள் ஆழ்வார் ஸந்நிதியிலே இயற்பாவை அமுதனார் யஜ மாநராய்த் தொடங்க, ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுஸந்தித்துத் தலைக்கட்ட, நூற்றந்தாதி தொடக்கத்திலே அரையரைப்போலே வரிசைகளை உடை யவர்நியமநத்திலேசாற்றுகிறது; உடையவர்நூற்றந்தாதியை இயற்பா வோடே, முதலாயிரத்தில் சேர்த்துள்ள கண்ணிநுண் சிறுத்தாம்பைப் போலேசேர்த்து ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ப்ரபந்நகாயத்திரியாக நித்யாநு ஸந்தேயமென்றும்; இந்த அமுதனாருக்கும் திருப்பணி செய்வா ருக்கும் மடமும், திருமாளிகைகளிலே அத்யாபக ஸ்ரீவைஷ்ணவர்களு க்கு முன்னே பஹுமாநமும் திட்டம்செய்தருளினார்.

இப்படி கோயில்கைங்கர்யபரரையும் அவரவர்க்கு வ்யவஸ்திதமான கைங்கர்யங்களையும் திட்டம்செய்தருளி, ஆழ்வார்களையும் ப்ரதிஷ்டிப் பித்து, அவர்களுக்குத்திருநக்ஷத்ரஉபலாளநங்களையும் ஸ்ரீபாஞ்சராத்ரப்ர காரமாகவ்யவஸ்தைபண்ணிப்; பெருமாளுக்குத்திருவாராதநம் நித்யோத் ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவ மஹோத்ஸவாதி களையும் விஸ்தாரமாகநடத்தியருளித்; திருப்பணிஜீர்ணோத்தாரணங்களை யும் பண்ணுவிக்குமிடத்தில் நித்யதிருவாராதநவர்க்கவகை முதலானவை களுக்கு உதவும்படி, மாடமாளிகை சூழ்திருவீதியில் ஈசான்யபாகத்திலே கோசாலையும்கட்டிவைத்துச் சிறிதுபசுக்களையும் அவ்விடத்திலேவைத்து மற்றைப்பசுமந்தைகளெல்லாம் வடகரையிலேசோழங்கநல்லூர்வணிதத் திலே யிருக்கும்படி அஞ்சு க்ராமத்தை அழித்து வநமாக்கி அதிலே ஆநி ரைகாத்தபெருமாளை ப்ரதிஷ்டிப்பித்து, ப்ருந்தா வநத்தைப்போலே பசுக்களிருக்கும்படி பண்ணி, அகளங்க நாட்டாழ்வான் திருவிடையாட் டச் சீர்மை விசாரிக்குமளவில்; கேவலபகவத்பரரும் காலக்ஷேபபரருமா கையாலேயும் தாமும் அடிக்கடி பசுக்களைக் கடாக்ஷிக்க எழுந்தருளுகிற படியினாலேயும், திருவரங்கத்திலே பெரியபெருமாளை ப்ரதிஷ்டிப்பித்த ருளிக், கோயிலிலேயிருந்த வைகாநஸ நம்பிமாரைத் திருவாராதநம்பண் ணச்சொல்லி நியமித்தருளினார்.

*கூந்தல்மலர்மங்கைக்கும்மண்மடந்தைக்குங்கேள்வனாய் * ஏழுல குந் தனிக்கோல்செல்ல, இப்படி "ஒண்டொடியாள் திருமகளும் நீயும்" என்னும்படி ததேகபோகமாயுள்ள போகவிபூதியில் அம் மிதுநச் சேர்த்தியா யெழுந்தருளியிருக்கிற அவ்விருப்பிலே * தேவிமாராவார் திருமகள்பூமி ஏவ மற்று அமரர் ஆட்செய்ய,

---

அகண்டகாவேரி என்னுமிடத்தில் முன்னொரு காலத்தில் பெரிய பெருமாளுக்கத்யந்தபக்திபூண்டவராயும், வைஷ்ணவோத்தமராயும் இரு ந்துவசித்துவந்த ஓரம்மையார் அரங்கன் என்னும்பெயருள்ள தமதுகுமா ரனைக் காலிகளின் பின்னனுப்பி அவற்றைமேய்த்துவரச்சொல்லித் தாம் அவனுக்கு நழுவமுதுகொண்டுபோய்க்கொடுத்துவருவதுவழக்கம். அது போல்ஒருநாள்நழுவமுதுகொண்டுசென்றுபிள்ளையைக்காணாது அரங்கா! அரங்கா!என்று பன்முறையழைத்துஆயாசமுற்றபோது,பக்தவற்சலனும் ஆபத்சகாயனுமாகிய அழகியமணவாளன் அரங்கனென்னும் சிறுவனைப் போல் வேடங்கொண்டு அந்த அம்மையார்முன் சென்று திருக்கரங்களை ஏந்தி மிக்க அன்புடன் நழுவமுதைவார்க்கச் சொல்லி யருந்தி மறைந்து போயினன் உடனே அரங்கனென்னும்யதார்த்தசிறுவன்வந்து அம்மாபசி யெடுக்கிறது சீக்கிரம் எனக்கு நழுவமுது தா என்று கேட்கலானான். அவனைப்பார்த்துத் தாயார்கோபங்கொண்டு நீ சாப்பிட்டுப்போய் சிறிது நேரமுமாகவில்லையே இதற்குள் மறுபடியும் பசியென்று வந்து என்னைப் பரிகசிக்கிறாயா என்றனர். பிள்ளை, அம்மா நான் இப்போதுதான் வருகி றேன்; எப்போதாவது இப்படி கேட்டதுண்டா? என்றான். அவ்வம்மை யாரும் இதுகேட்டு அதிகவிஸ்மயப்பட்டு இதுவும் பகவத்செயல்தானோ, நாம்பலதரம் நம்பிள்ளையைப்பேரிட்டழைத்து இளைத்தமையைச்சகியாத வனாய்ப் பக்தவற்சலனேவந்திருக்கலாமென்று எண்ணுதுமெண்ணிப் பக வானதுபேரருளைப்புகழ்ந்திருந்தனர். அடுத்தநாளும்வழக்கம்போல்அந்த அம்மையார் தமதுபுத்திரனுக்கு நழுவமுதேந்திச்செல்ல, பகவான் முன் தினம் போலவே வேடம்பூண்டுவந்து அம்மா! நழுவமுதெங்கே சீக்கிரம் வார் என்றனன். யதார்த்த சிறுவனும் உடனே ஓடிவந்து அம்மா! இது வென்? என்றனன். அந்த அம்மையார் ஒன்றுந்தோன்றாதவராய் ஆனந்த பரவசராய்அடியாளையும்ஒருபொருளெனமதித்துநழுவமுதின்மேல் ஆசை கொண்டுசேவைதந்தகிருபாநிதியே! என்று வேரற்றமரம்போல் பகவான் திருவடிகளில்வீழ்ந்துகிடக்க, அழகியமணவாளன் அவ்வம்மையாருக்கும் அவர் குமாரனுக்கும் தத்க்ஷணமே மேல்வீடு தந்தருளினன். உடையவர், இவ்விடத்திற்கு ஸ்ரீயர்புரமென்றுபேரிட்டங்கு மண்டபங்கட்டுவித்து வரு டந்தோறும் "பங்குனிப்ரஹ்மோத்ஸவம்" நடந்தேறிவரச் செய்து அழ கியமணவாளனைச் சகலவிமரிசையோடும் எழுந்தருளப்பண்ணி "அம்மை யார்திருப்பந்தலில்" வீற்றிருக்கச்செய்து அமுதுசெய்தருளினபின் யாவ ருக்கும் திருச்சேவைதரச் செய்து, பல ஆடம்பரத்துடன் கோயிலேறி யருள ஏற்பாடுகள் செய்திருக்கின்றனர்.

* கருளப்புட்கொடிச் சக்கரப்படை வானநாட வெங்கார்முகில் வண்ணனாய் * வைகுந்தங்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கிற ஸ்ரீவைகுண்டநாதனுக்குச், '*சென்றால்*ஊ ந்ம்நிவாஸதாஸபேதங்கொண்டு*வழுவிலா அடிமைசெய்யவேண்டும்' என்று அபிவ்ருத்த மனோரதத்தையுடையராய், அதுசெய்யுமிடத்து '*முகப்பே

உடையவர், முதலியாண்டானை த்ரிதண்ட ஸ்தாநீயராக அபிமாநித்தருளியது.

உடையவர்ஆஶ்ரமப்ராப்திபண்ணியருளினபின்பு ஸ்ரீபாதத்தில்முதலிகளெல்லாரும், "சரீரஸம்பந்திகளை விட்டுவிட வேண்டிற்றே" என்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும், "நம்முதலியாண்டானையொழியஸந்யஸிதத்தோம்" என்றருளிசெய்ய· இப்படி யருளிசசெய்யலாமோ என்று முதலிகள் விண்ணப்பஞ் செய்ய; உடையவரும், "கையில் த்ரிதண்டத்தைக் கைவிடிலன்றோ முதலியாண்டானைக் கைவிடுவது" என்று அருளிசசெய்தருளினார்.

முதலியாண்டான் அருளிச்செயலில் ஒருபாட்டருளிச் செய்யக்கேட்டு உடையவர் பரவசராயருளின ரென்பது.

முதலியாண்டான், எம்பெருமானார் திருப்பள்ளிக்கட்டிலிலே ஏறியருளி ஒருபாட்டைசசந்தை ப்ரஸாதித்தருளினவளவிலே திருவாய்மொழியில் ஒருபாட்டைப் பரவசராயருளினார்; இதைக்கண்டு உடையவரும், "வேத வேத்யே பரேபும்ஸிஜாதேதஶரதாத்மஜே வேதஃப்ராசேதஸாதாஸீத்ஸாக்ஷாத்ராமாயணாத்மநா" என்றாப்போலே வேதவேத்யனை பரமபுருஷன் தஶரதபுத்ரனாய்வந்தவதரித்தாப்போலே, அந்தவேதங்கள் தாமும் ஸ்ரீவால்மீகிபகவாந் முகேந இதிஹாஸோத்தமமான ஸ்ரீராமாயணமாய்க்கொண்டு ப்ரகாசித்தாப்போலே, வேதங்கள் ஆழ்வார் முகேநத்திருவாய் மொழியாய்வந் தவதரித்தனவன்றோ, அதைக்கண்டன்றோ இவர்பரவசராயருளினார் என்றருளிசசெய்தருளினார்.

நம்பெருமாள் அவப்ர்தங்கொண்டாட வெழுந்தருளும்போது உடையவர், முதலியாண்டான் திருக்கைத்தலத்தைப்பற்றி யெழுந்தருளி மீண்டெழுந்தருளும்போது பிள்ளையுறங்காவில்லிதாஸர் திருக்கையைப்பற்றி யெழுந்தருளினாரென்பது.

பெருமாள், பெரியதிருநாள் கொண்டருளி அவப்ர்தங்கொண்டாடவெழுந்தருளும்போது, உடையவர் முதலியாண்டான் திருக்கைத்தலம்பற்றியெழுந்தருளி, நீராடி மீண்டெழுந்தருளும்போது பிள்ளையுறங்காவில்லிதாஸர்திருக்கைத்தலம்பற்றியெழுந்தருள: "இதற்கடியென்"என்று முதலிகள்விண்ணப்பஞ்செய்ய; எம்பெருமானாரும், "ஜந்மம்உயர்ந்திருக்

கூவிப்பணிகொள்ளவேணும்;*செம்மாபாதபற்பைத்தலைசேர்க்க வேணும்; * ஈறில் இன்பத்திருவெள்ளத்திலே மூழ்கவேணும்; * தாமரைக்கண்களாலேகுளிரநோக்கவேணும்' என்றதுபோலே

கச்செய்தே தாழநில்லாநின்றேமே" என்கிற அபிமாநமுண்டே நமக்கெல்லார்க்கும், அக்குறையுமில்லாதவரிறேயிவர் என்றருளிச்செய்தார்.

மாறனேரிநம்பி தம்ஸரமதசையில் ஸ்லோகத்வயத்தை யருளிச்செய்து த்வயநிஷ்டர்வைபவத்தை பெரியநம்பியைக்கொண்டு வெளியிட்டருளியது.

அதற்குமேலே மாறனேரிநம்பிசரமதசையிலே அவர்கலக்கங்கண்டு திருவுள்ளங்கலங்கின பெரியநம்பிதிருவுள்ளந்தேறும்படி, ஸாலபமானஸ்லோகத்வயத்தையும் உதாஹரித்தருளியும், ஏதந்மூலமாக த்வயநிஷ்டர் வைபவத்தைத் தம்முடைய ப்ரஸ்நத்துக்கு உத்தரமாகப் பெரியநம்பி முகேந வெளியிடுவித்தும் செய்தருளினரிறே.

உடையவர் ஒருஊமைக்குத்தம்முடையதிருமேனியைரக்ஷகமாக காட்டியருள, அத்தைக்கண்ட கூரத்தாழ்வான், "எம்பெருமானர்திவ்யமங்கள விக்ரஹமேதஞ்சம் என்கிற நிஷ்டைக்கு அநதிகாரியாய்விட்டேனே" என்று தம்மை வெறுத்தருளியது.

ஒருநாள் உடையவர் ஒரு ஊமையைக் கடாக்ஷித்து ஏகாந்தத்திலே வைத்துக்கொண்டு ஊமைக்குத் தம்முடைய திருமேனியை ரக்ஷகமாகக் காட்டியருள; ஆருக்கும் ஸித்தியாத விசேஷ கடாக்ஷத்தைக் கூரத்தாழ்வான் கதவின்புரையிலேகண்டு மூர்ச்சித்துத் தெளிந்து, "ஐயோ! ஒன்றுமறியாதேபிறந்தேனாகில் இப்பேற்றை உடையவர் அடியேனுக்குமிரங்கியருளுவர், கூரத்தாழ்வானாய்ப் பிறந்து சாஸ்த்ரங்களைக் கற்கையாலேயன்றோ தம்முடையதிவ்யமங்களவிக்ரஹத்தை அடியேனுக்குக்காட்டித்தந்தருளாமல்ப்ரபத்தியைஉபதேசித்துவிட்டார்: ஆகையால்எம்பெருமானர் திவ்யமங்களவிக்ரஹம் அடியேனுக்குத்தஞ்சம் என்கிற நிஷ்டைக்கநதிகாரியாய்விட்டேனே" என்று ஆழ்வான் வெறுத்துக்கொண்டருளினர்.

பெரியநம்பி, உடையவருக்கு "ஸதாசார்யவிக்ரஹமே ஸதாத்யேயம், தந்நாமமேஸதாஜப்யம்" என்றருளிச்செய்தது.

நம்பி தான் திருக்கோட்டியூரிலே திரைவளைத்துக்கொண்டு எழுந்தருளியிராநிற்க; உடையவர்அங்கேயெழுந்தருளித்தண்டன்ஸமர்ப்பித்து, அவரைப்பார்த்து'திரைவளைத்துக்கொண்டெழுந்தருளியிராநின்றீர்'த்யாநமேது, மந்த்ரமேது' என்றுகேட்டருள; நம்பியும் "ஆளவந்தார்வடவாற்றிலே நீராடியருளும்போது திருமுதுகிருக்கும்படி, வலியகடாரம்கவிழ்த்தாப்போலேகாணுமிருப்பது அதுஎனக்குத்யாநம்;யமுனைத்துறைவரென்

சிலபரிமாற்றங்களை ஆசைப்பட்டு, "வானோர்சோதி மணிவண்ணா! மதுசூதா! நீ அருளாய் உன் தேனேமலருந் திருப்பாதஞ் சேருமாறு வினையேனே" என்றும், "இமையோர்கள்குழாம் தொழுவதுஞ் சூழ்வதுஞ் செய் தொல்லைமாலைக் கண்ணாரக்கண்டு, கழிவதோர் காத லுற்றார்க்கு முண்டோ கண்கள் துஞ்சுதலே" என்றும் சொல்லுகிறபடியே கண்ணழிவற்ற ப்ராப்யத்வரையையுடையராய், அத்தை * ஆராதகாதலையுடைய ஆழ்வார் அர்த்தித்தபடியே இவரும் அத்தை அடியொற்றிக்கொண்டு,—"ஸ்ரீ மதி வைகுண்டே திவ்யலோகே" என்று தொடங்கி "ஆத்மாநுரூப

இறது மந்த்ரம், நீரும் அத்தைமறவாமல் நினைத்திரும்" என்றருளிச்செய்தார். இத்தால்-"ஸதாசார்ய விக்ரஹமே ஸதாத்யேயம் என்றும், தந் நாமமே ஸதாஜப்யம்" என்றும் அருளிச்செய்ததாம்.

அதற்குமேலே பெருமாள் திருவுள்ளக் கருத்தையுமறிந்து அவர்க்கு உயிர்நிலையாய்த் திருமுடித்துறையிலே ததநுபவஜநிதப்ரீதிகாரித கைங்கர்ய நிரதராய் வர்த்தித்துப்போருகிற பட்டினிப் பெருமாளையுங்கிட்டி, அட்டத்திலே பலநாளும்ஸேவித்து அவர் லோகயாத்ரையில் கண்வையாதே பகவதநுபவைகபரரான ஆகாரத்திலே தாம்வித்தராய் ப்ரீதியாலே, "பெருமாளே! பெருமாளே" என்ன, அவரும், "தம் கைங்கர்யம் பலித்தது," என்று, "ஜீயா! ஜீயா" என்ன; அவர்கருத்தறிந்து அவர்க்கு ஜீவநாவதியும் கற்பித்தருளித், தாமும் அப்படியே, (பகவந்தம் நாராயணம் த்யாநயோகேந த்ர்ஷ்ட்வா) என்று பகவதநுபவம்பண்ணி அநுபவஜநிதப்ரீதிகாரித கைங்கர்யங்களோடே காலங்கழியாநின்றுகொண்டு போராநிற்கிற காலத்திலே,

உடையவராலே "இளையாழ்வாரான ராமாநுசன்" என்று திருநாமம் சாத்தப்பெற்ற தம் குமாரனை கந்தாடையாண்டானைக் கூரத்தாழ்வான் ஆட்கொண்ட வில்லி ஜீயரிடத்திலே ஆஶ்ரயிப்பித்தது.

முதலியாண்டானுக்கும் ஒருகுமாரர் ஆசார்ய கைங்கர்யத்திற்கு அர்ஹராகவவதரிக்க; அவரையும் அப்படியே அபிமானித்தருள, அநந்தரம் முதலியாண்டானும் உடையவர் ஸந்நிதியிலே, இந்தச் சிசுவிற்குத் தேவரீர் திருநாமம் சாத்தவேணும் என்று விண்ணப்பஞ்செய்ய; அப்படியே "இளையாழ்வாரான ராமாநுசன்" என்று கந்தாடையாண்டானுக்குத் திருநாமம் சாத்தியருள; அவரும், (ராமாநுஜாய பூயிஷ்டாம் நமஉக்திம் ப்ரதக்ஷ்மஹே, யதீந்த்ரகரஸம் ஸ்பர்ஶஸௌக்யம் யேநாந்வபூயத) என்னும்படி கடாக்ஷகதாரகராய் வளர்ந்து போந்தார்; அவரை ஆட்கொண்ட வில்லிஜீயரிடத்திலே ஆஶ்ரயிப்பித்தருளினார்; மற்றுமுண்டான ஆசார்ய புருஷர்களுக்கும் இப்படி ஸத்ஸந்தாநங்களு முண்டாயின. இப்

யாஸ்ரீயாஸஹாஸீநம்" என்றும், "ப்ரத்யக்ரோந்மீலிதஸரஸிஜ ஸத்ருஶநயநயுகளம்" என்று தொடங்கி "தத்க்ஷணோந்மீலித புண்டரீகஸத்ருஶ சரணயுகளம்" என்னுமளவும் *இணைப்பாதங்களின் இடையிலுண்டானவற்றின் வடிவழகுகளையும், அநந்தரம் அதிமநோஹர கிரீடமகுட நூபுராந்தமாக *முடிச்சோதி தொடங்கி * அடிச்சோதியளவும் சாத்தின திருவணிகலங்களின் அழகையும், "ஸ்ரீமத்யாவைஜயந்த்யாவநமாலயா விராஜிதம்" என்று கீழில் திருவாபரணஶோபைக்குப் ப்ரபைபோலவும் அதின் காந்திபூரம் நிறம்பெற வெள்ளமிட்டாற்போலவும் இருக்கிற * மங்கலநல்வநமாலையையும், கீழில் ஆபரணத்தோபாதியாயிருக்

படி இவர்களெல்லாரும் * கோயில் பிள்ளைகளாய் வளர்ந்து ஸகல வித்யைகளும் அதிகரித்துக்கொண்டு போந்தார்கள். மற்றும் திருவடிகளை ஆஶ்ரயித்த முதலிகளெல்லாரும் தத்தம் புத்ரர்களுக்கும் உடையவர் திருநாமம் சாத்தினார்கள். ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தானும் அப்படியே திருநாமஞ்சாத்த; அந்தப் பிள்ளையை உடையவர் எடுத்துக்கொண்டு மிகவும் உகந்தருளினார். அதைக்கண்டு எல்லாரும் "அந்தப் பிள்ளையுடைய பேறிருந்தபடியென்!" என்று ப்ரீதரானார்கள். (ரமோ ராமோ ராம இதி ப்ரஜா நாமபவந்கதா:) என்னுமாப்போலே ஜகத்தெல்லாம் ராமாநுஜன் திருநாமத்தாலே உஜ்ஜீவிப்பித்துப் போர;

உடையவர் வேதாந்தார்த்தத்தை விசதீகரித்துக்கொண்டு கோயிலிலே அறுபதுஸம்வத்சரம் எழுந்தருளிஇருந்தாரென்பது.

இப்படி பாரெல்லாம் பரம்பும்படியான திருநாமத்தால் வந்த பெருமையையுடைய எம்பெருமானாரும், ஜகத்தெல்லாம் * திருமால் திருக்கை திருச்சக்கரமான திருவிலச்சனை, * திருமால் திருமண், (திருமாலுக்குரிய தொண்டர்) என்று தாஸ்ய நாமம், * திருமால் திருநாமமான த்வயம், திருமாலைக் கைதொழுகையாகிற சேஷவ்ர்த்தி முதலான இவற்றாலே *திருத்தித் திருமகள் கேள்வனுக்காக்க; அவர்களும், "ராமாநுஜனுடையார்" என்று உடையவரபிமாநாந்தர்ப்பூதராய், முமுக்ஷுக்களாய் மோக்ஷைகலக்ஷ்யராய் வாழ்ந்துகொண்டு போருகிற அக்காலத்திலே ப்ரணவார்த்த ப்ரகாசக வஸ்துவினுடைய ஸந்நிதியிலே, இப்படி பெண்ணும் பேதையும் ஸம்ஸாரத்தினின்றும் உத்தீர்ணராய்க்கொண்டு போருகிற காலத்திலே, ப்ரணவார்த்த ப்ரகாசமான வஸ்துவினுடைய பரத்வத்தைத் ததர்த்தநிர்ணயமுகேந ப்ரகாசிப்பாராய், வேதாந்த வ்யாக்யாநம் விஸதமாக்கிக்கொண்டு (ஸம்ஸேவிதஸ்ஸம்யமி ஸப்ததீக்யாபீடைஶ்சதுஸ்ஸப்ததிபிஸ்ஸமேத: அந்யைரநந்தைரபிவிஷ்ணு பக்தைராஸ்தேதிரங்கம்யதிஸார்வ பௌம:) என்றும், (வ்யாகுர்வதாதேநவி பஶ்சிதோகே வேதாந்த மவ்யாஹதவாக்விஹாரை:—ரங்கேஶகைங்கர்ய துரந்தரேண

கிற "அணியாராழியுஞ்சங்கமும்" என்னும்படியான ஶங்க சக்ர கதா அஸி ஶார்ங்காதிகளாயுள்ள * அமர்கொள் ஆழி சங்கு வாள் வில் தண்டாதி பல்படைகளையும், "ஸ்ரீமத்விஷ்வக்ஸேநே" என்று தொடங்கி "பகவத் பரிசர்யைக போகைர்நித்யஸித்தை ரநந்தை:" என்னுமளவும் * அமரர்கோன் அர்ச்சிக்கின்ற அங் ககப் பணிசெய்வர் விண்ணோர்களையும், அதற்குமேலே "திவ்யா மலகோமலாவலோகநேந விஶ்வமாஹ்லாதயந்தம்" என்று தொடங்கி * வாருடமருங்குளிர் விழிகளாலே குளிரநோக்கும்படி யையும், * பன்னிலாமுத்தந்தவழ்கதிர் முறுவல்செய்து * சோதி வாய்திறந்து திவ்யலீலாலாபாம்ருதங்களாலே அகிலஜநங்களை யும் ஆநந்திப்பித்துத் தளிர்ப்பிக்கும்படியையும், "பகவந்தம் யதீஶ்வரேணோஷித மப்தஷஷ்டி:) என்னும்படி அறுபதுஸம்வத்ஸரம் வந்து வாழ்ந்துகொண்டு போருகிறகாலத்திலே,

கூரத்தாழ்வான் ஸ்ரீரங்கபௌரோஹித்யத்தைப் பெற்றுப் புராணம் விண்ணப்பஞ்செய்வாராக ஆனதும், திருவரங்கத் தமுதனார் நம்பெருமாள் சேர்த்தியிலே இயற்பா விண்ணப்பஞ் செய்வாரானதும்.

அநந்தரம், உடையவரும் கூரத்தாழ்வானுக்கு எத்தைச் செய்வோ மென்று விசாரித்து, அமுதனாரகத்திலே மத்யாஹ்நத்தில் உச்சிவெய்யி லிலே தாமொருவருமாக மாதுகரத்துக்கென்று எழுந்தருள; அமுதனா ரும் இதுவென் இப்போதென்று விஸ்மயத்துடனே திருவடிகளிலே சென்று ஸேவித்துக்கேட்க; ஸ்ரீபாஷ்யகாரரும் "உம்முடைய பௌரோ ஹித்யக்காணியை நமக்குத் தரவேணும்" என்ன; அமுதனாரும் மஹா ப்ரஸாதமென்று திருவுள்ளத்தின்படியே ஹிரண்யோதக தாரா பூர்வக மாக ஆழ்வானை யுத்தேஶித்து ஸமர்ப்பித்தார். அன்று தொடங்கி ஆழ் வானைப் பௌரோஹித்யத்துக்குக் கட்டளையிட்டு, நித்யம் பெருமாள் ஸந்நிதியிலே புராணம் விண்ணப்பம் செய்யும்படியாகவும் நியமித்துப், புராண கர்த்தாவான ஸ்ரீபராசர நாமத்தையு மிவர்பேரிலே என்றும் நடந்துபோரும்படி ஏற்றமாகச் செய்தருளினார். அமுதனார்க்கும் * நாரணன்றன் நாமமான திருவந்தாதிகளோடே சேர்த்தியாம்படியாகவும், ராமாநுசன் திருநாமமான நூற்றந்தாதி நடக்கும்படியாகவும், இயற் பாவைச் சேர்த்தியிலே ஸேவிக்கும்படியாயும், கட்டளையிட்டருளினார்.

பின்பு பெரியநம்பியும் ஆழ்வானும் தர்சநத்துக்கு அதிசயத்தைஆபா திக்கைக்காகக் கண்ணுமுயிரு மிழந்தவர்க ளாகையாலே, அவர்களுக் குப் பாதச் சாயையான ப்ரதேசத்திலே எதிருமெதிருமாக இரண்டுநிவே சநமும் அதிசயமாக ப்ரஸாதிக்க, அவர்களும்அதிலே ப்ரவேசித்தார்கள்.

நாராயணம் த்யாநயோகேந த்ருஷ்ட்வா” என்று ப்ராப்ய பக்தி யோகரீதியாலே * பகற்கண்டேன் நாரணனைக்கண்டேனென்று காணும்படியையும், “நித்யதாஸ்யஞ்சயதாவத்ஸ்திதம் அநுஸந்தாய” என்று “அடியேனடைந்தேன்முதல்முன்னமே” என்கிற ஸ்வாபாவிக ஸம்பந்தத்தை அநுஸந்திக்கும்படியையும், “கதாஹம்பகவந்தம் நாராயணம்.....ஸாக்ஷாத்கர வாணிசக்ஷுஷா” என்று “மாண்குறள் கோலப்பிரான் மலர்த்தாமரைப்பாதங்கள் காண்பது என்ஞான்றுகொலோ” என்றும், “பைகொள்பாம்பேறியுறை பரனே! உன்னை, மெய்கொள்ளக் காணவிரும்பும் என்கண்களே”என்றும்சக்ஷுஸ்ஸுக்களாலேப்ரத்யக்ஷஸாக்ஷாத்

உடையவர் எழுபத்துநாலு ஸிம்ஹாஸநாதிபதிகளுக்கும் அழகிய சிங்கரைத் திருவாராதனமாகக் கற்பித்தாரென்பது.

அநந்தரம், * கோவிந்தன் தன்னடியார் * கோவிந்தன் குணம்பாடுவாராய் மங்களாசாசநம் செய்துகொண்டு போரும்படிக்கு இளமண்டியத்தையும் க்ரயமாகக்கொண்டு அகரமாக்கித், தம்முடைய திருவடிகளில் ஸம்பந்த முடைய நம்பி நல்லான், அநந்தாழ்வான், ஈசசம்பாடி ஜீயர் என்கிற ஆசார்ய புருஷர்களுக்கு இளமண்டியத்தில் ரசகண்டமான க்ஷேத்ரங்களும் ப்ரசாதித்துத் திருவீதியில் கட்டுமனைகளும் ப்ரசாதித்து அந்தத் திருமாளிகைக்குத் திருவாராதநமாக, (அழகியான் தானே யரியுருவன் தானே) என்கிற அழகியசிங்கர் திருக்கோலமும் தீர்த்த நாயனாரும் ப்ரஸாதித் தருளினார். இவர் அடியிலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமைசெய்கையா லுண்டான ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயையுடையவ ராகையாலே, அசேஷஜநவத்ஸலனான ஸ்ரீமந் நாராயணனை ப்ரசாதித்தருளினார். (வந்தேவரதராஜே நம நல்லானிதிஸ்மாதம், பாரமைகாந்திஸம்ஸ்காராத் ப்ரக்யாதம் லோகதேசிகம்) என்னக் கடவதிறே. அநந்தரம், இம்மூவர்க்கும் போலே மற்ற எழுபத்தொரு முதலிகளுக்கும் அழகிய சிங்கரையே ப்ரசாதித்தருளினார். அதற்கடி யென்னென்னில் *வளர்ந்த வெங்கோப மடங்கலொன்றாய் விளைந்திடும் சிந்தையராகையாலே ப்ரஸாதித்தருளக்குறையில்லை. அதற்கடி என்னென்னில், * ரஜஸ்தமோ மிஸ்ரமான விபூதியாகையாலே, (வல்லாளன் மன்னுமணிக்குஞ்சி பற்றிவரவீர்த்து) என்றும், (மலைகீழது பிளந்தசிங்கம்) என்றும், இரணியனிலங்குபூணகலம், பொங்குவெங்குருதிப் பொன்மலைபிளந்து பொழிதருமருவியொத்திழிய, வெங்கண்வாளெயிற்றோர்வெள்ளிமாவிலங்கல்விண்ணுறக் கனல்விழித்தெழுந்த, தங்கனே யொக்கவரியுருவானன்) என்றும், (வால் நிறத்தோர் சீயமாய்) என்றும் சுத்த ஸத்வமயமான திவ்யமங்கள விக்ரஹ

காரம் பண்ணும்படியையும், "கதாவா பகவத் பாதாம் புஜத்வயம் சிரஸாஸங்க்ரஹீஷ்யாமி" என்று "திருவல்லவாழ் நகருள் நின்றபிரா, னடிநீறு அடியோங்கொண்டு சூடுவது என்று கொலோ" என்றும், "உலகுபடைத்துண்டவெந்தை அறைகழற்சுடர்ப்பூந்தாமரை சூடுதற்கு அவா" என்றும் சொல்லுகிறபடியே பாதார விந்தங்களைச் சிரோ பூஷணமாகத் தரிக்கும்படியையும், "கதாஹம்பகவத் பாதாம்புஜத்வய பரிசர்யாஶயா" என்றுதொடங்கி "தத்பாதாம்புஜத்வயம்ப்ரவேக்ஷ்யாமி" என்னுமளவாகப் பாதமடைவதன் பாசத்தாலே மற்றவன்பாசங்கள் முற்றவிடும்படியையும், திருவடிக்கீழ்க்குற்றேவல்செய்யும்படியையும், "கதாமாம்பகவாந் அதிசீதலயாஸ்வகீய யாத்ருஶாவ லோக்ய" என்று தொடங்கி மேல் எல்லாவற்றூலும் பக்கம் நோக்கறியாதே * ஆமலங்களாக விழிக்கும்படியையும், * முகப்பேகூவி'! பணிகொள்ளும்படியையும் அநுஸந்தித்துத் * திருவடிக்கீழ்க் குற்

மாகையாலே தமஸ்ஸைத் தலைமடியப்பண்ணி ரஜஸ்ஸை ஆஸநபலத்தாலே கீழ்ப்படுத்திமேல்கொள்ளுமதாகையாலும், ஆஶ்ரிதவிரோதி நிரஸந ஸமர்த்தமாகையாலும், (இவையா) இத்யாதிப்படியே ஆஶ்ரிதர்க்கநுபாவ்யமாயிருக்கையாலும் *வளர்ந்தவெங்கோபமடங்கலொன்ருய்அன்று வாளவுணன், கிளர்ந்தபொன்னுகங் கிழித்தவன் கீர்த்திப்பயி ரெழுந்து, விளைந்திடுஞ் சிந்தை இராமாநுஜனுகையாலும், * மாருயதானவனை வள்ளுகிரால் மார்பிரண்டு கூருகக்கீறிய கோளரியை வேருகவேத்தியிருக்குமவராகையாலும், தம்முடைய உத்தேஶ்ய வஸ்துவாகையாலும் ப்ரஸாதித்தருளக் குறையில்லை. தமக்கும் ஓர்வெண்ணைக்காடும் பிள்ளையாயிற்றுத் திருவாராதநம். ஒரு ஸ்ரீவைஷ்ணவர் சக்ரவர்த்தித்திருமகனைத் திருவாராதநமாகக்கொண்டுவந்து ஸமர்ப்பிக்க, "அந்தோ! தேவையிடாதார் வந்தார்" என்று அவரையும் ஆதரித்தருளி இப்படி நரஸிம்ஹ ராமக்ருஷ்ணர்களையாயிற்று விரும்பியாராதித்துப் போருவது. இப்படி இவர்களெல்லாரையும் ப்ரஸாதித்து ப்ரதிஷ்டிப்பித்துத் தாமுமங்கே விஶேஷாதிஷ்டாநம் செய்தருளித் திருப்பதியிலே விருப்பாகக் கற்பித்த விவர்களுக்கு அவ்வூரருகாயிருக்கிற பெரிய ஏரிகீழே உடையவர்பட்டடை என்று நிரூபகமாம்படியாக க்ஷேத்ரங்களையும் ப்ரஸாதித்து ப்ரஸந்நராக்கினுர்.

ஸ்ரீ உடையவர் முதலியாண்டானுக்கு அருளிச்செய்த பத்துவார்த்தை.

முதலியாண்டான் உடையவர் ஸ்ரீபாதத்திலே தீர்க்க ப்ரணாமமாகத் தண்டன்ஸமர்ப்பித்து நாயன்தே! நாயன்தே!! நமக்குநம்முதலிகளுக்கு

றேவல்செய்யப் பெரியகாதலையுடையராய், அத்தாலே "அடியேனடைந்தேன்" என்னும்படி மாநஸமாகக்கிட்டி,—"தூராதேவ" என்றுதொடங்கி அப்பேரோலக்கத்தைத்தூரக்கண்டு ஸேவிக்கும்படியையும், * அணைவதரவணைமேற் பூம்பாவை யாகம்புணருமவனை * இமையோர்கள் குழாம் தொழுவதுஞ் சூழ்வதுஞ்செய் தொல்லைமாலைக்கண்ணுலேகாணும்படியையும், "உற்றேன் உகந்து பணிசெய்து உனபாதம், பெற்றேன் ஈதே இன்னம் வேண்டுவது எந்தாய்" என்றுமீளவும் பஹுமநோரதங்களைப் பண்ணு நின்றுகொண்டு * வாசலில் வானவர் அநுமதியுடனே உள்ளேபுகும்படியையும்மநோரதித்து, "அடைந்தேன் உன்திருவடியே" என்று அவனைக்கிட்டி, "நாராயணுயநம:" என்று*வழுவிலாவடிமையை அர்த்தித்துத் தத்ஸித்திக்கு "அடியேனுடையாவி யடைக்கலமே" என்று ஆத்மாவை நிவேதிக்க, அவனும் குளிர்விழிகளாலே கரையழியும்படி கடாக்ஷிக்க, 'எதுஎது என்

முண்டான தன்னேற்றம் அருளிச்செய்ய வேண்டுமென்ன; நல்லீர்பிள்ளாய் நாமேசொல்லவேண்டிய அர்த்தத்தை நீரேகேட்டீரென்று மிகவும் ப்ரீதராய் ஸகல ஶாஸ்த்ரங்களாலும் இதிஹாஸ புராணங்களாலும் ஆழ்வார் தெரிந்து பெருக்கி யருளிச்செய்கையாலும், ஆசார்யர்களுடைய உபதேசங்களாலும் இந்தப் பத்துவார்த்தை யர்த்தத்தை முக்யமாகச்சுருக்கி யருளிச்செய்தருளினர்.

முதல்வார்த்தை—நாட்டுக்குந் திருப்பதிகளுக்கும் உண்டான தன்னேற்ற மருளிச்செய்ய வேணுமென்று விண்ணப்பஞ் செய்ய, நாம் நாடு பரிகரித்துப் புகுருவோம், அவர்கள் நாட்டாரோ டியல்பொழிந்து நாரணனை நண்ணியிருப்பார்கள்.

இரண்டாம்வார்த்தை—கோயில்திருமலை பெருமாள்கோயிலுக்கும் மற்றுந் திருப்பதிகளுக்கும் உண்டான தன்னேற்றமருளிச்செய்யவேணுமென்று விண்ணப்பஞ்செய்ய, நாம் தெப்பக்கையரைப்போலே யிருகையும்விட்டோம்; அவர்கள் * விட்டத்தில் (உத்திரத்தில்) இருப்பாரைப்போலே முதலடிக்கே யிருப்பர்கள்.

மூன்றாம்வார்த்தை—ஆழ்வார்களுக்கும் பெரியாழ்வாருக்கும் உண்டான தன்னேற்ற மருளிச்செய்ய வேண்டுமென்ன, நாம் கலக்கங்களும் தேற்றங்களுமாவிருப்போம்; அவர்கள் கலக்கமில்லாதமுனிவராய்ப் பல்லாண்டென்று பாடியிருப்பர்கள்.

நாலாம்வார்த்தை—அந்தரத்துக்கும் கடலுக்கு முண்டான தன்னேற்ற மருளிச்செய்ய வேண்டுமென்ன, நாம் மந்த்ரத்தை மந்த்ரத்தால்

பணி?''என்றுது எல்லாவடிமைகளுஞ்செய்ய ஒருப்பட்டு, “கை களாலாரத் தொழுது தொழுது,” “இரங்கி நீர் தொழுது” என் னும்படி ப்ரஹ்வாஞ்சலிபுடராய் அநுபவியா நின்றுகொண்டு, அத்யந்தம் ப்ரீதியுக்தனுய் ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே * கோவை வாய்துடிப்பமழைக்கண்ணுடன் நிற்கும்படியையும், “ததோப ஹ வதா” என்றுதொடங்கி “அம்ருதஸாகராந்தர் நிமக்நஸர்வாவய வஸ்ஸஸ்மிதமாஸீத” என்றுமீளவும் * தாமரைக்கண்களாலே அவ லோகநதாநம் பண்ணும் படியையும் அபேக்ஷித்து, ‘*சோதிச் செவ்வாய்முகுளம்’ அவலோகியா அலராதிருந்தது: இப்போது ஸவிலாஸஸ்மிதத்தாலே அலர்ந்து “ஆநயைநம்” என்று ஆளிட் டழையாதே தானே வாவென்று அழைத்து, “துயரறுசுடரடி” என்றும் “பாதபங்கயமே தலைக்கணியாய்” என்றும் சொல்லும் படியான *கமலமன்ன குரைகழல்களைத்“தலைசேர்த்து” “தன் தா ளிணைக்கீழ்ச்சேர்த்து” என்னும்படியேபாதோபதாநம்போலே சேர்த்தருளவேண்டும், * மாயன்கோல மலரடிக்கீழ்ச் சுழிபட்

மறவாதென்றும் வாழ்தியேல் வாழலா மடநெஞ்சமே யென்றும் அந்தி தொழும் சொல்லாநிற்போம்; அவர்கள் அந்தி யாலாம் பய னங்கனன் றிக்கே மந்த்ரத்தையே சிந்தியா நிற்பர்கள்.

அஞ்சாம்வார்த்தை—அணுவுக்கும் மேருவுக்கும் உண்டான தன் னேற்ற மருளிச்செய்ய வேண்டுமென்ன, நாம் வேதமாகிய கரும்பைக் கடித்துப் பல்முறித்துக்கொள்வோம்; அவர்கள் தத்ஸாரமாகிற கற்கண்டு கடித்து இன்புற்றிருப்பர்கள்.

ஆறும்வார்த்தை—இரத்நத்துக்கும் பாஷாணத்துக்கும் உண்டான தன்னேற்ற மருளிச்செய்யவேண்டுமென்ன, நாம்ஸம்ஸாரமாகிற பெருங் காற்றிலுல் அடிப்பட்டு மாலிந்யமாகிற அஜ்ஞாநத்தில் அழுந்திக்கிடப் போம்; அவர்கள்மோகமும் க்லேசமும் பயமும் க்ரோதமு-மின்றிக்கே ஆசார்யன் திருவடிகளே உபாயோபேயமென் றிருப்பார்கள்.

ஏழாம்வார்த்தை—மண்ணுக்கும் விண்ணுக்கும் உண்டான தன் னேற்ற மருளிச்செய்ய வேண்டுமென்ன, நாம் ''மண்ணு ளென்னைப் பெற்று லென்செய்யா மற்றுநீயும்விட்டால்'' என்றும், பல நீ காட்டிப் படுப்பாயோ வின்னங் கெடுப்பாயோ வென்றும், பரதவியா நிற்போம், அவர்கள் இங்கே திரிந்தேற் கெழுகுற்றம் வானுயரின்ப மெய்திலென் நரகமெய்திலென் என்னைநடும் என்று சேற்றிலழுந்திய நாற்றுப்போலே அவன் செய்கிறபடியே செய்து கொள்ளக் கடவமென்று தேறியிருப் பார்கள்.

டோடுஞ் சுடர்ச்சோதி வெள்ளமான அமுதவெள்ளத்து * இன்பத்திருவெள்ளத்திலே "சூழ்ந்ததனிற்பெரியஎன்அவா" என்னும்படி அவகாஹித்து, இங்கே ஸம்ஸாரிகர்சிதமான மாத்ரங்களாலே தாபத்ரயங்கள் போலன்றிக்கே, அங்கே நிரதிசய ஸுகத்தை அநுபவிக்கவேண்டும் என்று ஸ்ரீவைகுண்ட கத்யத்திலே அர்த்தியா நின்றுகொண்டு; பரமபக்தி தலையெடுத்துப் பெரிய அபிநிவேசத்துடனே பெரியபெருமாள் ஸந்நிதியிலே எழுந்தருளிப் பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாக முன்னிட்டுக்கொண்டு பெரிய கத்யமான சரணாகதி கத்யத்தைப் பெரிய ஆற்றாமையோடே திருவுள்ளத்திலேபடும்படி விண்ணப்பஞ்செய்து சரணம்புக்கு, அநந்தரம் ஸ்ரீரங்ககத்யத்தையும்விண்ணப்பஞ்செய்து அத்தலையி லுண்டான ஸர்வ சக்தித்வாதி கல்யாணகுணங்களையும் தம்முடைய அஜ்ஞாநாசக்தி முதலான அஸத்குணங்களையும் ஆவிஷ்கரித்து, ஆகிஞ்சந்யத்தையும் அறிவியா நின்றுகொண்டு சரணம்புக்கு அத்யார்த்தராய் நிற்கப், பெரிய பெருமாளும் இவரபிப்ராயமறிந்து உமக்கு வேண்டியதென்? என்று வினவியருள,

---

எட்டாம்வார்த்தை—இரவுக்கும் பகலுக்கும் உண்டான தன்னேற்றம் அருளிச்செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, நாம் வேதமாகிற அந்தகாரத்தில் தடுமாறி நிற்போம்; அவர்கள்பேர்களாயிரமுடைய கைவிளக்கைப்பிடித்துக்கொண்டு மாதவனென்னும்பெருவழியே நடவா நிற்பர்கள்.

ஒன்பதாம்வார்த்தை—ஸமுத்ரத்துக்கும் உப்புக்கழிக்கும்உண்டான தன்னேற்றமருளிச்செய்யவேண்டுமென்ன, நாம்ஸாவித்ரி காயத்ரி குந்திகுல கோத்ர ஸூத்ரமென்றிருப்போம்; அவர்கள் ஜ்ஞாநாநுஷ்டானங்களே ஸாவித்ரி காயத்ரி குந்திகுலகோத்ர ஸூத்ரமென் றிருப்பார்கள்.

பத்தாம்வார்த்தை—பதிவ்ரதைக்கும் பரநாரிக்கும் உண்டான தன்னேற்ற மருளிச்செய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, நாம் அக்நிஷ்டோமாதிகளுக்கும் இந்த்ராதிகளுக்கும் சேஷமாயிருப்போம்; அவர்கள் ஆசார்யனுக்கே சேஷமாயிருப்பார்கள்.

இவர்கள் ஆதிக்யத்துக்கு எல்லைநிலம் எங்ஙனேயென்னில், சக்ரவர்த்தித்திருமகனார் ஜடாயு மஹாராஜரிடத்திலும், திருவேங்கடமுடையான் குறும்பறுத்த நம்பியிடத்திலும், பேரருளாளர் திருக்கச்சி நம்பியிடத்திலும், பெரியநம்பி மாறனேறி நம்பியிடத்திலும், நம்பெருமாள் திருப்பாணாழ்வா னிடத்திலும் காணலாம்.

உடையவரும் ஸம்ஸாரத்தி லருசி பிறந்து "ஸதாயுகஃ புருஷஃ" என்றும் "பிராயம் நூறென்றும்" சொல்லப்பட்டவயஃ பரிணம காலாதி க்ரமணம் பிறந்ததென்று விண்ணப்பஞ் செய்யப் பெரு மாளும் காலத்துக்கு நாமன்றோ கடவோம்? இன்னம் சிறிது கால மும்மைக்கொண் டிவ்வுலகத்தைத் திருத்துவதாகப் பார்த் தோம்; அறப்பதறினீரென்று திருவுள்ளமடையக்கலக்கப்பட்டு, இனி உமக்குச் செய்யவேண்டுவ தென்னென்று கேட்டருள, அதற்கு உடையவரும்சடக்கெனத் தேவர்திருவடிகளிலே சேர்த் துக்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய; பெருமாளு மிற்றைக்கேழாநாள் அப்படியே செய்யக்கடவோம் என்று திரு வுள்ளம்பற்றியருள; உடையவருமென்னுடைய சம்பந்த சம்பந் திகளெல்லாரும் நான்பெற்றலோகம்பெறவேண்டுமென்று விண் ணப்பஞ்செய்ய; பெருமாளுமப்படியே பெறக்கடவர்களென்று திருவுள்ளமாய்த்திருவாய்மலர்ந்தருளி உடையவருக்குத்தீர்த்தம் திருமாலை திருப்பரியட்டம் பூவார்கழல்கள் ப்ரசாதம் ப்ரசாதி த்து விடைகொடுத்தருளினர். உடையவரு மப்போதே விடை கொண்டுபோய், முதலிகளெல்லாரையுமழைப்பித்தருளி, மூன்று நாள் ஒருகாலுமருளிச்செய்யாத வர்த்த விசேஷங்களை எல்லா மருளிச்செய்தருள, இத்தைக்கேட்டு முதலிக ளெல்லாரு மதி சங்கைபண்ணி, இதென்னென்று விண்ணப்பஞ்செய்ய; உடைய வரும் இனிஒளிக்க ஒண்ணாது என்று திருவுள்ளம்பற்றி இற்றை க்கு நாலாநாள் பெரிய பெருமாள் திருவடிகளேறப்போக நினை

உடையவர்தம திருவாராதநமான பேரருளாளரைத் திருவடி விளக்கியருளி அழகியமணவாளன் மங்களாசாஸநஞ் செய்ய ஸந்நிதிக்கெழுந்தருளியது.

தம்முடைய திருவாராதநமான பேரருளாளன் திருமுன்பே எழுந் தருளிக், குருபரம்பராபூர்வகமாகத், திருமந்த்ரத்தையும் சரணகதியையும் அர்த்தஸஹிதமாகஅநுஸந்தாநத்தாலேநிர்ப்பரராய்த், தமக்குஸாதநத்தில் (அந்வயமில்லாமையாலே தத்கைங்கர்யரூபஸமாராதநத்திலேதத்பரராய், தூநீர்வ ண்ணமாமலர்கொண்டு விரையேந்தி)என் று சொல்லுகிறபடியே ஸமாராதநோபகரணங்களையும்ஸம்பந்நமாக்கித், தத்பூர்வபாவியாகமாநஸ திருவாராதநமுஞ் செய்தருளி, அநந்தரம் தாம் செய்தருளின நித்திய திருவாராதனக் கட்டளையிலே திருவாராதனம் செய்தருளிப் பலாதி வஸ்துக்களையும்நிவேதித்தருளி, மந்த்ரபுஷ்பம்ஸமர்ப்பித்து ஸாஷ்டாங்க தீர்க்கப்ரணமம்பண்ணி, * வேதாந்தவிஜ்ஞாநஸுநிஶ்சிதார்த்தரானதாம்

வாய் நின்றோமென் றருளிச்செய்தருள; இதைக்கேட்டு முதலிகளெல்லாரும் உடையவர் வியோகத்திலே ஆத்மத்யாகம்பண்ணக் கடவோமென்று தேறி இருந்தமையைத் திருவுள்ளம்பற்றி யருளி, உடையவரும் வாரீர்கோள் முதலிகாள்! நம்முடைய வியோகத்தில் ஆத்மத்யாகம் பண்ணினாருண்டாகில் பெரிய நம்பி, ஆளவந்தார் ஸ்ரீபாதமே நம்மோடு அவர்களுக் கந்வயமில்லையாய், நித்யஸூரிகள் திரளிலும் புகிறப்பெறாதே, நம்சடகோபர்திருவுள்ளத்தையு மறுத்தவர்களாய் அதஃபதிக்கக்கடவர்களென் றருளிச்செய்ய; முதலிகளுமித்தைக்கேட்டுப் போர விஷண்ணராய் இனி அடியோங்களுக்குச்செய்யவடுப்பது என்னென்று விண்ணப்பஞ்செய்ய; உடையவரும் பட்டினிபுகுதல் பட்டினிவிடுதல் செய்யுமத்தனையோவென்று அருளிச்செய்து அவர்களைத்தேற்றித்தரிக்கப் பண்ணினார்.

அநந்தரம் "அத்யைவாஹங்க மிஷ்யாமி லக்ஷ்மணேந கதாங் கதிம்" என்கிறபடியே தாமும் ஆழ்வான் வழியே பின் சென்று "இத்தம் ப்ராப்தே ஸபதி பரமவ்யோமஸிஷ்டாக்ர கண்யே கூராதீஶே ஹிம மகிரவ்யா க்ரியாலம் படத்வம்-ஸிஷ்யஸ்தோமாந்ஸ்ருதி குருமுகேரங்கிகார்யேண ஸாகம் விந்யஸ்யோச்சை꞉ பரமகமதாரோடு மைச்சத்யதீந்த்ர꞉", "காஸாராதி மதிவ்ய ஸூரிக்ருதிஸத்ஸோபாந பத்தாம்த்வய - ஸ்ரீமந்த்ரோ

ஸிஷ்யர்களுக்குப் பாஷ்யபாடத்தறுவாய்தொடங்கி ப்ராவஸித்து, சீக்ரமாக சேஷசாயியான பெரிய பெருமாளை ஸேவிப்பதாக ஸிஷ்யப்ரஸிஷ்யர்களுடனேபுறப்பட்டருளி, ஸ்ரீரங்கநாச்சியாரை ஸேவித்துநிற்க, காருண்யரூபையான பெரியபிராட்டியாரும் விசேஷகடாக்ஷம், பண்ணியருளித் தீர்த்தம் திருமாலைமுதலானவரிசைகளையும்ப்ரஸாதித்து ஸத்கரித்தருள, (ஸீதாமாஸ்ரித்யதேஜஸ்வீ) என்னும்படி அத்யுஜ்ஜ்வலராய்ப் புறப்பட்டு ஆழ்வார்கள் பதின்மரையும் அப்படியே பணிந்து, பரமபதநாதனையும் ஸேவித்து, ப்ரதக்ஷிணமாக எழுந்தருளித், திருமங்கையாழ்வார் திருப்பணிகளாயுள்ளகோபுரம், திருமதிள், திருக்கொட்டாரம் தொடக்கமானவற்றையும் கடாக்ஷியாநின்றுகொண்டு, * அணியரங்கன் திருமுற்றத்தில் சென்று ஸ்ரீபலிபீடத்தருகே தெண்டன்ஸமர்ப்பித்து, உள்ளே யெழுந்தருளிக்,கோயிலாழ்வாரைவலம்செய்து, ஸேனைமுதலியாரையும்ஸேவித்து அநந்தரம்ஸந்நிதியிலே அழகியமணவாளன் திருமண்டபத்திலேசென்று, பெரியதிருவடியைமுன்னிட்டுக்கொண்டு, பெரியபெருமாள்திருவடிகளை ஸேவித்து, ஸ்ரீமத் பாதாரவிந்த பரிஸாத்திலேநின்று ஆபாதசூடம் அநு

பயபார்ஶ்வ தண்டகடிதாம் ஸ்ரீபாஷ்ய கிலஸ்திராம் - நிஶ்ரே ணிம்நிகிலோஜநஸ்ய பரமவ்யோமஸ்தலீ ப்ராபிகாம் ஸ்வஸ்வா சார்யநிரூபிதார்த்தவஶதஃப்ராப்யாதிரோஹேத்ஸதா", "இத்யா ஶாஸ்யஸரஶஶடாந்தக முகஸ்ரீ திவ்யஸூரியாக்ருதீ ராசார்யஸ்ய சதத்ப்ரபந்த நிவஹைஹஸ் ஸார்த்தம் ப்ரதிஷ்டாப்யச-ஸ்ரீரங்காதி மதாமஸௌஸ்வயம பூச்ச்ரீதிவ்யஸூரி வ்ரஜைஸ்ஸா கந்தத்பரமம் பதம்ஜிமமிஷௌஶ் ஸ்ரீமாந்ஸராமாநுஜஃ'' என்கிறபடியே இங்குச் செய்யவேண்டுங் கார்யங்களெல்லாம் செய்து தலைக்கட்டி க்ருத க்ருத்யராய் நாலாநாள் அங்கே திருநாட்டேற வெழுந்தருளத் திரு வுள்ளமா யிருக்க,

அவ்வளவிலே பெரியபெருமாளைத் திருவாராதநம்பண்ணிப் போரும் ஸ்ரீரங்கராஜபட்டர் பெரிய பெருமாள்பட்டர் முதலா னோர் பெரியபெருமாள் ✻ உடுத்துக்களைந்த பீதகவாடை ✻ சூடிக் களைந்த திவ்யமால்யப்படி சாத்துப்படிகள் அவர் ப்ரஸாதம் தொடக்கமான ப்ரஸாத விஶேஷங்களையும் போரத்தளிகையிலே எடுப்பித்துக் கொண்டு ஸர்வவாத்ய கோஷத்துடன் கொண்டு வந்து ப்ரஸாதித்தவற்றைச் சிரஸாதரித்து ஸேவித்து ஸ்வீக ரித்த அநந்தரம் அவர்களுக்கு உகப்பானபாஞ்சராத்ரஸம்ஹிதை களில் ஜ்ஞாந காண்டங்களை அநுஸந்தித்து ஸேவித்துக்கொண் டிருந்து ஏவம்விதமான தூர்யகோஷத்தைக்கேட்டு ஹ்ருஷ்டராய்

பவித்து, அமலனாதிபிரான் ✻ திருப்பள்ளியெழுச்சி ✻ திருமாலை தொடக்க மானப்ரபந்தங்களை அநுஸந்தித்துக்கொண்டு நிற்கிற வளவிலே, பெரிய பெருமாளும், தீர்த்தம், திருமாலை, பரியட்டம், சடகோபன் முதலான வரிசைகளையும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருளித் தம்முடைய செங் கோலையும் அங்குலீயத்தையும் ப்ரஸாதித்து ஸேநாதிபத்யத்திலே நியோ கித்தருள;

நம்பெருமாளுக்கு ஸகல கைங்கர்யங்களும் காலகாலங்களிலே
நடக்கும்படி பத்துக்கொத்திலுள்ளார்க்கும் முன்
கட்டளையிட்டபடி நடப்பித்தருளியது.

உடையவரும் ரங்காதிராஜருடைய ஸ்ரீகார்ய துரந்தரரான ஏற்றந் தோற்ற உள்ளிலும் புறப்பட்டருளிப் பெரியதிருமண்டபத்திலே பெரிய மதிப்புடனே எழுந்தருளியிருந்து, ஸ்ரீமத் ஸ்ரீரங்கராஜருடைய ஸ்ரீமச் சாஸநத்தின்படியே பெரியகோயில் கைங்கர்யம் பண்ணிப் போருகிற கோவணர்க்குடவர், பட்டர்கள், ஸ்வாமிக்கு உடைவாளும் சட்டையும்

வைகுண்ட நிர்யாணநிரதராய், அதற்கு ப்ரயாண பாதேயமான
த்வயத்தை ஆவ்ருத்திபண்ணுநிற்கிறவர் தடஸ்தரைக் கடாக்ஷித்
தருளித் தாம்ரஸ்தமான கூடஸ்த ஸ்ரீஸூக்தியையும் ஸ்ரீபாஷ்ய
த்தையும் க்ஷேமமான நிக்ஷேபமாக ஸ்தாபிக்கும்படி ஆஜ்ஞாபி
த்து, ஸ்ரீபாஷ்யத்தைவர்த்தித்து நடத்திக்கொண்டு போரும்படி
நடாதூராழ்வானைக் கடாக்ஷித்து, அவர்க்கு "ஸத்குர்வதா ஸம்
ஸதி சிஷ்யவர்க்கா நநந்யலப்யைரதிகைப்ஸசிஹ்நை:-ஸ்ரீபாஷ்ய
ஸிம்ஹாஸந மாத்மகீயம் யஸ்மைசதத் தம்யதி ப்ஸகரேண"
என்னும்படி ஸ்ரீபாஷ்யஸிம்ஹாசநத்தைப்ரஸாதித்து, அநந்தரம்
முந்தறப்ரஸாதித்த வேதாந்தாசார்யபதத்திற்குமேல் "கிந்துப்ர
பத்தி பலதாரிதவிஷ்ணுமாய மத்வம்ப்ய ராஜகுல" என்னும்படி
யானராஜகுலமஹாத்ம்யத்தையுடையராகையாலே ப்ரபத்யர்த்த
ப்ரதிபாதகமாய்ப்ரமாணசரமமான ஸ்ரீஸூக்திஸிம்ஹாசநத்தை
யும்அந்தப்பெரியபரிஷத்திலேபெரியபட்டர்க்குஇட்டருளிக், கந்
தாடையாண்டானைக்கடாக்ஷித்துப்ரமாத்ருசரமமானதம்முடை
யசரமவிக்ரஹகைங்கர்யத்தைக்கற்பித்தருளித் திருக்குருகைப்பி
ரான்பிள்ளான்முதலானமுதலிகளைப்பார்த்துப் 'பட்டர்க்குஇஷ்
டமாயிருங்கோள்'என்றுஅருளிச்செய்து, கோயிலனைத்துக்கொ
த்தையும் அழைப்பித்து அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டு
வேண்டிக் கொள்ள, அவர்களும் 'தேவரீருக்கு ஒரு அபராத
முண்டோ? *உலகங்கட்கெல்லாம் ஒருயிரானதேவரீரை இழந்து
எடுக்கும் * தோதவத்தித் தூய்மறையோருள்ளிட்டார், நம் மிராமாநுச
முடையாரென்று அபிமானிக்கும்படியான நாநாதேசத்தில் ஸ்ரீவைஷ்ண
வர்கள், பண்ணிலே பாடுவாரான விண்ணப்பம்செய்வார், தழையிடுவார்,
பெருமாளுக்குத் திருமஞ்சநமுமெடுத்துத் திருமாலையும் கட்டுவார், திரு
வாசல்காக்கும் ஆரியர்கள், பெருமாளுக்குத் திருவடிப்பந்தம் பிடித்துத்,
திருத்தோப்பு செய்யும் ஸ்ரீபுண்டரீகருள்ளிட்ட பத்துக்கொத்திலுள்ளா
ரும், ஆசாரவ்ர்த்தங்கள் குறைவின்றியே பெருமாளுக்குக் கைங்கர்யமாக
நிவேதித்த கார்யத்துக்கு நல்லருமாய், நம் சடகோபன், கலியனுள்ளிட்
டார் ப்ரபந்தங்களிலே பரிசீலநமுடையாரையும் மிகவும் க்ர்பைபண்ணிக்
கொண்டு கீழுக்தரானவர்களை அந்தந்தஸ்ரீகார்யங்களிலேநியோகித்தருளி
அவர்களுக்குண்டான பணப்ரஸாதங்களும் நடக்கும்படி கட்டளை யிட்ட
ருளிப், பலவிதமான தொழிலாளிகளை ஏற்படுத்தினர்.

எவ்விதமெனில்;—ஸ்ரீகார்யத்துக்குப் பரிவரான திருவேளைக்காரர்,
திருப்படைவீட்டுக்குக் கடைக்காவலாகவிருக்கும்படி காப்பார், திருவீதி
தோறும் ஆராய்ந்துபோரும் தலையாரிகள், திருவீதிசெப்பனிடுவார், திரு

எங்ஙனே தரிப்போம்?' என்று * கண்பனிசோரநிற்க, உடையவரும் * அன்போடு தென்திசைநோக்கிப் பள்ளிகொள்ளும் அணியரங்கனிருக்க, உங்களுக்கு ஒரு தாழ்வுமில்லை; பெரிய பெருமாள் ஸ்ரீகார்யம் ஆராயுமிடத்துப் பட்டரை முன்னிட்டு ஆராய்ந்து போருங்கள்; நம்பெருமாள் கைங்கர்யத்தைக் குறைவற நடத்திக்கொண்டு ஸ்ரீவைஷ்ணவர்களையும் வரவழைத்துக் கொண்டு போருங்கோள்' என்று கற்பித்தருளி, அவர்களைப் பட்டர் திருக்கையிலே காட்டிக் கொடுத்தருளிப், பட்டரைப் பார்த்தருளி 'உமக்குத் * தந்தையும் தாயுமாவாராய் ப்ரமேய சரமமான பெரியபெருமாள் திருவாராதநத்தைப் பெருக்க நடத்திக்கொண்டு, நம்முடைய தர்சநத்தையும் நன்றாய்ப் பராமர்சித்து நடத்திக்கொண்டுபோரும்' என்று நியமித்தருளினார்.

அநந்தரம் ஸமூகத்திலுண்டான ஸ்ரீ வைஷ்ணவர்களைப் பார்த்துப் பின்னையும் அவர்களுக்கு அருளிச்செய்தபடி;— ஒருவன் ப்ரபன்னனானால் அவனுடைய ஆத்மயாத்ரை ஈச்வராதீனமாகையாலே, அதற்குக் கரையவேண்டா; கரைந்தானாகில் ஆத்மசமர்ப்பணம் பொய்யாமித்தனை. இனியிவனுடைய தேஹயாத்ரை கர்மாதீன மாகையாலே. அதற்குங் கரையவேண்டா; கரைந்தானாகில் நாஸ்திகனுமித்தனை; ஆகையாலே உபயயாத்ரையிலுமிவனுக் கந்வயமில்லை என்றருளிச்செய்ய, முதலிகளும் ஆகிலெங்களுக்கு இருக்கும் நாளைக்குக் காலக்ஷேபமிருக்கும்படி எங்ஙனே என்ன; உடையவரும் முதலிகளைப் பார்த்து, உபாயம்

மஞ்சநவழி திருத்துவார், திருக்காவேரிகரைகார்ப்பார், சுற்றுக்கோயில் செப்பனிடுவார், பெரியகோயிலுக்குப் பலதொழிலான ஊழியம்செய்து போருவார், ஸுவர்ண ரஜத தாம்ர்காம்ஸ்ய அயஸ்காரர், கடபடாதி நிர்மாணகரான குலாலாதிகள் (குயவர்முதலானோர்) ரதகோபுராதி நிர்மாண கரான தச்சர், மண்டபாலய ப்ராகாராதிகளுக்கு உடலான பாஷாண (கல்) தச்சர், மற்றும் தததநுகுணமான நிமந்தத் தொழிற்காரர், ப்ரதிமாதி நிர்மாண பேதகரானகரானதச்சர், சித்ரக்காரர், ரதமண்டபாலங் காரங்களுக்கு உசிதமாகத் தததநுகுண வஸ்த்ரங்களைப் பலவித சித்ரமாக் குகைக்குத்துன்னர் (தையற்காரர்), விஸ்த்ராஞ்சகர், நாட்யம் பழக்குகிற நாட்யவர், நாட்யத்துக்கநுகுணமான நாரிகள், பலசரக்குகள் கோயிலுக் குக்கொண்டுவந்து சேர்க்கும் செட்டி வ்யாபாரிகள் கோயிலுக்குப் பால முது நெய்யமுதுக்குடலாக மாட்டுத் திறமாராய்ந்து போரும் கோபாலர் முதலானோரையும் அந்தந்த கைங்கர்யங்களிலே நியோகித்து அவர்கள் பெறும் பேற்றுக்கான கணக்கரையும் விசாரித்து,

ஶத்திலந்வயியாதே ப்ராப்யமான பகவத் பாகவதகைங்கர்யத் திலேஅந்வயியுங்கோள். பகவத்கைங்கர்யமாவது:—ஸ்ரீபாஷ்யத் தை யதிகரித்து ப்ரவிர்த்தித்தல்; அதுவு மாட்டாளுகில், ஆழ் வார்க ளருளிச்செயல்களை அதிகரித்து ப்ரவிர்த்தித்தல்; அதுவு மாட்டாளுகில், உகந்தருளின திவ்யதேசங்களிலே அமுதுபடி சாத்துப்படி திருமாலை திருவிளக்கு முதலானவற்றை யுண்டாக் குதல்; அதுவுமாட்டாளுகில், திருநாராயணபுரத்தே ஒருகூரை கட்டி நித்யவாசம்பண்ணுதல்; அதுவுமாட்டாளுகில்,த்வயத்தில் அர்த்தானுசந்தானம் பண்ணிப்போருதல்; அதுவு மாட்டா ளுகில், என்னுடையவனென் றபிமானித் திருப்பானொரு ஜ்ஞா னதிகாரியி னபிமானத்திலே யொதுங்கி வர்த்தித்தல்; இப்படி வர்த்திக்கு மதிகாரிகளுக்கு முன்னடிபார்த்து வர்த்திக்க வேண் டுவன மூன்றுவிஷயமுண்டு; அவையாவன:—அநுகூலரென்றும் பிரதிகூலரென்றும்அநுபயரென்றும் த்ரிவிதமாயிருக்கும். இதில் அநுகூலராவார் ஸ்ரீவைஷ்ணவர்கள்; ப்ரதிகூலராவார் பகவத் வேஷிகள்;அநுபயராவார் ஸம்ஸாரிகள். அநுகூலரைக்கண்டால் சந்தனகுஸும தாம்பூலாதிகளைக் கண்டாற்போலேயும், நிலாத் தென்றல்களைக் கண்டாற்போலேயும், அபிமத விஷயத்தைக் கண்டாற்போலேயும் உகந்துபோரக்கடவன். பிரதிகூலரைக் கண்டால் சர்ப்பாக்னிகளைக் கண்டாற்போலே வெருவிவர்த்திக் கக்கடவன். அநுபயரைக் கண்டால் காஷ்டலோஷ்டாதிகளைக்

அநந்தரம் சோழநாட்டில் வடகரை, தென்கரை ஈழைமாகாணம், மேலை மாகாணம் திருவிடை யாட்டங்களிலே பொன்னும், நெல்லும் பொலிவுடனே செல்லும் படியையும் கணக்கின்படியே ஆராய்ந்து கணி கரைக்கொண்டு பரிகணிப்பித்துத் தாலபத்ரத்திலே லிகிப்பித்துச, செ ன்றவகைக்குப் பத்துமுறியும் தம்முடைய திருவெழுத்து முன்னுகவே கொடுப்பித்து, அநந்தரம் நாநாதேசத்திலும் வந்திருக்கும் கோதுமை, நெல், உளுந்து, பயறு, எள்முதலான, பலபண்டங்களும், மிளகு, சீரகம் முதலான ஸம்பாரத்ரவயங்களும், அங்குத்தைக்கு அஷ்டதிவஸத்துக் கொருகால் வரும்படி ஆராய்ந்து, கர்ப்பூர கஸ்தூரி காஶ்மீரம்ர்கமதம், ஹீராநீரம், ஏலலவங்க தக்கோல ஹாரித்ரம் முதலானவைகளும் அழை ப்பித்துப் பேழைகளிலே சேர்ப்பித்துச், சந்தநபாரத்தை எங்கும் நிரப்பி (முத்தும் மணியும் வைரமும் நன் பொன்னும் தத்திப்பதித்து) என்னும் படி நாநா ரத்நங்களாலும் விசித்ரமாகச்செய்து போரும் பற்பல திருவா பரணங்களினிடை யாட்ட மாராய்ந்து, என்றும், * பொன் னெத்தவ

கண்டாற்போலே த்ருணீகரித்து வர்த்திக்கக்கடவன். அவர்களநுகூலித்தார்களாகில் ஆத்மஜ்ஞானத்தை யுண்டாக்கி உபதேசிக்கவும்; அநுகூலியார்களாகில் ஐயோவென்று க்ருபைபண்ணிப் போரவும்; இப்படி செய்யவொட்டாதொழிகிறது அர்த்தகாம ப்ராவண்யம்; அர்த்தகாம ப்ராவண்யமடியாக ஸ்ரீவைஷ்ணவர்களை யநாதரிக்குமாகில் ஸார்வ பௌமனுடைய ராஜாவின் புத்ரனை ராஜசந்நிதியிலே பரிபவித்தால் ராஜாவெறுத் திருக்குமாபோலே எம்பெருமான் திருவுள்ளம் மிகவும் வெறுத்திருக்கும். அர்த்தகாம மடியாக ப்ரதிகூலரை யாதரிக்குமாகில் ஸார்வ பௌமனுடைய ராஜாவின் மஹிஷி க்ஷுத்ர பந்துக்கள் பக்கலிலே மடிபிச்சைபுக்கால் ராஜாவுக்கவத்ய மாகையாலே ராஜாவும் வெறுத்திருக்குமாபோலே எம்பெருமானிவனை மிகவும் வெறுத்திருக்கும். அர்த்தகாம மடியாக அநுபயரை யாதரிக்குமாகில், ரத்னத்துக்கும் பலகறைக்கும் வாசியறியாதாப்போலே பிறந்த ஜ்ஞானம் கார்யகரமான தில்லையென்று எம்பெருமான் இவனை அநாதரிக்கும் என்று அருளிச்செய்தருளினர்.

பின்பு எம்பெருமானார் நம்பெருமாள் சந்நிதிக்குப் பட்டரைக் கூட்டிக்கொண்டு எழுந்தருளிப் பெருமாளை ஸேவித்துப், பட்டருக்கு முன்னாகத் தீர்த்தப்ரஸாதங்களை ப்ரஸாதித்துப், பின்பு தாமும் தீர்த்தப்ரஸாதம்பெற்று, முதலிகளைக்குறித்து

ரடை என்னும் படியான வற்றைத் தரிக்கும் வஸ்துவுக்கு, கார்ப்பாஸதந்துக்ருதவஸ்த்ரம், ஊர்ணநாபீதந்துக்ருத வஸ்த்ரம், அதில் நாநாவர்ணமான வஸ்த்ரங்கள் அதில் கௌஸும்பஹேம விரசித வஸ்த்ரம், முக்தாஸந் தர்ப்பஸம் யுக்தமான வஸ்த்ரம் அப்படியேயான குல்லா முதலானவைகளும். இப்படி * வரைச்சந்தநக் குழம்பும் வான்கனலும் பட்டும் விரைப்போலிந்த வெண்மல்லிகையும் நிரைத்து, இனி திருமடைப்பள்ளிக் குடலான நிலாக்குப்பல்போலே யிருக்கிற தண்டுலராசி, ஸுவர்ணம் போலே யிருக்கிற ஸுபௌராசிபநஸாம்ர கதலீநாரி கேளகாரவல்லி கபித்த வ்ருந்தாகாமலகாதி பலபல வ்யஞ்சந ராசிகளையும், ஸர்வபலப்ரத வஸ்துவுக்குண்டாக்கிக் கந்த மூலாதிகளையும் அழைப்பித்துக், கீழ்ச் சொன்னவைகளெல்லாம் சமையும்படி ஆஜ்ஜீர்யங்களான காஷ்ட பாரங்களையும் காலாநுகுணமாக அழைப்பித்து, அவற்றைக் கோஷ்டாகார ப்ரதேசத்திலே ஸர்வதோபமமாகச்சேர்த்து வைத்துப் போகச் சதுராய் நாச்சியார் பரிகரமாய்ப் போருகிற திருவெள்ளறையில் பங்கயச் செல்வி பரிகரமானவர்களையும் கொண்டு, சதுர்விதாந்நமாகச் சமைக்கும்படி கட்டளையிட்டு,

'முன்னுக்குத் தர்ஶநப்ரவர்த்தகராவார் இவர்' என்று பட்டரைக் காட்டியருளி, 'வாரீர்பட்டரே! மேல்நாட்டிலே வேதாந்தியென்று ஒருபெரிய வித்வான் இருக்கிறானென்று கேட்டோம்; நீர் அங்கேறப்போய் அவனை நம்தர்ஶந ப்ரவர்த்தக னும்படி திருத்தும்' என்று அருளிச்செய்து, பட்டரையுங் கூட்டிக்கொண்டு மடமே யெழுந்தருளி, ஸ்ரீபாதத்து முதலிக ளெல்லாரையும் அழைத்து 'நம்முடைய விஶ்லேஷத்தில் அவிவேகம் பண்ணினீர்களாகில் நம்மாணை' என்று ஆஜ்ஞாபித்து, எல்லார் கையாலும் தம்திருவடிகளைத் தொடுவித்துச் சூளுறவுகொண்டு முதலிகளைத் தீர்த்தங்கொண்டு அமுதுசெய்யப்பண்ணிப், பிள்ளைப் பிள்ளையாழ்வான் உக்கலாழ்வான் கோமடத்தாழ்வான் சேட்டலூர்ச் சிறியாழ்வான் வேதாந்தி யாழ்வான் முதலானவர்களைக் கந்தாடை யாண்டான் திருக்கையிலே காட்டிக்கொடுத்தருளியும், எச்சான் அநந்தாழ்வான் தொண்டனூர்நம்பி மருதூர்நம்பி முதலானவர்களை அருளாளப் பெருமா ளெம்பெருமானார் திருக்கையிலே காட்டிக் கொடுத்தருளியும், பட்டர் கணியனூர்ச் சிறியாச்சான் சட்டம்பள்ளிச்சீயர் பெரியாண்டான் சிறியாண்டான் முதலானவர்களை எம்பார் திருக்கையிலே காட்டிக் கொடுத்தருளியும், கிடாம்பியாச்சான் கிடாம்பிப்பெருமாள் எங்களாழ்வான் நடாதூராழ்வான் முதலானவர்களைத் திருக் குருகைப்பிரான் பிள்ளான் திருக்கையிலே காட்டிக்கொடுத்தருளியும், மாருதிப் பெரியாண்டான் மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டான் அரணபுரத்தாழ்வான்

அப்படி சமைத்தவுடனே ஸரஸமாப் படைத்து நீட்டும்படி க்ஷீராஜ்ய சர்க்கராதிகளும், (தூங்குண்பலவின்கனி தொகுவாழையின் கனியோடு மாங்கனி) என்னும்படியான பலத்ரயவர்க்கத்தையும் ஸபலமாம்படி யிடுவித்து, (* அப்பங்கலந்த சிற்றுண்டி) (கன்னலிலட்டுவத்தோடு சீடைகாரெள்ளினுண்டை) * பேர்த்தும் பெரியன அப்பந் தொடக்கமான திருப்பணியாரவர்க்கத்துக்கு உடலாகத்தண்டுலாதியான பலபண்டங்களும், கண்டசர்க்கரை சமையும்படி நெய்யமுதும் விட்டு, இப்படி திருப்பவளத்துக் கினிதானவை சமையும்படியும் ஆராய்ந்து, அநந்தரம் ஶ்ரவண ஸுகமாகவும் த்ருஷ்டிப்ரியமாகவும், (முன்னல் யாழ் பயில்நூல் நரம்பின் முதிர்சுவையே) என்று - காநஸ்வரூபியானவனுக்கு அநுகுணமாக ஶ்ராவ்யமாய், நாநாவிதமான யாழ், குழல், வீணை, கிந்நரி, முகவீணை வாசிப்பாரைக் கட்டளையிட்டு, மண்டபக் கொத்திலுள்ளாரையும் * பல் நடம் பயின்றாடும்படி கட்டளையிட்டு அநந்தரம், காலவிதாயகர் சொன்ன காலங்களுக்கு அநுகுணமாக கைங்கர்யங்களை ஆராய்ந்து, திருப்பணி திருவாராதநச் செலவுபோக நீக்குண்டான தனங்களைக் கருகூலத்திலே சேமிப்பித்து, அவ்விடங்

ஆசூரிப்பெருமாள் முனிப்பெருமாள் அம்மங்கிப் பெருமாள் முதலானவர்களை நடுவிலாழ்வான் திருக்கையிலே காட்டிக்கொடுத்தருளியும், இன்னும் இருந்தவர்களை இருந்தவர்கள் கையிலே காட்டிக்கொடுத்தருளியும்;

பின்பு பட்டரைப் பார்த்தருளிக் 'கூரத்தில் ஆழ்வானையும் கந்தாடை ஆண்டானையும்போலே, கூரகுல திலகரான நீரும் வாதூலகுல திலகரான கந்தாடையாண்டானும் நம்மடியாக வுண்டான ஸௌப்ராத்ரத்தை யுடையராய், "மச்சித்தா மத்கத ப்ராணா: போதயந்த:பரஸ்பரம்" என்னும்படியா யிருங்கோள்' என்று அருளிச்செய்து, ஸ்ரீவைஷ்ணவர்களைப் பார்த்துப் "படித்வா பாஷ்யந் தத்ப்ரவசந மபாக்தௌ பாடீ பேர்கிரிப்ரத்தா வாஸ: ப்ரபுபரிசிதஸ்தாந நிவஹே - ப்ரபோ:கைங்கர்யம் வாப்ர பதநமநோரர்த்தமநநம் ப்ரபந்நாநாம்வாமே பவதுபரிசர்யா பரிசய: - குடீங்க்ருத்வா தஸ்மிந் யதுகிரிதடே நித்யவஸதிஷ்டார்த்தாப ஸீரயஸ்யப்ரபஊநவிதௌஸாதகதமா:" என்கிறபடி முன்சொன்ன ஆறுகைங்கர்யத்தி லந்வயித்துப் போருங்கோள் என்றருளிச்செய்தார்.

களுக்கெல்லாம் தம்முடைய திருவாழி முதலான பலவிலச்சினையும் இடுவித்து அரண்செய்து, அநந்தரம் கருகூலத்திலுண்டான கைவழி, திருவாபரணம், திருப்பரியட்டம் முதலானவற்றை நன்றாகச்சோதித்துப் பரிஹாரமாக வைப்பித்து இன்னுஞ் செய்யவேண்டுவன வனைத்துஞ் செய்தருளி;

மற்றும் கைங்கர்யோபகரணமான சத்ரசாமர தாலவ்ர்ந்த பதக்ரஹ, காளாசிகாதிகளையும், கநகப்ர்ங்காரஸ்வர்ண கடாதிகளையும் படைத்து நீட்டுகிற ஸ்வர்ணரஜத பாத்ரங்களையும் அதின்படியேயான படிகம், குத்துவிளக்கு, திருமுன் வட்டில்கள், ஸ்வர்ணதண்டாதிகளையும் கண்டு களியா நின்றுகொண்டு இப்பால் எழுந்தருளி, ஸ்வர்ணரூபமான ஸுபர்ண நந்தாத்வாதிவாஹநங்களையும் வந்தியா நின்றுகொண்டு இப்பால்இருவருமான சேர்த்திக்கு இனியபேச்சுகள் பேசுகிற சுகசாரிகாதிகளையும் ஆராய்ந்து அவற்றின் இனிய பேச்சுகளையும் கேளாநின்றுகொண்டு, இப்பால் ஆடுவார் பாடுவார் ஸுவர்ணபேர்யாதி வாத்யங்கள் கொட்டுவார், அத்தாலே பண்ணப்பட்ட காஹளாதிகள் ஊதுவாரிருக்கிற கோலாஹலங்களையும் * வெள்ளை விளிசங்கின் பேரரவத்தையும் கேட்டுக்கொண்டு மெள்ளத் திருமடைப்பள்ளியருகே எழுந்தருளித், திருப்பணியாரங்கள் நன்றாகச் சமைக்கும்படியையும் திருப்போனகம் சமைக்கும்படியையும், கறியமுது சமைக்கும்படியையும், அவை ஸஸ்நேஹஸம்பாரபரிதமாக்கிக் கட்டி நீட்டும்படியையும், நியமியா நின்றுகொண்டு, வ்யஞ்சநபண்டாரத்தருகே யெழுந்தருளி, அவற்றின் புஞ்சங்களையும் அவலோ

பின்னையும் உடையவர் அருளிச்செய்த வார்த்தை:—இது சகல வேதங்களிலும் சகலசாஸ்திரங்களிலும் சகலமான ஆழ்வார் திவ்விய ப்ரபந்தங்களிலும் சகலாசார்ய பாசுரங்களிலும் பார்த்தவிடத்தில் ஒரு அதிகாரிக்கு த்வயமொழிய மந்த்ரமில்லை, மிதுநமொழியவஸ்துவில்லை, கைங்கர்யமொழியப் புருஷார்த்தமில்லை, ஆசார்யாபிமான மொழிய மோக்ஷோபாயமில்லை, பாகவதாபசாரமொழிய மோக்ஷவிரோதமில்லையாம். பாகவதாபசாரந்தான் பஹுவிதம். அவற்றுள், ப்ரதமமான அபசாரங்கள் பன்னிரண்டு. அவை எவை என்னில்:—ஜன்மநிரூபணம், சரீரநிரூபணம், பாகநிரூபணம், ஆஶ்ரமநிரூபணம், அவயவநிரூபணம், ஆலஸ்யநிரூபணம், வாசநிரூபணம், பந்துநிரூபணம், ப்ரகாசநிரூபணம், ப்ரகாரநிரூபணம், வர்த்தனநிரூபணம், தோஷநிரூபணமாம். ஜன்ம நிரூபண மாவது (சூத்ரம்வாபகவத் பக்தம் நிஷாதம்ஸ்வபசம்ததா வீக்ஷதேஜாதி சாமான்யே ஸயாதி நரகம்நர:, நசூத்ராபகவத்பக்தா விப்ராபாகவதாஸ்ம்ருதா:, ஸர்வவர்ணே ஷுதேசூத்ரா யோஹ்யபக்தா ஜனார்த்தனேமய: மஸ்யதி சுபாசாரம் வைஷ்ணவம் வீதகல்மஷம், யஸ்மின்

கித்து, மஞ்சுளமானவற்றில் அஞ்சநாபராய், (நெய்ச்சுவைத்தேறல்)என்னும்படியான ஸரஸவஸ்துவுக்குகப்பாகத் தொட்டியிலே நெய்யமுது நிறைத்திருக்கும்படியையும், அவற்றை ஆராய்ந்து உருக்கி அளந்து உள்ளே விடும்படியையும், ஸம்பாரவர்க்கம் திருத்தும்படியையும், கறியமுது திருத்தும்படியையும் ஆராய்ந்து,

அநந்தரம் இப்பால் சுற்றுக்கோயில்களுக்கு அமுதுபடி,பருப்பமுது, கறியமுது, நெய்யமுது, ஸம்பாரவகைகளும், விடிவோறே விட்டபடிகளுமாராய்ந்து, திருக்கொட்டாரத்தருகே எழுந்தருளி அமுதுபடி பருப்பமுதுகள் அளக்கும்படியையும், அவலமுது இடிக்கும்படியையும், அவை பொரியமுதாகப் பொரிக்கும்படியையும் பராமர்சித்து. இப்பால் களஞ்சியங்களினருகே திருவரங்கனுக்குத் தகுதியாகத் திருவரங்கன் என்கிற நெல்லும், ஸ்ரீரங்கராஜர் போகத்தளிகைக்குத் தகுதியான ராஜாந்நநெல்லும் நம்பெருமாளுக்குத் தகுதியான சம்பாநெல்லும், * என்திருமகள் சேர்மார்பனுக்குத் தகுதியான * சீரார் செந்நெல்லும், சேஷசாயிக்குத் தகுதியான *வரம்புற்ற கதிர்ச்செந்நெலான *செஞ்சாலிநெல்லும், மற்றும் பகவத் போக்யமான பஹுவ்ரீஹிவர்க்க சமூஹங்கள், அதுக்குமேலே கோதூம மாஷமுத்கதிலாதிகளான இவை எல்லாம் அளந்து களஞ்சியங்களிலே சொரியும்படி நியமித்து அப்படியே செய்கிற அவற்றின் ஆரவாரமும் கண்டு கேட்பதாய்க்கொண்டு, நாச்சியார்கோயில் தொடக்கமான சுற்றுக்கோயில்கள் திருச்சுற்றுகள் திருவலகு, திருப்பணி, திருவிளக்கு, திருமாலைகள் முதலானவைகளையு மாராய்ந்து,

கஸ்மின்குலே ஜாதம் ப்ரணமேதண்ட வத்புவி, கிம்யத்ராபி ஜாயந்தே யோகினஸ் ஸர்வயோ நிஷு ப்ரத்யக்ஷதாத்ம நாதா ஞம நைஷாஞ் சித்தயலோதிகம்) என்றித்யாதி ப்ரமாணங்களில் சொல்லப்பட் டிருக்கையாலேதான் ஸ்ரீவைஷ்ணவர்களை ஜன்ம நிரூபணம் பண்ணுகை அபசாரம்; சரீரநிரூபணமாவது புருஷ சரீரமென்றும், ஸ்த்ரீசரீரமென்றும், திருவநந்தாழ்வானைப் பாம்பு சரீரமென்றும், ஸ்ரீகருடாழ்வானையும் ஸ்ரீஜடாயுமஹாராஜரையும், பக்ஷிசரீரமென்றும், ஸ்ரீகஜேந்த்ராழ்வானையும், திருவடியையும், சுக்ரீவமஹாராஜரையும், ம்ருகங்களென்றும், ப்ரஹ்லாதாழ்வானையும் ஸ்ரீவிபீஷணாழ்வானையும், மஹாபலியையும்இவர்கள் முதலான பகவத்தாசர்களை ராக்ஷசர்களென்றும், தேவ த்ரியக்கு மநுஷ்ய ஸ்தாவர ரூபங்களான சதுர்விதசரீரங்களில் பகவத்பக்தர்கள் யாதொரு சரீரம் பரிக்ரஹித்திருந்தாலும் இன்னசரீரமென்று சரீரநிரூபணம் செய்கை அபசாரம்; பாக நிரூபணமாவது ஷட்பாவ விகாரமாய்ப் பால்ய யௌவன வ்ருத்தாதி வயோ நிரூபணம் செய்கை யபசாரம்; ஆச்ரம நிரூபண

அநந்தரம், (பாலென்கோ) என்கிற வஸ்துவின் *தித்திக்கும் திருப் பவளச் செவ்வாய்க்கு இனிதாகப் பாலமுது சுரக்கும் திருச்சுரபிகளுக் குப் பாலமுது ரஸிக்கும்படிக்குக் கருப்பஞ்சாற்றை முன்புபோலே பரு குவிக்கும்படி ஆராய்ந்து, அநந்தரம் தளிகைக்குறுப்பாகத் தாய பாரங்களைப் பரித்துக்கொண்டு போரும் எருதுகள் எழுந்தருளும்போது அலங் காராவஹமுமாய் மங்களாவஹமுமான துரங்கமாதங்காதிகளையும், மங்க ளாவஹமுமாய்ப் பாவநமுமாய் அத ஏவ காட்சிக்குறுப்பான கபிலதேநு வையும் ஆராய்ந்து, அவற்றுக் குறுப்பானவைகளையு மாராய்ந்து, கீழ் உக்தரான க்ரியாகாரகராலே நிர்மிதமான நாநாவிதமான க்ரியைகளை யெல்லாம் பரீக்ஷாமுகேநகடாக்ஷியா நின்றுகொண்டு மிகவும் பெரிய திருமண்டபத்திலே எழுந்தருள, அவ்வளவிலே நாழிகைவட்டில் காரர் வந்து ஷோடசகடிகை யாச்சுதென்று விண்ணப்பஞ்செய்ய, இத:பூர்வமான ப்ராத:காலத்திலே, பெரிய பெருமாள் மங்களகீத வாத்யத்துடன் திருப்பள்ளியுணர்ந்த மங்களவஸ்துக்களுங் கண்டருளி *சிற்றஞ்சிறு காலே ஆனைமேல் * பூரண பொற்குடத்திலே அலங்காரத்திருமஞ்சநம் வரப் பாஞ்சராத்ர தந்த்ரஜ்ஞரான அர்ச்சக முகேந சிறுகாலைத் திருவாராதநமும் குறைவறக்கொண்டருளிச் சிறுகாலைச் சந்தியும் நிறைய அமுது செய்தருளி, அநந்தரம் பெரிய திருவாராதநம் தொடங்கிநடக்க, அதுக் குடலாகப் * பேராளன்பேரோதும் பெரியோர், தம்பிரான்மார், பட்ட வர்க்கம், இயலிசைவேத விண்ணப்பம் ஸேவிக்க, எம்பெருமானடியார்

மாவது (ப்ரஹ்மசாரி க்ருஹஸ்தோவா வானப்ரஸ்தயதி) இத்யாதிகளில் ஸ்ரீவைஷ்ணவர்களை இன்ன ஆஶ்ரமத்தவர்களென்று ஆஶ்ரம நிரூபணஞ்செய்கை யபசாரம்; அவயவ நிரூபணமாவது திருமேனியிலே யாதல் அவயவங்களிலே யாதல் வைஷ்ணவர்களுக்கொரு தோஷமுண்டாகிலும் அவர்கள் ஜ்ஞானமே சர்வாவயவபூர்த்தியென்று பாராமலிருக்கை யபசாரம்; ஆலஸ்ய நிரூபணமாவது ப்ரபன்னனானவன் பாகவதர்களுடைய திருமேனி சோஷித்து ஹேயமாயிருக்குமிடத்தில் குத்ஸியாமல் அவர்கள் விக்ரஹமே போக்யமாகப் பாராதிருக்கை அபசாரம்; வாச நிரூபணமாவது கோயில், திருமலை, பெருமாள் கோயில் இவற்றினின்று மெழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்களை யாதரிப்பதைப் போலவே யொரு குப்பத்திலிருந்து மெழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவரை அவரிருந்த ஸ்தலம் திவ்யதேசமென்று உத்தேஸ்ய ப்ரதிபத்தி செய்யாதிருக்கை யபசாரம்; பந்து நிரூபணமாவது தன்னுடைய ப்ரக்ருதி பந்துக்களிலே யொரு ஸ்ரீவைஷ்ணவ னுண்டாகில் தன்னுடைய ஸ்வாமியென்று உத்தேஸ்ய ப்ரதிபத்தி செய்யாதிருக்கை யபசாரம்; ப்ரகாச நிரூபணமாவது ஆசார்யனையும், ஸிம்ஹாசனாதி பதிகளையும், பூஜ்யரானவர்களையும், ப்ரஸித்தமாக ஆசார்ய கைங்கர்ய தாஸ்ய க்ருத்யம் பண்ணுமவர்களையும், உபாய சூன்யரா

களும் நிரைநிரையாகநின்று திருநாமம் ஸேவிக்க, மங்களவாத்யங்கள் எங்கும் முழங்கத், தூபதீபாதியான ஷோடசோபசாரங்களும் நடந்து இப்படி பெருக்கத்துடனே கண்டருளின அநந்தரம்,

கீழ்,தளிகைக்கான அனைத்துவகைகளும் அலங்காரத்துடனே ஆயிரம் வகையாகத்திருமுன்பே நீட்டப்பெரிய திருவந்திக்காப்புக்கொண்டருளின வநந்தரம், மீளவும் உள்ளே தம்பிரான்மார் ஸரஸமாகக் கண்ணிநுண் சிறுத்தாம்பு முதலான பாட்டுகள் ஸேவிக்கத், தளிகை மேற்சிலர் நெய்யமுதுபறிமாறச், சிலர்திருவெண் சாமரம்பரிமாறத்,திருக்குடக்கையார் திருவொற்றுவாடையுடன் கர்ப்பூரத்தண்ணீரமுதுவணக்கத்துடன் அடிக்கடி நீட்ட, இப்படி பெரியமேன்மையோடே பெரியஸந்தியும் அமுதுசெய்தருளித் *திருவரங்கச்செல்வரும்பலிப்ரஸாதிக்க,ஸவர்ணமயமான திவ்யவிமானத்திலே ஏறியருளிச் சதுர்க்கதியுடன் நடந்தருளும்படி ஸாவதானத்துடன் ஸமர்த்தரானவர்கள் ஸ்ரீபாதம்தாங்க, முக்தாதபத்ரம் பிடிக்கச், சஞ்சத்தான சாமரம்பறிமாற, * வெண்துகிற்கொடி * ஆடுபுட்கொடி*குரக்குவெல்கொடி தொடக்கமான அநேகம் கொடிகள்பிடிக்கத் திருமுன் பகல்பந்தம் பிடிக்கப், பலபல இயங்களார்ப்பக், * காளங்கள் வலம்புரிகளான மஹாராஜ சிந்நங்கள் ஆர்ப்ப, அந்த ஆரவாரத்து

யொதுங்கி இருக்குமவர்களையும், ஏகப்ரகாரத்தில் ரக்ஷகரென்றி ராதிருத்த லபசாரம்; ப்ரகார நிரூபணமாவது, திருநந்தவனம் செய்கிற ப்ரபன்னரையும், திருமுற்றம் விளக்குகிற ப்ரபன்னரையும், சாத்துப்படி திருமாலை திருவிளக்கெடுக்கிற ப்ரபன்னரையும் மற்று மித்யாதி பரிசாரகங்கள் செய்கிற ப்ரபன்னரையும், பார்வைக்கொன்றும்செய்யமாட்டாதே வெறுமனே இருக்கும் ப்ரபன்னரையும் ஏக ப்ரகாரத்திலே உத்தேஸ்யரென்று பாராதிருக்கையபசாரம்; வர்த்தனநிரூபணமாவது, ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமேனியாத்ரையாக ப்ரவர்த்திக்கையில் பாங்காயிருந்தாலும் இவ்வகையிலிருக்கிறார்கள் என்று நினைக்கை யபசாரம்; தோஷநிரூபணமாவது,ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமேனியோகமான த்ரிவித கரணங்களிலும் விசேஷஜ்ஞானமிலரென்றும் அநுஷ்டானபரரல்லரென்றும், இத்யாதிதோஷங்களை நிரூபிக்கையபசாரம்; இப்படி ப்ரபன்னன் ஸ்ரீவைஷ்ணவர்களிடமதோஷங்களைப்பார்க்ககடவன் அல்லன்; கண்ணாலேபார்த்து, மனஸாலேநினைத்து, வாக்காலே சொல்லி அம்மாரீசனை கனகம்ருகத்தைக் கொண்டு

டன் புறப்பட்டருளி, * அணியரங்கன் திருமுற்றத்திலே தாளமத்தளத்துக்கநுகுணமாக அபலாங்கனைகளுடையஆடல்பாடலோடே அப்பாலே எழுந்தருளிப் பலிபீடத்திலே பலியும் ப்ரஸாதித்து, இப்பால் உள்ளே மீளப்ரதக்ஷிணமாக எழுந்தருள, அந்தக்ஷணத்திலே அமுதுசெய்தருளின தளிகை வகைகளெல்லாம் ஸ்தலாந்தரத்திலே மாற்றுவித்து, அவற்றில் விசேஷமான அலங்காரத்தளிகை அபூபவர்க்க பாயஸாதிவர்க்கத் தளிகைகளெல்லாம் சேஷாசநருக்கு நீட்டுவித்து, அவர் அமுதுசெய்தருளினவுடனே, தாம் கடைகட்டிவிட்ட தளிகைவகைகள் எல்லாம் கொண்டுவந்து தம்முடைய திருமுன்பேவைக்க. இப்படி வைத்த அஸங்க்யாதமான அபூபாதிவர்க்கங்களையும், சுத்தோதநாதி தளிகைவர்க்கங்களையும்*(நூறுதடாவில்வெண்ணெய்) (நூறுதடாநிறைந்தவக்காரவடிசில்)வைத்த (நெய்யும்காய்ந்தபாலும் வடிதயிரும்நறுவெண்ணெயும்)என்று உத்தமானவைகளெல்லாவற்றையும் திருக்கண் சாத்தி, இவற்றைக் குறியழித்திட்டு வைத்தாலாகாதோ என்று வெறுத்தருளிச் செய்து, பின்பு தீர்த்தமும் ஸ்வீகரித்து,ஆமலகப்ரமாணம்க்ர்பாதத்தமாய்வந்தப்ரஸாதஸ்வீகாரமும்செய்து இவைகளையெல்லாம்ப்ராப்தியடைவேவிநியோகிக்கும்படி விதேயரானவர்களை நியமித்துப், பின்பு பெருமாளைஸேவித்து, அங்குத்தையில் அநுமதியுடனே மடமேயெழுந்தருளப் புறப்பட்டருளக், கோயில் கொத்திலுண்டான அனைவரும் பின்தொடர்ந்துவர அவர்களையும் தத்தத் பரிசர்யைகளிலே ஆஜ்ஞாபித்துநிறுத்தியருளி மடமே எழுந்தருள, அங்கே ஓரொரு

வரப்பகவானை அனுப்பினது அபசாரம்; அதென்னெனில்கந்தர்ப் பகோடிலாவண்யமாய்ப் பஞ்சோபநிஷண்மயமாய், ஹாவுஹாவு என்று திவ்யமங்களவிக்ரஹானுபவம்பண்ணி சப்தாதிவிஷயப்ரா வண்யத்தில் ஒருஸ்வர்ணபாசம்ருகத்தையபேக்ஷித்துப்பெருமா ளைவிட்டபோதே, பரமபாகவதரான இளையபெருமாளைப் பௌ ருஷவாக்யங்கள்சொன்னபோதே ராக்ஷசன்கையில் சிறைபோக நேர்ந்ததல்லவா; வாசகத்தில் செய்த வபசாரத்துக்கு ப்ராயச்சி த்தமில்லையாகையாலே (நக்ஷயாமிகதாசந) என்று அபராதங் கள் பன்னிரண்டுண்டு; இவை ஒவ்வொன்றும் பஹுமுகமாக வந் தேறும்; இவ்வபராதங்களைத் தான் பண்ணுகையுந், தனக்கு உத்தேஸ்யனான வாசார்யன் பண்ணிலும் அவர் நியமாதிக்ரமம் ஏகாந்தத்திலே நியமித்துத் தவிர்ப்பியாதொழிகையும், பரதந் த்ரரானவர்கள் பண்ணுமிடத்தில் முதுகிலே யடித்து விலக்கா தொழிகையும், ஸ்ரீவைஷ்ணவர்களன்யோன்யம் அபராதம் பண் ணுமிடத்தில் அவர்கள் ஸ்ரீபாதத்தைக் கட்டிக்கொண்டு ப்ரா ப்தமானவளவும் நியமித்துத் தவிர்ப்பியா தொழிகையும், அவர் கள் தவிராதவளவில் தான் பகவத்விஷயத்தில் சரணம் புகிரா தொழிகையும், ஸ்ரீவைஷ்ணவர்களேகாந்தத்திலே பண்ணின

ப்ரதேசங்களிலே சப்ததர்க்கம் ஒரு ப்ரதேசத்திலே பூர்வோத்தர மீமாம்ஸைகளை ப்ரதிபக்ஷ நிரஸநத்துக்கு உறுப்பாக அப்யஸிப்பார், மற் றொரு ப்ரதேசத்திலே ஸ்ம்ருதிஇதிஹாஸபுராணங்களாலே வேதத்தில் பூர் வோத்தரபாகங்களில் அர்த்த நிஶ்சயம்பண்ணுவார், வேறொருப்ரதேசத் திலே வேதங்களையும், ததுபநிஷத்துக்களையும் உருச்சொல்லுவார், ஓது விப்பார், ஓதுவார், பின்னையும் ஒருப்ரதேசத்திலேஅருளிச்செயல்களையும் அப்படியேஓதுவார் ஓதுவிப்பாராய்த், தத்தார்த்த நிர்ணயம்பண்ணுவார், தி ருமந்த்ராதி ரஹஸ்யார்த்த நிர்ணயம்பண்ணுவார், ஸ்ரீபாஷ்யசிந்தனைபண் ணுவார், வேறொருப்ரதேசத்தில் அநந்யகதிகளாய் அவருடைய அங்கீகா ரத்தைஅபேக்ஷித்துக்கொண்டிருப்பார், அதுக்குமேல்ஒருப்ரதேசத்திலே ஜிதேந்த்ரியரானஜீயர்களும் அவர்களுடையசிஷ்யரானவர்களும்நெருங்கி ராமானுஜநாமாஞ்சித திவ்யப்ரபந்தாநுஸந்தாநபரராயிருக்கஇப்படிஸ்ரீவை ஷ்ணவஸ்ரீயாலேநிபிடதமாய் அவர்களுடையபஹுவிதமான அநுசந்தாந மஹாகோஷமானது நடந்துசெல்ல, இவற்றையெல்லாம் ஆதரத்துடனே அவலோகியாநின்றுகொண்டு திருச்செவிசாத்தாநின்றுகொண்டு உள்ளே யெழுந்தருளித் திருமஞ்சநச் சாலையிலே ப்ரவேசித்தருளி, ஸ்ரீபாதம்விள க்கிக், கண்டூஷபூர்வகமாகக் சுத்தாசமநம்செய்தருளி, மாத்யாஹ்நிக கர்த் யமும் நடத்தியருளிப், பகவத்ஸந்நிதியிலே எழுந்தருளி இருக்க;

வபராதங்களை ப்ரகாசமாக்குகையும், அபசார க்ஷாபணம் பண்ணினவர்களைப் பாகவதாபசாரம் பண்ணினார்களென்று நினைத்திருக்கையும் அபசாரங்களாம். இவ்வபசாரங்களுக்கெல்லாம் அவஸ்யம் பரிஹார நியமங்களான பன்னிரண்டும் அறியவேணும்; அவையாவன:—

ஆஹாரநியமம், அநாஹாரநியமம், அன்னநியமம், போஜனநியமம், ஸ்நானநியமம், ஸ்வரூபநியமம், உபாயநியமம், உபேயநியமம், வாசநியமம், யோகநியமம், ஆசார்யநியமம் சம்ஸர்க்கநியமம் என்பனவாம். ஆஹாரநியமமாவது:-(ஸூத்ராமபிகந்தவ்யம் யத்ரபாகவதாஸ்திதஃ-யாசேத்பாகவதஸ்யான்னம் தத்தபாவேஜ்ஜலம்பிபேத்) என்கிறபடி பாகவதாந்நமே புஜிக்கை; அநாஹாரநியமமாவது:—பாகவதாலயங்களிலும், திரு நந்தவனங்களிலும், ஸ்வாசாரியன் சஞ்சரிக்கும் ஸ்தலங்களிலும், மற்றும் விலக்ஷணமானஸ்தலங்களிலுந்தவிர மற்றவிடத்திற் புஜியாமை, அந்நநியமமாவது:-ப்ராக்ருதரிடத்தில்தன்னைக்கீழ்ப்படுத்தி ஆர்ஜியாமலும் அமுதுபடி சாத்துப்படி ஸ்ரீகார்யம் முதலானவற்றுக்கு அர்ஹமான த்ரவ்யங்களுக்குக் கர்த்தனை யார்ஜியாமலும், அநுகூலரை நெருக்கி ஆர்ஜியாமலும், ஸ்வக்ஷேத்திரத்தில் ஸ்வசரீரத்தில் க்ரிஷிபண்ணியாதல், அநுகூலருடைய ஸ்நேஹத்தில் வந்த திரவ்ய

கீழுக்தரான பகவத்பாகவதர்கள் எல்லாம் ஸங்கம்ஸங்கமாகவந்துதத்சரணாரவிந்தங்களிலே ஸாஷ்டாங்கதீர்க்கப்ரணாமம்பண்ண, அவர்களைக் கருணாகடாக்ஷத்தாலே ரக்ஷித்தருளித், திவ்யஸூக்தி அம்ர்தங்களாலும் ஸந்துஷ்டராக்கியருள, அவ்வளவிலே பகவத்ஸம்பந்தத்தைஅபேக்ஷித்துக் கொண்டு ஆஸ்திகராயிருப்பார் அநேகர் திருவடிகளிலே ஆஸ்ரயிப்பதாக (வந்துசூழ்ந்து படுகாடுகிடப்ப) என்கிறபடியே ஸேவித்துக்கொண்டு கிடக்க அவர்களையும்அப்படியேதிருக்கைஸ்பர்சம்தொடக்கமானபஞ்சஸம்ஸ்காரங்களையும்செய்தருளிப், பரிசுத்தராக்கித்திருவடிகளோடட்டை ஸம்பந்தத்தாலே ஸம்ஸாராதுத்தீர்ணராம்படி அபிமாநித்து, அநந்தரம் ஸந்நிதியிலே எழுந்தருளி ஸாஷ்டாங்கதீர்க்கப்ரணாமாதிகளைப்பண்ணித், திருவாராதநக்குறைகள் எல்லாம்தாமிட்டருளின நித்தியத்தின்படியே நிறைவேற்றிப் பேரருளாளப்பெருமாள்பெருக்க அமுதுசெய்தருளின தளிகை மாற்றின அநந்தரம். கைங்கர்ய சேஷத்தையும் மந்த்ரபுஷ்ப ஸமர்ப்பண பர்யந்தமாகப்பூரித்து அநந்தரம்சையாஸநத்துக்குறுப்பாக ஶ்ராவ்யமான ஸ்தோத்ரங்களையும் அநுஸந்தித்துத் தண்டன் சமர்ப்பித்துநிற்கிற தசையிலே தேசாந்திரிகளாய்த் திருமலை பெருமாள் கோயில்முதலான திவ்ய

மாதல், மாதுகர ருஷ்டியினுலே ஆர்ஜித்த திரவ்யமாதல் இவற்றைக்கொண்டு பகவத்பாகவதவிஷயத்தில் ஸமர்ப்பித்து ப்ரசாத ப்ரதிபத்திபண்ணும்போது ப்ரஸாத ஸ்வீகாரமென்றும் வ்ருத்தி மாத்ர மென்றும் தேஹதாரண மாத்ரமென்றும், நினைத்திருக்கவே புருஷார்த்தமென்றிருக்கை; ஸ்நானநியமமாவது:—பாப விமோசனமென்ருதல், ப்ரயோஜநாந்தர நினைவாதல், புண்கழுவுகிறேனென்ருதல் அதிகாரி சம்பத்துக்குடலாயாதல், சரீரமாலிந்யத் துக்காகையாதல் அன்றிக்கே பர்த்ருபோகத்துக்குப் பதிவ்ரதை ஸ்நானம் பண்ணுமாபோலே, பகவத் பாகவத சமாராதனம்செய்கைக்காகஸ்நானம்பண்ணுகை; ஸ்வரூபநியமமாவது:—ததிய்ய சேஷமா யிருக்கை; உபாய நியமமாவது:—அனன்ய சாதனனா யிருக்கை; உபேய நியமமாவது:—அனன்ய ப்ரயோஜனனா யிருக்கை; வாச நியமமாவது:—அனன் ப்ரயோஜனனான மஹாபாகவதனுடையதிருமாளிகையில் கடைத்தலையில் ஒதுங்கி வர்த்திக்கை; போகநியமமாவது:—அவர்களுடைய சேவையே எல்லா போகங்களும் என்றிருக்கை; ஆசார்ய நியமமாவது:— அர்த்த காமாபிமானங்கள் ஹேதுவாக ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவுள்ளத்திலும் ஆசார்யன்திருவுள்ளத்திலும் கலக்கம் பிறவாமல் ப்ரவர்த்திக்கை;சம்சர்க்கநியமமாவது:—சாத்விகாங்கீகாரமுள்ள தேசத்தில் வசித்திருக்கை; இந்நியமங்களுண்டாய்ப் போரவே

தேசங்களிலும்ஸ்ரீகார்யார்த்தமாகஎழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்களிடையாட்டம்ஆராய்ந்து அவர்களுக்கும், தமக்கபிமத சிஷ்யரானவர்களுக்கும் தீர்த்தமும் ப்ரஸாதித்தருளி ஸ்வதீர்த்தம் ப்ரார்த்தித்தவர்களுக்கும் அப்படியே ஆதரபூர்வகமாக ப்ரஸாதித்தருளி அவர்களையும்கூட்டிக்கொண்டு பகவத்யாகாநந்தரம் பாவிதமான அநுயாகம் செய்வாராக எழுந்தருளியிருக்க, அவ்வளவில் ஸ்தலசுத்திபண்ணித் தளிகைபரிமாறின அநந்தரம், கிடாம்பியாச்சான் தொடக்கமான ஸ்ரீவைஷ்ணவர்கள் பரிவுடன் பரிமாறப் பரிஷேசநம்செய்தருளித், தீர்த்தமும் அமுதுசெய்தருளி, ஸ்ரீ வைஷ்ணவர்களையும்அப்படியேநியமித்தருளித், தாமும்த்வயாநுஸந்தத்துடனே இவர்கள்சேர்த்தியிலே கூடியிருந்து அமுதுசெய்தருளி அநந்தரம் அங்வாசந தீர்த்தமும் அமுதுசெய்து திருக்கைமாற்றத் 'ததீய்யருக்கு த்வதீயபுக்தோச் ஜிதசேஷம்' என்றும், (போனகம் செய்தசேடம்) என்றும் சொல்லுகிற ஸுபாவநமான திருத்தளிகை ப்ரஸாதமும் ப்ரார்த்தநா பூர்வகமாக ப்ரஸாதித்துத், திருக்கைவிளக்கிக் கண்டேஷ்ணுநந்தரம், சுத்தாசமநம்செய்தருளி, மாத்யந்திந அர்க்யப்ரதாநமும் செய்தருளினூர்.

இவ்வபசாரங்களொன்றும் புக்கிராதென்று அருளிச்செய்தருளி ஞர். பிராட்டியொருகையும், ப்ரபத்தி யுபதேசம் பண்ணின ஸ்வாசார்யனொருகையுமாக ப்ராப்யஸ்தலத்தேறப் பிடித்துக் கொண்டு போகிலும் இவ்வபசாரங்கள் பிரதிபந்தகமாய்விடும் என்றருளிச்செய்தார்.

அநந்தரம் ஸகலமங்கள வாத்யங்களும் ஆரவாரிக்க, அநேக திவ்ய ப்ரபந்தாநுஸந்தாந த்வநி எங்கும் பூரிதமாக, அலங்கார திருமஞ்ஜநங் கண்டருளித் திருஒற்றாடை சாத்தித் திருப்பரி யட்டஞ் சாத்தி, ஶாஸ்த்ரசமந பூர்வகமாக நித்யாநுஷ்டாநங் கள் நடத்தி யருளுகையில் அஶக்தி பாராமல் அர்க்யத்தையும் உத்திஷ்டமாநராய் நின்றே செய்தருளித் தச்சேஷத்தையுந் தலைக்கட்டியருளித் திருத்வாதஶ நாமங்களையும் தரித்தருளித் திருமணிவடம் திருப்பவித்ரம் திருமாலை ப்ரஸாதம் பரியட்ட ப்ரஸாதங்கள் முதலானவற்றையுஞ் சாத்தியருளித் தீர்த்தங் களும் ஸ்வீகரித்துச், குருபரம்பரா பூர்வகமாக ரஹஸ்ய த்ரயத் தையும் ஸார்த்தமாக அநுஸந்தித்துப், பெரியபெருமாள் திரு வடிகளை உத்தேஶித்துத் தண்டன் ஸமர்ப்பித்து, முதலிகளையும் அநுவர்த்தித்து அநுமதிகொண்டு ஆளவந்தார் திவ்யமங்கள விக்ரஹத்தை த்யாநித்துக்கொண்டு பத்மாஸநஸ்தராய் எழுந் தருளியிருந்து பரவாஸுதேவரிடத்திலே பரம பக்தி நடந்து செல்ல, அநந்தரம் யோகத்தில் பரமயோகியான தம்மைப் பரம போகிகம்யவிஷயமான தத்விஷயத்திலே விநியோகித்துப், பின்பு "பத்மநேத்ரேந்ய மீலயத்" என்கிறபடியே திருக்கண்களைச் செம் பிளித்தருளிப் பரவஶராத்ரராய், எம்பார் திருமடியிலே திரு முடியும் வடுகநம்பி திருமடியிலே திருவடிகளுமாகக் கண்வளர்ந் தருளி, "மாகஶுத்ததஶம்யாந்து மத்யாஹ்நே மந்தவாஸரே- யோகிராஜஸ் ஸ்வபோகீஶ ஹாவம் ஸ்வேபேஸமப்யஶாத்" என் னும்படியான திவஸத்திலே தம்முடைய பூர்வாவதாரமான * ஆயிரஞ்சுடர்வாய் அரவணையோடே நம்பிமூத்த பிரானைப் போலே எம்பெருமானாரான இவரும் கூடியருளினார். இவ்ருத் தாந்தத்தைப் பின்னும்:—"பின்பு மன்பருடன் களித்த சீர்பெ ரும் பூதூ ரெதிராசன், இன்பமுடனு மிசைந்தொருநூற் றிருப தாண்டிங் கிருந்ததற்பின், அன்பா ளுழ்வா ளுண்டானற் கும ரர்க்கடியா முடிபுனைந்து, மன்ப தையை வாழ்வித்தாங் கமரு

மெனவாழ் வித்தருளா", "ஆரா மஞ்சூ ழரங்கர்தமை யலர்மா மகளை யடியிறைஞ்சித், தாரீர் சரணந் தனையென்னத் தந்தோ மெனவு மெதிராசன், பாரோர் பரவும் பாகவதர் பிரிவால் பரி வில் படர்கூரச், சீரார் திருநா டடைந்திருந்த சீடனுடனே சேர்ந்தனனால்" என்று இப்படிச் சொல்லப் படுமதான வைப வத்தையுடைய இவரும் "யதாபாதோதரஸ் த்வசா நிர்முக்தः" என்றும், "பாவஜ்ஜிஹாமி காத்ராணி ஜீர்ணந் த்வசமிவோரகः" என்றும் சொல்லுகிறபடியே "ஜீர்ணமிவ வஸ்த்ரம் ஸுகேநே மாம் ப்ரக்ருதிம் ஸ்தூலஸூக்ஷ்ம ரூபாம்விஸ்ருஜ்ய" என்று ஸுகமாகவே திருமேனியை உபேக்ஷயோடே விட,

அநந்தரம் சந்தாடை யாண்டான் அருளாளப் பெருமா ளெம்பெருமானார் எம்பார் வடுகநம்பி முதலான முதலிகளெல் லாரும் கோஷித்துக்கொண்டு வேரற்ற மரம்போலே விழுந்து கிடந்து துடித்து, திருமிடறு தழுதழுப்பத் திருமூக்கு வெப்ப டிக்க அவஶராய்க்கிடந்து * இட்டகால் இட்டகைகளாய்ச் * சிந் தித்துத் திகைத்து, * இணைமலர்க் கண்ணீர் ததும்பத் தாராவர் ஷமாகத் திருமுத்துதிர்த்து ப்ரலாபித்து, 'இவர் அவதாரத்தில் "தீர்லப்தா" என்றும், இவர் அந்திமதசையில் 'தர்மோ நஷ்டः' என்றும் இப்படி வருவதே என்று ஆஶ்சர்யப்பட்டு விஷண்ண ராய் நிற்க, அவ்வளவிலே பெருமாளும் 'நம் உடையவரை யிழ ந்தோமே' என்று திருவுள்ளம் நொந்து 'நமக்குச் செவ்வாய் வக்ரமாய்த்து' என்று சுருளமுதும் அமுதுசெய்யாமல் நாச்சி மாருடனே புறப்பட்டருள,அவ்வளவில் பராங்குசன் பரகாலன் முதலான ஆழ்வார்கள் பதின்மர்களும் ஸேவித்துச்செல்ல, ஆயி ரக்கால் திருமண்டபத்திலே எழுந்தருளியிருந்து, திருமுத்தின் பணி காளாஞ்சி திருவெண்சாமரம் திருவாலவட்டம் திருவெண் கொற்றக்குடை வெண்முத்தின் கலசம் திருமேற்கட்டு முத்துத் தாமம் தொடக்கமானவையும், *உடுத்துக்களைந்த பீதகவாடை, சூடிக்களைந்த தொடுத்த துழாய்மலர், ⊹ எண்ணெய் சுண்ணம் எல்லாம் பொற்றளிகையிலே கொண்டுபோம்படி உத்தம நம்பி க்கு விடைகொடுத்தருள, நம்பியும் அப்படியே தரித்துக்கொ ண்டு பெருமாள் பரிகரம் அனைத்துக்கொத்தோடும் ஸகல வாத் யத்துடனே மடத்து வாசலிலே செல்ல, அதுகண்டு முதலிக ளெல்லாரும் தேறிநின்று 'இனிச் செய்யவேண்டுங் க்ருத்யத்

தைச் செய்யவேண்டும்' என்று எம்பெருமானாருடைய விமல சரம விக்ரஹத்தைத் தூய்தாக நீராடப் பண்ணிவைத்து அலங்கரித்துக் கேஶவாதி த்வாதஶோர்த்வப் புண்ட்ரங்களையுஞ் சாத்திப், பெருமாள் சாத்திக்களைந்து வரவிட்டருளின * பெருமானரையிற் பீதகவண்ணவாடை கொண்டு திருமுடியிலே சாத்தி, அவன்மார்வணிந்த வநமாலையும் சாத்தி அலங்கரித்து, உடையவர் திருவடிகளைத் தங்கள் கண்ணிலும் மார்பிலும் நெஞ்சிலும் ஒற்றிக்கொண்டு, ஆசார்ய விஶ்லேஷா ஸஹிஷ்ணுக்களாய், ஐயோ! கண்ணபிரான்! அறையோ! முறையோ! அரவணைமேற் பள்ளிகொண்ட முகில்வண்ணனே!' என்று கையெடுத்துப் போரப் பெருமிடறுசெய்து கூப்பிட்டு மூர்ச்சித்துக்கிடக்க, அருகிருந்த முதலிகள்வந்து எடுத்துத்தேற்றத், தேறிநின்று உடையவர்க்குச் சாத்திக் களைந்து தச்சேஷமாயிருந்துள்ள * எண்ணெய் சுண்ணம் திருமண் ஸ்ரீசூர்ணங்களை எல்லாரும் ப்ரஸாதப் பட்டுத் தீர்த்தங்கொண்டு, திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருக்கையாலே ஆளவந்தார்க்குச் செய்ததுபோலே உடையவர்க்கு ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப், பீடயாநமான திவ்ய விமாநத்திலே ஏறியருளப்பண்ணி, சகல வாத்யங்களும் முழங்கப் பெருமாள் பரிகரமுடைய சத்ர சாமர தாலவ்ருந்தாதிகளைத் தரித்துஸேவிக்க அவ்வளவிலே ஆட்கொண்டவில்லி சீயர் யதிவரசீயர் உள்ளிட்ட எழுநூறு சீயர்களும் ப்ரஹ்மவல்லி ப்ருகுவல்லி நாராயணாநுவாகம் முதலான உபநிஷத்துக்களை ஓத, பட்டர்கந்தாடையாண்டான் நடாதூராழ்வானுள்ளிட்ட முதலிகளும் தத்தத்பரிசர்யா ஸாதநங்களைத் தரித்துக்கொண்டு பரிவுடன் பரிவ்ருதராய் ஸேவித்துக்கொண்டுவர, மற்றுமுண்டான உபவீததாரிகளான ஸ்ரீவைஷ்ணவர்கள் ஒன்பதினாயிரம் பேரும் ததபாவரான ஸ்ரீவைஷ்ணவர்கள் பன்னீராயிரம் பேரும் அருளிச்செயல் மூவாயிரமும் முன்னடிபின்னடியாக ஸேவிக்கத், திருவரங்கப் பெருமாளரையர் பரிகரமான திருவாய்மொழியரையர் ஆப்பான் திருவழுந்தூரரையர் திருநறையூரரையர் அழகியமணவாளரரையர் முதலான எழுநூறு திருவாய்மொழி விண்ணப்பஞ்செய்யுந் தம்பிரான்மார் பண்ணிசைதாளத்துடன் திருவாய்மொழிபாடத், திருவரங்கத்தமுதனார் பொய்யில் வள்ளலார் தொடக்கமானவர்கள் உடையவர் நூற்றந்தாதி ஸேவிக்க,

எம்பார் பிள்ளான் உள்ளிட்டவர்கள் தததிகப்ரீதி ஹேதுவான ஸ்தோத்ரகத்யங்களை ஸேவிக்க, வடுகநம்பியும் ராமாநுஜதாஸரான கோமடத்துச் சிறியாழ்வானும் உடையவர் ப்ரபத்தியை அநுஸந்தித்துக்கொண்டுவரத், திருவீதிஎங்கும் கோடித்துப் பொரியும் புஷ்பமும் சிதற, நடைபாவாடையிட்டுக், கரும்பும் குடமும் ஏந்த, திருப்பதியில் ஸுமங்கலிகள் மங்கலதீபமேந்தி முன்னேசெல்ல இருபக்கமும் சாமரமிரட்டிக்க, வெள்ளைவட்டமிடத், 'தர்ஶநத்தில் எம்பெருமானார் திருநாட்டுக்கு எழுந்தருளினார்'என்று ஒற்றைத் திருச்சின்னம் பணிமாறத், திருவீதிகள் தோறும் எழுந்தருளுவித்துக்கொண்டுபோய், (பெரியபெருமாளும் அந்தத் திருமேனியில் அபிமதவிஷயத்தில் அழுக்கு உகக்குமாபோலே அதிசபலராய் "மங்கவொட்டு" என்னும்படி இவர் விக்ரஹத்தை ஆதரித்துப் புறம்பே கொண்டுபோகவொட்டாமல், அந்தஃபுரமஹிஷிகளைத் தத்பரிஸரத்திலே ஆராமத்திலே அடக்கிவைக்குமா போலேயும் நிதியை உள்ளே இட்டுவைக்குமா போலேயும் லக்ஷ்மீ துல்யராம்படியான லக்ஷணங்களை யுடையராய் விலக்ஷணமான நிதிபோலே "இராமாநுஜன் என்தன் மாநிதி", "இராமாநுசன் என்தன்சேமவைப்பு" என்னும்படியான இவர் திருமேனியையும் ஆழ்வார் திருமேனியை ஆவரணத்துக்குள்ளே பள்ளிபடுத்தினது போலே ஆவரணத் துள்ளில் உட்கோப்பிலே, அந்தரங்கமாக, கௌந்தேயனை அர்ஜுநனைப் போலே அந்தரங்கரான கந்தாடையாண்டான் திருமுடிகாத்து நோக்க,) தததநுகுணமாக யதிஸம்ஸ்காரவிதி யடங்கச்செய்து கமித்துப் பள்ளிபடுத்தருளினார்கள்.

இப்படி நிதியைநிக்ஷேபித்த வநந்தரம் பெருமாளும் நாச்சிமாருடனே கூடத் திருமஞ்சநங்கண்டருளித் திருமுத்துதிர்த்துத் திருமுகங்கன்றிச் சுருளமுதும்அமுதுசெய்யாமல்அலப்புப் படவிடத் திருவுள்ளமாய், கந்தாடையாண்டான் பட்டர் முதலானரைப் பார்த்து 'நம்முடைய அவப்ருதோத்ஸவங் கொண்டாடுமாபோலே நம்உடையவர்க்கும் அவப்ருதோத்ஸவங் கொண்டாடுங்கோள்' என்று திருவுள்ளம் பற்றிச் சேர்த்தியிலே ஏறியருளி உடையவர்க்கு அக்காரவடிசில் தளிகை அனுப்பியருளினார்.

அநந்தரம் கந்தாடையாண்டான் தொடக்கமான அனைவரும் புத்ரசிஷ்யர் செய்யுங்காரியங்களை யெல்லாஞ் செய்துகொண்டு அவப்ருதஸ்நாநமாக எல்லாரும் நீராடி யருளித் தத்விஸ்லேஷா ஸஹராய்ப் பரிதபித்துக்கொண் டிருக்கப், பின்பு ஆண்டான் நம்பெருமா ளநுமதியுடனே எம்பெருமானாரை எல்லாரும் ஸேவித்து உஜ்ஜீவிக்கும்படி மீளவும் அவ்விடத்திலே ஆவிர்ப்பவித்தாப்போலேயிருக்க அர்ச்சாவதாரமாக ஏறியருளப் பண்ணி ப்ரதிஷ்டிப்பித் தருளினார். எல்லாரும் "ஸ்வாவதாரஸ்த லேர்ச்சாயாத் ஸ்ரீரங்கேசய தீஶ்வரஃ - யந்முதேதந் குணவாஸம் ராமாநுஜ குரும்பஜே" என்றார்கள்.

அநந்தரம் ஶாஸ்த்ரார்த்தமான கைங்கர்யங்களையும் ஆப்தரான தாங்கள் ஸமாப்தமாக நடத்திப், பட்டரும் கந்தாடையாண்டானும் மிகவும் ஸௌப்ராத்ரத்தை யுடையராய், உடையவர் காலத்தில் அர்த்த விஶேஷங்களையும் ஒருவர்க்கொருவர் உசாவிக்கொண்டு, ராமக்ருஷ்ணாதிகளுடைய புநர்வ ஸ்வாதி திருநக்ஷத்ரங்களோபாதியும், ஆழ்வார்களுடைய ஶ்ரவணாதி திருநக்ஷத்ரோபாதியும் இவருடைய சித்திரையில் திருவாதிரையையும் மற்றும் மாஸந்தோறும் வருவதான அந்தத் திருநக்ஷத்ரத்தையும் மஹோத்ஸவமாக நடத்திக்கொண்டு, வாசாமகோசரமான தத்வைபவங்களையும் ப்ரகாசிப்பித்துக்கொண்டு, கிடாம்பியாச்சான் தொடக்கமானவரோடே பாடாற்றிக்கொண் டிருந்தார்கள்.

அநந்தரம் திருவேங்கடநாட்டி னின்றும் அநந்தாழ்வான், ஸ்ரீகுஹதாசர் முதலான முதலிகளையுங் கூட்டிக்கொண்டு அநந்தாம்ஶமான இவர் அவதார ஸமாதியை ஆராய்ந்தறியும்படி எழுந்தருளித், திருக்காவேரி யருகே பரந்திருக்கிற தத்ஸூசகங்களைக்கண்டு எழுந்தருளினபடி யறிந்து ஶோகா விஷ்டராய், அநந்தரம் பட்டரையும் ஆண்டானையும் கண்டு ஆஶ்வஸித்து உடனே ஊரேறமீண்டு எழுந்தருளினார்.

அநந்தரம் அப்படியே கீழைத்திக்கில் சோழவளநாட்டுத் திருக்கண்ணபுரம் முதலான திருப்பதிகளில் எச்சான் முதலானவர்களும், தெற்குத்திக்கான பாண்டிநாட்டுத் திருக்கோட்டியூர் நம்பி குமாரரான யாமுநாசார்யர் சொக்கத்தேவர் திருமாலையாண்டான் குமாரரான சுந்தரத்தோளுடையார் முதலானவர்

களும் மேல்நாட்டிலும் சோமாசி யாண்டான் மருதூர்நம்பி தொண்டனூர்நம்பி முதலானாரும், மற்றும் அங்கே எம்பெருமானாராலே திருத்தப்பட்ட திருநாராயணபுரம் முதலான ஸ்தலங்களில் ஸ்ரீவைஷ்ணவர்களும் மற்றுமுண்டான தேஸாந்தரஸ்தரெல்லாருந் திரண்டு பெருங்கூட்டமாகக் கோயிலிலே வந்து எம்பெருமானாருடைய விஶ்லேஷத்தாலே மிகவும் க்லேஶித்து, அநந்தரம் பட்டரை ஸேவித்துத் தங்கள் வ்யஸநமெல்லாம் தீர்ந்து பட்டரை இஷ்ட தேவதையான எம்பெருமானாரைப் போலே கண்டு, தத்தமக்கு வேண்டும் இஷ்டார்த்தங்களையுங் கேட்டுக்கொண்டு, தல்லாபத்தாலே "ஸ்ரீபராஶர பட்டார்ய சரணௌ ஸம்ஶ்ரயேமஹி - யத்வக்த்ராங்கே ரங்கேஶ கோஷ்ட்யாம் ப்ராஹ்மீப்ரந்ருத்யதி", "ப்ரமாண நகநிர்ப்பிண்ணவாதிமத்தேப மஸ்தகः - ராஜதே நிமாங்கர்ஜந் ஸ்ரீபராஶரகேஶரீ", "ஸ்ரீபராஶரபட்டார்யம்பூயோபூயோ நமாம்யஹம்-யதாத்மநா ஸ்வயம் ரங்கீபேஜேகூரேஶ புத்ரதாம்" இத்யேவமாதி ஸூக்திகளையும் தத்விஷயத்திலே அநுஸந்தித்துக்கொண்டு ததநுஜ்ஞையோடே தத்தமூர்களிலே சேர்ந்தார்கள்.

ஸம்ஸாரஸ்தித்யருசி நிவேதநமும், ததநுகுணமான பகவதுக்தாந்திமதிந நிஶ்சயமும், சரமகாலத்தளவும் ஸ்வாபிமாநாந்தர்ப்பூதரானவர்களுக்கு உபகாராநுகுணமாக வ்ருத்திவிஶேஷோபதேஶமும், பரிஹரணீயவ்ருத்தி விஶேஷோபதேசமும் சர்மகாலத்தில் ஸ்வாபி மதசரமாதிகாரிஸ்பர்ஶவிஶேஷமும் திருமுடியைப்பற்றிப் பூர்வாசார்யர்கள் விளங்கத் திருவடிகளைப் பற்றி அபராசார்யர்கள் விளங்கப் பூர்வாபராசார்யரூப ஹாரநாயகரத்நமான உடையவர்க்கே யுள்ளவையிறே.

இத்தால் ஸ்ரீராமக்ருஷ்ண சரிதங்கள் போலே ஸ்ரீராமாநுஜார்யசரிதமும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸதாநுஸந்தேயமென்றதாயிற்று.

எம்பெருமானார் திருநக்ஷத்ரம், சித்திரையில் திருவாதிரை.

இவர் தனியன் - ப்ரஸித்தமிறே, "யோநித்ய மச்யுத" இத்யாதி.

உடையவர் ஸ்ரீபாதத்துமுதலிகளின் தனியன் முதலியன

ப்ராப்ய தேஶத்திலும் ஆசார்யவைஶேஷத்வம் முறைதவற வொண்ணுதென்னுந் த்வரையும், சரமதஶையிலும் ப்ராணப்ரயாண பாதேயமாக ஸ்வாசார்யன்தானே த்வயத்தை விடாய்கெட உபதேசிக்கப்பெற்ற தன்னேற்றமும், பாகவதாபிமாநஸ்தலத்திலும் ததீயாபிமாநஸ்தலமே சரமதேஶமாகப்பெற்ற தன்னேற்றமும் சரமாதிகாரபாக விஶேஷமும் ஆழ்வான்பக்கலிலே அநுஷ்டாநவிஶேஷமாகக் கண்டதிறே.

முதலியாண்டான் திருநக்ஷத்ரம், சித்திரையில் புநர்வஸு.

அவர் தனியன்-“பாதுகேயதிராஜஸ்ய கதயந்தியதாக்யயா-தஸ்யதாஶரதே: பாதௌ ஶிரஸாதாரயாம்யஹம்”, “அஜஹத் பாகிநேயத்வம் பாதுகாத்வந்த்ரி தண்டதாம் - ஸம்ப்ராப்தோயதிராஜஸ்ய குணைஸ்தத்ப்ரீதி ஹேதுபி: ஸ்ரீவைஷ்ணவா நாந்தாஸத்வம் ஸ்வாமித்வம் ப்ரபுதாம்ஸ்வயம் - வாதூலகுல தௌரேயம் வந்தேதாஶரதிம் குரும்.”

திருக்குருகைப் பிரான்பிள்ளான் தனியன் - “ய:பர்யாப்தகல: க்யாதோ யதிராஜாப்தி சந்த்ரமா: - குஶலந்தி ஶதாம்மேஸௌ குருகேஶ்வர தேசிக:”, “விக்யாதோயதி ஸார்வபௌம ஜலதேஶ்சந்த்ரோபமத்வேநய: ஸ்ரீபாஷ்யேச யதந்வயாஸ்ஸு விதிதாஶ் ஸ்ரீவிஷ்ணுசித்தாதய: - வ்யாக்யாம் பாஷ்யக்ரு தாஜ்ஞயோபநிஷதாம் யோத்ராமிட நாம்வியதாத் பூர்வந்தங் குருகேஶ்வரங் குருவரங் காருண்ய பூர்ணம்பஜே”.

கிடாம்பியாச்சான்தனியன் - “ராமாநுஜ பதாம்போஜயுகளீயஸ்யதீமத: - ப்ராபயஞ்ச ப்ராபகம்வந்தே ப்ரணதார்த்திஹரங்குரும்”, “ஆஸ்திகாக்ரேஸரம் வந்தே பரிவ்ராட் குருபாசகம்-யாசிதங் குருகேஶேந ப்ரணதார்த்தி ஹரங்குரும்” “ஸ்ரீபாஷ்யங் தர்ஶயித்வாயதிபதி ரசிதம்ஶாரதாயை நிவ்ருத்தோ நத்வா ஸ்ரீவேங்கடேஶம் பதிபரமப்தந்தத் தவாங்கோபி காயை-ஆக்யாயம்வேதோத்த மாங்கோதயந இதித தத்பாஷ்யகாரேண தத்தாமாத்ரே யாசார்ய விஷ்ணோ ரநுஜ மநுதிநம் ஸாதரந்தந்நமாமி”.

எங்களாழ்வான் தனியன்-“ஸ்ரீவிஷ்ணுசித்தபத பங்கஜஸம்ஶ்ரயாய சேதோமமஸ் ப்ருஹயதேகி மத:பரேண - நோசேந்மமாபியதிஶேகர பாரதீநாம் பாவ:கதம்பவிதுமர்ஹதி வாக்விதேய:”.

நடாதூராழ்வான் தனியன் - “யஸ்மிந் பதம்யதி வரஸ்யமுகாத் ப்ரணேதுந் நிஷ்க்ராம தேவநிததே நிகமாந்த பாஷ்யம்-

தஸ்யைவதம் பகவதஃ ப்ரியபாகிநேயம் வந்தேகுரும்வரத விஷ்ணுபதாபிதாநம்", "ஜ்ஞாநோத்தமோத் ததிநிராகரண ப்ரதுஷ்யத் ராமாநுஜார்ய கருணுபரி ணுஹபாத்ரம் - வத்ஸாந்வவாய திலகம் வஸதிங்குணுநாம் வந்தாமஹேவரத விஷ்ணுகுரும்வரேண்யம்."

சோமயாசியாண்டான் தனியன் - "நௌமிலக்ஷ்மண யோகீந்த்ர பாதஸேவைகதாரகம்-ஸ்ரீராமக்ரது நாதார்யம் ஸ்ரீபாஷ்யாம்ருத ஸாகரம்."

நடுவிலாழ்வான் தனியன் - "யேநப்ரோத் ஸ்கலதே நித்யங் கார்க்யவம்ஶ மஹாம்புதிஃ - மங்மஹேஹதம் ஸதாசித்தே மத்யமார்ய கலாநிதிம்."

அருளாளப்பெருமா ளெம்பெருமானுர் தனியன் - "தயாபாலநதேவாய ஜ்ஞாந ஸாரப்ரதாயச - ப்ரமேயஸாரந் ஊதே நமோஸ்து ப்ரேமஶாலிநே", "யதிராஜதயா பாத்ரம் யதிபங்க்தி விபூஷணம் - தயாபால முநிம்வந்தே தேசிகா க்ரேஸரம்ஸதா."

அநந்தாழ்வான் திருநக்ஷத்திரம் - சித்திரையில் சித்திரை.

அவர் தனியன் "அகிலாத்ம குணுவாஸம் அஜ்ஞாநதி மிராபஹம் - ஆஶ்ரிதாநாம் ஸுஶரணம் வந்தேநந்தார்ய தேசிகம்", "ஸ்ரீமத்ராமாநுஜாசார்ய ஸ்ரீபாதாம் போருஹத்வயம்-ஸதுத்தமாங்க ஸந்தார்யம் அநந்தார்ய குரும்பஜே," "யதீந்த்ரபாதாம் புஜசஞ்சரீகம் ஸ்ரீமத்தயா பாலதையக பாத்ரம் - ஸ்ரீவேங்கடேஶாங்க்ரியுகாந்தரங்கம் நமாம்யநந்தார்ய மநந்தக்ருத்வஃ."

எச்சான் தனியன் - "யேநவைஷ்ணவ ஶேஷத்வ பர்யந்தம் பரமாத்மநஃ - ஶேஷத்வமாத்ம நோஜ்ஞேயம் யஜ்ஞேஶந்த முபாஸ்மஹே."

வடுகநம்பிதனியன் - "ராமாநுஜார்ய சரணப்ரவணம் பரதேவவத் - வடு பூர்ணமஹம்வந்தே பரஜ்ஞாநபயோநிதிம்."

எழுபத்துநான்கு ஆசார்யர்களுக்கும் ஸமுதாயத் தனியன்- "ராமாநுஜார்யாச்ச்ருதி மௌளி பாஷ்யம் அர்த்தம்ரஹஸ்யந் த்ரமிடஶ்ருதீநாம்-ஶம்ப்ராப்யதேநைவ குருக்ருதாம்ஸ்தாந்பஜே ஸதுஸ்ஸப்ததி பீடஸம்ஸ்தாந்."

மாருதிச்சிறியாண்டான், தம்முடைய அந்திம தஶையிலே பணித்த வார்த்தை:-'திருவேங்கடமுடையான் தன்ஸ்வரூபத்தை மறந்து என் ஸ்வரூபத்தை நினைத்தானுகில், பழைய நரகங்களொழிய வேறே எனக்கென்று சில நரகங்களை ஸ்ருஷ்டிக்க வேண்டுமிறே; அன்றிக்கே, என்ஸ்வரூபத்தை மறந்து தன் ஸ்வரூபத்தை உணர்ந்தானுகில், பழையதிருநாடு போராது; எனக்

கென்று வேறே ஒரு திருநாடு ஸ்ருஷ்டிக்க வேண்டுமிறே; அதாவது - ஸ்வக்ருத தோஷ ஸ்மரணம் அநந்ததுஃகப்ரதாநஹேது; ஈஶ்வரவாத்ஸல்ய ஸ்மரணம் அநந்தாஶ்சர்ய ஸுகப்ரதாநஹேது வென்றபடி.

இவர் தனியன் - "ஜ்ஞாநாங்குர குலாதிபங்க்தி மிமளாத் ப்ராப்தாபதம்ப்ரேஷிதஃ ஸ்ரீராமாவரஜேநகோஸலபதிர் த்ருஷ்ட்வாததியாம் ஸ்திதிம் - ஸம்ப்ராப்தஸ் த்வரயா புராந்தக புராத் கல்யாண வாபீதடேயோ ஸௌமாருதிரித்ய ஶம்ஸதவயந்தஸ் மைநமஸ்குர்மஹே."

மருதூர்நம்பி தம்முடைய அந்திம தசையிற் பணித்த வார்த்தை:—'மூன்றுஜந்மம் தம் திருவடிகளிலே அபராதம் பண்ணின சிஶுபாலன் திருவடிகளை யடைந்தான். அநந்த ஜந்மம் திருவடிகளிலே அபராதம் பண்ணின நான் இழந்திருக்கை வழக்கோ?' என்ன, சிங்கர் அன்றே திருவடிகளைத் தந்தருளினார்; அதாவது—இத்தலையில் அபராதமே அவன் அங்கீகாரத்திற்குப் பச்சையென்று உணர்கை சரமஜ்ஞாந பரிபாகமென்றபடி.

பிள்ளையுறங்கா வில்லிதாஸர் தம்முடைய அந்திம தசையிலே முதலிகளெல்லாரையும் அழைப்பித்துத் தீர்த்தங்கொண்டு க்ஷமைகொண்டு, பொன்னாச்சியாரைப் பார்த்து 'நம்முடைய விஶ்லேஷத்தில் நீ பிழைநில்லையாதே கொள்'என்று ஆணையிட்டு, உடையவர் திருவடி நிலைகளைத் தம்முடியிலே வைத்துக் கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருளினார். அநந்தரம் பொன்னாச்சியாரும் க்லேசியாமல் தரித்திருந்து திருவாசலைத் திருவலகிட்டுத் தெளிநீர் தெளித்துத் திருப்பிண்டியிட்டுத் திருக்காவணமிடுவித்துநிற்க, ஸ்ரீவைஷ்ணவர்கள் உடையவர் நீராடுந் துறையிலே திருமஞ்சன மெடுத்துக்கொண்டுவந்து த்வயாநுஸந்தானத்துடனே நீராட்டித் திருநாமம் திருச்சூர்ணம் முதலாக ஸ்ரீவைஷ்ணவாலங்காரங்களெல்லாஞ் செய்து பெருமாள் சாத்திக்களைந்து வரவிட்டருளின திருமாலையும் திருப்பரியட்டமும் சாத்தி அலங்கரிக்க, தாமும் ஸர்வாபரண பூஷிதையாய்க் கஸ்தூரி ம்ருகம்போலே உலாவி நின்று ஸ்ரீவைஷ்ணவர்களைத் தீர்த்தங்கொண்டு சுருளமுது திருத்தித் திருமாளிகையிலுள்ள த்ரவ்யங்க ளடங்கலும் ஸமர்ப்பிக்க, கரும்புகளுமெடுத்து நூற்றந்

தாதி இயலாக அநுஸந்தித்துவரப் பின்பு திருச்சூர்ண மிடித்து எல்லாரும் * எண்ணெய் சுண்ணங்கொண்டாடி, பிள்ளையுறங்கா வில்லி தாஸருடைய விமலசரம விக்ரஹத்தைத் திவ்யவிமாநத் திலே எழுந்தருளப்பண்ணி வைத்துக்கொண்டு ஏகாங்கிகளும் ஸ்ரீவைஷ்ணவர்களும் மற்றுமுள்ள முதலிகளும் மாறிமாறி ஸ்ரீபாதந்தாங்க, எழுந்தருளுகிற விமாநமும் தூர மறைந்தவள விலே, பொன்னாச்சியாரும் ஶோகார்த்தையாய் "மாரிமாக்கடல் வளைவணர்க் கிளையவன் வரைபுரை திருமார்பில், தாரினாசையில் போயினநெஞ்சமும் தாழ்ந்ததோர் துணைகாணேன், ஊரும் துஞ்சிற்று உலகமும் துயின்றது ஒளியவன் விசும்பியங்கும், தே ரும்போயிற்றுத் திசைகளும் மறைந்தன செய்வதொன் றறியே னே" என்று கையெடுத்துக்கூப்பிட்டு அழுதுகொண்டு விழுந்து பாகவத விஶ்லேஷாஸஹிஷ்ணுவாய் மூர்ச்சித்துக்கிடந்து அப் போதே அங்கே திருநாட்டுக்கெழுந்தருள, முதலிகளும் அங்கே அவருக்குத் திருச்சூர்ண மிடித்துப் பிள்ளையுறங்கா வில்லிதாஸ ருடன் திருப்பள்ளி படுத்தினர் என்பர்கள். இவருக்குத் ததீய விஶ்லேஷத்தில் அப்போதே ஶரீர விஶ்லேஷம் வரும்படியான ததீயப்ரேம சரமபாகம் முற்றி வளர்ந்தபடியிறே இது.

இவர் தனியன் - ஜாஹ்ருகதநுஷ்பாணிம் பாணௌகட்கஸ மந்விதம் - ராமாநுஜ ஸ்பர்ஶவேதிம் ராத்தாந்தார்த்த ப்ரகாஶ கம் - பாகிநேயத்வய யுதம்பாஷ்யகார பரம்வஹம் - ரங்கேஶ மங்களகரந் தநுர்த்தாஸ மஹம்பஜே."

நம்பி திருவழுதிவளநாடுதாஸர் திருநாட்டுக்கு எழுந்தருளு கிற ஸமயத்திலே தம் ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருந்த ஒரு ஸ்ரீவைஷ்ணவர் அழ, அதற்குநம்பி 'கெடுவாய்! செத்துப்போ கிற நான் போகாநின்றேன்; ஸ்ரீபராஸரபட்டர் வாசிக்கக் கே ட்க விருக்கிற நீயோ அழுகிறாய்!' என்று அருளிச்செய்தாரிறே; அதாவது - ஸதாசார்ய வ்யாக்யாந வசநஸ்வாரஸ்யாஸக்தி அப வர்க்க பலப்ராப்தியிலும் அருசி பிறப்பிக்குமென்றபடி.

பிள்ளை திருவழுதி வளநாட்டரையர் தம் அந்திமதஶையி லே க்லேஸிக்க, சுற்றிலு மிருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்யோந் யம் முகம பார்த்திருக்க, அவரும் இவர்களுடைய அபிப்ராயத் தைத் தம் திருவுள்ளத்திலே கோலியருளி 'வாரீர்கோள் முதலி காள்! ஸம்ஸாரிகளிழவுக்குப்போர நொந்தோங் காணும்; அவர்

களுக்கும் நமக்கும் அல்பமாய்த்து வாசியுள்ளது: எங்ஙனே யென்னில்:—நாம் இடுவது ஒருதண்டம், பண்ணுவது ஒரு ப்ர பத்தி, இழப்பது ஒரு ஹேயமான ஸம்ஸாரம், பெறுவது ஒரு விலக்ஷணமான பரமபதம்; இத்தை யறியாதே அதঃபதிக்கிறீர் களே! என்று க்லேஸமாய்த்துக் காணுங்கோள்' என்ன, முதலி களும் க்ருதார்த்தரானார்கள்; அதாவது - பரதுঃகாஸஹிஷ்ணுத் வமும், பரஸம்ருத்யேக ப்ரயோஜநத்வமும் ஸ்ரீவைஷ்ணவனுக்கு உண்டாக வேண்டுமென்று கருத்து.

மற்றுஞ்சில பழைய தாலபத்ரங்களிற்கண்ட உடையவர் சம்பந்தமான விஷயங்கள்.

தொண்டைமான் சக்ரவர்த்தியின் சரித்திரமும், உடைய வர் திருவேங்கடத்தானைச் சங்குசக்ரங்களுடன் சேவை சாதிக் கச்செய்ததும்:—

ஸ்ரீயঃபதியின் திருவுள்ளத்தின்படி அவர்க்குச் சர்வதேச, சர்வகால, சர்வாவஸ்தைகளிலும் இடைவிடாது சேஷவ்ருத்தி யான கைங்கர்யம் பூண்டொழுகும் திருவநந்தாழ்வான் இந்நில வுலகத்திற் சகலாத்மாக்களும் சர்வசுலபமாகப் பகவல்லாபத் தை யடைந்துய்யுமாறு ப்ரஹ்ம ருத்ரேந்த்ராதி தேவமுனி கணங்களாலும் அளப்பருஞ் சீருஞ் சிறப்பும் பொலிந்து மனோ ஹரமான பரிசுத்த புண்யதீர்த்த புஷ்ப நந்தவன முதலியனவுங் கொண்டுள்ள பர்வதாகாரமாக அவதரித்த காரணத்தால் 'சேஷாசலம்' என்றும், நாராயண னென்னும் பெயர்பெற்ற ப்ராஹ்மணோத்தமனொருவனாற்பூசிக்கப்பட்டஹேதுவால்'நாரா யணாசலம்' என்றும், சிவபக்தனாய் ருஷபனென்னும் அபிதான முள்ள அசுரனொருவனை யவன் துஷ்க்ருத்யத்தை முன்னிட்டு ஸ்ரீநிவாசன் வேட்டை வியாஜ்யார்த்தமாய்ச் சங்கரிக்கும் நிமித் தம் திருவாழி யாழ்வானுக்குக் கட்டளையிட, இதுகண்ட அசு ரன் உடனே பயப்ராந்தனாய் ஸ்ரீநிவாசன் திருவடிகளில் சரண் புகுந்து அபராதக்ஷாபனஞ் செய்துகொள்ள அவ்வசுரனது பெயரடியாக 'ரிஷபாசலம்' என்றும், கேசரி என்னும் அசுர னொருவன் புத்ரப்பேற்றை விரும்பிச் சிவார்ச்சனை புரிந்து, அஞ் சனா தேவியென்னும் புத்ரியைப்பெற்று அம்மாதரசியின் திரு வுதரத்தில் சிவவாயு வம்சியான சிறிய திருவடியை யடைந்த முகாந்தரத்தால் 'அஞ்சனாசலம்' என்றும், ஸ்ரீசைலத்தின் மேற்

பாரிசத்திலுள்ள நந்தனபுரம் என்னும் ஊரானான புரந்தரனென்னும் ப்ராஹ்மணோத்தமனுடைய புதல்வனான மாதவனென்பான் சகல சாஸ்திர நிபுணனாயிருந்தும் மதனகிரீடாவேசனாய்த் தன் மனைவி சந்திரரேகையுடன் பூஞ்சோலையில் விளையாட்டயர்கையில், மாலினி என்னும் சண்டாள கன்னிகை யொருத்தியின் கட்டழகிற் சிக்கி ஆசார தூரந்தரனாய்ப் பஞ்சமாபாதக மேலிட்டுப் பூசஞ்சாரம்புரிந்து இந்த க்ஷேத்ரத்தை யடைந்தமாத்ரத்தில் தன் கொடும்பாவந் தொலைந்து சுகிர்தமுற்றுப் பரமபதம் பெற்றகாரணத்தால் "வேம் - பாவங்களை, கடம் - எரித்தல்; அத்திருமலைக்குச் சீரார் வேங்கடாசலமெனும் பேர், வைத்தனரதுவேதென்னில் வேமென வழங்கெழுத்தே, கொத்துறு பவத்தைக் கூறுங் கடவெனக் கூறிரண்டானு, சுத்தவக்கரங்கொளுத்தப் படுமெனச் சொல்வர் மேலோர்" என்கிறபடி 'வேங்கடாசலம்' என்னும் பெயர்பூண்டு, பகவத்திவ்ய தேசங்கள் நூற்றெட்டனுள் ஒன்றும், வடநாட்டுத்திருப்பதிகள் பன்னிரண்டனுள் முதலதுமாகிச் சகல வைபவமும் வாய்ந்து, அடைந்தாரது அனிஷ்டங்களை யறவொழித்து அபேக்ஷிதங்களைத் தலைக்கட்டுமதான சேஷகிரியின் திருவனத்தில் சர்வ சாஸ்திரங்களிலும் வல்லனாய் நெறிபிறழாது இப்பூமண்டலத்தை யரசாண்டுவந்த திருதவர்மா என்னும் சோழபூபதி ஒருகால விசேஷத்திலே, பகவத்ஸ்வப்ன ப்ரீதியுக்தனாய், வேட்டை முகாந்தரமாய் வந்தபோது, ஆங்கோர் அதிரூபலாவண்ய யௌவன கன்னிகை யொருத்தியைக் கண்டு காமுற்று அம்மாதரசியின் வாய் மூலமாகவே அவள் பாதாளலோக வாசியாகிய நாகேந்த்ரனான தனுஜன் புதல்வி யெனத் தெரிந்து அவளைத் தன் பட்டமகிஷியாக்கிக் கொள்வதாய் வாக்குதத்தஞ்செய்து அஷ்டவித விவாகங்களு ளொன்றான காந்தர்வ விவாகத்தால் அக்கன்னிகையைக் கூடிக் களித்தான்.

பிறகு அம் மாதரசியும் அதி ப்ரீதையாய் விடைகொண்டு தன்னுலகம்போய்த் தனது தந்தையிடம் நடந்த வர்த்தமானங்களைச் சொல்ல அவனுங்கேட்டு ஆனந்த சாகரத்தில் மூழ்கலானான். சோழபூபதியும் தனதூர்போய்ச் சேர்ந்த வநந்தரம் அந்த நாககன்னிகை கருவுற்றோர் சௌந்தர்ய புத்ரனைப் பெற்றாள்.

இப் புத்ர சிகாமணியின் ஜனனவிசேஷ மெவ்வா றென்னில்:—

சோழதேசத்திலே கிருஷ்ண க்ஷேத்ரமென் றொரு ஸ்தல முண்டு. அதில் ஸ்ரீமந்நாராயணன் கோபாலவேஷத் திருக்கோலத்துடன் வாசம் பண்ணுகையில், திருதவர்மா வென்னும் சோழராஜன் அந்தத் திவ்யக்ஷேத்ரத்தில் தவஞ்செய்து கொண்டிருந்தனன். அக்காலத்தில் அங்கு வசித்துவந்த வைகாசநனென்னும் பிராஹ்மணசீல னொருவன் கிருஷ்ணாவதார வைபவத்தைச் சொல்லக்கேட்டு, கலியுகத்தி லுண்டாகப்போகின்ற கோபாலரூபமான கண்ணன் சேவையிலீடுபட்டு, அப்போதே பகவான் அக்கோலததுடன் தனக்குப் பிரத்தியக்ஷ சேவை தரும்பொருட்டுத் தானும் தவஞ்செய்யலானான். பகவான் அப்ராஹ்மணனது ஸ்வப்நத்திலே அவன் விரும்பியபடி சேவை ஸாதித்து வாராய் ப்ராஹ்மணோத்தமனே! ஸ்ரீநிவாசன் அலர்மேன்மங்கை சமேதனாய்ச் சேஷகிரியிலே ஆராதனமின்றி யெழுந்தருளி யிருக்கின்றமையின், நீ அவ்விடம்போய் அப்பரம புருஷனை ஆராதித்துவரின் உன் அபிஷ்டமனைத்துங் கைகூடுமென்ன; ப்ராஹ்மணனும் தீர்க்கதண்டன் ஸமர்ப்பித்து ஸ்வாமீ! தேவரீர் திருநாமமும் அடியேன் ஸ்ரீநிவாசனைக் கண்டுபிடிக்கும் அடையாளமும் அறிய விரும்புகின்றேன்; கிருபையுடன் அவற்றைத் தெரிவித்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தனன். அதற்குப் பகவான் என்பெயர் கோபிநாதன்; திரேதாயுகத்திற்குப் பின் சங்கனென்னும் ராஜனால் எழுந்தருளப பண்ணின விமானமானது ஒரு பிரளயத்தில் நஷ்டமாய் ஒரு புற்றின் நடுவே அர்ச்சாரூபியான ஸ்ரீநிவாசன் அலர்மேன் மங்கை சமேதனாய்ச் சங்கு சக்ராதி சின்னங்களுடன் முழங்கால் வரையில் மறைந்தவனாய் ஒரு திருப்புளிநிழலிலே வீற்றிருக்கின்றனன்; இரண்டு தனுசு நீளத்திற்குள்ளாகச் சுபமான ஒரு பூதீர்த்தமுண்டு; மற்றும் அவ்விடத்தில் சௌதமி என்னும் பசு தன்பாலினாலே ஸ்ரீநிவாசனைத் திருமஞ்சனஞ் செய்து வருகின்றது; அரங்கதாசனென்னும் சூத்ரனொருவன் அந்தத்திருமலைக்கு உன்னுடன் வந்து சேருவன்; அவனுடன் கூடி அந்த லோகநாதனை ஆராதித்து வந்தால் சர்வாபிஷ்டமும் கை கூடுமென் றுரைத்து அந்தர்த்தானமாயினன். உடனே ப்ராஹ்மணன் துயிலுணர்ந்து பகவத்

ஸ்வப்நமிருந்தபடியை ஸ்மரித்துச் சிந்தூமகிழ்ந் திருவேங்கட மடைந்தபோது, ரங்கதாசனும் வர, அவனுக்குப் பகவத் கிருபை யிருந்தபடியைச் சொல்லித், திருப்புற்றைக் கண்டு சேவித்து, இருவரும் அங்கொருமண்டபத்தைத் தங்களாலியன்ற வளவில் அமைத்து, அதில் ஸ்ரீநிவாசனையும் அலர்மேன் மங்கையாரையும் எழுந்தருளச்செய்து பயபக்தியுடன் சகல கைங்கர்யங்களையும் குறைவற நடத்திவந்தார்கள். அக்காலத்தில் குண்டலனென்னும் கந்திருவனொருவன் அனேக ஸ்திரீகளுடன் ஒரு திவ்ய விமானத்தேறி வந்து ஸ்ரீநிவாசனைத் திருவடி தொழுது, உத்தரதிக்கில் மனசுக்குரம்மியமான ஓர் பூஞ்சோலையிலிறங்கி மதனலீலைகள் நடத்திவரலானான். அப்போதொருநாள் புஷ்பங்களைக் கொய்து வரும் ரங்கதாசன் அக்காந்தர்வ ஸ்திரீகளின் அழகில் மயங்கினவனாய் இந்திரியம் ஸ்கலிதமாக,உடனே தெளிந்து லஜ்ஜா பயத்துடன் கொய்த புஷ்பங்களை யோர் சுனையிலெறிந்து விட்டு, ஸ்வாமி புஷ்கரிணியிற்றீர்த்தமாடி மறுபடியும் வேறு புஷ்பங்களைக்கொய்து வந்து வெகு சுத்திபத்தியுடன் சந்நிதிக்குவந்தான். அப்போது ஸ்ரீயஃபதியான கோபிநாதனும் அசரீரியாய் ரங்கதாசனை நோக்கி வாராய் ரங்கதாசனே! சாபல்யத்தாலே ஆராதனக்காலத்தை யதிக்ரமித்து வந்தாய்; மேலும் நீ காம்யத்தி லிச்சைகொண்டு பக்தி புரிவதால் உனக்கிந்த ஜன்மத்திற் பரமபதமில்லை; நீ இத்தேகம் விட்டுச் சோழராஜனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்து போக பாக்யங்களை நன்றாயனுபவித்து, இப்போது ஜீர்ணமாயுள்ள கோபுர ப்ராகார மண்டபங்கள் முதலான ஜீர்ணோத்தாரண கைங்கர்யங்களை எனக்குச் செய்யக்கடவாய்; நீ எனக்கு அந்தரங்க பக்தனாய் வாழும்போது அனேக சத்துருக்கள் உன்னை எதிர்ப்பார்கள்; அக்காலை உனக்கு விஜயார்த்தமாக எனது சங்கு சக்ரங்களைக் கொடுக்கப் போகின்றேன்; அதற்குமேல் சிறிதுகாலம் சென்றவாறே உனக்கும் உன் குலத்தார்க்கும் மேல்வீடு தருவேன்; ஆகையால் சீக்ரமித் தேகத்தைவிட்டு நான் சொன்னபடி செய்வாயென்றனன்.

அப்படியே ரங்கதாசனும் தன் தேகத்தைவிட்டுச் சோழராஜனது பத்நியாகிய நாககன்னிகையின் திருவயிற்றிற் பிறந்து சகல சாஸ்த்ரங்களையுங்கற்றுப் போகபாக்யங்களனைத்து மனுபவித்துத் தொண்டைமண்டலத்துக் கதிபதியாய்த் தொண்டை

மான் சக்ரவர்த்தி யென்னும் பிரசித்த பெயர்பூண்டு, திருவேங்கடத்தானுக் கத்யந்த பக்தனுய்ச், சகல கைங்கர்யங்களையுங் குறைவின்றிக் காலந்தவறாது நடத்தி வந்து, கோபுரமண்டபங்கள் முதலியவற்றையும் நேர்த்தியாகக் கட்டுவித்து வாழ்ந்து வருங்காலத்தில், இச்சக்ரவர்த்தியின் வைபவத்தைச் சகியாத சத்துருக்கள் பலர் படையெடுத்து வர, அப்போது சக்ரவர்த்தி ஸ்ரீநிவாசனைப் பிரார்த்திக்க, ஸ்ரீநிவாசனும் தன் சங்கு சக்ரங்களை அச்சக்ரவர்த்தியின் விஜயார்த்தமாகக் கொடுத்தருளினுன். சக்ரவர்த்தி அவற்றைப் பெற்றுச் சத்ருக்களை எல்லாம் வென்று ஜெயசீலனுய் ஸ்ரீநிவாசன் திருவடிகளில் தெண்டன்சமர்ப்பித்து ஸ்வாமி! தேவரீர் அடியேனுக்குச் சங்கு சக்ரங்களை ப்ரஸாதித்த விஷயம் எவருமறியும்படி தேவரீர் சங்குசக்ரமின்றி யனைவர்க்கும் சேவைதர வேண்டுமென்று வேண்டிக்கொண்டனன். பகவானும் அவன் வேண்டுகோளுக்கிரங்கிச் சிலகாலம் அங்ஙனமே யாகுகவென்றருளினன். அநந்தரம் ஸ்ரீநிவாசன் சங்கு சக்ரமில்லாமல் சேவை யளிப்பதைக்கண்ட ஜனங்கள் தங்கள் தங்கள் ஜ்ஞானத்துக் கெட்டியவாறு மற்ற அடையாளங்களையும் அநுபவங்களையும் ஒட்டி, வேதசாஸ்த்ர புராணுதி பிரமாணங்களையும் தத்வதர்சிகள் திவ்ய சூக்திகளையும் விவேகியாதவர்களாய் ஸ்ரீநிவாசனை ஐம்முகனென்றும், அறுமுகனென்றும், கோவிந்தனென்றும் பல பல விதம் பிதற்றிவரலாயினர். அப்போது பிரதமத்தில் அநந்தாழ்வானென்றும், அதற்குப்பின் லக்ஷ்மணரென்றும், மூன்றுவது பலராமரென்றும் கலியுகத்தில் ஸ்ரீராமாநுஜரென்றும் சொல்லும்படியான உடையவர் திக்விஜயமாய்ப் பரசமயவாதிகள் பலரையும் வென்று திருமலைக்குவந்தார். ஆங்கு ஸ்ரீநிவாசப்பெருமானை மங்களாசாஸனஞ்செய்து ஸ்வாமீ! இக்கலியுகத்தில் தேவரீர் சங்கு சக்ரமின்றிச் சேவை ஸாதிப்பது நன்றல்லவே; ஜகமெல்லாம் அஜ்ஞானுந்தகாரத்தில் மூழ்கி நசித்துப்போமே; ஆகையால் யதாப்பிரகாரம் சேவை ஸாதித்தருளவேண்டும் என்று பிரார்த்தித்துச் சைவர் முதலானேரை முன்னிட்டுச், சூலமும், மழுவும், கணையும், சங்கும், சக்கரமும் ஸ்வாமி சந்நிதிமுன் கொண்டுபோய் வைத்து, இவற்றில் எந்தப்படையை எம்பெருமான் ஏற்றுக்கொள்கின்றனரோ, அந்தப் படைக்குரிய கர்த்தரவராவர் என்றுரைத்து, அங்ஙனமே செய்யப்,

பகவானும் யதாப்ரகாரம் சங்கு சக்ரங்களை யேந்திச் சேவை ஸாதிக்கலானான். இதர மதஸ்தர்கள் கண்டு நாணிப்போயினர்.

அநந்தரம் தொண்டைமான் சக்ரவர்த்தி அத்திருமலையில் ஓர் புற்றில் நித்யவாசஞ்செய்து வந்த பூவராகப்பெருமாள் வைபவத்தை ஒரு வேடனாலறிந்து, காராம்பசுவின் பாலினால் அப்புற்றைக்கரைத்து, அதில் எழுந்தருளியிருக்கும் அர்ச்சாரூபியான ஸ்ரீவராகப்பெருமாளுக்குக் கோபுரமண்டபாதிகளையுங் கட்டுவித்துச் சகல கைங்கர்யங்களும் காலந்தவறாது நிறைவேறிவரத் திட்டஞ்செய்தான்.

பிறகொருநாள் ஸ்ரீநிவாசன் திருவடிகளின்மேலே மண்ணாற்செய்த துளசீதளங்களாதி புஷ்பங்கள் ஏறியிருக்கக்கண்டு ஆச்சரியமுற்று இவ்வழகிய பரிமள மண்மலர்கள் யாரால் அர்ச்சிக்கப்பட்டனவோ அதனை அறிய ஆவல்கொண்டு, தொண்டைமான் ஸ்ரீநிவாசன் திருவடிகளில் சாஷ்டாங்கதெண்டனிட்டுப் பிரார்த்திக்க, ஸ்வாமியும் கிருபைகூர்ந்து இவை குருவபுரத்திலுள்ள பீமனென்னும் குயவனாகிய என் அந்தரங்கபக்தனொருவனால் மானசஞானத்தினாலே ஏகாந்தமாகத்தியானித்து அர்ச்சிக்கப்பட்ட மலர்கள் என்றுரைத்தருளத் தொண்டைமானும் அதிப்ரீதியுக்தனாய்க் குருவைநம்பியைக் கண்டு ஆனந்தக்கடலிலழுந்தினான். உடனே குருவைநம்பியும் பரமபதத்தை யடைந்தனர்.

அநந்தரம் ஒருநாள் தொண்டைமான் இந்த ஸ்ரீநிவாசன் தயாபரவசராய்ப் பாரதயுத்தத்தில் சுலபராய்க்கொண்டு அர்ச்சுனனுக்குச் சாரத்யஞ்செய்த சின்னங்களுடனே அடியேனுக்குச் சேவை சாதித்தருளி யாட்கொள்வரோவென்று தியானித்துக்கொண்டிருப்பதைச் சர்வாந்தரியாமியான ஸ்ரீநிவாசன்தெரிந்து சந்தோஷத்துடன் சக்ரவர்த்தியை நோக்கி நீ அர்த்தித்த திருக்கோலத்தைத் "தென்னன் தொண்டையர்கோன் செய்த நன்மயிலைத் திருவல்லிக்கேணி" என்னும் பிரசித்தமான கைரவிணிதீரமாகிய பிருந்தாவனத்திற்கு வந்தால் அந்தக் கைரவிணி புஷ்கரிணிக் கரையிலே சேவை சாதிப்போமென்றருளிச்செய்தான். அவ்வண்ணமே பிருந்தாவனத்தில் கைரவிணி புஷ்கரிணி மேலைக்கரையில் கிழக்கே திருமுகமண்டலமாகப் பார்த்தசாரதிஎன்னும் வேங்கடகிருஷ்ணப் பெருமாள், ஸ்ரீருக்மணி, நம்பிமூத்தபிரான், சாத்துவீகியாழ்வான், அநிருத்தாழ்வானுடன் சேவைஸாதிக்கத் தொண்டைமான்சக்ரவர்த்தியும் அதிப்ராவண்யத்தோடு சேவித்துத் திருப்ரதிஷ்டை செய்து வைகாநஸ விதியாலே ஆராதித்து க்ஷேத்ரக்யையான வேதவல்லித்தாயார், மன்னாதர், தெள்ளிய சிங்கர், சக்ரவர்த்தித்திருமகனார், கசேந்த்ரவரத ராஜப்பெருமாள் ஆகிய இவர்களையும்சாஷ்டாங்கமாகத்தெண்டனிட்டுத்தீர்த்தப்ர

ஸாத முதலான வரிசைகளையும்பெற்று, விமாநகோபுர ப்ரகார மண்டபாதி சந்நிதி கைங்கர்யங்களைச்செய்து, அநேகமான திருவாபரணங்களைச் சமர்ப்பித்து, ஐந்துப்பிரகாரங்களாகச் சேவை சாதித்தருளும் பெருமாள்களுக்குத் திரிகால ஆராதனங்கள் குறைவின்றி நடக்கும்படியாகச் செய்வித்தனந்தரம் பார்த்தசாரதிக்குச் சுபமான ஆவிர்ப்பாவத்தை யுடைத்தான சைத்ரமாதத்திலே பிரஹ்மோற்சவஞ் செய்வித்து ஆனந்தித்துத் திருவேங்கடத்தானைச் சர்வகாலமும் ஆராதித்துக் கொண்டிருந்தான்.

மேற்சொன்ன கைரவிணிபுஷ்கரிணிக் கரையிலே தவஞ் செய்து கொண்டிருந்த முத்கலரிஷி அந்தக் கைரவிணியிலுள்ள மச்சங்களின் ஆரவாரத்தால் தவத்துக்கிடையூறு நேரிடுகின்றதென்று அதில் யாதொரு ஜந்தும் இனி இருக்கலாகாதென்று சபிக்க, அவ்வண்ணமே இன்றும் அத்தடாகத்தில் யாதொரு ஜந்தும் சேர்கின்றதில்லை.

மாறனேர்நம்பி பூர்வவைபவம்.

இவர் பராந்தகம் என்னும் ஓர் குக்கிராமத்தில் பஞ்சமவர்ணத்தில் அவதரித்தவர். ஒருநாள் ஸ்ரீஆளவந்தார் தமது கோஷ்டிகளுடன் யாத்ரைசெய்து வரும்போது மார்க்கத்தில் கழனிசீர்திருத்திக்கொண்டிருந்த இவர், பசிமேலிட்டு அங்குள்ள சேரு நீருங்கலந்து ஒரு கைப்பிடியெடுத்துப் பகவதர்ப்பணஞ் செய்து உட்கொண்டார். இதைக்கண்ட ஸ்ரீஆளவந்தார் இதுவென்னென்று ஆச்சரியப்பட்டுத் தம் கோஷ்டிகளை நோக்கி ஸர்வேச்வரன் ஜீவகுக்ஷிபாதைக்குரிய அன்னபானாதிகளை வெகுவாய் ஸ்ருஷ்டித்திருக்க, இதோ கழனியருகே யிருக்குமிவர் சேற்றைப்புசிப்பானேன்? இதனை அறிந்து வாருங்களென்று ஆஜ்ஞாபிக்க; அங்ஙனமே கோஷ்டிகள் அவரிடஞ்சென்று அவரது செய்கையின் கருத்தைக்கேட்டருள; அவரும் ஸ்வாமிகாள்! அடியேன் இம்மண்ணிற்கும் அம்மண்ணிற்கும் வாசியறிகிலேனென்றுரைத்தார். இது தெரியவந்த ஸ்ரீஆளவந்தார் ஜனித்தபோதே சடத்தை முனிந்த மாறனாகிய ஸ்ரீசடகோபரோ இவர் என்று இவரது ஜாஞாதிசயத்திற்கு அதி விஸ்மயப்பட்டு இவர்க்கு இன்றுமுதல் மாறனேர் நம்பியென்று திருநாமம் வழங்கக்கடவதென்றருளி இவரைத் தம்முடன் வரும்படி யழைத்தருள, இவரும் தாம் சண்டாள வருணத்தராகலின் கிட்டும் யோக்யதை

யில்லையே என்ன; ஸ்ரீஆளவந்தாரும் ப்ரஹ்மஜ்ஞானிகட்கு வருணபேதமின்மையின் தடையின்றி வரலாமென் றழைத்துச்சென்றனர்.

அநந்தரம் ஸ்ரீஆளவந்தார், மாறனேர்நம்பியை ஸ்ரீரங்கம் வடதிருக்காவேரி, ஸ்ரீஆளவந்தார் படித்துறையின் கீழண்டை இருக்கும்படி நியமித்துத் தாம் வழக்கம்போல் காலக்ஷேபஞ் செய்து வரலாயினர். மாறனேர்நம்பியும் தமக்கு நிர்ஹேதுவாக லபித்த ஆசார்ய சந்நிதானத்துக்கு மிகவும் ஆனந்த பரிபூரிதராய், ஸ்ரீஆளவந்தாரைப்போல் மண்ணால் ஓர் விக்கிரகம் செய்து, அத்திருவிக்ரகத்தையே சதா தியானித்து அர்ச்சித்து வந்து ஆசார்யாபிமானந்தர்ப்பூதராய், ஸ்ரீஆளவந்தார் செய்து வரும் காலக்ஷேபங்களை வெளியேயிருந்து கேட்டநுபவித்து வந்தார். இவருக்கு ஸ்ரீஆளவந்தார் சதா ப்ரத்யக்ஷசேவை சாதித்து வருவர்.

இங்ஙனமிருக்கக், கோஷ்டிகளனைவரும் வீற்றிருப்பதற்குக் காலக்ஷேபக்கூடம் இடம் போதாதிருந்தபடியால் அக்கூடத்தைச் சார்ந்துள்ள ஓர் அம்மையாரது நிலத்தையும் அதனுடன் கூட்டிக்கொள்ள இஷ்டங்கொண்டு அந்நிலத்துக்குரிய அம்மையாரை அதனைத் தரும்படி ஸ்ரீஆளவந்தார் கேட்க; அம்மையாரும் தமக்கு மேல்வீடு தரும்பக்ஷத்தில் அந்நிலத்தை விடுகிறேனென்றுசொல்ல; ஸ்ரீஆளவந்தார் அது தம்மாலாகாதே என்ன; ஆகில், பெரிய பெருமாளுக்குத் தேவர் கைப்பட ஒரு சிறு முறி எழுதித்தாரும் என்று அம்மையார்வேண்ட; அங்ஙனமே அவரும் எழுதித்தந்தருள; அம்மையாரும் அம்முறியை அத்யந்த பயபக்தி விஸ்வாஸத்துடன் சிரஸாவகித்து எடுத்துக்கொண்டு போய், பெருமாள் திருவடிகளில் அர்ச்சகமுகேந சமர்ப்பிக்க; அது பெருமாள் சிரசின்மே லேறியருளக்கண்டு அங்குள்ளவர் யாவரும் வியப்புற, அம்மையாரும் உடனே திருநாடலங்கரித்தனர்.

ததனந்தரம் ஸ்ரீஆளவந்தார் அவ்வம்மையாரது நிலத்தையும் கூட்டிக் காலக்ஷேபக்கூடத்தைப் பெரிதாக்கும்படி நியமித்தருளக் கோஷ்டிகளும் அவ்வண்ணமே செய்து அதில் காலக்ஷேபந்தொடங்கசுபமுகூர்த்ததினத்தை எதிர்பார்த்திருந்தனர். அவ்வளவில் மாறனேர் நம்பி கோஷ்டிகளைப்பார்த்து ஸ்வாமி

காள்! இக்காலக்ஷேபக்கூடத்துள் ஸ்தலசுத்தியானபின் நுழைவதற்கு அடியேன் அருகனுயிராதபடியால் ஸ்தலசுத்தியாவதன் முன்பே உள்நுழைந்து பார்த்துச் சேவிக்கும்படி க்ருபை செய்தருள வேண்டுமென்று விண்ணப்பிக்க; அப்படியே ஒருவர் இவரை அதனுள் அழைத்துச் சென்று காட்டினர். மாறனேர் நம்பியும் கண்டு களித்துச் சாஷ்டாங்க தெண்டன் சமர்ப்பித்து வெளியேறினர். இதனைக் கேள்வியுற்ற ஸ்ரீஆளவந்தார் பரம சந்துஷ்டராய்க் கோஷ்டிகளைப் பார்த்து, எப்போது ஒரு பரம பாகவதரது திருவடி ஸ்பரிஸம் பட்டதோ அப்போதே நமது காலக்ஷேபக்கூடம் பரிசுத்தமாய் விட்டதால் இன்னுமொரு சுப தினத்தை நாம் எதிர் நோக்குவானேன்? இப்போதே காலக்ஷேபத்தை ஆரம்பஞ் செய்வோமென்ன; அனைவரும் அக்கூடத்திற்சென்று வீற்றிருந்து காலக்ஷேபம் கேட்கலாயினர்.

அநந்தரம் ஒருநாள் ஸ்ரீஆளவந்தார், பெரியபெருமாள் திருவடிதொழச்சென்று தெண்டன் ஸமர்ப்பித்து, பாதாதி கேசாந்தமாகவும், கேசாதி பாதாந்தமாகவும் பெரிய பெருமாளைச் சேவித்து நிற்கத் திருமாலை, தீர்த்தம், சடகோபம் ப்ரஸாதிக்கப்பெற்றுத், திருப்பதியார் திருத்தளிகை ப்ரஸாதமும் பிரசாதிக்கப்பெற்றுப் பெருமாளை ஸேவித்துக்கொண்டிருக்கிறவளவிலே, நம்பெருமாள் ஸ்ரீஆளவந்தாரைக் கடாக்ஷித்து 'நம் மேல்நாட்டை யுமக்குத் தந்தோம்' என்று அர்ச்சகமுகேந அருளப்பாடிட் டருளினர். ஸ்ரீஆளவந்தாரும் அதைக்கேட்டருளி நாயன்தே! நாயன்தே!! அடியேன் இன்னம் கொஞ்சம் பிராக்ருதம் அனுபவித்துத் தீரவேண்டுமே என்று விண்ணப்பஞ்செய்ய, அந்தஅநுபவத்தை உம்முடைய சிஷ்யவர்க்கங்களில் ஆருக்காவது ஸாதியும் என்றருளிச்செய்ய, அப்பால் ஸ்ரீஆளவந்தாருடைய சிஷ்யவர்க்க முதலான ஸ்ரீவைஷ்ணவர்களெல்லோரும், நம்பெருமாளுடைய வஞ்சகத்தை நினைத்து, இந்த ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்துக்கு உத்தாரகராய் இருக்கப்பட்ட ஸ்ரீஆளவந்தாரைப் பரமபதம் போகும்படி நேமித்ததற்கு விசனப்பட; ஸ்ரீஆளவந்தார் தம்முடைய சிஷ்யர்களைப் பார்த்து, 'இளையாழ்வாரை யழைத்துக்கொண்டு வரப்போன பெரியநம்பி வருகிற சமயமாயிருக்கிறதை நம்பெருமாள் தெரிந்துகொண்டு, நாமும் இளையாழ்வாரும் ஒன்றுகக் கலந்தால் லீலாவிபூதிக்கும் நித்ய

விபூதிக்கும் ஜ்ஞானத்தால் சோபானம் கட்டுவோமென்றும், அதனல் தமது லீலைக்குக் குறைவு நேரிடுமென்றும், பெருக்க யோசித்து நமக்கு மேல்நாட்டைத் தந்தருளினர்; நீங்கள் துக்கா வேசராய் சோகிக்கவேண்டாம் என்றுசொல்லி நம்பெருமாளைப் பாதாதிகேசம் கேசாதிபாத்யந்தம் ஆனந்தமாய்ச் சேவித்து, இந்தத் திவ்யமங்கள சேவையைப்போல் அந்த மேல்நாட்டிலும் தந்தருள ப்ரபத்தி பண்ணுகையில், பெருமாளும் அப்படியே ஆகட்டுமென்று அர்ச்சகமுகேந சாதித்து விடைகொடுத் தனுப்பினர். ஸ்ரீஆளவந்தாரும் கோவில் அனந்த கொத்துப் பரிசனங்களையும் திருவரங்கத்தரையரையும் பார்த்துக் காலாகாலங்களில் பெரிய பெருமாளுக்குக் குறைவு நேராமல் வருஷோற்சவம், மஹோற்சவம், பஞ்சபருவோற்சவம், ஆழ்வாராதிகளுடைய திருநட்சத்திர முதலியனவற்றை நடப்பித்து வாருங்கோளென்று திட்டஞ்செய்து, அங்குள்ள ஸ்வாமிகளைப் பார்த்து, அடியேனல் இதுவரையில் நேரிட்டுள்ள அபசாரங்களை க்ஷமித்தருள வேண்டுமென்று விழுந்து தண்டன் ஸமர்ப்பிக்க, அப்போது சகலரும் பெரியபெருமாளுக் குண்டாகி லுமக்கும் உண்டாமென்று முடியைப்பிடித்தெடுத்து, எல்லாருந் தண்டன் ஸமர்ப்பித்து நிற்க; அப்போது பெருமாள் ஸ்ரீஆளவந்தாரை ப்ரஹ்ம ரதத்தி லெழுந்தருளப்பண்ணி அனந்தகொத்துடனே மடத்தில் விட்டு வாருங்கோளென்று ஆஜ்ஞாபிக்க, அவ்வண்ணமே ஸ்ரீஆளவந்தாரை விமானத்தி லெழுந்தருளப் பண்ணிக் கொண்டுபோய் நாலுவீதியிலும் சகல வாத்யங்களுடனேயும் அனந்த கொத்துப் பரிஜனங்களுடனேயும் பிரதக்ஷணமாய் வந்து மடத்திலே யெழுந்தருளப் பண்ணினர்கள்.

பின்பு ஸ்ரீஆளவந்தார் முதலிகளைப்பார்த்து நம்பெருமாள் நியமனப்படி தமது பிராக்ருதமான அநுபவ விசேஷத்தை உங்களில் யார் அங்கீகரித் தேற்றுக்கொள்ளுகிறீர்கள் என்று கேட்டருள; முதலிகளெல்லாரும் ஒன்றும் பேசாமலிருந்துவிட்டார்கள். அப்போது ஸ்ரீஆளவந்தாருடைய அபிமானந்தர்ப்பூதரான மாறனேர் நம்பிஎன்பவர் தூரநின்றெழுந்திருந்து ஸ்ரீஆளவந்தார்க்குக் கேட்கும்படி நாயன்தே! நாயன்தே!! என்று விழுந்து தெண்டன் ஸமர்ப்பித்து நிற்க; ஸ்ரீஆளவந்தார் கிருபையுடனே அவரை யருகேவரும்படி நியமனமிட, அவரும் அடியேன் சண்

டாளன் என்று தூரமாயிற்க; அந்தக்குலம் உமக்கில்லை வாரு மென்று கிட்டே வரவழைத்து, வேண்டுவ தென்னென்று வினவ; அடியேனுக்குத் தேவர் இப்போது கோஷ்டியில் நியமித்த பிரசாதம் வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய; அதனுடைய உபத்திரவம் நீர் சகிப்பீரோவென்ன; அதுவே அடியேனுக்கு மகா ப்ரசாதமென்று தெண்டன் சமர்ப்பிக்க; ஸ்ரீஆளவந்தாரும் அவருக்கு ஸ்ரீபாததீர்த்தம் சேர்த்துத் தமது பிராக்ருத அனுபவத்தை நோக்கி 'ஏ! ப்ராக்ருத அனுபவமே! நாம் அனுபவிக்கவேண்டிய மிச்சநாளும் மாறனேர் நம்பியிடம் போயிரு' என்று நேமித்து முதலிகளைப்பார்த்து, அந்திம குலத்திலுதித்த மாறனேர் நம்பியின் திடம் உங்களுக்கில்லாமற் போயிற்றே என்று சொல்லி, அநந்தரம் பூர்வம்போலே காலக்ஷேபம் நடத்திவந்தார்.

மேற்சொல்லிய மாறனேர் நம்பி தம்முடைய ஆசாரியர் பிரஸாதித்த ராஜரணமாகிய பிராக்ருதானுபவத்தை மகா ப்ரஸாதமென் றங்கீகரித்த நாள்முதல் அந்த உபத்திரவத்திலேயே ஈடுபட்டுக்கொண்டு அந்த அநுபவமே ஆசார்ய கைங்கர்யமாயெண்ணிக்கொண் டெழுந்தருளி யிருக்கிறகாலத்தில் தமக்குத் தளிகைபண்ணி ஸாதிக்கிறவர்க ளில்லாமலும் அந்த உபத்திரவத்தால் தமது திருக்கையால் தளிகை பண்ணுகிறதற்குச் சக்தியில்லாமலும் எழுந்தருளியிருக்க, பெரியநம்பிகள், மாறனேர் நம்பியைப் பார்த்தருளி, அந்த ராஜரணத்தினாலே உபத்திரவப் படும் சிரமையைக்கண்டு மிகவும் ஆஶ்சரியப்பட்டு இவருடைய தன்றோ ஆசார்ய நிஷ்டை என்று நினைத்து ஸ்தம்பித்து அவரைத் தண்டன் ஸமர்ப்பிக்க, மாறனேர் நம்பியும் அடியேன் பஞ்சமனுச்சுதே தேவரீர் இப்படி செய்பலாமோவென்றும், அடியேன் அபசாரப்பட்டுப் போவேன் என்றும் விண்ணப்பஞ் செய்ய, அப்படி யல்லவென்று பெரியநம்பியும் அன்றுமுதல் ப்ரஸாதங் கொண்டுவந்து மாறனேர் நம்பியை அமுதுசெய்யப் பண்ணுவித்துக்கொண்டு வந்தார்.

இப்படி நடந்து வருகிறபோது, பெரியநம்பி ஒருநாள் மாறனேர் நம்பிக்கு அமுதுசெய்யப் பிரஸாதம் கொண்டுபோகையில், ராத்திரிகாலமா யிருந்தபடியினாலே உடையவர் தம் ஆசார்யரான பெரியநம்பிக்கு என்னதீங்கு வரப்போகிறதோ வென்று அவருக்குத் தெரியாமல் பரஸ்பரமாய்த் திருமேனிக்

காவலாய்க் கூடவேதொடர, பெரியநம்பியும் மாறனேர்நம்பி எழுந்தருளி யிருக்கப்பட்ட நந்தவனத்தண்டைபோய் அவரை அமுதுசெய்விக்கப் புஷ்கரிணியிலிருந்து தீர்த்த மெடுத்துவந்து திருமஞ்சனமாடுவித்துத் திருவடிவிளக்கித் திருமண்காப்பு சாத்தின பிறகு, ஸ்ரீஆளவந்தாருடைய ஸ்தோத்திரத்தையும், முகுந்த மாலையையும் தியானித்துக்கொண்டு ஆளவந்தார் திருவடிகளே தஞ்சமென்று சரமநிஷ்டாபரராய் இருக்க, பெரிய நம்பியும் அவரை அமுது செய்யுமென்று இலையில் தளிகைபரிமாற, அவரும் அமுதுசெய்ய எத்தனிக்கும்போது அந்த நந்தவனத்தில் மாறனேர் நம்பியிருக்கிற பர்ணசாலையின் பின்பக்கமாகக் கூடவே எழுந்தருளின எம்பெருமானார், தமதுஆசார்யரான பெரிய நம்பி தமக்கு ஆசார்யரான ஸ்ரீஆளவந்தார் திருவடிகளை ஆஶ்ரயித்த மாறனேர் நம்பிக்கு இப்படியும் அந்திமகுலமென்று எண்ணாமல் ததீய நிஷ்டையை என்னபண்ணி வருகிறாரென்று ஆச்சரியமடைந்து மெய்ம்மறந்து திருவரங்கத்தெம்பெருமானை நோக்கி, இப்படியும் இந்த மாறனேர் நம்பிக்கு ராஜரண உபத்திரவங்கண்டு கிருமிகள் காணலாமோவென்று ப்ரபத்தி பண்ணினார். அந்த க்ஷணத்திலேயே அந்த ராஜரணம் எங்குமின்றி மறைந்து நல்ல தேகமாய் விளங்க, மாறனேர்நம்பி தன் தேகத்தைக்கண்டு பெரிய நம்பிகளை நோக்கி ஐயோ! அடியேனுடைய ஆசார்யர்பணித்த மஹாப்ரஸாதமானது அடியேன் அன்னிய சேஷப்பட்டு வந்த தோஷத்தினாலே அடியேனைவிட்டு நீங்கிப் போய்விட்டது. அடியேனுக்குத் தேவர் கைங்கர்யம் செய்வது போற் காட்டி அடியேனுடைய ஆசார்யர் பணித்த பிரஸாதத்தை மனம்பொறுக்காமல் விலக்கிவிட்டீர். அடியேன் என்ன அபராதம் தேவருக்குச் செய்தேன்? ஒன்றுமில்லையே? அடியேன் சண்டாளனாதலின் இவனுக்கும் இந்த ப்ரஸாதம் லபிக்கலாமோ வென்னும் பொறாமையால் இப்படி செய்தீர் என்று கல்லையெடுத்து சிரசில்மோத எத்தனிக்கும்போது, ஆங்கு மறைந்திருந்த எம்பெருமானார் இவ்வைராக்கியதிடத்தைக்கண்டு அதிசயித்து இப்பழிபாவத்துக்கு நாமேன் ஆளாகவேண்டுமென்று நினைத்து எபபோதும்போல் மாறனேர் நம்பிக்கு ராஜரண உபத்திரவம் வரவேண்டுமென்று மீண்டும் பெரிய பெருமாளைப் பிரபத்தி பண்ணியருளினார். உடனே ராஜரணம் மாறனேர்நம்பிக்கு

வந்துவிடவே, மாறனேர்நம்பியும் அதிப்ரீதராய்க் கண்ணிழந்தவன் கண் பெற்றதுபோல ஆனந்தபரவசராய் எழுந்து நின்று ந்ருத்தஞ்செய்து பெரிய நம்பிகள் திருவடி தீர்த்தம் ஸ்வீகரித்து அடியேன் உமது விஷயத்தில் வீணே அபசாரப்பட்டேன்: அடியேனுக்குக் கிடைத்த ஆசார்ய மஹாப்ரஸாதம் எப்போதும் போல் வந்துவிட்டது, தன்யனாயினேன்; அடியேனது அபராதத்தை க்ஷமித்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, பெரிய நம்பியும் இப்புதுமையைக்கண்டு ஆச்சரியப்பட்டு அடியேன் அந்நியசேஷப்படவில்லையே என்று அவ்விடத்தைவிட்டு எழுந்திருந்து வெளியே வந்து பார்க்கும்போது ஆஜாநுபாகுவாயும், அதிக சுந்தரராயும், கம்பீரராயும், வலியவராயும், மகாநுபாவராயும், தயாளுவாயும் எழுந்தருளியிருக்கிற உடையவர், திரிதண்டத்தை அஸ்தத்திலே எடுத்துக்கொண்டு பூரணமான சந்த்ர ப்ரகாசத்தில் காவிவேஷ்டி பிரகாசிக்க ஓடுவதைக் கண்ணுற்று, இவர் எம்பெருமானாரென்று தெரிந்து, இவருக்காக நம்பெருமாள் இரங்கினாரென்று மாறனேர் நம்பியினிடம் விண்ணப்பஞ் செய்தார். மாறனேர் நம்பியும் அது சரியே; ஆனால் அடியேனுடைய ஆசார்யன் சாதித்தபிரசாதம் அடியேனுக்கு உத்கிருஷ்டமானபடியாலே துக்கப்பட்டேனென்று விண்ணப்பம்செய்தார். அநந்தரம் ஒருநாள் மாறனேர்நம்பி, பெரிய நம்பியைப்பார்த்து இற்றைக்கு மூன்றாம்நாள் அடியேனதாசார்யராகிய ஸ்ரீஆளவந்தார் அடியேனுக்குத் தமது திருவடிகளை ஸாதிக்கப்போகின்றார்; அப்போது கன்மஜ்ஞானமாயிருக்கும் நிஷ்டையோடு கோவிந்தா கேசவா என்று ஆத்மா விடிப்போனால், தேகத்தை ஸம்ஸ்கரித்துப் புஷ்கரிணியில் தீர்த்தமாடித் திருமாளிகைக் கெழுந்தருளவும்; அல்லாமல் பக்திநிஷ்டையாகிய ஆழ்வார்களுடைய குணாநுபவ ப்ரபத்தி நிஷ்டைபண்ணி ஆத்மாவிடிப்போனால், பள்ளிபடுத்தி அடியேனுடைய தேகத்தை ஸம்ஸ்கரித்து சஞ்சயனம் பண்ணிப் புஷ்கரிணியில் கண்ட ஸ்நானம்செய்து திருமாளிகைக் கெழுந்தருளவும்; மூன்றாவது எவ்வித அந்நிய த்யானமுமில்லாமல் அடியேனுடைய ஆசார்யராகிய ஸ்ரீஆளவந்தார் திருவடிகளை த்யானித்துக்கொண்டு ஆத்மாவிடிபபோனால் அடியேனுடைய தேகத்தை இதர சாஸ்த்ரப்ரகாரம் ப்ரபன்னருக்குச் செய்யப்படு முறையைக்கொண்டு ஜிதையை அடுக்கிப் பள்ளிபடுத்தி ஸம்ஸ்காரம்செய்து சஞ்சயனமானவுடனே புஷ்கரிணி

யில் பாதத்தை அலம்பிக்கொண்டு திருமாளிகைக் கெழுந்தருள
வும் என்று அருளிச்செய்தார். அப்படியே அற்றைக்கு மூன்று
நாள் பெரியநம்பி நந்தவனத்துக் கெழுந்தருளி யிருக்கையில்
மாறனேர்நம்பி தம்மிடம் அர்ச்சாவிக்ரகமா யெழுந்தருளியிருக்
கும் ஸ்ரீஆளவந்தாரைப்பார்த்து அடியேன் இதுவரையில்பட்ட
அபசாரத்தை க்ஷமித்தருள வேண்டுமென்று திருவடியைக் கட்
டிக்கொண்டு விழுந்து கிடக்கும்போது, பெரிய நம்பி அவரை
முடிபிடித்தெடுத்து எம்பெருமானுக்கோ ரபசாரமுண்டாகில்
தேவருக்கும் அபசாரமென்று ஸாதிக்க, உடனே பெரிய நம்பி
யினுடைய ஸ்ரீபாததீர்த்தம் சேர்த்துக்கொண்டு ஸ்வீகாரஞ்செ
ய்து பத்மாசனம்பண்ணிக்கொண்டு தமதாசார்யராகிய ஆளவந்
தாருடைய திருமேனியையும் ஸ்ரீஸூக்தியையும் தமது கண்களி
லும் மனதிலும் தேக்கிக்கொண்டு அடியேனதாசார்யர் திருவடி
களே உபாயோபேயமென்று சரமநிஷ்டாபரராய் அஸ்தத்தைக்
கூப்பிக்கொண்டிருக்கையில் ப்ரஹ்மகபாலம் பேதித்து ஆசார்
யன் திருவடியை அடைந்தார். அநந்தரம் ஏகாச்சாரிய சம்பந்த
முள்ளவராகிய பெரிய நம்பியும் மாறனேர்நம்பியை ப்ரஹ்ம
மேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்தருளினர்.

பின்பு பத்துநாள்வரையில் செய்யவேண்டுங் கிருத்யங்க
ளெல்லாம் செய்து திருவத்யயனமும் நடத்தினர். அநந்தரம்
நம்பெருமாள் ஸந்நிதியிலுள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும்
கேட்டருளிப் பஞ்சமவர்ணத்தில் அவதரித்தவராகிய மாறனேர்
நம்பிக்குப் பெரியநம்பி சரமகைங்கரியம் பண்ணினரென்று மிக
வும் திரஸ்காரமாய் பெரிய நம்பி திருமாளிகையைமூடித் தெரு
வாசலில் முள்ளுகளைப்போட்டு ஒருவரும் அவர் திருமாளிகைக்
குப்போகாமலும் அவரை ஒருவர் அகத்துக்கும் வரவொட்டாம
லும் விலக்கிவைத்தார்கள். இப்படிக்கிருக்க, நம்பெருமாள்
மஹோத்சவம் கண்டருளும்போது திருத்தேரில் எழுந்தருளிப்
பெரியநம்பிகள் வசிக்கும் திருவீதியே வரும்போது பெரியநம்பி
திருக்குமாரத்தியாகிய அத்துழாயம்மாள் வெளியே முற்றத்து
க்கு வந்து நம்பெருமாளைத் தண்டன் ஸமர்ப்பித்து "முனியே
நான்முகனே", "மாயஞ்செய்யேலென்னையும்" என்னும் பாசுரங்
களையோதி "உன்றிருமார்பத்து மாலைநங்கை, வாசஞ்செய் பூங்
குழலாள் திருவாணை நின்னாணை கண்டாய்" என்று ரதத்தை
மறுத்து நீஆயர்குலத்திற் புகுந்து மாடுமேய்க்கும் பிள்ளைகளுட
னே ஒன்றாய்க்கலந்து எச்சில்பாராது போஜனம்செய்தாய்; அன்
றியும் அந்திமகுலத்தில்வளர்ந்த திருப்பாணாழ்வாரை ஸ்வீகாரம்
பண்ணினாய்; அதுபோல், மகாபூர்ணராகிய பெரியநம்பி மாற
னேர் நம்பியைச் செய்தாரா? இல்லையே? ஏகாச்சார்ய சம்பந்த

முள்ள மாறனேர் நம்பியை அடியேன் தகப்பனாராகிய பெரிய நம்பி ப்ரஹ்மமேத ஸம்ஸ்காரஞ் செய்ததற்கு இத்திவ்யதேசத்தி லெழுந்தருளி யிருக்கிற ஸ்ரீவைஷ்ணவர்கள் யாவரும் பெரிய நம்பியை விலக்கித் தெருவாசலில் முள்ளைப்போட்டிருக்கிறார் கள். ஆகையால் பெரிய நம்பி செய்தது உத்தேஸ்யமென்றும் அல்லவென்றும் தெரிவித்த பிறகே திருத்தேர் அப்பாற் போக வேண்டுமென்று நம்பெருமாளைப் பிரபத்தி பண்ணியருளினாள். அப்படியே திருத்தேர் போகாமல் சாயந்தரபரியந்தம் அங்கே நின்று போயிற்று. அப்போது பெருமாளுக்குக் கிருபை பிற ந்து கந்தாடையண்ணனுக்கு அர்ச்சகமுகேந அருளப்பாடிட்டுப் "பெரியநம்பியை உமது தோளின்மேல் எழுந்தருளப்பண்ணி வாருமென்று" ஆஜ்ஞாபிக்க, அப்படியே அவர் பெரியநம்பி திருமாளிகைக்குட் புகுந்து அவரைத் தமது தோளின்மேல் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு திருத்தேர்தட்டில் கொண்டு வந்துவிட, பெருமாளும் பெரிய நம்பியை மிகவும் கடாக்ஷித்து அர்ச்சகமுகேந நீர் மாறனேர் நம்பிக்குச் சரமகைங்கர்யம் செய் ததற்காக நாம் போரவுகந்தருளினோம் என்றருளிச்செய்து திரு மாலை திருப்பரியட்டம் ஸ்ரீசடகோபம் முதலான வரிசைகளெ ல்லாம் பிரசாதித்தருளி இவரை முன்புபோல் கோஷ்டியில் எழு ந்தருளி யிருக்கும்படி நியமனமிட்டருளினார். அநந்தரம் திருத் தேர் நிலையில் வந்து சேர்ந்தது. பின்பு எம்பெருமானார் முதலி களுக்குப் பாஷ்யார்த்தம் ப்ரஸாதியா நின்றுகொண்டு வாழ்ந் தருளினார்.

பொன்னாச்சியார் தமது நகைகளனைத்துங் கழற்றியளித்த விஷயம்:—

பிள்ளைஉறங்கா வில்லிதாசர் ஐட்டிவேலையிலிருந்து பிரதி தினம் ஆயிரம்பொன் சோழராஜாவினிடம்பெற்றுத் தமது கை யினாற்றொடாமலே பல்லயத்தாலேந்தி வந்து உடையவர் திரு வடிகளில் சமர்ப்பித்துக்கொண்டு வருவர். இது ஸ்ரீபாகவதாள் விஷயத்திலேயே ததீயாராதனத்திற் செலவாகும். இவ்விதம் நடந்து வருகிறபோது உடையவர் தம்முடைய திருவடி சம் பந்திகளான முதலிகளுடன் திருக்காவேரிக் கெழுந்தருளி நீரா ட்டஞ்செய்து அநுஷ்டானங்களை முடித்து வருங்காலையில்,

முதலியாண்டான் ஒருபக்கத்திலும் கூரத்தாழ்வான் ஒருபக்கத்திலுமாக ஈரவாடை வஸ்திரத்தை ஏந்திவர அவ்வஸ்திரத்தின் மீது தமது கைகளை வைத்துப் பிடித்துக்கொண்டு வருவர். அக்காலையில் பிள்ளையுறங்கா வில்லிதாசர் அதிகாலையிலே ராஜஸ்தானத்திற்குப்போய் சேவகம் ஒப்புவித்துத் திரும்பும்போது எம்பெருமானாரைக்கண்டு தண்டன் சமர்ப்பித்து நிற்பர். எம்பெருமானாரும் அவரைத் தமது பக்கல் வரவழைத்து அவர்மீது தமது திருக்கைகளை வைத்துக்கொண்டு தினந்தோறும் மடத்துக் கெழுந்தருளுவர். இவ்விதம் நடந்து வருங்காலத்திலே முதலிகளனைவரும் அதியாஸ்சர்யத்துடனே முதலியாண்டான் கூரத்தாழ்வானுகிய இவர்கள் திருக்கையிலே ஈரவஸ்திரம் ஏந்த அதின்மேல் உடையவர் திருக்கைகளை வைத்தெழுந் தருள்வதும் ஜட்டி பிள்ளையுறங்கா வில்லிதாசர் திருக்கையை வெறுமனே பிடித்தெழுந் தருள்வதும் கண்டு விஸ்மயபட்டு ஒருவர்க்கொருவர் அந்தரங்கமாய் யோசித்துக் கொண்டிருப்பர். இவ்விஷயம் உடையவரறிந்து ஒருநாள் கோஷ்டிகள் தங்கள் ஈரவஸ்த்திரத்தை மடத்திலே உலரக்கட்டி உள்ளே ததியாராதனம் அமுதுசெய்யப்போன சமயத்தில் ஒரு ஸ்ரீவைஷ்ணவரைக் கொண்டு உலரும் ஈரவஸ்திரங்கள் நாலைந்தனுள் ஒவ்வொருமுழம் கிழித்து வரும்படி அருளிச்செய்ய அவரும் அவ்விதமேசெய்ய; பின்பு கோஷ்டிகள் அமுதுசெய்த வனந்தரம் தத்தம் ஈரவஸ்திரங்கள் கிழிக்கப்பட் டிருப்பதைக்கண்டு மிகவும் வைதுகொண்டிருக்கையில்; உடையவர் அவர்களை நோக்கி இங்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் தவிர மற்றொருவர் உமது ஈரவஸ்திரங்களைக் கிழியார்களே! அங்ஙனமிருக்க நீங்களேன் இவ்வண்ணம் வையவேண்டும், போனால் கைங்கர்யமாயிருக்கட்டுமே யென்றருளிச்செய்ய; அதுகேட்டும் அவர்கள் வைதலை ஒழியாதிருந்தனர். பிறகு உடையவர் இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்களை ஏற்படுத்தித் ததியாராதனைச் செலவுக் குத்திரவியம் இல்லையென்றருளிச்செய்து நீங்கள் பிள்ளையுறங்கா வில்லிதாசர் திருமாளிகைக்குப்போய் அவர் இல்லாதபோது, அவர்தேவி பொன்னாச்சியார் நித்திரைசெய்யுங்காலையில், பதிவிருந்து அத்தேவியார் அணிந்திருக்கும் ஆபரணங்களைக் கழற்றி வரச்சொல்லி அனுப்பினர். அப்படியே அந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் எழுந்தருளிப் பதுங்கியிருந்தனர். பொன்னாச்சியார் பிள்ளை

யுறங்கா வில்லிதாசருக்குச் சகல கைங்கர்யங்களுஞ்செய்து, அவர் இராஜாவி னரண்மனைக்கு எழுந்தருளின அனந்தரம், தாம் ஒரு அறையில் ஒரு மஞ்சத்தின்மீது சயனித்துக் கொண்டிருந்தார். அந்தவேளையில் ஸ்ரீவைஷ்ணவர்கள் உள்புகுந்து ஒருபக்கமாய் ஒஞ்சரித்துச் சயனித்திருக்கிற பொன்னாச்சியார் அணிந்துள்ள ஒருபக்க நகைகள்யாவும் கழற்றிக்கொண்டவுடனே பொன்னாச்சியார் இதுதெரிந்து தமது மற்றொருபக்க நகைகளையும் பாகவத கைங்கர்ய நிமித்தம் கழற்றிப் போகட்டுமேயென்று மெதுவாய்த் திரும்ப, ஸ்ரீவைஷ்ணவர்கள் பொன்னாச்சியார் விழித்துக் கொண்டாரென்று கழற்றின ஆபரணங்களுடன் உடையவர் மடத்துக் கெழுந்தருளி அவர் முன்வைத்துத் தண்டன் சமர்ப்பித்தார். உடையவரும் அவ்வாபரணங்களை வாங்கி ஓரிடத்தில் வைத்து இருந்த பின்னர்; பிள்ளையுறங்கா வில்லிதாசர் தமது திருமாளிகைக் கெழுந்தருளினபோது பொன்னாச்சியார் தெண்டன் சமர்ப்பித்து நிற்க; அப்போது இவர் பெண்ணே! ஒரு பக்கத்து நகை யெங்கேயென்று கேழ்க்க; பொன்னாச்சியார் ஸ்வாமி! அடியேன் நித்திரை செய்யும்போது இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் எழுந்தருளி ஒருபக்கத்து நகையாவும் கழற்றினார்கள், அதுகண்டு அடியேன் மற்றொருபக்க நகையும் பாகவத விநியோக மாகட்டுமேயென்று திரும்பினேன், உடனே அவர்கள் அடியேன் விழித்துக்கொண்டதாக நினைத்துப் போய்விட்டார்கள், ஆகையால் அடியேன் சுதந்தரியப்பட்டேனென்ன; பிள்ளையுறங்கா வில்லிதாசரும் தேவியார்மீது மிகவும் கோபித்துக்கொண்டு சுதந்தரியப்பட்டவளிடம் சம்பந்தம் வேண்டுவதில்லையென்று மூன்றுநாள்பரியந்தம் அமுது செய்யாமல் பட்டினியேயிருந்தார்.

இச்செய்திகளை உடையவர் கேட்டருளிப் பிள்ளையுறங்கா வில்லிதாசரையும் பொன்னாச்சியாரையும் அழைப்பித்து மூன்று நாளாய்ப் பட்டினியிருக்கக் காரணம் என்னென்று கேட்டருள; பிள்ளையுறங்கா வில்லிதாசரும் தண்டன் சமர்ப்பித்து ஸ்வதந்தரியப்பட்ட ஸ்திரீயிடம் பெருமாள் அமுது செய்யவும் அப்பிரஸாதத்தை யங்கீகரிக்கவும் தகுமோ என்று விண்ணப்பிக்க உடையவரும் பொன்னாச்சியாரை யழைத்து நீ ஸ்வதந்தரியப்பட்ட தென்னென்று வினவ; அவ்வம்மையாரும் தண்டன்

சமர்ப்பித்து நடந்த செய்தியை விண்ணப்பம்செய்ய; உடையவரும் பிள்ளையுறங்கா வில்லிதாசரைக் கடாக்ஷித்துப் பொன்னாச்சியார் ஸ்வந்தரியப்பட்டதற்கு என்செய்வதென்று கேட்டருள; அவரும் அடியேனுக்குச் சம்பந்தமில்லை, தேவர் திருவுள்ளப்படி செய்யலாமென்று விண்ணப்பிக்க; உடையவரும் ஆயின் என் மனதுக் கிஷ்டமானவர்க்கு இப்பெண்மணியை யளித்துவிடலாமோவென்றருள; பிள்ளையுறங்கா வில்லிதாசரும் அவ்வண்ணமே செய்யலாமென்று விண்ணப்பிக்க; உடையவரும் பிள்ளையுறங்கா வில்லிதாசரைக் கடாக்ஷித்து இந்தப் பொன்னாச்சியாரை யுமக்கே தந்தோமென்றருளிச்செய்ய; அவரும் ஆசார்ய நியமனத்தை மறுக்கவொட்டாமல் நாயன்தே! நாயன்தே!! என்று அங்கீகரித்தருளினார். அநந்தரம் உடையவர் மடத்துக்கோஷ்டிகளைப் பார்த்து நீங்கள் ஈரவஸ்திரத்தைக் கிழித்தவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள் என்று தெரிந்தும் உதாசீன புத்திபாராட்டினீர்களே பிள்ளையுறங்கா வில்லிதாசர் திருவுள்ளத்தைக் கண்டீர்களோவென்று மீண்டும் முதலிகளை நோக்கி நாம் திருக்காவேரியில் நீராடி வரும்போது பிள்ளையுறங்கா வில்லிதாசர் திருக்கையைப் பற்றி வருவதற்கு நீங்கள் சமுசயங் கொண்டிருந்தீர்களே இப்போது அவர் அநுஷ்டானம் தெரிந்தீர்களோ வென்றருளிச்செய்து சகலருமறிய பிள்ளையுறங்கா வில்லிதாசரை யருகே வரவழைத்து அவர் தேகத்தைத்தடவி நீர் நம்முடைய பரிசவேதியென்றருளிச்செய்து மிகவும் கிருபை செய்தருளினார். ததநந்தரம் பிள்ளையுறங்கா வில்லிதாசரும் பொன்னாச்சியாரும் உடையவர் திருவடிகளில் கைங்கர்யம் செய்து கொண்டிருந்தார்கள்.

பிள்ளையுறங்கா வில்லிதாசர் உடையவர் பரிசத்தாலே காயசுத்தியாயினர்.

பிள்ளையுறங்கா வில்லிதாசர் பொன்னாச்சியார் ஆகிய இவர்கள் வர்ணத்தையெண்ணி சங்கித்தீர்களாகில் நம்மாழ்வார் முதலானோர் அருளிச்செய்தவற்றைக் கவனிக்கவும் என்று முதலியாண்டான் அருளிச்செய்தவை:—

ஆழ்வார்:—

“குலந்தாங்கு சாதிகள் நாலிலுங் கீழிழிந்தெத்தனை
நலந்தானிலாத சண்டாளர் சண்டாளர்களாகிலும்
வலந்தாங்கு சக்கரத் தண்ணல் மணிவண்ணர்க் காளென்றுள்
கலந்தா ரடியார்தம் மடியா ரெம்மடிகளே.” என்றும்,

திருவரங்கத்தமுதனார்:—
"திக்குற்ற கீர்த்தி யிராமாநுசனையென் செய்வினையாம்
மெய்க்குற்ற நீக்கி விளங்கிய மேகத்தை மேவுநல்லோர்
எக்குற்ற வாள ரெதுபிறப் பேதியல் வாகநின்றோர் [றும்,
அக்குற்ற மப்பிறப் பவ்வியல் வேநம்மை யாட்கொள்ளுமே"என்
தொண்டரடிப் பொடியாழ்வார்:—
"பழுதிலா வொழுகலாற்றுப் பலசதுப் பேதிமார்கள்
இழிகுலத்தவர்களேனு மெம்மடி யார்களாகில்
தொழுமினீர் கொடுமின் கொண்மி னென்றுநின் னோடு மொக்க
வழிபடவருளினாய் போல் மதிட்டிரு வரங்கத்தானே."என்றும்,
"அமரவோரங்கமாறும் வேதமோர் நான்குமோதித்
தமர்களிற்றலைவராய சாதியந்தணர்களேனும்
நுமர்களைப் பழிப்பராகில் நொடிப்பதோ ரளவிலாங்கே
அவர்கள் தாம்புலையர் போலும் அரங்கமா நகருளானே"என்றும்
அருளியனவாம்.

திருப்புளிங்குடி காசினி வேந்தப் பெருமாளை உடையவர் சேவிக்கச் சென்றபோது நடந்தவிஷயம்:—

உடையவர் தென்தேசத்துத் திவ்ய க்ஷேத்ரங்கள் தோறும் சென்று ஆங்காங் கெழுந்தருளியுள்ள எம்பெருமான்களைச் சேவித்துத் திருப்புளிங் குடிக்கு வந்து அங்கு நித்யவாசஞ் செய்யும் காசினிவேந்தப் பெருமாளையுஞ் சேவித்துத் தீர்த்தப்ரஸாத முதலியன பெற்றுத் திரும்பும்போது மாடவீதியில் இரண்டு ஸ்ரீவைஷ்ணவப் பெண்பிள்ளைகளைக்கண்டு, அவர்களைப் பார்த்து நம்மாழ்வார் எழுந்தருளி யிருக்கும் திருக்குருகூர் இன்னும் எவ்வளவு தூரத்திலிருக்கிறதென்று கேழ்க்க, அப்பெண்மணிகளுள் ஒருபெண்நகைத்து ஸ்வாமி! தேவருக்குத் திருவாய்மொழி முற்றும் பாடமில்லையோவென்ன, அவரும் உண்டென்ன; ஆகில் 'கூவுதல் வருதல்' என்னும் பாசுரம் தெரியாதோவென்ன, உடையவரும் தெரியும் தெரியும் என்று அவர்களுக்குத் தெண்டன் சமர்ப்பித்தனர். அதாவது திருக்குருகூர் இன்னுங் கூப்பிடு தூரத்திலிருக்கின்ற தென்பதாம். இங்கு நடந்த விஷயத்தை அப்பெண்கள் தமது தந்தையாருக்குச் சொல்ல, அவர் வெளியே வந்து தெண்டன் சமர்ப்பித்தவர் உடையவராயிருக்கக் கண்டு

ஐயோ அபசாரம் நேரிட்டதே என்று துக்காவேசராய் உடைய வர் திருவடிகளில் தெண்டன் சமர்ப்பித்து அபராதக்ஷாபனங் கொண்டு அவரைத்தம் அகத்திற்கழைத்துப்போய் மிக்க உபசா ரத்துடன் அமுதுசெய்வித்துத் தமது பெண்களிருவரையும்அவர் திருவடிகளில் தெண்டன் சமர்ப்பிக்கச்செய்து வழிகூட்டியனுப் பினார். உடையவரும் இங்கும் ஒரு அர்த்தவிசேஷங்கிடைத்ததே என்று அதிப்ரீதியுடன் திருக்குருகூரை நோக்கிச் சென்றனர்.

திருக்கோளூர் பெண்பிள்ளை ரஹஸ்யம்.

திருக்கோளூருக்கு எம்பெருமானா ரெழுந்தருளும்போது திருக்கோளூரில் நின்றும் ஒரு பெண்பிள்ளை யெதிரேவந்து தண் டனிட்டு நிற்கப், பெண்ணே! நீ யெங்கு நின்றும் புறப்பட்டா யென்று கேட்டருளப்; பெண்ணும், திருக்கோளூரில் நின்றும் விடைகொண்டேனென்று விண்ணப்பஞ்செய்ய; அதனைத் திருச் செவி சாத்தியருளி, எம்பெருமானார் ஒருவர்கூறை யெழுவருடுத் துக் காய்கிழங்கு சாப்பிட்டுத் "திண்ணமென் னிளமான் புகு மூர் திருக்கோளூரே" என்கிறபடியே எல்லாருக்கும் புகுமூர் உனக்குப் புறப்படு மூராயிற்றோ என்றருளிச்செய்தார். அதைக் கேட்டு அந்தப் பெண்பிள்ளை விண்ணப்பஞ் செய்தபடி எங்ஙன மெனில்:—அடியேன் நாயன்தே! நாயன்தே!!

க. அழைத்துவருகிறேனென்றேனோ வக்ரூரரைப்போலே.
உ. அகமொழித்துவிட்டேனோ விதுரரைப்போலே.
ங. தேஹத்தைவிட்டேனோ ருஷிபத்னியைப்போலே.
ச. தசமுகனைச்செற்றேனோ பிராட்டியைப்போலே.
ரு. பிணமெழுப்பிவிட்டேனோ தொண்டைமானைப்போலே.
சு. பிணவிருந்திட்டேனோ கண்டாகர்ணனைப்போலே.
எ. தாய்க்கோலஞ்செய்தேனோ அநஸூயையைப்போலே.
அ. தந்தையெங்கேயென்றேனோ த்ருவனைப்போலே.
கூ. மூன்றெழுத்துசொன்னேனோ க்ஷத்ரபந்துவைப்போலே.
க0. முதலடியைப்பெற்றேனோ அஹல்யைகையைப்போலே.
கக. பிஞ்சாய்ப்பழுத்தேனோ ஆண்டாளைப்போலே.
கஉ. எம்பெருமானென்றேனோ பட்டர்பிரான்போலே.
கங. ஆராய்ந்துவிட்டேனோ திருமழிசையார்போலே.
கச. அவன்சிறியனென்றேனோ ஆழ்வாரைப்போலே.
கரு. ஏதேனுமென்றேனோ குலசேகரர்போலே.

கசா. யான்ஸத்தியமென்றேனோ க்ருஷ்ணனைப்போலே.
கஎ. அடையாளஞ்சொன்னேனோ கபந்தனைப்போலே.
கஅ. அந்தரங்கஞ்சொன்னேனோ த்ரிஜடையைப்போலே.
ககூ. அவன்தெய்வமென்றேனோ மண்டோதரியைப்போலே.
உ0. அஹம்வேத்மியென்றேனோ விஸ்வாமித்திரனைப்போலே.
உக. தேவுமற்றறியேனோ மதுரகவியார்போலே.
உஉ. தெய்வத்தைப்பெற்றேனோ தேவகியாரைப்போலே.
உங. ஆழிமறையென்றேனோ வஸுதேவரைப்போலே.
உச. ஆயனைவளர்த்தேனோ யசோதையாரைப்போலே.
உரு. அநுயாத்ரயஞ்செய்தேனோ அணிலங்களைப்போலே.
உசா. அவல்பொரியையீந்தேனோ குசேலரைப்போலே.
உஎ. ஆயுதங்களீந்தேனோ அகஸ்த்யரைப்போலே.
உஅ. அந்தரங்கம்புக்கேனோ ஸஞ்சயனைப்போலே.
உகூ. கர்மத்தாற்பெற்றேனோ ஜநகரைப்போலே.
ங0. கடித்தவனைக்கண்டேனோ திருமங்கையார்போலே.
ஙக. குடைமுதலானவையானேனோஅனந்தாழ்வான்போலே
ஙஉ. கொண்டுதிரிந்தேனோ திருவடியைப்போலே.
ஙங. இளைப்புவிடாய்தீர்த்தேனோ நம்பாடுவான்போலே.
ஙச. இடைகழியேகண்டேனோ முதலாழ்வார்களைப்போலே.
ஙரு. இருமன்னர்பெற்றேனோ வால்மீகரைப்போலே.
ஙசா. திருமாலையீந்தேனோ தொண்டரடிப்பொடியார்போலே.
ஙஎ. அவனுரைக்கப்பெற்றேனோதிருக்கச்சிநம்பியார்போலே
ஙஅ. அவன்மேனியானேனோ திருப்பாணரைப்போலே.
ஙகூ. அனுப்பிவையுமென்றேனோ வஸிஷ்டரைப்போலே.
ச0. அடிவாங்கினேனோ கொங்கிற்பிராட்டியைப்போலே.
சக. மண்பூவையிட்டேனோ குருவநம்பியைப்போலே.
சஉ. மூலமென்றழைத்தேனோ கஜராஜனைப்போலே.
சங. பூசக்கொடுத்தேனோ கூனியைப்போலே.
சச. பூவைக்கொடுத்தேனோ மாலாகாரரைப்போலே.
சரு. வைத்திடத்திருந்தேனோ பரதனைப்போலே.
சசா. வழியடிமைசெய்தேனோ லக்ஷ்மணனைப்போலே.
சஎ. அக்கரைக்கேவிட்டேனோ குஹப்பெருமாளைப்போலே.
சஅ. அரக்கருடன்பொருதேனோ பெரியவுடையாரைப்போலே.
சகூ. இக்கரைக்கேசென்றேனோ விபீஷணரைப்போலே.
ரு0. இனியதொன்றுவைத்தேனோ சபரியைப்போலே.

ருக. இங்குமுண்டென்றேனோ ப்ரஹ்லாதனைப்போலே.
ருஉ. இங்கில்லையென்றேனோ ததிபாண்டனைப்போலே.
ருங. காட்டுக்குப்போனேனோ பெருமாளைப்போலே.
ருச. கண்டுவந்தேனென்றேனோ திருவடியைப்போலே.
ருரு. இருகையும்விட்டேனோ த்ரௌபதியைப்போலே.
ருசா. இங்குபால்பொங்குமென்றேனோவடுகநம்பியைப்போலே.
ருஎ. இருமிடறுபிடித்தேனோ செல்வப்பிள்ளையைப்போலே.
ருஅ. நில்லென்றுபெற்றேனோ இடையாற்றூர்நம்பியைப்போ
ருகூ. நெடுந்தூரம்போனேனோ நாதமுனியைப்போலே. [லே.
சா0. அவன்போனானென்றேனோ மாறநேர்நம்பியைப்போலே.
சாக. அவன்வேண்டாமென்றேனோ ஆழ்வானைப்போலே.
சாஉ. அத்வைதம்வென்றேனோ எம்பெருமானாரைப்போலே.
சாங. அருளாழிகண்டேனோ நல்லானைப்போலே.
சாச. அநந்தபுரம்புக்கேனோ ஆளவந்தாரைப்போலே.
சாரு. ஆரியனைப்பிரிந்தேனோதெய்வவாரியாண்டானைப்போலே.
சாசா. அந்தாதிசொன்னேனோ அமுதனாரைப்போலே.
சாஎ. அனுகூலஞ்சொன்னேனோ மாலியவானைப்போலே.
சாஅ. கள்ளனிவனென்றேனோ லோககுருவைப்போலே.
சாகூ. கடலோசையென்றேனோ பெரியநம்பியைப்போலே.
எ0. சுற்றிக்கிடந்தேனோ திருமாலையாண்டான்போலே.
எக. சூழறவுகொண்டேனோ திருக்கோட்டியூரார்போலே.
எஉ. உயிராயபெற்றேனோ ஊமையைப்போலே.
எங. உடம்பைவெறுத்தேனோ திருநறையூராரைப்போலே.
எச. என்னைப்போலென்றேனோ உபரிசரனைப்போலே.
எரு. யான்சிறியேனென்றேனோ திருமலைநம்பியைப்போலே.
எசா. நீரில்குதித்தேனோ கணபுரத்தாளைப்போலே.
எஎ. நீருகங்கொண்டேனோ காசிசிங்கனைப்போலே
எஅ. வாக்கினால்வென்றேனோ பட்டரைப்போலே.
எகூ. வாயிற்கையிட்டேனோ எம்பாரைப்போலே.
அ0. தோள்காட்டிவந்தேனோ பட்டரைப்போலே.
அக. துறைவேறுசெய்தேனோ பகவரைப்போலே.

இத்யாதியின்படியே, "மைந்நின்றவரைபோலும் திருவுருவு வாட்டாற்றாற் கெந்நென்றி செய்தேனோ வென்னெஞ்சிற்றிகழ் வதுவே" என்கிறபடி, இப்படிப்பட்ட ஜ்ஞானங்க ளுடையார்

ஜ்ஞானத்திலே யொருத்தருடைய ஜ்ஞானமடியேனுக் குண்டானால் திருக்கோளூரில் விடைகொண்டிருக்கலாம். அந்த ஜ்ஞானமடியேனுக்கில்லை முசல் புழுக்கை வயலிலே கிடந்தென்? வரப்பிலே கிடந்தென்? என்று விண்ணப்பஞ்செய்து, தேவரீர் எழுந்தருளி மங்களாசாஸனஞ் செய்தருளினால், வைத்தமாநிதிக்கும், மதுரகவிக்கும் நித்யோத்ஸவ, பக்ஷோத்ஸவ, மாஸோத்ஸவ, ஸம்வத்ஸரோத்ஸவாதிக ளுண்டாகுமென்று விண்ணப்பஞ்செய்ய, அத்தைத் திருச்செவிசாத்திப் போர வுகந்தருளி, அந்தப் பெண்பிள்ளையின் திருமாளிகையி லெழுந்தருளித், தளிகைபண்ணச்சொல்லித், தாமமுது செய்தருளித் தளிகை ப்ரஸாதமும், ஸ்ரீபாததீர்த்தமும் அப்பெண்பிள்ளைக்கு ஸாதித்தருளினாரென்று திருவாய்மொழிப்பிள்ளை யருளிச்செய்தாரென்று பெரிய வானமாமலை ஜீயர் அருளிச்செய்தருளினார்.

திருவநந்தபுரத்தில் நடந்த விஷயம்:—

உடையவர் வடுகநம்பியுடன் திருவநந்தபுரத்தில் அநந்த பத்மநாபனைத் திருவடி தொழுது அங்குள்ள வித்வான்களனைவரையும் வென்று ஆட்கொண்டு அர்ச்சகர்களாகிய நம்பூரிகளை மாற்றவேண்டுமென்று திருவுள்ளமாயிருக்க; அநந்த பத்மநாபனும் இது பரசுராம க்ஷேத்ரமாகையாலும் இங்குள்ளவர் நமக்கு அத்யந்த ப்ரியர்களாதலாலும் இவர்களுக்கு இவ்வண்ணமே சேவை ஸாதிக்க நமக்கு இஷ்டமாதலால் இவர்களை நீர் திருத்த வேண்டுவதில்லை; வடநாடேறப்போமென்று உடையவர்க்கு ஸ்வப்னஞ்சாதித்து உடையவரை யவர் சயனித்திருந்த கட்டிலுடன் தூக்கிச்சென்று திருக்குறுங்குடியில் விட்டனர். உடையவரும் துயிலுணர்ந்து அநந்தபத்மநாபனுக்கு நம்விஷயத்தில் இஷ்டமிருந்தபடி யிதுவோவென் றதிசயித்திருந்தனர். இந்த க்ஷேத்ரத்தில் ஸ்ரீ அநந்தபத்மநாபன் சிவபிரானுக்கபயப்ரதானம் செய்தவண்ணமாய்ச் சயனகோலங் கொண்டெழுந்தருளியிருக்கின்றனர்.

திருக்குறுங்குடியில் நடந்த விஷயம்:—

திருவநந்த புரத்தினின்றும், பொதியமாமலைச் சாரலிலிருந்து வரப்பட்ட திருப்பாற்கடல் ஆற்றிலிருக்கிற வட்டப்பாறை என்னும் ஒரு திப்பைமீது மஞ்சத்துடன் வைக்கப்பட்ட உடையவர் துயிலுணர்ந்து தாமிருக்குமிடம் திருக்குறுங்குடியென்

னும் திவ்ய க்ஷேத்ரமென்றறிந்து உடனே வடுகா? என்று கூப்பிடத் திருக்குறுங்குடி நம்பியும் வடுகநம்பியைப்போல் வேஷம் பூண்டு அடியேன் நாயன்தே! என்று சொல்லி எதிரே நிற்க, உடையவரும் அவருடன் தீர்த்தமாடப்போக, வேஷம்பூண்ட நம்பியும் உடையவர்க்குச் செய்யவேண்டுவன வனைத்துஞ்செய்து, உடையவர் திருமண் காப்பணியும் சமயத்தில், தமக்கும் திருமண்காப்பிடும்படி வேண்ட, உடையவரும் அங்ஙனமே செய்தார்.

அநந்தரம் உடையவர் வடுகா? திருக்குறுங்குடி நம்பியைச் சேவிப்போம் வாவென்று கூப்பிட, நம்பியும் நாயன்தே! என்று உடையவரது திருப்பொற்கூடையைத் தந்திருத்தோளில் மாட்டிக்கொண்டு, உடையவர்முன்னுந் தாம்பின்னுமா யெழுந்தருளி ஸந்நிதியில் நுழைந்தவுடன் நம்பியும் திருப்பொற் கூடையை வைத்துவிட்டு, உடையவர்க்கு நின்ற கோலத்துடன் சேவை ஸாதிக்க, உடையவரும் விஸ்மயப்பட்டுத் தேவரீர் இப்படியுஞ் செய்யலாமோ, அடியேன் அபராதியானேனே! என்று துக்கித்து "எங்ஙனேயோ அன்னை மீர்கா ளென்னை முனிவது நீர், நங்கள் கோலத்திருக்குறுங்குடி நம்பியை நான்கண்டபின், சங்கினோடு நேமியோடுந் தாமரைக் கண்களோடுஞ், செங்கனிவா யொன்றினோடுஞ் செல்கின்ற தென்னெஞ்சமே" என்னும் ஆழ்வார் ஸ்ரீஸூக்தியைப் பாடித் தெண்டன் சமர்ப்பித்துத் தீர்த்த ப்ரஸாதம் ஸ்ரீசடகோப முதலியன பெற்றுநிற்க, பெருமாளும் உடையவரைக்கடாக்ஷித்து உமக்கு நாமிவ்விதஞ் செய்யவேண்டுமென்று இஷ்டங் காணும் என்றவரால் மந்த்ரோபதேசமும் பெற்று ஸ்ரீவைஷ்ணவ நம்பிஎன்னும் அபிதானமுங்கொண்டார்.

ஜெகன்னாதன் விஷயம்:—

உடையவர் வடதேச யாத்ரை செய்துவரும்போது கங்காஸ்நாநம்செய்து ஸ்ரீஜகன்னாதத்துக்கெழுந்தருளி ஸ்ரீஜகன்னாதப் பெருமாளைச் சேவித்து அங்குள்ள வித்வகோஷ்டிகளை வென்று அவர்களையுந் தமது மதஸ்த ராக்கிக்கொள்ள நினைக்க, இதனை யறிந்தஸ்ரீஜகன்னாதனும்உடையவர்ஸ்வப்னத்திற் ப்ரத்யக்ஷமாய் இங்குள்ளார் யாவரும் என்னையே ஸதாசார்யனாக நினைத்து வழிபடுகின்றமையின் நீர் இவர்களைத் திருத்தவேண்டுவ தில்லையென்றுரைத்து உடையவரை யவர் சயனகோலத்துடன் ஜகன்னாதத்தி

னின்றும் ஸ்ரீகூர்மம் கொண்டுவந்து வைத்துப்போயினன். ப்ராதக்காலமானவாறே உடையவரும் துயிலுணர்ந்து தாம் இருக்குமிடம் ஸ்ரீகூர்மம் என்றறிந்து ஸ்ரீஜகன்னாதனுக்கும் ஸ்ரீஅநந்தபத்மநாபனுக்கும் இருந்த திருவுள்ளத்தைத்தெரிந்து விஸ்மயப்பட்டு ஸ்ரீகூர்மநாதனைத் திருவடிதொழுது கோஷ்டிகளுக்கிதனையறிவித்துப் பரவஸராயினர்.

ஸ்ரீரங்கத்தில் ஒருதாழம்புதரில் தங்கியிருந்த
ஓர் வைஷ்ணவர் விஷயம்:—

ஒருவைஷ்ணவர் தமது பதினாறு பிள்ளைகளுடனும் தந்தேவியாருடனும் ஸ்ரீரங்கநாதனை வழிபட்டு வருங் காலையில் தாரித்ரத்தால் தாமும்தம் பெண்டுபிள்ளைகளும் நலிவுறலாயினர். அப்போது அந்த வைஷ்ணவரின் பிள்ளைகள் பசியாற்றாராய் ஸந்நிதியில் ப்ரஸாத விநியோக மாகும்போதெல்லாம் விநியோகஞ் செய்யுமவரைத் தொந்தரிக்கலுற்றார். இதுகண்ட விநியோகத்தலைவர் இதனைஉடையவரிடம் விண்ணப்பஞ்செய்ய; உடையவரும் அந்தவைஷ்ணவரை யழைத்து நீரேன் உமதுபிள்ளைகளை யிவ்விதம் விடவேண்டும்; ஸர்வரக்ஷகனாகிய நம்பெருமாளிருக்க உமக்குவந்த குறையென்? இனி நீர் உமது சமுசாரத்துடன் ஒருபுறந் தனித்திரும்; உம்மை ஸர்வ பந்துவும், ஸர்வரக்ஷகனும், பக்தவத்ஸலனும், ஆபத்ஸகாயனுமாகிய எம்பெருமான் பாதுகாப்பன் என்றருளினார் அந்தவைஷ்ணவர் தங்யோஸ்மி அங்ஙனமே அடியேன் செய்யக்கடவன் என்றுரைத்து அதுமுதல் ஸ்ரீரங்கம் வடதிருக்காவேரிக்கரையில் ஒரு தாழம்புதரில் நித்யவாசஞ் செய்துவந்தனர். ஸ்ரீரங்கநாதன் அன்றுமுதல் தனக்காராதனமாகும் தளிகையில் ஒருதடா ஒருவருக்குந் தெரியாமல் அந்த வைஷ்ணவருக்கு உடையவ ரனுப்பியதாய்த் தாமே கொண்டுபோய் அளித்துவருவர். இவ்வண்ணஞ் சிலநாள் நடக்க, பெருமாளுக் காராதிக்கும் தளிகைகளுள் ஒரு தடாதளிகை சிலநாளாக மறைந்துவருவதை யறிந்த ஸ்ரீவைஷ்ணவர்கள், ஆஶ்சரியமுற்று திருடுகண்டுபிடிக்கும் அசக்தராய் உடையவர்க் கறிவித்தனர்.

உடையவரும் இதென்னென்று விஸ்மிதராய் மேற்படி வைஷ்ணவரைப்பற்றி விசாரிக்க, ஒருவரும் அவர் இருக்குமிடம் அறியோமென்றனர். ஸ்ரீரங்ககோஷ்டியைச்சேர்ந்த ஒரு ஸ்ரீவை

ஷ்ணவர் வடதிருக்காவேரிக்கு அக்கரையிலுள்ள உத்தமர் சந்நி திக்குப்போய்த் திரும்புங்காலையில் தாழம்புதரில் தங்கியிருந்த வைஷ்ணவரின் பிள்ளைகளைக்கண்டு அவ்வைஷ்ணவர் இருப்பை உடையவர்க் கறிவிக்க; உடையவரும் அங்குசென்று அவ்வைஷ் ணவரைக்காண; அவரும் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சம் என்று நிஷ்டையி லிருந்தார். அப்போது அவ்வைஷ்ணவரின் பிள்ளைகளிலொன்று உடையவர் வந்திருப்பதைத் தன்தந்தைக் குரைக்க; அவரும் உடனே எழுந்தோடிவந்து உடையவர் திரு வடிகளில் தெண்டன் சமர்ப்பிக்கலானார்.

உடையவர் அவரைக் கடாக்ஷித்து க்ஷேமமோ வென்ன; தேவரீர் திருவடி கடாக்ஷத்தால் க்ஷேமமே என்ன; உடைய வரும் ஆகில் ப்ரஸாதம் எப்படி என்ன; அந்த ஸ்ரீவைஷ்ணவரும் தேவரீர் நித்தமும் ஒரு தடாதளிகையனுப்பி வரும்போது அடி யேனுக்குக் குறையென்னென்றார் அதுகேட்ட உடையவர் மிக வும் ஆஸ்சர்ய பரவசராய்ப் பக்தவத்ஸலனாகிய நம்பெருமாளது பேரரு ளிருந்தபடியை எண்ணி எண்ணிப் பெருமாள் நாமு ரைத்த வார்த்தைக்கிரங்கி இப்படியுஞ் செய்தாரன்றோ வென்று ருகி, அந்த வைஷ்ணவரை யவர் சமுசாரத்துடன் அழைத்துச் சென்று கோயிலில் அவர்களுக்கு நித்ய ப்ரஸாதங் கிடைக்கும் படி ஏற்பாடுசெய்தார்.

முதலியாண்டான் விஷயம்:—

இவர் தருமராஜாவினால் பெருமாள் நியமனப்படி யளிக்கப் பட்ட அபிதானமான தர்மபுரி என்னும் புருஷமங்கலமாகிய பூவிருந்தவல்லியில் அவதரித்தவர். இவ்வூரில் எழுந்தருளியுள்ள பெருமாள் பெயர் பச்சைவாரணர். இவரது தந்தையார் நாமம் வாதூல குலதிலகரான அநந்த நாராயணதீக்ஷிதர்; தாயார் இரா மாநுஜருக்குத் தமக்கையான பூமிதேவியாண்டாள். இவர் திரு நாமம் முதலியாண்டான், தாசரதி, வாதூலதேசிகன், ஸ்ரீவைஷ் ணவதாஸன், இராமாநுஜபாதுகை என்பனவாம். இவர் ஸ்ரீரா மாம்ஸமும், சக்ராம்ஸமுமானவர்.

இவர் அருளிச்செய்தவார்த்தை:—

ஈஸ்வரனாகிற கர்ஷகன், சேதநனாகிற திருப்பள்ளி தங் கன்றை சேஷத்வமாகிற க்ஷேத்ரத்திலேயூன்றி, ததீயாபராதமும் விபரீதஜ்ஞாநமு மாகிற புழுக்கடியாமே நோக்கி, கைங்கர்யாநு

வர்த்தனமாகிறமடையாலே விவேகமாகிற நீரைப் பாய்ச்சி, அஹங்காரம் மமகாரங்களாகிற களைமண்டாமே பகவத்விஷயமாகிற களைகொட்டாலே சேர்த்தெடுத்து, விபரீ தாஹங்காரமாகிறதொண்டு மாடுபுகுராமே சப்தாதி விஷயாநுபவரூபகிற நோய்க்காற்றடியாமலே ப்ரபன்னத்வமாகிற வேலியையிட்டு, ஸ்ரீவைஷ்ணவத்வமாகிற வர்ஷத்தை யுண்டாக்கி, தாருந்தளிருஞ் செருந்தியுமாய் ஒளிமொட்டெடுத்துக் கட்டின மாலையிறே பரமேகாந்தி.

மற்றும் இவர்அருளிச்செய்த பத்துவார்த்தை:—

க.—ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸம்ஸாரத்தி லிருக்கு மிருப்பு, பிராட்டி ராவண பவநத்திலிருந்து நாட்டி யருளினார். எங்ஙனேயென்னில்: பிராட்டி, இளையபெருமாள் விஷயமாகப் பேசின வார்த்தையாலே பெருமாளைப் பிரிந்துபோனாற்போலே இந்தச்சேதனனுக்குத் ததீயவிஷயத்தில் பண்ணு மபசாரம் ஈஸ்வரன் திருவடிகளில் நினைவை லபியாமற் பண்ணும். உ.—பிராட்டிக்குஅசோகவனம்போலே,இவனுக்கும்ப்ரக்ருதிஸம்பந்தமான தேஹம். ங.—பிராட்டிக்குக் கந்தமூலபலங்கள் ஸமர்ப்பிக்கிற ராக்ஷஸ ஸ்திரீகளுடைய ஸஹவாஸம்போலே,இவனுக்கு புத்திர மித்ராதி ஸஹவாஸம். ச.—பிராட்டிக்கு மாரீசதர்சனம்போலே, இவனுக்கு விஷயப்ராவண்யம். ரு.—பிராட்டி திருவடியைக் கண்டாற்போலே இவனுக்கு மாசார்ய ஸமாஸ்ரயணம் பண்ணுகை. சு.—பிராட்டிக்குத்திருவடிசொன்ன ஸ்ரீராமகுணங்கள்போலே, இவனுக்கு ஸ்ரீராமாயண பாரதபாகவத புராண ரத்னாதிகளையும் ஆழ்வா ராசார்யர்களுடைய திவ்யப்ரபந்த ரஹஸ்யங்களையும் கேட்கை. எ.—பிராட்டிக்கு ஸ்ரீமுத்ரை கொடுத்து வரச்சொன்னாற்போலே, இவனுக்கு மாசார்யனருளிச்செய்த குருபரம்பரை. அ.—பிராட்டி, திருவடிக்கு சிரோரத்னங் கொடுத்தாற்போலே, இவனுக்கு மாசார்யன்சொன்ன திருமந்த்ரம். கூ.—பிராட்டிக்கு ஸ்ரீவிபீஷணாழ்வானுடைய திருமகளார் பேச்சுத்துணை யானாற்போலே, இவனுக்கும் பாகவத ஸஹவாஸமும் அவர்கள் திவ்ய ஸூக்தியும். கம—பிராட்டிக்கு விரோதிகளான ராவண கும்பகர்ணாதிகளை ஸம்ஹரித்து, பெருமாள் ஸீதா பிராட்டியாரைக் கூட்டிக்கொண்டு திருவயோத்திக் கெழுந்தருளினாற் போலே, இவனுக்கு விரோதியான தேவதாந்தர மந்த்ராந்தரங்களையும்,

ப்ரக்ருதி ஸம்பந்தத்தையும் ஸம்ஹரித்து, உடையவன், இச்சேதனனை திருத்திப்பணிகொண்டு ததநந்தரம் நித்யஸூரிகளோடே ஒருகோர்வையாகத் தன்னை நித்யானுபவம் பண்ணவைப்பன்.

இவர் எம்பார்க் கருளியது:—

முதலியாண்டான் ஒருகால் திருநாராயணபுரத்திலே யெழுந்தருளி யிராநிற்கச்செய்தே, அவருடைய ஸ்ரீபாதத்தை யாஶ்ரயித்த ஒரு ஸ்ரீவைஷ்ணவர், கோயிலிலேவந்து, எம்பார்சந்நிதியிலேயிருக்க, அப்போது எம்பார் "உமக்கு விசேஷசம்பந்தமுண்டோ" என்றந்த ஸ்ரீவைஷ்ணவரைக்கேட்க, அவரும் தேவரீருடைய சம்பந்தமே சம்பந்தம்" என்று விண்ணப்பஞ்செய்ய; அவ்வளவிலே எம்பாரும் "இவராண்டான் ஸ்ரீபாதத்தவர்" என்றறியாதே இவர்க்குப் பஞ்ச ஸம்ஸ்காரங்களைப்பண்ணி, யிவரைக்கொண்டு கைங்கர்யங்களும் கொண்டெழுந்தருளி யிராநிற்கச்செய்தே ஆண்டானும் திரும்பிக் கோயிலிலே எழுந்தருள, அவ்வளவிலே அந்த ஸ்ரீவைஷ்ணவராண்டானை வந்து சேவிக்க, ஆண்டானு முன்புபோல் இவரைக்கொண்டு, வேண்டும் கைங்கர்யங்களைக்கொள்ள, அப்போது எம்பாருமறிந்து ஆண்டான் பக்கலிலே எழுந்தருளி "கனக்க வபசாரப்பட்டேன்" என்றருளிச்செய்ய அப்போ தாண்டான் "ஒருகிணற்றில் விழுந்தவனுக்கிரண்டுபேர் கைகொடுத்தால், எடுக்குமவர்களுக்கு மெளிதா யேறுமவனுக்கு மேளிதாயிருக்கு மிறே" என்று அருளிச்செய்தார்.

கூரத்தாழ்வான் ஸ்ரீபாதத்திலே முதலியாண்டான் தண்டன் ஸமர்ப்பித்து விண்ணப்பம் செய்தபடி:—ஸ்ரீவிபீஷணாழ்வானை ஸ்வயார்த்தியோ, அநந்யப்ரயோஜநரோ? என்ன; ஆழ்வானருளிச்செய்தபடி:—விபீஷணாழ்வான் அநந்யப்ரயோஜநரென்ன; அதெங்ஙனே யென்ன அஸ்மதாதிகள் ப்ரபந்நரா யிருக்கச்செய்தே இவ்விடத்தில் ஶரீராவஸாநத்தளவும் ஸ்த்ரீ யந்நபாநாதிகளோடே யிருக்கிறப்போலே ஸ்ரீவிபீஷணாழ்வானும் அநந்ய ப்ரயோஜநர் அதிகாரா வஸாநத்தளவும் அநந்யப்ரயோஜநராயே யெழுந்தருளி யிருப்பரென்ன; ஐஶ்வர்ய மநுபவியாநிற்க அநந்ய ப்ரயோஜநனானபடி யென்னென்ன; ஸ்ரீவிபீஷணாழ்வான் ஸர்வஸங்க பரித்யாகம் பண்ணிவந்தவர்; தலையிலே முடியைவைத்து ராஜ்யாபிஷேகம் பண்ணி, "மின்னிலங்குபூண் விபீடணநம்பிக்கு என்னிலங்கு நாமத்தளவு மரசென்ற மின்னலங்காரர்" என்று

பெரியாழ்வா ரருளிச்செய்தருளினர். அவாந்தர பலமான ஐஸ்வர்யம் புஜிக்கும்படி சக்ரவர்த்தித் திருமகன் நியமித்து வைத்தாராகையாலே, அவாந்தரபலம் புஜிக்கக் குறையில்லை காணுமென்று அருளிச்செய்தார்.

கூரத்தாழ்வான் விஷயம்:—

இவரதுஊர் திருக்கூரம். தந்தையர் கூரத்தாழ்வாரென்கிற இராமசோம யாஜியார். இவர் இராமாம்ஸம், சங்காம்ஸம், சர்ப்பநேத்ராம்சமானவர். திருநாமம் கூரத்தாழ்வான், திருவருமார்பன் ஸ்ரீவத்ஸசிந்நன், நடையாடும் பதஞ்சலி, சஞ்சாரி, மகாபாஷ்யன், யதீந்த்ரசரணர் என்பனவாம்.

தொண்டனூர்நம்பி விஷயம்:—

இவர் ததியாராதனஞ் செய்துவருங்காலத்தில், ஒருபண்டாரம் பசியால்வருந்தி வீடுதோறும் "சோறு சோறு" என்றிரந்துவர, அங்கிருந்த ஓர் ஸ்ரீவைஷ்ணவர் அப்பண்டாரத்தை நோக்கி நீ தொண்டனூர்நம்பி யகத்துக்குப்போய் ஸ்ரீமதேராமாநுஜாய நமஃ என்றுரத்துக் கூவினல் சோறுகிடைக்குமென்ன; அவனும் அவ்விதமே செய்தான். நம்பியும் வெளியேவந்துபார்த்துக் கூவினவன் பண்டாரமாயிருக்கக்கண்டு அவனைநோக்கி நீ ஏது ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ என்றுரைத்தாய் என்று வினவ அவனும் ஸ்வாமீ? அடியேன் பசியால் வருந்துகின்றேன், வீடுதோறும் பிச்சைகேட்டு வரும்போது ஒருவர் தேவரீரிடம்சென்று ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ என்றுசொன்னல் ப்ரஸாதங் கிடைக்குமென்றனர். அதுபோல் யானும் செய்யலானேன் என்றனன்.

நம்பி தமது ஆசாரியன் பெயரைச் சொன்னதினல் அப்பண்டாரத்திற்குப் போஜனமளித்தனர். இதுகண்ட வைஷ்ணவரனைவரும் நம்பியை நிந்திக்க, நம்பியும் தாம்செய்தது தப்பே என்றெப்புக்கொண்டுஅபராதக்ஷாபனம் செய்துகொண்டு அந்த வைஷ்ணவர்களை நோக்கி எம்பெருமானர் திருநாமத்தை ஒருமுறை சொன்னர்க் கென்னபலன் என்ன; அவர்களும் பரமபத பிராப்தி என்ன; ஆகில் இருமுறை சொன்னர்க்கோவென்ன; அவர்களும் பதிலுரைக்க வியலாதிருந்தனர் உடனேபண்டாரம் தன் நிமித்தம் நம்பிக்குத் தோஷமெய்துவதைக் கண்டு சடையைக்களைந்து உருத்திராக்க முதலியவற்றையும் அப்பால் எறிந்துவிட்டு ஸ்நானஞ்செய்து திருமண்காப்பணிந்து நம்பியின்

திருவடிகளில் தெண்டன் ஸமர்ப்பித்து ஸ்வாமீ! அடியேனுக்குப் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்தருள வேண்டுமென்று வேண்ட அவரும் நாளைக்கு ஆகட்டும் என்றுரைத்தருளி அவ்வாறே செய்தருளினார். பிறகு தனக்கொரு கைங்கர்யம் நியமிக்கவேண்டுமென்று அவன் நம்பியை வேண்டிக்கொள்ள; அவரும் அவனுக்குப் பாகவதாள் புசித்தருளிய இலைகளை எடுத்துச் சுத்திசெய்வாயாக என்றுஜ்ஞாபித்தார். அவனும் ஆசார்ய நியமனப்படி நடந்துவந்து, ஓர்காலத்தில் திருமலைக்குச்சென்று ஸ்ரீநிவாசனைத் திருவடிதொழுது இங்கு நந்தவன கைங்கர்யஞ் செய்துவரும் அநந்தாழ்வானைக்கண்டு நீர்இக்கைங்கர்யஞ்செய்வது அடுக்குமோ? ஸ்ரீகுலசேகராழ்வார் இம்மலையைப்பற்றிப் பாடியுள்ளதை யறியீரோ? இங்குள்ள சராசரமனைத்தும் நித்யமுக்தரன்றோ? வேண்டுமாகில் அடியேனுக்கு ஆசாரியராகிய தொண்டனூர் நம்பி நியமித்த பாகவதர் புசித்தருளிய இலைகளை எடுத்துச் சுத்திசெய்யுங் கைங்கர்யத்தில் நாலிலொருபாகம் தருகிறேன் வாருமென்றனன். அநந்தாழ்வான் நந்தவனகைங்கர்யத்தை விடிலோ ஆசார்யகட்டளையை மறுத்ததாகும், இவருடைய நியமனத்தை மறுக்கிலோ பாகவதகட்டளையை மறுத்ததாமே என்செய்வதென்று எம்பெருமானார் திருவடிகளே தஞ்சம் என்றிருந்தார்.

எம்பார் வைபவம்.

எம்பார், உடையவர் திருநாட்டுக்கு எழுந்தருளும்போது அவர்திருவடிகளைப் பிடித்துக்கொண்டு 'நாயன்தே! பெரிய திருமலைநம்பி, ஸூக்திகையிலே ரஜதபுத்தி பண்ணுவாரைப்போலே அபரமாத்மவிஷயத்திலே பரமாத்மபுத்திபண்ணி விபரீதஜ்ஞாநநிஷ்டனாய்க் காளஹஸ்தியாகிற கடுங்காட்டிலே யிருந்த என்னைப் * போதரே யென்றுசொல்லிப் புந்தியில்புகுந்து தன்பாலாதரம் பெருகும்படி திருத்தி * மாயப் பற்றறுத்து, அடியேனுடைய துர்வாஸநாச்சேதநத்தை நீக்கியருளி, *பொருளல்லாத என்னைப் பொருளாக்கி அடிமை கொண்டருளி, "தாயாய்த் தந்தையாய் மக்களாய் மற்றுமாய் முற்றுமாய்" என்கிறபடியே ஸர்வவிதபந்துவும் த்ருஷ்டாத்ருஷ்டங்களிரண்டும் தேவரீர்திருவடிகளென்றுகாட்டிக் கொடுத்தருளினார்; தேவரீரும் அப்படியே அடியேன் நம்பி திருவடிகளை யகன்ற இழவெல்லாம் தீர ஸர்வவிதோத்தாரக பந்துவுமாய் நிற்க, தேவரீர் திருவடிகளே ப்ராப்யமும் ப்ராபகமு மென்று அத்யவஸித்திருந்த அடியேன் "நசஸீதாத்வயாஹீநா நசா

ஹடபிராகவ-முஹூர்த்தமபிஜீவாவோ ஜலாந்மத்ஸ்யாவிவோத்த்ருதௌ” என்கிறபடியே என் உயிர்நிலையான தேவரீர் திருவடிகளை அகன்று ஒருக்ஷணமாத்ரமும் தரிக்கமாட்டேன்; தேஹிவிட்டுப்போனால் தேஹம் நிற்குமோ? “நிழலும் அடிதாறும் ஆனோம்” என்கிறபடியே ஸ்ரீபாதச்சாயாபந்நனை அடியேன் எங்ஙனே தரித்திருப்பேன்? என்று திருவடிகளிலே போர ஆர்த்தியோடே விழுந்து எழுந்திராமல் கிடக்க, உடையவரும் எம்பாரைக் குளிரநோக்கியருளி ‘நாம் நம்பிதிருக்கையாலே உம்மை உதகபூர்வகமாகப் பரிக்ரஹித்தபின்பு நமக்கும் உம்மைப் பிரியக்கூடுமோ? நம்முடைய வைகுண்டநாதனும் அப்படியே செய்தருளுகிறான்; பதறாதேகொள்ளும்’ என்று எம்பாரை வாரியெடுத்து அணைத்துக்கொண்டு, தம் * பொன்னங்கழற்றாமரைப் பூக்களாலே அவர் திருமுடியை அலங்கரித்தருளித் திருநாட்டுக்கு எழுந்தருள, எம்பாரும் தாயைப்பிரிந்த ஸ்தநந்தய ப்ரஜையைப் போலே ஸிதிலாந்தஃகரணராய்ப் பெரிய ஆர்த்தியோடே உடையவர் ப்ரஸாதித்தருளின அர்த்தவிஶேஷங்களைப் பட்டர் முதலான முதலிகளுக்கு ப்ரஸாதித்துக்கொண்டு எழுந்தருளியிரா நின்றார்.

எம்பெருமானை எம்பார் கேட்டபடி:—ஸ்ரீவைஷ்ணவர்களையும், ஆசார்யனையும், பிராட்டியையும், எம்பெருமானையும் நினைக்கும்படி யென்னென்ன; உடையவர் அருளிச்செய்தபடி:- ஆசார்யன் மூன்றாலே உத்தேஶ்யன்; சேதநன்பண்ணின கர்மாநுகுணமாக ஸம்ஸாரத்திலே யஶக்தனாய்ப் போரும்படி பண்ணுகிற உபாயத்தாலே ஸ்ரீவைஷ்ணவர்கள் உத்தேஶ்யர்கள்; பிராட்டியும் மூன்றாலே உத்தேஶ்யை; எம்பெருமானும் மூன்றாலே உத்தேஶ்யன். எங்ஙனேயென்னில்:—ஆசார்யன் மூன்றாலே உத்தேஶ்யனாவது - ஜ்ஞாநப்ரதன், அநுஷ்டாநப்ரதன், உபாயப்ரதனென்று நினைத்து, இரும்பைப் பொன்னாக்குவாரைப் போலே ஸம்ஸாரத்திலே தத்பரனாய், உருமாய்ந்து கிடந்தவென்னை விஷயீகரித்து, என்னபராதங்களைப் பொறுப்பித்துத் தனக்காக்கினவனன்றோ? என்றுத்தேஶ்ய ப்ரதிபத்தியுமுண்டாகை. ஸ்ரீவைஷ்ணவர்களிடத்திலே உத்தேஶ்ய ப்ரதிபத்தியாவது - உபாயத்திற்கு முற்பாடர், உபேயத்திற்கு எல்லைநிலம், இருக்கும் நாளைக்கு உசாத்துணையென்று இம்மூன்றாலும், அஜ

ஞுய், அஶக்தனுய், அப்ராப்தனுன வென்னை யநுக்ரஹித்து ஆசார்யஸமாஶ்ரயணம் பண்ணவாவென்று அழைத்துக்கொண்டு போய் ஆஶ்ரயிப்பித்த மஹோபகாரகரென் றுத்தேஶ்ய ப்ரதி பத்தியுண்டாகை. பிராட்டியும் மூன்ருலே உத்தேஶ்யை; புரு ஷாகாரபூதை, கைங்கர்யவர்த்தகை, நித்யப்ராப்யையா யிருந்து கொண்டு இவனுக்கு உத்தாரகத்தைப் பொறுப்பித்து, எம்பெ ருமான் ஸ்வாதந்த்ர்யந் தலைமடிந்து குலையும்படி தன் லீலாரஸ சேஷ்டிதங்களாலே துவக்கி, இவனைக் கைக்கொள்ளும்படி பண் ணுகையாலே உத்தேஶ்ய ப்ரதிபத்தி யுண்டாகை. எம்பெரு மான் மூன்று உத்தேஶ்யமானபடி; ருசிஜநகன், உபாயபூதன், மோக்ஷப்ரதன் என்னும் மூன்ருலே உத்தேஶ்யன். இவன் அச் சேஷாதிகளுக்கடியான ருசியைப் பிறப்பித்து, தானே உபாய மாய் நின்றும் மோக்ஷப்ரதாநம் பண்ணுகையாலே உத்தேஶ்ய ப்ரதிபத்தி யுண்டாகை யென்றும்; இவர்களிடத்தில் அந்த ப்ரதிபத்தி நடந்தவன், ஶரணுகதனென்று மருளிச்செய்தார்.

எம்பார்வார்த்தை:—ஸ்வரூபஜ்ஞன், ஸ்வயம் ஸ்வரூப நிரூ பணம் பண்ணுமதிலும் ஸ்வயம் ஸ்வதோஷ தர்சநம் பண்ணு கை ஸ்வஸாமர்த்யம். ஸ்வரூபஜ்ஞன் ஸ்வயம் ஸ்வரூப நிரூபணம் பண்ணினல் ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனுக்குங் கூடக் கூடாதபடியான ஸ்வபாவமுண்டாயிருக்கும்; புருஷனுக்கு பும்ஸ்த்வ நிவிர்த்தி பூர்வகமான புருஷார்த்த நிரூபணம் பண்ணுமதிலும் புருஷ தேஹ நிரூபணம் பண்ணுகையே புருஷார்த்தம். ஸ்வரூபஜ்ஞனு க்கு அவித்யா ஸம்பந்த நிவிர்த்தி பூர்வகமான அப்ராக்ர்த தேச விசேஷத்திலும் அவித்யாஸம்பந்தத்தில் ஆர்த்தி அத்யந்தா பேக்ஷிதம். ஸ்வரூப வைசத்ய தசையாவது-பரஸ்வரூபவிஷயத் தில் ஸ்வீகார ப்ரதிபத்தி, ப்ரவர்த்திநிவிர்த்தியில் அவ்யவசிதனுய் போருகை. ஸ்வரூபஜ்ஞனுக்கு ஸ்தூல தேஹாந்தர நிவிர்த்தி பூர்வகமாக ஸ்வதேஹ பரிக்ரஹேச்சாதிசயமும் தேஹபோக்ய தையும் ஸதர்சம்; ஸ்வஸ்வரூபவிஷய ஜ்ஞாநபூர்த்தி நிஷ்டையா வது - பரஸ்வரூப விஷய தர்சநாதி ப்ரகார ப்ரதிபத்தி ப்ரவிர் த்தி நிவிர்த்தி பூர்வகமாக பரஸ்வரூபத்தில் ஆர்த்தி விஶேஷ ப்ரதிபத்தி நிவிர்த்தி விஶேஷநிஷ்டை; ஸ்வரூபயாதாத்ம்ய ஜ்ஞாநமாவது - பரஸ்வரூப வைஶத்ய ஸ்மரண பூர்வகமாக பர ஸ்வரூப விஷய வ்யதிரிக்த விஷயகைங்கர்ய ருசிநிவிர்த்தி பிறக்

கை;—ஸ்வகதஜ்ஞாநம் " ஸ்வரூபம்-பரகதஜ்ஞாநம்-உபாயம்;—இதரபலபோக்த்ர்த்வ ப்ரதிபத்தி நிவிர்த்தி பூர்வகமான ஸம்யக் பல போக்த்ர்த்வ பிரதிபத்தி; விசேஷநிஷ்டனானவன், ஸர்வோத்க்ர்ஷ்ட ஜாதனுமாய் ஸர்வவிஸஜாதீயனுமாய் ஸர்வோபாய நிவிர்த்தி பூர்வகமான சித்தோபாயாந்தர்க்கதனானவன், ஸஜாதீயத்வ ப்ரதிபத்தியும் ஸஜாதீயத்வவ்யாவ்ர்த்தி, விசேஷநிஷ்டையு முண்டென்று புத்தி பண்ணிக்கொண்டு போரக்கடவன்; இவ்வார்த்தையால் அஞ்சர்த்தம் பிரதிபாதிக்கப்படுகிறது. இதரவிஷயராக நிவிர்த்தியும், விஹிதவிஷயராக ப்ரவ்ர்த்தியும், இதரோபாயத்யாகமும், சித்தோபாய ஸ்வீகாரமும் ஹிதபரன் பக்கல் யதாப்ரதிபத்தியும் என்றருளிச் செய்தார்.

ஸ்வீக்ர்தோபாய பூதனாகையாவது ஸ்வீக்ர்தபூதனாகை. அதாவது - ஸ்வகதஸ்வீகாரத்தில் உபாயபுத்தியை த்யஜித்து பரகத ஸ்வீகாரத்துக்கு விஷயமாய்விடுகை. அதாவதுஸ்வார்த்த ப்ரவ்ர்த்தியையும் ஸ்வப்ரவ்ர்த்தியையும்விட்டுப் பரார்த்த ப்ரவ்ர்த்தியிலும் பாப்ரவ்ர்த்தியிலு மந்வயிக்கை. உனக்கென்று நிவ்ர்த்திக்கையைவிட்டு எனக்கென்ன நான் ப்ரவிர்த்திக்கவென்று உள்ளே புகுரென்று ஈஸ்வரன்வாக்யம்.

சேஷித்வ சூசகமான திருவபிஷேகமும், ஜிதந்தேபுண்டரீகாக்ஷவென்று சொல்லப்பட்ட திருக்கண்மலர்களும், ஆஸ்ரிதரை யெப்போது வந்தீரென் றருள்கொடுக்குந் திருமுக முறுவலும். விரோதி நிரஸநம் பண்ணும் திருவாழியாழ்வானும், ஞானப்ரதரான ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானும், லக்ஷ்மீ விசிஷ்டமான திருமார்புகண்டமும், ஸம்ஸாரபீதரை யஞ்சலென்ற திருக்கையும் அருட்டியான ஸ்ரீகதையாழ்வாரும், லீலாவிபூதிக்கு உற்பத்திஸ்தலமான திருநாபிக்கமலமும், பூத்துவிலக்ஷணமான திருப்பீதாம்பரமும், ஆஸ்ரிதரிழியுந் துறையானதிருவடிகளும்,ஸ்தநந்தய ப்ரஜைக்கு மாதாவினுடைய அவயவங்களெல்லாம் போக்யமா யிருக்கச்செய்தேயும் ஸ்தந்யத்திலே வாய் வைக்குமாப்போலே ஆஸ்ரிதருக்குத் திருவடிகளிலே நோக்கென்று எம்பாரநுஸந்தானம்.

மற்றும் இவர் அருளிபன:—க—ஸ்ரீவைஷ்ணவன் சரீராவஸானத்திலே எம்பெருமான்திருவடிகளிலே சேரலாமென்றிருக்கை. உ—அப்பேறும் அவனாலே பெறவேணுமென் றிருக்கை,

௩—தேவதாந்தர பஜநம் பண்ணுமவரோட்டைச் சேர்த்திவருந்தியும் தவிருகை. ௪—தேவதாந்தர பஜனம் பண்ணுவாரோட்டைச் சேர்த்திவருந்தியும் தவிருகை. ௫—ஆழ்வார்களுகந்தருளின திவ்யதேசங்களிலே ப்ரவணனாய் வர்த்திக்கை. ௬—அநுகூல ஸங்கல்பனாயிருக்கை. ௭—பகவத் பாகவதாசார்யாபசாரங்களை வருந்தியுந்தவிருகை. ௮—ஆழ்வார்களருளிச்செயலில் அர்த்தாநுபவம் பண்ணுகை. ௯—ஆழ்வார்களீரச் சொல்லிலே நெஞ்சுநிற்கும் ஸத்துக்களோடே ஸஹவாஸம் பண்ணுகை. பண்ணுநாள் இழவுபட்டிருக்கையும். பண்ணும்நா ளுகந்திருக்கையும் என்பனவாம்.

ஒருநாளாக உடையவர் திருவடிகளைத் திருவுள்ளத்தே ⁺ நினைந்து நைந்து உள்கரைந்துருகி, * தாய்நாடுகன்றேபோல் 'எப்போது காணப்பெறுவேன்?' என்று த்வரைவிஞ்சி, ஆசார்ய விஶ்லேஷம் பொறுக்கமாட்டாமல் "அவனை விட்டகன்று உயிராற்றகில்லா" என்கிறபடியே உடையவரையகன்று இருக்கமாட்டாத ஆற்றாமை கரைபுரண்டு மிகவும்விஞ்சி, பெரியபெருமாள் ஸந்நிதியிற்சென்று 'நாயன்தே! அடியேன்உடையவர் திருவடிகளேறப்போக நினையாநின்றேன்; தேவரீர் விடை ப்ரஸாதித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் 'அப்படியேசெய்யும்' என்று திருவுள்ளம்பற்றியருளி, எம்பாருக்குத் தீர்த்தப்ரஸாதமும் ஸ்ரீசடகோபனும் இரங்கி ப்ரஸாதித்தருள, இவரும் "திருப்பொலிந்தசேவடி என்சென்னியின்மேற் பொறித்தாய்" என்று அங்கீகரித்தருளி அமலனாதிபிரானிற்படியே பாதாதிகேஸாந்தமாக அநுபவித்தருளி, "என்னமுதனைக், கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்று கொண்டு * அணியார்பொழில் சூழரங்கநகரப்பனைத் தம் ⁺ கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் நீங்காதபடியாக நிறைத்துக்கொண்டு புறப்பட்டருளி உடையவர் மடத்தேற எழுந்தருளி, "யோநித்யம்" என்று தொடங்கி "ராமாநுஜஸ்யசரணௌ ஶரணம் ப்ரபத்யே" என்று அநுஸந்தித்துக்கொண்டு தண்டன் ஸமர்ப்பித்து, மடமேயெழுந்தருளித் தம் திருவாராதநமான அரங்கநகரப்பனைத் திருவடிவிளக்கிப் பட்டரையழைத்தருளி 'வாரீர் பட்டரே! நாம் ஆழ்வான் குமாரர் அகிலஶாஸ்த்ரங்களையும் அதிகரித்தோம்; நம்பெருமாள் நம்மைப் புத்ரஸ்வீகாரம்பண்ணி யருளினாரென்னும் மேன்மைகளை நினைத்து இறுமாந்திராதீர், நம்மாணை! 'எம்பெரு

மானுர் திருவடிகளே உபாயோபேயம்' என்று அத்யவஸித்திரும்,' என்று அருளிச்செய்து, 'கணியனூர்ச்சிறியாச்சான் சட்டம்பள்ளிசீயர் ஈச்சம்பாடிசீயர் முதலானார்க்கும் மற்றுமுள்ள முதலிகளுக்கும் உடையவர் ப்ரஸாதித்தருளின அர்த்தவிசேஷங்களையும் ப்ரஸாதித்துக்கொண்டு தர்சநம் நிர்வஹித்து வாழ்ந்தருளவேணும்' என்று மங்களாசாஸநம் செய்தருளி, அவர்களைப் பட்டர்திருக்கையிலே காட்டிக்கொடுத்தருளி, 'ஸர்வாபராதங்களையும் பொறுத்தருளவேணும்' என்று தண்டன் ஸமர்ப்பித்து, பட்டர்முதலான முதலிகளைத் தீர்த்தங்கொண்டு அமுதுசெய்யப்பண்ணி, * அரங்கத்துறையும் இன்துணைவனே வழித்துணையாக நினைத்துக்கொண்டு உடையவர் திருவடிகளை த்யாநித்துக்கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

பட்டரும் ஆசார்யவிஶ்லேஷம் பொறுக்கமாட்டாமல் மிகவும் சோகார்த்தராய் க்லேஶிக்க, அருகிருந்த முதலிகளும் 'வாரீர் பட்டரே! தேவரீர் இப்படி க்லேஶிக்கலாமோ?'' என்று தேற்றமிட, பட்டரும் தம்மிலே தெளிந்துகொண்டிருக்கிற வளவிலே, பெருமாள் சாத்திக்களைந்த திருமாலை திருப்பரியட்டம் முதலானவற்றையுங்கொண்டு அனைத்துக்கொத்திலவர்களும்வர, சிறிய கோவிந்தப்பெருமாள் திருக்கையாலே ப்ரஹ்மமேதவிதியடங்கச்செய்வித்து எம்பாருடைய விமலசரமவிக்ரஹத்தைப் பிடியாநத்திலே எழுந்தருளுவித்துக் கொண்டுபோய் யதிஸம்ஸ்காரவித்யுக்த ப்ரகாரேண ஸம்ஸ்கரித்துக் கநித்துப்பள்ளிபடுத்தி அவப்ருதங்கொண்டாடிப் பெருக்கத் திருவத்யயநமும் நடத்தியருளினார்.

ஆசார்யகைங்கர்யமே பரமப்ரயோஜநமாய்த் தன்னைப் பேணாமையும், ஆசார்யவிஷயத்தில் க்ரயவிக்ரயார்ஹராய் ஸ்வவ்யாபாரமற்றிருந்தபடியும், ஆசார்யன்திறத்தில் சாயாவத் பாரதந்த்ர்யமும், ஆசார்யனையகன்று தரியாத அநுஷ்டாநமும் இவர்க்கே உள்ளவையிறே.

எம்பார்திருநக்ஷத்ரம் - தையில் புநர்பூசம்.

இவர் தனியன் - (௧) "ராமாநுஜபதச்சாயா கோவிந்தாஹ்வாநபாயிநீ-ததாயத்தஸ்வரூபாஸா ஜீயாந்மத்விஶ்ரமஸ்தலீ;'' "வம்பார்மலர்க்கணைக ளைந்தாலுமேவு மாதர்விழி' அம்பாலிடரொன்றிலனொருகாலு மிளையவர்க்குத், தம்பாடொருகாலு

மேகாந்த மில்லென்று தாமுரைத்த, எம்பாரடி சரணென்பாரடி சரண மெங்களுக்கே"; "பட்டார் யாயப்ரபத்திம் வ்யபதிஸதது லங் த்ராவிடாம்நாயமௌலே ரர்த்தம் ஸ்ரீபாஷ்யமங்யாநபிசயதி வராதேஸதோ ங்யாந்ரஹஸ்யாங் - யஸ்சோக்தோ தேவிகேந்த்ரோயதிபதி சரணச்சரயநாமார்யவர்யஸ் தங்கோவிந்தார்ய மஸ்மத்குல குருமமிதஜ்ஞாநவைராக்யமீடே," "ஹ்ருதி நாராயணம் பஸ்யந் நாப்யமச்சத்ரஹஸ்தா யஸ்ஸ்வதாரரதௌசாபி ஸோவிந் தந்தமுபாஸ்மஹே."

ஆழ்வார்களுக்கும் உடையவருக்கும் தீர்த்ததிவஸம் சொல்லாதொழிவானென்னென்னில்:—அத்யாபி அகிலாத்மோத்தாரணார்த்தமாக அர்ச்சாவிக்ரஹங்களை அங்கீகரித்து இங்கே எழுந்தருளி யிருக்கிறார்க ளாகையாலே; அன்றிக்கே, அவர்கள் இங்குந் கால்வாங்கிப்போகில் ஆத்மகோடிகளுக்கு ஈடேற வழியில்லையிறே. இத்தை நினைத்திறே, நம்பூர்வாசார்யர்கள் தீர்த்தங் கொண்டாடித் திதிபரிபாலநம் பண்ணுதொழிகிறதும். "ஆர்த்ராயாமுதிதோ மஹாபுரிமதோஹஸ்த்யத்ரி மாத்தாஸ்ரமஸ் ஸ்ரீரங்கஸ்ரியமேத்யவிஷ்யமஹிதோ வேதாந்தபாஷ்யம் வதந்தீபரோதிக்விஜயம் விதாயஸஹதைர்விப்ரைர்த் விபஞ்சாஸைர்பாதி ஸ்ரீயதுபூதரேயதிவரஸ்ஸம்பத்குமாரம் பஜந்" என்று சித்திரையிற்செய்ய திருவாதிரையிலே ஸ்ரீபெரும்பூதூரிலே அகிலாத்மோத்தாரணார்த்தமாகவந்து அவதரித்து அகிலஸாஸ்த்ரங்களையும் அப்யஸித்து, பெருமாள் கோயிலிலே பேரருளாளர் நியமநத்தாலே பெரியநம்பியை ஆஸ்ரயித்துப் பஞ்ச ஸம்ஸ்காரங்களையும்பெற்று "மாற்பால்மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு" என்கிறபடியே ஸர்வஸங்கபரித்யாக பூர்வகமாகப் பேரருளாளர் ஸந்நிதியிலே ஆஸ்ரமப்ராப்திபண்ணியருளி,ஸ்ரீரங்கைஸ்வர்யத்தைப்பெற்று, ஸ்ரீபாஷ்யமருளிச்செய்து, திக்விஜயம்பண்ணித் திருவரங்கர்பரத்வத்தை நிலை நிறுத்தியருளி. புழுவன்வ்யாஜேந மேல்நாட்டுக்கு எழுந்தருளித் திருநாராயணற்கு அனைத்தழகுங் கண்டருளப்பண்ணிச் செல்வப்பிள்ளையைப் பெற்றெடுத்து வந்து ப்ரதிஷ்டிப்பித்தருளி ஐம்பத்திருவர்க்காக அர்ச்சாவதாரரூபவிக்ரஹத்தை அங்கீகரித்து, அதிலே தம்ஸர்வஸக்தியையும் ப்ரதிஷ்டிப்பித்துக்கொண்டு அவர்களாலே ஸேவ்யமாநராய்ச் * செம்பொற்கழலடித் திருவுருச்செல்வப்பிள்ளையை மங்களாஸாஸநஞ் செய்துகொண்டு காலதத்வ முள்ளதனையும் இங்கே ஸுப்ரதிஷ்டிதராய் விளங்கா நின்றுகொண்டு வாழ்ந்தருளுகிறாராய்த்து, உடையவர்.

பட்டர் வைபவம்.

அநந்தரம் பட்டர் ஸ்ரீபாதத்து முதலிகளுடனே பெருங் கூட்டத் திருவோலக்கமாக எழுந்தருளியிருந்து தர்ஶநம் நிர்வஹித்தருளுகிறகாலத்திலே, ஒரு தீர்த்தவாஸி ப்ராஹ்மணன் வந்து பட்டரைஸேவித்து அவருடைய வேதாந்தோபந்யாஸ சாதுர்யத்தையும் கோஷ்டியின் வைபவத்தையுங் கண்டு நின்று 'பட்டரே! மேல்நாட்டிலே வேதாந்தியென்று ஒருபெரியவித்வானிருக்கிறான்; அவனுடைய வித்தையும் கோஷ்டியும்போலே உமக்கு மிருந்தது' என்ன பட்டரும் ப்ராஹ்மணன் சொன்ன வார்த்தையைக் கேட்டருளி 'ஆமோ! அப்படியும் ஒருவித்வானுண்டோ?' என்ன, 'உண்டு' என்றுசொல்லி அந்த ப்ராஹ்மணன் இங்குநின்றும் புறப்பட்டு மேல்நாட்டுக்குப்போய் வேதாந்திகோஷ்டியிலே சென்று 'வேதாந்தியாரே! உம்முடைய வித்யைக்கும் கோஷ்டிக்கும் ஸத்ருஶராய்ப் பட்டரென்பாரொருவர் இரண்டாற்றுக்கும் நடுவே எழுந்தருளியிருக்கிறார்' என்ன, வேதாந்தியும் ப்ராஹ்மணனைப்பார்த்து 'ஆமோ! பட்டர் நமக்கு ஒத்த வித்வானோ?' என்ன, அவனும் 'பட்டர் உம்மிலும் அதிகர்' என்ன, அவனும் 'அவருக்கு எந்தஶாஸ்த்ரம் போரும்?' என்ன, ப்ராஹ்மணனும் 'ஶப்த தர்க்க பூர்வோத்தர மீமாம்ஸை தொடக்கமான ஸகலஶாஸ்த்ரங்களும் பட்டருக்குப் போரும்' என்ன, வேதாந்தியும் இவன் சொன்னதைக்கேட்டு. 'இவ்விபூதியிலே நமக்கு ஒருவரும் எதிரில்லையென்று ஷட்தர்ஶநத்திற்கும் ஆறுஸநமிட்டு அதன்மேலே உயரவிருந்தோம்; பட்டர் நம்மிலும் அதிகரென்று ப்ராஹ்மணன் சொன்னானே!' என்று அன்று தொடங்கித் திடுக்கிட்டிருந்தான்.

அவ்வளவிலே அந்தப்ராஹ்மணன் அங்குநின்றும் புறப்பட்டுக் கோயிலுக்குவந்து பட்டர்ஸந்நிதியிலே வந்து 'பட்டரே! உம்முடைய வைபவமெல்லாம் வேதாந்திக்குச் சொன்னேன் என்ன, பட்டரும் ப்ராஹ்மணனைக்குறித்து 'அவன் அதற்கு என்னசொன்னான்?' என்ன; அவனும் 'பட்டருக்கு எந்தஶாஸ்த்ரம் போருமென்று கேட்டான்' என்ன, பட்டரும் 'ப்ராஹ்மணா' அதற்கு நீ வேதாந்திக்கு என்னசொன்னாய்?, என்ன, அவனும் 'பட்டருக்கு ஶப்ததர்க்கங்களும் பூர்வோத்தரமீமாம்ஸை

களும் நன்றாகப்போருமென்று வேதாந்தியுடனே சொன்னேன்' என்ன, பட்டரும் அந்தப்ப்ராஹ்மணனைக்குறித்து 'தீர்த்தவாஸியாய்த் தேஶங்களெங்கும் நடையாடி எல்லாருடைய வித்யா மஹாத்ம்யங்களெல்லாம் அறிந்து நாகரீகனாயிருக்கிற நீ, நமக்குப் போருமதெல்லாம் அறிந்து வேதாந்திக்குச் சொல்லாமல் கேவலம் வேதாந்தஶாஸ்த்ரங்களே போருமென்று தப்பாகச் சொன்னாயே!' என்ன, ப்ராஹ்மணனும் பட்டரைக்குறித்து 'இந்த லோகத்திலே நடையாடுகிற ஶாஸ்த்ரமொழிய உமக்கு வேறு எது போருமென்று வேதாந்திக்குச் சொல்லுவது?' என்ன, 'திருநெடுந்தாண்டகம் போருமென்று வேதாந்திக்குச் சொல்லாதிருந்தாயே!' என்று வெறுத்து அருளிச்செய்துவிட, அவனும் பின்னையும் மேல்நாட்டுக்குப்போய் வேதாந்தியுடனே இச்செய்தியைச்சொல்ல, வேதாந்தியும் 'திருநெடுந்தாண்டகமென்கிற ப்ரபந்தத்திற்குத்தானே அர்த்தமாகிறதில்லை; அவர் எப்படிப்பட்ட வித்வானோ!' என்று விஸ்மயப்பட்டிருக்கச் செய்தே, பட்டரும் 'வேதாந்தியை நம்முடைய தர்ஶநத்திலே அந்தர்ப்பூதராம்படி திருத்துமென்று உடையவர் நியமித்தருளினது அவஶ்யம் கர்த்தவ்யம்' என்று தம் திருவுள்ளத்திலே கொண்டு, பெருமாள் ஸந்நிதியிலே சென்று ஸேவித்து நின்று 'நாயன்தே! மேல்நாட்டிலே வேதாந்தியென்று ஒரு பெரிய வித்வானிருக்கிறான்; அவனைத்திருத்தி நம்தர்ஶநப்ரவர்த்தகனும்படி பண்ணவேண்டுமென்று அங்கேற விடைகொள்வதாக இரா நின்றேன்; தேவரீர் அவனை நன்றாகத்திருத்தி ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தத்திற்கு நிர்வாஹகனும்படி திருவுள்ளம்பற்றியருளவேணும்' என்று பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் 'அப்படியேயாகக்கடவன்; த்வரித்துப் போய்வாரும்' என்று திருவுள்ளமுகந்து தீர்த்தம் திருமாலை திருப்பரியட்டத்துடனே தம்குமாரரான வாசிதோன்ற அநேகம் திருவாபரணம் திருப்பரியட்டம் ந்ருத்தகீதவாத்யங்களையும் தமக்கு உண்டானஸகல பரிஜந பரிச்சதங்களையும் கூட்டிப், 'போம்' என்று விடைகொடுத்தருள,

பட்டரும் புறப்பட்டு மேல்நாட்டிலேயெழுந்தருளிக் காவேரிக்கரையிலே சிறப்புத்தூரணிடையிலே நின்றருள, அநந்தாழ்வான் 'ஆழ்வான்குமாரர் பட்டர்எழுந்தருளினார்'என்றுகேட்டுச் சடக்கெனப் புறப்பட்டு எழுந்தருளித் திருக்காவேரிக்கரையிலே பட்டரைக்கண்டு ஸேவித்து 'ஐயோ! ஸுகுமாரரான நீர், காடும்

மலையுங் கடந்து இத்தனை தூரம் எழுந்தருளலாமோ?' என்ன, பட்டரும் திருவடிகளிலே விழுந்து அநந்தாழ்வானை ஸேவித்து 'உடையவர் மேல்நாட்டிலேபோய் வேதாந்தியைத்திருத்தி நம் தர்ஶநப்ரவர்த்தகராம்படி பண்ணென்று நியமித்தருளினரே; அப்படியே நம்பெருமாளும் விடைஸாதித்து அனுப்பியருளினார்' என்று விண்ணப்பஞ்செய்ய, அநந்தாழ்வானும் '* எங்கள் குடிக்கரசே! வாரும்' என்று பட்டரை எடுத்து அணைத்துக்கொண்டுபோய், "யாதவாத்ரேர்ஜிமமிஷா யேஷாங்கேஷாஞ்சவித்யதே - தேஷாங்தேஶே யமபடா: நமச்சந்தி கதாசந" என்று யதுஶைலயியாஸையாவர் சிலர்க்கு உண்டாயிருக்கும், அவர்கள் வஸிக்குந் தேசத்தில் யமபடர் மறந்தும் புகுரார்க ளென்றும், "ஸஹஸ்ரசிரஸ்ஸோயம் ஸாக்ஷாச்சேஷாத்ம கோகிரி:— வைகுண்டாதபியத்ராஹம் ரமயாஸஹிதோரமே" என்று ஸஹஸ்ரபணமண்டலமுடைய திருவநந்தாழ்வானவதாரமான யது கிரிசிகரத்திலே ஸமஸ்த கல்யாணகுணங்களும் குன்றிலிட்ட விளக்காய் ப்ரகாஶிக்கும்படி பரமபதத்தையும் திருப்பாற்கடலையும் உபேக்ஷித்து * அரவிந்தப்பாவையுந் தானுமாய் * அல்லி மலர்மகள் போகமயக்குக்களாய் நிற்க "வைகுண்டவாஸிநஸ் ஸர்வேஶேஷஶேஷாஶநாதய:—திர்யக்ஸ்தாவரஜங்மாதி ஶ்ரயந் தேயதுபூதரே" என்று * வைகுந்தநாட்டில் வாழும் ஸேனைமுதலியார் திருவநந்தாழ்வான் முதலான நித்யமுக்தரெல்லாரும் திருநாடு * புல்லெழுந்து போம்படி குடிவாங்கிவந்து இஸ்ஸௌசீல்யஸௌலப்யாநுபவார்த்தமாகத் திர்யக்ஸ்தாவரஜங்மங்களைப் பரிக்ரஹித்து ஸுப்ரதிஷ்டிதராய் இங்கே வர்த்திக்கிறார்களென்றும் சொல்லும்படியான வைபவத்தையுடைய யாதவாத்ரியைக் கிட்டி, சேதநன் பாதபீடத்திலே ஏறும் பாவனைகொண்டு செம்பொன்யதுகிரியேறித் திருக்கல்யாண ஸரஸ்ஸைக்கிட்டி, "காலே காலேசஸேவந்தாம் கல்யாணீதீர்த்தமத் புதம் - யத்ரதீர்த்தேநி மஜ்ஜந்தோ யதயஸ்ஸம்சிதவ்ரதா:— உந்மஜ்ஜந்திபவாம்போதி கல்லோலகலஹாந்தராத்-புஷ்கரேநததாப்ரீதிர் நகங்காயாம் நயா முனே—யதாகல்யாணதீர்த்தஸ்ய தீர்த்தேகல்யாணசேதஸாம்-தீர்த்தேதத்ராமலேஸ்நாத்வா முச்யந்தேஸர்வகில்பிஷை:—நாஸ்திகஶ்சக்ருதக்நஶ்ச பரீவாதபரோபிச - பரப்ரஶம்ஸாநிஷ்டஶ்ச ஸ்வப்ரஶம்ஸாபராயண: - யஜ்ஞவிக்நகரஶ்சைவ வேதாத்யயந

தூஷக:—பரதாரா நுரக்தஶ்ச பாகபேதகரோபிச - பரத்ரவ்யாப ஹாரீச பாஷண்டாமமதத்பர:—ஶூத்ராந்நபக்ஷகஸ்சைவஸ்வா தீநாமுபலாளக:—தர்மவிக்ரயசீலஸ்ச ஶ்ராத்தபுக்க்ராமயாஜக:- தேவதாத்ரவ்யஹாரீசதர்ப்படம்பஸமந்வித:— மவாங்க்லேஶகர ஸ்சாபி ப்ராஹ்மணுநாஞ்சநிந்தக:—விஷ்ணுபக்திவிகாதீசவ்ருஷ லீபதிரேவச” என்று இப்படிப்பட்டிருக்கிறவர்களுடைய பாப ங்களைப் போக்கவல்ல திருக்கல்யாணியிலே நீராடிக் கேஶவாதி யான பன்னிரண்டு திருநாமஞ் சாத்தியருளி எழுந்தருள, அங்கி ருந்த ஐம்பத்திருவர் முதலான அனைவரும் சடகோபன்முன்னி லையாக வந்து எதிர்கொள்ள, பட்டரும் ஸாஷ்டாங்கமாக ஸேவி த்துத் திவ்யநகரிக்குள்ளே யெழுந்தருளிச் சதுராநநகோபுரத் தை அஞ்சலித்து உள்ளேபுகுந்து, ஸ்ரீபலிபீடத்தருகே * தாளுந் தடக்கையுங் கூப்பித் தண்டன் ஸமர்ப்பித்து, உடையவர் ஸந்நி திக்கு எழுந்தருளி “யோநித்யம்” என்று தொடங்கி “ராமாநுஜ ஸ்யசரணௌஶரணம்ப்ரபத்யே” என்று ஸேவித்து ராமாநுஜ திவாகரரையுந் திருவடிதொழுது வாழ்த்தித் தீர்த்தப்ரஸாதங்க ளும்பெற்று அவர்புருஷகாரமாக ப்ரதக்ஷிணமாக எழுந்தருளி “பஶ்சாதபிவிமாநஸ்ய ப்ராகாராந்தரமத்யத: - ஸுதர்ஶநஞ்ச லக்ஷ்மீஶ்ச வர்த்தேதேஸர்வகாமதே” என்று சொல்லப்பட்ட திருவாழியாழ்வானையும் யதுகிரிநாச்சியாரையும் ஸேவித்து ஆந ந்தமயமான திவ்யவிமாநத்தையுந் தொழுது, உள்ளே யெழுந் தருளி ஸாஷ்டாங்கமாக ஸேவித்து, நம்மாழ்வாரையுந் திருமங் கை யாழ்வாரையுஞ் சேவித்து, செல்வப்பிள்ளையையுந் திருவடி தொழுது, அவ்விக்ரஹஸௌந்தர்யத்திலே ஆழங்கால்பட்டுநிற்க, செல்வப்பிள்ளையும் உகந்து தீர்த்தம் திருமாலை சடகோபன் ப்ர ஸாதித்தருளப்பெற்றுப் புறப்பட்டு, ஸேனைமுதலியாரையுந் திருவடிதொழுது, சண்டப்ரசண்டர்களான த்வாரபாலகர்களநு மதிகொண்டு உள்ளேசென்று திருப்பல்லாண்டை அநுஸந்தித் துத் திருநாராயணப்பெருமாளைப் பாதாதிகேஶாந்தமாக ஸே வித்து அஞ்சலித்துநிற்க, திருநாராயணரும் மிகவும் உகப்போ டே பட்டருக்குத் திருமாலை திருப்பரியட்டம் தீர்த்தம் சட கோபனும் ப்ரஸாதித்து விடைகொடுத்தருள, பட்டரும் அநந் தாழ்வானுடனே புறப்பட்டு எழுந்தருளி, வேதாந்தி யிருக்கிற கங்கோரை என்னும் ஊர் ஆஸந்நமானவாறே ‘ஆழ்வான் குமா

ரர் பட்டர் வந்தார், அணியரங்கன் குமாரர் பட்டர்வந்தார் வேதாந்தாசார்ய பட்டர்வந்தார், வேதியர்கள் தனித்தலைவர் வந்தார், ஸ்ரீபராஶரபட்டர் வந்தார், பரவாதி மதஹஸ்தி பஞ்சாநநர் வந்தார்' என்று பல திருச்சின்னம் பரிமாறுகை முதலான தூர்ய கோஷத்தோடு பெருந்திரளாக மஹா ஸம்ப்ரமத்துடனே ஸர்வாபரண பூஷிதராய், சத்ர சாமர தாலவ்ருந்தாதிகள் ஸேவிக்க மணிப்பல்லக்கிலே எழுந்தருளாநிற்க, அவ்வளவிலே இரண்டு ப்ராஹ்மணர்கள் எதிரேவந்து பட்டரைப் பார்த்து 'நீர் ஆர்? அநேகம் ஸம்ப்ரமத்துடனே வந்தீர்; எங்கேற எழுந்தருளுகிறீர்?' என்றுகேட்க, பட்டரும் 'நாம் ஸ்ரீரங்கராஜ பட்டர்; வேதாந்தியுடனே தர்க்கிக்கப் போகிறோம்' என்ன, அந்த ப்ராஹ்மணர்கள் சொன்னபடி:—'நீர் இப்படி ஸம்ப்ரமத்துடனே எழுந்தருளினால், வேதாந்தியை நீர் காணப்போகாது; அவர் க்ருஹத்துக்குள்ளே இருந்துவிடுவர்; அவருடைய சிஷ்ய ப்ரசிஷ்யர்கள் தலைவாசலிலேயிருந்து வந்த வித்வான்களுடனே நாலாறுமாஸம் தர்க்கித்து அவர்களை உள்ளே புகுரவொட்டாதே புறம்பே தள்ளிவிடுவர்கள்' என்ன, பட்டரும் அந்த ப்ராஹ்மணரைப் பார்த்து 'ஆகில், நாம் நேரேசென்று அவர் க்ருஹத்திலேபுகுந்து வேதாந்தியைக் காணும்விரகு என்?' என்று கேட்டருள, அவர்கள் சொன்னபடி:—'வேதாந்தி தநவானுகையாலே ‡ அவாரியாக ப்ராஹ்மணருக்கு ஸத்ரபோஜந மிடுவர்; அந்த ஸத்ரபுக் ப்ராஹ்மணரோடே கலசி அவர்கள் வேஷத்தையுந் தரித்துக்கொண்டு உள்ளேசென்றால், புஜிக்கவருகிற ப்ராஹ்மணரை நிரீக்ஷித்திருப்பர்; அங்கே வேதாந்தியைக் காணலாம்; ஆகையால், உம்முடைய ஸம்ப்ரமங்களையெல்லாம் இங்கே நிறுத்தி நீரொருவருமே ஸத்ரப்ராஹ்மணர்களுடனே உள்ளே எழுந்தருளும்' என்று சொல்லிப் போனார்கள்.

அநந்தரம் பட்டரும் 'இவர்கள்சொன்னது கார்யமாம்' என்று திருவுள்ளம்பற்றி, தம்முடைய அனைத்துப் பரிகரத்தையும் ஊருக்குத்தூரத்திலே நிறுத்தி தாம் சாத்தியிருந்த ஸர்வாபரணங்களையும் களைந்துவைத்து ஒரு அரசிலைக்கல்லையை (தொன்னையை)க் குத்தியிடுக்கிக்கொண்டு, காவிவேஷ்டியும் தரித்து

‡ அவாரியாக — தடையில்லாமல்.

ஒருகமண்டலமும் கையில் தூக்கிக்கொண்டு ஸத்ர ப்ராஹ்மணர்களுடனேகூடிக் கார்ப்பண்ய வேஷத்துடனே உள்ளே எழுந்தருள, வேதாந்தியும் ப்ராஹ்மணர் புஜிக்கையைப் பார்த்துக்கொண்டு ஒரு மண்டபத்திலே ஆறு ஆஸநமிட்டு அதன்மேலே பெரிய மதிப்புடனே இராநிற்க, ப்ராஹ்மணரெல்லாரும் ஸத்ரஶாலையிலே புகுர, பட்டர் அங்கே எழுந்தருளாமல் வேதாந்திகளை நோக்கி யெழுந்தருள, வேதாந்தியும் 'பிள்ளாய்! இங்கு ஏன் வருகிறீர்?' என்ன, பட்டரும் 'பிக்ஷைக்கு வருகிறேன்' என்ன, 'எல்லாரும் புஜிக்கிறவிடத்திலே போகீர், பிக்ஷைக்கு' என்ன, பட்டரும் 'எனக்குச் சோற்றுப் பிக்ஷையன்று' என்ன, வேதாந்தியும் 'இவர் ஸத்ராசியானாலும் கிஞ்சித் வித்வானாகக்கூடும்' என்று விசாரித்து 'கா பிக்ஷா?' என்ன, பட்டரும் 'தர்க்கபிக்ஷா' என்ன, வேதாந்தி இத்தைக்கேட்டுத் திடுக்கிட்டு 'முன்னே தீர்த்தவாசி ப்ராஹ்மணன் வந்து நமக்குச்சொன்ன பட்டரல்லது நம்முன்னேவந்து கூசாமல் நின்று தர்க்கபிக்ஷையென்று கேட்க வல்லவர் இந்தலோகத்தி லொருவருமில்லை; வேஷம் கார்ப்பண்யமாயிருந்ததேயாகிலும் இவர் பட்டராகவேணும்' என்று நிஶ்சயித்து, 'நம்மைத்தர்க்கபிக்ஷை கேட்டீர்; நீர்பட்டரோ?' என்ன, இவரும் 'ஆம்'என்று கமண்டலம் கல்லை காவிவேஷ்டி இவற்றையெல்லாம் சுருட்டியெறிந்துஎழுந்தருளியிருந்து மஹாவேகமாக உபந்யஸிக்க, அவ்வளவிலே வேதாந்தியும் பட்டர்வைபவங்கேட்டிருந்தும் 'இவர் வித்யாமாஹாத்ம்யங் காணவேணும்' என்று திருவுள்ளமாக; பட்டர் வேதாந்தியிடம் வார்த்தையாடுங்காலையில், நாம் உம்மிடம் தர்க்கித்து ஜெயாபஜெய மாகிறபரியந்தம் நம்மை யாதொரு தடையுமின்றி உம்மிடம் வரப்போக அநுமதி செய்யவேண்டுமென்றும், தர்க்கம் பத்து தினத்திற்குள் முடிவாக வேண்டுமென்றும் கேட்க; அவனும் அங்ஙனமே யாகுகவென் றொப்புக்கொண்டான். பட்டரும் தர்க்கிக்க ஆரம்பித்து ஒன்பதுநாள்வரையிலும் ஒருவர்க்கொருவர் பின்னிடையாது வாதித்து வருகையில், பட்டர் ஒன்பதாம்நாள் இராத்திரி பெருமாளுக்குத் திருவாராதனஞ்செய்து அமுதுசெய்வித்துத் தாம் ப்ரஸாதப்படாமலே தமது ஆசாரியராகிய உடையவர் திருவடிகளையும் நம்பெருமாள் திருவடிகளையும் தியானித்துக்கொண்டு சோகாவேசராய்க் கண்வளர்ந்தருளினர்.

அன்றிராத்திரி பெரியபெருமாள்பட்டர் ஸ்வப்னத்திலெழுந்தருளி 'வாரீர்பட்டரே உமது வித்யாதிறத்தை வேதாந்தி யறியும்பொருட்டு இங்ஙனஞ் செய்தோம்; நீர் ஆழ்வாரருளிய திருநெடுந்தாண்டகமும், ஸ்ரீஆளவந்தாரருளிய மாயாவாத கண்டனமும் மறந்தீரோ வென்றுரைத்தருளி யந்தர்த்தானமாக, உடனே பட்டரும் துயிலுணர்ந்து ப்ராதக் காலமானவாறே தீர்த்தமாடி அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வேதாந்தியுடன் தர்க்கிக்கவந்தார். வேதாந்தியும் இப்போது பட்டர்வரும் கோலத்தையும் குதூகுலத்தையுங் கண்டு திடுக்கிட்டு பட்டர்முன் சென்று அவர்திருவடிகளில் தெண்டன் சமர்ப்பித்து அடியேன் தோற்றேனென்றுரைத்தான். பட்டரும் அப்படியன்று தர்க்கித்தே தீரவேண்டுமென்று நிர்ப்பந்தித்து அவனுடன் வாதித்து ஜெயமுற்றனர். உடனே வேதாந்தியும் எழுந்திருந்து நின்று நடுங்கி வேறொன்றுஞ் சொல்லாதே 'மநுஷ்யமாத்ரமே யென்றிருந்தேன்; நம்பெருமாளென்ன நீரென்ன பேதமில்லை; உறங்கும் பெருமாள் அவர், உலாவும் பெருமாள்நீர்; ஆனபின்பு வாய்திறந்து ஒருவார்த்தைசொல்லக்கூடாது' என்று அரைகுலையத்தலைகுலையவந்து பட்டர்திருவடிகளிலே அடைவுகெடவிழுந்து ஸேவித்து 'அடியேனை இரங்கியருளவேணும்' என்று மிகவும் அநுவர்த்திக்க, பட்டரும், தாம் எழுந்தருளின கார்யம் அதிஸீக்ரமாகப் பலித்தவாறே, மிகவுந் திருவுள்ளமுகந்தருளி வேதாந்தியை அங்கீகரித்தருளி, அவருக்கு "அர்த்தபஞ்சகதத்வஜ்ஞா: பஞ்ச ஸம்ஸ்காரஸம்ஸ்க்ருதா:— ஆகாரத்ரயஸம்பந்நா மஹாபாகவதாஸ்ஸ்ம்ருதா:" என்று சொல்லப்பட்ட தாபபுண்ட்ராதி பஞ்சஸம்ஸ்காரங்களையும் ப்ரஸாதித்து அர்த்தபஞ்சகஜ்ஞாநத்தையு முண்டாக்கி, ஆகாரத்ரயஸம்பந்நரான மஹாபாகவதோத்தமராக்கி விசேஷகடாக்ஷஞ்செய்தருளி, 'வேதாந்திகளே! நீர் ஸர்வஜ்ஞராயிருந்தீர்; ஆகையாலே, நாம் உமக்குப் பரக்கச்சொல்லலாவ தொன்றுமில்லை; விசிஷ்டாத்வைதமே பொருள்; நீர் மாயாவாதரீதியை ஸவாஸநமாக த்யஜித்து, ஸ்ரீய:பதியைப்பற்றி ஸ்ரீராமாநுஜஸித்தாந்தத்தையே நிர்வஹித்துப்போரும்' என்று அருளிச்செய்து ஆழ்வார்கள் அருளிச்செயல் நாலாயிரமும் ஓதும்படி நியமித்தருளி, 'இனி நாம் நம்பெருமாளை ஸேவிக்கப்போகிறோம்' என்று உத்யோகித்துப் புறப்பட்டவளவிலே, ஊருக்

குப் புறம்பே நிறுத்தின அனைத்துப்பரிகரமும் ஊரிலே வந்து அவர்கள் மஹாஸம்ப்ரமத்துடனே பட்டரைச்சூழ்ந்து ஸேவித்துப் பூர்வம்போலே ஸர்வாபரணங்களாலும் பூஷித்து ஒப்பித்து மணிப்பல்லக்கிலே யேற்றி உபய சாமர தாலவ்ருந்தாதிகள் பரிமாற ஸகலவாத்தியங்களும் முழங்க, திருச்சின்னம் பரிமாறிப் புறப்படக்கண்டு, வேதாந்தி பட்டருடைய பெருமையையும் ஸம்பத்தையும் நன்றாகக் கண்குளிர நோக்கி 'இந்த ஸ்ரீமாந் இத்தனை தூரம் காடும் மலையும் கடந்து எழுந்தருளி, நித்ய ஸம்ஸாரிகளிலுங் கடைகெட்டு ம்ருஷாவாதியாயிருந்த அடியேனுடைய துர்க்கதியே பற்றாசாக அங்கீகரித்தருளுவதே!' என்று மிகவும் வித்தராய்க் கண்ணும் கண்ணீருமாய்க்கொண்டு பட்டர்திருவடிகளிலே விழுந்து க்லேசித்து, 'பெரியபெருமாள் தாமானதன்மையாய் ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதிகளையுடையராய் எழுந்தருளின தேவரீர், 'அநாதிகாலம் தப்பித்திரிந்து * அலம்புரிந்த நெடுந்தடக்கைக்கும் எட்டாதபடி கைகழிந்துபோன இவ்வாத்மா இன்னும் தப்பிப்போம்' என்று திருவுள்ளம்பற்றியருளி, இப்படி அதிகார்ப்பண்யமாயிருப்பதொரு வேஷத்தையும் தரித்துக்கொண்டு ஸத்ராசிகளுடனேகூட எழுந்தருளி, அதிதுர்மாநியான அடியேனை அங்கீகரித்தருளின அந்தவேஷத்தை நினைத்தால், அடியேனுக்குப்பொறுக்கப்போகிறதில்லை' என்றுசொல்லி வாய்விட்டழுதுகொண்டு திருவடிகளிலே விழுந்துகிடக்க, பட்டரும் வேதாந்தியை முடிபிடித்தெடுத்து நிறுத்தித்தேற்றி 'நீர் இங்கே ததீயாராதநைகபரராய் ஸுகமேயிரும்' என்று அருளிச்செய்து கோயிலைநோக்கிப் புறப்பட்டு எழுந்தருளாநிற்க, "மின்னுமாமுகில் மேவுதண்திருவேங்கடம்" என்கிறபடியே அம்புதரசும்பி யதுபூதரஸ்ருங்கநிலயனை நரசிம்ஹதிவ்யவிமாநம் தூரத்திலே தோன்றக்கண்டு அஞ்சலித்துப் பின்னையும் திருநாராயணபுரம் வழியாக எழுந்தருளி, அநந்தாழ்வான் முன்னிலையாக நயநம் நாரசிம்ஹம் கிரிபரிப்ருடஸ்தாநம் வீதாரண்யம் ஜ்ஞாநாஸ்வத்தமாகிற பஞ்சபாகவதஸ்தலம் ஸ்வேதம்ருத் பரிதாநசிலை ஆகிற ஸப்தக்ஷேத்ரங்களையும்; வேதபுஷ்கரிணி தர்ப்பதீர்த்தம் பலாஶதீர்த்தம் பத்மதீர்த்தம் யாதவமஹாநதி வைகுண்டகங்கா தீர்த்தம் நாராயணதீர்த்தம் மைத்ரேயகுண்ட தீர்த்தங்களையும் ஸேவித்து அவகாஹித்து, இவற்றின் மத்யகதமான திருக்கல்

யாணியிலே நீராடி, கேஶவாதி த்வாதஶோர்த்வபுண்ட்ரதரராய், முன்புபோலே ஸேவாக்ரமந் தப்பாமல் ஸேவித்துத் தீர்த்த ப்ரஸாதங்களும் பெற்றுப்புறப்பட்டுத் திருமலையிலிறங்கி எழுந்தருளி, சிறுப்புத்தூரிலே அநந்தாழ்வானை நிறுத்தி பயணகதியிலே த்வரித்துக் கோயிலுக்கு எழுந்தருளி, திருக்காவேரியிலே நீராடியருளி த்வாதஶோர்த்வபுண்ட்ரதரராய், ஸகலபரிஜந பரிச்சதங்களோடே 'வேதாந்தாசார்யபட்டர்வந்தார்; வேதாந்திகளைவென்றவிரகர் வந்தார்' என்று திருச்சின்னம் பரிமாற, * அணியரங்கன் திருமுற்றத்தடியார் எதிர்கொள்ள எழுந்தருளி, ஸேவாக்ரமந் தப்பாமல் ஸேவித்துக்கொண்டு உள்ளேபுகுந்து * மாயோனை மணத்தூணே பற்றிநின்று வாயாரவாழ்த்திநிற்க; பெருமாளும் பெரிய ப்ரீதியோடே திருமாலை திருப்பரியட்டம் தீர்த்தம் சடகோபனும் ப்ரஸாதித்துத் திருமாளிகையிலே போகவிட்டருள; பட்டரும் தம் திருமாளிகையிலே எழுந்தருளி அங்கே ஆண்டாளை ஸேவித்து ஸ்ரீபாதத்து முதலிகளுக்குத் தர்ஶநார்த்தம் நிர்வஹித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

அநந்தரம் அங்கே கங்கோரையிலே வேதாந்தி * திருமாலடியார்களைப் பூசித்துக்கொண்டிருக்கும் நாளிலே; இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் இளைத்து வேதாந்தியின் திருமாளிகைக்கு எழுந்தருளி 'க்ஷுத்து நலியாநின்றது' என்று அமுதுசெய்யத்தேட, வேதாந்தி தேவிகளிருவரும் பார்த்து 'உங்கள் வேதாந்தி தீர்த்தமாடப்போனார்; இங்கு ஒன்றுமில்லை; நீங்கள் அங்கேறப் போங்கோள்' என்றுசொல்லி உதாஸீநம்பண்ணிவிட; அந்த ஸ்ரீவைஷ்ணவர்களும் வேதாந்தி பக்கல்சென்று இத்தை அறிவிக்க அவரும் அதுகேட்டு அநுதபித்துத் தம் திருமாளிகையிலே எழுந்தருளித் தேவிகளிருவரையுஞ்சீறி அப்போதே புறப்பட்டுக் கோயிலுக்கு எழுந்தருளத்தேட, அங்குள்ளவர்கள் வேதாந்தியைப் போகவொண்ணாதென்று தகைய; இவரும் தமக்கு நிரவதிகதநமுண்டாகையாலே அத்தை மூன்று அம்ஶமாகப் பிரித்து இரண்டுதேவிகளுக்கும் இரண்டு அம்ஶங்கொடுத்து மற்றையம்ஸத்தை ஸ்வாசார்யருக்காக எடுப்பித்துக்கொண்டு அத்தேசத்தையும் ஸவாஸநமாகவிட்டு, "இல்லறமல்லேல் துறவறம்" என்று அதிதிஸத்காரயோக்யையல்லாத பார்யைகளை த்யஜித்து ஸந்யஸிக்கக்கடவன் என்று ஶாஸ்த்ரம் சொல்லுகையாலே ஸர்வ

ஸங்கபரித்யாகபூர்வகமாக அங்கே ஸந்யஸித்தருளிக் கோயிலை நோக்கி எழுந்தருளாநிற்கச்செய்தே திருக்காவேரிக்கரையிலுள்ள சிறுப்புத்தூரிலே அநந்தாழ்வானைக்கண்டு ஸேவித்துநிற்க, அநந்தாழ்வானும் 'வாரீர் வேதாந்தியே! ஸுகுமாரரான நீர் இங்ஙனே செய்யலாமோ? வேர்த்தபோது நீராடிப் பசித்தபோது அமுதுசெய்து பட்டர் திருவடிகளே ஶரணமென்றிருந்தால், உம்மைப் பரமபதத்தினின்றும் தள்ளிவிடுவாருண்டோ? இனியென்! திருமந்த்ரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து த்வயைகநிஷ்டராவீர்' என்று ஆசீர்வதித்து, 'போம்' என்று விட்டார். அதாவது திருமந்த்ரம் ஆத்மஸ்வரூபபரமாகையாலே ஶேஷத்வ ஜ்ஞாநோத்பத்தியாகிற ஆபிஜாத்யமுண்டாய், த்வயத்திலும் ஸ்ரீமச் சப்தோக்தமான பெரியபிராட்டியார் புருஷகாரத்தாலே வர்த்தமாநார்த்தத்திலே வர்த்தித்து, உத்தர வாக்யோக்தங்களைப்பற்றக் கைங்கர்யைக நிஷ்டராவீரென்று சொன்னபடி.

வேதாந்திகளும் பயணகதியிலேபோய்க் கோயிலிலே யெழுந்தருளிப் பட்டர் திருவடிகளிலே ஸேவித்து, தாம் கொண்டுவந்த தநத்தைத் தம்மதென்கிற அபிமாநத்தைவிட்டுப் பட்டருக்கு இஷ்ட விநியோகார்ஹமாம்படி அவர்திருவடிகளிலேஸமர்ப்பித்து நிர்மலராய்நிற்க, அவ்வளவிலே பட்டரும்மிகவும் உகந்தருளி இதுவென்? என்ன, வேதாந்திகளும் ஸ்வாமீ! அதிதிஸத்கார யோக்யதையல்லாத பார்யைகளுடன் வர்த்திக்க மனதின்றி யடியேனிட மிருந்த திரவியங்களை மூன்றுபாகமிட்டு இரண்டு பார்யைகளுக்கும் இரண்டுபாகத்தைக்கொடுத்துவிட்டு மற்றொரு பாகத்தைத் தேவரீருடைய இஷ்டவிநியோகார்ஹமாம்படி ஒட்டகத்தின்மீது எடுத்துவந்து தேவர் திருவடிகளில் ஸமர்பித்தேனென்றார். பட்டரும் ஆகில் இதனைக் காவேரிக்கரையில் எறிந்துவிடுமென்ன, அவரும் அப்படியேசெய்தார். அந்தத்திரவியமும் அங்கேயே பலநாள்கிடக்க ஒருநாள் பட்டர் காவேரிக்குத் தீர்த்தமாடப்போனபோது வேதாந்திகளை நோக்கி இத்திரவியக்குவியல் ஏதென்ன; அவரும் ஸ்வாமி இதுதேவருடைய இஷ்டவிநியோகார்ஹமாம்படி சேமிக்கப்பட்ட சொத்து என்ன; ஆயின் இது கொண்டென்செய்யநினைவென்ன; திருநந்தவனம்வைத்தால் நலமாயிருக்குமென்ன; அப்படியே செய்யும் என்றார். வேதாந்திகளும் திருநந்தவனம் வைத்தபின்னும் திரவியம்மிகுந்திருப்பதைக்

கண்டு பட்டருக்கு விண்ணப்பிக்க; பட்டரும் இதனை அகில பாகவதர்க்கும் ஒருநாள் ததியாராதனக் கைங்கர்ய விஷயமாகச் செலவிடும் என்ன; அவரும் அவ்வாறேசெய்தார். அப்போது ஊரடங்கவும் பிரஸாதப்பட்டு மகிழலாயிற்று. ததனந்தரம் பட்டர் வேதாந்திகள்விஷயத்தில் க்ருபைகூர்ந்து கடாக்ஷித்து 'நம்முடைய சீயர் வந்தார்' என்று வாரி எடுத்துக் கட்டிக்கொண்டருளி ஒருக்ஷணமும் பிரியாமல் தம்முடைய ஸந்நிதியிலே வைத்துக்கொண்டு ஸகலார்த்தங்களையும் ப்ரஸாதித்தருள சீயரும் பட்டரை யல்லது மற்றொரு தெய்வம் அறியாதிருந்தார்.

பட்டரும் நம்முடைய சீயரென்றுசொல்லி அணைத்துக் கொண்ட அன்றுதொடங்கி வேதாந்திகளுக்கு 'நஞ்சீயர்' என்று திருநாமமுண்டாயிற்று.

நஞ்சீயர் பட்டரைப்பார்த்து 'பெருமாள் சந்த்ர புஷ்கரிணிக் கரையிலே கண்வளர்ந் தருளுகிறதற்குத் திருவுள்ளக் கருத்து என்?'என்று விண்ணப்பஞ்செய்ய,பட்டரும், '* நாராயணனே! மணிவண்ணா! நாகணையாய்!' என்று கூப்பிட்ட பின்பிறே அந்த மடுவின்கரையிலே எழுந்தருளினது; இங்குக் கண்வளர்ந் தருளுகிறது நான் கூப்பிடுவதற்கு முன்னே என்னை எடுக்கைக்காக, நான் அகப்பட்ட பொய்கைக்கரையிலே ஏற்கனவே வந்து கண் வளர்ந்தருளுகிறானித்தனை; நீர் இவ்வர்த்தம் கேட்டது, உம்முடைய வசத்தாலே யன்றுகாணும்; உம்மைக்கொண்டு நம்பெருமாள் என்னினைவை வெளியிட்டருளினார்' என்று அருளிச்செய்தார்; அதாவது - பகவதவதாரங்களடங்க ஸ்வார்த்தமாக என்றிறே ஜ்ஞாநாதிகர் அநுஸந்திப்ப ரென்றபடி.

நஞ்சீயர் பட்டரை ஸ்ரீபாதந்தாங்குவதாகத் தோளிலே தண்டைவைக்கப்புக, பட்டரும் 'உம்முடைய வேஷத்திற்கு இது விருத்தங்காணும்' என்று அருளிச்செய்ய, சீயரும் 'அங்குத்தையடிமைக்கு ஏகாந்தமென்று இவ்வேஷத்தைப் பரிக்ரஹம் பண்ணினேன்; அதுதானே இதற்கு விரோதமாகில், பழைய வெள்ளையையுடுக்கிறேன்' என்று விண்ணப்பஞ் செய்தார்; அதாவது - ஆசார்ய கைங்கர்யத்திற்கு அநுரூபமாகாத வர்ணாஶ்ரம தர்மமும் பரித்யாஜ்ய மென்றபடி.

பட்டர் குடும்ப ஸஹிதமாகக் கூரகுலோத்தமணிலே எழுந்தருளி யிருக்கிறவளவிலே திருநந்தவனத்தில் அற்பம் உபஹதி

யுண்டாக, திருநந்தவனஞ்செய்கிற ஏகாங்கிகள் சில்வார்த்தைகள் சொன்னார்களென்று நஞ்சீயர் கேட்டருளி, ஏகாங்கிகளையழைத்து 'நம்பெருமாள் திருக்குழற்கற்றை சிக்கு நாறுகிறதென்றோ நான் திருநந்தவநஞ்செய்கிறது? பட்டருடைய குடும்பத்திற்கு இஷ்டவிநியோகார்ஹமாகவேணுமென்று திருநந்தவநவ்யாஜேந கோலினேனித்தனையன்றோ!' என்று அவர்களைச் சீறிவிட்டருளினார்; இத்தால், ஆசார்ய பரதந்த்ரன் பகவத்கைங்கர்யம் பண்ணக்கோலுவதும் ஆசார்ய கைங்கர்யார்த்தமாக வித்தனையென்று கருத்து.

அநந்தரம் பட்டர் திருவணையாட எழுந்தருளுகிறபோது, பகலெல்லாம் வழிநடந்தருளின ஆயாஸத்தாலே விட்டதொரு தூற்றடியிலே நஞ்சீயர் மடியிலே திருமுடியைவைத்துக் கண்வளர்ந்தருள ஓரிரவெல்லாம் தொடைமாறுதல் அசைத்தல் செய்யாதே இருந்தருளினார்; ஆகையாலே ஆசார்ய விஷயத்திலே சைதந்யம் மூச்சற்றுப் படுக்கையாய் அடிமைசெய்கை சிஷ்யஸ்வரூப சித்தியென்கிறது.

திருவணையாடி மீண்டு எழுந்தருளுகிறபோது ஸாயங்காலமானவாறே பாதிரியென்கிற க்ராமத்திலேபோய் ஒரு வேடனகத்தே எழுந்தருளப் புக்கவாறே, அவனும் தானிருந்த ஆஸநத்தையும் விட்டு இவர்க்கு ஒருகட்டிலை அமைத்துக்கொடுக்க, அதன்மேலே எழுந்தருளியிருந்து 'இவன் நம்முடைய வைபவமறிந்து செய்தானல்லன்; க்யாதிபரனாய்ச் செய்தானல்லன்; நம்மால் உபக்ருதனாய்ச் செய்தானல்லன்; தன்னுடைய க்ருஹத்திலே புகுந்தோமென்னும் அபிமாநமிறே இவன் இவ்வளவு செய்யவேண்டிற்று. ஈஶ்வரன் தன் அபிமாநத்திலே ஒதுங்கினாரை என்ன நினைத்திருக்கிறானோ? என்று அநுஸந்தித்தருளி, பின்பு அந்த க்ருஹமுடையவனைக் குறித்து 'இங்கு விஶேஷம் ஏது?' என்று கேட்டருள, அவனும் 'நாயன்தே! நான் காட்டிலே வேட்டைக்குப் போனேன்; அங்கே ஒரு முசல் குட்டியைப்பிடித்தேன்; அதனுடைய தாயானது என்முன்னேவந்து வழியிலே எதிரே கும்பிட்டுக்கொண்டு கிடந்தது; அத்தைக்கண்டு எனக்குத் தயை பிறந்து அதன் குட்டியை விட்டுப்போந்தேன்' என்றான். அத்தைக்கேட்டு இவரும் 'ஒருசேதநனுக்கு இல்லாததொன்று, பரமசேதநனுக்கு உள்ளதொன்று! "மாமேகம்ஶரணம் வ்ரஜ" என்

று அம்முசலுக்கு உபதேசித்தாருமில்லை; “அரிஃப்ராணுந்பரித்யஜ்ய ரக்ஷிதவ்யஃக்ருதாத்மநா” என்று இவ்வேடனுக்கு உபதேசித்தாருமில்லை; அவ்வ்யவதாநேந ஶாஸ்த்ரமதி பலிப்பதே! ஈதொரு ப்ரமாணசித்தி இருந்தபடியே!’ என்று நஞ்சீயர்க்கு அருளிச்செய்து, கோயிலுக்கு எழுந்தருளிப் பூர்வம்போலே வ்யாக்யாநித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

அக்காலத்திலே வீரஸுந்தரப்ரஹ்மராயன் பெருமாளுக்குத் திருமதிள் கட்டுவிக்கிற நேரிலே பிள்ளைப்பிள்ளையாழ்வான் திருமாளிகையகப்பட, ‘அவர் திருமாளிகையை யிடித்துத் திருமதிள் கட்டவேணும்’என்று வீரஸுந்தரன் சொல்ல, பட்டரும் ‘உம் திருமதிளோ பெருமாளுக்கு ரக்ஷகம்? அவர் மங்களாஶாஸநமிறே ரக்ஷகம்; ஆகையாலே, முன்பு திருமங்கையாழ்வார் தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலைகட்டுகிறஸ்தாநத்தைத் தப்ப ஒதுங்கத் திருமதிள் கட்டவில்லையோ? நீரும்இப்போதும் அப்படியே அவர் திருமாளிகையைவிட்டு ஒதுங்கத் திருமதிள் கட்டிவையும்’ என்று சொல்ல, வீரஸுந்தரனும் ஆசார்யபுத்ரரென்று அஞ்சாதே அவர்வார்த்தையை அதிக்ரமித்துஆழ்வான் திருமாளிகையை யிடித்துத் திருமதிள் கட்டிவைத்துப் பட்டரைத் தந்மூலமாகக் கோயிலிலே யிருக்கவுமொட்டாதே மிகவும் உபத்ரவிக்க, பட்டர் கோயிலினின்றும் புறப்பட்டுத் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளும்போது வழியிலே இளைத்தருளி ‘நஞ்சீயர் இப்போது வருவதுங்காணேன்’ என்ன, நஞ்சீயரும் ‘சீயரே! சீயரே!’ என்று அழைத்துக்கொண்டு கட்டுத்திருப்போனகமும் தண்ணீரமுதும் கொண்டு ஓடிவந்து சடக்கென அமுது செய்யப் பண்ணிவைத்து இளைப்பாற்றிவைக்க, பட்டரும் நஞ்சீயருக்கு அப்போதும் ஒரு விஶேஷகடாக்ஷஞ் செய்தருளினார்; ஆகையாலே, அநுவர்த்தந விஶேஷங்களாலே ஆசார்யாநுக்ரஹத்திற்குப் பாத்ரமாக வேணுமிறே.

அநந்தரம் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருந்து “ஸ்ரீகண்டத்வயஸஸரஸஸ்ஸிக்தநீரோபகண்டாமாவிர்மோதஸ்திமிதஶகுநாநூதிதப்ரஹ்மகோஷாம் - மார்க்கேமார்க்கேபதிகநிவஹைருஞ்ச்யமாநாபவர்க்காம் பஶ்யேயந்தாம்புநரபிபுரீம் ஸ்ரீமதீம்ரங்கதாம்நஃ” என்று சொல்லிக்கொண்டு, கோயிலையும் பெருமாளையும் விட்டுப் பிரிந்திருக்கையாலே மிகவும் க்லேஶப்பட்டு,

'*என்று கொலோ கண்குளிரக் காணுநாளே!' என்றுகொண்டு எழுந்தருளியிருக்கிற காலத்திலே; ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பட்டரை ஸேவித்து 'அடியேனுக்குத் திருவிருத்தத்திற்கு அர்த்தம் ஒருரு ப்ரஸாதித்தருளவேணும்' என்று மிகவும் அநுவர்த்திக்க, பட்டரும் நஞ்சீயரைப் பார்த்து 'சீயா! எனக்குக் கோயிலையும் பெருமாளையும் விட்டுப்பிரிந்த க்லேஶாதிஶயேந செவிகள் சீப்பாயாநின்றது; ஆகையாலே, எனக்கு வாய்திறந்து வார்த்தை சொல்லப்போகிறதில்லை; நீர் திருவிருத்தத்திற்கு அர்த்தம்ஒருரு இந்த ஸ்ரீவைஷ்ணவருக்குச் சொல்லும்' என்று அவரைச் சீயர் ஸ்ரீபாதத்திலே காட்டிக்கொடுத்து இங்ஙனே நடந்துசெல்லுகிற நாளிலே, கடலைக் கலக்கினாற்போலே பட்டர் திருவுள்ளத்தைக் கலக்கி விரோதித்த வீரஸுந்தரன் மரித்துப்போக,

அவ்வளவிலே கோயிலிலே பட்டர் திருத்தாயார் ஆண்டாளை ஸேவித்திருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் 'பட்டருடைய விரோதி போனான்' என்று தங்கள் திருப்பரியட்டங்களை முடிந்து ஆகாஶத்திலே யெறிந்து நின்றார். நின்றதிக்கிலே ஸந்தோஷித்துக் கூத்தாடி ஆண்டாளுக்கு அறிவிக்க. அதுகேட்டு ஆண்டாள் செய்தபடி:—திருமாளிகைக்குள்ளே புகுந்து திருக்காப்புசாத்திச் சிக்கெனத் தாளிட்டுக்கொண்டு வயிறுபிடித்து மிகவும் க்லேஶித்து வாய்விட்டு உச்சைஸ்ஸ்வரமாக அழத்தொடங்கினாள். அதுகேட்டு ஸந்தோஷாதிஶயேந × தடுகுட்டமாய்க்கும் பிடுநட்டமிட்டுக் * கூத்தாடுகிற முதலிகள் ஆண்டாளைக்குறித்து 'பட்டரை இங்கு இருக்கவுங்கூடவொட்டாமல் விரோதித்த பாபிஷ்டன் போனானென்று ஸந்தோஷியாதே க்லேஶிப்பானேன்? பட்டருடைய விரோதிபோகவும், பட்டரும் முதலிகளும் இங்கே எழுந்தருளவும், நாமெல்லோரும் கூடிவாழவும், உமக்கு அஸஹ்யமாயிருந்ததோ?' என்ன, ஆண்டாளும் ஸ்ரீவைஷ்ணவர்களைக்குறித்து அருளிச்செய்தபடி :—'பிள்ளைகாள்! நீங்களொன்றும் அறியீர்கள்; வீரஸுந்தரன் நேரே ஆழ்வானுடைய சிஷ்யனாயிருந்து ஆசார்யபுத்ரரான பட்டரைத் திண்டாட்டங் கண்டு' அவர்திறத்திலே மஹாபராதத்தைத் தீரக்கழியப்பண்ணி 'அறியாமற்செய்தேன், இத்தைப்பொறுத்தருளவேணும்'என்று பட்டர் திருவடிகளிலே தலைசாய்ப்பதுஞ்செய்யாதே, 'இப்படி செய்தோமே!' என்கிற அநுதாபமுமின்றியே செத்துப்போ

ஞன்; ஆகையாலே, அவன் ஶரீரம்விட்டபோதே யமபடர் கையிலே யகப்பட்டுக்கலங்க அடியுண்டுமலங்க விழுக்குமாகையாலே அத்ருஷ்டத்தை யிழந்தான். சிலநாளைக்கு இருந்தாகிலும் த்ருஷ்டஸுகத்தை யநுபவிக்கிறுனென்றிருந்தேன்; அதுவுங்கூட இழந்தானும்; ஆழ்வான் திருவடிகளில் ஸம்பந்தமுடைய ஒரு ஆத்மா இப்படி தட்டுப்பட்டுப்போவதே! என்று இத்தை நினைத்து என்வயிறு எரிகிறபடி உங்களொருவர்க்கும் தெரிகிறதில்லை' என்று ஆண்டாள் அருளிச்செய்தாள்; குற்றஞ்செய்தவர்கள் பக்கலிலு மகப்பட ஹிதபரராய்த் தயார்த்ரசித்தராய்ப் போருவது ஆழ்வான் ஸம்பந்தமுடையவர்களுக்கேஉள்ளதொன்றிறே.

பிள்ளைப்பிள்ளையாழ்வான் இவ்விஶேஷங்கேட்டுக் கோயிலினின்றும் திருக்கோட்டியூருக்கு எழுந்தருளி இத்தை அருளிச்செய்ய, பட்டரும்கேட்டு ஸந்துஷ்டராய் "நுங்கால்களென்தலைமேற் கெழுமீரோ நுமரோடே" என்கிறபடியே அவர்கழல்களை அடிக்கடி வணங்கி, அவருடனேகூடத் தத்க்ஷணமே கோஷ்டீபுரத்தினின்றும் புறப்பட்டுக் கோயிலேற எழுந்தருளி, பண்டுபோலே தர்ஶநார்த்தம் நிர்வஹித்துக்கொண்டிருந்தார்.

அம்மணியாழ்வான் இருநூறுகாதவழி நடந்துவந்து, பட்டர் ஸ்ரீபாதத்திலே தண்டன்ஸமர்ப்பித்து 'அடியேனுக்குத் தஞ்சமாயிருப்பதொரு அர்த்தம் ப்ரஸாதித்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, பட்டரும் நெடுமாற்கடிமைக்கு அர்த்தம் ப்ரஸாதித்தருளி, 'எம்பெருமானை அறிகையாவது - அவனை அரைவயிறு பட்டறிகை'; ததியரை யறிகையாவது அவர்களை முழுக்க அறிகை என்று அருளிச்செய்தருள, அவரும் 'பலபடிசொல்லியென்? மறப்பன்; இவ்வளவே யமையும்' என்று அது தன்னையே தாரகமாகப் பண்ணிக்கொண்டு எழுந்தருளினுர்; "ந்யக்ரோதபீஜேவடவத் ப்ரணவேஶப்தஜாலவத் - ஸித்தேததீயஶேஷத்வே ஸர்வார்த்தாஸ்ஸம்பவந்திஹி" என்கையாலே, ஸச்சிஷ்யன் ஸதாசார்யன் அருளிச்செய்ததொரு சரமார்த்தத்தையே தஞ்சமென்று விஶ்வஸிக்கவேணு மென்றபடி.

வீரசிகாமணிப் பல்லவராயன், பட்டரைக் குறித்து 'பட்டரே! ராஜகார்யஞ் செய்கையாலே அடியேனுக்குப் பகவத்விஷய வைபவங்கேட்க விரகில்லை; எனக்குத் தஞ்சமா யிருப்பதொரு அர்த்தம் 'ப்ரஸாதித்தருளவேண்டும்' என்று அபேக்ஷி

க்க, பட்டரும் 'கடற்கரை வெளியை நினைத்திரும்' என்று அரு
ளிச்செய்தருள, அது தெரியாமையாலே அவன் கையைப் பிசை
ந்து நிற்க, இவரும் 'கடற்கரையிலே ஒரு அம்ருதக் கடல்போ
லே பெருமாள் பெரியவாநர சேனையோடே விட்டிருக்க, அக்க
ரையிலே பிணந்தின்னிப்பையல் ராவணன்இருக்க, எழுபதுகோ
டி மஹாகபிஸேனை உணர்ந்து பெருமாளைக் குறிக்கொண்டு
நோக்கிக்கொண்டு போர, அவர்கள் ப்ரக்ருதிமாந்க ளாகையா
லே கண்ணுறங்கிக் காலோய்ந்து கைசோர்ந்தவளவிலே, தாமும்
தம் திருத்தம்பியாருமாகத் திருவரையிற்கட்டிய கச்சும் சுருக்
கிய சீராவும் நாணியும் முதுகிலே அம்பறாத் தூணிகட்டிக் கையி
லே தெறித்துப் பிடித்துப் பெருக்கின திருச்சரமும் தரித்த திரு
வில்லும் தாமுமாய், சில அண்டஜங்கள் முட்டையிட்டுத் தம்
சிறகின்கீழே நோக்கி இட்டுவைக்குமாபோலே எழுபதுவெள்
ளம் பிலவங்ககுலபதி மஹாஸேனையையும் நடையாடும் மதிள்
கள்போலே ரக்ஷித்துக்கொண்டு ஓரிரவெல்லாம் சாரிகையாய்
வந்த சக்ரவர்த்தித் திருமகனுடைய கையும் வில்லுமே தஞ்சமெ
ன்று ஸுகமாயிரும்' என்று அருளினார்; தர்ஶநரஹஸ்யமாவது-
உறங்குகிறபோது நம்மை ரக்ஷிக்குமவன் உணர்ந்தால் நம்மை
நோக்குமென் றிருக்கச் சொல்லவேண்டாவிறே யென்றபடி.

ஒருநாள் த்ரிபுவந வீரதேவராயன், பட்டருடைய வைபவ
ங்கண்டு 'பட்டரே! நீர் நம்பக்கல் ஒருநாள் வந்து போகீர்'
என்ன பட்டரும் பெருமாள் அஞ்சலென்ற கைமறுத்தாலும்,
அவ்வாசலொழிய வேறொரு போக்கு உண்டோ?' என்று அரு
ளினார்; அதாவது "ஏகத்வ்ரதம்மம" என்று ஸ்வாஶ்ரித ரக்ஷ
ணைக தீக்ஷிதனான எம்பெருமானிருக்க, கதிபயக்ராமேஶ கஞ்
சித் புருஷாதமன் வாசலிலே துவளக்கடவோ மல்லோ மென்
றபடி.

ஒருநாள் பட்டர் பெருமாளைத் திருக்கைத்தலத்திலே எழு
ந்தருளி யிருக்கச்செய்தே திருவடி தொழப்புக, திருமுன் அடிக்
கிற வேத்ரபாணிகள் பட்டரைப்பாராமல் சில பருஷோக்தி
களைச்சொல்ல, ஸ்ரீபாதத்து ஸ்ரீவைஷ்ணவர் அவரோடே எதி
ருத்தரஞ் சொல்லப்புக, பட்டரும் 'வாரீர் பிள்ளைகாள்! கேளும்:
பெருமாளுக்கு ஏகாந்தத்திலே என்குற்றம் விண்ணப்பஞ்செய்ய
ஒருகாலம்பற்றாதாய், பெருமாளும் திருச்செவிசாத்தாமல் போ

ந்த இத்தைப் பெருமாளுக்கு அந்தரங்க பரிகரமாயிருப்பா ரொருவர் ஸம்தோஷத்தை ஏகாந்தத்திலே விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும் திருச்செவிசாத்தினது கண்டால், நம்மைப்பார்க்கில் அத்தை விலக்குகிற இத்தால் நீவிர் பெற்றபேறு என்? என்று அருளினர். இத்தால் பகவத் ஸந்நிதியில் ஏகாந்தத்தில் பரக்ருதஸ்வதோஷக்யாபநம் தத்வாத்ஸல்ய கார்யமாய்த் ததங்கீகார ஹேதுவுமாமென்று நினைக்கக்கடவ னென்றபடி.

பட்டர் ஸ்ரீபாதத்தில் ஸம்பந்தமுடையராய் ஸோமயாஜியாயிருப்பாரொரு ஸ்ரீவைஷ்ணவர், பட்டரை 'அடியேனுக்குத் திருவாராதநக்ரமம் ப்ரஸாதித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, பட்டரும் உடையவர் நித்யத்தை—ஒருயாமப்போது திருவாராதநம் பண்ணவேண்டுங் க்ரமத்தை ப்ரஸாதித்தருள, அவரும் அதுகொண்டு நெடுநாள் திருவாராதநம்பண்ணிப் போரச்செய்தே; ஒன்றிரண்டுநாள் பட்டர்திருவாராதநத்தை ஸேவித்திருக்க; அங்குத் தமக்கு அருளிச்செய்த க்ரமம் ஒன்றும் கண்டிலர். பட்டர் திருவாராதநஞ் செய்தபடி:—பட்டர் நீராடித் தூய திருப்பரியட்டஞ் சாத்தியருளித் திருமண்காப்புச் சாத்தியருளி, உள்ளே அமுதுசெய்யத் தளிகையை அமர்த்தின வளவிலே தளிகைமுன்னே எழுந்தருளியிருந்து 'தெற்காழ்வாரை எழுந்தருளுவித்துக்கொண்டு வாருங்கோள்' என்ன, அவர்களும் அப்படியே எழுந்தருளுவித்துக் கொண்டுவந்து கைத்தலத்திலே பிடித்தவளவிலே, தமக்குப் படைத்த திருப்போனகத்தையும் சேர்த்த தண்ணீரமுதையும் அவர்க்கு அமுதுசெய்வித்தருளி, ப்ரஸாதப்பட்டருளினர். அத்தைக்கண்டு ஸ்ரீவைஷ்ணவரும் பட்டரைத் தண்டனிட்டு ஸவிநயராய் 'ஒரு விண்ணப்பமுண்டு, சொல்லப் பயமாயிருக்கிறது' என்றுசொல்ல; பட்டரும் அஞ்சாதே சொல்லும் என்ன; அந்த ஸ்ரீவைஷ்ணவரும், திருவாராதநப்படியை அடியேனுக்கு இப்படி அருளிச் செய்தருளிற்று; தேவரீர் இப்படி செய்தருளுகிறது; இதற்கு அடியென்? என்று விண்ணப்பஞ்செய்ய, பட்டரும் 'ஸகலஶாஸ்த்ரங்களையும் ஆராய்ந்து பார்த்தவிடத்து உமக்கு அப்படியொழியச் சொல்லுகைக்கு ஒருவார்த்தை கண்டிலேன்; என்னை நிரூபித்தவிடத்தில் இப்படியொழியச் செய்கைக்கு ஒருசொல் கண்டிலேன்' என்று அருளிச்செய்தருளினர்; இத்தால் ஹிதைஷியான ஆசார்யன்

சிஷ்யனுக்கு ஜ்ஞாநபரி பாகாநுகுணமாகக் கொண்டிப்பசுவுக்குத் தடிகட்டி விடுவாரைப்போலே ஶப்தாதிவிஷயங்களிலே மண்டித்திரிகிற கரணங்களைப் பகவத்விஷய ப்ரவணமாம்படி திருத்துமென்னுமதுவும், ஆசார்யனுடைய யத்நமாய்ப் பகவத்விஷயைகபரமான அநுஷ்டாந விஶேஷத்திற்குக் கருத்து அவிஶேஷஜ்ஞர்க்குத் தோற்றாதென்னு மதுவும் தோன்றுகின்றதிறே.

பட்டரை ஒருவன் 'தேவதாந்தரங்களை ஸ்ரீவைஷ்ணவர்கள் அநுவர்த்தியாதொழிவானென்? என்ன, 'ப்ரமாணவிரோதமுண்டாகிலன்றோ ஸந்தேஹமுள்ளது; இங்கே ஸந்தேஹ மில்லை' என்று அருளிச்செய்தார். அது எங்ஙனேயென்னில்:—'ஸத்வப்ரசுரரை ரஜஸ்தம: ப்ரசுரர் அநுவர்த்திக்குமது போக்கி ஸத்வப்ரசுரர் ரஜஸ்தம: ப்ரசுரரை அநுவர்த்திக்கக்கடவதோ? என்று அருளிச்செய்தார்; ஆகையாலே, தேவதாந்தர குண தோஷங்க்ளிரண்டாலும் ஒருகாலும் அநுவர்த்தநீயரன் றென்றபடி.

'பட்டர் அறியில் ஸம்மதியார்' என்று, பட்டர்ஸ்ரீபாதத்தை வேறொரு ஸ்ரீவைஷ்ணவர் திருக்கையாலே விளக்குவித்து, ஆண்டாள் ஸ்வீகரிப்பள். இத்தை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கண்டு 'நீர் தாயாராயிருந்து இப்படி செய்தருளலாமோ?' என்ன, ஆண்டாளும் 'அது என்? பிறர் திருவாராதநத்தின் தீர்த்தமே ஸ்வீகார்யமாய், தான் ஏறியருளப்பண்ணின விக்ரஹத்தின் தீர்த்தம் ஸ்வீகார்ய மாகாதோ?'என்ன, அவரும் 'அதற்கு அடியென்?'என்று கேட்க, ஆண்டாளும் '*கணபுரம் கைதொழும்பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப் பெறுவரே?'என்று அருளிச்செய்தாள், இத்தால், சிஷ்யபுத்ரர்களேயாகிலும், ஜ்ஞாநாதிகர் ததீயத்வேந அநுவர்த்தநீய ரென்றபடி.

பட்டர், தம்ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருப்பார் ஒரு ஸ்ரீவைஷ்ணவரைப்பார்த்து 'நீர் அநந்தாழ்வான் ஸ்ரீபாதத்திலே சென்று ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமிருக்கும்படி எங்ஙனேயென்று கேட்டுவாரும்' என்று அருளிச்செய்ய, அவரும் அநந்தாழ்வான் ஸந்நிதிக்கெழுந்தருள; அன்று அங்கே பல ஸ்ரீவைஷ்ணவர்கள் அமுதுசெய்தருள, இவரும் இடப்போதாமையாலே அவர்கள் அமுதுசெய்து எழுந்திருக்குமளவும் பேசாதிருக்க, பின்பு அநந்தாழ்வானும் இவரைக்கண்டு 'நெடும்போதுண்டே! அமுதுசெய்தருளப்பெற்றதில்லையே! இளைப்போடே யிருக்கிறதே!' என்று போரநொந்து சடக்கென அமுதுசெய்தருளப்பண்ணி, தாமும் தேவிகளுமாக ஶேஷித்திருந்த திருப்போனகத்தை அமுதுசெய்தருளி எழுந்தருளியிருந்து, ஸ்ரீவைஷ்ணவரைக்குறித்து 'எங்கு

எழுந்தருளிற்று?' என்று கேட்டருள, அவரும் 'பட்டர், தேவரீர் ஸ்ரீபாதத்திலே சென்று ஸ்ரீவைஷ்ணவ லக்ஷண மிருக்கும்படி எங்ஙனேயென்று கேட்டுவரச்சொல்லி வரவிட்டருளினார்' என்று விண்ணப்பஞ்செய்ய, அநந்தாழ்வானும் 'ஆகில், 'கொக்குபோலே யிருக்கும், கோழிபோலே யிருக்கும், உப்புபோலே யிருக்கும், உம்மைப்போலே யிருக்கும்' என்று அருளினார்; இத்தால், தன் ஜ்ஞாநாநுஷ்டாநாபிமாநாதி நிமித்தமாக ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளிலே முற்பாட்டுக்கு ஆசைப்படாதே, பிற்பாட்டுக்கே ஆசைப்பட்டுத் ததீயசேஷத்வத்தைப் பேணுகை ஸ்ரீவைஷ்ணவலக்ஷணமென்று உத்தரமருளிச்செய்து விட்டாராய்த்து.

ஒருநாள் பட்டர் ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருப்பார் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் ஸஹவாஸ தோஷத்தாலே கலங்கி விஷயப்ராவண்யந்தலையெடுத்து,பட்டர் ஸந்நிதியிற்சென்று 'பட்டரே!உமக்கும் நமக்கும் பணியில்லை' என்று சொல்ல, பட்டரும் 'வாராய் பிள்ளாய்! அது உன் நினைவாலேயன்றோ; நீ விட்டாலும் நாம் விடுவோமோ?' என்று அருளிச்செய்தருள, அவரும் அகன்று போகத்தேட, இவரும் அவரைப் பலாத்கரித்துப்பிடித்து உபாயேந ஜ்ஞாநோபதேசமுகத்தாலே வருந்தித் திருத்தி ஸ்ரீபாதத்திற்கு அந்தரங்கராக்கிக்கொண்டருள, அவரும் மஹாவிரக்தராய் நிலையிலே நின்றருளினார். ஆகையாலே, அஜ்ஞாநந்தலையெடுத்து அகன்றுபோவாரையு முட்படவிடாதே யத்நேந திருத்திச் சேர்த்துக்கொள்ளுகையே ஸதாசார்யலக்ஷண மென்கிறது.

ஒருநாள், பட்டரும் ஸ்ரீவைஷ்ணவர்களுமாகப் பெருங்கூட்டத் திருவோலக்கமாக எழுந்தருளியிருந்து பகவத்கல்யாணகுணாநுஸந்தாநம் நடவா நிற்க, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் 'நாம் பண்ணின ஸுக்ருதமன்றோ இப்படியிருக்கப்பெற்றது!' என்ன, அவ்வளவிலே சிறியாச்சான் எழுந்திருந்து நின்று 'நெடுங்காலம் பெருமாள் ரக்ஷகரென்று சிக்ஷித்துவைத்து, இப்போதாக ஒரு ஸுக்ருததேவ ருண்டாவதே!' என்று அருளினார்; இத்தால், உஜ்ஜிஜீவயிஷுவான ஈச்வரனிருக்க,அநுகூல்யங்களுக்கு ஸுக்ருதம் அடியென்கை ஸ்வரூபநாச மென்றபடி.

பட்டரோடே அமுதனார் வெறுத்தருளி 'நீர் ஆழ்வானுடைய வெற்றிலைச்செருக்கிலே பிறந்தவர், நான் ஆழ்வானுடைய

ஜ்ஞாநச்செருக்கிலே பிறந்தவனன்றோ?' என்று சொல்லிவிட அத்தைப் பட்டர் கேட்டருளி 'பாசுரம் அழகிது: ஆகிலும்,இத்தைத் தாமே சொன்னாரே!' என்று அருளிச்செய்தார்; ஆகையாலே, ஆசார்யாபிமாநஜநித ஸ்வோத்கர்ஷரூப ப்லாகாவசநம் ஸ்வரூபாநுசித மென்றபடி.

ஒருநாள் பெருமாள் புறப்பட்டருளி ஒரு திருமண்டபத்திலே எழுந்தருளியிருக்கச்செய்தே பட்டர் திருவாலவட்டம் ஸேவித்திராநிற்க, ஸ்ரீபாதத்துமுதலிகள் 'ஸந்த்யாவந்தநத்திற்குக் காலம் தப்புகிறது' என்று விண்ணப்பஞ்செய்ய, பட்டரும் 'பகவத் கைங்கர்யநிரதருக்கு ஸந்த்யாவந்தந வைகல்யதோஷம் வராது' என்று அருளிச்செய்தருளினார்; இதற்குக் கருத்து:—"மத்கர்மகுர்வதாம்பும்ஸாம் கர்மலோபோபவேத்யதி-தத்கர்ம தேப்ரகுர்வந்தி திஸ்ரஃகோட்யோமஹர்ஷயஃ" என்று திருமுகப் பாசுரமிருக்கையாலே, பகவத்கைங்கர்யத்தை யிழந்து, நித்ய கர்மாநுஷ்டாநார்த்தமாகப்போகை ஸ்வரூபவிருத்த மென்றபடி.

ஒருகால் பட்டருடனே அநேக வித்வான்கள் திரண்டு வந்து தர்க்கிக்க, பட்டர் அவர்களெல்லாரையும் வாய்மூடுவித்து ஜயித்தருள, பின்னையும் அவர்கள் 'இவருடைய ஸர்வஜ்ஞதையைப் பரீக்ஷிப்போம்'என்று ஒரு குடத்திலே ஒருபாம்பை யடக்கிக் கட்டி 'இக்குடத்திலேயிருக்கும் வஸ்து என்?' என்று கேட்க, பட்டரும் 'திருவெண்கொற்றக்குடை இருக்கிறது' என்ன, அவர்களும் சிரித்துக் குடத்துக்கட்டை அவிழ்த்து விட்டவளவிலே பாம்புபுறப்பட, அவர்களும் 'இதுகொற்றக்குடையோ?'என்ன, பட்டரும், 'அன்றோ? "சென்றால் குடையாம்" என்றன்றோஆழ்வார் அருளிச்செய்தது' என்ன, அவர்களும் இவருடைய ஸர்வஜ்ஞதைக்கு விஸ்மயப்பட்டு க்ருதார்த்தராய்ப் போனார்கள்.

பட்டர் திருக்கோட்டியூரிலே யெழுந்தருளி யிருக்கச்செய்தே அநந்தாழ்வான்கண்டு, "பரமபதத்தில் ஸர்வேப்வரன்சதுர்புஜனோ? த்விபுஜனோ வெழுந்தருளி யிருப்பது" என்ன "ஏகாயனர் 'த்விபுஜன்' என்று நின்றார்கள்; நம்முடையவர்கள் 'சதுர்புஜன்' என்று நின்றார்கள்" என்ன, "இரண்டிலும் வழியேது" என்ன, "த்விபுஜனா யிருந்தானாகில் பெரிய பெருமாளைப் போலேயிருக்கிறது, 'சதுர்புஜன்' என்று தோற்றிற்றாகில் பெருமாளைப்போ லிருக்கிறது" என்றருளிச்செய்தார். மற்றும் பட்

டரை, ஸ்ரீவைகுண்டத்திலே சதுர்புஜனு யிருக்கு மென்னு மிடத்திற்கு ப்ரமாணமுண்டோ? என்ன, "தமஸ: பரமோ தாதா ஶங்க சக்ரகதாதர:" என்றுண்டா யிருந்ததே என்ன, உத்தர மில்லாமையாலே விக்ருதனாக, ப்ரமாணகதி யிதுவாயிருந்தது பொறுக்கலாகாதோ என்றருளிச்செய்தார்.

கோயிலாத்தான் தன்குமாரர்க்கு பட்டர் திருநாமம் சாத்தினன்; அந்தக்குமாரர் பரமபதத்துக்குப்போக, அவன் பட்டர் சந்நிதியிலே வந்து க்லேசப்பட "நீ நம்முடைய திருநாமம் சாற்றின பிள்ளை போனான் என்றன்றோ துக்கிக்கிறது, அதற்கு துக்கிக்கவேண்டா, அந்தத் திருநாமமுடைய நாமிருந்தோமே!" என்று பட்டர், தம்மைப்போலே விக்ரஹத்தை யேறியருளப் பண்ணி ப்ரசாதித் தருளினார்.

"ஒருநற்சுற்றம்" என்கிற திருமொழியிலே பல திருப்பதிகளையு மருளிச்செய்த விதற்கு கருத்தென் என்று ஜீயர் பட்டரைக்கேட்க, "பிறந்தகத்தில் நின்றும் புக்ககத்துக்குப்போம் பெண்பிள்ளைகள் பந்துக்களிருந்த விடமெங்கும் கண்டு வினவப் போமாபோலே ப்ராப்ய பூமிஅணித்தானவாறே திருப்பதிகள் தோறும்புகுகிறார்" என்றருளிச்செய்தார்.

(யமவஶ்யதைக்கஞ்சவேண்டா) என்னுமதுக் காப்த சம்வாதம்:—ஒருதிருவேட்டையிலே பட்டர் திருவூற்றங்கரையிலே பேரோலக்கமாகவிருக்க, "சந்த்யையானது" என்று சிலர் விண்ணப்பஞ்செய்ய, நம் பெருமாள் அழகிலே துவக்குண்டு இன்றொருநாளும் கர்த்தவ்யத்திலே அல்பம் தாழநின்றோ மென்றால் இதுகுற்றமாக யமன்கேட்கவோ, ராஜாவிருந்து நாட்டுக்கணக்கு கேட்டுக்கொண்டு வாராநின்றால் ராஜாவுக்கந்தரங்கனா யிருப்பானொருவன் பேரை வாசித்தால் "ஒங்காண் அதுகிடக்க மேற்சொல், என்றால் பின்னையொருகாலமும் அப்பேரெடுத்து வாசிக்கப் பெறாதுகாண்" என்றார்.

ஜீயர்பட்டரைத் "திருநாமம் சொல்லும்போது ப்ரயதனாய்க் கொண்டு சொல்லவேணுமோ" என்று கேட்க, "கங்கையிலே முழுகப்போமவனுக்கு வேறொருஉவர்க்குழியிலேமுழுகிப்போக வேணுமோ, மேலுண்டான நன்மையைத்தருகிற விது அதிகாரி சம்பத்தியையும் தரமாட்டாதோ" என்றருளிச் செய்தார்.

(கார்யகரமாகா திருக்கிற துவாசனையின் கனம்) என்கிற தற்காப்தசம்வாதம்:—ஒருசெட்டியை "இவன் தமிழுக்குத் தேசி

கனுயிருக்கிறான்" என்று பட்டருக்குக்காட்டி அவனை "உனக்கு ஏதேனும் அபேக்ஷையுண்டாகில் கேட்கலாகாதோ" என்ன! அதற்கவனும் "சிலர் காண்கிறதேஹத்துக் கவ்வருகு ஆத்மாவுமில்லை, தர்மாதர்மங்களுமில்லை, ஈஶ்வரனுமில்லை" என்றிராநின்றார்கள்; சிலர் "இத்தேஹந்தான்ஸ்திரம் என்று இதின் தோஷத்தைத்தரிசித்து அவ்வருகே ஸ்திரமாயிருப்பதொன்றைப் பற்றவேணும் என்றிராநின்றார்கள்; விஷயமொன்றாயிருக்க இவ்விரண்டுபரிமாற்றமும் நடக்கிறபடி யெங்ஙனே?" என்ன, 'மமமாயா துரத்யயா' என்றும் 'மாயாமேதாந்தரந்திதே' என்றும் சொல்லுகிறபடியே, "பாக்யவான்களுக் கிதினுடைய தோஷ தரிசனத்தைப் பண்ணிக் கழித்துக் கொள்ளுகைக்கும் பாக்யஹீநர்க்கு இதிலே போக்யதாபுத்திபண்ணி அநர்த்தப்படுகைக்கு முடலாம்படி கர்மானுகுணமாக இத்தை இடையெடுத்துக் காணுமீஶ்வரன் பண்ணிற்று" என்றருளிச்செய்தார்.

(லோகநாதஃபுராபூத்வா சுக்ரீவந்நாத முச்சதி) கிடைப்பது கிடையாதொழிவது இச்சியாநின்றார். 'சுக்ரீவம் ஶரணங்கதா' ஸ்ரீவிபீஷணாழ்வானைப் புகுரவொட்டேன்' என்றார் மஹாராஜர், என்ற 'இவன் புகுராவிடில் நாமுளோமாகோம்' என்றார் பெருமாள்; இப்படி இருவரும் விப்ரதிபத்திபண்ணினவிதற்குக் கருத்தென்" என்று ஜீயர்கேட்க, "இருவரும் 'சரணாகதரானவர்களை விடோம்' என்று விப்ரதிபத்தி பண்ணினார்கள் காணும்" என்று பட்டரருளிச்செய்த வார்த்தை:—'சுக்ரீவம் சரணங்கதாஃ' என்றதை நடத்தப் பார்த்தார் மஹாராஜர், "ராகவம்சரணங்கதாஃ" என்றதை நடத்தப்பார்த்தார் பெருமாள்.

(சொன்மாலைகள்) "சர்வேஶ்வரன் 'ஆழ்வீர், நம்மையொரு கவி சொல்லும்' என்றால், அப்போதே கவிசொல்லிச் சமையும்படியாக வல்லவெனக்கென்றார்" என்று முன்புள்ள முதலிகள் நிர்வஹிக்கும்படி; அங்ஙனன்றிக்கே, பட்டர் 'என்னாகியே தப்புதலின்றித் தன்னைக் கவிதான்சொல்லி, என்கிறபடியே சர்வேஶ்வரன் கவிபாடினானகையாலே கவிபாடத் தட்டில்லை; அவனங்கீகரித்துத் திருக்கண்களாலேகுளிரக்கடாக்ஷித்து, 'நீயொரு கவிசொல்லும்' என்றால் ப்ரீதியாலே யுடை குலைபடாதே தரித்து நின்றுசொல்ல வல்லேனானை வெனக்கு என்றருளிச் செய்வர்.

பட்டர் ஒருவர்க்கு ஹிதமருளிச்செய்கிறபோது,நஞ்சீயர், "பிராட்டி முன்னிலையாகப் பற்றுகிறவிதற்கு ப்ரயோஜநமென்" என்றுகேட்க; இவள் ஸந்நிதியிலே மிகவும் ஸாபராதியான காகம் தலைகொண்டு தப்பிற்று; அத்தனைக்கு அபராதமின்றி யிலேயிருக்க இவள் ஸந்நிதியில்லாமையாலே ராவணன்தலை யறுப்புண்டான்; இளையபெருமாள் பிராட்டி முன்னிலையாகப் பெருமாள் திருவடிகளைப்பற்றி, தம்மை "நில்" என்ற ஸங்கல் பத்தையு மழித்துப் பெருமாளையும் பெற்றுவிட்டார்; மற்றும் ஸ்ரீவிபீஷணாழ்வான், ஸ்ரீகுஹப்பெருமாள் தொடக்கமானார் பிராட்டி முன்னிலையாகப் பேறு பெற்றாராய்த்து.

பட்டர், ஜீயருக்குத்வயத்தி னர்த்தத்தை அருளிச்செய் தருளி, இதில் உத்தரார்த்த மநுஸந்திக்கலாவது பரமபதத்தைச் சேர்ந்ததாயிருக்கும்; இங்கே இவ்வர்த்த மநுஸந்தித்தவன் ஜீவன் முக்தனென் றருளிச்செய்தார்.

பட்டர் "த்வயத்தி னர்த்தத்தைப் புத்திபண்ணி சப்தாந்த ரத்தாலே இவ்வர்த்தத்தையநுஸந்திக்க வொண்ணாதோ"என்று உடையவருக்கு விண்ணப்பஞ்செய்ய; அதற்குக் குறையில்லை, ஆகிலும் இப்பாசுரத்துக்கு சுரக்கு மர்த்தம் வேறொருபாசுரத் துக்குச் சுரவாதே என்று அருளிச்செய்தார்.

நம்மாசார்யர்கள் திருமந்த்ரத்திலும் சரமஶ்லோகத்திலும் அர்த்தத்தை யொளித்துப் போருவார்கள்; த்வயத்தில் சப்தம் ஒதுங்கி ஒளித்துப்போருவார்கள். திருமந்த்ரமும் சரமஶ்லோக மும் ஆசார்ய வாக்யம்; த்வயம் சிஷ்யவாக்யம். த்வயத்தில்பூர்வ கண்டத்தி லர்த்தத்தை யநுஸந்தித்தால், ரக்ஷணார்த்தமாக வில ங்கிக் கிடந்த துரும்பெடுத்துப்போட ப்ராப்தியில்லை; உத்தர கண்டத்தி லர்த்தத்தை யநுஸந்தித்தால் தலைசொறிய அவஸர மில்லை; மடலெடுத்துக்கொண்டு புறப்படு மித்தனை.

பட்டர் ஸ்ரீபாதத்திலே ஸேவித்திருப்பாரொரு ஸ்ரீவைஷ் ணவரை ப்ரஸாதக்கிழியையெடுத்துக்கொண்டு வாருமென்ன, ப்ரஸாதக்கிழியினருகே பணக்கிழியுமிருக்க, அவர் ப்ரஸாதக் கிழியையெடுப்பது பணக்கிழியையெடுப்பதாய் நிற்க, இவர் வரக் காணாமையாலே பட்டர் எழுந்தருளி இவர் நிற்கிற நிலை யைக்கண்டு இடம்பெற்ற வளவிலே இருவரும் உம்மை நலிந் தார்களாகாதே, வாரீர் என்றருளிச்செய்தார்.

பகவச் சரணாரவிந்த சரணாகதனாய் ஜ்ஞாநிநாம் அக்ரேஸரனாய் விலக்ஷணாதிகாரியான இப் ப்ரபந்நனுக்கு உபாயத்தில் ப்ரவ்ர்த்தி ஸ்வரூபவிரோதி; உபேயத்தில் நிவ்ர்த்தி ருசிவிரோதி; இவ்விரண்டர்த்தத்துக்கும் நிதர்சநபூதர் ஸ்வரக்ஷண க்ஷமையாயிருக்கச் செய்தேயும் ஸ்வஸ்வரூப பாரதந்த்ர்யத்தை அநுஸந்தித்து அசோகவநிகையில் எழுந்தருளியிருந்த பிராட்டியும், பெருமாள் நில்லென்றிருக்கச்செய்தேயும் தம்முடைய செல்லாமையைக்காட்டி அவருடைய வார்த்தையை யதிக்ரமித்து காட்டிலே தொடர்ந் தடிமை செய்த இளையபெருமாளுமிறே.

ஸம்ஸாரஸம்பந்தமற்றுத் திருநாட்டிலே போயிருக்குமளவும் த்வயத்தில் இரண்டுகண்டத்தி னர்த்தத்தையுங் கொண்டு ப்ரபந்நனானவன் காலயாபநம் பண்ணக்கடவன்.

ஆசார்ய ஸமாஶ்ரயணம்எப்போ துண்டாமோ அப்போது பிறந்தானாகக்கடவன்; அன்றுமுதல் ஶரீராந்தமளவாகக் கீழ்ச் சொன்னபடி செய்து போருமாகிலிறே தன் ஸ்வரூபத்துக்கும் இவன் ஸ்வரூபத்துக்குஞ் சேருவது; அல்லாதபோது எம்பெருமான் இவனைப் புருஷகாரமுகத்தாலே விடமாட்டாதே விதியே என்று ரக்ஷிக்குமித்தனை.

பட்டர் நீராடி யெழுந்தருளாநிற்க ஒருசைவன் எதிரேவர, அவனுடம்பிலுள்ளசாம்பல் தம்திருமேனியிலே படிந்தாப்போலேயிருக்க, பின்னையும்போய் நீராடி யெழுந்தருளி உள்ளே யெழுந்தருளாதே திருமாளிகை வாசலிலே நின்று ஆண்டாளையழைத்து இப்படி பட்டதற்கு ப்ராயஶ்சித்த மருளிச்செய்யவேண்டுமென்ன; ஆண்டாளும் நெடும்போது திகைத்துநின்று ஸ்ரீபாததீர்த்தத்தையாகிலுங்கொள்ளு மித்தனையன்றோவென்ன; பட்டரும் அதுசேருமோவென்ன; உயிர் நீங்குமளவில் உடலை மாறியாகிலும் உயிரை நோக்கவேண்டாவோவென்ன; பட்டர் ஆகில் திருவுள்ளமானபடி செய்யுமென்றார்; அவ்வளவிலே ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரை ஸ்ரீபாதந்தாங்குகிறவர் இங்கே தண்டுவாங்க வெழுந்தருள, ஆண்டாள் அவரைக்கண்டு தீர்த்தம் வாராநின்றதென்ன; பட்டர் நமக்குக் கூடுகிறதோவென்ன; முத்தூணிட்டுக்கறக்கிலும் பசுவுக்குப்பாலன்றோ வேண்டுவதென்ன; பட்டரும் அப்படியே கலசப்பானையிலே திருமஞ்சனங்கொண்டு ஸ்ரீபாதத்திலே சொரிந்து தீர்த்தத்தையும் ப்ரஸாதப்பட்டுப் ப்ரீதரானார்.

ஒருநாள் பட்டர், நம்பெருமாள் வசந்தோற்சவங் கண்டருளும்போது, தம்மை நன்றாக அலங்கரித்துக்கொண்டு, பெருமாளுக்குத் திருவாலவட்ட கைங்கர்யஞ்செய்யப் புறப்பட்டார். அப்போது கோஷ்டிகள் ,நமக்குப் பெருமாள்திருவடி ஸ்மரணையே அலங்காரமன்றி வேறொரு அலங்காரமும் வேண்டுவதில்லை. என்று அருளிச்செய்துவந்த பட்டர் தற்போது தம்மை யலங்கரித்துக் கொண்டதென்? என்று சந்தேகங்கொண்டு பட்டரை வினவ' அவரும் பெருமாள் எழுந்தருளுகிற திருமண்டபத்தின் கால்களை அவர் எழுந்தருளுங் காலத்தில் அலங்கரிப்பதுபோல நாமும் அவர்க்குத் திருவாலவட்ட கைங்கர்யஞ்செய்யப் போம்போது நம்மை யலங்கரித்துக்கொள்ள வேண்டாவோவென் றருளிச்செய்தார்.

பட்டர், ஸ்ரீ எம்பெருமானார் நியமனப்படி, திக்விஜயாத்ரைக் கெழுந்தருளி, ஸாரதா பீடத்திற்குப்போய், ஸாரதாதேவிக்கு ஸ்ரீபாஷ்யத்தைக் காட்டியருளி அவளால் ஸ்லாகிக்கப்பட்டு அவளநுமதிகொண்டு மீண்டுவரும்போது திருவேங்கடமுடையானை ஸேவித்து வரும் மார்க்கத்தில் ஓரிடைப் பெண்ணானவள் சித்தப்ரமை கொண்டவளாய், தன் சுயபுத்தியை யிழந்து வருந்து மவள் பட்டர் வரும் விஷயத்தைக்கேட்டுப் பலரும் அவரைச் சேவிக்கச்செல்ல, தானும்போய் அவர் திருவடிகளில் வீழ்ந்து சாஷ்டாங்க தெண்டனிட்டுக்கிடக்க; பட்டரும் அவளைக் கடாக்ஷித்து வேண்டுவதென்? என்று கேட்டருள; அம்மாதும் அடியேனுக்குப் பரமபதமே வேண்டுமென்ன; பட்டரும் அங்ஙனமே பரமபதம் சித்திக்கும்படி அநுக்ரஹஞ்செய்தருளிக் கோயிலுக்கெழுந்தருளி உடையவரை ஸேவித்து நிற்க; உடையவர் உகந்தருளி அர்ச்சகமுகேநபட்டருக்கு'வேதாந்தோதயாநுசாரியரென்று திருநாமஞ்சாத்த';பின்புபட்டர்,கிடாம்பியாச்சானுக்கு, ஸ்ரீஆளவந்தார் ஸ்தோத்திரத்தில் ஓர் ஸ்லோகத்திற்கு நன்றாகப் பொருள்சாதிக்க, அவர்கேட்டு பட்டரிடத்தில் மிகவும் ப்ரதிபத்தி பண்ணினார். அப்போது கிடாம்பியாச்சானுடைய சிஷ்யர்கள் ஏன் அப்படி செய்வதென்று கேட்க, ஆச்சானும் அவர்களை நோக்கி உடையவர் நியமனத்தாலும், பட்டரைத் தரிசன ப்ரவர்த்தகராக்கியதாலும் நான் இவ்வாறு செய்தேனென் றருளிச்செய்தார். பின்பொருநாள் பட்டர் திருநெ

டுந்தாண்டகத்தில் ஒரு பாடலுக்கு இனிதாகப் பொருளுரைக்க, அதைக்கேட்ட திருவரங்கப் பெருமாளரையர் முன்பு அடியோம் ஆசாரியரிடத்தில் இப்படிப்பட்ட பொருள் கேட்கப் பெற்றதில்லையே, இப்போது பட்டரிடத்தில் கேட்கப் பெற்றோமே என்று பட்டரிடத்தில் போரப்ரதிபத்திபண்ணினார்.

பட்டருக்கு இரண்டு தேவிமார்களுண்டு. ஒருநாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவர், பட்டர் காலக்ஷேபம் செய்து வருங்காலத்தில் பட்டரைநோக்கி ஸ்வாமி! தேவர்க்கு இருபக்கத்தும் இரண்டு சர்ப்பங்களிருக்கத் தேவரீர் எவ்விதம் இச்சமுசாரக்கடலைக் கடக்கிறது? என்று கேட்க, பட்டரும் ஒய்! "மமமாயா துரத்யயா" என்றும் "துயக்கறு மதியினன் ஞானத்து ளமரரைத்துயக்கும், மயக்குடை மாயைகள் வானிலும் பெரியனவல்லன்" என்றுஞ் சொல்லுகிறபடி சர்வசக்தனாகிய எம்பெருமானிருக்க நம்மாலென்ன வாங்காணும்; இருபக்கத்து சர்ப்பங்களும் சீறும்போது அவற்றின் செருக்கையடக்க மேலே பெரியதிருவடி வட்டமிட்டுக் கொண்டிறே நிற்பது என்றருளிச்செய்தார்.

ஒருநாள் எம்பெருமானார் ஸந்நிதியிலே பட்டரெழுந்தருளித் தண்டன் ஸமர்ப்பித்து சக்ரவர்த்தித் திருமகனைக் காட்டி இவர் பூதலத்தி லிருந்தபடி கடாக்ஷித் தருளவேணுமென்று விண்ணப்பம் செய்தருள; எம்பெருமானாரும் பட்டருடைய திவ்யஸூக்தி அறிவோமென்று அவரைப்பார்த்து "மாமேகஞ் சரணம்விரஜ" என்று தேவையிடாதார் வந்தார் காணுமென்ன; அப்போது பட்டரும் இவரப்படி தேவையிடாத மாத்ரமன்று காணு மிவருடைய விரதம். சொல்லக்கேளீர்.! இவர் உம்முடைய வீதியார வருவார், அர்ஜுநனைக் குறித்து, தன் திருவடிகளையே உபாயமாக ஸ்வீகரிக்கை அமையுமென்றார். சக்ரவர்த்தித் திருமகன், பாபராஹும் ஸுபராஹும் ஸர்வ பூதங்களையும் ரக்ஷிக்கை தம் வ்ரதமென்றார். இந்த ஸ்வபாவ மவருக் கில்லையே யென்ன; அவ்வளவிலே, திருநரையூரரையர் பட்டரைப் பார்த்து ஒரு தூக்குணங்குருவி பிணைத்த பிணை ஒருவராலும் அவிழ்க்கப் போகிறதில்லை, கர்மாநுகுணமாக ஸர்வஸுக்தி பிணைத்த பிணையை இந்த எலியெலும்பனாலே அவிழ்க்க வொண்ணாது காணும்; அந்த ஸர்வ ஸுக்தியானவன் தன்னையே கால் கட்டில் அவிழ்த்துக்கொள்ளலாம், அல்லாதபோது யாவராலும் அவிழ்க்கப் போகாது காணுமென்றார். ஆகையாலேதான் சரமஸ்லோக மருளிச்செய்ய வேண்

டிற்று காணுமென்ன; அவ்வளவிலே ஆளவந்தார் குமாரர் சொட்டைநம்பி விண்ணப்பஞ் செய்தபடி:—"தன் தனக்கன்றி நின்றானை" என்றன்றோ? நம்மாழ்வாரருளிச்செய்தது; ஸமாதிக ராஹித்யம் பரமபதத்தேயல்ல; க்ஷீராப்திமுதலான வ்யூஹஸ்தானத்தேயல்ல; அவதார கோலங்கொண்டு பரத்வந் தோன்றாமல் நின்றுமாத்ரு பித்ருவசந பரிபாலநம் பண்ணின விது எந்த அவதாரத்திலுமில்லை யென்றார். அவ்வளவிலே சிறியாத்தான் அருளிச் செய்தபடி:—

வீதியார வருவார் அவதரித்தபோது பித்ருவசந பரிபாலநமும், நந்தகோபர்க்கும் யசோதைக்கும் கட்டவுமடிக்கவு மெளியனாய், கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோயும், ஸாரத்யம்பண்ணியும், புருவம் நெரித்தவிடத்திலே தேரை நிறுத்தியும் மார்பிலே அம்பேற்றும், சாவாமல் நோக்கியும், செத்தாரைமீட்டும், நாராயணப்ரயுக்தமான குடல்துவக்காலே செய்தருளின நீர்மை யில்லையே. நம்மாழ்வார், "தன் தனக்கன்றி நின்றானை" என்று துதிக்கையாலே, க்ருஷ்ணனையாயிற்று ஸமாதிகராஹித்யஞ் சொன்னது என்ன; அவ்வளவிலே வேதவ்யாசபட்டர் அங்ஙனன்றுகாணும், சக்ரவர்த்தித்திருமகன் கழுத்திலே ஓலைகட்டித் தூதுவிடத்தக்க அபிஷிக்த க்ஷத்திரிய ரில்லாமையாலே அவ்வவதாரத்திலே திருவடி, பிராட்டிக்கும் பெருமாளுக்கும் தூதுபோவதுகண்டு பெருமாள் திருவுள்ளமுகந்து, இந்தக் கடகத்வமாகிற உபகார நமக்கில்லாமல் போயிற்றே யென்று செவி சீபாய்ந்திருந்தார். அதற்காக க்ருஷ்ணாவதாரம்பண்ணி தூதுபோய் குறை தீர்ந்தாரித்தனை. இத்தைத் திருமங்கைமன்னன் "முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்தரக்கன், மன்னூர் தன்னை வாளியினால் மாளமுனிந்தவனே, பின்னோர்தூதாகி மன்னர்க் காயிப்பெருநிலத்தா, ரின்னார்தூதனென்ன நின்றானெவ்வுட் கிடந்தான்" என்றருளிச்செய்தாரே! என்ன; அருளாளப்பெருமாளெம்பெருமானாரருளிச்செய்தபடி:—* பத்துடையடியவர்க் கெளியவனில், "எத்திற முரலி னோடிணைந் திருந்தேங்கிய வெளிவு" என்று மூவாறு மாஸம் மோஹித்த ஸௌலப்யமன்றோ க்ருஷ்ணனது என்ன; சக்ரவர்த்தித் திருமகன், அவதாரஸமாப்தியிலே அன்று சராசரங்களை வைகுந்தத் தேற்றினது கண்டார்களே. தாமும் தம்முடைய ஆஶ்ரிதருமன்றிக்கே சராசரங்களில் * "புற்பா முதலா

புல்லெறும்பாதி யொன்றின்றியே, நற்பாலுக்குய்த்தனன்" என்றது உண்டோ ஒருவர்க்கு க்ருஷ்ணாவதார ஸமாப்தியிலே; க்ருஷ்ணகுமாரராளும் யாதவர்களும் வாள்கோரையிலேமுடிந்து, க்ருஷ்ணனும் தந்திருமேனியு மிங்கே விட்டன்றோ எழுந்தருளினார்; தாமும் தம்முடையாரும் ஸ்வர்க்கஞ்சேர்ந்ததிதுவென்றால் அவரையாஶ்ரயித்தார்க்குமதுவன்றோ? பலிப்பதென்ன; இராமாநுஜனருளிச் செய்தபடி:—அங்ஙனன்று காணும்; க்ருஷ்ணனும், ஶங்கநிதி பத்மநிதிமுதலான நிதிகளும் சுதர்மைமுதலான ஸபைகளும், பாரிஜாதம் முதலான ஸௌகந்த வஸ்துக்களும், இன்னம் குபேரன் முதலான தேவதைகள் லோகத்து வஸ்துக்களும் கொணர்ந்து த்வாரகையில் வைத்தவர்கள் ஸ்வர்க்காநுபவம் பெற்றாரோ? அவர்கள்பிதா புத்ரஸம்பந்தத்தை யிட்டுக்கொண்டு பந்துக்ருத்யம் பாவித்தார்களாகையாலே, ஶரீர ஸம்பந்தத்தை விட்டவாறே ஶரீரத்தோடேயாயிற்று. நமக்கங்ஙனன்று, கீதாசார்யனாக சரமஶ்லோகமருளிச்செய்கையாலே, ஆத்மபரமாத்ம ஸம்பந்தமும், யாவதாத்மாநுபவமும், பரமாத்மாவோடே யாகையாலே, ஶிஷ்யாசார ஸம்பந்தம் மோக்ஷப்ரதமாகையாலே, யாவதாத்ம பாவிப்ராயமும் பெறலாமாகையாலே, நம்பேற்றுக்குக் குறையில்லையென் றருளிச்செய்தார்.

நஞ்சீயரான வேதாந்திகளுக்கு பெரியபட்டர் ஏகாந்தத்திலேபணித்த பரமரஹஸ்யம்:—திருமந்த்ரஜ்ஞாநம் பிறந்தாலும் இங்கேயிருக்கிறவனாகையாலே ஸ்வரூபத்தோடே சேராத துரித பரம்பரைகள்வந்துமேலிட்டால், திருமந்த்ரத்தில் பதங்களினர்த்தங்களை அநுஸந்தித்து பரிஹரித்து மீளுவான்.

பட்டர் "த்வயத்தினர்த்தத்தைப் புத்திபண்ணி சப்தாந்தரத்தாலே இவ்வர்த்தத்தை யநுஸந்திக்க வொண்ணாதோ" என்று உடையவருக்கு விண்ணப்பஞ்செய்ய; அதற்குக் குறையில்லை ஆகிலும் இப்பாசுரத்துக்கு சுரக்குமர்த்தம் வேறொருபாசுரத்துக்குச் சுரவாதே என்று அருளிச்செய்தார்.

பட்டர் திருவோலக்கத்துக்குப் பலகாலும் ஸாஸ்திரியாயிருப்பானொரு ப்ராம்ஹணன் சென்று வருவான். அவனைக் கண்டால் பட்டரும் "வந்தாயோ போனாயா" என்று சாமான்யேனவ்யவஹரித் தருளிச்செய்வார். ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பலகாலும் பட்டரைச் சேவிக்க யெழுந்தருளுவர்; அவரைக் கண்டால்

பட்டர்மிகவும் க்ருபைபண்ணி ஆதரித்துக்கொண்டெழுந்தருளி யிருப்பர்; இத்தைப்பலகாலுங் கண்டிருப்பாரொருவர் பட்டரை வந்துசேவித்து, "சுவாமி! தேவரீர் திருவோலக்கத்துக்கு வருகிற ஸாஸ்திரி ப்ரசித்தனா யிருக்கிறவன்; அவன்வந்தால் சாமான்ய மாக வ்யவஹரித்தருளுகிறதும், ஒருசாது ஸ்ரீவைஷ்ணவர்வந்தா ரென்றால், அவரை மிகவும் ப்ரதிபத்திபண்ணி யருளுகிறதும் எனக்கு அருளிச்செய்யவேணும்"என்ன "ஆனால்அவர்களிரண்டு பேரு மெப்போதும்போலே நாளையும் வருவர்கள். அப்போது நீருமெப்போதும்போலேபார்த்திரும், இரண்டுஞ்சொல்லுகிறோ ம்"என்ன; அவருமப்படியேபார்த்திருக்க, மற்றைநாள்விடிவோ றே அந்தப்ராமணன்ப்ரதமம்வந்துசேவிக்க, அவனையெப்போது ம்போலேவினவியருளி, "நீராரைத்தான் பரதத்வமென்றுநினைத் திருக்கிறது" என்ன, சாஸ்திரியும் "சிறிது ப்ரமாணங்கள் ப்ரஹ் மாவைபரதத்வமென்றும், சிறிதுப்ரமாணங்கள்விஷ்ணுவைப்பர தத்வமென்றும், சிறிதுப்ரமாணங்கள் ருத்திரனே பரதத்வமென் றும்சொல்லுகையினாலே நம்மாலேநிச்சயிக்கப்போமோ"என்ன, 'நல்லது' என்றிருந்து, அவன்போனவாறே ஸ்ரீவைஷ்ணவரெழு ந்தருளிஸேவிக்க, அவரையுங்க்ருபைசெய்தருளி, 'தேவரீர் ஆரை த்தான் பரதத்வமென்றிருப்பீர்' என்ன,ஸ்வாமி! தேவரீர் 'ஸ்ரீயः பதிநாராயணனேபரதத்வம்'என்றருளிச்செய்யுமே,அஃதொழிய அடியேன்வேறொன்றறியேன் என்ன; "இன்னமுநீருமக்குத் தஞ் சமாக நினைத்திருப்பதேது" என்ன, "எம்பெருமானார் திருவடி களே உபாயோபேயம்" என்றுப்ரசாதித்தருளுமே, அத்தையே தஞ்சமாக நினைத்திருப்பன் என்ன, திருவுள்ளமுகந்து, 'அபசா ரத்தை க்ஷமித்தருளித், திருமாளிகைக் கெழுந்தருளும்" என்ற ருளிச்செய்து, பார்த்திருந்தவரைப்பார்த்து, "கண்டீரே யிருவர் க்குமுண்டான தாரதம்மியம், ஆகையாலே இவரைவணங்கவோ! அவனை வணங்கவோ! இப்படியன்றோ ஸ்வரூப ஸ்திதியிருந்தது" என்றருளிச்செய்ய, அவருமக்ருதார்த்தராய் போனாரென்றரு ளிச்செய்தார்.

எம்பார்திருவடிகளில் பட்டர் தண்டன்ஸமர்ப்பித்து விண் ணப்பஞ்செய்தபடி:—அந்தகனான த்ருதராஷ்ட்ர புத்ரனாய், ராஜாதிராஜனான துர்யோதனன் தம்பியான துஶ்ஶாஸநனானவன், பாண்டவர்கள் அந்தःபுரத்திலே சென்று, ரஜஸ்வலையா யிருந்த

த்ரௌபதியைக் கொண்டுவந்து, துர்யோதநன் ஸபையிலே மயிரைப்பற்றி, தாஸியான நீ யெங்களுக்கு அடிமையன்றோவென்று சொல்லிவஸ்த்ராபஹாரம்பண்ண, அவ்வளவிலேத்ரௌபதையும் தன்னாலானவளவும் பார்த்து இனி அஸாத்யமென்று லஜ்ஜையில்லாத கோஷ்டியிலே லஜ்ஜை யுடையவன்கையிலே லஜ்ஜையைக் கொடுத்துநிர்லஜ்ஜையாய்,தனக்குவஸிஷ்டபகவான்'மஹத்யாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவாந்ஹரி:' என்றுசொன்னதை நினைத்து, இனி எம்பெருமானருளல்லதில்லையென்று, "சங்கு சக்ரகதாபாணே த்வாரகாநிலயாச்யுத, கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷமாம்ஸரணாகதாம்," "ஹாக்ருஷ்ணத்வாரகாவாசாக்வாசியா தவநந்தந இமாம் அவஸ்தாம் ஸம்ப்ராப்தாம் அநாதரம் கிம்முபேக்ஷஸே" என்றுரைத்து எம்பெருமானே! ஸ்வாமியான நீ யென் பக்கலிலே க்ருபையைப் பண்ணென்று ஶரணாகதையாய் நின்றாள். ஆண்பிள்ளையாய் திக்விஜயம் பண்ணின தன்பர்த்தாக்கள் ஐந்துபேருமிருக்க, ஜ்ஞாநாதிகரான பீஷ்ம த்ரோணர்களிருக்க, பந்துக்களான த்ருதராஷ்ட்ரப்ர ப்ருதிகளிருக்க, தர்மாதர்மமெல்லா மறிந்தபே ரெல்லாரு மருகேயிருக்க, தூரஸ்தனான க்ருஷ்ணன்பேரைச் சொல்லுவானேனென்ன? அதற்கு எம்பார் அறியீரோ? முன்பேதனக்கிட்டபடி வருமது கேட்டிருந்தாளாக வேணுமென்றார். பட்டர், ஆயின் தன்பர்த்தாக்களிருக்கிற மஹாஸபைமத்யே பரபுருஷன்பேரைச்சொன்னால் அங்ஙனே இருந்த ஜநங்களென்ன எண்ணாரென்ன; அதற்கு எம்பார் பர்த்தாவின் கையைப் பிடித்துக் கொண்டு வழிபோகா நின்றவள் இடறினால் அம்மேயென்னக்கடவது ப்ராப்தமாவதுபோலே த்ரௌபதியும் ரக்ஷகனையறிந்தே ரக்ஷியென்றாளென் றருளினார். மேலும் இவள் ஜ்ஞாநாதிகையாகையாலும், வஸிஷ்டபகவான்முன்னமே சொன்னத்தாலும் ஶரணாகதியைப் பண்ணினாள் என்றார். பட்டர், அப்போது ரக்ஷகன் வேணுமென்று அவன் திருநாமத்தை நம்பியிருக்கைஏனென்ன;எம்பாரும், த்ரௌபதிக்கு ஆபத்திலேபுடவை சுறந்தது திருநாமத்தாலிறே; அப்படியிருந்தும் தன்னாற்றாமையாலே கோவிந்தா வென்றாள்; மூன்றக்ஷரமான திருநாமமேயமைந்திருக்க; க்ருஷ்ண நாமாஷ்டக ஸ்தோத்ரமுஞ்சொன்னாள் காணுமென்று உகந்தருளினார். த்ரௌபதி ஸநாதையாயன்றே திருநாமஞ் சொன்னது? ஶரணாகதி பலித்தபடிபாரீர்! ஆகையாலே ஸர்வாதிகாரனென் றருளிச்செய்தார்.

பட்டரை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் எம்பெருமானை "நித்தியத்திலே அமுதுசெய்யப் பண்ணும்போது எந்த ஸ்தோத்திரத்தை விண்ணப்பஞ்செய்வது" என்ன; "அடியேன் மேவியமர்கின்ற வமுதே" 'பச்சைமா மலைபோல்மேனி', என்கிற பாடல்கள் போலே யிருக்குமவற்றை விண்ணப்பஞ் செய்வது என்றருளிச் செய்தார்.

முன்பு உடையவர் காலத்திலே ஆசார்யர்களெல்லாரும் உடையவருக்கு மாநஸபுத்ரரான திருக்குருகைப்பிரான் பிள்ளானை அநுவர்த்தித்து 'ஆழ்வார்களருளிச்செயல்களின் அரும்பொருள் தெரியும்படிக்குத் தேவரீர் வ்யாக்யாநஞ் செய்தருளும்படி உடையவரை வேண்டிக்கொள்ளவேணும்' என்று பிள்ளானுக்குவிண்ணப்பஞ்செய்ய; பிள்ளானும் உடையவர் பெருங்கூட்டத்திருவோலக்கமாக எழுந்தருளியிருக்கச்செய்தே ஸாஷ்டாங்கப்ரணமம் பண்ணி ஸவிநயராய் இரப்புடனே 'ஒரு விண்ணப்பமுண்டு' என்று சொல்ல, உடையவரும் 'என்?' என்று கேட்டருள, பிள்ளானும் 'தேவரீர் ஸ்ரீபாஷ்யமருளிச்செய்து திக்விஜயம்பண்ணித்தர்சநத்தைநிலைநிறுத்தியருளிற்று; இனி, திருவாய்மொழிமுதலான ஆழ்வார்கள்திவ்யப்ரபந்தங்களுக்கும் வ்யாக்யாநம்செய்து ரக்ஷித்தருளவேணும்' என்று விண்ணப்பஞ் செய்ய, உடையவரும் திருவுள்ளத்திலே விசாரித்தருளி 'அப்படியாம், நாம் அருளிச்செயல்களுக்கு வ்யாக்யாநம்பண்ணினால், மந்தமதிகளுக்கு இதற்கு இவ்வளவே அர்த்தமுள்ளதென்று தோற்றும். ஆகில், அபசாரமாம்; ஆழ்வார்கள்பாசுரங்களுக்கு அர்த்தம் அவ்வவருடையபுத்திக்குஈடாகப் பஹுவாகச்சுரக்கும் ஆகையாலே நாம்அருளிச்செயல்களுக்குவரம்புகட்டினாப்போலேயாம்,நீர்ஒருபடி திருவாய்மொழிக்கு வ்யாக்யாநஞ்செய்யும்' என்று நியமித்தருளினார். திருக்குருகைப்பிரான் பிள்ளானும் யதிராஜாநுமதி கொண்டு ஸ்ரீவிஷ்ணுபுராண ப்ரக்ரியையாலே திருவாய்மொழிக்குமூன்றுற முன்னம் இனிதாக ஆறாயிரப்படி உரைத்தருளினார். பட்டரும் நஞ்சீயருக்குப் பிள்ளான்படி ஆறாயிரமும் நன்றாக ப்ரஸாதித்தருளினார்.

நஞ்சீயரும் அத்தை நன்றாக அதிகரித்து, பட்டரை அநேகமாக அநுவர்த்தித்து அவருடைய அநுமதிகொண்டு திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரப்படியாக ஒருவியாக்யாநம் பண்ணு

நிற்கச்செய்தே, பட்டருக்கு இருபத்தெட்டாந் திருநக்ஷத்ரத்திலே ஒரு கைசிகத்வாதசியி னன்று பெருமாள் ஸந்நிதியிலே நின்று கைசிகபுராணம் வாசித்தருளா நிற்க, என்றையும் போலன்றியே ஒருபதத்திலே நின்று பஹுமுகமாக மஹாவார்த்தங்களை அருளிச்செய்கிறபடிகளைக் கண்டு, பெருமாள் திருவுள்ளம் பற்றி யுகந்து இவருக்குத் தாம் சாத்தியிருந்த திருமாலை திருப்பரியட்டம் திருவாபரணம்முதலானவற்றையும் தாம்எழுந்தருளியிருக்குந் திவ்யஸிம்ஹாஸநத்தையும் பின்னையும் சிலவற்றையும் பரிசிலாக இரங்கியருளி, மார்புந் தோளும் பூரித்துத் திருமேனி தெரியாமல் த்வரை விஞ்சிமாறி 'இவர்க்கு மற்று எது கொடுப்போம்?' என்று ஸந்தோஷாதிஶயத்தாலே 'பட்டரே உமக்கு மேலைவீடுதந்தோம்' என்று திருவுள்ளமாக, இவரும் 'மஹாப்ரஸாதம்' என்று அங்கீகரித்தருள, திருவோலக்கமடையக் கடல் குழம்பினாற்போலே 'இப்படி திருவுள்ள மாவானென்?' என்று கலங்கி வயிறுபிடிக்க, பட்டரும் ஹர்ஷப்ரகர்ஷத்துடனே பெருமாள்திருவடிகளிலே தண்டன்ஸமர்ப்பித்து க்ருதாஞ்ஜலிபுடராய் நின்றுகொண்டு 'நாயன்தே! தேவரீர் அர்ஜுநனைக் குறித்து "மோக்ஷயிஷ்யாமி" என்று அருளிச்செய் தருளிற்றென்றுகேட்பார்வார்த்தை கேட்டிருக்கை யன்றிக்கே, தேவரீர் தாமே இப்படி திருவாய்மலர்ந்தருளப் பெற்ற இப்பேற்றுக்கு அடி உடையவர் தேவரீர் திருவடிகளிலே காட்டிக்கொடுத்த உறவும் ஆழ்வானோடு உண்டான குடல்துவக்கும் எம்பாரருளு மிறே' என்று விண்ணப்பஞ் செய்ய; திருவோலக்கத்தி லிருந்த ஸ்ரீரங்க மறையோர்பட்டரைப்பார்த்து'பெருமாள்உகப்புத்தலைமண்டையிட்டு விசாரியாமல் ஒருவார்த்தை அருளிச்செய்தருளினார்; நீர் இங்ஙனே உகந்து அங்கீகரிக்கிறதென்? உம்மைக்கொண்டு இவ்விபூதியைத் திருத்த வேணுமென்றன்றோ பெருமாள் திருவுள்ளம்பற்றியிருக்கிறது' என்ன, பட்டரும் 'ஆனால் இவ்விபூதியும் இவ்விபூதியி லுள்ளாரும் பாக்யஹீநரானால், அடியேன் செய்வதென்? நாய்க்குடலுக்கு நறுநெய் தொங்குமோ? என்னை இவ்விபூதி பொறுக்குமோ? இன்னம்சிலநாள் இங்கேஅடிமைகொண்டருளில், பரமபதத்திற்கும் இதுக்கும் சுருளும்படியுங் கட்டேனோ?' என்று பெருமாள் தம்மை விஶேஷ கடாக்ஷஞ் செய்தருளின ராஜகுல மாஹாத்ம்யத்தா லுண்டான செருக்குத் தலைமண்டையிட்டு ஹ்ருஷ்டோக்தியைப்பண்ணி, நாயன்தே! ஆஸந

பத்மத்திலே அழுத்தியிட்ட திருவடித் தாமரைகளும் அஞ்சலென்றகையும் கவித்தமுடியும் முறுவல் பூரித்த சிவந்த திருமுகமண்டலமும் திருநுதலில் கஸ்தூரித் திருநாமமும் பரமபதத்தில் கண்டிலேனாகில், ஒருமூலையடியே முறித்துக்கொண்டு குதித்து மீண்டுவருவேன்' என்று விண்ணப்பஞ்செய்து, நம்பெருமாளையும் பெரிய பெருமாளையும் ஆபாதசூடம் அநுபவித்து, கோயிலாழ்வாரையும் ஆழ்வாரையும் சண்ணார ஸேவித்து நிற்க; பெருமாள் தம்வரிசைக ளெல்லாவற்றுடன் ப்ரஹ்மரதம் பண்ணுவித்து, கோயில் அனைத்துக் கொத்தும் அகில ஸ்ரீவைஷ்ணவர்களும் எல்லா ஆசார்யர்களும் மற்றுமுள்ள விப்ரவர்க்கமும் சூழ்ந்து ஸேவித்துவர, அவர் திருமாளிகையிலேயெழுந்தருளி ஆண்டாளை ஸேவித்துநிற்க, அவரும் '*நலமந்த மில்லதோர்நாடு புகுவீர்' என்று ஆசீர்வதிக்க, பட்டரும் '*அம்மா! அடியேன் வேண்டுவதிதே' என்று உகந்தருளி,

திருப்பதியிலுள்ளவர்களடங்கத் திருமாளிகையிலே அமுது செய்தருளின பின்பு பெருங்கூட்டமாக எழுந்தருளி யிருந்து, என்றையும்போலே திருநெடுந்தாண்டகத்திற்கு அர்த்தம் அருளிச்செய்யா நிற்கச்செய்தே "அலம்புரிந்த நெடுந்தடக்கை" என்கிறபாட்டுக்கு அர்த்தமருளிச்செய்கிறபோது, "அஞ்சிறைப்புள் தனிப்பாகன்" என்கிறவிஷயத்தைவிவகரிக்கும்போது திருவேங்கடமுடையான் பெரியதிருவடி நயினார்மீது எழுந்தருளி சேவை ஸாதிக்க, பட்டருங்கண்டு ஆனந்த பரவஸராய் "பறவையேறும் பரமபுருடா நீயென்னைக்கைக்கொண்டபின்,பிறவியென்னுங்கடலும் வற்றிப் பெரும்பதமாகின்றதால்" என்று இத்தை இரட்டித்து அநுஸந்தித்தருளித் திருக்கண்களை மலரவிழித்துத் திருமேனியைச் சிலிர்ப்பித்துப் புன்முறுவல் செய்து திருமுடியிலே அஞ்சலி செய்துகொண்டு அணையிலே சாய்ந்து நிற்கச் செய்தே சிரஃகபாலம்வெடித்துத் திருநாட்டுக் கெழுந்தருள, முதலிகளும் உள்ளேசென்று 'பட்டர்இளைத்துஎழுந்தருளியிருக்கிறார்' என்று ஆண்டாளுக்கு அறிவிக்க; ஆண்டாளும்சடக்கென எழுந்தருளிப் பட்டரை வாரியெடுத்து மார்பிலே அணைத்துக்கொண்டு, திருநாட்டுக்கு எழுந்தருளின விஸ்மயத்தைக் கண்டு, திருவுள்ளங் கலங்குதல் திருமுகங்கன்றுதல் * கண்ணீர் மல்குதல்செய்யாதே 'வண்டுகள் பூவின்பரிமள மறிந்து ஆக்ராணித்து க்ரஹிக்குமா

போலே, பட்டருடைய ஸௌகுமார்யமறிந்து நலக்காமல் இவா ஹ்ருதயகமலத்தை அலர்த்தித் தான் *தெய்வவண்டானதன்மை தோன்ற ஸ்ரீவைகுண்டநாதன் இவரைக் கைக்கொண்டருளுவதே! பெருமாளுக்கும்நாச்சிமாருக்கும்பேரிழவும்பெருங்க்லேசமும் பெருவயிற்றெரிச்சலுமாய்ச் செல்லாநிற்க, பரமபதநிலயனுக்கும் அங்குள்ள நாச்சிமாருக்கும் பெருவாழ்வும் பெருஞ்செல்வமும் பெருங்களிப்புமாய்ச் செல்லுகிறதே!' என்று புத்ரஶோகலேஶ ஸ்பர்ஶமுமற்று, 'உடையவன் உடைமையைக் கைக்கொண்டால், நாம்வெறுக்கலாமோ? என்று ஆண்டாள்இருக்க, கடல் கலங்கினாற்போலே கோயிலிலுள்ளா ரடங்க ஶோகார்த்தராய்க் கிடந்து துடிக்க, நஞ்சீயர் வேரற்ற மரம்போலே கோஷித்துக் கொண்டு விழுந்து ஶோகார்த்தராய்ப் பஹுவாய் ப்ரலாபித்து * மழைக்கண்ணீர் மல்கிநிற்க; பெருமாளும் நாச்சிமாரும் திருமுத்தின் பணி காளாஞ்சி திருவெண்சாமரம் திருவாலவட்டம் திருவெண் கொற்றக்குடை வெண்முத்தின்கலசம் மேற்கட்டு முத்துத்தாமம் தொடக்கமான தம்முடைய ஸர்வ பரிஜந பரிச்சதங்களடங்கக் கொடுத்துவிட்டு, 'நம்முடைய அவப்ருதோத்ஸவம் கொண்டாடுமாபோலே பட்டருக்கும் அவப்ருதோத்ஸவங் கொண்டாடுங்கோள்' என்று திருவுள்ளமாய், திருமுகங்கன்றித் திருமுத்துதிர்த்துப்பெருமாளும் நாச்சிமாரும்கூடத் திருமஞ்சநமாடியருளி, 'இப்போதுநமக்குச்செவ்வாய் வக்ரமாய்த்து என்று திருவுள்ளம்நொந்து, 'நாம்புத்ரனை யிழந்தோமே!' என்று சுருளமுதும் அமுதுசெய்யாமல் முசித்து எழுந்தருளி யிருக்க;

நஞ்சீயர் முதலான முதலிகள் சீராமப்பிள்ளையைக்கொண்டு பட்டரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்துப் பள்ளிபடுத்து, அவப்ருதங்கொண்டாடி மீண்டுவரும்போது, நஞ்சீயர் முட்டாக்கிட்டு மூடிக்கொண்டு புழைக்கடைவழியாலே தம்மடமேயெழுந்தருள, ஸ்ரீபாதத்து முதலிகள் 'இதுக்கு அடியென்?' என்று விண்ணப்பஞ்செய்ய, நஞ்சீயரும் 'புதுக்க அறுத்தவிதவை தெருவிலே வெளிப்பட வருமோ?' என்று அருளிச்செய்தருளினார்; அதாவது-ஸச்சிஷ்யன் ஸதாசார்யன் இறத்துப் பார்யாஶமனாயிருக்கை ஸ்வரூபஸித்தி யென்று கருத்து.

பின்பு ஆண்டாளும் முதலிகளும் திருமாளிகையிலே புக்கவளவிலே வெறிச்சான திருமாளிகையைக் கண்டு, பட்டர் திருத்

தம்பியாரான சீராமப்பிள்ளை '*நல்லதோர் தாமரைப் பொய்கை நாண்மலர்மேற் பனிசோர, அல்லியும் தாதுமுதிர்ந்திட்டழகழிந்தாலொத்ததாலோ, இல்லம்வெறியோடிற்றாலோ!' என்று பாடிக்கொண்டு விழுந்து பெரும்பிடறு செய்து ஆர்த்தராய்க்கூப்பிட்டு ஸோகிக்க, ஆண்டாளும் அவ்வார்த்தியைக் கண்டு 'இவர் ஆழ்வான் திருவயிற்றிலே பிறக்கத்தக்கவரல்லர்' என்று முசித்து முதலிகளைப்பார்த்து அருளிச்செய்து, 'பிள்ளாய்! பட்டர் பெற்றபேற்றுக்குப் பொறாமல் ஜ்ஞாதித்வங் கொண்டாடுகிறீரோ? நீர் இப்படிசெய்கையில் நான் ஒரு கைப்புடையிலே யிருக்கிறேன்' என்ன, சீராமப்பிள்ளையும் ஸோகத்தைவிட்டுத் துணுக்கென எழுந்திருந்து ஆண்டாள் திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து, 'அபசாரப்பட்டேன்; பொறுத்தருளவேண்டும்' என்று க்ஷமைகொண்டு, பட்டருக்குத் தீர்த்தத் திருவத்யயநஞ் செய்தருளி நிறைவேற்றின பின்பு, பெருமாளைத் திருவடிதொழச் சென்றவளவிலே,

பெருமாள் சீராமப்பிள்ளையை அருளப்பாடிட்டருளி 'பட்டரை யிழந்தோம் ஆயினும் உமக்கு நாம் இருக்கிறோம்; முசியாதே கொள்ளும்' என்று பட்டருடைய வரிசைகளடங்கக் கொடுத்தருளிப் ப்ரஹ்மரதம் பண்ணுவித்துத் திருமாளிகையிலே போகவிட, சீராமப்பிள்ளையும் முசிப்பற்று ஹ்ருஷ்டராயிருந்து தர்ஸநம் நிர்வஹித்துக்கொண்டு எழுந்தருளியிருந்தார்.

இத்தால், மஞ்சள் நீர் குடிப்பித்துப் பெற்றுவளர்த்தவரே தம்பெருவீடு கொடுக்கும்படியான தன்னேற்றமும், அர்த்தாநுஸந்தாந வேளையிலே ஹரர்ஜுன் ஸாக்ஷாத்கரித்து வழிநடத்தும்படியான தன்னேற்றமும், பேறு இழவு இரண்டுக்கும் பெருமாள் தாமாய் அதில் கலக்கமற்ற தன்னேற்றமும், ஆழ்வான் குடல் துடக்குடைய பட்டர்க்கே யுள்ளவையிறே.

பட்டர் செய்தருளிய ப்ரபந்தங்கள்:—சகஸ்ரநாமபாஷ்யம், அஷ்ட ஸ்லோகியென்கிற மந்த்ரவ்யாக்யானம், தத்வரத்நாகரம், ப்ரணவவிவரணம், ஸ்ரீகுணரத்நகோசம், ஸ்ரீரங்கராஜஸ்தவம், க்ரியாதீபம், தத்வத்ரயஸ்லோகம் என்பனவாம்.

பட்டர்வைபவம் முற்றச்சொல்லி முடியாதிறே; யதாமதி யதாஸ்ருதமாகச் சொன்னதித்தனை.

பட்டர் திருநக்ஷத்ரம் - வைகாசியில் அநூராதம்.

அவர் தனியன் - "ஸ்ரீபராஶரபட்டார்யஶ் ஸ்ரீரங்கேஶ புரோஹித:—ஸ்ரீவத்ஸாங்கஸுதஶ் ஸ்ரீமாந் ஶ்ரேயஸேமே ஸ்துபூயஸே."

நஞ்சீயர் வைபவம்.

அநந்தரம் வேதாந்திகளான நஞ்சீயர் பட்டர் நல்லருள் கொண்டு திருவாய்மொழிக்கு ஒன்பதினாயிரமாகஸ்ரீபாஷ்யப்ரக்ரியையாலே ஒருவ்யாக்யாநம் அருளிச்செய்து முற்றப் பட்டோலைகொண்டு 'இத்தை ஒரு ஸம்புடத்திலே நன்றாக எழுதித் தர வல்லாருண்டோ?' என்று தம் ஸ்ரீபாதத்து முதலிகளைக்கேட்க, அவர்களும் தென்கரையி னின்றும் நம்பூர் வரதராஜரென்பாரொருவர் பலகாலும் இங்கே வருவர்; அவர்நன்றாக வெழுதுவர் என்று நஞ்சீயருக்கு விண்ணப்பஞ்செய்ய, சீயரும் வரதராஜரை யழைப்பித்து 'ஒருக்ரந்த மெழுதிக்காட்டும் என்ன, வரதராஜரும் அங்ஙனமே எழுதிக்காட்ட, சீயரும் அத்தைத் திருக்கண் சாத்தியருளி 'எழுத்து முத்தைப்போலே நன்றாயிருக்கிறது; ஆகிலும், இது திருவாய்மொழி வ்யாக்யாந மாகையாலே, ஒரு விலக்ஷணரைக்கொண்டு எழுதுவிக்க வேண்டுமாதலால், திருவிலச்சினை திருநாமமாத்ர முண்டான இவரைக்கொண்டு எங்ஙனே எழுதுவிப்பது? விஶேஷஜ்ஞரைக் கொண்டே எழுதுவிக்க வேணுமிறே! என்று ஸந்தேஹிக்க, வரதராஜரும் சீயர்திருவுள்ளத்தை யறிந்து 'அடியேனையும் தேவரீர் திருவுள்ளத்துக்கு வரும்படியே திருத்திப் பணிகொள்ள லாகாதோ?' என்ன, அவ்வளவிலே சீயரும் மிகவுந் திருவுள்ளமுகந்து அப்போதே வரதராஜரை அங்கீகரித்தருளி, "பஞ்சா ஸ்த்ராங்கா: பஞ்சஸம்ஸ்கார யுக்தா:பஞ்சார்த்தஜ்ஞா: பஞ்சமோபாய நிஷ்டா:தேவர்ணாநாம் பஞ்சமாஶ்சாஶ்ரமாணாம் விஷ்ணோர்பக்தா: பஞ்சகால ப்ரபந்நா:" என்ற ஶ்லோகத்திற்சொன்ன ப்ரபந்நநிஷ்டை யெல்லாம் பூரணமாம்படி விஶேஷகடாக்ஷஞ் செய்தருளி, பட்டோலையில் எழுதின ஒன்பதினாயிரத்தையும் முற்ற ஒருரு வரதராஜருக்கு அருளிச்செய்து காட்டியருளி, 'இப்படியே தப்பாமல் எழுதித் தாரும்' என்று பட்டோலையை வரதராஜர் கையிலே கொடுத்தருள, அவரும் அத்தை வாங்கிக்கொண்டு 'அடியேன் ஊரிலே போய் எழுதிக்கொண்டு வருகிறேன்' என்று விண்ணப்பஞ்செ

ய்ய, சீயரும் 'அப்படியே செய்யும்' என்றுவிட, அநந்தரம் வரத ராஜர் திருக்காவேரியிலே எழுந்தருளின வளவிலே சிற்றிடம் நீஞ்சிப் போகவேண்டுகையாலே பட்டோலையைத் திருமுடியிலே கட்டிக்கொண்டு நீஞ்சிப்போகச்செய்தே ஓரலைவந்து அடித்து க்ரந்தம் ஆற்றுக்குள்ளே விழுந்துபோக, வரதராஜரும் அக்கரையிலேயேறி 'பட்டோலை போய்விட்டதே! இனி நாம் என் செய்யக்கடவோம் என்று திருமாளிகையிற்போய்த் தமது அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு தம்முடைய திருவாராதனப் பெருமாளுக்குச் செய்யவேண்டுவன வனைத்துஞ்செய்து தாம் பிரசாதப்படாமல் துக்காவேஶராய் சயனித்துக் கொண்டார். அப்போது பெரிய பெருமாள் அவரது ஸ்வப்பனத்திற் ப்ரத்யக்ஷமாய் 'ஏன்காணும் துக்கிக்கிறீர்; உம்முடைய ஆசார்யரான நஞ்சீயரை முன்னிட்டுக்கொண்டு எழுத ஆரம்பித்தால் நாம் உமது நினைவிலிருந்து உம்முடைய ஆசாரியன் சொன்னவை யொன்றும் தவறாது உதகரிப்போம்' என்று சொல்லிப்போக, வரதராஜரும் துயிலுணர்ந்து தமது அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு நஞ்சீயர் ப்ரஸாதித்தருளின அர்த்தமொன்றுந் தப்பாமல் ஒன்பதினாயிரமும் நன்றாக எழுதியருளித், தாம் தமிழுக்குமிகவும் உத்தமவிரகராகையாலே ஓரொரு பாட்டுக்களிலே "உக்தார்த்த விஶதீகாரயுக்தார்த்தாந்தர போதகம் - மதம்விவரணந்தத்ர மஹிதாநாம் மநீஷிணாம்" என்கிறபடியே உசிதமான ஸ்தலங்களுக்கு ப்ரஸங்க கம்பிரபதங்களாலே அர்த்த விஶேஷங்களும் எழுதிக்கொண்டுபோய்ச் சீயர் திருக்கையிலே கொடுக்க, சீயரும் ஸ்ரீகோஶத்தை அவிழ்த்துப் பார்த்தவளவில் தாம் அருளிச்செய்த கட்டளையாயிருக்கச் செய்தேயும் ஶப்தங்களுக்கு மிகவும் அநுகுணமாகப் பலவிடங்களிலும் அநேக விசேஷார்த்தங்கள் எழுதியிருக்கையாலே அத்தைக்கண்டு மிகவுந் திருவுள்ளமுகந்தருளி வரதராஜரைப் பார்த்து 'இது மிகவும் நன்றாயிரா நின்றது; இதென்?' என்றுகேட்க, அவரும்பயப்பட்டு ஒன்றும் விண்ணப்பஞ் செய்யாதிருக்க, சீயரும் 'நீர்பயப்படவேண்டாம், உண்மையைச் சொல்லும்' என்ன, வரதராஜரும் 'சீயரே! திருக்காவேரி நீச்சாகையாலே பட்டோலையை அடியேன் தலையிலே கட்டிக்கொண்டு நீஞ்சப் புக்கவாறே, ஒரு அலைவந்து அடிக்க அப்பட்டோலை ஆற்றிலே விழுந்து அமிழ்ந்து போயிற்று; இது

தேவரீர் ஒருருமுற்ற ப்ரஸாதித்தருளின கட்டளையிலே எழுதி னேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, நஞ்சீயரும் 'இவருடைய புத்தி விசேஷமிருந்தபடி என் தான்! இவர் மஹாஸமர்த்தர் நன்ருக எழுதினர்' என்று மிகவுந் திருவுள்ள முகந்தருளி, வரத ராஜரை வாரியெடுத்து அணைத்துக்கொண்டு 'இவர் நம்முடைய பிள்ளை; திருக்கலிகன்றிதாஸர்' என்று திருநாமஞ்சாத்தி, தம்மு டைய ஸந்நிதியிலே அரைக்ஷணமும் பிரியாமல் வைத்துக்கொ ண்டு, பிள்ளைக்கு ஸகலார்த்தங்களையும் கரதலாமலகமாம்படி ப்ர ஸாதித்தருளினர். அவரும் 'சீயரை யல்லது தேவுமற்றறியேன்' என்று எழுந்தருளி யிருந்தார். ஆகையாலே, சீயர் நம்முடைய பிள்ளையென்று அருளிச்செய்த அன்றுதொடங்கி வரதராஜ ருக்கு 'நம்பிள்ளை' என்று திருநாம முண்டாயிற்று.

நஞ்சீயர் திருவாய்மொழி வியாக்யானம் நடத்திவருங்கால த்தே ௩-அ-ம் திருவாய்மொழியில் "நிறைவினுற் குறைவில்லா" என்னும் ௪-வது பாசுரம் பிரஸ்துத மானவாறே, சாவித்ரியின் சரித்திரத்தை யருளிச்செய்தார். அதாவது சாவித்ரியென்பா ளொரு பெண்பிள்ளையை அவளது மாதாபிதாக்கள் ஒருவனுக்கு வாழ்க்கைப்படுத்த உத்யோகித்தார்கள். அப்போது நாரதபக வான் ப்ரசன்னராய் சாவித்ரியின் தாய்தந்தையரைநோக்கி அவ ர்கள் சாவித்ரிக்கு நியமித்துள்ள புருஷனுக்கு அற்பவயதென் றறிவித்தனர். அதுகேட்ட சாவித்ரியின் பெற்றோர்கள் வ்யா குலாந்தஃகர்ணராக, சாவித்ரியும் திடசித்த முள்ளவளாய் தனக் குத் தன் மாதாபிதாக்கள் முதன் முதல் நியமித்தவனே கணவ னுகவேண்டும் என்றும் அவனது அற்ப ஆயுஸுக்குத் தான் கடவேனென்றும் வேண்டிக்கொள்ள, அவர்களும் அவர்களிஷ் டப்படியே செய்து முடித்தனர். சிலநாள் சென்றவாறே சாவித் ரியின் கணவனைக்கொண்டுபோக யமபடர்வர, அவளும் தன் புருஷனுடன் யமபுரஞ்சென்றுள். யமனும் தன் தூதர்களை நோக்கி சாவித்ரியை ஏன் அழைத்து வந்தீர்களென்று கோபங் கொண்டு, சாவித்ரியை உனக்கென்ன வேண்டுமென்று வினவ, அவளும் 'பர்த்தா வேண்டும்' என்ன, யமனும் 'அவனை யொழி ந்தவற்றைக்கேள்' என்ன, சாவித்ரி ஆகில் நான் அவனுக்கு அனேகம் பிள்ளைகளைப் பெறவேண்டுமென்ன, அவனும் அப்ப டியே அவளபிமதத்தைத் தலைக்கட்டினுன் என்பதாம்.

ஒருநாள் நம்பிள்ளை ஜீயரைத் திருவடிதொழுது "பஞ்ச மோபாயமென்றொன்றுண்டு என்று சொல்லாநின்றார்கள்; நாட்டிலேயும் அங்ஙனிருப்பதொன்றுண்டோ" என்று கேட்டருள, ஜீயரும் அவரைக்கடாக்ஷித்து "நானறியேன்; சதுர்த்தோபாயமான ஈஶ்வரனையொழிய வேறுபாயமில்லை என்பர் சிலர்" என்றருளிச்செய்தார். மற்றும் நஞ்சீயர் ஸ்ரீபாதத்திலே யாஶ்ரயித்தானொருவன் "எம்பெருமானே யுபாயமாகில் ப்ரபத்தி கொண்டிங்கு செய்வதொன்றுங்கண்டிலேன்" என்ன; அதுகேட்ட ஜீயரும் செவியைப்புதைத்து "நாதமுனிகள் தொடங்கி யிவ்வளவும் வர நம்மாசார்யர்கள் பரம ரஹஸ்யமாக உபதேசித்து ஓரான் வழியாகக் கொண்டுபோந்த இதனை இதின் சீர்மையறியாத உனக்கு மஹாபாபியேன் வெளியிடுவதே" என்று திருமுடியிலே அடித்துக்கொண்டு திருப்பள்ளி யறையிலே புக்கருளினார்.

பின்னுமொருநாள் நஞ்சீயர் "அருள்பெறுவார்" என்னும் கo-ம் பத்து கூ-வது திருவாய்மொழி வியாக்யானம் செய்யும்போது ஈஶ்வரன் ஆஶ்ரிதபரதந்திரன் என்னும் விஷயம் வெளியாக "இது பட்டர்தாமே அருளிச்செய்ய நான்கேட்டேன்" என்றருளியதாவது:—ஈஶ்வரன் தன்னுடைய ஸ்ருஷ்டியாதி வ்யாபாரமெல்லாவற்றையும் ஆழ்வார்பக்கலிலே வைத்துத் தானும் பிராட்டிமாருமாக விருக்கிறவளவிலே இவரறிவித்ததைத் திருக்கண்களாலே அநுமதி பண்ணுவனென்றிறே இத்திருவாய்மொழியில் தோற்றுகிறது. இவரங்குப் போகைக்கு ஹேதுவையும் இவரங்குப்போனால் இவரைக்காண்கை யுகப்பாகையால் போகிறதற்கு விக்னமாகா தென்கிறதையும் ஆப்தசம்வாதமுகேன தரிசிப்பிக்கிறார். சேனைமுதலியார் சட்டையும் மயிர்க்கட்டும் கையும் பிரம்புமாய் வந்து புகுரப்புக்கவாறே நாச்சிமாரும் தானுமாய் ஸ்வைரமாகவிருப்பது தவிர்ந்து நாச்சிமாரும் சிம்ஹாசனத்தி லொரு மூலைகளிலே யொதுங்க தானும் சவிநயமாக விருக்குமாய்த்து; வ்ருத்தசாமந்தரைக்கண்ட ராஜாக்களைப்போலே "இவர்தாமும் இவ்விருப்புக்குத் தண்ணீர் துரும்பாக வொண்ணாது" என்று ஜகன் நிர்வாஹத்துக்கு வேண்டுவதைப் பாசுரப்பரப்பற விண்ணப்பஞ் செய்வாராய்த்து. பிராட்டிமாரோடிருக்கு மதிலு மினிதா யிருக்குமிறே, அவனுக்கிவர் தம்மைக்காண ப்ரியேணராவது. "இன்னானை ப்ரஹ்மாவாக்க வேணும் இன்னானை மாற்றவேணும்" என்று வேணு மவற்றைச்

சுருங்க விண்ணப்பஞ்செய்வர். "ஐயர் யாதொன்று சொல்லிற்று அவையெல்லா மப்படியே" என்று கண்களாலே மேலெழுத்திட்டுக்கொடுக்கும். இவ்வார்த்தை யருளிச்செய்த போதுகிடாம்பி ஆச்சானோடு அல்லாதாரோடு வாசியறக்குமிழ்நீருண்டது. ஆச்சான்றான் பட்டர்க்கு ஸிநேஹித்திருக்கும்போர. இளையாழ்வான், ஆச்சானை, 'பட்டர்தம்மை ஆஸ்ரயித்தவர்களிற் காட்டிலும் நீர்தாழ அநுவர்த்திப்பானென்'என்றுகேட்க, "நீர்அன்று கண்டிலைகாண் எம்பெருமானார் பட்டர்கையிலே புஸ்தகத்தைக் கொடுத்து திருமுன்பே யொருஶ்லோகத்தை விண்ணப்பஞ் செய்வித்துத் திருப்பிரம்புக்குப் புறம்பாகக்கொண்டு புறப்பட்டுச் சுற்றும் பார்த்தருளி, 'நம்முடையா ரடங்கலும் நம்மை நினைத்திருக்குமாபோலே இவனை நினைத்திருங்கோள்' என்றருளினாரிறே" என்றுரைத்தருளினார்.

நஞ்சீயர்மற்றும் அருளியவை:—அஜ்ஞாந ஸமயத்திலும், ஜ்ஞாநஸமையத்திலும், ஜ்ஞாநம் பக்வமான ஸமயத்திலும், ஜ்ஞாந பலமான பகவத்ப்ராப்தி ஸமயத்திலும், மாதாபிதாக்கள், ரூபநாமங்கள்,போஜநாதிகள், ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள், விதி நிஷேதங்கள், தேசவாஸங்கள், பந்துவர்க்கங்கள், ஐச்வர்யாதிகள், ப்ரார்த்தனைகள் ஆகியஇவைகள் வாசியறபேதித்திருக்கும்.

முதலடியான அஜ்ஞாநஸமயத்தில், விவேகம் ஸஞ்சரியாமையாலும், (சரீரமேவமாதாபிதரௌஜநயத:) என்கிறபடியே கேவலம் சரீரத்தைப் பெற்றவர்களையே மாதாபிதாக்களாக வபிமானித்து அவர்களிட்டபேரும், அவர்கள் நியமித்த ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும், அவர்களை யநுவர்த்தித்து அத்தாலே வந்தேறின ரூபநாமங்களும், அவர்கள் விரும்பின பந்துவர்க்கங்களும், அவர்கள் வம்சாபிமானமும், ஐச்வர்யமும், அவர்கள்கற்பித்த ஸம்ஸாரவர்த்தகமுமாயிருப்பன சில ப்ரார்த்தனைகளுமாய், ஸம்ஸாரத்தில் என்னை விஞ்சினாரில்லையென்று தன்னை ஸமாப்யதிகதரித்ரனாக வபிமானித்து மேனாணித்திறுமாந்திருக்கும் (க)

ஜ்ஞாநம் பிறந்தஸமயத்தில், * அஞ்சுசேராக்கையான கேவலம் சரீரமென்று - ப்ரக்ருதே:பரனாய், பஞ்சவிம்சகனாய், ஸ்வஸ்மை ஸ்வயம்ப்ரகாசனாய், ஏகரூபனாய், ஜ்ஞாநாநந்தைகஸ்வரூபனாய், அச்சேத்யனாய், அதாஹ்யனாய், அக்லேத்யனாய், அசோஷ்யனாய், நித்யனாய், ஜநநமரணாதிகளின்றிக்கே யிருப்பானொரு

வாத்மாவுண்டு, வேதசாஸ்த்ரங்களுமுண்டு, புண்ணியபாபங்களுமுண்டு, வர்ணாச்ரமங்களுமுண்டு; கீழ்நின்ற நிலைகள் பாபவிகாரத்தாலே ப்ரமித்ததித்தனை யென்றுணர்ந்து நெகிழ்ந்து, வேதசாஸ்த்ரத்தை மாதாவாகவும், சாஸ்த்ரப்ரதானம் பண்ணினவனையே பிதாவாகவும் அபிமாநித்து, அந்த சாஸ்த்ரம் விதித்தபடியே போஜநாதிகளும், ப்ரவர்த்தி நிவர்த்திகளும், விதிநிஷேதங்களும், வேதசாஸ்த்ரப்படி போமவர்களையே பந்துக்களாகவும், அந்த சாஸ்த்ராபிமாநத்தாலே வந்தேறின ரூபநாமங்களும் சாஸ்த்ராப்யாஸம் பண்ணலான தேகமாய் சாஸ்த்ரத்தை ஐச்வர்யமாகவும் ப்ரார்த்தனைகளாகவும் அபிமாநித்து, ஆத்மாபிமாநங்களில் என்னைவிஞ்சினாரில்லையென்று தன்னை ஸமாப்யதிகதரித்ரனாக வபிமாநித்து மேனாணித்து இறுமாந்திருக்கும். (உ)

ஜ்ஞாநம் பக்வமான ஸமயத்தில், ஸகல சாஸ்த்ரங்களையுமாராய்ந்துபார்த்தால் ஆத்மாவினுடைய ஸ்வாதந்த்ர்யம் விநாசமென்றும், ஈஸ்வரஸ்வாதந்த்ர்யம் இவனைக்கரையேற்றுமென்னுமிடமும், கீழ்நின்றநிலைகளையடைய நெகிழ்ந்து, தத்வத்ரயவிஷயஜ்ஞானத்தையும், தத்வத்வய விஷயவைராக்யத்தையும், தத்வைக விஷய பக்தியையுமுடையனாய், தத்வஹிதங்களை யறியும்போது, கைப்பறிபறித்தும், கிடந்தானைக்கண்டேறியும்,அல்லாமையாலே லோகத்திலே அர்த்தகாமோபஹத னன்றியிலே வேதசாஸ்ர நிதான ஜ்ஞானனாய் லோகபரிக்ரஹமுடையனாயிருந்துள்ள ஆசார்யன் ஸ்ரீபாதத்திலே சென்று கண்ணும் கண்ணீருமாய், கீழ் தேஹாத்மாபிமாநியாயும் கேவலாத்மாபிமாநியாயும் தான்பட்ட அநர்த்தமெல்லாம் நேராகவிண்ணப்பஞ்செய்ய, ஆசார்யனும் தன் நிரவதிக க்ர்பையாலே இவர் கண்ணீரைத் துடைத்து இரண்டு பங்குக்கு ஒருகையோலைபோலே ஈச்வரஸ்வாதந்த்ர்யத்துக்கும், ஆத்மபாரதந்த்ர்யத்துக்கும் வாசகமாய், இவ்வாத்மாவுக்கும் எம்பெருமானுக்கும் உண்டான * ஒழிக்கவொழியாத ஸம்பத்துக்கு, எட்டிழையாய் மூன்று சரடா யிருப்பதொரு மங்கல்யஸூத்ரமுண்டென்று பெரிய திருமந்த்ரத்தை ஆசார்யன் தன் இரக்கத்தாலே யருளிச்செய்து, ஸ்வரூபத்தில் உணர்ச்சியோடு ஸ்வரக்ஷணத்தில் அசக்தியோடு ஈச்வரனைப் பேணிக்கொண்டு வர்த்தியென்று அருளிச்செய்தருளினால், தான் கீழ்நின்ற நிலைகளை நெகிழ்ந்து, (பெற்றார் பெற்றொழிந்தார்) என்றும், (பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தைநீ) என்றும், (பெற்றாருஞ்சுற்றமு மென்றிவைபேணேன் நான்) என்றும், (தாயேதந்தையென்றும் தாரமே கிளைமக்களென்றும் நோயேபட்டொழிந்தேன்) என்றுஞ் சொல்லுகிறபடியே - திருமந்த்ரத்தையே மாதாவாகவும் ஆசார்யனையே பிதாவாகவும்

அபிமாநித்து, ஆசார்யன் திருவுள்ளமான ரூபநாமங்களும் போஜநாதிகளும் ப்ரவ்ர்த்தி நிவ்ர்த்திகளும் விதிநிஷேதங்களும், ஆசார்யன் விரும்பி வர்த்திக்கும் தேசமே திவ்யதேசமாகவும், ஆசார்யன் திருவுள்ளத்தாலே ஸஹவாஸயோக்யராகக் கற்பித்த பரமஸத்வ நிஷ்டரான ஸ்ரீவைஷ்ணவர்களே பந்துக்களாகவும், அவர்கள், தங்களுக்கு ஐச்வர்யமாக வபிமாநித்திருக்கும் ஆசார்ய கைங்கர்யமே தனக்கு ஐச்வர்யமாகவும், தத்கைங்கர்யத்தின் மேலுண்டான ப்ரார்த்தநையே தனக்கு தேஹயாத்ரையாகவும் நினைத்து, (குலங்களாய வீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன்-நின்னிலங்குபாதமன்றி மற்றொர்பற்றிலேன்) என்றும், (கற்றிலேன் கலைகள் - நற்றுணையாகப் பற்றினேனடியேன்) என்றும், (போதெலாம்போது கொண்டுன் பொன்னடி புனையமாட்டேன் ஏதிலேனரங்கர்க்கெல்லே) என்றும், (நாட்டாரோடியல்வொழிந்து) என்றும். (நாட்டுமானிடத்தோ டெனக்கரிது) என்றுஞ் சொல்லுகிறபடியே, தன்வேறுபாடுதோன்ற இந்நிலத்தில் பொருந்தாமையும் பொருந்தும் நிலத்தில் புகப்பெறுமையும் வடிவிலே தோன்றும்படி நிர்மலனாய் மோக்ஷப்ரதனான வெம்பெருமானைக்கிட்டி வாழுமளவும் ஜ்ஞாநப்ரதனான வாசார்யன் நிழலிலே யொதுங்கி அவர்ப்ரீதிக்கு வர்த்தகனாய் இருந்தவிட மறியாமலிருக்கும் (௩)

ஜ்ஞாநபலமான பகவத்ப்ராப்தி ஸமயத்தில் தான் கீழ்நின்ற நிலைகளையடைய நெகிழ்ந்து ஆசார்யன் கட்டின ஸ்வரூபாநுபந்தியான மங்களஸூத்ரத்தில் அர்த்தாநு ஸந்தாநத்துடனே வர்த்தியா நிற்கச்செய்தேயும் * பகவத்ஸ்வரூப திரோதாநகரியாய், விபரீத ஜ்ஞாநஜநநியான சரீரஸம்பந்தத்தை ருசிவாஸனைகளோடே விட்டு, ஆற்றிலே குளித்து கரையேறிப் புக்ககத்தில் உற்றாரலங்கரிக்கப்போய் வகுத்ததேசத்திலே முகம்பழகித் திரளிலே சென்று புகுந்து, தனக்கென்ன வொரு ரூபநாமங்களாதல், போஜநசயநாதிகளாதல் ப்ரவர்த்தி நிவ்ர்த்திகளாதல், விதிநிஷேதங்களாதல், தேசவாஸமாதல், பந்துக்களாதல், ஐச்வர்யமாதல், ப்ரார்த்தநைகளாதலின்றிக்கே * சூட்டுநன்மாலைகள் தூயன வேந்தி நிற்றல், என்று வைத்தகண்வாங்காதே பார்த்திருத்தல், சாயாவத் பரதந்த்ரனாய் வர்த்தித்தல், செய்வதெப்போதோ வென்று த்வரை நடந்து செல்லுகை. இவ்வர்த்தம் ஓராசார்ய னங்கீகரித்த முமுக்ஷுவுக்கு நாள்தோறும் ஆராயவேண்டுவ தொன்று எங்ஙனே யென்னில், ஒருவன் ஒருகன்னிகையை ஒரு மந்த்ரஸம்பந்தத்தாலே கைப்பிடித்தால், அவள் பூர்வாவஸ்தையின் நிலைகளடைய நெகிழ்ந்து பர்த்தாவினுடைய அபிமாநத்திலே யொதுங்கினாப்போலே

யும், அநுபநீதனானவன் ஒரு மந்த்ரஸம்பந்தத்தாலே சிகா யஞ்ஞோபவீதங்களைத்தரித்தால் த்விஜனென்று பேரடைகிறுப்போலேயும், யஜ்ஞத்தில் ஒருவன் தீக்ஷித்தால் பூர்வாவஸ்தையின்நிலைகளையடைய நெகிழ்ந்து அவப்ர்தஸ்நாநத்தளவும் யஜமாநவேஷத்துக்குத்தக்க அநுஷ்டாநஞ்செய்கிறுப்போலேயும், ஸந்யாசிகீழ்நின்றநிலைகளையடைய நெகிழ்ந்து ஆஶ்ரமத்துக்கு உசிதமான வர்த்தநத்தோடே வர்த்திக்கிறுப்போலேயும், இந்த ஜீவந்முக்தனான முமுக்ஷுவும் கீழ்நின்ற நிலைகளையடையநெகிழ்ந்து பகவத்கைங்கர்யமொன்றிலுமே நிரதனாய்வர்த்திக்கிறதெப்போதோவென்று தன்னெஞ்சையுருக்கித் தன் வேறுபாடு தோன்ற வர்த்திக்கையே முமுக்ஷுகிர்த்யமென்று நஞ்சீயரருளிச்செய்தார். ... (ச)

நம்பிள்ளை,நஞ்சீயரை 'இதரோபாயங்களுக்கு ப்ரமாணமும் பஹுளமாய் அநுஷ்டாதாக்களும் பலராயிருக்க, இதற்கு ப்ரமாணமும் சுருங்கி அநுஷ்டாதாக்களும் சுருங்கி ருஷி சந்தோதிதைவதாதிகளும் அநுஸந்தேயங்க ளன்றியே யிருப்பானென்? என்றுகேட்க, சீயர் அருளிச்செய்தபடி:-'இருவர்கூடி ஓராற்றிலே இறங்கிப்போகா நின்றுல், ஆற்றி லமிழ்ந்தவனை அமிழாதவன் கையைப் பிடித்துக் கரையேற்றுகைக்கு ஒரு ப்ரமாணாபேக்ஷை வேணுமோ? ப்ரமாணாபேக்ஷை யுண்டென்று நினைத்தீராகிலும் "முமுக்ஷுர் வைஶரண மஹம் ப்ரபத்யே", "தஸ்மாந் ந்யாஸ மேஷாந்தபஸா மதிரிக்தமாஹு:", "ந்யாஸஇத்யாஹுர்மநீஷிணோப்ரஹ்மாணம்", "நிக்ஷேபாபரபர்யாயோ ந்யாஸ:பஞ்சாங்க ஸம்யுத:-ஸந்யாஸஸ்த்யாக இத்யுக்தஶ்ஶரணமதிரித்யபி" என்று ஏவமாதி ப்ரமாணங்கள் பலவற்றையும் அருளிச்செய்து, ப்ரமாணங்களில் குறையில்லை; (நான் இவ்வர்த்தத்தில் ப்ரமாணந்தான் வேண்டுவதில்லை யென்றிருப்பன்; அதற்கு அடி:—ஒரு குள்ளனும் ஒருநெடியனுமாக ஆற்றிலேயிழிந்தால் குள்ளன் அமிழாநின்றுல் நெடியவன் கையைப் பிடிக்கும்போது கரையிலேயிருந்து ஒருவன் சொல்லவேண்டுவதில்லை யிறே; இவனுடைய தர்மிக்ராஹ ப்ரமாணந்தானே அமையுமிறே. குள்ளன் கையை நெடியவன் பிடிக்கைக்கு ஒருவிதி வேணுமோ? என்று அருளிச்செய்து) இனி அதிகாரி சுருக்கம் பார்க்கில், லோகத்தில் இருந்ததே குடியாக ஸர்வரும் ஸம்ஸாரிகளா யிருக்க, அதில் நாலிரண்டுபேர் உத்தமாஶ்ரமிகளானல், ஸம்ஸாரிகளுக்கு ஒரு

உத்கர்ஷமும், ஸந்யாஸிகளுக்கு ஒரு அபகர்ஷமும் உண்டோ? இனி "ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்காமோயஜேத" என்று ஸ்வர்க்காநுபவத்துக்கு ஸாதநத்தை ஶாஸ்த்ரம் விதியாநின்றால், ஒரு ஊரிலேஒருவனன்றோயஜித்தானென்றுகேட்கப்படுகிறது; இதற்கோ உமக்கு ஆள்பற்றப்போகிறது? "ருஷ்யாதீம்ஶ்சகரந்யாஸம் அங்கந்யாஸஞ் சவர்ஜயேத்" என்கையாலே, இதற்கு ருஷ்யாத்யபேக்ஷையில்லை; இதில் அர்த்தத்திற்குக் கூட்டு வேண்டிலிறே இதற்குங் கூட்டுவேண்டுவது; இதுவே எனக்குக் கருத்து என்று திருவுள்ளமாக, பிள்ளையும் க்ருதார்த்தரா யிருந்தருளினார்.

சர்வேஶ்வரனைப்பற்றுமவர் ஷட்விதர். அவர்களாகிறார்:— உத்தமன், உத்தமப்ராயன், மத்யமன், மத்யமப்ராயன், அதமன், அதமப்ராயன் என்பவர்களாம். இவர்களுள் உத்தமனாவான்-உத்க்ர்ஷ்டனான எம்பெருமான்பக்கல் உபயஜீவ்யாம்ஶத்துக்குவிரை கட்டு மவன். உத்தமப்ராயனாவான் - உத்க்ர்ஷ்டனான எம்பெருமான் பக்கல் ஏகஜீவ்யாம் ஶத்துக்குவிரைகட்டுமவன். மத்யமனாவான் - மாதவைஶ்வர்யத்துக்கு மஹானான தபஸ்ஸு பண்ணுமவன்; மத்யப்ராயனாவான்-மாதவனைப்பெற்றுவகுத்தவாழ்வறியாதவன்; அதமனாவான்—அம்மானைப் பெற்று அந்நத்தைப் பற்றுமவன்; அதமப்ராயனாவான் - அம்மானைப்பெற்றும் அல்லாதாரைப் பற்றுமவன்.

பெருமா ளெழுந்தருளா நிற்கத் திருவடிதொழப் புறப்பட்ட நஞ்சீயர்திருமேனியில் திருநாமங்களின்றியே யிருந்தபடியைப்பார்த்து, பர்த்தாவின்முன்பே தாலிகட்டாமல்நின்ற ஸ்திரீயைப்போலே யிராநின்றது அடியேன் திருமேனி, திருமண்கொண்டு வாருங்கோளென்றருளினார்.

நஞ்சீயர் நோவு சாற்றிக்கொண்டிருக்கு மளவில் அதனையறியப்புக்க முதலிகள் "இப்போது தேவர்க்கு வேண்டியிருக்கிறதென்" என்று நஞ்சீயரைக்கேட்டருள, அவரும் "தூவிரிய மலருழக்கி" என்னும்பாடலைக்கேட்கவும், "பெருமாள்எழுந்தருளப் பின்னும் முன்னும் சுற்றும் வந்து திருவடிதொழவும் வேண்டியிராநின்றேன்" என்றருளிச்செய்தார். முதலிகளும் அப்போதே வரந்தரும்பெருமாளரையரைஅழைத்து நஞ்சீயர்விரும்பிய பாசுரத்தைப்பாடச்சொல்ல; அரையரும் சந்துஷ்டராய் இசையுடன் பாடக்கேட்டு அதில்"தானுகநினையானேற்றன்னினைந்துணைவேற்

கோர்" என்னும் ௬-வது பாசுரம் ப்ரஸ்துதமாய் "மீனாய கொடி நெடுவேள் வலிசெய்ய மெலிவேனோ" என்னும் அடிவந்தவாறே, நஞ்சீயர் "அடியேன் காமஸரங்களாலே ஏவுண்பதற்கு முன்பே பெருமாள் வாராவிட்டாலும் பட்ட புண் பரிகரிக்கவாகிலும் வந்தாலாகாதோ" என்றருளிச்செய்தருளினார்.

ஒருநாள் ஜீயர் கோயிலுக்கு எழுந்தருளாநிற்க, வழியிலே பிள்ளானைக்கண்டு, "ஈஶ்வரனுக்கு ஸ்வரூபவ்யாப்தியேயோ வுள்ளது, விக்ரஹ வ்யாப்தியுமுண்டோ?" என்று கேட்க, "ஸர்வ விஷயமாக ஸ்வரூப வ்யாப்தியே யுள்ளது; உபாசகர்விஷயத்தில் அவர்கள் பக்க லநுக்ரஹத்தாலே அவர்கள் ஶுபாஶ்ரயமாக பாவித்த விக்ரஹத்தோடே யெழுந்தருளியிருக்கும்; இனி ஸ்வரூபவ்யாப்திக்கு ப்ரமாணங்கண்டவிடம்—சாமான்ய விஷயமாகிறது. விக்ரஹ வ்யாப்திக்குப் ப்ரமாணங் கண்டவிடம்—விசேஷ விஷயமாகிறது" என்றுபணித்தாராம். அன்றியும் "பாஷ்யகாரர் தோற்றச்செய்துகொண்டு போந்தது ஸ்வரூப வ்யாப்தியாயிருக்கும், ஆகிலும் எம்பாரொருநாள் "உபாஸகானுக்ரஹார்த்தமாக வாஶ்ரிதருடையநெஞ்சிலேவிக்ரஹத்தோடேவ்யாபித்திருக்கும்' என்றருளிச்செய்யக் கேட்டேன் என்று பணித்தார்.

நஞ்சீயர், "பிள்ளை திருநறையூரரையரோடே மூன்றுதிருவாய்மொழி கேட்டேன், அதிலெனக்கொரு வார்த்தைகளும் போகாது; ஒரு திருவாய்மொழியை ப்ரஸ்தாவியாநின்றபோது அவர் வியிதிலராய் கண்ணும் கண்ண நீருமாயிருக்கு மிருப்பை நினைத்திருப்பன்" என்றருளிச்செய்தார்.

ஒருநாள் நம்பிள்ளையை, ஜீயர்கோஷ்டியிலேவைத்துப்போரக்கொண்டாடியருளி, 'தன்சிஷ்யனைத் தான் கொண்டாடாநின்றான்' என்றிராநிற்கள். 'கணபுரங் கை தொழும் பிள்ளையைப் பிள்ளையென் றெண்ணப் பெறுவரே' என்று பண்டுசொன்னாருமுண்டு காணீர் என்றருளிச்செய்தார்.

௨-ம் பத்து, ௫-ம் திருவாய்மொழி "ஆணல்லன் பெண்ணல்லன்" என்னும் ௧௦-ம் பாசுரவிஷயமாய் நஞ்சீயர் பட்டரிடம் கேட்டதாக அருளியதாவது:—"நாட்டில் காண்கிற ஆண்களின்படியல்லன், அப்படியேஸ்திரீகளின்படியுமல்லன், உபயோக யோக்யமல்லாத நபும்ஸக பதார்த்தத்தின்படியு மல்லன்" என்று இப்படிபட்டர்அருளிச்செய்தவாறே, ஒருதமிழன்,"ஜீயரே!நாட்

டில் காண்கிற மூன்றின்படியுமல்லனுகில் சொன்ன வஸ்து சூன் யமோ அல்லதுபின்னை என்?" என்றுகேட்க, பட்டரும், "பிள்ளை யியலறிவுக்குப்போந்திருந்ததில்லையோ!" ஆணல்லன், பெண்ணல் லள், அல்லாவலியுமல்லது என்றதில்லையே, 'அல்லன், அல்லன்,' என்று ஆண்பால் விகுதிகொடுத்தே சொல்லுகையாலே - 'புரு ஷோத்தமன்' என்னுஞ் சப்தந்தானே தோற்றுகிறதில்லையோ என்றருளிச்செய்தார். "ஆணல்லன்; பெண்ணல்லன்"என்கிறவித் தால் - சஜாதீய விஜாதீய நிஷேதம் பண்ணினபடி.

நம்பிள்ளை,நஞ்சீயரைக்குறித்து 'ஒருவன் தனக்கு ஸ்ரீவைஷ் ணவத்வமுண்டென்று அறியலாவது எவ்வவஸ்தை பிறந்தால்?' என்ன, சீயரும் 'அர்ச்சாவதாரத்திற்குப் பரத்வமுண்டென்று அறிந்தவளவிலும், ஒரு ஸ்ரீவைஷ்ணவன்பக்கல் புத்ரதாராதிகள் பக்கலுள்ள ஸ்நேஹத்தளவாகிலும் ஸ்நேஹம்பிறந்த வளவிலும், ஒரு ஸ்ரீவைஷ்ணவர் கடுத்து வார்த்தையருளிச்செய்தால் தன் நெஞ்சில் குரோதந்தட்டாதே போமஸ்வபமாயிருந்தவளவிலும் ஸ்ரீவைஷ்ணவத்வமுண்டென்று அறியலாம்; ஆகையால், அர்ச் சாவதாரே பரத்வபுத்தியும், பாகவதப்ரேமமும், தக்கடிநோக் கிப் போக்யதா புத்தியு முண்டானபோது ஸ்ரீவைஷ்ணவத்வம் சித்தமென்கிறது.

நம்பிள்ளை நஞ்சீயர் ஸ்ரீபாதத்திலே ஸ்ரீபாஷ்யம் வாசித்த ருளாநிற்கச்செய்தே 'திருப்போனகம்சமைந்தது' என்றவாறே, 'சொக்கத்தேவரைத் திருவாராதநம்பண்ணும்' என்று அருளிச் செய்ய, நம்பிள்ளையும் 'அடியேன் திருவாராதநக்ரமத்தை யறிந் தேனோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, சீயரும் 'நானோ சாலக்ர மம்அறிந்திருக்கிறேன்? த்வயத்தில் உத்தரவாக்கியத்தைஅநுஸந் தித்துத் திருவடிவிளக்கி அமுதுசெய்யப் பண்ண மாட்டீரோ?' என்று அருளிச்செய்தார். உகந்தருளின இடங்கள்பலவிடமாய்த் திருப்போனகம் படைப்பது ஒன்றிலேயாகில், அமுதுசெய்தரு ளப்பண்ணும்படி எங்ஙனே?' என்று பிள்ளை நஞ்சீயரைக்கேட்க, சீயரும் 'த்வயத்தில் பூர்வோத்தரகண்டங்களிரண்டுக்கும் நடுவே "ஸர்வமங்கள விக்ரஹாய ஸமஸ்த பரிவா ராய ஸ்ரீமதே நாராய ணாயநம:" என்கிற விசேஷண ஸஹிதமாக உச்சரித்து அமுது செய்யப்பண்ணுவது' என்று அருளிச்செய்தார்; இதனால் உபய கண்டமத்யே இத்தை உச்சரிக்க அருளிச்செய்தது—கைங்கர்ய

வாசக சதுர்த்தியுடன் இச்சதுர்த்தி சேர்ந்திருக்கைக்காகவும், உபாய'நாராயண பதசித்தவிக்ரஹ ஸமர்ப்பகமாகைக் காகவும், அநந்யப்ரயோஜநத்வத்யோதநார்த்தமாகவுமிறே; இத்தால், நம் பூர்வாசார்யர்கள் த்வயமொழிந்த மந்த்ரங்கொண்டு திருவடி விளக்காரர்களென்று கருத்து.

நஞ்சீயரை நம்பிள்ளை 'அவதாரங்கள் ஏதுக்காக?' என்று கேட்க, சீயரும் 'ஓரோரவதாரங்களால்பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பண்ணினவனை அந்தப்பலத்தை அநுபவிப்பிக்கைக்காக' என்று அருளிச்செய்தார். பிள்ளையும் 'பாகவதாபசாரந்தான் எது?' என்று விண்ணப்பஞ் செய்ய சீயரும் 'ஸ்ரீவைஷ்ணவர்களைக்கண்டக்கால் தங்களோபாதி ப்ரக்ருதிமான்களாக நினைத்திருக்கும் புல்லிமை; எங்ஙனே யென்னில்:— ஸ்ரீ வைஷ்ணவர்கள் "திருவுடை மன்னர்," "செழுமாமணிகள்", "நிலத்தேவர்," "பெருமக்கள்," "தெள்ளியார்," "பெருந்தவத்தர்" "உருவுடையார் இளையார்கள் நல்லார்" "வேதம்வல்லார்," "செய்தவேள்வியர்," "தக்கார்மிக்கார்," "வேதவிமலர்," "சிறுமாமனிசர்," "எம்பிரான்றன்சின்னங்கள்," "பேராளன்பேரோதும் பெரியோர்," என்று இப்படிபலபடியாகமிகவும்விரும்பி, நம்குலநாதராய் * மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார்கள் பஹுமதிபண்ணித் திருநாமங்கள் சாத்தி வாய்புலத்தி யருளிச்செய்கையாலே, ஸ்ரீவைஷ்ணவர்களைத் தங்களோடொத்த ப்ரக்ருதிமான்களென்று நினைத்திருக்கை நேரே பாகவதாபசாரமென்று அருளிச்செய்தார். ஆகையால், ஆழ்வார்களுமுட்பட "கடன்மல்லைத் தலசயனத்துறைவாரைக், கொண்டாடும் நெஞ்சுடையாரவரெங்கள்குலதெய்வமே" என்று பஹுமதிபண்ணி விரும்பும்படியான ஸ்ரீவைஷ்ணவ விஷயத்தில் ஸ்வஸாம்யபுத்தி பண்ணுவதே அநர்த்த ஹேதுவிறே.

நஞ்சீயர் நம்பிள்ளையைக் குறித்து, 'பகவதநுபவம்பண்ணுமவனுக்கு விஷயாநுபவத்தில் அந்வய மில்லை; இவ்வர்த்தத்தை ஆழ்வார்கள் பலவிடங்களிலும் அருளிச்செய்தார்களிறே: எங்ஙனேயென்னில்:—* வாசுதேவன் வலையுளகப்படுதல்—* மாதரார்கயற்க ணென்னும் வலையுட்படுதல்; * மதுரக்கொழுஞ் சாறுகொண்ட சுந்தரத்தோளிலே யகப்படுதல்—* சாந்தேந்து மென்முலையார் தடந்தோளிலேயகப்படுதல்; * வானவர்க்குவன்றுணை

யான அரங்கத்துறையும் இன்றுணைவனைத் துணையென்றிருத்தல் * ஆவியே யமுதேயென நினைந்துருகி யவரவர் பணைமுலை துணையென்றிருத்தல்; * அப்பொழுதைக் கப்பொழுது என்னுராவமுதத்தைப்பாநம்பண்ணுதல்—*பாவையர்வாயமுதத்தைப் பாநம் பண்ணுதல் * நான்கு வேதப்பயனைப் பேணுதல் - * மாதரார் வனமுலைப்பயனேபேணுதல்; ஒன்றில் இதுவாதல், ஒன்றில் அது வாதலென்று ஏவமாதிகளாலேபஹூமுகமாக அருளிச்செய்தார்களிறே. ஆகையாலே, “அன்னமென்னடையினர் கலவியை யருவருத்தஞ்சினுயேல்” என்றும், “முந்துறவுரைக்கேன்விரைகுழல் மடவார் கலவியைவிடு” என்றும் ஸ்ரீபரகாலரான திருமங்கையாழ்வார் ப்ரதமம் விஷயருசியைக்காரியுமிழ்ந்தே பகவத்ஸமாஸ்ரயணம் பண்ணவேண்டுமென்று நிஷ்கர்ஷித்து அருளிச் செய்தருளுகையாலே, க்ஷுத்ரவிஷயத்தை ஸவாஸநமாகப் பரித்யஜித்தே ப்ராப்த விஷயத்தைப் பற்றவேணும்' என்று அருளிச்செய்தார். பிள்ளையும் க்ருதார்த்தராய் நஞ்சீயரை அரைக்ஷணமும் * பிரியாவடிமை செய்துகொண்டு வாழ்ந்தருளுங் காலத்திலே, நஞ்சீயர் நூருறு திருவாய்மொழிக்கு அர்த்தம் நிர்வஹித்தருளுகையாலே; பிள்ளை, சீயருக்கு ஸதாபிஷேகம் பண்ணியருளினுரென்பது ப்ரஸித்தமிறே.

நஞ்சீயர் ஸ்ரீமாளுய் நூறுதிருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்து அந்திமதசையிலே திருமேனியிலே நோவுசாத்திக் கண்வளர்ந்தருள, சீயர் சிஷ்யரான குட்டிக்குறி யிளையாழ்வார் சீயரைப் பார்த்து 'த்வயத்தை அநுஸந்தித்கா லாகாதோ?' என்ன, நஞ்சீயரான பெரியசீயர் அவரைக்குறித்து 'அது என்?' உமக்குவேண்டாதே எனக்கு இப்போதாகவேண்டுகிறதென்? நடையாடித் திரிவார்க்கு வேண்டாதே கிடைக்கப்பட்டார்க்கு வேண்டியோ த்வய மிருப்பது?, என்ன, அவரும் நிருத்தரராய் லஜ்ஜிதராளுரிறே; இத்தால் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு த்வயம் ஸதாநுஸந்தேயமென்றபடி.

இத்தைக்கேட்டுத் தெற்காழ்வார்பட்டர், சீயர் ஸ்ரீபாதத்திலேசென்று ஸேவித்து 'உமக்குச் செய்யவேண்டுவதென்?' என்று கேட்டருள, சீயரும் 'பெரியபெருமாள் ஸர்வஸ்வதாநம் பண்ண அநுபவிக்கவேண்டியிராநின்றேன்' என்று விண்ணப்பஞ்செய்ய, தெற்காழ்வார் பட்டரும் இத்தைத் திருமாலை தந்த

பெருமாளுக்குஅறிவிக்க, அவரும் இத்தைப்பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்ய, பெருமாளும்புறப்பட்டருளி மடத்துவாசலிலே சென்று சேலையைக் களைந்து சீயரை அநுபவிப்பித்தருள, சீயரும் அநுபவித்து ஹ்ருஷ்டராய்ப் பிள்ளைதொடக்கமான முதலிகளைக்குறித்து 'பெருமாள் எனக்கு ஸர்வஸ்வதாநம் பண்ணியருளினார்; நாம் உங்களுக்கு ஸர்வஸ்வதாநம் பண்ணுவதாக ஒருப்பட்டோம்; அபேக்ஷையுடையார் உடையபடியே அபேக்ஷித்துக்கொள்ளுங்கோள்' என்று அருளிச்செய்ய, பிள்ளையும் 'அடியேனுக்குத் தஞ்சமா யிருப்பதொரு வார்த்தை அருளிச்செய்ய வேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய, சீயரும் 'மணக்கோலத்திலே முள்ளைத்தெளிப்பாரைப்போலே இப்போது தஞ்சமாகக் கேட்பது ஒருவார்த்தையுண்டோ?, என்று பிள்ளைக்கு அருளிச்செய்த வார்த்தை;—'ஆத்மவிநியோகம் ஈஶ்வரனென்றிராதே, ஈஶ்வரவிநியோகம் ஆத்மா என்றிரும்' என்று அருளிச்செய்ய, அதில் பிள்ளை திருவுள்ளம் ப்ரஸந்நமாகாமையாலே பேசாதே நிற்க, சீயரும் 'உம்முடைய நினைவு எது? சொல்லிக்காணீர்' என்ன, பிள்ளையும் 'ஒரு ஸ்ரீவைஷ்ணவர் பரமபதத்திற்கு எழுந்தருளினால் இங்கு இருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் என்ன நினைத்திருக்கக்கடவர்?' என்ன, சீயரும் 'அது அதிகாராநுகுணமாக வன்றோஇருப்பது? த்ருப்தனாகில் ஆர்த்தனாகிறான்; ஆர்த்தனாகில் த்ருப்தனாகிறான்' என்று அருளிச்செய்தருளி, பின்னையும் பிள்ளையைக் குறித்து 'ஜ்ஞாநகார்யத்தில் உமக்குக் கர்த்தவ்யமில்லை; பெருமாளுக்கு உகப்பாக முதலிகளையும் கூட்டிக்கொண்டு தர்ஶநார்த்தம்நிர்வஹித்துப்போம்' என்று அருளிச்செய்து, மற்றும் 'வாரீர்பிள்ளாய்! பட்டர் அடியேனுக்குஹிதோபதேஶஞ்செய்து 'வேதாந்தியென்கிறபேரையுடையோம், நம்பக்கல்ஆஶ்ரயித்தோம், பஹுத்ரவ்யத்தை ஆசார்ய தக்ஷிணையாகக் கொடுத்தோம்' என்று இறுமாந்திராதே எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிரும் என்று அருளிச்செய்தார்; நீரும் அப்படியே 'லோகாசார்யரென்கிறபேரையுடையோம்,அருளிச்செயல்நாலாயிரத்திற்கும் பொருள்சொல்லவல்லோம், ஸ்ரீபாஷ்யத்திற்கும் ப்ரவர்த்தகர்' என்று மேன்மையை நினைந்திராதே 'எம்பெருமானார்திருவடிகளே தஞ்சமென்றிரும்' என்று அருளிச் செய்து, பிள்ளைமுதலானமுதலிகளை க்ஷமைகொண்டு தீர்த்தங்கொண்டு அமுது செய்

தருளப்பண்ணி கோயிலுக்குநேரே பகவத் ஸேநாபதி சீயர்மடி யிலே திருமுடியும், பின்பழகிய பெருமாள் சீயர்மடியிலே திரு வடிகளுமாகக் கண்வளர்ந்தருளிப் பட்டர் திருவடிகளை த்யாநித் துக் கொண்டு திருநாட்டுக்கு எழுந்தருளினர். பிள்ளையும், ஆசா ர்ய விஶ்லேஷத்தை ஸஹிக்கமாட்டாதே மல்குநீர்க் கண்ணொடு மையலுற்று க்லேஶித்தருள முதலிகளும் 'தேவரீர் இங்ஙனே ஶோகிக்கக் கூடுமோ?' என்ன, பிள்ளையும் தம்மிலேதேறிநின்று, பெருமாள் சாத்திக் களைந்து வரவிட்டருளின திருமாலையையும் திருப்பரியட்டங்களையும் கொண்டு கோயிலனைத்துக் கொத்தும் வந்து ஸேவிக்க, யதிஸம்ஸ்காரவிதியால் ப்ரஹ்மமேத விதியடங் கச்செய்து சீயரை அதிஸம்ப்ரமத்துடனே ஸம்ஸ்கரித்துக் கநித் துப் பள்ளிபடுத்தருளி, பின்புண்டான க்ருத்யங்களை யெல்லாஞ் செய்து சீயருக்குச்சீர்மையுடன் திருவத்யயநம்நடத்தியருளினர்.

அந்திமதஶையில் ஈஶ்வரன் தானே விஷயீகரித்தெழுந்தருளி ஸர்வஸ்வதாநம்பண்ணப்பெற்றதன்னேற்றமும், நூறு உரு திரு வாய்மொழிக்கு அர்த்தமருளிச்செய்து நிர்வஹித்தருளி ஶதாபி ஷேகம்பண்ணப்பெற்ற தன்னேற்றமும், ஆசார்யாநுவர்த்தநப்ர திபந்தகங்களான களத்ர புத்ர க்ஷேத்ர மித்ர தநதேஶவாஸங்களை நேராகநிவர்த்தித்து ஆசார்யன் எழுந்தருளியிருந்த தேஶமேபர மப்ராப்ய மென்று எழுந்தருளிவந்து தம்ஸர்வஸ்வத்தையும்அத் தலைக்கே ஶேஷமாக்கித் தத்கைங்கர்யமேயாத்ரையாய் அதுவே ஸத்தாதாரமாகப் பெற்ற தன்னேற்றமும் இவரொருவருக்கே யுள்ளவை யிறே.

நஞ்சீயர்திருநக்ஷத்ரம், பங்குனியில் உத்திரம்.

அவர்தனியன் - "நமோவேதாந்த வேத்யாய ஜகந்மங்கள ஹேதவே யஸ்யவாகம்ருதாஸாரபூரிதம்புவநத்ரயம்" "யத்வசஸ் ஸகலம்ஶாஸ்த்ரம் யத்க்ரியாவைதிகோவிதிஃ-யத்கடாக்ஷாஜகத் ரக்ஷா தம்வந்தே மாதவம்முநிம்."

இதில் பெருமாள் இரங்கின ஸர்வஸ்வதாநம்-மறைவு அறத் திருமேனிகாட்டுகை; நஞ்சீயர்பண்ணினஸர்வஸ்வதாநம்-மறைவு அறச் சரமார்த்த விஶேஷங்களை வெளியிடுகை; ஆத்மவிநியோ கம் ஈஶ்வரனென் றிராமைக்கு அடி, தனக்குபலித்வாபிமாநித்வ மில்லாமை; ஈஶ்வரவிநியோகம் ஆத்மாவென்றிருக்கைக்கு அடி,

பலியுமாய் அபிமாநியுமான ஶேஷிக்கு இஷ்ட விநியோகார்ஹனைகை. ஆர்த்தனுகில் த்ருப்தனைகையாவது-ததீயவிஶ்லேஷத்தில் ஶரீரவிஶ்லேஷம் பிறக்கும்படியான பரமார்த்தி விளையில் இப்போதே ஸம்ஶ்லேஷிக்கவன்றோ போகிறோமென்று த்ருப்தி பிறக்கை; த்ருப்தனுகில் ஆர்த்தனைகையாவது - ததீயரை விஶ்லேஷித்தும் ஶரீரவிஶ்லேஷம் பிறக்கும்படி அதிஶயித்த ஆர்த்தியின்றியே ஸ்வஶரீர விஶ்லேஷத்தளவும் பொறுக்கும்படியான ஆர்த்தி அநுவர்த்திக்க த்ருப்தியுண்டாய், இப்போது உசாத்துணை இழந்தோம் என்னுமளவேயாகை யென்றபடி.

பிள்ளையும், இவ்வர்த்தத்தைக்கேட்டு அநுஷ்டாந பர்யந்தமாகக் கண்டருளினர்; எங்ஙனேயென்னில்:—அம்மங்கியம்மாள் பரமபதத்திற்கு எழுந்தருளும்போது பிள்ளை அவர் திருமாளிகையேற எழுந்தருள, அம்மாள் ப்ரஸந்நையா யிருக்கக் கண்டு, ஸ்ரீபாதத்து முதலிகள் 'இதற்கு அடி என்?' என்று பிள்ளையைக்கேட்க, பிள்ளையும் 'தேவிகள் விஷயத்தில் இதற்கு முன்பு பண்ணின விரோதமுண்டாகிலிறே அவர்பேற்றுக்கு இவர் வெறுப்பது' என்று அருளினர்; தம்முடைய ஸ்ரீபாதத்து முதலிகளில் ஒருவர் திருநாட்டுக்கு எழுந்தருள, தத்பார்யா புத்ராதிகள் வந்து தம் ஸ்ரீபாதத்திலே விழுந்து அழ, இதற்கு அடிஎன்? என்று முதலிகள் கேட்க, 'பிள்ளையும் பெறுகிறதேஶம் கொந்தளிக்கிறபடி கண்டால் இழக்குந்தேஶம்எப்பாடுபடக்கடவதோ? என்று அருளினர்; ஆகையால், ஸத்வஸ்துவை இழந்ததேஶம் கைபெடுத்துக்கூப்பிடச்சொல்லவேண்டாவிறேயென்றுகருத்து.

நம்பிள்ளை வைபவம்.

நஞ்சீயர் பக்கலிலும் நம்பிள்ளைபக்கலிலே ஸர்வார்த்தங்களும் வந்து குடிபுகுருகையாலே பிள்ளையும் தீபா துத்பந்ந ப்ரதீபம்போலே, தர்ஶநம் நிர்வஹிக்கக், கண்டு சீயரும் க்ருதக்ருத்யரா யிருக்கும் காலத்திலே: நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை, பின்பழகிய பெருமாள்சீயர், ஈயுண்ணி மாதவப்பெருமாள் முதலான அநேக ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆஶ்ரயித்து க்ருதார்த்தரா யிருந்தார்கள்.

இவர்களிலே பின்பழகிய பெருமாள் சீயர் ஊணுமுறக்கமுமின்றியே பிள்ளை திருவடிகளிலே * வழுவிலா வடிமைசெய்து

கொண்டு வாழ்ந்தருளுங் காலத்திலே, ஒருகால் திருமேனி பாங் கின்றியே கண்வளர்ந் தருளுகிறபோது, தமக்கு அந்தரங்கரான ஸ்ரீவைஷ்ணவர்களை அழைத்து 'அடியேன் இப்போது திருவடி சாராமல் இங்கே இன்னம் சிறிதுநா ளிருக்கும்படி பெருமாள் ஸந்நிதியிலே சென்று 'ஏழையே தலனும்' 'ஆழியெழச் சங்கும்' விண்ணப்பஞ் செய்து ப்ரபத்திபண்ணி வேண்டிக்கொள்ளுங் கோள்; என்ன, அவர்களும் அப்படியே செய்துநிற்க, சீயருக் குத் திருமேனி பண்டுபோலே பாங்காயிற்று.

இத்தைக்: கேட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள், நம்பிள்ளை ஸந்நிதி யிலே சென்று தண்டன் சமர்ப்பித்து, 'ஜ்ஞாந வ்ருத்தருமாய் வ்யோவ்ருத்தருமாயிருக்கும் பின்பழகிய பெருமாள் சீயர் இப் படிசெய்தார்; இது இவர் ஸ்வரூபத்துக்குச் சேருமோ?, என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும் 'அவருடைய அபிப்ராயமறிகி லோம்; ஸகலஶாஸ்த்ரங்களும் போருவது பிள்ளை யெங்களாழ் வானுக் காய்த்து; அவர்பக்கல் சென்று கேளுங்கோள்' என்ன, ஸ்ரீவைஷ்ணவர்களும் எங்களாழ்வானைக்கேட்க, அவரும் ஸ்ரீரங் கைஶ்வர்யத்தில் ஸங்கம்போலே காணும்'என்ன பிள்ளையும் இத் தைக்கேட்டு 'அழகிது! திருநாராயண புரத்தரையரைச் சென்று கேளுங்கோள்' என்ன, அவர்களும் அவரைக் கிட்டிக்கேட்ட விடத்தில், அவரும் 'இங்குத் துவக்கின கைங்கர்யம் தலைக்கட் டாமையாலே காணும்' என்ன, பிள்ளை இத்தையுங்கேட்டு 'ஆகி றது: அம்மங்கியம்மாளைக் கேளுங்கோள்' என்ன, அவர்களும் அங்ஙனே செய்ய 'பிள்ளைகோஷ்டியி லிருந்து பகவத் விஷயங் கேட்கிலவர்களுக்கும் ஒருதேஶவிஶேஷம் ருசிக்குமோ?'என்ன, இத்தையும் பிள்ளைகேட்டு 'நல்லது!' என்று விட்டு 'அம்மங்கிப் பெரிய முதலியாரைக்கேளுங்கோள்' என்ன, அவர்களும் அவ் விதமே கேட்டருள 'நம்பெருமாள் சிவந்த திருமுகமண்டலமும் கஸ்தூரித் திருநாமமும் பரமபதத்திலே கண்டிலேனாகில் ஒருமூலையடியே முறித்துக்கொண்டு மீண்டு வருவே னென்றன் றோ பட்டர் அருளிச்செய்தது; அப்படியே இவரும் நம்பெரு மாள் சிவந்த திருமுக மண்டலத்தையும் திருநுதலில் கஸ்தூரித் திருநாமத்தையும் விட்டுப் போகமாட்டா ராகவேணும்' என் றார்: பிள்ளை, இவற்றையெல்லாம் திருவுள்ளம்பற்றியருளி, சீயர் திருமுகமண்டலத்தைப் பார்த்துச் சிரித்து 'இவை உம்முடைய

நினைவுக்கு ஒக்குமோ?' என்ன, 'இவை இத்தனையுமன்று' என்று விண்ணப்பஞ்செய்ய, 'ஆகில், உம்முடைய அபிப்ராயத்தை நாம் அறிந்தோம்' என்று பிள்ளை அருளிச்செய்ய, சீயர், தேவரீர் ஸர்வஜ்ஞ ராகையாலே, அறிந்தருளாத தில்லை; அடியேனைக் கொண்டு வெளியிடத் திருவுள்ளமாகில் விண்ணப்பஞ் செய்கிறேன்: திருமஞ்சனசாலைக்கு எழுந்தருளித் தேவரீர் திருமஞ்சந முறைகளிலே திருமஞ்சனங் கொண்டருளித் 'தூயவுடையாடை திருவுத்தரீயஞ் சாத்தியருளி உலாவி யருளும்போது குறுவேர்ப்புடன் கூடின திருமுகமண்டலச் செவ்வியையும், அடியேன் சுற்றிச்சுழற்றிப் பரிமாறுகிற கைங்கர்யத்தையும்விட்டு அடியேனுக்குப் பரமபதத்துக்குப்போக இச்சையாயிருப்பதில்லை; பெருமுகோல்லாசமும் இன்னும் சிறிதுகாலம் இங்கேயிருந்து பெற வேணுமென்று நினைத்துச் செய்தேன்' என்று விண்ணப்பஞ் செய்தார். இத்தைக்கேட்டருளிப் பிள்ளையும் முதலிகளும் 'இவ்வுடம்போடே இவ்வைஶ்வர்யம் கூடுவதே!' என்று மிகவுந் திருவுள்ள முகந்தருளினார்கள்.

ஒருநாள் நம்பிள்ளை பகவத்விஷயம் அருளிச் செய்து கோஷ்டி கலைந்தவளவிலே, பின்பழகிய பெருமாள்சீயர், பிள்ளை திருவடிகளிலே தண்டன் ஸமர்ப்பித்து 'இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபோபாய புருஷார்த்தங்க ளிவையென்று அருளிச்செய்ய வேணும் என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும் 'இச்சை ஸ்வரூபம்; இரக்கமே உபாயம்; இனிமை உபேயம்; என்று அருளிச்செய்ய, 'அப்படியன்று அடியேன் நினைத்திருப்பது' என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும் 'ஆகில் உமக்கென்று சில பிள்ளைக் கிணறுக ளுண்டோ? நீர் எங்ஙனே நினைத்திருப்பது? அதனைச் சொல்லிக்காணீர்' என்ன, தேவரீர் திருவடிகளே தஞ்சமென்று நினைத்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமையாயிருக்கையே அடியேனுக்கு ஸ்வரூபம்; அவர்களுடைய அபிமாநமே அடியேனுக்குஉபாயம்; அவர்களுடையமுகமலர்த்தியே அடியேனுக்கு உபேயமென்று நினைத்திருப்பன்' என்று விண்ணப்பஞ்செய்ய, சீயரையும் பிள்ளை போரப் ப்ரியப்பட்டருளினார்.

ஒருகால்பிள்ளை பகவத்விஷயமருளிச்செய்து கோஷ்டிகள் கலைந்துபோகா நிற்கச்செய்தே, ஸ்ரீவைஷ்ணவனாயிருப்பானொரு ராஜா வருகிறபெருந்திரளைக்கண்டு 'நம்பெருமாள் திருவோலக்கம்

கலந்ததோ? நம்பிள்ளை கோஷ்டி கலந்ததோ?' என்று கேட்டா னென்பர்கள். இப்படி மஹாஸம்ருத்தமான ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயோ டே நம்பிள்ளை வாழ்ந்தருளுங் காலத்திலே, முதலியாண்டான் திருப்பேரனாய், கந்தாடையாண்டான் குமாரரான கந்தாடைத் தோழப்பர், நம்பிள்ளையுடைய பெருமதிப்பையும் வைபவத்தை யுங்கண்டு அஸூயையுடையவராய்ப் பொறுக்கமாட்டாமலிருக் குமவர், ஒருநாள் பெருமாள் ஸந்நிதியிலே பெருமாளை ஸேவித் துக்கொண் டிருக்கிறவளவிலே, பிள்ளையும் முதலிகளும் பெருந் திரளாகப் பெருமாளை ஸேவிக்கவென்று கோயிலுக்குள்ளே யெழுந்தருள தோழப்பர் பிள்ளையுடைய பெருமையைக்கண்டு பொறுக்கமாட்டாமற் சீறிப் பகவத் ஸந்நிதியிலே நம்பிள்ளை யைப் பஹுவாக பருஷோக்திகளைச் சொல்லி அநேகமாக நிந் திக்க, பிள்ளையும் அத்தைக்கேட்டு நடுங்கிக்கொண்டு பெருமாளை ஸேவித்துப் புறப்பட்டெழுந்தருள, இச்செய்தியை ஜ்ஞாநாதி கையா யிருக்கிற தோழப்பர் தேவிகள் கேட்டுப் பெருக்க வ்யா கூலப்பட்டுத் திருமாளிகைக்குள் செய்கிற கைங்கர்யங்களையும் செய்யாமல் விட்டு வெறுத்து எழுந்தருளியிருக்க அவ்வளவிலே தோழப்பரும் பெருமாளை ஸேவித்து மீண்டு தம் திருமாளிகை யிலே எழுந்தருள தேவிகளும் முன்புபோலே எதிரேபுறப்பட்டு வந்து ப்ரீதியுடனே தமக்கு ஒருகைங்கர்யமும் பண்ணுமையா லே, தோழப்பர் தம்தேவியாரைப் பார்த்து 'உன்னை நாம் அங் கீகரித்த அன்றுதொடங்கி இன்றளவாக நம்மைக்கண்டால் ஆசார்ய ப்ரதிபத்தி பண்ணிக்கொண்டு போந்தாய்; இன்றுஉதா ஸீநம்பண்ணி யிருந்தாய் இதற்கு அடி என்?' என்று கேட்ட ருள, தேவிகளும், தோழப்பரைக் குறித்து 'வாரீர்! ஆழ்வார்தம் முடைய திருவவதாரமென்னலாம்படி ஒருஅவதார விசேஷமா ய்ப் பெருமாளுக்கு ப்ராணபூதருமாயிருந்துள்ள நம்பிள்ளையைப் பெருமாள் ஸந்நிதியிலே கூசாமல் அநேகமாகப் பருஷோக்தி களைப் பண்ணித் தூஷித்து இப்படி செய்தோமே!' என்கிற அநு தாபமுமற்று உஜ்ஜீவிக்கிற உம்மோடு எனக்கு என்ன ஸம்பந்த முண்டு? நீர்என்னை வெறுத்தீராகில், என்னுடைய மாதா பிதாக் கள் பெற்று வளர்த்து உம்முடைய கையிலே காட்டித்தந்த இந்த ஸரீரத்தை உமக்கு வேண்டினபடி செய்து கொள்ளும்; எங்களாசார்யர் என் ஆத்மாவை அடியிலே அங்கீகரித்தருளின

அன்றே நான் உஜ்ஜீவித்தேன் ஆனபின்பு "பத்மகோடி ஸதே நாபி நக்ஷமாமிகதாசந" என்று பாகவதநிந்தனை பண்ணினவர்களை ஒருகாலும் க்ஷமிப்பதில்லையென்று பெருமாள் தாமே அருளிச்செய்த திருமுகப்பாசுர மறிந்தும் அறியாதவர்போலே யிருக்கிற உம்மோடு எனக்கு ஸஹவாஸங்கூடாது; ஆகையாலே, நிலம்பிளந்தால் இழையிட வொண்ணாதாப்போலவும்,கடலுடைந்தால் கட்டொண்ணாதாப் போலவும், மலைமுறிந்தால் தாங்கவொண்ணாதாப்போலவும் அநுதாபம்பிறவாத பாகவதாபசாரம் தீர்த்துக்கொள்ளக் கூடாதிறே; ஆனபின்பு நான் என்னிஷ்டத்திலே யிருந்து ஈடேறிப் போகிறேன்' என்ன, தோழப்பரும் தேவிகள் சொன்ன வார்த்தைகளைக்கேட்டுச் சிறிது போது திகைத்து எழுந்தருளியிருந்து, பெரிய வித்வானுகையாலும் திருவம்ஸ ப்ரபாவத்தாலும் அஸூயையால் விளைந்த திருவுள்ளத்தின் கலக்கந்தீர்ந்து தெளிந்துவந்து தேவிகளைப்பார்த்து 'நீசொன்னதெல்லாம் ஒக்கும்; நாம் தப்புசெய்தோம்;இனிமேல் செய்ய அடுக்குமதெது?'என்ன, தேவிகளும் ஆற்றிலே கெடுத்துக் குளத்திலே தேடாதே, கெடுத்தவிடத்தே தேடிக்கொள்வீர்" என்ன, தோழப்பரும் 'ஆவதென்?' என்ன தேவிகளும் 'பரமதயாளுவான நம்பிள்ளை திருவடிகளிலேசென்று ஸேவித்து அபராதக்ஷாபணம் பண்ணிக்கொண்டு அவர் க்ருபை பண்ணியருள ஈடேறீர்' என்ன, தோழப்பரும் 'அவரைப் பெருமாளுடைய பெருந் திருவோலக்கத்திலே பரிபவித்து, இப்போது அவர் ஸந்நிதியிலேபோய் நிற்கவென்றால் எனக்கு லஜ்ஜாபயங்கள் அநுவர்த்தியா நின்றது; நீ கூடவந்து க்ஷமிப்பிக்க வேணும் என்ன, தேவிகளும் தோழப்பர் சொல்லும் வார்த்தையைக்கேட்டு 'அப்படியே செய்கிறேன்' என்று கடுகவெழுந்திருந்து அவரையுங் கூட்டிக்கொண்டு நம்பிள்ளை திருமாளிகைக்கு எழுந்தருளுவதாகப் புறப்பட்ட வளவிலே,

நம்பிள்ளை செய்தபடி:—கோயிலுக்கு எழுந்தருளின பின்பு முதலிகளெல்லாரையும் அனுப்பியருளி, பகலெல்லாம் அமுது செய்தருளாமல் தம் திருமாளிகைக்குள்ளே யெழுந்தருளி யிருந்து ஸாயங்காலமானவாறே ஆவஸ்ய கருமத்தைச் செய்தருளி ஒற்றைத் திருப்பரியட்டத்துடனே முட்டாக் கிட்டுக்கொண்டு தாம் ஒருவருமே எழுந்தருளிக் கந்தாடைத்தோழப்பர் திரு

மாளிகைவாசலிலே கைப்புடையிலே வந்து கண்வளர்ந்தருள, தோழப்பரும் தேவிகளுமாக திருவிளக்கை யேற்றிக்கொண்டு திருவிளக்கொளியாலே கைப்புடையிலே ஒருவெள்ளை கிடக்கிறதைக்கண்டு, தோழப்பர், 'இங்குஆர்கிடக்கிறார்?' என்றுகேட்க, பிள்ளையும், அடியேன் திருக்கலிகன்றிதாஸன்' என்ன அவ்வளவிலே, தோழப்பர் இஃதென்!' என்றுதிகைத்து, பிள்ளையைப் பார்த்து 'நாம்மஹாதேஜஸ்வீ; நம்மை நம்பெருமாள் திருவோலக்கத்திலே பரிபவிக்கலாவதென் என்கிற கோபாதிஶயத்தாலே நம்முடைய வாசலிலே வந்து மௌர்க்யம் செய்வதாகக் கிடக்கிறீரோ?' என்ன, நம்பிள்ளையும் தோழப்பரைக்குறித்து 'அடியேன் அப்படிசெய்யவரவில்லை' என்ன, 'ஆகில் இங்கு வந்து கிடப்பானென்?' என்று தோழப்பர்கேட்க, பிள்ளை அருளிச்செய்தபடி—'பெரியபெருமாள் ஸந்நிதியிலே முதலியாண்டான் திருப்பேரனாரான தேவரீர் திருவுள்ளங் கலங்கும்படி வர்த்தித்த மஹாபாவியான அடியேனுக்குத் தேவரீர் திருமாளிகைவாசலல்லது புகுவாசல் மாண்டு வந்து கிடக்கிறேன்' என்ன.

இவரை அநுவர்த்திப்பதாகப் புறப்பட்டுவந்து நிற்கிற தோழப்பர் பிள்ளை கண்வளர்ந்தருளுகிற நைச்யத்தைக் கண்டு, அவருடைய நைச்ய வார்த்தைகளையும்கேட்டு 'இஃதொரு அதிகார மிருந்தபடியென்!' என்று போரவித்தராய்ப் பிள்ளையை வாரியெடுத்து அணைத்துக்கொண்டு 'இத்தனைநாளும் சிறிதுபேருக்கு ஆசார்ய ரென்றிருந்தேன்; இப்போது லோகத்துக் கெல்லாம் நீரே ஆசார்யராகைக்கு ப்ராப்தரென்று அறிந்தேன்' என்று தோழப்பர் உகந்து 'லோகாசார்யர்'என்று பிள்ளைக்குத் திருநாமஞ் சாற்றியருளித் தம்முடைய திருமாளிகையிற்கொண்டு புக்குத் தாமும் தேவிகளுமாகப் பிள்ளையை அநேகமாக அநுவர்த்தித்து அவர்திருவுள்ளத்தை மிகவும் உகப்பித்து, தமக்குவேண்டும் அர்த்த விஶேஷங்களெல்லாங் கேட்டுக்கொண்டு பிள்ளை திருவடிகளிலே ப்ரவணராய் க்ருதார்த்தரானார்கள்.

நம்பிள்ளையும், ஸ்ரீபாதத்து முதலிகளும் திருவெள்ளறை நாச்சியாரை ஸேவித்து மீண்டு கோயிலுக்கு எழுந்தருளாநிற்கச் செய்தே, திருக்காவேரி இருகரையும் ஒத்து அதிகம்பீரமாய் நாநாவர்த்தன் ஷாகுலமாய்த்*தடவரை யதிரத்தரணி விண்டிடியத் தலைப்பற்றிக் கரை மரஞ்சாடிக் கடலிணைக் கலங்கக் கடுத்

திழிகங்கைபோலே புங்காநு புங்கமாக ப்ரவஹியா நிற்க, ஓடம் கிடையாதபடியாலே ஒருதாழியிலே எழுந்தருள, நட்டாற்றிலே சென்றவாறே, போதும் அஸ்தமித்து மழையு மிருட்டுமாய் அக்கரை இக்கரை முன்னடி தெரியாமே திக்விப்ரமம் பிறந்து தாழி அமிழத்தேட, இந்த அவஸ்தையில் 'நாலிரண்டுபேர் தாழியை விட்டால் கரையிலே யேறலாம்; ஒருவரும் விடாதிருக்கில், நம்பிள்ளைமுதலாக எல்லாரும்அமிழ்ந்து தட்டுப்பட்டுப்போவோம், என்று தாழிக்காரன் கூப்பிட அவ்வளவிலும் நட்டாறுகையாலும், பயாதிஶயத்தாலும் ஒருவரும் அதற்கு இசைந்து விட்டார்களில்லை; அவ்வளவிலே ஒரு ஸாத்விகையான அம்மையார் தாழிவிடுகிறவனைப் பார்த்து 'நூறுபிராயம் புகுவாய் * உலகங்கட்கெல்லாம் ஒருயிரான நம்பிள்ளையைப்பேணிக்கொண்டு கரையிலே விடு என்று அவனை ஆஶீர்வதித்து அந்தகாரத்தையும் பாராமல் ஆற்றிலேவிழுந்தாள்; அவ்வளவுகொண்டு தாழிகரையிலே போக, பிள்ளையும் அக்கரையேறி ஓர் ஆத்மா தட்டுப்பட்டுப் போச்சுதே!' என்று பலகாலும் அருளிச்செய்து வ்யாகுலசித்தரா யிருக்கிற வளவிலே, அப்போது அம்மையார் நாலடி விட்டுப் போனவளவிலே ஒருதிடர் ஸந்திக்க அதிலேதரித்துநின்று இராக்காலமாகையாலும் கரை ஆஸந்நமாகையாலும் ஸ்வாசார்யரான நம்பிள்ளை வ்யாகூலப்பட்டு அருளிச் செய்கிற வார்த்தையைக் கேட்டு ஸ்வாமீ! தேவரீர் வ்யாகுலப்பட்டருளவேண்டா; அடியேன் இங்கே இருக்கின்றேன்' என்று குரல்காட்ட, பிள்ளையும் 'திடர்கள் மரங்கள் ஸந்தித்ததாகக்கூடும்' என்று திருவுள்ளம்பற்றித் தாழிக்காரனையிட்டு அவளையும் அக்கரையிலே அழைப்பித்துக்கொள்ள அவளும் வந்து பிள்ளை திருவடிகளிலே ஸேவித்து, ஆசார்யனையல்லது ரக்ஷகாந்தரம் அறியாதவளாகையாலே 'அடியாள் ஆற்றிலே ஒழுகிப்போகிறபோதும் தேவரீர் அங்கே ஒரு கோரைமேடாய் வந்து ரக்ஷித்தருளினதில்லையோ!' என்று கேட்க பிள்ளையும் 'உம்முடைய விஶ்வாஸ மிதுவானபின்பு அதுவும் அப்படியாகாதோ?' என்று அருளினர்; இத்தால், ஸ்வஶரீர அர்த்த ப்ராணன்களை அழியமாறியாகிலும் ஆசார்யனைப் பேணவேணுமென்னும் நிஷ்டை யுண்டாகவே, ஈஶ்வரன் அவரைப்பேணி ரக்ஷிக்குமென்னுமது சொல்ல வேண்டாவிறே.

அநந்தரம் பிள்ளையும் முதலிகளுமாகக் கோயிலிலே எழுந்தருளியிருந்து தர்ஶநம் நிர்வஹித்துக்கொண்டு வாழ்ந்தருளுகிற காலத்திலே, நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித்திருப்பாளொரு அம்மையாருக்குத் திருமாளிகைக்கு அருகே ஒருகோல் துறைநிவேஶநமுண்டாய் அதிலே குடியாயிருக்கும் அவளுக்கு ஸப்ரஹ்மசாரியாயிருப்பாரொரு ஸ்ரீவைஷ்ணவர் 'பிள்ளை திருமாளிகை நெருக்கமாயிருக்கிறது; இந்த ஒருகோல் துறையை ஆசார்யருக்கு ஸமர்ப்பியும்' என்று அம்மையாருக்குப் பலகாலும் அருளிச்செய்ய, அவளும் கோயிலிலே ஒருகோல்துறை யாவர்க்குக் கிடைக்கும்? நான் திருவடி சாருந்தனையும் கொடேன்' என்ன, ஸ்ரீவைஷ்ணவரும் இந்தவிஶேஷத்தைப் பிள்ளைக்கு விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையும் அம்மையாரை அழைத்தருளி 'உனக்கு ஒருஶரீரத்திற்குச் சற்றிடமன்றோ வேண்டுவது? முதலிகள் எழுந்தருளியிருக்க நெருக்கமாயிருக்கிறது; உன் ஒருகோல் துறையையும் நமக்குத் தரவேணும்' என்ன, அம்மையாரும் 'அப்படியே செய்கிறேன்; தேவரீர் பரமபதத்திலே அடியேனுக்கு ஒருகோல்துறை தந்தருளவேணும்', என்ன, அதற்கு ஸ்ரீவைகுண்டநாதனன்றோ கடவன்! அவனுக்கு விண்ணப்பஞ்செய்துகொண்டு தருகிறோம்' என்று அருளிச்செய்ய, அவளும் அடியேன் ஸாது அன்றியும் பெண்பிள்ளை தருகிறோமென்ற வார்த்தையால் போதாது எழுதி எழுத்திட்டுத் தரவேண்டும்' என்ன, பிள்ளையும் இப்படியுங் கேட்பதே!' என்று திருவுள்ளம் உகந்து இன்னவருஷம் இன்னமாஸம் இத்தனையாந்தேதி இந்த அம்மையாருக்குத் திருக்கலிகன்றி தாஸன் பரமபதத்திலே ஒருகோல்துறை எழுதிக்கொடுத்தேன்; அகிலலோகஸ்வாமியும் அஸ்மத் ஸ்வாமியுமான ஸ்ரீவைகுண்டநாதன் க்ரயஞ்செலுத்திக் கொடுத்தருளவேணும்' என்று ஶாஸநமெழுதித் தம்முடைய திருவெழுத்துச்சாத்திக் கொடுத்தருளினார். அம்மையாரும் திருமுகத்தைச் சிரஸாவஹித்து ப்ரீதியுடனே வாங்கிக்கொண்டு தீர்த்தப்ரஸாதங்களும் ஸ்வீகரித்து, அன்றும் மற்றைநாளும் பிள்ளையை 'ஸேவித்துக்கொண்டிருந்து மூன்றாம்நாள் பரமபதஞ்சென்றாள்; இத்தால் 'ஆசார்யன் இரங்கி ப்ரஸாதித்த தொன்றையே தஞ்சமென்று இருக்கவேணும், உபய விபூதியும் ஆசார்யனிட்ட வழக்காயிருக்கும்' என்று தோன்றா நின்றதிறே;

மஹாபாஷ்யபட்டர், பிள்ளையை 'சைதந்யவஸ்துவாயிருக்கிற ஆத்மாவுக்கு ஶரீரவிஶ்லேஷம் பிறந்தால் பரமபதம் சித்தமென்று அறுதியிட்டிருக்கலாவது எவ்வர்த்தத்தாலே?' என்று கேட்க, 'ஸ்ரீய:பதியை உபாயோ பேயமென்று அறுதியிட்டிருப்பது, நெடுங்காலம் இழந்துகிடந்த வஸ்துவைக் காட்டித்தந்த ஆசார்யன் பக்கலிலே கநக்க விஶ்வாஸமுண்டாயிருப்பது, அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யத்தின்படியே எம்பெருமானார் தர்ஶநமே சித்தாந்தமென்றிருப்பது, ஸ்ரீராமாயணத்தாலே பகவத்குணாநுஸந்தானம்பண்ணுவது, ஆழ்வார்களருளிச் செயல்களாலே போது போக்குவது, ஶரீரவிஶ்லேஷம் பிறந்தால் சந்தேகிக்க வேண்டா; *மீட்சியின்றி வைகுந்தமாநகர் மற்றது கையதுவே' என்று அருளினார்; ஆகையாலே உபாயோபேய நிர்ணயமும், ஆசார்ய விஶ்வாஸமும், தர்ஶநவிஶ்வாசமும், பகவத்கல்யாண குணாநுபவபாரவஶ்யமும் உண்டாகவே ப்ராப்யசித்தி யுண்டாமென்று உத்தர மருளிச்செய்தாராய்த்து.

நம்பிள்ளை ஸ்ரீபாதத்திலே பாண்டிய நாட்டினின்றும் சில ஸ்ரீவைஷ்ணவர்கள் வந்து கண்டு 'எங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொரு வார்த்தை அருளிச்செய்யவேணும்' என்று விண்ணப்பஞ்செய்ய பிள்ளையும்'கடற்கரை வெளியை நினைத்திருங்கோள்' என்று அருளினார். அவர்களும் 'மணற்குன்றையும், நாவல் காட்டையும் நினைத்திருக்கவோ?' என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும் * புன்முறுவல்செய்து அருளிச்செய்தபடி:—'சக்ரவர்த்தித் திருமகன் கடற்கரையிலே விட்டிருக்கச்செய்தே ஸ்ரீவாநர வீரர்கள் ராகவார்த்தே பராக்ராந்தராய்த் தங்களை யுபேக்ஷித்துப் பெருமாளையே நோக்கிக்கொண்டு கிடக்க, இவர்கள் கண்ணுறங்குந்தனையும் தான் உறங்கி, இவர்கள் கண்ணுறங்கினவாறே அம்பராத்தூணியை முதுகிலே கட்டித் திருக்கையிலே பிடித்த ஶார்ங்கமும் திருச்சரமுமாய் இராமுற்றும் நோக்கின சக்ரவர்த்தித் திருமகனுடைய திருவடிகளே தஞ்சமென்றிருங்கோள்' என்றருளினார்; ஆகையாலே, ஸ்வரக்ஷண சிந்தையற்று நியதனாகவே ஸர்வரக்ஷகன் கைக்கொண்டு ரக்ஷிக்குமென்றபடி.

பிள்ளையை ஒருவன் 'எம்பெருமானை யொழிந்த தேவதாந்தரங்களை பஜிக்கலாகாதென்கிற நீங்கள் நித்ய நைமித்திகாதிகளிலே அக்நீந்த்ராதி தேவதைகளைப் பஜிப்பானென்?, ஆலயங்க

ளைப் பஜியாதொழிவானென்?' என்ன, பிள்ளையும் 'வாராய்! அக்நிஹோத்ராக்நியை உபாஸித்தும் ஶ்மஶாநாக்நியை நிவர்த்தித்தும் போருகிறாப்போலே, இரண்டுக்கும் வாசி; எங்ஙனே யென்னில்:—நித்யாதிகளில் பகவத்ப்ரகார புத்யா பண்ணுகிற உபாஸநம் பகவதுபாஸநமேயாக விஶேஷ ஶாஸ்த்ரம் விதிக்கையாலும்,ஆலயப்ரதிஷ்டைகளில் பராவரதத்வவ்யத்யயம் பண்ணியிருக்கும் தாமஸபுருஷர்களாலே விருத்தாகம மந்த்ர தந்த்ர ப்ரக்ரியையாலே ஸ்வதந்த்ரபுத்யா தேவதாந்தரங்கள் க்ருதப்ரதிஷ்டா காரங்களாகையாலும், இவ்விடத்திற்குப் பகவத்ப்ரகார புத்யா உபாஸிக்க விதியில்லாமையாலும்; அதுவுமன்றியே, தேவதாந்தர வர்க்கந்தன்னில் தூரதோவர்ஜநீயத்வம் ருத்ரனுக்கு மிகவும் உண்டிறே. எங்ஙனேயென்னில்:—ஸத்வகுணாத்யந்த விரோதியான தமோகுணப்ரசுரனாகையாலே, நித்தியாதிகளைப்போலே ஆலயங்களிலும் பகவத்ப்ரகாரபுத்யாஉபாஸிக்கலாகாது. த்யாஜ்யதயா ஜ்ஞாதவ்யங்களான பகவத்வ்யதிரிக்த விஷயங்கள் ஸ்வீகாரத்திற்கு உடலாகவும், உபாதேயதயா ஜ்ஞாதவ்யமான பகவத்விஷயம் த்யாகத்திற்கு உடலாகவும் கடவதோ? என்று அருளிச்செய்தார்; ஆகையாலே, வேதாந்த விஹித பகவத் ப்ரகாரபூத ஆலயஸ்த அந்யதேவதா பஜநமும் அநர்த்தகர மென்றபடி.

நம்பிள்ளையை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வந்து சேவித்து 'தேவர் திருமேனி அற இளைத்தது'என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும் 'ஒன்று தேய்தல், ஒன்று வளருதலன்றோ?' என்று அருளினார்; இத்தால், ஜ்ஞாநபக்திவைராக்யங்கள் வளர * நினைந்து நைந்து உள்கரைந்துருகி ஶரீரம் தேயு மென்றபடி.

பிள்ளையை ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வந்து கண்டு 'ஆரோக்ய மொன்று மில்லையோ?' என்று கேட்க, பிள்ளையும் 'யுத்தம் பண்ணப்போகிறோமோ? பெருமாளை ஸேவித்திருக்கைக்கு வேண்டும் ஆரோக்யமுண்டு; ஒருகுறையுமில்லை' என்று அருளினார்; ஆகையாலே, ஸ்ரீவைஷ்ணவனுக்கு ஆரோக்கியாபேக்ஷை வேண்டாமென்றபடி.

நம்பிள்ளை திருமேனி நோவுசாத்தி யிருந்ததைக்கேட்டு,ஒரு ஸ்ரீவைஷ்ணவர்சென்று ஸ்ரீபாதத்திலே ஸேவித்து நோயைக் கண்டு வெறுக்க, பிள்ளையும் அவரைக்குறித்து 'இந்தஶரீரத்தில்

வந்த வ்யாதியை நல்விருந்து வந்ததாகவன்றோ நான் நினைத்திருப்பது' என்று அருளினார்; இத்தால், "க்ருதக்ருத்யா꞉ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும்ப்ரிய மிவாதிதிம்" என்கிற இதுவிறே திருவுள்ளக்கருத்து.

நம்பிள்ளை திருமேனியிலே நோவுசாத்தி யெழுந்தருளியிருக்கச்செய்தே, பிள்ளையெங்களாழ்வாரும் அம்மங்கியம்மாளும் அறிவதாக எழுந்தருளி, எங்களாழ்வான் நியமனத்தாலே அம்மங்கியம்மாள் பிள்ளைபக்கல் பரிவாலே ஒரு யந்த்ரத்தைத் திருக்கையிலேயிட்டுத் தொடப்புக, பிள்ளை திருமேனியை இழுத்தருள, அவர்களும் விஷண்ணராய் 'உம்முடைய விஷயமாக நீர் ப்ரவர்த்திக்கிலன்றோ ஸ்வரூபஹானி? உம்முடைய விஷயமாக நாங்கள் ப்ரவர்த்தித்தால் உமக்கு ஸ்வரூபஹானி யில்லைகாணும்' என்று சில வசநங்களைச்சொல்ல, பிள்ளையும் 'எனக்கும் நோய் போம்! சில வசனங்களையன்றோ நீங்கள் விஸ்வசித்திருக்கிறது? நானும் ஒருவசனத்தைத் தஞ்சமென்றிருப்பன் காணுங்கோள்' என்ன, அவர்களும் அதுவென்? சொல்லிக்காணீர்' என்ன, பிள்ளையும் 'சீயர் தம் சரமதசையிலே த்வயமொழிந்த மந்த்ரங்களோடு சிவபஞ்சாக்ஷரம் முதலான க்ஷுத்ரமந்த்ரங்களோடு ஒருவாசியில்லை யென்றருளினார்' என்ன, அவர்களும் 'பிள்ளை! திருமந்த்ரம் செய்வதென்? என்ன, பிள்ளையும் 'அதுதான் செய்வதென்? விவரண விவரணிபாவேந த்வயாந்தர்கதம்' என்ன, அவர்களும் 'ஆகில் த்வயத்தைக்கொண்டு செய்யக் குறை என்?' என்ன, இவரும் 'விடாய்த்தவன் * விலவறத் தண்ணீர் குடிக்குமாபோலே யிருப்பதொன்றிறேயிது; ஆகையாலே, ஸ்வவ்யாதிஶாந்த்யர்த்தமான ப்ரபதனமும் ஸ்வரூபஹாநி, பரவிஷயவ்யாதிஶாந்த்யர்த்த ப்ரபதநமும் ஸ்வரூபஹாநி; எங்ஙனே யென்னில்:—ஸ்வவிஷயமாக ப்ரவர்த்திக்கில் ஸ்வஸ்வரூபபாரதந்த்ர்ய தூஷணமாமித்தனை; பரவிஷயமாக ப்ரவர்த்திக்கில் பரஜ்ஞாநபரஶக்திகளுக்குத் தூஷணமாம்' என்றுஅருளினார். ஆகையால், தொடும்போதேகுழையும் பூப்போலே மந்த்ராந்தர ஸ்பர்ஶம் பொறாததத்வயைக நிஷ்டாதிஶயமும், த்வயத்தை மற்றொன்றுக்கும் ஸாதநமாக்கிப் பிசக்கி முசிக்கப்பெறாமையும், ஸ்வபர விஷயவ்யாதி ஶாந்த்யர்த்தப்ரபதநதோஷ விஶேஷமும் சொல்லப்பட்டனவிறே.

அநந்தரம் பிள்ளைக்குத் திருமேனிவாட்டந் தீர்ந்து பண்டு போலே ஆரோக்யமுண்டாய் ஸ்ரீபாதத்து முதலிகளுக்குத் தர்ஶநதாத்பர்யங்களை ப்ரஸாதித்துக்கொண்டு ஸுகமே எழுந்தருளியிருக்கும் நாளிலே, கூரத்தாழ்வானுடைய திருப்பேரனுரான நடுவில் திருவீதிப்பிள்ளைபட்டர், நம்பிள்ளையுடைய ஜ்ஞாந பக்தி வைராக்கியங்களையும், பாகவதஸம்ருத்தியையும், லோக பரிக்ரஹத்தையும் சிஷ்யஸம்பத்தையும் கண்டு பொறுக்கமாட்டாமல் கடிகடியென்றுகொண்டு போருவாராயிருப்பர். அக்காலத்தில் அந்தப்பட்டர் ராஜஸ்தானத்திற்கு எழுந்தருளாநிற்க, வழியிலே பின்பழகிய பெருமாள் சீயரைக்கண்டு 'சீயரே! நாம் ராஜகோஷ்டிக்குப் போகிறோம் கூடவாரும்' என்று அழைக்க, இவரும் 'நீர்நம் பரமாசார்ய வம்ஶ்யரன்றோ?' என்று பட்டருடனே ராஜஸ்தாநத்தேற எழுந்தருள, ராஜாவும் பட்டரை எதிர்கொண்டு பஹுமாநம்பண்ணி ஆஸனத்திலே எழுந்தருளுவித்து ஸேவித்துக்கொண்டு பெரிய திருவோலக்கமாகவிருந்து, தான் பஹுஶ்ருதனுகையாலும் வ்யுத்பந்நனுகையாலும் பட்டருடைய வைதுஷ்ய ஶோதநார்த்தமாக 'பட்டரே! "ஆத்மாநம் மாநுஷம்மந்யே ராமந்தஶரதாத்மஜம்" என்று பரத்வந்தோன்றாமல் வர்த்திக்கிற பெருமாள் ஜடாயுவைக்குறித்து "ஹ்ச்சலோகாநநுத்தமாந்" என்று மோக்ஷங்கொடுத்தபடி எங்ஙனே?' என்றுகேட்க, பட்டரும் அதற்கு உத்தரமருளிச்செய்யச் சிறிது விசாரிக்க வேண்டியிருக்க, அவ்வளவிலே ராஜாவுக்கு வேறே பராக்காக, பட்டரும் சீயரைப்பார்த்து 'சீயரே! பிள்ளை பெரியவுடையாருக்குப் பெருமாள் மோக்ஷங்கொடுத்தருளினதை எப்படி நிர்வஹிப்பர்?' என்ன, சீயரும் 'ஸத்யே நலோகாந்ஜயதி" என்ற ஶ்லோகங்கொண்டு நிர்வஹித்தருளுவர்' என்ன, பட்டரும் 'ஆமோ!' என்று அதைத்திருவுள்ளத்திலே யோசித்து 'ஒக்கும்' என்று எழுந்தருளியிருக்க, ராஜாவும் அபிமுகமாகத்திரும்பி 'பட்டரே! நாம்கேட்டதற்கு உத்தரம் அருளிச்செய்தீரில்லையே!' என்ன, பட்டரும் 'நீர் பராக்கடித்திருக்க, நான் சொல்லலாவதொரு அர்த்தமுண்டோ? ஸமாஹிதமநாவாய்க் கேளீர்' என்று "ஸத்யே நலோகாந்ஜயதி தீநாந்தாநேநராகவ: குரூந் ஶுஶ்ருஷயாவீரோ தநுஷாயுதிஶாத்ரவாந்" என்கிற ஶ்லோகத்தைப் பட்டர் அருளிச்செய்ய, ராஜாகேட்டு ஸுதராம் ப்ரீத

ணய் 'தேவரீர் அருளிச்செய்தது ஒக்கும்' என்று சிரஃகம்பம் பண்ணி வணங்கி அடிக்கடி கொண்டாடி, அநர்க்கங்களான அனேக ஆபரணங்களும் அநேக வஸ்த்ரங்களும் பஹுதனங்களும் எல்லாவற்றையும் கொடுத்துப் பஹுமதித்து, தான் நிருத்தரனாய்ப் பட்டர் திருவடிகளிலே விழுந்து ஸேவித்து 'கோயிலேற எழுந்தருளும்' என்று ஸத்கரித்துவிட, பட்டரும், ராஜா கொடுத்த வஸ்த்ரபூஷணங்களையும் தநங்களையும் அங்கீகரித்து, அங்குநின்றும் புறப்பட்டு சீயர் திருக்கையைப் பிடித்துக்கொண்டு 'சீயரே! என்னையும் இந்தத்தநத்தையும் பிள்ளை திருவடிகளிலே கொண்டுபோய்க் காட்டிக்கொடும்' என்று பேராஆர்த்தியோடே அநுவர்த்தித்துச்சொல்ல, சீயரும் பட்டர் அருளிச்செய்தபடியே பிள்ளை கோஷ்டியிலே கொண்டுபோய்க் காட்டிக்கொடுக்க, பிள்ளையும் தம் பரமாசார்ய வம்ஶ்யரான நடுவில் திருவீதிப்பிள்ளையை ஸேவித்து மிகவும் ஆதரித்து 'இது ஏதுஐயா?' என்று கேட்டருள, பட்டரும் பிள்ளை திருமுகமண்டலத்தைப் பார்த்து 'தேவரீருடைய திவ்யஸூக்தியில் பதினாயிரங்கோடியிலே ஒன்றுக்குப்பெற்ற தநம் இது; ஆகையாலே, அடியேனையும் இந்தத்ரவ்யங்களையும் அங்கீகரித்தருளவேணும்' என்ன, பிள்ளையும் 'ஆகிறது என்? கூரத்தாழ்வான் திருப்பேரரான நீர் இப்படிசெய்ய ப்ராப்தமன்று காணும் என்ன, பட்டரும் 'நித்யஸம்ஸாரியான ராஜாதேவரீருடைய திவ்யஸூக்தியிலே சிந்தின சொல்லுக்குத் தோற்றுக்கொடுத்த கொடை இது; ஆனபின்பு, கூரத்தாழ்வான் குடல்துடக்கிற் பிறந்த அடியேன் அந்த ப்ரபாவத்திற்குத் தகுதியாகத் தேவரீருக்கு ஸமர்ப்பிக்கலாவது ஒன்றுமில்லையேயாகிலும், அசலகத்தே யிருந்தும் இத்தனைநாள் தேவரீர் திருவடிகளை இழந்து கிடந்தமாத்ர மன்றிக்கே தேவரீர் வைபவத்தைக் கண்டு "அஸூயா ப்ரஸவபூ:" என்கிறபடியே "அஸூயை பண்ணித் திரிந்த இவ்வாத்மாவைத் தேவரீருக்கு ஸமர்ப்பிக்கை யல்லது வேறே எனக்கு ஒரு கைம்முதலில்லை. ஆகையாலே அடியேனை அவஶ்யம் அங்கீகரித்தருளவேணும்' என்று கண்ணுங் கண்ணீருமாய்க்கொண்டு பிள்ளை திருவடிகளிலே ஸேவித்துக்கிடக்க, பிள்ளையும் பட்டரை வாரியெடுத்து அணைத்துக்கொண்டு விசேஷ கடாக்ஷஞ் செய்தருளி, தம் திருவுள்ளத்திலே தேங்கிக்கிடக்கிற அர்த்தவிசேஷ

ங்க ளெல்லாவற்றையும் ஒன்றுந்தப்பாமல் இவர்க்கு ப்ரஸாதித்தருள, பட்டரும் க்ருதார்த்தராய் ஒருக்ஷணமும் பிரியாமல் பிள்ளைஸந்நிதியிலே ஸதாநுபவம் பண்ணிக்கொண்டு ஸேவித்துக்கொண்டு ஸந்துஷ்டராய் எழுந்தருளியிருந்தார்.

அக்காலத்திலே பட்டருக்கு ஒருரு திருவாய்மொழிக்கு அர்த்தம் ப்ரசாதித்தருள, பட்டரும் பிள்ளை அருளிச்செய்தது ஒன்றுந்தப்பாமல் பதறுமல்கேட்டுத்தரித்து இராமுற்ற எழுதித் தலைக்கட்டினவாறே, பட்டர் தாம்எழுதின க்ரந்தங்களைப் பிள்ளை ஸந்நிதியிலே கொண்டுபோய் வைக்க பிள்ளையும் இது என்?' என்றுகேட்க, பட்டரும் 'தேவரீர் இந்தஉரு திருவாய்மொழிக்கு நிர்வஹித்த கட்டளை' என்ன, பிள்ளையும் 'ஆமோ!' என்று க்ரந்தங்களை அவிழ்த்துப் பார்த்தவளவில் ஸபாத லக்ஷம் க்ரந்தமாய் மஹாபாரத ஸங்க்யையாயிருக்க, அத்தைக்கண்டு பிள்ளை பெருக்க வ்யாகூலப்பட்டுப் பட்டரைப்பார்த்து 'நம்முடைய அநுமதியின்றிக்கே நாட்டுக்குப் பாட்டுரையும்படி நீர் நினைத்தபடியே திருவாய்மொழியை வெளியிடுவானென்?' என்ன, பட்டரும் 'தேவரீர் அருளிச்செய்த திவ்யஸூக்தியை எழுதினேன்; அஃதொழியக் கால்கொம்பு சுழிஏற எழுதினது உண்டாகில் பார்த்தருளவேணும் என்ன, பிள்ளைபட்டரைப்பார்த்து 'வாரீர் திருவாய்மொழி நிமித்தமாக நாம் வாக்காலே சொன்னத்தை எழுதினீராகில், நம்முடைய சித்தஸ்தமான பொருளை எழுதப் பெற்றீரோ? என்று வெறுத்து அருளிச்செய்து, 'உடையவர் காலத்திலே திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவாய்மொழிக்கு ஸ்ரீவிஷ்ணுபுராண ப்ரக்ரியையாலே ஆறுயிரமாக இடுகைக்கு உடையவரை அநுமதி கொள்ளப்பட்ட யத்நத்திற்கு மட்டு முடிவில்லை; ஆனபின்பு நம்முடைய காலத்திலே நம்மையுங் கேளாமல் லக்ஷத்திருபத்தையாயிரங் க்ரந்தமாக இப்படி பரக்க எழுதினல், ஒருசிஷ்யாசார்ய க்ரமத்துக்கு அஸம்ப்ரதாயமாய்ப் போங்காணும்' என்று அருளிச்செய்து, அவர்கையினின்றும் க்ரந்தங்களை வாங்கிக்கொண்டு நீரைச்சொரிந்து கறையானுக்குக் கொடுக்க அவை அன்றே மருந்தாய்ப்போயின;

அநந்தரம் நம்பிள்ளை தமக்கு ப்ரிய சிஷ்யராய்த் தம் பக்கலிலே அகிலார்த்தங்களையும் அலகலாகக் கற்றிருக்கும் பெரியவாச்சான்பிள்ளையை 'திருவாய்மொழிக்கு ஒருவ்யாக்யாநம் பண்ணும் என்று நியமித்தருள, பெரியவாச்சான் பிள்ளையும் ஸ்ரீராமாயண ஸங்க்யையிலே ஒரு வ்யாக்யாநஞ் செய்தருளினர்.

பின்னையும் நம்பிள்ளை ஒருரு திருவாய்மொழிக்கு அர்த்தம் நிர்வஹிக்கிற கட்டளையை, அந்தரங்கசிஷ்யரான வடக்குத் திருவீதிப்பிள்ளை பகலெல்லாங்கேட்டுத் தரித்து ராத்ரியிலே எழுதித் தலைக்கட்டினவாறே, அத்தைப் பிள்ளைஸந்நிதியிலே கொண்டுபோய்வைக்க, பிள்ளையும் 'இது என்?' என்று கேட்டருள, அவரும் 'தேவரீர் இந்தவுரு திருவாய்மொழி நிர்வஹித்த கட்டளை என்று விண்ணப்பஞ்செய்ய, பிள்ளையும் ஸ்ரீகோஶத்தை அவிழ்த்துப் பார்த்தருள, அதிஸங்க்ஷேபமு மன்றிக்கே அதிவிஸ்தரமுமன்றிக்கே ஆனைகோலஞ்செய்து புறப்பட்டாப்போலே மிகவும் அழகாய் ஶ்ருதப்ரகாஶிகை கட்டளையிலே முப்பத்தாறாயிரமா யிருக்கையாலே, பிள்ளையும் அத்தைக்கண்டு போரப்ரீதராயருளி, வடக்குத்திருவீதிப்பிள்ளையைப் பார்த்து 'நன்றாக எழுதினீர்; ஆகிலும், நம்முடைய அநுமதி யின்றிக்கே எழுதினீர்; ஆகையாலே, க்ரந்தங்களைத் தாரும்' என்று அவர் திருக்கையினின்றும் வாங்கிக்கட்டி உள்ளேவைத்தருளினார். இத்தைக்கண்டு ஈயுண்ணி மாதவப்பெருமாள், நெடுநாள் நம்பெருமாளை ப்ரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து வேண்டிக்கொள்ள, ஒருநாள் பெருமாள் அர்ச்சகமுகேந ஈயுண்ணிச்சிறியாழ்வா னப்பிள்ளையை அருளப்பாடிட்டருளி ஏன் காணும் நம்மைப் பஹுவாக உபாஸியா நின்றீர்?' என்றுகேட்டருள, ஈயுண்ணி மாதவப்பெருமாளும் 'ஸ்வாமீ! நம்பிள்ளை திருக்கையிலே திருவாய்மொழிக்கு ஈடுமுப்பத்தாறாயிரமென்று ஒருவ்யாக்யாந க்ரந்தம்இருக்கிறது; அத்தை அடியேனுக்கு அவர் இரங்கி ப்ரஸாதிக்கும்படி நியமித்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க, பெருமாளும் 'அப்படியே செய்கிறோம்' என்று திருவுள்ளம்பற்றி யிருக்கச் செய்தே, நம்பிள்ளையும் முதலிகளுமாகப் பெருமாளைத் திருவடிதொழச் சென்றவாறே, பெருமாள் நம்பிள்ளையைக் குறித்து, தீர்த்தம் திருமாலை திருப்பரியட்டம் சடகோபனும் ப்ரஸாதித்தருளி, அர்ச்சகமுகேந நம்பிள்ளையை நோக்கியருளி நீர் ஈடு முப்பத்தாறாயிரத்தை ஈயுண்ணிச் சிறியாழ்வா னப்பிள்ளைக்கு ப்ரஸாதியும்' என்று திருவுள்ளமாக, பிள்ளையும் மஹாப்ரஸாதமென்று பெருமாள் அருளப்பாட்டை சிரஸாவஹித்துக்கொண்டுபுறப்பட்டுத் தம்திருமாளிகையிலே எழுந்தருளி, தமக்கு அபிமதசிஷ்யரான ஈயுண்ணி மாதவப் பெருமாளென்கிற சிறியாழ்வா னப்பிள்ளைக்கு ஈடுமுப்பத்தாறாயிரமுங் கொடுத்து வாழ்வித்தருளினார்.

நம்பிள்ளை ஒருநாள் நம்பெருமாள் ஸந்நிதிமுன் விண்ணப்பஞ் செய்தபடி:—ஸர்வஸ்வாமியான ஸர்வேச்வரனே! அந்தர்யாமியாய் நின்று ஸத்தையே நோக்கினீர்; அத்வேஷந்தொடக்கமான ஆத்மகுணங்களைப்பிறப்பித்தீர்; ஆசார்யன் திருவடிகளிலே சேர்த்தருளினீர்; ஸம்ஸாரபந்தத்தையும் கழித்தருளினீர். ஸர்வபாபங்களையும் பொறுத்தருளினீர்; அர்ச்சிராதி மார்க்கத்தையும் பரமபதத்தையும் குணாநுபவத்தையுந் தந்து யாவதாத்மபாவி கைங்கர்யங் கொண்டருளினீர்; தேவரீர் செய்தபடி யென்தான்! என்பதாம்.

ஒருநாள் நம்பிள்ளை, கோஷ்டிகளுக்கு அருளியதாவது:—ஸம்ஸாரி சேதநர் அவித்தையோடேகூடி யிருப்பார்கள். அவித்தையாவது - அஹங்கார மமகாரங்கள்; இத்தாலே - ராகத்வேஷங்களுண்டாம்; இத்தாலே - நாலுவகைப்பட்ட சரீரமுண்டாம்; சரீரமடியாக அஞ்சு விஷயங்களிலும் ருசியுண்டாம்.

அவ்விஷயங்களை புஜிக்கைக்காக வழிகெட வர்த்திப்பர்கள். அதாவது-பொய்சொல்லியும், களவுகண்டும், பரஹிம்ஸை பண்ணியும், நீசரைஸேவித்தும் போருகை. இப்படிபோருகிற சேதநனுக்கு எம்பெருமானுடைய ஸௌஹார்த்தகுணத்தாலே நினைவின்றிக்கேயிருக்க ஒருஸுக்ர்தம் விளையும்; அந்தஸுக்ர்தமடியாக இவனிலும், இவனநர்த்தத்துக்கு நொந்து போருகிற எம்பெருமான் குளிரக் கடாக்ஷித்தருளும்; ஆக, இத்தாலே - ஈச்வரன்பக்கல் த்வேஷம் பண்ணத்தவிரும் - அத்தாலே - அவன் திருவுள்ளமுகக்கும்; அந்தஉகப்பாலே - இவனுக்கு ஸத்வம் தலையெடுக்கும்; அத்தாலே - நமக்கு நன்மைவேணுமென்று நினைத்திருப்பன்; அத்தாலே - ஸாத்விகரோடே ஸங்கதி யுண்டாம்; அத்தாலே - ஸதாசார்யனைக் கிட்டுவன்; அவ்வாசாரியன், தஞ்சமான அர்த்தங்களை யுபதேசிப்பன்.

அவையாவன:—காண்கின்ற வுடம்பொழிய வேறேயொருவன் நான் என்கிறவனென்றும், நான்றான் ஸ்வதந்த்ர னன்று பரதந்த்ரனென்றும், பரதந்த்ரனுமிடத்து தேவதாந்தரங்களுக்கு பரதந்த்ரனன்று எம்பெருமானுக்கே பரதந்த்ரனென்றும், அதற்கு எல்லை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு பரதந்த்ரனாகை யென்றும், இதற்குப் பலம் எம்பெருமான் திருவடிகளிலே கைகங்கர்யம் பண்ணுகையென்றும், அதற்குவிரோதி அஹங்கார மமகாரங்களும் சரீரஸம்பந்தமு மென்றும், அவைகழிகைக்கு உபாயம் அவன்றிருவடிகளே யென்றும், இவையெல்லா மறிகைக்கு ப்ரமாணம் ரஹஸ்யத்ரய மென்றுஞ் சொல்லப்படுவனவாம்.

அநந்தரம், இவ்வர்த்தங்களை யுபதேசித்த ஆசார்யன் பக்கலிலே க்ர்தஜ்ஞனாய் ஸாத்விகரோடே ஸங்கதிபண்ணும்: அநந்

தரம், ஆசார்யகைங்கர்யமே யாத்ரையாய்ப்போரும். ஆசார்ய கைங்கர்யமாவது அநிஷ்டம் தவிர்கையும், இஷ்டம்செய்கையும்; அவையிரண்டிலும் அநிஷ்டம் தவிர்கையே ப்ரதாநம். அது வென்னென்னில்:—இஷ்டம் செய்யாதபோது உபேக்ஷிக்குமள வேயுள்ளது; அநிஷ்டம் தவிராதபோது ஆசார்யன் நேராகவே நிக்ரஹித்துக் கைவிடுவன்; அவன் கைவிட்டவாறே ஈஶ்வரன் கைவிடுவன்; பின்னைத் துணையாவது பழைய கர்மங்களும், யம படருமே. இவை இரண்டுமறிவது ஶாஸ்த்ர முகத்தாலும் ஆசா ர்யன் நினைவாலுமிறே. இதுதான் பேற்றுக்கு ஸாதநமுமாய், கைங்கர்யமுமாய், ஸ்வரூபமுமாயிருக்கும். இவைஸாதநமென்று நினைக்கக் கடவனல்லன். ஆசார்யனுக்கு ப்ரியமாக, பகவத் கைங்கர்யம், பாகவதகைங்கர்யம் பண்ணிக்கொண்டு போரக்கட வன்; இப்படியிருக்கிற அதிகாரிக்கு ப்ராப்யஸித்தியுண்டாம். ஸ்வஸ்வரூபத்துக்கு ஸீமா (முதன்மை) ததீயஶேஷத்வம்; பர ஸ்வரூபத்திற்குஸீமா அர்ச்சாவதாரம்; விரோதிஸ்வரூபத்திற்கு ஸீமா அஹங்கார மமகாரங்கள்; உபாயஸ்வரூபத்திற்கு ஸீமா பகவத்க்ருபை; உபேய ஸ்வரூபத்திற்கு ஸீமா பகவந் முகோல் லாஸமிறே.

ஸ்ரீபரதாழ்வான் பெருமாளை வந்து ஶரணம் புக்கது பலி யாதொழிவா னென்னென்ன; பலித்தது என்று நம்பிள்ளை யரு ளிச்செய்தார்.

எங்ஙனேயென்னில்:—பரதன்றன் பிதனுய்வந்து ஶரணம் புக்கது, ராஜ்யமென்கிற ஸ்வரூப விருத்தமான ஸ்வஸ்வா தந்த்ர் யத்தைக் கழிக்கைக்கன்றே? அப்போது பெருமாள் தமது திருவடி நிலையாழ்வார்களைக் கொடுத்து தத்பரதந்த்ரனாய்ப் போயிரு என்றபோதே, பரதாழ்வானுக்கு அந்த பயநிவர்த்தி பிறந்தது. அதற்கு ப்ரமாணம்:—“ஆருரோஹரதம் ஹ்ருஷ்ட: ஶத்ருக்நஸ் ஸஹிதோபலீ” என்று பரதன்பெருமாளை ராஜ்யத் திற்கு மீளவேணுமென்று ப்ரார்த்தித்ததைப் பெருமாள் செய் யாதொழிந்தார். “ரிஷேயோப்யாகமந்ஸர்வே வதாயா ஸுராரக்ஷ ஸாம்” என்று ஶரணாகதரான ரிஷிகளுடைய ரக்ஷணார்த்தமாக, இவன் மீண்டெழுந்தருளவேணும் என்றதைப்பெருமாள் மறுத் தருளினர். எதுபோலவென்னில்:—விருந்தினராய் வந்தவர்களு டைய த்ருப்த்யர்த்தமாக க்ரஹவானானவன் பார்யைக்கும் தனக்

கும் பக்வமானசோற்றை அவர்களுக்கிட்டுத் தாங்கள்இருவரும் பட்டினி கிடக்குமாபோலே, ஸ்ரீபரதாழ்வானுக்கு ஸ்வவிஶ்லேஷத்திலுங் காட்டில் பெருமாள் தமக்கு பரதவிஶ்லேஷம் துஸ்ஸஹமாயிருக்க ஸ்ரீதண்டகாரண்ய வாஸிகளான ரிஷிகளுடைய த்ர்ப்த்யர்த்தமாகவன்றோ மறுத்து எழுந்தருளினர்.

நம்பிள்ளை அப்பிள்ளைபிள்ளைக்கருளிச்செய்தபடி:—ஸ்ரீவைஷ்ணவன் சரீரஸம்பந்தமான ஐஶ்வர்யாதிகளை எம்பெருமான் பக்கலிலே அபேக்ஷிக்கும்போது மூன்றுதோஷம் ப்ரஸங்கிக்கும். அவையாவன - ஸித்யாத அம்ஶத்தில் ஸ்திக்தனைகையும், தன் ஸ்வரூபத்துக்குச் சேராதவற்றைச் சேர்க்கத்தேடுகையும், பரஸ்வரூப ஸமாதாநத்துக்கு ஸமாதி பங்கம்பண்ணுகையுமாம். இவற்றில் ஸித்யாதவம்ஶத்தில் ஸ்திக்தனைகையாவது-கிடையாத அம்ஶத்துக்காசைப்படுகை. ஸர்வபலப்ரதனான வெம்பெருமான் பக்கலிலும் கிடையாததொன் றிருப்பதுண்டோ வென்னில், உண்டு; அதிகாரானுகுணமாக ப்ரபதநம் பண்ணுதலை சிலவுண்டாக, "யஸ்யாநு க்ரஹமிச்சாமி தஸ்யவித்தம் ஹராம்யஹம்" இத்யாதி ப்ரமாணங்கள் சொல்லுகையாலே. இவ்விடத்தில் இவ்வதிகாரி ஆரென்னில்:—ஸதாசார்யவரணம் பண்ணின ஸதாசாரவான். இவனுக்கு இதுலபியாமைக்கடி, இவன் ஆசார்யவரணம் பண்ணுகிறபோது பண்ணின ப்ரபதநத்துக்கு விருத்தமாகையாலே. தன் ஸ்வரூபத்துக்குச் சேராத அம்ஶத்தைச் சேர்க்கத் தேடுகையாவது-ராஜபுத்ரன், புளிந்த (வேடனுடைய) புத்ரன் குடிக்கும் கூழுக்கு ஆசைப்படுமாபோலே, அப்ராக்ர்தாநுபவாந்வயியாகைக் கீடான ஆகாரங்கள் லபித்த சேதநன் ப்ராக்ர்தாநுபவாந்வயியாகை. பரஸ்வரூப ஸாமதானத்துக்கு ஸமாதிபங்கம் பண்ணுகையாவது-நெடுநாளிழந்துபோன சேதநனை இன்றுநேராகக் கிட்டப்பெறுவதே! என்று க்ர்தார்த்தனாயிருக்கிற ஈஶ்வரன்ஹ்ர்தயத்தை வ்யாகுலாஶ்ரயமாக்குகை இதற்கு உதாரணம்:—பார்யை பர்த்தா ஸ்திக்தனானிறேயென்ன; புருஷாந்தரஸம்ஸர்க்கேச்சை நடையாடாநின்றதென்றால், அவனே தேடிக்கொடுக்கிறனல்லன், தன்னுடைய பதிவ்ர்த்யமும் குலையும், அவன் நெஞ்சும் வ்யாகுலமாம் என்றருளிச்செய்தார்.

நம்பிள்ளை திருவெள்ளறை தேன்கொள்சோலைதாஸர் திருமாளிகையிலே யெழுந்தருளி அவருடைய திருமாளிகையிலே

ஐஶ்வர்யத்தைக்கண்டு ப்ரீதராயிருக்க, இதுக்கடியென்னென்று யதிராஜதாஸர் பிள்ளையைக்கேட்க; நம்பிள்ளை, இந்த ஸம்ஸார ஸௌகந்தான் மூன்றுபடியாயிருக்கும். இந்தஸௌகத்தைத் தனக்கென்றும், தனக்கும் எம்பெருமானுக்குமென்றும், எம்பெருமானுக்கேயென்றும் நினைக்கைகாண். தனக்கென்கை நரகாநுபவஸத்ர்சம்; தனக்கும் எம்பெருமானுக்குமென்கை ஸ்வர்க்காநுபவ ஸத்ர்சம்; எம்பெருமானுக்கேயென்கை பரமபதாநுபவ ஸத்ர்சம் என்றருளினார்.

ஒருநாள் நம்பிள்ளை அ-ம் திருவாய்மொழியில் "வந்திருந்து" என்னும் கo-ம் பாசுரவ்யாக்யானம் நடக்கும்போது அருளியதாவது:—

(உம்முடைய தேவாரமோ!) என்றதுக்கு தாத்பர்யம்:— தேவாரமென்று க்ருஹார்ச்சனையாய், க்ருஹார்ச்சனை யெப்படி அர்ச்சகனுக்குப் பரதந்திரமாயிருக்குமோ, அப்படியிவளுமக்குப் பரதந்திரையன்றே; ஆகையாலே பிராட்டி பரிகரமான இவளை யிப்படி நோவுபடுத்தலாமோ வென்றபடி. 'உம்முடைய தேவாரமோ' என்கிற விடத்திலே, விண்ணப்பஞ்செய்வார் தம்முடைய கைவாளையிலே (அடைப்பையிலே) யிருந்த தீர்த்த விக்ரஹத்தைப் "பாக்கு" என்கிற புத்தியாலேயெடுத்துத் தம்முடைய திருமுத்தாலே கடித்தவாறே கடினமான படியைக்கண்டு "எம்பெருமான்" என்றறிந்து, மீளத்தம்முடைய திருக்கைச் செம்பின் ஜலத்தாலேயலம்பித் திருப்பரிவட்டத்திலே வைத்து, திருவொற்றியாடைசாத்தி, தாளத்தையெடுத்து ஆழ்வாரருளிச்செய்த பாட்டிலே யொருபாட்டை யிசைத்து, மீளவுங் கைவாளையிலே கண்வளரப்பண்ணி, இப்படிப் பலகாலும் அடைக்காயமுது செய்கிறதைக் கண்டொரு ஸ்ரீவைஷ்ணவர் பொறுக்கமாட்டாமல், "இந்த வெம்பெருமானை அடியேனுக்கு ப்ரசாதிக்கவேணும்" என்ன, அவரும் "அங்கீகரித்தருள" என்று கொடுத்தருள, தம்முடைய திருமாளிகையிலே ஶாஸ்த்ரோக்தமான க்ரமத்திலே திருவாராதனம்பண்ணி அமுதுசெய்யப்பண்ண, அவ்வெம்பெருமானவருடைய ஸ்வப்நத்திலே யெழுந்தருளி "ஆழ்வார் திருவாய்மொழியே தாரகமாயிருக்கிற விண்ணப்பஞ்செய்வார் கைவாளையிலே யொதுங்கி அவருடைய வமுர்தமயமான திருப்பவளத்தின் ஸ்பரிஶமும்பெற்று, அவர் பாடுகிறவாழ்வாருடைய விசைமாலையையுங்கேட்டு, சுகத்திலே யிருக்கிற

வென்னை யென்பாடு படுத்துகிறாய்" என்றருளிச்செய்ய, அவர் போரப் பயப்பட்டு இவர்கையிலே கொண்டுவந்து கொடுத்தா ரென்பதாம்.

ஒருநாள் நம்பிள்ளை கோஷ்டிகளுக்குக் காலக்ஷேபஞ் செய்யுமளவில் பாகவதாபசாரமாவது என்னென்ற பிரஸ்தாபம்வர; அதற்கு நம்பிள்ளை அருளிச் செய்ததாவது:—பாகவதாபசாரந் தான் பன்னிரண்டுவகைப்படும்; அவையாவன:-ஜன்மநிரூபணம், சரீரநிரூபணம், பாகநிரூபணம், ஆஶ்ரமநிரூபணம், அவயவநிரூபணம், ஆலஸ்யநிரூபணம், வாசநிரூபணம், பந்துநிரூபணம்,பிரகாசநிரூபணம், பிரகார நிரூபணம், வர்த்தனநிரூபணம், தோஷநிரூபணம் என்பனவாம். இவை ஒன்றுக்கொன்று மஹாகுரூரமாய் மோக்ஷவிரோதிகளாயிருக்கும். இவை தம்முள் வாச நிருபண அபசாரத்தை இங்குவிவரிக்கின்றோம். அதாவது கோயில், திருமலை, பெருமாள்கோயில், திருநாராயணபுரம் முதலிய நூற்றெட்டுத் திவ்யதேசங்களிலிருந்து எழுந்தருளின சுவாமிகளை எவ்விதம் ஆதரிப்பீர்களோ அவ்விதமாகவே திவ்யதேசமன்றி ஓர் குக்கிராமத்தினின்றும் எழுந்தருளிய பாகவதோத்தமர்களையும் அவர்கள் எழுந்தருளியுள்ள ஸ்தலமே திவ்யதேசமென்று நினையாமல் குக்கிராம வாசிகளென்று அற்பமாய் நினைப்பதுவேயாம். இதற்குத்ருஷ்டாந்தம்:—ஒருகாலத்தில்ஒருமிலேச்சசீமையில் மகாபாகவதராகிய ஒருஅம்மையார் வசித்திருந்தனர். அவ்வழியே எழுந்தருளும் சுவாமிகளுக்கெல்லாம் சகலவித கைங்கர்யங்களால் மூகோல்லாசங்கள் செய்து மிகவும் ஆதரித்து வருவர். இப்படி யிருக்குங்காலத்திலே ஒருநிமித்தமாகப் பெரியதிருவடி நாயினார் அந்தமார்க்கமாகச் செல்லுகையில் அவ்வம்மையாரது பெருமையைக்கேட்டு அவர் திருவடிகளைச் சேவித்துப் போக ஆவல்கொண்டு ஸ்ரீவைஷ்ணவரூபமெடுத்து அந்தம்மாளுடைய திருமாளிகைக்கெழுந்தருளினார். அந்த அம்மையாரும் எதிர்கொண்டு பெருநிதியைக்கண்ட ஏழையைப்போலும், மிக்க பசியுள்ளான் அமிர்தத்தைக் கண்டாற்போலும், அதிசந்தோஷத்துடன் பெரிய திருவடிநாயினார் திருவடிகளைச் சேவித்து ஸ்ரீபாதத்தை விளக்கி, ஸ்ரீபாததீர்த்தம் பிரசாதப்பட்டு ஸ்ரீபாதத்தைத் தளுவத்தாலொற்றித் திருமாளிகைக்குள்ளே எழுந்தருளுவித்துச் சோடசோபசாரத்துடனே திருவாராதனம்செ

ய்து நயினாருக்கிஷ்டமான வஸ்துக்களை யமுதுசெய்யப்பண்ணி, சகலவித் கைங்கர்யங்களாலே மனத்ருப்திசெய்தார். அன்றிரவு பெரிய திருவடிநயினார் திருக்கண் வளரும்போது அம்மையார் செய்த உபசாரமனைத்தும் நினைத்துக்கொண்டு அதிசந்துஷ்டராய்ஆச்சர்யசித்தத்துடன்இத்தன்மையராகிய பாகவதோத்தம அம்மையார் இம்மிலேச்சதேசத்திலிருத்தல் நலமன்றென்றெண்ணி பிராப்யதேசமாகிய நம்பெருமாள் சந்நிதிக்கெழுந்தருளுவித்துக்கொண்டு போவோமென்று நினைத்தமாத்திரத்தில் அந்தப் பெரிய திருவடி நயினாரது இறகுகளுதிர்ந்து முடமாகவே,அவர் அசையமுடியாமல் திகைக்கலாயிற்று. பொழுது விடிந்தவாறே அம்மையார் நயினாரைச்சேவிக்க வந்து பார்த்து மிகவும் பயப்பட்டு சுவாமீ! தேவர் திருமேனிக்கு இத்தகைய துர்ப்பலம் வருவானென்? என்ன; நயினாரும் அம்மையாரை நோக்கி அடியேன் தாங்களிந்த மிலேச்சபூமியிலிருப்பது தகுதியல்லவென்றும், தங்களை நம்பெருமாள் சந்நிதிக்குக்கொண்டுபோகவேண்டுமென்றும் நினைத்தேன்; இதுவே அடியேனுக்குப் பேரபசாரமாக முடிந்ததென்று தெண்டன் சமர்ப்பிக்க, அம்மையாரும் ஸ்வாமீ! அடியேன் இங்கு வசிப்பதே நலமாகத்தோன்றுகிறது; ஏனெனில் அகஸ்மாத்தாய் இத்தேசத்துக்கெழுந்தருளும் பாகவதோத்மர்களை யுபசரிக்கும்பாக்கியம் அடியேனுக்கு லபித்திருப்பதினால்;ஆதலால் தேவர்அடியாள்மீது கிருபைகூர்ந்து நினைத்த நினைப்பை மாற்றிவிடும் என்று சேவிக்க; நயினாரும் அம்மையாருக்குத் தெண்டனிட்டு அடியேனை க்ஷமிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். உடனே நயினாருக்கு எப்போதும் போல் இறகுகளுண்டாகவே நயினாரும் மீண்டுபோயினர். இதனால் பாகவத வாசநிரூபண தோஷம் இத்தன்மையதென்று அறியவேண்டியது.

நம்பிள்ளை யொருநாள் நித்யப்படி காலக்ஷேபம் நிறைவேறினபிறகு மத்தியான்னகாலத்திலே தனியே எழுந்தருளி இருக்கும்போது திருவடி சம்பந்தியான வடக்குத் திருவீதிப்பிள்ளையின் திருத்தாயாராயிருக்கிற அம்மியம்மாள் தெண்டன் சமர்ப்பித்து நிற்க; நம்பிள்ளையும் அவரைக் கடாக்ஷித்தருளி உம்முடைய க்ருஹயோகக்ஷேமங்க ளென்னவென்று கேட்டருள ஸ்வாமி! என்னவிண்ணப்பஞ் செய்யப்போகிறேன். அடியேன்

குமாரன் ஒரு பேய்ப்பிள்ளையாயிருக்கிறதேயென்ன; நம்பிள்ளை
யும் அது எப்படியென்ன, ஸ்வாமி! தேவரீர் அடியேன் குமார
னுக்கு ஒருபெண்ணை விவாகம்பண்ணி யருளினீரே, அந்தப்பெ
ண் பெரியவளானதும் ஸஹஸயன கல்யாணம்போலே பண்ணி
ஸயிக்கவிட, உடனே வடக்குத்திருவீதிப்பிள்ளை முறையிட,
அதென்னென்று எல்லாரும் உட்புகுந்து பார்த்தவாறே பிள்ளை
உடம்பெல்லாம் புழுக்க நீர்சொரிய விக்கியழுது நிற்கிறதைக்
கண்டு, இது என்ன பிள்ளாயென்று கேட்டேன்; அம்மா இது
ஒரு ஆடுகிறபாம்பாயிருந்தது பயப்பட்டேன், இன்னுமப்படி
யே இருக்கிறதென்ன, இதுவுமொரு புதுமையோவென்று பெ
ண்ணை அப்பாலே போகவிட்டேன். பின்னையுமொருநாள் அந்
தப்படியே யாச்சுதென்று வ்யாகூலப்பட; நம்பிள்ளையும் சிரித்
தருளி அதற்கு உமக்கென்னென்ன; அம்மியம்மாளும் ஸ்வாமி!
தேவர் இப்படி யருளிச்செய்யலாமோ? பெண்வாழவேண்டா
வோ? வம்சத்திற்குப் பிள்ளைவேண்டாவோ? வென்று திருவடி
களிலே விழுந்து சோகிக்க; நம்பிள்ளை, அம்மியம்மாளை நோக்கி
அம்மி! எழுந்திரு நீ சோகிக்கவேண்டாம், நாட்டுப்பெண்ணை
(மருமகளை) ருதுஸ்நாதையாய் வருகிறபோது இது வழியா
யழைத்து வாவென்றருளிச்செய்துவிட, அவருமப்படியே அழை
த்துவந்துவிடத், திருவோலக்கத்திலே நம்பிள்ளையு மந்தப்பெ
ண்ணைக் கிட்ட அழைத்தருளி அவள்வயிற்றைத் திருக்கைக
ளாலே ஸ்பர்சித்து நம்மைப்போலே யிருப்பானொரு பிள்ளை
யைப் பிறக்கக்கடவாயென்று ஆசீர்வதித்தருளினார். அன்று
மாலை நம்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளையை யழைத்தருளி
உம்முடைய பயமும் தீர்ந்தது, விஹிதவிஷய வைராக்யத்திற்
கும் குறைவுவராது, ஆனாலும் லோகமர்யாதைக்கு நாம் சொன்
னதற்காக இன்று இரா உமதுதேவியுடன் கூடியிருமென்றருள;
அவரும் அங்ஙனமேசெய்ய; அவரதுதேவி ஆச்சியம்மாளும் கர்
ப்பந்தரித்து லோகவிலக்ஷணமாய் (ததச்சத்வாதஸேமாஸே)
என்கிறபடியே பன்னிரண்டா மாஸத்திலே ஐப்பசியில் திரு
வோண நக்ஷத்திரத்திலே ஒரு பிள்ளையைப்பெற்றாள்; அந்தப்
பிள்ளைக்குப்பன்னிரண்டாம்நாள் நாமகரணத்திலே லோகாசார்
யர்பிள்ளை என்று நம்பிள்ளையுடைய திருநாமம்சாத்தி வளர்த்து
வந்தனர். அப்தபூர்த்தி உத்ஸவத்திற்குப் பெருமாளைச் சேவிப்

பிக்கத்தக்கதாக அந்தக்குழந்தையை நம்பிள்ளைமுதலான பெரியோர்களெல்லாரும் மங்களவாத்யங்களுடனே திருப்பல்லக்கிலே எழுந்தருளப் பண்ணுவித்துக்கொண்டு சென்று சேவிப்பிக்க நம்பெருமாளும் போரவுகந்தருளித்தீர்த்தம், சடகோபன், சந்தனம், சுகந்தம், திருமாலை ப்ரசாதங்களும் பட்டுச்சித்தாடையும் ப்ரஸாதித்தருளி நம்பிள்ளையையும் அர்ச்சகமுகேன "உம்மைப்போலே யொருபிள்ளைகொடுத்தீரே, இனி நம்மைப்போலே யொருபிள்ளைகொடும்" என்று நியமிக்க நாயின்தே! நாயின்தே!! என்று ஓமறைய; அப்படியே அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் திருவவதாரஞ் செய்தருளினார்.

நம்பிள்ளைக்கிரண்டு தேவிகளுண்டு. மூத்ததேவிக ளொருநாளும் இளையதேவிக ளொருநாளுமாகத் தளிகைசெய்து வருவர்கள். இது இங்ஙனே நடந்து செல்லுகிறகாலத்திலே யொருநாள் மூத்ததேவியை யழைத்து நீ நம்மைப் புத்திபண்ணி இருக்கும்படி சொல்லிக்காணுமென்ன; அத்தேவியும் அஞ்சலித்து லஜ்ஜாபயங்களநுவர்த்திக்க வணக்கமுடன் தேவரீரை நம்பெருமாளுடைய அபராவதாரம் அடியேனுக் காசார்யரென்றும், திருவடிகளில் பண்ணும் கைங்கர்யங்கள் சத்தாதாரகமான வாசார்யானுவர்த்தனமென்றும் நினைத்திருப்பனென்று விண்ணப்பஞ்செய்ய; நல்லதென்றுவிட்டு இளையதேவியையழைத்து நீ நம்மை நினைத்திருக்கும்படி என்னென்று கேட்டருள; இத்தேவியும் லஜ்ஜாபயங்களுடனே தேவரீர் பர்த்தா வடியேன் பார்யை என்றன்றோ நினைத்திருக்கும்படியென்று விண்ணப்பஞ்செய்யக் கேட்டு, மூத்ததேவிகளைப் பெருமாளுக்குத்தளிகை ப்ரதிதினம் செய்யும்படி நியமித்து இளையதேவியாரைத் தத்பரிசாரகக்ருத்யத்தில் நியோகித்து இப்படி செல்லுகிறவளவிலே, மூத்ததேவிகள் ருதுவாய் தூரஸ்தையானபோது இளையதேவிகள் தளிகை செய்தால் எம்பெருமானைத் திருவடிவிளக்கி யமுதுசெய்வித்தருளித் தமக்கபிமதராய் உத்க்ருஷ்ட ஜன்மக்ஞாதராய் வேதகப்பொன்போலே இருந்துள்ள பரமசத்வநிஷ்டரான ஸ்ரீவைஷ்ணவாக்ரகண்யர் (பிள்ளை ஏறுதிருவுடையதாசர்) கரஸ்பர்ஸமாக்கி யமுதுசெய்தருளுவர். இத்தால் இளையதேவிகளுக்குப் பாவசுத்திபோதாதாகையாலே பகவத்ருஷ்டிபூதமானாலும் நியதசத்பக்தகரஸ்பர்ஸமும் அவஸ்யாபேக்ஷிதமென்று கருத்து. நம்பிள்ளைக் கிளையதேவியாரிடத்திலே யொரு குமாரர் திருவவதரிக்க முதலிகள் வந்து பிள்ளைக்கறிவிக்க அருகிருந்த திருப்பேராச்

சான் அடியேனுக்கொரு திருத்தமையனார் திருவவதாரமென்றுகந்தருளினார். இத்தாலாசார்யபுத்ரர் சத்யோஜாதரேயாகிலும் பஹூமந்தவ்யனென்று கருத்து. பிள்ளையும் ஜாதகர்மம் செய்து பன்னிரண்டாநாள் நாமகரணத்திலே தூவியம்புள்ளென்று திருநாமஞ் சாத்தியருளினார். நம்பிள்ளை பின்பழகிய பெருமாள் ஜீயர் மடத்திலே யொருநாள் எழுந்தருளி இருக்க, ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரும் ஆழ்வாருடைய அவஸ்தை அடியோங்களுக் குண்டாகவில்லையே; ப்ராப்யம் சித்திக்கும்போது ஸ்ரீயன்னபானுதிகளோடே கூடி இருக்கிற நாங்களென்ன செய்யக்கடவதென்று விண்ணப்பஞ்செய்ய; பிள்ளையுமிந்த அவஸ்தை பிறந்ததில்லையேயாகிலும் சதாசார்ய கடாக்ஷ விசேஷத்தாலே ஸ்தூல சரீரம் கழிந்து சூக்ஷ்மசரீர விமோசனத்துக்கும் கைங்கர்ய ப்ராப்திக்கும் நடுவே அவ்வவஸ்தையைப் பிறப்பித்து எம்பெருமான் கார்யஞ் செய்யுமென்றருளிச்செய்தார்.

இதற்கு ப்ரமாணம் (நகலுபாகவதாயமவிஷயம் நகச்சந்தி) என்றும் “அவன்றம ரெவ்வினைய ராகிலெ னெங்கோன், அவன்றமரே யென்றொழிவ தல்லால்—நமன்றமரால், ஆராயப்பட்டறியார் கண்டீ ரரவணைமேற், பேராயர்க் காட்பட்டார் பேர்”என்றும் வருவனவாம். இவையிறே ப்ரமாணங்கள். ஆகையா லிவ்வாத்மாக்கள் உஜ்ஜீவனத்திலூன்றிப்போரும். எம்பெருமான் ஸ்தூலசரீர வியோகானந்தரத்திலே ஸ்வசரீரோ பேக்ஷையைப் பிறப்பித்து ஸ்ரீமாலாகாரர்க்குத் தன்வடிவழகைக் காட்டினாற்போலே இவனுக்கும் வடிவழகைக்காட்டிப் பரபக்தி பரஜ்ஞான பரமபக்திகளையுண்டாக்கிக்கைக்கொண்டருளுமென்றபடி முதலிகள் நம்பிள்ளையைத் தெண்டன்சமர்ப்பித்துஅவதாரம்இருக்கும்படி என்னென்றுகேட்க; அதிகாரியைப்பெறுமையாலே மெய்வெளுத்திருக்கும்; பெற்றாலும் ப்ரயோஜனாந்தரபரராகையாலே மயிர்பட்ட சோறென்று நாக்கு வரண்டிருக்குமென்றருளிச்செய்தார். ஆகையால் ஆசார்யவானுன அநந்யப்ரயோஜனனிருக்கும் அதிகாரி எம்பெருமானைத்தேடிப்பார்க்கிலுந் துர்லபமென்றபடி.

அநந்தரம் முதலிகளனைவருங்கூடி பெரிய கோயில் வள்ளலாரை ஸ்ரீவைஷ்ணவர்களென்று சிலரைச் சொல்லுகைக்கடியென்? என்ன; அவர் அருளிச்செய்தபடி:—அவர்கள் ஸ்ரீயஃபதியின் புத்ரராகையாலும், ஸ்ரீமான் அவர்களுக்குப் பிதா மாதாவாகையாலும், ஸ்ரீமான் வைபவத்தை யவர்களறிகையாலும், மற்றும் ஸ்ரீமத்பதத்திலே பிறக்கையாலும், புருஷாகாரமாக வளர்க்கையாலும் அவர்களுக்கு ஸ்ரீவைஷ்ணவர்களென்று நிரூபகமாயிற்றென்று அருளினார்.

நம்பிள்ளையை சில ஸ்ரீவைஷ்ணவர்கள் ப்ரபன்னனுக்குத் தஞ்சமாக விஸ்வஸித்திருக்குமர்த்த மேதென்றுகேட்க; நம்பிள்ளையும் ஸகல ப்ரமாணஸாரதமமான மந்த்ர ரத்னார்த்தத்தையே விஸ்வஸித்திருப்பான். த்வயத்திலர்த்தத்தை விஸ்வஸித்திருந்தானாகில் எம்பெருமானைப்பற்றியிருக்கும்; எம்பெருமானைப்பற்றின ஊற்றமுண்டாகில் ஆசார்யனைப் பற்றியிருக்கும். ஆசார்யனைப்பற்றின ஊற்றமுண்டாகில் ஸ்ரீவைஷ்ணவர்களைப் பற்றியிருக்கும். இனி எம்பெருமானைப்பற்றியிருக்கை தேவதாந்தரபஜனஸமமென்று ஆசார்யன் திருவடிகளையே கட்டிக்கொண்டுகிடக்கும். இவனாசார்யன் திருவடிகளையே கட்டிக்கொண்டுகிடக்க எம்பெருமானிவனளவிலே பிச்சேறியிருக்கும். இவன் ஸ்ரீவைஷ்ணவர்களைப்பற்றியிருக்க எம்பெருமானோபாதி ஆசார்யனுமிவன்மேலே பிச்சேறியிருக்கும். இத்தாலே தேசிகததீயசரம நிஷ்டையுண்டாகவே அம்மூவருமிவன்மேலே ஆஸக்தராவார்க ளென்றபடி.

நம்பிள்ளை யருளிச்செய்யும் வார்த்தை:—ஸ்ரீவைஷ்ணவர்கள் ப்ரபன்னனுக்கு ஆத்மஸமானர் - ப்ராணஸமானர்-த்ருஷ்டிஸமானர் - பாஹுஸமானர் - ஆபரணஸமானர்-ஆயுதஸமானர்-பாதஸமானர் - பாதரேகாஸமானர் - பாதரக்ஷாஸமானர்-சாயாஸமானர் - ஜிஹ்வாஸமானர் அதெங்ஙனேயெனில் (ஜ்ஞானித்வாத்மைவமேமதம்) என்கிற அநன்யப்ரயோஜனத்தைப்பற்ற (மமப்ராணாஹிபாண்டவா꞉) என்கிற பராபிமானத்தைப்பற்றவும் (ஏப்ரபந்ந மஹாத்மாநஸ்தேமே நயநஸம்பத꞉) என்கிற பாமரஜனோஜ்ஜீவனைக் கடாக்ஷ த்ருஷ்டித்வத்தைப்பற்றவும் (ராமஸ்யதக்ஷிணோபாஹு) என்கிற ததிச்சாகத ப்ரவர்த்தன பாஹுத்வத்தைப்பற்றவும் (சாபமாதாயாவிபூஷணா) மென்கிற ஆபரண கோட்யந்தர்பாவத்தைப்பற்றவும் (அலர்மகள்கேள் வன்கையாழி யிடையே இராமாநுஜமுனி) என்கிற ப்ரதிபக்ஷநிரஸன சீலஸுதர்சன ஸாம்யத்தைப்பற்றவும் (ஜங்கமஸ்ரீவிமானானிஹ்ருதயானி மனீஷிண꞉) என்றும் (நடையாவுடைத்திருநாரண)னென்றும் பாதத்தைப்பற்றவும் ஸ்ரீய꞉பதிபதத்வந்தத்துக்கு சடகோபனென்கிற பாதுகாத்வத்தைப்பற்றவும் (நிழலுமடிதாறு) மென்கிற அவினாபாவபராதீன ஸத்தாதிமஹத்வத்தைப்பற்றவும் (ரஸாந்தாஸஸ்யஜிஹ்வாயமஸ்ணுமி) என்கிற ஸா

னுபவஸாதனத்வத்தைப்பற்றவும் ஜிஹ்வாத்யகிலரேகாவயவஸ மானர்களிறே ஸ்ரீவைஷ்ணவர்கள். ஸ்ரீவைஷ்ணவத்வமாவது மூன்றுபடிப் பட்டிருக்கும். எங்ஙனேயென்னில், ஸத்காரயோ க்யரென்றும் ஸஹவாஸ யோக்யரென்றும் ஸதாநுபவயோக்ய ரென்றும் - இதில் ஸத்காரயோக்யராவார் - ரூபநாமப்ரதானர், உச்சாரணப்ரதானர், அபிமானப்ரதானர். ஸஹவாஸயோக்ய ராவார் - ஜ்ஞானப்ரதானர் அநுஷ்டானப்ரதானர் அங்கீகார ப்ரதானர். ஸதாநுபவயோக்யராவார் - ஆர்த்திப்ரதானர் அபி னிவேசப்ரதானர் அபிருசிப்ரதானர். இதில் த்யாஜ்யோபாதே யத்தைத் தெளியவறியாதவர்களாய் ஸம்பந்தமாத்ரமே யானவர் கள், நமஸ்காரயோக்யர். தெளிந்த ஜ்ஞானாதிகாரான ஸப்ரம்ஹ சாரிகள் போதயந்த꞉ பரஸ்பரம்பண்ணயோக்யர். ஆசார்யனும் ஸதாசார்ய ஸத்ருசரும் உத்தேஶ்யதயா அநுவர்த்தனீயரென்ற படி. இனி ஸ்ரீவைஷ்ணவவிஷயமாக த்ரிவிதகரணங்களாலும் அபராதம் பண்ணுதொழிவார், ப்ராஹ்மண்யத்துக்கு சிகாயஜ் ஞோபவீததரவிப்ரத்வமாத்ரமே போருமாபோலே பாகவதாப சாரத்துக்கும் ரூபநாமதரவைஷ்ணவமாத்ரமேபோரும்.ப்ரம்ஹ விதக்ரேஸர ப்ரபன்னாதிகாரவிஷயாபசாரமும் உடலும் உயிரும் பிரியும்படியாய் ஸத்தாவிநாசமாம்படியாயிருக்கும். (தஸ்யப்ர ம்ஹவிநாஶ꞉) என்றும்(ஸங்கேப்ருசம்ப்ரம்ஹவிதோவமாநாத்) என்றும் (ஹந்திஸ்ரேயாம்ஸிஸர்வாணிபும் ஸோமஹதிக்ரம꞉) என்றும் இந்த பாகவதாபசாரவிஷயமாக ஶ்ருதிஸ்ம்ருதீதி ஹாஸ புராணாதிகளிலே ப்ரமாணசதங்கள் கோஷியா நின்ற திறே. (வையத்தேவரான) விவர்கள் பாததூளி படுதலாலிவ்வுல கம் புனிதமாம்படி ஸ்ரீதரன் தொல்புகழ்பாடி ஸவிலாஸ ஸஞ் சாரம்பண்ணிவருமது கண்டு (த்ரவந்திதைத்யா꞉ பரணமந்திதே வதா꞉) என்றும் (உந்தமர்க்கென்றும் நமன்றமர்கள்ளர்போல்) என்றும் சொல்லுகிறபடியே தூரே இவர்களைக் கண்டமாத்திர த்திலே க்ரூரரான அஸுரராக்ஷஸயமபடாதிகள் காடேறி விழு ந்தோடவும் ஜ்ஞானாதிகாரான ருஷிஜாதியிலுள்ளார் அஞ்சலித்து விரும்பி ஸேவிக்கும்படியுமாயிறே இவர்கள் வைபவ மிருப்ப தென்றருளினார்.

ஒருக்கால் எதிராஜதாஸர் பிள்ளைத் திருமாளிகைக் கெழுந் தருள அவருடைய ஸம்பத்தைக்கண்டுகந்து எழுந்தருளிஇருக்க ஸ்ரீபாதத்து முதலிக ளிதுக்கடியென்னென்று கேட்க பிள்ளை

யும் த்ருஷ்டத்தில் தனக்குண்டான ஸம்பத்தைத் தனக்கே என்கை நரகப்ராயம். அவனுக்கும் அவனடியார்க்கு மென்கை பரமபத ப்ராயமென்றருளினார். ஆகையால் ஐஹிகத்தில் தனக்குண்டான ஸம்பத்தைத் ததீயர்க்கேயாக்கி (நெய்யமரின்னடிசில் நிச்சல் பாலொடு) என்கிற மாற்றிலி சோறிட்டு திருமாலடியார்களைப் பூசிக்கைக் கவ்வருகு பட்டதொன்று மில்லையே என்று கருத்து. இப்படி பிள்ளை ஊரும்நாடும் உலகமெல்லாம் கலியிருள் நீங்கி பெரிய க்ருதயுகம் பற்றி, பேரின்ப வெள்ளம் பெருகும்படி திருத்தி எல்லாரையும் திருமாலுக்கேயாக்கி சிலகாலம் வாழ்ந்தருளி நம்பிள்ளை திருமேனியிலே நோவுசாத்தி மிகவும் அவஸன்னராய் முதலிக ளெல்லாரையும் தெண்டனிட்டு தீர்த்தங்கொண்டு அமுது செய்யப்பண்ணி முதலிகளில் சேஷமுமங்கீகரித்தருளி, திருநாட்டுக் கெழுந்தருளும்போது ஸ்ரீபாதத்து முதலிகள் ப்ரம்ஹவல்லி ப்ருகுவல்லி சூழ்விசும்பணிமுகில் முதலானவற்றை ஸேவிக்க கோயிலுக்கு நேரே பின்பழகிய பெருமாள் ஜீயர்மடியிலே திருமுடியையும் பெரியவாச்சான்பிள்ளை மடியிலே திருவடிகளையும் வைத்து கண்வளர்ந்தருளி நஞ்சீயர் திருவடிகளை த்யானித்துக்கொண்டு ப்ரம்ஹரந்த்ரத்தாலே பிள்ளை திருநாட்டுக்கெழுந்தருள, பெரியவாச்சான்பிள்ளை நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் வடக்குத் திருவீதிப்பிள்ளை பின்பழகிய பெருமாள்ஜீயர் முதலாக வெல்லாரும் கடலோசைபோலே பெருமிடறுசெய்து கூப்பிட்டுக்கொண்டு விழுந்து ஆசார்ய விப்லேஷா ஸஹிஷ்ணுக்களாய் மோஹித்துக்கொண்டு சனைர் மோஹம் தெளிந்து சோகார்த்தராய் கண்ணீர் பெருவெள்ளமிட்டுப் பெருக பஹுசாப்ரலாபித்து தாங்களிலே தேறிநின்று திருப்பரிவட்டம் திருமாலையுடனே பெருமாள் பரிகரமனைத்தும் ஸேவிக்க பிள்ளை குமாரர் தூவியம்பிள்ளையைக்கொண்டு ப்ரம்ஹமேதத்தாலே ஸம்ஸ்கரித்து பிள்ளையைப் பள்ளிபடுத்தருளி ஸ்ரீபாதத்து முதலிகளெல்லாரும் திருமுடி விளக்குவித்துக்கொள்ள நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டரும் திருமுடி விளக்குவித்துக் கொள்ள நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர்க்குநேரே ப்ராதாவாயிருப்பாரொருவர் பட்டரைப்பார்த்து திருக்கலிகன்றி தாஸர் பரமபத ப்ராப்தி பண்ணினத்துக்கு எங்கள் கூரகுலத்திலே பிறந்த நீர் தலைக்ஷௌரம் பண்ணி வைத்துக்கொண்டது கூரகுலத்திற் கிழுக்கன்றோவென்ன, பட்டரு மவரைப்பார்த்து அப்படி

யாம் ஐயோ உங்கள் கூரகுலத்திற் கிழுக்காய்ப் பிறந்தேனே இக்குறையை நீரே தீர்க்கக்கடவீரென்று வ்யதிரேகஞ் சொல்லிப்போகவிட, அவரும் இத்தைப் பொறுக்கமாட்டாமல் பெருமாள் ஸந்நிதியில் சென்று விண்ணப்பஞ்செய்ய இத்தைப் பெருமாள் கேட்டு அர்ச்சகமுகேன நாமிருக்க நீரிப்படி செய்யலாமோ வென்ன, பட்டரும் பெரிய திருவோலக்கத்திலே அடியேன்செய்தமுறையைக்கேட்டுப் பொறுத்தருளவேணுமென்று தெண்டனிட பெருமாளு மதைநினைத்து, சொல்லுகிறபடி என்னென்று கேட்டருள, இவரும் பிள்ளையையும் அடியேனையும் பாராதே ஸர்வஜ்ஞரான தேவரீரிப்படி கேட்டருள்வதே நாயிந்தே நம்பிள்ளை திருநாட்டுக்கெழுந்தருளினால் அவர் திருவடிகளிலே ஆஶ்ரயித்த நான் ஆழ்வானுடைய சேஷத்வ பாரதந்த்ரியத்துக்குத் தகுதியாக கூரகுலத்திலே பிறந்தபின்பு தாஸ்ய க்ருத்யமான மோவாயும் முன்கையும் வபளம் பண்ணுவித்துக்கொள்ள வேண்டியிருக்க அத்தைச் செய்யாதே சிஷ்யபுத்ரருடைய க்ருத்யமான க்ஷௌரம் பண்ணிக்கொண்டத்துக்கு மாத்ரம் தேவரீர் முனிந்தருளக் கூடுமோவென்று விண்ணப்பஞ்செய்ய, பெருமாளு மதுகேட்டிசைந்து சந்துஷ்டராய் பட்டருக்கு தீர்த்தம் திருமாலையுடனே திருப்பரிவட்டம் ப்ரஸாதித்து உபலாலித்து திருமாளிகையேறப் போகவிட்டருளினார்.

அநந்தரம் பிள்ளைக்குபெருக்க திருவத்யயனம் நடத்தியருளினார்கள். லோகாசார்யரென்று திருநாமம்பெற்ற தன்னேற்றமும் அரிய அருளிச்செயற்பொருளை அறிந்துரைக்கப்பெற்ற தன்னேற்றமும் பரமபதம் தம் சிறுமுறிக்குச்செல்லப்பெற்ற தன்னேற்றமும் நம்பிள்ளைக்கன்றி மற்றொருவருக்குமில்லையிறே. பிள்ளை வைபவமுள்ளதெல்லாம் சொல்லப்போகாதிறே. (நம்பிள்ளை திருநக்ஷத்ரம் கார்த்திகையில் க்ருத்திகை) அவர்தனியன் (வேதாந்தவேத்யாம்ருதவாரிராசேர்வேதார்த்த ஸாராம்ருதபூரமர்க்யம் ஆதாயவர்ஷம் தமஹம்ப்ரபத்யே காருண்யபூர்ணம் கலிவைரிதாஸம்) (நமாமிதௌமாதவ க்ருஷ்ணபாதௌயத் ஸன்னிதிம்ஸ-ஒக்தி மயம்ப்ரவிஷ்டா: தத்ரைவநித்யம் ஸ்திதிமாத்ரியந்தே வைகுண்டஸம்ஸாரவிமுக்தசித்தாம், வார்த்தோஞ்சவ்ருத்பாபியதிய்ய கோஷ்ட்யாம்கோஷ்ட்யாந்தராணும் ப்ரதமாபவந்தி, ஸ்ரீமத்கலித்வம்ஸநதாஸநாம்னே, தஸ்மைநமஸ் ஸ-ஒக்திமஹார்ணவாய) (நெஞ்சத்திருந்து நிரந்தரமாக நிரயத்துய்க்கும் வஞ்சக்குறும்பின் வகையறுத்தேன் மாயவாதியர்தாம் அஞ்சப்பிறந்தவன் ஸ்ரீமாதவனடிக் கன்புசெய்யுஞ் தஞ்சத்தொருவன் சரணம்புய மென்தலைக்கணிந்தே) நம்பிள்ளை திருவடிகளேசரணம்.

இந்திரன் வார்த்தையும் நான்முகன் வார்த்தையு மீசனுடன்
கந்தன்சொல் வார்த்தையுங் கற்பவரா ரிந்தக் காசினிக்கே
நந்தின முத்தெறி நம்பூர் வரதர்தம் மாளிகையிற்
சிந்தின வார்த்தைகொண் டேசிலநாடு திறைக்கொள்வரே.

ஸ்ரீமத் பெரியவாச்சான்பிள்ளை வைபவம்.

இவரது திருவவதாரஸ்தலம் சோழமண்டலத்திலுள்ள சங்கநல்லூர்; திருநக்ஷத்ரம்-ஸர்வஜித்வருஷம், ஆவணிமாதம், க்ருஷ்ணாஷ்டமிரோஹிணி, குலம்-பூர்வசிகை,குடி-சங்கநல்லூர்; திருத்தகப்பனார்-யாமுனதேசிகர்; திருத்தாயார்-நாய்ச்சியாரம்மாள்; திருநாமங்கள்-பெரியவாச்சான்பிள்ளை, அபயப்ரதராஜர், ஸ்ரீமத்க்ருஷ்ணர்; ஆசார்யர் - நம்பிள்ளை; திருவாராதனம் - க்ருஷ்ணவிக்ரஹம். அநந்தரம் நம்பிள்ளையின் ஸ்ரீபாதத்துமுதலிகளைவரையுங் கூட்டிக்கொண்டு பெரியவாச்சான்பிள்ளை தர்சனம் நிர்வஹித்தருளாநிற்க நடுவில் திருவீதிப்பிள்ளை பட்டர் பெரியவாச்சான்பிள்ளையைப் பார்த்தருளி குருபரம்பரையையும் த்வயத்தையும் உபதேசித்தவர்களோடு வாசியற உத்தேஸ்யரென்று ப்ரஸாதித்தீர்; பரமஸாத்விகரான ஸ்ரீவைஷ்ணவர்களும்மை யநுவர்த்திக்கிறத்துக்கென்னினைத்திருப்பீரென்று கேட்டருள, ஆச்சான்பிள்ளையு மநுவர்த்திக்கிற ஸ்ரீவைஷ்ணவர்க ளபிப்பிராயத்தாலும் அநுவர்த்திப்பிக்கிற ஸர்வேஸ்வர னபிப்ராயத்தாலும் ஸ்ரீவைஷ்ணவத்வமடியைக் கண்டென்றிருந்தவோபாதி அடியேனஹங்காரியாகையாலே அடியேனுடைய வபிப்ராயத்தாலும் ஸ்ரீவைஷ்ணவத்வ முண்டென்றிருந்தது. ஆக த்ரிவிதாபிப்ராயத்தாலும் அடியேனுக்கு முப்புரியூட்டின ஸ்ரீவைஷ்ணவத்வமுண்டென்று நினைத்திருப்பனென்றருளினார். ஆகத்ரிவிதாபிப்ராயத்தாலும் ஸ்வவைஷ்ணத்வம் ஸித்தமாய் ஸ்வஸ்லாக்யபுத்திரஹிதமான புத்திவிசேஷஞ் சொல்லப்பட்டது. ஆச்சான்பிள்ளை கோஷ்டியிலே ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளவிருந்து நாம் லீலைக்கு விஷயமோ, இரக்கத்துக்கு விஷயமோவென்று விண்ணப்பஞ்செய்ய, உடன்பட்டிருந்தோமாகில் லீலைக்குவிஷயமாகிறோம், அகப்பட்டோமென்றிருந்தோமாகில்இரக்கத்துக்கு விஷயமாகிறோமென்றருளிச்செய்தார். ஆக ஸர்வசேதனரையும் ஸர்வேஸ்வரன்

அஹம்மமதா புத்திமுக்தி விரக்த்யாஸக்தி விஷயத்தாலே ஸ்வ மாதுர்யகாருண்ய லீலாவிஷயமாக்கி விநியோகிக்கு மென்றபடி. ஆச்சான்பிள்ளை கோஷ்டியிலே சில ஸ்ரீவைஷ்ணவர்கள் வந்து எங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொரு வார்த்தை யருளிச்செய்ய வேணுமென்ன, அவரும் கலக்குகிறவனும், கலக்குகிறதும், கலங்கிக் கிடக்கிறவர்களுக்குத் தெளிவிக்கிறவனும், தெளிகிறவனும், தெளிந்திருக்கிறவனுமாயிறே யிருப்பது. இதில் கலங்குகிறது ஜீவாத்மா, கலக்குகிறது அசித்து, கலங்கிக்கிடக்கிறார்கள் ஸம்ஸாரிகள், தெளிவிக்கிறவன் ஆசார்யன், தெளிகிறான் சேதனன், தெளிந்திருக்கிறான் ஈஶ்வரன் ஆகையாலசார்யோபதேசேன தெளிந்தவன் கலங்குகிறதன்னையும் கலக்குகிற ப்ரக்ருதியையும் கலங்கிக்கிடக்கிற ஸம்ஸாரிகளையும் தஞ்சமன்றென்று கைவிட்டு தெளிவிக்கிற வாசார்யனையும் தெளிந்திருக்கு மீஶ்வரனையும் பற்றுகைகாண் இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபமென் றருளிச்செய் தாராயிற்று.

ஆச்சான் பிள்ளையை யொரு ஸ்ரீவைஷ்ணவர் ஸ்வரூபபார தந்த்ர்யமிருக்கும்படி யென்னென்றுகேட்க, அவரருளிச்செய்த படி: ஸ்வசக்திநிவ்ருத்திபூர்வகமாக ஸர்வசக்தியையண்டைகொண்டு உபாயத்தில் கந்தலற்று உபேயத்தில் த்வரை விஞ்சி யிருப்பதுகாண் பாரதந்த்ர்ய ஜ்ஞானமென்றருளினார்; இத்தால் நிவ்ருத்தி ப்ரேரகத்தோடு ப்ரவ்ருத்தி ப்ரேரகத்தோடு வாசியில்லை என்றபடி. பராதீனனான இவ்வதிகாரிக்கு எல்லாம் பரப்ரேரித மத்தனையிறே. ஆச்சான்பிள்ளையை யொரு ஸ்ரீவைஷ்ணவர் ஸ்வரூபானுரூபமான ப்ராப்யமோ ப்ராப்யானுரூபமான ஸ்வரூபமோவென்றுகேட்க அவரும் முமுக்ஷுதசையில் ஸ்வரூபானுரூபமான ப்ராப்யம், முக்திதசையில் ப்ராப்யானுரூபமாயிருக்கும் ஸ்வரூபமென்றருளினார். நாட்டிலே இருந்து பெருமாளை ஸேவிப்பார் இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் அந்யோந்ய விஶ்லேஷிருக்களாய்ப் போருகிறவர்கள் ஒருக்கால் ராகத்வேஷங் கொண்டாடி அதிலொருவர் ஆச்சான்பிள்ளை ஸ்ரீபாதத்தேறச்சென்று மற்றவருடைய குற்றம் விண்ணப்பஞ்செய்ய ஆச்சான்பிள்ளையும் அவர் சொல்லுகிற வழிகேளீர் தண்டதரனான யமன் (பரிஹர) வென்றான். (நகச்சின்னபராத்யதி)என்றாள் பிராட்டி. ஈஶ்வரன் (செய்தாரேல் நன்றுசெய்தார்) என்றான். ஆழ்வார்

கள் (அவன்றம ரெவ்வினைய ராகிலுமெங்கோன் அவன்தமரே யென்றொழிவ தல்லா (லென்றார்கள்.) இப்படியிருக்க இவர் குற்ற மிவரொழியச் சொல்லுவாரில்லை என்றருளினார். இத்தால் சக்திமான்களு முட்படத் ததீய தோஷம் சொல்லக் கூசுவர்க ளென்றபடி. ஆச்சான்பிள்ளை பாகவத வைபவமருளிச்செய்யா நிற்கச்செய்தே ஒருவர் பகவத்வைபவஞ்சொல்ல, இப்போது விசேஷம் போதும் விசேஷம் சொல்லுகிற விடத்தே இது ஸாமான்யமென் றருளிச்செய்தார். இத்தால் பாகவத வைபவ த்தை நிறுத்தி பகவத் வைபவஞ் சொல்லுகை யநுபயுக்தமென் றபடி. ஆச்சான்பிள்ளை சிறியதாயார் பெரியபிள்ளையையும் ஆச் சான்பிள்ளையையும் ஸேவித்துப் போருகிற காலத்திலே இவர் சோகார்த்தையாக ஆச்சான்பிள்ளை நீர்சோகிக்கிற தென்னெ ன்ன அவரும் அநாதிகால பாபவாஸநா பலாத்கார வசத்தா லே ஜந்மாதிகளிலே ஈச்வரனென்னை இன்னம் தள்ளப் போகி றானோவென்று பயப்படாநின்றேனென்று மேலருளிச்செய்த வார்த்தைகேட்டு வாய்த்தால் கேடென்றிருந்தாய் உனக்கு ஸ்ரு ஷ்டிக்கவேணுமோ (பிறப்பில் பல்பிறவிப் பெருமா) னென்றும் (பொருளென் றிவ்வுலகம் படைத்தவ) னென்றும் (ஸம்பவாமி யுகேயுகே) என்றும் ஒருவனைப்பிடிக்க நினைத்து ஊரைவளைவா ரைப்போலே அகில ஜகத் ஸ்வாமியுமாய் அஸ்மத் ஸ்வாமியு மாகையன்றோ வென்றருளினார். ஆகையால் ஈச்வரனுக்கொரு சேதனனைப்பெறுகைஅலப்யலாபமென்றும்(எதிர்சூழல்புக்கு)த் தேடித்திரியுமவன் பேரிழவிரங்கி அவன்தானேரக்ஷிக்குமென்று நிர்ப்பரையா யிருமென்றபடி. அநந்தரம் பெரியாழ்வார் திரு மொழிமுதலான ஆழ்வார்களருளிச்செயல்களுக்கெல்லாம் வ்யா க்யானஞ்செய்தருளி லோகத்தை வாழ்வித்தருளினார். இத்தை நினைத்திறே (பெரியவாச்சான்பிள்ளை பின்புள்ளவைக்குந், தெ ரிய வியாக்கியைகள் செயலால் அரிய, அருளிச்செயல்பொருளை யாரியர்கட்கிப்போது அருளிச்செயலாய்ந்தறிந்து) என்று உப தேசரத்னமாலையிலே ஜீயர் அருளிச்செய்தது. பிள்ளை ரஹஸ்ய த்ரய விவரணம் முதலான வநேக ரஹஸ்யங்களு மருளிச்செய் தருளினார்.

மற்றும் பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த வார்த் தை:—தன் வைஷ்ணவத்வமாகிறது பகவத்ப்ரேமமோ - ஸித்

தோபாய ஸ்வீகாரமோ - இதர விஷயவைராக்யமோ - ஸர்வோ பாய சூன்யத்வமோ வென்னில், மேலொரு அர்த்தசஸ்து விகாரமுண்டாயின் இந்த நாலும் கார்யகரமாகும். இல்லாவிட் டால் இதிலொன்றும் ஆகமாட்டாது. மேல்சொல்லப்பட்ட அர் த்தசஸ்து விகாரமேதென்னில், அநந்யராக சேஷத்வத்தி லுண் டான - தாந்திவிசேஷமே ஸ்ரீவைஷ்ணவத்வம். அந்ததாந்தி நாலுவிதமாயிருக்கும் - அது என்னென்னில் நிர்ப்பரத்வானு ஸந்தானமும் நிர்த்தோஷத்வானுஸந்தானமும் உபகாரஸ்ம்ருதி யும் - க்ருபையுமாம். இந்தநாலிலும் சொல்லபடுவதாவது:— நிர்ப்பரத்வானுஸந்தான மென்னெனில் - ஒருவர் தன்னைப் பரி பவிக்கும்போது பார்த்து தன்னுடைய ஸ்வஸ்வரூபஜ்ஞானுதி காரத்வத்தில் - தன்னுடையஸ்வஸ்வாதந்த்ர்ய நிவர்த்தி பூர்வக நியந்தபாரதந்த்ர்யம் அனுஸந்தித்துக்கொண்டு இருக்கை. நிர்த் தோஷத்வானு ஸந்தானமாவதுஎப்படியென்னில்பிறர் செய்யப் படாநின்ற தாருண்யங்கள் சரீரத்துக்கே வுபாதியல்லாமல் ஆத் மாபர்யந்தம் சேரமாட்டாது. ஆத்மா - நிர்த்தோஷி; வீட்டுக் குள்ளேயே பதார்த்தங்க ளெல்லாவற்றையும் சேர்த்து எடுத்து குப்பையின்பேரிலே பரிகரித்தாற்போலே பிறர்செய்த தாருண் யங்களெல்லாம் சரீரத்துக்கே உபாதியல்லாமல்ஆத்மா பர்யந்தம் வாராதென்றிருக்கை. உபகார ஸ்ம்ருதியாவது: அஹங்கார க்ரஸ்தனுய் அல்ப அஸ்த்திரத்வாதி தோஷதூஷிதனுன என்னை நான்செய்ததோஷம் ஒருவருக்கும் தெரியாதென்றிருந்த என் தோஷத்தைத் தெரிந்து பரிபாலிக்கும்படி தார்மீகர்கள் உண் டானுர்களேயென்று அவர்கள் பக்கல் உபகார ஸ்ம்ருதியே செய்கை. க்ருபையாவது என்னெனில் அனுதிகால முதற்கொ ண்டு இன்றையவரையில் தேவர்திருவடிகளுக்கு அபிமுகத்துக்கு ஆகவொட்டாமல் என்னை தேவர்கடாக்ஷிக்கும்படி விண்ணப் பம் செய்யப்படுகை இந்தக்ரமமாய் இந்த நாலுதாந்திகளுடைய லக்ஷணங்களறிந்து அனுஸந்திக்கிறதுஸ்ரீவைஷ்ணவத்வம். அது வுமல்லாமல் தாந்தி தன்னுடைய ஹ்ருதயத்தில் பிடியாமலிருக்கு மாயின் முன்புசொன்ன தாந்திகள் நாலும் இதரஸமய வாதி களுக்கு முண்டு. அஃதெப்படியென்னில் பகவத் ப்ரேமையே எந்த ஸமயத்தாருக்கு முண்டு. ஸித்தோபாய ஸ்வீகாரமும் கேவலருக்கு முண்டு. இதர விஷய வைராக்யம் திகம்பரனுகிய அவதூதனுக்கு முண்டு. ஸர்வோபாய சூந்யதை ஸம்ஸாரி களுக்கு முண்டு. ஆகையால் அனன்ய சேஷத்வத்தி லுண்டான தாந்தி சாந்தி விசேஷமே ஸ்ரீவைஷ்ணவத்வமென்று அருளிச் செய்தார்.

ஒருநாள் பிள்ளையும் தம்முடைய ஸ்ரீபாதத்தி லாஶ்ரயித்
திருந்துள்ள வாதிகேஸரி, கார்ஹஸ்த்யாஶ்ரம நிஷ்டராயிருக்
கும்போது சாஸ்த்ரபரிசீலனம் பண்ணுகிறவர்களைக்கண்டு படிக்
கிறதென்னென்று கேட்க, அவர்களு மிவர்க்கு அக்ஷராப்யாஸ
மே யில்லையென்றறிந்து முஸலகிஸலயம் படிக்கிறோமென்று பரி
ஹஸித்து ஒருவார்த்தைசொல்ல, இவருமத்தை யறியாதே யிப்
படியொன் றுண்டோவென்று திகைத்து இத்தை ஸ்வாசார்ய
ரான ஆச்சான்பிள்ளைக்கு விண்ணப்பஞ்செய்ய, அவரும் மந்
தஸ்மிதஞ்செய்து அவர்களுமக்கு அக்ஷராப்யாஸ மில்லாமை
யாலே கழுக்காணி துளிர்க்குமோ உமக்கித்தைக்கொண்டு கார்ய
மென்னென்று பரிஹஸித்து விட்டார்களென்று அருளிச்செ
ய்ய, இவருமத்தைக்கேட்டு லஜ்ஜாவிஷ்டராய் ஸலம்பிறந்து திரு
வடிகளிலே விழுந்து அடியேன் வித்வானும்படி கடாக்ஷித்தருள
வேணுமென்று ப்ரார்த்திக்க, அபயப்ரதராஜரு முகந்து முப்
பத்திரண்டு திருநக்ஷத்ரத்திலே அக்ஷரசிக்ஷைகளும் பண்ணு
வித்து காவ்ய நாடகாலங்கார சப்ததர்க்கபூர்வோத்தர மீமாம்
ஸாதி சகலசாஸ்த்ர வித்தமராம்படி சிக்ஷித்தருள, இவர்கடாக்ஷ
த்தாலேவித்வஜ்ஜநாக்ரகண்யராய்முஸலகிஸலயமென்றொரு காவ்
யமிட்டு அவர்கள் கையிலேகொடுத்து வாய்மூடி தலைஇறக்கிட்டு
லஜ்ஜாவிஷ்டராம்படி பண்ணியருளி மஹாவிரக்தராய் ஆஶ்ரம
ஸ்வீகாரஞ்செய்து பரவாதிகளை ஜயித்து மிகவும் சாஸ்த்ர நிபுண
ராயிருக்கையாலே வாதிகேஸரி அழகியமணவாள ஜீயரென்று
ப்ரஸித்தரான விவர், பூர்வர்கள்செய்த திருவாய்மொழி வ்யாக்
யானங்களையெல்லாம் திருக்கண்சாத்தி அவைகளிலே ஸாரதம
மான அர்த்தவிசேஷங்களை ஸங்க்ரஹித்து ஸர்வர்க்கும் ஸுக்ர
ஹமாகவும் ஸுவ்யக்தமாகவும் தெரியும்படி திருவாய்மொழி
க்கு த்வாதச ஸ்கந்தயுக்தமான பாகவத ப்ரக்ரியையாலே பன்
னீராயிரப்படி உரைசெய்தருளினார். ஜீயரும் உபதேசரத்ன
மாலையிலே (அன்போடழகிய மணவாளஜீயர்) என்றுதொடங்கி
(ஏதமில் பன்னீராயிர)மென்று இத்தையு மருளிச்செய்தாரிறே.
பின்னையும் தீபப்ரகாசிகை தத்வநிரூபணம் முதலான அநேக
ரஹஸ்ய க்ரந்தங்களு மருளிச்செய்து உபகரித்தருளினார். ஆச்
சான்பிள்ளை குமாரர் நைநாராச்சான்பிள்ளையும் தீபாதுத்பன்ன
ப்ரதீபம்போலே தர்சனம் நிர்வஹித்துக்கொண்டுபோர, மதிப்

புடையராய் ஸகலவித்யாபாரங்கதரென்கிற பிருதுடையராய் ஸ்ரீரங்கராஜதீக்ஷிதரென்று பௌண்டரீக யாகஞ்செய்து ப்ரஸித்தரானவிவர், தத்வஸங்க்ரஹம், முக்தபோகாவளி, ஜ்ஞானார்ணவம், சாரீரம் முதலான அநேக ரஹஸ்யக்ரந்தங்களிட்டு உபகரித்தருளினார்.

பெரியவாச்சான்பிள்ளை திருநக்ஷத்ரம் சித்திரையில் ரோஹிணி. இவர்தனியன் (ஸ்ரீமத் க்ருஷ்ணஸமாஹ்வாய நமோ யாமுநஸூநவே யத்கடாக்ஷைக லக்ஷ்யாணாம் ஸுலபஸ்ரீதரஸ்ஸதா) நைநாராச்சான்பிள்ளை திருநக்ஷத்ரம் வையாசிமாதத்தில் சித்திரை. இவர்தனியன் (ஶ்ருத்யாத்தஸார ஜனகம் ஸ்ம்ருதி பால மித்ரம் பத்மோல்லஸத் பகவதங்க்ரிபுராண பந்தும்ஜ்ஞானாதிராஜ மபயப்ரதராஜஸூநும் அஸ்மத் குரும்பரமகாருணியம் நமாமி). வாதிகேஸரியழகிய மணவாளஜீயர் திருநக்ஷத்ரம் மாசியில் மகம். இவர்தனியன் (ஸுந்தரஜாமாத்ருமுநே ப்ரபத்யே சரணாம்புஜம் ஸம்ஸாரார்ணவஸம்மக்ன ஜந்து ஸந்தாரபோதகம் அஸ்மத்வித பரித்ராணப்ரேம பத்ராணமானஸம் வாதிகேஸரினம் வந்தேரம்ய ஜாமாதரம் முநிம்).

நம்பிள்ளை பக்கல் நின்றும் மீண்டு முப்பத்தாறாயிரமும்பெற்ற ஈயுண்ணிமாதவப்பெருமாள் குமாரரான ஸ்ரீபத்மநாபப்பெருமாளுக்கு ஈடு முப்பத்தாறாயிரமும் மற்றுமர்த்த விசேஷங்களுமெல்லாம் ப்ரஸாதித்து தர்சன ப்ரவர்த்தக ராக்கியருளினார்.

தனியன்-"ஸ்ரீலோகார்யபதாம்போஜ ஸம்ஸ்ரயம் கருணாம்புதிம், வேதாந்த த்வய ஸம்பன்னம் மாதவார்ய மஹம்பஜே".

ஸ்ரீபத்மநாப்பெருமாளுக் கந்தரங்க சிஷ்யராய் கோலவராஹநைனாரென்று திருநாமமுடைய நாலூர் பிள்ளைக்கு தம் பைத்ருகதனமான ஈடு முப்பத்தாறாயிரமும் பின்னும் வேண்டின தர்சனார்த்தங்களெல்லாம் ப்ரஸாதித்தருளினார். திருவவதாரஸ்தலம் தொண்டைமண்டலத்தில் மேல்பாடகம் - குடிநாலூர் - காஸ்யபகோத்ரம்-யஜுஸ்ஸாகை - ஆஸ்வலாயன ஸூத்ரம் - குலம் வடமாள். திருநாமங்கள் - ஸுமந: கோலேசர், கோலவராஹப் பெருமாள்நைனார், ராமாநுஜார்யதாஸர், அருளாளர், திருவடியூன்றினவர், நாலூர்பிள்ளை, இருப்பிடம் பெருமாள்கோயில். இவர் செய்தருளின க்ரந்தங்கள் பெரியாழ்வார் திருமொழி வ்யாக்யானம்.

தனியன்—"சதுர் க்ராமகுலோத் பூதம் த்ராவிட ப்ரம்ஹ வேதினம், யஜ்ஞார்ய வம்சதிலகம் ஸ்ரீவ்ராஹ மஹம்பஜே".

நாலூர்பிள்ளையும் நல்ல மகனாரான நாலூராச்சான் பிள்ளைக்கு ஸ்வாசார்யரான பத்மநாபப்பெருமாள் ப்ரஸாதித்த ஈடு முப்பத்தாறாயிரம் முதலான அகிலார்த்தங்களையும் ப்ரஸாதித்து தர்சன ப்ரவர்த்தகங்களையும் ப்ரஸாதித்து தர்சன ப்ரவர்த்தகராம்படி கடாக்ஷித்தருளினார். நாலூராச்சான் பிள்ளைக்கு திருவவதாரஸ்தலம் தொண்டைமண்டலத்தில் மேல்பாடகம். குடி-நாலூர் - குலம் வடமாள் - காஸ்யகோத்ரம் - யஜுஸ்ஸாகை-ஆஸ்வலாயன ஸூத்ரம் - இருப்பிடம் பெருமாள் கோயில்-தனியன்—"நமோஸ்து தேவராஜாய சதுர்க்ராம நிவாஸினே, ராமாநுஜார்ய தாஸஸ்யஸுதாய குணசாலினே".

நாலூராச்சான் பிள்ளையும் மணவாள மாமுனிக்கு நேரே ஆசார்யரான திருவாய்மொழிப்பிள்ளைக்கும் திருநாராயணபுரத்தாயிக்கும் திருவாய்மொழி ப்ரஸாதித்தருளினாரென்னுமத்தை (ஆங்கவர்பால்பெற்ற சிறியாழ்வானப்பிள்ளை தாங்கொடுத்தார் தம்மகனார் தங்கையில் பாங்குடனே நாலூர் பிள்ளைக்கவர்தாம் நல்லமகனார்க்கவர்தாம் மேலோர்க் கீந்தாரவரே மிக்கு) என்று உபதேசரத்நமாலையிலே ஜீயர்தம் வாக்காலே தெரியவருளிச் செய்தாரிறே. அநந்தரம் வடக்குத்திருவீதிப்பிள்ளை தர்சனம் நிர்வஹித்தருளுகிற காலத்திலே ஸ்ரீபாதத்து முதலிகள் ஆத்மஸ்வரூப மிருக்கும்படி என்னென்று விண்ணப்பஞ்செய்ய, அவரும் அஹங்காரமாகிற வார்ப்பைத்துடைத்தா லாத்மாவுக் கழியாத பேரடியானென்றதிறே என்றருளினார். இத்தால் ஈஸ்வரோஹமென்கிற வஹங்காரம் பற்றற்ற லாத்மாவுக்கு தாஸோஹமென்கிற சேஷத்வமே நிலைநின்ற வந்தரங்க நிரூபகமென்றபடி. பாகவத சேஷத்வ விதுரமான பகவத் சேஷத்வமும் தேஹாத்மாபிமானம்போலே பொல்லாததாகையாலே (அடியாரடியார் தம்மடியா ரடியார் தமக்கடியா ரடியார் தம்மடியா ரடியோங்களே) என்றிருக்க வேணு மென்றருளியும் எல்லா வேதங்களையும் எல்லா சாஸ்த்ரங்களையும் எல்லா ஆழ்வார்கள் பாசுரங்களையும் எல்லாவாசார்யர்கள் வசனங்களையு மாராய்ந்து பார்த்தவிடத்திலொரு ஸ்ரீவைஷ்ணவனுக்கு நிலைநின்ற ஆசார்யாபிமான மொழிய மோக்ஷோபாயமில்லை. நிலைநின்ற பாகவ

தாபசார மொழிய மோக்ஷவிரோதி யில்லையிறே. ஸ்வ()த்தை யில் நித்யத்வமும் நிலைநின்ற பாகவதாபசாரமுண்டா மள வத்தனை யன்றோ வென்று பிள்ளை பலகாலமு மருளிச் செய்யக் கேட்டிருக்கையா யிருக்குமென்று வடக்குத் திருவீதிப்பிள்ளை தம் ஸ்ரீபாதத்து முதலிகளுக்கு அருளிச்செய்தருளினர்.

இத்தால் லோகாசார்யாபிமானம் நிலைநிற்கையாவது: கே ட்டவர்த்தத்தின்படி யனுஷ்டானமும் கைபுகுரப்பெற்ற தத் விஷயமே ப்ராப்யப்ராபகங்களென்னும் மஹாவிஸ்வாஸமும் கொண்டு வர்த்திக்கை. பாகவதாபசாரம் நிலை நிற்கையாவது- தீரக்கழியப்பண்ணியும் நிரனுதாபமாயிருந்ததாகில் பாகவதாப சாரம் ஸ்வஸத்தையை விளக்குப் பிணம்படுத்தி தக்தபடமாக்கி உயிர்மாட்டி நசிப்பிக்குமென்றபடி. இப்படியே ஸர்வரையும் உஜ்ஜீவிப்பித்துக்கொண்டிருக்கிற விவர்தம் குமாரரான பிள்ளை லோகாசார்யரையும் அவர் திருத்தம்பியாரான அழகிய மண வாளப்பெருமாள் நைனாரையும் தர்சன ப்ரவர்த்தகராம்படி நன்றாகத் திருத்தியருளி சிலநாளுக்குப் பின்பு பிள்ளை திருவடி களை த்யானித்துக்கொண்டு திருநாட்டுக் கெழுந்தருளினர். பிள்ளை லோகாசார்யரும் உபயஸம்பந்தமுடைய விலக்ஷணவிஷ யத்தை யிழந்தோமேயென்று பெருக்கவ்யாகுலப்பட்டு க்லே சித்து தம்பிலே தேறிநின்று பிள்ளைக்கு ப்ரம்ஹமேதத்தாலே சரமகைங்கர்யஞ்செய்து பள்ளிபடுத்தி அவப்ருதங்கொண்டாடி பெருக்க திருவத்யயனமும் நடத்தியருளினர். வடக்குத் திரு வீதிப்பிள்ளைத்தனியன் (ஸ்ரீக்ருஷ்ணபாதபாதாப்ஜே நமாமிசிரஸா ஸதா யத்ப்ரஸாதப்ரபாவேந ஸர்வஸித்திர பூந்மம:).

அநந்தரம் இப்படிப்பட்ட பெருமையையுடையவருடைய அருளாலே யவதரித்தவராய் அவதார விசேஷமா யிருந்துள்ள பிள்ளைலோகாசார்யரும் அவருடைய அருளே தாரகமாக வளர் ந்த அவர் திருத்தம்பியாரான அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரும் தத்வரஹஸ்யந் தொடங்கி அநேக ப்ரபந்தங்கள் இட்டருளி ஸ்வரூபவர்த்தகராம் (தம்பியுடன் ரசரதியானனுஞ் சங்கவண்ண, நம்பியுடன் பின்னடந்து வந்தானும், பொங்கு புன லோங்கு முடும்பை யுலகாரியனுமறந், தாங்கு மணவாள னுமே தான்)என்னும்படி ஸௌப்ராத்ரத்தை யுடையராயெழுந்

தருளியிருக்கிறகாலத்திலே, ஸர்வஜ்ஞரான பிள்ளை லோகாசார்யர் திருவடிகளிலே ஸாத்வீகராயிருப்பார் பலரும் ஆஶ்ரயித்து ஸத்ஸம்பத்தையுடைராய் (ஸம்பந்தாத் ஸ்வாத்மலாபஃ) என்று ஆநந்த நிர்ப்பரராயிருந்தார்கள்.

அவர்களில், கூரகுலோத்தம தாஸநாயனும், மணப்பாக்கத்து நம்பியும், கொல்லிகாவல தாஸரான அழகிய மணவாளப் பெருமாள் பிள்ளையும், கோட்டூரிலண்ணரும், விளாஞ்சோலைப் பிள்ளையும், ஸாத்விகைகளில் திருமலையாழ்வார் திருத்தாயார் தொடக்கமான சில அம்மையார்களும், திருவடிகளிலே ஆஶ்ரயித்தவன்றுதொடங்கி அந்தரங்கஸேவை பண்ணிக்கொண்டு அந்தேவாஸிகளாய் அகலாமலிருந்தார்கள். இப்படி இவர்களாலே ஸேவ்யமாநராயிருக்கிற பிள்ளை, பின்பு தம்முடைய க்ருபையாலே இவர்களை யழைத்து அந்தரங்கமாகத் திருவாய்மொழியாகிற திவ்யப்ரபந்தத்துக்கு, ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி என்கிறவ்யாக்யாநங்கள் ப்ரவ்ருத்தமானதற்குக்காரணம் இன்னபடியும் இன்னபடியுமென்று அருளிச்செய்தருளினார்.

பின்பு பிள்ளைலோகாசார்யரும்நாயனாரும், அதிவிரக்தராய் வாழ்ந்தருளுகிறகாலத்திலே, நாயனார் சிறிதுகால மெழுந்தருளியிருந்து அசிரேணபரமபதத்தை ப்ராபித்தருள, பிள்ளையும் பாகவத விஶ்லேஷத்தாலே மிகவும் சோகார்த்தராய் முதலிகள் தேற்றத்தேறிநின்று நாயனாருக்கு சரமகைங்கர்யஞ்செய்து திருவத்யயநமும் நடத்தியருளினார். இவர் தனியன் (த்ராவிடாம்நாய ஹ்ருதயம் குருபர்வக்ரமாகதம், ரம்யஜாமாத்ருதேவேன தர்சிதம் க்ருஷ்ணஸூநுனா). ஸர்வசேதனரு முஜ்ஜீவிக்கும்படி சரம ப்ரமாண ப்ரமேய ப்ரமாத்ரு வைபவங்களை ப்ரகாசிப்பித்துக் கொண்டு பிள்ளைலோகாசார்யர் பெருமாளுக்கு ப்ராண பூதராயெழுந்தருளி இருக்குங்காலத்தில் ஸ்ரீரங்கம் துருஷ்காக்ராந்தமாய் குடியிருக்கப்போகாமல் பெருமாள் நாய்ச்சிமாருடனே புறப்பட்டு பெரிய பெருமாளுக்கு திருமுன்பே கல்காம்புச் சாத்தி முன்னே ஒரு விக்ரஹத்தை யெழுந்தருளப்பண்ணி வைத்து (சுற்றமெல்லாம் பின்றொடரத்தொல்கான மடைந்தாய்) என்றும் (தம்பியொடு தாமொருவர் தன் துணைவிகாதல் துணையாக) என்றுஞ் சொல்லுகிறபடியே பெருமாள், தம் அந்தரங்க

பரிகரத்துடனே வலசையாக வெழுந்தருள, பிள்ளையும், வாளும் வில்லுங் கொண்டு பெருமாளைப் பின்றொடர்ந் தடிமைசெய்த இளையபெருமாளைப்போலே (உருவார்சக்கரஞ் சங்கு சுமந்திங் கும்மோடொருபா டுழல்வானோரடியான்) என்கிறபடியே அத் தலைக்கு மங்களா சாஸநபரராய் தாமும் முதலிகளும் ஸேவித் துக்கொண்டு சேர வெழுந்தருள,

இனிகோயிலில் நடந்த வ்ருத்தாந்தங்கள் பின்வருமாறு.

பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்.

பின்பழகிய பெருமாள் ஜீயர் திருவடிகளே சரணம்.

குருபரம்பரா ப்ரபாவம்

முதற்பாகம் சம்பூர்ணம்.